கடவுள் துணை.

தெய்வப் புலமைத்

# திருவள்ளுவ நாயனார்

அருளிச்செய்த

தமிழ்மறையாகிய

# திருக்குறள் மூலமும்,

## பரிமேலழகருரையும்,

இவ்வுரைக் கிணையுமாக

லோகோபகாரி பத்திராதிபர்

பண்டிதர்

## கோவடிவேலுசெட்டியாரவர்கள்

இயற்றிய

தெளிபொருள் விளக்கமும், கருத்துரையும்,

குறிப்புரையும்.

திருத்தமான இரண்டாவது பதிப்பு

ஆங்கில மொழிபெயர்ப்புடன்.

இவை

ஷை செட்டியாரவர்களாலும்

மங்கலம் - ஷண்முகமுதலியாரவர்களாலும்,

சென்னை, கோமளேசுவரன்பேட்டை.

சச்சிதாநந்தஅச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டன.
இரண்டாம் பாகம்.
1919.
Copy Right Registered.

உ

கடவுள் துணை.

# திருவள்ளுவர்குறள்

## மூலமும் உரையும்.

## 2. பொருட்பால்.

### 2. அங்கவியல்:—

**On the Constituents of Royalty.** பரி:—இனி † முறையானே அரசியல் நடாத்துதற்கண் ‡ ஒன்றற் கொன்று துணையாய அங்கங்கள்

தாற் கூறுவானெடுத்துக்கொண்டு, அவையாறனுள்ளும் * காவற்சாகா டிகைத்தற்கண் அவ்வாசற் கிணையாய அமைச்சன தியல்பு பத்ததிகாரத் தாற் கூறுவான் றொடங்கி, முதற்கண் அமைச்சுக் கூ றுகின்றார்.

தெளி:—இனி முறையானே அரசியலை நடத்துதலில் ஒன்றற்கொன்று துணையாகிய (அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும்) அங்கங்கள் ஆறனது இயல்பை முப்பத்திரண் டதிகாரத்தாற் சொல்ல வெடுத்துக்கொண்டு, அவ்வங்கங்கள் ஆறனுள்ளும் ஆள்ஞாசக்காரத்தைச் செலு த்துதலில் அவ்வாசனுக்குச் சமானமாகிய அமைச்சனது இயல்பைப் பத்ததி காரத்தாற் சொல்லத்தொடங்கி, முதலில் அமைச்சுச் சொல்லுகின்றார்.

---

† அரசியலிற்குப் பின் அங்கவியல்வைத்த முறையாலே.

‡ அரசன் தன்னையும் தன் குடிகளையும் பாதுகாத் தொழுகுவதற்கு அமைச்சு முதலிய அங்கங்கள், ஒன்றற்கொன்று துணையா யிருக்கின்றன வென்பதாம். இவ்வாறனுள், யாதாவதொன்று குறையின் மற்றையன பயன்படுவனவாகா வென்பதுணர்த்துதற்கு 'ஒன்றற்கொன்று துணையாய அங்கங்கங்கள்' என்று கூறப்பட்டது.

* "கால்பார் கோத்து ஞாலத் தியக்குங், காவற் சாகா டுகைப்போன் மாணி, னூறின் றாகி யாறினிது படுமே, யுய்த்த றேற்றா னாயின் வைகலும், பகைக்கூ ழள்ளற் பட்டு, மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே."

[இதன்பொருள். உருளையையும் பாரையுங்கோத்து உலகின்கண்ணே செலுத்தும் காப்புடைய சகடந்தான் அதனைச்செலுத்துவோன் மாட்சிமைப் படின் ஊறுபாடில்லையாய் வழியை இனிதாகச்செல்லும். அவன் அதனை இனிதாகச்செலுத்துதலைத் தெளியமாட்டானாயின், அது நாடோறும் பகை யாகிய செறிந்த சேற்றிலே யழுந்தி மிகப்பலதீய துன்பத்தை மேன்மேலு முண்டாக்கும் என்பது] என்று புறநானூறு கூறுகின்றது.



## முதல் அதிகாரம்.

### அமைச்சு:—The Minister.

பரி:—அஃதாவது * அமைச்சனது தன்மை: என்றது † அவன்ற குணங்களையுஞ் செயல்களையும்.

தெளி:—அஃதாவது அமைச்சனது தன்மை: அத்தன்மை யென்ற அவனது குணங்களையும் செயல்களையும்.

## க. கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு மருவினையு மாண்ட தமைச்சு.

பரி:—(இ - ள்.) வினை செயீயுங்கால் ‡ அதற்கு வேண்டுங் கரு ஞும், ¶ அதற்கேற்ற காலமும், ‖ அது செயீயுமா றும், அவ்வாற்றிற் ெ யப்படும் அவ்வரியவினைதானும் வாயீப்ப எண்ணவல்லவனே அமை சனுவான், (எ-று).

கருவிகள்—தானையும் பொருளும். காலம் - அது தொடங்குங்கா

செய்கை எனவே, 0 அது தொடங்கு முபாயமும், +இடையூறு நீக்கி முடி போக்குமாறும் அடங்கின. சிறிய முயற்சியாற் பெரியபயன் றருவதை பார் 'அருவினை' என்றார். இவை ¶¶ யைந்தனையும் வடநூலார் () மந்தி திற் கங்கமென்ப.

தெளி:—(இ - ள்.) (தொழில்செய்யும்போது) கருவியும் - (அதற் வேண்டுஞ்) சாதனங்களும், காலமும் - (அதற்கு ஏற்ற) காலமும், செய்கை யும்-(அது) செய்யும்விதமும், செய்யு மருவினையும் - (அவ்விதத்தாற்) செ யப்படும் அவ்வரிய தொழிலும், மாண்டது - பொருந்த எண்ணவல்ல னே, அமைச்சு - மந்திரியாவான், (எ - று).

சாதனங்கள் - சேனையும் பொருளும். காலம் - அத்தொழிலுக்குதொட குங்காலம். செய்கை எனவே, அதனைத்தொடங்கு முபாயமும், இடையூ நீக்கிமுடிக்கும் விதமும் அடங்கின. சிறியமுயற்சியால் பெரியபயன் த

* அமைச்சனது தன்மை - மந்திரியினது இயல்பு.
† அவன்றன் — அம்மந்திரியினது.

‡ அதற்கு - வினைசெய்வதற்கு.
¶ அதற்கு - வினை செய்வதற்கு. ‖ அது - வினை.
0 அது - வினை. +இடையூறு - தடை.

¶¶ ஐந்தனையும் என்றது கருவி, காலம், செய்கை, செய்யு மருவினைகளை கருவி சேனையும் பொருளுமாயிருத்தலால் ஐந்தாமாறு காண்க.

() மந்திரத்திற் கங்கமென்ப - ஆலோசனைக்கு உறுப்பு என்பர்.
அரசர்க்கங்கம் அமைச்சு முதலியவாறும்; மந்திரிக்கங்கம் தானை, நாடு, காலமுதலிய ஐந்தாம்.



வது என்பார் 'அருவினை' என்றார். இவ்வைந்தையும் தக்கு அங்கமென்பர்.

வடநூலார் மந்திரத்

(க - து.) கருவி முதலியவற்றைப் வல்லவனே மந்திரியாவான் என்பது.
பொருந்துமாறு எண்ண

1. The minister is one who can make an excellent
choice of means, time, manner of execution, and the difficult under-taking.



உ. வன்கண் குடிகாத்தல் கற்றறித
லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

பரி:—(இ - ள்.) வினை செயிதற்கண் * அசைவின்மையும், குடிகளைக்காத்தலும், நீதி நூல்களைக்கற்றுச் † செய்வன தவிர்வன வகிதலும், முயற்சியும் மேற்சொல்லிய ‡ அவ்வங்கங்களோடுடனே திருந்தவுடையானே அமைச்சனுவான், (எ - று).

¶ எண்ணெடு நீண்டது. அவ்வைந்தினைச் சுட்டி வருவிக்க. இந்நான்கினையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது, அவையு மிவற்றோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டுதலானும், அவற்றிற்கு ஐந்தென்னுந்தொகை பெறுதற்கும். ‖ இனி இதனை ஈண்டெண்ணியவற்றிற்கே தொகையாக்கிக் குடிகாத்தலென்பதனைக் குடிப்பிறப்பும் அதனை யொழுக்கத்தாற் காத்தலுமெனப் பகுப்பாரும், கற்றறித லென்பதனைக் கற்றலும் அறிதலுமெ

---

* அசைவின்மை - சோம்புதலில்லாமை.

† செய்வன - செய்யத்தக்கவை; தவிர்வன - செய்யத்தகாதவை.

‡ அவ்வங்கங்களைந்து - செயல், பொருள், வினையென்பனவாம்.

காலம், செய்கை, செய்யும்

¶ ஓடு என்பதனை மற்றவற் றோடுங்கூட்டி வன்கணோடு குடிகாத்த லொடு கற்றறிதலொடு என்று கொள்க. "என்று மெனவு மொடுவுந் தோன்றி, யொன்றுவழி யுடைய வெண்ணிறுட் பிரிந்தே" என்னுந் தொல்காப்பியம் சொல்லதிகாரம் இடையியற் சூத்திரம் இங்குக் கவனிக்கத்தக்கதாம்.

‖ இனி ஐந்து என்றதனை இங்கு வன்கண் குடிகாத்தல் என்றெண்ணியவற்றிற்கே தொகையாக்கிக் குடிகாத்தல் என்பதனைக் குடிப்பிறப்பும் அக்குடிப்பிறப்பை யொழுக்கத்தாற் காத்தலும் என்று பிரிப்பாரும், கற்றறிதலென்பதனைக் கற்றலும் அறிதலும் என்று பிரிப்பாருமுண்டு. அவர் உடன் என்பதனை ஐந்தும் என்று முற்றும்மைப் பொருளாக்கியும், குடியென்பதனைக் குடிப்பிறப்பென்று இட வாகுபெயராக்கியும் வலிந்து பொருள்கொண்டு துன்பப்படுவர்.



னப் பகுப்பாருமுளர். அவர் உடனென்பதனை முற்றும்மைப் பொருட்டாக்கியும், குடியென்பதனை ஆகுபெயராக்கியும் * இடர்ப்படுப.

தெளி:—(இ - ள்.) வன்கண் - (தொழில்செய்தலில்) அசைவில்லாமையும், குடிகாத்தல்-குடிகளைக்காத்தலும், கற்றறிதல்-(நீதிநூல்களைக்) கற்று (செய்வனவற்றையும் தவிர்வனவற்றையும்) அறிதலும், ஆள்வினை - முயற்சியும், ஐந்துடன் - (முற்கூறிய) அவ்வங்கங்களைந்துடனே, மாண்டது - திருந்தவுடையவனே, அமைச்சு - மந்திரியாவான், (எ - று).

எண்ணுப்பொருளில்வந்த ஓடு என்பது ஓடு என நீண்டுநின்றது. அகரச்சுட்டை வருவித்து அவ்வைந்து எனக்கொள்க. வன்கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினை யென்னும் இங்ஙான்கனையும் மேல் 'கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு, மருவினையும்' என்று சொல்லியவற்றுடன் தொகுத்துச்சொல்லியது, கருவிமுதலிய அவையும் வன்கண் முதலிய இவற்றுடன் கூடியே பெருமைப்பட வேண்டுதலாலும், 'கருவியுங் காலமுஞ் செய்கையும் செய்யு, மருவினையும்' என்றவற்றிற்கு ஐந்து என்னும் தொகை பெறுதற்கு மாமென்க.

(க - து.) வினைசெய்தற்கண் அசைவில்லாமை, குடிகளைப் பாதுகாத்தல் முதலியவற்றைத் திருத்தமாகவுடையவனே மந்திரியாவான் என்பது.

The minister is one who in addition to the aforesaid five things excels in the possession of firmness, protection of subjects, discrimination by learning and perseverance.

## ஈ. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்ல தமைச்சு.

---

* உடனிகழ்ச்சிப் பொருளதாகிய மூன்றனுருபை முற்றும்மைப்பொருளாக்கியும் குடியென்பதனை இயற்பெயராகக் கொள்ளாது ஆகுபெயராகக் கொண்டும் வருந்திப் பொருள்கொண்டமைபற்றி 'இடர்ப்படுப' என்று கூறப்பட்டது. பரிமேலழகர் மறுத்த இரண்டுரைகாரருள் முதலுரைகாரர் குடிகாத்தலென்பதனை உம்மைத் தொகையாக்கிக் குடியை யாகுபெயராக்கியும், இரண்டாமுரைகாரர் கற்றறிதலென்பதனை யும்மைத் தொகையாக்கியும், அவ்விருவரும் உடன் என்பதை முற்றும்மைப் பொருளாக்கியும் கொண்டார் என்க. "பிறப்பே குடிமை" என்னும் தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் சூத்திரத்தின் விசேடவுரையில் "வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினை யோ, டைந்துடன் மாண்ட தமைச்சு' என்புழிக் கற்றறிதலென்பதனை இரண்டாக்கி ஐந்தென்பவாகலின்" என்று நச்சினார்க்கினியர் கூறியிருத்தலினால், அவர்க்குக் கற்றறிதல் என்பதனை யும்மைத் தொகையாகக் கொள்ளுதல் உடன்பாடாமென்க.

## அங்கவியல்—க-வது அமைச்சு.

பரி:—(இ - ள்.) வினை வந்துழிப் பகைவர்க்குத் துணையாயிருளை அவரிற் பிரிக்கவேண்டிற் பிரித்தலும், () தம்பாலாரை அவர் பிரியாமற் * கோடை யின்சொற்கலாற் பேணிக்கொள்ளுதலும், முன்னே தம்மி னுந் தம்பாலாரினும் பிரிந்தாரை மீண்டுப் பொருத்தவேண்டிற் பொருத் தலும் வல்லவனே அமைச்சனுவான், (எ - று).

† இவற்றுள் ‡ அப்பொழுதை நிலைக்கேற்ற செயலறிதலும், அதனை ¶ அவ்வாறியாமல் ஏற்றவுபாயத்தாற் ‖ கடைப்பிடித்தலும் அரியவாத லேக்கி 'வல்லது' என்றார். வடநூலார் இவற்றுட் பொருத்தலைச் சந்தியென்றும், பிரித்தலை விக்கிரக மென்றுங் கூறுப.

தெளி:—(இ - ள்.) (போர்த்தொழில்வந்த விடத்து) பிரித்தலும் -
(பகைவர்க்குத் துணையாயிருப்பவரை அப்பகைவரினின்றும் பிரிக்கவேண் டினால்) பிரித்தலும், பேணிக்கொளலும் -
(தம்மிடத்திருப்பவரை அவர் பிரி
யாமற் கொடையினாலும் இன் சொல்லினாலும்)
காத்துக்கொள்ளுதலும், பிரிந்தார் - (தம்மினின்றும்
தம்மவரினின்றும்) பிரிந்தவரை, பொருத்தலும் -
(மறுபடியும் பொருத்தவேண்டினால்) பொருத்துதலும்,
வல்லது - வல்லவனே, அமைச்சு - மந்திரியாவன், (எ - று).

இவற்றுள் அப்பொழுது நிலைக்கு

எற்றசெயலையறிதலும், அச்செயலை
அவாறியாமல் அதற்கு எற்ற உபாயத்தால்
முடிவுறப்பிடித்தலும் அருமை
யாதல் நோக்கி 'வல்லது' என்றார். வடநூலார் இவற்றுள்
பொருத்தலைச்
சந்தி யென்றும், பிரித்தலை விக்கிரகமென்றும் கூறுவர்.

(க- து.) பிரித்தல், பேணிக்கொள்ளுதல், பிரிந்தாரைப்
பொருந்தச்செய்தல்களில் வல்லவனே
மந்திரியாவான் என்பது.

3. The minister is one who can effect discord among
enemies, maintain the good will of his friends and restore
to friendship those who have seceded from him.



ச. தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

---

(1) தம்பாலார் - தம்மிடத்துப் பழகியிருப்பவர்.
* கொடை - விரும்பிய பொருளைக் கொடுத்தல்.
† இவற்றுள் - பிரித்தல், பேணிக்கொளல், பிரிந்தார்ப்

பொருத்தலென்னு மிவற்றுள்.

‡ அப்பொழுதை நிலைக்கு - அந்தச் சமயத்தின் நிலைக்கு.

¶ அவர் என்றது பகைவர்க்குத் துணையாயினர், தம்பாலார் (தம்மைச் சேர்ந்தவர்), முன்னே தம்மினும் தம்பாலாரினும் பிரிந்தவர் என்னும் மூவ ரையும்.

‖ கடைப்பிடித்தல் - உறுதியாகக் கொள்ளுதல்.



பரி:—(இ - ள்.) ஒரு காரியத்தை செய்கை பலவாற்றாற் றேன்றின் அவற்றுள் * ஆவ தாராய்ந்தறிதலும், † அது செய்யுங்கால் § வாய்க்குந் திறனுடைச் செய்தலும், சிலரைப் பிரித்தல் ‡ பொருந்தல் செயற்கண் ¶¶ அவர்க்கு இதுவே செயற்பாலதென்று ‖ துணிவு பிறக்குமவை சொல்லுதலும் வல்லவனே அமைச்சனுவான், (எ - று).

* தெரிதல் 0 செயன்மேலதாயிற்று; † வருகின்றது அதுவாகலின்.

தெளி:—(இ - ள்.) (ஒரு காரியத்தைச் செய்தல் பலவிதமாகத் தோன்றினால்) தெரிதலும் - (அப்பலவற்றுள் ஆவதை) ஆராய்ந்தறிதலும், தேர்ந்து செயலும் - (அது செய்யும்போது பலிக்கும் விதத்தை) ஆராய்ந்து செய்தலும், (சிலரைப்பிரித்தல் பொருத்தல் செய்தலில்), ஒருதலையாச் சொல்லலும் - (அவர்க்கு இதுவே செய்யத்தக்கதென்று) துணிவுபிறக்குமவை சொல்லுதலும், வல்லது - வல்லவனே, அமைச்சு - மந்திரியாவான், (எ - று).

தெரிதல் செயலின்மேல தாயிற்று ; வருகின்றது அதுவாகலின்.

(த - து.) செய்யவேண்டிய காரியத்தை ஆராய்ந்தறிதலும், ஆராய்ந்துசெய்தலிலும், சந்தி விக்கிரகங்களில் துணிவுண்டாமாறு சொல்லவேண்டியவர்க்குச் சொல்லுதலிலும் வல்லவனே மந்திரியாவான் என்பது.

4. The minister is one who is able to comprehend the whole nature of an undertaking, execute it in the best manner possible, and offer assuring advice in time of necessity.

ருஅறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ்

ஞான்றுந்

திறனறிந்தான் றேர்ச்சித் துணை.

பரி:—(இ - ள்.) அரசனும் செய்யப்படும் அறங்களையறிந்து தனக்கேற்ற கல்வியா னிறைந்தமைந்த சொல்லையுடையனு மெக்காலத்தும் வினை செய்யுந் திறங்களை யறிந்தான் அவற்றைச் சூழ்ச்சித் துணையாம்.

---

* ஆவது - செய்யத்தக்கது.

† அது - காரியம். ‡ வாய்க்குந்திறன் - கைகூடுந்திறத்தை.

‡ பொருத்தல் - கூட்டல்.

¶¶ அவர்க்கு - அச்சிவர்க்கு. ‖ துணிவு - நம்பிக்கை.

0 செயன்மேலதாயிற்று - காரியத்தைச் செய்தலின்

மேலதாயிற்று.

+ வருகின்றது அதுவாகலின் - அமைச்சனுக்கு ஆராய்ந்தறிய நேர்வது காரியத்தைச் செய்வதாதலால்.

¶ "மன்னவர் மனத்தையுங் காலதே சத்தையும் வாழ்குடி படைத்திற மையும், மந்திரா லோசனையு மெல்லா மறிந்தவன் வளமான மதிமந்திரி"

என்பது அறப்பளீச்சுரசதகம்.

அங்கவியல்—க-வது அமைச்சு.

## 711

தன்னரசன் * சுருங்கிய காலத்தும் † பெருகிய காலத்தும் ! இடை நிகராய காலத்துமென்பார் 'எஞ்ஞான்றும்' என்றார். ¶ சொல்லா னென்பதனை ஒடு உருபின் பொருட்டாய ஆனுருபாக்கி யுரைப்பாருமுளர். இவையைந்து பாட்டானும் அமைச்சரது குணத்தன்மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) அறன் - (அரசனால் செய்யப்படும்)

அறங்களை, அறிந்து - தெரிந்து, ஆன்றமைந்த - (தனக்கு ஏற்ற கல்வியால்) நிறைந்த மைந்த, சொல்லான் - சொல்லையுடையவனுய், எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், திறன் - (தொழில் செய்யுந்) திறங்களை, அறிந்தான் - அறிந்தவன், தேர்ச்சி-ஆலோசனை கூறுதற்கு, துணை - (அவ்வரசனுக்குத்) துணையாவான்.

தன்னரசன் சுருங்கிய காலத்திலும் பெருகிய காலத்திலும் நடுத்தரமான காலத்திலும் என்பார் 'எஞ்ஞான்றும்' என்றார். இவையைந்து பாட்டாலும் மந்திரிகளது குணத்தன்மை சொல்லப்பட்டது.

(க - து.) தன்னரசன் செய்யும் அறங்களையறிந்து, கல்விபறிவால் நிறைந்தசொல்லை யுடையவனுய்,எப்போதும் தொழில்செய்யுமுறைமையை யறிந்த மந்திரியே அரசனுக்கு ஆலோசனை கூறுதற் குரியவனுவன் என்பது.

5. That minister is the best helper of the king who understanding the duties of the latter is by his special learning, able to give the fullest advice. and at all times conversant with the best method of performing actions

---

சு. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
‖ யாவுள முன்னிற் பவை.

பரி:—(இ - ள்.) இயற்கையாகிய நுண்ணறிவைச்

செயற்கையாகிய நூலறிவோடுடையாய அமைச்சரீக்கு மிக்க நுட்பத்தையுடைய சூழ் சிசிகளாய் முன்னிற்பன யாவையுள ? (எ - று).

---

* சுருங்கியகாலத்தும் - பொருள் படை முதலியவற்றால் குறைவுபட்ட காலத்திலும்.

† பெருகியகாலத்தும் - பொருள் படை முதலியவற்றால் விருத்தி யடைந்தகாலத்திலும்.

‡ இடைநிகராய - பொருள் படை முதலியவற்றால் நடுத்தரமான.

¶ சொல்லான் என்பதனை எச்சப்பொருளில் வந்த முற்றுகக் கொள் ளாது (சொல்லான் என்னும் வினைமுற்றின் விகுதியான) ஆன் என்பதனை ஓடு உருபின்பொருளதான ஆன் உருபாக்கிச் சொல்லொடு என்று பொருள் கூறுவாருமுண்டென்பது. ஆன் உருபு ஓடு உருபின் பொருளில் வருதலை "அறத்தான் வருவதே யின்பம்" என்னுங் குறளுரையிற் காண்க.

‖ யா என்னும் வினை இங்கு இல்லையென்னும் பொருளில் வந்தது.

* மதிநுட்பமென்பது பின்மொழிநிலையல். அது தெய்வத்தா வேண்டு
தலின் முற் கூறப்பட்டது. நூலென்பதூஉம் அதிநுட்பமென்பதூஉம் ஆகு
பெயர். ‡ அதி யென்பது வடசொல்லுள்
மிகுதிப்பொருளதோ ரிடைச்
சொல்; ¶ அது நிரந்து நுட்பமென்பதனோடு தொக்கது.
முன்னிற்றல் -
மாற்றார் சூழ்ச்சியாயின தஞ்சூழ்ச்சியால் அழியாது நிற்றல்.
† இனி அதினு
ட்பமென்று பாடமோதி, அதனினுட்பம்
யாவென்றுரைப்பாருமுளர்; அவர்
சூழ்ச்சிக்கினமாய் முன்சுட்டப்படுவதொன்றில்லாமையும்,
() கட்டுப்பெயர்

---

* நுட்பமதியெனற் பாலது செய்யுள் நோக்கி
மதிநுட்பமெனப் பின்
முன்னுகப் புணர்ந்து நின்றது. நுட்பமதி யென்பதன்கண்
மதியென்னும்
பின்மொழியிற் பொருள்சிறந்திருத்தலால்
மதிநுட்பமென்பது பின்மொழி
நிலையலாயிற்று. பின்மொழி நிலையல் - பின்மொழிக்கண்
பொருள் சிறந்து
நிற்றல். "அவைதாம், முன்மொழி நிலையலும்" என்னுந்
தொல்காப்பியச்

சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் "பெண்ணணங்கு என்பது அணங்குபோலு
லும் பெண்ணென்ப' தாகலிற் பின்மொழி நிலையலாம்" என்று கூறுவதும்,

சேனாவரையர் 'அடைகடல் என்புழி அடைஎன்னும்பின்மொழிக்கட் பொரு
ணின்றது. இடைவகையாற் பின்மொழியாயிற்று. முன் பின் என்பன கால வகையாற்றமொறி நிற்கும்" என்று கூறுவதும் இங்கறியத்தக்கனவாம்.

‡ பிரயோகவிவேகநூலார் "வினைப்பெயரோடவ்" என்னுஞ் செய்யு
ளினுரையில் "அதிநுட்பமென்பது வினைப்பெயரோடும் வினைச்சொல்லோ
டும் வராமையின், அவ்வியபோகமென்க" என்றனர். இலக்கணக் கொத்து
நூலார் "பண்புத்தொகைவிதி" என்னும் சூத்திர வுரையில் அதிநுட்ப மே
ன்பதனை மூற்பதம் வடமொழி என்பதற் குதாரணமாக வமைந்திருக் கின்ற
னர்.

¶ "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ,

யெழுத்தொடு புணர்ந்த
சொல்லா குமே" என்று தொல்காப்பியம் கூறுதலால்
'அது (அதியென்
பது) திரிந்து நட்பமென்பதனோடு தொக்கது' என்று
கூறியது நன்கு விள
ங்கும். [ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து பகுதி விசேஷ
விகாரப்படாது
விகுதிமுதலிய விகாரங்களைப் பெற்று வழங்கப்படும் பதம்
தற்சமமென்றும்,

பகுதியிலும் எழுத்துக்கள் தோன்றல் திரிதல் முதலிய விகாரங்களைப்பெற்று வழங்கப்படும் பதம் தற்பவமென்றும் அறிக].

† இனி அதிநட்பமென்பதனை அதிஷ்டமென்று
பாடங்கூறி, அதற்கு
அதனின் நட்பம் எவையென்று பொருள்கூறுவாருமுண்டு;
அவ்வாறு கூறு
பவர் ஆலோசனைக்கு இணமாய் முன்னே சுட்
டப்படுவதொன்றில்லாமையை
யும், அது இது முதலிய சுட்டுப்பெயர்கள் இன் என்னும்
ஐந்தாம் வேற்று

மை யுருபை ஏற்றவிடத்து அன்சாரியைபெற்று அதனின் இதனின் என்று நிற்பதன்றி அதின் இதின் என்று நில்லாமையையும் அறிந்திலனென்பதாம்.

() அது இது முதலிய சுட்டுப்பெயர்கள்
உருபேற்கும்போது அன்சாரி
யை பெறுமென்பது "சுட்டுமுத லுகர மன்மெஞ்சு சிவணி,
யொட்டிய மெய்

யொழித் தகரங் கெடுமே" என்னும் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் உரு பியற் சூத்திரத்தா லினிது விளக்குவதாம்.



ஐந்தாமுருபேற்ற வழி அவ்வாறு நில்லாமையு மறிந்திலர். பகைவர் சூழ்வன வற்றைத் தாமறிந்து அழித்து அவாறிந்தழியாதன தாஞ்சூழ்வனென்பது கருத்து. இதனால் அவரது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) மதிநுட்பம் - (இயற்கையாகிய) நுண்ணறிவை, நூலோடு - (செயற்கையாகிய) நூலறிவோடு, உடையார்க்கு - உடையவராய மந்திரிகளுக்கு, அதிநுட்பம் - மிக்க நுட்பத்தையுடைய ஆலோசனைகளாய், முன்னிற்பவை - முன்னிற்பன, யாவுள - எவையுள, (இல்லை), (எ - று).

நுட்பமதி என்பது மதிநுட்பமென்று வந்து பின்மொழியிற் பொருள் சிறந்து நின்றது. அம்மதிநுட்பம் ஊழ்தரவேண்டியதாதலால் மதிநுட்பம் என்று முன்னே கூறப்பட்டது. நூல் என்பது நூலிலுலுண்டாகும் அறி வைவுணர்த்துதலால் கருவியாகுபெயராம்; அதிநுட்பம் என்பது மிக்க நுட் பத்தையுடைய ஆலோசனைகளை யுணர்த்துதலால் பண்பாகுபெயராம். அதி நுட்ப மென்பதன்கணுள்ள அதியென்பதுவடமொழியில்

மிகுதிப்பொருளே யுணர்த்துவதோ ரிடைச்சொல்; (ஈதி என்னும்) அது திரிந்து நுட்பமென் பதனோடு தொடர்ந்து நின்றது. முன்னிற்றல் - பகைவரது ஆலோசனைகள் தமது ஆலோசனையால் அழியாது நிற்றல். பகைவர் ஆலோசிப்பனவற்றைத் தாம் அறிந்து அழித்து அப்பகைவரறிந்து அழிக்காதனவற்றைத் தாமாலோசிப்பரென்பதுகருத்து. இதனால்அவ்வமைச்சரது சிறப்புச்சொல்லப்பட்டது.

(க - து.) இயற்கையறிவும் செயற்கையறிவு முடைய மந்திரிகளுக்குமுன் பகைவரது சூழ்ச்சிகள் யாதொரு பயனையுஞ்செய்ய மாட்டா வென்பது.

6. What contrivances are there so acute, as to resist those who possess natural acuteness together with learning.

---

எ. செயற்கை யறிந்தக் கடைத்து மூலகத்
தியற்கை யறிந்து செயல்.

பரி:—(இ - ள்.) நூனெறியான் வினைசெய்யுந் திறங்களை யறிந்த விடத்தும், அப்பொழுது நடக்கின்ற உலகவியற்கையையறிந்து அதனோடு பொருந்தச் செய்க, (எ - று).

* கடைத்துமென்புழித் து பகுதிப்பொருள்விகுதி. நூனெறியோயாயினும் உலகநெறியோடு பொருந்தாதன

செய்யற்க; செய்யின் அது பழிக்கு மென இயற்கையறிவாற் பயன் கூறியவாறு.

---

* அறிந்தக்கடையென்னும் வினையெச்சத்தினீற்றினின்ற துவ்விகுதி தனக்கெனப் பொருளில்லாது பகுதிப்பொருளையே யுணர்த்துதலால், அது (து) பகுதிப்பொருள் விகுதியாயிற்றென்க. அறிந்தக் கடையென்பது இறந்தகால வினையெச்சமாம். "பின்முன் கால்கடை" என்னும் தொல்காப்பியச் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் "கடை: 'தொடர்கூடத் தூவாமை வந்தக்கடை' என இறப்புப்பற்றிவரும்" என்று கூறுவதிங்குணர்தற்பாலதாம்.





தெளி;—(இ - ள்.) செயற்கை - (நூல்வழியால் தொழில்) செய்யும் வகைகளை, அறிந்தக்கடைத்தும் - அறிந்தவிடத்தும், உலகத்து - உலகத்தில், இயற்கை - (அப்போது நடக்கின்ற) இயற்கையை, அறிந்து - தெரிந்து, செயல் - (அவ்வியற்கையோடு பொருந்தச்) செய்யக்கடவர், (எ - று).

அறிந்தக்கடைத்து என்றவிடத்து து என்பது பகுதிப்பொருளை யுணர்த்திய விகுதி. நூல்வழியே யாயினும் உலகவழியோடு பொருந்தாதனவற்றைச் செய்யாதிருக்கக் கடவர்; செய்தால் அவ்வுலகம் பழிக்குமென்று உலகியற்கையினறிவாற் பயன்சொல்லியவாறும்.

(க - து.) மந்திரிகள் நூல்வழி பால் தொழில் செய்யும் வகை யை நன்குணர்ந்து, அதனை யுலகவியற்கையோடு பொருந்தச்செய் தல் வேண்டும் என்பது.

7. Though one may be acquainted with the theoretical modes of performing an action, one should understand the ways of the world and act accordingly.

அ. * அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.

பரி:—(இ - ள்.) அறிந்து சொல்லியாது அறிவையு மழித்து,
அரசன்தானு மறியானே யாயினும், அக்குற்றம் நோக்கி யொழியாது
அவனுக்கு உறுதியாயின கூறுதல் அமைச்சனுக்கு முறைமை, (எ - று).

அறி என்பது முதனிலைத்தொழிற் பெயர். கோறல் - தான் கொள்ளாமை மேலும் இகழ்ந்து கூறுதல். † 'உழையிருந்தான்' எனப் பெயர் கொடுத்தார்; ‡ அமாத்தியனென்னும் வடமொழிப் பெயர்க்கும்

பொருண்மை அது வாகவின். ¶ உறுதி கூருக்கால் அவனதிறுதி யெய்தற் குற்றத்தை உலகந் தன்மே லேற்றுமென்பார் 'கூறல் கடன்' என்ருர். இவை யிரண்டுபோட்டா னும் அவர் செயல் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.)

அறி - (அறிந்து சொல்லினவரது) அறிவையும், கொன்று - அழித்து, அறியானெனினும் - (அரசன் தானும்) அறியானே யாயினும், (அக்குற்றத்தை நோக்கிநீங்காது), உறுதி - (அவ்வரசனுக்கு) உறு

---

* "செவிசுடச் சென்றுங் கிடந்தறிவு மூட்டி, வெகுளினும் வாய் வெரீஇப் போ - கவுண்மதத்த, கைம்மா வயத்தே பாகுமற் றெத்திறத்து, மம்மாண் பினவே யமைச்சு" என்பது நீதிநெறிவிளக்கம்.

† உழையிருந்தான் - பக்கத்திலிருந்தவன்.

‡ அமாத்தியர் - அருகே இருப்பவர். அமா - அருகே, தியர்-இருப்ப

•• அவர் அரசனுக்கருகேயிருந் தாலோசனை கூறுவோராவர்.

¶ உறுதி - உறுதி (நன்மை) யைத் தரத்தக்க சொற்கள்.

• அங்கவியல்—க-வது அமைச்சு. 715

தியாயினவற்றை, கூறல்-சொல்லுதல்,

உழையிருந்தான்-மந்திரிக்கு, கடன்- முறையாம், (எ - று).

அறி என்னும் பகுதி அறிவு என்னுந்
தொழிற்பெயர்ப்பொருளில் வந்

தமையின் முதனிலைத் தொழிற்பெயராம். கோறல் (அழித்தல்) - தான் (அறிந்து சொன்னவராகிய மந்திரிகளது உறுதி மொழிகளை மனதிற்) கொள்ளாமல் மேலும் (அவரை) இழிவுபடுத்திப் பேசுதல். மந்திரிக்கு உழையிருந்தான் என்ற பெயர் கொடுத்தார்; அமாத்தியர் என்னும் வடமொழிப் பெயர்க்கும் பொருள் உழையிருந்தாரென்பதாகலினென்க.

உறுதிசொல்லா தபோது அவனது மூடிவடைதலாகிய
குற்றத்தை உலகந்தன்மேல் ஏற்று

மென்பார்'கூறல்கடன்'என்றார். இவை இரண்டு பாட்டாலும் அம்மந்திரிகள் செயல் சொல்லப்பட்டது. உலகம் - உயர்ந்தோர்.

(க - து.) அரசன் தம்மை யவமானப்படுத்திய விடத்தும் அவனுக்கு உறுதியாயினவற்றைச் சொல்லுதல் மந்திரிகளுக்குக் கடமையாம் என்பது.

8. Although the king may discard the advice of the wise and himself be utterly ignorant, it is the duty of the minister to give him sound advice.

கூ. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் *
டெவ்வோ

ரேழுபது கோடி யுறும்.

* பரி:—(இ - ள்.) பக்கத்திருந்து பிழைப்ப வெண்ணும் அமைச்சனொருவனில் அரசனுக்கு எதிர் நிற்பார் ஓரேழுபது † கோடி பகைவ நறுவர், (எ - று).

எழுபதுகோடி யென்றது மிகப்பலவாய வெண்ணிற் கொன்று காட்டி

யவாறு. வெளிப்பட நிற்றலான் அவர் காக்கப்படுவர்; இவன் உட்பகையாய் நிற்றலாற் காக்கப்படானென்பதுபற்றி, § இவ்வாறு கூறினர். ‡ எழுபது கோடிமடங்கு நல்லரென்றுரைப்பாரும், எழுபதுகூறு தலையென்று பாட மோதுவாரு முளர்.

தெளி:—(இ - ள்.) பக்கத்துள் - பக்கத்திலிருந்து, பழுதெண்ணும் - தீங்கு செய்யவெண்ணும், மந்திரியின்-மந்திரியொருவனிலும், (அரசனுக்கு

---

* "தெவ்வுப் பகையாகும்" என்பது தொல்காப்பியம்.

† கோடி - நூறுலட்சம்.

§ பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ, ரெழுபது கோடி யுறும் என்றிவ்வாறு.

‡ எழுபது கோடியுறும் என்பதற்கு(வெளிப்பட நிற்கும் பகைவர்) எழ் பது கோடி மடங்கு நல்லரென் றுரைகூறுவாரும், எ[illegible]து கூறுதலை யென்று மூலபாடங் கூறுவாரு முண்டு.

எதிர்நிற்பவர்), ஓரெழுபதுகோடி தெவ் - ஓரெழுபதுகோடி பகைவர், உறும் - உறுவர், (எ - று).

எழுபதுகோடி யென்றது மிகவும் பலவாகிய எண்ணிலுக்கு ஒன்று காட்டியபடியாம். பகைவர் வெளிப்பட நிற்றலால் அப்பகைவர் அரசனால் காக்கப்படுவர்; இம்மந்திரி உட்பகையாய் நிற்றலால் அரசனால் காக்கப்படமாட்டா னென்பதுபற்றி, இவ்வாறு சொல்லினர். காக்கப்படுதல் - தடுக்கப்படுதல்.

(க - து.) பக்கத்திருந்து தன்னரசனுக்குத் தீங்கு செய்ய நினைக்கும் மந்திரி அவனுக்குப் பெரும் பகைவனாவன் என்பது.

9. Far better are seventy crores of enemies for a king than a minister at his side who designs to ruin him.

கo. முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

பரி:—(இ - ள்.) செயியப்படும் வினைகளை முன் அடைவுபட வெண்ணி வைத்தும், செயியுங்கால் அவை முடிவிலவாகவே செயியா நிற்பர், முடித்தற்கேற்ற கூறுபாடில்லாதார், (எ - று).

அக்கூறுபாடாவன: † வந்த வந்த வினையூறுகட்கு ‡ ஏற்ற வேற்ற ¶ பரிகாரமறிந்து செய்தலும், தாந் திண்ணியராதலுமாம். பிழையாம லெண்

ண வல்லராய் வைத்தும் செய்து முடிக்கமாட்டாரூமளென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் அமைச்சருள் விடப்படுவாரது குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (செய்யப்படுந் தொழில்களை) திறப்பாடு - (முடித் தற்கு ஏற்ற) கூறுபாடு, இலாதவர்-இல்லாதவர், முறைப்படச் சூழ்ந்தும் - (முன்னே) அடைவுபட ஆலோசித்திருந்தும், முடிவிலவே செய்வர் - (செய் யும்போது அவற்றை) முடிவில்லாதனவாகவே செய்யா நிற்பர், (எ - று).

அக்கூறபாடாவன: வந்த வந்த இடையூறுகளுக்கு ஏற்ற ஏற்ற பரிகா ரத்தை யறிந்துசெய்தலும், தாமுறுதியுடையவ ராதலுமாம். (செய்யப்படுந் தொழில்களை) தப்பாமல் ஆலோசிக்க வல்லவராயிருந்தும் செய்து முடிக்க

மாட்டாதவரும் உண்டென்பதாம். இவை இரண்டுபாட்டாலும் மந்திரிகளுள் விடப்படுவாரது குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) மேற்கொண்ட தொழிலை முடித்தற்கேற்ற திறமில் லாத மந்திரிகள் அடைவுபெற ஆலோசித்துத் தொழிலைச் செய்தா லும் அதனை முடிக்கமாட்டார் என்பது.

† வந்த வந்த - நேரிட்ட நேரிட்ட.

ஏற்ற வேற்ற - தகுதியான தகுதியான. ¶ பிரிதரம் - மாற்று.

அங்கவியல்—உ-வது சொல்வன்மை.

717

10. Those ministers who are destitute of executive ability will fail to carry out their schemes although they may have contrived aright.

இரண்டாவது அதிகாரம்.

## சொல்வன்மை:—The Power of Speech.

பரி:—அஃதாவது தான் கருதிய வினை முடியுமாற்றல் *அமைச்சிய னடத்தற் கேதுவாய சொற்களை சீர்சொல்ல வல்லனுதல். † மேல் ‡'ஒரு தலையா சீர் சொல்லலும் வல்லது' என்றதனையே சிறப்புப்பற்றி விரித்துரைக்கின்றமையின், இஃதமைச்சின் பின் வைக்கப்பட்டது.

• தெளி:—அஃதாவது தான் நினைத்த தொழில் முடியும் வழியால் மந் திரியினது தன்மை நடத்தற்குக் காரணமான சொற்களைச் சொல்ல வல்லவ ராதல். முன்னதிகாரத்தில் 'ஒருதலையாச் சொல்லலும் வல்லது' என்றதை யே சிறப்புப்பற்றி விரித்துச் சொல்லுதலால், இஃது (சொல்வன்மை) அமைச்சின்பின் வைக்கப்பட்டது.

க. நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று.

• பரி:—(இ - ள்.) அமைசீசர்க்கு இன்றி யமையாத் தன்மையாவது சான்றோரான் நாநலமென்று சிறப்பித்துச் சொல்லப்படும் நலத்தினை யுடையராதல்; அந்நலமும் ¶ பிறர்க்கும் + பிறநல மெல்லாவற்றுள்ளும் அடங்குவதன்றி மிக்க தாகலான், (எ - று).

நாவாலுளதாய நலமென விரியும். இந்நலம் உலகத்தைத் தம் வயத்ததாக்கும் அமைச்சர்க்கு வேறுக வேண்டுமென்னும் நீதிநூல் வழக்குப்பற்றி

---

* வார்த்தைசொல்ல வல்லவராதல் என்றும் பாடமுண்டு.

+ மேல் என்றது "தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச், சொல்லலும் வல்ல தமைச்சு" என்னும் (அமைச்சதிகாரத்திலுள்ள) குறளை.

‡ இதன்பொருள். சிலரைப் பிரித்தல் பொருத்தல் செய்தலில் அவர்க்கு இதுவே செய்யத்தக்கது என்று நிச்சயமுண்டாம்படி சொல்லுதலும் வல்ல வனே என்பது.

¶ பிறர்க்கும் - அமைச்சரல்லாதவர்க்கும்.

+ பிறநலமெல்லாமென்றது நாநலமல்லாத வேறு நலங்களை. (நலம்-நன்மை.) அவை: கல்வியுடைமை, பொருளுடைமை, ஆண்மையுடைமை, அழகுடைமை முதலாயின.

நாநலம் - நாவினாற் பேசி மேற்கொண்ட காரியத்தை முடிக்கும் வல்லமை.



'நாநலமென்னு நலன்' என்றும், பிறர்க்கும் * இதுபோற் சிறந்தது பிறிதின்மையான் 'அந்நலம் யாநலத் துள்ளதூஉ மன்று' என்றுங் கூறினர். பிரித்தல் பொருத்தல் † முதலிய தொழிலில்லாதார்க்கும் ‡ இன்றியமையாதாயபின் அத்தொழிலார்க்குக் கூறவேண்டுமோ வென்பது கருத்து.

தெளி:—(இ - ள்.) (மந்திரிகளுக்கு அவசியம் வேண்டிய குணமாவது) நாநலமென்னும் - (சான்றோரால்) நாநலமென்று சிறப்பித்துச் சொல்லப்படும், நலனுடைமை - நலத்தினை யுடையராதல், அந்நலம்-அந்த நாநலமாவது, (பிறர்க்கும்), யாநலத்து - பிறநலங்க ளெல்லாவற்றினுள்ளும், உள்ளதூஉ மன்று - அடங்குவதன்று, (மிகுந்தது) (ஆகலான்), (எ - று).

நாநலம் என்பது நாவாலுளதாகிய நலமென விரியும்; இது மூன்றும் வேற்றுமையுருபும் பொருளு முடன்தொக்கதொகை. இந்நலம் உலகத்தைத் தம்வசத்ததாக்கும் மந்திரிகளுக்கு வேறுயிருக்கவேண்டு மென்னும் நீதிநூல் வழக்குப்பற்றி 'நாநலமென்னு நலன்' என்றும், பிறர்க்கும் இதுபோற் சிறந்தது வேறில்லாமையால் 'அந்நலம் யாநலத் துள்ளதூஉ மன்று' என்றும் சொல்லினர். பிரித்தல்பொருத்தல் முதலாகிய தொழிலில்லாதவர்க்கும் இந்நலம் அவசியம் வேண்டுவதாய பின் அத்தொழிலுடைய மந்திரிகளுக்குச்சொல்லவேண்டுமோ வென்பது கருத்து.

(க - து.) மந்திரிகளுக்கு நாநலம்போல வேறு நலமில்லை.

1. The possession of that goodness which is called the goodness of speech is even to others better than any other goodness.



உ. ஆக்கமுங் கேடு மதனல் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

பரி:—(இ - ள்.) தம் மாசரீகதும் ¶ அங்கங்கட்தும் 0 ஆகிகவழி வருள் தஞ்சொல்லான் வருமாகலான், ‖ அப்பெற்றித்தாய சொல்லின்

கட் †† சோர்தலை அமைச்சர் தங்கணிகதூமற் ‡‡
போற்றிக் $ காக்க.

---

* இது போற்சிறந்தது - இந்நாநலத்தைப் போற்சிறப்புடையது. நாநலம் சிறப்புடையதென்பது "எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்,
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்–உய்த்துணர்ந்தும்,
சொல்வன்மை யின்றெனி னென் னலு
மஃதுண்டேற், பொன்மலர் நாற்ற முடைத்து" என்று நீதிநெறிவிளக் கம் கூறுவதாலு மறியப்படும்.

† முதலிய என்றமையின், பேணிக்கொளல், தெரிதல், தேர்ந்துசெயல் முதலியவற்றையுங் கொள்க. ‡ இஃது - நாநலம்.

¶ அங்கம் என்றது நாடு, அரண், பொருள், படை முதலியவற்றை.

0 ஆக்கம் - மேல்மேலுயர்தல். அழிவு - கீழ்கீழ்தாழ்தல்.

‖ அப்பெற்றித்தாய - ஆக்கவழிவுகளைத் தருந் தன்மையதான.

†† சோர்தலை - தளர்தலை. ‡‡ போற்றி - நன்கு சிந்தித்து.

$ காக்க - தடுக்கக் கடவர்.

ஆக்கத்திற் கேதுவாய நற்சொல்லையும்

கேட்டிற் கேதுவாய தீச்சொல் லையும் சொல்லாத லொப்புமைபற்றி 'அதனால்' என்றார். * செய்யுளாகலின் சுட்டுப்பெயர் முன்வந்தது. பிறர் சோர்வு போலாது உயிர்கட்கெல்லாம் ஒரு ங்குவருதலால் 'காத்தோம்பல்' என்றார். இவை இரண்டு பாட்டானும் இஃது இவர்க் கின்றியமையா தென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (தம்மரசனுக்கும் அங்கங்களுக்கும்) ஆக்கமும் - பெருக்கமும், கேடும் - அழிவும், அதனால் - (தமது) சொல்லினால், வருத லால் - வருமாகலால், சொல்லின்கண் - (அத்தன்மையதாய) சொல்லினிட த்து, சோர்வு - சோர்தலை, காத்தோம்பல் - (மந்திரிகள் தம்மிடத்துண்டா காமல் போற்றி) காக்கக்கடவர், (எ - று).

ஆக்கத்திற்குக் காரணமாகிய நற் சொல்லையும் கேட்டிற்குக் காரண

மாகிய தீச்சொல்லையும் சொல்லென்னும் ஒப்புமைபற்றி (அவற்றுளென்று பன்மையாகக்கூறாது) 'அதனால்' என்று ஒருமையாகக் கூறினார். செய்புளா தலால் அதனால் என்னும் சுட்டுப்பெயர் சொல் என்னும் இயற்பெயர்க்கு முன்னேவந்தது. மந்திரிகளது சொற்சோர்வு மற்றவர்களது சொற் சோர்வு போலாகாமல் உயிர்களுக்கெ ல்லாம் தீங்கு ஒருமிக்கவருதற்கேதுவாயிருத்த லால் 'காத்தோம்பல்' என்றார். இவை இரண்டுபாட்டாலும்

இச்சொல்வன்மை இம்மந்திரிகளுக்கு அவசியம் வேண்டுவதென்பது சொல்லப்பட்டது.

(க - து.) செல்வமும் கேடும் தமது சொல்லால் வருதலால் மந்திரிகள் தம்சொல்லின்கண் சோர்வு வராமலதனைக் காக்கக் கடவர் என்பது.

2. Since prosperity and declension result from speech, ministers should carefully guard themselves against faultiness therein.

ரூ. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

பரி:—(இ - ள்.) நட்பா யேற்றுக்கொண்டாரைப் பின் வேறுபடா மற் பிணிக்குங் குணங்களை † அவா வி மற்றைப் பகையாய் ‡ ஏற்றுக்

---

* உலகவழக்கில் இயற்பெயர்க்குப் பின்னே சுட்டுப்பெயரைக் கூறல் வழாநிலை என்றும், இயற்பெயர்க்கு முன்னே சுட்டுப்பெயரைக் கூறல் வழு

வாமென்றும், செய்யுள் வழக்கில் இயற்பெயர்க்கு முன்னே சுட்டுப்பெய

ரைக் கூறல் வழுவமைதியாமென்றும் இலக்கணநூல் கூறுதல்பற்றி'செய்

யுளாகலின் சுட்டுப்பெயர் முன் வந்தது' என்று கூறப்பட்டது. "(சுட்டுப்பெ

யரை) முற்படக் கிளத்தல் செய்யுளு ளுரித்தே " என்று தொல்காப்பியங்

கூறுவது இங்கறியத்தக்கதாம்.

† அவாவி - மேலும்மேலும் கொள்ள விரும்பி.

‡ ஏற்றுக்கொள்ளாதாரும் - தமது சொல்லை யங்கீகரியாதவர்களும்.



கொள்ளாதாரும் பின் அப்பகைமை யொழிந்து நட்பினை விரும்பும் வண்ணஞ் சொல்லப்படுவதே அமைச்சரிக்குச் சொல்லாவது,(எ - று).

அக்குணங்களாவன: வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதா

தல், விழுப்பயன்றருத லென்றிவை * முதலாயின. † அவற்றை யவாவுதலா வது சொல்லுவான் ‡ குறித்தனவேயன்றி வேறு நுண்ணுணர்வுடையோர் ¶ கொள்பவற்றின் மேலும் நோக்குடைத்தாதல். அவாவென்னுஞ் செய்தெ னெச்சம் 0 மொழிவதென்னுஞ் செயப்பாட்டினை கொண்டது. இனிக் +கேட்டார் கேளாரென்பதற்கு நூல் கேட்டார் கேளாதாரெனவும், ‖ வினவியார் வினவாதாரெனவு முரைப்பாருமுளர். தகையவா யென்பதற்கு () எல்லாருங் []

தகுதியை யுடையவா யென்றுரைத்தார்; அவர் ¶¶ அப்பண்மை ‡‡ மொழிவதென்னும் ஒருமையோடு (‡) இயையாமை நோக்கிற்றிலர். இச் சொல்லின திலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கேட்டார் - நட்பா யேற்றுக்கொண்டவரை, பிணிக் கும் - (பின் வேறுபடாமற்) கட்டும், தகை - குணங்களை, அவாய் - அவாவி,

---

* முதலாயின என்றமையின் முறையின்வைப்பு, உலகமலையாமை, உதா ரணமுடையதாதல் முதலியவற்றையுங் கொள்க. 'சுருங்கச் சொல்லல் விள ங்க வைத்தல், நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல், ஓசை யுடை மை யாழமுடைத் தாதல், முறையின் வைப்பே யுலகமலை யாமை, விழுமி யது பயத்தல் விளங்குதா ரணத்த, தாகுத ணூலிற் கழகெனும் பத்தே'என்று நன்னூல் கூறுவது மிங்கறியத்தக்கதாம்.

† அவற்றை - வழுவின்மை முதலிய குணங்களை.

‡ குறித்தனவேயன்றி - உத்தேசித்த பொருள்களையேயல்லாமல்.

¶ கொள்பவற்றின்மேலும் - கொள்ளும் பொருள்மேலும், நோக்குடை த்தாதல் - கருத்தினையுடையதாதல்.

0 மொழிவது என்பது செயப்பாட்டுவினைப் பொருளில் வந்த செய் வினை. இவ்வாறு வருதலை இலக்கணக்கொத்து

நூலார் "படுசொல் லற்றே படுபொருளாயும்" என்பர்.

+ கேட்டார் என்பதற்கு நூல் கேட்டார் வினவியார் என்றும், கேளார் என்பதற்கு நூல் கேளாதார் வினவாதாரென்றும் பொருள் கூறுவாரு முளர்.

‖ வினவியார், வினவாதார் - கேள்வி கேட்டவர், கேள்வி கேளாதவர்.

() எல்லாரும் என்றது பரிமேலழகர் உரை யெழுதுவதற்குமுன் உரை யெழுதியுள்ள தருமர், மணக்குடையர், தாமத்தர், நச்சர் முதலாயினோரை.

[] தகுதியையுடையவாய் - குணங்களையுடையனவாய்.

¶¶ அப்பன்மை-தகைய (குணங்களுடையன) வென்னும் பலவின்பால்.

†† மொழிவதென்னும் ஒன்றன்பாலோடு.

(‡) இயையாமை நோக்கிற்றிலர்-பொருந்தாமையைக் கவனித்தாரல்லர்.

## அங்கவியல்—உ-வது சொல்வன்மை.

**721**

கேளாரும் - மற்றைப்பகையா யேற்றுக்கொள்ளாதவரும்; வேட்ப - (பின் அப்பகைமை யொழிந்து வேட்பினை) விரும்பும்வண்ணம், மொழிவது - சொல்லப்படுவதே, சொல்லாம் - (மந்திரிகளுக்குச்) சொல்லாவது, (எ - று).

அக்குணங்களாவன: வழுவில்லாமை, சொற்சுருங்குதல், பொருள்விளங் குதல், இனிதாதல், சிறந்த பயனைத்தருதல் என்ற இவை முதலாயின.

அக்குணங்களை அவாவுதலாவது அச்சொல் சொல்லுவான் குறித்த பொருள் களேயன்றி வேறு நுண்ணறிவுடையவர் கொள்ளும் பொருள்களின் மே லும் நோக்குடையதாதல். அவர்ப் என்னும் செய்தென்னும் வாய்பாட்டிறந்த கால வினையெச்சம் மொழிவது என்னும் செயப்பாட்டு வினை முற்றைக் கொண்டு முடிந்தது. இதனால் சொல்லினது இலக்கணம் சொல்லப்பட்டது. ஆம் என்பது பிரித்துச்சொல்லென்பதனோடு கூட்டப்பட்டது.

(க - து) பகைவரும் நட்பினரும்
சொல்லுவதே சொல்லாம் என்பது.
ஏற்றுக்கொள்ளுமாறு

3. The minister's speech is that which seeks to express elements as to bind his friends and is so delivered as to make even his enemies desire his friendship.

ச. தேறனறிந்து சொல்லுக சொல்லே யறனும்
பொருளு மதனினூஉங் கில்.

பரி:—(இ - ள்.) * அப்பெற்றித்தாய சொல்லே அமைச்சர் தம் மு டையவு ம் கேட்பாருடையவுமாய தேறங்களையறிந்து சொல்லுக, அங் ஙனஞ் சொல்லுதற்கு மேற்பட்ட அறனும் பொருளுமில்லை யாகலான்.

அத்திறங்களாவன: குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவ மென்பனவற்றுன் வருந் தகுதி வேறுபாடுகள். அவற்றையறிந்து சொல்லுதலாவது அவற்றுற் றமக்கும் † அவர்க்கு முளவாய ஏற்றத்தாழ்வுக ளேயறிந்து அவ்வம் ‡ மரபாற் சொல்லுதல். ¶ அஃது ‖ உலகத்தோ டொ

ட்ட வொழுகலேயும் இனிமையையும் பயத்தலிஞ் அறனுயிற்று; தங்காரிய முடித்தலிற் பொருளாயிற்று. அறனும் பொருளுமெனக் 0 காரணத்தைக் காரியமாக்கிக் கூறினுர்.

---

* அப்பெற்றித்தாய - (முந்திய குறளிற்கூறியவாறு) கேட்டாரைப் பிணிப்பதாயும் கேளாரையும் வேட்பச்செய்வதாயுமுள்ள.

† அவர்க்கும் - கேட்பார்க்கும். † மரபால் - முறையால்.

¶ அஃது - அவ்வம்மரபாற் சொல்லுதல். ‖

ஒழுக்கமுடைமை. 10.

0 திறனறிந்து சொல்லுதலாகிய காரணத்தை அறனும் பொருளும் எனக் காரியமாக்கிக் கூறினமையின், இது காரணம் காரியமாய உபசாரவழக்காம். திறனறிந்து சொல்லுதலால் அறனும் பொருளுமுண்டாகு மென்று கூறுது அதனையே அறனும் பொருளும் என்று கூறியவாறுகாண்க.

தெளி:—(இ - ள்.) (மந்திரிகள்) சொல்லே - (அத்தன்மையதாகிய) சொல்லே, திறன் - (தம்முடையனவும் கேட்பாருடையனவுமான) திறங்களை, அறிந்து தெரிந்து, சொல்லுக - சொல்லக்கடவர், அதனினூஉங்கு - அவ்வாறு சொல்லுதற்கு மேற்பட்ட, அறனும் பொருளும்—அறமும் பொருளும், இல்-இல்லை, (ஆகலான்), (எ - று).

அத்திறங்களாவன: குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், தெல்வம், உருவம், பருவம் என்பனவற்றுல் வரும் தகுதிவேறுபாடுகள். அத்தகுதிவேறுபாடுகளை யறிந்து சொல்லுதலாவது அத்தகுதி வேறுபாடுகளால் தமக்கும் அவர்க்கும் உண்டாகிய உயர்வுதாழ்வுகளை யறிந்து (அவரவர்க்குத்தகுந்த) அவ்வம் மாபி னுல் சொல்லுதல். அஃது உயர்ந்தோர் நடையோடுபொருந்த நடத்தலும் இனிமையையும் தருதலால் அறனுயிற்று; தமது காரியத்தை முடித்தலினுல் பொருளாயிற்று. திறனறிந்து சொல்லுதலாகிய காரணத்தை அறனும் பொருளும் எனக் காரியமாக்கிச் சொல்லினர். பருவம் - வயது.

(க - து.) மந்திரிகள் சொற்றிறங்களை யடைவுபட அறிந்து அறமும் பொருளு முண்டாமாறு சொல்லக்கடவர் என்பது.

4. The minister should understand the nature of his hearers and then make his speech; for superior to it, there is neither virtue nor wealth.



சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ
லச்சொல்லே

வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

பரி:—(இ - ள்.) தாஞ்சொல்லக் கருதிய சொல்லைப் பிறிதோர் சொல்லாய் வெல்லவல்லதொரு சொல் இல்லாமையறிந்து பின் அச் சொல்லைச் சொல்லுக, (எ - று).

பிறிதோர்சொல் - மாற்றுரைது * மறுதலைச்சொல். வெல்லுதல்- † குண ங்களான் மிகுதல். ‡ அதுவே வெல்லச் சொல்லுகவென்பதாம். இனிப் பிறி

தோர்சொல் வெல்லுஞ் சொல்லெனச் ¶ செவ்வெண்ணுக்கி, ‖ ஒத்த சொல் லும் மிக்கசொல்லு முளவாகாமற் சொல்லுகவென் றுரைப்பாருமுளர். இது சொற்பொருட்பின் வருநிலை.

---

* மறுதலைச்சொல் - (தாம் சொல்லும் சொல்லை) மறுத்துச் சொல்லும் சொல்.

† குணங்களாவன: வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல் முதலாயின.

‡ அதுவே - தமது சொல்லே.

¶ செவ்வெண்ணுக்கி - எண்ணிடைச்சொற் றொக்குநிற்பதாக்கி.

இங்கு எண்ணிடைச்சொல் உம் என்னும் இடைச்சொல்.

‖ பிறிதோர்சொல் என்பதற்கு ஒத்தசொல்லும் என்றும், வெல்லுஞ் சொல் என்பதற்கு மிக்கசொல்லும் என்றும், பொருள்கூறி, இவையுண்டாகா மல் (சொல்லைச்) சொல்லுக என்று பொருள் கூறுவாருமுண்டென்பது.

தெளி:—(இ - ள்.) சொல்லே - (தாம் சொல்லக்கருதிய) சொல்லே, பிறிதோர் சொல் - பிறிதொரு சொல்லாய், வெல்லுஞ்சொல் - வெல்லவல்ல தொரு சொல், இன்மை - இல்லாமையை, அறிந்து - தெரிந்து, (பின்), அச் சொல்லே—அந்தச்சொல்லே, சொல்லுக-சொல்லக்கடவர், (எ - று).

பிறிதோர் சொல் - பகைவரது மறுதலைச்சொல். வெல்லுதல் - குணங்களால் மிகுதல். அதுவே வெல்லச்சொல்லுக வென்பதாம். சொல் என்பது பின்னர்ப் பலவிடத்தும் வந்து பொருள்வேறுபடாது நிற்றலான், இது சொற்பொருட்பின் வருநிலையணியாம்.

(க - து.) மந்திரிகள் தமது சொல் மற்றவரது சொல்லால் மறுக்கப்படாதபடி யாலோசித்து அதனைச் சொல்லக்கடவர்.

5. Deliver your speech, after assuring yourself that no counter speech can defeat your own.

சூ. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற்
பயன்கோடன்
மாட்சியின் மாசற்றூர் கோள்.

பரி:—(இ - ள்.) பிறரீத்துத் தாஞ்சொல்லுங்கால் அவர் பின்னுங் கேட்டலே விரும்புமா று சொல்லி, அவர் தமக்குச் சொல்லுங்கா ல் அச் சொல்லின் பயனைக் கொ ண்டொழிதல் அமைச்சியலுட் துற்றமற்றாது துணிபு, (எ - று).

பிறர்சொற்களுட் குற்றமுளவாயினும் அவை நோக்கி ழீகழாரென்ப தாம். † வல்லாரை யிகழ்தல் ‡ வல்லுநர்க்குத் தகுதியன்மையின், ¶ இதுவு முடன்கூறினர். இவை மூன் றுபாட்டானும் ¶ அதனைச் சொல்லுமா று கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) தாம் - (பிறர்க்குத்) தாம், (சொல்லுமிடத்து அவர் பின்னும் கேட்டலே), வேட்ப - விரும்பும்படி, சொல்லி - கூறி, பிறர்-அவர், சொற்பயன்கோடல் - (தமக்குச் சொல்லுமிடத்து அச்)

சொல்லின் பயனைக் கொண்டு விடுதல், மாட்சியின் (மந்திரியின்) இலக்கணத்தில், மாசற்றார் - குற்றமற்றவரது, கோள் - துணிபாம், (எ - று).

(மாட்சியின் மாசற்றார்) பிறர்சொற்களில் குற்றமுளவாயினும் அக்குற் றங்களை நோக்கி (அச்சொற்களை) இகழாரென்பதாம். வல்லமையில்லாத வரை யிகழுதல் வல்லமையுடையவர்க்குத் தகுதியல்லாமையால், இதுவும்

---

* வல்லாரை - சொல்லும் வல்லமையில்லாதவரை.

† வல்லுநர்க்கு - சொல்லும் வல்லமை யுடையவர்க்கு.

‡ இதுவும்-சொல்லும் வல்லமையில்லாத பிறரது சொல்லின் பயனைக் கொண்டொழிதலையும். ¶ அதனை-சொல்லை.



உடன்சொல்லினர். இவை மூன்றுபாட்டாலும் அதனைச்சொல்லும் விதம் சொல்லப்பட்டது.

(க - து.) பிறர் தமது சொல்லை விரும்புமாறு சொல்லி, அவர் சொல்வது விளங்காதாயினும் அதனது பயனைக் கொண்டொழி தல் மந்திரிகளது கடமையாம் என்பது.

6. It is the opinion of those who are free from defects in diplomacy that the minister should so speak as to make his hearers desire to hear more and grasp the meaning of

what he hears from them.

எ. சோவல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

பரி:—(இ - ள்.) தானெண்ணிய காரியங்களைப் பிறரிக்கேற்பச் சொல்லுதல் வல்லனாயி * அவை மிகப் பலவாயவழி ஒன்றினுஞ் சோர்விலனாயி † அவைக் கஞ்சானாயினன் யாவன் ‡ அவனை ¶மாறுபாட்டின் கண் வெல்லுதல் யாவர்க்கு மரிது, (எ - று).

0 எற்பச்சொல்லுதல் - || அவர்க்கு அவை காரியமல்லவாயினும் + ஆமெனத்துணியும் வகை சொல்லுதல். சோர்வு - சொல்லவேண்டுவதனை மறப்பானெழுதல். ¶¶ இம்மூன்றுகுணமும் மூடையானை மாற்றரசாய்ப் பிரித்தல் பொருத்தல் செய்து வெல்வாரில்லை யென்பதாம்.

---

* அவைதானெண்ணிய காரியங்கள்.

† அவைக்கு - (அந்தணர் சான்றோர் முதலாயினோர் கூடியுள்ள) சபைக்கு.

‡ சுட்டுவருதற்கு முன்னே விளைவாள்வேண்டும் என்னும் வடமொழி நியமப்படி அவனையென்னும் சுட்டிற்குமுன்னே யாவன் என்னும் வினா வருவிக்கப்பட்டது. இதனை "எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண், மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்னும் குறளாலும், "உயர்வற வுயர்நல முடையவ னெவனவன்" என்று பெரியார் கூறுதலாலும் அறிக. [சுட்டா இய தத்சத்தத்திற்குமுன்னே வினாவாகிய யத்சத்தம் வரல்வேண்டும் என்பது வடநூல் வழக்கு].

¶ மாறுபாட்டின்கண் - சொற்போரிடத்து.

0 ஏற்ப - அங்கீகரிக்கும்வகை.

‖ அவர்க்கு அவை காரியமல்லவாயினும் - பிறர்க்குத் தான் எண்ணிய காரியங்களைக் கேட்டல் காரியமல்லவா யிருந்தாலும்.

+ ஆமெனத்தணியும்வகை - தாங்கள் சொல்லுதல் ஒக்கும் என்று நிச்சயிக்கும்படி.

.·. ¶ இம்மூன்று குணமுமென்றது சொல்வன்மை, சோர்வின்மை, அஞ்சாமையென்னு மிக்குணங்களை.

## அங்கவியல்—உ-வது சொல்வன்மை.

## 725

தெளி:—(இ - ள்.) (தான் எண்ணியகாரியங்களை) சொல்வல்லன் - (பிறர்க்கு ஏற்பச்) சொல்லுதல்வல்லவனும், (அவைமிகவும் பலவானவிடத்து), சோர்விலன் (ஒன்றினுஞ்) சோர்வில்லாதவனும், அஞ்சான் - (சபைக்கு) அஞ்சாதவனுமாயினன், (யாவன்), அவனை—, இகல் - மாறுபாட்டில், வெல்லல் - வெல்லுதல், யார்க்கும் - யாவர்க்கும், அரிது - முடியாது, (எ - று).

பிறர்க்கு ஏற்பச் சொல்லுதல் - அவர்க்கு அவைகாரிய மல்லவாயினும் ஆமென்று நம்பும்படி சொல்லுதல். சோர்வு - சொல்லவேண்டுவதனை

மறதியாலொழிதல். இம்மூன்று குணமுமுடையவனைப் பகைவராய்ப் பிரித்தல் பொருத்தல்செய்து வெல்வார் இல்லையென்பதாம்.

(க - து.) சொல்வன்மையும் சொல்லுதலிற் சோர்வின்மையும் சபைக்கஞ்சாமையு முடையவனைச் சொற்போரிற் பிறர் வெல்லுதல் முடியாது என்பது.

7. It is impossible for any one to conquer him by intri- gue who possesses power of speech, and is neither faulty nor timid.

அ.

விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

பரி:—(இ - ள்.) சொல்லப்படுங் காரியங்களை நிலைபடக்கோத்து இனிதாகச் சொல்லுதல் வல்லாரைப்பெறின், உலகம் அவற்றை விரைந்தேற்றுக் கொள்ளும், (எ - று).

* தொழில் - சாதியொருமை.

நிரல்படக்கோத்தல்-முன்சொல்வனவும் பின்சொல்வனவு மறிந்து † அம்முறையே வைத்தல். இனிதாதல் - ‡ கேட்டார்க்கின்பம் பயத்தல். ¶ ‘ சொல்லுதல் வல்லான் நூறுயிரவரு ளொரு _____

---

* தொழிலென்பது வருமொழிநோக்காது பன்மைப்பொருளுணர்த்து

தலின், சாதியொருமைப் பெயராயிற்று.

† அம்முறையே வைத்தல் - முன்னே சொல்லவேண்டியவற்றைமுன்

னும் பின்னே சொல்லவேண்டியவற்றைப் பின்னும் வைத்தல்.

‡ “சொல்லியக்கால் சொல்லின் பயன்காணுந் தான்பிறர், சொல்லிய சொல்லே வெலச்சொலலும் பல்லார், பழித்தசொற் றீண்டாமற் சொலலும்

விழுத்தக்க, கேட்டாற் கினியவாய்ச் சொல்வானேற் பூக்குழலாய்ப், நல்லய

லூரன் துஞ்சா தணியகலம், புல்லலி னூட லரிது.” என்னுஞ் செய்யுளிங் கறியத்தக்கதாம். (தகரே யாத்திரை).

¶ “ஆர்த்தசபை நூற்றொருவ ராயிரத்தொன் றும்புலவர், வார்த்தை பதிரா யிரத்தொருவர் - பூத்தமலர்த், தண்டா மரைத்திருவே தாதாகோ டிக் கொருவர்,உண்டாயி னுண்டென் றறு.”என்னும் செய்யுளும், “நூற்றுவரிற் றேருன்றுந் தறுகண்ண ராயிரவ, ராற்றுளித் தொக்க வலையகத்து - மாற்றந் தான், ஒன்று கொடுக்கு மகன்” என்னும் செய்யுளும் இங்கறியத் தக்கன வாம்.

வன்' என்ற வடமொழி பற்றிப் * 'பெறின்' என்றார். † ஈண்டுங் கேட்டல் ‡ ஏற்றுக்கோடல். இவை யிரண்டுபோட்டானும் ¶ அவ்வாற்றுற் சொல்லுதல் வல்லாரது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) தொழில் - (சொல்லப்படுங்) காரியங்களை, நிரந்து-ஒழுங்குபடக்கோத்து, இனிது - இனிதாக, சொல்லுதல் வல்லார் - சொல்லுதலில் வல்லவரை, பெறின் - பெற்றால், ஞாலம் - உலகமானது, விரைந்து—, கேட்கும் - (அச்சொற்களை) ஏற்றுக்கொள்ளும், (எ - று).

தொழில்-ஈறுதோன்றாத சாதியொருமைப்பெயர். ஒழுங்குபடக் கோத்தல் - முன்னே சொல்லவேண்டியவற்றையும் பின்னே சொல்லவேண்டியவற்றையும் அறிந்து அம்முறையே வைத்தல். இனிதாதல் - கேட்டார்க்கு இன்பந்தருதல். 'சொல்லுதல் வல்லவன் நூறாயிரவருளொருவன்' என்னும் வடமொழி வழக்குப்பற்றிப் 'பெறின்' என்றார். இங்குங்கேட்டல் - ஏற்றுக் கொள்ளுதல். இவை இரண்டுபோட்டாலும் அவ்விதங்களால் சொல்லுதலில் வல்லவரது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) உலகத்தார், சொல்லப்படுங் காரியங்களை யொழுங்குபடக் கோத்து இனிமையுண்டாகச் சொல்லுவாரது வார்த்தையை விரைந்தேற்றுக்கொள்ளுவர் என்பது.

8. If there be those who can speak on various subjects in proper order and in a pleasing manner, the world would readily accept them.

கூ. பலசொல்லக் காழுறுவர் ⊙ மன்றமா சற்று
சிலசொல்ல றேற்றா தவர்.

பரி:—(இ - ள்.) குற்றமற்றனவாயிச் சிலவாய வார்த்தைகளை

‖ அவ்வாற்றற் சொல்லுதலே யறியாதார் பலவாய வார்த்தைகளைத்

தொடுத்துச் சொல்ல விரும்புவர், (எ - று).

---

* பெறின் என்னும் எதிர்காலவினை யெச்சம் நிரந்தினிது சொல்லுதல் வல்லாரைப் பெறுதலின் அருமையைக் குறிப்பித்து நின்றது.

† ஈண்டும் என்னும் எச்சவும்மை "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க்
கேளாரும், வேட்ப மொழிவதாஞ் சொல்"
றது. இக்குறளில் கேட்டார் என்பதற்கு
என்னுங் குறளைத் தழுவிநின்
நட்பா யேற்றுக்கொண்டாரை
என்று பொருள் கூறியிருத்தலு மிங்கறியத்தக்கது.

‡ ஏற்றுக்கோடல் - அங்கீகரித்தல்.

¶ அவ்வாற்றல் - சொல்வன்மை, சோர்வின்மை, அஞ்சாமை, நிரந்தினிது சொல்லுதல் என்னும் வாயிலாக.

0 "மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்" என்பது தொல்காப்பியம். ‖ அவ்வாற்றல்—சொல்வன்மை, சோர்வின்மை, அஞ்சாமை, நிரந்தினிது சொல்லுதல் என்னும் வாயிலாக.

அங்கவியல்—உ-வது சொல்வன்மை.

குற்றம் - * மேற்சொல்லிய குணங்கட்கு † மறுதலையாயின. இடை விடாதுபலசொல்லுதலையுஞ்சொல்வன்மையென்றுவிரும்புவாருமுளர், அவர் ‡ இவ்வாறு சொல்லமாட்டாதாரே, ¶ வல்லார் ⊖ அது செய்யாரென யாப் புறுப்பார் 'மன்ற' என்றார்.

தெளி:—(இ - ள்.) மாசற்ற - குற்றமற்றனவாய், சில - சிலவாகிய வார்த்தைகளை, சொல்லல் - (அவ்வழியாற்) சொல்லுதலை, தேற்றாதவர் - அறியாதவர், பல - பலவாகிய வார்த்தைகளை, சொல்ல - (தொடுத்துக்)கூற, மன்ற-நிச்சயமாக, காமுறுவர்-விரும்புவார், (எ - று).

குற்றம் - முற்கூறிய குணங்களுக்கு மாறாயின. இடைவிடாமற் பல சொல்லுதலையும் சொல்வன்மையென்று விரும்புவாரும் உண்டு, அவர் இப் பிடி சொல்லமாட்டாதவரே, வல்லவர் அதுசெய்யாரென உறுதிப்படுத்துவார் 'மன்ற' என்றார்.

(க - து.) குற்றமற்றனவாய்ச் சிலவாய வார்த்தைகளைச் சொ ல்ல வறியாதவர் பலவாய வார்த்தைகளைச் சொல்ல விரும்புவர்.

9. They will desire to utter many words,

who do not
know how to speak a few faultless ones.

கo. இணருழ்த்து நாறு மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

பரி:—(இ - ள்.) கற்றுவைத்த நூலைப் பிறாறியும் வண்ணம் விரித் துரைக்கமாட்டாதவர் கொத்தின் கண்ணே மலர்ந்து வைத்தும் நாறுத பூவை யொப்பர், (எ-று).

‖ செவ்விபெற மலர்ந்துவைத்தும் நாற்றமில்லாத பூச்சூடப்படாதவாறு போல நூலைக்கற்றுவைத்துஞ் சொல்லமாட்டாதார் நன்கு மதிக்கப்படா தெ

---

---

* மேற்சொல்லிய குணங்கட்கு — இவ்வதிகாரத்தின் மூன்றுவது குறளின் விசேடவுரையில் கூறியுள்ள குணங்களுக்கு.

† மறுதலையான குணங்கள் - வழுவுடைத்தாதல், மிகைபடக்கூறுதல், விளங்கக் கூறாமை, கேட்டற்கினிதாகாமை, விழுப்பயன் தாராமை, மாறு கொளக் கூறல், வெற்றெனத் தொடுத்தல் முதலாயின.

‡ இவ்வாறு - வழுவின்மை

முதலியனவில்லாமலிங்ஙனம்.

¶ வல்லார் - சொல்வன்மையுடையார்.

0 அது - பலவாய வார்த்தைகளைச் சொல்லுதல்.

‖ "அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ வாயினுங், கள்ளிமேற் கைநீட் டார் சூடும்பூ வன்மிழலையால்" என்பது நாலடியார்.



ன்றமையின், இது * தொழிலுவமையாயிற்று. இவை இரண்டுபொட்டாஞும் † அது மாட்டாதார நிழிபு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கற்றது - கற்றுவைத்தநூலை, உணர - (பிறர்) அறி யும் வண்ணம், விரித்துரையாதார் - விரித்துரைக்க மாட்டாதவர், இணர் - கொத்தினிடத்தே, ஊழ்த்தும்-மலர்ந்திருந்தும், நாறு-வாசனையில்லாத, மல ரனையர் - பூவையொப்பர், (எ - று).

அழகுபெற மலர்ந்திருந்தும் வாசனையில்லாதமலர் சூடப்படாத விதம் போல நூலைக்கற்றிருந்தும் சொல்லமாட்டாதவர் நன்கு மதிக்கப்படா ரென்று

கூறினமையின், இது தொழிலுவமையணியாம்.
இவை இரண்டுபோட் டாலும் அது மாட்டாதாரது இழிவு
சொல்லப்பட்டது.

(க - து.) தாங்கற்றுள்ள நூற்பொருளை

விரித்துரைக்கும் வலி யில்லாதவர் வாசனையில்லாத
மலருக்கொப்பாவர் என்பது.

10. Those who are unable to set forth their acquire- ments before others are like flowers blossoming in a cluster without giving fragrance.

மூன்றுவது அதிகாரம்.

‡ வினைத்தூய்மை:—Purity of action.

பரி:—அஃதாவது செய்யப்படும் வினைகள்
பொருளேயன்றி அற
மும் புகழும் பயந்து நல்லவாதல். சொல்லேயன்றிச் செயலும் நன்றாக
வேண்டுமென்கின்றமையின், இது சொல்வன்மையின்பின் வைக்கப்
பட்டது.

தெளி:—அஃதாவது செய்யப்படுந் தொழில்கள் பொருளேயல்லா
மல் அறத்தையும் புகழையும் தந்து நல்லனவாதல். சொல்லேயல்லாமல்

செயலும் நன்றாகவேண்டுமென்கின்றமையால், இது சொல்வன்மையின் பின்வைக்கப்பட்டது.

(வினைத்தூய்மை)

க. துணைநல மாக்கந் தருஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்.

பரி:—(இ - ள்.) ஒருவனுக்குத் துணையது நன்மை செல்வமொன்றனையுங் கொடுக்கும், ¶ அவ்வளவன்றி வினையது நன்மை அவன் வேண்டியன யாவற்றையுங் கொடுக்கும், (எ - று).

* சூடப்படாமை யென்னுந்தொழிலையுவமானமாகக்கொண்டமையின், இது தொழிலுவமையாயிற்று.

† அதுமாட்டாதாரது - முறைப்படச்சொல்லுந்திறமற்றவரது.

‡ வினைத்தூய்மை - செய்காரியம் தூயதாதல்.

¶ அவ்வளவன்றி - துணைநலம் செல்வமொன்றனையுந் தரும் அளவாதல் போலாதாமல்.

அங்கவியல்—ரு-வது வினைத்தூய்மை.

729

வேண்டியவெல்லா மென்றது இம்மைக்கண்

அறம்பொருளின்ப *முத யாயவற்றையும், மறுமைக்கட் டான்விரும்பிய பதங்களையும். இதனைக் காண்படுந் † துணை நன்மையினுங் ‡ கருதப்படும் வினைநன்மை சிறந்ததென வினைத்தூய்மையது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள். ) (ஒருவனுக்கு)

துணைநலம்-துணையினது நன்மை

பானது, ஆக்கம் - செல்வமொன்றனையும், தருஉம் - கொடுக்கும், (அவ்வள வல்லாமல்), வினைநலம் - தொழிலினது நன்மையானது, வேண்டியவெல்

லாம் - (அவன்) வேண்டியன யாவற்றையும்,

தரும்-கொடுக்கும், (எ - று)

வேண்டியவெல்லாமென்றது இம்மையில் அறம் பொருளின்பமுதலாய

வற்றையும், மறுமையில் தான்விரும்பிய பதவிகளையும். இதனுள் காணப் படுந் துணை நன்மையினும் கருதப்படுந் தொழில் நன்மை சிறந்ததென்று வினைத்தூய்மையது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) துணை நலத்தினும் வினை நலஞ் சிறந்ததென்பது.

1. The efficacy of support will yield only wealth; but
the efficacy of action will yield all that is desired.

உ· என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

பரி:—(இ-ள்.) தம்மாசனுக்கு இம்மைக்கட் புகழும் மறுமைக்கண்

அழமும் பயவாத வினைகளை அமைச்சர்க்கு எக்காலத்து மொழிதல் வேண்டும், (எ - று).

¶ பெருகல், சுருங்கல், இடைநிற்றலென்னும் நிலைவேறுபாடு காலத் தான் வருதலின் 'என்றும்' என்றார். வேண்டுமென்பது ஈண்டு இன்றியமை யாதென்னும் பொருட்டு.

தெளி:—(இ - ள்.) (தம்மாசனுக்கு) புகழொடு - (இம்மையில்) புக
ழையும், நன்றி - (மறுமையில்) அறத்தையும், பயவா -
தாராத, வினை- தொ
ழில்களை, என்றும் - எக்காலத்திலும், ஒருவுதல் வேண்டும் -
(மந்திரிகளுக்கு)
ஒழிதல் வேண்டும், (எ - று).

---

* முதலாயவற்றையு மென்றது பேர், புகழ்,
சொற்செலவு,ஒளி முத

லிய வற்றை.

† துணை - துணையாயுள்ளவர். துணையாவார் - தொழில்செய்தற்கண் உடனிருந்து உதவிசெய்பவர் ‡ கருதப்படும் - ஆராய்ந்தெண்ணப்படும்.

¶ "அறனறிந் தான்றமைந்த' என்னும் குறளின் விசேடவுரையில்" தன் னரசன் சுருங்கிய காலத்தும் பெருகிய காலத்தும் இடை நிகாய காலத்தும், என்பார்' எஞ்ஞான்றும்' என்றார்" என்று கூறியிருத்தலுமிங்கறியத்தக்கதாம். o

பொருட்டு - பொருளது.





(அரசனுக்குப்) பெருகல், சுருங்கல், நடுநிற்றல் என்னும் நிலைவேறுபாடு காலத்தால் வருதலால் 'என்றும்' என்றார். வேண்டுமென்பது இங்கு அவசியம் என்னும் பொருளில் வந்தது.

(க - து.) புகழையும் அறத்தையும் தராத தொழில்களை யெப்பொழுதும் மந்திரிகள் விட்டுவிடல் வேண்டும் என்பது.

2. Ministers should at all times avoid acts which, in addition to fame, yield no benefit for the future.

ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்.

பரி:—(இ - ள்.) மேலாகக் கடவே மென்று கருதுவார் தம்மொளி கெடுதற்குக் காணமாய வினையைச் செய்தலைத் தவிர்க, (எ - று).

ஓஒதல் வேண்டுமென்பது ஒரு சொன்னீர்மைத்து. () ஓவுதலென்பது குறைந்து நின்றது. * ஒளி தாமுள காலத்து எல்லாராலும் கண்கு மதிக்கப் படுதல். செய்யென்னும் முதனிலைத் தொழிற்பெயர் மாற்றப்பட்டது. அன்றிச் ¶ செய்வினையென வினைத்தொகை யாக்கியவழிப் பொருளின்மை யறிக. ஒளிகெடவருவது ஆக்கமன்றென்பதாம்.

தெளி:—(இ - ள்.) ஆஅதும்-மேலாகக்கடவோம், என்னுமவர்-என்று நினைப்பவர், ஒளி - (தம்) ஒளி, மாழ்கும் - கெடுதற்குக்காரணமாகிய, வினை-தொழிலை, செய் - செய்தலை, ஓவுதல் வேண்டும் - ஒழியக்கடவர், (எ . று).

ஓவுதல்வேண்டும் என்பது (இருசொல்லாகாமல்) ஒரு சொல்லின் தன்மையதாய் நின்றது. ஓவுதல் என்பது (வு என்பது) குறைந்து ஓவுதல் என அளபெடுத்து நின்றது. ஒளியாவது தாமுள்ள காலத்தில் யாவராலும் சிலாகிக்கப்படுதல். செய்வினையென்பது வினை செய் என மாற்றப்பட்டது. செய் என்பது முதனிலைத் தொழிற் பெயர். இவ்வாறு மாற்றுவதல்லாமல் செய் வினையென்று வினைத் தொகையாக்கிய விடத்துப் பொருளில்லாமையை யறிக. ஒளிகெடவரும் செல்வம் செல்வமன்றென்பதாம்.

---

() "மடியிலா மன்னவன்" என்னுங் குறளின் விசேட வுரையில் "தாவிய தென்பது (தாஅயதென) இடைக்குறைந்து நின்றது" என்றிருப்பது மிங்குணர்தற் பாலதாம்.

* "ஒளியொருவற் குள்ள வெறுக்கை" என்னுங்

குறளின் விசேட வுரையில்" ஒளி தானுளனாயகாலத்து மிக்குத்தோன்றுதலுடைமை. 'ஒளிநிரீஇ ஞெங்குபுகழ் செய்யான்' என்றூர் பிறரும்" என்று கூறியிருத்தலு மிங்கறி யத் தக்கது.

¶ செய்வினை யென்பதை வினைசெய் யெனமாற்றுது வினைத்தொகை

யாகக்கொண்டால், அது செய்யும் வினை யென விரிந்துபொருள்பொருத்த மில்லாது போவதறிக.

## அங்கவியல்—ங-வது வினைத்தூய்மை.

**731**

(க - து.) மேன்மையை யடையவிரும்புவோர் மதிப்புக் கெடுதற் கேதுவாயதொழிலைச் செய்யாதிருக்கக்கடவர் என்பது.

3. Those who say we will become better should avoid the performance of acts that would destroy their fame.

ச. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
ஙடுக்கற்ற காட்சி யவர்.

பரி:—(இ - ள்.) தாமிடுக்கணிலே* படவரினும் † அது தீர்தற்பொ நட்டு ‡ முன் செயீதார்க்கு இளிவந்த

வினைகளைச் செய்யார் துளக்க மற்ற தெளிவினை யுடையார், (எ - று).

சிறிதுபோழ்திற் கழிவதாய இடுக்க ணெய்தி எஞ்ஞான்றுங் கழியாத விளிவு எய்தற் பாலதன்றென்பதூஉம், ‖ அஃதெய்திஞலும் வருவதுவரு மென்பதூஉம் தெளிவாராகலான் 'செய்யார்' என்ருர்.

தெளி:—(இ – ள்.) நடுக்கற்ற - அசைவற்ற, காட்சியவர்-தெளிவினை யுடையவர், இடுக்கட்படினும் - (தாம்) துன்பத்திலே படவரினும், (அது தீர் தற்பொருட்டு), இளிவந்த - (முன்செய்தவர்க்கு) இழிவுவந்த தொழில்களை, செய்யார் - செய்யமாட்டார், (எ - று).

சிறிது பொழுதில் நீங்குவதாகிய துன்பத்தை நோக்கி எப்போதும் நீங்காத இழிவு அடைதற் றன்மைய தன்றென்பதும், அவ்விழிவை யடைந் தாலும் வருவதாகிய துன்பம் வருமென்பதும் தெளிவாராதலால் 'செய்யார்' என்ருர். இளி - இளிவு என்பதன் விகாரம்.

(க - து.) கலங்குதலில்லாத அறிவினை யுடையவர் துன்பம் நேர்ந்த விடத்தும் இழிதொழிலைச் செய்யார் என்பது.

4. Those who have an infallible judgment though threatened with peril will not do acts which have brought disgrace on former ministers.

ரு. எற்றென் றிரங்குவ செய்யற்க
செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று.

பரி:—(இ-ள்). யான் செய்தது எத்தன்மைத்தென்று பின் றானே ¶ யிரங்கும் வினைகளை ஒரு காலுஞ் செய்யா தொழிக; அன்றி ஒருகான்மய

---

* பட - அகப்பட † அது - இடுக்கண்.
‡ முன் செய்தார்க்கு - முன்னே வினைகளைச் செய்தவர்க்கு.

‖ இடுக்கண் தீர்தற்பொருட்டு இளிவந்த வினைகளைச் செய்து இளிவை யடைந்தாலும் வருவதாகிய இடுக்கண் வாரா தொழியா தென்பதும்.
¶ இரங்கும் - வருந்தும்.



ங்கி * அவற்றைச் செய்யுந் தன்மையனாயினா னாயின், பின்னிருந்து அவ்விரங்கல்களைச் செய்யா தொழிதல் நன்று, (எ - று).

'இரங்குவ' என முன் வந்தமையிற் பின் † 'அன்ன' எனச் ○ சுட்டி யொழிந்தார். அவ்வினைகளது பன்மையான், இரக்கமும் பலவாயின. அச்செயற்குப் பின்னிருந்திரங்குவனுயின், ‡ அது தீரும்வாயி லறிந்திலனெனவும், திட்பமிலனெனவும், பயனில்லன செய்கின்றனெனவும், தன் பழியைத் தானே ¶ தூற்றுகின்றனெனவும் எல்லாரு மிகழ்தலின் †'மற்றன்னசெய்யாமை நன்று'என்றார். ‖ இதுவும் வினைத்தூயார் செயலாகலின், உடன் கூறப்பட்டது. * பிற்றொடர்தற்குச் செய்வானுயின் அவை போல்வனவுஞ் செய்யாமை நன்றெனப் () பிறரெல்லாம் இயைபற வுரைத்தார்.

தெளி:—(இ-ள்.) எற்றென்னு-(நான் செய்தது)எத்தன்மையதென்று, இரங்குவ-(பின் தானே) இரங்குந் தொழில்களை, செய்யற்க - (ஒருகாலும்). செய்யாதிருக்கக்கடவன், செய்வானேல் -(அல்லாமல் ஒருகால் மயங்கி அத் தொழில்களைச்) செய்யுந்தன்மையனுயினனுயின்,மற்று-பின்னிருந்து, அன்ன-அவ்விரங்கல்களை, செய்யாமை-செய்யாதொழிதல், நன்று-நல்லது. ().

'இரங்குவ' என முன்னேவந்தமையால் பின்னே இரங்குவ எனக் கூறுது அதனை 'அன்ன' எனச் சுட்டி யொழிந்தார். அவ்விரங்குந் தொழில்களது பன்மையால், அத்தொழில்கள் பற்றியுண்டாகும் இரக்கமும் பலவாயின. இரங்குந் தொழில்களைச் செய்துவிட்டு அச்செயலுக்காகப் பின்னிருந்து இரங்குவானுயின், அது தீரும்வழியை அறிந்திலனென்றும், மனவுறுதியில்லாதவனென்றும், பயனில்லாதவற்றைச் செய்கின்றனென்றும், தன்பழியைத் தானே தூற்றுகின்றனென்றும் எல்லாரும் இகழுவாராதலால் 'மற்றன்ன செய்யாமை நன்று' என்றார். இவ்விரங்கல்களைச் செய்யாமையும் வினைத்தூயார் செயலாகலால், உடன் சொல்லப்பட்டது.

---

* அவற்றை - தானே யிரங்கும் வினைகளை.

† அன்ன என்பது அ என்னும் சுட்டடியாகப் பிறந்த பலவின் படர்க்கை வினையாலணையும் பெயர். அன்ன என்பதில் னகரவொற்றுச் சாரியையாம்.

○ சுட்டி யொழிதல் - ஒன்றனைப்பெயராற்றெரிவியாது

சுட்டாற் றெரி

வித்தல். ‡ அது-இரங்குதல்.

¶ தூற்றுதல் - பலரறியத் தெரிவித்தல்.

+ பின்னிரங்காமை நன்று என்றும் பாடமுண்டு.

பின்னிரங்காமை - பச்சாதாபப்படாமை.

‖ இதுவும் - எற்றென்றிரங்குவ செய்யாமையும்.

* 'செய்வானேன் மற்றன்ன செய்யாமை நன்று' என்பதற்கு (எற்

றென்றிரங்கும் தொழில்களைப்) பின்னே தொடர்தற்குச் செய்வானேனல் எற்றென்றிரங்கும் அத்தொழில்கள் போல்வனவும் செய்யாதிருத்தல் நல்லது எனப் பிறரெல்லாம் சம்பந்த மில்லாமற் பொருள் கூறினரென்பது;

() பிறரெல்லாம் என்றது தருமர் முதலிய உரைகாரர்களை.

## அங்கவியல்—ங-வது வினைத்தூய்மை.

## 733

(க - து.) பின்னிருந்து வருந்துதற்கேதுவாய தொழில்களைச் செய்யாதிருத்தல் வேண்டும் என்பது.

5. Let a minister never do acts of which he would have to grieve saying what is this I have done; but should he do them, it were good that he grieved not.

* ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

பரி:—(இ - ள்.) தன்னைப் பயந்தாளது பசியை வறுமையாற் கண்டிரங்குந் தன்மைய னாயினானெனினும் † அது சுட்டி அறிவுடையார் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யா தொழிக, (எ-று).

‡ இறந்த மூப்பினராய ¶ இருமுதுகுரவருங் கற்புடைமனைவியுங் குழ வியும் பசியான் வருந்து மெல்லைக்கண் தீயன பலவுஞ் செய்தாயினும் புறந் தருகவென்னும் † அறநூற்பொதுவிதி ‖ பொருணூல்வழி யொழுகுதலும் அரசர் தொழிற்குரியராதலும் நன்குமதிக்கற்பாடுமுடைய அமைச்சர்க் கெய் தாமைபற்றி (‡) இவ்வாறுகூறினார். இவை யைந்துபாட்டானும் பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யற்கவென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) ஈன்றாள் - (தன்னைப்) பெற்றதாயினது, பசி - பசியை, காண்பானாயினும் - (வறுமையால்) கண்டிரங்குந் தன்மையனாயினானெனினும், (அதனைக்குறித்து), சான்றோர் - (அறிவினால்) நிறைந்தோர், பழிக்கும் வினை - பழிக்குந் தொழில்களை, செய்யற்க - (ஒருவன்) செய்யா திருக்கக் கடவன், (எ - று).

* யாவரினும் தன்னைப்பெற்றவளே மேம்பட்டிருத்தல் பற்றி ஈன்ற ளேயே விதந்து கூறினர். இஃது " அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" " ஈன்றளி, னென்ன கடவுளு மில்"என்று வரும் பிரயோகங்களாலு ம் கன்கு விளங்கும்.

† அதுசுட்டி - தன்னைப்பெற்றளது பசியைக்குறித்து.

‡ இறந்த மூப்பினராய - மிக்கமிழத்தன மூடையவரான.

¶ இருமுது குரவர் - இரண்டு பழையகுருமார். அவர்-தாய் தந்தையர்.

+அறநூல் - தரும சாஸ்திரம். மனுதருமசாஸ்திரம் நான்காவதத்தி

யாயத்தில். " பசியால் தன்புறுகின்ற அன்னை, பிதா, குரு, வேலைக்கார ரென்னு மிவர்களைக் காப்பாற்றுகிறவனையும், தேவர் அதிதியென்னு மிவர்க ளைப் பூசிக்கிறவனையு மிருப்பவன் யாரிடத்தும் தானம்வாங்கலாம்; அத்தானத் தால் தான் ஜீவித்தல் கூடாது " என்ற கூறுகின்றது

‖ பொருணூல் - அருத்தசாஸ்திரம். (‡) 'ஈன்றள் பசிகாண்பானையி னுஞ் செப்பற்க, சான்றோர் பழிக்கும் வினை' என்றிவ்வாறு.

மிகவும் வயது முதிர்ந்தவராய தாய் தந்தையரும், கற்புடைய மனைவியும், குழந்தையும் பசியால் வருந்துமளவில் தீயகாரியங்கள் பலவும் செய்தாயினும் காப்பாற்றுகவென்று கூறும் அறநூல் பொதுவிதி பொருள் நூலின் வழிநடத்தலும் அரசர்தொழிற்கு உரியராதலும் நன்கு மதிக்கப்படுதலுமுடைய மந்திரிகளுக்கு ஆகாமைபற்றி இப்படிசொல்லினர். இவை ஐந்து பாட்டாலும் பாவமும் பழியுந் தருந் தொழிலைச் செய்வ தொழிக வென்பது சொல்லப்பட்டது.

(க - து.) ஒருவன் தனது தாயினது பசிபை வறுமைபாற் கண்டானுயினும், அஃதொழிய அறிவுடையார் பழிக்குந்தொழில்களைச் செய்யாதிருத்தல் வேண்டும் என்பது.

6. Though a minister may see his mother starve, let him do no act which the wise would treat with contempt.

எ. பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

பரி:—(இ - ள்.) சாலாதார் தீயவினைகளைச் செய்து அதனும் பழி யைத் தம்மேற்கொண்டு பெற்ற செல்வத்தின் அது மேற்கொள்ளாத சான்றோனுடவிக்தம் மிக்க நல்தாரவே உயர்ந்தது, (எ - று).

நிலையாத செல்வத்தின் பொருட்டு நிலையின பழியை மேற்கோடல்

* சால்போடியையாமையின் 'சான்றோர் கழிநல் குரவே தலை' என்றார்.

தெளி:—(இ - ள்.) (சான்றோரல்லாதவர் தீய தொழில்களைச் செய்தது) பழிமலைந்து—(அதனைற்) பழியைத் தம்மேற்கொண்டு, எய்திய-பெற்ற, ஆக்கத்தின் - செல்வத்தைக்காட்டிலும், சான்றோர் - (அப்பழியை மேற் கொள்ளாத) சான்றோர், (அனுபவிக்கும்), கழிநல்குரவே - மிகுந்த வறுமை யே, தலை - உயர்ந்தது, (எ - று).

நிலைபெறுவதில்லாத செல்வத்தின் பொருட்டு நிலைபெற்ற பழியை மேற்கொள்ளுதல் சான்றோர் தன்மையோடு பொருந்தாமையால் 'சான்றோர் கழிநல் குரவே தலை' என்றார்.

(க - து.) தீயவர் பழியோடுபெற் றனுபவிக்குஞ் செல்வத்தி னும் சான்றோரனுபவிக்கும் வறுமையே மேலானதாம் என்பது.

7. Far more excellent is the extreme poverty of the wise than wealth obtained by a heaping up of sinful deeds.



அ. கடிந்த கடிந்தோரார் செய்தார்க் கவைதா .

முடிந்தாலும் பீழை தரும்.

---

•** சால்பு - பலகுணங்களாலும் நிறைதல்.

## அங்கவியல்—நடவது வினைத்தூய்மை.

**735**

பரி:—(இ - ள்.) * நூலோர் † கடிந்த வினைகளைத் தாழ்ந் கடிந் தொழியாது பொருளேக்கிச் செய்த அமைச்சர்க்கு ‡ அவை தூயவன் மையின் முடியா; ஒருவாற்று முடியினும் பின் துன்பத்தையே கொடு க்கும், (எ - று).

முடிதல் - கருதியபொருள் தருதல். ¶ பீழை தருதலாகிய பொருளின் றொழில் அதற்குக் காரணமாய வினைகண்மே லேற்றப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கடிந்த - (நூலோர்) விலக்கிய தொழில்களை, கடிந் தொராார் - (தாமும்) விலக்கியொழியாது, செய்தார்க்கு - (பொருளே நோக் கிச்) செய்த மந்திரிகளுக்கு, அவைதாம் - அத்தொழில்கள், (தூயன வல்லா மையால் முடியாவாம்), முடிந்தாலும் - (ஒருவழியால்) முடிவுபெற்றாலும், (பின்), பீழை - துன்பத்தையே, தரும் - கொடுக்கும், (எ - று). * முடிதல் - நினைத்த பொருளைத் தருதல். பீழையைத் தருவதாகிய பொருளினது தொழிலை அப்பொருளுக்குக் காரணமான தொழில்களின் மேலேற்றி

'அவைதா முடிந்தாலும் பீழை தரும்' என்று சொல்லப்பட்டது.

(க - து.) நூலோர் விலக்கிய தொழில்களைச்செய்து பொருள் சேர்த்த மந்திரிகளுக்கு அதனால் பின்னர்த் தீமையுண்டாம்.

8. The action of those who have not desisted from doing deeds forbidden by the great, will even if they succeed, cause them sorrow.

கூ. அழக்கொண்ட வெல்லா மழப்போ
மிழப்பினும்

பிற்பயக்கு நற்பா லவை.

பரி:—(இ - ள்.) ஒருவன் தீயவினைகளைச் செய்து பிறரிடங்கொண்டபொருளெல்லாம் இம்மையிலேஅவன்றன் இடங்கப்போகாநிற்கும்; மற்றைத் தூயவினையான் வந்த பொருள்கள் முன்னிழந்தான் ஆயினும் அவனுக்குப் பின்னரீ வந்து பயன் கொடுக்கும், (எ - று).

+'பின்' எனவே மறுமையு மடங்கிற்று. பொருள்களான் * அவற்றிற்குக் காரணமாய வினைகள தியல்பு கூறியவாறு.

* நூலோர் - தருமசாஸ்திர மறிந்தவர்.

† கடிந்த - செய்யக்கூடாதென்று விலக்கிய.

‡ அவை - நூலோர் கடிந்த வினைகள்.

¶ துன்பத்தைத் தருவதான பொருளினது தொழிலை அப்பொருளுக்குக் காரணமான (நூலோர் கடிந்த) தொழில்களின்மேல் ஏற்றி 'அவைதாமுடிந்தாலும் பீழைதரும்' என்று சொன்னமையால், இது காரியத்தின் தொழிலைக் காரணத்தின்மேலேற்றிக் கூறிய வுபசாரவழக்காம்.

+'பின்' என்று கூறினமையின், நற்பாலவை (தூயவினையால் வந்த பொருள்கள்) புண்ணிய ரூபமாகவந்து இம்மையிலேயன்றி மறுமையிலும் பயன்தரு மென்பதாம். * அவற்றிற்கு - பொருள்களுக்கு.



தெளி:—(இ - ள்.) (ஒருவன்) அழக்கொண்ட வெல்லாம் - (தீயதொழில்களைச் செய்து பிறர்) இரங்கக் கொண்டபொருளெல்லாம், அழப்போம்-(இம்மையிலே அவன்றன்) இரங்கப்போகா நிற்கும், நற்பாலவை - (மற்றை) நல்ல தொழிலால்வந்த பொருள்கள், இழப்பினும்-(முன்) இழந்தானாயினும், பிற்பயக்கும் - (அவனுக்குப்) பின்வந்து பயன் கொடுக்கும், (எ - று).

'பின்' எனவே மறுமையும் அடங்கிற்று. பொருள்களால் அவற்றிற்குக் காரணமாகிய தொழில்களது இயல்பு சொல்லியபடியாம்.

(க - து) பிறரழுமாறு தான்கொண்டபொருள் தானழுமாறு பின்னர்ப் போவதாயிருத்தலால், ஒருவன் நல்லவழியில் பொருளைத் தேடல் வேண்டும் என்பது.

9. All that has been obtained with tears to the victim will depart with tears to himself ; but what has been obtained by fair means, though with loss at first, will afterward yield fruit.

சலத்தாற் போருள்செய்தே * மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.

பரி:—(இ - ள்.) அமைச்சன் தீயவினைகளாற் பொருள் படைத்து † அதனால் அரசனுக்கு ஏமஞ் செய்தல் ‡ பசிய மட்கலத்துள்ளே நீரை ப்பெய்து ¶ அதற்கு ஏமஞ் செய்ததனை டொக்கும், (எ - று).

முன் ஆக்கம் பயப்பனபோற்றோன்றிப் பின்னழிவே பயத்தலால், o அவை || சலம் எனப்பட்டன. ஏமமார்த்தலென்பது ஏமார்த்தலென்றுயிற்று; ஏமத்தை யடையப்பண்ணுத லென்றவாறு. இருத்துதல் - நெடுங்காலமிருப் பச்செய்தல். + அரசனும் பொருளும் சேரப்போ மென்பதாம். () பிறரால் .....

.....

* மாக்கல் என்றும் பாடமுண்டு.

† அதனால் - தீயதொழில்களால் சம்பாதித்த பொருளால்.

‡ பசிய மட்கலம் - பச்சை மண் பாத்திரம்.

¶ அதற்கு - பச்சை மண்பாத்திரத்திற்கு. o அவை - தீவினைகள்.

|| புறத்தே ஒருவாறுகப் புலப்பட்டு அகத்தே ஒருவாறுக இருப்பதென்பது சலம் என்பதன் பொருளாம். வஞ்சனை யென்றபடி.

+பசிய (சுடாத) மட்கலத்துள்ளே நீரைவார்த்து அதனைக் காவல் செய்தால் அம்மட்கலம் அந்நீரோடு விரைவி லழிவதுபோலத் தீய தொழில்களால் சம்பாதித்த பொருளால்

அரசனைக் காவல் செய்தால், அவ்வரசன் அப்பொருளோடு விரைவி லழிவா னென்பதாம்.

() மற்ற உரைகார ரெல்லாம் ஏமார்த்தலென்பதனை ஏமாத்தல் என்று பாடங்கூறி அதற்கு மகிழ்தல் என்றும், இரீஇயற்று என்பதற்கு வைத்தா ற்போலுமென்றும்உரை கூறினர். அவர்கள் ஏமாத்தல் (மகிழ்தல்) என்பது தன்வினையும் இரீஇயற்று என்பது மற்றொன்றின் வினையுமாய் உவமை யிலக்கணத்தோடு மாறு படுதலைக் கவனித்தாரில ரென்பதாம்.

## அங்கவியல்—ச-வது வினைத்திட்பம்.

**737**

லாம் ஏமாத்தலென்று பாடமோதி அதற்கு மகிழ்தலென்றும், இரீஇயற்றென்பதற்கு வைத்தாற்போலுமென்று மூரைத்தார். அவர் அவை * தன்வினை

யும் பிறிதின் வினையுமாய் உவமை யிலக்கணத்தோடு மாறுகோடல் நோக்கிற் றிலர். இவை நான்குபாட்டாலும் † அதற்குக் காரணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (மந்திரியானவன்) சலத்தால் -

தீய தொழில்க ளால், பொருள் செய்து - பொருளைச் சம்பாதித்து, ஏமார்த்தல் - (அதனல் அரசனுக்கு) ஏமஞ் செய்தல், பசுமட்கலத்துள் - பசிய மட்பாத்திரத்தி னுள்ளே, நீர்பெய்து - நீரைவார்த்து, இரீஇயற்று - (அதற்கு) ஏமஞ்செய்ததை னே டொக்கும், (எ - று).

தீயதொழில்கள் முன்னே செல்வத்தைத் தருவனபோலத் தோன்றிப் பின்னே அழிவையே தருவதால், அவை சலம் என்று கூறப்பட்டன. ஏமம் "ஆர்த்தல் என்பது செய்யுள் விகாரத்தால் ஏமார்த்தலென்றுயிற்று; அதன் பொருள் காவலையடையப்பண்ணுத லென்பதாம். பசுமட்கலத்துள் நீரைஇரு த்துதல் - அக்கலத்தின்கண் அந்நீரை நெடுங்காலம் இருப்பச் செய்தல். 'பசு மட், கலத்துணீர் பெய்திரீஇ யற்று' என்னும் உவமானத்தால் அரசனும் பொருளும் ஒருமிக்கக் கெடும் என்பது பெறப்பட்டது. இவை நான்குபாட் டாலும் அதற்குக் காரணம் சொல்லப்பட்டது.

(க - து.) மந்திரி தீயதொழில்களால் பொருளைத்தேடி, அதனல் அரசனைப் பாதுகாத்தல் பச்சை மண்பாத்திரத்தில் நீரைவார்த்து அதனைப் பாதுகாப்பதுபோலவாம் என்பது.

10. For a minister to protect his king with wealth obtained by foul means is like preserving a vessel of unbaked clay by filling it with water.

## நான்காவது அதிகாரம்.

## வினைத்திட்பம்—*Firmness of Action.*

பரி:—அஃதாவது அத்தூய வினை முடிப்பானுக்கு வேண்டுவதாய மனத்திண்மை. ¶ அதிகார முறைமையும் இதனுலே விளங்கும்.

தெளி:—அஃதாவது அப் பரிசுத்தமாகிய தொழிலை முடிக்கும் மந்திரிக்கு வேண்டுவதாகிய மனவுறுதியாம். அதிகார முறைமையும் இதனுலே விளங்கும்.

---

* * எமாத்தல் என்னும் வினை மந்திரியின் மீதும் இரீஇயற்று என்னும் வினை மற்றொருவர் மீதுமாய் நின்று, எமாத்தல் என்னும் உவமேயத்திற்கு இரீஇயற்று என்பது உவமானமாகாது விரோதப்படுதலின், அவ் வுரை பொருந்தாதென்று பரிமேலழகர் மறுத்தனர்.

† அதற்கு - பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யற்க என்பதற்கு.

¶ வினைத்தூய்மை யென்னும் அதிகாரத்தின்பின் வினைத்திட்பமென்னும் அதிகாரம் வைத்த முறைமையும்.

க. வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற.

டீ:—(இ - ள்.) வினை செய்தற்கட் டிண்மை யென்று சொல்லப் படுவது * அதனை முடித்தற் குரியா னொருவன் மனத்தினது திண்மை; † அஃதொழிந்தன வெல்லாம் ‡ அதற்குத் திண்மையென்று சொல்லப் படா; (எ - று).

ஒழிந்தனவாவன: படை, ஆண்மை, நட்பு முதலியவற்றின் றிண்மை கள். § அவையும் ¶ அதற்கு வேண்டுவனவா யினமாகலின் 'மற்றைய' என்றும், வேண்டினும் அஃதில்வழிப் பயனிலவாகலின் 'பிற' என்றுங்கூறி னார். இதனால் வினைத்திட்பமாவது இன்னதென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) வினைத்திட்பமென்பது தொழில்செய்யுமிடத்து வலிமை யென்று சொல்லப்படுவது, ஒருவன் - (அதனை முடித்தற் குரியான்) ஒருவனது, மனத்திட்பம் - மனத்தினது வலிமையாம், மற்றைய வெல்லாம் -அஃதொழிந்தன வெல்லாம், பிற - (அதற்கு) வலிமையென்று சொல்லப்படுவன வல்ல, (எ - று).

ஒழிந்தனவாவன: படை, ஆண்மை, நட்பு முதலியவற்றின் வலிமைகள்.

அனையும் அதற்கு வேண்டுவனவா யினமாயிருத்தலால் 'மற்றைய' என்றும், அவை வேண்டுவனவாயிருந்தாலும் அம்மனவலியில்லாத விடத்துப் பயனிலவாகலால் 'பிற' என்றும் சொல்லினர். இதனால் வினைத்திட்பமாவது இன்னதென்பது சொல்லப்பட்டது.

(க - து.) வினைசெய்வானுக்கு அது முடிவுபெறுதற்காய வலிமை அவனது மனவலிமையேயாம் என்பது.

1. Firmness in action is simply ones firmness of mind; all other abilities are not of this nature.

உ. ஊ () ரோரா லுற்றபி னெல்காமை யிவ்விரண்டி

னறென்ப ராய்ந்தவர் கோள்.

பரி:—(இ - ள்.) முன் நீதிநூலாராயிந்த அமைச்சாது துணிபு பழுதுபடும் வினைகளைச் செய்யாமையும், செய்யும் வினை தெய்வத்

---

* அதனை - வினையை. † அஃது - மனத்திண்மை.

‡ அதற்கு - வினைசெய்தற்கு.

§ அனையும் - படை, அரண்முதலியனவும்.

¶ அதற்கு - வினைசெய்தற்கு.

() தழுவுதல் என்பது தழால் என்றுயினுற்போல ஒருவுதல் என்பது ஓரால் என்றுயிற்று. | பழுதுபடும் - கெடுதியுண்டாகும்.

## அங்கவியல்—சு-வது வினைத்திட்பம்.

# 739

**தாற் பழுதுபட்டவழி * அதற்குத் தளாமையும் ஆகிய இவ்விரண்டின்**

**வழியென்பர் நூலோர், (எ - று).**

† தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபுதொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு ‡ வினைத்தூய்மையும் உடன் கூறினர். ¶ உறுதலுடையதனை முன் 'ஊறு' என்றமையின் 'உற்றபின்' என்றும், () இவ்விரண்டின்கண்ணே பட்டதென்பார் 'இரண்டினுறு' என்றுங் கூறினர். + ஊறொராரென்றுபாட மோதுவாருமுளர்; அஃது ஒல்காமையென்னு மெண்ணோடும் இரண்டென்னுந் தொகையோடும் இயையாமை அவரறிந்திலர்.

தெளி:—(இ - ள்.) ஆய்ந்தவர் - (முன்பு நீதிநூலை) ஆராய்ந்தமந்திரிகளது, கோள் - துணிபு, ஊறு - பழுதுபடுந்தொழில்களை, ஓரால் - செய்யாமையும், உற்றபின் - (செய்யுந்தொழில் ஊழினால்) பழுதுபட்டவிடத்து, ஒல்காமை - (அதற்குத்) தளாமையும், (ஆகிய), இவ்விரண்டின் - இவ்விரண்டினது, ஆறு - வழியாகும், என்பர் - என்று சொல்லுவர், (நூலோர்), (எ-று).

தேவர்க்கும் அசுரர்க்கும் மந்திரியாயிருக்கும் தன்மையை மேற்கொண்ட பிருகஸ்பதி சுக்கிரன் இவர்களது துணிவைத் தொகுத்துப் பின்னே நீதிநூ

---

* அதற்கு-பழுதுபட்டதற்கு.

† தேவர்க்கு அமைச்சுப் பூண்டவர் வியாழன் (பிருகஸ்பதி); அசுரர்க்கு அமைச்சுப் பூண்டவர் வெள்ளி (சுக்கிரன்). இவர்கள் செய்த நீதிநூல்களின் துணிவை (தீர்மானத்தை)ச் சுருக்கித்து அவர்கள்பின் தோன்றிய நீதிநூலா சிரியராகிய சாணக்கியர் கின்றபடியால்.

காமந்தகர் கூறியபடி திருவள்ளுவ நாயனார் கூறு

‡ வினைத்தூய்மை என்றது - ஊழினால் (பழுதுபடும் வினைகளைச் செய்யாமை) என்பதனை.

¶ உறுதலுடையதனை - பழுதுபடும் வினைகளை.

() ஊழினாலும் உற்றபி னெல்காமையுமென்னு

மிவ்விரண்டிடத்தே.

+ ஊறொரால் என்பதனை ஊறொரார் என்று பாடங்கூறுவாரு முளர்; அவ்வாறு கூறுதல் ஒல்காமை யென்னும் செவ்வெண்ணுடனும் இரண்டென்னும் தொகையுடனும் பொருந்தாமையை அவர் அறிந்திலர். ஊறொரார் என்று பாடங்கொள்ளுமிடத்து அதற்குப்பழுதுபடும் வினைகளைச் செய்யாதவர் அல்லது செய்யாதவராகி யென்று பொருள்படுதலாலும், அது [ஊறு ஓராலும் ஒல்காமையும் ஆகிய இவ்விரண்டின் ஆறு என்று பெயர்ச்செவ்

வெண் (உம்மையெண்) இரண்டென்னும் தொகைபெற்று இனிதாக வமைதல்போலாகாமல்] ஒல்காமையும் என்னும் எண்ணுடனும் இரண்டென்னும் தொகையுடனும் பொருந்தாதுபோதலாலும், அது பாடமாகாதென்று பரிமேலழகர் மறுத்தாரென்க.



லுடையார் சொல்லியபடிசொல்லுகின்றமையால், இங்குவினைத்தூய்மையையும் உடன் சொல்லினர். (பழுது)உறுதலுடையதனை முன்னே'ஊறு'என்று கூறினமையால் 'உற்றபின்' என்றும், ஆய்ந்தவர்கோள் வினைத்தூய்மையும் வினைத்திட்பமுமாகிய இவ்விரண்டினிடத்தே பொருந்தியதென்பார் 'இரண்டிலுறு' என்றும் சொல்லினர்.

(க - து.) பழுதுபடுந் தொழில்களைச் செய்யாமையும் செய்யுந் தொழில் ஊழால் பழுதுபட்டவிடத்து அதற்குத் தளராமையுமே மந்திரிகளது துணிபாம் என்பது.

2. Not to perform a ruinous act, and not to be discouraged by the ruinous termination of an act, are the two maxims which the wise say form the principles of those ministers who have previously mastered the subject.

கூ. கடைக்கோட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கோட்கி னேற்ற விழுமந் தரும்.

பரி:—(இ - ள்.) செய்யப்படும் வினையை முடிவின்கட் புலப்படும் வகை முன்னெல்லாம் மறைத்துச் செய்வதே திட்பமாவது; அங்ஙன மன்றி இடையே புலப்படுமாயின், அப்புலப்பாடு செய்வானுக்கு நீங்காத இடும்பையைக் கொடுக்கும், (எ - று).

மறைத்துச் செய்வதாவது * அங்க மைந்து மெண்ணியவாறு பிறரறியாமலும், † தானறிந்ததூஉம் தன் ‡ னிங்கிதம், வடிவு, செயல், சொற்களான் ¶ அவருய்த் துணராமலும் அடக்கிச் செய்தல். அத் () திட்பம் ஆண்டன்மையான் வருதலின் 'ஆண்மை' எனப்பட்டது. எற்ற விழுமமாவன: பகைவர் முன்னறிந்து அவ்வினையை விலக்குதல், செய்வானை விலக்குதல் செய்வாராகலின், அவற்றான் வருவன. விழுமம் - சாதியொருமைப் பெயர். இவையிரண்டுபோட்டானும் o அதனது பகுதி கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (செய்யப்படுந்தொழிலே) கடை - முடிவில், கொட்க - வெளிப்படும்படி, செய்தக்கது - (முன்னெல்லாம்மறைத்துச்) செய்வதே, ஆண்மை - வலியாவதாம், (அவ்வாறல்லாமல்), (அத்தொழில்),

---

* அங்கமைந்துமெண்ணியவாறு - நாடு, அரண், பொருள், படை, நட்பென்னும் அங்கங்களைந்தையும் பற்றித்தான் யோசிக்கும் வகையை.

† தானறிந்ததூஉம்-தானறிந்ததையும்.

‡ இங்கிதம் - குறிப்பால் நிகழும் உறுப்பின்தொழில்.

¶ அவர் - பிறர்.

() ஆண்தன்மையால்வரும் திட்பத்தை யாண்மை யென்றது கருவியாகு பெயராம்.

o அதனது பகுதி - வினைத்திட்பத்தினது தன்மை.

## அங்கவியல்—சு-வது வினைத்திட்பம்.

**741**

இடை - நடுவிலே, கொட்கின் - வெளிப்படுமாயின், (அவ்வெளிப்படுதல்), எற்ற - நீங்காத, விழுமம் - துன்பத்தை, தரும் - (செய்பவனுக்குக்) கொடுக்கும், (எ - று).

செய்யப்படுந் தொழிலை மறைத்துச் செய்வதாவது நாடு முதலாகிய அங்கம் ஐந்தும் எண்ணிய விதத்தைப் பிறர் அறியாமலும், தான் அறிந்ததும் தன்னிச்சிதம், வடிவு, செயல், சொற்களால் அவர் ஆராய்ந்தறியாமலும் அடக்கிச் செய்தல். அவ்வலிமை ஆண்தன்மையால் வருதலின் 'ஆண்மை' என்று கூறப்பட்டது. எற்ருவிழுமமாவன : பகைவர் முன்னறிந்து அத்தொழிலை விலக்குதலும், செய்வானை விலக்குதலும் செய்வாராதலால், அவ்விலக்குதல்களால் வருந்துன்பங்கள். விழுமம்-ஈறுதோன்ருத சாதியொருமைப்பெயர். இவை இரண்டு பாட்டாலும் அதனது பகுதி சொல்லப்பட்டது.

(க - து.) செய்யப்படுந் தொழிலை முடிவில் வெளிப்படும்படி செய்துமுடிப்பதே ஒருவனுக்கு வலிமையாம்; அவ்வாறன்றி அஃது இடையே வெளிப்பட்டு விடுமாயின், அது செய்பவனுக்கு நீங்காத துன்பத்தைத் தரும் என்பது.

3. So to perform an act as to publish it only at its termination is true strength; for to announce it beforehand will cause irremediable sorrow.

## ௯. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ் சொல்லிய வண்ணஞ் செயல்.

பரி:—(இ - ள்.) யாம் இவ்வினையை இவ்வாற்றுற் செய்துமென நிரல்படச் சொல்லுதல் யாவர்க்கும் எளிய; அதனை அவ்வாற்றனே செயிதல் யாவர்க்கும் அரியவாம், (எ - று).

சொல்லுதல், செயலென்பன் சாதியொருமைப் பெயர். அரியவற்றை யெண்ணிச் சொல்லுதல் திட்பமில்லாதார்க்கும் இயறலின் 'எளிய' என்ருர்.

இதனால் * அதனதருமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) சொல்லுதல்-(யாம் இத்தொழிலை இவ்விதத்தால் செய்வோமென்று ஒழுங்குபடச்) சொல்லுதல்,யார்க்கும்-யாவர்க்கும், எளிய-எளியனவாம்,(அத்தொழிலை) சொல்லியவண்ணம்-அச்சொல்லியவிதத்தாலே, செயல்-செய்தல், அரியவாம்-(யாவர்க்கும்), அரியனவாம், (எ-று).

சொல்லுதல்,செயல் என்பன ஈறுதோன்றிய சாதியொருமைப் பெயர். செய்தற்கரிய செயல்களை எண்ணிச்சொல்லுதல் மனவலிமையில்லாதவர்க்குங் கூடுமாதலால் 'எளிய' என்றார். இதனால் அதனது அருமை சொல்லப்பட்டது.

* அதனது - வினைத்திட்பத்தினது.



(க-து.) இவ்விதத்தால் முடிப்போமென்று சொல்லிய தொழிலைச் சொல்லியவாறு செய்தல் மிகவும் அரியதாம் என்பது.

4. To say how an action is to be performed is indeed very easy for any one; but far difficult is it to do according to what one has said.

ரு.

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க

ணூறெய்தி யுள்ளப் படும்.

பரி:—(இ-ள்.) எண்ணத்தாற் சிறப்பெய்திப் * பிறவிலக்கணங்களானும் மாட்சிமைப்பட்ட அமைச்சாதுவினைத்திட்பம், வேந்தன்கண்ணே உறுதலே யெய்தலான், எல்லாராலும் நன்குமதிக்கப்படும், (எ-று).

வேந்தன்க ணூறெய்தல்-எடுத்தவினை † அதனால் முற்றுப்பெற்றுச் செல்வமும் புகழும் அவன் கண்ணவாதல். ¶ எய்தலானென்பது திரிந்து நின்றது. உள்ளல்-மதிப்பான் மறவாமை. இதனால் o அதன் சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) வீறெய்தி-(எண்ணத்தினால்) சிறப்பை யடைந்து, மாண்டார்-(மற்றை யிலக்கணங்களாலும்) மாட்சிமைப்பட்ட மந்திரிகளது, வினைத்திட்பம் - தொழில்வலிமையானது, வேந்தன்கண் - அரசனிடத்தே, ஊறெய்தி-உறுதலே யடைதலால், உள்ளப்படும்-(எல்லாராலும்) நன்கு மதிக்கப்படும், (எ-று).

வேந்தன்க ணூறெய்தல்-எடுத்ததொழில் அதனால் முடிவுபெற்றுச்செல்வமும் புகழும் அவ்வேந்தனிடத்தனவாதல். எய்தலான் என்பது எய்தி எனத்திரிந்து நின்றது. உள்ளல்- மதிப்பினால் மறவாதிருத்தல். இதனால் அதன் சிறப்புச் சொல்லப்பட்டது.

ஊறு - உறுதல்.

ஊறு- முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

(க-து.) மந்திரிகளது தொழில் வலிமையானது

அரசர்க்குண்

டாகுஞ் சிறப்பினுல் யாவராலும் நன்கு மதிக்கப்படும் என்பது.

---

* பிறவிலக்கணங்களை அமைச்சதிகாரத்திற் காண்க.

† அதனுன்-(அமைச்சரது) மனவுறுதியால்.

¶ எய்தியென்னும் (செய்தென்னும் வாய்பாட்டு) வினையெச்சம் உள் ளப்படும் என்னும் வேறு வினைமுதலின் வினையைக் கொண்டுமுடிதற் கு விதியின்மையின், 'எய்தலா னென்பது திரிந்துநின்றது' என்று கூறப் பட்டது.

o அதன் சிறப்பு-வினைத்திட்பத்தின்சிறப்பு.

அங்கவியல்—ச-வது வினைத்திட்பம்.

**743**

5, The firmness of those ministers who have become great by the excellence of their counsel will by attaining its fulfilment in the person of the king, be esteemed by all.

சு. எண்ணிய வெண்ணியாங் கெய்துப
வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

பரி:—(இ - ள்.) தாமெய்த வெண்ணிய பொருள்க ளெல்லாவற் றையும் அவ்வெண்ணியவாறே எய்துவர்; எண்ணியவர் அவற்றிற்கு † வாயிலாகிய வினைக்கட்டின்மை யுடையராகப் பெறின், (எ - று).

எளிதினெய்துபவென்பார் 'எண்ணியாங் கெய்துப' என்றார். ¶ அவர்

அவ்வாறல்ல தெண்ணுமையிற் றிண்ணியராகவே வினைமுடியும்; அது முடிய o அவையாவையுங் கைகூடுமென்பது கருத்து. இதனால் † அஃதுடையா

ரெய்தும் பயன் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) எண்ணிய-(தாம் அடைய) எண்ணிய பொருள்க ளெல்லாவற்றையும், எண்ணியாங்கு - அவ்வெண்ணியபடியே, எய்துப - அடைவார், எண்ணியார் - எண்ணியவர், (அவ்வெண்ணிய பொரு ளுக்கு வழியாகிய தொழிலினிடத்து), திண்ணியராகப் பெறின் - வலிமை யுடையவராகப் பெறின், (எ-று).

எண்ணியவற்றை எளிதாக அடைவாரென்பார் எண்ணியார். அவர் அவ்வாறல்லாம 'எண்ணியாங் கெய்துப' தொழில் முடியும்; அத்தொழில்

லெண்ணுமையால் திண்ணியவராகவே
முடிய அவையெல்லாம் கைகூடுமென்

பது கருத்து. இதனால் அதனையுடையவர் அடையும்பயன்

சொல்லப் பட்டது.

(க - து.) செய்தொழிலே யுறுதியுடையவராக விருந்து செய்து முடிப்பவர் தாமெண்ணிய பொருளே யெண்ணியபடியே யடைவா எனபது.

6. If those who have planned an undertaking possess firmness in executing it, they will obtain what they have desired even as they have desired it.

எ. * உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன துடைத்து.

† வாயிலாகிய - காரணமான.

¶ அவர்-எண்ணியவர், அவ்வாறல்லது-தொடக்கத்தில் எண்ணியபடியல்லாமல், எண்ணுமையின்-இடையில் பிறிதொன்றுக எண்ணுமையால்.

o அவையாவையும் - தாமடைய எண்ணிய பொருள்களெல்லாம்.

† அஃதுடையார்-வினைத்திட்ப முடையவர்.

* "சிலகற்றூர்க் கண்ணு முளவாம் பலகற்றூர்க், கச்சாணி யன்னதோர் சொல்" என்று அறநெறிச்சாரங்கூறுவதும், "உடலின் சிறுமைகண் டெண்புலவர் கல்விக், கடலின் பெருமை கடவார்" என்று நன்னெறி கூறுவதும், 'மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம், உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா" என்று மூதுரைகூறுவது மிங்கறியத்தக்கனவாம்.

பரி:—(இ - ள்.) உருளா நின்ற பெரிய தேர்க்கு அச்சின்கண் ஆணி போல வினைக்கண் திண்ணியாரை யுடைத்து உலகம், அதனுல் * அவ ரை வடிவின் சிறுமை நோக்கி யிகழ்தலை யொழிக, (எ - று).

† சிறுமை 'எள்ளாமைவேண்டும்' என்பதனுனும் உவமையானும் பெற்

றும். அச்சு - ‡ உருள் சோத்தமரம். ஆணி-உருள் கழலாது ¶ அதன் கடைக்கட் செருகுமது. ○ அது வடிவாற் சிறிதாயிருந்தே பெரியபாரத்தைக் கொண்டுய்க்குந் திட்பமுடைத்து; அதுபோல, வடிவாற் சிறியராயிருந்தே பெரியவினைகளைக் கொண்டுய்க்குந் திட்பமுடைய அமைச்சருமுளர்; ( ) அவரை அத்திட்ப நோக்கி அறிந்து கொள்க வென்பதாம். இதனுல் ‖ அவரை யறியுமாறு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (உலகமானது) உருள் - உருளாநின்ற, பெருந்தேர்க்கு - பெரியதேர்க்கு, அச்சாணியன்னர்-அச்சினிடத்து ஆணிபோலத் தொழிலினிடத்து வலிமையுடையவரை, உடைத்து - உடையது, (அதனுல்), உரு வடிவண்டு - (அவரை) வடிவினது சிறுமைநோக்கி, எள்ளாமை வேண்டும் - இகழ்தலையொழிக, (எ - று).

'எள்ளாமைவேண்டும்' என்பதனுனும்

'உருள்பெருந்தேர்க்கச்சாணி' என்னும் உவமானத்தாலும் (அச்சாணியன்னாரது) சிறுமைபெறப்பட்டது. அச்சு— உருள்கோத்தமரம். ஆணி - உருள்கழலாமல் அதன்கடையில் செருகுவது. அது வடிவினால் சிறிதாயிருந்தே பெரியபாரத்தைக்கொண்டு செலுத்தும் வலிமையையுடையது; அதுபோல, வடிவினால் சிறியராயிருந்தே பெரிய தொழில்களைக்கொண்டு செலுத்தும் வலிமையையுடைய மந்திரிகளும் உளர்; அவரை அவ்வலிமைநோக்கி அறிந்துகொள்க வென்பதாம். இதனால் அவரை அறியும்விதம் சொல்லப்பட்டது.

(க - து.) தேர்க் கச்சாணிபோலத் தொழிலில்வலிமை யுடையாரை உலகம் உடைத்தாயிருத்தலின், எவரையும் உருவின்சிறுமை நோக்கி யிகழலாகாதென்பது.

7. Let none be despised by simply seeing their stature for there are in the world men who resemble the linch pin of the big rolling car.

அ. கலங்காது கண்ட வினைக்கட் டூளங்காது
தூக்கங் கடிந்து செயல்.

---

* அவரை-அச்சாணி யன்னாரை.

† சிறுமை - உருவத்தின் சிறுமை. ‡ உருள் - சக்கரம்.

¶ அதன்கடைக்கண் - உருள்கோத்த மரத்தின் (அச்சின்) கடையில்.

o அது - ஆணி. () அவரை - அவ்வமைச்சரை.

‖ அவரை - வினைத்திட்பமுடைய மந்திரிகளை.



**745**

பரி:—(இ - ள்.) மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த வினையின்கண் பின்னைசைதலின்றி நீட்டித்தலையொழிந்து செய்க, (எ - று).

கலங்கியவழி ஒழிவதும் செய்வதுபோற் றோன்றுமாகலின், தெளிந்து பலகாலாராய்ந்து தாஞ்செய்வதாக ஓர்த்த வினையைக் 'கலங்காது கண்ட வினை' என்றார். துளங்காமை - திட்பமுடைமை.

தெளி:—(இ - ள்.) கலங்காது - (மனம்) தெளிந்து, கண்ட - (செய்வதாகத்) துணிந்த, வினைக்கண் - தொழிலினிடத்து, துளங்காது - (பின்) அசைதலில்லாமல், தூக்கங்கடிந்து - தாமதித்திருத்தலையொழிந்து, செயல் - செய்யக்கடவர், (எ - று).

மனங்கலங்கியவிடத்து ஒழியும் வினையும் செய்வதுபோல் தோன்றுதலால், தெளிந்து பலமுறை யாராய்ந்து தாம் செய்வதாக நிச்சயித்தவினையைக் 'கலங்காது கண்டவினை' என்றார். துளங்காமை - வலியுடைமை.

(க-து.) மனந்தெளிந்து செய்பத்துணிந்த தொழிலைத் தாமதமில்லாது செய்தல்வேண்டும் என்பது.

8. That action which has been firmly resolved upon must be firmly carried out without delay.

கூ. துன்ப முறுவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை.

**பரி:**—(இ - ள்.) முதற்கண் * மெய்ம்முயற்சியாற் றூண்டித் **துன்பம்** மிக வருமாயினும் அதுநோக்கித் தளராது முடிவின்கண் **இன்பம் பயக்கும் வினையைத்** திட்பமுடையாராய்ச் **செய்க**, (எ - று).

*துணிவு* - கலங்காமை. அஃதுடையார்க்கல்லது † கணிகமாய ‡ முயற்சித் துன்ப நோக்காது நிலையுதலுடைய ¶ பரிணமவின்பத்தை நோக்கிச் செய்தல் கூடாமையின், துணிவாற்றிச் செய்க என்றார். இவை யிரண்டுபோட் டானும் ○ அவர் வினை செய்யுமாறு கூறப்பட்டது.

**தெளி:**—(இ-ள்.) (முதலில் மெய்ம்முயற்சியினல் தமக்கு) துன்பம்—, உறவரினும் ‡ மிகவருமாயினும், (அத்துன்பத்தை நோக்கித் தளராமல் முடி

---

* மெய் - உடம்பு; முயற்சி - பிரயத்தனம்.

^ † கணிகமாய முயற்சி-கணப்பொழுதி லழியுமுயற்சி ‡ முயற்சித்துன்பம் - பிரயத்தனத்தால் வரும் துன்பம்.

¶ பரிணும வின்பத்தை - கடலலைபோன்று தொடர்ச்சியாகப் பரிண மித்து (தோன்றி) வரும் இன்பதிதை. [பரிணுமம் - திரிவு].

o அவர் - வினைத்திட்பமுடைய மந்திரிகள்.





வில்), இன்பம் - சுகத்தை, பயக்கும் - தரும், வினை - தொழிலை, வாற்றி - வலிமையுடையவராய், செய்க - செய்யக்கடவர், (எ - று).

துணி

துணிவு - மனங்கலங்காமை. (இன்பம்பயக்கும் வினையை) அக்கலங்காமையையுடையவர்க்கல்லது மற்றவர்க்குக்கணப்போதிருப்பதாகிய(சிறிதுபொழுதில்நீங்குவதாகிய) முயற்சித்துன்பம் நோக்காமல் நிலைபெறுதலுடைய பரிணும வின்பத்தை நோக்கிச் செய்தல் கூடாமையால், துணிவாற்றிச் செய்க என்றார். இவை இரண்டுபோட்டாலும் அவர் தொழில் செய்யும்விதம் சொல்லப்பட்டது.

(க - து.) முடிவில் இன்பந்தருந் தொழிலை முதலில் துன்பம வரினும், சோர்வின்றி யுறுதியோடு செய்துமுடித்தல் வேண்டும்.

9. Though it should cause increasing sorrow at the outset, do with firmness that action which brings happiness in the end.

## கo. எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்

வேண்டாரை வேண்டா துலகு.

பரி:—(இ - ள்.) வினைத்திட்பத்தை † இது நமக்குச்சிறந்ததென்று கொள்ளாத அமைச்சரை, ‡ ஒழிந்ததிட்பங்களெல்லா முடையாராயவிடத்தும் நன்று மதியார் உயர்ந்தோர், (எ - று).

மனத்தின்கண் திட்பமில்லாதார்க்குப் படை, அரண் நட்பு முதலியவற்

றின் திட்பங்களெல்லாம் உளவாயினும் வினை முடியாதாம்; ஆகவே, அவை

யெல்லாங் கெடும் என்பது பற்றி, உலகு வேண்டாது என்றார். இதனால்

வினைத்திட்ப மில்லாதாரது இழிபு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) உலகு-உயர்ந்தோர், வினைத்திட்பம்-தொழில்வலி

மையை, வேண்டாரை-(இது நமக்குச்சிறந்த தென்று) கொள்ளாத மந்திரி

களை, எனைத்திட்பம் - ஒழிந்த வலிமைகளெல்லாம், எய்தியக்கண்ணும்-

உடையவராகிய விடத்தும், வேண்டாது-நன்கு மதியார், (எ-று).

மனத்தினிடத்து வலிமையில்லாதவர்க்குப் படை, அரண், நட்பு முதலியவற்றின் வலிமைகளெல்லாம் உளவாயினும் தொழில் முடியாதாம்;

முடியாதாகவே, அவ்வலிமைகளெல்லாம் கெடுமென்பதுபற்றி, உலகு வேண்டாது என்றார். இதனால் வினைத்திட்பமில்லாதவரது இழிவு சொல்லப்பட்டது.

(க - து.) வினைத்திட்பத்தை வேண்டாத மந்திரிகள் மற்றைத்திட்பங்களெல்லாமுடையவராயிருப்பினும், அவரை உயர்ந்தோர் நன்கு மதியாரென்பது.

† இது - வினைத்திட்பம்.

‡ ஒழிந்ததிட்பம்-படை, அரண் முதலியவற்றின் வலிமை.

10. The wise will not esteem those ministers who esteem not firmness in action, whatever other qualities they may possess.

ஐந்தாவது அதிகாரம்.

வினை * செயல்வகை:—*Method of action.*

பரி:—அஃதாவது † அத்திட்பமுடைய வமைச்சன் ‡ அவ்வினையைச் செய்யுந்திறம். ¶ அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

தெளி:—அஃதாவது அவ்வலிமையுடைய மந்திரி அத்தொழிலைச் செய்யுந்திறமாம். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

க. சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு தாழ்ச்சியுட் டங்குத றீது

பரி:—(இ - ள்.) விசாரத்திற் கெல்லையாவது விசாரிக்கின்றன் இனி § இது தப்பாதென்னுந் () துணிவினைப் பெறுதல்; அங்ஙனந் துணிவு பெற்றவினை பின் ○ கீட்டிப்பின்கட் டங்குமாயின், †† அது குற்ற முடைத்து, (எ - று).

'சூழ்ச்சிமுடிவு துணிவெய்தல்' எனவே, துணிவெய்து

மளவுஞ் சூழ வேண்டுமென்பது பெற்றும். பின்னர்த்துணிவு ஆதுபெயர். நீட்டிப்பு-செய் யுங்காலத்துச் செய்யாமை. அஃதவ்வழிக் காலக்கழிவாகலானும், பகைவர் அறிந்தழித்தலானும் ‡‡முடியாமையின், ¶¶அதனைத் 'தீது' என்றார்.

---

* செயல் என்னுஞ் தொழிற்பெயர் இங்குப் பெயரெச்சப்பொருளில் வந்தது. தெரிந்து செயல்வகை யென்பதன்கண் செயலென்பது பெயரெச் சப்பொருளில் வந்திருப்பது முணர்க.

† அத்திட்பம்=வினைசெயீதற்கண் மனவுறுதி.

‡ அவ்வினையை - பொருளேயேயன்றித் தருமத்தையும் கீர்த்தியையுங் கொடுத்துச் சிறந்ததாகுந்தொழிலை.

¶ வினைத்திட்பம் வினை செய்வதற் கேதுவா யிருத்தலின், வினைத்திட் பத்தின்பின் வினை செயல்வகை வைக்கப் பட்டது.

\$ இது தப்பாது - இக்காரியம் தவறாது. () துணிவினை - நிச்சயத் தை. துணிவு - உவ்விருதி பெற்ற தொழிற்பெயர்.

o நீட்டிப்பின்கண் - காலதாமதத்தில்.

†† அது - துணிவுபெற்றவினை நீட்டிப்பின்கண் தங்குதல்.

‡‡

முடியாமையின் — துணிவுபெற்றவினை முடியாமையின்.

¶¶ அதனை - தாழ்ச்சியுட்டங்குதலை.

தெளி:—(இ - ள்.) சூழ்ச்சி - ஆலோசனைக்கு, முடிவு - எல்லையாவது,
துணிவெய்தல் - (ஆலோசிப்பவன் இனி இது தப்பாதென்னுந்) துணிவைப் பெறுதல், அத்துணிவு - அவ்வாறு துணிவுபெற்றதொழில், தாழ்ச்சியுள் - (பின்) ஆலசியத்தில், தங்குதல் - தங்குமாறு, தீது - (அது) குற்றமுடைய தாம், (எ - று).

'சூழ்ச்சிமுடிவு துணிவெய்தல்' எனவே, துணிவுபெறுமளவும் ஆலோசிக்கவேண்டுமென்பது பெறப்பட்டது. பின்னுள்ள துணிவு - அத்துணிவு பெற்ற தொழிலையுணர்த்துதலால் தொழிலாகுபெயராம். ஆலசியம் - இனியிதுதப்பாதென்று நிச்சயித்த தொழிலைச்செய்யவேண்டுங் காலத்திற்செய்யாது சோர்ந்திருத்தல். அவ்வாலசிய முண்டாயவிடத்துக்காலக்கழிவாகலாலும், பகைவர் அறிந்தழித்தலாலும் முடியாமையால், அதனைத் 'தீது' எனறார்.

(க - து.) ஆலோசித்து இனியிது தப்பாதென்று நிச்சயித்த தொழிலை விரைந்து செய்யாதிருத்தல் தீமையைத்தரும் என்பது.

1. Deliberation ends in forming a resolve to act; but dealy in the execution of that resolve is an evil.

உ. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

பரி:—(இ - ள்.) நீட்டித் துச்செய்யும் * பகுதியவாய வினைகளுள்
நீட்டிக்க; நீட்டியா து செய்யும் வினைகளுள் நீட்டியா தொழிக, (எ - று).

† இருவழியும் இறுதிக்கட்டொக்க ஏழாவது விரிக்கப்பட்டது. ‡ இரு
வகை வினைகளும் வலியானுங் காலத்தானும் அறியப்படும்; ¶ மாறிச்செய்
யின், அவை வாயாவென்பது கருத்து. $ மேல் 'தூங்காமை' என்றார்; ஈண்

---

* பகுதியவாய - பகுப்பினை யுடையனவாய.

† இருவழியும் - செயற்பால, வினையென்னு மிரண்டிடத்தும்.

‡ இருவகை வினைகளும் - தாமதித்துச்செய்யும் பகுப்பினவாய தொழி ல்களும், தாமதமில்லாதுசெய்யுந்தொழில்களும்.

¶ மாறிச்செய்யின் - அவ்விருவகை வினைகளையும் மாறிச்செய்தால். அஃதாவது தாமதத்திற்செய்யுந்தொழிலைவிரைந்தும் விரைந்துசெய்யவேண் டிய தொழிலைத்தாமதித்துச்செய்தால் அத்தொழில்கள்நிறைவேறுஎன்பது.

§ இறைமாட்சி யதிகாரம் மூன்றுவது குறளில் "தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று, நீங்கா நிலனாள் பவற்கு" என்று கூறப்பட்டிரு க்கின்றது. தூங்காமையென்பதற்குக் காரியங்களில் விரைவுடைமையும் என் பது பொருளாம்.



—தினைப் பகுத்துக் கூறினர். இவை இரண்டுபோட்டாலும் பொதுவகையால் வினைசெய்யுந் திறங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) தூங்கி - தாமதித்து, செயற்பால - செய்யும்பகுதி யனவாய தொழில்களுள், தூங்குக -

தாமதம்பண்ணக்கடவன், தூங்காது - தாமதியாது, செய்யும்வினை - செய்யுந்தொழில்களுள், தூங்கற்க - தாமதஞ் செய்யாதிருக்கக்கடவன், (எ - று).

செயற்பால, வினை என்பவற்றினீற்றில் தொக்குநின்ற உள்ளென்னும் எழனுருபு விரித்துரைக்கப்பட்டது. இருவகைத்தொழில்களும் வலியாலும் காலத்தாலும் அறியப்படும்; மாறிச்செய்தால், அவ்விருவகைத் தொழிலும் முடிவுபெறுவென்பது கருத்து. முன்னார்த் 'தூங்காமை' என்றார்; இங்கு அத்தூங்காமையைப் பகுத்துச்சொல்லினர். இவை இரண்டுபோட்டாலும் பொதுவகையால் தொழில்செய்யுந்திறம் சொல்லப்பட்டது.

(க - து) தாமதித்துச் செய்யவேண்டியதொழிலைத் தாமதித்தும் விரைந்து செய்யவேண்டிய தொழிலை விரைந்தும் செய்தல்வேண்டும் என்பது.

2. Sleep over such actions as may be done leisurely; but never sleep over such actions as are required to be done promptly.

ஈ. ஒல்லும்வா யெல்லாம் வினைகன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

பரி:—(இ - ள்.) வினை செய்யுங்கால் இயலுமிடத்தெல்லாம் போராற் செய்தல் நன்று; * அஃதியலாவிடத்து † ஏனை மூன்றுபாயத்துள்ளும் அது முடிவதோருபாய நோக்கிச் செயீக, (எ - று).

இயலுமிடம்-பகையிற் முன்வலியளையகாலம். அக்காலத்துத் தண்டமே நன்று என்றார்; அஞ்சுவது அதற்கேயாகலின். இயலாவிடம் - ஒத்தகாலமும் மெலியுகாலமும். அவ்விரண்டுகாலத்துஞ் சாமபேத தானங்களுள் அது முடியுமுபாயத்தாற் ‡ செயல் என்றார்; அவை ஒன்றற்கொன்று வேறுபா

---

* அஃதியலாவிடத்து - போரால் (தண்டத்தால்) செய்தல் முடியாத காலத்தில்.

† ஏனை மூன்றுபாயம் - தண்டம் ஒழிந்த சாமபேததானம். "எண்ணித் துணிக" என்னுங் குறளின்

விசேடவுரையில் "அது (உபாயம்) கொடுத்தல் (தானம்), இன்சொற் சொல்லல் (சாமம்). வேறுபடுத்தல் (பேதம்), ஒறுத்தல் (தண்டம்) என நால்வகைப்படும்" என்று கூறியிருப்ப திங்கறியத்தக்க தாம்.

‡ செய்க என்றும் பாடமுண்டு.



டைய வேனும் உடம்படுத்தற் பயத்தாற் றம்மொளாக்குமாகலின். இதனுள் வலியான், ஒப்பான், மெலியானென நிலை மூவகைத் தென்பதூஉம், அவற்

றுள் வலியது சிறப்பும் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) (தொழில்செய்யும்போது) ஒல்லும்வாயெல்லாம் - கூடுமிடத்தெல்லாம், வினை-போரால் (தண்டத்தாற்) செய்தல், நன்று - நல்ல தாம், ஒல்லாக்கால் - (அது) கூடாதவிடத்து, (மற்றை மூன்று உபாயத்துள் ளும்), செல்லும்வாய் நோக்கி - (அத்தொழில்) முடிவதோருபாயம் நோக்கி, செயல் - செய்யக்கடவன், (எ - று).

கூடுமிடம் - பகைவரினும் தான் வலியவனாகிய காலம்.

பகைவரினும்

தான் வலியவனுகிய காலத்தில் தண்டமே நன்று என்று கூறினர்; பகைவர் அஞ்சுவது அத்தண்டத்திற்கே யாதலால். கூடாதவிடம் - பகைவர் வலி மைக்குத் தான் ஒத்த காலமும் இளைத்தகாலமுமாம். அவ்வொத்தகாலத்தும் இளைத்தகாலத்தும் சாம பேத தானமென்னும் உபாயங்களுள் அத்தொழில் முடியும் உபாயத்தாற் செயல் என்று கூறினர்; அச்சாம பேத தானங்கள் ஒன்றற்கொன்று வேற்றுமை யுடையனவா யிருப்பினும் சம்மதிக்கச்செய் யும் பிரயோசனத்தால் தம்முள் ஒத்திருத்தலால். இதனால் வலியான், ஒப் பான், மெலியானென்று நிலை மூவகைப்படுமென்பதும், அம்மூவகைநிலை களுள் வலியினது சிறப்பும் சொல்லப்பட்டன.

(க - து.) இயலுமிடத்தெல்லாம் தண்டத்தினாலும் அது முடி யாவிடத்து மற்றைய வுபாயங்களுள் யாதொன்றாலாகிலும் மேற் கொண்ட காரியத்தை முடித்தல்வேண்டும் என்பது.

3. Whenever it is possible to overcome your enemy the act of fighting is certainly good; if not, employ some more successful means.

ச. வினபகை யென்றிரண்டி னெச்ச
நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும்.

பரி:—(இ - ள்.) செய்யத்தொடங்கிய வினையும் கொலையத்தொடங் கிய பகையுமென்று சொல்லப்பட்ட இரண்டனதொழிவும் ஆராயுங் காற் றீயினதொழிவுபோலப்

பின் வளர்ந்து கெடுக்கும், (எ - று). இனி *

இக்குறை என்செய்வதென்று இகழ்ந்தொழியற்க; முடியச்

* இக்குறை - வினையினது ஒழிவு, பகையினது ஒழிவு என்னும்இக்

குறை. பகை, கடன், நீர், நோய் முதலியவற்றைப் பற்றறவொழிக்காது

விட்டு விட்டால் அவை பின்பு இராவணன் தலைபோல் வளர்ந்து தம்மை யுடையவரை யழித்தல் பற்றி "இனி இக்குறை என்செய்வதென்று இகழ்ந் தொழியற்க; முடியச் செய்கவென்பதாம்" என்று கூறப்பட்டது.



செய்க வென்பதாம். பின் வளர்த லொப்புமைபற்றிப் * பகையெச்சமும் உடன் கூறினர்: இதனான் வலியான் செய்யுந்திறங் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) வினை-(செய்யத்தொடங்கிய) தொழிலும், பகை—(அழிக்கத்தொடங்கிய) பகையும், என்ற இரண்டின்-என்று சொல்லப்பட்ட இரண்டினது, எச்சம் - நுறையும், நினையுங்கால் - ஆராயுமிடத்து, தீயெச்சம்போல - தீயினது குறைபோல, தெறும் - (பின்வளர்ந்து) கெடுக்கும்.

இனி இக்குறை யாது செய்வதென்று இகழ்ந்துவிடவேண்டாம்; அத னை முடிவுபெறச் செய்கவென்பதாம். பின்வளர்தல் ஒப்புமைபற்றிப் பகை யெச்சத்தையும் வினையெச்சத்துடன் சொல்லினர். இதனால் வலியவன் செய்யுந்திறம் சொல்லப்பட்டது.

(க - து.) வினைக்குறையும் பகைக்குறையும் தீயினதுகுறை பின் வளர்ந்து கெடுப்பதுபோல வளர்ந்து தம்மையுடையவரைக் கெடுக்கும் என்பது.

4. When duly considered, the incomplete execution of an undertaking and hos'ility will grow and destroy one like the unextinguishing remnant of a fire.

## ரு. பொருள்கருவி காலம் வினையிடனெ டைந்து

## மிருடீர வெண்ணிச் செயல்.

**பரி:—(இ - ள்.) வினை செயீயு மிடத்துப் போநளுங் கருவியுங் காலமும் வினையும் இடனுமாகிய இவ்வைந்தனையும் மயடீகமற வெண் ணிச் செய்க, (எ - று).**

¶ எண்ணெடு பிறவழியுங் கூட்டப்பட்டது. பொருள் - அழியும்பொ

ருளும் ஆகும் பொருளும். கருவி - தன்ருனையும் மாற்ருர்தானையும். காலம் - தனக்காங்காலமும் அவர்க்காங்காலமும். வினை - தான் வல்லவினையும்அவர் வல்லவினையும். இடம் - தான் வெல்லுமிடமும் அவர் வெல்லு மிடமும். இவற்றைத் தான் வென்றி யெய்துந்திறத்திற் பிழையாமலெண்ணிச் செய்க வென்பதாம்.

தெளி:—(இ - ள்.) (தொழில் செய்யுமிடத்து) பொருள் - பொருளும், கருவி - கருவியும், காலம்-காலமும், வினை - தொழிலும், இடனெடு-இடமும், (ஆகிய), ஐந்தும் - இவ்வைந்தினையும், இருடூர - மயக்கமற, எண்ணி - ஆலோசித்து, செயல் - செய்யக்கடவன், (எ - று).

---

* பகையெச்சமும் - பகையினது குறையும்.

¶ "என்று மெனவு மொடுவுந் தோன்றி,
யொன்றும்வழி யுடைய
வெண்ணினுட் பிரிந்தே" என்னுந் தொல்காப்பியம் சொல்லதிகாரம்.

இடையியற் சூத்திர மிங்கறியத்தக்கது.



எண்ணுப் பொருளில் வந்த ஓடு என்னும் இடைச்சொல்லைப் பொருள் முதலியவற்றோடுங்கூட்டிப் பொருளொடு கருவியொடு காலமொடு வினையொடு இடனெடு என்று கொள்க. பொருள் - அழியும் பொருளும் ஆகும் பொருளும். கருவி - தன் சேனையும் பகைவர்சேனையும். காலம் - தனக்கு ஆங்காலமும் பகைவர்க்கு ஆங்காலமும். வினை - தான் (வெல்லுதலில்) வல்ல தொழிலும் பகைவர் (வெல்லுதலில்) வல்லதொழிலும். இடன்-தான் வெல்லும் இடமும் பகைவர்வெல்லும் இடமும். பொருள் முதலிய விவற்றை (அமைச்சன்) தான் வெற்றிபெறுந்திறத்தில் தப்பாமல் ஆலோசித்துச் செய்கவென்பதாம்.

(க - து.) செய்யுந்தொழிலைப் பொருள்

கருவி முதலிய வற்றை மயக்கமற ஆலோசித்துச் செய்தல்வேண்டும் என்பது.

5. Perform an action with due consideration as to money, means, time, execution & place.

சு. முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

பரி:—(இ - ள்.) வினைசெய்யுங்கால் அது முடிதற்குளதாம் முயற்சியும் அதற்குவரு மிடையூறும் அது நீங்கி * முடிந்தாற் றனையதும் பெரும்பயனும் † சீர்தூக்கிச் செய்க, (எ - று).

முடிவு - ஆகுபெயர். முயற்சி யிடையூறுகளதளவிற் ‡ பயனதளவு பெரிதாயிற் செய்க வென்பதாம்.

தெளி:—(இ - ள்.) (தொழில் செய்யுமிடத்து) முடிவும் - (அத்தொழில் முடிதற்கு உளதாகிய) முயற்சியையும், இடையூறும் - (அத்தொழிற்கு வரும்) இடையூற்றையும், முற்றியாங்கு - (அவ்விடையூறுநீங்கி) முடிந்தால், எய்தும்-(தான்) அடையும், படுபயனும் -

பெரும்பயனையும், பார்த்து - சீர் தூக்கி, செயல் - செய்யக்கடவன், (எ - து).

முடிவு என்னுங் காரியப்பெயர் அதனது காரணமான முயற்சியை யுணர்த்துதலால் காரியவாகுபெயராம். முயற்சியளவினும் இடையூறளவி னும் பயனளவு பெரிதாயிருந்தால் தொழிலைச்செய்கவென்பதாம்.

(க - து.) முயற்சி இடையூறு பயன் என்னு மூன்றனையு மாலோசித்துத் தொழிலைச் செய்தல்வேண்டும் என்பது.

---

* முடிந்தால் - வினை முடிந்தால். † சீர்தூக்கி - பலவழியானும் ஆராய்ந்து. ‡ பயனதளவு - வினைசெய்தலா லுண்டாகும் பிரயோசனத்தின் அளவு.



6. An action is to be performed with due

consideration is to the exertion required, the obstacles to be encountered
and the great profit to be gained on its completion.

எ. செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல்.

பரி:—(இ - ள்.) அவ்வாற்றாற் செயியப்படும் வினையைத் தொடங்கினான் செயியு முறைமையாவது * அதனதுளப்பாட்டினை யறிவான் கருத்தினைத் தானறிதல், (எ - று).

அவ்வாறென்றது † பொருள் முதலிய வெண்ணலையும் முடிவுமுதலிய தூக்கலையும். உள்ளறிவான் - முன்செய்து போந்தவன். அவன் கருத்து- அவன் செய்து போந்த உபாயம். அதனை யறியலே, தானும் அதனைற் செய்து பயனெய்துமென்பதாம். இவை மூன்று பாட்டானும் ஒப்பான் செய் யுந் திறங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) செய்வினை - (அவ்வாற்றால்) செய்யப்படுந் தொழிலை, செய்வான் - செய்யத்தொடங்கினவன், செயன்முறை-செய்யுமுறைமையாவது, அவ்வினை - அத்தொழிலினது, உள் - உளப்பாட்டை, அறிவான் - அறிபவனது, உள்ளம் -

கருத்தினை, கொளல் - (தான்) அறிதல்.

அவ்வாறென்றது பொருள் முதலியவற்றை எண்ணலையும் முடிவு முதலியவற்றை ஆராய்தலையும். உள்ளறிவான் - முன் செய்து கைவந்த வன்.. அவன்கருத்து - அவன் செய்துவந்த உபாயம். அவ்வுபாயத்தை அறியவே, தானும் அவ்வுபாயத்திலுல் தொழிலச் செய்து பயனை யடைவானென்பதாம். இவைமூன்று பாட்டாலும் ஒப்பவன் செய்யுந்திறம் சொல்லப்பட்டது.

(க-து.) தொழிலச் செய்யுமிடத்து அதனை முன்செய்து பய னடைந்தவாது கருத்தினையொட்டிச் செய்தல்வேண்டும் என்பது.

7. The method of performance for one who has begun an action is to ascertain the gist of him who knows the secret thereof.

## ஆ. வினையான் வினையாக்கிக் கோட லனைகவுள்
## யானையால் யானையாத் தற்று.

பரி:—(இ - ள்.) செயிகின்ற வினையாலே அன்னது பிறிது மோரி

* அதனது உளப்பாட்டினை—அவ்வாற்றுற் செய்யப்படும் வினையினது யதார்த்த நிலையினை.

† பொருள் முதலியவற்றை யெண்ணலே யிவ்வதிகாரத்தின் 5-வது குறளிலும், முடிவுமுதலியவற்றை யாராய்தலே 6-வது குறளிலுங்காண்க.



வினையை முடித்துக்கொள்க; * அது † மதத்தானனைந்த ‡ கபோலத்தினை யுடைய யானையாலே அன்னது பிறிதுமோர் யானையைப் பிணித்ததனை டொக்கும், (எ - று).

பிணித்தற்கருமை தோன்ற + 'நினைகவுள்' என்பது பின்னுங்கூட்டப்பட்டது. தொடங்கிய வினையானே பிறிதுமோர் வினையை முடித்தற் குபாய மாமாறு எண்ணிச் செய்க; செய்யவே, ¶ அம்முறையான் எல்லாவினையும் எளிதின் முடியுமென்பதாம்.

தெளி:—(இ - ள்.) வினையான்-(செய்கின்ற) தொழிலினாலே, வினை-(அத்தன்மையதாகிய வேறொரு) தொழிலை, ஆக்கிக்கோடல் - முடித்துக் கொள்ளக்கடவன், (அது), நினைகவுள் - (மதத்தால்) நினைந்த கபோலத்தினையுடைய, யானையால் - யானையினாலே, யானை - (அத்தன்மையதாகிய வேறொரு) யானையை, யாத்தற்று - கட்டியதனை டொக்கும், (எ - று).

கட்டுதற் கருமைதோன்ற 'நினைகவுள்' என்பது

பின்வந்த யானையென் பதனேடுங் கூட்டப்பட்டது. தொடங்கிய தொழிலினுலே வேறுமொரு தொழில முடித்தற்கு உபாயமாகும்விதத்தை யாலோசித்துச் செய்க;செய்ய வே, அந்தக் கிரமத்தினுல் எல்லாத் தொழிலும் எளிதாக முடியுமென்பதாம்.

(க - து.) ஒருவன் செய்யத்தொடங்கிய தொழிலாலே அத் தன்மையதாகிய வேறொரு தொழிலையும் முடித்துக்கொள்ளக் கடவன் என்பது.

8. To make one undertaking the means of accomplish- ing another akin to it is like making one rutting elephant the means of capturing another.

கூ. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
யொட்டாரை யொட்டிக் கொளல்.

பரி:—(இ - ள்.) வினைசெயல்வாஞற் றன் னட்டார்கீது இனியவற்றைச் செய்தலினும் விரைந்து செயியப்படும்; தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கோடல், (எ - று).

அவ்வினை வாய்த்தற் பயத்தவாய இவ்விரண்டும் பகைவர்க்குத் தன்

* அது - செய்கின்றதொழிலாலே அத்தன்மையதாகிய வேறொருதொழில முடித்துக்கொள்ளுதல்.

† மதத்தால் - மதநீரால். ‡ கபோலம் - கன்னம்.

+ நனைகவுள் என்பதைப் பின்வந்த யானையென்பதனொடுங் கூட்டி மதத்தா னனைந்த கபோலத்தினையுடைய பிறிது மோர்யானையை யென்று பொருள் கொள்ளப்பட்டது.

¶ அம்முறையான் - தொடங்கிய தொழிலாலே வேறுமொருதொழிலை முடித்தற்கு உபாயம் ஆகும்வகையை யாலோசித்துச் செய்யுங் கிரமத்தால்.

$ இவ்விரண்டும் - நட்டார்க்கு நல்லசெயல், ஒட்டாரை யொட்டிக்கொளல் என்னும் இவ்விரண்டும்.

## அங்கவியல்—ரு-வது வினைசெயல்வகை.

# 755

மெலிவு புலனாவதன்முன்னே செய்க வென்பார் 'விரைந்தது' என்றார்; விரைந்து செய்யப்படுவதென்றவாறு. வினைசெய்யுந்திறமாகலிற் பகைவரோடொட்டா ராயிற்று. † தன்னொட்டார் பிறருட் கூடாமல் ‡ மாற்றி வைத்த லெனினு மமையும்.

தெளி:—(இ - ள்.) (தொழில்செய்பவனால்) நட்டார்க்கு-(தனது) நட்பினர்க்கு, நல்லசெயலின் - இனிமையான வற்றைச் செய்தலினும், ஒட்டாரை-(தனதுபகைவருடன் பகைத்துப்) பொருந்தாதிருப்பவரை, ஒட்டிக்கொளல் - (தனக்கு) நட்பாக்கிக்கொள்ளுதல், விரைந்தது - விரைந்து செய்யப்

படுவதாம், (எ - று).

அத்தொழில் பலித்தலேப் பயனுக வுடையனவாய இவ்விரண்டு காரியங் களும் பகைவர்க்குத் தன்னுடையசோர்வு வெளிப்படுவதன் முன்னே செய்க என்பார் 'விரைந்தது' என்று கூறினர். விரைந்த தென்பது விரைந்துசெய் யப் படுவது என்றவாறும். இவ்வதிகாரம் பகைவருடன் போர் முதலியவற் றைச்செய்யும் வகையைக் கூறுவதாகலால், ஒட்டாரென்பவர் தன் பகைவரு டன் கூடாதாரென்பதாயிற்று.

(க - து.) தொழில் செய்யுமமைச்சன் தனது பகைவரது பகைவரைத்தனக்குச் சிநேகமாக்கிக்கொள்ளுதல் தனது சிநேகிதருக்கு இனிமையானவற்றைச் செய்தலினும் நன்றும் என்பது.

9. One should rather hasten to secure the alliance of the foes of one's enemies rather than do good service to one's friends.

கo. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபிறிற் கோள்வர் பெரியார்ப் பணிந்து.

பரி:—(இ - ள்.) அஞ்சுமிடஞ்சிறியராய அமைச்சர் தம்மின் வலியார் எதிர்ந்தவழித் தம்பதஞ் நடுங்குலையஞ்சி, ¶ அந்நிலைக்கு வேண்டுவதாய சந்தி கூடுமாயின், அவரைத் தாழ்ந்து ¶ அதனை யேற்றுக்கொள்வர். ()

இடம்-நாடும் அரணும். + அவற்றது சிறுமை

* மெலிவு - பொருள் படை வலி முதலியவற்றால் தனது பகைவரி னும் தான் குறைவடைந்திருத்தல்.

† 'ஒட்டாரை யொட்டிக்கொளல்' என்பதற்கு ஒட்டாரை-தனதுபகை வரை, ஒட்டிக்கொள்ளல்—மற்றொருவரிடத்துக்கூடாதவாறு வேறுபடுத்தி வைத்தல் என்று பொருள் கூறினும் ஒக்கும் என்பதாம்.

‡ மாற்றிவைத்தல் - வேறுபடுத்தல் (பேதம்) என்னும் உபாயம்.

¶ அங்கிலேக்கு - தம்பகுதியுஞ்சும் அங்கிலேமைக்கு.

§ அதனை - சந்தி கூடுதலை.

† காடு அரண்களின் சிறுமையை அவற்றை யாளுகின்றவர்மே லேற்றி 'உறை சிறியார்' என்று கூறினர். இஃது இடத்தினது சிறுமை இடத்தையுடையவர் மேலாய வுபசார வழக்காம்.



டது. மெலியாரோடு * சந்திக்கு வலியார் † இயைதலரிதாகலின் 'பெரின்' என்றார். ‡ அடியிலே மெலியராயினர் ¶ தம்பகுதியுமஞ்சி நீங்கின் § முத லொடுங் கெடுவராகலின், † அது வராமற் o சிறிது கொடுத்துஞ் சந்தியை யேற்றுக் கொள்க வென்பதாம். ()பணிதல் மான முடையார்க்குக் கருத்தன் மையின் 'கொள்வர்' என உலகியலாற் கூறினர். இவை மூன்று பாட்டானும் மெலியான் செய்யுந்திறங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) உறைசிறியார் - ஆளுமிடஞ் சிறியாராகிய மந்திரிகள், (தம்மின் மிக்க வலியுடையவர் எதிர்ந்த விடத்து), உன் - (தமது) அங்கங்கள், நடுங்கல் - நடுங்குதலுக்கு, அஞ்சி-பயந்து, குறைபெறின் - (அந்நிலைக்கு வேண்டுவதாகிய) சந்திகூடுமாயின், பெரியார்-அப்பெரியவரை, பணிந்து - தாழ்ந்து, கொள்வர் - (அதனை யேற்றுக்) கொள்ளுவர், (எ - று).

இடம்-நாடும் அரணும். அங்நாட்டரண்களின் சிறுமை அவற்றை யாளுகின்றவர்மேல் ஏற்றப்பட்டது. மெலியாரோடுசந்திக்கு வலியாரியைதல் அரிதாகலால் 'பெறின்' என்றார். அடியிலே மெலியராயினர் தம்மங்கங்களும்

அஞ்சி நீங்கினால் முதலோடுங் கெடுவாகலின், அதுவாராமற் சிறிதுபொருள் கொடுத்தும் சந்தியை ஏற்றுக்கொள்க வென்பதாம். பணிதல்மானமுடையவர்க்குக் கருத்தல்லாமையால் 'கொள்வர்' என உலகியலாற் சொல்லினர். இவை மூன்று பாட்டாலும் மெலியவன் செய்யுந் திறம் சொல்லப்பட்டது.

(க - து.) ஆளுமிடஞ் சிறியராகிய மந்திரிகள் தம்மினும் வலியார் தம்மை யெதிர்ந்தவிடத்து அவரைப் பணிந்து சமாதானமாக விருத்தலை மேற்கொள்வர் என்பது.

10. Ministers of small states, afraid of their people being frightened, will submit to and acknowledge their superior foes, if the lafter offer them a chance of reconciliation.



## ஆறும் அதிகாரம்.

## ¶¶ தூது:—The Ambassador.

பரி:—அஃதாவது ††சந்தி விக்கிரகங்கட்கு ‡‡வேற்றுவேந்தரிடைச்

---

* சந்திக்கு - சமாதானத்திற்கு. † இயைதல் - பொருந்துதல்.
‡ அடியிலே - போர்செய்ய ஆரம்பித்த காலத்திலே.
¶ தம்பகுதியும் - தமது சேனை,நட்பு முதலிய அங்கங்களும்.
§ முதலொடும் - அடியோடும். + அது - முதலொடுங் கெடுதல்.
o சிறிதுகொடுத்தல் - தான மென்னும் உபாயம்.

() பணிதல்-பகைவர்க்குத் தாழ்ந்தொழுகுதல்.

¶¶ "வேத மாந்தர் வேந்தரென் றிருவர்க்குந், தூது போதற் றொழிலு ரித் தாகும்." "சிறப்புப் பெயர்பெறிற் செப்பிய விரண்டு, முதற்குரி மாபி ன வொழிந்தோ ரிருவர்க்கு ம்." என்பது அகப்பொருள் விளக்கம்.

†† அமைச்சு அதிகாரம் மூன்றாவது குறளின் விசேடவுரையில் "வட நூலார் இவற்றுட் பொருத்தலைச் சந்தி யென்றும் பிரித்தலை விக்கிரகமென் றும் கூறுப" என்று கூறப்பட்டிருத்தல் இங்கறியத் தக்கது.சந்தி விக்கிரகம்- அதித்துக்கெடுத்தலாம். ‡‡வேற்று வேந்தர்-தம்மரசனால் வேறுபட்ட அரசர்.

## அங்கவியல்—சூ-வது தூது.

**757**

கேள்வாரது தன்மை. * அவ்விரண்டனையும் மேல் வினை செயல்வகை என்றமையின், † இஃது தன்பின் வைக்கப்பட்டது. ‡ தான் வதுத்துக் கூறுவான் ¶ கூறியது கூறுவா னெனத் தூது இருவகைப்படும்; அவ

நள் $ முன்னேன் + அமைச்சனே டொப்பானுகலானும் o பின்னேன் ()அவனிற் காற்கூறு குணம் குறைந்தோ னுகலானும் ††இஃதமைச்சிய லாயிற்று.

தெளி:—அஃதாவது பொருத்தல் பிரித்தல்களுக்கு வேற்றரசரிடத்துச்

செல்வாரது தன்மை. (பொருத்தல் பிரித்தலென்னும்) அவ்விரண்டனையும்

முன் வினைசெயல்வகை என்றமையால், இஃது அதன்பின் வைக்கப்பட்

டது. தான் வகுத்துக்கூறுவான் கூறியது கூறுவான் எனத்தூது இரு

வகைப்படும் ; அவருள் முன்னேன் மந்திரியோ டொப்பா னுகலானும்

பின்னேன் அவனிலுங் காற்பங்கு குணங் குறைந்தோனுகலானும் இஃது

அமைச்சியலாயிற்று.

க. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்

பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

பரி:—(இ - ள்.) தன்சுற்றத்தாரிமா ட்டு அன்புடை யனுதலும் அமை சீசுப் பூணைந்தமைந்த

குடியின்கட் பிறத்தலும் அரசர்சாதிவிரும்பும் பண் புடைய
ஐதலும் தூதுவா ரீத்தை சொ ல்லுவானுக் கிலக்கணம்,
(எ-று).

‡ ‡முன்னைய விரண்டனுலும், முறையே சுற்றத்தார்க்குத் தீங்குவாரா மற் ருன் பேணியொழுகலும், ¶¶ தன்முன்னோர் தூதியல் கேட்டறிதலும்

* அவ்விரண்டனேயும் - சந்திவிக்கிரகங்களேயும்.

† இஃ ததன்பின் வைக்கப்பட்டது-தூது என்னும் இவ்வீதிகாரம்வினை செயல்வகை யென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது

‡ தான் வகுத்துக் கூறுவான்-ஒரு காரியத்தைத் தான் பிறரோடு சொல்

லும் வகையையும், அதற்கு அவர் சொல்லும் உத்தரவையும், அவ்வுத்தரவுக்குப் பின்தான் சொல்லும் வகையையும் மேலும் மேலும் தானே கற்பித்துக் கொண்டு சந்தற்பந்திற் கேற்றவகை பேசுந் தூதன்.

¶ கூறியது கூறுவான்-கிளிப்பள்ளேயைப் போன்று தன்னரசன் தன்னிடத்துக் கூறியதை மாத்திரம் வேற்று வேந்தரிடத்துக் கூறுந் தூதன்.

§ முன்னேன் - தான் வகுத்துக் கூறுவான்.

+ "ஆதிநூ லமைச்சர்க் கோது மாண்பெலா மமைந்து நின்ருன், தூதி னுச் சொல்லிற் சொல்லாச் சூழ்பொரு ளிலலே" என்பது சூளாமணி.

o பின்னேன் - கூறியது கூறுவான்.

() அவனில் - தான் வகுத்துக் கூறுவானிலும். ++ இஃது-தூது.

‡‡ முன்னைய விரண்டனுலும் - அன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்தல் என்று முன்னுள்ள இரண்டனுலும்.

¶¶தன் முன்னோர் தூதியல் கேட்டறிதலும்-தனது தகப்பன் பாட்டன் முதலாயினோர் தூதரீதொழுகிய தன்மையைக் கேட்டுள்ளத்தமைத்தலும்.



பெற்றும். * 'வேந்தவாம் † பண்புடைமை' முன்னர் மன்னரைச் சேர்ந்தொழுகற்கட் பெறப்படும். ‡ அதனுல் வேற்றரசரும் 0 அவன் வயத்தராதல் பெறுதும்.

தெளி:—(இ - ள்.) அன்புடைமை-(தன் சுற்றத்தாரிடத்து) அன்புடையவனுதலும், ஆன்றகுடிப்பிறத்தல் - (அமைச்சர்தொழில் செய்தற்கு) அமைந்தகுடியில் பிறத்தலும், வேந்தவாம் பண்புடைமை - அரசர்சாதி விரும்பும் குணமுடையவனுதலும், தூதுரைப்பான் - தூதவார்த்தையைச் சொல்லுவானுக்கு, பண்பு - இலக்கணமாம், (எ - று).

முன்னையவிரண்டனுலும், முறையே சுற்றத்தார்க்குத் தீங்குவாராமல் தான் (அவரைப்) பாதுகாத்து நடத்தலும், தன்முன்னோரது தூதினியல்பைக் கேட்டறிதலும் பெற்றும். 'வேந்தவாம் பண்புடைமை' பின்வரும் மன்னரைச் சேர்ந்தொழுகலென்னு மதிகாரத்திற்பெறப்படும். அதனுல் வேற்றரசரும் அவன் வயத்தினராதல் பெறப்படும்.

(க-து.) அன்புடைமை, நற்குடிப்பிறப்பு, அரசர் விரும்புங்குணமுடைமையென்னு மிவை தூதனது இலக்கணங்களாம் என்பது.

1. The qualifications of an ambassador are affection

for his relatives, a high birth, and the possession of attri-

butes pleasing to the royalty.

உ. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை
தூதுரைப்பார்க்,
கின்றி யமையாத மூன்று.

பரி:—(இ - ள்.) தம்மரசன்மாட் டன்புடைமையும் அவனுக்கு

---

* மனு தர்மசாஸ்திரம் ஏழாவதத்தியாயத்தில் "சர்வ சாஸ்திரங்களையு மறிந்தவனுயும், சொற்குறி கண்சிமிட்டுதல் முதலிய சமிக்கை, சிட்டிகைபோ
தல் முதலிய செய்கை என்னுமிவற்றைக் கண்டறிபவனுயும், பொருளாசை யில்லாதவனுயும், சமர்த்தனுயும், நற்குலத்திற் பிறந்தவனுயும் இருக்கிற ஒரு தூதனை அரசன் தன்னிடத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும்".

"அந்தத்தூதன் யாவரிடத்தும் அன்புள்ளவனுயும், சமர்த்தனுயும், பொருளாசை யில்லாதவனுயும், நியாபக முள்ளவனுயும், தேசகாலங்களை யறிந்தவனுயும், தேகபுஷ்டியுள்ளவனுயும், பயமில்லாதவனுயும், சம்ஸ்கிருத முதலிய பாஷைகளைப் பேசுகிறவனுயும் இருந்தால் அரசனுக்குப் பெருமையையுண்டுபண்ணுவான்" என்று கூறுவது மிங்கறியத்தக்கது.

† பண்புடைமையாவது பெருமை சான்றுண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளுமறிந்து அவற்றிற்கொத்து நடத்தலாம். "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்" என்பது கலித்தொகை.

‡ அதனுல் -வேந்தவாம் பண்புடைமையால். 0 அவன்-தூதன்.

**759**

† ஆவனவறியு மறிவுடைமையும் ‡ அவற்றைவேற்றாசரிடைச்சொல்லுங் கால் ஆராய்ந்து சொல்லுதல் வன்மையு மெனத் தூதுரைக்க வுரியார்க்கு இன்றியமையாத குணங்கள் மூன்று, (எ - று).

ஆராய்தல் - ¶ அவற்றிற் குடம்படுஞ் சொற்களைத் தெரிதல். 'இன்றியமையாத மூன்று' எனவே, அமைச்சர்க்குச் சொல்லிய $ பிற குணங்களும் வேண்டுமென்பது பெற்றும். இவை யிரண்டு பாட்டானும் † இருவகை யார்க்கும் பொதுவிலக்கணங் கூறப்பட்டது.

தெளிவு:—(இ - ள்.) அன்பு - (தம்மாசனிடத்து) அன்புடைமையும், அறிவு-(அவ்வாசனுக்கு ஆவனவற்றை யறியும்) அறிவுடைமையும்,(அவற்றை வேற்றாசரிடத்துச் சொல்லும்போது), ஆராய்ந்த சொல்வன்மை-ஆராய்ந்து சொல்லுதல் வலிமையும், (என), தூதுரைப்பார்க்கு - தூதுசொல்ல வுரிய வர்க்கு, இன்றியமையாத - அவசியமாக வேண்டிய குணங்கள், மூன்று - மூன்றும். (எ - று).

ஆராய்தல் - அவ்வன்பு முதலிய வற்றிற்குச் சம்மதிக்குஞ் சொற்களைத் தெரிதல். 'இன்றியமையாத மூன்று' எனவே, மந்திரிகளுக்குச் சொல்லிய மற்றைக் குணங்களும் வேண்டுமென்பது பெறப்பட்டது. இவை இரண்டு பாட்டாலும் இருவகைத் தூதர்க்கும் பொதுவிலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து) தூதுரைக்க வுரியாரது முக்கிய குணங்கள் அன்பு,

அறிவு, சொல்வன்மை யென்னு மிம்மூன்றுமாம் என்பது.

2. Love to his sovereign, knowledge of his affairs, and a discriminating power of speech before other sovereigns are

the three essential qualfications of an ambassadon

கூ. நூலாரு ணூல்வல்ல ருதுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

பரி:—(இ - ள்.) வேலையுடைய வேற்றாசரிடைச் சென்று தன்னரசனுக்கு வென்றிதரும் வினையைச் சொல்லுவானுக்கு இலக்கணமாவது நீதிநூலை யுணர்ந்த அமைச்சரிடைத் தான் அந்நூலை வல்லனுதல், ().

---

† ஆவன - நன்மை தருவன.

‡ அவற்றை- அன்புடைமையையும் அறிவுடைமையையும். ¶ அவற்றிற்கு - தம்மரசன்மாட்டன்புடைமைக்கும் அவ்வரசனுக்காவனவறியும் அறிவுடைமைக்கும்.

§ பிறகுணங்களும் - அமைச்சுமுதல் வினைசெயல்வகை

யீருக வுள்ள அதிகாரங்களில் கூறியுள்ள வேறுகுணங்களும்.

† இருவகையார்க்கும் - தான்வகுத்துக் கூறுவான் கூறியதுகூறுவான் என்னும் இருவகைத் தூதர்களுக்கும்.



கோறன் மாலையரென்பது தோன்ற * 'வேலார்' என்றும், † தூது வினையிரண்டுமடங்க 'வென்றிவினை' என்றுங் கூறினர். வல்லறுதல்-உணர்வு மாத்திர முடையராய ‡ அவர் மூன்வகுக்குமாற்ற லுடையரறுதல்.

தெளி:—(இ - ள்.) வேலாருள் - வேலினையுடைய வேற்றாசரிடத்து, (சென்று), வென்றி - (தன்னாசனுக்கு) வெற்றியைத் தருகின்ற, வினையுரைப்பான், தொழிலைச் சொல்லுவானுக்கு, பண்பு-இலக்கணமாவது, நூலாருள் - நீதிநூலை யறிந்த மந்திரிகளிடத்து, நூல்வல்லறுதல் - (தான்) அந்நீதி நூலில் வல்லவறுதல், (எ-று).

வேற்றாசர் கொல்லுந்தன்மையுடையா ரென்பதுதோன்ற 'வேலார்' என்றும், தூதுபோதல் தன்னாசனுக்கு வெற்றியைத் தருகின்ற வினையைக் கூறுதலென்னு மிரண்டுமடங்க 'வென்றிவினை' என்றும், சொல்லினர். வல்லவறுதல்-அறிதல் மாத்திர முடையவராகிய அவர் மூன்தான்வகுத்துக் கூறும் வல்லமை யுடையவறுதல்.

(க - து.) நீதிநூலுணர்ந்த மந்திரிகளிடத்துத்

தான் நீதிநூலில் வல்லவனு மிருத்தல் தூதனுக்கு இலக்கணமாம் என்பது.

3. To be powerful in politics among those who are learned in ethics is the character of him who speaks to lance-bearing kings on matters of triumphs to his own sovereign.

ச. அறிவரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

பரி:—(இ - ள்.) இயற்கையாகிய வறிவும் கண்டார் விரும்புந்
¶தோற்றப்பொலிவும்பலரோடும்பலகாலு மா
ராயப்பட்டகல்வியுமென § நன்கு மதித்தற்கே துவாய இம்மூன்றனது கூட்டத்தை யுடையா ன் வேற்று வேந்தரிடைத் தூதுவினைக்குச் செல்க, (எ - று).

o இம்மூன்றும் ஒருவன்பாற் கூடுதலரிதாகலின் 'செறிவுடையான்' என்றார். † இவற்றான் நன்குமதிப்புடையனுகவே, வினை யினிது முடியுமென்பது கருத்து.

---

* தலைமைபற்றி 'வேலார்' என்று கூறப்பட்டது. இது (வேல்) மற்றப் படைகளுக்கும் உபலட்சணமாம்.

† தூது வினை யிரண்டும்- தூதுபோதலும்

தன்னரசனுக்கு ஆவனவற்
றைச் செய்தலுமென்னு மிரண்டும். தூது-சந்தி (பொருத்தல்) ஆம்;
விக்கிரகம் (பிரித்தல்) ஆம்.

வினை-

‡ அவர் முன் - நீதிநூலை யுணர்ந்த மந்திரிகளுக்கு முன்.
¶ தோற்றப்பொலிவு - வடிவத்தின் விளக்கம்

$ நன்குமதித்தற் கேதுவாய - மிகவும் கௌரவித்தற்குக் காரணமாய.
o இம்மூன்றும் - அறிவு, உருவு, ஆராய்ந்தகல்வி யென்னும் இந்த
மூன்றும். + இவற்றுள் - அறிவு முதலியவற்றுள்.

அங்கவியல்—சூ-வது தூது.

761

தெளி:—(இ - ள்.) அறிவு - (இயற்கையாகிய) அறிவும், உருவு-(கண் டார் விரும்பும்) தோற்றப் பொலிவும், ஆராய்ந்தகல்வி - (பலரோடும் பலகா லும்) ஆராயப்பட்ட கல்வியும், (என), இம்மூன்றன்-(நன்கு மதித்தற்கு ஏது வாகிய) இம்மூன்றனது, செறிவுடையான் - கூட்டத்தையுடையவன், வினைக்கு - (வேற்றரசரிடத்துத் தூதுரைக்குந்) தொழிலுக்கு, செல்க - செல்லக் கடவன், (எ - று).

இம்மூன்றும் ஒருவனிடத்துக் கூடுதல்
அரிதாகலால்'செறிவுடையான்'
என்றார். இவற்றுள் நன்கு மதிப்புடையவனாகவே, மேற்கொண்ட இனிது முடியுமென்பது கருத்து.
தொழில்

(க - து.) இயற்கையறிவும்தோற்றப்பொலிவும்ஆராய்ந்தகல்வியு முடையவன் தூதுசெலற்குரியவனாவன் என்பது.

4. He who has combined in him sense, an attractive bearing and well tried learning, may go on a mission to the courts of other rulers.

---

நி. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி நன்றி பயப்பதாந் தூது.

பரி:—(இ-ள்.) வேற்றாசரிக்குப் பலகாரியங்களைச் சொல்லும்வழிக் காரணவகையாற் றெளித்துச் சொல்லியும், இன்னாத காரியங்களைச் சொல்லும் வழி * வெய்யசொற்களை நீக்கி யினிய சொற்களான் மனமகிழச்சொல்லியும், தன்னாசனுக்கு நன்மையைப் பயப்பவனே தூதனாவான்.(எ - று).

பலகாரியங்கட் குடம்படாதார் † பரம்பரையான் ‡ அவற்றிற்குக் காரணமாய தொன்றைச்சொல்ல அதனால் ¶ அவை விளையுமா றுய்த்துணரா அருமையானுஞ் $ சுருக்கத்தானு முடம்படுவர்; இன்னதவற்றிற் குடம்படாதார் தம்மனமகிழச்சொல்ல அவ்வின்னமை காணுது உடம்படுவராதலின், + அவ்விருவாற்றானும் தன்காரியந் தவறுமல் முடிக்கவல்லா னென்பதாம். எண்ணும்மைகள் விகாரத்தாற் றொக்கன.

தெளிவு—(இ – ள்.) (வேற்றரசர்க்குப் பலகாரியங்களைச் சொல்லுமிடத்து) தொகச்சொல்லி - (காரணவகையால்) தொகுத்துச் சொல்லியும்,

* வெய்யசொற்களை - கேட்பதற்குப் பிரிய மாகாத சொற்களை.

† பரம்பரை-ஒன்றேயுபிறிதொன்று யாதாவதொன்றன் வாயிலாகத் தொடர்ந்திருப்பதாம்.

‡ அவற்றிற்கு - பலகாரியங்களுக்கு. ¶ அவை - பலகாரியங்கள்.

$ சுருக்கத்தானு முடம்படுவர்-சொல்வது சுருக்கமா யிருத்தலாலுஞ் சம்மதிப்பர்.

+ அவ்விருவாற்றானும் - தொகச்சொல்லுதலாலும் தூவாததீக்கி நகச் சொல்லுதலாலும்.

(இனிமையல்லாத காரியங்களைச் சொல்லுமிடத்து), தூவாதநீக்கி-வெய்ய சொற்களை நீக்கி, நகச்சொல்லி - (இனிமையாய சொற்களால் மன) மகிழச் சொல்லியும், நன்றி பயப்பது - (தன்னரசனுக்கு) நன்மையைச் செய்பவனே, தூதாம்-தூதனுவான், (எ-று).

பலகாரியங்களுக்கு உடம்படாதவர் பரம்பரையால் அப்பல காரியங்களை
யும் முடித்தற்குக் காரணமாய தொரு காரியத்தைச்சொல்ல, அதனால் அவை பயன்படும் விதத்தை ஆலோசித்தறிய அருமையாலும் சுருக்கத்தாலும் உடன்படுவர்; இனிமையில்லாத காரியங்களுக்கு உடம்படாதிவர் தமது மனமகிழ்ச்சொல்ல அவ்வினிமையில்லாமை தோன்றுமையால் உடம்படுவ
ாதலால், அவ்விருவழியாலும் தூதன் தன் காரியத்தைத் தவறுமல் முடிக்க
வல்லானென்பதாம். சொல்லி, சொல்லி யென்னும் இரண்டிடத்திலும் எண்ணுப்பொருளில்வந்த உம் என்னும் இடைச்சொற்கள் செய்யுள் வீகா
ரத்தால் தொக்குநின்றன.

(க - து.) வேற்றரசரிடத்துத் தான் சென்ற காரியத்தைத் தொகுத்து அவர் விரும்புமாறு சொல்லுபவனே தன்னரசனுக்கு நன்மை பயக்குந் தூதனுவான் என்பது.

5. He is an ambassador who in the presence of other rulers speaks concisely, avoids harsh words, talks so as to make them smile, and thereby brings good to his own sovereign.

சு.

கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது.

பரி:—(இ - ள்.) நீதிநூல்களைக் கற்றுத் தான்சென்ற கருமத்தைப் பகைவேந்தர் மனங்கொளச்சொல்லி, அவர் செயிர்த்து நோக்கின் அந் நோக்கிற் கஞ்சாது, காலத்தோடு பொருந்த * அது முடிக்கத்தக்க வுபாயமறிவானே தூதனுவான், (எ - று).

அவ்வுபாய மறிதற்பொருட்டு நீதிநூற்கல்வியும், † அதனுணன்றிப் பிறிதொன்றுன் முடியுங்காலம் வரின் அவ்வாறு முடிக்கவேண்டுதலிற் காலத்தாற் றக்கதறிதலும் இலக்கணமாயின:

தெளி:—(இ - ள்.) கற்று-(நீதிநூல்களைக்) கற்று, (தான்சென்ற கருமத்தை), செல - (பகைவேந்தர்) மனங்கொள, சொல்லி-கூறி, கண்ணஞ் சான்-(அப்பகைவேந்தர் கோபித்துப்பார்த்தால்) அப்பார்வைக்கு அஞ்சாது, காலத்தால்- காலத்தோடு, (பொருந்த), தக்கது-(அதுமுடிக்கத்) தக்க உபாயத்தை, அறிவது-அறிபவனே, தூதாம்-தூதனுவான், (எ-று).

---

* அது - தான்வந்த கருமத்தை.

† அதனுணன்றி - நீதிநூற் கல்வியாலல்லாமல்.

அவ்வுபாயத்தை யறிதற்பொருட்டு நீதிநூற் கல்வியும், அதனுலன்றிமற் றொன்றுல் முடியுங்காலம் வரின் அவ்வாறு முடிக்கவேண்டுதலால் காலத் தாற் றக்கதறிதலும் தூதனுக்கு இலக்கணமாயின.

(க-து.) நீதிநூலுணர்ந்து, பகையரசர் மனங்கொளத் தான் சென்ற கருமத்தைச் சொல்லி, அவர்கோபித்துப் பார்ப்பதற்கஞ் சாது, காலத்தோடு பொருந்த அது முடித்தற்கா முபாயத்தை யறிபவனே தூதனுவான் என்பது.

6. He is an ambassador who having studied politics, talks impressively, is not afraid of the angry looks of enemical rulers and knows to employ the art suited to the time.

எ. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை.

பரி:—(இ-ள்.) வேற்றரசரிடத்துத் தான் செய்யு முறைமையறிந்து, அவர் செவ்விபார்த்துச் சென்ற கருமஞ் சொல்லுதற்கேற்ற இட மறிந்து, சொல்லுமாற்றை முன்னே விசாரித்து, அவ்வாறு சொல்லுவான் தூதரின் மிக்கான், (எ-று).

செய்யுமுறைமையாவது * அவர் நிலையும், தன்னரசனிலையும், தன்னிலையும் † தூக்கி ‡ அவற்றிற்கேற்பக் ¶ காணுமுறைமையும்சொல்லுமுறைமையும் $ முதலாயின. செவ்வி-தன்சொல்லை யேற்றுக்கொள்ளும் மனநிகழ்ச்சி. ⁺ அது காலவயத்ததாகலிற் § 'காலம்' என்றார். இடம்-தனக்குத்துணையாஅ o ருடனையவிடம். எண்ணுதல்-தான் () அதுசொல்லுமாறும், அதற்கு அவர் சொல்லு முத்தாரமும், அதற்குப்பின் ருன் சொல்லுவனவுமாக இவ்வாற்ருன் மேன்மேற் ருனே கற்பித்தல். வடநூலார் †† இவ்விருவகையா

---

* அவர்-வேற்றரசர். † தூக்கி-நன்ருதலாராய்ந்து.

‡ அவற்றிற்கேற்ப-வேற்றரசர்நிலை, தன்னரசனிலை, தூதாகவந்த தன்னிலையென்பனவற்றிற்குப் பொருந்த.

¶ காணுமுறைமையும்-வேற்றரசரைப் பார்க்குங் கிரமமும்.

$ முதலாயின என்றமையின், வேற்றரசரது குணம், இங்கிதம், ஆகாரம், செயல் என்பனவற்றை யறிதலுங் கொள்க. † அது-செவ்வி (சமயம்).

§ ஒருகாலத்திலுண்டாகும் (தன்சொல்லை யேற்றுக்கொள்ளும்) மனநிகழ்ச்சி (மனத்தின்தன்மை) யைக் காலமென்றது (கார் அறுத்தது என்பதுபோலக்) காலவாகு பெயராம்.

o உடனை-கூட விருக்கின்ற. () அது-தான்வந்த கருமத்தை.

†† இவ்விருவகையாருடன்-தான் வகுத்துக் கூறுவான் கூறியது கூறு* வான் என்னு மிருவரோடு.

ருடன் ஓலைகொடுத்து நிற்பாரையுங்கூட்டித் துதரைத் * தலை, இடை, கடை யென்று வகுத்துக் கூறினாராகலின், அவர் மதமுந் தோன்றத் 'தலை' என்றார். தூதென்பது † அதிகாரத்தான் வந்தது. இவை ஐந்துபாட்டானும்தான்வகுத் துக்கூறுவான திலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) கடன்-(வேற்றரசரிடத்துத் தான்செய்யும்) முறைமை யை, அறிந்து - தெரிந்து, காலங்கருதி - (அவ்வேற்றரசரது) சமயம்பார்த்து, இடனறிந்து - (சென்றசருமஞ் சொல்லுதற்கு ஏற்ற) இடத்தைத் தெரிந்து, எண்ணி - (சொல்லும்வழியை முன்னே) விசாரித்து, உரைப்பான் - (அவ் விதம்) சொல்லுவான், தலை-(தூதருள்) மிக்கானாவன், (எ-று).

செய்யும்முறைமையாவது அவர் நிலையும், தன்னரசனிலையும், தன்னிலை யும் சீர்தூக்கி அவற்றிற்குப்பொருந்தக்காணும் முறைமையும்சொல்லுமுறை மையும் முதலாயின. சமயம்-தன்சொல்லை யேற்றுக்கொள்ளும் மனநிகழ்ச்சி. அது காலத்தின் வசத்ததாகலால் 'காலம்' என்றார். இடம் - தனக்குத்துணை யாவார் உடனாகியவிடம். எண்ணுதல் - தான் அது சொல்லும் விதமும், அ தற்கு அவர்சொல்லும் உத்தரமும், அதற்குப்பின் தான்சொல்லுவனவு மாக இவ்வழியால் மேலுமேலும் தானேயெண்ணுதல். வடநூலார் இவ்விருவகை யாருடன் ஓலைகொடுத்து நிற்பாரையுங் கூட்டித்தூதரைத் தலை, இடை, கடை என்றுவகுத்துச் சொல்லினாராதலால், அவர்மதமுந்தோன்றத் 'தலை' என்றார். தூதென்பது அதிகாரத்தால் வந்தது. இவை ஐந்து பாட்டாலும் தான்வகுத்துக் கூறுவானது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து.) வேற்றரசரிடத்துத் தான்செய்யும் முறைமை, காலம், இடமென்னு மிவற்றை யறிந்தாலோசித்துச் சொல் பவனே தூதருள் தலைமை யுடையவனாவான எனபது.

7. He is the chief among ambassadors who understands the proper decorum before other princes, seeks the proper occasion, knows the most suitable place and delivers his message after due consideration.

---

* "தானறிந்து கூறுந் தலைமற் றிடையது, தேர்னறைந்த நீதென்று கூறுமாற்-றூனறியா, தோலையே காட்டுங் கடையென் றிருருமூன்று, மேலை யோர் தூதுரைத்த வாறு" என்று பாரதவெண்பா கூறுகின்றது. இங்குத் தூது போதற்கு உரியவர் வேதியரும், வேந்தரும், அரசனற் சிறப்புப்பெற்ற வணிகரும் சூத்திரருமாவரென்று அறியத்தக்கது. பாரதத்திலுள்ள உலூகன் தூது, சஞ்சயன் தூது, கிருஷ்ணன் தூதுகளால் வேதியர் வேந்தர்களின் தூதின் விஷயம் நன்குவெளியாம். இவ்வாறன்றித் தேவர் முதலியோரும் தூது சென்றதுண்டு. அது சூரபதமனிடத்து வீரவாகுதேவரும், இராவணனிடத்து அனுமாரும் அங்கதனும் தூதுசென்றிருத்தலாலறிதற் பாற்றும்.

† அதிகாரத்தான்- தூது என்னும் அதிகாரத்தினால்.

அங்கவியல்—சூ-வது தூது.

765

அ. தூய்மை துணைமை துணிவுடைமை
யிம்மூன்றின் வாய்மை வழியுரைப்பான்
பண்பு.

பரி:—(இ ள்.) தன்னரசன் வார்த்தையை அவன்சொல்லியவாறே வேற்றரசருக்குச் சென்று சொல்லுவான திலக்கணமாவன * பொருள் காமங்களாற் றூயனுதலும் தனக்கு அவரமைச்சர் துணையாந்தன்மையுந் துணிதலுடைமையும் இம்மூன்றேடு கூடிய மெய்ம்மையுமென வினை.

பொருள் காமங்கள்பற்றி வேறுபடக் கூறுமைப்பொருட்டுத் தூய்மை யும், தன்னரசனுக்கு உயர்ச்சி கூறியவழி எம்மேலோர்க் † கஃதியல் பெனக் கூறி ‡ அவர் வெகுளி கீக்குதற்பொருட்டுத் ¶ துணைமையும், இது சொல்லின் இவரேதஞ் செய்வரென்றழியாமைப்பொருட்டுத்துணிவுடைமையும், யாவரானுந் தேறப்படுதற்பொருட்டு மெய்ம்மையும் வேண்டப்பட்டன. இன் ஒடுவின் பொருட்கண் வந்தது.

தெளி:—(இ-ள்.) வழி-(தன்னரசன் வார்த்தையை அவன்சொல்லிய) படியே, உரைப்பான்-(வேற்றரசருக்குச்சென்று) சொல்லுவானது, பண்பு - இலக்கணமாவன, தூய்மை-(பொருளாலும் காமத்தாலும்) பரிசுத்தனுதலும், துணைமை-(தனக்கு அவ்வேற்றரசரது மந்திரிகள்) துணையாந்தன்மையும், துணிவுடைமை - துணிதலையுடைமையும், இம்மூன்றின் - இம்மூன்றேடு, (கூடிய), வாய்மை-மெய்ம்மையும், (என்றிவைகளாம்), (எ-று).

பொருள் பற்றியும் காமம் பற்றியும்
வேறுபடச்சொல்லாமைப் பொருட் டுத் தூய்மையும்,
தன்னாசனுக்கு உயர்ச்சி சொல்லிய விடத்து எம்போல்
வார்க்கு அவ்வாறு சொல்லுதல் இயல்பென்றுசொல்லி
அவரது கோபத்தை

நீக்குதற்பொருட்டுத் துணைமையும், இதுசொன்னல் இவர் தன்பஞ்செய்வா
ரென்று ஒழியாமைப்பொருட்டுத் துணிவுடைமையும், யாவராலும் நம்பப்படு
தற்பொருட்டு மெய்ம்மையும் வேண்டப்பட்டன. மூன்றின்
என்னும்ஐந்தனு

ருபு தனக்குரியபொருளைவிட்டு மூன்றோடு என மூன்றும் வேற்றுமையின்
உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது. இவ்வாறு வருவது வேற்றுமை மயக்க
மெனப்படும். மூன்றின்-மூன்றனோடு. இன்-ஐந்தனுருபு;
ஓடு-மூன்றனுருபு.

(க - து.) தூதனுக் கிலக்கணமாவது அவன்
தூய்மையும் துணைமையும், துணிவும், வாய்மையும்
உடைத்தா யிருத்தலாம்.

---

* பொருள் காமங்களால் தூயனுதலாவது-பொருளிலும்
சிற்றின்பத் திலும் பற்றில்லாதவனு யிருத்தல். "உறுபொருள்
காமம் விருப்புறுத் தூய் மை" என்று விநாயக புராணங்
கூறுகின்றது.

† அஃதியல்பெனக்கூறி - உயர்ச்சி கூறுதல்
சுபாவமெனச் சொல்லி.

‡ அவர் - வேற்றாசர்.

¶ தூணைமையும்-வேற்றாசரது மந்திரிகள் தனக்குத் தூணையாயிருத்தலும். அனுமானுக்கு விபீஷணனும், கண்ணனுக்கு விதுரரும் தூணையாயிருந்தமை யிங்குக் கூனிக்கத்தக்கது.



8. The qualifications of the ambassador who faithfully delivers his sovereign's message, are purity, the support of foreign ministers and boldness, coupled with truthfulness in addition to the aforesaid three.

கூ. *விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமோற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

பரி:—(இ-ள்.) தன்னாசன் சொல்லிவிட்ட வார்த்தையை வேற்றாசர்க்குச் சென்று சொல்லவுரியான் தனக்கு வருமேதத்திற்கஞ்சி † அவனுக்குத் தாழ்வான வார்த்தையை வாய்சோர்ந்துஞ் சொல்லாத ‡ திண்மையை யுடையான், (எ-று).

¶ தாழ்வு சாதி தருமமன்மையின், o 'வடு' என்றார். (.) 'வாய்சோரா' எனக்காரியங் காரணத்து ளடக்கப்பட்டது.

தெளி:—(இ-ள். ) விடுமாற்றம்-(தன்னரசன்சொல்லி) விட்டவார்த்தை யை, வேந்தர்க்கு வேற்றரசர்க்கு, (சென்று), உரைப்பான் - சொல்லுதற்கு உரியவன், (தனக்குவரும் துன்பத்திற்கு அஞ்சி), வடுமாற்றம்-(அவனுக்குத்) தாழ்வானவார்த்தையை, வாய்சோரா-வாய்சோர்ந்துஞ்சொல்லாத, வன்கணவன்- திண்மையை யுடையான், (எ-று).

தாழ்வு சாதி தருமமல்லாமையால், அத்தாழ்வை 'வடு' என்றார். தாழ் வான வார்த்தையைச் சொல்லாமையாகிய காரியத்தை அதன் காரணமாகிய வாய்சோராமையிலடக்கி 'வாய்சோரா' என்று கூறப்பட்டது.

---

* "தடுமாற்ற மின்றித் தகைசான்ற சொல்லான், வடுமாற்றம் வாய்சோரா ராகி-விடுமாற்றம், எஞ்சாது கூறி யிகல்வேந்தன் சீறுங்கால், அஞ்சா தமைவது தூது" என்பது பாரதவெண்பா.

† அவனுக்கு-தன்னரசனுக்கு. ‡ திண்மை - மனவுறுதி.

¶ தாழ்வு சாதிதருமமன்மையின்-பகைவர்க்குத்தாழ்வான வார்த்தைசொல்லுதல் அரசர்சாதி தருமமல்லாமையினால். கிருஷ்ணன் முதலாயினோர் தூதுசென்ற விடத்துத் தம்மரசர்க்குத் தாழ்வானவார்த்தை சொல்லா தொழுகியவாறுங் கறிதற் பாலதாம்.

o ஆயுத முதலியவற்றால் உடம்பிலுண்டாயகுறி வடு எனப்படும். அரசர் தாழுதற்குரியராகா (அஃதாவது அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் முதலியோராகா) நிடத்துத் தாழ்வானவார்த்தையைச் சொல்லுதல் அவர்க்கு வடுப் போன்று மாறாது பழியையுண்டாக்குதல்பற்றித் தாழ்வானவார்த்தையை 'வடுமொற்றம்' என்று கூறினர்.

() தாழ்வான வார்த்தையைச் சொல்லுவதற்குக் காரணம் வாய்சோருதலாம்; தாழ்வானவார்த்தையைச் சொல்லாமைக்குக் காரணம் வாய்சோராமையுரிம். வாய்சோருதல்-அச்சத்தால் வாய்குளறுதல்.

## அங்கவியல்—சூ-வது தூது.

**767**

(க - து.) தன்னரசன் சொல்லிவிட்ட வார்த்தையை அவனுக்குத் தாழ்வுவாராவாறு வேற்றரசர்க்குத் தனக்குவருந் துன்பத்திற்கஞ்சிச் சோர்வடையாது சொல்பவனே தூதருள் திண்மையுடையவனுவான எனபது.

9. He alone is fit to communicate his sovereign's reply to other kings who possesses the firmness not to utter even inadvertently what may reflect discredit on the latter.

கo. இறுதி பயப்பினு மெஞ்சா தியைவற்
குறுதி பயப்பதாந் தூது.

பரி:—(இ - ள்.) * அவ்வார்த்தை தன்னுயிர்க்கிறுதி தருமாயினும் † அதற்கஞ்சி யொழியாது தன்னரசன் சொல்லியவாறே ‡ அவனுக்கு மிகுதியை வேற்றரசரிடைச் சொல்லுவானே தூதனுவான், (எ-று).

'இறுதிபயப்பினும்' என்றதனால், ¶ ஏனையபயத்தல் சொல்லவேண்டா வாயிற்று. இவை மூன்றுபாட்டானுங் கூறியது கூறுவானதிலக்கணங்கூறப் பட்டது.

தெளி:—(இ-ள்.) இறுதிபயப்பினும் - (அவ்வார்த்தை தன்னுயிர்க்கு) முடிவைத் தருமாயினும், எஞ்சாது-(அதற்கு) அஞ்சியொழியாது, (தன்னரசன் சொல்லிய படியே), இறைவற்கு- அவ்வரசனுக்கு, உறுதி - மிகுதியை, பயப்பது - (வேற்றரசரிடத்துச்) சொல்லுவானே, தூதன்ம்-தூதனுவான், (எ-று).

'இறுதிபயப்பினும்' எனறு கூறினமையால், மற்றைத்தன்பங்களைச் செய்தல் சொல்லவேண்டுவதில்லையாயிற்று. இவை மூன்றுபாட்டாலும் கூறியது கூறுவானது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க-து.) தனக்கு முடிவைத் தருவதாயினும் வேற்றரசரிடத்துத் தன்னரசன் சொல்லிய சொல்லைச் சொல்லியவாறு அஞ்சாது சொல்பவனே தூதனுவான் என்பது.

10. He is an ambassador who fearlessly seeks his sovereign's good though it should cost him his life to deliver his message.

* அவ்வார்த்தை-தன்னரசன் சொல்லிவிட்டவார்த்தை.

† அதற்கு-தன்னுயிர்க்கு முடிவைத்தருதற்கு.

‡ அவனுக்கு மிகுதியை-தன்னரசனுக்கு மேம்மையை.

¶ ஏனைய பயத்தல் என்றமையின், காவலில்வைத்தல், கையிற் கிட்டி போட்டடித்தல், கைகால்களைக் குறைத்தல், கண்ணேப்பிடுங்கல் முதலியவற்றையுங் கொள்க. வீரவாகுதேவரைச் சூரபதுமன் கொல்லுமாறு உத்தரவு செய்ததும், அனுமானே இராவணன் வாலிற்றுணி சுற்றிக்கொளுத்திவிட்டதும், கண்ணனைத் துரியோதனன் பிடிகுழியிற் கொல்லுமாறு முயற்சித்ததும் இங்கறியத்தக்கனவாம்.



## ஏழாம் அதிகாரம்.

## மன்னரைச் சேர்ந்தொழுகல்:—

## Service under the Sovereign.

பரி:—அஃதாவது அமைச்சர் அரசரைப் பொருந்தி யொழுகுமாறு. * இது 'வேந்தவாம் பண்புடைமை'என † மேலே ‡ வேண்டப்பட்டமையின், தூதின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது மந்திரிகள் அரசரைப் பொருந்தி நடக்கும் விதமாம். இது 'வேந்தவாம் பண்புடைமை' என்றமுன்னே வேண்டப்பட்டமையால், தூதின்பின் வைக்கப்பட்டது.

க. ¶ அகலா தணுகாது தீக்காய்வார் போல்க

# விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

பரி:—(இ-ள்.) ○மாறு படுதலையுடைய அரசரைச் சேர்ந்தொழுகும் அமைச்சர் அவரை மிக நீங்குவதும் மிகச்செறிவதுஞ் செய்யாது, தீக்காய்வார்போல இடைநிலத்திலே நிற்க. (எ-று).

() கடிதின் வெகுளுந் தன்மையரென்பது தோன்ற 'இகல் வேந்தர்' என்றார். மிகவகலிற் பயன் கொடாது மிகவணுகின் †† அவமதிபற்றித் தெறும் வேந்தர்க்கு, மிகவகலிற் குளிர் நீக்காது மிகவணுகிற் சுடுவதாய

‡‡ தீயோடொத்தாய தொழிலுவமம் பெறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) இகல்-மாறுபடுதலையுடைய, வேந்தர்-அரசரை. சேர்

ந்து-அடுத்து, ஒழுகுவார்-நடக்கும் மந்திரிகள், (அவ்வரசரை), அகலாது-மிக நீங்குவதும், அணுகாது-மிக நெருங்குவதும், (செய்யாது), தீக்காய்வார்போல்க-நெருப்பிற் குளிர்காய்வார்போல நடுவானவிடத்திலே நிற்கக் கடவர், ().

---

* இது - மன்னரைச் சேர்ந்தொழுகல்.

† மேலே - தூததிகாரத்தின் முதற் குறளிலே.

‡ வேண்டப்பட்டமையின்-விரும்பப்பட்டமையின்.

¶ "அக்கினி பராமுகமாய்த் தனதருகே வந்தவனை மாத்திரந் தகிக்

கும்; அரசனுடைய அக்கினி கோபித்துக்கொண்டால் தனதானியம் புத்திர மித்திர களத்திராதிகளோடும் அழித்துப்போடும்" என்று மனுதரும சாஸ்திரம் ஏழாவதத்தியாயத்தில் கூறுவதும், "தீண்டி னுர்தமைத் தீச்சுடு மன்னர்தீ, ஈண்டு தங்கிளையோடு மெரித்திடும்" என்று சீவகசிந்தாமணி கூறுவ

தும் இங்கறியத் தக்கனவாம்.

○மாறுபடுதல்-விரோதப்படுதல்.

() கடிதின்வெகுளுந் தன்மையர் - முன்

கோபக்காரர். †† அவமதிபற்

றி-தம்மை மதியாமையைக் குறித்து

‡‡ இகல்வேந்தர் தொழிலுக்கு (மிகநீங்கிஞல் குளிரைப் போக்காதும் மிக நெருங்கிஞல் சுடுவதுமாய) நெருப்பினது தொழிலை உவமானமாகக் கூறினமையின், இக்குறள் தொழிலுவமையணியாம்.

## அங்கவியல்—எ-வது மன்னரைச்சேர்ந் தொழுகல்.

# 769

அரசர் விரைவில் கோபிக்குந் தன்மையர் என்பது தோன்ற'இகல்வேந் தர்'என்றார். மிகநீங்கிஞல் பயனைக்கொடாது மிகநெருங்கிஞல் மதியாமை பற்றி வருத்தும் வேந்தர்க்கு மிக நீங்கிஞல் குளிரை நீக்காது மிக நெருங்கி ஞல் சுடுவதாய நெருப்போடொதாய தொழிலுவமானம் பெறப்பட்டது.

(க - து.) மாறுபடுதலை யுடைய அரசரைச் சேர்ந்தொழுகும் மந்திரிகள் அவரை மிக நீங்குவதும் மிக நெருங்குவதுஞ் செய்யா திருக்கக் கடவர் என்பது.

1. Ministers who serve under fickle-minded monarchs should behave like those

who warm themselves by being neither too far, nor too near the fire.

உ. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும்.

**பரி:—(இ-ள்.)தம்மாற் சேரப்பட்ட மன்னர்
விரும்புவனவற்றைத் தாம் விரும்பாதொழிதல்,
அமைச்சரிக்கத அவராலே நிலைபெற்ற செல்
வத்தைக் கொடுக்கும், (எ-று).**

*ஈண்டு 'விழைப' என்றது * அவர்க்குச்
சிறப்பாகவுரியவற்றை. அவை: † நுகரப்படுவன, ஒப்பன, ‡
மேன்மையென்றிவை ¶ முதலாயின. 0 இவற்றை ‖
ஒப்பிற்கஞ்சித் தாம் விழையாதொழியவே, அவ்வச்சநோக்கி
யுவந்து § அவர்தாமே எல்லாச்செல்வமும் நல்குவரென்பது
கருத்து. எனவே*

*அவற்றை விரும்பிற் () கேடுசருமென்பதாம்.*

*தெளி:—(இ-ள்). மன்னர்-(தம்மால் சேரப்பட்ட) அரசர், விழைப-
விரும்புவனவற்றை, விழையாமை-(தாம்)
விரும்பாதொழிதல், (மந்திரி*

---

* அவர்க்கு-தாஞ்சேர்ந்த அரசர்க்கு.

† நுகரப்படுவன-செவிமுதலிய ஐம்பொறிகளாலும்
அனுபவிக்கப்படும் (விரோதமின்றிய) சப்தாதி விஷயங்கள்.

"அறியப்படுந் தன்மையிற் போக சாதனமாயுள்ளது விஷயம்." என்று தருக்கசெளமுதி கூறுகின்றது.

‡ மேன்மை-யாவர்க்கும் மேலாக விருக்குந் தன்மை.

¶ முதலாயின என்றமையின், வெண்கொற்றக்குடை, வீரக்கழல், முடி, செங்கோல் முதலியவற்றையுங் கொள்க

. 0 இவற்றை-அரசர்க்குச்சிறப்பாகவுரிய நகரப்படுவனமுதலியவற்றை.

‖ ஒப்பிற்கஞ்சி-அரசர்க்குள்ள ஆறங்கங்களுள் அவ்வரசர்க்குச் சமமாக விருத்தற்குப்பயந்து. ஓங்கமாயுள்ள தாம்

§ அவர்தாமே- அவ்வரசரே.

() "அறத்தொடு கல்யாண மாள்வினை கூரை, யிறப்பப் பெருகியக்

கண்ணுந் திறப்பட்டார், மன்னரின் மேம்பட்ட செய்யற்க செய்பவேன், மன்னிய செல்வங் கிழிம்". என்பது ஆசாரக் கோவை.





களுக்கு), மன்னரால்-அவ்வரசராலே, மன்னிய-நிலைபெற்ற, ஆக்கம்-செல் வத்தை, தரும்-கொடுக்கும், (எ-று).

இங்கு 'விழைப'என்றது அவ்வரசர்க்குச் சிறப்பாக உரியவற்றை. அவை: நுகரப்படுவன, அலங்கரித்துக் கொள்ளுதல், மேன்மையென்ற இவை முதலாயினவாம். இவற்றைச் சமமாய்த் தோன்றுவதற்கு அஞ்சித்தாம் விரும்பாதொழியவே, அவ்வச்சநோக்கி மகிழ்ந்து அவர்தாமே எல்லாச் செல்வமும் அம்மந்திரிகளுக்குத் தருவரென்பது கருத்து. எனவே, நுகரப்படுவன முதலியவற்றை விரும்பினால் அது மந்திரிகளுக்குக் கேடுதரும் என்பதாம்.

(க-து.) தம்மரசர் விரும்புவனவற்றை விரும்பாத மந்திரிகளுக்கு எல்லாச் செல்வமும் அவ்வரசராலுண்டாம் என்பது.

2. For ministers not to long for the things desired by their kings will through the kings themselves yield them ever-lasting wealth.

ஈ. போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
நேற்றுதல் யார்க்கு மரிது.

பரி:—(இ - ள்.) அமைச்சர் தம்மைக்காக்கக் கருதின் அரியபிழைகள் தங்கண் வாராமற் காக்க, * அவற்றை வந்தனவாகக் கேட்டு அவ்வாசர் ஐயுற்றால் அவரைப் பின்னெளிவித்தல் யாவர்க்கு மரிதாகலான்.

அரியபிழைகளாவன: அவராற் பொறுத்தற்கரிய † அறைபோதல், ‡ உரிமையொடு மருவல், அரும்பொருள் வௌவல் என்றிவை முதலாயின. அவற்றைக் காத்தலாவது ◊ ஒருவன் சொல்லியக்கால் தகுமோவென் றையு

* அவற்றை - அரியபிழைகளை.

† அறைபோதல் - கீழறுத்துச் செல்லுதல். அஃதாவது எலி புலப்ப டாவாறு கீழ றுத்துச்சென்று தானிருக்த மிடத்தைக் கெடுத்தல்போ ல, அமைச்சன் புலப்படாவகை யெழுகித் தன்னரசன் கெடுதற்குரிய காரியங்களைப் பகை மன்னருடன் கூடிச்செய்தல்.

† அரசர்க்கு உரிமையாய (சொந்தமான) மகளிரைப் பண்பாகுபெய ரால் உரிமையென்று கூறினர். "அறம்பொரு ளின்பம்" என்னுங் குற ளின் விசேடவுரையில் யோடு பயின்றுளொரு "இன்பவுபதையாவது தொன்றுதொட்டு உரிமை தவழுதுமகளை விட்டு அவளால் உரிமையுள் இன் னுள் நின்னைக்கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்கவேண்டுமென்று என்னை விடுத்தாள்; அவளைக்கூடினையாயின் நினக்குப் பேரின்பமேயன்றிப் பெரும் பொருளுங் கைகூடுமெனச் சூளுறவோடு சொல்லுவித்தல்" என்று கூறி யிருத்தலால் இது நன்குவிளங்கும்.

0 ஒருவன் அரசரிடத்துச் சென்று இவ்வமைச்சன் அரியபிழைகளைச் செய்கின்றான் என்று சொல்லியவிடத்து, இப்பிழைகளை அவ்வமைச்சன்

ருது தகாதென்றே * அவர் துணிய வொழுகல். † ஒருவாற்றாற் றெளிவித் தாலும் கடன் கொண்டான் றேன்றப் பொருடோன்று மாறுபோலக் கண் டுழியெல்லாம் அவை நினைக்கப்படுதலின் 'யார்க்குமரிது' என்றார். இவை மூன்றுபாட்டானும் ‡ அது பொதுவகையாற் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (மந்திரிகள்) போற்றின் - (தம்மைக்) காத்துக் கொள்ள வெண்ணினால், அரியவை - அரியபிழைகள், போற்றல் - (தம்மிட த்துவாராமற்) காக்கக்கடவர், கடுத்தபின் - (அப்பிழைகளை வந்தனவாகக் கேட்டு அவ்வரசர்) சந்தேகித்தால், தேற்றுதல் - (அவரைப்பின்) தெளிவித் தல், யார்க்கும் - எத்தகையார்க்கும், அரிது - கூடாது, (ஆகலால்), (எ - று).

அரியபிழைகளாவன: அவ்வரசால் பொறுத்தற்கரிய கீழறுத்தல், (அவ் வரசருக்கு)உரிமையாயுள்ள மகளிருடன் புணருதல்,கிடைத்தற்கரிய பொருள்களை யபகரித்தல் என்ற இவை முதலாயின. அவ்வரியபிழைகளைக் காத்த லாவது ஒருவன் சொல்லிய விடத்துத் தகுமோவென்று சந்தேகமடையாது தகாதென்றே அவர் நம்புமாறு நடத்தல். (மந்திரிகள் பின்) ஒருவழியால் நம் புவித்தாலும் கடன் வாங்கினவன் தோன்றக் கடன்கொடுத்த பொருள்(நினைவில்)தோன்றுவிதம்போலத் தம்மைக்கண்ட விடத்தெல்லாம் அவ்வரியபிழை கள் நினைக்கப்படுதலால் 'யார்க்கு மரிது' என்றார். இவை மூன்றுபாட்டாலும் அது பொதுவகையாற்

சொல்லப்பட்டது.

(க - து.) அரசர் சந்தேகித்தபின் அவரைத் தெளிவிப்பது அரிதாகலின், மந்திரிகள் தம்மிடத்துக் குற்ற முண்டாகாவாறு தம்மைக் காத்துக்கொள்ளக் கடவர் என்பது.

3. Ministers who wish to save themselves (from trouble) should avoid the commission of serious errors; for if the king's suspicion be once roused, no one can remove it.

ச. செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக லான்ற பெரியா ரகத்து.

பரி:—(இ - ள்.) அமைந்தவாச ரருகிருந்தால் அவர்காண ஒருவன் செவிக்குட் சொல்லுதலையும் ஒருவன் முகநோக்கி நகுதலையுந் தவிர்ந் தொழுதுக, (எ - று).

செய்தல் தகுதி யுடையதாமோ வென்று சந்தேகமுறுது அவனை நோக்கி நீ கூறியது தகுதியுடைய தன்றென்று, அவ்வரசர் சொல்லுமாறு மந்திரி நடந்து கொள்ளுதலாம்.

* அவர் - அரசர்.

† ஒருவாற்றுற் றெளிவித்தாலும்-(மந்திரிகள் தாம் அரிய பிழைகளைச் செய்யவில்லை யென்று அரசரைப் பின்) ஒருவகையால் தெளியச் செய்தாலும்.

‡ அது - மன்னரைச் சேர்ந்தொழுகல்.

சேர்தல் - பிறனேடு சேர்தல். * செய்தொழுகின், தங்குற்றங் கண்டு
செய்தனவாகக் கொள்வரென்பது கருத்து.

தெளி:—(இ - ள்.) ஆன்ற - அமைந்த, பெரியாரகத்து - அரசர் சமீபத்து, (இருந்தால் அவர்காண), செவிச்சொல்லும்- (ஒருவன்) காதில்சொல்லுதலையும், சேர்ந்த நகையும் - (ஒருவன்முக) நோக்கி நகைத்தலையும், அவித்து - நீக்கி, ஒழுக - நடக்கக்கடவர், (எ - று).

சேர்தல் - பிறனேடு கூடுதல். செய்து நடந்தால், அரசர் தமதுகுற்றத்தைக் கண்டு (அவை) செய்தனவாகக் கொள்வரென்பது கருத்து.

(க - து.) அரசர் தமதருகே யுள்ளபோது அவர்காண மந்திரிகள் ஒருவன் காதில் சொல்லுதலையும் ஒருவன் முகநோக்கி நகைத்தலையும் ஒழிக்கக்கடவர் என்பது.

4. While in the presence of the sovereign, ministers
should neither whisper to nor smile at others.

நி. † எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளா
விட்டக்காற் கேட்க மறை.

பரி:—(இ-ள்.) அரசனுக்குப் பிறரோடு

மறைநிகழ்வுழி யாதொரு
பொருளையுஞ் செவிகொடுத்துக் கேளாது ‡ அவனை
முடுகி வினவுவ துஞ் செய்யாது அம்மறைப்பொருளை 0
அவன்றனே யடக்கா து சொல் லியக்காற் கேட்க, (எ-று).

¶ ஓர்தற்கேற்கும் பொருளாயினு மென்பார்
'எப்பொருளும்' என்றார். () மற்று வினைமாற்றின்கண் வந்தது.

தெளி:—(இ - ள்.) மறை-(அரசனுக்குப்
பிறரோடு) இரகசியம், (நிகழு மிடத்து),
எப்பொருளும்-யாதொருபொருளையும்,
ஓரார்-(செவிகொடுத்துக்)
கேளாது, தொடரார்-(அவனை) முடுகிவினவுவதுஞ்செய்யாது,
அப்பொருளை-

---

* செய்தொழுகின் - அமைச்சர் இரகசியமாக ஒருவன் காதிலொன்றைச் சொல்லுதலையும் மற்றொருவன் முகத்தைப் பார்த்துச் சிரித்தலையும் செய்து நடந்தால். இங்கு ஆசாரக்கோவை "பிறரொடு மந்திரங் கொள்ளா
ரிறைவனைச், சாரார் செவியோரார் சாரிற் பிரிதொன்று, தேர்வார்போ னிற்க
திரிந்து" என்று கூறுவது மறியத்தக்கதாம்.

† ஆசாரக்கோவை "நின்றக்கால்" என்னுஞ்செய்யுளில் "பெருந்தக்கார், சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டிடுக மீட்டும், வினவற்க சொல்லொழிந்
தக் கால்" என்று கூறுகின்றது.

‡ அவனை முடுகிவினவுவதும்-அவ்வரசனை விரைந்து
கேட்பதும்.

0 அவன்றனே - அவ்வரசனே.

¶

ஓர்தற்கேற்கும்-தாம்கேட்டறிந்து ஆலோசிப்பதற்குத்தக்க.

() மற்று என்பது தொடராதொன்னும் எதிர்மறை வினையைத் தொடருவார் என்னும் உடம்பாட்டு வினையாக மாற்றினமையின், வினைமாற்றின்கண் வந்ததாயிற்று. தொடருவார் என்பதை 'விட்டக்காற்கேட்க' என்பதனுலறிக.

அங்கவியல்—எ-வது மன்னரைச் சேர்ந்தொழுகல்.

**773**

அவ்விரகசியப்பொருளை, விட்டக்கால் - (அவன்தானே) அடக்காது சொல்லுல், கேட்க-(மந்திரிகள்) கேட்கக்கடவர், (எ - று).

ஆராய்தற்குத்தக்க பொருளாயிருந்தாலுமென்பார் 'எப்பொருளும்' என்றார். மற்று வினைமாற்றுப்பொருளில் வந்தது.

(க - து.) அரசன் பிறரோடு இரகசியம் பேசும்போது மந்திரிகள் அதனைக் கவனியாதிருந்து, அவனே சொல்லிற் கேட்கக்கடவர் என்றது.

5. When the king is engaged in secret counsel with others, ministers should neither over-hear anything whatsoever nor pry into it with inquisitive questions, but wait to listen when it is divulged by the king himself.



கூ. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுபே வேட்பச் சொலல்.

பரி:—(இ - ள்.) அரசனுக்குக் காரியஞ்

சொல்லுங்கால் அப்போ

ழது நிகழ்கின்ற † அவன் குறிப்பினையறிந்து ‡ சொல்லுதற் கேற்ற காலத்தையும் நோக்கி வேறுப்பிலவுமாய் வேண்டுவனவுமாய காரியங் களை அவன் மனம் விரும்பும்வகை சொல்லுக, (எ-று).

குறிப்புக் காரியத்தின்கணன்றிக் காமவெகுளி †† யுள்ளிட்டவற்றி

னிகழ்வுழியும், ¶ அதற் கேலாக்காலத்துஞ் சொல்லுதல் பயனின்மை கலிற்

'குறிப்பறிந்து காலங்கருதி' என்றும், அவனுடம்படாதன முடிவுபோகாமை

யின் 'வெறுப்பில' என்றும், பயனில்லவும் பயன் சுருங்கியவும் செய்தல் வேண்டாமையின் 'வேண்டே'என்றும், * அவற்றை இனியவாய்ச் ‖ சுருங்கி

விளங்கியபொருளவாய சொற்களாற்

சொல்லுகவென்பார்'வேட்பச்சொலல்' என்றுங் கூறினர்.

தெளி:—(இ - ள்.) (அரசனுக்குக் காரியஞ்சொல்லும்போது) பறிந்து-(அப்பொழுது நிகழ்கின்ற அவனது) குறிப்பினை யறிந்து, குறிப்

காலங்

கருதி - (சொல்லுதற்கேற்ற) காலத்தையும் நோக்கி, வெறுப்பில-வெறுப்

---

† அவன்-அவ்வரசன்.

‡ சொல்லுதற்கேற்ற- காரியத்தைச்

சொல்லுவதற்குத்தக்க.

+ உள்ளிட்டவற்றில் - உட்கொண்டுள்ளனவற்றுள்.

¶ அதற்கேலாக்காலத்தும் - காரியஞ்செய்தற்குத் தகுதியில்லாத காலத்திலும்.

* அவற்றை-வெறுப்பில்லாதனவும் விரும்புவனவு மாய காரியங்களை.

‖ "விரைந்துரையார் மேன்மே லுரையார்பொய் யாய, பரந்துரையார் பாரித் துரையார்-ஒருங்கெனைத்தும், சில்லெழுத்தி னுலே பொருளடங்கக் காலத்தாற், சொல்லுக செவ்வி யறிந்து" என்று ஆசாரக்கோவை கூறுவது மிங்கறியத்தக்கதாம்.



பில்லாதனவும், (ஆய்), வேண்டுப-வேண்டுவனவும், (ஆயகாரியங்களை), வேட்ப-(அவன்மனம்) விரும்புமாறு, சொலல்-சொல்லக்கடவர், (எ-று).

அரசனது மனக்குறிப்புக் காரியத்திலன்றிக் காமம்வெகுளி யுள்ளிட்டவற்றில் நிகழுமிடத்தும், அதற்கு ஏற்காதகாலத்தும் சொல்லுதல் பயன்படுவதின்றுகலின் 'குறிப்பறிந்து காலங்கருதி' என்றும், அவனுடம்படாத காரியங்கள் முடிவுபெறுமையால் 'வெறுப்பில' என்றும், பயனில்லாதனவும் பயன்சுருங்கியனவும் ஆகிய காரியங்கள் செய்தலை விரும்பாமையால் 'வேண்டுப' என்றும், அக்காரியங்களை இனியனவாய்ச் சுருங்கிவிளங்கிய பொருளுடையனவாகிய சொற்களால் சொல்லுகவென்பார் 'வேட்பச்சொலல்'

என்றும் சொல்லினர்.

(க - து.) அரசனது குறிப்பையும் சமயத்தையும் நோக்கி, அவன் வெறுக்காதனவும்விரும்புவனவுமாகிய காரியங்களை அவன் விரும்புமாறு மந்திரிகள் சொல்லக்கடவர் என்பது.

6. Knowing the king's disposition, and seeking the

right time, the minister should in a pleasing manner suggest

such things as are desirable and not disagreeable.

எ. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்

கேட்பினுஞ் சொல்லா விடல்.

பரி:—(இ-ள்.) பயன் பெரியனவுமாய் அரசன் விரும்புவனவு மாய காரியங்களை அவன் கேட்டிலனாயினுஞ் சொல்லி எஞ்ஞான்றும் பயனிலவாயவற்றைத் தானே கேட்டாலுஞ் சொல்லாது விடுக, ()

* 'வினையில' எனவும் 'கேட்பினும்' எனவும் வந்த சொற்களான், அவற்றின் மறுதலைச் சொற்கள் வருவிக்கப்பட்டன. † வினையான் வருதலின் 'வினை' என்றும், ‡ வறுமைக்காலமும் மடங்க 'எஞ்ஞான்றும்' என்றுங்

கூறினர். 0 சொல்லுவனவுஞ் சொல்லாதனவும் வகுத்துக் கூறியவாறு. இவை நான்குபாட்டானும் அது சிறப்புவகையாற் கூறப்பட்டது.

தெளி:—(இ – ள்.) (பயன்பெரியனவுமாய்) வேட்பன - (அரசன்) விரும்புவனவும் (ஆய காரியங்களை), சொல்லி - (அவன் கேட்டிலனுயினும்) சொல்லி, எஞ்ஞான்றும் - எந்நாளும், வினையில - பயனிலவாய காரியங்களை,

---

* வினையில என்பதற்கெதிர்மறைச்சொல் பயன் பெரியன என்பதாம்; கேட்பினும் என்பதற் கெதிர்மறைச்சொல் கேட்டிலனுயினும் என்பதாம்.

† வினையால் வரும் பயனை வினையென்று கருவியாகு பெயரால் கூறினர்.

‡ வறுமைக்காலம் - அனுபவித்தற்குரிய பொருளில்லாத காலம்.

0 சொல்லுவன - பெரும்பயனுள்ள காரியமாம்; சொல்லத்தகாதன - பயனிலவாய காரியமாமென்று பிரித்துச் சொல்லப்பட்டது. அங்கவியல்—எ-வது மன்னரைச்



கேட்பினும் - (தானே) கேட்டாலும், சொல்லாவிடல் - சொல்லாது விடல்

கடவர், (எ - று).

'வினையில்' என்றும் 'கேட்பினும்' என்றும் வந்த சொற்களால், அவற்

றின் எதிர்மறைச் சொற்கள் வருவிக்கப்பட்டன. பயன் வினையால் வருத

லின் அதனை 'வினை' என்றும், வறுமைக்காலமும் மடங்க 'எஞ்ஞான்றும்'என்

றும் சொல்லினர். சொல்லத்தக்கனவும் சொல்லத்தகாதனவும் வகுத்துச் சொல்லியவாறும். இவை நான்குபாட்டாலும் அது (மன்னரைச் சேர்ந்தொ

ழுகல்) சிறப்புவகையால் சொல்லப்பட்டது.

(க - து) மந்திரிகள் எப்பொழுதும் பயனில்லாதகாரியங்களை யொழித்துப் பயனுள்ள காரியங்களையே அரசனிடத்துச் சொல்

லக் கடவர் என்பது.

7. Ministers should always give wholesome advice but on no occasion recommend useless actions, though requested to do so.

அ. இனைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்.

பரி:—(இ - ள்.) * இவர் எம்மினையரென்றும் எமக்கின்ன முறை யினை யுடையரென்றும் அரசனை யவமதியாது அவர்மாட்டு நின்றவொளி யொடு பொருந்த

ஒழுகுதல் செயியப்படும், (எ - று).

† ஒளி - உறங்கா நிற்கவுந் தாமுலகங் காக்கின்ற அவர் கடவுட்டன் மை. அதனெடு பொருந்த வொழுகலாவது ‡ அவர் கடவுளுஞ் சாம் மக்க ளுமா யொழுகுதல். அவ்வொளியாற் போக்கப்பட்ட விளமையும் முறைமை யும் பற்றி இகழ்வாயின், ¶ தாமும் 0 போக்கப்படுவ ரென்பது கருத்து.

தெளி:—(இ - ள்.) இளையரென்று - (இவர் எம்மினும்) இளையவ ரென்றும், இனமுறையரென்று - (எமக்கு) இன்ன முறையினையுடையவ ரென்றும், இகழார் - (அரசரை) அவமதியாது, நின்ற - (அவ்வாசரிடத்து)

---

* மனுதருமசாஸ்திரம் ஏழாவதத்தியாத்தில் ''அவ்வாசன் சிறுவனாக இருந்தாலும் அவனை மனிதனென்று அவமானஞ் செய்தல்கூடாது;எனெனின், மேலாய தேவர்களின் கூட்டமே அவ்வாசனுருவமாக விருக்கின்ற தல்லவா'' என்று கூறுவது மிங்கறியத்தக்கது.

† "உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி, கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்" என்று சீவகசிந்தாமணி கூறுவதும், அதற்குநச்சிணார்க் கினியர் "மன்னவன் உறங்குமாயினும் அவனொளி யுலகைக் காவாநிற்கும்" என்றுரை கூறியிருத்தலும் இங்கறியத்தக்கனவாம்.

‡ அவர்-அரசர் ¶ தாமும்-அமைச்சரும். 0 போக்கப்படுவர்-அமைச்சுத் தொழிலினின்றும் நீக்கப்படுவர்.

நிலைபெற்ற, ஒளியொடு - ஒளியுடன், (பொருந்த), ஒழுகப்படும் - ஒழுகுதல் செய்யப்படும், (எ-று).

ஒளி - நித்திரை செய்யாநிற்கவும் தாம் உலகங்காக்கின்ற அவாது தெய்வத்தன்மை. அவ்வொளியுடன் பொருந்த வொழுகுசலாவது அவர் தேவரும் தாம் மக்களுமாய் நடத்தல். அவ்வொளியினால் நீக்கப்பட்ட இளமையையும் முறைமையையும் பற்றி இகழ்வாராலால், தாமும் நீக்கப்படுவரென்பது கருத்து என்று என்பது முன்னுங்கூட்டப்பட்டது.

(க - து.) மந்திரிகள் அரசரை இளமையையும் முறைமை யையும் நோக்கி பிகழாது மதித்தொழுகக் கடவர் என்பது.

8. Ministers should behave in accordance with the

Divine light in the persons of kings and not despise them saying "he is our junior in age and connected with our family".

கொளப்பட்டே மென்றெண்ணிக்

கொள்ளாத செய்யார்

† துளக்கற்ற காட்சி யவர்.

பரி.—(இ - ள்.) அரசனுல் யாம் நன்கு மதிக்கப்பட்டே மென்று

கருதி அவன் விரும்பாதவற்றைச் செய்யார் நிலைபெற்ற அறிவினையுடை

யார், (எ - று).

•

கொள்ளாதனசெய் தழிவெய்துவார், ‡ கொளப்பாட்டிற்குப்பின் ¶ றம்

மை வேறொருவராகக் கருதுவராகலின், 0 முன்னேயராகவே கருதி யஞ்சி

யொழுகுவாரைத் 'துளக்கற்ற காட்சியவர்' என்றார்.

தெளி:—(இ-ள்.) துளக்கற்ற-நிலைபெற்ற, காட்சியவர் - அறிவினை யுடையவர், கொளப்பட்டேமென்று - (அரசனுல் யாம்) நன்குமதிக்கப்பட் டோ மென்று, எண்ணி-நினைத்து, கொள்ளாத-(அவன்) விரும்பாத காரியங்

களை , செய்யார்-, (எ-று).

† துளக்கற்ற - அசைவற்ற.

‡ கொளப்பாட்டிற்குப்பின்-அரசனால் நன்குமதித்துக் கொள்ளப்பட்ட

தற்குப்பின்.

-- ¶ தம்மை வேறொருவராகக்கருதுவராகலின் - தம்மை முன்னுள்ள

நிலைமையாக வெண்ணுது வேறொரு சிறந்த நிலைமையுடையராக எண்ணுவ

ராதலால். அஃதாவது தம்மை மனிதப் பிறப்பினராக நினையாது தெய்வப் பிறப்பினராக நினைப்பா ரென்பதாம்.

0 முன்னையாகவே-முன்னுள்ள நிலைமையாகவே. அங்ஙனம் கரு தாது முன்னையாகவே என்றும் பாடமுண்டு.

## அங்கவியல்—எ-வது மன்னரைச் சேர்ந்தொழுகல். 777

(அரசன்) விரும்பாதகாரியங்களைச் செய்து அழிவினையடைவார் கொளப்பட்டதற்குப்பின்பு தம்மை வேறொருவராக நினைப்பவராகலால், முன்னையவராகவே யெண்ணியஞ்சி நடப்பவரைத் 'துளக்கற்றகாட்சியவர்' என்றார்.

(க - து.) நல்லறிவுடைய மந்திரிகள் அரசனால் யாம் நன்கு மதிக்கப்பட்டோமென்று நினைத்து அவன் விரும்பாத காரியங் களைச் செய்யார் என்பது.

9. Those whose judgment is firm will not do what is disagreeable to the sovereign saying within themselves "we are esteemed by the king."

கo. * பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்

கெழுதகைமை கேடு தரும்.

பரி:—(இ-ள்.) அரசனுக்கு யாம் பழையமெனக் கருதித் தமக்கியல் பல்லாதவற்றைச் செய்யுழிமை அமைச்சரிக்குக் கேட்டினைப் பயக்கும்.

† அவன்பொருது செறும்பொழுதின் அப்பழைமைநோக்கிக் கண்ணே டாது உயிரை வெளவுதலான், அவன்வேண்டாதன செய்தற் கேதுவாய கெழுதகைமை 'கேடுதரும்' என்றார். இவை மூன்றுபாட்டானும் பொறுப்ப ரென்று அரசர் வெறுப்பன செய்யற்க வென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) பழையமென (அரசனுக்கு யாம்) பழமையோ மென்று, கருதி-நினைத்து, பண்பல்ல-(தமக்கு) இயல்பல்லாத* காரியங்களை, செய்யுஞ் செழுதகைமை - செய்யுமுரிமையானது, கேடுதரும் - (மந்திரிகளுக்குக்) கேட்டினைத்தரும், (எ-று).

அவன் பொறுக்காது வருத்தும் பொழுதில் அப்பழமையைநோக்கி முகங்கொடாது உயிரை வெளவுதலால், அவன் வேண்டாத காரியங்களைச் செய்தற்குக் காரணமாகிய செழுதகைமையைக் 'கேடுதரும்'என்றார். இவை மூன்றுபாட்டாலும் மந்திரிகள் பொறுப்பதென்று அரசர் வெறுக்கத்தக்க காரியங்களைச் செய்வதொழிகவென்பது சொல்லப்பட்டது. வெளவுதல்-நீக்குதல். செழுதகைமை - உரிமை.

---

* "மாமலை னென்னு மதத்தா லுனையிகழ்ந்து, தோமுற்றார் தக்கனார் சோமேசா-வாமே, பழைய மெனக்கருதிப்பண்பல்ல செய்யுங்,செழுதகைமை கேடு தரும்" என்று சோமேசர் முதுமொழிவெண்பா கூறுவதும்,"பழைமை யடைப்பிடியார் கேண்மையும் பாரார், கிழமை பிறிதொன்றுங் கொள்ளார்-வெகுளின்மற், காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரும், ஆர்வலரு மில்லை யவர்க்கு" என்று நீதிநெறி விளக்கங் கூறுவதுமிங்கறியத் தக்கனவாம். † அவன் - அரசன்.





(க - து.) யாம் அரசனுக்குப் பழையோ மென்றெண்ணித் தமக்கியல்பல்லாதகாரியங்களைச்செய்யும் மந்திரிகள் கேடடைவர்.

10. The foolish claim with which a minister does unbecoming acts because of his long familiarity with the king will ensure his ruin.

## எட்டாம் அதிகாரம்.

## † குறிப்பறிதல்:—*Knowing the Sovereign's Mind.*

பரி:—அஃதாவது அரசர் கருதியவதனை அவர் கூறமலறிதல். ‡ இது, மன்னரைச் சேர்ந்தொழுகற்கு இன்றியமையாதாகலின், அதன் பின் வைக்கப்பட்டது

தெளி:—அஃதாவது அரசர் நினைத்தகாரியத்தை அவர் சொல்லாமலறிதல். இது, மன்னரைச்சேர்ந்து நடப்பதற்கு அவசியமானதாகலால், அதன்பின் வைக்கப்பட்டது.

க. கூருமை நோக்கிக் குறிப்பறிவா
னெஞ்ஞான்று
மாருநீர் வையக் கணி.

பரி:—(இ-ள்.) அரசனைப் குறித்த கருமத்தை அவன்

கூறவேண்டா

வகை அவன் முகத்தானும் கண்ணானுநோக்கி அறியுமமைச்சன் எஞ்ஞான்றும் வற்றுத நீரால் சூழப்பட்ட வையத்துள்ளார்க்கு ஓராபாணமாம், ()

ஒட்பமுடையனுய் எல்லார்க்கும் அழகுசெய்தலான் 'வையக்கணி' என்றார். ¶ குறிப்பும் § வையமும் ஆகுபெயர். வையத்திற்கென்பது விகாரப்பட்டு நின்றது.

தெளி:—(இ-ள்.) குறிப்பு-(அரசனுற்)குறித்த காரியத்தை, கூறுமை-(அவன்) சொல்லவேண்டாவகை, நோக்கி - (அவன் முகத்திலுலும் கண்ணிலும்) பார்த்து, அறிவான் - அறியு மந்திரி, எஞ்ஞான்றும்-எந்த நாளும், மாறுநீர் - வற்றுத நீரால், (சூழப்பட்ட), வையக்கு-உலகத்துள்ளார்க்கு, அணி-ஓராபரணமாம், (எ - று).

---

† "குறிப்பு மனத்தாற் குறித்துணரப்படுவது"
என்பர் சேனுவரையர்.

‡ இது - குறிப்பறிதல். அதன்பின் - மன்னரைச்சேர்ந்தொழுகலின் பின்.

¶ குறிப்பு என்னும் தொழிற்பெயர் குறித்தகருமத்தைலால் தொழிலாகு பெயராம்.

யுணர்த்துத

§ வையம் என்னும் இடப்பெயர் வையத்துள்ளாரையுணர்த்துதலால் இடவாகு பெயராம்.

(கூ-றுமை நோக்கிக் குறிப்பறிவான்) அறிவுடையவனுய் எல்லார்க்கும் அழகுசெய்தலால்'வையக்கணி' என்ருர்.குறிப்பு—தொழிலாகுபெயர்;வையம்-இடவாகுபெயர். வையத்திற்கென்பது (செய்யுள் விகாரத்தால்) வையக்கு எனவிகாரப்பட்டு நின்றது.

(க - து.) அரசன் குறிப்பறிந்தொழுகும் மந்திரி உலகினர்க் தோ ரணியாய் விளங்குவன் என்பது.

1. The minister who by looking at the king understands his mind without being told of it, will be an ornament amongst the wise men of the world which is surrounded by a never-drying sea.

உ. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

பரி:—(இ - ள்.) ஒருவன் மனத்தின்க ணிகழ்வதனை ஐயப்படாது ஒருதலையாக வுணரவல்லானை மகனேயாயினும் தெய்வத்தோ டொப்ப நன்றுமதிக்க, (எ - று).

† உடம்பு முதலியவற்றுன் ஒவ்வாளுயினும் பிறர் நினைத்த துணரும் தெய்வத்தன்மை யுடைமையின் 'தெய்வத்தொ டொப்ப' என்ருர்.

தெளி:—(இ - ன்.) அகத்தது - (ஒருவனது) மனத்தின்கண் நிகழ்வதனை, ஐயப்படாஅது - சந்தேகப்படாமல், உணர்வானை - (நிச்சயமாக) அறிய வல்லவனை, (மனிதனேயாயினும்), தெய்வத்தொடொப்ப - தெய்வத்தோடு சமானமாக, கொளல் - நன்கு மதிக்கக்கடவர், (எ - று).

(ஐயப்படாஅதகத்ததுணர்வான்) உடம்பு முதலியவற்றால் (தெய்வத் தோடு) ஒப்பாகாஞயினும் பிறர் நினைத்ததை யறியும் தெய்வத்தன்மை யுடைமையால் (அவனைத்) 'தெய்வத்தொடொப்ப (க் கொளல்)' என்றார்.

(க - து). பிறரது எண்ணத்தைச் சந்தேகியாது துணிவாக அறிபவன் தெய்வத்திற் கொப்பாவன் என்பது.

---

† கண்ணிமைத்தல், கால்நிலந்தோய்தல், நிழலிடுதல், வியர்த்தல், கண் ணீர்(பூமாலை) வாடுதல், அதில் வண்டுபடிதல், கூறை (ஆடை) மாசுணல், முதலியன மக்கட்கன்றித் தேவர்க்கின்மையின், தேவரும் மக்களும் உடம்பு முதலியவற்றால் ஒவ்வாராயின ரென்க. 'நிருதுதல் வேரும்புந் தேங்கோதை வாடு, மிருநிலஞ் சேவடியுந் தோய்-மரிபாத்த, போகித லுண்கணு மிமைக்கு, மாகுமற்றிவ ளகளிடத் தணங்கே.'' ''பாயும் விடையரண் றில்லையன் ஞள் படைக் கண்ணிமைக்குந், தோயு நிலத்தடி தாமலர் வாடுந் தயரமெய்தி, பாயு மனனே யணங்கல்ல ளம்மா மூலசுமந்து, தேயு மருங்குற் பெரும்ப 'ணைத் தோளிச் சிறுதுதலே''. என்றுள்ள பிரயோகங்களிங்கு நன்குணர்தற்.

2. He is to be esteemed a god who is able to ascertain without a doubt what is within one's mind.

ரு.

* குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

பரி:—(இ - ள்.) தங்குறிப்பு நிகழுமா றறிந்து அதனுற் பிறர் குறிப்பறியுந் தன்மையாரை அரசர் தம்முறுப்புக்களுள் அவர் வேண்டுவதொன்றனைக் கொடுத்தாயினும் தமக்குத் துணையாகக் கொள்க, (எ - று).

† உண்ணிகழு நெறி யாவர்க்கு மொத்தலின், பிறர் குறிப்பறிதற்குத் தங் குறிப்புக் கருவியாயிற்று. உறுப்புக்களாவன: பொருளும், நாடும், யானை குதிரைகளும் ¶ முதலிய புறத்துறுப்புக்கள். ‡இதற்குப் பிறர் முகக்குறிப்பானே அவர் மனக்குறிப் புணர்வாரை யென்றுரைப்பாரு முளர். இவைமூன்றுபாட்டானுங் குறிப்பறிவாரது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) குறிப்பின் - (தமது குறிப்புநிகழும் விதத்தையறிந்து அக்)குறிப்பினுல், குறிப்புணர்வாரை-(பிறரது) குறிப்பையறியுந்தன்மையவரை, உறுப்பினுள் - (அரசர்தம்) உறுப்புக்களுள், யாதுகொடுத்தும் - (அவர் வேண்டுவது) யாதொன்றைக் கொடுத்தாயினும், கொளல் - (தமக்குத் துணையாகக்)கொள்ளக் கடவர், (எ - று).

குறிப்பு உள்ளே நிகழும்வழி யாவர்க்கும் ஒத்தலால், பிறர் குறிப்பை

யறிதற்குத் தங்குறிப்புச் சாதனமாயிற்று. உறுப்புக்களாவன: பொருளும், நாடும், யானை குதிரைகளும் முதலிய புறத்துறுப்புக்கள். இவை மூன்று பாட்டாலும் குறிப்பறிவாரது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) தமது குறிப்பால் பிறரது குறிப்பை யறிய வல்லவரை அரசர் அவர் வேண்டுவனவற்றைக்கொடுத்தாயினுந் தமக்குத் துணையாகக் கொள்ளக்கடவர் என்பது.

3. The king should even give whatever is asked of his belongings and secure the friendship ofhim who by the indications of his own mind is able to read those of another.

---

* "அகத்திடைத் தனக்கு நிகழ்ந்திடுங் குறிப்பா லவரவ ரகக்குறிப் பறிந்து, மிகத்தெளி பவனைக் காமுத லுறுப்புள் விழைவன கொடுத்துங்கொள் மைந்தா" என்பது விநாயக புராணம்.

† உண்ணிகழு நெறி - குறிப்பானது மனத்தில் உண்டாம் முறைமை.

¶ முதலிய என்றமையின், ஏவலாள், காவலாள், உடை, படை முதலிய

வற்றையுங் கொள்க.

‡ குறிப்பிற் குறிப்புணர் வாரை என்பதற்குப் பிறர் முகக்குறிப்பாலே

அவரது மனக்குறிப்பை யறிவாரை என்று பொருள் கூறுவாரு முளரென்ப தாம்.

## அங்கவியல்—அ-வது குறிப்பறிதல்.

**781**

**குறித்தது கூறுமைக் கொள்வாரோ டேனை யுறுப்போ ரனையரால் வேறு.**

பரி:—(இ - ள்.) ஒருவன் மனத்துக் கருதிய வதனை அவன்கூறவே ண்டாமல் அறியவல்லாரோடு மற்றை * மாட்டாதார் உறுப்பா லொரு தன்மையராக வொப்பாராயினும் அறிவான் வேறு, (எ - று).

† மாட்டாதா ரென்பதூஉம், ஆயினுமென்பதூஉம் ‡ அவாய் நிலை யான்வந்தன. சிறந்த வறிவின்மையின், ¶ மிலங்கென்னுங் கருத்தான் 'வேறு' என்றார்.

தெளி:—(இ - ள்.) குறித்தது - (ஒருவன் மனத்தில்) நினைத்ததை, கூறுமை - (அவன்) சொல்லவேண்டாமல், கொள்வாரொடு - அறியவல்லவ ரோடு, ஏனை - மற்றை, (மாட்டாதவர்), உறுப்பால்-அவயவத்தால், ஓரனையர்-ஒரு தன்மையராக வொப்பாவர், (ஆயினும்), வேறு - (அறிவால்) வேறுவர்.()

மாட்டாதவரென்பதும், ஆயினு மென்பதும் அவாய் நிலையால் வந் தன. (ஏனையவர்க்குச்) சிறந்த அறிவில்லாமையால், (அவர்) மிருகமென் னுங் கருத்தால் 'வேறு' என்றார். ஆல் என்பது பிரித்துக்கூட்டப்பட்டது.

(க - து.) பிறர் நினைத்ததை யவர் சொல்லவேண்டாமலறிய வல்லவரோடு அவ்வாறறியும் ஆற்றலிலாதார் அறிவால் ஒப்பாகார்.

4. Those who understand one's thoughts without being informed thereof and those who do not, though they may resemble one another bodily, still are they different mentally.

## ரு. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
## ளென்ன பயத்தவோ கண்.

பரி:—(இ - ள்.) தமித்தது காணவல்ல தங்காட்சியாற் பிறர்குறிப் பினை யுணரமாட்டாவாயின், ஒருவனுறுப்புக்களுட் \$ சிறந்த கண்கள் வேறென்ன பயனைச் செயீவன, (எ-று).

---

* மாட்டாதார் - ஒருவன் மனத்துக்கருதியவதனை அவன் கூறவேண்டாமல் அறியும்வல்லமையில்லாதவர்.

† கொள்ளாதார் என்றும் பாடமுண்டு.

‡ மாட்டாதார் என்பதனைக் கொள்வாரொடு என்பதும் ஆயினும் என்ப தனை வேறு என்பதும் அவாவி(வேண்டி) நின்றன.

¶ "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல், கற்றூரோ டேனை யவர்"

என்னுங் குறளிங்குக் கவனிக்கத் தக்கதாம்.

§ "மின்னுமணிப், பூணும் பிறவுறுப்புப் பொன்னே
யதுபுனையாத்,
காணுங்க ணெஞ்குமோ காண்" என்று நன்னெறி
கூறுவதும், "கண்



முதற்கட் குறிப்பு ஆகுபெயர். † குறிப்பறிதற்கட் டுணையாதற் சிறப்புப்பற்றி உயிரதுணர்வு கண்மே லேற்றப்பட்டது. அக்கண்களாற் பயனில்லையென்பதாம். இவை இரண்டு பாட்டானுங் குறிப்பறியாதிழிபு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) குறிப்பின் - (குறித்ததைக் காணவல்ல தமது) காட்சியால், குறிப்பு - (பிறர்) குறிப்பினை, உணராவாயின் - அறியமாட்டாவாயின், (ஒருவனுக்கு), உறுப்பினுள் - அவயவங்களுள், கண் - (சிறந்த) கண்கள், என்னபயத்தவோ - (வேறு) என்னபயனைச் செய்வனவோ, (எ-று).

முதலிலுள்ள குறிப்பு என்னுந் தொழிற்பெயர் குறித்த விஷயத்தைக் காணவல்ல காட்சியறிவினையுணர்த்துதலின் தொழிலாகுபெயராம். குறிப்பறியுமிடத்துத் துணையாகுஞ் சிறப்புப்பற்றி உயிரின் அறிவு கண்மேல் ஏற்றப்
பட்டது. பிறர் குறிப்பினையறியமாட்டாத அக்கண்களால் பயனில்லையென்பதாம். இவை இரண்டு பாட்டாலும் குறிப்பறியாத இழிவு சொல்லப்பட்

டது.

(க - து.)

பிறர் குறிப்பினை யறியுந் தன்மையில்லாத கண்கள்

பயனற்றனவாம் எனபது.

5. Of what use are the eyes amongst one's members, if they cannot by their own indications divine those of another?

கூ. ‡ அடுத்தது காட்டும் பளிங்கேபோ
னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.

---

ணிற் சிறந்த வுறுப்பில்லை" என்று நான்மணிக்கடிகை கூறுவது மிங்கறியத்
தக்கனவாம்.

‡ ஒருவனது மனக்குறிப்பை அவனதுமுகம் வாயிலாகத் தெரிந்துகொ
ள்ளும் விஷயத்தில் கண் உயிர்க்குத் துணையாயிருக்குஞ் சிறப்புப்பற்றி
உயிரினது உணர்வை (அறிவை)க் கண்ணின்மே லேற்றி (வைத்து), கண் குறிப்பிற் குறிப்புணராவாயின் என்று கூறப்பட்டது.

இஃது ஒருபொருளின் குணத்தை (உயிரினது

அறிவாகியகுணத்தை)

மற்றொருபொருளின் (கண்ணின்)

மேல் ஏற்றிக்கூறிய உபசார வழக்காம்.

இதனால் கண்ணுக்கு அறிவு இன்றென்பதும்

கண்ணறிந்தது என்னு

மிடத்து உயிரினது அறிவு கண்ணின்மே

லேற்றிச் சொல்லப்படுகிறதென்

பதும் பெறப்படும். "ஆன்மா மனத்தோடும், மனம்

இந்திரியத்தோடும், இந்

திரியம் பொருளோடும் கூடும்; அதனால் காட்சியுணர்வு

நிகழுமெனவுணர்க" என்பது தர்க்கசங்கிரகவுரை.

‡ நான் மணிக்கடிகை "தூக்கின், அகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்னம், முகம்போல முன்னுரைப்ப தில்" என்று கூறுகின்றது.

அங்கவியல்—ஏ-வது குறிப்பறிதல்.

**783**

பரி:—(இ - ள்.) தன்னையடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டு காட்டும் பளிங்குபோல ஒருவனெஞ்சத்து * மிக்கதனை அவன்

முகந்தானே கொண்டுகாட்டும், (எ -று).

அடுத்ததென்பது ஆகுபெயர். கடுத்ததென்பது கடியென்னு முரிச் சொலடியாய்வந்த தொழிற்பெயர். உவமை † ஒருபொருள் பிறிதொரு பொருளின் பண்பைக் கொண்டு தோற்றுதலாகிய தொழில்பற்றி வந்தது.

தெளி:—(இ - ள்.) அடுத்தது - (தன்னை) அடுத்த பொருளினது நிறத்தை, காட்டும் - (தானேகொண்டு) காட்டுகிற, பளிங்குபோல் - பளிங்கு போல, நெஞ்சம் - (ஒருவனது) நெஞ்சத்தில், கடுத்தது - மிகுந்துள்ளதை, முகமே - (அவன்) முகந்தானே, காட்டும் - (கொண்டு) காட்டும், (எ - று).

அடுத்தது என்னும் (வினையாலணையும்)பொருட் பெயர் அடுத்த பொரு

ளின் நிறத்தை யுணர்த்துதலால் பொருளாகு பெயராம். கடுத்தது என்பது கடியென்னும் உரிச்சொலடியாகப் பிறந்த துவ்விகுதிபெற்ற இறந்தகாலத் தொழிற்பெயர். அடுத்தது காட்டும்பளிங்கு போல் என்னும் உவமானம் ஒரு பொருள் மற்றொரு பொருளின் குணத்தைத் தன்னுட்கொண்டு தோற்றுத லாகிய தொழில் பற்றிவந்தது. எகாரம் பிரித்துக்கூட்டப்பட்டது.

(க - து.) ஒருவனது மனத்தில் மேம்பட்டுள்ள குணத்தை அவனது முகம் நன்றுகத் தெரிவிக்கும் என்பது.

6. As the mirror reflects what is near so does the face indicate what is uppermost in the mind.

எ. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ
வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்.

பரி:—(இ - ள்.) உயிர் ஒருவனை யுவத்தலாலுங் காய்தலாலு ‡ முறின், தானறிந்து அவற்றின்கண் அதனின் முற்பட்டு நிற்கு மா கலான், முகம்போல அறிவுமிக்கது பிறிதுண்டோ இல்லை, (எ - று).

---

* மிக்கதனை - மிகுந்துள்ள குணத்தினை.

† பளிங்கென்னும் பொருள் தன்னை யடுத்த பொருள்களின் செம்மை முதலிய குணங்களைத் தன்னுட் கொண்டு (தன்னுட் கொள்ளல் - பிரதி பலித்தல்.) காட்டுதல் போன்று முகமும் தன்னை யடுத்த மனத்தினது குணத்தைத் தன்னுட்கொண்டு காட்டுமென்பதாம். இங்குத் தொழிலை யுவமானமாகக் கொண்டமையால், இது தொழிலுவமையணியாம். இது மனம் களிப்பாயிருந்தால் முகம் விலாசமா யிருத்தலையும், அது களிப்பின்றி யிருந்
தால் விலாசமின்றி யிருத்தலையும் சற்றுக் கண்ணுணர்வார்க்குத் தெள்ளிதின் விளங்கும். "அகத்தி லழகு முகத்திற் றெரியும்" என்னும் பழமொழியும் இங்கறியத்தக்கதாம்.

‡ உறின் - (உயிர் உவத்தலாவது காய்தலாவது) அடைந்தால்.

உயிர்க்கே அறிவுள்ளது,ஐம்பூதங்களானியன்ற முகத்திற்கில்லை யென் பாரை நோக்கி, உயிரதுகருத்தறிந்து அஃ தவக்குறின் மலர்ந்தும் காய்வு றிற் * கருகியும் வாலான், உண்டென மறுப்பார் போன்று குறிப்பறி தற்குக் † கருவி கூறியவாறு.

தெளி:—(இ-ள்.) (உயிரானது ஒருவனை) உவப்பினும் - விரும்புதலா லும், காயினும் - வெறுத்தலாலும், (உற்றால்), தான்-, (அறிந்து),முந்துறும்- (உவத்தல், காய்தலென்னும் அவற்றில் அவ்வுயிரினும்) முற்பட்டு நிற்கும், (ஆகலால்), முகத்தின் - முகம்போல, முதுக்குறைந்தது-அறிவுமிகுந்தது, உண்டோ-(மற்றொன்று) உண்டோ, (இல்லை), (எ-று).

உயிர்க்கே அறிவு உண்டு, ஐம்பூதங்களாலாகிய முகத்திற்கு இல்லை யென்பாரை நோக்கி, உயிரினுடைய கருத்தினையறிந்து அவ்வுயிர்உவப்பினை யடைந்தால் மலர்ச்சியடைந்தும் வெறுப்பினையடைந்தால் கருகியும் வருத லால், முகத்திற்கு அறிவு உண்டென்று கூறிமறுப்பவர் போலக் குறிப்பறி தற்குச் சாதனம் சொல்லியபடியாம்.

முதுக்குறைந்தது என்பது முதுக்கு உறைந்தது எனப்பிரிபடும். முதுக்கு-அறிவு, உறைந்தது-மிக்கது. இது முதுக்குறைவு, முதுக்குறை தல் என்றும் வரும். முதுக்குறைந்தது, முதுக்குறைவு. முதுக்குறைதலை

ன்பனபோறிவென்னும் பொருளையுணர்த்துவனவாம்.

(க-து.) முகம் உயிரினது விருப்பு வெறுப்புக்களை விளைத்து காட்டவல்லதாம் என்பது.

7. Is there any thing so full of knowledge as the face which precedes the mind, whether the latter is pleased or vexed; no.



அ. முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின்.

பரி:—(இ-ள்.) ‡குறையுறுவாணும் தன்மனத்தைக் குறிப்பானறிந்து ¶தானுற்றவதனைத்தீர்ப்பாரைப் பெறின், அவர்தன்முகம் நோக்கித்தும்வதை தானும் அவர்முகநோக்கி அவ்வேலல்லதுணர்க்க வமையும், (எ-று).

---

* கருகியும்-(முகம் மலர்ச்சியடையாது)சுருங்கியும்.

† உயிர்கருதியதறிதற்கு முகம் கருவியா (எதுவா) யிருக்கின்ற தென் பதாம்.

‡ குறையுறுவாணும்-குறையுற்றவனும். அஃதாவது தனக்கு நேர்ந்துள்ள குறையினைப் பிறர்மாட்டுத் தெரிவிக்குமாறு வந்தவனும் என்பதாம்.

¶ தானுற்றவதனை-தானடைந்த அக்குறையை.

* உணர்வாரெனக் காரியத்தைக் காரணமாக்கிக் கூறினர். † அவ்வெல் லையைக் கடந்து சொல்லுமாயின் ‡ இருவர்க்குஞ் சிறுமையாமாகலின், அது வேண்டாவென்பதாம். குறையுறுவானியல்பு கூறுவார்போன்று கருவி கூறியவாறு. இவை மூன்றுபாட்டானுங் குறிப்பறிதற் கருவி முகமென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்.) (குறையுறுவானும்) அகநோக்கி—(தன்) மனத்தைக் குறிப்பால் அறிந்து, உற்றது - (தான்) உற்றவதனை, உணர்வார் - தீர்ப் பாரை, பெறின்-பெற்றால்,(அவர் தன்முகத்தைப் பார்க்கும்படி தானும்),முக நோக்கி-(அவர்) முகத்தைப்பார்த்து, நிற்க-(அவ்வளவில்) நிற்க, அமையும் - போதும், (எ-று).

தீர்ப்பாரென்னுங் காரியத்தை உணர்வாரென்று காரணமாக்கிச் சொல் லினர். (குறையுறுவான் அவ்வளவில் நில்லாமல்) அவ்வளவைக்கடந்துசொல்

லுவானாயின் இருவர்க்கும் சிறுமையாமாகலால், அதுவேண்டாமென்பதாம். குறையுறுவானது இயல்பு சொல்லுவார்போலச்சாதனம் சொல்லியபடியாம். இவை மூன்றுபாட்டாலும் குறிப்பறிதற்குச் சாதனம் முகமென்பது சொல் லப்பட்டது.

(க - து.) ஒருவன் தன்குறையினைக்

குறிப்பினுலறிந்து தீர்ப் பவரைப் பெற்றால், அவன் அவர் தன் முகத்தை நோக்கும்படி

அவரது முகத்தைநோக்கி நிற்றலே போதுமானதாம் என்பது.

8. If the king gets men who by looking into his mind can understand and fulfil his requirements it is enough that he stand looking at their face.

கூ. பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின் வகைமை யுணர்வார்ப் பெறின்.

பரி:—(இ - ள்.) வேந்தர் தம்நோக்கு வேறுபாட்டின் றன்மையை அறியவல்ல அமைச்சரைப்பெறின், ¶ அவர்கீது § மனத்துக்கிடந்த பகை மையையும், ஏனைக்கேண்மையையும் வேற்றுவேந்தர் சொல்லிற்றிலரா யினும் ‡ அவர்கண்களே சொல்லும், (எ-று).

* தீர்ப்பாரை யென்னும் காரியத்தை

அதற்குக்காரணமாகிய உணர்வார் என்னும் பெயராற் கூறினமையின், இது காரணங்காரியமாய வுபசாரவழக்காம். உணர்வாரென்பதனைக்கருவியாகு பெயரெனினு மொக்கும். பிறரது குறையுணர்தல் காரணமாம்; அதனைத் தீர்த்தல் காரியமாம்.

† அவ்வெல்லையைக் கடந்து-முகநோக்கி நிற்கும்

அள்ளவத்தாண்டி.

‡ இருவர்க்கும்-குறையுறுவானுக்கும் உணர்ந்து தீர்ப்பார்க்கும்.

¶ அவர்க்கு-அவ்வாசர்க்கு.

§ மனத்துக்கிடந்த-வேற்று வேந்தாது மனத்திலிருக்கின்ற.

$ அவர்- அழைச்சாது.





இறுதிக்கட் கண் ஆகுபெயர். நோக்கு வேறுபாடாவன: வெறுத்தநோக் கமும், உவந்த நோக்கமும். உணர்தல் - * அவற்றை அவ்வக் குறிகளா னறி தல்.

தெளி:—(இ - ள்.)கண்ணின்வலகமை-(அரசர் தமது) பார்வை வேறு பாட்டின் தன்மையை, உணர்வார்-அறியவல்ல மந்திரிகளை, பெறின்-பெற்றா ல், (அவர்க்கு), பகைமையுங் கேண்மையும்-(மனத்திலுள்ள)பகைமையையும் மற்றைக்கேண்மையையும், (வேற்றரசர் சொல்லா திருந்தாராயினும்), கண்- (அவர்) கண்களே, உரைக்கும்-சொல்லும், (எ—று).

இறுதியிலுள்ளகண் என்னும்
பாகிய வேறுபாட்டினையுணர்த்துதலால்

பொருட் பெயர் அதன்பண்
பொருளாகுபெயராம். பார்வை

வேறுபாடாவன: வெறுத்தபார்வையும், விரும்பியபார்வையும். உணர்தல்–அவற்றை அந்தந்தக் குறிகளால் அறிதல்.பகைமை-பகை;கேண்மை-சிநேகம்.

(க-து.) கண்ணினது வேறுபாட்டின்தன்மையை யறியவல்ல தம் .மந்திரிகளது கண்களாலேயே வேற்றரசரது பகையினையும் நட்பினையும் அரசர் அறிவர் என்பது.

9. If a king gets ministers who can read the movements of the eye, the eyes of ministers will themselves reveal to him the hatred or friendship of foreign kings.

கo. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற.

பரி:—(இ-ள்.) யாம் நுண்ணறிவுடையே மென்றிருக்கும் அமைச்சர் அரசர் கருத்தினை யளக்குங் கோலாவது ஆராயுமிடத்து † அவர்கண்ணல்லது பிறவில்லை, (எ-று).

‡ அறிவினுண்மை அஃதுடையார்மே லேற்றப்பட்டது. ¶ இங்கிதம், $ வடிவு, தொழில் சொல்லென்பன † முதலாகப் பிறர் கருத்தளக்கு () மன

* அவற்றை- பகைநட்புக்களை. † அவர் - அரசர்.

‡ அறிவினது நுண்மையை அவ்வறிவுடையார் மேலேற்றி 'நுண்ணிய மென்பார்' என்று கூறினமையின், இஃது இடத்துநிகழ் பொருளின்பண்பு இடத்தின்மே லாய வுபசாரவழக்காம். இடம்-அறிவுடையார்; இடத்து நிகழ் பொருள் - அறிவு; இடத்து நிகழ் பொருளின் பண்பு - நுண்மை.

¶ இங்கிதம் - குறிப்பால் நிகழும்உறுப்பின் தொழில்.

§ வடிவு - குறிப்பின்றி நிகழும் வேறுபாடு.

+ முதலாக என்றமையின் - குணத்தையுங் கொள்க.

() அளவைகள் - பிரமாணங்கள். அவை: பிரத்தியட்சம், அனுமானம், உரை, உவமானம், அருத்தாபத்தி, அனுபலத்தியென்பனவாம்.

வைகள் பல,*அவை யெல்லாம் முன்னறிந்தவழி † அவரான்மறைக்கப்படும்; நோக்கம் மனத்தொடு கலத்தலான் ‡ ஆண்டு மறைக்கப்படாதென்பதுபற்றி, ¶ அதனையே பிரித்துக் கூறினர். $ இனி + அலைக்குங்கோல் என்று பாட மோதி, நுண்ணியமென்றிருக்கும் அமைச்சரை அரசரலைக்குங் கோலாவது கண்ணென வுரைத்து, () தன்வெகுளி நோக்கால் அவர் வெகுடற்குறிப் பறிகவென்பது கருத்தாக்குவாரு முளர். இவையிரண்டுபோட்டாலும் நுண் கருவி நோக்கென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) நுண்ணியமென்பார் - (யாம்) நுண்ணியவறி யுடையே மென்றிருக்கு மந்திரிகள், அளக்குங்கோல் - (அரசரது கருத்தை) அளக்குங்கோலாவது, காணுங்கால் - ஆராயுமிடத்து, கண்ணல்லது – (அவ ரது) கண்களல்லாமல், பிற - வேறு, இல்லை, - (எ - று).

*அறிவினுண்மை அவ்வறிவுடையார்மே
லேற்றப்பட்டது. இங்கிதம், வடிவு, தொழில், சொல் என்பன
முதலாகப் பிறர் கருத்தளக்கும் அளவை கள்பல,
அவையெல்லாம் முன்னறிந்தவிடத்து அவரால்மறைக்கப்படும்;
பார் வை மனத்தோடு கலத்தலால் அவ்விடத்து
மறைக்கப்படாதென்பது பற்றி, அதனையே
'கண்ணல்லதில்லைபிற'-எனப் பிரித்துச் சொல்லினர். இவை
யிரண்டு பாட்டாலும் நுண்ணியகருவி பார்வையென்பது
சொல்லப்பட்டது.

(க - து.) மந்திரிகள் அரசரது
கருத்தினையளந்தறியும் கோல் அவர்களது கண்களேயா
மென்பது.

10. The measuring-rod of those ministers who say 'we are astute' will on scrutiny be found to be their own eyes and nothing else.

* அவை - இங்கிதம் முதலாயின.

† அவனான் - பிறரால். ‡ ஆண்டை - நோக்கம் மனத்தோடு கலக்குமிட கத்து. ¶ அதனையே - நோக்கத்தையே.

$ இனி அளக்குங்கோல்என்பதனை அலைக்குங்கோல் என்றுபாடங்கூறி,

நுண்ணியவறியுடையே மென்றிருக்கும் மந்திரிகளை அரசர் வருத்தும் கோலாவது கண்ணென்று சொல்லி, தனது கோபப்பார்வையால் அவ்வரசரது கோபக்குறிப்பினையறிக என்று கருத்தாக்கிக் கூறுவாருமுளர்.

+ நுண்ணியமென்பாரலைக்கும்கோல் கண் காணுங்கால் (கண்) அல்லது பிறவில்லை என்றன்வயப்படுத்திக் கண்ணினை யெழுவாயாகக் கூறினர் பிறவுரைகாரர்.

() தன் வெகுளிநோக்கால் - கண்ணினது கோபத்தோடு கூடிய பார்வையால்.



## ஒன்பதாம் அதிகாரம்.

## அவையறிதல்:—Knowing the Court.

பரி:—அஃதாவது அரசனேடிருந்த அவையின தியல்பையறிதல். காரியத் சொல்லுங்கால் * அவன் குறிப்பறிதலே யன்றி † இதுவும் வேண்டுதலின், ‡ இஃததன்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது அரசனேடிருந்த சபையினதியல்பை யறிதல், (அமைச்சர்)காரியஞ் சொல்லுங்கால் அவன் குறிப்பறிதலே யல்லாமல் இதுவும் வேண்டுதலால், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

க. அவையறிந் தாராய்ந்து
சொல்லுக சொல்லின்
ரெகையறிந்த தூய்மை யவர்.

பரி:—(இ - ள்.) சொல்லின் தழுவினை யறிந்த தூய்மையினை யுடையாரீ தாமொன்று சொல்லுங்கால் ¶ அப்போழுதை யவையினை யறிந்து ஆராய்ந்து சொல்லுக, (எ - று).

+சொல்லின் தொகையெனவே, § செஞ்சொல், இலக்கணைச்சொல்,

குறிப்புச் சொல்லென்னும் மூவகைச் சொல்லுமடங்கின. தூய்மை - அவ

* அவன் - அரசன். † இதுவும் - அவையறிதலும்.

‡ இஃததன்பின் - அவையறிதல் குறிப்பறிதலின் பின்னே.

¶ அப்பொழுதை - அச்சமயத்து.

+சொல்லின்குழு எனவே என்றும் பாடமுண்டு.

§ "தொகைபடு செஞ்சொ லிலக்கணைச் சொல்லே சூழ்ந்திடுங் குறிப் புச்சொன் மூன்றின், வகையறிந் துயர்ந்தோ ரொத்தவர் தாழ்ந்தோர் மருவு மூன் றவையுமா ராய்ந்து, தகையற வுயர்ந்தோ ரவையின்முந் துரையார் சம த்தினெவ் வாற்றினுங் கிளப்பார், நகைபடு தாழ்வி னென்றையு மொழியார் நவைபடாச் சொற்பொரு ளாய்ந்தோர்" என்பது விநாயக புராணம்.

"ஆக்கும் பிரதிபதத்துடனே" என்னுஞ் செய்யுளி னுரையில் பிரயோக விவேக நூலார் "அலங்கார நூலார் அபிதை, இலக்கணை, வியஞ்சனை விருத்தியென மூன்று வகையாக்குவர். அவர் மதம்பற்றிப் பரிமேலழகரும் 'சொல்லின், தொகையறிந்த தூய்மை யவர்' என்னுந் திருவள்ளுவர் குற ளுள் 'செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொல் என்பர்" என்று கூறியிருக்கிறார்.

செஞ்சொல் - நோற்றலால் பொருளைத்தருவது. நோற்றலாவது இச்சொல்லா லிப்பொருளையறிக என்னும் சங்கேதம் (இச்சை). அதிகடம், படம் என்னும் பதங்கள் கலசம் வஸ்திரம் என்னும் பொருளை யறிவிப்பன போலவாம்.

இலக்கணைச்சொல் - பெயராக வினையாக நிற்கும் சொற்கள் தத்தம் பொருளை யுணர்த்தாது, பொருளின் சம்பந்தப் பொருளையும் தாற்பரியப் பொ

## அங்கவியல்—கூ-வது அளவையறிதல்.

**789.**

ற்றுள் தமக்காகாதன வொழித்து ஆவனகோடல்.
அளவையென்றது ஈண்டு அதனளவை. * அது மிகுதி, ஒப்பு, தாழ்வென மூவகைத்து. அறிதல் - † தம்மொடு தூக்கியறிதல். ஆராய்தல் - இவ்வளவைக்கட் சொல்லுங்காரியம் இது, சொல்லுமாறிது, சொன்னால் அதன் முடிவிது வென்று இவையுள் ளிட்டன வாராய்தல்.

தெளி:—(இ - ள்.)
சொல்லின்றொகை-சொல்லின்கூட்டத்தை, அறிந்த-தெரிந்த, தூய்மையவர்-தூய்மையினையுடையவர், (தாம் ஒன்று சொல்லுமிடத்து), அளவை - (அப்பொழுதுள்ள) சபையை, அறிந்தாராய்ந்து - தெரிந் தாராய்ந்து, சொல்லுக -

சொல்லக்கடவர், (எ - று).

சொல்லின் தொகையெனவே, செஞ்சொல், இலக்கணச்சொல், குறிப் புச்சொல் என்னும் மூவகைச்சொல்லும் அடங்கின. தூய்மை - அச்சொற் களுள் தமக்கு ஆகாதனவற்றை யொழித்து ஆவனவற்றைக்கொள்ளல். அவையென்றது இங்கு அவ்வவையினதளவினை. அவ்வளவு மிகுதி, ஒப்பு, தாழ்வு எனமூவகைப்படும். அறிதல் - தம்மோடு தூக்கி யறிதல். ஆராய்

---

ருளையும் அறிவித்தல். அது கட்டில் கரைகின்றது, கங்கையினிடைச்சேரி என்றாற் போல்வனவாம். இலக்கணச்சொல் எனினும் ஆக்கச்சொல் எனி னும் ஒக்கும். "இலக்கணையும் சத்தத்தின்கண் ணுள்ளது; ஆற்றலுடைத்தா கற் பாலதன் சம்பந்தம் இலக்கணை. அது கங்கையின்க ணிடைச்சேரி என்பது" என்பது தருக்க சங்கிரகவுரை.

குறிப்புச்சொல் - குறிப்பாற் பொருளுணர்த்துவது. (குறிப்பாவது செம்பொருளும் ஆக்கப்பொருளும் அல்லாத வேறுபொருளை யுணர்த்துந் தன்மையீதாம்.) வேங்கியமெனினும் குறிப்பெனினும் ஒக்கும். இது "செல் லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின், வல்வரவு வாழ்வார்க்குரை" என் றாற் போல்வது. இதில் வல்வரவு என்பதும் வாழ்வார் என்பதும் தலைவியுயி

ரோடிராளென்பதனையும் அவளப்படியாக
யாணும்உயிரோடிரேன்என்பதனை யும் குறிப்பித்து நின்றன.

தார்க்கீகர் குறிப்புச்சொல், சுசஞ்சொல் ஆக்கச்சொல் என்னும் மிவ

ற்றுளடங்கும் என்பர். "வடநூலார் சொற்பொருளை வாச்சியம், வேங்கியம், இலக்கணையென மூன்றெனவும், இலக்கணையை வேங்கியத்திலடக்கி இரண் டெனவுங் கூறுப. இவற்றுள், வாச்சியமென்பது

வெளிப்படை. வேங்கிய மென்பது குறிப்பு. இலக்கண

யென்பது ஒரு பொருளினது இலக்கண த்தை மற்றொரு பொருட்குத் தந்துரைப்பது." என்பர் நன்னூல் விருத்தி

யுரைகாரர். இவற்றின் விரிவை விருத்திப் பிரபாகரம் மூன்றாவது பிரகாச த்திலும், நியாயப்பிரகாசம் ஆறாவது பரிச்சேதம் பிரமாண நிரூபணத்திலும் காண்க.

* அது - சபையின் அளவு. † தம்மொடு தூக்கியறிதல் - சொல்லின் தொகையறிந்த தூய்மையவர் தம்மளவோடு (தம்மின் மிக்கார் அல்லது தம் மோடொத்தார் அல்லது தம்மிற்றாழ்ந்தார் கூடியுள்ள) சபையினதளவை யூ ராய்ந்தறிதல்.



தல் - இச்சபையில் சொல்லுங்காரியம் இது, சொல்லும் விதம் இது, சொன் னால் அதன் முடிவு இது என்று இவையுள்ளிட்டனவற்றை ஆராய்தல்.

செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொலென்பன முறையே வாசகம், லட்சகம், வியஞ்சகமென்று சொல்லப்படும்.

(க - து.) சொல்லின் தொகையினை யறிந்தவர் சபையினதள வினை யறிந்து அதற்கேற்பச் சொல்லக்கடவர் என்பது.

1. Let the pure in mind who know the art of speech, speak with deliberation knowing the nature of the court then assembled.

2.

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி .

னடைதெரிந்த நன்மை யவர்.

பரி:—(இ - ள்.) சொற்களி னடையினை யாராயிந்தறிந்த நன்மை யினை யுடையார் அவைக்கண் ஒன்று சொல்லுங்கால் அதன் செவ்வி யை யாராயிந்தறிந்து வழுப்படாமல் மிகவுந் தெளிந்து சொல்லுக, ()

சொற்களினடையாவது அம்மூவகைச் சொல்லும் செம்பொருள், இலக்கணைப்பொருள், குறிப்புப்பொருளென்னும் பொருள்களைப் பயக்கு மாறு. செவ்வி - கேட்டற்கண் விருப்புடைமை. வழு - * சொல்வழுவும் பொருள்வழுவும். இவையிரண்டுபோட்டானும் ஒன்று சொல்லுங்கால் அவை யறிந்தே சொல்லவேண்டுமென்பது கூறப்பட்டது.

தெளிவு—(இ-ள்.) சொல்லினடை - சொற்களின் நடையை, தெரிந்த-ஆராய்ந்தறிந்த, நன்மையவர் - நன்மையினை யுடையவர், (சபையினிடத்து ஒன்று சொல்லுமிடத்து), இடைதெரிந்து-(அச்சபையின்) செவ்வியை ஆராய்ந்தறிந்து, நன்குணர்ந்து - (வழுப்படாமல்) மிகவுந் தெளிந்து, சொல்லுக - சொல்லக்கடவர், (எ - று).

சொற்களினடையாவது அம்மூவகைச்சொல்லும் செம்பொருள், இலக்கணைப்பொருள், குறிப்புப்பொருளென்னும் பொருள்களை யுணர்த்தும்விதம். செவ்வி - கேட்பதில் ஆசையுடைமை, வழு - சொல்வழுவும் *பொருள்வழுவும். இவை இரண்டுபோட்டாலும் ஒன்றுசொல்லும்போது சபையினை யறிந்தே சொல்லவேண்டு மென்பது சொல்லப்பட்டது.

செம்பொருள், இலக்கணைப்பொருள், குறிப்புப்பொருளென்பன் முறையே வாச்சியம், லட்சியம், வியங்கியம் என்று சொல்லப்படும்.

(க - து.) சொற்களினடையினை யாராய்ந்தறிந்தவர் சபையினிடத்தொன்று சொல்லும் போது அதன் செவ்வியை யறிந்து வழுவின்றிச் சொல்லக்கடவர் என்பது.

* சொல்வழுவும் பொருள்வழுவும்-சொற்குற்றமும் பொருட்குற்றமும்.

2. Let those who know the uses of words speak with a clear knowledge after ascertaining the time suited to the court.

அவையறியார் சொல்லஞ்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில்.

பரி:—(இ - ள்.) அவையின தளவை யறியா தொன்று சொல்லு தலைத் தம்மேற் கொள்வார் அச்சொல்லுதலின் கூறுபாடும் அறியார், கற்று வல்ல * கலையும் அவரிக்கில்லை, (எ - று).

அம்மூவகைச் சொற்களால் வருஞ் சொல்லுதல் வகைமை கேட்பாரது உணர்வு வகைமைபற்றி வருதலாற் 'சொல்லின் வகையறியார்' என்றும், †இஃதறியார் யாதுமறியாரென்று எல்லாராலு மிகழப்படுதலின் 'வல்லதூஉ மில்' என்றுங் கூறினர். இதனால் அவையறியாக்கால் வருங்குற்றம் கூறப் பட்டது.

தெளி:—(இ - ள்.) அவை - சபையினதளவை, அறியார் – அறியாது, சொல்லல் - (ஒன்று) சொல்லுதலை, மேற்கொள்பவர் - (தம்)மேற்கொள் வார், சொல்லின்வகை-அச்சொல்லுதலின் கூறுபாடும், அறியார்-அறியாதவ ராவர், வல்லதூஉம் - (கற்று) வல்லகலையும், இல் - (அவர்க்கு) இல்லை, ()

(செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச் சொலென்னும்) அம்மூவ

கைச்சொற்களால்வரும் சொல்லுதல் வகைமை கேட்பவரது உணர்வு வகை மைபற்றிவருதலால் 'சொல்லின்வகை யறியார்' என்றும், இஃதறியார் யாது மறியாரென்று எல்லாராலும் இகழப்படுதலால் 'வல்லதூஉமில்' என்றும் சொல்லினர். இதனால் சபையை அறியாதவிடத்து வரும் குற்றம் சொல்லப் பட்டது.

(க - து.) சொல்லின் வகையினை யறியாதவர் சபையின் அள

வறியாது பேசத்தொடங்குவர் என்பது.

3. Those who undertake to speak without knowing the nature of the court are ignorant of the use of words as well as devoid of the power of learning.

ஒளியார்மு னெள்ளிய ராதல்
வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்.

---

* கலையும் - சாஸ்திரவுணர்ச்சியும்.

† இஃதறியார் - சொல்லின்வகையறியாதவர்.



பரி:—(இ - ள்.) அறிவாலொள்ளியார் அவைக்கட் டாழ மொள்ளியாக; * ஏனை வெள்ளாக வவைக்கட் டாழும் † வாலிய சுதையி னிறத்தைக் கொள்க, (எ - று).

ஒள்ளியாரென்றது ‡ மிக்காரையும், ஒத்தாரையும். அது விகாரத்தால்

ஒளியாரென நின்றது. ஒள்ளியராதல் - தந்நூலறிவுஞ் ¶ சொல்வன்மையும்

தோன்றவிரித்தல். § அவையறியாத புல்லரை 'வெளியார்' என்றது, வயிர

மின் மரத்தை + வெளிறென்னும் வழக்குப்பற்றி. ○ அவர் மதிக்கும் வகை

அவரினும் வெண்மையுடையராக வென்பார்.
'வான்கதைவண்ணக்கொளல்'

என்றார். அவையளவறிந்தார் செய்யுந்திறம் இதனுற் றெருகுத்துக் கூறப்பட்

டது. முன்னர் விரித்துக் கூறுப.

தெளி:—(இ - ள்.) ஒளியார்முன் - (அறிவால்) ஒள்ளியாரது சபையி

னிடத்து, ஒள்ளியராதல் - (தாமும்) ஒள்ளியராகக்கடவர், வெளியார்முன் -

(மற்றை) வெள்ளாகனது சபையினிடத்து, வான்வகைவண்ணம் - (தாமும்)

வெண்சுண்ணச் சாந்து நிறத்தை, கொளல் - கொள்ளக்கடவர், (எ - று).

ஒள்ளியாரென்றது மிக்காரையும், ஒத்தாரையும். அவ்வொள்ளியரென்

றது செய்யுள் விகாரத்தால் ஒளியாரென்று நின்றது. ஒள்ளியராதல் - தமது

நூலறிவும் சொல்வலிமையும் தோன்ற விரித்துரைத்தல். வயிரமில்லாதமாத்

தை வெளிறு என்னும் வழக்குப்பற்றிச் சபையறியாத புல்லரை 'வெளியார்'

என்றார். அவர் மதிக்கும்படி அவரினும் வெண்மையுடையவராக வென்பார்

'வான்சுதைவண்ணங்கொளல்' என்றார். சுண்ணமெனவறிந்தார் செய்யுந்திறம்
இதனால் தொகுத்துச் சொல்லப்பட்டது. மேல் அதனை விரித்துக் கூறுவார்.

---

* ஏனைவெள்ளைகள் - மற்றைப்பேதைகளது.

† வாலிய-வெண்ணிற முள்ள.

‡ மிக்காரையும் ஒத்தாரையும் - தம்மினும் மேம்பட்டவரையும் தமக்குச் சமமானவரையும்.

¶ செல்வன்மை - தாம்மேற்கொண்டுள்ள காரியத்தை முடித்தற்கிய
ன்ற சொற்களைச் சொல்லுந் திறம்.

§ அவையறியாதபுல்லரை - கற்பன ஆழற்றாராகிக் கல்விக்கழகத்து
ஒற்கமின்றியூத்தைதவா யங்காக்கும் அற்பை.

†"அரியகற்றாசற்றார்கண்ணும்" என்னுங்குறளிலுள்ள "இன்மையரிதே
வெளிறு" என்பதற்கு "வெண்மையில்லாமையரிது" என்று கூறியிருத்தலு
மிங்கறியத் தக்கதாம். இங்கு வெண்மை அறிவின்மையை

யுணர்த்தி மீன்

றது. இது பெருந்தேவனார் பாரதம் உத்தியோக பர்வத்தில் பலராமனைநோக்

கிச் சாத்தகி "மேனியைக்காட்டின் வெளுத்ததே" என்று கூறுவதனாலும் பிறவாற்றானு மறியப்படும். வெண்மைப்பண்பு பல பொருளுணர்த்துதலை இலக்கணக்கொத்தின் "பண்புத்தொகை விதி" என்னுஞ் சூத்திரவுரையிற் காண்க. o அவர் - வெளியார்.

## அங்கவியல்—கூ-வது அவையறிதல்.

# 793

(க - து.) சொல்லினடை தெரிந்து நன்மையவர் அறிவுடை யாரது சபையில்அறிவுடையவாயிருந்து அஃதில்லாது சபையில் அறிவில்லார்போ லிருக்கக்கடவர் என்பது.

4. Ministers should be lights in the assembly of the enlightened, but assume the pure whiteness of mortar ignorance in that of fools.

௹. நன்றென் றவற்றுள்ளு நன்றே முதுவருண்
ழுந்து கிளவாச் செறிவு.

பரி:—(இ - ள்.) ஒருவர்க்கு இது நன்றென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்களெல்லாவற்றுள்ளும் நன்றே† தம்மின் மிக்காரைக் கண் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாத வடக்கம், (எ - று).

தங்குறைவும், அவர்மிகுதியும், முந்துகிளந்தாற்படுமிழுக்கும், கிளவாக்காலெய்துநன்மையும் அறிந்தேயடங்கினமையின், அவ்வடக்கத்தினை 'நன்றென் றவற்றுள்ளு நன்று' என்றார். ‡ முன்கிளத்தலேயெ விலக்கினமையின், உடன்கிளத்தலும் பின்கிளத்தலு மாமென்பது பெற்றும். இதனால் மிக்காரைக்கட் செய்யுந்திறங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) முதுவருள் - (தம்மினும்) மிக்காரது சபையினிடத்து, முந்து - (அவரின்) முற்பட்டு, கிளவா - (ஒன்றனைச்) சொல்லாத, செறிவு - அடக்கம், நன்றென்றவற்றுள்ளும் - (ஒருவர்க்கு இது) நல்லதென்று சிறப்பித்துச்சொல்லப்பட்ட குணங்களெல்லாவற்றுள்ளும், நன்றே - சிறந்ததே, (எ-று).

தமது குறைவையும், அவர்மிகுதியையும், அவர்சொல்லுதற்குமுன்னே சொன்ன லுண்டாகுங் குற்றத்தையும், சொல்லாவிட்டால்வரும் நன்மையையும் அறிந்தே அடங்கினமையின், அவ்வடக்கத்தினை 'நன்றென் றவற்றுள்ளு நன்று' என்றார். முன் சொல்லுதலேயெ விலக்கினமையால், உடன்சொல்லுதலும் பின்சொல்லுதலும் ஆமென்பது பெறப்பட்டது. இதனால் மிக்காரது சபையினிடத்துச் செய்யும்வகை சொல்லப்பட்டது.

(க - து.) தம்மின் மிக்க அறிவுடையாரது சபையின்கண் முற்பட்டுச் சொல்லாத அடக்கமானது ஒருவர்க்கு நன்மைகளெல்லாவற்றுள்ளும் சிறந்ததாம் என்பது.

† தம்மின் மிக்கா ரவைக்கண் - தம்மினுங் கல்விகேள்வி முதலியவற்றால் மேம்பட்டவரது சபையில்.

‡ முன் கிளத்தலேயே விலக்கினமையின் - தம்மின் மிக்காரவைக்கண் அவரின் முற்பட்டுச் சொல்லுதலேயே விலக்கினமையால்.





5. The modesty by which one does not rush forward and speak in an assembly of men of superior attainments is the best among all one's good qualities.

சு. † ஆற்றி னிலேதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு.

பரி:—(இ - ள்.) விடேயித்தற்பொருட்டு ‡ நன்னெறிக்க ணின்ற ஞெருவன் அந்நெறியினின்றும் நிலேதளர்ந்து வீழ்ந்தாலொக்கும், அகன்ற நூற்பொருள்களே யுட்கொண்டு ¶ அவற்றின் மெய்ம்மை யுணரவல்லா ரவைக்கண் வல்லா ஞெருவன் $சொல்லிழுக்குப்படுதல், (எ-று).

நிலேதளர்ந்து வீழ்தல்—†உரனென்னுந் தோட்டியா ஞெரைந்துங் காத்தொழுகியான் பின்னிழுக்கிக் o கூடாவொழுக்கத்தனுதல். () பயனிழுத்தலே யன்றி இகழவும் படுமென்பதாம். இதனுன் அதன்க ணிழுக்கியவழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) வியன்புலம் - விரிந்த நூற்பொருள்களை, ஏற்று - உட்கொண்டு, உணர்வார் முன்னர் - (அப்பொருள்களின் மெய்ம்மையை) அறியவல்லவர் சபையில், இழுக்கு - (வல்லாளொருவன் சொல்) இழுக்குப் படுதல், (முத்தியடைதற் பொருட்டு நல்வழியினின்றுமொருவன்), ஆற்

---

† "நெடும்பகற் கற்ற வலையத் துதவா, துடைந்துளா ருட்குவருங் கல்வி - கடும்பகல், எதிலான் பாற்கண்ட வில்லினும் பொல்லாதே, தீதென்று நீப்பரி தால்" என்பது நீதிநெறிவிளக்கம்.

‡ நன்னெறிக்கண் - வாதஞானங்களில்.

¶ அவற்றின் மெய்ம்மையுணர வல்லார் - அகன்ற நூற் பொருள்

களது உண்மையை யறியவல்லவர். "புராணமிதி காசமெவை யும்பொரு ளனேத்தின், பிராணனறி யாதுள விடத்திலை பிதற்றே" என்றுன்றோர் கூறியிருத்தலு மிங்கறியத்தக்கதாம்.

§ சொல்லிழுக்குப்படுதல் - சொற்சோர்வடைதல். அஃதாவது சொல் லுஞ் சொல்லில் குற்றமுண்டாமாறு சொல்லுதல்.

†நீத்தார் பெருமை 4. இதன்பொருள்.

அறிவென்னும் அங்குசத்தி

னால் (மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும்)

பொறிகளாகிய யானை களைந்தனையும் தத்தமது (பரிசமுதலிய) விஷயங்களில் செல்லாவாறு தடுத்து நட்டப்பவன்.

o கூடாவொழுக்கத்தனுதல் - தான் விட்டகாம வின்பத்தை யுறுதியில் லாமையால் பின்னும் விரும்புமா று தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாததாய தீய வொழுக்கத்தை யுடையனுதல்.

() பயனிழத்தலேயன்றி-கல்வியில் வல்லான் சொல்லிழுக்குப்பட்டவிட த்துத் தான் கற்ற கல்வியின் பிரயோசனத்தை யிழந்துவிடுவதே யல்லாமல்.

அங்கவியல்—க்ஷ-வது அனைவயறிதல்.

795

றின் - அவ்வழியினின்றும், நிலைதளர்ந்தற்றே - நிலைதளர்ந்து வீழ்ந்தாலொ

க்கும், (எ-று).

நிலைதளர்ந்துவீழ்தல் - அறிவால் ஐம்பொறிகளையும் வென்றெழுகிய

வன் பின்தவறிக் கூடாவொழுக்கத்தனுதல்.

(வல்லாளொருவன்) பயனிழத்

தலேயன்றி இகழவும் படுவானென்பதாம். இதனால்

அச்சபையில் தவறிய

விடத்துண்டாகுங் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) கற்றவர் சபையில் கற்றவனொருவன் சொல்லிழுக்

குப்படுதல் முத்தியடைதற் பொருட்டு நல்வழியில் நின்றுனொரு

வன் அவ்வழியினின்றுந் தவறிவிழுந்தாற் போல்வதாம் என்பது.

6. For a minister to blunder in the presence of those

who have aquired a vast store of learning and know the value thereof is like a good man stumbling and falling away

from the path of virtue.

எ. கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

பரி:—(இ - ள்.) * வழுப்படாமற் சொற்களை

யாராயுதல் வல்லா

ரவைக்கட்சொல்லின், பல நூல்களையுங் கற்று

அவற்றினைய டயனை

யறிந்தாராது கல்வி யாவர்க்கும் விளங்கித் தோன்றும், (எ -

று).

† சொல்லினென்பது அவாய்நிலையான் வந்தது. ‡ ஆண்டே சொல்க வென்பதாம்.

தெளி:—(இ - ள்.) கசடற - வழுப்படாமல், சொற்றெரிதல் - சொற் களை ஆராய்தலில், வல்லாரகத்து-வல்லவர் சபையினிடத்து,(சொல்லின்),கற் று - (பலநூல்களையுங்) கற்று, அறிந்தார் - (அந்நூல்களாலாகிய பயனை) அறிந்தவரது, கல்வி - கல்வியானது, விளங்கும் - (யாவர்க்கும்) விளங்கித் தோன்றும், (எ - று).

சொல்லின் என்பது அவாய்நிலையால் வந்தது. (கற்றறிந்தார்) அத் தன்மையதாய சபையிலேயே சொல்லக்கடவரென்பதாம்.

(க-து.) குற்றமறக் கற்றவரது சபையில் பலநூல்களையுங் கற் று அவற்றாலாய பயனை யறிந்தவரது கல்வி விளங்கித் தோன்றும்.

---

• வழுப்படாமல் - குற்றம் உண்டாகாமல்.

† வல்லாரகத்து என்பது சொல்லின் என்பதை அவாவி (வேண்டி) நின்றது.

‡ ஆண்டே - வழுப்படாமல் சொற்களை யாராய்தல் வல்லவருள்ள சபையினிடத்தே.

7. The learning of those who have read and understood much will shine in the assembly of those who can faultlessly examine the nature of literature.

அ. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சோரிந் தற்று.

பரி:—(இ - ள்.) பிற நுணர்த்தலின்றிப் பொருள்களைத் தாமே யுணர்வல்ல அறிவினையுடையா ரவைக்கட் கற்றோர் ஒன்றனைச் சொல் லுதல், தானே வளர்வதொரு பயிர் நின்ற பாத்திக்கண் நீரினைச் சொரிந் தாற்போலும், (எ - று).

தானேயும் வளர்தற்குரிய கல்வி மிக வளருமென்பதாம். இவையிரண்டு பாட்டானும் ஒத்தாரவைக்கண் எவ்வழியுஞ் சொல்லுகவென்பது கூறப்பட் டது.

தெளி:—(இ - ள்.) உணர்வது - (பிற ருணர்த்துத லில்லாமல் பொ ருள்களைத்தாமே) அறியவல்ல அறிவினை, உண்டையார்முன் - உடையவர் சபையினிடத்து, சொல்லல்- (கற்றவர்

ஒன்றனைச்)சொல்லுதல், வளர்வதன்-(தானே) வளர்வதொருபயிர்நின்ற, பாத்தியுள் - பாத்தியினிடத்து, நீர் சொரிந்தற்று - நீரைச்சொரிந்தாற்போலும், (எ - று).

தானேயும் வளர்தற்குரிய கல்வி (உணர்வுடையார்மூற் சொல்லுத
லால்) மிக வளருமென்பதாம். இவை இரண்டு பாட்டாலும் ஒத்தாதுசபையினிடத்து எவ்வழியும் சொல்லக்கடவரென்பது சொல்லப்பட்டது.

(க-து.) கற்றவர் சபையில் கற்றவர் ஒன்றனைச் சொல்லுதல் தானேவளர்வதொரு பயிர் நிறைந்த பாத்தியுள் நீர் பெய்தாற் போல்வதாம் என்பது.

8. Lecturing to those who have the ability to understand for themselves is like watering a bed of plants growing by themselves.

கூ.

† புல்லவையுட் போச்சாந்துஞ் சொல்லற்க ‡ நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார்.

† " அவையின் நிறமறியா ராய்ந்தமர்ந்து சொல்லார், நவையின்றித் தாமுரையார் நாணுர் - சுவையுணரார், ஆய கலைதெரியா ரஞ்சா ரவரன்றே, தீய வவையோர் செருக்கு" என்று வச்சணந்திமாலை புல்லவையைப் பற்றிக் கூறுகின்றது.

‡ "புகழும் தருமமெறி கின்றோர்பொய் காமம், இகழுஞ் சினஞ்செற்ற மில்லோர் - நிகழ்க்கலைகள், எல்லா முணர்ந்தோ நிருந்த விடமன்றே, நல்லா யவைக்கு நலம்" என்று ஷ மாலை நல்லவையைப்புற்றிக் கூறுகின்றது.

## அங்கவியல்—கூ-வது அவையறிதல்.

**797**

பரி:—(இ - ள்.) நல்லாரிருந்த வவைக்கண் நல்லபோருள்களை அவர் மனங்கொள்ளச் சொல்லுதற்குரியார் * அவையறியாத புல்லரிருந்த வவைக்கண் அவற்றை மறந்துஞ் சொல்லாதொழிக, (எ-று).

சொல்லின், தம்மவை யறியாமையை நோக்கி நல்லவையும், பொருளறியாமையாற் புல்லவைதானும் இகழ்தலின், இரண்டவைக்கு மாகாரென் பது கருதிப் 'பொச்சாந்துஞ் சொல்லற்க' என்றார்.

தெளி:—(இ - ள்.) நல்லவையுள் - நல்லவரிருந்த சபையினிடத்து, நன்கு - நல்லபொருள்களை, செல - (அந்நல்லவர்) மனங்கொள்ள, சொல்லுவார் - சொல்லுதற்கு உரியவர், புல்லவையுள் - (அவையறியாத) புல்லரிரு

ந்த சபையினிடத்து, பொச்சாந்தும்-மறந்தும், சொல்லற்க-(அந்நல்லபொருள்களைச்) சொல்லா தொழியக்கடவர், (எ-று).

• (நல்லவையுள் நன்கு செலச் சொல்லுவார் புல்லவையுள்) சொல்லாமின், (அவரை) தமக்குரிய சபையை அறியாமையைக்குறித்து நல்லோர் சபையும், சென்னபொருளறியாமையால் புல்லர் சபையும் இகழ்தலால்,

(அவர்) இரண்டு சபைக்கும் ஆகாரென்பது கருதிப் 'பொச்சாந்துஞ் சொல்லற்க' என்றார். புல்லர் - கல்வியறிவில்லாதவர்.

(க - து.) நல்லவர் சபையில் நல்லபொருள்களைச் சொல்லுதற்குரியவர் அவற்றை மறந்தும் புல்லர் சபையில் சொல்லாதிருக்கக்கடவர் என்பது.

9. Those who are able to speak good things impressively in an assembly of the wise should not even forgetfully speak them in that of the fools.

கo.

அங்கண்த்து ளுக்க வமிழ்தற்றுற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

பரி:—(இ - ள்.) நல்லார் தம்மினத்த ரல்லாதா ரவைக்கண் ஒன்றனையுஞ் சொல்லற்க, சொல்லினீ அது தூயத்தல்லாத † முற்றத்தின் கணுக்க அமிழ்தினையொக்கும், (எ-று).

கொள்ளென்னும் முதனிலைத்தொழிற்பெயர்

முன்னின்று பின்னெ

திர்மறை அல் விகுதியோடு கூடி "மகனெனல்"
என்பதுபோ னின்றது.

‡ சொல்லின்

அது வென்பன அவாய்நிலையான்வந்தன. ¶ பிறரெல்லாங்கொள

---

* அவையறியாத - சொல்லும் கல்லபொருள்களை யறியாத.

† முற்றம் - முன்றில் (தலைவாயில்).

‡ கோட்டிகொளல் என்பது சொல்லின்,
அவாவி (வேண்டி) நின்றது.

அது என்பனவற்றை

¶ மற்ற வுரைகாரெல்லாம் கொளல் என்பதனை அல்லீற் றெதிர்மறை
வியங்கோள் வினைமுற்றாகக் கொள்ளாது (கொள்ளுதல் அஃதாவது சொல்

லென்பதனைத் தொழிற்பெயராக்கி யுரைத்தார்; அவர் * அத்தொழில் அமிழ் தென்னும் பொருளுவமையோடு இயையாமை நோக்கிற்றிலர். † சாவா மருந்தாதலறிந்து நுகர்வார் கையினும்படாது அவ்வங்கணத்துக்கு மியை பின்றிக் கெட்டவாறு தோன்ற 'உக்க வமிழ்து' என்றார். ‡ அச்சொல் பய னில்சொல்லா மென்பதாயிற்று. இவை யிரண்டுபோட்டானும் தாழ்ந்தாரவைக் கண் ஒருவழியுஞ் சொல்லற்கவென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (நல்லோர்) தங்கணத்தால்லார்முன் - தம்மினத்தவ ரல்லாதவரது, கோட்டி - சபையினிடத்து, கொளல் - (ஒன்றனையும்) சொ ல்லாதிருக்கக் கடவர், (சொன்னால் அது), அங்கணத்துள் - (பரிசுத்தமில் லாத) முற்றத்தின், உக்க - சிந்திய, அமிழ்தற்று - அமிர்தத்தையொக்கும். ()

கொள் என்னும் முதனிலைத்தொழிற்பெயர் முன்னேநின்று பின்னே எதிர்மறைப் பொருளதான அல் விகுதியோடு கூடி 'மகனெனல்' (மகனெ

---

லுதல் எனத்) தொழிற்பெயராக்கிக் கூறினர்; அவர் கொளலென்னும் அத் தொழில் அமிழ்து என்னும் பொருளுவமானத்தோடு பொருந்தாமையை நோக்கினரில்லை.

* தொழில் தொழிலேயுவமையாகக் கொள்ளுவதன்றிப் பொருளேயுவ மையாகக் கொள்ளுவ தின்மையான் 'அத்தொழில் அமிழ்தென்னும்பொரு ளுவமையோடு இயையாமை நோக்கிற்றிலர்' என்று கூறிப்பிறரை மறுத் தார் பரிமேலழகர். வினை, பயன், மெய், உரு என்பனவற்றைப்பற்றிவரும் உவமைகள் தம்முள் மாறிவாரா என்பதாம். கொளலென்னுந் தொழிற்கு அமிழ்தென்னும்பொருள் உவமானமாகவாராதென்று மறுக்கப்பட்டதென்க.

நச்சினார்க்கினியார் 'வினைபயன்" என்னும் (தொல்காப்பியவுவமவியற்) சூத்திரவுரையில் "உவமமென்பது ஒருபொருளோடு ஒரு பொருளினை யொப்புமைகூறுதல்." என்றும், "புலியன்னமறவனென்பது வினையுவமம், அது பாயுமாறே பாய்வனென்னுந் தொழில்பற்றி ஒப்பித்தமையின்; அற் றன்றித் தோலும் வாலும் காலு முதலாகிய வடிவும் ஏன வண்ணமும் பய னுமொவ்வா வென்பது; ஒழிந்தவற்றிற்கும் இஃ தொக்கும். 'மாரி யன்ன வண்கைத்,தேர்வே ளாயைக் காணிய சென்மே'என்பதுபயனுவமம்;என்னை? மாரியான் விளைக்கப்படும் பொருளும் வண்கையாற் பெறும் பொருளும் ஒக்கு மென்றவாறு. குடியிடை யென்பது மெய்யுவமம்; அல்குலும் ஆக மும் அகன்று காட்ட அஃகித் தோன்றும் மருங்குலால் குடி அதனோடு ஒத்தது. பொன்மேனி யென்பது உருவுவமம்;பொன்னின் கண்ணும் மேனி யின் கண்ணும் கிடந்த நிறமே ஒத்தன, பிறவொத்திலவென்பது" என்றும், வரைந்துள்ளன இங்குக் கவனித்தற் பாலனவாம்.

† சாவாமருந்து - சாவாமைக்குக் காரணமாகிய மருந்து.

‡ அச்சொல் - தாழ்ந்தவர் சபையில் சொல்லுஞ்சொல்.

அஃது உயிர்க்

குழந்திதருஞ் சொல்லாதலையறிந்து கேட்பார்காதினும் படாது தாழ்ந்தவர்க் கும் பயனில்லாது போதலின் பயனில்சொல் லாயிற்றென்க.



ன்று சொல்லற்க) என்பதுபோல் கொளல் என நின்றது. சொன்னல் என்ப தும் அது என்பதும் அவாய் நிலையால்வந்தன. சாவாமருந்தாத லறிந்து உண் பார்

கையிலுமகப்படாது அம்முற்றத்திற்கும் பொருத்தமில்லாமல் கெட்டவு கை தோன்ற 'உக்கவமிழ்து' என்றார். அச்சொல் பயனில்லாத சொல்லாமெ ன்பதாயிற்று. இவை இரண்டுபோட்டாலும் தாழ்ந்தோர் சபையினிடத்து ஒரு வழியும் சொல்லற்கவென்பது சொல்லப்பட்டது.

(க - து.) அறிவுடையார் தம்மினத்த ரல்லாதார் சபையில் ஒன்றுஞ் சொல்லாதிருக்கக்கடவர்; சொன்னால் அது தூயதல்லாத முற்றத்தில் சிந்திய அமிர்த மொக்கும் என்பது.

10. To utter a good word in the assembly of those who are not of his stock is like dropping nectar on the ground.

## பத்தாம் அதிகாரம்.

## அவையஞ்சாமை:—Fearlessness before the court.

பரி:—அஃதாவது சொல்லுதற்தரிய அவையினையறிந்து சொல் லுங்கால் அதற்கஞ்சாமை. *அதிகாரமுறைமையும் இதனுளேவிளங்கும்.

தெளி:—அஃதாவது சொல்லுதற்குரிய சபையினையறிந்து சொல்லும் போது அச்சபைக்கு அஞ்சாமை. அதிகார முறைமையும் இதனுலே விள ங்கும்.

க். வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்

றேருகையறிந்த தூய்மை யவர்.

பரி:—(இ-ள்.) கற்றுவல்லவனை †அல்லாவவை யென்னும் அவை

வகையினை யறிந்து வல்ல அவைக்கண் ஒன்று சொல்லுங்கால் அச்சத் தான் வழுப்படச் சொல்லார், சொல்லின்றேருகையெல்லா மறிந்த தூய் மையினை யுடையார், (எ - று).

‡ இருந்தாது வண்மை அவைமே லேற்றப்பட்டது. ¶வல்லவை யென் பதற்குத் தாங்கற்றுவல்ல நூற்பொருள்களை யென்றுரைப்பாரு முளர். அச்

* அவையறிதற்குப்பின் அவையஞ்சாமை வைத்த மையும். † அல்லாவவை-மூடர்சபை.

அதிகாரமுறை

• ‡ அவையில் இருந்தவாது வண்மையை அவையின்மேல் 'ஏற்றி வல்ல வை'என்று கூறினமையின், இஃது இடத்தினிகழ் பொருளின் குணம் இட த்தின்மேலாய உபசார வழக்காம்.

¶ வல்லமை யென்பதனை அதிகாரத்தொக்குநின்ற குறிப்புப்பெயரெச்சத் தொடராகக் கொள்ளாது, அஃறிணைப்பன்மை வினையாலணையும் பெயராக்கி, அதற்குத் தாங்கற்றுவல்ல தூற்பொருள்களையென் றுரைகூறுவாரு முண்டு.



சத்தானென்பது அதிகாரத்தான் வந்தது. சொல்லின்றொகை, தூய்மை யென்பனவற்றிற்கு மேலுரைத்தாங் குரைக்க.

தெளி:—(இ - ள்.) சொல்லின்தொகை யறிந்த -சொற்களதுதொகை யெல்லாம் அறிந்த, தூய்மையவர் - தூய்மையினை யுடையவர், வகையறிந்து - (கற்றுவல்லார்சபை கற்றுவல்லாதார் சபை என்னும் சபையின்) வகையினையறிந்து, வல்லமை(கற்று)வல்லாரது சபையில், (ஒன்றுசொல்லும் போது), வாய்சோரார்—(அச்சத்தால்) பிழைபடச் சொல்லார், (எ - று).

சபையிலிருந்தாரது வல்லமையைச் சபையின்மேல் ஏற்றி 'வல்லமை' என்று கூறினார். அச்சத்தால் என்பது அவை யஞ்சாமை யென்னும் அதிகாரத்தால்வந்தது. சொல்லின் தொகை, தூய்மை யென்பனவற்றிற்கு அவையறிதலின் முதற்குறளின் விசேடவுரையிற்கூறியவாறு கூறிக்கொள்க.

(க - து.) சொற்களது தொகையை யறிந்த பெரியோர் சபையிலொன்று சொல்லும்போது

சபையினது வகையை யறிந்து பிழையில்லாது பேசுவர் என்பது.

1. The pure who know the classification of words having first through fear ascertained the nature of the court will not, falter in their speech before that powerful body.

உ. கற்றருட் கற்ற ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார்.

பரி:—(இ - ள்.) கற்றவல்லாரிலும் இவர் நன்கு கற்றரென்று உலகத்தாரால் சொல்லப்படுவோர், கற்றாரவைக்கண் அஞ்சாதே தாங்கற்ற வற்றை அவர் மனங்கொள்ளும்வகை சொல்லவல்லார், (எ - று).

உலகமறிவது + அவையே யாகலின், அதனைப் புகழப்படுவோருமவ ரென்பதாம்.

தெளி:—(இ - ள்.) கற்றார்முன் - கற்றாரது சபையினிடத்து, (அஞ்சா மலே), கற்ற - (தாம்) கற்றவித்தைகளை, செல - (அக்கற்றவர் மனங்)கொள்ளுஞ்வகை, சொல்லுவார் - சொல்லவல்லவர், கற்றருள் -

கற்றவரொல்லாரி
னும், கற்றூர் - (இவர்) நன்றாகக்கற்றவர்,
தாரால்) சொல்லப்படுவார், (எ - று).
எனப்படுவர் - என்று (உலகத்

உலகமறிவது அவரையே யாகலின், அவ்வுலகத்தினால் புகழப்படுவா
ரும் அவரென்பதாம். உலகமென்றது இங்கு உயர்ந்தோரை.

(க - து.) கற்றவரது சபையில் தாங்கற்ற
வித்தைகளை அவர்

அங்கீகரித்துச் சொல்ல வல்லவரே மிகக் கற்றோராவர் என்பது.

+ அவரையே யாகலின் - கற்றவரது சபையில் அஞ்சாமலே தாங்கற்ற
வற்றை அக்கற்றவர் மனங்கொள்ளும்படி சொல்லவல்லவரையே யாதலால்.

அங்கவியல்—யி-வது அவையஞ்சாமை.

**801**

2. Those who can agreeably set forth their acquire- ments before an assembly of the learned will be regarded as the most learned among the learned.

கூ. பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்.

பரி:—(இ-வீ.) † பகையிடை யஞ்சா து புகீதச் சாவவல்லார் உல கத்துப்பலர்; அவையிடை யஞ்சா துபுகீதச் சொல்லவல்லார் சிலர், ()

‡ அஞ்சாமை சாவாரென்பதனோடுங் கூட்டி, $ அதனுற் சொல்லவல் லாரென்பது வருவித் துரைக்கப்பட்டது. இவை மூன்று பாட்டானும் அவையஞ்சாது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) பகையகத்து - பகையினிடத்து, சாவார் - (அஞ் சாமற்சென்று) இறக்கவல்லவர், எளியர் – (உலகத்துப்) பலர், அவையகத் து - சபையினிடத்து, அஞ்சாதவர் – அஞ்சாமற் (சென்று) சொல்ல வல் லவர், அரியர் - சிலர், (எ - று).

அஞ்சாமை யென்பதைச் சாவாரென்பதனோடுங்கூட்டி, அதனல் சொல்ல வல்லவரென்பது வருவித்துச் சொல்லப்பட்டது. இவை மூன்றுபாட்டா லும் சபைக்கு அஞ்சாதவாது சிறப்புச் சொல்லப்பட்டது. இங்கு எளிய ரென்பது பலரென்னும் பொருளையும், அரியரென்பது சிலரென்னும் பொருளையும் உணர்த்தி நின்றன.

(க - து.) கற்றூர் சபையிற்சென்று அஞ்சாது

பேசவல்லவர் சிலரேயாவர் என்பது.

3. Many indeed may fearlessly plunge in the midst of foes and die in warfare; but few there are who can fearlessly enter in the assembly of the learned.

ச. கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்.

பரி:—(இ - ள்.) பலநூல்களையுங் கற்றாரவைக்கட் டாங்கற்றவற்
றை அவர் மனங்கொள்ளு மாற்றற் சொல்லி ¶ அவற்றின் மிக்கபொருள்
களை அம்மிகக் கற்றரிடத் தறிந்துகொள்க, (எ - று).

எல்லாம் ஒருவர்க்குக் கற்றல் கூடாமையின் வேறுவேறுய
கல்வியுடை

யார் பலரிருந்த அவைக்கட் டாங்கற்றவற்றை அவர்க்கேற்பச் சொல்லுக ;

† பகையிடை - தம்பகைவரது போர்க்களத்தில்

‡ அஞ்சாதவரது தொழிலீய அஞ்சாமை சாவார் என்பதனோடுங் கூட்டப்பட்டது. அஞ்சாமை (அஞ்சாமல்) சாவாரென்று கொள்க.

$ அதனால்-அஞ்சாமை யென்பதனால். ¶



அவற்றின் - தாங்கற்றவற்றின்.

சொல்லவே, * அவரும் †
அவையெல்லாஞ்சொல்லுவராகலான், எனைக்கற் கப்பெறுதன
கேட்டறியலாமென்பதாயிற்று. இதனால் ‡ அதன தொருசார்
பயன் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கற்றார்முன் - (பலநூல்களையுங்)
கற்றாரது சபை யினிடத்து, கற்ற - (தாம்) கற்றவித்தைகளை,
செல - (அக்கற்றவர்) மனங் கொள்ளும் வழியால், சொல்லி
- கூறி, தாங்கற்ற - தாம்கற்றவித்தைகளி னும், மிக்க -
அதிகமான பொருள்களை, மிக்காருள் - அவ்வதிகமாகக் கற்ற
வரிடத்து, கொளல் (அறிந்து) கொள்ளக்கடவர், (எ - று).

(கற்கவேண்டியவற்றை) எல்லாமொருவர்க்குக் கற்றல் கூடாமையால்
வேறு வேறுகிய கல்வியுடையவர் பலரிருந்த சபையில் தாங்கற்றவித்தைகளை
அக்கற்றவர்க்குமனங்கொள்ளுமாறுசொல்லக்கடவர்;
சொல்லவே, அவரும் அவ்வித்தைகளை யெல்லாம்
சொல்லுவாராதலால், மற்றைக் கற்கப்பெறுத வித்தைகளைக்
கேட்டறியலா மென்பதாயிற்று. இதனால் அவையஞ்சாமை
யினது ஒருசார்பயன்சொல்லப்பட்டது.

(க - து.) கற்றவர் கற்றவாது சபையில்
தாங்கற்றவற்றைப் பொருந்தச் சொல்லித்
தாங்கல்லாதவற்றை யவரிடத்தறிந்து கொள்ளக்

கடவர் என்பது.

4. Ministers should agreably set forth their acquire- ments before the assembly of the learned and acquire more knowledge from experts in learning.

ரு. ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

பரி.—(இ - ள்.) சொல்லிலக்கண நெறியானே அளவைநூலை அமைச்சர் உட்பட்டுக் கற்க, வேற்று வேந்த ரவையிடை யஞ்சாது அவர் சொல்லிய சொற்கு உத்தரஞ் சொல்லுதற்பொருட் டு, (எ - று).

¶ அளவைநூல் o சொன்னூல் கற்றே கற்க வேண்டுதலின், †அதற்

---

* அவரும் - வேறு வேறுய கல்வியுடையாரும்.

† அவையெல்லாம் - வேறுவேறுய கல்விகளெல்லாம்.

‡ அதனதொருசார்பயன் - அவையஞ்சாமையின்

ஒருவகைப் பிரயோச
ணம். ¶ அளவைநூல் - தருக்கநூல்.

o சொன்னூல் கற்ற பிறரு அளவைநூல் கற்கவேண்டுமென்பதாம்;
இதனால் இலக்கணநூற் பயிற்சியில்லார்க்குத் தருக்கநூற் பயிற்சி சித்தியாதென்பதாயிற்று. o

+அதற்கு - தருக்கநூலுக்கு ; அஃதாறெனப்பட்டது - சொல்லிலக்கணநூல் வழி யென்று கூறப்பட்டது.

அங்கவியல்—யி-வது அவையஞ்சாமை.

803

கஃதாறெனப்பட்டது. *அளக்குங் கருவியை'அளவு'என்றூர்;ஆகுபெயரான். † அவர் சொல்லை வெல்வதொருசொற் சொல்லலாவது நியாயத்து ‡ வாத சற்ப விதண்டைகளும் சல சாதிகளும் ¶ முதலியகற்றூர்க்கே யாகலின், o அவற்றைப் பிழையாமற் கற்கவென்பதாம். இதனால் ‖ அதன் காரணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) அவை - (வேற்று வேந்தாது) சபையில், அஞ்சா - அஞ்சாமல், (அவ்வேற்று வேந்தர் சொல்லிய சொற்கு), மாற்றங்கொடுத்தற் பொருட்டு - உத்தாஞ் சொல்லுதற் பொருட்டு, ஆற்றின் - (சொல்லிலக்கண) வழியாலே, அளவு - அளவை நூலை, அறிந்து - உட்பட்டு, கற்க - (மந்திரி

கள்) கற்கக்கடவர். (எ - று).

---

* அளத்தற் குரிய கருவி (பிரமாணம்) காரியவாகு பெயரால் 'அளவு' என்று கூறப்பட்டது. அளத்தல்-காரியம்; கருவி-காரணம்.

அளவை-பிரத்தியட்ச முதலிய பிரமாணங்கள்.

அளத்தல்-பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களால் கட முதலிய விடயங்களையுள்ளவா றறிதல். அளத்தல் வழக்கிற்குச்சிறந்த கருவியா யிருப்பது அளவை யெனப்படும். அளப்பவன்-பிரமாதா; பிரமாணம்=அளவை;அளத்தல்—பிரமிதி அல்லது பிரமை; அளக்கப் படுவது பிரமேயம் என்று கூறப்படும்.

அளவையின் வகையைப் பற்றி அருளுடைமை இரண்டாவது குறளின் விசேட வுரையிலும் குறிப்

புரையிலும் விரிவாக வரைந் திருத்தலறிக.

† அவர் - வேற்று வேந்தர்.

‡ வாதம் - தத்துவ (உண்மை)ப் பொருளையறியும் வேட்கையு (விருப்ப

மு)டையபுருடரிருவருள் ஒருவருக்கொருவர் உண்டாகும் விழுவிடையா கிய கதை. இது தத்துவ நிர்ணயத்தைப் பயனுகவுடைமையின் பெரும்பான்

மையுங் குருஜீட சம்வாதமாம்.

ஜல்பம் - (சற்பம்) ஒருவரையொருவர் வெல்லவேண்டு மென்னும் விருப்புடைய புருஷர்கள் தமது பக்ஷங்களை ஸ்தாபித்தலாகிய கதை.

விதண்டை - வெல்லும் வேட்கையுடைய புருஷர்கள் தமது பட்சத்தை ஸ்தாபித்தலில்லாக் கதை.

சலம் - ஒரு பொருள் கருதிச் சொல்லியதற்கு வேறு பொருள் கற்பித்துக்கொண்டு பழித்தல்.

சாதி - அசத் (போலி) உத்தரம்.

¶ முதலிய என்றமையின், வாதம் பேசுவார் தோல்வியுறுதற்கேதுவாய தோல்வித்தானம், ஏதுப்போலி, வியாகாதம், ஆன்மாசிரியம், அந்நியோன் யாசிரயம், சக்கிரிகை, அநவஸ்தை, பிரதிபந்தி, கல்பநாலாகவம், கல்பநா
கௌரவம், உத்சர்க்கம், அபவாதம், வையாத்தியயம், வினிகமநவிரகம், பிராக்லோப மென்பனவற்றையுங் கோள்க.

o அவற்றை - வாதசற்ப முதலாயவற்றை.

‖ அதன் காரணம் - அவையஞ்சாமையின் காரணம் (சொல்லிலக்கண நெறியானே அளவே நூலிலக்கற்றல்).



அளவை நூல் சொல்லிலக்கண நூல் கற்றே

கற்கவேண்டுதலால், அத ற்கு அஃது ஆறு எனப்பட்டது.
அளக்குங் கருவியை ஆகுபெயரால்'அளவு' என்று கூறினார்.
அவர் சொல்லை வெல்வதாகிய வொருசொல் சொல்ல
லாவதுநியாய நூலில் வாதசெற்ப விதண்டைகளும்
சலசாதிகளுமுதலியவற் றைக் கற்றவர்க்கே யாதலால்,
அவற்றைப் பிழைபடாமல் மந்திரிகள் கற்கக் கடவரென்பதாம்.
இதனால் அதன் காரணம் சொல்லப்பட்டது.

(க - து.) மந்திரிகள் வேற்றரசர் சபையி
லஞ்சாமலுத்தரஞ் சொல்லுதற் பொருட்டுத்
தருக்கநூலைக் கற்கக் கடவர்.

5. Ministers should learn logic according to the rules of grammar to enable them to reply fearlessly before a foreign court.

சு. வாளோடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலோடெ
னுண்ணவை யஞ்சு பவர்க்கு.

பரி:—(இ - ள்.) வன்கண்மை யுடையரல்லாத ா ர்க்கு வாளோ டென்ன வியைபுண்டு, அதுபோல நுண்ணியா ரத வையை யஞ்சுவார்க்கு நூலோடென்ன வியைபுண்டு, (எ - று).

† இருந்தாரது நுண்மையவையே லேற்றப்பட்டது. ‡ நூற்குரியரல்ல ரென்பதாம்.

தெளி:—(இ - ள்.) வன்கண்ணரல்லார்க்கு- செளரியமுடையரல்லாத வர்க்கு, வாளொடு - வாளாயுதத்துடன், என் - என்ன (சம்பந்தமுண்டு), (அதுபோல), நுண்ணனை - நுண்ணறிவுடையவரது சபைக்கு, அஞ்சுப வர்க்கு - அஞ்சுவார்க்கு, நூலொடு - நூலுடன், என் - என்ன (சம்பந்த முண்டு), (எ - று).

அவையிலிருந்தாரது நுண்மையை அவ்வயின்மேல் ஏற்றி "நுண்ணனை"

என்று கூறினர்.(நுண்ணனை யஞ்சுபவர்)நூலுக்கு உரியவரல்ல ரென்பதாம். என்னென்னும் விரு விரண்டும் சம்பந்தமில்லை யென்னும் பொருளுணர்த்தி நின்றன.

(க-து.) நுண்ணறிவுடையாரது சபையைக்கண்டஞ்சுவோர் கற்ற கல்வி பயன் தருவதாகாது என்பது.

† இஃது இடத்துநிகழ் பொருளின்குணம் இடத்தின்மேலாய உப சாரவழக்காம். இடத்து நிகழ்பொருள் — சபையிலுள்ள நுண்ணறிவுடை யார்; இடத்துநிகழ் பொருளின்குணம் - அவரது நுண்ணறிவு; இடம் - சபை.

‡ நுண்ணறிவுடையாரது சபையைக் கண்டு அஞ்சுவோர் நூல்களை வாசித்தற் குரிமையுடையரல்ல ரென்பதாம்.

அங்கவியல்—யி-வது அவையஞ்சாமை.

**805**

6. What have they to do with a sword who are not valiant, or they with learning who are afraid of an intelligent assembly of the learned.

எ. படையகத்துப் பேடிகை யொள்வா * ளவையகத்

தஞ்சு மவன்கற்ற நூல்.

பரி:—(இ - ள்.) எறியப்படும் படைநடுவண் † அதனையஞ்சும் பேடி பிடித்த கூர்வாளை யொக்கும்,

சொல்லப்படும் அவைநடுவண் ‡ அதனை யஞ்சுமவன் கற்ற நூல், (எ - று).

¶ பேடி - பெண்ணியல்புமிக்கு ஆணியல்பு முடையவள். ○ களமும் வாய்த்துத் () தானும் நன்றுயிருந்ததே யாயினும் பிடித்தவள் குற்றத்தால் வாள் சிறப்பின்றுயினற்போல, அவையும் வாய்த்துத் ‖ தானும் நன்றுயிருந் ததே யாயினுங் கற்றவன் குற்றத்தால் நூல் சிறப்பின்றுயிற்று.

தெளி:—(இ - ள்.) அவையகத்து - (சொல்லப்படுஞ்) சபைநடுவில், அஞ்சுமவன் - (அதற்கு) அஞ்சுகின்றவன், கற்றநூல் - கற்ற நூலானது, பகையகத்து- (எறியப்படும்) பகைநடுவில், பேடி-(அதற்கஞ்சும்) பேடி, கை- கையில்,(பிடித்த), ஒள்வாள் - கூரியவாளை (ஒக்கும்), (எ - று).

பேடி - பெண்ணியல்புமிருந்து ஆணியல்பு முடையவள். போர்க்கள மும் வாய்த்துத் தானும் நன்றுயிருந்ததே யாலுலும் பிடித்தவளது குற்றத் தால் வாள் சிறப்பில்லாதாயினற் போன்று, சபையும் வாய்த்துத் தானும் நன்றுயிருந்ததேயாலுலும் கற்றவனது குற்றத்தால் நூல் சிறப்பில்லா தாயிற்று.

(க - து.) சபைக்கஞ்சுவான் கற்றகல்வி

பயன்படுவதின்றும்.

---

* "அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லார், அவையஞ்சா வாகுலச் சொல்லு - நவையஞ்சி ஈத்துண்ணுர் செல்வமும் கல்கூர்ந்தா ரின்னலமும், பூத்தலிற் பூவாமை நன்று" என்று நீதிநெறிவிளக்கங் கூறுவது இங்குணர்தற்பாலதாம்.

† அதனை - பகையை. ‡ அதனை - சுமையை.

¶ பெண்ணவாவியாணிழந்தது பேடியாம்; ஆணவாவிப் பெண்ணிழந்
தது அலியாம். "வேயோ திரண்மென்றோள் வில்லே கொடும்புருவம், வாயே வளர்பவள மாந்தளிரே மாமேனி, நோயோ முலைசுமப்ப தென்றூர்க் கருகி நுந்தார், ஏயே யிவளொருத்தி பேடியோ வென்றூர், எரிமணிப்பூண் மேகலை பாள் பேடியோ வென்றூர்" என்று சீவக சிந்தாமணி கூறுவதால் பேடியின் உண்மை நன்கு விளங்கும்.

o களமும்வாய்த்து - போர்செய்யுமிடமும் கிடைக்கப்பெற்று.

() தானும் - வீரமும். || தானும் - நாலும்.

7. The learning of him who is diffident before a learned assembly is like the sharp sword of an hermaphro- dite in the presence of his foes.

எ. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார்.

பரி:—(இ - ள்.) நல்லாரிருந்த வவைக்கண் நல்ல சொற்பொருள் கலைத் தம்மச்சத்தான் அவர்க்கேற்கச் சொல்லமாட்டாதார் பலநூல் கலைக் கற்றாயினும் உலகிற்குப் பயன்படுதலிலர், (எ - று).

அறிவார்முற் சொல்லாமையிற் கல்வியி னுண்மை யறிவாரில்லை யென்பதாம். † இனிப் பயமிலரென்பதற்குக் கல்விப்பயனுடைய ரல்ல ரென் றுரைப்பாருமுளர்.

தெளி:—(இ - ள்.) நல்லவையுள் - நல்லவரிருந்தசபையுள், நன்கு - நல் லசொற்பொருள்களை, (தமது அச்சத்தால்), செல - (அந்நல்லவர்க்கு) ஏற்க, சொல்லாதார் - சொல்லமாட்டாதவர், பல்லவைகற்றும்-

பலநூல்களைக்கற்ற ாயினும், பயமிலர் - (உலகத்திற்குப்) பிரயோசனப்படுதலிலர், (எ - று).

(பலநூல்களைக் கற்ற அவர்) அறிவார்முன் நல்ல சொற்பொருள்களைச் சொல்லாமையால் அவரது கல்வியினுண்மையை அறிவார் இல்லை யென்ப தாம்.

(க - து.) நல்லவர் சபையில்நல்லசொற்பொருள்களை அவர்க் கேற்பச் சொல்லாதவர் பலநூல்களைப் படித்திருந்தாலும் அவற் றாலுலகிற்குப் பயன்படுதலிலராவர் என்பது.

8. Those who cannot speak good things agreeable to
an assembly of the learned, are indeed unprofitable persons in spite of their varied acquirements.

கூ. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்.

பரி:—(இ - ள்.) நூல்களைக் கற்றுவைத்தும் அவற்றற் பயனறிந்து வைத்தும் நல்லாரிருந்த அவையினையஞ்சி ஆண்டுச் சொல்லாதாரை
உலகத்தார் கல்லாதவரினுங் கடையரென்று
சொல்லுவர், (எ - று).

† இனிப்பயமிலர் என்பதற்கு (நல்லவையுள் நன்கு செலச்சொல்லாதார்) கல்வியின் பிரயோஜனமுடையரல்ல ரென்று பொருள் கூறுவாரு முண்டு.

## அங்கவியல்—ம-வது அவையஞ்சாமை.

# 807

அக்கல்வியறிவுகளாற் பயன் முழுமெய்தாது பிறரையெய்துவிப்பதுஞ் செய்யாது ‡ கல்வித்துன்பமே யெய்திநிற்றலின் 'கல்லாதவரிற் கடை' என உலகம் பழிக்கு மென்பதாம்.

தெளி:—(இ - ள்.) கற்றும் - (நூல்களைக்) கற்றிருந்தும், அறிந்தும் - (அந்நூல்களாற்பயனை) அறிந்திருந்தும், நல்லார் - நல்லவர் (இருந்த), அவை - சபைக்கு, அஞ்சுவார் - அஞ்சி (அச்சபையினிடத்துச்) சொல்லாதவரை, கல்லாதவரின் - கல்லாதவரிலும் (மூடரிலும்), கடை - கடையர், என்ப - என்று (உலகத்தார்) சொல்லுவர், (எ - று).

(கற்றறிந்துநல்லாரவையஞ்சுவார்) அக்கல்வியறிவுகளால்பயனைத்தாமும் அடையாமல் பிறரை அடைவிப்பதுஞ்செய்யாமல் கல்வித்துன்பமே அடைந்து நிற்றலால் (அவரை) 'கல்லாதவரிற் கடை' என உலகம் பழிக்குமென்ப தாம். கடையர் - கீழ்ப்பட்டவர். கற்றுமென்னுமும்மை தொக்கு நின்றது.

(க - து.) நூல்களைக் கற்றறிந்தும் நல்லவரிருந்த சபையைக் கண்டஞ்சுவோர் கல்லாதவரிலும் கடையராவர் என்பது.

9. They who have learned and understood are afraid of the assembly of the learned, are said to be inferior even to the illeterate.

க0. உளரெனினு மில்லாரோ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

பரி:—(இ - ள்.) † அவைக்களத்தை யஞ்சித் தாங்கற்றவற்றை அதற் கேற்கச் சொல்லமாட்டாதார் உயிர்வாழ்கின்றாயினும், உலகத்தாரா லெண்ணப்படாமையின் இறந்தாரோ டொப்பர், (எ - று).

ஈண்டுக் களனென்றது * ஆண்டிருந்தாரை. இவையைந்து பாட்டானும் அவையஞ்சுவார திழிபு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.)

களன் - சபைக்கு, அஞ்சி - பயந்து, கற்ற - (தாம்) கற்றவற்றை, செல - (அச்சபைக்கு) ஏற்க, சொல்லாதார் சொல்லமாட்டாதவர், உளரெனினும் - உயிர்வாழ்கின்றாரானாலும்,

(உலகத்தாரால் எண்ணப் படாமையால்), இல்லாரோடொப்பர் - இறந்தவரோடொப்பாவார், (எ - று).

இங்குக் களன் (சபை) என்றது அங்கிருந்தவரை. இவை ஐந்துபாட் டாலும் சபைக்கஞ்சுவோரது இழிவு சொல்லப்பட்டது.

*(க - து.) சபைக்குப் பயந்து தாங்கற்றவற்றை அதற்கேற்பச் சொல்லமாட்டாதவர் உயிரோடிருப்பினும் இறந்தவரோடொப் பாவர் என்பது.

---

‡ கல்வித்துன்பம் - கல்வியைக் கற்றதாலாய துன்பம்.

† அவைக்களம் - சபை. * ஆண்டு - சபையில்.



10. Those who through fear are unable to set forth their learning acceptable to the learned assembly, though alive, are yet classed among the dead.

# பதினொன்றும் அதிகாரம்.

## நாடு:—The Country.

பரி:—இனி அவ்வாசனலும் அமைச்சனலுங் கொண்டுமிக்கப்படு

வதாயீ ஏனை அரண் * முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்

றுய நாடு ஓதிகாரத்தாற் கூறுகின்றார். அஃதாவது இன்னதென்ப

தூஉம் அதிகார முறைமையும் இதனுள் விளங்கும்.

தெளி:—இனி அவ்வரசனலும் மந்திரியாலும் கொண்டு செலுத்தப்படு

வதாய் மற்றை அரண் முதலிய அங்கங்களுக்கு அவசியமாக வேண்டும் சிறப்

பினையுடையதாகிய நாட்டினை ஓதிகாரத்தால் சொல்லுகின்றார். அஃதா

வது இத்தன்மையதென்பதும் அதிகாரமுறைமையும் இதனுள் விளங்கும்.

க. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

பரி:—(இ - ள்.) தன்றக விளையுளை சீ

செய்வோரும் அறவோ

நும் கேடில்லாத செல்வமுடையோரும் ஒருங்கு வாழ்வதே நாடாவது.

† மற்றை யுயர்திணைப் பொருள்களோடுஞ் சேர்தற்றொழிலோடும்இயை யாமையின், விளையுளென்பதுஉழவர்மேனின்றது. குன்றுமை-எல்லாவுணவு

களும் நிறைய வளவாதல் ‡ இதனுன் வாழ்வார்க்கு வறுமையின்மை பெறப் பட்டது. அறவோர்-துறந்தோர் அந்தணர் ¶ முதலாயினோர். † "நற்றவஞ்

---

* முதலிய அங்கங்கள் என்றது பொருள், படை, நட்புக்களை.

† விளையுள் என்னுந் தொழில் மற்றை யுயர்திணைப் பொருள்களாகிய தக்காரும் தாழ்விலாச் செல்வரும் என்பவற்றிற்கேடும் சேர்வது என்னுஞ் சேர்தற் றொழிலோடும் கூடிப் பொருந்தாமையினால், இங்கு அஃது அத் தொழில் செய்யும் உழவர்மேனின்றது. விளையுள் என்னுஞ்

தொழில் அத

னைச் செய்பவரையுணர்த்தாதலால் காரியவாகு பெயராம்.

‡ இதனுன் - வினையுள்குன்றுமையினால்.

¶ முதலாயினோர்

என்றமையின் சான்றோரையுங் கொள்க.

+சீவக சிந்தாமணி நாமகளிலம்பகம் 48.

இதன் பொருள்-அவ்வேமாங்

கதநாடு (வீடடையுமாறு) சிறந்த தவத்தைக் செய்பவர்க்கு இடம்; (மறுமை யின்பங்கருதி) இல்லறம் நடத்துவோர்க்கும் இடம் என்பது.

## அங்கவியல்—கக-வது நாடு.

# 809

செய்வார்க்கிடந் தவஞ்செய்வார்க்கு மஃதிடம்" என்றார் பிறரும் *† இதனால் அழிவின்மை பெறப்பட்டது. கேடில்லாமை - வழங்கத் தொலையாமை. ‡செல்வர் - கலத்தினுங் காலினும் அரும்பொருடருவும் வணிகர். ¶ இதனால் அரசனுக்கும் வாழ்வார்க்கும் பொருள் வாய்த்தல் பெறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) நாடு - நாடாவது, தள்ளாவிளையுளும் - குன்றுத விளையுளைச் செய்வோரும், தக்காரும் - அறவோரும், தாழ்விலாச்செல் வரும் - கேடில்லாத செல்வமுடையோரும், சேர்வது - கூடி வாழ்வதே,().

விளையுளென்பது மற்றைத் தக்காருந் தாழ்விலாச் செல்வருமென்னு முயர்திணைப் பொருள்களோடும் சேர்வது என்னும் சேர்தற்றொழிலோடும் பொருந்தாமையால், உழவரை உணர்த்தி நின்றது. குன்றுமை - எல்லா வுணவுகளும் நிறையவுண்டாதல். இதனால் வாழ்வார்க்கு வறுமையில்லாமை பெறப்பட்டது. அறவோர்-துறந்தோர் அந்தணர் முதலாயினோர். இதனால் அழிவில்லாமை பெறப்பட்டது. செல்வத்திற்குக் கேடில்லாமை-அது கொடு க்கக்குறையாமை. செல்வர் கப்பலிலும் வண்டியிலும் அருமையாகிய பொரு ளைக் கொண்டுவந்துதரும் வணிகர். இதனால் அரசனுக்கும் வாழ்வார்க்கும் பொருள் கிடைத்தல் பெறப்பட்டது. விளையுள் - விளைவு.

(க - து.) உழவரும் அறவோரும் செல்வரும் கூடி வாழ்வதே நாடாம் என்பது.

1. A kingdom is that in which those who carry on
complete cultivation, virtuous men and merchants with

inexhaustible wealth live together.

உ. பெரும்பொருளாற் * பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விகளவது நாடு.

† இதனுல் அழிவின்மை பெறப்பட்டது - தக்காரிருத்தலினுல் நாட்டிற் கழிவில்லாமை பெறப்பட்டது.

‡ சிலப்பதிகாரம் மனையறம் படுத்த காதையில் "உரைசால் சிறப்பினரசுவிழை திருவிற், பரதர் மலிந்த பயங்கெழு மாநகர், முழங்குகடன் ஞால முழுவதும் வரினும், வழங்கத் தவாஅ வளத்த தாகி, யரும்பொரு டரூஉம் விருந்திற் றேஎ, மொருங்குதொக் கன்ன வுடைப்பெரும் பண்டம், கலத்தினுங் காலினுங் தருவன ரீட்டக், குலத்திற் குன்றுக் கொழுங்குடிச் செல்வர், அத்தகு திருவி னருந்தவ முடித்தோர், உத்தர குருவி னெப்பத் தென்றிய" என்று கூறியிருத்தலு மிங்கறியத் தக்கதாம்.

¶ இதனுல் - தாழ்விலாச் செல்வ நிருத்தலினுல்.

* பெட்டக்கது என்பது பெள்தக்கது எனப்பிரிபடும். பெள் என்பது விருப்பம் என்னும் பொருள்தரும் மூதனிலைத்தொழிற்பெயர். பெட்டல் - விரும்புதல்.





பரி:—(இ - ள்.) அளவிறந்த பொருளுடைமையாற் பிறதேயத்தா ரானும் விரும்பத்தக்கதாயிக்

கேடின்மையோடு கூடி மிகவினவதே நாடாவது; (எ - று).

அளவிறப்பு— * பொருள்களது † பன்மைமேலும் தனித்தனி அவற்றின் மிகுதி மேலும் நின்றது. ‡ கேடாவது மிக்கபெயல், பெயலின்மை, எலி, ¶ விட்டில், கிளி, § அரசண்மை யென்றிவற்றுன் வருவது. "மிக்க பெய லோடுபெய லின்மையெலி விட்டில்கிளி, 0 யக்கணர சண்மையோ | டாறு." ‖ இவற்றை வடநூலார் + ஈதிக ளென்ப. ‡‡ இவற்றுண் முன்னையவற்ற தின்மை அரசனறத்தானும், பின்னையதின்மை அவன் மறத்தானும் வரும். 00 இவ்வின்மைகளான் மிகவினவதாயிற்று.

தெளி:—(இ - ள்.) நாடு - நாடாவது, பெரும்பொருளால் - அளவிறந்த பொருளுடைமையால், பெட்டக்கதாகி - (பிறதேயத்தாராலும்) விரும்பத் தக்கதாய், அருங்கேட்டால் - அழிவில்லாமையோடுகூடி, ஆற்றவினவது— மிகவினவதே, (எ - று).

(பொருள்) அளவிறந்திருத்தலாவது பொருள்களது பன்மையின் மேலும் தனித்தனியாக அப்பொருள்களது மிகுதியின் மேலும் நின்றது. கேடாவது

---

* பொருள்கள் - மணி, பொன், நெல் முதலாயின.

† பன்மை - பல.

‡ பிங்கலந்தை ஐயர்வகையில் " விட்டில் கிளியே நால்வாய் ஏனம்,

தொட்டியர் கள்வர் சோனைப் பெரும்புயல், நட்ட நாட்டேழ் குற்ற மாகும்" என்று கூறுகின்றது. "கிளிவளர்பூ" என்னும் சீவகசிந்தாமணிச் செய்யுளினுரையில் நச்சினர்க்கினியரால் "விட்டில் கிளிநால்வாய் வேற்றரசு தன்னரசு, நட்டம் பெரும்பெயல்கா லெட்டு" என்னும் சூத்திரம் காட்டப்பட்டிருக்கின்றது.

¶ விட்டில் என்பது ஒருவகைப் பறவை.

$ அரசண்மை - வேற்றரசர் நெருங்குதல். அஃதாவது பகை மன்னர் நெருங்கி வந்து வருத்துதல். அரசண்மை - அரசு அண்மை எனப்பிரிபடும். அண்மை - நெருங்குதல்.

0 அக்கண் - அவ்விடத்து. | ஆறு - ஆறுகுற்றங்களாம்.

‖ இவற்றை - நாட்டின்குற்றமாறனையும்.

+ ஈதிவாதைகள் என்றும் பாடமுண்டு. ஈதிவாதைகள்- ஈதியால் வரும் உபத்திரவங் கள். ஈதி-மிக்கபெயல் முதலிய ஆறும்; வாதைகள் - உபத்திரவங் கள். இவை நாட்டுக்குற்றங்களாம்.

‡‡ இந்நாட்டுக்குற்றமாறனுள் முன்னுள்ள மிக்கபெயல்முதலியவைந்து மில்லாமை அரசனது அறத்தினாலும் பின்னுள்ள அரசண்மையில்லாமை அவனது மறத் (வீரத்) தாலும் வரும் என்பதாம்.

00

இவ்வின்மைகளான்-நாட்டின் குற்றம் ஆறுமில்லாமையினால்.

1

அதிகமழை பெய்தல், மழைபெய்யாமை, எலி, விட்டில், கிளி, அரசண்மை என்ற இவற்றால் வருவது. இவற்றை வடநூலார் ஈதிக ளென்று சொல்வர். இவற்றுள் முன்னையவற்றி னில்லாமை அரசனாறத்தாலும், பின் னையதில்லாமை அவன் மறத்தாலும் வருவதாம். இவையில்லாமைகளால் நாடு மிக விளையு மென்பதாயிற்று.

(க - து.) பெரும்பொருளையும் கேடில்லாமையையும் மிக்க விளைவையு முடையதே நாடா மென்பது.

2. A kingdom is that which is sought after (even by foreigners) on account of its immense wealth, and which grows greatly in prosperity being free from destructive causes.

கூ. பொறையொருங்கு மேல்வருங்காற் றுங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு.

பரி:—(இ - ள்.) பிறநாடுகள் பொறுத்த பாரமெல்லாம் ஒருங்கே தன்கண் வருங்கால் அவற்றைத் தாங்கி அதன்மேற் றன்னாகலுக்கு இறைப்பொருண் முழுதையும் உடம்பட்டுக் கொடுப்பதே நாடாவது.

பாரங்கள் — மக்கட்டொகுதியும், ஆனெருமை

முதலிய விலங்குத்

தொகுதியும். தாங்குதல் - † அவை தத்தந்தேயத்துப் பகை வந்திறுத்ததாக, அரசு தோல் கோடியதாக, உணவின்மையாலுகத் தன்கண் வந்தால் அவ்வத் தேயங்களைப்போல இனிதிருப்பச் செய்தல். § அச்செயலால் இறையைக் குறைபடுத்தாது தானே கொடுப்பதென்பார் 'இறையொருங்கு நேர்வது' என்றார்.

தெளி:—(இ - ள்.) நாடு-நாடாவது, பொறை-(பிறநாடுகள் சுமந்த) பார மெல்லாம், ஒருங்கு-ஒருசேர, மேல்வருங்கால்-(தன்)மேல்வரும்போது, தாங்கி-(அப்பாரங்களைத்) தாங்கி, (அதன்மேல்), இறைவற்கு-(தன்) அரசனுக்கு, இறையொருங்கு இறைப்பொருள் முழுவதையும், நேர்வது - உடன்பட்டுக் கொடுப்பதே, (எ - று).

பாரங்கள்-மக்கள் கூட்டமும், பசு எருமை முதலிய விலங்கின்கூட்டமு மாம். நாடு தாங்குதலாவது அவை தத்தந்தேயங்களில் பகைவர் வந்து தங்கியதனாலாவது அரசன் நீதிதவறுதலாலாவது உணவில்லாமையாலாவது தன்னிடத்து வந்தால் அவ்வத்தேயங்களைப்போல (நாடு தன்னிடத்து) இனிதிருப்பச்செய்தல். அச்செயலால் (நாடு தன்னரசனுக்கு) இறைப்பொருளைக் குறைபடுத்தாமல் தானே கொடுப்பதென்பார் 'இறையொருங்கு நேர்வது' என்றார். இறைப்பொருள்- வரிப்பணம்.

---

† அவை - மக்கட்டொகுதியும், ஆனெருமை முதலிய விலங்குத்தொகுதியும். § அச்செயலால்- இனிதிருப்பச் செய்தலால்.

(க - து.) பிறநாட்டுப் பாரங்கள் தன்மேல் வரும்போது அவற்றைத்தாங்கிக்கொண்டு தன் அரசனுக்கு இறைப்பொருள் முழுவதையுந்தருவதே நாடாம் என்பது.

3. A kingdom is that which can bear any burden that may be pressed on it from adjoining kingdoms and yet pay full tribute to its sovereign.

சு. உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு.

பரி:—(இ - ள்.) மிக்க பசியும் நீங்காத நோயும் புறத்துநின்றுவந்து அழிவுசெய்யும் பகையுமின்றி இனிது நடப்பதே நாடாவது, (எ - று).

உறுபசி-† உழவருடைமையானும் ஆற்றவிளைதலானும் சேராதாயிற்று. ஓவாப்பிணி-தீக்காற்று மிக்க குளிர் வெப்பங்களும் நுகரப்படுமவற்றது தீமை யுமின்மையிற் சேராதாயிற்று. செறுபகை - அரசனேற்றலும் ‡ நிலைப்படையும் ¶ அடவியும் 0 அரணு முடைமையிற் சேராதாயிற்று.

தெளி:—(இ - ள்.) நாடு - நாடாவது, உறுபசியும் - அதிகபசியும், ஓவாப் பிணியும் - நீங்காத நோயும், செறுபகையும் - (புறத்திலிருந்து வந்து) அழிவு செய்யும்பகையும், சேராது - அடையப் பெறுமல், இயல்வது-இனிது நடப்பதே (எ - று).

உறுபசி - உழவருடைமையாலும் விளைநிலம் மிகவிளைதலாலும் சோராதாயிற்று. ஓவாப்பிணி - தீக்காற்று மிக்க குளிர்வெப்பங்களும் உண்ணப்படு முணவுகளின் தீமையும் இல்லாமையால் சோராதாயிற்று. செறு பகை - அரசன் வலிமையும் நிலைப்படையும் அடவியும் அரணும் உடைமையால் சோராதாயிற்று. பகை - பகைவர்.

(க - து.) பசியும் நோயும் பகையுமின்றி இனிது நடப்பதே நாடாம் என்பது.

4. A kingdom is that which continues to be free from excessive starvation, irremediable epidemics and destructive foes.

---

நி. பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங் கோல்குறும்பு மில்லது நாடு.

பரி:—(இ - ள்.) சங்கேத வயத்தான் மாறுபட்டுக் கூடும் பல கூட்டமும், உடனுறையா நின்றே பாழாகச் செய்யு முட்பகையும், அளவு

---

† உழவர் — உழுது பயிர் செய்வோர்.

‡ நிலைப்படை - எப்போதும்

மாறுபடாது நிலைத்திருக்குஞ் சேனை.

¶ அடவி - காடு.

∴ 0 நால்வகை யரணுள் முன்னர் அடவியைக் (காட்டரணைக்) கூறின மையின், இங்கரணென்றது நீரரண் நிலவரண் மலையரண்களை.

## அங்கவியல்—கக-வது நாடு.

# 813

வந்தால் வேந்தனை * யலைக்குங் கொல்வினைக் ‡ கு
றும்பரும் இல்லா
ததே நாடாவது, (எ - று).

† சங்கேதம் - சாதி பற்றியுங் கடவுள்பற்றியும் பலர்க்குளதா ¶ மொரு மை. உட்பகை-*ஆறலைப்பார் கள்வர் குறளை கூறுவார் $ முதலிய மக்களும்,
பன்றி புலி கரடி முதலிய விலங்குகளும். உட்பகை + குறும்பென்பன ||
ஆகுபெயர். | இம்மூன்றும் அரசனாலும் வாழ்வாராலுங் 0 கடியப்பட்டு நடப்பதே நாடென்பதாம்.

தெளி:—(இ - ள்.) நாடு - நாடாவது, பல்குழுவும் - (சங்கேதவசத்தால்
மாறுபட்டுக் கூடும்) பல கூட்டமும், பாழ்செய்யும் -

(உடனிருந்து கொண்டே) பாழாகச் செய்யும், உட்பகையும்—, வேந்தலைக்கும் - (சமயம் வந்தால்) அரசனை அலைக்கின்ற, கொல் குறும்பும்-கொலைத்தொழிற் குறும்பரும், இல்லது - இல்லாததே, (எ - று).

•

சங்கேதம்- சாதிப்பற்றியுஞ் சமயம்பற்றியும் பலர்க்கு உளதாமொருமை. உட்பகை - வழியலைத்துப் பறிப்போர் கள்வர் கோட்சொல்வார் முதலிய மக்களும், பன்றி புலி கரடி முதலிய மிருகங்களும். உட்பகை குறும்பு என்பன பண்பாகு பெயர்கள். இம்மூன்றும் அரசனுலும் வாழ்வாராலும் கடியப்பட்டு நடப்பதே நாடென்பதாம்.

---

* அலைக்கும் - வருத்தும்.

‡ குறும்பர்- குறுநிலமன்னர்; அல்லது தூர்ச்சனர் (ராஜத்துரோகிகள்).

† சங்கேதம் - கட்டுப்பாடு (குழூஉக்குறி). வாமமார்க்கத்தார் மத்தியத் திற்(கள்ளுக்)குத் தீர்த்தமென்றும், மாமிசத்திற்குச் சுத்தமென்றும், மத்திய பான (கள்குடிக்கும்) பாத்திரத்திற்குப் பதுமை என்றும், வெங்காயத்திற்கு வியாஸ ரென்றும், வெள்ளைப் பூண்டுக்குச் சுகதேவரென்றும், மத்திய மிறக்குவோர்க்குத் தீட்சிதரென்றும் பெயர் கொடுத்திருப்பதும், பிறவும் இங்குணர்தற்பாலனவாம்.

¶ ஒருமை - ஒற்றுமைப்பட்ட அபிப்பிராயம்.

* ஆறலைப்பார் - பிரயாணிகளை வழியில் மறித்து நின்று அவர்களிடத் துள்ள பொருள்களைப் பறிப்பவர்.

$ முதலிய என்றமையின், இச்சகம் பேசிப் பொருள் பறிப்பார், முன்

னேயொன்று கூறிப் பின்னே யொன்று கூறுவார், பொய்க்கரி (பொய்ச் சாட்சி) புகல்வார், மித்திரபேதஞ் செய்வார் முதலியவர்களையுங் கொள்க.

. + குறும்பு - சிறுமைக் குணம்.

|| உட்பகை குறும்பு என்னும் பண்புப் பெயர்கள் அவற்றை யுடைய

மக்களையும் .விலங்குகளையு முணர்த்துதலால் பண்பாகு பெயர்களாம்.

| இம்மூன்றும் - பல்குழுவும், பாழ்செய்யு முட்பகையும், வேந்தலைக் குங் கொல்குறும்பும்.

0 கடியப்பட்டு - ஒழிக்கப்பட்டு.



(க - து.) மாறுபட்டுக் கூடும் பல கூட்டமும் உட்பகையும் கொலைத்தொழிற் குறும்பருமில்லாததே நாடாம் என்பது.

5. A kingdom is that which is without various associations, destructive internal enemies and murderous savages who sometimes harass the sovereign.

சு. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்று
நாடென்ப நாட்டிற் றலை.

பரி:—(இ - ள்.) பகைவாாற் கெடுத லறியாததாய் அரிதிற் கேட்ட தாயினும் அப்பொழுதுந் தன்வளங்குன்றுத நாட்டினை எல்லாநாட்டினுந் தலை யென்று சொல்லுவர் நூலோர், (எ - று).

அறியாத குன்றுத வென்னும் பெயரெச்சங்களி * னிறுதி நிலைகள் விகாரத்தாற் றொக்கன. கேடறியாமை - அரசனுற்றலானுங் கடவுட் பூசை யறங்களென்றிவற்றது செயலானும் வரும். வளம் - † ஆகரங்களிற் படுவன வும் வயலினுந் தண்டலையினும் விளைவனவுமாம். குன்றுமை - ‡ அவை செய்யவேண்டாமல் இயல்பாகவே யுளவாயும் முன்னீட்டப்பட்டுங் குறை வறுதல். இவை ஆறுபாட்டானும் நாட்ட திலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) கேடறியா - (பகைவரால்) கெடுதலறியாததாய், கெட்டவிடத்தும் - (அரிதிற்) கெட்டதாலும், வளங்குன்றா - (அப்பொழுதுந் தன்) வளங்குறையாத, நாடு – நாட்டினை, நாட்டின்-(எல்லா) நாடுகளிலும், தலை- முதன்மையானது, என்ப - என்று சொல்லுவார், (நாலோர்).()

அறியாத

குன்றாத என்னும் எதிர்மறைப்பெயரெச்சங்கள் விகாரத்தால் ஈறு கெட்டு அறியா, குன்று என வந்தன. நாடு கேடறியாமை - அரசன் ஆற்றலாலும் கடவுட் பூசை அறங்கள் என்ற இவற்றைச் செய்தலாலும் வரும். வளம்—சுரங்கங்களிற் படுவனவும் வயலிலும் தண்டலையிலும் விளைவனவுமாம். வளங்குன்றாமை - அவை சம்பாதிக்கவேண்டா மல் இயல் பாகவே உளவாயும் முன் சம்பாதிக்கப்பட்டுங் குறைவற்றிருத்தல். இவை ஆறுபாட்டாலும் நாட்டது இலக்கணம் சொல்லப்பட்டது.

---

* இறுதி நிலைகள் விகாரத்தாற் றொக்கன - தகர எழுத்துப்பேற்றோடு கூடிய அகரவிகுதிகள் செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றன. அறியா, குன்று என்பன ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்.

† சுரங்கங்களில் உண்டாகும் பொன் வெள்ளி முதலியபொருள்களும், வயலிலும் தண்டலை (சோலை)யிலும் விளையும் நெல் கனி காய் முதலிய பொருள்களுமாம்.

"கதிர்படு வயலி னுள்ள கடிகமழ் பொழிலி னுள்ள, முதிர்பல மரத்தி னுள்ள முதிரைகள் புறவி னுள்ள, பதிபடு கொடியி னுள்ள படிவளர் குழியி னுள்ள, மதுவன மலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார்" என்று கம்பராமாயணங் கூறுவது மிங்கறியத்தக்கதாம்.

‡ அவை = ஆகாங்களிற் பலவன முதலியன.

## அங்கவியல்—கக-வது நாடு.

**815**

(க - து.) பகைவரால் கெடுதலறியாததாய், கெட்டவிடத் துந் தன் வளங்குறையாததாயுள்ள நாடு எல்லாநாட்டிலும் முதன் மையானதாம் என்பது.

6. The learned say that the best kingdom is that which knows no evil from enemies, and if at all injured, suffers no diminution in its fruitfulness.

எ.

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு.

பரி:—(இ - ள்.) * கீழ்நீர் †மேனீ ரெனப்பட்ட தன்கணீரும் வாயி ப்புடைத்தாய மலையும் அதனி னின்றும் வருவதாய நீரும் அழியாத ‡ நகரியும் நாட்டிற் கவயவமாம். (எ - று).

ஈண்டுப் புனலென்றது தூரவு கேணிகளும் ஏரிகளும் ஆறுகளுமாகிய ஆதாரங்களை; ¶ அவயவமாதற்குரியன $ அவையே யாகலின். + அவற்றுள்

| வானம் வறப்பினும் வளனுடைமை பெறப்பட்டது. 0 இடையதன்றி யொருபுடையதாகலும் ‖ தன் வளந் தருதலும் ¶¶ மாரிக்கணுண்ட நீர் கோ

---

* தூரவு (கிணறு)ம் கேணியும் (சிறுகுளமும்) கீழ்நீரையுடையன.

† ஏரியும் ஆறும் மேல்நீரையுடையன.

‡ அநேக பெருவீடுகளும் அநேகஜனங்களு முள்ளதாயும், கிராமத் திலும் பெரியதாயும், நகரியினுஞ் சிறியதாயுமிருப்பது பட்டணமாம்;

அநேக பெருவீடுகளும் அநேக ஜனங்களும் அமைந்ததாயும், அரண மைந்த கோட்டையுள்ளதாயும், நீளத்தில் ஒரு கோல் தூரத்திற்குக் குறை யாததாயு மிருப்பது புரமாம்;

அநேக பெருவீதி களுள்ளதாயும், பட்டணம் புரமென்னு மிவற்றி னும் பெரியதாயும், இராஜதானியாயு மிருப்பது நகரியாம்.

¶ அவயவமாதற்கு - நாட்டிற் குறுப்பாதற்கு.

§ அவையே - தானவுகேணி முதலியனவே.

† அவற்றுன் - தானவு முதலியன விருத்தலால்.

| வானம் வறப்பினும் - மழைபெய்யாதொழிந்தாலும்.

0 (மலை)நகரியின் நடுவே யிராது, அதற்கொரு பக்கத்திலிருப்பதாகலும்

‖ தன்வளந்தருதலும் - மலை தன்னுடைய வளத்தைக்கொடுத்தலும். பிங்கலந்தை ஐயர்வகையில் 'அகிற்கறி கோட்ட மொடுதக் கோலம், குங்கும மைந்து மலைபடு திரவியம்" என்று கூறுகின்றது. கறி - மிளகு.

¶¶ மழைக்காலத்திலுட்கொண்டநீரை வெயிற்காலத்தில் வெளிப்படுத் தலும்.



டைக்க லுமிழ்தலு மூடைமை பற்றி 'வாய்ந்த மலை' என்றார்.

* அரண் - ஆகுபெயர். இதனுள் † அதனவயவங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) இருபுனலும் - கீழ்நீர் மேல்நீர் எனப்பட்ட தன்னிடத்து நீரும், வாய்ந்த மலையும்-வாய்ப்புடைத்தாகிய மலையும், வருபுனலும் - (அம்மலையிலிருந்து) வருவதாகிய நீரும், வல்லாணும் - அழியாத நகரியும், நாட்டிற்கு—, உறுப்பு - அவயவமாம், (எ-று.)

இந்தப் புனலென்றது துரவு கேணிகளும் ஏரிகளும் ஆறுகளும் ஆகிய ஜலாதாரங்களை; அவயவமாதற்கு உரியன அவையே யாகலால். அவற்றுள் மழைவறப்பினும் வளமுடைமை பெறப்பட்டது. நடுவதல்லாமல் ஒரு பக்கத்ததாகலும் தன் வளந்தருதலும் மாரியிலுண்ட நீரைக்கோடையிலுமிழ்தலு முடைமைபற்றி 'வாய்ந்த மலை' என்றார். அரண் - சினையாகுபெயர். இதனுள் அதனது அவயவம் சொல்லப்பட்டது. நகரி - நகரம்.

(க - து.) கீழ்நீர் மேல்நீரும் மலையும் அம்மலையினின்றும் வரும் நீரும் அழியாத நகரியும் நாட்டிற்கு அவயவமாம் என்பது.

7. The constituents of a kingdom are the waters from above and below, well suited hills and an indestructible fort.

## 4. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம மணிபென்ப நாட்டிற்கிவ் வைந்து.

பரி:—(இ - ள்.) நோயின்மையுந் செல்வம் ‡ விளைதல் இன்பம்

காவலென்றிவ்வயுடைமையுமாகிய இவ்வைந்தினையும் நாட்டிற் கழகென்று சொல்லுவர் தூலோர், (எ - று).

பிணியின்மை-நிலைலத்தான் வருவது. செல்வம் - ¶ மேற்சொல்லியன.

---

* (சுகரியின் உறுப்பான)

அரண் என்னுஞ் சினைப்பெயர் அதனது முதலாகிய சுகரினையுணர்த்துதலால் சினையாகுபெயராம்.

† அதனது - நாட்டினது.

‡. விளைதல் - நெல் முதலியன விளைதல்.

"செல்வம் விளையுள் பல்வளஞ் செங்கோல், கொல்குறும் பின்மை கொடும்பிணி யின்மையென், றிவ்வகை யாறு நன்னாட் டமைதி" என்று பிங்கலந்தை கூறுவதிங் கறியத்தக்கதாம்.

¶ மேற்சொல்லியன - கப்பலிலும், வண்டியிலும் வணிகர்சரும் பொருள்களும், குடிகள் குறைவின்றித் தரும்

வரிப்பணமும், சுங்கத்திற்கிடைக்

கும் பொருள்களும், வயல் முதலியவற்றிற் கிடைக்கும் தானிய முதலியன வும், மலைதரும் பொருள்களும் பிறவுமாம்.



இன்பம் - * விழவும் † வேள்வியுஞ்

சான்றோருமுடைமையானும்,

நகர்வன வுடைமையானும், நிலநீர்களது நன்மையானும், வாழ்வார்க்கு ‡உண்ணிகழ்வது. காவலெனவே அரசன் காவலும் வாழ்வோர் காவலும் அரண்காவலு மடங்கின. ¶ பிறதேயங்களி னுள்ளாரும் விழைந்து பின் அவையுள்ளாமைக் கேதுவாய அதனழகு இதனுற் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) பிணிபின்மை - நோயில்லாமையும், செல்வம் - பொருள், விளைவு - நெல் முதலியவற்றின் விளைவு, இன்பம் - சுகம், ஏமம் - காவல், (என்ற இவை யுடைமையுமாகிய), இவ்வைந்து-இவ்வைந்தினையும், நாட்டிற்கு-நாட்டினுக்கு, அணி - அழகாகும், என்ப - என்று சொல்லுவர், (நூலோர்), (எ-று).

பிணியின்மை — நிலநலத்தால் வருவது. செல்வம் - முன் சொல்லியன.• இன்பம் - விழவும் வேள்வியும் சான்றோரு முடைமையாலும்,

அனுபவிப்பனவுடைமையாலும், நில நீர்களது வன்மையாலும், வாழ்வார்க்கு உள்ளத்தில் நிகழ்வது காவலெனவே அரசன் காவலும், வாழ்வோர் காவ லும், அரண் காவலும் அடங்கின. பிறதேயங்களிலுள்ளாரும் விரும்பிப் பின்னே அவற்றை நினையாமைக்குக் காரணமாகிய அதனழகு இதனுல் சொல்லப்பட்டது.

(க - து). நாட்டிற் கழுகாவது நோயில்லாமையும் செல்வமும் விளைவும் இன்பமும் காவலுமாம் என்பது.

8. Freedom from epidemic diseases, wealth, agricultural produce, happiness, and protection of subjects these five, the learned say are the ornaments of a kingdom.

கூ. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

---

* விழவு - திருவிழா. "அவை மதுரை ஆவணியவிட்டமே, உறையூர்ப் பங்குனி யுத்திரமே கருவூர் உள்ளிவிழாவே யென இவைபோல்வனவாம்." (இஃது இறையனாகப்பொருள் - நக்கீரருரை).

† வேள்வி - பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம் முதலியன.

‡ உண்ணிகழ்வது - மனத்திலுண்டாவது.

¶ மற்றத்தேசங்களிலுள்ளவரும் எல்லா வளப்பங்களுமுடைமைபற்றி விரும்பிப் பின்பு அத்தேசங்களை நினையாமைக்குக் காரணமாகிய அந் நாட்டினது பிணியின்மை முதலியவழகு இக்குறளால் சொல்லப்படது. நோயில்லாமை, செல்வம், விளைவு, இன்பம், காவலென்னு மிவ்வைந்தினையு முடையநாடு பிறாலெல்லாஞ்ஞான்றும் விரும்பப்படு மென்பது இதனாற் பெறப்பட்ட தென்க.





பரி:—(இ - ள்.) தங்கண்வாழ்வார் தேடி வருந்தாமல் * அவர்பாற் றானேயடையுஞ் செல்வத்தை யுடையவற்றை நாலோர் நாடென்று சொல்லுவர், ஆதலாற் றேடிவருந்தச் செல்வமடைவிக்குந் நாடுகள் நாடாகா, (எ - று),

† நாடுதல் இருவழியும் வருத்தத்தின்மே னின்றது.

‡ “ பொருள் செய்வார்க்கு மஃதிடம்” என்றார் பிறரும்.

நூலோர் விதிபற்றி எதிர் மறை முகத்தாற் குற்றங் கூறியவாறு. இவ்வாறன்றி என்பவென்பதனைப் பின்னுங் கூட்டி ¶ இருபொருள்பட வுரைப்பின், $ அணுவாதமாம்.

தெளி:—(இ - ள்.) நாடா - (தம்மிடத்து வாழ்வார்) தேடிவருந்தாமல், வளத்தன - (அவரிடத்துத் தானேயடையும்) செல்வத்தை யுடைய வற்றை, நாடென்ப - (நூலோர்) நாடென்று சொல்லுவர், (ஆதலால்), நாட - தேடிவருந்த, வளந்தரும் - செல்வத்தை யடைவிக்கும், நாடு - நாடுகள், நாடல் ல - நாடுகளாகா, (எ - று).

நாடுதல் இரண்டிடத்தும் வருத்தத்தின்மே னின்றது. நூலோர் விதிபற்றி (நாடவளந்தரு நாடு நாடல்ல என) எதிர்மறை வாயிலாகக் குற்றங் கூறியவாறும். இங்ஙனமல்லாமல் என்ப என்பதனை நாடல்ல என் பதனோடுங் கூட்டி இருபொருள் தோன்றக் கூறின், அணுவாதமாம்.

(க - து.) குடிகள் தேடிவருந்தாமல் அவர்களுக்குச் சகல வளங்களையுங் கொடுக்கவல்லதே நாடாகும்; ஏனையநாடுகள் நாடாகா என்பது.

9. The learned say that those are kingdoms, whose wealth is not acquired through hard labour; and those not, whose wealth is only obtained through hard labour.

* அவர்பால் - தங்கண்வாழ்வாரிடத்து.

† நாடா, நாட என்னுமிரண்டிடத்துமுள்ள நாடுதற்றொழில் வருத்த மென்னும் பொருள்மேல் நின்றது. நாடா என்பதற்குத் தேடிவருந்தாம லென்றும், நாட என்பதற்குத் தேடிவருந்த என்றும் பொருள் கூறப்பட்டிருக்கின்றமை காண்க.

‡ சீவக சிந்தாமணி நாமகளிலம்பகம் - 48. இதன்பொருள் (நிலையாத) பொருளைத் தேடுபவர்க்கும் அவ்வேமாங்கத நாடு இடமாம் என்பது.

¶ இருபொருள்பட வுரைத்தலாவது நாடா வளத்தன நாடென்ப; நாட
வளந்தரு நாடு நாடல்ல என்ப என இரண்டுபொருள் தோன்றக்கூறுதல்.

§ நாடா வளத்தன நாடு என்று கூறிய நூலோர் அந்நாட்டினையே
மீண்டுமொரு நிமித்தம் பற்றி நாட வளந்தரு நாடு நாடல்ல என்று கூறினமை
யின், அஃது அனுவாதமாயிற்று. இங்கு நிமித்தம் நாடவளந்தருதல். அனுவாதமாவது முன்னர்க் கூறியதொன்றனைப் பின்னரு மொருநிமித்தம் பற்றிக் கூறுதல்.

கo. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

பரி:—(இ - ள்.) வேந்தனெடு மேவுதலில்லாத நாடு * மேற் சொல்லிய குணங்களெல்லாவற்றினும் நிறைந்திருந்ததாயினும் † அவற் றுற் பயனுடைத்தன்று, (எ - று).

'வேந்தமைவு' எனவே, குடிகள் அவன்மாட் டன்புடையராதலும், அவ ன்ருன் இவர்மாட் டருளுடையனுதலும் அடங்கின. ‡ அவையில்வழி வாழ் வோரின்மையின், ¶ அவற்ருற் பயனின்ருயிற்று. இவை யிரண்டுபோட்டா னும் $ அதன் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) வேந்து - அரசனெடு, அமைவில்லாத - பொருந் துதலில்லாத, நாடு - நாடானது, ஆங்கு - மேற்சொல்லிய குணங்களெல்லா வற்ருலும், அமைவெய்தியக் கண்ணும்-நிறைந்திருந்ததாயினும், பயம்இன்று- (அவற்ருல்) பயனுடையதன்று, (எ - று).

'வேந்தமைவு' எனவே, குடிகள் அவனிடத்து அன்புடையாதலும்,
அவன்ருன் இக்குடிகளிடத்து அருளுடையனுதலும்

அடங்கின. அவை

யில்லா விடத்து நாட்டில் வாழ்வோரில்லாமையால், அவற்றுல் அந்நாடு

பயனுடையதன்றுயிற்று. இவை இரண்டொட்டாலும் அதனது குற்றம்

சொல்லப்பட்டது.

(க - து.) அரசனோடு பொருந்துத லில்லாத நாடு வளங்க

ளெல்லாவற்றுலும்

நிறைந்திருந்த தாயினும், அவற்றுற் பயனுடைய

தன்றும் என்பது.

10. Although in possession of all the above mentioned

excellences, they are indeed of no use to a country in the

absence of harmony between the sovereign and the subjects.

அங்கவியலில் நாடு முற்றிற்று.

* மேற்சொல்லிய குணங்கள்-இவ்வதிகாரத்தின்கண் 'தள்ளா விளை

யுளும்' என்பது முதல் 'நாடென்ப நாடா வளத்தன' என்பதுவரை கூறி

யுள்ள நாட்டின் குணங்கள்.

† அவற்றால்-மேற்சொல்லிய குணங்களால்.

‡ அவையில்வழி-குடிகள் அரசனிடத்து அன்புடையராதலும் அரசன் குடிகளிடத்து அருளுடையனாதலும் இல்லாதவிடத்து.

¶ அவற்றால்-மேற்சொல்லிய குணங்களால்.

$ அதன் குற்றம்-நாட்டினது குற்றம்



## பன்னிரண்டாவது அதிகாரம்.

## அரண்.— The Fort.

பரி:—இனி † அந்நாட்டிற் றுறுப்பா யடங்துமாயினும் பகைவாற் * றெலைவுவந்துழி, † அதுதனக்தும் அரசன்றனக்தும் ஏமமாதற் சிறப் புப்பற்றிப் பிறிதோ ரங்கமாக வோதப்பட்ட அரண் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார். அஃதாவது இன்னதென்பதூஉம், அதிகாரமுறைமையும் இதனுள் விளங்தும்.

தெளி:—இனி அந்நாட்டிற்கு உறுப்பாய் அடங்கு மாயினும் பகைவ ரால் தொலைவு வந்தவிடத்து, அதற்கும் அரசனுக்கும் காப்பாதற் சிறப்புப் பற்றி வேறோரங்கமாகச் சொல்லப்பட்ட அரணை இவ்வதிகாரத்தால் சொல்லு கின்றார். அஃதாவது இத்தன்மையதென்பதும், அதிகார முறைமையும் இதனுள் விளங்கும்.

## க. ஆற்று பவர்க்கு மரண்போரு ளஞ்சித்தற் போற்று பவர்க்கும் பொருள்.

பரி:—(இ - ள்.) ‡ மூவகையாற்றலு முடையராமீப் ¶ பிறர்மேல் செல்வார்க்தும் அரண்சிறந்தது. § அவையின்றித் தம்மேல் § வருவார்க் கஞ்சித் தன்னையே யடைவார்க்தும் அரண்சிறந்தது, (எ - று).

பிறர்மேல் செல்லுங்கால் ‖ உரிமை பொருண் முதலியவற்றைப் பிற ரொருவன் = வௌவாமல் வைத்துச்

செல்லவேண்டு மாகலானும், | அப் பெருமை தொலைந் திறுதிவந்தழிக் கடனவே னுடைகலத்தார் போன்று ஏமங்காணு திறுவராகலானும், () ஆற்றுபவர்க்கும் [] போற்றுபவர்க்கும்

---

† 'வல்லரணு நாட்டிற் குறுப்பு' என நாடதிகாரத்திற் கூறியிருப்ப தணர்க.

* தொலைவு - அழிவு. † அதுதனக்கும் - நாட்டிற்கும்.

‡ அறிவு, ஆண்மை, பெருமை என்பன மூவகையாற்றல்களாம். இவற் றுள், பெருமை பொருள் படை (சேனை) என இருவகைத்தாம்.

¶ பிறர்மேற்செல்வார்க்கும் - பகைவர்மீது போர்க்குச் செல்பவர் க்கும்.

$ அவையின்றி - மூவகை யாற்றலு மில்லாமல்.

§ வருவார்க்கஞ்சி - போர்க்குவரும் பகைவர்க்குப் பயந்து.

‖ உரிமையென்றது-உரிமையு (சுதந்தரமு)டைய மகளிரை.

= வெளவாமல் - அபகரித்துக் கொள்ளாமல்.

| அப்பெருமை தொலைந்து - பொருள்படை யென்பன அழிந்து.

() ஆற்றுபவர் - மூவகையாற்றலு முடையராய்ப் பகைவர்மேற் செல் பவர.

[] போற்றுபவர் - மூவகை யாற்றலு மில்லாது தம்மீது போர்க்கு வரும் பகைவர்க்குப் பயந்து வந்து அடைபவர்.

அரண்பொருளாயிற்று. ஆற்றலுடையராயினும் அரணில்வழி அழியும் பால ராகலின், * அவரைமுற்கூறினர். இதனால் அரணினது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) அரண் - அரணானது, ஆற்றுபவர்க்கும் - (மூவகை யாற்றலு முடையவராய்ப்) பிறர்மீதுபோர்க்குச் செல்வார்க்கும், பொருள் - சிறந்ததாகும், அஞ்சி - (அவையில்லாமல் தம்மீது போர்க்கு வருவார்க்கு) பயந்து, தற்போற்றுபவர்க்கும் - தன்னையே யடைவார்க்கும், பொருள் - (அரண) சிறந்ததாகும், (எ - று).

பிறர்மீது போர்க்குச் செல்லும்போது உரிமை பொருள் முதலியவற் றைப் பிறனொருவன் வௌவாமல் வைத்துச் செல்லவேண்டுமாகலாலும், அப்பெருமை தொலைந்து முடிவுவந்தவிடத்துக் கடலினடுவேயுடைந்த கப் பற்காரர்போன்று காப்புக்காணாது முடிவராகலாலும், ஆற்றுபவர் போற்று பவர் என்னுமிவ்விரு வகையார்க்கும் அரண்பொருளாயிற்று. அரசர் ஆற்ற லுடையவராயினும் அரணில்லாதவிடத்து அழியுந்தன்மையராகலால், அவரை முன்னே சொல்லினர். இதனால் அரணினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) பகைவர்மீது போர்க்குச் செல்வார்க்கும் பகைவர்க் கஞ்சித் தன்னையே யடைவார்க்கும் அரண் சிறந்தபொருளாம்.

1. A fort is an object of importance to those who march against their enemies, as well as to those who through fear of invaders would seek it for shelter.



2. மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்.

பரி:—(இ - ள்.) †மணிபோலு நிறத்தினையுடைய நீரும் வெள்ளிடை நிலமும் மலையுங் குளிர்ந்த நிழலையுடைய காடுமுடையதே அரணாவது.

எஞ்ஞான்றும் வற்றுத நீரென்பார் 'மணிநீர்' என்றும், நீருநிழலுமில்லா ‡ மருநிலமென்பார் 'மண்' என்றும், செறிந்த காடென்பார் 'அணிநிழற் காடு' என்றுங் கூறினர். மதிற்புறத்து மருநிலம் பகைவர் ¶ அரண்பற்றுமைப் பொருட்டு. நீரரண், நிலவரண், மலையரண், காட்டரணென § இயற்

---

* அவரை - ஆற்றுபவரை. † மணி - நீலமணி.

‡ மருநிலம் - பாலைநிலம்; அஃதாவது நீரின்றி மணல் பரந்தவிடம்.

¶ அரண்பற்றுமைப்பொருட்டு - கோட்டையைக் கைப்பற்றுமை நிமித்தம்.

§ இயற்கையரண் - நீரும், நிலமும், மலையும், காடும் ஒன்றற்கு அரணாக (காவலாக) அமைந்திருப்பதாம்.

படைப்பிலேயே





கையுஞ் * செயற்கையுமாய இந்நான்கரணுஞ் சூழட்படுவது அரணென்பதாம். மணி - முத்து.

தெளி:—(இ - ள்.) அரண் - அரணாவது, மணிநீரும் - மணிபோலும் நிறத்தினையுடைய நீரும், மண்ணும் - வெளிநிலமும், மலையும்—, அணிநிழற் காடும் - குளிர்ந்தநிழலையுடைய காடும், உடையது - உடையதே, (எ - று).

எந்நாளும் வற்றாத நீரென்பார் 'மணிநீர்' என்றும், நீரும் நிழலுமில்லாத மருநிலமென்பார் 'மண்' என்றும், நெருங்கிய காடென்பார் 'அணிநிழற்காடு' என்றும் சொல்லினார். மதிற்புறத்து மருநிலம் பகைவர் அரண் பற்றுமைப் பொருட்டு. நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என்று இயற்கையும் செயற்கையுமான இந்நான்கரணும் சூழப்படுவது அரணென்பதாம்.

(க - து.) நீர், வெளிநிலம், மலை, காடு என்னும் இவற்றையுடையதே அரணும் என்பது.

2. A fort is that which has undrying water, plains, mountains and cool shade forests.

கூ. உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல்.

பரி:—(இ - ள்.) உயர்ச்சியும் அகலமும் திண்மையும் அருமையு மென்று சொல்லப்பட்ட இந்நான்கின் மிகுதியையுடைய மதிலை அர ணென்று சொல்லுவர் நூலோர், (எ-று).

† அமைவு ‡ நூல் என்பன ஆகுபெயர். உயர்வு - எணியெய்தாதது- அகலம் - புறத்தோர்க்கு அகழலாகா அடியகலமும், அகத்தோர்க்கு நின்று ¶ வினை செய்யலாந் $ தலையகலமும். திண்மை - கல்லிட்டிகைகளாற் செய்த விற் குத்தப்படாமை. அருமை - பொறிகளான் அணுகற்கருமை. பொறிக ளாவன: § " வளைவிற் பொறியு மயிற்செறி நிலையுங், கருவிர லூகமுங் கல்லு

---

* செயற்கையரண் - அகழியும், வெளிநிலமும், செய்குன்றும், காடு வளர்த்தலுமாகிய விவற்றை அவ்வத்தேசத்தரசர் ஒன்றற்கு-அரணுகச் செய் துகொள்ளுவதாம்.

† அமைவு என்னும் பண்புப்பெயர் அதனையுடைய மதிலையுணர்த்து தலால் பண்பாகு பெயராம்.

‡ தூல் என்னும் காரியப்பெயர்

அதனைச் செய்தவரை யுணர்த்துதலால் காரியவாகு பெயராம்.

¶ வினைசெய்யல் - போர்புரிதல்.

ஃ தலை - மதிலின் மேற்புறம்.

§ சிலப்பதிகாரம் அடைக்கலக்காதை உ0எ - வது வரிமுதல் உகசு - வது வரிவரை. (இதன்பொருள்) வளவிற்பொழியும் - வளந்து தானே



மிழ் கவணும், பரிவுறு வெந்நெயும் பாகடு குழுசியுங், காய்பொன் னுலையுங் கல்விடு கூடையுந், தூண்டிலுந் தொடக்கு மாண்டலை யடிப்புங், கவையுங் கழு

வும் புதையும் புழையு, மைபவித் தலாமுங் கைபெய சூடியுஞ், சென்றெறி சிலுந் பன்றியும் பிணையு, மெழுவுஞ் சீப்பு முழுவிறற் கிணையமுங், கோலுங் குத்தமும் வேலுஞ் சூலமும்" என்றிவைமுதலாயின.

தெளி:—(இ - ள்.) உயர்வு - உயர்ச்சியும், அகலம்-அகலமும், திண்மை- வலிமையும், அருமை

- அருமையும், (என்று சொல்லப்பட்ட), இந்நான் கின்- இந்நான்கினது, அமைவு -மிகுதியையுடைய மதிலை, அரணென்று—, நூல்- நூலோர், உரைக்கும் - சொல்லுவர், (எ - து).

அமைவு நூல் என்பன ஆகுபெயர்கள். உயர்வு - எணிக்கெட்டா தது. அகலம் - புறத்தோர்க்குத் தோண்டுதல் முடியாத அடியகலமும், அகத் தோர்க்கு நின்று தொழில் செய்தற்காந் தலையகலமும். திண்மை - கருங்கல் செங்கலினால் செய்தலால் குத்தப்படாமை. அருமை-பொறிகளால் சேர் தற்கருமை. பொறிகள்-எந்திரப்பாலை முதலியன. புறம்-வெளி, அகம்-உள்.

---

யெய்யும் எந்திரவில்லும், கருவிர லூகமும் - கரிய விரலையுடைய குரங்கு போலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறியும், கல்லுமிழ் கவணும் - கல்லை யுமிழுங்கவணும், பரிவுறுவெங்நெயும்-காய்ந்திறைத்தலால் சேர்ந்தாரை வருத் துவதாயநெய்யும், பாகடு குழிசியும் - செம்புருக்கும், அன்றி அங்ஙனமிறைத் தற்குப் பாகுகாயுங் குழிசிகளுமாம். காய் பொன்னுலையும் - உருகக்காய்ச்சி யெறிதற்கு எஃகுபட்டிருக்கும் உலைகளும், கல்லிடு கூடையும்-இடங்கணிப் பொறிக்குக் கல்லிட்டுவைக்குங் கூடையும், தூண்டிலும் - தூண்டில் வடிவா கப்பண்ணிப் போகட்டு வைத்துக் கிடங்கு நீங்கிமதில் பற்றுவாரைக் கோத்து வலிக்கும் கருவியும்,

தொடக்கும்-கழிகோல் போலக் கழுத்திற்பூட்டி முறுக் குஞ் சங்கிலியும்,

கயிற்றுத்தொடக்குமாம். ஆண்டலையடிப்பும்-ஆண்டலைப்புள்
(கோழி) வடிவாகப் பண்ணிப் பறக்க விட
உச்சியைக்கொத்தி மூளையைக் கடிக்கும்பொறிநிரைகளும்,
கவையும்-கிடங்கிலேறின் மறியத்தள்ளும் இருப் புக்கவையும்,
கழுவும் - கழுக்கோலும், கழுகும்பாடம். புதையும் - அம்புக்கட்
டும், "அம்புப் புதையு மணிவரிச் சிலையும்" என்றூர்
(உதயணன்)கதையினும். புழையும்-எவறைகளும்,
ஐயவித்துலாமும் - பற்றுக்கை தூக்கிப் போகட்ட
விட்டமும், அன்றிக்கதலை யணுகாதபடிகற்கவிதொடங்கி காற்றும் துலாமு
மாம். சாணம்புக் கூடென்பாரும், சிற்றம்புகள் வைத்தெய்யும் இயந்திர
மென்பாரு முளர். கைபெயருஞியும் - மதிற்றலையைப்
பற்றுவாரைக் கை யைப்பொதிர்க்கும் ஊசிப்பொறிகளும்,
இனிக்கதவொடு சோராதபடி வைத்த
நிரைக்கழுவெனினுமமையும். சென்றெறிசிரலும் -
மாற்றூர்மேற் சென்று
கண்ணைக்கொத்தும் சிச்சிலிப் பொறியும், பன்றியும்-மதிற்றலையி னேறினு
ருடலைக்கோட்டாற் கிழிக்க இரும்பாற் செய்துவைத்த பன்றிப்பொறியும்,
பிணையும் - வேய்வடிவாகப் பண்ணி அடித்தற்கமைத்த
பொறியும், எழுவுஞ் சீப்பும்-கதவுக்கு வலியாக உள்வாயிற்
படியிலே நிலத்திலே வீழ விடு மரங்களும்,
திறக்குங்காலத்து மேலே யெழுப்புகையால் எழுவுஞ் சீப்பு
மென்றூர்; "சீப்புப் படியுறின்" என்றூர்
(உதயணன்) கதையினும். இனிச்சீப்பு ஆகப்

(க - து.) உயர்வு, அகலம், திண்மை, அருமை யென்னும் இந் நான்கினையும் மிகுதியாக வுடையமதிலே அரணும் என்பது.

3. The learned say that a fortress is having the four qualities, height, breadth, strength and inaccessibility. an enclosure

---

ச. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண்.

பரி:—(மு - ள்.) காக்கவேண்டுமிடஞ் சிறிதாயி அகன்ற விடத்தை யுடைத்தாயித் தன்னைவந்து முற்றிய பகைவரது மனவெழுச்சியைக் கெடுப்பதே அரணவது, (எ - று).

* வாயிலும் † வழியும் ஒழிந்த விடங்கள் மலை, காடு, நீர்நிலையென்றிவற்றுள் ஏற்பனவுடைத்தாதல் பற்றிச் 'சிறுகாப்பின்' என்றும், அகத்தோர் நலி

வின்றி யிருத்தல்பற்றிப் 'போரிடத்ததாகி'என்றும், தம்வலி நோக்கிஇதுபொ
ழுதே யழித்துமென்று வரும் பகைவர் வந்துகண்டால் அவ்வூக்கமொழிதல்
பற்றி 'ஊக்கமழிப்பது' என்றுங் கூறினர்.

கேளி:—(இ - ள்.) அரண் - அரணுவது, சிறுகாப்பின்
- காக்கவேண்டு

மிடஞ் சிறிதாய், போரிடத்ததாகி - பரந்தவிடத்தை யுடையதாய், உறுபகை -
(தன்னைவந்து) சூழ்ந்தபகைவரது, ஊக்கம் - மனவெழுச்சியை, அழிப்பது -
கெடுப்பதே, (எ - று).

வாயிலும் வழியும் ஒழிந்த இடங்கள் மலை, காடு, நீர்நிலை என்ற இவற்
றுள் தகுதியானவற்றை யுடையதாயிருத்தல் பற்றிச் 'சிறுகாப்பின்' என்றும்,

---

படக் குறுக்கே போடக்கடவமரமுமாம். முழுவிறற்
கணையமும்-கணையமர

மும், கோலும் - விட்டேறும், குந்தமும் சிறுசவளமும், வேலும் - வல்லைய
மும், ஈட்டி முதலியனவுமாம். பிறவும்-சக்கினி, தள்ளிவெட்டி, களிற்றுப்
பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப்பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப்
பொறி, தகர்ப்பொறி அரிதூற்பொறி என்பனவும் என்பது. [இஃது அடி
யார்க்கு நல்லார் உரை]. வலைவிற் பொறியு மயிற்செறி
நிலையும் என்பதற்

குப் பிரதியாக இலையுங் கிடங்கும் வலைவிற்பொறியும் என்றும், கோலுங்
குந்தமும் வேலுஞ் சூலமும் என்பதற்குப் பிரதியாகக் கோலுங் குந்தமும்
வேலும் பிறவும் என்றும் பாடமுண்டு.

மயிற்செறி நிலையும் என்பதற்குப் பகைவரைப்பறந்து சென்று கடிதத் தாக் கொல்லும்பொருட்டு மயில்போலச்செய்துள்ள பொறிகளமைந்த விடமும் என்று பொருள் கொள்க.

* வாயிலும் என்றது - கோட்டைமதிலின்கண் கதவினை யுடைய மூன்று வாயில்களையும்.

† வழி - கோட்டைக்குள்ளே செல்லும்வழி.



அகத்தோர் வருத்தமில்லா திருத்தல் பற்றிப் 'பேரிடத்ததாகி' என்றும், தமது வலிமையை நோக்கி இப்பொழுதே இதனை அழித்து விடுவோமென் றெண்ணி வரும் பகைவர் வந்து பார்த்தால்அம்மனவெழுச்சியொழிதல்பற்றி 'ஊக்கமழிப்பது' என்றும் சொல்லினர்.

(க - து.) காக்கவேண்டுமிடஞ் சிறியதாய்ப் பரந்தவிடத்தை யுடையதாய்த் தன்னைவந்து சூழ்ந்த பகைவரது ஊக்கத்தையொழி ப்பதாயுள்ளதே அரணம் என்பது.

4. A fort is that which has an extensive space

within, but only small spaces to be guarded and such as can destroy the courage of besieging foes.

நே. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்

நிலைக்கெளிதா நீர தரண்.

பரி:—(இ - ன்.) * புறத்தாராற் கோடற்கரிதாயி உட்கொண்ட பல வகை யுணவிற்றயி அகத்தாரது † போர்நிலைக்கெளிதாய நீர்மையை யுடையதே அரணுவது, (எ - று).

கோடற்கருமை - ‡ இவை ¶இட ங்குகளானும் $ பொறிகளானும் இடங் கொள்ளுதற் கருமை. உணவு தலைமைபற்றிக் கூறினமையின், மற்றுள்ள நுகரப்படுவனவு மடங்கின. நிலைக்கெளிதா நீர்மையாவது அகத்தார் விட்ட ஆயுத முதலிய புறத்தார்மே லெளிதிற் சேறலும், அவர்விட்டன அகத்தார் மேற் செல்லாமையும், பதணப்பரப்பும் + முதலாயின.

தெளி:—(இ - ள்.) அரண் - அரணுவது, கொளற்கரிதாய் - (புறத்தாரால்) கொள்ளுதற்கரியதாய், கொண்ட - உட்கொண்ட, கூழ்த்தாகி - (பலவகை) உணவை யுடையதாய், அகத்தார் - அகத்தாரது, நிலைக்கு - (போர்) நிலைக்கு, எளிதாம் - எளிதாய, நீரது - குணத்தையுடையதே.

கொள்ளுதற்கருமை-காவற்காடு கிடங்குகளாலும் பொறிகளாலும் இடங் கொள்ளுதற்கருமை. 'கூழ்த்தாகி' என உணவைத் தலைமைபற்றிச் சொன்னமையால், மற்றுள்ள அனுபவிக்கப்படுவனவும் அடங்கின. நிலைக்கெளிதா நீர்மையாவது அகத்தார் விட்ட ஆயுதமுதலாயின புறத்தார்மேல் எளிதிற்

---

* புறத்தாரால் - மதிலுக்கு வெளியிலுள்ளபகைவரால்.

† போர் நிலைக்கு - நிலத்துப் பகைவரோடு போர்புரிவதற்கு.

‡ இலை - பிரதானமானகாவல்.

¶ கிடங்கு - மதிற்புறத்துள்ள அகழி.

§ பொறிகள் - மதிலின்கணுள்ள வேல், வாள், தடி, சக்கர முதலியனவாம்.

வில், மழு, தண்டு,

+ முதலாயின என்றமையின், மதிலைக் குத்த முடியாமை, அம்மதில் தோண்டுதல் முடியாத ஆடியகல முடைமை முதலியவற்றையுங் கொள்க.





செல்லுதலும், அவர் விட்ட ஆயுத முதலாயின அகத்தார்மேல் செல்லாமை யும், பதணப்பரப்பும் முதலாயின.

பதணம் - மதிலுண்மேடை.

(க - து.) பகைவர்பற்றிக்

கொள்ளுதற்கரியதாய்ப் பலவகை யுணவுகளை யுட்கொண்டுள்ளதாய்த் தன்னுளிருப்பவர் போர்செய்வதற் கெளிதாயிருப்பது அரணம் என்பது.

5. A fort is that which cannot be captured, which abounds in various kinds of provisions and affords a position of easy defence to its inmates.

சூ. எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண்.

பரி:—(இ - ள்.) அகத்தோர்க்கு வேண்டும் பொருள்க ளெல்லா வற்றையும் உள்ளேயுடைத்தாம்; புறத்தோரால் அழிவேயிது மெல்லிக் கண் * அஃதெயிதாவகை யுதவிக்காக்கும் அரணவது, (எ - று).

நல்லவீரரையுமுடையதே

அரசன்மாட் டன்பும் மானமும் † மறமும் ‡ சோர்வின்மையும் ¶ முதலிய நற்குணங்க ளுடைமைபற்றி 'நல்லாள்' என்றார்.

தெளி:—(இ - ன்.) அரண் - அரணுவது, எல்லாப்பொருளும் - (அகத்தோர்க்குவேண்டும்) பொருள்களெல்லாவற்றையும், உடைத்தாய் - (உள்ளே) உடையதாப், இடத்து (புறத்தோரால்) அழிவடையுமளவில், உதவும்- (அது வாதுபடி) உதவிக்காக்கவல்ல, நல்லாள் - நல்லவீரரையும், உடையது- உடையதே, (எ - று).

அரசனிடத்து அன்பும் மானமும் மறமும் சோர்வில்லாமையும் முதலிய நற்குணங்களுடைமைபற்றி 'நல்லாள்' என்றார்.

(க - து.) தன்னுளிருப்போர்க்கு வேண்டும் பொருள்களெல்லாவற்றையு முடையதாய்ப் பகைவராலழிவு வாதப்படி காக்கும் நல்லவீரரையுமுடையதாயிருப்பது அரணும் என்பது.

6. A fort is that which has all requisite things and war-like heroes who can help it against destruction by enemies.

---

* அழிதெய்தாவகை - அழிவு அடையாதபடி.

† மரம்-வீரம். ‡ சோர்வின்மை - தளர்ச்சியில்லாமை.

¶ முதலிய என்றமையின், நல்லாரிணக்கமுடைமை, தெய்வசிந்தையுடைமை, கல்வி கேள்வி யறிவொழுக்கமுடைமை முதலியவற்றையுங் கொள்க.

அங்கவியல்—கஉ-வது அரண்.

எ. முற்றியு முற்று தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்.

பரி:—(இ - ள்.) † புகலோடு போக்கோழியும்வகை நெருங்கிச்

சூழ்ந்தும் அங்ஙனஞ் சூழாது * நெகிழ்ந்தவிடஞ்நோக்கி ஒருமுகமாகப் போருதும் அகத்தோரை ‡ அவர் தெளிந்தோரைவிட்டுக் ¶ கீழறுத்துத் திறப்பித்தும் புறத்தோரா ற் கொள்ளுதற்கரியதே அரணவது, (எ-று).

இம்மூன்றுபாயத்துள்ளும் முதலது எல்லாப் பொருளுமுடைமை யானும், ஏனைய நல்லாளுடைமையானும் வாயாவாயின.

தெளி:—(இ - ள்.) அரண் - அரணவது, முற்றியும் - (புகுதலோடு போக்கு ஒழியும்வகை) நெருங்கிச் சூழ்ந்தும், முற்றாது - அவ்வாறு சூழாமல், எறிந்தும்—(நெகிழ்ந்தவிடநோக்கி ஒருமுகமாகப்) போர்செய்தும், அறைப் படுத்தும் - (அகத்தோரை அவர் தெளிந்தவரை விட்டுக்) கீழறுத்துத் திறப்பித்தும், பற்றற்கரியது - (புறத்தோரால் பிடித்துக்) கொள்ளுதற்கரி யதே, (எ - று).

இம்மூன்று உபாயத்துள்ளும் முதலாவது எல்லாப்பொருளு முடை மையாலும், மற்றையவை

நல்லாளுடைமையாலும் பலிப்பனவல்ல வாயின.

(க - து.) எவ்வகை யுபாயத்தாலும் பகைவர் பற்றுவதற் கரி தாயுள்ளதே அரணும் என்பது.

7. A fort is that which cannot be captured by blocka- ding, assaulting or under-mining it.

அ. முற்றுற்றி முற்றி யவரையும் பற்றுற்றிப் பற்றியார் வெல்வ தரண்.

---

† புறத்தோர்(பகைவர்) அகத்தோர் வருதலோடு போதலொழியும் வண்ண நெருங்கிச் சூழ்ந்தும்.

* நெகிழ்ந்தவிடனோக்கி - அகத்தோர் சோர்ந்துள்ள சமயம்பார்த்து.

‡ அவர் தெளிந்தோரை - அகத்தோர் (இவருண்மையாயவரென்று) ஆராய்ந்தறிந்தவரை.

¶ கீழறுத்தற் திறப்பித்தும்-வஞ்சித்து மாறுபடுத்தியும். (வஞ்சித்தல்-அரசனிடத்து அன்பொழியுமாறு போதித்தல்)

§ புறத்தோர் (பகைவர்) செய்யும் முற்றியும், முற்றுதெறிந்தும்,

அறைப்படுத்தும் என்னு மூன்று உபாயத்துள்ளும் முதலாவதான முற்றி யும் என்பது உள்ளே யிருப்போர்க்கு வேண்டும் பொருள்க ளெல்லாமுடை மையாலும், மற்றைய மூற்றுதெறித்தும் அறைப்படுத்தும் என்பன நல்கு வீரை யுடைமையாலும் பலிக்காதொழிந்தன என்பது.



பரி:—(இ - ள்.) தானைப்பெருமையாற் சூழ்தல்வல்லாய் வந்து சூழ்ந்த புறத்தோரையும் தன்னைப்பற்றிய வகத்தோர் தாம் பற்றிய விடம் விடாதே நின்று போருது வெல்வதே அரணுவது, (எ - று).

உம்மை-சிறப்பும்மை. † பற்றின்கண்ணே யாற்றியெனவிரியும். பற்று-ஆகுபெயர். ‡ வெல்வதென உடையார்தொழில் அரண்மே னின்றது. பெ ரும்படையானைச் சிறுபடையான் ¶ பொறுத்து நிற்கும் தானையன்றி வெல்லுமியல்பினதென்பதாம். * இதற்குப் பிறிதுரைப்பாருமுளர். இவை யேழுபாட்டானும் $ அதன திலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ—ள்.) அரண்-அரணுவது, முற்றுற்றி - (சூனைப்பெருமை யால்) சூழ்தல் வல்லவராய், முற்றியவரையும் - (வந்து) சூழ்ந்த புறத்தோரை யும், பற்றியார் - (தன்னைப்) பற்றிய அகத்தோர், பற்றுற்றி - (தாம்) பற்றிய விடத்தைவிடாதே நின்று, வெல்வது - (போர்செய்து) வெல்வதே, (எ-று).

முற்றியவரையும் என்னும் உம்மை-உயர்வு சிறப்பும்மை. பற்றுற்றி யென்பது பற்றின்கண்ணே யாற்றி

யென விரியும். பற்று என்னும் முதனி

லைத் தொழிற்பெயர் பற்றியஇடத்தையுணர்த்துதலால் முதனிலைத்தொழிலா குபெயராம். வெல்வதென ஆணுடையார் தொழில் அரண்மேல் நின்றது. அரண் பெரும்படையானைச் சிறுபடையான் பொறுத்து நிற்குந் துணையே யன்றி வெல்லுமியல்பினதன்பதாம். இவை எழுபாட்டாலும் அதனது இலக்கணம் சொல்லப்பட்டது. புறத்தோர் - பகைவர்.

(க - து.) சேனைப்பெருமையாற் றன்னைச் சூழ்ந்து வளைத்த பகைவரையுந் தன்னிடத்துள்ள வீரரால் வெல்லச்செய்வதே அரணம் என்பது.

8. That is a fort whose inmates are able to overcome without losing their ground, even abler men who have besieged it.

கூ. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து வீறெய்தி மாண்ட தரண்.

† பற்றின்கண்ணேயாற்றி - பற்றியவிடத்திலே விடாது

நின்று.

‡ அரணிலிருந்து பகைவரை வெல்லும் வீரரது வெல்லுதற் தொழிலை அரணின்மீதேற்றி வெல்வது அரண் என்று கூறினமையின், இஃது இடத்துநிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேலாய உபசார வழக்காம்.

¶ பொறுத்து நிற்குந் துணையேயன்றி - தரித்து (சமாளித்து) நிற்கும் அளவேயல்லாமல்.

* இக்குறளுக்கு வேறு பொருள் கூறுவாரு முண்டு.

§ அதனதிலக்கணம் - அரணது இயல்பு.

அங்கவியல்—கூ-வது அரண்.

**829**

**பரி:—(இ - ள்.) போர் தொடங்கின வளவிலே பகைவர் கெடும் வண்ணம் அகத்தோர் செயியும் வினை வேறுபாடுகளான் * வீறுபெற்று மற்றும் வேண்டுமாட்சியை யுடையதே அரணுவது, (எ - று).**

† தொடக்கத்திற் கெட்டார் பின்னுங் கூடிப் பொருதல் கூடாமை யின், மூனைமுகத்துச் சாய என்றார். வினைவேறுபாடுகளாவன: பகைவர் தொடங்கிய போரினையறிந்து ¶ எய்தல், எறிதல், குத்துதல், வெட்டுத

லென்றிவை முதலாயின வினைகளுள் அதனைச் சாய்ப்பன செய்தல். மற்றும் வேண்மாட்சி யென்றது புறத்தோரறியாமற் புகுதல் போதல் செய்தற்குக் கண்ட § சுருங்கை வழி ‡ முதலாயினவுடைமை.

தெளி:—(இ - ள்.) அரண்-அரணுவது, முனைமுகத்து — போர் தொடங்கினவளவிலே, மாற்றலர் - பகைவர், சாய - கெடும்படி, வினைமுகத்து- (அகத்தோர்செய்யுந்) தொழில் வேறு பாடுகளால், வீறெய்தி-வீறுபெற்று, மாண்டது-(மற்றும் வேண்டும்) பெருமையை யுடையதே, (எ - று).

ஆரம்பத்திற் கெட்டவர் பின்னுங்கூடிப் போர்செய்தல் கூடாமையால் முனைமுகத்துச்சாய என்றார். தொழில் வேறுபாடுகளாவன; பகைவர் தொடங்கிய போரினை அறிந்து எய்தல், எறிதல், குத்துதல், வெட்டுதல் என்ற இவை முதலாகிய தொழில்களுள் அப்போரினை அழிப்பனவற்றைச் செய்தல். மற்றும்வேண்டும் பெருமை யென்றது புறத்தோர் அறியாமல் புகுதல் போதல் செய்தற்கு உண்டாக்கியுள்ள சுருங்கைவழி முதலாயின உடைமையை. சுருங்கைவழி - நுழைவாயில்.

(க - து.) பகைவர் போர்செய்யத்தொடங்கியபோதே கெடும் படி தன்னிடத்துள்ள வீரர் போர் செய்ய

வல்ல பெருமையைப் பெற்றுச் சுருங்கைவழி முதலியவற்றையு முடையதே அரணம்.

9. A fort is that which derives excellence from the stratagems made by its inmates to defeat their enemies in the battlefield.

க0. சினமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்.

---

* வீறு - மற்றொன்றற் கில்லாத சிறப்பு.

† தொடக்கத்திற் கெட்டார்-போர்புரிய வந்து ஆரம்பத்திற்றோற்றவர்.

¶ எய்தல் - அம்பினையெய்தல், எறிதல் - சக்கரம் வேல் முதலியவற் றை வீசி யெறிதல், குத்துதல்-ஈட்டியாற் குத்துதல், வெட்டுதல் - கத்தியால் வெட்டுதல்.

§ சுருங்கைவழி - கோட்டையிலுள்ளே ஏற்படுத்தியுள்ள கள்ளவழி.

‡ முதலாயின வுடைமையை என்றும் பாடமுண்டு. முதலாயின என்ற றமையின், சுரங்கவழி, கீழறைவழி முதலியவற்றையுங் கொள்க.



பரி:—(இ - ள்.) அரண் மேற் சொல்லப்பட்ட மாட்சியெல்லா முடைத்தாய விடத்தும் வினை செய்தற்கண் மாட்சியில்லாதாரீமாட்டு * அவையிலதாம், (எ - று).

வாளாவிருத்தலும், அளவறியாது செய்தலும், எலாதது செய்தலு மெல் லாம் அடங்க 'வினைமாட்சி யில்லார்' என்றும், எற்றவினையை யளவறிந்து செய்து காவாக்கால் அம்மாட்சிகளாற் பயனின்றி யழியுமென்பார் † 'இல்ல தரண்' என்றுங் கூறினர். இவை யிரண்டு பாட்டானுங் காப்பாரை யின்றி யமையாதென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) அரண் - அரணுவது, வினைமாட்சித்தாகியக் கண்ணும் - மேற் சொல்லப்பட்ட பெருமை யெல்லா முடையதாகிய விடத் தும், வினை - தொழில்செய்யுமிடத்து, மாட்சி - பெருமையை, இல்லார் கண் - இல்லாதவரிடத்து, இல்லது - (அவை) இலதாம், (எ - று).

சும்மாவிருத்தலும், அளவறியாது செய்தலும், ஏற்காதது செய்தலும் எல்லாம் அடங்க 'வினைமாட்சியில்லார்' என்றும், ஏற்றதொழிலை அளவறிந்து செய்து காப்பாற்றுமற்போனல் அவ்வாணனது அப்பெருமைகளால் பயனில்லாமல் அழியுமென்பார் 'இல்லதாண்' என்றும் சொல்லினர். இவை இரண்டுபாட்டாலும் அரணுக்குக் காப்பவர் அவசியம் வேண்டுமென்பது சொல்லப்பட்டது.

(க - து.) தகுதியாகப் போர்செய்யும் வீரரை யில்லாதவிடத்து அரண் எவ்வளவு பெருமையை யுடையதாயிருந்தாலும், அதனற் பயனுடையதன்றும் என்பது.

10. Although a fort may possess all the aforesaid excel- lences it is as it were without these, if its inmates possess not the excellency of action.

அஃகவியலில் அரண் முற்றிற்று.

## பதின்மூன்றுவது அதிகாரம்.

பொருள் செயல்வகை—*The way to accumulate wealth.*

பரி:—இனிப்பெரும்பான்மையும் நாட்டானும் அரணனும் 1 ஆக்க வுங் காக்கவும் படுவதாய பொருளைச்செய்தலின் ‡ றிறமீ இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார். அஃதாவது இன்னதென்பதூஉம் அதிகா

முறைமையும் இதனுள் விளங்கும்.

தெளி:—இனிப் பெரும்பான்மையும் நாட்டாலும் அரணாலும் வளர்க்கவும் காக்கவும் படுவதாகிய பொருளைச் சம்பாதித்தலின் திறத்தை இவ்வதி

---

* அவை - மேற் சொல்லப்பட்ட (அரணிற்கு இருக்கவேண்டிய) மாட்சி யெல்லாம்.

† அவையிலதாம் என்றும், அவையுடைத்தன்று என்றும் பாடமுண்டு ஆக்கவும் - மேன்மேற் பெருகச்செய்யவும். ‡ திறம் - வகை.



காரத்தாற் சொல்லுகிறார். அஃதாவது இத்தன்மைய தென்பதும் அதிகார முறைமையும் இதனுள் விளங்கும்.

க. † பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

பரி:—(இ - ள்.) ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் படுவாராகச் செய்யவல்ல பொருளை யொழிய ஒருவனுக்குப் பொருளாவதில்லை.

மதிக்கப்படாதார் - அறிவிலாதார், இழிகுலத்தார். இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. மதிக்கப்படுவாராகச் செய்தல் - ‡ அறிவுடையாரும் உயர் குலத்தாரும் * அவர்பாற்சென்று நிற்கப் பண்ணுதல். ¶ அதனால் ஈட்

டப்படுவது $ அதுவே பிறிதில்லையென்பதாம்.

தெளி:—(இ - ள்.) பொருளல்லவரை - ஒருபொருளாக மதிக்கப் படாதவரையும், பொருளாகச் செய்யும் - மதிக்கப்படுவாராகச் செய்யவல்ல, பொருளல்லது - பொருளையொழிய, பொருள் (ஒருவனுக்குப்) பொருளாவது, இல்லை-, (எ - று).

மதிக்கப்படாதவர் - அறிவில்லாதவர், இழிகுலத்தார். பொருளல்லவரையும் என்னும் இழிவுசிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. (பொருளல்லவரையும்) மதிக்கப்படுவாராகச் செய்தல் - அறிவுடையவரும் உயர்குலத்தவரும் அவரிடத்திற் சென்று நிற்கப்பண்ணுதல். அதனால் சம்பாதிக்கப்படுவது அதுவே மற்றொன்றன்று என்பதாம்.

(க - து.) பொருள் ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும் மதிக்கப்படுவாராகச் செய்தலால் அதனையே தேடவேண்டும் என்பது.

1. Besides wealth there is nothing that can change people of no importance into those of some importance.

உ. + இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

† "பூரியர் தமைவேந்தனைக்கும் புவிபுரப் பிக்குந் துய்க்குஞ்,சீரிய வண்டி சேர்க்குந் தேவர்த முலகம் போக்குங், காரிய மினைத்துங் கூட்டுங் கருதலர் தம்மை வாட்டுங், கூரிய திதன்மே லில்லை கொழும்பொனீர் கொண்மி னென்றூர்" என்று இராமாயணம் கூறுகின்றது.

‡ "என்சொலினும், கைத்துடையான் (பொருளுடையவன்) காற்கீ

ழொதுங்குங் கடன்ஞாலம்" என்று நீதிநெறிவிளக்கம் கூறுகின்றது.

* அவர்பால் - அறிவிலாதார் இழிகுலத்தா ரென்பவரிடத்து.

¶ அதனால்-அறிவுடையாரும் உயர்குலத்தாரும் அவரிடத்துச் சென்று நிற்கப் பண்ணுதலால். $ அதுவே - பொருளே.

+"கல்லானே யாலுங் கைப்பொருளொன் றுண்டாயின், எல்லா ருஞ் சென்றங் கெதிர்கொள்வ - ரில்லானை, இல்லாளும் வேண்டாண்மற்



பரி:—(இ - ள்.) எல்லா நன்மையு முடையராயினும் பொருளில்லா ரை யாவரு மிகழ்வர், எல்லாத்தீமையு முடையராயினும் அஃதுடை யாரை யாவரு முயாச்செயிவர், (எ - று).

உயாச்செய்தல் - தாந்தாழ்ந்து நிற்றல். *

இகழ்தற்கண்ணுந் தாழ்தற்

கண்ணும் பகைவர், நட்டார், நொதுமல ரென்னும் மூவகையாரு மொத்த வின், 'எல்லாரும்' என்றார். † பின்னுங் கூறியது அதனை வலியுறுத்தற் பொருட்டு.

தெளி:—(இ - ள்.) (எல்லா நன்மையு முடையவராயிருந்தாலும்) இல்

லாரை - (பொருள்) இல்லாதவரை, எல்லாரும்-யாவரும், எள்ளுவர்-இகழ்வர், (எல்லாத் தீமையு முடையவராயிருந்தாலும்), செல்வரை - அப்பொருளு டையவரை, எல்லாரும் - யாவரும், சிறப்புச்செய்வர் - உயரச்செய்வர்.

உயரச்செய்தல் - தாம் தாழ்ந்து நிற்றல். இல்லாரை இகழ்தலிலும் செ

ல்வரைத் தாழ்தலிலும் பகைவர், நட்பினர், அயலார் என்னு மூவகையாரும் ஒத்தலால் 'எல்லாரும்' என்றார். பின்னுஞ் சொல்லியது அதனை உறுதி செய் தற் பொருட்டாம்.

(க - து.) பொருளுடையார் மதிப்பைப்பெறுவர்; அஃதில் லாதார் அவமதிப்பைப் பெறுவர் என்பது.

2. All despise the poor; but all praise the rich.

ரு. பொருளென்னும் பொய்யா விளக்க

மிருளறுக்கு

மெண்ணிய தேயத்துச் சென்று.

பரி:—(இ-ள்). பொருளென்று எல்லா ராலும் சிறப்பிக்கப்படும்

‡ நந்தாவிளக்குத் ¶ தன்னைச் செய்தவர்க்கு அவர் நினைத்த தேயத்துச் சென்று பகையென்னு மிருளைக் கெடுக்கும், (எ - று).

---

றீன்றெடுத்த தாய்வேண்டாள், செல்லா தவன்வாயிற் சொல்" என்று நல்

வழி கூறுவது மிங்குணர்தற்பாலதாம்.

*

பொருளில்லாதவரைப் பகைவர் நட்பினர் அயலாரென்னும் மூவகை

யாரும் இகழ்ந்து

(பழித்துப்)பேசுவாரென்றும்,பொருளுடையவரை யுயரச்

செய்வாரென்றும் கொள்க.

† 'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்,பொருள்'என்று கூறிய

தனைடமையாது பின்னும் "செல்வரை, யெல்லாருஞ் செய்வர் சிறப்பு' என்று கூறியது பொருளின் தன்மை யித்தன்மையதென்று அதனை உறுதிப்படுத்திக் காட்டற் கென்க. இவ்வாறுகூறுவது அணுவாதமாம்.

‡ நந்தா-கெடாத. ¶ தன்னை-பொருளாகியதன்னை.

எல்லார்க்கும் எஞ்ஞான்றும் இன்றியமையாததாய் வருதல்பற்றிப் 'பொய்யா விளக்கம்'என்றும்,எனைவிளக்கோடு † இதனிடை § வேற்றுமை தோன்ற 'எண்ணியதேயத்துச் சென்று' என்றுங் கூறினர். ‡ எகதேசவுரு வகம். இவை மூன்றுபாட்டானும் பொருளது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) பொருளென்னும்-பொருளென்று (எல்லாராலுஞ்) சிறப்பித்துச் சொல்லப்படும், பொய்யாவிளக்கம் - நந்தாவிளக்கானது, (தன்னைச் சம்பாதித்தவர்க்கு), எண்ணிய-(அவர்) நினைத்த, தேயத்துச் சென்று-தேசத்திற்குப்போய், இருள்-(பகையென்னும்) இருளை, அறுக்கும் - கெடுக்கும், (எ - று).

பொருள் எல்லார்க்கும் எந்நாளும் அவசியமாக வேண்டுவதாய் வருதல் பற்றி அதனைப் 'பொய்யாவிளக்கம்' என்றும்,மற்றைவிளக்கோடு இதனிடத்து வேற்றுமைதோன்ற 'எண்ணியதேயத்துச்சென்று' என்றும், சொல்லினர். இஃது எகதேசவுருவகம். இவை மூன்று பாட்டாலும் பொருளது சிறப்புச் சொல்லப்பட்டது. வேற்றுமை - வேறுபாடு.

(க - து.) தன்னைச் சம்பாதித்தவரது பகைவ

செவ்விடத்திரு ப்பினும் அவரைக் கெடுக்கவல்லது பொருளாபாம் என்பது.

3. The imperishable light of wealth goes into regions desired by its owner and dispels the darkness of enmity therein.

## ச. * அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்.

பரி:—(இ - ள்.) செய்யுந்திறத்தினையறிந்து அரசன் கொடுக்கோன்மையிலனாக வுளதாயபொருள் அவனுக்கு அறத்தையுங் கொடுக்கும், இன்பத்தையுங் கொடுக்கும், (எ - று).

செய்யுந்திறம் - தான் பொருள் செய்தற்குரிய நெறி. இலனாக வென்பது இன்றியெனத் திரிந்து நின்றது. செங்கோலனென்று புகழப்படுதலா

† இதனிடை - பொருளென்னும் பொய்யா விளக்கத்தினிடத்து.

§ எண்ணிய தேயத்தச்சென்று (பகை) இருளையறுத்தல் பொருளென்னும் விளக்கிற்கன்றி வேறெய விளக்கிற்கின்மையே இங்கு வேற்றுமையாம.

‡ பொருளென்னும் பொய்யா விளக்கம் என்றுருவகஞ் செய்தவர் அதற்கேற்பப் பகையென்னும் இருள் என்றுருவகஞ் செய்யாமையின், இக்குறள் எகதேசவுருவகமாயிற்று.

* "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் (அறம்பொருளின்பங்களில்), நடுவண (பொருள்) தெய்த விருதலையும் (அறமும் இன்பமும்)எய்தும்" என்று நாலடியார் கூறுகின்றது.

னும் கடவுட் பூசை தானங்களாற் * பயனெய்தலானும் 'அறனீனும்' என்

றும், நெடுங்காலநின்று துய்க்கப்படுதலான் 'இன்பமு மீனும்' என்றுங் கூறினர். † அதனன் $ அத்திறத்தானீட்டுகவென்பதாம்.

தெளி:—(இ - ள்.) திறனறிந்து - (செய்யும்) வகையினையறிந்து,

நீது - (அரசன்) கொடுங்கோன்மை, இன்றி-இலனாக, வந்தபொருள் - உண் டாகிய பொருள், (அவனுக்கு), அறன் - அறத்தையும், ஈனும் - கொடுக்கும்,

இன்பமும் - இன்பத்தையும், ஈனும் - கொடுக்கும், (எ - று).

செய்யும்வகை - தான் பொருளைச் சம்பாதித்தற்குரியவழி. இலனாக

வென்பது செய்யுள் விகாரத்தால் இன்றி எனத் திரிந்துநின்றது (நீதினின்றி

வந்த பொருள்) செங்கோலனென்று புகழப்படுதலாலும் கடவுட் பூசை தா

னங்களால் பயனையடைதலாலும் 'அறனீனும்' என்றும்,

நெடுங்காலமிரு

ந்து அனுபவிக்கப்படுதலால் 'இன்பமுமீனும்' என்றும் சொல்லினர். அத

னால் (அரசன்) அவ்வகையாற் பொருளைச் சம்பாதிக்கக் கடவனென்பதாம்.

(க - து.) நன்மார்க்கத்திற் சென்று சம்பாதித்த பொருள்

அறத்தையும் இன்பத்தையும் தரும் என்பது.

4. The wealth acquired through a knowledge of the proper

means and without injustice will yield virtue and happi-

ness.

நி. அருளோடு மன்போடும் வாராப் பொருளாக்கம்

புல்லார் புரள விடல்.

பரி:—(இ - ள்.) தாங்குடிகண்மாட்டுச் செய்யு ¶ மருளோடும்

அவர் தம்மாட்டுச்செய்யு () மன்போடுங் கூடிவாராத பொருளீட்டத்தை அரசர் பொருந்தாது கழியவிடுக, (எ - று).

+ அவற்றோடு கூடிவருதலாவது ¶ ஆறிலொன்றாய் வருதல். 0 அவ்

* பயன் - அறத்தின்பயன்.

† அதனுன் - அறத்தையு மின்பத்தையுந் தருதலால்.

§ அத்திறத்தான் - பொருளைச் சம்பாதித்தற்குரியவழியால்.

¶ அருள் - சம்பந்தங்கருதாமல் சுபாவமாக யாவரிடத்தும் செய்வதாகிய கருணை. இஃது உயர்ந்தோர்செய்யும் நேயமாம்.

() அன்பு - சம்பந்த முடையவரிடத்துக் காரணம்பற்றிப் பிரியங்கொள்ளுதல். இது தாழ்ந்தோர் செய்யும் நேயமாம்.

† அவற்றோடு - அருளோடும் அன்போடும்.

‖ ஆறிலொன்றுய்வருதல் - குடிகள் சம்பாதிக்கும் பொருள்களுள் ஆறில் ஒருபாகமாய்ப்பெறுதல். ஆறில் ஒருபாகமென்னும் விஷயத்தைத் "தென்புலத்தார் தெய்வம்" என்னும் குறளின் விசேடவுரையிற் காண்க.

0 அவ்வாறு - அருளோடும் அன்போடுங் கூடி ஆறிலொன்றுய்.



வாறு வாராத பொருளீட்டம் † பசுமட் கலத்தணீர்போலச் செய்தானையுங் கொண்டிறத்தலின், * அதனைப்'புல்லார்' என்றெழியாது 'புரளவிடல்'என்றுங் கூறினர்.

தெளி:—(இ - ள்.) அருளோடும் - (தாம்

குடிகளிடத்துச் செய்யும்) கருணையோடும், அன்பொடும் - (அவர் தம்மிடத்துச் செய்யும்)அன்போடும், வாரா - (கூடி) வாராத, பொருளாக்கம் - பொருட்சம்பாத்தியத்தை,புல்லார்- (அரசர்) பொருந்தாராகி, புரளவிடல் - நீங்க விடக்கடவர் (எ - று).

அவற்றோடு கூடிவருதலாவது ஆறிலொன்றாய் வருதல். அப்படி வாராதபொருட் சம்பாத்தியம் பச்சைமண் பாத்திரத்தில் வார்த்துவைத்த நீர் போலச் சம்பாதித்தவனையுங்கொண்டு இறத்தலால், அதனைப் 'புல்லார்'என்ற வளவில் நிறுத்தாமல் 'புரளவிடல்' என்றும் சொல்லினர்.

(க - து.) அரசர் அருளோடும் அன்போடும் கூடி வாராத பொருளை விட்டொழியக்கடவர் என்பது.

5. Knigs should avoid the accumulation of wealth which does not flow in with mercy and love.

கூ. உறுபொருளு முல்கு பொருளுந்தன் னென்னுஞ்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

பரி:—(இ - ள்.) உடையாரின்மையிற்

றனேவந்துற்ற பொருளும் ¶ சுங்கமாகிய
பொருளும் தன்பகைவனைத் ‖ திறையாகக் கொள்ளும்
பொருளும் அரசனுக்குரிய பொருள்கள், (எ - று).

உறுபொருள் - வைத்தாரிறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கட்கிடந்து பின்கண்டெடுத்ததூஉம், தாயத்தார் பெறுதலூஉமாம். சுங்கம் - கலத்தினுங் காலினும் வரும் பண்டங்கட்கிறையாயது. §

தெறுபொருள் - o தெறு

---

† வினைத்தூய்மை - 10. பச்சைமண் பாத்திரத்தில் வார்த்து வைத்த நீர் அப்பாத்திரத்தோடு விரைந்து கெடுதல் போன்று அருளோடும் அன் போடுங்கூடி வாராத பொருளும் தன்னைச் சம்பாதித்த அரசோடு விரைந்து கெடுமென்பதாம்.

* அதனை - அருளோடும் அன்போடுங் கூடிவாராத பொருளை.

¶ சுங்கமாகிய பொருள் - ஆயச்சாவடியில் வெளியிலிருந்து வரும் பொருள்களுக்குத் தீர்வை விதித்து வாங்குவதாகிய பொருள்.

‖ திறையாக - (வென்று) கப்பமாக.

§ தெறுபொருள் என்பது மூன்றும் வேற்றுமை யுருபும் பொருளு முடன்றொக்க தொகையாம். தெறு என்பது

முதனிலைத் தொழிற்பெயர்.

o தெறுதலான் - போர்செய்து வெல்லுதலால்.



தலான் வரும் பொருளென விரியும். *

ஆறிலொன்றெழுதியவும் உரியன கூறியவாறு. இவை மூன்று பாட்டானும் அஃதீட்டுநெறி கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) உறுபொருளும் - (உடையவர் இல்லாமையால் தானேவந்து) கிடைத்தபொருளும், உல்கு பொருளும் - சுங்கமாகிய பொரு ளும், தன்னெண்ணர் - தன் பகைவரை, தெறுபொருளும் - வெல்லுதலால் (திறையாகக் கொள்ளும்) பொருளும், வேந்தன்பொருள் - அரசனுக்குரிய பொருள்கள், (எ - று).

உறுபொருள் - புதைத்து வைத்தவரிறந்துபோக நெடுங்காலம் நிலத் தின்கீழ்க் கிடந்து பின் கண்டெடுத்ததும், பங்காளிகள் அடையாததுமாம். சுங்கம் - மரக்கலத்திலும் வண்டியிலும் வரும் பண்டங்களுக்கு வாங்கும் வரிப் பொருளாம். தெறுபொருள் - தெறுதலால் வரும் பொருளென விரியும். ஆறி லொன்றல்லாமலும் உரியபொருள்களைச் சொல்லியபடியாம். இவை மூன்று பாட்டாலும் அப்பொருளைச் சம்பாதிக்கும் வழி சொல்லப்பட்டது. *

(க - து.) உடையவரில்லாமையாற் றானே வந்துகிடைத்த பொருளும், சுங்கப்பொருளும், பகைவரைவென்று திறையாகக் கொள்ளும்பொருளும், அரசனுக்குரிய பொருளாமென்பது.

6. Unclaimed property, wealth acquried by taxes and conquest of foes are all the wealth of the king.

எ. அருளென்னு மன்பீன் குழவி
பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு.

பரி:—(இ - ள்.) ()அன்பினுலீனப்பட்டஅருளென்னுங்குழவிபொருளென் றுயரீதீதுச் சொல்லப்படுஞ் செல்வத்தை யுடைய † செவிலியான் வளரும், (எ - று).

தொடர்புபற்றுதே வருத்தமுற்றூர்மேற் செல்வதாய அருள் தொடர்பு

பற்றிச் செல்லு மன்பு முதிர்ந்துழி உளதாவதாகலின், ¶ அதனை 'அன்பீன் குழவி' என்றும், ‖ அது வறியார்மேற் செல்வது அவ்வறுமை கலைய வல்லார்க்காதலிற் பொருளை ‡ அதற்குச் 'செவிலி' என்றும், ○ அஃதுலகிற் செவிலியர்போலாது தானே யெல்லாப்பொருளு முதவி வளர்த்தலிற் 'செல்வச்செவிலி' என்றுங் கூறினர்.

தெளி:—(இ - ள்.) அன்பீன் - அன்பிலுல் பெறப்பட்ட, அருளென் னும் - அருளென்று சொல்லப்படும், குழவி - குழந்தையானது, பொருளெ

* குடிகள் சம்பாதிக்கும் பொருள்களுள் ஆறில் ஒருபாகம் தவிரவும் உரியனவாயுள்ள பொருள்களைச் சொல்லிய விதமாம்.

() "அன்பென்பது அருட்கு முதலாகி மனத்தில் நிகழும் நேயம்" என் பர் நச்சினர்க்கினியர்.

† செவிலி - வளர்க்குந்தாய். ¶ அதனை - அருளை. ‖ அது-அருள்.
‡ அதற்கு - அருளுக்கு. o அஃது - அச்செவிலி.



ன்னும் - பொருளென்று உயர்த்திச் சொல்லப்படும், செல்வம் - செல்வத் தையுடைய, செவிலியால் - செவிலித்தாயால், உண்டு- வளரும், (எ - று).

சம்பந்தம் பற்றுமலே வருத்தமடைந்தவர்மீது செல்வதாகிய அருள் சம்பந்தம்பற்றிச் செல்லும் அன்பு முதிர்ந்த விடத்து உண்டாவதாகலால், அதனை 'அன்பீன் குழவி' என்றும், அது வறியவர்மேற்செல்வது அவ்வறுமையை நீக்க வல்ல பொருளுடையவர்க்கு ஆதலால் பொருளை அதற்குச் 'செவிலி' என்றும், அஃது உலகிலுள்ளசெவிலித்தாயர்போலாகாமல் தானே எல்லாப் பொருளும் உதவி வளர்த்தலால் 'செல்வச் செவிலி' என்றும் சொல்லினர்.

(க - து.) அன்புகாரணமாக வுண்டாகும் அருள் பொருளால் விருத்தியடையும் என்பது.

7. The child mercy which is born of love grows under the fostering care of the rich nurse of wealth.

அ.

குன்றேறி யானைப்போர் கண்டற்றுற் றன்கைத்தோன் றுண்டாகச் செய்வான் வினை.

பரி:—(இ - ள்.) தன் கையதாகிய பொருளுண்டாக ஒருவினையை யெடுத்துக்கொண்டான் அதனைச் செய்தல் ஒருவன் மலைமேலேறிநின்று யானைப்போரைக் கண்டாலொக்கும், (எ - று).

கைத்துண்டாக ஒன்று செய்வானெனக் கூட்டுக.

ஒன்றென்பது வினை யாதல் செய்வா னென்றதனாற் பெற்றும். குன்றேறியான் அச்சமும் வரு

த்தமுமின்றி நிலத்திடை யானையும் யானையும் பொருபோலூரத் தானினி திருந்து காணுமதுபோலக் கைத்துண்டாக வினையை மேற்கொண்டானும் அச்சமும் வருத்தமுமின்றி வல்லாரையேவித் தானினிதிருந்து முடிக்கு மென்பதாம்.

தெளி:—(இ - ள்.) தன் கைத்து - தன் கையதாகிய பொருள், உண் டாக - உளதாக, ஒன்று - ஒருதொழிலை, செய்வான் - எடுத்துக்கொண்ட வன், வினை - அத்தொழிலைச் செய்தல், குன்றேறி - (ஒருவன்) மலையின் மேல் ஏறி, (நின்று), யானைப்போர்-யானைகளதுபோரை, கண்டற்று - கண் டாற்போல்வதாம், (எ - று).

கைத்துண்டாக ஒன்று செய்வானென் றந்வயித்துக் கொள்க. ஒன்று என்பது ஒரு தொழிலாதல் செய்வான் என்றதனால் பெறப்பட்டது. மலையின்மேலேறினவன் அச்சமும் வருத்தமும் இல்லாமல் பூமியில் யானை யும் யானையும் செய்கின்ற சண்டையைத் தான் இனி திருந்து காண்பது போலக் கைப்பொருளாதாக ஒரு தொழிலை மேற்கொண்டவனும் அச்சமும் வருத்தமும் இல்லாமல் வல்லவரை யேவித் தான் இனிதிருந்து முடிப்பா னென்பதாம். தன் கையதாகிய பொருள் - தன்வசத்திருப்பதாகிய பொருள்.



(க - து.) பொருளுள்ளவன் தான் மேற்கொண்ட தொழிலை அச்சமும் வருத்தமுமின்றி

யினிதாக முடிப்பான் என்பது.

8. The undertaking of him who has wealth in his hands is like viewing an elephant fight from a hill top.

கூ. * செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில்.

பரி:—(இ - ள்.) தமக்கொன்றுண்டாகக் கருதுவார் பொருளை யுண்டாக்குக; தம்பகைவர் † தருக்கினையறுக்கும் படைக்கலம் ‡ அது வாம்; ¶ அதற் கதுபோலக்கூரிய படைக்கலம் பிறிதில்லை, (எ - று).

o அதுவாம் அதற்கென்பன அவாய்நிலையான் வந்தன. பொருளைச்செய் யவே பெரும்படையும் நட்புமுடையராவர்; ஆகவே, பகைவர் தருக்கொழி

ந்து தாமே யடங்குவரென்பார் 'செறுநர் செருக்கறுக்குமெஃகு' என்றும், ஏனையெஃகுகள் () அதுபோல | அருவப் பொருளை யறுக்கமாட்டாமையின் 'அதனிற் கூரியதில்' என்றுங் கூறினார்.

தெளி:—(இ - ள்.) (தமக்கு ஒன்று உண்டாக நினைப்பவர்) பொருளை - பொருளினை, செய்க - சம்பாதிக்கக்கடவர், செறுநர் - (தம்) பகைவரது, செருக்கு - தருக்கினை, அறுக்கும் - கெடுக்கும், எஃகு - ஆயுதம், (அது வாம்), (அதற்கு), அதனின் - அதுபோல, கூரியது - கூரிய ஆயுதம், இல் - (வேறு) இல்லை, (எ - று).

அதுவாம் என்பதும் அதற்கு என்பதும்
அவாய்நிலையால் வந்தன.

(தமக்கொன்றுண்டாக நினைப்பவர்) பொருளைச் சம்பாதிக்கவே பெரியபடை யும் கட்பு முடையவராவர்; ஆகவே, (அவர்தம்) பகைவர் செருக்கு நீங்கித் தாமே அடங்குவரென்பார் (பொருள்) 'செறுநர் செருக்கறுக்கு மெஃகு' என்றும், மற்றை யாயுதங்கள் அதுபோல அருவப்பொருளை அறுக்கமாட் டாமையால் 'அதனிற் கூரியதில்' என்றும்சொல்லினர்.

---

* "செய்கபொருள் யாருஞ் செறுவாரைச் செறுகிற்கு, மெஃகுபிறி தில்லையிருந் தெயுயிரை யுண்ணு, மையமிலை யின்பமற வேடவையு மாக் கும். பொய்யில்பொரு ளேபொருண்மற் றல்லபிற பொருளே" என்பது சீவக சிந்தாமணி.

† தருக்கினை - செருக்கினை (கர்வத்தை). ‡

அதுவாம் - பொருளாம்.

¶ அதற்கு அதுபோல - பகைவர்
தருக்கிற்கு அப்பொருள்போல.

o எஃகு என்பது அதுவாம் என்பதனையும், அதனின்என்பது அதற்கு என்பதனையும் அவாவி (வேண்டி) நின்றன.

() அதுபோல - பொருள்போல. | அருவப்பொருளை - பகைவரது தருக்காகிய அருவப்பொருளை. அருவம் - உருவமில்லாதது. வைசேடிகாதி

(க - து.) தம்பகைவரது செருக்கினையழிக்கும் படை பொரு ளாயிருத்தலால், தமக்கு மேன்மை யுண்டாக வெண்ணுபவர் பொருளைச் சம்பாதிக்கக் கடவர் என்பது.

9. Acquire wealth ; it will destroy the arrogance of
your enemies ; there is no weapon sharper than it.

கo. ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு.

பரி:—(இ - ள்.) நெறியான் வரும் பொருளை இறப்ப மிகப்படைத் தாரீத்து மற்றை யறனு மின்பமும் ஒருங்கே கையெய பொருள்களாம்.

காழ்த்தல்-முதிர்தல். ‡ பயன் கொடுத்தல்லது போகாமையின் + 'ஒண் பொருள்' என்றும், ஏனையிரண்டும் ¶ அதன் விளைவாகலிற் ருமே யொரு காலத்திலே யுளவா மென்பார் 'எண்பொருள்' என்றுங் கூறினர். இவை நான்கு பாட்டானும் o அதனென்வரும் பயன் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) ஒண்பொருள் - நல்வழியால் வரும் பொருளை, காழ்ப்ப - பெருக, இயற்றியார்க்கு - (மிகச்) சம்பாதித்தவர்க்கு, ஏனையிரண்டும் - மற்றை அறமும் இன்பமும், ஒருங்கு - ஒருசேர, எண்பொருள் - எளிய பொருள்களாம், (எ - று).

காழ்த்தல் - முதிர்தல். பயன்கொடுத்தல்லது போகாமையால் 'ஒண் பொருள்' என்றும், மற்றையறமும் பொருளுமாகிய விரண்டும் அதன் விளைவாகலால் தாமே ஒருகாலத்திலே உண்டாகு மென்பார் 'எண் பொருள்' என்றும் சொல்லினர். இவை மூன்று பாட்டாலும் அதனால் வரும் பயன் சொல்லப்பட்டது.

(க - து.) நல்வழியிற் சென்று பொருளை மிதமாகச் சம்பாதித்தவர்க்கு அறமும் இன்பமும் எளிதிற் சித்திக்கும் என்பது.

10. To those who have honestly acquired an abundance of wealth, the other two, virtue and pleasure, are thigs easy of acquisition.

## அங்கவியலில் பொருள் செயல்வகை முற்றிற்று.

---

மதம் பற்றித் தருக்காகியகுணம் பொருளாகக்

கூறப்பட்டது. தார்க்கிகர்
உருவம் இரதம் கந்த முதலிய இருபத்து நான்கு குணங்களுள் உருவம் (வெண்மை கருமை முதலியன) தவிர மற்றையவெல்லாம் அருவமாமென்பர்.

‡ நெறியால் வரும் பொருள் தன் பயனைக்கொடா தொழியாமையால்.

+ நெறியால் வருதலும், பயன் கொடுத்தல்லது போகாமையுமே பொருளுக்கு ஒண்மையாம்.

¶ அதன் வினைவாகலின் - பொருளினது வினைவாயிருத்தலால்.

o அதனான் - பொருளால்.



## பதினான்காவது அதிகாரம்.

## படைமாட்சி:—The excellence of the Army.

பரி:—இனி அப்பொருளினை ஐவதாயி வெல்வதாய படை இனை
துதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி, முதற்கட் படைமாட்சி கூறுகின்
றார். அஃதாவது படையினது நன்மை.
அதிகாரமுறைமை இதனான்

விளங்தும்.

தெளி:—இனி அப்பொருளினல் ஆவதாய்ப் பகைவரை வெல்வதாகிய
படையை இரண்டதிகாரத்தால் சொல்லத்தொடங்கி, முதலில் படைமாட்சி
யைச் சொல்லுகிறார். அஃதாவது சேனையினது நன்மையாம். அதிகாரமுறை
மை இதனல் விளக்கும்

க. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை
வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை.

பரி:—(இ - ள்.) * யானை முதலிய நான்
குறுப்பானும் நிறைந்து
போரின்க ணூறுபடுதற் கஞ்சாது நின்று பகையை வெல்வதாய படை
அரசன் செல்வங்க ளெல்லாவற் றுள்ளும் தலையா ய
செல்வம், (எ - று).

ஈண்டுப் படையென்றது † அங்நான்கன்
றொகுதியை. ‡ ஊறஞ்சிய
வழி வேறல் கூடாமையின் 'ஊறஞ்சா' என்றும், ¶
ஒழிந்தவங்கங்கட்கும்

அரசன்றனக்குங் காவலாகலின் 'வெறுக்கையு ளெல்லாந் தலை' என்றுங்
கூறினர்.

தெளி:—(இ - ள்.) உறுப்பு - (யானை முதலிய நான்கு) உறுப்புக்களாலும், அமைந்து - நிறைந்து, ஊறு - (போரில்) காயம் படுதற்கு, அஞ்சா - அஞ்சாது, (நின்று), வெல் - (பகையை) வெல்வதாகிய, படை - சேனையானது, வேந்தன் - அரசனது, வெறுக்கையுளெல்லாம் - செல்வங்களெல்லாவற்றுள்ளும், தலை - முதன்மையாகிய செல்வமாம், (எ - று).

இங்குப் படையென்றது அந்நான்கன் கூட்டத்தை. சேனை ஊறஞ்சிய விடத்து (பகைவரை) வெல்லுதல் கூடாமையால் 'ஊறஞ்சா' னென்றும், அச்

---

* சதுரங்கமென்பது ரத (தேர்) கஜ (யானை) துரக (குதிரை) பதாதி (காலாள்) என்று கூறப்படுமாயினும், தலைமைபற்றி 'யானை முதலிய நான் குறுப்பானும் (சதுரங்கத்தாலும்)' என்று கூறப்பட்டது. இது " யானை யுடைய படைகாண்டல் மிகவினிதே" "படைதனக்கு யானை வனப்பாகும்"

என்று வரும் பிரயோகத்தாலு மறியப்படும்.

† அங்நான்கன் - யானை, தேர், குதிரை, காலா ளென்னும் நான்க னது. ‡ ஊறஞ்சியவழி - ஊறுபடுத (காயமடைத)ற் கஞ்சிய விடத்து.

¶ ஒழிந்த அங்கங்கள் - அமைச்சு, நாடு, அரண், பொருள், கட்பு என் னும் உறுப்புக்கள்.

## அங்கவியல்—கசு-வது படைமாட்சி.

# 841

சேனை ஒழிந்த அங்கங்களுக்கும் அரசனுக்குங் காவலாகலால் 'வெறுக்கை யெல்லாந் தலை' என்றும் சொல்லினர்.

(க - து.) அரசனது செல்வங்க ளெல்லாவற்றுள்ளும் சிறந்த செல்வமாவது அங்கம்நான்காலும் நிறைந்து போர்முகத்தஞ்சாது நின்று பகைவரைவெல்லும் படையாமென்பது.

1. The army which is complete in its four parts and conquers without fear of wounds is the chief wealth of the king.

உ. உலவிடத் தூறஞ்சா வன்கண்
டோலவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது.

பரி:—(இ - ள்.) தான் சிறிதாய வழியும் அசைந்துப் போரின்கணுலவு வந்தால் தன்மே லுறுவதற் கஞ்சாது நின்று தாங்கும் வன்கண்மை அவன் முன்னோரைத் தொடங்கிவரும் படைக்கல்லது உளதாகாது.

இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. †

மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை யென்னும் அறுவகைப்படையுள்ளுஞ் சிறப்புடையது மூலப்படையாகலான், அதனை அரசன் * "வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையும், தொல் களிறு மாவுங் கொடுத்தளிக்க" என்பது ¶ குறிப்பெச்சம். இப்படையை வட நூலார் மௌலமென்ப

---

† "உறவின் மிக்கவர் பகையி னெய்த்தவ ருதவு மப்படை குடைநிழற், செறித லத்தினில் வளர்ந கர்ப்படை திரள்வ னப்படை பொருள்விலைத், தறுகண் மெய்ப்படை யுறுதி யிற்பொரு தமத கப்படை யெனவீராய், அறுவ கைப்படை களும்ப குத்தன வணிக ருட்கின பணிகளே" என்று பாரதம் உத்தியோகபருவம் அணிவகுப்புச்சருக்கத்திற்கூறுவது மிங்கறியத்தக்கதாம்.

மூலப்படை அரசனது முன்னிலையைத் தொடங்கிவரும் சேனை.

இது மூலபலம் எனப்படும். இராமாயணம் இராவணன் இந்திரசித்து மாண்டபிறகு இராமர் முதலாயினோரை யழித்தொழிக்குமாறு மூலபலச் சேனையை யனுப்பினனென்று, கூறுவதாலு மிஃதறியப்படும். அம்மூலப் படைக்குச் சிறப்பாவது அரசனிடத்து அவன் முன்னிலையைத் தொடங் கிவரும் அன்பும் தான்சிறிதாகிய விடத்தும் பயந்துநீங்காத தெளிவிய மூடை

மையுமாம்.

* புறப்பொருள் வெண்பாமாலை- கம்பைப்படலம். 2. இதன்பொருள். போர்வெல்லும் அடையாளமும் (விருதும்), பலவூர்களையுடைய சிறுநாடும், சிறந்த பொருளும், மருதநிலமும் (நெல்லிளைதற்குரிய நிலமும்), பகைவ ரைக்கொல்லும் யானையும், குதிரையும் கொடுத்துக் காப்பாற்றுக என்பது.

¶ அருத்தம் குறிப்பாக அறியுமாறு குறைந்து நிற்குஞ்சொல் குறிப் பெச்சமாம்.





தெளி:—(இ - ன்.) தொலைவிடத்தும் - (தான்) சிறிதாகிய விடத்தும், உலைவிடத்து - (அரசனுக்குப் போரினிடத்து) அழிவு வந்தால், உளறு - (தன் மேல்) காயம் படுதற்கு, அஞ்சா - அஞ்சாது, (நின்று தாங்கும்), வன்கண் - தெளிவியமானது, தொல்படைக்கல்லால்-(அவன்)

முன்னுரைத் தொடங்கி வருஞ் சேனைக்கல்லாமல், அரிது - உண்டாகாது, (எ - று).

தொலைவிடத்தும் என்னும் இழிவுசிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என்னும் அறுவகைப் படையுள்ளும் சிறப் புடையது மூலப்படையாதலால், அம்மூலப்படையை அரசன் வெல்பொறி முதலியவற்றைக் கொடுத்துக் காப்பாற்றுகவென்பது குறிப்பெச்சம். வட நூலார் இம்மூலப்படையை மௌலம் என்பர்.

(க - து.) தான் சுருங்கியவிடத்தும் போர்முகத்துப் புகை வர்க்கஞ்சாது நின்று தன்னரசனைக் காக்கும் வீரம் மூலப்படைக் கல்லது வேறுபடைக்கில்லை என்பது.

2. Old army can alone have the valour to stand by its king at the time of his defeat, fearless of wounds and unmindful of its reduced strength.

ங. ஒலித்தக்கா லென்ன முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

பரி:—(இ - ள்.) எலியாயபகை

திரண்டு கடல்போல வொலித்
தால் நாகத்திற்து என்ன ஏதம் வரும்; அந்நாக
* அதுதானே கெடும், (எ - று).

முயிர்த்த துணையானே

உவமைச்சொற் றொக்கு நின்றது. †

இத்தொழிலுவமத்தாற் றிரட்சி

பெற்றும் வீரால்லாதார் பலர் திரண் ‡ டார்த்தால் ¶ அதற்கு வீரனஞ்சான்; அவன் கிளர்ந்தவுணையானே o அவர்தாங் கெடுவரென்பது தோன்ற நின்ற மையின், ‖ இது பிறிது மொழிதலென்னு மலங்காரம். வீரால்லாதார்பலரி னும் வீரனொருவனே யாடல் நன்றென்பதாம். இவை மூன்று பாட்டானும் முறையே அரசனுக்குப் படை வேனயங்கங்களுட் சிறந்த தென்பதூஉம்,

---

* அது - எலியாகிய பகை. † ஒலித்தக்கால் என்னும் தொழிலுவமானத்தால்.

‡ ஆர்த்தால் - ஆரவாரஞ் செய்தால்.

o அவர் - வீரால்லாதார் பலர்.

¶ அதற்கு - அவ்வாரவாரத்திற்கு.

‖ இக்குறள் ஒட்டென்னும் அலங்காரம். ஒட்டு, பிறிதுமொழிதலென்பன ஒருபொருட்கிளவி. "கருதிய பொருள்தொகுத் ததுபுலப் படுத்தற், கொத்ததொன் றுரைப்பினஃ தொட்டென மொழிப" என்பது தண்டியலங்காரம்.

## அங்கவியல்—கச்-வத்து படைமாட்சி.

**843**

அது தன்னுள்ளும் மூலப்படை சிறந்ததென்பதூஉம், அதுதன்னுள்ளும்
வீரன் சிறந்தானென்பதூஉங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) எலிப்பகை - எலியாகிய பகை,(திரண்டு), உவரி- கடல்போல, ஒலித்தக்கால் - இரைந்தால், என்னும் - (நாகத்திற்கு) என்ன துன்பம் வரும், நாகம் - அந்நாகமானது, உயிர்ப்ப - மூச்செறிந்த வளவிலே, கெடும்-(அதுதானே) கெடும், (எ - று).

போல என்னும் உவம வுருபிடைச் சொல் தொக்கு நின்றது. இத் தொழிலுவமத்தால் (எலிப்பகையின்) திரட்சிபெற்றும். வீரல்லாதார் பலர் திரண்டு ஆர்த்தால் அதற்கு வீரன் அஞ்சான்; அவன் எழும்பிய வளவிலே

அவர்தாம் கெடுவென்பது தோன்ற நின்றமையால், இது பிறிது மொழிதலென்னு மலங்காரமாம்.

(அரசன்) வீரரல்லாதார் பலரினும் வீரனொருவனை ஆளுதல் நல்லதென்பதாம். இவை மூன்று பாட்டாலும் முறையே அரசனுக்குப் படையானது மற்றையங்கங்களுள் சிறந்ததென்பதும், அப்படையுள்ளும் மூலப்படை சிறந்ததென்பதும், அம்மூலப் படையிலும் வீரன் சிறந்தவனென்பதும் சொல்லப்பட்டன. நாகம் - பாம்பு.

(க - து:) வீரரல்லாதார் பலர்கூடியெதிர்த்தாலும், அவர் வீரனொருவனை வெல்லும் ஆற்றலுடையவராகாது, அவனெழும்பிய வளவிலேயே கெடுவென்பதாம்.

3. What can the sea-like roar of hostile rats avail? it will perish at the mere breath of the cobra.

ச. அழிவின் றுறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

பரி:—(இ - ள்.) போரின்கட் கெடுதலின்றிப் பகைவராற் கீழறுக்கப்படாததாயித் தொன்றுதொட்டு வந்த தறுகண்மையை யுடையதே அரசனுக்குப் படையாவது, (எ - று).

அழிவின்மையான் * மற † மானங்களுடைமையும், ‡ அறைபோகா மையான் அரசன்மாட் டன்புடைமையும் பெறப்பட்டன. வழிவந்த வன் கண்மை - ¶ "கன்னின்றா னெந்தை கணவன் களப்பட்டான், முன்னி

* மறம் - வீரம். † மானம் - எப்பொழுதும் தமது நிலையிற் றாழாமையும் ஊழினால் குறைவு வந்தவிடத்து உயிர் வாழாமையுமாம்.

‡ அறைபோகாமை - கீழறுக்கப்படாமை; அஃதாவது பகைவரால் வஞ்சிக்கப்படாமை.

¶ புறப்பொருள் வெண்பாமாலை—வாகைப்படலம் 22 இதன் பொருள். கல்லிலே பொருந்தி நின்றான் எனது தகப்பன், எனது கணவன் போர்க் களத்திலே யிறந்தான், பகைவர்முன்னே நின்று எதிர்த்துப்போரிலே விழுந்



ன்று மொய்யவிந்தா ரென்னையர்—பின்னின்று, கைபோய்க் கணையுதைப் பக் காவலன் மேலோடி, யெய்போற் கிடந்தானென் னேறு" என்பதனா னறிக. * குற்றிய லுகரத்தின் முன்னர் உடம்படுமெய் விகாரத்தான் வந் தது. இது வருகின்றபாட்டுள்ளு மொக்கும்.

தெளி:—(இ - ள்.) படை - (அரசனுக்குப்) படையாவது, அழி வின்று - (போர்முகத்துக்)

கெடுதலில்லாமல், அறைபோகாதாகி - (பகைவ ரால்)
கீழறுக்கப் படாததாய், வழிவந்த -
பழமையாகவந்த, வன்கணதுவே- செளரியத்தை யுடையதே,
(எ - று).

அழிவில்லாமையால் மறமானங்களுடைமையும், அறைபோகாமையால் அரசனிடத்து அன்புடைமையும் பெறப்பட்டன. வழிவந்த வன்கண் மை - போர்முகத்தில் பின்னிடாது போர்செய்து தளர்ச்சிவந்தவிடத்து இறந்துபடுதல். வன்கணது என்னும் உயிர்த்தொடர்க் குற்றிய லுகரத்திற்கு முன் உடம்படுமெய்யாகிய வகரம் 'வன்கணதுவே' எனச் செய்யுள் விகாரத் தால் வந்தது. இது வருகின்ற பாட்டிலும் ஒக்கும். அஃது 'ஆற்றலது வே' என்பது.

(க - து.) போர்முகத்துத்தோற்றலும் பகைவ ரால் வஞ்சிக் கப்படுதலும் இன்றித் தொன்றுதொட்டு வந்த வீரமுடையதே அரசனுக்குப்படையா மென்பது.

4. That indeed is an army which has stood firm of old without suffering destruction or desertion.

ரு. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி

யெதிர்நிற்கு

மாற்ற லதுவே படை.

பரி:—(இ-ள்.) கூற்றுவன் றனே வெதண்டு

† மேல் வந்தாலும், நெஞ்சொத்து எதிர் நின்று தா

ங்குமாற்றலே யுடையதே படையாவது.

---

திறந்தார் எனது தமையன்மார், தனது சேனை கெடவும் கேடாதே பின் னே நின்று தனது கையானதுபோய் அம்படச் செலுத்தப் பகை அரசன் மேலேசென்றுமுள்ளம்பன் றிபோலப் பகைவர்விட்டஅம்பு தைக்கப்பெற்று இறந்துகிடந்தான் என்னுடைய புத்திரன் என்பது.

* "உயிர்வரி னுக்குறள் மெய்விட் டோடும்" என்னும் நன்னூற்சூத் திர விருத்தி யுரையில் "கெடும் என்னுது ஓடு மென்றமையாற் குற்றி யலுகரமொரோ வழி 'இ ஈ ஐ வழி' என்னும் பொதுவிதி பெறுதலுங்கொ ள்க. (வ-று.) 'தன்முக மாகத் தானழைப் பதுவே' 'ஆற னொருமைக் கதுவு மாதவும்' எனவரும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

† மேல் வந்தாலும் - தன்மேல் எதிர்த்துப் போரிட வந்தாலும்.

அங்கவியல்—கச-வது படைமாட்சி.

* மருந்தில் கூற்றுகலின், உம்மை சிறப்பும்மை. மிகப்பலர் நெஞ் சொத்தற்குக் காரணம் அரசன்மே லன்பு. ஆற்றல்-மனவலி.

தெளி:—(இ-ள்). படை-படையாவது, கூற்று-கூற்றுவனே, உடன் று—கோபித்து, மேல்வரினும் - (தன்) மேல்வந்தாலும், கூடி-மனமொத்து, எதிர் நிற்கும்-எதிர்நின்று தாங்கும், ஆற்றலதுவே-வலிமையை யுடையதே.

மருந்தில்லாத கூற்றுவனுதலால், வரினும் என்ற வும்மை உயர்வுசிறப் பும்மை. மிகப்பலர் மன மொத்தற்குக் காரணம் அரசன்மேலன்பு. ஆற்றல் - மனவுறுதி. கூற்றுவன் - யமன்.

(க-து.) கூற்றுவனுக்கு மஞ்சா தெதிர்த்துப் போர்செய்யும் வலிமையையுடையதே படையா மென்பது.

5. That indeed is an army which is capable of offering
a united front even if yama advances against it with ferocity.

சு. மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு.

பரி:—(இ-ள்.) தருகண்ணையும் மானமும் முன்வீராயினர் சென்ற நன்னெறிக்கட் சேறலும் அரசனுற் றேறப்படுதலு மென இந்நான்கு துணைமே படைக்கத அணைவது, (எ-று).

† இவற்றுன் முறையே பகைவனைக் கடிதிற்கொன்று நிற்றலும், அரசனுக்குத் தாழ்வுவாராமற்காத்தலும், ‡ அழியுநர் புறக்கொடை யயில்வா ளோச்

சாமை ¶ முதலியவும், அறைபோகாமையுமாகிய செய்கைகள் பெறப்பட்

---

* மருந்தில் கூற்று-எவ்வகையாலும் தடுத்தல் முடியாத யமன். மருந்து- தடை; அஃதாவது பரிகாரம். "மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயா" என் பது புறநானூறு (3).

† மறம், மானம், மாண்டவழிச் செலவு, தேற்றமென்னு மிவற்றுள்.

‡ புறப்பொருள் வெண்பாமாலை—வஞ்சிப்படலம். 20. தழிஞ்சித்துறை யின்கொளு (கருத்து). இதன்பொருள். கூரியவாளாலவீசாமை என்பது.

தோற்றோடுவார் முதுகின்கண்

¶ முதலிய என்றமையின், தோல்விட்டுப் பூமியிலிறங்கினவன், பேடி, அஞ்சலிசெய்தவன், தலைமயிரை

யவிழ்த்துக்கொண்டிருப்பவன், குந்திக் கொண்டிருப்பவன், அடைக்கலமென்று சொன்னவன், வஸ்திரமில்லாத வன், களிப்பில்லாதவன், ஆயுதமில்லாதவன்,

போரிலெதிர்க்காதவன், சண்

டையைப்பார்ப்பவன், தூங்குகிறவன், மற்றொருவனுடன் போர்புரிபவன், ஆயுதமொடிந்தவன், பிள்ளைமுதலானவ ரிறந்தமைபற்றி வியசனப்படுகிறவன், நன்றுக அடிபட்டவன், பயந்தவன் முதலியவர்களைக் கொல்லாமையுங் கொள்க.



டன. இச்செய்கையார்க்குப் பகைவர் நணுகாராகலின், வேறரண் வேண்டா வென்பதாம்.

தெளி:—(இ-ன்.) மறம்-சௌரியமும், மானம்-மானமும், மாண்டவழிச்செலவு-(முன்வீராயிளர் சென்ற) நல்வழியில் செல்லுதலும், தேற்றம்-(அரசனால்) நம்பப்படுதலும், எனநான்கே - என இந்நான்குகுணமுமே, படைக்கு-சேனைக்கு, எமம்-அரணுவதாம், (எ-று).

இவற்றுல் முறையே (மறத்தினுல்) பகைவரை விரைவிற் கொன்று நிற்றலும், (மானத்தினுல்) அரசனுக்குத் தாழ்வுவாராமற் காத்தலும், (மாண்டவழிச் செல்லுதலால்) தேற்றமுடையோர் மீது படையெடாமை முதலியனவும், (தேற்றத்தினுல்) அறைபோகாமையும் ஆகியசெய்கைகள் பெறப்பட்டன. இச்செய்கையார்க்குப் பகைவர் நெருங்கமாட்டாராகலின், (படைக்கு மறமான முதலிய அரணன்றி) வேறரண் வேண்டாமென்பதாம்.

(க - து). படைக்கு அரண் வீரமும்
மானமும் நன்மார்க்கத்

திற் செல்லுதலும் அரசனுல் நம்பப்படுதலுமாம் என்பது.

6. Valour, honour, following in the excellent traditions

of its predecessors and trustworthiness are the four requisi-

tes that constitute the safe guard of an army.

எ. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து.

பரி:—(இ-ள்.) மாற்றாலே வதுக்கப்பட்டுத்-தன் மேல்வந்த படை

யின் போரை விலக்கியும் வதுப்பறிந்து வதுத்துக்கொண்டு, அவர் * தூசி

யைத் தன்மேல் வராமற் றடுத்துத், தான் † அதன்மேற் செல்வதே

படையாவது, (எ-று).

படைவகுப்பாவது வியூகம்;
அஃது எழுவகை யுறுப்பிற்றாய், வகையா

ஞ்காய், விரியான் மூப்பதாம். ‡ உறுப்பேழாவன: உழுதற் கோடி

யீருயின. வகைநான்காவன: ¶ தண்டம், o மண்டலம், + அசங்கதம், $போக

---

* தூசி-கொடிப்படை. (முன்னணிச்சேனை).

† அதன்மேல்-(முன்வந்துபோரிடும்) தூசிப்படையின்மேல்.

‡ உறுப்பேழாவன:உரம், இறக்கையிரண்டு, மத்தியம், பிரதிக்கிரகம், பிரிஷ்டம், கோடி என்னும் ஏழாம்.

¶ தண்டம்-சேனையைக் குறுக்காக நிறுத்துதல்.

o மண்டலம்-சேனையைப் பாம்புமண்டல மிடுவதுபோல நிறுத்துதல்.

+அசங்கதம்-சேனையை வேறுவேறாக நிறுத்துதல்.

$ போகம்-சதுரங்க (யானை தேர் குதிரை காலாள் என்னும்) சேனையை ஒன்றற்குப்பின் ஒன்றாக நிறுத்துதல்.

மென விவை. விரிமுப்பதாவன: * தண்டவிரி பதினேழும், † மண்டல விரி இரண்டும், ‡ அசங்கதவிரியா றும், ¶ போகவிரி யைந்துமென விவை. இவற்றின் பெயர்களும் இலக்கணமும் நூன்மரைப்பிற் பெருகும்; அவை யெல்லாம் ‖ வடநூல்களுட் கண்டுகொள்க. இவை நான்குபாட்டானும் படையின திலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) தானை - சேனையாவது, தலைவந்த - (பகைவரால் வகுக்கப்பட்டுத்) தன்மேல்வந்த, போர் - (சேனையின்) போரை, தாங்குந்தன் மை - விலக்கும் வகுப்பை, அறிந்து - தெரிந்து, (வகுத்துக்கொண்டு), தார்- (அவரது) தூசிப்படையை, தாங்கி - (தன் மேல் வராமல்) தடுத்து, செல் வது - (தான் அதன்மேல்) செல்வதே, (எ - று).

படைவகுப்பாவது வியூகம்; அஃது எழுவகை உறுப்பினையுடையதாய்,
வகையாரல் நான்காய், விரியால் முப்பதாம்.
உறுப்பேழாவன:உழுதல்
கோடியீரு புள்ளவை. வகைநான்காவன: தண்டம், மண்டலம், அசங்
கதம், போகமென்பன. விரிமுப்பதாவன: தண்டவிரி பதினேழும், மண்ட
லவிரி யிரண்டும், அசங்கதவிரியாறும், போகவிரி யைந்தும்

என்பன. இவற்

றின் பெயர்களும் இலக்கணங்களும் இங்குச் சொன்னல் விரியும்; அவற்றை

யெல்லாம் வடநூல்களுட் கண்டுகொள்க. இவை நான்கு பாட்டாலும்

படையினது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து.) பகைவரது படைவகுப்பிற் சேற்றுற்போன் றணி வகுத்துக்கொண்டு, அவரது தாக்கிப்படையைத் தன்மேல் வாராத வண்ணம் தடுத்துத், தான தன்மேல் செல்வதே படையாம்.

7. That is an army which knowing the art of warding off an impending struggle, can bear against the vanguard of an hostile force.

ஆ. அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை

படைத்தகையாற் பாடு பெறும்.

---

¶ தண்டவிரி பதினேழாவன: பிரதரம், திருட்கம், சியாவஸ்தம், குட்சி, பிரதிட்டம், சுப்பிரதிட்டம், சியேஸம், விஜயம், சஞ்சயம், விசாலம், நிஜயம், சூசி, ஸ்தூணை, கர்ணம், சமூமுகம், ரதாசியம், வலயம் என்பனவாம்.

† மண்டலவிரி இரண்டாவன: சர்வதோபத்திரம், துர்ஜயம் என்பன வாம்.

‡ அசங்கதவிரியாரூவன : அர்த்தசந்திரம், உத்தானம், கர்க்கடக சிருங்காரி, காகபாரி, கோதிகா என்பனவாம்.

சிருங்காடம்,

¶ போகவிரி ஐந்தாவன : கோமூத்திரிகை, இம்சகம், சஞ்சாரி, சகடம், பந்தம எனபனவாம.

‖ வடநூல்களுள்—காமந்தகமுதலிய வடநூல்களில்.



பரி:—(இ - ள்.) தானை பகைமேற் றுன்சென்றடுந் தறுகண்மையும்

* அது தன்மேல் வந்தாற் பொறுக்தமாற்றலும் இல்லையாயினும், தன் றேற்றப் பொலிவானே பெருமை யெய்துமி, (எ - று).

† 'இல்லெனினும்' எனவே, அவற்ற

தின்றியமையாமை பெறப்பட்

டது. படைத்தகையென்பது ஒரு பெயர் மாத்திராமாய் நின்றது. தோற்றப் பொலிவாவது அலங்கரிக்கப்பட்ட தேர் யானை குதிரைகளுடனும், ‡ பதாகை கொடி குடை பல்லியம் ¶ காகள ‖ முதலியவற்றுடனும் அணிந்து

தோன்றுமழகு. பாடு - கண்டவளவிலே பகைவராஞ்சும் பெருமை.

தெளி:—(இ - ள்.) தானை - சேனை, அடற்றகையும் - (பகைமேல் தான்சென்று) போர் செய்யுஞ் செளரியமும், ஆற்றலும் - (அது தன்மேல் வந்தால்) பொறுக்கும் வலிமையும், இல்லெனினும் - இல்லையாயினும், படைத்தகையால் - (தனது) தோற்றப் பொலிவாலே, பாடு - பெருமையை, பெறும் - அடையும், (எ - று).

'இல்லெனினும்' எனவே, அவற்றினது அவசியம் பெறப்பட்டது. படைத்தகை யென்பது (தோற்றப்பொலிவு என்னும்) ஒரு பெயரளவாய் நின்றது. தோற்றப்பொலிவாவது அலங்கரிக்கப்பட்ட தேர் யானை குதிரைகளுடனும், பதாகை கொடி குடை பலவகைச் சங்கீத வாத்தியம் காகள முதலியவற்றுடனும் அணிந்து தோன்றும் அழகு. பாடு — கண்ட வளவிலே பகைவராஞ்சும் பெருமை. அடல் - போர்செய்தல்.

(க - து.) படையானது போர்செய்யுஞ் செளரியமும் பகைவர் போர்செய்வதைப் பொறுக்கும் வலிமையுமில்லாவிட்டாலும், தனது தோற்றப்பொலிவிலே பெருமையடையும் என்பது.

8. Though destitute of courage to fight and strength to endure, an army may yet gain renown by the splendour of its constitutional appearance.



கூ. சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை.

பரி:—(இ - ள்.) தான் றேயீந்து சிறிதாகலும் மனத்தினின்று நீங்காத வெறுப்பும் நல்தரவும் தனக்கில்லையாயின், படை பகையை வெல்லும், (எ - று).

---

* அது - அந்தப்பகை.

† அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினும் என்று கூறவே, (அடற்றகை ஆற்றல் என்னும்) அவற்றினது அவசியம் பெறப்பட்டதென்பதாம்.

‡ பதாகை - பெருங்கொடி.

¶ காகளம் - எக்காள மென்னும் ஊதுகுழல்.

‖ முதலிய என்றமையின், பம்பை, தம்பட்ட முதலியவற்றையுங்கொள்க.

* விட்டுப்போதலும் † நின்றது நல்கூர்தலும் அரசன் பொருள்கொ டாமையான் வருவன. செல்லாத் துனியாவது மகளிரை வெளவல், ‡ இளி வரவின்யின செய்தன் ¶ முதலியவற்றான் வருவது. § இகையுள்வழி + அவன்மாட்டன்பின்றி உற்றுப்பொராமையின் 'இல்லாயின் வெல்லும்' என்றார்.

தெளி:—(இ – ள்.) சிறுமையும் - (தான்தேய்ந்து) சிறிதாகலும்,செல் லாத்துனியும் - (மனத்தினின்று) நீங்காதவெறுப்பும்,வறுமையும் - தரித்திர மும், இல்லாயின் - (தனக்கு) இல்லையாயின், படை - சேனையானது, வெல்லும் - (பகைவை) வெல்லும், (எ - று).

விட் டுப்போதலும் நின்றது வறுமைபடைதலும் அரசன் பொருள் கொடாமையால் வருவன. செல்லாத்துனியாவது மகளிரைவெளவல் இழி வாயினவற்றைச் செய்தல் முதலியவற்றால் வருவது. இகையுள்ள விடத்து அவனிடத்து அன்பில்லாமல் உற்றுப்போர் செய்யாமையின் (படை) 'இல் லாயின்வெல்லும்' என்றார். வெளவல்-அபகரித்தல். உற்று-மனம் பொருந்தி.

(க – து.) படையானது தான் சுருங்குதலும், வெறுப்பும், தரித்திர மும்இல்லா திருந்தால் பகைவரை வெல்லும் என்பது.

9. If an army be free from diminution, incurable repug-

nance and poverty, it can conquer its enemy.

## க0. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை தலைமக்க ளில்வழி யில்.

பரி:—(இ-ள்.) போரின்க ணிலையுடைய வீரரை மிக்குடைத்தே யாயினும், தனக்குத் தலைவராகிய வீரரில்லாதவழித் தானை நில்லாது.

படைத்தலைவர் நிலையுடையரன்றிப் போவாராயிற் காண்போ ரில்லை னப் பொராது o தானும் போமென்பார் 'தலைமக்க ளில்வழி யில்' என்றார்.

---

* விட்டுப்போதல் - நாள்தோறும் சேனை சம்பளங் கொடாமை யால் நீங்கிப்போதல். † நின்றது - நீங்கிப்போகாது நின்ற சேனை.

‡ இனிவரவாயின செய்தல்—சூதாடல், கள்ளுண்டல், பொய்பேசுதல், ஈதல் மறுத்தல் என்பனவாம்.

¶ முதலிய என்றமையின், ஆறிலொன்றுக்குமேல் கப்பம் வாங்குதல், சுங்கத்தீர்வையை யதிக மாக்குதல், தண்டிக்கவேண்டியவர்களைத் தண்டியா மை, சம்பள மற்பாட்டைக் குறைத்தல் முதலியவற்றையுங் கொள்க.

$ இவையுள்வழி - சிறுமையும் (விட்டுப்போதலும்) செல்லாத்தனி யும் வறுமையு முள்ளவிடத்து. + அவன்மாட்டு - அரசனிடத்து.

இவைமூன்றுபாட்டானும் முறையே படைத்தகையின்மையானும், அரசன் கொடைத்தாழ்வுகளானும், தலைவரின்மையானும் தாழ்வு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) நிலைமக்கள் - (போரினிடத்து) நிலைத்திருத்தலுடைய வீரரை, சாலவுடைத்தெனினும்-மிகவுடையதேயாயினும், தலைமக்கள்-(தனக்குத்) தலைவராகிய வீரர், இல்வழி-இல்லாதவிடத்து, தானை - சேனை இல்-இல்லாது, (எ-று).

சேனைத்தலைவர் நிலையுடைய வல்லாமல் போவாராயின் காண்போ நில்லையென்று போர்செய்யாமல் தானும்போமென்பார் 'தலைமக்க ளில்வழி' யில் என்றார். இவை மூன்று பாட்டாலும் முறையே படைக்குப் படைத்தகை (தோற்றப்பொலிவு) இல்லாமையாலும், அரசன் கொடைத்தாழ்வுகளாலும், தலைவரில்லாமையாலும் வரும் தாழ்வு சொல்லப்பட்டது.

(க - து.) தனக்குத்தலைவ ரில்லாத படை எவ்வளவுமிருந்தியா

யிருப்பினும் அதனற் பயனில்லை என்பதாம்.

10.

number

Though an army may be composed of a large of permanent soldiers, it cannot stand if it be destitute of generals.

## பதினைந்தாவது அதிகாரம்.

### படைச்செருக்கு:—

## Excessive valour of the Army.

பரி:—அஃதாவது அப்படையது மறமிகுதி. ; அதிகாரமுறைமையும் இதனையே விளங்கும்.

தெளி:—அஃதாவது அச்சேனையினது வீரமிகுதியாம். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

க. என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை

முன்னின்று கன்னின் றவர்.

பரி:—(இ - ள்.) பகைவீர் இன்றிங்
கென்றலைவனெதிர் போரே ற்று நின்று அவன்
வேல்வாய் வீழ்ந்து பின்கல்லின்கண்ணே நின்ற வீரர்
பலர், நீவிர் அதன்கணின்றி ¶நும்முடற்கணிற்றல்
வேண்டின் என் றலைவனெதிர் போரேற்று நிற்றலை
யொழிமின், (எ - று).

† கொடைத்தாழ்வுகளானும்- பொருள்
கொடுப்பதன் குறைவுகளாலும்.

‡ படைமாட்சியின்பின்
படைச்செருக்குவைத்தஅதிகாரமுறைமையும்.

¶
நும்முடற்கணிற்றல்-உமதுயிர் உமதுடம்பில் நிற்றலை (ஜீவித்தலை).

அங்கவியல்—கரு-வது படைச்செருக்கு.

'என்னை' எனத் தன்னொடு தொடர்புபடுத்துக் கூறினமையின், அவன் வேல்வாய் வீழ்தல் பெற்றும். * கல் - நடுகல். † "கம்பன் சிலைவாய் நடக்குங் கணை மிச்சி லல்லா, லம்பொன் முடிப்பூ ணாசும்மிலே" எனப் ‡ பதுமுகன் கூறினாற்போல ஒரு வீரன் தன்மறம் அரசன்மேல்வைத்துக் கூறியவாறு. இப்பாட்டு ¶ நெடுமொழி வஞ்சி.

தெளி:—(இ - ள்.) தெவ்விர் - பகைவரே, (இன்று இங்கு), என் - என் னுடைய, ஐமுன் - தலைவனெதிர், நின்று - (போரேற்று) நின்று, கன்னி ன்றவர் - (அவன் வேல்பட்டு வீழ்ந்துபின்) கல்லினிடத்தே நின்ற வீரர், பலர் - பலராவர், (நீர் அக்கல்லினிடத்து நில்லாமல் உம்முடலில் நிற்றலை வேண்டினால்), என் - என்னுடைய, ஐமு ன் - தலைவனெதிர், நில்லன்மின்- (போரேற்று) நிற்றலை யொழியுங்கள், (எ - று).

போர்செய்யுமொரு வீரன் 'என்னை' எனத் தலைவனைத் தன்னுடன் சம்பந்தப்படுத்திக் கூறினமையின், அவ்வீரனது வேல்பட்டுப் பகைவர் வீழ்ந் திறத்தல் பெறப்பட்டது. கல் - போரில் வீரர் இறந்தவிடத்து அவருருவம் போற் செய்து நடப்படுங்கல். ஒருவீரன் தன் வீரத்தை அரசன்மேல் வைத் துச் சொல்லியபடியாம். இப்பாட்டு நெடுமொழிவஞ்சி.

(க - து.) பகைவரே! என்னெதிர் வந்து

போரேற்றுநின்று, வெல்லாது இறந்து,
கல்லுருவமாகச் செய்து நாட்டப்பட்ட வீரர் பலராவர்;
ஆதலால், நீங்கள் பிழைக்கவேண்டுமுல் போர் செய்
கலை யொழியுங்கள் என்றொரு வீரன் கூறினன்
என்பது.

---

* "நடுகல்-கல்லினைநடுதலும், அக்கல்லின் கண்
மறவனை (வீரனை) நடுதலுமென இருவகையாம்".
(தொல்காப்பியம்-புறத்திணையியல் 5.) என் பர்
நச்சினார்க்கினியர். புறப்பொருள்வெண்பாமாலை
பொதுவியற்படலம் 8-வது வெண்பா முதல் 14-வது
வெண்பாவரையிலுக்குக்கவனித்தற்பாலதாம்.

† சீவகசிந்தாமணி-காந்தருவதத்தையா நிலம்பகம் - 317. இதன்பொ
ருள், நம்பனது (சீவகனது) வில்லினின்றும் வெளிப்பட்ட பாணங்களின்
மிச்சிலல்லாமல் சிறந்த பொன்னுற் செய்த கிரீடத்தைத் தரித்த அரசனும்
இல்லை யென்பது. (மிச்சில் - எச்சில்).

‡ பதுமுகன் - சீவகனது நேசன்.

¶ நெடுமொழி வஞ்சியாவது ஒரு வீரன் தனது பகைவர்க்கு முன்னே
சென்று தனது சௌரியத்தைச் சிறப்பித்துச்சொல்லுதல். இது தன்மேம்

பாட்டுரையாசிரியர். "இன்ன ரெனவேண்டா வென்றே டெதிர்சீறி, முன்னர்

வருக மூரணகலு - மன்னர், பருந்தார் படையமருட் பல்லார் புகழ், விருந்தா

யடைகுறுவார் விண்" என்று புறப்பொருள் வெண்பாமாலையிலுள்ளது மிங் கறியத்தக்கதாம்.



1. Oh enemies! stand not before my leader (in warfare)' for many there are who did so and thereafter stood as statues hit by his arrows.

உ. கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லெந்த லினிது.

பரி:—(இ - ள்.) கானத்திண்க ணோடும்முயலைப் பிழையாம லெய்த அம்பை யேந்தலினும் வெள்ளிடைநின்ற யானையை யெறிந்து பிழைத்த வேலை யேந்துதல் நன்று, (எ - று).

'கான முயல்' என்றதனால் வெள்ளிடை நின்ற என்பதும், 'பிழைத்த' என்றதனாற் பிழையாமல் என்பதும், முயற்குத்தக 'எய்த' என்றதனால் யானைக்குத்தக எறிதலும் வருவிக்கப்பட்டன. இது மாற்றரசன் படையொடு பொருதானேனும் வீரன் * அது புறங்கொடுத்ததாக நாணிப் பின் னவன்றன் மேற் செல்லலுற்றனது கூற்று.

தெளி:—(இ - ள்.) கானம் - காட்டில், (ஓடுகிற), முயல் - முயலை, எய்த - (பிழையாமல்) எய்த, அம்பினில் - அம்பை எத்துதலேப்பார்க்கிலும், யானை - (வெளிநிலத்தில் நின்ற) யானையை, (எறிந்து), பிழைத்தமேல் - தப்பியமேலை, எந்தல் - எத்துதல், இனிது - நன்று, (எ- று).

'கான முயல்' என்றதனால் வெளிநிலத்தில் நின்ற என்பதும், 'பிழை த்த' என்றதனால் பிழையாம லென்பதும், முயற்குத்தக 'எய்த' என்றதனால் யானைக்குத்தக எறிதலும் வருவிக்கப்பட்டன. இது பகை யரசனது சேனை யோடு போர்செய்தானேனும் வீரன் அது தோற்றுப் பின்னிட்டோடக்கண்டு நாணிப் பின் அப்பகையரசன்மேற் செல்லலுற்றனது வார்த்தை. பிழையா மல் - தப்பாமல்.

தக - தகுதியாக.

(க-து.) போர்முகத்தில் வேற்றாசர் சேனைதோற்றோடியது கண்டு, முயலைத் தப்பாமலெய்த அம்பை யேந்துதலினும் யானையை யெய்து தப்பிய அம்பை யேந்துதல் சிறந்ததென்றொருவீரன் கூறினனென்பது.

2. It is better to hold the dart that missed an elephant (in the open) than that which hit a hare in the forest.

கூ.

பேராண்மை யென்ப தறுகணொன் றற்றக்கா
லூராண்மை மற்றது னெஃகு.

பரி:—(இ - ள்.) பகைவர்மேற் † கண்ணோடா துசெய்யும் மறத்
தை நூலோர் மிக்கவாண்டன்மை யென்று சொல்லுவர், ‡ அவர்க்கு

* அது புறங்கொடுத்ததாக நாணி - அம்மாற்றாசனது சேனை முதுகு கொடுத்தோடியதாக (அதுகண்டு) வெட்கமுற்று † கண்ணோடாது - தாட்சண்ணியங் கொள்ளாமல். ‡ அவர்க்கு - பகைவர்க்கு.

அங்கவியல்—கடு-வது படைச்செருக்கு.



ஒருதாழ்வுவந்ததாயிற் கண்ணோடி * அது தீர்த்

துக்கோடற்போநட்டு ஊராண்மை செய்தலே † அதற்குக் கூர்மையென்று சொல்லுவர். ()

என்ப வென்பது பின்னு மியைந்தது. ஊராண்மை - உபகாரியாந்தன் மை; அஃதாவது இலங்கையர் வேந்தன் போரிடைத் தன்றூனை முழுதும் படத் தமியனு யகப்பட்டானது ‡ நிலைமை நோக்கி, ¶ அயோத்தியரிறை மே ற்செல்லாது இன்றுபோய் நாளை நின்றூனையோடு வாவென வீட்டாற் போல்வது. இவை யிரண்டொட்டுங் o தழிஞ்சி.

தெளி:—(இ - ள்.) தறுகண் - (பகைவர்மேல் முகங்கொடாது செய் யுஃ)வீரத்தை, (நூலோர்), பேராண்மை-மிகுந்தவாண்தன்மையாகும், என்ப- என்று சொல்லுவர், ஒன்றுற்றக்கால் - (அவர்க்கு) ஒருதாழ்வு வந்ததாயின், (முகங்கொடுத்து அதனைத் தீர்த்துக்கொள்ளுதற்பொருட்டு), ஊராண்மை- உபகாரஞ் செய்தலை, அதன் - அதற்கு, எஃகு - கூர்மையாகும், என்ப - என்று சொல்லுவர், (எ - று).

என்ப என்பது எஃகு என்பதனோடும் பொருந்திநின்றது. ஊராண் மை - உபகாரஞ் செய்யுந்தன்மை; அஃதாவது இலங்கையர்க்கரசனை இரா வணன் போர்முகத்தில் தனது சேனைமுழுதும்இறக்கத்தளிமையடையப்பட் டானது நிலைமையைப்பார்த்து, அயோத்தி நகரத்தார்க்கரசனை

இராமபிரான் போர்செய்யாது இன்று போய் நாளை யுனது
சேனையோடு போருக்கு வரக்
கடவாயென்றுவிட்டால் போல்வது. இவை
இரண்டுபொட்டும்தழிஞ்சி. மற்று- அசை.

(க - து.) பகைவர்க்குப் போரில் தாழ்வுவந்தவிடத்து உதவுதல் பேராண்மை யென்னும் படைக்குக் கூர்மையாகும் என்பது.

---

* அது தீர்த்துக்கோடற் பொருட்டு - (பகைவர்) அத்தாழ்வைத் தீர்த்துக்கொள்ளும் நிமித்தம்.

† அதற்கு - பேராண்மைக்கு (வீரமென்னும் ஆயுதத்திற்கு).

‡ தன்னோடு வந்த படையெல்லாமடியப் படைக்கலம் ஒழிய மணிமுடி யழியநின்ற இராவணனது நிலைமையைப்பற்றி "அறங்க டந்தவர் செயலி தென் றுலகெலா மார்ப்ப, நிறங்க ரிந்துகா னிலம்விரல் கிளைத்திட நின்றான், இறங்கு கண்ணின னெல்லழி முகத்தினன் றலையன், வெறுங்கை நாற்றினன் விழுதுடை யாலன்ன மெய்யன்" என்று இராமாயணம் கூறு கின்றது.

¶ ஆள யாவுனக் கமைந்தன மாருத மறைந்த, பூளை யாயின கண்டனை யின்றுபோய்ப் பொரற்கு, நாளை வாவென நல்கின னாகிளங் கமுகின், வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல்" என்றிராமாயணங் கூறுகின்றது.

o தழிஞ்சி (தழுவல்) - தோற்றவர்மேல் போர்க்குச் செல்லாமை. புறப் பொருள் வெண்பாமாலை 'அழியுநர் புறக்கொடை யயில்வா ளோச்சாக், கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று" என்று

கூறுகின்றது. நச்சினார்க்
கினியார் "தழிச்சுதல், தழிஞ்சியாயிற்று" என்பர்.



3. The learned say that fierceness in warfare with an enemy is indeed great valour; but to become a benefactor to him in case of an accident is the extreme test of that valour.

ச. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

பரி:—(இ - ள்.) தன்கைப்படையாய வேலைத் தன்மேல்வந்த களிற்றொடு போக்கி வருகின்ற களிற்றுக்கு வேறடித் தானான் தன்மார்பின் கணின்ற வேலைக்கண்டு பறித்து மகிழும், (எ - று).

*களிற்றொடு போக்கல்* - களிற்றினதுயிரைக் கொடுபோமாறு விடுதல். *மகிழ்ச்சி* - தேடியதெய்தலான். இதனுட் களிற்றையல்ல தெறியாவென்பதூஉம், சினமிகுதியான் வேலைடைபோழ்ந்த தறிந்திலனென்பதூஉம், பின்னும் போர்மேல் விருப்பின னென்பதூஉம் பெறப்பட்டன. * நாழிலாட்டு.

தெளி:—(இ - ள்.) கைவேல்- (தன்) கைப்படையாகிய

வேலை, களிற்
றெறி - (தன்மேல்வந்த)யானையோடு, போக்கி - எறிந்துவிட்டு, வருபவன் - (வருகின்ற யானைக்குவேல்தேடித்) திரிபவன், மெய்வேல்-(தன்) மார்பில் தழைத்திருந்த வேலை, (கண்டு), பறியா-பிடுங்கி, நகும்-மகிழ்வான், (எ-று).

களிற்றெறிபோக்கல் - களிற்றினதுயிரைக் கொண்டுபோம்படி(வேலை) எறிதல். மகிழ்ச்சி-தேடிய வேலையடைதலால் (வந்தசந்தோஷம்). இதனுள் களிற்றையல்லது எறியானென்பதும், கோபமிகுதியால் வேல் மார்பில் பிளந்து புதைந்ததை அறிந்திலனென்பதும், பின்னும் போர்மேல் விருப்பினனென்பதும் பெறப்பட்டன. இது நூழிலாட்டு.

(க - து.) தனது கையிலுள்ளவேலைத் தன்னை யெதிர்த்த யானையின்மேலெறிந்து விட்டு, வருகின்ற யானைக்கு வேல் தேடித் திரிபவன் தனது மார்பில் தைத்துள்ள வேலைக்கண்டுமகிழுவான்.

4. The hero who casting the lance in his hand on an elephant comes in search of another will pluck the one that sticks to his body and laugh exultingly.

விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
† னோட்டன்ரோ வன்க ணவர்க்கு.

---

* நாழிலாட்டாஅ தூ உடம்பிற் புதைந்துள்ள படையைப் பறித்துப் பகைவர்மேலெறிதல். "களங்கெழுமிய படையிரிய, வுளங்கழிந்த வேல்பறித் தோச்சின்று" என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுகின்றது.

† ஓட்டு-ஓடுதல். (புறங்கொடுத்தல்; அஃதாவது தோற்று முதுகுகாட்டியோடுதல்). அன்று, ஓ, என்னும் மூன்றெதிர்மறைச் சொற்களும் ஆம்

அங்கவியல்—கரு-வது படைச்செருக்கு.

## 855

பரி:—(இ - ள்.) பகைவரை வேதண்டு நோக்கிய கண் * அவர் வேலைக்கொண்டெறிய † அஃதாற்றாது ‡ அந்நோக்கை யழித்து இமைக்குமாயின், அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாம், (எ - று).

அவ்வெகுளி நோக்க ¶ மீட்டலும் போரின்கண் மீட்சியெனக்கருதி $ அதனுள் செய்யாரென்பதாம்.

தெளி:—(இ - ள்.) விழித்தகண் - (பகைவரைக்) கோபித்துப்பார்த்த கண், வேல்கொண்டு-(அவர்) வேலைக்கொண்டு, எறிய-வீச, அழித்து-(அதற்குப் பொருமல் அப்பார்வையை) அழித்து, இமைப்பின் - இமைக்குமா யின், (அவ்விமைத்தல்), வண்கணவர்க்கு - வீரர்க்கு, ஓட்டன்றே - தோற்றேடுதலாம், (எ - று).

(வண்கணவர்) அக்கோபப்பார்வையை மீட்டலும் போரினிடத்துப் புறங் கொடுத்த லென்று நினைத்து அதுவுஞ் செய்யாரென்பதாம்.

(க - து.) போரில் பகைவர் படைக்காற்றாது கண்ணிமைத்தலும் வீரர்க்குத் தோல்வி யாகும் என்பது.

5. Is it not a discomfiture to the warriors to destroy the ferocious look by winking when a lance is cast at them by their enemy.

சு. விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் ஞாள யெடுத்து.

பரி:—(இ - ள்.) தனக்குச் சென்ற நாள்களை யெடுத்தெண்ணி, அவற்றுள் விழுப்புண்படாத நாள்களை யெல்லாம் பயன்படாது கழிந்த நாளுள்ளே வைக்கும் வீரன், (எ - று).

விழுப்புண் - முகத்திலும் மார்பிலும் பட்ட புண். போர்பெற்றிருக்க வும் o அது பெரிய நாள்களோடும் கூட்டுமென்பதாம். இவை மூன்று பாட் டானும் () ஊறஞ்சாமை கூறப்பட்டது.

---

என்னுமோருடம்பாட்டுப் பொருளையுணர்த்தி நின்றன.

அன்று - எதிர் மறைக்குறிப்புவினைமுற்றுச்சொல் ; ஓ-எதிர்மறைவோகார விடைச்சொல்

இரண்டெதிர்மறைச்சொற்களையைந்துவரின், ஒருடம்பாட்டுப்பொருளை யுணர்த்து மென்பதிங்குணர்சற்பாலதாம். ஓட்டு-முதனிலைதிரிந்ததொழிற் பெயர். ஓடு-முதனிலை (பகுதி).

* அவர் - பகைவர் †

அஃது - வேல்கொண்டெறிதலுக்கு.

‡ அந்நோக்கை யழித்து - கோபித்துப்பார்த்த பார்வையை யொழித்து.

¶ மீட்டலும் - மாற்றலும். § அதுவும் - இமைத்தலும்.

o அது - விழுப்புண்.

() ஊறு - உடம்பில் வாள் முதலிய படைகளாலுண்டாகுங் காயம்.



தெளி:—(இ - ள்.) (வீரனானவன்) தன்னுடை -

தனக்குக்கழிந்த நாள்

களை, எடுத்து - எடுத்தெண்ணி, (அந்நாள்களுள்), விழுப்புண்-சிறந்தபுண்

கள், படாத நாளெல்லாம் - படாத நாள்களையெல்லாம், வழுக்கினுள் - பயன்

படாது கழிந்த நாளுள்ளே, வைக்கும் - வைப்பான், (எ - று).

விழுப்புண் - முகத்திலும் மார்பிலும் பட்ட புண். (வீரன்) போர் பெற்றிருக்கவும் (விழுப்புண் படாத நாள்களையெல்லாம்) அது பெறுத நாள்களோடுங் கூட்டுமென்பதாம். இவை மூன்று பாட்டாலும் ஊறஞ்சாமை

சொல்லப்பட்டது.

(க - து.) வீரன் போரில் காயம் வாங்காத நாள்களை யெல்

லாம் பயன்படாதுகழிந்தநாளாக எண்ணுவான் என்பது.

6. The hero will reckon among wasted days all those on which he had not received severe wounds.



## எ. சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார் கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

பரி:—(இ - ள்.) துறக்கத்துத் தம்மொடு செல்லாது வையத்

தைச் சூழ்ந்து நிற்கும் புகழை வேண்டி உயிர்வாழ்தலே வேண்டாத வீரர் * கழல் கட்டுதல் அலங்கார நீர்மையையுடைத்து, (எ - று).

† 'சுழலுமிசை' எனவே, ‡ அதன் பெருமை பெற்றும். செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. சூழ்தல் - அகத்திடல். துறக்கமும் புகழும் எளிதி னெய்துவராகலின், ஆபரணமாவது அதுவே யென்பதாம்.

தெளி:—(இ - ள்.) சுழலும் - (துறக்கத்திற்குத் தம்முடன் வாராது

வையத்தைச்) சூழ்ந்துநிற்கும், இசை - புகழை, வேண்டி - விரும்பி, வேண்டா வுயிரார் - உயிர்வாழ்தலே வேண்டாத வீரர், கழல் - வீரக்கழலே, யாப்பு - (கா வில்) கட்டுதல், காரிகை நீர்த்து - அலங்கார குணத்தையுடையதாம், (எ-று).

'சுழலுமிசை' எனவே, அதன் பெருமை பெறப்பட்டது. வையத்தை என்னுஞ் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. சூழ்தல் - பூமியினுள் இருக்கச்செய்தல். (சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்)துறக்கத்தையும் புகழையும் எளிதி லடைவராகலால், அவர்க்கு ஆபரணமாவது அக்கழலே யென்பதாம். துறக்கம் - வீரசுவர்க்கம்.

(க - து.) கீர்த்தியை விரும்பிய வீரர் உயிரை விரும்பார்.

---

* "ஆடவர் கொடையால் வீரத் தாலணி, பாதத் தணியே கழலணி யென்ப" என்பது பிங்கலந்தை.

† வையத்தை (பூமியை)ச் சூழுமெனவே என்றும் பாடமுண்டு.

‡ அதன் - இசையின் (புகழின்).

அங்கவியல்—கடி-வது படைச்செருக்கு.

**857**

7. The fastening of ankle ring by those desirous of world-wide fame and not the safety of their lives is like adorning themselves.

அ. உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்.

பரி:—(இ - ள்.) போர்பெறிற் றம்முயிர்ப்போநட் டஞ்சா து அதன் மேற்சென்லும் வீரர் தம்மிறைவன் * அது வேண்டாவென்று முனியி னும் அவ்வீரமிகுதி குன்றார். (எ - று).

போர்பெற் றறியாமையின்,† அது பெற்றால் அரசன் றடுப்பினும் நில் லாரென்பதாம். பிறரும் ‡ "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்" என்றும், ¶ "புட்பகத், தேவ ருகலிற் சாவேம் யாமென, நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப" என்றுங் கூறினர்.

தெளி:—(இ - ள்.) உறின் - (போரைப்) பெற்றால், உயிர் - (தம்)

உயிர்ப்பொருட்டு, அஞ்சா - அஞ்சாமல், (அப்போரின்மேற் செல்லும்), மற

வர் - வீரர், இறைவன் - (தம்) அரசன், செறினும் - (அது வேண்டாமெ

ன்று) கோபிக்கினும், சீர்குன்றல் - அவ்வீரமிகுதி குறைதல், இலர் - இல

ராவர், (எ - று).

வீரர் போர்பெற்று அறியாமையால், அது பெற்றால் அரசன் தடுப்பி

னும் நில்லா ரென்பதாம்.

(க - து.) தம்முயிர்ப்பொருட் டஞ்சாது போர் புரியும் வீரர்

தம் மரசன் அது வேண்டாமென்று தடுப்பினும் நில்லார் என்பது.

---

* அது - போர். † அது - போர்.

‡ புறநானூறு 31. இதன்பொருள். போரென்று கேட்டால் விரும்

பும் (காலில்) அணிந்த வீரக்கழலை யுடைய வீரர் என்பது.

¶ புறநானூறு 69. இதன்பொருள். புட்பக

விமானத்திற் செல்லும்
தேவரை வாதலால் யாம்
(போரிற்சென்று பகைவரோடெதிர்த்து)மடிவோ
மென்று(சம்மூள்)நீங்குதலில்லாத வீரர் (தம்முடைய)
பூரித்த தோள்களை

(கைகளால்) தட்ட என்பது. "புட்பகைக், கேவா னுகலிற் சாவேம் யாமெ
ன, நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப" என்றும் பாடமுண்டு. இதற்கு
"(எம்மை) புட்செய்யும் பகையிடத்து ஏவானுகலான்,
யாம் எம்மிற் பொ

ருதமடியக் கடவேமென்று நீங்காத மறத்தை யுடையோர் தம்முடைய பூரி
த்த தோள்களைத் தட்ட" என்றுரை கூறப்பட்டிருப்பதுடன், விசேட வுரை
யில் "புட்பகையேவானுகலின் என்றேறுதி உள்ளபகை, தம்மிற்கூடிற்றாக,
புன் நிமித்தத்திற் தப் பகையன் ஏவானுகலிற் சாவேம் யாமென மறவர்
தோள்புடைப்பவென்று முரைப்பாருமுளர். புட்பகை யென்று இவனுக்கு
ஓர் பெயர்" என்றும் கூறப்பட்டிருக்கிறது.





8. The heroes who are not afraid of losing their lives in battle will not cool their ardour even if the king prohibits them from fighting.

கூ. இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்.

பரி:—(இ - ள்.) தாங்கூறின வஞ்சினந் தப்பாமற் போருட்டுச்
சென்று சாவவல்ல வீரரை * அது தப்பியவா றுசொல்லி யெள்ளுத்தீர்துரியார் யாவர், (எ - று).

இழைத்தல் - † இன்னது செய்யேனெயின் இன்னதுகுகவெனத்தான் வகுத்தல். சொல்லியென்பது ‡ அவாய் நிலையான் வந்தது. வஞ்சின முடிப் பான்புக்கு ¶ முன்னே சாவினும் | தொலைவன்மையின், + அது முடித்தா ராவரெனச் சாதற்சிறப்புக் கூறியவாறு.

தெளி:—(இ - ள்.) இழைத்தது - (தாம்) சொல்லியசபதம், இகவாமை- தப்பாமற்பொருட்டு, சாவாரை - (போய்ச்) சாவவல்ல வீரரை, பிழைத்தது- (அது) தப்பியவிதத்தை, (சொல்லி), ஒறுக்கிற்பவர் - இகழ்தற்குரியவர், யார்- யாவர், (எ - று).

இழைத்தல்-இன்னது செய்யேனெனில் இன்னதுகுவனெனத்தான்வகுத்துக்கூறுதல். சொல்லியென்பது அவாய் நிலையால்வந்தது. வீரர்தாங்கூறிய சபதத்தைமுடிக்கச் சென்று முன்னே இறந்தாலும்

தொலைவல்லாமையால்,

அது முடித்தாராவாரெனச் சாதற்சிறப்புச் சொல்லியவாறும்.

(க - து:) தாங்கூறிய சபதம் தப்பாதபடி சென்று போரில் மடியும் வீரரை யிகழ்ந்து கூறுவாரில்லை என்பது.

9. Who would despise with failure those who seal their oath with their death?

---

* அது - சபதம். † "வினையிலென் மகன்றனுடல் வேறுசெய்வித் தோனைக், குனிசிலேபி னுளையுயிர் கோறல்புரி யேனேல், மனைவியுயிர் வீயவன் மகன்மனைவி கையால், தினையளவு மோர்பொழுது சீவித்தவ னல்லேன்" என்று பதின்மூன்றுநாள் யுத்தத்தில் அருச்சுனன்சபதஞ்செய்தாற் போல்வது இங்குக் கவனித்தற்பாலதாம். "இன்று பகலோ னிறவாமு னென்னை, வென்று களங்கொள்ளா வேலுயர்ப்பி - னென்று, மரணவியப் பீயு மடையார்மு னிற்பேன், முரணவிய முன்முன் மொழிந்து" என்பது புறப்பொருள் வெண்பாமாலை.

‡ ஒறுக்கிற்பவர் என்பது சொல்லி யென்பதை அவாவி (வேண்டி) நின்றது.

¶ முன்னே - தாம் கூறிய சபதம் முடிப்பதற்கு முன்னரே.
| தொலைவு - தோல்வி. † அது - வஞ்சினம் (சபதம்).

க°. புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா

டிரந்துகோட் டக்க துடைத்து.

பரி:—(இ - ள்.) தமக்குச்செய்த நன்றிகளை நினைந்து ஆண்டவரசரி கண்கள் நீர் மல்தும்வகை போரிடைச் சாவப்பெறின், அச்சாகீ காடு இரந்தாயினுங் கோள்ளுந் தகுதியையுடைத்து, (எ - று).

* மல்குதலாகிய இடத்துநிகழ் பொருளின்தொழில் இடத்தின்மே னின்றது. கிளையழ இல்லிடைநோயால் விளிவார் † பழவினைப்பயனே யெய்தலின், ‡ அடுத்த வினையாற் றுறக்கமெய்துஞ் சாதலை 'இரந்துகோட் டக்க துடைத்து' என்றார். இவைதான்குபாட்டானும் ¶ உயிரோம்பாமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (தமக்குச்செய்த நன்மைகளை நினைந்து) புரந்தார் - ஆண்டவரசரது, கண் - கண்கள், நீர்மல்க - நீர்பெருகும்படி, சாகிற்பின் - (போரிடத்தைச்) சாவப்பெற்றால், சாக்காடு - அச்சாவு, இரந்து - இரந்தாயினும், கோட்டக்கது - கொள்ளுந்தகுதியை, உடைத்து - உடையது, (எ-று).

மல்குதலாகிய இடத்து (கண்களில்) நிகழ்பொருளின் (நீரின்) தொழில் இடத்தின் (கண்களின்) மேல் நின்றது. சுற்றத்தார் அழ இல்லி(வீட்டி)ன்கண் நோயிலுல் சாவார் பழவினைப்பயனையே யடைதலால், அடுத்த வினையால் வீரசுவர்க்கத்தை யடையும் சாவை 'இரந்துகோட் டக்க துடைத்து' என்றார். இவை நான்குபாட்டாலும் உயிரைக்காவாமை சொல்லப்பட்டது.

(க - து.) தம் மரசன் தாம்செய்த நன்மைகளை யெண்ணி உருகியழுமாறு போரில் இறத்தல் வீரர்க்குச் சிறப்புடையதாம்.

10.

If heroes can so die as to fill with tears the eyes of their rulers, such a death deserves to be

begging.

sought even by

அங்கவியுலில் படை முற்றிற்று.

பதினேழாவது

அதிகாரம்.

நட்பு:—*Friendship.*

பரி:—இனி அப்படைபோல அரசனுக்கு தொழிலினிடத்து உதவுவதாய நட்பினை ஐந்தாதிகாரம் | விதிமுகத்தானும் பன்னிரண்டதிகாரம் எதிர்

* கண்ணீர்மல்க என்பது "இந்தப் பானை நாலுழி யரிசி பொங்கும்" என்றாற்போல் வந்த (இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேலாய) வுபசார வழக்காம்.

† பழவினை - முன்வினை (சன்மாந்தரங்களில் செய்தகருமம்).

‡ அடுத்தவினை - உடம்புநீங்கிப்போங்காலத்து அடுத்துள்ள கருமம்.

¶ உயிரோம்பாமை - வீரர்தம்முயிரை விரும்பிக்காக்க எண்ணமை.

| விதிமுகத்தானும் - உடன்பாட்டு வாயிலாகவும்.



மறை முகத்தானுங் கூறுவான் றெடங்கி, விதிமுகவதிகா ரமைந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகின்றார். * அஃதாவது இன்னதென்பதூஉம் அதி கார முறைமையும் இதனுள் விளங்கும்.

தெளி:—இனி அப்படைபோல அரசனுக்குத் தொழிலினிடத்து உதவுவ தாகிய நட்பினை ஐந்தாதிகாரம்

விதிமுகத்தாலும் பன்னிரண்டதிகாரம் எதிர் மறை முகத்தாலும் சொல்லத்தொடங்கி, விதிமுக வதிகாரமைந்திலுள்ளும் முதலில் நட்பினைச்சொல்லுகின்றார். அஃதாவது இத்தன்மையதென்பதும் அதிகார முறைமையும் இதனுள் விளங்கும்.

## க. செயற்கரிய யாவுள நட்பி னதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு.

பரி:—(இ - ள்.) † நட்புப்போலச் செய்து கோடற்கரிய பொருள்கள் யாவையுள; செய்துகொண்டால் அதுபோலப் பகைவர் செயும் வினைக்குப் புகற்கரிய காவலாவன யாவையுள, (எ - று).

நட்புச் செய்தற்காவாரைப் பெறுதலும் பெற்றுச் செய்யு முபாயமும்

செய்தாற்றிரிபின்றி நிற்றலு முதலிய அரியவாகலின், ‡ நட்பிற் செயற்கரிய யாவுள என்றும், செய்தாற் பகைவராஞ்சி வினைதொடங்காராகலின்

¶ அதுபோல்வினைக்கரிய காப்பு யாவுள என்றுங் கூறினர். நட்புத்தான் இயற்கை செயற்கை யென இருவகைப்படும். அவற்றுள் இயற்கை பிறப்புமுறை யானுயதாகும் தேய முறையானுயதாகுமென

விருவகைப்படும். அவற்றுண்

| முன்னையது சுற்றமாகலின், அது †† சுற்றந்தழாலினடங்கிற்று; ‡‡ ஏனை

---

* அஃதாவது - நட்பாவது (சிநேகமாவது).

† "பிரதியுபகாரத்தை யபேட்சியாமலும் பூர்வசிநேகத்தாலில்லாமலும் பூர்வசம்பந்தத்தாலில்லாமலும் உபகாரஞ்செய்பவன் சுகிருத்து; பூர்வசிநேகத்தை யபேட்சித்தே யுபகாரஞ் செய்பவன் மித்திரன்; தான்செய்த அபகாரத்தை நாடாமல் கேவலம் தனது குரூரசுபாவத்தாலேயே அபகாரஞ்செய்பவன் சத்துரு; பரஸ்பரம் விவாதஞ்செய்யாநிற்குமிருவர்க்கும் இதத்தையிச்சிப்பவன் மத்தியஸ்தன்; அற்பசம்பந்தத்தால் உபகாரஞ்செய்பிவன் பந்து; தன்னுற்செய்யப்பட்ட அபகாரத்தை நாடியே அபகாரஞ்செய்பவன் துவேஷி;" என்று பகவற்கீதை கூடார்த்ததீபிகையில் எழுதப்பட்டிருக்கின்றது. (பகவற்கீதை 6-வது அத்தியாயம் 9-வது செய்யுள்).

‡ நட்பிற் செயற்கரியனவில்லை

யென்றும் பாடமுண்டு.

¶ அதுபோல வினைவாராமைக்கு அரியகாவலில்லையென்றும்பாடமுண்டு.

| முன்னையது - பிறப்பு முறையாலாகிய இயற்கை நட்பு.

†† சுற்றந்தழாலின் - சுற்றந்தழால் என்னும் அதிகாரத்தில். (தழால் - தழுவுதல்.) அஃதாவது தனது உறவினரைத் தன்னினின்றும் நீங்காமல் அணைத்தல்.

‡‡ எனையது - தெய்முறையாலாகிய இயற்கை நட்பு.

அங்கவியல்— கசு-வது நட்பு.

**861**

யது * பகையிடையிட்ட தெயத்ததாகலின், அது † துணைவலியென ‡ வலி

யறிதலு ளடங்கிற்று. இனி ஈண்டுச் சொல்லப்படுவது முன்செய்த வுதவி பற்றிவருஞ் செயற்கையே யாகலின், அதன் சிறப்பு இதனுற் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) நட்பின்-நட்புப்போல, செயற்கரிய - சம்பாதித்துக் கொள்ளுதற்கு அரிய பொருள்கள், யா - எவை, உள - இருக்கின்றன, (சம்பாதித்துக்கொண்டால்), அதுபோல் - அதுபோல, வினைக்கு - (பகைவர் செய்யுங்) தொழிலுக்கு, அரிய - (புகுதற்கு) அரிய, காப்பு - காவலாவன, யா-எவை, உள - இருக்கின்றன, (எ - று).

நட்புச் செய்தற்கு ஆவாரைப் பெறுதலும் பெற்றால் செய்யும் உபாயமும் செய்தால் வேறுபடாமல் நிற்றலும் முதலாயின அரியனவாகலின், நட்பிற் செயற்கரிய யாவுள என்றும், நட்புச்செய்தால் பகைவர் அஞ்சிப் போர் தொடங்காராகலால் அதுபோல் வினைக்கரிய சாப்பு யாவுள என்றும் சொல்லினர். நட்புத்தான் இயற்கை செயற்கை யென இருவகைப்படும். அவ் வீரண்டனுள் இயற்கைநட்புப் பிறப்பு முறையாலாயதும் தேய முறையாலாயதும் என இருவகைப்படும். அவற்றுள் முன்னையது சுற்றமாகலால், அது சுற்றந்தழாலில் அடங்கிற்று ; மற்றது பகையிடையிட்ட தேயத்ததாகலால், அது துணை வலியென வலியறிதலுள் அடங்கிற்று. இனியிங்குச் சொல்லப் படுவது முன் செய்த உதவி பற்றி வரும் செயற்கைநட்பே யாகலால், அதன் சிறப்பு இதனுள் சொல்லப்பட்ட து. பிறப்புமுறை - தேகசம்பந்தம் ; தேய முறை - தேசசம்பந்தம்.

(க–து.) பகைவர் செய்யும் வினையைக் கெடுக்கும் நட்புப்போலச் சம்பாதித்துக் கொள்ளுதற் கரியபொருள் ஒன்றுமில்லை.

1. What things are there so difficult of acquisition as friendship? What guards are there so difficult to break through by the efforts of ones foes ?

உ. ¶ நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

பரி:—(இ - ள்.) அறிவுடையார் நட்புக்கள் | பிறை நிறையுந்தன் மைபோல நாடோறு நிறையுந் தன்மையவாம்; மற்றைப் பேதைமை

* பகையிடையிட்ட - பகைவருடு சம்பவித்த.

† துணைவலி - துணையா (சகாயமா) யுள்ளவரது வலிமை.

‡ வலியறிதலுள் - வலியறிதலென்னும் அதிகாரத்தில்.

¶ "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையா நந்தும் - வரிசையால், வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே, தானே சிறியார் தொடர்பு" என்று நாலடியார் கூறுவதிங்கறியத்தக்கதாம்.

| பிறை - இளஞ்சந்திரன்.



யுடையார் நட்புக்கள் நிறைந்த * மதி பின் துறையுந் தன்மைபோல நர் டோறுங் துறையுந் தன்மையவாம். (எ - று).

'நீரவர்' என்றார்; இனிமைபற்றி. கேண்மை நட்பென்பன ஒருபொருட் கிளவி. செய்தாரது பன்மையான் நட்பும் பலவாயின. அறிவுடையாரும் அறிவுடையாருஞ் செய்தனமுன்சுருங்கிப் பின்பெருகற்கும், பேதையாரும் பேதையாருஞ்

செய்தன முன் பெருகிப் பின் சுருங்கற்குங் காரணம் தம்முண் † முன்னறியாமையும் பின்னறிதலுமாம்.

தெளி:—(இ - ன்.) நீரவர்—அறிவுடையவரது, கேண்மை-நட்புக்கள், பிறை-பிறைச்சந்திரன், (நிறையுந் தன்மைபோல), நிறைநீர - (நாடோறும்) நிறையுந் தன்மையனவாம், பேதையார்-(மற்றை) அறிவில்லாதவரது, நட்பு- நட்புக்கள், மதி - நிறைந்த சந்திரன், பின்னீர - பின்னே குறையுந் தன்மை போல நாடோறும் குறையுந் தன்மையனவாம், (எ - று).

இனிமைக்குணமுடையவரா யிருத்தல்பற்றி அறிவுடையவரை 'நீரவர்' என்றார். கேண்மை நட்பு என்பன ஒருபொருட் சொற்கள். நட்புச்செய்தார் பலராயிருத்தலால் அவரது நட்பும் பலவாயின. அறிவுடையாரும் அறிவுடையாரும் செய்த நட்புக்கள் முன்னே சுருங்கிப் பின்னே விருத்தியாதற்கும், அறிவில்லாதவரும் அறிவில்லாதவரும் செய்த நட்புக்கள் முன்னே விருத்தியடைந்து பின்னே சுருங்குதற்குங் காரணம் தம்முள்ளே முன்னே அறியாமையும் பின்னே அறிதலுமாம் நீரவர்-இனிமையர்;நீர்மை-இனிமை.

(க - து.) அறிவுடையாரது நட்பு நாடோறும் பெருகியும், மூடரது நட்பு நாடோறும் சுருங்கியும் வரும் என்பது.

2. The friendship of the wise waxes like the new moon; but that of the fools wanes like the full moon.

ந. நவிறேறு நூனயம் போலும் பயிறேறும்
பண்புடை யாளர் தொடர்பு.

பரி:—(இ-ள்.) நற்குணமுடைய மக்கள் தம்முட்செய்த நட்புப் பயிலுந்தோறும் அவர்க்கின்பஞ் செய்தல் நூற்பொருள் கற்குந்தோறுங் கற்றார்க்கின்பஞ் செய்தலை யொக்கும், (எ - று).

நயத்தினைச் செய்தலான் 'நயம்' எனப்பட்டது ‡

இருமையினும் ஒரு

---

* மதி - பூர்ண சந்திரன்.

† முன்னறியாமையை அறிவுடை
யாரிடத்தும், பின்னறிதலை அறிவில் லாரிடத்துங் கொள்க.

‡ இருமையினும் (உவமானமாகிய நூற்பொருளிலும், உவமேயமாகிய நற்குணமுடைய மக்கள் தம்முட் செய்த நட்பிலும்) ஒருகாலைக் கொருகால் (நாளேறநாளேற) (இன்பம்) மிகுமென்பதாம்.

காலைக் கொருகால் மிகுமென்பதாம். இவை

யிரண்டொட்டானும் * அச் சிறப்பிற்கேது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) பண்புடையாளர் - நற்குணமுடைய மக்கள், தொடர்பு - (தம்முள்செய்த) நட்பு, பயிறொறும் - பழகுந்தோறும், (அவர்க்கு இன்பஞ் செய்தல்), நூல் - நூற்பொருள், கவிறொறும் - கற்குந்தோறும், நயம்போலும் - (கற்றார்க்கு) இன்பஞ்செய்தலை யொக்கும், (எ - று).

நூற்பொருள் கற்குந்தோறும் நய (இன்ப)த்தினைச் செய்தலால் 'நயம்' என்று கூறப்பட்டது. உவமானம் உவமேயமென்னு மிரண்டன்கண்ணும் இன்பம் ஒருபோதுக்கு ஒருபோது மிகுமென்பதாம். இவை இரண்டு பாட்டாலும் அச்சிறப்புக்குக் காரணம் சொல்லப்பட்டது.

(க - து.) நற்குணமுடையாரது நட்புப் பழகப் பழக இன்பத்தை மிகுதியாகச் செய்யும் என்பது.

3. Like learning, the friendship of the noble, the more it is cultivated, the more delightful does it become.

நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

பரி:—(இ - ள்.) ஒருவனோடொருவர் நட்புச்செய்தல் தம்முணர்தற் கியைந்தன சொல்லி நகையாடற் பொருட்டன்று; அவர்க்கு வேண்டாதசெய்கை யுளதாயவழி முற்பட்டுக் கழறுதற்பொருட்டு, (எ - று).

† பழியும் பாவமும் தருஞ்செய்கை துன்பமே பயத்தலான், வேண்டப் படுவதன்மையின், அதனை 'மிகுதி' என்றும், ¶ அது செய்தற்கு முன்னே மீட்டல் வேண்டுதலின் 'மேற்சென்று' என்றும், இன்சொற்கு மீளாமை யின் 'இடித்தற் பொருட்டு' என்றுங் கூறினர். இதனுண்மை பின்பயன் கூறப் பட்டது.

தெளி:—(இ - ள்.) நட்டல் - (ஒருவரோடு ஒருவர்) நட்புச்செய்தல், (தம்முள் நகைசெய்தற்குப் பொருந்தியவற்றைச் சொல்லி), நகுதற்பொருட்டன்று - நகைசெய்தற்பொருட்டன்று, மிகுதிக்கண் - (அவர்க்கு) வேண்டாதசெய்கை உண்டாயவிடத்து, மேற்சென்று - முற்பட்டு, இடித்தற்பொருட்டு - கண்டித்துப் புத்திசொல்லுதற் பொருட்டாம், (எ - று).

பழியும்பாவமும் தருஞ்செய்கை துன்பமே தருதல்பற்றிவேண்டப்படுவ தல்லாமையால், அச்செய்கையை 'மிகுதி' என்றும், அதுசெய்தற்குமுன்னே மீட்டல்

வேண்டுதலால் 'மேற்சென்று' என்றும், இனியசொல்லுக்கு மீளா

---

* அச்சிறப்பிற்கேது - நட்பின் சிறப்பிற்குக் காரணம்.

† பழியும் பாவமும்-இம்மைக்குரிய பழியையும், மறுமைக்குரியபாவத்
தையும். "இம்மைப் பழியு மறுமைக்குப் பாவமும்"

¶ அது-பழியும் பாவமுங் கருஞ் செய்கை. என்பது பழமொழி.



திருக்குறள்-பொருட்பால்.

மையால் 'இடித்தற்பொருட்டு' என்றும் சொல்லினர். இதனால் நட்பின்
பயன் சொல்லப்பட்டது. மீட்டல் - திருப்புதல்; மீளாமை - திரும்பாமை.

(க - து.) சிநேகஞ் செய்வது தவறுகண்டபோது கண்டித்துப் புத்திசொல்லுவதற்கேயன்றிச் சிரித்து விளையாடுதற்பொருட்டன்று என்பது.

4. Friendship is to be practised not for the purpose of laughing but for that of being beforehand in giving one another sharp rebukes in case of transgression.

னட்பாங் கிழமை தரும்.

பரி:—(இ-ள்.) ஒருவனோடொருவன் நட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை ; இருவர்க்கு மொத்த வுணர்ச்சிதானே நட்பா முரிமையைக் கொடுக்கும், (எ - று).

புணர்ச்சி - ஒருதேயத்தாராதல்; * "இன்றே போல்கதும் புணர்ச்சி தானே." என்றதும் † அதனை. பழகுதல் - பலகாற் கண்டுஞ் சொல்லாடியும் மருவுதல். இவ்விரண்டு மின்றிக் ‡ கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சி யொப்பின், அதுவே உடனுயிர் நீங்கு முரிமைத்தாய நட்பினைப் பயக்கு மென்பதாம். நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி யொத்தலென்னுங் காரண மூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத் தென்பது இதனுற் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (ஒருவனோடு ஒருவன் நட்பாதற்கு) புணர்ச்சி - புணர்ச்சியும், பழகுதல் - பழகுதலும், (ஆகியகாரணங்கள்), வேண்டா - வேண்டுவதில்லை, உணர்ச்சிதான் - (இருவர்க்கும் ஒத்த) அறிவுதானே, நட்பாங்கிழமை-சிநேகமாகுமுரிமையை,தரும்-கொடுக்கும், (எ-று).

புணர்ச்சி - ஒருதேயத்தாராயிருத்தல். பழகுதல் – பலகால் கண்டும் பேசியுங் கூடுதல். புணர்ச்சி பழகுதலென்னும் இவ்விரண்டு மில்லாது கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல அறிவு ஒத்திருக்குமானால், அவ்வறிவொத்திருத்தலே யுடனே உயிர் நீங்கும் உரிமையினையுடையதாய நட்பினை யுண்டாக்கு மென்பதாம். நட்பினுக்குப் புணர்ச்சி,

---

* புறநானூறு 58. இதன்பொருள். இன்றுபோல்க நுமதுகூட்டம் என்பது. இன்றே போல்கதும் புணர்ச்சி என்று என்றும் பாடமுண்டு.

† அதனை - புணர்ச்சியை.

‡ பாண்டி நாட்டிலுள்ள பிசிரென்னும் ஊரில் இருந்த பிசிராந்தையார் என்னும் புலவர் தமது சேனுன (உறையூரை இராஜதானியாகக் கொண்டிருந்த) கோப்பெருஞ்சோழன் எல்லாவற்றையுந் துறந் திறந்ததைக் கேட்டுத் தாமும் உடனே இறந்தாரென்பது கதை.



பழகுதல், அறிவொத்தல் என்னும் காரண மூன்றனுள்ளும் பின்னதாகிய அறிவொத்தல் சிறப்புடையதென்பது இதனுல் சொல்லப்பட்டது.

(க - து.) புணர்ச்சி, பழகுதல், அறிவொத்திருத்த லென்னுங் காரண மூன்றனுள், அறிவொத் திருத்தலே நட்பிற்குச் சிறந்த காரணமாம் என்பது.

5. Living together and holding frequent intercourse are not necessary for friendship; mutual understanding can alone create a claim for it.

சூ. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

பரி:—(இ - ள்.) கண்டவழி அகமொழிய முகமாத்திரமே மலரும் வகை நட்டும துநட்பாகாது; அன்பால் அகமுமலர நட்டுமதே நட்பாவது, (எ - று).

நெஞ்சின்க ணிகழ்வதனை நெஞ்சு என்றார். † இறந்தது தழீஇய வெச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. ‡ இதனால் இரண்டும் ஒருங்கே மலரவேண்டு மென்பது பெற்றும்.

தெளி:—(இ - ள்.) முகநக - (கண்ட விடத்து அகமொழிய) முகமாத்திரமே மலரும்வகை, நட்பது - சிநேகிப்பது, நட்பன்று-சிநேகமாகாது, நெஞ்சத்து - அன்பால், அகநக - அகமும் மலர, நட்பது-சிநேகிப்பதே, நட்பு - சிநேகமாவதாம், (எ - று).

நெஞ்சினிடத்து பெயராற் கூறினர்.

நிகழ்வதாகிய அன்பினை நெஞ்சென்று இடவாகு அகமும் என்னும் இறந்தது தழுவிய எச்ச வும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. இதனால் முகமும் அகமுமாகிய இரண்டும் ஒருமித்து மலரவேண்டுமென்பது பெற்றும். அகம்- மனம். மலருதல் - கிளர்ச்சியுடையதாதல். நிகழ்வது - பொருந்துவது.

(க-து.) அகமும் முகமும் மலரச் சிரிக்கப்பட்ட சிரிக்க மாகும் என்பது.

6. The love that merely dwells in the smiles of the face is not friendship ; but the love that dwells deep in the smiles of the heart is true friendship.

எ. அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க ணல்ல லுழப்பதா நட்பு.

† அகமும் என்ற உம்மை முகம் (முகமும்) என்பதைத் தழுவி நின்றது.

‡ இதனுல் - முதுகை நட்பது நட்பன்று என்றதனுல்.





பரி:—(இ - ள்.) கேட்டினைத்தருந் தீ நெறிகளைச் செல்லுங்கால்

விலக்கி எனை நன்னெறிகளைச் செல்லாக்காற் செலுத்தித் தெய்வத்தாற் கேடுவந் துழி அது விலக்கப்படாமையின் அந்துன்பத்தை உடனனுபவிப்பதை ஒருவனுக்கு நட்பாவது, (எ-று).

† 'ஆறு' என வருகின்றமையின், ‡ 'அழிவினைவை'என்றெழிந்தார். ¶ "தெருண்டவறிவினவர்"என்புழிப்போல இன்சாரியை நிற்க ()இரண்டனுருபு தொக்கது. * இனிநவையென்று பாடமோதி, அதற்குப் போரழிவினுஞ் செல்வ வழிவினும் வந்த துன்பங்களென்றும், அழிவின்கண் என்பதற்கு யாக்கை யழிவின்க ணென்றும் உரைப்பாரு முளர்.

தெளி:—(இ - ள்.) நட்பு - (ஒருவனுக்கு) நட்பாவது, அழிவின்-கேட் டினை, (தருகின்ற), அவை - தீயவழிகளை, நீக்கி - (அவற்றில் செல்லுமிட த்து) விலக்கி, ஆறு - (மற்ற நல்) வழிகளை, உய்த்து - (அவற்றில் செல்லா விடத்து) செலுத்தி, அழிவின்கண் - (ஊழினால்) கேடுவந்தவிடத்து, (அக் கேடு விலக்கப்படாமையால்), அல்லல் - அத்துன்பத்தை,உழப்பதாம் - (உட னிருந்து) அனுபவிப்பதே, (எ-று).

'ஆறு' எனப் பின் வருகின்றமையின், தீயவழிகளை 'அழிவினவை' என்று சுட்டியொழிந்தார். அழிவின் என்பது அறிவினவர் என்றவிடத்துப் போல இன்சாரியையிற்க (ஐ யென்னும்) இரண்டனுருபு தொக்கு நின்றது.

(க-து.) தீயவழியிற்செல்லாவாறு பாதுகாத்து, நல்லவழியிற் செலுத்தி, ஊழினால்வந்த துன்பத்தை யுடனிருந்தனுபவிப்பவரே நட்பினராவர் என்பது.

---

† 'ஆறு' எனப்பின் வருகின்றமையின், அழிவினவை யென்பதன்க ணுள்ள அவை என்னும் சுட்டுப்பெயர்க்குத் தீநெறிகள் என்று பொருள் கூறப்பட்டது.

‡ அழிவினைத்தருமவை என்றும் பாட்முண்டு.

¶ நாலடியார் இரவச்சம், 1. இதன்பொருள். தெளிந்த அறிவினையுடையவர் என்பது. $ நிற்க - இருக்க.

() அறிவினவர் என்பதும் அழிவின் என்பதும் முறையே அறிவு + இன் + அ + வ் + அர் என்றும், அழிவு + இன் என்றும் பிரிடும்; இவற்றுள், இன் என்பன சாரியையாம். இவ்விரண்டும் (ஐ என்னும்) இரண்டனுருபு தொகாதபோது அறிவினையுடையவனென்றும், அழிவினையென்றும் வரும்.

* இனி அழிவினவையென்பதை அழிவின் அவை யென்று பிரிக்காது, அழிவின் நவை யென்று பிரித்துப் பாடங்கூறி, அழிவின் நவை யென்பதற்குப் போராழிவிலும் செல்வ அழிவிலும் வந்த துன்பங்கள் என்றும், அழிவின்கண் என்பதற்கு உடம்பு அழிதலில் என்றும், பொருள் கூறுவாருமுண்டு.

அங்கவியல்—கசு-வது நட்பு.

**867**

7. True friendship is that which turns one from evil ways, directs him in the path of rectitude, and in case of mishap shares his sorrow.

## 24. உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே யிடுக்கண் களைவதா நட்பு.

**பரி:—(இ - ள்.) அவையிடை யாடைதலைந்தவனுக்கு அப்பொழுதே கைசென்றுதவி அவ்விளிவால் களையுமாறுபோல, நட்டவனுக்கு இடுக்கண் வந்துழி அப்பொழுதே சென்றுதவி அதனைக் களைவதே நட்பாவது, (எ-று).**

† *அற்றங்காத்தற்கட்கை தன்மனத்திலு முற்படுதலின்,* ‡ *அவ்விரைவு இடுக்கண் களைவழியும் அதற்கொத்த தொழிலுவமையினும் வருவிக்க.* § *உடையவன் றொழில் நட்பின்மே லேற்றப்பட்டது.*

**தெளி:—(இ-ள்.) நட்பு—நட்பாவது, உடுக்கையிழந்தவன் - (சபையினிடத்து) ஆடை குலைந்தவனுக்கு, கைபோல - (அப்பொழுதே) கைசென்றுதவி அவ்வவமானத்தை நீக்கும்விதம்போல, (சிநேகித்தவனுக்குத் துன்பம் வந்தவிடத்து), ஆங்கே - அப்பொழுதே, (சென்றுதவி), இடுக்கண் - அத் துன்பத்தை, களைவதாம் - ஒழிப்பதே, (எ - று).**

*அவமானத்தைக் காத்தலில் கையானது தன் மனத்திலும் முற்பட்டுச் செல்லுதலால், அவ்விரைவைத் துன்பத்தை நீக்குமிடத்தும் அதற்கு ஒத்த தொழிலுவமானத்திலும் வருவித்துக்கொள்க. நட்பினையுடையவனது தொழிலாய இடுக்கண் களைவதை நட்பின்மேலேற்றி 'இடுக்கண் களைவதா நட்பு' என்று கூறினார்*

(க–து.) சிநேகிதனுக்கு வந்த
துன்பத்தை விரைந்துசென்று
நீக்குபவரே சிநேகிதராவர் என்பது.

---

† அற்றம்-சோர்வு; அஃதாவது மெலிவு. அற்றங்காத்தலாவது சோர்வுவந்தவிடத்து, அது வாராமல் காத்தலாம்.

‡ மனத்தினுமுற்படுதலாகிய விரைவை நட்டவனுக்கு இடுக்கண்களையுமிடத்தும் அவ்விடுக்கணைக்களைதற்கொத்த உடுக்கையிழந்தவனுக்குக் கைசென்றுதவுதலாகிய தொழிலுவமானத்திலும் வருவித்துக்கொள்க. சபையினிடத்து ஆடை குலைந்தவனுக்கு ஆடை குலைந்த அப்பொழுதே கையானது மனத்திலும் முற்பட்டு விரைந்துசென்று குலைந்த ஆடையைக் கட்டுவது போன்று சிநேகிதனுக்குத் துன்பம்நேரிட்ட விடத்து நேரிட்டவப்பொழுதே விரைந்து சென்று உதவி அத்துன்பத்தையொழிக்கவேண்டு மென்பதாம்.

§ பொருளின் (உடையவன்) தொழிலை அப்பொருளின் குணத்தின் மேல் ஏற்றிக்கூறினமையால், இது குணிவினை குணவினையாய வுபசார வழக்காம்.



8. True friendship hastens to the rescue of the afflicted, as readily as the hand of one whose garment is loosened before an assembly.

கூ. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற்
கோட்பின்றி

யொல்லும்வா யூன்று நிலை.

பரி:—(இ - ள்.) நட்பினுக்கு அரசிருக்கை யாதெனின், † அஃது எஞ்ஞான்றுந் திரிபின்றி இயலுமெல்லையெல்லாம் அறம் பொருள்களிற் றளராமைத் தாங்குந் ‡ திண்மை, (எ - று).

ஒருஞான்றும் வேறுபடாது ¶மறுமை யிம்மைகட்கு உறுதியாய அறம் பொருள்களிற் றளர்ந்துழி அத்தளர்ச்சி நீக்கி § அவற்றின்கணிறுத்துதற்கு மேல் ஒரு செயலுமின்மையின், () அதனை o 'நட்பிற்கு வீற்றிருக்கை' என்றார்.

தெளி:—(இ - ள்.) நட்பிற்கு - நட்பினுக்கு, வீற்றிருக்கை - அரசிருக்கை, யாதெனின் - யாதென்ற வினவினால், (அது), கொட்பின்றி - (எந்நாளும்) வேறுபடாமல், ஒல்லும்வாய் - கூடுமிடத்தெல்லாம், ஊன்றுநிலை - (அறம் பொருள்களில் தளராமல்) தாங்குந்திண்மையாம். (எ - று).

ஒருநாளும் வேறுபடாமல் (கூடுமிடத்தெல்லாம்) மறுமை யிம்மைகளுக்கு உறுதியாகிய அறம்பொருள்களில் தளர்ந்தவிடத்து அத்தளர்ச்சியை நீக்கி அவற்றின்கண் நிறுத்துதற்குமேல் ஒரு செயலுமில்லாமையின், அதனை 'நட்பிற்கு வீற்றிருக்கை' என்றார்.

(க - து.) தமது சிநேகிதர் அறம்
பொருள்களையடையுமாறு அவற்றின்கண்
அவரைக்கூடுமிடத்தெல்லாம் தவறுமற் செலுத்து

பவரே சிறந்த சிநேகிதராவர்.

9. It is the highest friendship which possesses the power of directnig one in the practice of virtue and wealth at all times and under all circmustances without deviating.

கo. இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு.

---

† அஃது - அரசிருக்கையானது. ‡ திண்மை - உறுதி.

¶ மறுமைக்குறுதியாயது அறம்;
இம்மைக்குறுதியாயது பொருள் என்று கொள்க.

§ அவற்றின்கண் - மறுமைக்கும் இம்மைக்கும் நன்மையைத் தருவதாய அறம் பொருள்களில்.

() அதனை - அச்செயலை.

o நட்பிற்கு முடிந்தவெல்லை என்றூர் என்றும் பழடமுண்டு.

அங்கவியல்—கள–வது நட்பாராய்தல்.

பரி:—(இ - ள்.) இவரீ நமகீ கித் துணை யன்பினரீ யாமிவரீக் கித்

தன்மையமென்று ஒருவரை யொருவரீ புனைந் து செ
ால்லினும், நட்புப் புல்லிதாமித் தோன்றும், (எ - று).

இவர்க்கென்பது வருவிக்கப்பட்டது. தாம் அவனென்னும் வேற்றுமை யின்றி ‡ வைத்தும் புனைந்துரைப்பின் வேற்றுமையுண்டாமாகலின், நட் புப் புல்லென்னும் என்றார். இவை ஐந்துபாட்டானும் நட்பினதிலக்கணங் கூறப்பட்டது

தெளி:—(இ - ள்.) இவர் எமக்கு - இவர் நமக்கு, இனையர் - இவ்வள வன்பினர், யாம்—, இன்னம் - (இவர்க்கு) இவ்வளவன்பினேம், என்று—,

புனையினும்—(ஒருவரை ஒருவர்) சிறப்பித்துச் சொல்லினும் ,நட்பு—, புல் லென்னும் - புல்லிதாய்த் தோன்றும் (எ - று).

இவர்க்கு என்பது வருவித்துரைக்கப்பட்டது. தாம் அவர் என்னும்

வேற்றுமையில்லாதிருந்தும் சிறப்பித்துச் சொல்லினுல் வேற்றுமை யுண் டாமாகலால், நட்புப்புல்லென்னும் என்றார். இவை ஐந்துபாட்டானும் நட்பி னது இலக்கணம் சொல்லப்பட்டது. புல்லிதாய்த் தோன்றுதல் - அற்பமாக விளங்குதல்.

(க - து.) சிறைகிதர் தம்மூள்

ஒருவரையொருவர் சிறப்பித் துச்சொல்லுவாராயின்,

அவரது சிநேகம் சிறந்த சிநேகமாகாது.

10. Though friends may boast by saying he is so intimate with us & we so intimate with him, yet such friendship will appear mean.

## பதினேழாவது அதிகாரம்.

## நட்பாராய்தல்:—Discerning Friendship.

பரி:—அஃதாவது () மேற்சொல்லிய விலக்கணத்தாரை யாராயீந் தறிந்தே நட்கவேண்டுதலின், * அவரை யாராயுந்திறம். † அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

தெளி:—அஃதாவது முற்கூறிய இலக்கண முடையவரை ஆராய்ந் தறிந்தே சிநேகிக்கவேண்டுதலால், அவரை ஆராயுந்திறம். அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

க. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

‡ வைத்துப் புணர்த்துரைப்பினும் என்றும் பாடமுண்டு.

() மேற்சொல்லிய - நட்பதிகாரத்திற் கூறிய. * அவரை-நட்பினரை.

† நட்பதிகாரத்திற்பின் நட்பாராய்த லதிகாரம் வைத்தமுறைமையும்.



பரி:—(இ - ள்.) நட்பினை விரும்பி அதன்கண்ணே நிற்பார்க்கு ஒருவனோடு நட்புச்செய்தபின் அவனை விடுதலுண்டாகாது; ஆகலான் ஆராயாது நட்புச் செய்தல்போலக் கேடுதருவது பிறிதில்லை, (எ - று).

ஆராய்தல் - † குணஞ்செய்கைகளது நன்மையை யாராய்தல். ‡ கேடு-ஆகுபெயர். நட்கிற்றுமவரென்னும் வேற்றுமையின்மையின் 'வீடில்லை' என்றும், அவ்வேற்றுமை யின்மையான் ‖ அவன்கட்பழிபாவங்கள் தமவா மாகவின், ¶ இருமையுங் கெடுவரென்பது நோக்கி 'நாடாது நட்டலிற்கேடில்லை' என்றுங் கூறினார்.

தெளி:—(இ - ள்.) நட்பாள்பவர்க்கு - நட்பினைவிரும்பி அந்நட்பினிடத்தே நிற்பவர்க்கு, நட்டபின் - (ஒருவனோடு) நட்புச்செய்தபின், வீடு-(அவனை) விடுதல், இல்லை - உண்டாகாது, (ஆகலால்), நாடாது - ஆராயாமல், நட்டலின்-சிநேகஞ்செய்தல்போல, கேடு-கேடுதருவது), இல்லை-(வேறு) இல்லை, (எ - று).

ஆராய்தல் - நற்குணநற்செய்கைகளை ஆராய்தல். கேடு - காரிய வாகு பெயர். சிநேகித்தால் தாம் அவரென்னும் வேற்றுமை யில்லாமையால்

'வீடில்லை' என்றும், அவ்வேற்றுமையில்லாமையால் அவனிடத்துப் பழி

பாவங்கள் தம்முடையனவாமாகலால்
இருமையுங் கெடுவென்பது நோக்கி 'நாடாது நட்டலிற்
கேடில்லை' என்றும் சொல்லினர்.

நட்புச் செய்தபின் நட்டாரை விடுதல்
முடியாமையின், அதனை யாராய்ந்து செய்தல்
வேண்டும்; ஆராயாது செய்தால் அது பெருங்கேடு
தருவதாம்.

1. As those who are friendly disposed will not forsake a friend after once loving him, there is no evil so great as befriending one without enquiry.

உ.

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

பரி:—(இ - ள்.) † குணமுஞ் செயலுகையு நல்லனென்பதும் அல்ல
னென்பதும் பலகா லாராய்ந்தும் பலவாற்ற ஞாயிந்தும் ஒருவனைடு

† குணத்தினது நன்மையையும் செய்கையினது தன்மையையும் விசா

ரித்துணர்தல்.

‡ கேடு தருவதைக் கேடென்றமையின், இதுகாரிய வாகு பெயராம். தருவது - காரணம்; கேடு - காரியம். (கேடுதருவது - (1) உவமானத்தில் நாடாது நட்டல், (2) உவமேயத்தில் பிரிது).

‖ அவன்கட் பழிபாவங்கள்-நிகேதித்தவனிடத் தண்டாகும் இம்மைக் குரிய பழியும் மறுமைக்குரிய பாவமும்.

¶ இருமையும் - இம்மை மறுமையென்னுமிரண்டிலும்.

† நற்குண நற்செய்கைகளால்
மேம்பட்டவனல்லனென்பதும்.

மேம்பட்டவனென்பதும், அவற்றுல்

அங்கவியல்—கள-வது நட்பாராய்தல்.

**871**

**நட்புக்கோள்ளாதவன் முடிவிற் றன் சாதற்கேதுவாய துன்பத்தினைத் தன் மாற்றார் விளக்கவேண்டாமற் றனே () விளக்கும், (எ-று).**

o கடைமுறைக்கண்ணென இறுதிக்கட்டொக்க எழாவது விரிக்க. குணமுஞ் செயலுந்தியாதெனி சொள்ளின், * அவற்கு வரும்பகைமையெல் லாந் தன்மேலவாய்ப் பின் ¶ அவற்று னிறந்துவிடு மென்பதாம். இவை யிரண்டுபோட்டானும் ஆராயாவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (குணமுஞ் செய்கையும்

நல்லனென்பதும் அல்ல னென்பதும்) ஆய்ந்து - (பலகால்) ஆராய்ந்தும், ஆய்ந்து - (பலவழியால்) ஆராய்ந்தும், கேண்மை - (ஒருவனோடு) நட்பை, கொள்ளாதான் - கொள்ளாதவன், கடைமுறை - முடிவில், தான் சாம் - தான் சாதற்கு எதுவா கிய, துயரம்—துன்பத்தை, தரும் - (தனது பகைவர் விளக்கவேண்டாமல் தானே) விளைத்துக்கொள்ளுவான், (எ - று).

கடைமுறை யென்பதனீற்றில் தொக்குநி கடைமுறையில் என்றுகொள்க. நீயகுணமும் நட்புக்கொள்ளின், அவனுக்குவரும் பகை வாகிப் பின் அவற்றால் இறந்துவிடுவனெ லும் நட்பினை ஆராயாதவிடத்துண்டாகும்.

(க - து.) பலகாலாராய்ந்தும் சிநேகங் கொள்ளாதவன் முடிவில் பத்தைத் தன்பகைவர் விளைக்கே கொள்ளுவான் என்பது.

2. The friendship of will in the end grieve one

ஈ. குணனும் குடிமையுங் குற்றமுங் குன்று வினனு மறிந்தியாக்க நட்பு.

பரி:—(இ- ள்.) ஒருவன் குணத்தினையும் குடிப்பிறப்பினையும் குற்றத்தினையும் குறைவற்ற சுற்றத்தினையு மாராய்ந்தறிந்து, அவனோடு நட்புச்செயிக, (எ - று).

குற்றமில்லாதார் உலகத்தின்மையின் உள்ளது பொறுக்கப்படுவதாயின், அவர்நட்பு விடற்பாற் றன்றென்பார் 'குற்றமும்' என்றும், ‡ சுற்றப் பிணிப்புடையார் நட்டாரோடும் பிணிப்புண்டு வருதலிற் 'குன்றுவினனும்'

---

() விளக்கும் - உண்டாக்கிக்கொள்ளுவான்.

o கடைமுறை என்பதனிறுதியில் தொக்குநின்ற கண் என்னும் ஏழனுருபை விரித்துக் கடைமுறைக்கண் என்று கொள்க.

* அவற்கு - தீயவனுக்கு. ¶ அவற்றான் - அப்பகைகளால்.

‡ சுற்றப்பிணிப்புடையார் - சுற்றத்தாருடன் கருத்தொத்திருப்பவர்.



என்றும், விடப்படிற் றங்குறையாமென்பார் 'அறிந்தியாக்க' என்றுங் கூறினர்.

தெளி:—(இ - ள்.) குணனும்-(ஒருவனது) குணத்தினையும், குடிமை யும்—குடிப்பிறப்பினையும், குற்றமும் - குற்றத்தினையும், குன்றுவினனும் - குறைவற்ற சுற்றத்தினையும், அறிந்து - ஆராய்ந்தறிந்து, நட்பு—நட்பினை, யாக்க - (அவனோடு) செய்யக்கடவன், (எ-று).

குற்றமில்லாதவர் உலகத்திலில்லாமையால் உள்ளகுற்றம் பொறுக்கப் படுவதாலும், அவர்நட்பு விடுதற்பான்மையதன்றென்பார் 'குற்றமும்' என்றும்,

சுற்றத்தாரோடு கட்டுண்டிருப்பவர் கட் பினரோடும் கட்டுண்டு வருதலால் 'குன்றுவினை னும்' என்றும், அவர் நட்பு விடப்பட்டால் தமதுகுறை யாமென்பார் 'அறிந்தியாக்க' என்றும் சொல்லினர்.

(க – து.) குணத்தையும் குடிப்பிறப்பையும் குற்றத்தையும் சுற்றத்தையும் ஆராய்ந்தறிந்து பிறரோடு சிநேகித்தல் வேண்டும்.

3. Friendship should be cultivated after ascertaining
one's character, birth, defects and the extent of his relations.



## ச. குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக் கொடுத்துங் கோளல்வேண்டு நட்பு.

பரி:—(இ - ள்.) உயர்ந்த குடியின்கட் பிறந்து தன்மாட்டு உலகர் சொல்லும் பழிக்கு அஞ்சுவானைச் † சில கொடுத்தாயினும் நட்புக்கோடல் சிறந்தது, (எ - று).

குடிப்பிறப்பாற் ருன் ‡ பிழை செய்யாமையும், பழிக்கஞ்சலாற் ¶ பிழைத்தன பொறுத்தலும் பெற்ரும். § இவை யிரண்டு முடையானைப் பெறுதலருமையின், அவன்

நட் பை விலைகொடுத்துங் கொள்க வென்ப தாம்.

தெளி.—(இ - ள்.) குடிப்பிறந்து—உயர்ந்த குடியிற்பிறந்து, தன்கண்-
தன்னிடத்து, பழி - (உலகர் சொல்லும்)பழிக்கு, நாணுவானை-அஞ்சுவானை, கொடுத்தும் - (சில) கொடுத்தாயினும், கட்புக்கொளல் வேண்டும் - நிகேகங் கொள்ளுதல் சிறந்தது, (எ - று).

குடிப்பிறப்பால் தான் பிழை செய்யாமையும், பழிக்கு அஞ்சலால்பிழைத் தன பொறுத்தலும் பெற்றும். இவை யிரண்டுமுடையவனைப்பெறுதல் அருமையாகலால், அவன் நட்பை விலைகொடுத்துங் கொள்கவென்பதாம்.

---

† சில - அவன் விருப்பும் பொருள்களுள் சிலவற்றை.

‡ பிழை - குற்றமுள்ளகாரியங்களை.

¶ பிழைத்தன - பிறர்செய்தகுற்றங்களை.

§ இவை யிரண்டுமுடையானை - பிழைசெய்யாமையும் பிழைத்தன பொறுத்தலுமுடையவனை.

அங்கவியல்—கள—வது நட்பாராய்தல்.

873

(க - து.) உயர்குடியிற் பிறந்து
பழிக்கஞ்சுகின்றவனைப் பொருள் கொடுத்தாயினுஞ்

நேகஞ் செய்தல் வேண்டும் என்பது.

4. The friendship of one of good birth who is afraid of being charged with vicious actions is worth acquiring even by purchasing.

## ரு. அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய வல்லார்நட் பாய்ந்து கோளல்.

பரி:—(இ-ள்.) தாம் உலக வழக்கல்லது செயியக்கருதிற் * சோ கம் பிறக்கும் வகை சொல்லி விலக்கியும் செய்தக்காற் பின்னுந் செய் யாவகை † நெருக்கியும் ‡ அவ்வழக்கதச் செயியாவழிச் செப்பிக்கவும் வல்லாரை ஆராய்ந்து நட்புக்கொள்க, (எ - று).

அழச்சொல்லி இடித்தெனவந்த ¶ பரிகார வினைகளான் அவற்றிற் கேற்ற $ குற்றவினைகள் வருவிக்கப்பட்டன. வழக்கு - உலகத்தார் அடிப் படச்செய்து போந்த செயல். | தம்மொடு நட்டாரும் அறியும்வகை அறி வித்த லரிதாகலின் 'அறியவல்லார்' என்றார். இரண்டாவது இறுதிக்கட் டொக்கது.

தெளி:—(இ-ள்.) அல்லது-(தாம்) உலகநடையல்லாததை, (செய்ய நினைத்தால்), அழச்சொல்லி - சோகம்பிறக்கும் வகைசொல்லி, (விலக்கியும்), (செய்தக்கால்), இடித்து, - (பின்னும் செய்யாவகை) நெருக்கியும், வழக்கு-

அவ்வுலகநடையை, (செய்யாவிடத்து), அறியவல்லார் - செய்விக்கவும்வல்ல வரை, ஆய்ந்து - ஆராய்ந்து, நட்பு - நட்பினை, கொளல் - கொள்ளக்கடவர்,()

அழச்சொல்லி இடித்து என

வந்த பரிகாரத்தொழில்களால் அத்தொழில்களுக்கு எற்ற குற்றத்தொழில்கள் வருவிக்கப்பட்டன. வழக்கு - உலகத்தார் தொன்றுதொட்டுச் செய்துவந்த செயல். உலகவழக்கைத் தம் மோடு சிநேகித்தவரும் அறியும்வகை யறிவித்தல் அரிதாகலால் 'அறிய வல்லார்' என்றார். வல்லார் என்பதனிறுதியில் ஐயென்னும் இரண்டனுருபு தொக்கு நின்றது; அது விரிந்தால் வல்லாரை யென்றும்.

---

* சோகம்-பெருந்துன்பம்; அஃதாவது பிரியமாயதொன்று பிரிந்தகாலத் துண்டாந்துன்பம். † நெருக்கியும் - கண்டித்துப் புத்திசொல்லியும்.

‡ அவ்வழக்கு - உலகவழக்கு.

¶ பரிகாரவினை-பரிகரித்தல்; அஃதாவது நீக்குதல்.

§ குற்றவினைகள் - செய்யக்கருதின், செய்தக்கால் என்பன. செய்யக்கருதின் அழச் சொல்லி, செய்தக்கால் இடித்து என்று கொள்க.

| தாமறிதலேயன்றித் தம்மொடு கட்டாரும் என்றும் பாடமுண்டு.





(க-து.) தீநெறியிற் செல்ல நினைத்தால் அதில் செல்லாவாறு அழச்சொல்லிவிலக்கி நன்னெறியிற் செலுத்தவல்லவரது நட்பை ஆராய்ந்துகொள்ளல் வேண்டும் என்பது.

5. You should considerately secure the friendship of those who can so speak as to make you weep by deterring you from committing unrighteous actions or rebuke you severely after you have done it, and are able to direct you to walk in the path of virtue.



சு. கேட்டினு முண்டோ ருறுதி கீளாஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

பரி:—(இ - ள்.) ஒருவனுக்குத் தீ கேடென்பது தன்னட்டாராகிய புலங்களை எஞ்ஞான மளப்பதோர் கோல்; ஆகலின், அதன் கண்ணும் அவரால் பெறப்படுவதோர் நல்லறி வுண்டு, (எ - று).

தத்த நட்பெல்லைகள் சுருங்கியிருக்கவும்

செல்வக்காலத்துப் * புறத்துத் தோன்றுமற் போந்தார் பின் கேடுவந்துழிச் செயல் வேறுபடுதலின் அக் கேட்டால்அவை வரையறுக்கப்படுமென்பதுபற்றிக் †கேட்டினைக் கோல்ஆக் கியும், ‡ அதனால் ¶ அவரை யளந்தறிந்தால் ஆவாரையே கோடலின் அவ் வறிவை 'உறுதி' என்றுங் கூறினர். § கிளைஞர் - ஆகுபெயர். | இஃதே தேசவுருவகம். இவை நான்கு பாட்டானும் ஆராயுமாறும் ஆராய்ந்தால் கட் கப்படுவார் இவரென்பதூஉங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) (ஒருவனுக்குக் கேடென்பது) கிளைஞரை-(தனது) சிநேகிதராகிய நிலங்களை, நீட்டியளப்பது - குறையாமல் அளப்பதாகிய, ஓர் கோல் - ஒருகோலாம், (ஆகலால்), கேட்டினும் - அக்கேட்டினிடத்தும், ஒருறுதி - (அவரால் பெறப்படுவதாகிய) ஒரு நல்லறிவு, உண்டு—, (எ-று).

தத்தமது சிநேகத்தி னெல்லைகள் சுருங்கியிருக்கவும் செல்வமுள்ள காலத்தில் புறத்துத்தோன்றுமல் வந்தவர் பின் கேடுவந்தவிடத்துச்செயல் வேறுபடுதலின் அக்கேட்டால் அச்சிநேகத்தினெல்லைகள் அளவுசெய்தறியப் படுமென்பதுபற்றிக் கேட்டினைக் கோல் ஆக்கியும், அதனால் அவரை அளந்

---

* புறத்துத்தோன்றுமற் போந்தார் - தத்தமது சிநேகத்தின் எல்லை கள் சுருங்கியிருத்தல் வெளிக்குத்தோன்றுவாறு உடனிருந்து வந்தவர்.

† '(கேடு) நீட்டியளப்பதோர்கோல்'எனக்கேட்டினைக்கோல் ஆக்கியும்.

‡ அதனால் - கேடாகிய கோலினால். ¶ அவரை - கட்டாரை.

§ கிளைஞர் என்னு முதற்பொருளின் பெயர் (கட்டாரென) அதன் பண்பாகிய கட்பினையுணர்த்துதலால் பொருளாகுபெயராம்.

| கேட்டினைக்கோல் என்றுருவகஞ் செய்தவர் அதற்கியையக்கிளை ஞரைப் புல (நில) மென்றுருவகஞ் செய்யாமையின், இக்குறள் ஏகதேச வுருவகவணியாயிற்று.

தறிந்தால் ஆவாரையே கொள்ளுதல்ால் அவ்வறிவை 'உறுதி' என்றும்சொன் னர். கிளைஞர் - பொருளாகுபெயர். இஃது ஏகதேசவுருவகவணி. இவை நான்கு பாட்டாலும் சிநேகத்தினை ஆராயும் விதமும்,ஆராய்ந்தால் சிநேகிக்கப்

படுவார் இவரென்பதும் சொல்லப்பட்டன.

கோல்-அளவுகோல்.

(க-து.) ஒருவனுக்குண்டாகும் கேடு,அவன் தனது சிநேகித ரது தன்மையினை யளவு செய்தறிந்து கொள்ளுமொருகோலாம்.

6. There is some good even in ruin; for it serves as a rod to measure fully the affections of one's relations.

எ. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யோரீ இ விடல்.

பதி:—(இ - ள்.) ஒருவனுக்கிதப் * பேறென்று சொல்லப்படுவது அறிவிலாரோடு நட்புக்கொண்டானுயின் அதனையொழிந்து † அவரி னீங்குதல். (எ-று).

நட்பொழிந்தாலும் நீங்காக்கால் ‡ வெரிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறுபோலத் ¶ நீங்கு வருதலின் 'விடல்' என்றும், நீங்கியவழித் நீங் கொழிதலேயன்றி இருமை யின்பத்திற் குரிமை யெய்தலு முடைமையின் $ அதனை 'ஊதியம்' என்றுங் கூறினர்.

தெளி:—(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, ஊதியமென்பது - பே றென்று சொல்லப்படுவது, பேதையார் - அறிவிலாதவருடன், (நட்புக் கொண்டாலுயின்), கேண்மை - அந்நட்பினை, ஓரீஇ - ஒழிந்து, விடல் - (அவ ரினின்றும்) நீங்குதலாம், (எ - று).

(பேதையாரது) நட்பொழிந்தாலும் அவர் நீங்காதவிடத்து வாசனை வீசு கின்ற சந்தன மாமும் வேங்கை மாமும் வேகும் விதம் போன்று நீங்குவரு தலால் 'விடல்' என்றும், (பேதையாரினின்றும்) நீங்கியவிடத்துத் நீங் கொழிதலேயல்லாமல் இருமை யின்பத்திற்கு உரிமையடைதலுமுடைமை யால் அதனை 'ஊதியம்' என்றும் சொல்லினர்.

(க - து.) அறிவில்லாரது சிநேகத்தை விட்டு அவரினின்றும் நீங்குதலே ஒருவனுக்குப் பேறும் என்பது.

---

* பேறு - இலாபம். † அவரின் - அறிவிலாரிடத்தினின்றும்.

‡ "மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த, இனத்தா லிகழப் படுவர்.

புனத்து, வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே, எறிபுனக் தீப்பட்டக் கால்'' என்று காலடியார் கூறுவதிங்கறியத் தக்கதாம். நீதிவெண்பா ''சந்தனத்தைச் சேர்தருவுந் தக்க மணங்கமழும், சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற அந்தவனம், தானுமச் சந்தனமுந் தன்னினமு மாள்வதன்றித், தானுங் கெடச் சுடுமே தான்'' என்று கூறுகின்றது.

¶ நீங்குவருதலின்-(அறிவிலார் நீங்காமையால்) நீமையுண்டாகுதலால்.
§ அதனை - பேதையாரினின்றும் நீங்குதலை.



7. It is indeed a gain for one to renounce the friend-ship of fools.

ஆ. உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க வல்லற்க வூற்றறுப்பார் நட்பு.

பரி:—(இ - ள்.) தம்மழகிகஞ் சுருங்குதற்குகாரணமாய வினைகளைச் செய்ய நினையாதொழிக; அதுபோலத் தமகிகொந துன்பம் வந்துழிக் கைவிடுவார் நட்பினைக்கொள்ளாதொழிக, (எ - று).

உள்ளஞ் சிறுகுவவாவன: தம்மின் வலியாரோடு *

தொடங்கியன வும் † பயனில்லனவுமாம். ‡ ஆற்றென்பது முதனிலைத் தொழிற்பெயர். ¶ முன்னெல்லாம் வலியாவார்போன்று ஒழிதலின் § 'ஆற்றறுப்பார்' என்றார். | எடுத்துக் காட்டுவமை. ‖ கொள்ளின் அழிந்தேவிடுமென்பதாம்.

தெளி:—(இ - ள்.)உள்ளம் - (தம்) மனவெழுச்சி, சிறுகுவ - சுருங்கு தற்குக் காரணமாகிய தொழில்களை, உள்ளற்க - (செய்ய) நினையாதிருக்கக் கடவர், (அதுபோல), அல்லற்கண் - (தமக்கொரு) துன்பம் வந்தவிடத்து, ஆற்றறுப்பார் - கைவிடுவாரது, நட்பு - சிநேகத்தை, கொள்ளற்க - கொள் ளாதிருக்கக் கடவர், (எ - று).

தம்மனவெழுச்சி சுருங்குதற்குக் காரணமாகிய தொழில்களாவன: தம் மிலும் வலியவரோடு தொடங்கியனவும் பயனில்லாதனவும் ஆம். ஆற்று என்பது முதனிலைத்தொழிற்பெயர். முன்னெல்லாம் வலியாவார்போன் றிருந்து ஒழிதலால் 'ஆற்றறுப்பார்' என்றார். ஆற்றறுத்தல் - வலியறுத்

தல்; அஃதாவது கைவிடுதல். இஃது எடுத்துக்காட்டுவமையணி. (அல்லற்கண் ஆற்றறுப்பாரது நட்பினைக்) கொண்டால் அழிந்தே விடுவெனென்பதாம்.

---

* தொடங்கியனவும் - ஆரம்பித்த போர்த்தொழில்களும்.

† பயனில்லனவும் - பயனில்லாத தொழில்களும்.

‡ ஆற்று என்னும்பகுதி வலியாதல் (தாங்குதல்) என்னுந் தொழிற் பெயர்ப் பொருளதாய் நின்றது. ஆற்றுதல் விகுதிபெற்றதொழிற்பெயர்.

¶ தமக்கு ஒரு துன்பம் வருவதன்முன்னெல்லாம் உறுதியாவார் (தாங்குவார்) போன் றிருந்து துன்பம் வந்தவிடத்து நீங்கிப்போதலால் 'ஆற்றறுப்பார்' என்று கூறப்பட்டது. (ஆற்றறுப்பார் - வலியறுப்பார்; அஃதாவது கைவிடுவார்.)

§ வலியறுப்பார் என்றும் பாடமுண்டு.

| உள்ளஞ் சிறுகுவ உள்ளற்க என்னும் வாக்கியத்திற்கும் அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்புக் கொள்ளற்க என்னும் வாக்கியத்திற்கும் இடையே அதுபோல என்னுஞ்சொல் தொக்குநின்றமையின், இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமையணியாயிற்று.

‖ கொள்ளின் - ஒருவன் தனக்கொரு துன்பம் வந்தவிடத்துக் கைவிடுவாரது சிநேகத்தைக் கொண்டால்.

## அங்கவியல்—கள-வது நட்டார்ராய்தல்.

**877**

(க - து.) துன்பம் வந்தவிடத்துக் கைவிடுவாரது சிநேகத்தைக் கொள்பவர் தவறுது கெடுவர் என்பது.

8. Do not think of doing things that would bring cheerlessness to the mind nor contract friendship with those who would forsake you in adversity.

கூ. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை
யடுங்காலை

யுள்ளினு முள்ளஞ் சுடும்.

பரி:—(இ - ள்.) ஒருவன் கெடுங்காலத்து அவனைவிட்டு நீங்குவார் முன்னவனோடு செய்த நட்பு, தன்னைக் கூற்றடுங்காலத்து * ஒருவன் நினைப்பினும், அந்நினைத்த வுள்ளத்தைச் சுடும், (எ - று).

நினைத்த தனையானே இயைபில்லாத பிறனுக்குங் கூற்றினுங் கொடி தாமெனக் † கைவிடென்னிச்செய்த கட்பின் கொடுமைகூறியவாறு. ‡ இனி அவன்முனே ஆக்கியகேடு தன்னை யடுங்காலை யுள்ளினும் அக்கேட்டினுஞ் சுடுமென்றுரைப்பாரு முளர். இவை மூன்றுபாட்டானும் ஆராய்ந்தால் நட்கப்படாதார் இவரென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கெடுங்காலை - (ஒருவன்) கெடுங்காலத்து, கைவிடுவார் - (அவனைவிட்டு) நீங்குவார், கேண்மை - (முன் அவனோடுசெய்த) நட்பானது, அடுங்காலை - (தன்னை யமன்) கொல்லுங் காலத்து, உள்ளினும் - (ஒருவன்) நினைத்தாலும், உள்ளம் - (அந்நினைத்த) உள்ளத்தை, சுடும் - வருத்தும், (எ - று).

நினைத்த வளவாலே சிநேக சம்பந்தமில்லாத பிறனுக்கும் யமனிலும் கொடிதாமென்று (கெடுங்காலைக்) கைவிடுதலெண்ணிச்செய்த நட்பின் கொடுமையைச் சொல்லியவாறும். இவை மூன்றுபாட்டாலும் ஆராய்ந்தால் சிநேகிக்கப்படாதவர் இவரென்பது சொல்லப்பட்டது.

(க - து.) ஒருவன் கெடுங்காலத்து அவனைவிட்டு நீங்குவாரது சிநேகிதத்தைப் பிறன் மரணகாலத்தில் நினைத்தாலும், அஃதவனது மனத்தை வருத்தும் எனபது.

9. The very thought of the friendship of those who deserted one at the time of adversity will burn one's mind even at death time.

---

* ஒருவன் - அயலா னொருவன். †

கைவிடு-நீங்குதல்.

‡ இனி இக்குறளுக்கு (கெடுங்காலைக் கைவிடுவார்கேண்மை-ஒருவன் கெடுங்காலத்து அவனைவிட்டு நீங்குவார் முன்னவனெடு செய்த நட்பு) (அந்நட்பினையுடைய) அவன்தானே (கெடுங்காலைக்கைவிடுவார்) செய்த கேட்டினை, (பதவுரை:-) அடுங்காலை-தன்னை (யமன்) வருத்துங்காலத்து, உள்ளினும்-நினைத்தாலும், (உள்ளம்-அந்நினைத்தவுள்ளத்தை), சுடும்-அக்கேட்டினும் வருத்தம் என்று பொருள் கூறுவாருமுண்டு. கேண்மை சுடும் என்றி கொள்க.

## கo. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து மொருவுக வொப்பிலார் நட்பு.

பி:—(இ - ள்.) * உலகோடொத்துக் குற்றமற்றார் நட்பினையே பயில்க, உலகோடொத்தலில்லார் நட்பினை அறியாது கொண்டாராயின், அவர் வேண்டியதொன்றனைக்கொடுத்தாயினும் விடுக, (எ - று).

உலகோடொத்தார் நட்பு இருமை யின்பமும் பயத்தலின் 'மருவுக' என்

றும், † அதனோடு மாறுயினர் நட்புத் துன்பமே பயத்தலின், ‡ 'ஒன்றீத்து மொருவுக' என்றுங் கூறினர். இதனால் ¶ அவ்விருமையுந்தொகுத்

துக் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) மாசற்றார் - (உலகத்தோடொத்துக்) குற்றமற்றவாது, கேண்மை - நட்பினையே, மருவுக - பழகக்கடவர், ஒப்பிலார் - (உலகத்தோடு) ஒத்தலில்லாதவாது, நட்பு - நட்பினை, (அறியாது கொண்டாராயின்), ஒன்று (அவர் வேண்டியதாகிய)ஒன்றனை, ஈத்தும்-கொடுத்தாயினும், ஒருவுக - விடக்கடவர், (எ - று).

உலகத்தோடொத்துக் குற்றமற்றவாது நட்பு (இம்மை மறுமை யென்

னும்) இருமை யின்பமும் தருதலால், அதனை 'மருவுக' என்றும், அதனோடு மாறுயினவர் நட்புத் துன்பமே தருதலால் அதனை 'ஒன்றீத்து மொருவுக' என்றும் சொல்லினர். இதனால் அவ்விருமையும் தொகுத்துச் சொல்லப்

பட்டன.

(க-து.) குற்றமற்றவரது சிநேகத்தைக்கொள்ளல்வேண்டும்; மற்றவரது சிநேகத்தைப் பொருள்கொடுத்தாயினும் விடல்வேண்டும் என்பது.

10. Continue to enjoy the friendsdip of the pure; but renounce even with a gift the friendship of those who do not act agreeably to the ways of the world.

* உலகோடொத்து - உயர்ந்தாரது ஒழுக்கத்திற்கு மாறுபடாது.

†

அதனோடு - உலகோடு (உயர்ந்தாரது ஒழுக்கத்தோடு).

‡ அதனெழிலை விலைகொடுத்துங் கொள்க என்றும் பாடமுண்டு. அதனெழிலை - உலகத்தோடு விரோதப்பட்டிருப்பவரது சிநேகத்தின் ஒழிலை.

¶ அவ்விருமையும் - சிநேகிக்கப்படுவார் மாசற்றூர் என்பதும் சிநேகிக்கப்படாதார் ஒப்பிலார் என்பதும். இவ்வதிகாரத்தின் நான்காவது குறளில் நல்லவர்களது நட்பைக் 'கொடுத்துங் கொளல் வேண்டும்' என்று கூறினவர் இங்குக் கெட்டவர்களது நட்பை 'ஒன்றீத்தொருவுக' என்றார்.

## பதினெட்டாவது அதிகாரம்.

## பழைமை—Long standing friendship.

பரி:—அஃதாவது நட்டாரது பழையாந்தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல். * காணப்பெயர் காரியத்திற் காயிற்று. ஆராய்ந்து நட்கப்பட்டாரேனும் பொறுக்கப்படுவ தற்றழடைய ராகலானும் † ஊழ்வகையானும் நட்டாரீமாட்டுப் பிழையுளதாமென்பது அறிவித்தற்து. இது நட்பாராயிதலின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது நட்பினாது பழையராந்தன்மைபற்றி அவர் பிழைத்

தன பொறுத்தல். பழைமை யென்னுங் காரணப்பெயர் அப்பழைமைபற்றிச் செய்யும் பிழைத்தனவற்றைப் பொறுத்தலாகிய காரியத்திற்காயிற்று. ஆராய்ந்து சிநேகிக்கப்பட்டாயினும் பொறுக்கப்படுங் குற்றமுடையராகலாலும் ஊழ்வகையாலும் சிநேகிதரிடத்துப் பிழையுளதா மென்பது அறிவித்தற்கு, இது (பழைமை) நட்பாராய்தலின்பின் வைக்கப்பட்டது.

க. பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்

கிழமையைக் ‡ கீழ்ந்திடா நட்பு.

பரி:—(இ - ள்.) பழைமையென்று சொல்லப்படுவ தியாதென்று வினவின், ¶அது பழைமையோர் உரிமையாற்செயீவனவற்றைச்சிறிதுஞ் | சிதையாது ‖ அவற்றிற் தடம்படும் நட்பு, (எ-று).

§ கிழமை-ஆகுபெயர்; கெழுதகைமையெனவருவனவுமது. உரிமையாற் செய்வனவாவன: கருமமாயின செய்யுங்காற் கேளாது செய்தல், கெடும் வகை செய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், () பணிவச்சங்களின்

---

* பழைமையென்னும் காரணப்பெயர் அதன் காரியமாகிய பிழைத்தன பொறுத்தலேயுணர்த்துதலால் காரணவாகு பெயராம்.

† ஊழ்வினையானும் - விதிவசத்தாலும்.

‡ கீழ்ந்திடுதல்-சிதைத்தல்; கீழ்ந்திடாமை-சிதையாமை.

¶ அது - பழைமை. | சிதையாது - விலக்காமல்.

‖ அவற்றிற் குடம்படும்-பழமையோர்

உரிமையால் செய்யுங் காரி

யங்களுக்குச் சம்மதிக்கும்.

§ கிழமை யென்னும் காரணப்பெயர் அதனாற் செய்யும் காரியங்களை யுணர்த்துதலால் காரணவாகுபெயராம்; பின்னுள்ள குறள்களில் கெழுதகைமை (உரிமை) யென்று வருவனவும் இவ்வாறே காரணவாகு பெயர்களென்று தொள்க. கிழமை-உரிமை.

() பணிவு, வணக்கம். அச்சம்-பயம்.



மை யென்றிவை * முதலாயின. சிதைத்தல்-விலக்கல். இதனாற் பழமை யாவது காலஞ்சென்றதன்று; இப்பெற்றித்தாய நட்பென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்). பழமை யெனப்படுவது - பழமை யென்று சொல்லப்படுவது, யாதெனின் - யாதென்றுவினவின், (அது), கிழமையை-(பழமையோர்) உரிமையாற்செய்யுங்காரியங்களை, யாதும் - சிறிதாயினும், கீழ்ந்திடா நட்பு-சிதையாது (அக்காரியங்களுக்கு உடன்படுவதாகிய) நட்பு, (எ - று).

கிழமை - கருவியாகுபெயர்; பின் கெழுதகைமையென வருவன வுமது. உரிமையாற்செய்வனவாவன: கருமங்களைச் செய்யும்போது கேளாது செய்தல், கெடும்வகை செய்தல், தமக்கு வேண்டியவற்றைத் தாமே கொள் ளுதல், பணிவச்சங்கக்க ளில்லாமை யென்றிவை முதலாயின. சிதைத்தல்- விலக்குதல். இதனால் பழைமையாவது காலஞ்சென்றதன்று; இத்தன்மைய தாய நட்பென்பது சொல்லப்பட்டது.

(க-து.) பழைமையோர் உரிமையாற் செய்வனவற்றைச் சிறி தும் விலக்காம லவற்றிற் குடன்படும் நட்பே பழைமையாம்.

1. Intimate friendship is that which cannot be injured in the least by actions done through the right of long standing intimacy.

## உ. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற் குப்பாதல் சான்றோர் கடன்.

பரி:—(இ-ள்.) நட்பிற்கு அவயவமாவன நட்டார் உரிமையாற் செய் வன; அதனால் அவ்வுரிமைக்கு இனியாதல் அமைந்தார்க்கு முறைமை.

† வேறன்மை தோன்ற 'உறுப்பு' என்றார். ‡

உறுப்பென்பது ஈண்

---

* முதலாயின என்றமையின், அரசனுக்குச் சமமாகத் தம்மை நினை த்து அதற்கேற்ற கோலத்தோடு வருதல், முறை பாராட்டி யிழித்துக்கூறல் முதலியவற்றையுங் கொள்க.

† நட்பிற்கு நட்டார் உரிமையாற்செய்வன வேறன்மை (வேறுபட்டி ராமை) தோன்ற (நட்பென்னும் முதலுக்குச் சினேகிதர் உரிமையாற் செய் வனவற்றை) 'உறுப்பு' என்று கூறினர். முதலு (பொருளுக்)குச்சினை (அவ யவம்) வேறுபட்டிராமை போன்று நட்பிற்குச் சினேகிதர் உரிமையாற் செய் வன வேறுபடாதிருக்கின்றன வென்பதாம்.

‡ பொருளினிடத்து உறுப்பும், குணமும், தொழிலும், ஜாதியும் இருப் பதன்றிக் குணத்தினிடத்து உறுப்பிருத்தல் கூடாமையால், நட்பென்னுங் குணத்திற்கு 'உறுப்பென்பது ஈண்டிலக்கணை யடியாகவந்த குறிப்புச் சொல்' லென்று கூறப்பட்டது. இங்கு உறுப்பில்லாத குணம் உறுப்புடையதாகக் கூறப்பட்டவாறறிக.

## அங்கவியல்—கழ-வது பழைமை.

## 881

* டிலக்கணையடியாக வந்த † குறிப்புச்சொல். ‡ அவயவமாத லறிந்தே இனி யவாவவென்பது தோன்றச் சான்றோர்மேல் வைத்தார்.

தெளி:—(இ - ள்.) நட்பிற்கு—, உறுப்பு - அவயவமாவன, கெழுதகை மை = (நட்பினர்) உரிமையாற் செய்வனவாம், (அதனால்), அதற்கு - அவ் வுரிமைக்கு, உப்பாதல் - இனிமையராதல், சான்றோர் - நிறைந்தோர்க்கு,

கடன் - முறைமை, (எ - று).

மற்று - அசை. (நட்பிற்குக் கெழுதகைமை) வேறாகாமைதோன்ற 'உறுப்பு' என்றார். உறுப்பென்பது இங்கு இலக்கணையடியாக வந்த குறிப்புச்சொல். (நட்பிற்குக் கெழுதகைமை) அவயவமாதலறிந்தே இனியவராவ ரென்பது தோன்றச் சான்றோர்மேல் வைத்துச் 'சான்றோர் கடன்' என்றார். சான்றோர் - பலகுணங்களாலும் நிறைந்தவர்.

(க - து.) சிநேகிதருரிமையாற் செய்வன நட்பிற்கு அவயவமாதலின், அவற்றையினிமையாகக்கொள்வதே சான்றோர்கடனாம்.

2. The essentials of friendship are acts done by the right of intimacy; to appreciate such a right is the duty of the wise.

௩. பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

பரி:—(இ - ள்.) தா முடம்படாதனவேனும் நட்டார் உரிமையாற்
செய்தனவற்றிற்குத் தாஞ்செய்தாற்போல உடம்படாராயின், அவரோடு பழையதாய்வந்த நட்பு என்ன பயனைச் செய்யும், (எ - று).

செய்தாற்போல வுடம்படுதலாவது தாமும்அவரிடத்துரிமையா னுடம் படுதல். இவை யிரண்டுபோட்டானும் பழமையான் வரும் உரிமையது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கெழுதகைமை - (தாம் உடன்படாதனவாயினும் நட்பினர்) உரிமையாற் செய்த காரியங்களுக்கு, செய்தாங்கு — (தாம்) செய் தாற்போல, அமையாக்கடை-உடன்படாராயின், பழகிய-(அவரோடு)பழைய தாய் வந்த, நட்பு - சிநேகம், எவன் செய்யும்-என்னபயனைச் செய்யும்,(எ-று).

(நட்பினர் தாமுடன்படாத காரியங்களை யுரிமையாற் செய்தவிடத்துத் தாம்) செய்தாற் போன்று உடன்படுதலாவது தாமும் அவரிடத்து உரிமை

---

* இலக்கணையாவது ஒருபொருளினிலக்கணத்தை மற்றொரு பொருட் குத் தந்துரைப்பது. [இங்கு முதலுக்குள்ள உறுப்பைக் குணத்திற்குத் தந்துரைத்தவாறறிக.]

† குறிப்புச்சொல் - செம்பொருளும் ஆகுபெயர்ப்பொருளு மல்லாத பொருளையுணர்த்துஞ்சொல்.

‡ சிநேகிதர் உரிமையாற் செய்வன நட்பிற்கு அவயவமாதலறிந்தே சான்றோர் அவ்வுரிமைக்கு இனியவாவனென்பதாம்.

யால் உடன்படுதல். இவை இரண்டுபாட்டாலும் பழமையால்வரும் உரிமையது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.)

கிழமைதருரிமையாற் செய்தகாரியங்களுக்கு உடன்படாதவரது நட்புப் பயனற்றதாம் என்பது.

3. Of what avail is longstanding friendship, if friends do not admit as their own, the actions done by the right of intimacy.

---

சு. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

பரி:—(இ-ள்.) தங்கருமத்தை நட்டார் உரிமையாற் கேளாது செய்தாராயின், அச்செயலது விழையப்படுந் தன்மைபற்றி அதனை விரும்புவரீ அறிவுடையாரீ, (எ - று).

ஒருவர்க்குத் தங்கருமம் தாமறியாமன்

முடிந்திருத்தலினூஉங்கு நன்மை

யின்மையின், அச்செயல் வினழயத்தக்கதாயிற்று. அதனை † அவ்வாறறிந்து

விரும்புதல் அறிவுடையார்க்கல்ல தின்மையின், அவர்மேல் வைத்துக்கூறி

னர். ‡ வேண்டியிருப்ப ரென்பது எழுந்திருப்பரென்பது போல ஒருசொன்

னீர்மைத்து. இதனற்கேளாது செய்தழி அதனை விரும்புகவென்பது கூறப் பட்டது.

தெளி:—(இ - ள்) கட்டார் - நட்பினர், கெழுதகையால் - உரிமையால்,

கேளாது-கேளாமல், .செயின் - (தமதுகருமத்தைச்) செய்தாராயின், விழை தகையான் - (அச்செயலது) விரும்பப்படுந் தன்மைபற்றி, (அறிவுடை யார்), வேண்டியிருப்பர் - (அச்செயலை) விரும்புவர், (எ - று).

ஒருவர்க்குத் தங்கருமம் தாம் அறியாமல் முடிந்திருத்தலைக் காட்டிலும் நன்மையில்லாமையால், அச்செயல் விரும்பத்தக்கதாயிற்று. அச்செயலை அவ் வாறறிந்து விரும்புதல் அறிவுடையார்க் கல்லது (மற்றவர்க்கு) இல்லாமை யால், அவ்வறிவுடையார் மேல்வைத்து 'வேண்டியிருப்பர்' என்று சொல்லி

னர். வேண்டியிருப்பர் என்பது எழுந்திருப்பர் என்பதுபோல ஒரு சொற் றன்மையது. இதனால் (நட்பினர் தங்கருமத்தைக்) கேளாது செய்தவிடத்து அதனை விரும்புகவென்பது சொல்லப்பட்டது.

(க - து.) சிநேகிதருரிமையாற் றம்மைக்கேளாது செய்தகாரி யத்தை அறிவுடையார் விரும்பி யேற்றுக்கொள்ளுவர் என்பது.

---

† அவ்வாறறிந்து - விழையத்தக்கதாகவறிந்து.

‡ எழுந்திருப்பர் என்பது எழுவார் என்று பொருள்பட்டு ஒரு சொல் லின் தன்மையதாய் நின்றுற்போன்று வேண்டியிருப்பர் என்பது வேண்டு வார் என்று பொருள்பட்டு ஒருசொல்லின் தன்மையதாய் நின்றதென்க.

அங்கவியல்—கடவுள்வது பழைமை.

**883**

4. If by the right of friendship friends do anything without being asked the wise will be pleased with them on account of its desirability.

ரு.

பேதைமை யொன்றே பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

பரி:—(இ - ள்.) தாம் வெறுக்கத்தக்கனவற்றை நட்டார் செய்தா ராயின், அதற்குக் காரணம் * ஒன்றிற் பேதைமை யென்றுதல் †ஒன்றின் மிக்கவுரிமை யென்றுதல் கொள்க, (எ - று).

§ ஒன்ரே என்பது எண்ணிடைச்சொல். ‡ 'செயின்' எனவே ¶தம்மியல்பாற்செய்யாமைபெற்ரும். o இது வருகின்றவற்றுள்ளுமொக்கும். () இழ ஆழான் வரும்பேதைமை யாவர்க்கு முண்மையிற் றமக் | கேதங்கொண்டா ரென்ரு தல் ‖ ஊழ்வகையான் எம்மின்வரற்பாலது ஒற்றுமை மிகுதிபற்றி ††அவரின் வந்ததென்ரு தல் கொள்வதல்லது ‡‡அன்பின்மையென்று கொள்ளப்படாதென்பதாம். கெடும்வகை செய்யின் ¶¶ அதற்குக் காரணம் இதனுற் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) நோதக்க - (தாம்) வெறுக்கத்தக்க செயல்களை, நட்டார் - நேகிதர், செயின் - செய்தாராஞல், (அதற்குக்காரணம்), பேதைமையொன்ரே - (ஒன்றில்) அறியாமை யென்ருவது, பெருங்கிழமை (ஒன்ரே)—(ஒன்றில்) மிக்க உரிமையென்ருவது, என்றுணர்க - என்று கொள்ளக்கடவர், (எ- று).

ஒன்ரே என்பது எண்ணுப்பொருளில்வந்த இடைச்சொல். 'செயின்' எனவே, தம்மியல்பினுல் செய்யாமை பெற்ரும். இது வருகின்ற குறள்க

---

* ஒன்றில் - ஒருபட்சத்தில். † ஒன்றில்—மற்ரொருபட்சத்தில்.

§ இவ்விடைச்சொல் பெருங்கிழமையென்பதனோடு மியைந்து நின்றது.

‡ 'செயின்' எனவே - தாம் வெறுக்கத்தக்கனவற்றைச் சிநேகிதர்செய்தாராயின் என்று சொல்லவே.

¶ தம்மியல்பால் - சிநேகிதர் தமது சுபாவத்தினால்.

o இது-தம்மியல்பாற் செய்யாமை.

() இழவூழ் - கைப்பொருளிழத்தற்குக் காரணமாகியவூழ் (விதி).

| ஏதங்கொண்டார் - தீங்கு செய்தார்.

‖ ஊழ்வகையான் - விதிவசத்தால். உரிமைவகையான் என்றும் பாடமுண்டு. †† அவரின் - சிநேகிதரால்.

‡‡ அன்பின்மையான் வந்ததென்று என்றும் பாடமுண்டு.

¶¶ அதற்குக் காரணம்-கெடும்வகை செய்தற்குக்காரணம். அது பேதைமை அல்லது பெருங்கிழமையாம்.



னுள்ளும் ஒக்கும். இழவூழால்வரும் பேதைமை யாவர்க்குமிருத்தலால் தமக்கு ஏதங்கொண்டாரென்றுவது ஊழ்வகையால் எம்மால் வரக்கடவது ஒற்றுமை மிகுதிபற்றி அவரால் வந்ததென்றுவது கொள்வதல்லாமல் அன்பில்லாமை யென்று கொள்ளப்படாதென்பதாம். நட்டார் கெடும்வகை செய்தால், அதற்குக் காரணம் இதனுல் சொல்லப்பட்டது.

(க - து.) சிநேகிதர் வெறுக்கத்தக்க செயல்களைச் செய்தாராயின், அவை அவரது அறிவின்மையால் அல்லது உரிமையால் நேர்ந்தனவாமென்று அறிவுடையார் கொள்ளுவர் என்பது.

5. If friends should perform undesirable actions, understand that they are not only due to ignorance but also to the strong claims of intimacy.



சு.

எல்லைக்க ணின்ற்ரூர் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்க ணின்ற்ரூர் தொடர்பு.

பரி:—(இ - ள்.) நட்பு வரம் பிகவாவது அதன் கண்ணே நின்றவர் தம்மொடு பழைமையிற் றிரியாது நின்றாது நட்பினை †அவராற்றெலைவு வந்தவிடத்தும் விடார், (எ - று).

பழைமையிற் றிரியாமை - உரிமை யொழியாமை. தொலைவு - ‡ பொ

ருட்கேடும் போர்க்கேடும்.

தெளி:—(இ - ள்.) எல்லைக்கணின்ற்ரூர் - (நட்பின் வரம்பு கடவாது) அந்நட்பின் வரம்பிலே நின்றவர், தொல்லைக்கணின்ற்ரூர் - (தம்மோடு) பழைமையில் வேறுபடாது நின்றவராது, தொடர்பு-நட்பினை, தொலைவிடத்தும்-(அவரால்) தொலைவு வந்தவிடத்தும், துறவார் - விடார், (எ - று).

பழைமையில் வேறுபடாமை - உரிமை

யொழியாமை. தொலைவு -

பொருட்கேடும் போர்க்கேடும்.

(க-து.) நட்பின் வரம்பிலே நின்றவர் தமதுநட்பினரால் கேடு நேர்ந்தவிடத்தும் அவரது நட்பினை விடார் என்பது.

6. Those who are within the bounds

of friendship

will not even when their friends cause them ruin give up

their long standing intimacy.

எ. அழிவந்த செய்யினு மன்பரு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

பரி:—(இ - ள்.) நட்டார் தமகீ *

கழிவுவந்தவற்றைச் செயிதா

ராயினும் அவர்மாட் டன்பொழியார்; அன்புடனே

பழையதாயிவந்த

நட்பினையுடையார், (எ - று).

† அவரால் - தொல்லுலக்க ணின்ரு ரால்.

‡ பொருட்கேடு—உள்ளபொருள் தொலைதல்; போர்க்கேடு - போரில் தோல்வியடைதல்.

* அழிவுவந்தவற்றை - அழிவு தரத்தக்க செயல்களை.

அங்கவியல்—கழ-வது பழைமை.

* அழியென்பது முதனிலைத்தொழிற்பெயர், அழிவு - மேற்சொல்லியகேடுகள். இவை யிரண்டு பாட்டாலுங் கேடுசெய்தக்கண்ணும் நட்பு விடற்பாற்றன்றென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) அன்பின் - அன்புடனே, வழிவந்த - பழையதாய் வந்த, கேண்மையவர் - நட்பினையுடையவர், (நட்பினர்), அழிவந்த - (தம க்கு) அழிவுவந்த செயல்களை, செய்யினும் - செய்தாலாலும், அன்பறூர்- (அந்நட்பினரிடத்து) அன்புநீங்கார், (எ - று).

அழியென்பது முதனிலைத்தொழிற் பெயர். அழிவு - முற்கூறிய பொருட்கேடும் போர்க்கேடும். இவை இரண்டுபோட்டாலும் நட்பினர் கேடுசெய்த

விடத்தும் அவரது நட்பு விடுதற்பான்மையதன்றென்பதுசொல்லப்பட்டது.

(க - து.) பழைமையாய்வந்த நட்பினையுடையவர் தமது நட்பினர் தமக்குக் கெடுதி செய்தாலும் அவரிடத்து அன்பு நீங்கார்.

7. Those who have long been affectionate will not

give up their affection even should their friends cause them

their ruin.

அ. கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு

நாளிழுக்க நட்டார் செயின்.

பரி:—(இ - ள்.) நட்டார்செய்த பிழையைத் தாமாகவே யன்றிப் பிறர் சொன்னாலுங் † கொள்ளாத உரிமையறிய வல்லார்க்கு அவர் பிழை செய்வாராயின், ‡ அது பயன்பட்ட நாளாம், (எ - று).

பிழையாவன: சொல்லாது ¶ நற்பொருள் வெளவல், பணியாமை, அஞ்சாமை ○ முதலாயின. கேட்டல். () உட்கோடல். கெழுதகைமைவல்லாரென்பது ஒருபெயராய்க் கேளாதவென்னு மெச்சத்திற்கு | முடிபாயிற்று. செய்து போந்துழியல்லது || அவ்வுரிமை வெளிப்படாமையின், ††செய்யாதன நாளல்லவாயின. இதனாற் பிழைபொறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது.

---

* அழி என்னும் பகுதி அழிவு என்னுந் தொழிற்பெயர்ப் பொருளை யுணர்த்தி நின்றமையின், முதனிலை (பகுதி)த் தொழிற்பெயராயிற்று.

† கொள்ளாத - அங்கீகரியாத. ‡ அது - பிழை (தவறு) செய்தநாள்.

¶ நற்பொருள்வெளவல் - சிறந்தபொருள்களைத் தமக்குரியதாகக் கொள்ளுதல்.

○ முதலாயின என்றமையின், மேற்கொண்ட காரியத்தைக் கெடும் வகைசெய்தல், கேளாமலே யாதேனுமொரு காரியத்தைத் தொடங்கிச் செய்தல் முதலியவற்றையுங் கொள்க.

() உட்கோடல் - மனத்திற்கொள்ளுதல்.

| முடிபாயிற்று - முடிக்குஞ்சொல்லாயிற்று.

|| அவ்வன்மை யென்றும் பாடமுண்டு. அது கெழுதகைமை (உரிமை)யின்வல்லமை. ††செய்யாதன-சிநேகிதர் தவறுசெய்யாத நாள்கள்.

தெளி:—(இ - ள்.) கேள் - நட்பினர், (செய்த), இழுக்கம் - பிழையை, கேளா - (தாமாகவேயல்லாமல் பிறர்சொன்னலும்) கொள்ளாத, கெழுதகைமைவல்லார்க்கு - உரிமையையறிய வல்லவர்க்கு, நட்டார்-அந்நட்பினர், இழுக்கம் - பிழையை, செயின் - செய்வாராஞல், (அது), நாள் - (பயன்பட்ட) நாளாம், (எ - று).

பிழையாவன: சொல்லாமல் நற்பொருள் வெளவல்,பணியாமை, அஞ்சாமை முதலாயின. கேட்டல் - உட்கொள்ளுதல். கேளா என்னும் ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம் கெழுதகைமை வல்லார் என்னும் பெயரைக் கொண்டு முடிந்தது. கெழுதகைமைவல்லார் என்பது தொடர்மொழியாய் நில்லாது இங்கு ஒருமொழியாய் நின்றது. நட்பினர் பிழை செய்தவிடத்தல்லாமல் அவ்வுரிமை வெளிப்படாமையால், செய்யாத நாள்கள் நாளல்லவாயின. இதனல் பிழைபொறுத்தற் சிறப்புச் சொல்லப்பட்டது.

(க – து.) நட்பினர்செய்த பிழையைக் கவனியாதவர்க்கு அவர் பிழைசெய்தநாள் பயன்பட்ட நாளாம் என்பது.

8. To those who can understand that they should not listen to tales about the faults of their friends, that is a profitable day on which the latter may commit a fault.



கூ. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு.

பரி:—(இ - ள்.) உரிமையறாது பழையதாய்வந்த நட்பினையுடையாரது நட்பினை ¶ அவர் பிழைநோக்கி விடுதல் செய்யாதாரை உலகம் நட்புக்குறித்து விரும்பும், (எ-று).

* கெடாஅதென்பத னிறுதிநிலை விகாரத்தாற்
றொக்கது. † 'விடாஅர்'
எனவே, ‡ விழைதற்காரணங் கூறப்பட்டது. நம்மாட்டும் இவரித்தன்மையராவரென்று யாவருந் தாமேவந்து நட்பாவரென்பதாம். o கெடாரென்று பாடமோதி, நட்புத்தன்மையிற் கெடாராகி
யென்றுரைப்பாருமுளர்.

தெளி:—(இ - ள்.) கெடாஅ-(உரிமை) கெடாது, வழிவந்த - பழையதாய்வந்த, கேண்மையார் - நட்பினையுடையவரது, கேண்மை - நட்பினை, விடாஅர்-(அவர்பிழைநோக்கி) விடுதல்செய்யாதவரை, உலகு—உலகமானது, விழையும் - (நட்புக்குறித்து) விரும்பும், (எ-று).

---

¶ அவர்பிழை நோக்கி - நட்பினையுடையார் செய்த பிழையைக்கருதி.

* கெடாஅது என்பது எதிர்மறை வினையெச்சம்.

† விடாதாரை என்றும் பாடமுண்டு.

‡ விடுதற்காரணம் என்றும் பாடமுண்டு. அது சிநேகிதர்செய்யும்பிழையை நோக்குதல்.

o கெடாஅ என்பதைக் கெடார் என்று பாடங்கூறி, அதற்குச் சிநேகத்தன்மையிற் கெடாதவராகி யென்று பொருள் கூறுவாரு முண்டென்பது.

அங்கவியல்—கஅ-வது பழைமை.

887

கெடாஅது என்பதன் துவ்விகுதி செய்யுள் விகாரத்தால்

தொக்குநின் றது. 'விடாஅர்' எனவே, (உலகம் அவரை) விரும்புதற்குக் காரணம் சொல் லப்பட்டது. நம்மிடத்தும் இவர் இத்தன்மையராவாரென்று யாவரும் தாமே வந்து நட்பாவரென்பதாம்.

(க – து.) உரிமை கெடாது தொன்று தொட்டு வந்த நட்பினை அது நட்பினை விடாதவரை

9. They will be bef
forsaken the friendship c
up an unbroken long sta

கo விழையார் வி
பண்பிற் றலைப்

பரி:—(இ - ள்.) பழைய
மாட்டுத் தம் பண்பினீங்காதா
தம் பண்பாவது செய்யாத
னுருவுஞ் சிறப்புமெய்யும் விகா
க்கிப் பகைவரும் நட்டாராவரெ
மையறிவார் எய்தும் பயன் கூ

தெளி:—(இ - ள்.) பழை
ராயினும்) அந்நட்பினரிடத்து,
ன்றும் நீங்காதவர், விழையார்
படுவர், (எ - று).

தம்பண்பாவது பிழைசெ
டையவராதல் (விழையாரா லுப
மையும் விகாரத்தாற்றொக்குநி
வரும் நட்பினராவரென்பதாம்
யறிவார் அடையும் பயன்சொல்

(க - து) தொன்று
யைப் பொறுப்பவரை அவ

10. Even enemies
changed their affection f

---

† அவர்மாட்டு - பழைய

‡ விழையார் என்பதனிற
என்னும் இழிவுசிறப்பும்மையும் செய்யுள் விகாரத்தால்
[illegible]

¶ அத்திரிபின்மை - பிழைசெய்தபோதுங் குணம்
வேறுபடாமை.

## பத்தொன்பதாவது அதிகாரம்.

## தீநட்பு:—Evil Friendship.

பரி:—இனிப் பொறுக்கப்படாத குற்றமுடைமையின் விடற்பால தாய நட்பு நட்பாராயீதற்கட் சுருங்கச்சொல்லிய துணையான் அடங்காமையின், * அதனை † யிருவகைப்படுத்து இரண்டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதலிற்கட் டீநட்புங்கூறுகின்றார். ‡ அஃதாவது தீக்குணத்தாரோடு உளதாய நட்பு. ¶ குணத்தின்றீமை ஒற்றுமைபற்றியுனடயாய் மேற்றாய், அது பின் அவரோடு செய்த நட்பின் மேற்றாயிற்று. ○ அதிகார முறைமை கூறுமையே விளங்கும்.

தெளி:—இனிப் பொறுக்கப்படாத குற்றமுடைமையால்விடத்தக்கதாகிய நட்பு நட்பாராய்த லதிகாரத்தில் சுருங்கச்சொல்லியவளவால் அடங்காமையால், அந்நட்பினை இருவகைப்படுத்தி இரண்டதிகாரத்தால் சொல்லத் தொடங்கி, முன்னர்த் தீநட்புச் சொல்லுகிறார். அஃதாவது தீக்குணத்தாரோடு உண்டாகிய நட்பாம். குணத்தினது தீமை ஒற்றுமைபற்றி அக்குணமுடையவர் மேலதாய், அது பின் அக்குண முடையாரோடு செய்த நட்பின்மேலதாயிற்று. அதிகாரமுறைமை சொல்லாமலே விளங்கும்.

க. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற வினிது.

பரி:—(இ - ள்.) காதன் மிகுதியாற் பருகுவார் போன்றாயினுந் தீக்குணமுடையார் நட்பு வளர்தலிற் றேமிதல் நன்று, (எ-று).

††"பருகு வன்ன வருகா நோக்கமொடு" என்றும் பிறரும். ‡‡'பண்பிலார்'

---

* அதனை - விடத்தக்கநட்பினை.

† இருவகைப்படுத்து - தீநட்பு கூடாநட்பு என்றிருவகையாக்கி.

‡ அஃதாவது - தீநட்பாவது.

¶ குணத்தின் தீமை குணமுடையார்க்காவது குணத்தின்தருமம் குணிக்காய வுபசாரவழக்காம்; பின் அஃது அவரது நட்புக்காவது குணியின் தருமம் குணத்திற்காய வுபசாரவழக்காம். குணத்தின்தீமை அதனையுடைய வரையுணர்த்துதலால் பண்பாகுபெயர்; பின் அத்தீக்குண முடையவருடன் செய்த நட்பினையுணர்த்துதலால் பொருளாகுபெயர்; ஆகவே, இஃதிருமடி யாகு பெயராமெனினு மொக்கும்.

o பழைமையென்னும் அதிகாரத்தின்பின் தீநட்பு என்னும் அதிகாரம் வைத்த முறைமை.

††பத்துப்பாட்டு-பொருநாற்றுப்படை-77-வது வரி. இதன்பொருள். (தன்னைக்கண்ணுற்) பருகுந் தன்மையை யொத்த கெடாதபார்வையாலே என்பது. பருகுதல்-குடித்தல்.

எனவே, தீக்குண முடையாரென்பது * அருத்தாபத்தியான்வந்தது.

பெருகிஞல் வருங்கேடு குன்றிஞல் வாராமையின் 'குன்றலினிது' என்ருர். இதனைத்தீநட்பினது ஆகாமை பொதுவகையாற் கூறப்பட்டது; இனிச் சிறப்புவகையாற் கூறுப.

தெளி:—(இ - ள்.) பருகுவார் போலினும் - (ஆசை மிகுதியால்) பருகுவார் போன்ருராயினும், பண்பிலார்-நற்குணமில்லாதவரது (தீக்குண முடையாரது), கேண்மை - நட்பானது, பெருகலின்-வளர்தலினும், குன்றல் - குறைதல், இனிது – நல்லது, (எ - று).

'பண்பிலார்' எனவே, தீக்குணமுடையாரென்பது அருத்தாபத்தியாற் பெறப்பட்டது. பண்பிலார்கேண்மை பெருகிஞல் வருங்கேடு குன்றிஞல்

வாராமையால் 'குன்றலினிது' என்ருர். இதனல் தீநட்பினது ஆகாமை பொதுவகையாற் சொல்லப்பட்டது; இனிச்சிறப்புவகையாற் கூறுவர்.

(க - து.) நற்குண மில்லாதவரது சிநேகம் வளர்தலினும் குறைதல் நல்லது என்பது.

1. The decrease of friendship with those who are really destitute of goodness, but look as if they would eat you up through excess of love, is far better than its increase.

உ.

உறினட் டறிஞைநூஉ மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென்.

பரி:—(இ - ள்.) தமக்குப் பயனுள்வழி நட்புச்செய்து அஃதில் வழியோழியும் † ஒப்பிலாரது நட்பினைப் பெற்றல் ‡ ஜீகமியாது? இழந்தாற் ¶ கேடியா தது? (எ-று).

0 தமக்குற்றன பார்ப்பார்

பிறரொடு பொருத்தமிலராகலின், அவரை 'ஒப்பிலார்' என்றார். அவர்மாட்டு நொதுமற்றன்மையே அமையு மென்ப தாம்.

தெளி:—(இ - ள்.) உறின் - (தமக்குப் பயன்) உள்ளவிடத்து, கட்டு-நேகள் செய்து, அறின் - (அப்பயன்) இல்லாவிடத்து, ஒருஉம் - ஒழியும், ஒப்பிலார் - ஒப்பிலாதவரது, கேண்மை - நேகத்தை, பெறினும் (என்) - பெற்றால் (ஆக்கம்) யாது, இழப்பினும் என் - இழந்தால் (கேடு) யாது?

* அருத்தாபத்தியாவது இங்ஙனமன்றியின் இது கூடாதென்றுணர்வது. அது, நீக்குண மூடையாரலாயின், பண்பிலாராதல் கூடாது; பண்பிலாரா யிருத்தலால் நீக்குண மூடையாரென்பது பெறப்பட்டது என்பதாம்.

† ஒப்பிலாரது - மனமொத்திராதவரது. ‡ ஆக்கம் - இலாபம்.

¶ கேடு - நஷ்டம். 0 தமக்குற்றன - தமக்கு வரும் பயன்களை.

§ அவர்மாட்டு - தமக்குற்றன பார்ப்பாரிடத்து.





தமக்கு உற்றன பார்ப்பார் பிறரோடு பொருத்தமிலராகலால், அவரை 'ஒப்பிலார்' என்றார். அவரிடத்து அயலாந்தன்மையே பொருந்து மென்பதாம். உம் இரண்டும் அசைநிலை. என் என்னும் வினா இங்கு இன்மைப் பொருளில் வந்தது; அது பெறினும் என்பதனோடுங் கூட்டப்பட்டது.

(க - து.) பயனோக்கிச் சிநேகிப்பாரது சிநேகம் இருந்தாலும் பயனில்லை; ஒழிந்தாலும் பயனில்லை என்பது.

2. Of what avail is it to acquire or lose the friendship of those who befriend when there is gain and forsake when there is no gain.



கொள்வாருங் கள்வரு நேர்.

பரி:—(இ - ள்.) நட்பளவு பாராது அதனுல் வரும் பயனளவு பார்க்கதும் நட்டாரும், * கொடுப்பாரைக் கொள்ளாது விலையைக் கொள்ளும் † பொதுமகளிரும், பிறர் கேடுநோக்காது அவர் சோர்வு நோக்கு துங் கள்வரும் தம்முளொப்பர், (எ - று).

‡ நட்பு - ஆகுபெயர். பொருளையே குறித்து வஞ்சித்தொழுகலின், ¶ கணிகையர் கள்வ ரென்றிவரோ டொப்பரென்பதாயிற்று. இவை இரண்டு பாட்டானுங் தமக்குறுவது பார்ப்பார் நட்பின்றீமை கூறப்பட்டது.

தெளி:—(இ- ள்.) உறுவது (நட்பளவு பாராமல் அந்நட்பால்) வரும் பயனளவை, சீர்தூக்கு நட்பும் - பார்க்கும் நட்பினரும், பெறுவது கொள்வாரும் - (கொடுப்பாரைக் கொள்ளாமல்) விலையைக் கொள்ளும் வேசையரும், கள்வரும் - (பிறர் கேடுநோக்காது அவர் சோர்வு பார்க்கும்) கள்வரும், நேர்- (தம்முள்) ஒப்பர், (எ று).

நட்பு - பண்பாகுபெயர். பொருளையே குறித்து வஞ்சித்து கடத்தலால், உறுவது சீர்தூக்கும் நட்பினர் வேசையர் கள்ள ரென்றஇவரோடு ஒப்பாவரென்பதாயிற்று. இவை இரண்டு பாட்டாலும் தமக்குவரும் பயனளவைப் பார்ப் பவாது நட்பின் தீமை சொல்லப்பட்டது. நேர்வர் என்னும் வினைமுற்று வகா வினைநிலையும் அர்

விருதியும் கெட்ட நேர் என வந்தது.

(க-து.) பிறரோடு பயன்நோக்கிச் சிநேகிப்பவர் வேசையரையும் கள்வரையும் ஒப்பர் என்பது.

---

* கொடுப்பாரை - விலையாகப் பொருளைக் கொடுப்பவரை.

† பொது மகளிர் - போகமனுபவிப்பதற்காகப் பொருளை விலையாகக் கொடுக்கும் பலர்க்கும் பொதுவாயிருக்கும் பெண்கள்.

‡ நட்பு என்னும் பண்புப்பெயர் அதனையுடையவரையுணர்த்துதலால் பண்பாகுபெயராம். ¶ கணிகையர் - பொதுமகளிர்.

அங்கவியல்—ககூ-வது தீநட்பு.



3. Friends who calculate the profits of friendship, prostitutes who are intent on obtaining their gains and thieves are all of the same stock.

## ச. அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னூர் தமரிற் றனிமை தலை.

பரி:—(இ - ள்.) அமர்வாராத முன்னெல்லாந் தாங்குவதுபோன்று வந்துழிக் களந்திடை வீழ்த்துப்போங் கல்வியில்லாத புரவி போல்வாரது * தமர்மையில் தனிமை சிறப்புடைத்து, (எ – று).

கல்லாமை - † கதியைந்தும் ‡ சாரிபதினெட்டும் ()பொருமூரணற்றலும் அறியாமை. துன்பம்வாராதமுன்னெல்லாந் துணையாவார்போன்று வந்துழி விட்டு நீங்குவரென்பது உவமையாற் பெற்றும். ¶ அவர் தமராலுல் வருமிறுதி தனியாலுல் வாராமையின், தனிமையைத் 'தலை' என்றார். எனவே, ‡‡ அதுவுந் தீதாதல் பெறுதும்.

தெளி:—(இ - ள்.) (போர்வாராத முன்னெல்லாம்தாங்குவதுபோன்றிருந்து) அமரகத்து-போர்வந்தவிடத்து, ஆற்றறுக்கும் - போர்க்களத்தில் தள்ளிவிட்டுப்போகின்ற, கல்லா - கல்வியில்லாத, - மாவன்னூர் - குதிரைபோல்

பவாது, தமரின் - தமராந்தன்மையிலும், தனிமை – தனித்திருத்தல், தலை-சிறப்புடையது, (எ - று).

கல்லாமை - கதியைந்தும், சாரி பதினெட்டும், போர்செய்யுந் திறமும் அறியாமை. (நீகட்பினர்) துன்பம் வாராத முன்னெல்லாந் துணையாவார் போன்றிருந்து அது வந்தவிடத்து விட்டு நீங்குவாரென்பது 'அமரகத்தாற்றறுக்குங்கல்லாமா' என்னும் உவமானத்தாற் பெற்றும். அவர் தமராலுல்

---

* தமர்மையில் - சிநேகிதராந் தன்மையிலும்.

† ஐந்துகதியாவன: மல்ல (மல்லர்) கதி, மயூர(மயில்) கதி, வாரா (குரங்கு) கதி, வல்லிய (புலி) கதி, விடை (ரிஷப) கதி என்பனவாம். கதி-

நடை. "மல்லொடு மயூர மற்றை வானரம் வல்லி யங்கள், சொல்லுமால் விடைக ளென்ப தூகத கதிக ளாந்தாம்" என்பது நிகண்டு.

‡ "ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியையுங், கந்து மறமுங் கறங்குளை மா-முந்துற, மேல்கொண் டனைவெலீஇ வென்வேலான் மேம்பட்டான், வேல்கொண்ட கண்ணுளை மீட்டு" என்பது புறப்பொருள் வெண்பாமாலை.

*சாரிபதினெட்டு - பதினெட்டு வகைப்பட்ட சுற்றுவரவு. சாரி—சுற் றுவரவு; அஃதாவது வட்டமாக வோடல்.

0 பொருதல் - போர்செய்தல்; முரண்-மாறுபாடு; ஆற்றல்-வல்லமை. பொருமுரணற்றவலென்பதன் திரண்டபொருள் பகைவரோடு மாறுபட்டுப் போர்செய்யுந்திறமென்பதாம்.

¶ அவர் - கல்லாமா அன்னர். ‡‡

அதுவும் - தனிமையும்.



வரும் அழிவு தனியானுக் வாராமையால், தனிமையைத் 'தலை' என்றார். எனவே, அதுவும் நீதாதல் பெறப்பட்டது. தமர் - சுற்றினர்.

(க - து.) துன்பம் வந்தபோது விட்டு நீங்குவாரது சினேகத்தைக் கொள்வதிலும் தனித்திருத்தல் நல்லது என்பது.

4. Solitude is far better than the society of those who are like the untrained horses which

throw down their rider in the battle - field.

ரு. செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று.

பரி:—(இ - ள்.) செய்துவைத்தாலும் அரணாகாத கீழ்மக்களது தீ நட்பு ஒருவற் குண்டாகலின், இல்லையாதல் நன்று, (எ - று).

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. அரணாகாமை - தொலைவின் கண் விட்டுநீங்குதல். * 'எய்தலி னெய்தாமை நன்று' என்பதற்கு † மேலு

ரைத்தாங்குரைக்க. சாராத வென்னும் பெயரெச்சம் கேண்மை யென்னும் பெயர்கொண்டது; சிறியவரென்பதனைக் கொள்ளின், செய்தென்பது ‡ நின்றுவற்றும். இவை இரண்டுபாட்டானுங் ↓ தொலைவிற் றுணையாகாத நட்பின்றீமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள். ) செய்து - செய்துவைத்தாலும், ஏமஞ்சாரா-காவ

லாகாத, சிறியவர் - கீழ்மக்களது, புன்கேண்மை - தீநட்பு, எய்தலின் - (ஒரு வனுக்கு) உண்டாதலைக்காட்டிலும், எய்தாமை - இல்லாதிருத்தல், நன்று - நல்லது, (எ - று).

செய்தும் என்னும் உயர்வு சிறப்பும்மை விகாரத்தால்தொக்குநின்றது. காவலாகாமை - தொலைவினிடத்து விட்டு நீங்குதல். 'எய்தலி னெய்தாமை

நன்று' என்பதற்கு முன் உரைத்தவாறு உரைத்துக்கொள்க. சாரா என்னும் சுறுகெட்ட எதிர்மறைப் பெயரொச்சம் கேண்மை யென்னும் பண்புப் பெயர் கொண்டு முடிந்தது. சாரா என்பது சிறியவொன்னும் பெயர் கொண்டு முடிந்ததென்று கொள்ளின், செய்து என்னும் வினையெச்சம் நின்று பய

* செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை ஒருவற்குண்டாதலி னல் வரும் அழிவு அவரைச் சேகேங் கொள்ளாது தனியா யிருத்தலி னல் வாராமையினல், அச்சிறியவரது சேகமில்லாதிருத்தலே 'நன்று' என் றார் என்பதாம்.

† மேலுரைத்தாங்கு - 'அமரகத்து' என்று மேலுள்ள குறளில் 'தம னிற் றனிமை தலே' என்பதற்கு விசேடங் கூறினாற்போல.

‡ நின்று வற்றும் - இருந்தும் பயனில்லாது போம்; இது செய்யுட் சுற்றங்களுள் ஒன்றும்.

0 தொலைவில் - அழிவு வந்தவிடத்து:



னின்மை யென்னுங் குற்றமுடையதாம் ; அஃதாவது சொல்லிருந்தும் பய னில்லாது போதலாம். செய்து சாராக் கேண்மை என்று கொள்க. இவையிரண்டு பாட்டாலும் தொலைவில் துணையாகாத கட்பினது தீமை சொல்லப்பட்டது.

(க – து.) கீழ்மக்களது சிநேகம் உண்டாதலைப் பார்க்கிலும் உண்டாகா திருத்தல் நல்லது என்பது.

5. It is far better to avoid than to acquire the friend- ship of the base who cannot protect their friends even when appointed to do so.

கூ.

பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரோதின்மை கோடி யுறும்.

பரி:—(இ - ள்.) அறிவிலானது மிகச்செறிந்த நட்பின் அறிவுடை யானது பகைமை கோடிமடங்கு நன்று, (எ-று).

† கெழீஇய என்பத னிறுதிநிலை விகாரத்தாற் றொக்கது. ‡ பன்மை உயர்த்தற்கண் வந்தது. அறிவுடையான்பகைமை ஒரு தீங்கும் பயவாமை யானும் பேதைநட்பு எல்லாத்தீங்கும் பயத்தலானும் ¶ 'கோடியுறும்' என் றூர். 0 பெருங்கழி நட்பென்று பாடமோதுவாருமுளர்.

தெளி:—(இ - ள்.) பேதை - அறிவில்லாதவனது, பெருங்கெழீஇ நட்பின் - மிகநெருங்கிய நட்பைப்பார்க்கிலும், அறிவுடையார் - அறிவுடையவனது, ஏதின்மை - பகைமை, கோடியுறும் - கோடிப்பங்கு நல்லது.

கெழீஇய என்பதன்விகுதி செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது.

அறிவுடையான் என்னும் ஒருமை உயர்த்துதற்பொருட்டு அறிவுடையார் எனப் பன்மையாகக் கூறப்பட்டது. அறிவுடையவனது பகைமை ஒரு தீங்குந் தாராமையாலும் பேதையினது நட்பு எல்லாத்தீங்கும் தருத

---

† கெழீஇய என்பது இறந்தகாலப் பெயரெச்சம்; அதனது இறுதி நிலை (அகரவிகுதி) செய்யுள் விகாரத்தாற் றொக்கு நின்றது.

‡ பேதையென்பதற்கேற்ப ஒருமையால் அறிவுடையான் என்று கூறுதல் உயர்த்தற்பொருட்டு அறிவுடையார் எனப்பன்மையால் கூறினமையின், 'பன்மை உயர்த்தற்கண் வந்தது' என்று கூறப்பட்டது. இதற்குவிதி 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்' என்னுந் தொல்காப்பிய சூத்திரமாம்.

¶ கோடி - நூறுலட்சம். 'பழுதெண்ணுமந்திரியின்' என்னுங்குறளின் விசேடவுரையில் "எழுபதுகோடி யென்றது மிகப்பலவாய எண்ணிற்கொன்று காட்டியவாறு" என்றுகூறியிருத்தலுமிங்குக் கவனிக்கத்தக்கதாம்.

0 பெருங் கெழீஇ நட்பு என்பதனைப் பெருங்கழி நட்பு என்று பாடங் கூறுவாருமுண்டு. பெருங்கழிநட்பு - மிகவதிகமாய சிநேகம்.

லாலும் (பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா, தேதின்மை) 'கோடி யுறும்' என்றார். ஏதின்மை - இயைபில்லாமை

(க - து.) அறிவில்லாதவனது சிநேகத்தைக் கொள்ளுவதி லும் அறிவுடையவனது பகையைக் கொள்ளுதல் நல்லதுஎன்பது.

6. The enmity of the wise is ten-million times more profitable than the close intimacy of the fool.

எ. நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற் பத்தடுத்த கோடி யுறும்.

பரி:—(இ-ள்.) ‡ தாமறிதல் வகையாகா து நதுதல் வகையாதற் கேதுவாகிய நட்பான் வருவனவற்றின் பகைவான் வருவன புத்துகீ கோடி மடங்கு நல்ல, (எ - று).

§ நட்பு - ஆகுபெயர். அந்நட்பாவது * விடமருந் 0தூர்த்தரும் வேழம் பரும் போன்று பலவகையா ¶ னகுவித்துத் தாம் பயன்கொண் டொழிவா ரோடு உளதாயது.‡ ‡பகைவான் என்பது அவாய்நிற்றலின், வருவனவென் பது வருவிக்கப்பட்டது. பத்தடுத்தகோடி - †

பத்தாகத்தொகுத்தகோடி. அந்நட்பான்வரு மின்பங்களின் பகைவரான்வரும் துன்பங்கள் இறப்ப நல்லவென்பதாம். ‡ இதற்குப் பிறரெல்லாஞ் சொல்லிலக்கணத்தோடு மாறு கொளவுரைத்தார்.

**தெளி:**—(இ - ள்.) நகைவகையராகிய - (தாம் அறிதல் வகையராகாமல்) நகுதல் வகையராதற்குக் காரணமாகிய, நட்பின் - நட்பால் வருவனவற் றின், பகைவரால் - பகைவரால், (வருவன), படுத்தடுத்தகோடியுறும் - பத் தக்கோடி மடங்கு நல்லனவாம், (எ - று).

நட்பு - கருவியாகு பெயர். அந்நட்பாவது விடமரும் தூர்த்தரும் கழைக்கூத்தரும் போன்று பலவகையால் நகுவித்துத் தாம் பயன்கொண் டொழிவாரோடு உண்டாயது. பகைவரான் என்பது அவாய் (வேண்டி)

---

‡ தாமறிதல் வகையராகாது-தாம் அறிதல் வகையராதற்குக்காரணமா காமல். அறிதல் வகையராதல்-அறிவுடையவராதல்.

$ நட்பால்வருவனவற்றை பெயராம்.
நட்பு என்றமையின், நட்பு கருவியாகு

* விடமர் - காமுகர். 0 தூர்த்தர் - வஞ்சகர். ¶ நகுவித்து -சிரிக்கச் செய்து.

‡‡ பகைவரானென்பது வருவனவென்பதை அவாய் (வேண்டி) நிற்றலின், அது வருவிக்கப்பட்டது என்றும் பாடமுண்டு.

† பத்தாகத்தொகுத்தகோடி - பத்துக்கோடி. ‡ இக்குறளுக்குப் பிறரெல்லாம் சொல்லிலக்கணத்தோடு விரோதமுண்டாகப் பொருள்கூறினர்.

அங்கவியல்—கசு-வது தீங்கட்பு.

**895**

நிற்றலால், வருவனவென்பது வருவிக்கப்பட்டது. பத்தடுத்தகோடி - பத்தாகத் தொகுத்த கோடி. அங்ஙட்பிறல் வரு மின்பங்களிலும் பகைவரால் வரும் துன்பங்கள் மிக நல்லனவென்பதாம். நகுதல்-சிரித்தல்.

(க - து .) நகுதல் காரணமாகச் சிநேகஞ்செய்பவரால் வருங் கெடுதியிலும் பகைவரால் வருங் கெடுதி மிக நல்லதாம் என்பது.

7. What comes from foes is a hundred-million times better than what comes from the friendship of those who

cause only laughter.

அ. * ஒல்லுங் கருமஞ் முடற்று பவர்கண்மை சொல்லாடார் சோர விடல்.

பரி:—(இ-ள்.) தம்மான் முடியுங் கருமத்தை ‡ முடியாதாகச் செய் தாரோடு கொண்ட நட்பினை ¶ அது கண்டால் அவரறியச் சொல் லாதே சோர விடுக, (எ-று).

முடியாதாக்குதல் - $ முடியாதாக நடித்தல். சோரவிடல் - விடுகின்ற வாறு தோன்றுமல் ஒருகாலேக்கொருகா † லோயவிடுதல். அறியச்சொல் லினும் விடுகின்றவாறு தோன்றினும் அதுபொழுது † †பரிகரித்துப் பின்னு நட்பாயொழுகக் கருதுவராகலின் 'சொல்லாடார்' என்றும், 'சோரவிடல்' என்றுங்கூறினர். இவைமூன்றுபாட்டானும் முறையே பேதையார், நகு விப்பார், இயல்வது செய்யாதாரென்றிவர்க ணட்பின் தீமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) ஒல்லுங்கருமம்-(தம்மால்)முடியுங்காரியத்தை,உடற்றுபவர் - முடியாதாகச் செய்தாரோடு, (கொண்ட), கேண்மை - நட்பினை, (அதுகண்டால்), சொல்லாடார்- (அவரறியச்) சொல்லாமலே, சோரவிடல்- தளரவிடக்கடவர்,(எ-று).

முடியாதாக்குதல் - முடியாதாக நடித்தல். சோரவிடல் - (நட்பினை) விடுகின்றவிதம் தோன்றுமல் ஒருகாலேக்கொருகால் ஓயவிடுதல். (நட்

பினவிடுதலை) (ஒல்லுங்கருமமுடற்றுபவர்) அறியச்சொன்னாலும் விடுகின்ற விதம்(அவர்க்குத்) தெரிந்தாலும் (அவர்) அப்போது பரிகரித்துப் பின்னும்

---

* "வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால், தேற்ற வொழுக்க மொருவன்க ணுண்டாயின், ஆற்றுந் துணையும் பொறுக்க பொருனுயின், தூற்றுதே தூர விடல்" என்பது நாலடியார்.

ǂ முடியாதாக்கிச் செய்யாதாரோடு என்றும் பாடமுண்டு.

¶ அது என்றது தம்மால் முடியுங்காரியத்தை முடியாதாக நடித்துச்

செய்யாதிருத்தலை.

$ முடியாதாக நடித்தல் - தம்மால் முடியுங் காரியத்தை முடியாதாக வெளிக்குக்காட்டுதல். முடியாதாகக்கடத்தல் என்றும் பாடமுண்டு.

† ஓயவிடுதல் - தளரவிடுதல். †† பரிகரித்து - விலக்கி.



நட்பாய்நடக்க நினைப்பாராகலால் 'சொல்லாடார்' என்றும், 'சோரவிடல்'

என்றும் சொல்லினர். இவை மூன்றுபாட்டாலும் முறையே பேதையர், நகு விட்பவர், இயல்வது செய்யாதவர் என்ற இவர்களது நட்பின் தீமை சொல் லப்பட்டது.

(க - து.) தம்மால்முடியுங் காரியத்தை முடியாதாக நடிப்பவ ரது சிநேகத்தை அவரறியச் சொல்லாமலே தளரவிடல்வேண்டும்.

8. Forsake without intimation the friendship of those who pretend inability to carry out things which they really could do.

கூ. கனவினு மின்னாது மன்னே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

பரி:—(இ - ள்.) வினையுஞ்சொல்லு மொவ்வாது வேறுவேற யிருப்பார் நட்பு நனவின்கண்ணேயன்றிக் கனவின்கண்ணு மின்னாது.

* வினை சொற்கள தொவ்வாமை முதன்மே லேற்றப்பட்டது. † அஃதாவது வினையிற் பகைவராய்ச் சொல்லின் நட்டாராயிருத்தல். ‡ நிகழ்வின்கண் உளதாயிருத்தலால் 'கனவினு மின்னாது' என்றார். § உம்மை-எச்சவும்மை ; இழிவு சிறப்பும்மையுமாம். மன்னும் ஓவும் அசைநிலை.

தெளி:—(இ - ள்.) வினை சொல் வேறு வேறு பட்டார் - வினையும் சொல்லும் (ஒவ்வாமல்) வேறு வேறாயிருப்பவரது, தொடர்பு - நட்பு, கனவினும் - (நனவினிடத்தேயல்லாமல்) கனவினிடத்தும், இன்னாது - தான் பஞ்செய்வதாம், (எ - று).

வினைசொற்கள தொவ்வாமை 'வினைவேறு சொல்வேறுபட்டார்' என அதனையுடையவர்மே லேற்றப்பட்டது. அஃதாவது தொழிலில் பகைவராய்ச் சொல்லில் நட்பினராயிருத்தல். (வினைவேறு சொல்வேறு பட்டார்

---

* வினையும் சொல்லும் தம்முள் ஒவ்வாதிருத்தலைத் தீநட்பினாகிய முதலின்மே லேற்றி 'வினைவேறு சொல்வேறு பட்டார்' என்று கூறப்பட்

டது.

† அஃதாவது – வினைசொற்களினது ஒவ்வாமையாவது.

‡ வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு நனவின் கண்ணே யன்றிக்கனவின் கண்ணும்நீமையைத்தருவதாமென்பார் 'கனவினுமின்னாது' என்றார். வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு நனவின்கண்ணே யன்றிக் கனவின்கண்ணும் ஆகாதென்பதாம். நனவு - ஜாக்கிரவஸ்தை; கனவு - சொப்பனவஸ்தை

§ கனவினும் என்ற உம்மை நனவின் கண்ணே யன்றி என்னும் பொருளை யுணர்த்தினமையின், இறந்தது தழீஇய வெச்சவும்மையாம்; கனவி னிழிவைச் சிறப்பித்தலால் இழிவு சிறப்பும்மையுமாம்.

அங்கவியல்—ககூ-வது தீநட்பு.

**897**

தொடர்பு இன்னாதாதல்) நிகழ்வின்கண் (நனவினிடத்து), உண்டாயிருத்தி லால் அத்தொடர்பு 'கனவினுமின்னாது'என்றார். கனவினும் என்ற வும்மை இறந்தது தழுவிய எச்சவும்மை; இழிவு சிறப்பும்மையுமாம். மன், ஓ என் பன அசைநிலை.

(க - து.) செயலும் சொல்லும்

வேறுபட்டிருப்பவரது சிநேகம் கனவிலுந்
துன்பந்தருவதாம் என்பது.

9. The friendship of those whose actions are not in conformity with their words will distress one even in one's dreams.

ம. எனைத்துங் குறுகுத லோம்பன்
மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு.

பரி:—(இ - ள்.) தனியே மனைக்கணிருந்து துழி நட்பாடிப் பலரோடு மன்றின்க ணிருந்து துழிப் பழிகூறுவார்நட்புச் சிறிதாயினுந் தம்மை நணுகுதலைப் † பரிகரிக்க, (எ - று).

மனைக்கட் கெழுமலும் மன்றின்கட் பழித்தலுந் தீதாகலின், அவரொரு காலுந் தம்மை நணுகாவகை † குறிக்கொண்டு காக்கவென்பார், ¶ அவர் நட் பின்மேல் வைத்துக் கூறினர். இவையிரண்டுபாட்டாலும் வஞ்சர்நட்பின் றீமை கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) மனை-(தனியே)வீட்டில் (இருந்தபோது), கெழீஇ-நட்புச்செய்து, மன்றில் - (பலரோடு) சபையில் (இருந்தபோது), பழிப்பார்-பழிகூறுவாரது, தொடர்பு - நட்பு, எனைத்தும் - எவ்வளவு சிறிதாயினும், குறுகுதல் - (தம்மைச்) சேர்தலை, ஓம்பல்-பரிகரிக்கக்கடவர், (எ - று).

வீட்டில் நட்புச் செய்தலும் சபையில் பழித்தலுமாகிய செயல் தீதாக

லின், அவர் ஒருபோதும் தம்மைச் சேராதவிதம் குறிக்கொண்டு காக்க வேண்டுமென்பார், அவர் நட்பின்மேல் குறுகுதலை வைத்துச் சொல்லினர். இவை இரண்டு பாட்டாலும் வஞ்சகர்நட்பின் தீமைசொல்லப்பட்டது.

(க - து.) வீட்டிற் சிநேகித்துச் சபையிற் பழிப்பாரது சிநேகத்தைச் சிறிது மில்லாதொழித்தல் வேண்டும் என்பது.

10. Avoid even the least approach to a contraction of riendship with those who would love you privately but idicule you publicly.

† பரிகரிக்க - ஒழிக்கக்கடவர். ‡ குறிக்கொண்டு - கவனம் வைத்து.
¶ அவர் நட்பின்மேல் வைத்துக் கூறினர் - வஞ்சகரது சிநேகத்தின் மேல் குறுகுதலை (சேர்தலை) வைத்து, தொடர்பு குறுகுதல் ஓம்பல் என்று கூறினர்.

# இருபதாவது அதிகாரம்.

## கூடா நட்பு:—False Friendship.

பரி:—இனி ஏனைக் கூடாநட்புக் கூறுகின்றார், அஃதாவது பகைமையான் | அகத்தாற் கூடாதிருந்தே தமக்கு † வாயிக்குமிடம் பெறுந் துணையும் புறத்தாற் கூடி யொழுகுவார் நட்பு.

தெளி:—இனி மற்றைக் கூடா நட்புச் சொல்லுகின்றார். அஃதாவது பகைமையால் அகத்தாற் கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடங்கிடைக்குமளவும் புறத்தாற்கூடி யொழுகுவாரது நட்பு. புறத்தால்-வெளியில்.

## க. சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை நேரா நிரந்தவர் நட்பு.

பரி:—(இ - ள்.) கூடாதிருந்தே தமக்குவாயிக்குமிடம்பெறுந்துணையுங் கூடி யொழுகுவார் நட்பு ‡ அது பேற்றல், * அறவெறிதற்குத் துணையாய o பட்டடையாம், (எ-று).

எறியு மெல்லே வாராமுனெல்லாந் தாங்குவதுபோன்றிருந்து ¶ வந்துழி அறவெறிவிப்பதாயபட்டடைக்கும் ‖ அத்தன்மைத்தாய நட்பிற்குஂO தொழிலொப்புமை யுண்மையான், () அதுபற்றி )( அந்நட்பினைப் பட்டடையாக S வுபசரித்தார். : தீர்விடமென்று பாடமோதி முடிவிடமென் றுரைப் பாருமுளர்.

---

| அகத்தாற் கூடாதிருந்தே-மனத்தில் நட்பில்லாதிருந்துகொண்டே.

† வாய்க்குமிடம் - சமயம்.

‡ அது - வாய்க்குமிடம். * அறவெறிதற்கு - (பொன் முதலியவற்றை வேறுகருவிகள் சிறிதும் மிச்ச மில்லாது) முழுதும் வெட்டுதற்கு.

o பட்டடை - தட்டார் முதலியோர் பொன் முதலியவற்றை வைத்

துச் சுத்தி முதலியவற்றால் அடிப்பதற்கும் உளிமுதலியவற்றால் வெட்டுவ தற்கும் ஆதாரமாயிருப்பதொருகருவி. இது பணையென்றும் கூடம் என் றும் சொல்லப்படும்.

¶ வந்துழி - எறியுமெல்லை வந்த விடத்து.

‖ அத்தன்மைத்தாய - பட்டடை போன்றதாய.

00 தொழிலொப்புமை யுண்மையான் - தாங்குவதுபோன் றிருத்தலும் அறவெறிவிப்பதுமாகிய தொழில் சமமாயிருத்தலால்.

() அதுபற்றி - தொழில் ஒப்புமை யுண்மைபற்றி.

)( அங்ஙட்பினை - அகத்தாற் கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடம்

பெறுந்துணையுங் கூடி யொழுகுவாரது நட்பினை.

$ தொழிலொப்புமை பற்றி, நட்பினைப்பட்டடைஎன் றபேதமாக்கி

நட்புப் பட்டடையென உபசாரவழக்காற் கூறினரென்க.

: சீரிட மென்பதனைத் தீர்விடமென்று பாடங்கூறி, அதற்குப் பொரு ள்.முடிவிடமென்று கூறுவாரு முளர்.

அங்கவியல்—உயி-வது கூடாநட்பு.

தெளி:—(இ - ள்.) நோ - (அகத்தாற்) கூடாதிருந்தே, நிரந்தவர் - (தமக்கு வாய்க்குமிடம் பெறுமளவும்) (புறத்தாற்) கூடி நடப்பவரது, நட்பு - சிநேகம், சீரிடம் - வாய்க்கு மிடத்தை, காணின் - பெற்றால், எறிதற்கு - (அற) எறிதற்கு, (துணையாகிய), பட்டடை - பட்டடையாம், (எ - று).

எறியுங்காலம் வாராத முன்னெல்லாந் தாங்குவதுபோன்றிருந்து அது வந்த வீடத்து அற எறிவிப்பதாகிய பட்டடைக்கும் அத்தன்மையதாகிய நட்பிற்கும் தொழிலொப்புமை யிருத்தலால், அதுபற்றி அங்நட்பினைப் பட்டடையாக உபசரித்தார். அகம் - உள்; புறம் - வெளி.

(க - து.) உள்ளே பகைகொண்டு வெளியே சிநேகித் தொழு

குவாரது நட்பானது சமயம் நேர்ந்தவிடத்துத் தீமையைத் தருவ

தாம் என்பது.

1: The friendship of those who outwardly behave like friends without inward affection is a weapon that may be thrown out when a favourable opportunity presents itself.

உ.

இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

பரி:—(இ - ள்.) தமக் † தற்றர்போன்று உறதாரோடு உளதாய

நட்பு இடம் பேற்றற் பெண்பாலார் மனம்போல வேறுபடும்,(எ - று).

‡ அவர்மனம் வேறுபடுதல் ¶ "பெண்மனம் பேதின் றொருப்படுப் பேனென்னு, மெண்ணி லொருவன்" என்பதனுனுமறிக. நட்பு வேறுபடு தலாவது பழைய பகையேயாதல். இவை இரண்டுபோட்டானுங் கூடாநட்பி னது குற்றங் கூறப்பட்டது.

---

† உற்றூர் போன்று - சிநேகிதர்போன்றிருந்து.

‡ அவர்மனம் - பெண்பாலாரின்மனம்.

¶ வஞ்சனை. இதன்பொருள். பெண்களினுடைய மனத்தை வேறு படுதலில்லாமல் ஒருதன்மையதாகச் செய்வேன் என்று கூறுகின்ற ஆராய் ச்சி யில்லாத ஒருவன் என்பது.

"மடந்தையர் வதன நல்ல மதியென மாற்றம் வாளேர் கடைந்தவா ணமுத மென்னக் கவினுமென் றூலு முள்ளம் விடங்கொடு புரிந்த வாள்போல் வெங்கொலை விரும்பு மந்த அடங்கலார் மனஞ்செல் வண்ண மாறிந் தறைய கிற்பார்"

என்று பாகவதம் கூறுவதும்,

"பெண்ணெனப் படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா வுண்ணிறை யுடைய வல்ல வொராயிர மனத்த

வாகும்"

என்று சீவக சிந்தாமணி கூறுவதும் இங்கறியத்தக்கனவாம்.



தெளி:—(இ - ள்.) இனம்போன்று-(தமக்கு) உற்றவர்போன்று, இன மல்லார் - உறுதவருடன், (உண்டாகிய), கேண்மை-சிநேகமானது, (இடம் பெற்றால்), மகளிர் - பெண்பாலாரது, மனம்போல - மனத்தைப்போன்று, வேறுபடும் - வேற்றுமையடையும், (எ - று).

இனம்போன் றினமல்லாத சிநேகம் வேறுபடுதலாவது இடம் பெற் றால் பழைய பகையே யாதல். இவை இரண்டொட்டாலும் கூடா நட்பினது குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) உறவினர்போல் நடித்து உறவாகாதிருப்பவரது நட்பானது சமயம் வாய்த்தால் வேற்றுமை யடையும் என்பது.

2. The friendship of those who seem to be friends while they are not, will change like the (fickle) mind of woman.

கூ. பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணர்க் கரிது.

பரி:—(இ - ள்.) நல்லன பலநூல்களைக் கற்றவிடத்தும் † அதனான் மனந்திருந்தி நட்பாதல் பகைவர்க் கில்லை, (எ - று).

நல்லன - ‡ மனக்குற்றங் கெடுப்பன. † மனநல்லரெனச் சினைவினை

முதன்மேனின்றது. நல்லாகுதல் - ¶ செற்றம் விடுதல். உள்ளே செற்ற முடையாரைக் கல்வி யுடைமைபற்றி நட்பென்று கருதற்க வென்பதாம்.

தெளி:—(இ - ள்.) நல்ல - நல்லனவாகிய, பல - பலநூல்களை, கற்றக் கடைத்தும் - கற்றவிடத்தும், (அதனால்), மனநல்லாகுதல் - மனந்திருந்தி நட்பினராகுதல், மாணர்க்கு - பகைவர்க்கு, அரிது - இல்லை, (எ - று).

நல்லன - மனக்குற்றங் கெடுப்பன. மனநல்லர் என மனமென்னுஞ் சினையின் தொழில் முதல்மேல் நின்றது. நல்லாகுதல் - கோபம்விடுதல். உள்ளே கோபமுடையாரைக் கல்வியுடைமைபற்றி நட்பென்று கருதுதல் கூடாதென்பதாம்.

(க - து.) பகைவர் மனக்குற்றங் கெடுக்கும் நூல்களைக்கற்ற ராயினும், அவர் அதனால்மனந்திருந்தி நட்பினராதலில்லையென்பது.

---

† அதனான்-கற்றதனால். ‡ மனக்குற்றம் - காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம் (உலோபம்), மானம், உவகை முதலியனவாம்.

† மனமாகிய சினையினது நன்றுகுதலாகிய வினை அச்சினையையுடைய முதன்மேல் நின்றது. அஃதாவது சினைவினையை முதலின்மேலேற்றி (மனநன்மையாகுதல் என்று கூறுதி) மனநல்லாகுதல் என்று கூறப்பட்ட தென்பது.

அங்கவியல்—உயி-வது கூடாங்கட்பு.

**901**

3. Though one's enemies may have learnt many good books it will be impossible for them to become friends truly loving at heart.

—≡—

ச. முகத்தி னினிய நகாஅ வகத்தின்னு
வஞ்சரை யஞ்சப் படும்.

பரி:—(இ - ள்.) கண்டபோழது முகத்தால் இனியவாகச் சிரித்து எப்போழதும் மனத்தா † லின்னாராய வஞ்சனை அஞ்சல்வேண்டும்.

நகையது வகைபற்றி 'இனிய' என் றும், அகத்துச் செற்றம் நிகழவும் அதற்கு மறுதலையாய நகையைப்புறத்து விளைத்தலின் 'வஞ்சர்' என்றும், அச்செற்றங் ‡ குறிப்பறிதற் கருவியாய § முகத்தானுங் தோன்றுமை யின் * 'அஞ்சப்படும்' என்றுங் கூறினர். இவை யிரண்டு பாட்டானுங் குற்றத்திற் கேதுவாய ¶ அவர் கொடுமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (கண்டபொழுது) முகத்தின்-முகத்தால், இனிய— இனியவாக, நகாஅ - சிரித்து, அகத்து-மனத்தால், இன்னு - (எப்பொழு தும்) இனியாகாத, வஞ்சரை—, அஞ்சப்படும் - அஞ்சுதல்வேண்டும். ()

நகையதுவகைபற்றி 'இனிய' என்றும், அகத்தில் சோபம் தோன்று நிற்கவும் அக்கோபத்திற்கு விரோதமாகிய நகையைப் புறத்தில் காட்டலால் 'வஞ்சர்' என்றும், அக்கோபம் குறிப்பறிதற்குச் சாதனமாகிய முகத்தாலும் தோன்றுமையால் 'அஞ்சப்படும்' என்றும் சொல்லினர். இவை இரண்டு பாட்டாலும் குற்றத்திற்குக் காரணமாகிய அவர் கொடுமை சொல்லப் பட்டது.

(க - து.) கண்டபொழுது முகமலர்ந்து நகைத்துப் பேசி,

எப்போதும் உள்ளே பகைபாராட்டும்
வேண்டும் என்பது.

வஞ்சகர்க்கு அஞ்சுதல்

4. One should fear the deceitful who outwardly bear a sweet smile with their face but never love with their heart.

ரு. மனத்தி

னமையா தவரை யேனைத்தோன்றுஞ்

சொல்லினுற் றேறற்பாற் றன்று.

---

† இன்னாய - பகைவராய.

‡ குறிப்பறிதலாவது பிறர் நினைந்திருப்பதை அவர் சொல்லாமலே தெரிந்து கொள்ளுதலாம்.

§ "முகத்தின் முதற்குறைந்த தண்டோ வுவப்பினும், காயினுந் தான் முந் தாறும்" என்னுங் குறளின் குணர்த்தற்பாலதாம் * அஞ்சுதல் செய்யப் படும் என்றும் பாடமுண்டு. ¶ அவர் - கூடா நட்பினர்.

பரி:—(இ-ள்) மனத்தாற் றம்மோடு மேவாதாரை யாதொரு கருமத்தினுஞ் சொல்லாற் றெளிதன் முறைமைத் தன்றென்று சொல்லும் நீதிநூல், (எ - று).

‡ நீதிநூ லென்பது அவாய் நிலையான்வந்தது. பகைமை மறைத்தற் பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்சனைச் சொல்லைச் () செவ்விய சொல்லெனக்கருதி † அவரைக் * கருமங்களிற்றெளிதல் நீதிநூன்முறைமை யன்றென்பதாம்.

தெளி:—(இ - ள்.) மனத்தின் - மனத்தால், அமையாதவரை-(தம்மோடு) பொருந்தாதவரை, எனைத்தொன்றும் - யாதொரு கருமத்திலும், சொல்லினால் - சொல்லால், தேறற்பாற்றன்று - தெளிதல் முறைமைய தன்று, (என்று சொல்லும் நீதிநூல்), (எ - று).

நீதிநூல் என்பது அவாய்நிலையால் வந்தது. (மனத்தினமையாதவர்) பகைமையை மறைத்தற்பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்சனைச்சொல்லை நல்ல சொல்லென நினைத்து அவரைக் கருமங்களில் தெளிதல் நீதிநூலின் முறைமை யன்றென்பதாம்.

(க - து.) மனம் வேறுபட்டவரது சொற்களை நம்பி, அவரை எக்காரியத்திலும் விடலாகாது என்பது.

5. In nothing whatever is it expedient to rely on the
words of those who do not love with their heart.

சு.

நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும்.

பரி:—(இ - ள்.) நட்டார்போன்று நன்மை பயக்குஞ் சொற்களை

சொன்னாயினும் பகைவர் சொற்கள் ‖ அது
பயவாமை அச்சொல் லிய பொழுதே யறியப்படும், (எ - று).

§ 'சொல்லினும்' எனவே, ‖ சொல்லாமையே பெற்றும். ஒட்டாராத லாற் றீமை பயத்தல் ஒருதலை யென்பார் 'ஒல்லை யுணரப் படும்' என்றார்.

---

‡ நீதிநூல் "மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ், சொல்லி
னுற் றேறறற்பாற் றன்று" என்று சொல்லும்
என்றமையின் சொல்லும் என்
னும் சொல்லெச்சம் நீதிநூல் என்பதை அவாவி நின்றது.
அதுபற்றி, 'நீதிநூலென்பது
அவாய்நிலையான் வந்தது' என்று கூறப்பட்டது.

() செவ்வியசொல் - வஞ்சனையில்லாத சொல்.

† அவரை - கூடா நட்பினரை.

* கருமங்களிற்றெளிதல்-ஆசர் தாமேற்கொண்டு செய்யுங் களுக்குரியவ ராக்குதல்.

காரியங்

¶ அது பயவாமை - நன்மையைத் தராமை.

§ சொல்லினும் என்றவும்மை எதிர்மறையும்மை.

‖ சொல்லாமையே - நன்மை பயக்குஞ் சொற்களைச் சொல்லாமையே.

அங்கவியல்—உடு-வது கூடாநட்பு.

## 903

தெளி:—(இ - ள்.)

நட்டார்போல் - நட்பினர்போன்று, நல்லவை - நன்மைதருஞ் சொற்களை, சொல்லினும் - சொன்னாலுலும், ஒட்டார் சொல் - டகைவர் சொற்கள், (அதுதராமை), ஒல்லை - விரைவிலே (அச் சொல்லியபொழுதே), உணரப்படும் - அறியப்படும், (எ - று).

'சொல்லினும்' எனவே, அவர் அவற்றைச் சொல்லாமையே பெற்றும், பகைவராதலால் தீமை தருதல்

நிச்சயமென்பார் 'ஒல்லையுணரப்படும்' என்றார்.

(க - து) பகைவர் சிநேகிதர்போன்று நன்மைதருஞ் சொற் களைச் சொன்னாயினும், அச்சொற்கள் நன்மைபயவாமை விரை விலறியப்படும் என்பது.

6. Though one's enemies may utter good things as
though they were friends, one will immediately understand their evil intent.

எ. சொல்வணக்க மொன்றுகட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான்.

பரி:—(இ - ள்.) வில்லின துவணக்கம் * ஏற்றவரீக்குத்தீமை செயீ தலேக் குறித்தமையால் பகைவர் மாட்டுப் பிறகீதுஞ் சொல்லினது வணக்கத்தையும் தமக்கு நன்மை செயீதலேக் தற்க, (எ - று).

குறித்ததென்று கரு

‡ தம்வணக்க மன்றென்பது தோன்றச்

'சொல்வணக்கம்'என்றும்,வில்

வணக்கம் வேறாயினும் வணங்குத லொப்புமைபற்றி † அதன் குறிப்பை எதுவாக்கியுங் கூறினர். $ வில்லியது குறிப்பு அவனிறைய வில்வணக்கத் தின்மே னிற்றலான், ஒன்றாது குறிப்பும் அவரிறைய சொல்வணக்கத்தின் மேலதாயிற்று. ¶ இதுவுந் தீங்கு குறித்த வணக்கமென்றே கொண்டஞ்சிக் காக்கவென்பதாம். இவை மூன்று பாட்டானும் () அவரைச் சொல்லாற் றெளியற்க வென்பது கூறப்பட்டது.

தெளி.—(இ - ள்.) வில்வணக்கம் - வில்லினது வணக்கம், தீங்கு-(எற்றவர்க்குத்) தீமை செய்தலை, குறித்தமையான் – குறித்தமையால், ஒன்றாக் கண் - பகைவரிடத்து, (பிறக்கும்), சொல் வணக்கம் - சொல்லினது வணக்

---

* எற்றவர்க்கு - எதிர்த்தவர்க்கு.

‡ தம்வணக்கம் - தம்முடைய வணக்கம்.

வணக்கம்; அஃதாவது ஒன்றாது

† அதன் குறிப்பை (வில்லினது வணக்கம் எற்றவர்க்குத் தீமை செய்தலைக் குறித்தமையை) ஒன்றாதசொல் வணக்கத்திற்குக் காரணமாக்கியுங் கூறினர்.

$ வில்லியது குறிப்பு - வில்லை யுடையவனது கருத்து.

¶ இதுவும்- சொல்வணக்கமும். () அவரை - கூடா நட்பினரை.

கத்தையும், கொள்ளற்க. (தமக்கு நன்மை செய்தலைக் குறித்ததென்று) கினை யா திருக்கக்கடவர், (எ - று).

தம்வணக்கம் அன்றென்பது தோன்றச் 'சொல்வணக்கம்' என்றும், வில்வணக்கம் வேறாயினும் வணங்குத லொப்புமைபற்றி அவ்வில்லின் குறிப்பைக் காரணமாக்கியும் சொல்லினர். வில்லியது குறிப்பு அவனுலாகிய வில்வணக்கத்தின்மேல் நிற்றலால் பகைவாது குறிப்பும் அவராலாகிய சொல் வணக்கத்தின் மேலதாயிற்று. இதுவும் தீங்கு குறித்த வணக்கமென்றே கொண்டு அஞ்சிக்காக்க வேண்டு மென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் அவரைச் சொல்லால் தெளிதல் கூடாதென்பது சொல்லப்பட்டது.

(க - து) பகைவரது சொல்வணக்கம் வில்வணக்கம் போன்று தீமையைத் தருதலால், அதனை யேற்றுக்கொள்ளா திருத்தல் வேண்டும் என்பது.

7. Since the bending of the bow betokens evil, one should not regard as good the humiliating speech of one's enemies.



அ. † தொழுதகை யுள்ளும் படையொடுங்கு
மஃதகண் ணீரு மனைத்து.

மொன்னு

பரி:—(இ-ள்). ஒன்னர் தறிப்பை யுணர வல்லார்க்கு அவர் ¶ தொழுதகையகத்தும் படைக்கலம் மறைத்திருக்கும்; அவாழுத கண்ணீரும் அவ்வாறே ‡ அது மறைத்திருத்தற் கிடனும், (எ - று).

தாம் நட்பென்பதனைத் தங் கையானுங் கண்ணானும் * தேற்றிப் பின் கோறற்கு வாங்க விருக்கின்ற படைக்கலம் உய்த்துணர்வுழித் தேற்றுகின்ற பொழுதே 0 அவற்றுள்ளே தோன்று மென்பார் 'ஒடுங்கும்' என்றார். பகை வர் தம் மென்மை காட்டித் தொழினுமழினும், அவர் குறிப்பையே நோக் கிக் காக்கவென்பதாம். இதனால் அவரைச் செயலாற் றெளியற்க வென் பது கூறப்பட்டது.

---

† 'தொழுததங் கையி னுள்ளுர் துறுமுடி யகத்துஞ் சோர, வழுதகண் ணீரி னுள்ளு மணிகலத் தகத்து மாய்ந்து, பழுதுகண் ணறிந்து கொல்லும் படையுட னொடுங்கும் பற்ரு, தொழிகயார் கண்ணுங் தேற்றந் தெளி குற்ரூர் விளிகுற் ரூரே"

என்று சீவகசிந்தாமணி கூறுவதும், அதன் விசேடவுரையில் "அரசர்

க்கு ஓர் துன்பம் வந்தவிடத்து அவர் நட்புடையோர்போல அழுத கண்ணீ ரும் கொலை சூழ்தலின், கண்ணிலும் படையொடுங்கிற்ரும். 'ஒன்னு, ரழுதகண் ணீரு மனைத்து' என்ரூர் தேவரும்." என்று நச்சினார்க்கினியர் கூறுவதும், இங்கு அறியத்தக்கனவாம்.

¶ தொழுதகை - அஞ்சலி செய்தகை; அஃதாவது கும்பிட்டகை.

‡ அது - படைக்கலம். * தேற்றி - தெளியச்செய்து.

0 அவற்றுள்ளே - தொழுதகையகத்தும் அழுதகண்ணீரகத்தும்.

தெளி:—(இ - ள்.) (பகைவர் குறிப்பை அறிய வல்லவர்க்கு) ஒன்னார்-

அப்பகைவர், தொழுதகையுள்ளும்-தொழுதகையினிடத்தும், படை - ஆயுத

மானது, ஒடுங்கும் - மறைந்திருக்கும், அழுத கண்ணீரும் - (அவர்) அழுத

கண்ணீரும், அனைத்து-அவ்வாறே அது மறைந்திருத்தற்கு இடமாம், (எ-று).

தாம் நட்பென்பதனைத் தமதுகையாலும் கண்ணாலும் நம்புவித்துப் பின்

கொல்லுதற்கு எடுக்க விருக்கின்ற ஆயுதம் ஆலோசித்தறியும்போது நம்புவிக்

கின்றபொழுதே அவற்றுள்ளே தோன்று மென்பார் 'ஒடுங்கும்' என்றார்.

பகைவர் தமது தளர்ச்சியைக் காட்டித் தொழுதாலும், அழுதாலும், அவர்

குறிப்பையே நோக்கிக் காத்துக்கொள்ளவேண்டு மென்பதாம். இதனால்

அவரைச் செயலால் தெளிதல்கூடா தென்பது சொல்லப்பட்டது.

(க - து.) பகைவரது தொழுகையும் அழுகையும் அவரது ஆயுத மறைந்திருப்பதற் கிடமாமாதலால், அவரைச் செயலால் தெளிதல் கூடாதென்பது.

8. A weapon may lie hidden in the very hands with which one's enemies revere him; and the tears they shed are of a like nature.

கூ.

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று.

பரி:—(இ - ள்.) பகைமை தோன்றுமற் புறத்தின்கண் நட்பினை மிகச்செயிது அகத்தின்கட் டம்மை மிகழும் பகைவரைத் தாழும் அந்நட்பின்கண்ணே நின்று புறத்தின்கண் † அவர் மகிழும் வண்ணஞ் செயிது ‡ அகத்தின்கண் அது சாம்வண்ணம் பொருந்தற்பான்மை யுடைத்து அரசநீதி, (எ - று).

* நின்று என்பதூஉம் அரசநீதி யென்பதூஉம் அவாய் நிலையான் வந்தன. ¶ அகமென்று புறமென்றுதல் ஒருவற்குத் தகாதெனினும் பகைவர் மாட்டாயிற்றகுமென்பது நீதிநூற்றுணிபென்பார், § அதன்மேல்வைத்துக்

† அவர் - பகைவர்.

‡ அகத்தின்கண் அது சாம்வண்ணம் - மனத்தில் அப்பகைவரது மகிழ்ச்சி கெடும்படி.

* நட்பினுள் என்பது நின்று என்பதையும், புல்லற்பாற்று என்பது அரசநீதி யென்பதையும் அவாய் (வேண்டி) நிற்றலின், அவை வருவிக்கப்

பட்டன.

¶ உள்ளேபகையும் உதட்டிலுறவுமாதல் அகலென்று புறமென்றுரை லாம். "மாதர்க் கிதங்கவி ஞாணர்க்குச் சால வணக்கங்குரு, நாதர்க்கு நீதியோ டாசார நண்பி னயந்தவர்க்குக், கோதற்ற வாசகம் பொய்க்குப்பொய் கோளுக்குக் கோளறிவி, லாதர்க் கிரட்டிப் பறிவுடை யார்செய்யு மாண்மைகளே" என்னுஞ்செய்யுள் இங்குக்கவனிக்கத்தக்கதாம். $அதன்மேல்- அரசநீதிமேல்.





கூறினர். * சாவவென்பதனிறுதிநிலை விகாரத்தாற் றொக்கது; † "கோட்டின்வாய்ச் சாக்குத்தி" என்புழிப்போல. எள்ளுவாரைப் புல்லலெனக் கூட்டுக.

தெளி:—(இ - ள்.) (அரசநீதியானது) மிகச்செய்து - (பகைமைதோன்றுதவாறு புறத்தில் நட்பினை) மிகச்செய்து, தம்மெள்ளுவாரை - (அகத்தில்) தம்மை இகழும் பகைவரை, நட்பினுள் - (தாமும்) அந்நட்பினிடத்தே, (நின்று), நகச்செய்து - (புறத்தில் அவர்) மகிழுமாறு செய்து, சாப்புல்லற் பாற்று-(அகத்தில் அது) சாகும்வண்ணம் பொருந்துதற் றன்மையுடையது.

நின்று என்பதும் அரசநீதி யென்பதும் அவாய்நிலையால் வந்தன.

அகத்தொன்று புறத்தொன்றுதல் ஒருவனுக்குத் தகாதாயினும் பகைவரிடத்

தாலுல் தகுமென்பது நீதிநூலின் துணிவென்பார், அதன்மேல் வைத்துச்

சொல்லினர். சாவ என்பதன் விகுதி விகாரத்தாற் றொக்குநின்றது.

எள்ளுவாரைப் புல்லற்பாற்று எனக் கூட்டுக.

(க - து.) அரசர் புறத்தே சிநேகம் பாராட்டி அகத்தே தம்மை நிகழ்ந்தொழுகும் பகைவரிடத்து, தாமுமவ்வாறு சிநேகித் தொழுகுதல் வேண்டும் என்பது.

9. It is royalty to affect great love outwardly but make it die inwardly in the case of such enemies as show them (kings) great friendship outwardly but despise them inwardly.

கo. பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட் பொரீஇ விடல்.

பரி:—(இ - ள்.) தம்பகைவர் தமக்கு நட்டாரா யொழுதுங்காலம் வந்தால் தாழும் அவரோடு முகத்தால் நட்புச்செய்து அகத்தால் அதனை விட்டுப் பின் ‡ னதுவுந் தவிர்க, (எ - று).

¶ அக்காலமாவது தம்மானும் பகையென்று வெளிப்பட நீக்கலாகாத வளவு. இதனானே ஆமளவெல்லாம் நீக்குகவென்பது பெற்றும். இவை யிரண்டு பாட்டானும் $ அந்நட்பிடை யொழுதுமாறு கூறப்பட்டது.

---

* சாவப் புல்லற் பாற்று என்பது சாப்புல்லற்பாற்று • என்று வந்தமையின், 'சாவ வென்பத னிறுதிநிலை (விகுதியாகிய வகரவுயிர்மெய்) விகாரத்தாற் றொக்கது' என்று கூறப்பட்டது. ''சாவ வென்னுஞ் செயவெ னெச்சத், திறுதி வகாங் கெடுதலு முரித்தே'' என்பது தொல்காப்பியம். 'சாவ' என்பது செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

† கலித்தொகை-முல்லைக்கலி. 5. இதன்பொருள். (தம்மைத் தழுவ வருவாரை எருதுகள்) கொம்பினிடத்தே சாம்படிகுத்தி என்பது.

‡ அதுவும்-முகத்தால் பகைவருடன் சிநேகஞ் செய்தலையும்.

¶ அக்காலமாவது-பகைநட்பாங்-காலமாவது.

$ அந்நட்பிடை - கூடா நட்பினிடத்து.

## அங்கவியல்—உகவது பெற்றம்.

## 907

தேளி:—(இ - ன்.) பகை - (தமது) பகைவர், நட்பாங்காலம்- (தமக்கு) நட்பினராய் நடக்குங்காலம், வருங்கால் – வந்தால், முகம் - (தாமும்) முகத்தால், நட்டு - (அவரோடு) நட்புச்செய்து, அகம் - மனத்தால், நட்பு - அந்நட்பினை, ஒரீஇ - விட்டு, விடல் - (பின் அதுவும்) ஒழியக்கடவர், (எ-று).

அக்காலமாவது தம்மாலும் பகையென்று வெளிப்பட நீக்குதல் முடியாதவளவு. இதனுலே கூடுமளவெல்லாம் (பகைவர் நட்பை) நீக்குகவென்பது பெற்றும். இவை யிரண்டு பாட்டாலும் அந்நட்பினிடத்து நடக்கும்விதம்

சொல்லப்பட்டது.

(க - து.) பகைவர் நட்பினராயொழுகினாலும், அவர் நட்பினை யாமளவெல்லாம் நீக்குதல்வேண்டும் என்பது.

10. When one's enemies begin to affect friendship, one should love them with one's looks and cherishing no love in the heart give up even the former.

## இருபத்தொன்றுவது அதிகாரம்.

### பேதைமை—*Ignorance.*

பரி:—இனி * அந்நட்பினை யெதிர்மறுத்துப் பகை முகத்தாற்கூறிய

தொடங்கினார். அப்பகைதான் முற்றக்கடியுங் குற்றமன்மையி னுளவாய † வெகுளியானுங் காமத்தானும் வருவதாம். ‡ அவற்றுள் ¶ வெகுளி

யான் வருவன ஐந்ததிகாரத்தானும் ‖ காமத்தான் வருவன ஐந்ததிகாரத்

* அந்நட்பினை-பொறுக்கப்படாத குற்றமுடைமையால் விடற்பாலன வாகிய தீநட்பு, கூடாநட்புக்களை.

† வெகுளியும் (கோபமும்) காமமும் (இச்சையும்) பகைவர் முதலி

யோரிடத்தும் மனைவி முதலியோரிடத்தும் முறையே சந்தர்ப்பநோக்கிச்

செலுத்தவேண்டுவனவா யிருத்தலால், அவை முற்றக்கடியுங் குற்றமல்லவா யினவென்க. "காதல காதல்" என்னுங் குறளின் விசேடவுரையில் "காமம், வெகுளி, ஆவகை யென்பன முற்றக் கடியுங் குற்றமன்மையின்" என்று கூறப்பட்டிருப்பது முணர்க.

‡ அவற்றுள் - வெகுளி காமமென்னு மிரண்டனுள்.

¶ மனுதரும சாஸ்திரம் ஏழாவதத்தியாயத்தில் "கோபத்தாலுண்டாகும் எட்டுத் துக்கங்களாவன:—கோள், துணிவு, துரோகம், பொறாமை, பிறன் குணத்தைச்சகியாமை, பிறன் பொருளை யபகரித்தல், காரணமின்றி யடித்தல், திட்டுதல் ஆக எட்டு" என்று கூறுகின்றது.

$ ஷை ஷை அத்தியாயத்தில் "காமத்தாலுண்டாகும் பத்துத் துக்கங்களாவன:—வேட்டையாடுதல், சூதாடுதல், பகலிற்றூங்குதல், பயனில கூறல், ஸ்திரீ லோலனாயிருத்தல், குடித்தல், பாட்டு, கூத்து, வாத்தியமிவற்றுள் விருப்பமுள்ளவனாயிருத்தல், வீணேதிரிதல் ஆகப்பத்து" என்று கூறுகின்றது.



தானுங் கூறுவார், * அவ்விரண்டற்கும் அடியாய மயக்கத்தை † இருவ கைப்படுத்து, இரண்டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட் பேதைமை கூறுகின்றார். ‡ அஃதாவது யாதுமறியாமை.

தெளி:—இனி அந்நட்பினை எதிர்மறுத்துப் பகைமுகத்தால் சொல்லத்

தொடங்கினர். அப்பகைதான் முழுவதும் ஒழிக்கும் குற்றமல்லாமையா லிருப்பனவாய கோபத்தாலும் காமத்தாலும் வருவதாம். அவற்றுள் கோபத் தால் வருவனவற்றை ஐந்ததிகாரத்தாலும் காமத்தால் வருவனவற்றை ஐந்ததி காரத்தாலும் சொல்லுவார், அவ்விரண்டற்கும் காரணமாகிய மயக்கத்தை இருவகைப்படுத்தி, இரண்டதிகாரத்தால் சொல்லத்தொடங்கி, முதலில் பேதைமையைச் சொல்லுகின்றார். 6 அஃதாவது யாதும் அறியாமை.

## க. பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண் டூதியம் போக விடல்.

பரி:—(இ-ள்.) பேதைமையென்று சொல்லப்படுவது ஒருவனுக்கு

ஏனைக்குற்றங்களெல்லாவற்றினும் மிக்கதொன்று; அதுதான் யாதென்று வினவின், தனக்குக் கேடுபயப்பனவற்றைக் கைக்கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுதல், (எ-று).

கேடு - வறுமை, பழி, பாவங்கள். ஆக்கம் - செல்வம், புகழ், அறங்கள். தானே தன் ¶ னிருமையுங் கெடுத்துக் கோடலென்பதாம்.

தெளி:—(இ - ன்.) பேதைமையென்பது - பேதைமை யென்று சொல்லப்படுவது, ஒன்று - (ஒருவனுக்கு மற்றைக் குற்றங்களெல்லாவற்றினும் மிக்கதாகிய) ஒன்று, யாதெனின்-(அதுதான்) யாதென்று கேட்டால், ஏதங் கொண்டு - (தனக்குக்) கேடுதருவனவற்றைக் கைக்கொண்டு, ஊதியம்-ஆக்கந்தருவனவற்றை, போகவிடல் - கைவிடுதல், (எ-று).

கேடு - வறுமை, பழி, பாவங்கள். ஆக்கம்-செல்வம், புகழ், அறங்கள். (பேதைமையுடையான்) தானே தன்னிருமைப் பயனையும் கெடுத்துக்கொள்வதலென்பதாம்.

(க – து.) பேதைமையாவது தீமைதருவனவற்றைக் கைக்கொண்டு நன்மைதருவனவற்றைக் கைவிடுதலாம் என்பது.

1. Ignorance is one of the chief defects; it is that which makes one to undertake ruinous actions and forego such as would be beneficial.

---

* அவ்விரண்டற்கும்-வெகுளிக்கும், காமத்திற்கும்.

† இருவகைப்படுத்து - பேதைமை, புல்லறிவாண்மை யென இரண்டு வகைப்படுத்தி.

‡ அஃதாவது - பேதைமையாவது; யாதுமறியாமை - செய்வன தவிர்வனவற்றுள் ஒன்றுமறியாமை.

¶ இருமை - இம்மை, மறுமை.

அங்கவியல்—உக-வது பேதைமை.

**909**

2. பேதைமையு ளெல்லாம் பேதைமை
காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

பரி:—(இ-ள்.) ஒருவனுக்குப் பேதைமையெல்லாவற்றுள்ளும் மிக்க பேதைமையாவது தனக்காகாத ஒழுக்கத்தின்கட் காதன்மை செயீதல், (எ-று).

* இருமைக்கும் ஆகாவென்று நூலோர் † கடிந்த செயல்களை விரும் பிச் செய்தலென்பதாம். இவை யிரண்டுபோட்டாலும் பேதைமைய திலக் கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) பேதைமையுளெல்லாம் - (ஒருவனுக்குப்) பேதைமையெல்லாவற்றிலும், பேதைமை - (மிகுந்த)பேதைமையாவது, கையல்லதன்கண் - (தனக்கு) ஆகாத ஒழுக்கத்தில், காதன்மை செயல்-விருப்பங் கொள்ளுதலாம், (எ-று).

(பேதைமையுளெல்லாம் பேதைமையாவது) இருமைக்கும் ஆகாவென்று நூலோர் கடிந்தசெயல்களை விரும்பிச் செய்தலென்பதாம், இவை இரண்டுபோட்டாலும் பேதைமையது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து.) பேதைமையுளெல்லாம் பேதைமையாவது தனக்காகாத ஒழுக்கத்தில் விருப்பங்கொள்ளுதலாம் என்பது.

2. The greatest ignorance is that which makes one to take delight in doing what is forbidden.

கூ. நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில்.

பரி:—(இ - ள்.) நாணவேண்டு மவற்றுக்கு நாணுமையும், நாட வேண்டுமவற்றை நாடாமையும், யாவர்மாட்டும் முறிந்தசொற்செயலுடை மையும், பேண வேண்டுமவற்றுள் யாதொன்றனையும் பேணுமையும் பேதையது தொழில், (எ-று).

‡ நாணவேண்டுமவை - பழி பாவங்கள். ¶ நாடவேண்டுமவை - கரு மங்களிற் $ செய்வன தவிர்வன. முறிதல்-o கண்ணறுதல். ‖ பேணவேண்டு

---

* இருமைக்கும் - இம்மைக்கும் மறுமைக்கும். † கடிந்த - விலக்கிய.
•‡ நாணமாவது—தமக்கொவ்வாத கருமங்களில் நாணுதல்.
¶ நாடவேண்டுமவை - ஆராயத்தக்கவை.
$ செய்வன - செய்யத்தக்கன ; தவிர்வன - செய்யத்தகாதன. இவை விதிவிலக்கெனப்படும்.
o கண்ணறுதல் - தாட்சண்ணியமில்லாமை.
‖ பேணவேண்டுமவை - விரும்பத்தக்கவை.



மவை - () குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்க முதலாயின. † இவை பேதைக்கு எஞ்ஞான்று மியல்பாய் வருதலின் 'தொழில்' என்றார்.

தெளி:—(இ - ள்.) நாணுமை - (நாணவேண்டுவனவற்றிற்கு) நாணுமையும், நாடாமை - (நாடவேண்டுவனவற்றை) நாடாமையும், நாரின்மை - (யாவரிடத்தும்) முறிந்த சொற்செயலுடைமையும், யாதொன்றும் - (பேண வேண்டுவனவற்றுள்) யாதொன்றையும், பேணுமை - பேணுமையும், பே

தை தொழில் - பேதையினது தொழிலாம், (எ-று).

நாணவேண்டுவன - பழி பாவங்கள். நாடவேண்டுவன - கருமங்களில் செய்வன தவிர்வன. முறிதல் - கண்ணறுதல். பேணவேண்டுவன - குடிப் பிறப்பு, கல்வி, ஒழுக்க முதலாயின. இவை பேதைக்கு எந்நாளும் இயல் பாய் வருதலால் (பேதை) 'தொழில்' என்றார்.

(க - து.) பேதையினது தொழில் நாணுமை முதலியனவாம்.

3. Shamelessness, indifference, severity and aversion for everthying are the characteristics of fools.

சு.

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

பரி:—(இ-ள்.) மன மொழி மெய்களடங்குதற்
கேதுவாய நூல்களை

யோதியும், ‡ அவ்வடக்கத்தான் வரும் பயனை
யுணர்ந்தும், ¶ அதனை

யறிய லுறப் பிறர்க்குரைத்தும், தான் $ அவை
யடங்கி யொழுகாத

பேதைபோலப் பேதையார் உலகத்தில்லை, (எ-று).

‖ உம்மை முன்னுங் கூட்டப்பட்டது.

இப்பேதைமை தனக்கு

o மருந்தாய * இவற்றுற் றீராமையானும் 0 வேற்று

மருந்தின்மையானும்

---

() "பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு,

நிலக்கிழமை மீக்கூற்றங்

கல்வியோ யின்மை, யிலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப

வென்றும், ஒழுக்

கம் பிழையாதவர்" என்று ஆசாரக் கோவை கூறுவதிங்

குணர்தற் பாற்

றும். † இவை-ராணுமை முதலியன.

‡ அவ்வடக்கத்தான் - மன மொழி

மெய்களது அடக்கத்தினால்.

¶ அதனை - மன மொழி மெய்யென்னும் திரிகரணமும் அடங்குத

லால் வரும் பயனை. $ அவை-மன மொழி மெய்கள்.

‖ உணர்ந்தும் என்னும் உம்மையை ஓதி யென்பதனோடுங்கூட்டி, ஓதி

யும் என் றுரைக்கப்பட்டது.

o மருந்தாய - பரிகாரமான.

* இவற்றால் - ஓதுதல், உணர்தல், பிறர்க்குரைத்தல் என்னு மிவற்றால்.

0 வேற்றுமருந் தின்மையானும்-பேதைமையை யொழிப்பதற்கு ஓது

தல் முதலியனவன்றி வேறு மருந்தில்லாமையாலும்.

'பேதையிற் பேதையா ரில்' என்றார். இவை இரண்டுபோட்டானும் பேதை யது தொழில் பொதுவகையாற் கூறப்பட்டது; இனிச் சிறப்புவகையாற் கூறுப.

தெளி:—(இ - ள்.) ஓதி - (மனமொழிமெய்கள் அடங்குவதற்குக் கார ணமாகிய நூல்களை) ஓதியும், உணர்ந்தும் -(அவ்வடக்கத்தால் வரும் பயனை) அறிந்தும், பிறர்க்குரைத்தும் - (அதனை யறியும்படி பிறர்க்குச்) சொல்லியும், தான் அடங்கா - தான் (அவை) அடங்கி யொழுகாத, பேதையின் - மூடன்போல, பேதையார் - மூடர், இல் - (உலகத்தில்) இல்லை, (எ-று).

உம்மை ஓதி என்பதனோடும் கூட்டப்பட்டது. இப்பேதைமை தன க்கு மருந்தாகிய இவற்றால் தீராமையாலும் வேற்று மருந்தில்லாமையாலும் 'பேதையிற் பேதையா ரில்' என்றார். இவை யிரண்டு பாட்டாலும் பேதை யது தொழில் பொதுவகையாற் சொல்லப்பட்டது; இனிச் சிறப்புவகை யாற் சொல்லுவார்.

(க-து.) மனமொழி மெய்களடங்குவதற்கேதுவாகிய அறிவு

நூல்களை ஓதுதலும் உணர்தலும் பிறர்க்குரைத்தலு முடைய வனுகித் தானடங்காமலிருப்பவன் மூடரிற் சிறந்தவனுவன்.

4. There is no greater fool than he who has read and understood a great deal of good books and even taught them to others but does not act according to his own teaching.

இ.

ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு.

பரி:—(இ-ள்.) பேதையாயினன் வரும் பிறவிகளெல்லாந் தான் புக்கழந்தும் நிரயத்தினை இவ்வோரு பிறப்புள்ளே செய்துகொள்ள வல்லனும், (எ-று).

† எல்லாப் பிறப்பும் எழாயடங்குதல் அறியப்பட்டமையின், முற்றும் மை கொடுத்தார். அழுந்தும் நிரயம் - அழுந்துதற் கிடனுய நிரயம். ஈண்டைப் பிறப்புக்களினுங் ‡ கொடுவினை வயத்தால் அந்நிரயத் தன்பமே யுழந்து வருதலின் 'எழுமையுந் தான்புக் கழுந்து மளறு' என்றார். முடிவில் காலமெல்லாம் தான் நிரயத்தன்ப முழத்தற் கேதுவாங் கொடுவினைகளை யே யறிந்து சிலகாலத்துள்ளே செய்துகோடல் பிறர்க் கரிதாகலின் 'ஆற்றும்' என்றார். இதனுல் ¶ அவன் மறுமைச்செயல் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) பேதை - மூடனெனவன், எழுமையும் - வரும் பிறவிகளி லெல்லாம், தான் புக்கு - தான் புகுந்து, அழுந்துமளறு - அழுந்தும்

† எழுவகைப் பிறப்பு - தேவர், மக்கள், விலங்கு (மிருகம்), பறவை, ஊர்வன (தவழ்வன), நீர்வாழ்வன, தாவரம் (மரமுதலியன) என்பனவாம்.

‡ கொடுவினை - தீவினை. ¶ அவன் - பேதையாயினனது.



நரகத்தை, ஒருமை - இவ்வொரு பிறப்புள்ளே, செயலாற்றும் - செய்து கொள்ள வல்லவனுவான், (எ-று).

எல்லாப்பிறப்பும் ஏழாய் அடங்குதல் அறியப்பட்டமையின், 'எழுமையும்' என்று முற்றும்மைகொடுத்தார். அழுந்தும் நரகம்-அழுந்துதற்கிடமாகிய நரகம். இவ்வுலகத்துப் பிறப்புக்களிலும் கொடுவினைவசத்தால் அந்நரகத்துன்பமே அனுபவித்து வருதலால் 'எழுமையுந் தான்புக் கழுந்து மளறு' என்றார். முடிவில்லாத காலமெல்லாம் (நெடுங்காலம்) தான் நரகத்துன்பத்தையனுபவித்தற்குக் காரணமாகிய கொடுவினைகளையே அறிந்து சிலகாலத்துள்ளே செய்துகொள்ளுதல் பிறர்க்கு அரிதாகலால் 'ஆற்றும்' என்றார். இதனால் அவன் மறுமைச்செயல் சொல்லப்பட்டது.

(க - து.) பேதையாயினன் இப்பிறப்பிலேயே இனிவரும் பலபிறப்புக்களில் தான் நரகத் துன்பங்களை யடைதற் கேதுவாய செயல்களைச்செய்து கொள்ளுவான் என்பது.

5. A fool by his actions can procure in a single birth a hell into which he may enter and suffer through all the seven births.



சு போய்ப டோன்றே புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

பரி:—(இ-ள்.) செயியுழறைமை யறியாதபேதை ஒருகருமத்தை மேற்கோள்வனுயின், † அதுவும் புரைபடும்; தானுந் தனைபூணும், ()

புரைபடுதல் - பின் ‡ ஆகாவகை உள்ளழிதல். ஒன்றே வென்பது எண்ணிடைச்சொல். ¶ அதனையுங்கெடுத்துத் தானுங்கெடுமென்பதாம். இதனுல் 0 அவன்செல்வம் படைக்குமாறு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கையறியா-செய்யுமுறைமையையறியாத, பேதை-மூடனனவன், வினை-(ஒரு)கருமத்தை, மேற்கொளின்-மேற்கொள்ளுவானு யின், பொய்படும் - (அதுவும்) புரைபடும், ஒன்றே - அது ஒன்றுதானே, புனைபூணும் - (தானும்) தனைபூணுவான், (எ-று).

புரைபடுதல் - பின் ஆகாதபடி உள்ளழிதல். ஒன்றே என்பது எண் ணுப் பொருளில் வந்த இடைச்சொல். (கையறியாப் பேதை) அதனையும் கெடுத்துத் தானும் கெடுமென்பதாம். இதனுல் அவன் செல்வம் படைக் கும் விதம் சொல்லப்பட்டது. தனை - விலங்கு; பூணுவான்-தரிப்பான்.

---

† அதுவும் - அக்கருமமும்.

‡ ஆகாவகை உள்ளழிதல் - (மேற்கொண்ட கருமம்) முடிவுபெறுமை யால் மனஞ்சோருதல்.

¶ அதனையும் - மேற்கொண்ட கருமத்தையும். 0 அவன் - பேதை.

3

(க - து.) மூடன் தான் மேற்கொண்ட காரியத்தைக் கெடுப்ப

தோடு தன்னையுங் கெடுத்துக்கொள்ளுவான் என்பது.

6. If the fool, who knows not how to act, undertakes a
work, he will not only fail in his undertaking but will
adorn himself with fetters.

எ. ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை.

பரி:—(இ - ள்.) பேதையாயினான் பெரிய செல்வத்தைத் () தேயி

வத்தா னெய்தியவழி, தன்னோடொரியைபுமில்லாதார் * நிறைய, எல்லா

விளைபுழடைய † தமராயினர் பசியாநிற்பர், (எ – று).

எல்லா ருன்மையுஞ் செய்தலோடற் கருவியென்பது

தோன்றப் 'பெ

ருஞ்செல்வம்' என்றும், ‡ அதனைப்படைக்கு

மாற்றலில்லாமை தோன்ற

'உற்றக்கடை' என்றும், எல்லாம் பெறுதலேன்ற 'ஆர'

என்றும், உணவும்

பெருமை தோன்றப் 'பகிப்பர்' என்றுங் கூறினர்.

தெளி:—(இ - ள்.) பேதை - மூடனானவன்,

பெருஞ்செல்வம் - பெ

ரிய செல்வத்தை, உற்றக்கடை - (ஊழால்)

அடைந்தவிடத்து, எதிலார் -

(தன்னோடு) ஒரு சம்பந்தமுமில்லாதவர், ஆர - நிறைய,

தமர் - (எல்லாச்

சம்பந்தமுமுடைய) தமராயினர், பகிப்பர் - பகியாநிற்பர்,

(எ-று).

எல்லாநன்மையும் செய்துகொள்ளுவதற்குச் சாதனமென்பது தோன்றப் 'பெருஞ்செல்வம்' என்றும், அதனைப் படைக்கும் வலிமை யில்லாமை தோன்ற 'உற்றக்கடை' என்றும், (எதிலார்) எல்லாம் பெறுதல்தோன்ற 'ஆர' என்றும், (தமர்) உணவும் பெருமைதோன்றப் 'பகிப்பர்' என்றும் சொல்லினர்.

(க-து.) பேதையாயினான் செல்வமடைந்தவிடத்து, அதனால் அயலார் சுகமடைவர்; அவனது சுற்றத்தார் அச்செல்வத்துள் ஒன்றும்பெறுது துன்புறுவர் என்பது.

7. If a fool perchance gets an immense fortune, strangers will enjoy it while his relations starve.

மைய லொருவன் களித்தற்றுற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்.

பரி:—(இ - ள்.) பேதையாயிஞன் தன்கைக்கண்ணே ஒன்றனை யுடைமையாகப் பெற்றனயின், ¶அவன் மயங்குதல் முன்னே பிற்தினை

(.) தெய்வத்தான் - ஆகூழால் (நல்வினையால்).

* நிறைய - திருப்தியாயனுபவிக்க. † தமர் - சுற்றத்தார்.

‡ அதனை - பெருஞ்செல்வத்தை.



¶ அவன் - பேதை.



யுடையாஞெருவன் அம்மயக்கத்தின்மேலே மதுவுண்டு மயங்கினும் போலும், (எ-று).

'பெறின்' எனவே, தெய்வத்தானன்றித் தன்னுற்பெருமை பெற்றும். பேதைமையுஞ் செல்வக்களிப்பும் ஒருங்குடைமையால், அவன் செய்வன மையலும் * மதக்களிப்பும் ஒருங்குடையான் செய்வனபோற் ‡ றலைதடு மாறு மென்பதாம். இவையிரண்டுபோட்டாலும் † அவன் செல்வமெய்திய வழிப் பயன்கொள்ளுமாறு கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) பேதை-மூடனானவன், தன்கை-தனதுகையிலே, ஒன்று-ஒருபொருளை, உடைமை - உடைமையாக, பெறின்-பெற்றானுயின், மையலொருவன் - (அவன்மயங்குதல் முன்னே) பித்தினையுடையானொருவன், களித்தற்று - (அம்மயக்கத்தின்மேலே) மதுவுண்டு மயங்கினாற் போலும், (எ - று).

ஆல் - அசை. (பேதைதன் கையொன்றுடைமை) 'பெறின்' எனவே, அவன் ஊழாலல்லாமல் தன்னுல் (ஒரு பொருளை யுடைமையாகப்) பெருமைபெற்றும். பேதைமையும் செல்வக்களிப்பும் ஒருசேர வுடைமையால், அவன் செய்யுங்காரியங்கள் மையலும் மதக்களிப்பும் ஒருசேரவுடையவன் செய்யுங்காரியங்கள்போலத் தலைதடுமாறுமென்பதாம். இவையிரண்டுபோட்டாலும் அவன் செல்வமடைந்தவிடத்துப் பயன்கொள்ளும்விதம் சொல்லப்பட்டது. பித்து - பித்தமயக்கம்.

(க - து.) பேதை யாதாவதொரு பொருளைப் பெற்றுச் செய்யுங்காரியம் முடிவு பெறுதொழியும் என்பது.

8. A fool happening to possess something is like the giddy man becoming intoxicated with liquor.

கூ. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்.

பரி:—(இ-ள்.) பின் பிரிவுவந்துழி அஃதிருவரிக்குந் தருவதொரு துன்பமில்லை; ஆகலாற் பேதையாயினுந் தம்மூட்கொண்ட நட்பு மிகவினிது, (எ-று).

¶ நாடோறுந்தேய்ந்து வருதலின், துன்பந்தாராதாயிற்று. 0 புகழ்வார்

* மதுக்களிப்பு - மது(கள்) உண்டலாலாய மயக்கம்.

‡ தலைதடுமாறும்-முறைபிறழும். † அவன் - பேதை.

¶ "நுனிநீக்கித், தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா, வீரம்
லாளர் தொடர்பு" என்று நாலடியார் கூறுவதிங்கறியத்தக்கது.

0 'அரிதினிது பேதையார் கேண்மை' என்று புகழ்வார்போல (அறி
வுடையவரது நட்புப்போலப் பிரிவின்கண் துன்பந்தாராமைபற்றி) 'பிரிவின்
கட் பீழைதருவதொன்றில்' என்று பேதையார்நட்பைப் பழித்தவாறுமென்க.

## அங்கவியல்—உக-வது பேதைமை.

**915**

போன்று பழித்தவாறு. இதனால் †

அவரது நட்பின் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) பிரிவின்கண் - (பின்) பிரிவுவந்தவிடத்து, (அப்
பிரிவு), தருவது - (இருவர்க்கும்) தருவதாகிய, பீழையொன்று - ஒருதுன்
பம், இல் - இல்லை, (ஆகலால்), பேதையார் - மூடராயினர், கேண்மை -
(தம்முட்கொண்ட) நட்பு, பெரிதினிது - மிகவினியது, (எ - று).

(பேதையார் கேண்மை) தினந்தோறும்
தேய்ந்துவருதலால், (பிரிவின் கண்) துன்பந்தாராதாயிற்று.
(பேதையார் கேண்மையைப்) புகழ்வார்போன்று
பழித்தவாறும். இதனால் அவரது நட்பின்குற்றம்
சொல்லப்பட்டது.

(க - து.) பேதையாரது நட்பு, ஒழிந்த விடத்து இன்பந் தருவதன்றித் துன்பந் தருவதில்லை என்பது.

9. The friendship between fools is exceedingly delightful as there will be nothing to cause them pain at parting.

கo. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றுற் சான்றோர் குழாஅத்துப் பேதை புகல்.

பரி:—(இ - ள்.) சான்றோ ரவையின்கட் பேதையாயினுஞ் புதல் ‡ தூயவல்ல மிதித்தகாலே இன்பந்தரும் அமளிக்கண்ணே வைத்தாற்போலும், (எ - று).

* 'கழாஅக்கால்' என்பது இடக்கரடக்கு. ¶ அதனுல் அவ்வமளியும் இழிக்கப்படுமாறுபோல இவனுல் அவ்வவையும் இழிக்கப்படுமென்பதாம். இதனுல் 0 அவன் அவையிடை யிருக்குமாறு கூறப்பட்டது.

---

அறிவுடையார் தம்முட் கொண்ட நட்புப் பிரிவின்கண் துன்பந்தருவதுபோலப் பேதையார் தம்முட்கொண்ட நட்புப் பிரிவின்கண் துன்பந் தருவதில்லை யெனப் பேதையார் நட்பைப் புகழ்வதுபோலப் பழித்தலின், இது வஞ்சப்புகழ்ச்சி யணியாம். † அவாது-பேதையாரது.

‡ தூயவல்ல - தூய்மை யல்லாதன; அவை - மலமுதலியன.

* மலமுதலியவற்றை மிதித்தகால் என்றுகூறுது 'கழாஅக்கால்'என்று கூறினமையின், இஃது இடக்கரடக்காயிற்று. இடக்கரடக்காவது நன்மக்களிடத்துச் சொல்லத்தகாத சொல்லை அவ்வாய்பாடுமறைத்து வேறு வாய்பாட்டாற் சொல்வது. இதுபற்றித் தொல்காப்பியம் "அவையல் கிளவி

மறைத்தனர் இளத்தல்" என்று கூறுவதும், பிங்கலந்தை "இடக்கர் மறைமொழி யெக்கரு மாகும்" என்று கூறுவது மிங்கறியத்தக்கனவாம்.

¶ அதனுல் - கழாஅக்காலால் (கழுவாதகாலால்).

0 அவன் - பேதை. "கல்லாதீ நீண்ட வொருவ னுலகத்து, நல்லறி வாள ரிடைப்புக்கு-மெல்ல, விருப்பினு நாயிருந் தற்றே யிராஅ, துரைப் பினு நாய்குரைத் தற்று" என்று நாலடியார் கூறுவது மிங்கறியத்தக்கதாம்.



தெளி:—(இ - ன்.) சான்றோர் - பெரியோரது, குழாஅத்து - சபை யினிடத்து, பேதை - மூடனுனவன், புகல் - புகுதல், கழாஅக்கால் - (அசுத்தமாயவற்றை மிதித்துக்) கழுவாதகாலே, பள்ளியுள் - (இன்பந் தருஞ்) சயனத்தின்கண்ணே, வைத்தற்று - வைத்தாற்போலும், (எ - று).

ஆல் - அசை. 'கழாஅக்கால்' என்பது இடக்கரடக்குச் சொல். அதனுல் அச்சயனமும் இழிக்கப்படும் விதம்போல இவனுல் அச்சபையும் இழிக்கப் படுமென்பதாம். இதனுல் அவன் சபையிடத்து இருக்கும்விதம் சொல்லப் பட்டது இழிக்கப்படுதல் - அவமதித்துப் பேசப்படுதல்.

(க - து.) சான்றோர் சபையிற் பிரவேசிக்கும் பேதை அவ மான மடைவான் என்பது.

10. The advent of a fool into the assembly of the learned is like placing one's unwashed feet on a (pleasurable) bed.



## இருபத்திரண்டாவது அதிகாரம்.

## புல்லறிவாண்மை:—*The fool's self-conceit.*

பரி:—இனி ஏனைப்புல்லறிவாண்மை கூறுகின்றார். * அது புல்லிய அறிவினையுடைத்தன்மையென விரியும். † அஃதாவது தான் சிற்றறிவினையிருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் ‡ உறுதிச்சொற் கொள்ளாமை.

தெளி:—இனி மற்றைப் புல்லறிவாண்மையைச் சொல்லுகின்றார். அது புல்லிய அறிவினை யுடைத்தன்மையென விரியும். அஃதாவது தான் சிற்றறிவினையிருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் சொல்லும் உறுதிச்சொல்லைக் கொள்ளாமை.

க. அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு.

பரி:—(இ - ள்.) ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிக்க வில்லாமையாவது அறிவில்லாமை; மற்றைப்போ ரில்லாமையோ வெனின், 0 அதனை ¶ அப்பெற்றித்தாய இல்லாமையாக்கக் கொள்ளார் உலகத்தார், (எ - று).

---

* அது - புல்லறிவாண்மை. புல்லறிவு - வினைத்தொகை; அறிவாண்மை - இரண்டாம் வேற்றுமைத் தொகை.

† அஃதாவது - புல்லறிவாண்மையாவது.

‡ உறுதிச்சொல் - நன்மையைத்தரும் சொல்.
0 அதனை - மற்றைப் பொருளில்லாமையை.
¶ அப்பெற்றித்தாய - அவ்வறிவில்லாமையதாய.

"நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப் பிணைத்த பெருஞ்செல்வம்" என்று நாலடியார் கூறுவது மிங்கறியத்தக்கதாம்.



7

* அறிவென்பது ஈண்டுத் தலைமைபற்றி நல்லறிவின்மேனின்றது. புல்
லறிவாளர் செல்வமெய்திய வழியும் இம்மை மறுமைப்பயனெய்தாமையின்
அதனை 'இன்மையுளின்மை' என்றும், நல்லறிவாளர் வறுமையெய்தியவழி
யும் † அஃதிழவாமையின் அதனை 'இன்மையாவையாது' என்றுங் கூறி
னர். இதனுற் புல்லறிவினது குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) இன்மையுள் - (ஒருவனுக்கு) இல்லாமை பல்வற்
றுள்ளும், இன்மை(மிகுந்த) இல்லாமையாவது, அறிவின்மை-அறிவில்லா
மை, பிறிதின்மை-மற்றைப் பொருளில்லாமையோவெனின், (அதனை), உலகு-உலகத்தார், இன்மையா - (அத்தின்மையதாய) இல்லாமையாக, வை
யாது - கொள்ளார், (எ - று).

அறிவென்பது இங்குத் தலைமைபற்றி நல்லறிவின்மேல் நின்றது.

புல்லறிவாளர் செல்வமடைந்தவிடத்தும் இம்மை மறுமைப் பயனடையா

மையால் அச்செல்வத்தை 'இன்மையுளின்மை' என்றும், நல்லறிவாளர்

வறுமையடைந்த விடத்தும் அப்பயனை இழவாமையால் அவ்வறுமையை

'இன்மையாவையாது' என்றும் சொல்லினர். இதனாற் புல்லறிவின் குற்

றம் சொல்லப்பட்டது.

(க - து.) ஒருவனுக்கு அறிவில்லாமையே வறுமையாம்;

அஃதுடைமையே செல்வமாம் என்பது.

1. The want of wisdom is the greatest of all wants; but that of wealth the world will not regard as such.

2. அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம்.

பரி:—(இ - ள்.) ‡ புல்லறிவுடையான் ஒருவனுக்கு மனமுவந்து ஒன்று கொடுத்தல் கூடிற்றாயின், ¶ அதற்குக்காரணம் பெறுகின்றவனல்வினையே; வேறென்றுமில்லை, (எ - று).

ஒரோவழி நெஞ்சுவந்தீதல் கூடலிற் புல்லறிவாளரும் கல்வினை செய்ப
என்பார்க்குப் $ பெறுவான் 0 வீழ்பொருளெய்தியான் போல்வதல்லது

---

* அறிவு என்பது கல்லறிவிற்கும் புல்லறிவிற்கும் பொதுவாயிருத்தலால், அப்பொதுமையை விலக்கத் தலைமைபற்றிய வழக்கால் 'அறிவென்பது ஈண்டுத் தலைமைபற்றி கல்லறிவின்மேனின்றது' என்று கூறப்பட்டது.

† அஃது - இம்மைப்பயன், மறுமைப்பயன்.

‡ புல்லறிவுடையான் - புல்லிய (தாழ்ந்த) அறிவினையாளுந்தன்மையுடையவன். ¶ அதற்கு - புல்லறிவுடையான் மனமுவந்து ஒன்றுகொடுத்தற்கு.

$ பெறுவான் - புல்லறிவாளர் மனமுவந்து கொடுப்பதொன்றனைப் பெறுகின்றவன். 0 வீழ்பொருள் - விழுந்து கிடப்பதொரு பொருளை.





இம்மை நோக்கியாக மறுமை நோக்கியாக ஈகின்றாரல்லரெனக்கூறியவாறு.
* கூடிற்றாயின் அதற்குக்காரணம் என்னுஞ் சொற்கள் அவாய் நிலையான் வந்தன. இதனால், † அஃதுடையார் தம்மாட்டு கல்லன செய்தலறியாமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்) அறிவிலான் - புல்லறிவுடையவன், நெஞ்சுவந்து-மனமகிழ்ந்து, ஈதல் - (ஒருவனுக்கு ஒன்று) கொடுத்தல், (கூடியதாயின் அதற்குக்காரணம்), பெறுவான் - பெறுகின்றவனது, தவம் - நல்வினையே, பிறிதியாதும்-வேறொன்றும், இல்லை (காரணமாவது) இல்லையாம், (எ-று).

(புல்லறிவாளர் யாதாவதொன்றனைப் பிறர்க்கு) ஓரோவிடத்து மனமகிழ்ந்து கொடுத்தல் கூடுதலால் புல்லறிவாளரும் நல்வினை செய்வாரென்பார்க்

குப் பெறுவான் வீழ்பொருள் அஞ்டைந்தவன்
போல்வதல்லாமல் புல்லறிவா

ளர் இம்மை நோக்கியாவது மறுமை நோக்கியாவது அவனுக்குக் கொடுக்கின்றாரல்லரெனக் கூறியவாறும். கூடியதாயின் அதற்குக் காரணம் என்னுஞ் சொற்கள் அவாய் நிலையால் வந்தன. இதனால் அஃதுடையார் தம்மிடத்து நல்லனவற்றைச் செய்த லறியாமை சொல்லப்பட்டது.

(க - து.) அறிவிலான் ஒருவனுக்கு மனமுவந்து ஒன்றைக் கொடுத்தற்குக் காரணம் பெறுகின்றவனது தவமன்றிப் பிறிதில்லை என்பது.

2. The cause of a fool cheerfully giving alms is nothing else but the receiver's merit.

கூ. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது.

பரி:—(இ - ள்.) புல்லறிவுடையார் தாமே தம்மைவருத்தும் வருத்தம் அது செய்தற்குரியராய தம் பகைவரீக்குஞ் செய்தலரிது, (எ-று).

பகைவர் தாம் அறிந்தவொன்றனைக் கிலம் பார்த்திருந்து செய்வதல்லது வறுமை, பழி, பாவ ‡ முதலிய பலவற்றையும் எக்காலத்துஞ் செய்யமாட்டாமையின் ¶ 'செறுவார்க்குஞ் செய்தலரிது' என்றார். இதனால் § அவர்தம்மாட்டுந் தீயன செய்தலறிவரென்பது கூறப்பட்டது.

* கூடிற்றாயின், அதற்குக் காரணம்என்னுஞ் சொற்கோப் பெறுவான் தவம் என்னுஞ் சொற்கள் அவாய் (வேண்டி) நிற்றலின், அவை வருவிக்கப் பட்டன.

† அஃதுடையார் - புல்லறிவுடையார்.

‡ முதலிய என்றமையின் அவமான மடைதல், காவலிலிருத்தல், அடி படல், அபராதந்தருதல், பிறர்க்கடிமையாதல் முதலியவற்றையுங் கொள்க.

¶ அவர்க்குஞ் செய்தலரிது என்றும் பாடமுண்டு. § அவர் - புல்லறி வுடையார்.

அங்கவியல்—உஉ-வது புல்லறிவாண்மை.

## 919

தெளி:—(இ - ள்.) அறிவிலார் - புல்லறிவுடையவர், தாம் - தாமே,

தம்மைப் பீழிக்கும்- தம்மை வருத்தும், பீழை - வருத்தத்தை, செறுவார்க் கும்-(அவ்வருத்தத்தைச் செய்தற்கு உரியவராய தமது)பகைவர்க்கும், செய் தல் அரிது - செய்தல் முடியாது, (எ - று).

பகைவர் தாம் அறிந்ததொரு தீமையைக் காலம் பார்த்திருந்து செய்வ

தல்லாமல் வறுமை, பழி, பாவ முதலிய பலவற்றையும் எக்காலத்தும் செய் யமாட்டாமையால் 'செறுவார்க்குஞ் செய்தலரிது' என்றார்.

இதனுல் அவர்
தம்மிடத்துந் தீயனவற்றைச் செய்தலறிவரென்பது சொல்லப்பட்டது.

(க - து.) புல்லறிவாளர் பகைவர் செய்தற்கரிய கனைத் தாமே தமக்குச்செய்து கொள்வர் என்பது.

துன்பங்

3. The suffering that fools inflict upon hardly possible even by enemies.

themselves is

ச. வெண்மை யெனப்படுவ தியாதெனி னெண்மை
யுடையம்பா மென்னுஞ் சேருக்கு.

பரி:—(இ - ள்.) 'புல்லறிவுடைமை யென்று சொல்லப்படுவது யாதென்று வினவின், * அது தம்மைத்தாமே யாம் நல்லறிவுடைய மென்று நன்த மதிக்கும் மயக்கம், (எ - று).

† வெண்மையாவது அறிவுமுதிராமை. ‡ 'ஒண்மை' எனக் காரியப் பெயர் காரணத்திற்காயிற்று. உலகத்தாரிகழ்தல் அறிந்துவைத்தும் ¶ அவ் வாறு மதித்தலான் 0 'செருக்கு' என்றார்.

தெளி:—(இ - ள்.) வெண்மை யெனப்படுவது - புல்லறிவுடைமை யென்று சொல்லப்படுவது, யாதெனின் - யாதென்று கேட்டால், (அது), யாம் ஒண்மையுடையம் - (தம்மைத்தாமே) யாம் நல்லறிவுடையேம், என்

னும் - என்று நன்குமதிக்கும், செருக்கு - மயக்கமாம், (எ – று).

வெண்மை - இளமை; அஃதாவது அறிவுமுதிராமை. 'ஒண்மை' என்று காரியப்பெயர் அதன் காரணமான அறிவிற்காயிற்று. (புல்லறி

---

* அது – புல்லறிவுடைமை.

† வெண்மையென்பது இங்கு இவனுக்கு வெள்ளைப் புத்தியென்பது போல மந்தம் பற்றி வந்தது.

‡ நன்மை யென்னும் பொருளதான ஒண்மை யென்னுங் காரியப்பெயர் அவ்வொண்மைக்குக் காரணமாய அறிவிற்காயிற்று; ஆகவே, இது காரியம் காரணமாய வுபசாரவழக்காம்; காரியவாகு பெயரெனினும் ஒக்கும்.

¶ அவ்வாறு மதித்தலான் - தம்மைத்தாமே யாம் நல்லறிவுடைய மென்று பாராட்டுதலால்.

0 மயக்கம் என்றும் பாடமுண்டு.



வாளர் தம்மை) உலகத்தார் இகழ்தலை அறிந்திருந்தும் அங்ஙனமதித்தலால் 'செருக்கு' என்றார்.

(க - து.) புல்லறிவாளர் தம்மைத் தாமே பாம் நல்லறிவுடை

யே மென்று உயர்த்திப் பேசிக்கொள்வர் என்பது.

4. What is called want of wisdom is the vanity which says " we are wise ".

## ரு. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற வல்லதூஉ மையந் தரும்.

பரி:—(இ - ள்.) புல்லறிவாளர் தாங்கல்லாத நூல்களையுங் கற்று

ராகத் தாம் மேலிட்டுக்கொண்டு ஒழுதுதல், † கசடறக் கற்றதொருநூலுண்டாயின், ‡ அதன்கண்ணும் பிறர்க்கு ஐயத்தைவிளைக்கும், (எ-று).

* வல்லதென எழாவது இறுதிக்கட்டொக்கது.

† உண்டாயினென்பது அவாய் நிலையான் வந்தது. ஐயம் அதுவல்லவென்பதூஉம் இவ்வாறு கொ

ல்லோ வென்பது.

தெளி:—(இ - ள்.) (புல்லறிவாளர்) கல்லாத - (தாம்) கல்லாத நூல்களையும், மேற்கொண்டு - (கற்றவராகத்தாம்) மேலிட்டுக்கொண்டு, ஒழுகல்-நடத்தல், கசடற - குற்றமற, வல்லதூஉம் - கற்றதொருநூல் (உண்டாயின்) அதனிடத்தும், (பிறர்க்கு), ஐயம் - ஐயத்தை, தரும் - உண்டாக்கும், (எ-று).

வல்லது என்பது வினையெச்சத்தில் எழுவாய்த் தொக்குநின்றது. 'ஐயந்தரும்' என்னும் சொற்கள் உண்டாயின் என்பதனை

அவாய் நிற்றலின், அது வரு விக்கப்பட்டது. ஐயம் இவர் அந்த நூலில் வல்லவரென்பதும் இவ்வாறுதா னிருக்குமோ வென்பது.

(க - து.) புல்லறிவாளர் தாம் கல்லாத நூல்களையும் யாம் கற்றேமெனப்பேசி, தாம் கற்ற நூல்களிலும் பிறர்க்கு ஐயத்தை யுண்டாக்குவரென்பது.

5. Fools pretending to know what has not been read by them will create suspicion even as to what they have thoroughly learnt.

† கசடற - ஐயந்திரிபொழிய.

‡ அதன்கண்ணும் . கசடறக்கற்ற நூலினிடத்தும்.

* வல்லதூஉம் என்னும் வினையாலணையும் பெயரினிறுதியில் கண்என் னும் எழனுருபு தொக்குநின்றது; தொகாதாயின், அது வல்லதன்கண் என நிற்கும்.

அங்கவியல்—உஉ-வது புல்லறிவாண்மை.

**921**

கூ. அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி.

பரி:—(இ - ள்.) புல்லறிவாளர் தங்கணிகழுங்
குற்றங்களையறிந்து
கடியாராகின், ஆடையால் அற்றமறைத்தாராகத்
தம்மைக் கருதுத
லும் புல்லறிவாம், (எ - று).

குற்றமறைத்தலாவது ‡ அவற்றை இலவாக்குதல். † மறைக்கப்படு
வன பலவற்றுள்ளும் உயர்ந்தவற்றையெல்லாம் மறையாது
தாழ்ந்தவொன்
றனையே மறைத்து * அவ்வளவாற் றம்மையு மூலக
வொழுக்கினராக மதித்
தலும் புல்லறிவென்பதாம். இவை மூன்றுபாட்டானும்

அவர் தம்மை ¶

வியத்தற் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (புல்லறிவாளர்) தம்வயின் - தம்மிடத்து, (உண்டாகும்), குற்றம் - குற்றங்களை, மறையாவழி - (அறிந்து) நீக்காராஞல், அற்றம் - மறைக்கத்தக்க அவயவத்தை, மறைத்தலோ - (ஆடையால்) மறைத்தவாகத் தம்மை நினைத்தலும், புல்லறிவு - புல்லறிவாம், (எ - று).

குற்றமறைத்தலாவது அவற்றை இல்லாமற் செய்தல். மறைக்கப்படு வனவாய அங்கங்கள் பலவற்றிலும் உயர்ந்த அங்கங்களை யெல்லாம் மறை யாமல் தாழ்ந்த தொன்றனையே மறைத்து அவ்வளவால் (புல்லறிவாளர்) தம்மையும் உலகுடையுள்ளவராக மதித்தலும் புல்லறிவென்பதாம். இவை மூன்று பாட்டாலும் அவர் தம்மை வியத்தற் குற்றம் சொல்லப்பட்டது.

'மறைத்தலோ' என்னும் ஓகாரம் மறைத்தலும் 'என எச்ச வும்மைப் பொருளில் வந்தது.

(க - து.) புல்லறிவாளர் தம்மிடத்துண்டாகுங்

குற்றங்களை

பொழிக்காமல் தம்மை புலகநடை

புடையவராகக் கருதுவர்.

6. It would be folly even to cover one's nakedness, if one's faults were not discarded.

எ. அருமறை சோரு மறிவிலான் செய்யும்

பெருமிறை தானே தனக்கு.

பரி:—(இ - ள்) பெறுதற்கரிய உபதேசப்

பொருளைப் பெற்றலும்

உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன் 0 அவ்வுறுதி

யறியாமையாற்

றனே தனக்கு மிக்க வருத்தத்தைச் செயிது கொள்ளும், (எ - று).

‡ அவற்றை - தம்மிடத்துண்டாகுங் குற்றங்களை.

† மறைக்கப்படுவனவாய அங்கங்கள் தலை, இடை, தொடைமுதலியன வாம்; அவற்றுள் உயர்ந்தன தலை, கழுத்து, இடைமுதலியனவாம்; தாழ்ந்தது கோவணங்கட்டுவதற்குரிய அங்கமாம்.

* அவ்வளவால்-தாழ்ந்ததொன்றனை ஆடையால் மறைத்த வளவிலுல்.

¶ வியத்தல் - உயர்த்திப்பேசுதல்.

0 அவ்வுறுதி - பெறுதற்கரிய வுபதேசப்பொருளாலடையும் நன்மை.

* 'சோரும்' என இடத்துநிகழ் பொருளின்றெழில் இடத்தின்மேனின் றது. மிக்கவருத்தம்-பொறுத்தற்கரிய துன்பங்கள். † இனி அருமறைசோரும் என்பதற்குப் பிறரெல்லாம் உள்ளத்தடக்கப்படும் எண்ணத்தை வாய்சோர்ந்து பிறர்க் குரைக்குமென் றுரைத்தார். ‡ அது ¶ பேணுமைபோலென்னும் பேதைமை யாவதன்றிப் புல்லறிவாண்மை யன்மை யறிக.

தெளி:—(இ - ள்.) அருமறை - பெறுதற்கரிய உபதேசப்பொருளை, சோரும் - (பெற்றாலும்) உட்கொள்ளாதுபோக்கும், அறிவிலான் - புல்லறிவாளன், (அவ்வுறுதியை யறியாமையால்), தானே தனக்கு-, பெருமிறை- மிகுந்த வருத்தத்தை, செய்யும் - செய்துகொள்ளுவான், (எ - று).

'சோரும்' என இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல்

நின்றது. மிகுந்தவருத்தம் - பொறுத்தற்கரிய துன்பங்கள்.

(க - து.) புல்லறிவாளன் பெறுதற்கரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும், அதனையுட்கொள்ளாது தனக்குத்தானே மிக்க வருத்தத்தைச் செய்துகொள்ளுவான் என்பது.

7. The fool who neglects sacred teachings does, of his own accord, a great injury to himself.

அ. 0 எவவுஞ் செய்கலான் ருன்றேரு னவ்வுயிர்

* அறிவிலான் என்னும் இடத்து நிகழ் (இருக்கும்) (அருமறை யென் னும்)பொருளின் சோருதலாகியதொழில்(அறிவிலான் என்னும்)இடத்தின் மேல் (அறிவிலான் அருமறை சோரும் என) நின்றது. அருமறையின் சோருதற் றொழிலை அஃதுடையான்மே லேற்றிக் கூறினமையன், இஃது இடத்துநிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேலாய வுபசாரவழக் காம்.

† இனி அருமறை சோரும் என்பதற்கு மற்றவுரைகாரெல்லாம் அரு மறை-மனத்தி லடக்கப்படும் எண்ணத்தை, சோரும் - (அறிவிலான்) வாய் தவறிப் பிறர்க்குச்சொல்லுவான் என்று பொருள் கூறினர். அது பேணுமை யென்னும் பேதைமை யாவதல்லாமல் புல்லறிவாண்மையாகாமையையறிந்து கொள்க. "காணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்,பேணுமை பேதை தொழில்" என்னுங் குறளிற்குணர்த்தற் பாற்றும்.

‡ அது - அவ்வாறுரைத்தல். ¶ பேணுமை (விரும்பத்தக்கனவற்றுள் யாதொன்றையும்) விரும்பாமை.

0 நன்னூல் விருத்தியுரைகாரர் "உவப்பினுமுயர்விலும்" என்னுஞ் சூத் திரத்தினுரையில் இக்குறளை யுதாரணமாகக்காட்டி "செறலின் (கோபத்தி னால்) உயர்திணை யஃறிணையாயிற்று" என்றனர். புல்லறிவாளன் என்பது உயர்திணை; அவ்வுயிர் என்பது அஃறிணை.

அங்கவியல்—உ-வது புல்லறிவாண்மை.

**923**

பரி:—(இ - ள்.) புல்லறிவாளன்

தனக்குறுதியாயவற்றை அறிவுடை

யார் சொல்லாநிற்கவுஞ் செய்யான்; அதுவன்றித் தானுகவும் இவை செய்வனவென்றறியான்; அவ்வுயிர் யாக்கையி னீங்குமளவும் நிலத்திற் துப் பொறுத்தற்கரிய தோருநோயாம், (எ - று).

‡உயிர் தான் உணர்தற்றன்மைத்தா யிருந்தும் நின்றயாக்கையவயத்தான் மருடற்றன்மைத்தாய் வேறுபடுதலின் 'அவ்வுயிர்' என்றும், † அதனினீங் கியபொழுதே அதற்கு * இரண்டனுள் ஒன்று கூடுதலிற் 'போமளவும்' என்றும், ¶ குலமலை 0 முதலிய பொறுக்கின்ற நிலத்திற்குப் பாவயாக்கை பெரும்பொறையாய்த் தன்பஞ் செய்தலின் 'ஓர்நோய்' என்றும் கூறினர்.

தெளி:—(இ - ள்.) (புல்லறிவாளன்) எவவும் - (தனக்கு உறுதியாய வற்றை அறிவுடையார்) சொல்லா நிற்கவும், செய்கலான்-செய்யான், (அது வல்லாமல்), தான் - தானுகவும், தேறான் - (இவைசெய்வனவென்று) அறியான், அவ்வுயிர் - அந்தவுயிரானது, போமளவும் - (உடம்பினின்றும்)நீங்குமளவும், ஓர்நோய் -
(பூமிக்குப்பொறுத்தற்கரியதாகிய) ஒருநோயாம், (எ-று)

‡ உயிர் தான் உணருதல் தன்மையதா யிருந்தும் நின்ற உடம்பின்வசத் தால் மயங்குதல் தன்மையதாய் வேறுபடுதலால் 'அவ்வுயிர்' என்றும், அவ் வுடம்பினின்றும் நீங்கியபொழுதே அவ்வுயிர்க்கு இரண்டனுள் ஒன்றுகூடுத
லால் 'போமளவும்' என்றும், குலமலை முதலியவற்றைச் சுமக்கின்ற பூமிக்

‡ உயிர்க்கிலக்கணம் உணர்தற் றன்மையதென்பது இங்குணர்தற் பாற்றும்.

† அதனினீங்கிய பொழுதே - அவ்வுடம்பினின்றும் நீங்கி வேறுடம்பை யடைந்தபோதே.

* இரண்டனுள் ஒன்று கூடுதலின் - எவச்செய்தல், தான் தேறுதல் என்னுமிரண்டனுள் ஒன்று சம்பவித்தலால். புல்லறிவாளனுயிர் உணர்தற் றன்மையதாயிருந்தும் தானின்ற யாக்கையின் (உடம்பின்) வசத்தால் (எவச்செய்தல் தான் தேறுதல் என்னுமிரண்டனுள் ஒன்று கூடாது) மயங்குதற் றன்மையதாய் வேறு படுதலின், அவ்வாக்கையினின்றும் நீங்கியபொழுதே அவ்வுயிர்க்கு எவச்செய்தல் தான் தேறுதலென்னுமிரண்டனுள் ஒன்று கூடுமென்பது 'இரண்டனுள் ஒன்றுகூடுதலின்' என்பதன் கருத்தாம். எவச்செய்வானிடத்துத் தான் தேறுதலும், தான் தேறுவானிடத்து எவச்செய்தலு மின்மையின், 'இரண்டனுள் ஒன்று கூடுதலின்' என்று கூறப்பட்டது. எவச்செய்வான் தான்தேறான்; தான் தேறுவான் எவச்செய்யாது தானே செய்வானென்றுகொள்க. இதனால் எவச்செய்தல் தான் தேறுதலென்னுமிரண்டனுள் ஒன்றில்லாத வுயிர் தன்னுடம்பினின்றும் நீங்குமளவும் பூமிக்குப் பெருஞ்சுமையாமென்பது பெறப்பட்டதென்க.

¶ குலமலை - பெருமலை; அது மேருமலை முதலியனவாம்.

0 முதலிய என்றமையின், குன்று, யாறு, காடு, நாடு முதலியவற்றையுங் கொள்க.



குப் பாவவுடம்பு பெருஞ் சுமையாய்த் துன்பஞ்செய்தலால் 'ஓர்நோய்' என்றும் சொல்லினர்.

(க - து.) புல்லறிவாளன் பெரியார்கூறிய காரியங்களைச் செய்தலும் நற்காரியங்களைத்தானே தெரிந்து செய்தலுமின்மையின், அவன் சாமளவும் நிலத்திற்குப் பாரமாயிருக்கின்றான் என்பது.

8. The fool will not perform his duties even when advised nor ascertain and do them himself; such a man is a burden to the earth till his Atman departs from his body.



கூ. ‡ காணுதாற் காட்டுவோன் றன்காணன் காணுதான்
கண்டானுந் தான்கண்ட வாறு.

பரி:—(இ - ள்.) தன்னை எல்லாமறிந்தானுக மதித்தலாற் பிறரால் ஒன்றறியுந்தன்மை யிலாதானை அறிவிக்கப்புகுவான் † அவனைப் பழிக் கப்பட்டுத் தான் அறியானையிழுடியும்; இனி அவ்வறியுந்தன்மை யில்லா தான் ¶ கொண்டது விடாமையாற் றனறிந்தவாற்றல் 0 அதனை அறிந் தானையி முடியும், (எ - று).

புல்லறிவாளர்க்கு நல்லறிவு கொளுவுதல் ஒருவாற்றானும் இயைவதன் றென்பதாம்.

தெளி:—(இ - ள்.) (தன்னை எல்லாமறிந்தவனுக மதித்தலால்) காணு தான் - (பிறரால்ஒன்றை) அறியுந்தன்மையில்லாதவனை, காட்டுவான் - அறி

விக்கப்புகுவான், தான்காணுன் - (அவனுல் பழிக்கப்பட்டுத்)
தான் அறியா தவனுய் முடிவன், காணுதான் - (இனி)
அவ்வறியுந்தன்மை யில்லாதவன்,
(கொண்டதுவிடாமையால்), தான்கண்டவாறு - தான் அறிந்தவிதத்தால்,
கண்டானும் - (அதனை) அறிந்தவனுய் முடிவன், (எ - று).

புல்லறிவாளர்க்கு நல்லறிவை வருவித்தல் ஒருவழியாலும் பொருந்துவ தன்றென்பதாம்.

(க - து.) புல்லறிவாளனுக்கு உறுதி தருவனவற்றைக் கூறுகின்றவன் அவனுல் பழிக்கப்பட்டவனான மடையான் என்பது.

9. One who would teach a fool will simply be declared a fool; and the fool would still think himself "wise in his own conceit."

---

‡ "கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉங், குற்றந் தமதே பிறி தன்று - மூற்றுணர்ந்தும், தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா, ஏதில ரை நோவ தெவன்" என்பது நீதிநெறி விளக்கம்.

† அவனுல் - புல்லறிவாளனுல்.

¶ மூர்க்கனும் முதலையுங் கொண்டது விடா என்பதிங் கறியத்தக்கது.

0 அதனை-கொண்டதை.

அங்கவியல்—உஉ-ஆது புல்லறிவாண்மை.

க0. உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

பரி:—(இ - ள்.) உயிர்நீதோர் பலரும் உண்டென்ப தோர்பொரு
ளாத் தன் புல்லறிவா னில்லையென்று சொல்லுவான் மகனென்று கரு
தப்படான்; வையத்துக் காணப்படுவதோர் பேயென்று கருதப்படும்.

கடவுளும், மறுபிறப்பும், இருவினைப்பயனும் * முதலாக † அவர் உள
வென்ன பலவேனுஞ் ¶ சாதியொருமைபற்றி 'உண்டென்பது' என்றும்,

‡ தானே வேண்டிய கூறலால் ஒப்பும் வடிவால் ஒவ்வாமையு முடைமையிற்
றன்யாக்கை காந்து மக்கள்யாக்கையுட் டோன்றுதல்வல்ல 'அலகை' என்றுங்
கூறினர். இவை நான்கு பாட்டானும் உறுதிச்சொற் கொள்ளாமையது

குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) உலகத்தார் - உயர்ந்தோர், (பலரும்), உண்டென்

பது-உண்டென்பதோர் பொருளை, இல்லென்பான் - (தன்புல்லறிவால்)

இல்லையென்று சொல்லுவான், (மனிதனென்று நினைக்கப்படான்), வைய

த்து - பூமியில், அலகையா-(காணப்படுவதொரு) பேயென்று, வைக்கப்படும்-

நினைக்கப்படுவான், (எ - று).

கடவுளும், மறுபிறப்பும், இருவினைப்பயனும் முதலாக அவ்உளவென் பன பலவாயினும் சாதியொருமைப்பற்றி 'உண்டென்பது' என்றும், (புல்

லறிவாளன்) தானே வேண்டியவற்றைச் சொல்லுதலால் (பேயோடு)

ஒப்பும் வடிவால் ஒவ்வாமையும் உடைமையால் தன்னுடம்பை மறைத்து மக்களுடம்பில் தோன்றுதல் வல்ல 'அலகை' என்றும் சொல்லினர். இவை நான்குபாட்டாலும் புல்லறிவாளர் உறுதிச் சொல்லைக் கொள்ளாமையினது குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) பெரியோர் பலரு முண்டென்பதை யில்லையென்று சொல்லுவான் உலகத்தாராற் பேய் என்று நினைக்கப்படுவான்.

10. He who denies the existence of what the wise believe in, will be regarded as a demon on earth.

* முதலாக என்றமையின், ஆகாயம், அனுமானமுதலிய பிரமாணம், யோகம், ஞானம் முதலியவற்றையுங் கொள்க. † அவர்-உயர்ந்தோர்.

¶ சாதிபற்றியென்றும் பாடமுண்டு. உண்டென்பது சிறுதோன்றிய சாதியொருமைப் பெயர்.

‡ புல்லறிவாளன் பேய்போலுத் தானே வேண்டியவற்றைச் சொல்லுதலால் (பிதற்றுதலால்), அவன் அப்பேயோடு அச்செயலாலொத்து, (மக்கள்) வடிவாலொவ்வாதிருக்கின்றான்; ஆதலால், அவன் தன் (பேய்) உடம்பை மறைத்து மக்களுடம்பில் தோன்றுதல்வல்ல அலகை யாவனென்பதாம்.



## இருபத்துமூன்றுவது அதிகாரம்.

## இகல்:—Enmity.

பரி:—இனி * அவற்றுள் வரும் வேதுளி காமங்களுள் அரசர்க்கு ‡ வேதுளி பெரும்பான்மைத்தாகலின், † அதனுள் வருவன கூறுவான் றொடங்கி, முதற்கண் இகல் கூறுகின்றார். ¶ அஃதாவது இருவர் தம்முட் பொருது வலிதொலைதற் கேதுவாய மாறுபாடு.

தெளி:—இனி அவற்றுள்வரும் கோபம் காமங்களுள் அரசர்க்குக் கோபம் பெரும்பான்மையதாக இருப்பதாகலின், அதனால் வருங்குற்றங் களைச் சொல்லத்தொடங்கி, முதலில் இகல் சொல்லுகின்றார். அஃதாவது இருவர் தம்முள் போர்செய்து வலிதொலைதற்குக் காரணமாய மாறுபாடு.

### க. இகலென்ப வெல்லா வுயிர்க்கும்

### பகலென்னும்

## பண்பின்மை பாரிக்கு நோய்.

பரி:—(இ - ள்.) எல்லாவுயிர்கட்தும் பிறவுயிர்களோடு கூடாமை யென்னுந் தீக்குணத்தை வளர்க்குதலே குற்றம் இகலென்று சொல்லுவர் நூலோர், (எ-று).

0 மக்களையும் விலங்குகளோ டொப்பிப்ப தென்பது தோன்ற 'எல்லா வுயிர்க்கும்' என்றும், | பகுதிக் குணத்தை இடை நின்று விளத்தலிற் 'பக லென்னும் பண்பின்மை' என்றுங் கூறினர். ‖ பண்பின்மை அருத்தா பத்தியாற் றீக்குணமாயிற்று. இதனால் இகலது குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) எல்லா வுயிர்க்கும்-எல்லாவுயிர்களுக்கும், பகலென் னும் - (பிறவுயிர்களோடு) கூடாமையென்னும், பண்பின்மை-தீக்குணத் தை, பாரிக்கும்-வளர்க்கும், நோய்-குற்றம், இகல் - மாறுபாடாம், என்ப- என்று சொல்லுவார், (நூலோர்), (எ-று).

---

* அவற்றுன்-பேதைமை புல்லறிவாண்மைகளால்.

‡ வெகுளி பெரும்பான்மைத்தாகலின் - கோபம் பகைவர் முதலா யினரிடத்து மிகுதியாகவரக்கூடியதாகலின்.

† அதனுன்-வெகுளியால். ¶ அஃதாவது-இகலாவது.

0 இகல் (மாறுபாடு) நல்லறிவுடையாரையும் (பகுத்தறிவில்லாத) விலங்கு (மிருகம்) போலாக்கிவிடுதலால், மக்களுயிர்க்கென்று கூறுது பொதுப்பட 'எல்லாவுயிர்க்கும்' என்று கூறினர். இதனால் மாறுபாடுடை யார் விலங்கோ டொப்பாவ ரென்பதாயிற்று.

| பகுதிக்குணம் - பிறவுயிர்களோடு கூடாமையென்னுந் தீக்குணம். பகுதி - (பிறவுயிர்களோடு) கூடாமை.

‖ நற்குண மின்மையென்றும்பாடமுண்டு. பண்பின்மை-நற்குணமின் மை. அஃதிங்கு அருத்தாபத்தியால் தீக்குணமாயிற்று. தீக்குண மின்று யின் நற்குணமின்மை கூடாது; நற்குண மின்மையால் தீக்குணமுடைமை பெறப்பட்டதென்பது இங்கருத்தாபத்தியாம்.

(இகல்) மக்களையும் விலங்குகளோடு ஒப்பாக்குவ தென்பது தோன்ற 'எல்லாவுயிர்க்கும்' என்றும், பகுதிக் குணத்தை நடுநின்று விளைத்தலால் 'பகலென்னும் பண்பின்மை' என்றும் சொல்லினர். பண்பின்மையென் பது அருத்தாபத்தியினால் தீக்குணமாயிற்று. இதனால் இகலினது குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) எல்லாவுயிர்கட்கும் பிறவுயிர்களோடு கூடாமை யென்னுந் தீக்குணத்தை வளர்க்குங் குற்றம் இகலாகும் என்பது.

1. The disease which fosters the evil of disunion among all creatures is termed enmity by the wise.

## உ. பகல்கருதிப் பற்ற செயினு மிகல்கருதி யின்னாசெய் யாமை தலை.

பரி:—(இ - ள்.)‡ தம்மோடு கூடாமையைக் கருதி ஒருவன் வெறுப் பன செய்தானாயினும், அவனோடு மாறுபடுதலைக் துறந்துத் தாமவனு கீது இன்னாத வற்றைச் செய்யாமை உயர்ந்தது, (எ - று).

செய்யிற் பகைமை வளரத் தாந் தாழ்ந்துவாலானும், † ஒழியின் அப் பற்றுதன தாமே யோய்ந்துபோகத் தாம் ஒங்கிவாலானும் 'செய்யாமை

தலை' என்றார். ¶ பற்றுதனவென்பது விகாரமாயிற்று.

தெளி:—(இ - ள்.) பகல் - (தம்மோடு) கூடாமையை, (ஒருவன்), கருதி - நினைத்து, பற்று - வெறுப்பனவற்றை, செயினும் - செய்தானெயினும், இகல்கருதி - (அவனோடு) மாறுபடுதலைக் குறித்து, (தாம்) அவனுக்கு), இன்னா - துன்பந்தருவனவற்றை, செய்யாமை - செய்யாதொழிதல், தலை - உயர்ந்தது, (எ - று).

(அரசர் இன்னா) செய்தால் பகைமைவளராத் தாம் தாழ்ந்துவருதலாலும், (இன்னாசெய்வது) ஒழிந்தால் அப்பற்றுதன தாமே ஒய்ந்துபோகத் தாம் ஒங்கிவருதலாலும் 'செய்யாமை தலை' என்றார். பற்றுதனவென்பது செய்யுள் விகாரத்தால் பற்று என்றுயிற்று.

(க - து.) மாறுபட்டுத் தமக்குக் கெடுதி செய்பவனுக்குத் தாம் மாறுபட்டுக் கெடுதி செய்யாதிருப்பவ ருயர்ந்தாராவர்.

---

¶ தம்மோடு - அரசர் தம்முடன்.

† ஒழியின் - துன்பந் தருவனவற்றைச் செய்வதொழிந்தால்.

¶ பற்றுதன என்னும் எதிர்மறை வினையாலணையும் பெயர் தகாவெழுத்துப்பேறும் அன்சாரியையும் அகர விகுதியும் தொக்கு நிற்கப் பற்று என நின்றது. தகாவெழுத்துப்பே றென்னுது தச்சாரியை யெனினும் பொருந்தும்.



2. Though one may do disagreeable things from a feeling of disunion, it would be best if nothing painful be done from that of enmity.

ஈ. இகலென்னு மெவ்வநோய் நீக்கிற்
றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும்.

பரி:—(இ - ள்.) மாறுபாடென்று சொல்லப்படுகின்ற துன்பத்தை செய்யு நோயை ஒருவன் தன் மனத்திலின்று நீக்குமாயின், அவனுக்கு அந்நீக்குதல் * எந்நாளும் உளதாய குகழைக் கொடுக்கும், (எ - று).

† தவலில்லாமை அருத்தாபத்தியான் அப்பொருட்டாயிற்று. ‡ தாவில் விளக்கம் ¶ வெளிப்படை. யாவரு நண்பராவர்; ஆகவே, எல்லாச் செல்வமும் மெய்திக்கொடை 0 முதலிய காரணங்களாற் புகழ்பெறு மென்பதாம்.

தெளி:—(இ - ள்.) இகலென்னும் - மாறுபாடென்று சொல்லப்படுகின்ற, எவ்வம் - துன்பத்தை, (செய்யும்), கோய் - நோயை, நீக்கின் , (ஒருவன் தன்மனத்திலிருந்து) நீக்குவானாயின், (அவனுக்கு அக்கீர்த்தியால்), தவ வில்லா - எந்நாளும் உள்ளதற்குக் காரணமாகிய, தாவில் விளக்கம்-புகழை, தரும் - கொடுக்கும், (எ - று).

* எஞ்ஞான்றும் உளனாதல் - உலக முள்ளளவும் புகழுடம்பினனா யிருத்தல்.

† தவலில்லாமை (அழிவில்லாமை) அருத்தாபத்தியான் (இனமாகிய
பொருள்களுள் ஒன்றை எடுத்துக் கூறிய சொல் தன்பொருட் கினமாகிய
பிறபொருளைக் குறிப்பா லறிவித்தலால்) அப்பொருட்டாயிற்று (எஞ்ஞான்று முளனாதல் என்னும் பொருளதாயிற்று).

எஞ்ஞான்று முளனாகானுக்குத் தவலில்லாமை கூடாது; தவலில்லாமை யிருத்தலின், எஞ்ஞான்று முளனாதல் கூடுமென்பதிங் கருத்தாபத்தியாம்.

எஞ்ஞான்று முளனாகான் - ஒருகாலத் திருப்பவன்.

‡ தாவில்விளக்கம் - கெடுதலில்லாத புகழ். புகழாகிய விளக்கிற்கன்றி ஏனைய விளக்கிற்குக் கெடுதலில்லாமை யின்மையால், அவ்விளக்கோடு இதனிடை வேற்றுமைதோன்ற விளக்கென வாளா கூறாது அடைகொடுத்துத் 'தாவில் விளக்கம்' என்று கூறினார். புகழாகிய விளக்கு எங்காளும் உளது
என்பது "ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லால், பொன்றாது நிற்பதொன்றில்" என்னுங் குறளினால் நன்கு விளங்கும்.

ஏனையவிளக்கு - சூரியன், சந்திரன், அக்கினி யென்பனவாம்.

¶ வெளிப்படை - இயல்பாகவே பொருள் விளங்கி நிற்குஞ்சொல்; அஃதாவது இயற்சொல். [தாவில் விளக்கம் என்னுஞ் சொல் இயல்பாகவே புகழ் என்னும் அருத்தத்தைக் காட்டிநின்றதென்பது].

0 முதலிய என்றமையின், கல்வி, ஆண்மைமுதலியவற்றையுங்கொள்க.



தவலில்லாமை யென்பது அருத்தாபத்தியால் எந்நாளும் உளதாதல் என்னும் பொருளதாயிற்று; புகழைத் தாவில் விளக்கம் என்பது வெளிப்படையாம். (இகவென்னு மெவ்வநோய் நீங்கினவனுக்கு) யாவரும் கண்பராவர்; ஆகவே, (அவன்) எல்லாச் செல்வமும்பெற்று ஈதன்முதலிய காரணங்களால் புகழ்பெறுவா னென்பதாம். தவலில்லா என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். அதன் பொருள் அழிதலில்லாத என்பது.

(க - து.) மாறுபாட்டை நீக்கி யிருப்பவன் எப்பொழுதும் புகழுடையவனு யிருப்பன் என்பது.

3. To rid oneself of the distressing disease of enmity
will bestow on one an undiminishing imperishable fame.



ச. இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

பரி:—(இ - ள்.) மாறுபாடென்று சொல்லப்படுகின்ற துன்பங்க ளெல்லாவற்றினும் மிக்க துன்பம் ஒருவனுக் கில்லையாயின், அவ்வின்மை அவனுக்கு இன்பங்களெல்லாவற்றினும் மிக்க வின்பத்தினைக் கொடுக்கும், (எ - று).

துன்பத்துட் டுன்பம்-பலரோடு பொருது வலிதாலேதலான் யாவர்க்கு மெளியனு யுறுவது. † அதனை இடையின்றியே பயத்தலின் ‡ 'இகலென்னுந் துன்பத்துட் டுன்பம்'என்றார். இன்பத்துளின்பம்-யாவரும் நட்பாகலின் எல்லாப்பயனு மெய்தியுறுவது.

தெளி:—(இ-ள்.) இகலென்னும்-மாறுபாடென்று சொல்லப்படுகின்ற, துன்பத்துள் - துன்பங்களெல்லாவற்றினும், துன்பம் - (மிகுந்த) துன்பம், கெடின்-(ஒருவனுக்கு) இல்லையாயின், (அத்துன்பமில்லாமை அவனுக்கு), இன்பத்துள்-இன்பங்களெல்லாவற்றினும், இன்பம் - (மிகுந்த) இன்பத்தை, பயக்கும்-கொடுக்கும், (எ-று).

துன்பத்துட் டுன்பம்-மாறுபாடுடையான் பலரோடு போர் செய்து வலிமை தொலைதலால் யாவர்க்கும் எளியவனாயிருப்பது. அதனைத் தடையில்லாமலேதருதலால் 'இகலென்னுந் துன்பத்துட் டுன்பம்' என்றார். இன்பத்துளின்பம் - மாறுபாடில்லாதவன் யாவர்க்கும் நட்பாகலால் எல்லாப்பயனும் பெற்றிருப்பது.

---

† அதனை-எளியனாயுறுவதை.

‡ இகலால் வரும் துன்பத்துட்டுன்பத்தை 'இகலென்னுந் துன்பத்துட் டுன்பம்' என்று ஒற்றுமைப்படுத்திக் கூறினமையின், இது காரணங் காரிய மாய உபசார வழக்காம். இகலென்னு மென்றார் என்றும் பாடமுண்டு.

(க - து.) மாறுபாடென்னுங் குற்றத்தை யொழித்தவனுக்கு யாவரும் கட்டினராயிருத்தலின், அவன் எல்லா இன்பப் பயனையு மடைவன் என்பது.

4. If emmity which is the greatest of all miseries is destroyed, it will be productive of the greatest happiness.

ரு. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்.

பரி:—(இ-ள்.) தம்மூள்ளத்து மாறுபாடு தோன்றிய வழி அதனை யேற்றுக்கொள்ளாது † சாய்ந்தொழுக வல்லாரை வெல்லுங்கருந் தன்மை யுடையார் யாவர், (எ-று).

இகலை யொழிந் தொழுகல் வேந்தர்க்கு எவ்வாற்றானும் அரிதாகலின் 'வல்லாரை' என்றும், ‡ அவர் யாவர்க்கும் நண்பாகலின் அவரைவெல்லக் கருதுவார் ‡ யாவருமில்லை யென்பார் மிகலூக்குந் தன்மை யவர் யாரே என்

றுங் கூறினர். இவை நான்கு பாட்டானும் இகலாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) இகல்-மாறுபாடு, (தம்மனத்திற் ரோன்றிய விடத்து), எதிர்சாய்ந் தொழுகவல்லாரை-(அம்மாறுபாட்டினை ஏற்றுக்கொள்ளாமற்) சாய்ந்து நடக்கவல்லவரை, மிகலூக்கும்-வெல்ல நினைக்கும், தன்மை யவர்-தன்மையை யுடையவர், யார்-யாவர், (எ-று).

மாறுபாட்டை நீக்கி நடத்தல் அரசர்க்கு எவ்விதத்தாலும் அரிதாகலால் 'வல்லாரை' என்றும், அவர் யாவர்க்கும் நண்பாகலால் அவரை வெல்ல நினைப்பவர் யாவரும் இல்லை யென்பார் மிகலூக்குந் தன்மையவர் யாரே என்றும், சொல்லினர். இவை நான்குபாட்டாலும் மாறுபடாதவர்க்கு வரும் நன்மை சொல்லப்பட்டது.

(க-து.) மாறுபாடு நீங்கி யொழுகுகின்றவர்க்கு யாவரும் நட்பாயிருத்தலால், அவரைவெல்ல நினைப்பவர் ஒருவருமில்லை.

5. Who would think of conquering those who shrink back from cherishing enmity.



சு. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடவு நணித்து.

† சாய்ந்து-தாழ்ந்து. 0 அவர்-அவ்வல்லார்.

யாவரு மில்லையென்றுங் கூறினர் என்றும் பாடமுண்டு.



பரி:—(இ-ள்.) பிறரோடு மாறுபடுதற்கண் மிகுதல் எனக்கு இனி தென்று அதனைச் செய்வானது உயிர்வாழ்க்கை பிழைத்தலும் முற்றக் கெடுதலுந் † சிறிது பொழுதுள் உளவாம், (எ-று).

மிகுதல்-மேன்மை லூக்குதல். இனிதென்பது தான் வேறல் குறித்தல். ‡பிழைத்தல்-வறுமையா னின்னுதாதல். முற்றக் கெடுதல்-இறத்தல் 0 இவற்றோடு நணித்தென்பதனைத் தனித்தனிகூட்டி,உம்மைகளை எதிரதும் இறந்ததுந் தழீஇய வெச்சவும்மைகளாக வுரைக்க. பொருட்கேடும் உயிர்க் கேடும் ¶ அப்பொழுதே யுளவாமென்பதாம்.

தெளி:—(இ-ள்.) இகலின்-(பிறரோடு) மாறுபடுதலில், மிகல்-மிகுதல்,

இனி தென்பவன்-(எனக்கு) இனிதென்று (அம்மாறுபடுதலைச்) செய்பவனது, வாழ்க்கை-உயிர்வாழ்க்கை, தவலும்-பிழைத்தலும், கெடலும்-முற்றக் கெடுதலும், நணித்து-சிறிது பொழுதிலுளவாம், (எ-று).

மிகுதல்-மேலுமேலும் உற்சாகங்கொள்ளுதல்.

இனிதென்பது தான்

வெல்லுதலைக் குறித்தல். பிழைத்தல் - வறுமையால்
தீதுண்டாதல். முற்
றக் கெடுதல் - சாதல். தவலும் கெடலும் என்னும்
இவற்றோடு நணித்து
என்பதனைத் தனித்தனி கூட்டி, தவலும் கெடலும் என்னும்
உம்மைகளை
முறையே எதிரதும் இறந்ததும் தழுவிய
எச்சவும்மைகளாக வுரைத்துக்
கொள்க. (இகலின்மிக லினிதென்பவனுக்கு) பொருட்கேடும்
உயிர்க்கேடும்
அப்பொழுதே உண்டாகு மென்பதாம்.
நணித்து-உடனேயுண்டாவது.

(க - து). பிறரோடு மாறுபடுதலைத் தனக் கினிதென்று கருதி அதனைச் செய்து வருபவன் விரைவிலழிவான் என்பது.

6. Failure and ruin of ones living are not far from him
who says it is pleasurable to excel in enmity.

எ.

மிகன்மேவன் டெய்ப்பொருள் காணு ரிகன்மேவ
லின்ன வழிவி னவர்.

† சிறிதுபொழுதள்-விரைவில்.

‡ பிழைதீதல்-பொருட்கேடு; முற்றக்கெடுதல்-உயிர்க்கேடு.

0 நணித்து என்பதனைத் தவலும் கெடலும் என்னு மிவற்றோடு (தவலும் நணித்து, கெடலும் நணித்து எனத்) தனித்தனி கூட்டி, தவலும் என்ற வும்மையை யெதிரது தழுவிய வெச்ச வும்மையாகவும், கெடலுமென்ற வும்மையை யிறந்தது தழுவிய வெச்சவும்மையாகவுஞ் சொல்லிக்கொள்க வென்பதாம். தவலும் என்ற வும்மை கெடலும் நணித்து என்னும் பொருளைத்தருதலின், எதிரது தழுவிய வெச்சவும்மை யாயிற்று; கெடலுமென்ற வும்மை தவலுதல் நணித்தாதலேயன்றி யென்னும்பொருளைத் தருதலின், இறந்தது தழுவிய வெச்சவும்மை யாயிற்று.

¶ அப்பொழுதே - பிறரோடு மாறுபடுதல் மிகுந்தபொழுதே.



பரி:—(இ-ள்.) இகலோடு மேவுதலையுடைய 0 இன்னாத வறிவினையுடையார் வேற்றி பொருந்துதலையுடைய நீதிநூற்பொருளை யறியமாட்டார், (எ - று).

இன்னாவறிவு - தமக்கும் பிறர்க்குந் தீங்குபயக்குமறிவு. வெற்றி-‡ வழிநின்றூர்க்கு உளதாவது. † காணப்படும் பயத்ததாகலின், ¶ மெய்ந்நூல் எனப்பட்டது. இகலால் அறிவு கலங்குதலின் 'காணர்' என்றூர். இவை யிரண்டு பாட்டானும் இகலினூர்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) இகன் மேவல் - மாறுபாட்டோடு பொருந்துதலை யுடைய, இன்னா - இன்னாத, அறிவினவர் - அறிவினையுடையவர், மிகன் மேவல் -

வெற்றிபொருந்துதலையுடைய, மெய்ப்பொருள் - நீதிநூற் பொருளை, காணர் - அறியமாட்டார், (எ - று).

இன்னைவறிவு - தமக்கும் பிறர்க்கும் தீங்கினைத் தரும் அறிவு. வெற்றி - வழி நின்றார்க்கு உண்டாவது. நீதிநூல் பிரத்தியட்சமாக அறியப்படும் பயனை யுடையதாகலால், மெய்ந்நூல் என்று கூறப்பட்டது. மாறு பாட்டினால் அறிவுகலங்குதலால் (மெய்ப் பொருள்) 'காணர்' என்றார். இவை இரண்டு பாட்டாலும் மாறுபட்டவர்க்கு வரும் தீங்கு சொல்லப் பட்டது.

(க – து.) மாறுபட்ட வறிவினையுடையவர் நீதிநூற்பொருளை யறியமாட்டார் என்பது.

7. Those whose judgement brings misery through enmity cannot understand the triumphant nature of truth.

ஆ. இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு.

பரி:—(இ - ள்.) தன்னுள்ளத்து மாறுபாடு

தோன்றியுவழி () அத

---

0 இன்னுத-தீமையைத் தருகின்ற.

‡ வழி நின்றூர்க்கு - நீதிநூல் கூறிய வழியிலொழுகுகின்றவர்க்கு.

† மருத்துவ (வைத்திய) நூல், தண்ட நூல், நீதிநூல் முதலியனெகிக நூல்கள் இம்மைப்பயனைப்பிரத்தியட்சமாகத் தெரிவிப்பனவாம்.அவ்வியைபு பற்றி நீதிநூல் 'காணப்படும் பயத்ததாகலின் மெய்ந்நூல் எனப்பட்டது' என்று கூறப்பட்டது. காணப்படும் பயத்ததென்பதற்குப் பிரத்தியட்சமாக வறியப்படும் பயனைத் தெரிவிப்பதென்று கொள்க.

¶ மெய்யை யுணர்த்தும் நீதிநூல் காரியவாகு பெயரால் மெய் என்று கூறப்பட்டது. மெய்ந்நூல் - மெய்யையுணர்த்தும் நூல்.

() அதனை யெதிர்தலை - அம்மாறுபாட்டை யேற்றுக்கொள்ளுதலை.



னை யெதிர்தலை யொழிதல் ஒருவனுக்கு ஆக்கமாம்; † அது செய்யாது அதன்கண் மிதுதலை மேற்கொள்வானுயிற் கேடுந் தன்கண் வருதலை மேற் கொள்ளும், (எ - று).

எதிர்தல் - ஏற்றுக்கோடல். சாய்ந்த பொழுதே வருதலின் ‡ 'சாய்தலாக்கம்' என்றூர். ¶ இகலிற்கெனவும் அதனையெனவும் வந்தன வேற்றுமை மயக்கம்.

தெளி:—(இ - ள்.) இகலிற்கு - (தன்னுள்ளத்து மாறுபாடு தோன்றிய விடத்து) அம்மாறுபாட்டினை, எதிர் சாய்தல் - எதிர்தலை யொழிதல், ஆக்கம் - (ஒருவனுக்கு) ஆக்கமாம், (அது செய்யாமல்), அதனை - அம்மாறு பாட்டின்கண், மிகல்-மிகுதலை, ஊக்கின் - மேற்கொள்ளுவானுயின், கேடு - கேடும், ஊக்குமாம் - (தன்னிடத்து வருதலை) மேற் கொள்ளுவான், (எ-று).

எதிர்தல் - மாறுபாட்டை ஏற்றுக்கொள்ளுதல். (மாறுபாடு) சாய்ந்த பொழுதே (ஆக்கம்) வருதலால் 'சாய்த லாக்கம்' என்றார். இகலை என்பது இகலிற்கு எனவும், அதன்கண் என்பது அதனை எனவும் வந்தமையின் வேற்றுமை மயக்கமாயின.

(க - து.) மாறுபாட்டை யொழித்தலால் செல்வமும் அதனை மேற்கொள்ளுதலால் கேடுமுண்டாம் என்பது.

8. Shrinking back from enmity will bring prosperity; but indulging in its rise will hasten ruin.

கூ. இகல்காணு ணுக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தரற்கு.

பரி:—(இ - ள்.) ஒருவன் றன்க ணுக்கம் வரும்வழிக் காணுழண் டாயினும் இகலைநிலையான், றனக்குக் கேடு செய்து கோடற்கட்காரண மின்றியும் ‖ அதன்கண் மிதுதலை நினைக்கும், (எ - று).

† அது செய்யாது - மாறுபாட்டை யேற்றுக்கொள்ளுதலை யொழிதல் செய்யாமல்.

‡ சாய்ந்தபோதுண்டாகும் ஆக்கத்தைச் 'சாய்தலாக்கம்' என்று கூறினமையின், இது காரணம் காரியமாய உபசார வழக்காம். சாய்தல் - காரணம்; ஆக்கம்-காரியம்.

¶ இகலிற்கு என்னும் (கு என்னும்) நான்கனுருபு தனக்குரிய பொருளை விட்டு இகலை என இரண்டனுருபின் பொருளிலும், அதன் -என்னும் (ஐ என்னும்) இரண்டனுருபு தனக்குரிய பொருளை விட்டு அதன்கண் என ஏழனுருபின் பொருளிலும் வந்தமையின், வேற்றுமை மயக்கமா மென்க.

0 ஆக்கம் - செல்வம். ‖ அதன்கண் - மாறுபாட்டில்.



இகலான் வருங்கேடு பிறானன் றென்பது தோன்றத் ‡ 'தரற்கு' என்றார். † நான்காவதும் இரண்டாவதும் ஏழாவதன்கண் வந்தன. ¶ ஆக்கக் கேடுகட்கு முன்னடப்பன இகலினது இன்மை உண்மைக

லென்பதாம்.

தெளி:—(இ - ள்.) ஆக்கம் வருங்கால் - (ஒருவன் தன்னிடத்து) ஆக் கம் வரும்போது, (காரணம் உண்டாயினும்), இகல்-மாறுபாட்டை, காணன்- நினையான், கேடுதரற்கு - (தனக்குக்) கேடு செய்துகொள்ளுமிடத்து, (கார ணம் இல்லாதிருந்தும்), அதனை-அதனிடத்து, மிகல் - மிகுதலை, காணும் - நினைப்பான், (எ-று).

மாறுபாட்டால் வருங்கேடு (தன்னலன்றிப்) பிறரால் அன்றென்பது தோன்றத் 'தரற்கு' எனத் தன்மைக்குரிய சொல்லாற் கூறினர். தரற்கு என்னும் நான்கனுருபும், அதனை என்னு மிரண்ட னுருபும் ஏழனுருபின் பொருளில் வந்தன. ஆக்கக்கேடுகட்குமுன் நடப்பன மாறுபாட்டினது இன்மை உண்மைக லென்பதாம்.

(க - து.) ஒருவன் தன்னிடத்துச் செல்வம் வரும்போது காரணமிருப்பினும் மாறுபாட்டை நினையான்; தனக்குக்கேடு செய்து கொள்ளுமிடத்துக் காரணமின்றியும் அதனை நினைப் பான எனபது.

9. At the approach of prosperity one will not think of enmity; but to court one's ruin one will look to its rise.

கடி. இகலானு மின்னுத வெல்லா நகலானு
நன்னய மென்னுஞ் செருக்கு.

பரி:—(இ - ள்.) ஒருவனுக்கு மாறுபா டொன்றனே இன்னுதன வெல்லாம் உளவாம்; நட்பொன்றனே நல்ல நீதியென்னும் பெருஞ் செல்வம் உளதாம், (எ-று).

---

‡ தால் என்பது இங்குத் தன்மையிடத்திற் குரிய சொல்லாம். "அவற் றுள், தருசொல் வருசொல் லாயிரு இளவியும், தன்மை முன்னிலை யாயீ ரிட த்த". என்பது தொல்காப்பியம்.

† தாற்கு என்னும் நான்கனுருபும், அதனை என்னும் இரண்டனுருபும் தமக்குரிய பொருளைவிட்டுத் தருதற்கண் அதன்கண் என ஏழனுருபின் பொருளில் வந்தன. இவ்வாறு வருவது உருபுமயக்க மெனப்படும்

¶ ஆக்கத்திற்கு முன் நடப்பது மாறுபாட்டினது இல்லாமையும், கேட் டிற்கு முன்னடப்பது மாறுபாட்டினது உண்மையுமாமென்க. எனவே, மாறு பாடில்லையாயின் செல்வமும், அஃதுண்டாயின் கேடும் உண்டாமென்பது பெற்றப்பட்டது.

இன்னாதன - வறுமை, பழி, பாவ † முதலாயின. நகல் - மகிழ்தல். ‡ நகலென்பதூஉஞ் செருக்கென்பதூஉம் தத்தங் காரணங்கட்காயின. ¶ நயமென்னுஞ் செருக்கெனக் காரணத்தைக்காரியமாக உபசரித்தார். இவை மூன்று பாட்டாலும் 0 அவ்விருமையுங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) இகலான் - (ஒருவனுக்கு) மாறுபாடொன்றாலே, இன்னாதவெல்லாம் - துன்பந்தருவனவெல்லாம், ஆம் - உண்டாகும், நகலான் - நட்பொன்றாலே, நன்னயமென்னும் - நல்லநீதியென்னும், செருக்கு - பெருஞ்செல்வம், ஆம் - உண்டாகும், (எ - று).

துன்பந்தருவன - வறுமை, பழி, பாவம் முதலாயின. நகல் - மகிழ்தல். நகலென்பதும் செருக்கென்பதும் தத்தங் காரணங்களுக்காயின. நயமென்னுஞ் செருக்கெனக் காரணத்தைக் காரியமாக உபசரித்துக்கூறினர். இவை மூன்று பாட்டாலும் அவ்விருமையும் சொல்லப்பட்டன.

(க - து.) ஒருவனுக்கு மாறுபாட்டினாலே துன்பமும் நட்பினாலே செல்வமுமுண்டாமென்பது.

10. All miseries are caused by enmity; but by friend- ship good virtuous prosperity will result.

## இருபத்துநான்காவது அதிகாரம்.

பகைமாட்சி:—The Greatness of Enmity.

பரி:—அஃதாவது அறிவின்மை * முதலிய குற்றங்களுடைமையாற்

---

† முதலாயின என்றமையின், பகை, தண்டனை முதலியனவுங் கொள்க.

‡ மகிழ்தல் என்னும் பொருளதான நகல் என்பது அதற்குக் காரண மாய நட்பினையும், தருக்குதலென்னும் பொருளதான செருக்கு என்பது அதற்குக் காரணமாய பெருஞ்செல்வத்தினையு முணர்த்துதலால், இவை காரியவாகு பெயர்களாம்.

¶ நயத்தால் (நீதியால்) உண்டாகும் செருக்கை (பெருஞ் செல்வத்தை) நயமென்னுஞ் செருக்கு என்றொற்றுமைப்படுத்திக் கூறினமையின், இது காரணங் காரியமாய உபசார வழக்காம். காரியத்தைக் காரணமாக வுபசரித்தா லென்றும் பாடமுண்டு. இதற்குக் காரியமாகிய செல்வத்தை அதற்குக் காரணமாகிய நீதியென் றுபசரித்தாரென்று பொருளாம்.

0 அவ்விருமையும் - மாறுபடாதவர்க்கு வரும் நன்மையும் மாறுபட்ட வர்க்கு வரும் தீமையும்.

* முதலிய என்றமையின், பெரியோரைத் துணைக்கொள்ளாமை, இற்றினஞ் சேர்தல், வலி காலம் இடங்களை யறியாமை, சோம்பலுடைமை முதலியவற்றையுங் கொள்க.

† பகையை மாட்சிப்படுத்தல். அரசர்க்கு எவ்வாற்றானும் ‡ பகையின்மை கூடாமையின், () மேற்பொதுவகையான்விலக்கப்பட்டஇகலை ஈண்டுச் சிறப்புவகையான் ¶ விதிக்கின்றாகலின், § இஃததன்பின் வைக்கப் டது.

தெளி:—அஃதாவது அறிவில்லாமை முதலிய குற்றங்களுடைமையால் பகையை மாட்சிமைப்படுத்தல். அரசர்க்கு எவ்வழியாலும் பகையில்லாமை கூடாமையால், முன்பொதுவகையால் விலக்கப்பட்ட இகலை இங்குச் சிறப்புவகையால் விதிக்கின்றாகலால், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

## க. வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா மெலியார்மேன் மேக பகை.

பத:—(இ-ள்.) தம்மின் வலியார்க்குப் பகையாயெதிர்தலை ஒழிக; ஏனை மெலியார்க்குப் பகையாதலை ஒழியாது விரும்புக, (எ-று).

வலியார் என்புழித் துணைவலியுமடங்கலின், மெலியார் என்புழித்

* துணைவலி யின்மையுங் கொள்ளப்படும். அத்துணைதான்

படை பொருண்

() முதலிய வேற்றுமைத்துணையும், கல்லறிவுடைமை நீதிநூல்வழி யொழு கல் முதலிய ஒற்றுமைத்துணையுமென விரண்டாம். ¶¶ அவ்விரண்டு மில்லாதை வெல்லுவார்க்கு வலிதாலேயாமையின், அவரோடு பகைத்தல் விதிக்கப்பட்டது. ‡‡ சிங்க நோக்காகிய இதனுட் பகைமாட்சி

பொதுவகையாற் கூறப்பட்டது.

† பகையை மாட்சிப்படுத்தல்-(அறிவில்லாமை முதலியவற்றையுடைய வாசர் தமது) பகைவரைமேம்படுத்துதல.

‡ பகையின்மை கூடாமையின்-பகைவரில்லாதிருத்தல் முடியாமையால்.

0 மேல் - முன்னுள்ள இகலதிகாரத்தில்.

¶ விதிக்கின்றாராகலின் - நியமிக்கின்றாராதலால்.

§ இஃததன்பின் - பகைமாட்சி யதிகாரம் இகலதிகாரத்தின்பின்னர்.

* துணைவலி - துணையாவாது (உதவிசெய்வாது) வலிமை.

() முதலிய என்றமையின், துணையாயிருப்பவர், சுற்றத்தார், மித்திரர் முதலாயினோரையுங் கொள்க.

: முதலிய என்றமையின், அமைச்சர் புரோகிதர்களின் ஆலோசனைக் கிணங்கி நடத்தல், செய்காரியங்களில் மறதியில்லாமை, ஊக்கமுடைமை முதலியவற்றையுங் கொள்க.

¶¶ அவ்விரண்டும்-வேற்றுமைத்துணையும் ஒற்றுமைத்துணையும். வேற்றுமை-பேதம்; ஒற்றுமை - அபேதம்.

‡‡ சிங்கத்தினது நோக்கம் (பார்வை) முன்னும் பின்னும் செல்லுதல் போன்று இக்குறளிற் கூறிய பகைமாட்சி முன்னதிகாரத்திலும் இவ்வதிகாரத்திற் பின்வருங் குறள்களிலும் பின்னதிகாரத்திலும் செல்லுதலால் 'சிங்கநோக்காகிய இதனுள்' என்று கூறப்பட்டது. "சிங்கம் மிருகத்தை யடித்தவிட்டுத் தூரத்திற்சென்று, ஒருகால் ஆண்டு வேறொருமிருகம் வரின் அதனையுங் கொல்வாமென மீண்டும் அம்மிருகத்தின் பக்கத்தே திரும்பி நோக்குதல் சிங்காவலோகந நியாயமாம்" என்று ஆத்மபுராணம் கூறுகின்றது.

அங்கவியல்—உச - வது பகை மாட்சி.

தெளி:—(இ - ள்.) வலியார்க்கு-(தம்மின்) வலியவர்க்கு, மாறேற்றல்-பகையா யெதிர்தலை, ஓம்புக-ஒழியக்கடவர், மெலியார்மேல்-(மற்றை) மெலியவர்க்கு, பகை - பகையாதலை, ஓம்பா-ஒழியாமல், மேக - விரும்பக்கடவர்.

வலியார் என்ற விடத்துத் துணைவலியும் அடங்கலால், மெலியார் என்ற விடத்துத் துணைவலியில்லாமையும் கொள்ளப்படும். அத்துணைதான் படை பொருள் முதலிய வேற்றுமைத் துணையும், நல்லறிவுடைமை நீதிநூல் வழியில் ஒழுகுதல் முதலிய ஒற்றுமைத் துணையும், என விரண்டாம். அவ்வி ரண்டு மில்லாரை வெல்வார்க்கு வலிமை தோலையாமையால் அவரோடுபகை த்தல் விதிக்கப்பட்டது. சிங்கநோக்காகிய இக்குறளுள் பகைமாட்சி பொது வகையால் சொல்லப்பட்டது. படை-சேனை.

(க - து.) அரசர் வலியாரோடு பகைத்தலை யொழிந்து மெலி யாரோடு பகைத்தலை விரும்பக் கடவர் என்பது.

1. Avoid offering resistance to the strong; but never fail to cherish enmity towards the weak.

உ. அன்பில னென்ற துணையிலன் றுன்றுவ்வா

னென்பரியு மேதிலான் றுப்பு.

பரி:—(இ - ள்.) ஒருவன் றன்சுற்றத்தின்மே
லன்பிலன், அதுவே யன்றி வலிய துணையிலன், அதன்மேற்
றன்வலியிலன், அப்பெற்றியான் ‡ மேல்
வந்த பகைவன் வலியினை யாங்ஙனந் தொலைக்குந்தம்,

(எ - று).

சுற்றமும் * இருவகைத் துணையும்
தன்வலியுமிலனாகலின், அவன்
மேற் செல்வார்க்கு வலி வளர்வதன்றித் தொலையா தென்பதாம். துவ்வான்-
† துவ்வினைச் செய்யான்,

தெளி:—(இ - ள்.) (ஒருவன்) அன்பிலன் - (தன் சுற்றத்தார் மேல்)
அன்பிலன், ஆன்றதுணையிலன் - (அதுவே யன்றி) வலியதுணையிலன், தான்
றுவ்வான் - (அதன் மேல்) தான்வலியிலன், (அத்தன்மை யுடையவன் மேல்
வந்த), எதிலான் - பகைவனது, துப்பு - வலிமையை, என்பரியும்-எப்படித்
தொலைப்பான், (எ - று).

சுற்றமும் இருவகைத்துணையும் தன்வலியும் இலனாகலால், அவன் மீது
போர்க்குச் செல்வார்க்கு வலி வளர்வ தல்லாமல் தொலையா தென்பதாம்.

துவ்வான்-துவ்வினை (வலியினை)ச் செய்யாதவன்.

‡ மேல்வந்த-தன்மீது போர்க்குவந்த.

* இருவகைத்துணை - படை பொருள் முதலிய வேற்றுமைத் துணையும், கல்லறிவுடைமை நீதிநூல் வழியி லொழுகுதல் முதலிய ஒற்றுமைத் துணையுமாம்.

† துவ்வினைச் செய்யான்-வலிமையினைச் செய்யாதவன் ; அஃதாவது பகை வருடன்போர்புரியும் வலிமையில்லாதவன்.





(க - து.) சுற்றத்தார் மீது அன்பும் துணையும் வலியுமில்லாதவன்மேல் போர்க்கு வரும் பகைவனது வலிமை யொருகாலுந் தொலையா தென்பது.

2. How can he who is unloving (his relations), destitute of powerful aids, and himself without strength overcome the might of his enemy.

கூ. அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு.

பரி:—(இ - ள்.) ஒருவன் ¶ அஞ்சுவேண்டாதவற்றிற்கு அஞ்சா நிற்
தும்; அறியவேண்டுமவற்றை யறியான்; பிறரோடு

பொருத்தமிலன்;

o இவற்றின்மேலும் யாவரிடமாட்டும் இவறன்மாலையன்;
இப்பேற்றியான்

பகைவர்க்கு மிக வெளியன், (எ - று).

† 'தஞ்சமெளியன்'என்பன * ஒரு பொருட்பன்மொழி. ‡ இந்நான்கு குற்றமு முடையான் பகையின்றியு மழியுமாகலின் 'தஞ்சமெளியன்' என்றார்.

தெளி:—( இ-ள்.)

(ஒருவன்) அஞ்சும்-(அஞ்சவேண்டாதன வற்றிற்கு)

அஞ்சாநிற்பன், அறியான் - அறிய வேண்டுவனவற்றை யறியான், அமை

விலன் - (பிறரோடு) பொருத்தமிலன், ஈகலான் - (இவற்றின் மேலும் யாவரிடத்தும்) உலோபகுணமுடையன், (இத்தன்மை யுடையான்), பகைக்கு-பகைவர்க்கு, தஞ்சமெளியன் - மிகவெளியனுவான், (எ - று).

'தஞ்சமெளியன்' என்பன ஒரு பொருள்குறித்த பலசொல். இந்நான்கு குற்றமு முடையான் பகையில்லாமலும் அழிவானுகலின் பகைக்குத் 'தஞ்சமெளியன்' என்றார். அஞ்சுதல்-மனவுறுதியின்மை.

(க - து.) அச்சமும், அறியாமையும், கட்பில்லாமையும், உலோப குணமுமுடையவன் பகைவர்க்கு மிகவுமெளியனுவன்.

3. He who is timid, ignorant, unsociable, and niggardly will in the estimation of his enemies be miserably weak.

ச. நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது.

---

¶ அஞ்சவேண்டுவன-பாவமும் பழியுங் கேடுமுதலாயினவாம்.

o இவற்றின் மேலும்-அஞ்சுதல், அறியாமை, அமைவின்மை யென்னு மிவற்றின்மேலும்.

† "தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே" என்பது தொல்காப்பியம்.

* "ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா" என்று நன்னூல் கூறுகின்றது.

‡ இந்நான்கு குற்றமும் என்றது அஞ்சுதல், அறியாமை, அமைவின்மை, ஈயாமை என்பனவற்றை.

## அங்கவியல்—உச-வது பகை மாட்சி.

**939**

பரி:—(இ - ள்.) ஒருவன் வேதனியினீங்கான், அதுவே யன்றித்தான் நிறையுடையனல்லன், அவன்மேற் சேறல் எக்காலத்தும் எவ்விடத்தும் யார்க்கீது மெளிது, (எ - று).

* நிறை-மறைபிறாறியாமை. வெகுடன் மாலையருகலானும், மறைவெளிப்படுத்தலானும், மேற்செல்வார்க்குக் காலமும் இடனும் வலியுமறிந்து சேறல் வேண்டாதாயிற்று. இனி ¶ இனிதென்று பாடமோதி அவன்பகை மை இனிதென்றுரைப்பாரு முளர்.

தெளி:—(இ - ள்.) (ஒருவன்)வெகுளி-கோபத்தினின்றும், நீங்கான்-, நிறையிலன் - (அதுவேயன்றித்தான்). நிறையுடையனல்லன், (அவன்மேல் போர்க்குச் செல்லுதல்), எஞ்ஞான்றும்-எக்காலத்தும், யாங்கணும்-எவ்விடத்தும், யார்க்கும்-எவர்க்கும், எளிது-இலேசாம், (எ-று).

நிறை - மறைபிறாறியாமை. கோபிக்குந்தன்மையுடையவனுகலாலும்,

மறையை வெளிப்படுத்தலாலும், இவன்மேல் போர்க்குச்

செல்வார்க்குக் காலமும் இடமும் வலியும் அறிந்து செல்லுதல் வேண்டுவ தில்லை யாயிற்று.

மறை-இரகசியம்.

(க - து.) கோபமும் நிறையில்லாமையு முடையவன் எக்கா

லத்தும் எவ்விடத்தும் யாவர்க்கும் எளியவனுவன் என்பது.

4. He who neither refrains from anger nor keeps his secrets will at all times and in all places be easily conquered by all.

ரு. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான் பண்பிலன் பற்றார்க் கினிது.

பரி:—(இ - ள்.) ஒருவன் நீதிநூல யோதான், அது விதித்த தொழில்களைச் செய்யான், தனக்கு வரும் பழியைப்பாரான், தான் பண்புடையனல்லன், அவன்பகைவர்க்கு †அப்பகைமையினிது, (எ-று).

---

* கலித்தொகை (நெய்தற்கலி 16 - வது செய்யுள்) "நிறையெனப்

படுவது மறைபிற ரறியாமை" என்று கூறுகின்றது. இதற்குப் பொருள்

நச்சினார்க்கினியார் "நிறை யென்று சொல்லப்படுவது மறைந்தொருகாரியம் பிறரறியாம லொழுகுதலே" என்றனர்.

¶ யார்க்கு மெளிது என்பதனை யார்க்குமினிது என்று பாடமோதி, அதற்கு அவனது பகைமை யார்க்கு மினிதென்று பொருள் கூறுவாருமுண்டென்பது.

† அப்பகைஞை - அவனுடைகொண்ட பகை.



* தொல்லோ ரழிப்பட்டு வழங்கிவந்த தாகலான் 'வழி' என்றும், தப்பாது பயன் படுதலின் 'வாய்ப்பன' என்றும், ¶ இக்குற்றங்களுடையானு மேயழிதலிற் 'பற்றார்க் கினிது' என்றுங் கூறினர்.

தெளி:—(இ-ன்.) (ஒருவன்) வழிநோக்கான்-நீதிநூலைக் கல்லான், வாய்ப்பன செய்யான்-(அந்நீதிநூல்) விதித்த தொழில்களைச் செய்யான், பழி நோக்கான் - (தனக்குவரும்) பழியைப்பாராான், பண்பிலன் - (தான்) குணமுடையனல்லன், பற்றார்க்கு - (அவன்) பகைவர்க்கு, இனிது - (அப்பகை) இனியதாம், (எ-று).

(நீதிநூல்) தொல்லோர்வழியில் ஓதப்பட்டு வழங்கிவந்ததாகலால் 'வழி' என்றும், (அந்நீதிநூல் விதித்த தொழில்கள்) தப்பாது பயன் படுதலால் 'வாய்ப்பன' என்றும், இக்குற்றங்களுடையவன் தானே அழிதலால் 'பற்றார்க்கினிது' என்றும் சொல்லினர்.

(க – து.) நீதிநூலை யோதாமலும், அது விதித்த தொழில் களைச் செய்யாமலும், தனக்கு வரும் பழியைக்கருதாமலும், பண் புடைய ஞகாமலு மிருப்பவனது பகைமை அவன் பகைவர்க்கு மிகவுமினிதாம் என்பது.

5. He who reads not moral codes, does nothing that is enjoined by them, cares not for reproach and is destitute of good qualities, is a pleasing object to his enemies.



கூ.

காணைச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணமை பேணப் படும்.

பரி:—(இ - ள்.) தன்னையும் பிறரையுந் தானறியாமைக் கேது வாய வேதளியை யுடையான் யாவன், மேன்மேல் வளரா நின்ற மிக்க காமத்தையுடையான் யாவன், அவாது பகைமை விரும்பிக் கொள்ளப் படும், (எ - று).

$ காணுதை சினமென்பது விகாரமாயிற்று. † முன்னோனுக்கு யாவரும் பகையாகலானும், ‡ எனோனுக்குக் காரியந் தோன்றுமையானும், தாமே யழிவ ரென்பது பற்றி இவர் 'பேணமை பேணப்படும்' என்றார்.

• தொல்லோர்-நீதிநூலியற்றிய முன்னோர்.

¶ இக்குற்றங்க ளென்றது வழிநோக்காமை, வாய்ப்பன செய்யாமை, பழிநோக்காமை, பண்பில்லாமைகளை.

§ காணுத என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் தகரவெழுத்துப் பேற்றோடு கூடிய அகர விகுதி கெட்டுக் காண் என நின்றது.

† முன்னேனுக்கு-காணுச்சினத்தானுக்கு.

‡ எனேனுக்கு-கழிபெருங்காமத்தானுக்கு.

## அங்கவியல்—உகரவீற்றுப் பகை மாட்சி.

**941**

தெளி:—(இ-ள்.)

காணுச்சினத்தான்-(தன்னையும் பிறரையும் தான்) அறியாமைக்குக் காரணமாகிய கோபத்தை யுடையவன் (யாவன்), கழி பெருங்காமத்தான்-மேலுமேலும் வளர்ந்து நின்ற மிகுந்த காமத்தையுடைய வன் (யாவன்), பேணுமை-(அவரது) பகைமை, பேணப்படும்-விரும்பிக் கொள்ளப்படும், (எ-று).

காணுத சினம் என்பது காணுச்சினமென விகாரமாயிற்று. முன்னவனுக்கு யாவரும் பகையாகலாலும், மற்றையவனுக்குக் காரியம் தோன்றுமையாலும், அவர்தாமே அழிவரென்பதுபற்றி இவர் 'பேணுமை பேணப்படும்' என்றார்.

(க - து.) கோபத்தையும்
காமத்தையுமுடையவர் பகைவர்
க்கு மிகவெளியராவர் என்பது.

6. Highly desirable is the enmity of him whose anger
is blind and whose lust increases beyond measure.

எ. கோடித்துங் கொளல்வேண்டு † மன்ற
வடுத்திருந்து
மாணுத செய்வான் பகை.

பரி:—(இ - ள்.) வினையைத் தொடங்கியிருந்து அதற் கேலா தன செயீவான் பகைமையைச் சிலபொரு ளழியக் கொடித்தாயினுங் கோடல் ஒருதலையாகவேண்டும், (எ-று).

எலாதன- ‡ மெலியனுய் வைத்துத் துணிதலும் ¶வலியனுய் வைத்துத்
தணிதலும் * முதலாயின. o அப்பொழுது + அதனுற் சிலபொருளழியினும்
பின் பல பொருளெய்தற்கு ஐயமின்மையின் 'கொளல் வேண்டுமன்ற' என்

ரூர். இவையாறுபாட்டானும் ‖ அது சிறப்புவகையாற் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) அடுத்திருந்து - (தொழிலைத்) தொடங்கியிருந்து,

மாணுத - (அத்தொழிற்குப்) பொருந்தாதனவற்றை, செய்வான் - செய்பவனது, பகை - பகைமையை, கொடுத்தும் - (சிலபொருள் அழியக்) கொடுத்தாயினும், கொளல் - கொள்ளுதல், மன்ற - நிச்சயமாக, வேண்டும்-,(எ-று).

---

† "மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்" என்பது தொல்காப்பியம்.

‡ மெலியனுய்வைத்துத் துணிதல்-தன்வலி, துணைவலி, வினைவலி களுள் குறைவுள்ளவனு யிருந்தும் பகைவருடன் போர்செய்ய நிச்சயித்தல்.

¶ வலியனுய் வைத்துத்தணிதல் - தன்வலிமுதலியவற்றுள் மேம்பட்ட வனுயிருந்தும் பகைவருடன் போர்செய்யா தடங்கிக் கிடத்தல்.

* முதலாயின என்றமையின், போர்க்குச் சென்றுள்ள சுத்தவீரரிடத் துச்சந்தேகமுறுதல், தக்கவாறு பொருள்தாராமைமுதலியவற்றையுங்கொள்க.

o அப்பொழுது- பகையைக்கொள்ளுங் காலத்தில்.

+ அதனல் - அப்பகையைக்கொள்ளுதலால். ‖ அது-பகைமாட்சி.

பொருந்தாதன-மெலியவனாயிருந்தும் துணிதலும் வலியவனாயிருந்தும் தணிதலும் முதலாயின. அப்பொழுது அதனால் சிலபொருள் அழியினும் பின்னே பலபொருள்களைப் பெறுதற்குச் சந்தேகம் இல்லாமையால் (அடுத்திருந்து மாணாதசெய்வான்பகையைக் கொடுத்துங்) 'கொளல் வேண்டுமென்ற' என்றார். இவை ஆறுபாட்டாலும் அது சிறப்பு வகையால் சொல்லப்பட்டது.

(க - து.) தகுதியில்லாத காரியங்களைச் செய்பவனது பகையினைப் பொருள்கொடுத்தாயினுங் கொளல் வேண்டும் என்பது.

7. It is indeed necessary to acquire even by purchase the enmity of him who having begun a work does what is not conducive to its fulfilment.

அ. குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்

கினனிலனா மேமாப் புடைத்து.

பரி:—(இ - ள்.) ஒருவன் குணனொன்று மிலனாய் உடைய குற்றம் பலவாயவழி அவன் துணையிலனாம்; * அவ்விலனாதறானே அவன் பகைவர்க்குத் துணையாதலை யுடைத்து, (எ - று).

குணம் -¶ இறைமாட்சியுட் சொல்லியன. குற்றம்-‡ இவ்வதிகாரத்துச் சொல்லியனவும் மற்றும் $ அத்தன்மையனவும். துணை - சுற்றம், நட்பு, பொருள், படை † முதலாயின. பகைவர்க்கு ‖ இவற்றானுளதாம் பயன் () றானே யுளதாமாகலின் 'ஏமாப்புடைத்து' என்றார். o இலனாயென்னுஞ் செய்தெனெச்சம்உடையவென வந்த பெயரெச்சக் குறிப்புக்கொண்டது.

• அவ்விலனுதருனே - துணையில்லாதவனு யிருத்தல்தானே.

¶ இறைமாட்சியுள் சொல்லியன - அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தாங்காமை, கல்வி, தணிவுடைமை முதலியனவாம்.

‡ இவ்வதிகாரத்துச் சொல்லியன - அன்பின்மை, துணையின்மை, வலியின்மை முதலியனவாம்.

§ அத்தன்மையனவும் என்றது பிறரது மகளிரை வௌவுதல், பிறர் பொருளை யநியாயமாக அபகரித்தல், துணையாகாதவரைத் துணையாகக்கொள்ளுதல் முதலியவற்றை.

† முதலாயின என்றமையின், அமைச்சர், புரோகிதர் முதலாயினோரையும் அரண் முதலியவற்றையுங் கொள்க.

‖ இவற்றுன் - சுற்றம் கட்பு முதலியவற்றுல்.
() தானே - சுற்றம் கட்பு முதலியனவில்லாமல் தானே.

o இலனுய் என்னும் செய்து என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம் இயைபுநோக்கி வருவித்துக்கூறிய உடைய என்னும் உடன்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சத்தைக் கொண்டு முடிந்தது.

அங்கவியல்—உசு-வது பகை மாட்சி.

**943**

தெளி: —(இ--

ள்.) குணனிலனுய் - (ஒருவன்) குணமொன்றுமிலனுய், குற்றம்பலவாயின் - (உடைய) குற்றம் பலவாகியவிடத்து,

இனனிலனும்- (அவன்) துணையில்லாதவனாவன், (அவ்விலனுதல்தானே), மாற்றூர்க்கு - (அவன்) பகைவர்க்கு, ஏமாப்புடைத்து - துணையாதலை யுடைத்து, (எ - று).

குணம் - இறைமாட்சி யதிகாரத்துள் சொல்லியிருப்பன. குற்றம்-இவ் வதிகாரத்துள் சொல்லியிருப்பனவும் மற்றும் அத்தன்மையனவுமாம். துணை- சுற்றம், நட்பு, பொருள், படை முதலானவை. பகைவர்க்கு இவ்ற்றால் உண்டாகும்பயன் தானே உண்டாமாகலால் 'ஏமாப்புடைத்து' என்றார். இலனுய் என்னும் செய்து என்னும் வினையெச்சம் உடைய என்று வந்த குறிப்புப் பெயரெச்சத்தைக் கொண்டு முடிந்தது.

(க - து.) குணமின்மையும் பலகுற்றமுமுடைய அரசன் துணையில்லாதொழிதலால், அவன் தன்பகைவர்க்கு மிகவு மெளியவனாவான் என்பது.

8. He will become friendless who is destitute of good qualities and whose faults are many; such a character is a help to his enemies.

கூ. செறுவார்க்குச் சேணிகவா
வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின்.

பரி:—(இ-ள்.) நீதியை யறிதலில்லாத அஞ்சும் பகைவரைப் பெற்றல், அவரைச் செறுவார்க்கு உயர்ந்த வின்பங்கள் நீங்கா, (எ-று).

† உபாயமறிதலும் ‡ அறிந்தாற்செய்து முடிக்குந் திண்மையுமில்லா தாரே பகைவராதல் கூடாமையிற் 'பெறின்' என்றும், ¶ அவரை யறிந்து * மேற்சென்ற பொழுதே பகையின்மையுஞ் செல்வமும் ஒருங்கே யெய்தலிற் $ சேணின்பமிகவா என்றும், கூறினர்.

தெளி:—(இ-ள்.) அறிவிலா-(நீதியை) அறிதலில்லாத, அஞ்சும்-,பகைவர்-பகைவரை, பெறின்-பெற்றால்,செறுவார்க்கு-(அப்பகைவரைப்) பகைப்பவர்க்கு, சேண்- உயர்வுள்ள, இன்பம்-இன்பங்கள், இகவா-நீங்கா, (எ-று).

உபாயமறிதலும் அறிந்தால் செய்து முடிக்கும் உறுதியும் இல்லாதவரே பகைவராதல் கூடாமையால் 'பெறின்' என்றும், அவரை அறிந்து மேற்சென்றபொழுதே பகையில்லாமையும் செல்வமும் ஒருசேர அடைதலால் சேணின்பமிகவா என்றும், சொல்லினர்.

---

† உபாயம்-சாம தான பேத தண்டமென்னும் நால்வகை யுபாயம்.

‡ அறிந்தால்-அவ்வுபாயத்தை யறிந்தால்.

¶ அவரை - அப்பகைவரை.

* மேற்சென்ற பொழுதே - அப்பகைவருடன் போர்புரியச் சென்ற காலத்திலே.

$ சேணுடையின்பங்களிகவா என்றும் பாடமுண்டு.

(க - து.) நீதியைபறியாமையும் அஞ்சுதலு முடையவரைப் பகைத்தவர்க்கு உயர்வுள்ள இன்பங்கள் நீங்கமாட்டா என்பது.

9. If there be ignorant and timid enemies there will be no end of lofty delights to the victorious.

சுo. *கல்லான் வெகுளுஞ் சிறுபொரு
ளெஞ்ஞான்று
மொல்லாஅ னொல்லா தொளி.

பரி:—(இ - ள்.) நீதிநூலைக் கல்லாதானைடு பகைத்தலான் வரும் எளிய பொருளை மேவாதானை எஞ்ஞான்றும் புகழ் மேவாது, (எ-று).

சிறு பொருள் - * முயற்சி சிறிதாய பொருள். நீதியறியாதானை வேறல் எளிதாயிருக்கவும் ¶ அது மாட்டாதானை வெற்றியான் வரும்புகழ் கூடாதெ

ன்பதாம்; ஆகவே, இச்சிறிய முயற்சியாற் பெரிய பயனெய்துக வென்றவா ருயிற்று. ‡ இதற்குப் பிறவெல்லாம் அதிகாரத்தோடு ‖ மாறுதன்மேலும் ஓர் () பொருட்டொடர்புபடாம லுரைத்தார். இவை மூன்று பாட்டானும் o அதனினுைய பயன் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) கல்லான் (நீதிநூலைக்) கல்லாதவனைடு, வெகுளும்- பகைத்தலால் வரும், சிறுபொருள்

- எளிய பொருளை, ஒல்லானை - அடையாதவனை, எஞ்ஞான்றும் - எந்நாளும், ஒளி - புகழ், ஒல்லாது - அடையாது.

சிறுபொருள்-முயற்சி சிறிதாகிய பொருள். நீதி யறியாதவனை வெல்லுதல் எளிதாயிருக்கவும் அதுமாட்டாதவனை வெற்றியால் வரும்புகழ் கூடா தென்பதாம்; ஆகவே, இச்சிறிய முயற்சியால் பெரிய பயனடைக வென்ற வாழ்த்தியிற்று. இவை மூன்று பாட்டாலும் அதனாலாகிய பயன் சொல்லப்பட்டது.

(க - து) நீதிநூலைக் கல்லாதவனுடன் பகைத்தலால் வரும் பொருளை யடையாத அரசனைப் புகழ் ஒருபோதும் அடையாது.

10. The light of fame will never be ganied by him who

gains not the trifling reputation of having fought an unlear- ned enemy.

* முயற்சி சிறிதாயபொருள்-சிறுமுயற்சியால் வந்த பெரும்பொருள்.
¶ அது மாட்டாதானை-(நீதியறியாதவனை) வெல்லுதல் மாட்டாதவனை.
‡ இதற்கு - இக்குறளுக்கு. ‖ மாறு தன்மேலும்-மாறுபடுதல் மேலும்.
() பொருட்டொடர்பு - அர்த்தத்தின் சம்பந்தம்.
o அதனினுயபயன் - பகைமாட்சியா லாய பயன்.

அங்கவியல்—உரு-வது பகைத்திறந் தெரிதல்.

**945**

இருபத்தைந்தாவது அதிகாரம். பகைத்திறந் தெரிதல்:—

## Examining the nature of Enmity.

பரி:—அஃதாவது †மாணுத பகையை ஆக்குதற் குற்றமும், முன் ஆகி நின்ற பகையுள் நட்பாக்கற்பாலதும், நோதுமலாக்கற்பாலதும், ‡ அவற்றின்கட் செய்வதும், ஏனைக் களைதற்பாலதன்கட் செய்வனவும், ¶ களையும் பருவமும், களையாக்காற்படு மிழுக்கும் என்று இத்திறங் களை ஆராய்தல். § இரட்டுற மொழிதலென்பதனும் பகையது திறமும் பகையிடத்தாக்குந் திறமுமென விரிக்கப்பட்டது. | இவையெல்லாம் மாணுப் பகையவாகலின், ‖ இது

பகைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது மாட்சிமையில்லாத பகையை ஆக்குதற்குற்றமும், முன்புண்டாகி நின்ற பகையுள் ஒட்பாக்குந்தன்மையதும், அயலாக்குந் தன்மையதும், அவற்றின்கண் செய்வதும், மற்றைக்களையுந்தன்மையுடையதன் கண் செய்வனவும், களையும் பருவமும், களையாமற்போலுண்டாகுங் குற்றமும் என்று இவ்விதங்களை ஆராய்தல். இரட்டுற மொழிதலென்னு முத்தியால் (அப்பகைத்திறந் தெரிதல்) பகையது திறமும் பகையினிடத்துச் செய்யும் திறமுமென்று விரிக்கப்பட்டது. இவையெல்லாம் மாட்சிமையில்லாத பகையினிடத்தன வாகலால், இது பகைமாட்சியின் பின் வைக்கப்பட்டது.

க. பகையென்னும் பண்பிலதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று.

பரி:—(இ-ள்.) பகையென்று சொல்லப்படுந் தீமை பயப்பதனை ஒருவன் விளையாட்டின் கண்ணே யாயினும் விரும்புதலியற்கைத் தன்றென்று கூறும் நீதிநூல், (எ-று).

மாறுத பகையை யாக்கிக் கோடல் எவ்வாற்றானுந் தீமையே பயத்தலிற் ○ பண்பிலது என்றும், *அதனை விளையாட்டின்கண் வேண்டினுஞ்

† மாணாதபகை - நன்மைபயவாத பகை.

‡ அவற்றின்கண் - நட்பாக்குந் தன்மையதும் அயலாக்குந் தன்மையது மாய இரண்டன்கண். ¶ கேளும் பருவம் - அழிக்குங் காலம்.

§ இரட்டுற மொழிதல் - ஒருவாக்கியத்தை இரண்டு பொருள்படச் சொல்லுதல். இங்குப் பகைத்திறந்தெரிதல் என்னும் வாக்கியத்தில் பகைத் திற மென்பதனை ஆறும் வேற்றுமைத் தொகையாகவும் எழாம் வேற்றுமை யுருபும் பொருளுமுடன் றொக்கதொகையாகவும் கொண்டு, முறையே அது 'பகையது திறமும்'என்றும், 'பகையிடத்தாக்குந் திறமும்'என்றும், விரிக்கப் பட்டவாறறிக.

| இவையெல்லாம்-இத்திறங்கள்யாவும். ‖ இது-பகைத்திறந்தெரிதல்.

o பண்பிலதனை என்றும் பாடமுண்டு.

* அதனை - மாணாத பகையை.





செற்றமே விலைக்கு மெய்யாமாகலின் 'நகையேயும்'என்றும், வேண்டாமை தொல்லையோரது துணிவென்பார் நீதிநூன்மேல் வைத்துங் கூறினர். * அப் பெயர் அவாய் நிலையான் வந்தது.

கெளி:—(இ-ள்.) ஒருவன்—,பகையென்னும்-பகையென்று சொல்லப் படும், பண்பிலதனை-தீமை யுண்டாக்குவதனை, நகையேயும்-விளையாட்டின் கண்ணே யாயினும், வேண்டற்பாற்றன்று—விரும்புதற் றன்மை யுடைய தன்று, (என்று சொல்லும் நீதிநூல்), (எ-று).

மாட்சிமையில்லாத பகையை யாக்கிக்கொள்ளுதல் எவ்விதத்தாலும் தீமையே தருதலால் பண்பிலது என்றும், அதனை விளையாட்டின்கண்

வேண்டினும் பகையே விளைந்து மெய்யாமாகல்லா

'நகையேயும்' என்றும்,

(பகை யென்னும் பண்பிலதனை) வேண்டாமை பழைமையோரது தணி வென்பார் நீதிநூல்மேல் வைத்தும் சொல்லினர். நீதிநூல் என்னும் பெயர் அவாய்நிலையால் வந்தது.

(க-து.) பிறரோடு பகைத்தலை விளையாட்டின்கண்ணும் விரும்புதல் கூடாது என்பது.

1. The evil of enmity
by one even for fun.

is not of a nature to be desired

உ.

† வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
‡ சொல்லே ருழவர் பகை.

பரி:—(இ-ள்.) ஒருவன் வில்லே ¶ ஏராகவுடைய உழவரோடு பகை கொண்டானாயினும், சொல்லே ஏராகவுடைய உழவரோடு பகை கொள்ளாதொழிக, (எ-று).

§ சொல் ஆகுபெயரான் நீதிநூன்மே னின்றது. வீரம் சூழ்ச்சி யென்னும் ஆற்றல்களுள் வீரமே யுடையாரோடு* பகைகொண்டாற் கேடுவருதல் ஒருதலையன்று; வந்ததாயினுந் தனக்கேயாம்; o ஏனைச் சூழ்ச்சி யுடையாரோ

---

* அப்பெயர்-நீதிநூல் என்னும் பெயர். வருவித்துரைத்த கூறும் என்னும்வினை நீதிநூல் என்பதனை அவாய் (வேண்டி) நிற்றலின், அது வருவித் துரைக்கப்பட்டது.

† வில்லே ருழவர்-வீரர். வில் என்று கூறினமையின், மற்றையவாள் வேல் முதலிய படைகளும் இனங்களாய் எஞ்சி (குறைந்து) நின்றன.

‡ சொல்லே ருழவர்-அமைச்சர். ¶ ஏர்-கலப்பை.

§ சொல் என்பது சொல்லாலாகிய நீதிநூலை யுணர்த்துதலால், கருவியாகு பெயராம். சொல் - காரணம்; நீதிநூல் - காரியம்.

o ஏனைச் சூழ்ச்சியுடையாரோ டாயின் - மற்றைச் சூழ்ச்சியுடையவரோடு பகைகொண்டால்.

## அங்கவியல்—உரு - வது பகைத்திறந் தெரிதல்.

## 947

டாயிற் றன்வழியினுள்ளார்க்குந் தப்பாதுவருதலின், * அது கொள்ளினும் இது கொள்ளற்க வென்றார். உம்மையான் அதுவு மாசாமை பெறுதும்.

† இரண்டு முடையாரோடு கொள்ளலாசாமை சொல்லவேண்டாதாயிற்று.

‡ உருவக விசேடம்.

தெளி:—(இ-ள்.) (ஒருவன்) வில்-வில்லே,
ஏர்-ஏராக, (உடைய), உழ வர்-உழவரோடு,
பகைகொளினும்-பகை கொண்டானாயினும், சொல்-சொல் லே,
ஏர்-ஏராக, (உடைய), உழவர்-உழவரே:
ரோடு, பகை-, கொள்ளற்க-கொள்ளா தொழியக் கடவன், (எ-று).

சொல் ஆகுபெயரால் நீதிநூலின்மேல் நின்றது. (ஒருவன்) வீரம் ஆலோசனை என்னும் வலிமைகளுள் வீரமே யுடையவரோடு பகை கொண் டால் (அவனுக்குக்) கேடு வருவது நிச்சயமன்று; வந்தாலுலும் தனக்கே யாம்; மற்றையாலோசனை யுடையவரோடாலுல் (கேடு தனக்கேயன்றித்) தன் வமிசத்தோர்க்கும் தப்பாது வருதலால், (அவன்) அது கொள்ளினும் இது கொள்ளற்க வென்றார். கொளினும் என்ற எதிர்மறை உம்மையால் வில்லேருழவர் பகையும் ஆகாமைபெறப்படும். இரண்டு முடையவரோடு பகைகொள்ளலாகாமை சொல்லவேண்டாதாயிற்று. இது சிறப்புருவகவணி.

(க-து.) அரசனுக்கு வில்லேருழவரது பகையிலும் சொல்லே ருழவரதுபகை கொடியதா மென்பது.

2. Though the king may incur the enmity of warriors whose ploughs are bows, he should not incur the enmity of ministers whose ploughs are words.

---

* வில்லேருழவர் பகைகொளினும் சொல்லேருழவர்பகை கொள்ளற்க என்பதாம். அது-வில்லேருழவர் பகை; இது-சொல்லேருழவர்பகை.

† இரண்டு முடையாரோடு-வீரமும் சூழ்ச்சியும் உடையவருடன்.

! உருவக விசேடமெனினும் சிறப்புருவகமெனினும் ஒக்கும். சிறப்
புருவகமாவது ஒருபொருளின் அடையை யுருவகஞ்செய்து அதனால் அப் பொருளையும் உருவகஞ் செய்வதாம்.

இங்கு வீரர்க்கு அடையாயுள்ள வில்லையும் அமைச்சர்க்கு அடையா யுள்ள சொல்லையும் ஏராக உருவகஞ்செய்து அது காரணமாக அவர்களை யுழ வராக உருவகஞ் செய்தமைகாண்க.

[வீரராகிய உழவர் பகைவராகிய வயலில் வில்லாகிய ஏரைச் செலுத் திப் பாண்மாகிய விதையை விதைத்து வெற்றியாகிய விளைவைக் கொள்ளு

வாரென்றும், அமைச்சராகிய உழவர் சபையாகிய வயலில் சொல்(நீதி)லாகிய ஏரைச்செலுத்தி நியாயமாகிய விதையை விதைத்து யாவரையும் ஒப் பச் செய்தலாகிய விளைவைக் கொள்ளுவாரென்றும் விரித்துரைத்துக் கொள்க. புறப்பொருள் வெண்பா மாலை " அஞ்சுவரு தானை யமரென்னு நீள்வயலுள், வெஞ்சினம் வித்திப் புகழ்விளக்கும் - செஞ்சுடர்வேல், பைங் கட் பணைத்தாட் பகட்டுழவன்" என்று கூறுவதிங் குணர்தற் பாலதாம்).



rn. எழுற் றவரினு மேழை தமியனுய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

பரி:—(இ - ள்.) தான் தனியனுயீ வைத்துப்

கொள்வான் பித்துற்றினும் அறிவிலன், (எ - று).

தனிமை-சுற்றம் நட்புப் படை * முதலிய வின்மை. † மயக்கத்தால் ஒப்பாராயினும் எழுற்றவர் அதனைத் தீங்கெய்தாமையின், தீங்கெய்ததலு முடைய ‡ இவனை ¶ அவரினும் எழை என்றார். தீங்காவது தூணையுள் வழியும் வேறல் ஐயமாயிருக்க அஃதின்றியும் பலரோடு பகைகொண்டு அவரால் () வேறு வேறு பொருதற்கண்ணும் ஒருங்கு பொருதற் கண்ணும் அழிந்தே விடுதல். இவை மூன்று பாட்டானும் பகைகோடற் குற்றம் o பொதுவினுஞ் சிறப்பினுங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) தமியனுய் - (தான்) தனியனுயிருந்தும், பல்லார் - பலரோடு, பகைகொள்பவன் - பகைகொள்வான், எழுற்றவரினும் - பித்துக் கொண்டவரினும், எழை - அறிவிலனுவன், (எ-று).

தனிமை - சுற்றம் நட்புப் படை முதலியன இல்லாமை.

மயக்கத்தால்

அவ்விருவரும் ஒப்பாராயினும் பித்துக்கொண்டவர் அப்பித்தத்தினுல் தீங்கடையாமையால், தீங்கடைதலு முடைய இவனை அவரினும் எழை என்றார். தீங்காவது தூணையுள்ளவிடத்தும் (பகைவரை) வெல்லுதல் சந்தேகமாயிருக்க அத்தூணையில்லாமலும் பலரோடு பகைகொண்டு அவரால் வேறு வேறு போர் செய்தலிலும் ஒருமுகமாகப் போர் செய்தலிலும் அழிந்தே விடுதல். இவை மூன்று பாட்டாலும் பகைகொள்ளுதற் குற்றம் பொதுவகையாலும் சிறப்பு வகையாலும் சொல்லப்பட்டது.

(க - து.) தான் தனியனுயிருந்தும் பலரோடு பகைப்பவன் மிகவும் அறிவீனனுவன் என்பது.

3. He who being alone, incurs the enmity of many is more foolish than even madmen.

* முதலிய என்றமையின், தன்வலி, துணைவலி, உறுதியாய அரண்,

அமைச்சர் புரோகிதர்களின் ஆலோசனையைக்கேட்டல் முதலியவற்றையும் கொள்க.

† மயக்கத்தால் ஒப்பாராயினும் - தமியனுய்ப் பல்லார் பகைகொள்பவனும் பித்துக்கொண்டவரும் மயக்கத்தால் ஒப்பாயிருப்பாராலுலும்.

‡ இவனை - தமியனுய்ப் பல்லார் பகை கொள்பவனை.

¶ அவரினும் - பித்துக்கொண்டவரினும்.

(). வேறு வேறு - தனித்தனியாக.

o பொதுவகையாகக்கூறியது க-வது குறளாம்; சிறப்புவகையாகக் கூறியது உ-வது, ங-வது குறளாம்.

அங்கவியல்—உரு-வது பகைத்திறந் தெரிதல். **949**

சு பகைநட்பாக் கொண்டொழுகும்
பண்புடை யாளன்
றகைமைக்கட் டங்கிற் றுலகு.

பரி:—(இ - ள்.) வேண்டியவழிப் பகையை வேறுபடுத்துத் தன
க்கு நட்பாகச் செய்துகொண்டொழுதும்

இயல்பினையுடைய அரசனது

பெருமையுள்ளே * அடங்கிற்று இவ்வுலகது; (எ-று).

வேண்டியவழி யென்பது † ஆக்கத்தான் வந்தது. வேறுபடுத்தல்-

பகை நிலைமையி னீக்குதல். ஒழுகல் - நீதிவழியொழுகல். பெருமை -

பொருள் படை என இருவகைத்தாய ஆற்றல். ‡ அதன் வழித்தாதற்கு எஞ்

ஞான்றுந் திரிபின்மையின், அத் துணிவுபற்றித் 'தங்கிற்று' என்றார்.

தெளி:—(இ - ள்.) பகை - பகையை, நாட்பாக் கொண்டொழுகும்- (வேண்டியவிடத்து வேறுபடுத்தித் தனக்கு) நட்பாகச் செய்துகொண்

டொழுகும், பண்புடையாளன் - இயல்பினையுடைய அர

சனது, தகைமைக்

கண் - பெருமையுள்ளே, உலகு-இவ்வுலகம்,

தங்கிற்று-அடங்கியது; (எ-று).

வேண்டிய விடத்து என்பது நட்பாக என்னும் ஆக்கச்சொல்லால்

வந்தது. வேறுபடுத்தல் - பகைநிலைமையினின்றும்

நீக்குதல். ஒழுகல்-

நீதிநூல்வழி யொழுகுதல். பெருமை - பொருள் படை என்றிருவகைய தாகிய ஆற்றல். அவ்வாற்றலின் வழியதாதற்கு என்றும் வேறுபாடில்லா

மையால், அத்துணிவுபற்றி (உலகு) 'தங்கிற்று' என்றார்.

(க - து.) வேண்டியவிடத்துப் பகைவரை நட்பினராகக்கொண்டொழுகும் அரசனது பெருமையுள்ளே உலகம் நிலைபெற்றது.

4. The world abides in the greatness of that king whose nature is such as to turn hatred into friendship.

ரு.

தன்றுணை யின்றிற் பகையிரண்டாற் றுணைருவ
னின்றுணையாக் கோள்கவற்றி னென்று.

பரி:—(இ - ள்.) தனக்குதவுந் துணையோவெனின் இல்லை; ¶ நலிவுசெய்யும் பகையோவெனின் இரண்டு; அங்ஙனமாயிற் நின்றவழி ஒருவனாகிய தான் அப்பகையிரண்டனுட் பொருந்தியதொன்றை அப்பொழுதைக்குத இனிய துணையாகச் செய்துகொள்க, (எ-று).

---

* அடங்கிற்று - சுவாதீனப்பட்டது.

† பொருள்களை வருவித்துரைக்கும் எதுக்களுள் ஆக்கச்சொல்லும் ஒன்றுமென்பது இங்கறிதற் பாலதாம். இங்கு ஆக்கமென்றது நட்பா (க) என்பதன்கணுள்ள ஆக என்பதனை.

‡ அதன் வழித்தாதற்கு - பொருள்படையென் றிருவகைய தாகிய ஆற்றலின் வழியதாகவுள்ள வுலகத்திற்கு.

¶ நலிவுசெய்யும் - வருத்தும்.

பொருந்தியது - ஏனையதனை வேறற்கு ஏற்றது. அப்பொழுது—† அவ் வெல்லும்பொழுது. திரிபின்றுகச் செய்துகொள்கவென்பார் 'இன்றுணையா' என்றார். ‡ ஆல்கள் - அசை. இவை யிரண்டுபோட்டாலும் நட்பாக்கற்பாலது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) தன்றுணை - தனக்கு உதவுந்துணையோவெனின், இன்று - இல்லை, பகை - (நலிவுசெய்யும்) பகையோவெனின், இரண்டு - இரண்டாம், (அவ்விதமாய் நின்றவிடத்து), தானெருவன் - ஒருவனுகிய தான், அவற்றின் - அப்பகையிரண்டனுள், ஒன்று - (பொருந்தியதாகிய) ஒன்றை, இன்றுணையா - (அப்பொழுதிற்கு) இனியதுணையாக, கொள்க - (செய்து) கொள்ளக்கடவன், (எ - று).

பொருந்தியது - மற்றொருபகையை வெல்லுதற்கு ஏற்றது. அப்பொழுது - அவ்வெல்லும்பொழுது. (அப்பகையிரண்டனுள் ஒன்றை) வேறுபாடில்லாமல் செய்துகொள்கவென்பார் 'இன்றுணையா' என்றார். ஆலிரண்டும் - அசை. இவை இரண்டுபோட்டாலும் நட்பாக்கற்றன்மையது சொல்லப்பட்டது. கொள்க என்னுமுற்றின் ஈற்றகரம் தொக்கு நின்றது.

(க - து.) தனக்குதவி செய்யுந் துணையின்றிப் பகையிரண்டாயிருக்கு மரசன் அச்சமயத்திற் கேற்றவாறு அவ்விரண்டனு ளொன்றைத் துணையாகக்

கொள்ளக்கடவன் என்பது.

5. He who is alone and helpless, while his enemies
are two-fold, should secure the help of one of the agreeable.

கூ. தேறினுந் தேறா விடினு மழிவின்கட்
டேறான் பகாஅன் விடல்.

பரி:—(இ - ள்.) பகைவனே முன் ¶ தெளிந்தானாயினுந் தெளிந்தில
னாயினும் தனக்குப் ‖ புறத்தோரினையாற் றுழ்வு வந்துழிக் கூடாது
நீக்காது () இடையேவிட்டு வைக்க. (எ - று).

முன் தெளிந்தானாயினும் o அப்பொழுது கூடாதொழிகவென்றது,

†† உள்ளாய்நின்று கெடுத்தல் நோக்கி. தெளிந்திலனாயினும் அப்பொழுது

† அவ்வெல்லும்பொழுது-பகையிரண்டனுள் ஒன்றைப் போர்செய்து வெல்லுங்காலத்தில்.

‡ ஆல்கள் - இன்னல் இரண்டால் என்பவற்றிலுள்ள ஆல்கள்.

¶ தெளிந்தானாயினும் - இப்போதிவன் பகைவனல்லனென்று தெளிந்திருந்தானாயினும்.

‖ புறத்தோரு வினையாற் றுழ்வு வந்துழி-மற்றப் பகைவரோடு செய்தவொரு போரால் தாழ்வுவந்த விடத்து.

() இடையே விட்டுவைத்தல் - பகைவனை நொதுமலாக்குதல்.
o அப்பொழுது - புறத்தொருதொழிலால் தாழ்வு (தோல்வி) உண்டாயகாலத்தில். †† உள்ளாய் - உட்பகையாய்.

## அங்கவியல்—உருவது பகைத்திறந் தெரிதல்.

## 951

நீக்கா தொழிக வென்றது, * அவ்வழிவிற்குத் துணையாதல் நோக்கி. இதனுள் நொதுமலாக்கற் பாலது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) தேறினும் - (பகைவனை முன்) தெளிந்தாலுமி

னும், தேறுவிடினும் - தெளிந்திலனாயினும், அழிவின்கண் - (தனக்குப் புறத்தொருதொழிலால்) தாழ்வுவந்தவிடத்து, தேறன் - கூடாது, பகாஅன்- நீக்காது, விடல் - (நடுவே) விட்டுவைக்கக் கடவன், (எ - று).

(பகைவனை) முன்தெளிந்தாலுமும் அப்போது கூடாதொழிகவென்றது, (அப்பகைவன்) உள்ளாய் நின்று கெடுத்தல்நோக்கி. தெளிந்திலனாயினும் (அப்பகைவனை) அப்போது நீக்காதொழிக வென்றது, (அவன்) அவ்வழிவிற்குத் துணையாதல் நோக்கி. இதனால் (பகைவனை) அயலாக்குந் தன்மையது சொல்லப்பட்டது.

(க - து.) அரசன் புறத்தொரு தொழிலால் தனக்குத் தாழ்வு வந்தவிடத்துப் பகைவருடன் கூடாமலும் அவரை நீக்காமலு மிருக்கக்கடவன் என்பது.

6· Though one's enemy is aware of one's misfortune or not one should act so as neither to join or separate from him.

## எ. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க மென்மை பகைவ ரகத்து.

பரி:—(இ - ள்.) † நொந்ததனைத் தாமாக வறியாத நட்டார்க்குத் தன்னோவு சொல்லற்க; வலியின்மை பார்த்திருக்கும் பகைவர்மாட்டு அவ்வலியின்மையை ‡ மேலிட்டுக் கொள்ளற்க, (எ-று).

¶ நோவென்னும் முதனிலைத்தொழிற் பெயர் ஈண்டு அது சொல்லுதற்கணையிற்று. பகைவர்கட் டவிர்வது கூறுவார், நட்டார்கட் டவிர்வதும் உடன்கூறினர். இதனால் ‖ அவ்விரு பகுதிக்கண்ணுஞ் செய்வது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) நொந்தது - நொந்ததனை, அறியார்க்கு - (தாமாக) அறியாத நட்பினர்க்கு, நோவற்க - (தன்) நோவு சொல்லாதிருக்கக் கடவன், மென்மை - வலியில்லாமையை, (பார்த்திருக்கும்), பகைவரகத்து - பகைவ

---

* அவ்வழிவிற்கு - புறத்தொரு தொழிலால்வந்த தாழ்விற்கு.

† "தோழ னேடு மேழைமை பேசேல்" என்பதிற் குணர்த்தற் பால தாம்.

‡ மேலிட்டுக்கொள்ளல் — வலியின்மை

தன்னிடத் திருப்பதாகக்
காட்டுதல்.

¶ வருந்துதல் என்னும் பொருளதாய நோ (நோதல்) என்னும் முதனிலைத் தொழிற்பெயர் இங்கு அந்நோவைச் சொல்லுதற்கணையிற்று.

‖ அவ்விருபகுதித்தண்ணும் - நட்பினரிடத்தும் பகைவரிடத்தும்.



ரிடத்து, மேவற்க - (அவ்வலியில்லாமையை) மேலிட்டுக் கொள்ளாதிருக்கக் கடவன், (எ-று).

நோ என்னும் முதனிலைத் தொழிற்பெயர் இங்கு அந்நோவைச் சொல்லுதலி லாயிற்று. (ஒன்றினமுடித்தல் தன்னினமுடித்த லென்னுமுத்தியால்) பகைவரிடத்துச் செய்யாதொழிவது சொல்லவந்தவர், நட்பினரிடத்துச் செய்யாதொழிவதும் உடன் சொல்லினர். இதனால் அவ்விருதிறத்தாரிடத்தும் செய்வது சொல்லப்பட்டது.

(க - து.) அரசன் தன் நட்பினர்க்குத் தான் நொந்ததனைச் சொல்லுதலும் பகைவர்க்குத் தனது வலியின்மையைக் காட்டுதலும் ஒழியக்கடவன் என்பது.

7. Reveal not your suffering to friends who are ignorant of it, nor refer to your weakness in the presence of your enemies

அ வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு.

பரி:—(இ - ள்.) தான் வினை செயீயும் வகையை யறிந்து அது முடித்தற் கேற்பத் தன்னைப் பெருக்கி மறவிபுகாமற்றன்னைக் காக்கவே, தன் பகைவர்மாட் டோதாய களிப்புக்கெடும், (எ - று).

வகை - வலியனுய்த் தானெதிரே பொருமாறும், மெலியனுய வளவிற் போர்விலக்குமாறும் * முதலாயின. பெருக்கல் - பொருள் படைகளாற் பெருகச் செய்தல். களிப்பு - † இவற்றுன் வேறுமென் றெண்ணி மகிழ்ந் திருத்தல். ‡ இவ்விறுதலறிந்து தாமே அடங்குவ ரென்பதாம். இதனுற் கூறுதற்பாலதன்கட் செய்வன கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) வகையறிந்து - (தான் தொழில் செய்யும்) வகை யை யறிந்து, தற்செய்து - (அத்தொழில் முடித்தற்கு ஏற்பத்) தன்னைப் பெருக்கி, தற்காப்ப - (மறதி யடையாமல்) தன்னைக்காக்கவே, பகைவர் கண் - (தன்) பகைவரிடத்து, பட்ட - உண்டாகிய, செருக்கு - களிப்பு, மாயும் - கெடும், (எ - று).

தொழில் செய்யும் வகையாவது வலியவனுய்த் தான் நேரே போர் செய்வதும், மெலியவனுயவளவில் போர் விலக்கும் விதமும் முதலா யின. பெருக்கல்-பொருள் படைகளால் (தன்னைப்)பெருகச்செய்தல். களிப்பு-

---

* முதலாயின என்றமையின், பகைவரிருவருள் ஒருவரைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல், பகைவரிடத்துத் தனது வலியில்லாமையைக் காட்டாமை முதலியவற்றையும் கொள்க.

† இவற்றுன் - தம்மிடத்துள்ள பொருள் படைகளால்.

‡ இவ்விறுதலறிந்து—(வகையறிந்து தற்செய்து தற்காக்கும்) அழுத் தத்தை (பந்தோபஸ்தை)த் தெரிந்து.

(பகைவர்) இவற்றுல் வெல்வோ மென்றெண்ணி மகிழ்ந்திருத்தல். (பகைவர்) இவ்விறுகுதல் அறிந்து தாமே அடங்குவரென்பதாம். இதனற் பகையைக் களையுந்தன்மையதனிடத்துச் செய்வன சொல்லப்பட்டன.

(க - து.) தான் தொழில் செய்யும் வகையை யறிந்து, பொருளையும் சேனையையும் பெருகச்செய்து, மறதியின்றித் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளு மரசனிடத்து அவனது பகைவர் செருக்குச் செல்லாது என்பது.

8. The joy of the king's foes will be frustrated if he guards himself by knowing the way of action& securing assistance.

கூ. இளதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.

பரி:—(இ - ள்.) களையவேண்டுவதாய முண்மரத்தை இளதாய நிலைமைக்கட் † களைக; அன்றியே ‡ முதிர்ந்த நிலைமைக்கட் களையலுறிற் களைவார் கையினை ¶ அதுதான் களையும், (எ - று).

() களையப்படுவதாய தம்பகையை அது மெலிதாய காலத்தே களைக, அன்றியே வலிதாயகாலத்துக் களையலுறிற் றம்மை அதுதான் களையு மென்பது தோன்ற நின்றமையின், இது § பிறிது மொழிதல். இதனுற் களையும் பருவங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) முண்மரம் - (களையவேண்டுவதாகிய) முள் மரத்தை, இளதாக-இளையதாகிய நிலைமையில், கொல்க-களையக்கடவர், (அல்லாமல்), காழ்த்த விடத்து-முதிர்ந்த நிலைமையில்,(களையத் தொடங்கிலுல்),களையுநர் - களைபவரது, கை-கையினை, கொல்லும்-(அதுதான்) களையும்,(எ-று).

களையப்படுவதாகிய தம்பகையை அப்பகை மெலிதாகிய காலத்தே களைக, அவ்வாறன்றி வலிதாகிய காலத்துக் களையத் தொடங்கிலுல் தம்மை அப்பகைதான் களையுமென்பது தோன்ற நின்றமையால். இக்குறள் பிறிது மொழிதலணியாம். இதனுற் பகையைக்களையும் பருவம் சொல்லப்பட்டது.

(க - து.) அரசர் தம் பகைவர் பொருள்படைகளால் மெலிய வராயுள்ள காலத்திலேயே அவரை யழிக்கக்கடவர்; அழிக்காவிட்டால் அவரை அப்பகைவர் அழித்துவிடுவார் என்பது.

---

† களைக - பிடுங்கி யெறிக.

‡ முதிர்ந்த - வயிரம் பற்றிய. ¶ அதுதான் -

அம்முள் மரமே.

() களையப்படுவதாகிய - அழிக்கப்படுவதாகிய.

§ ஒருபொருளை விளங்கச் செய்வதற்கு அப்பொருளோடொத்த பிறிதொரு பொருளைக் கூறுதல் பிறிதுமொழிதலணியாம்.

120 |•



9. A thorny tree should be cut down while tender, for when it is grown it will destroy the hand of the feller.

ய. உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

பரி:—(இ - ள்.) தம்மொடு பகைப்பாரது * தருக்கினைக் கெடுக்கலா யிருக்க ‡ இகழ்ச்சியான் † அது செய்யாத வரசர் பின் உயிர்க்கு மாத்திரத்திற்கும் உளரல்லர் ஒருதலையாக, (எ - று).

¶ அவர் வலியராய்த் தம்மைக் $ களைதல் ஒருதலையாகலின், இறந்தாரே யாவரென்பதாம். () அவருயிர்த்த துணையானே தாமிறப்பரெனினு மமையும். இதனாற் களையாவழிப்படு மிழுக்குக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) செயிர்ப்பவர் - (தம்மோடு) பகைப்பவரது, செம் மல் - தருக்கினை, (கெடுக்கலாயிருக்க

இகழ்ச்சியால்), சிதைக்கலாதார்-(அது) செய்யாத அரசர், உயிர்ப்ப - (பின்) மூச்சுவிடுமாத்திரத்திற்கும், மன்ற - நிச் சயமாக, உளரல்லர் - இருக்கின்றவரல்லர், (எ-று).

அவர் வலியவராய்த் தம்மைக் கூளதல் நிச்சயமாகலால், இறந்தாரே யாவரென்பதாம். உயிர்ப்ப வுளரல்ல ரென்பதற்கு அப்பகைவர் மூச்சுவிட்ட வளவாலே தாமிறப்பரென்று பொருள் கூறினும் பொருந்தும். இதனால் பகையைக் கூளயாதவிடத் துண்டாகும் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) தம் பகைவரது செருக்கை யிகழ்ச்சியால் கெடுக் காத வரசர் அவரால் நிச்சயமாக வினைவிலழிவர் என்பது.

10. Those (kings) who do not through sheer indifference, destroy the pride of those who hate them will certainly not exist even to breathe.



## இருபத்தாருவது அதிகாரம்.

## உட்பகை:—Internal Enmity.

பரி:—அஃதாவது ‖ புறப்பகைக்கு இடனுக்கிக் கொடுத்து † அது

---

* தருக்கினை - கர்வத்தை. ‡ இகழ்ச்சியான் - அலட்சியபுத்தியால்.
† அது - தம்மோடு பகைப்பவரது தருக்கினைக் கெடுத்தல்.
¶ அவர் - பகைவர். $ களைதல்-அழித்தல்.

() உயிர்ப்ப வுளரல்லர் என்பதற்கு உயிர்ப்ப-(அப்பகைவர்) மூச்சுவிட்ட வளவாலே, உளரல்லர் (தாம்) சாவொன்று பொருள் கூறினும் பொருந்தும். (மிக எளிதில் பகைவரா லழிவரென்பது இதன் திரண்டபொருளாம்).

‖ புறப்பகைக்கு - வெளிப்படையாயுள்ள பகைக்கு.

† அது - புறப்பகை.

அங்கவியல்—உசு-வது உட்பகை.

## 955

வெல்லுந் துணையும் * உள்ளாயி நிற்கும் பகை. † இதுவும் களையப் படுவதன் பாலதாகலின், பகைத்திறந் தெரிதலின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது புறப்பகைக்கு இடமாக்கிக்கொடுத்து அது வெல்லுமளவும் உள்ளாய் நிற்கும் பகை. இதுவும் களையப்படும்பகையில் சேர்ந்த

தாகலால், புகைத்திறந்தெரிதலின்பின் வைக்கப்பட்டது.

க. நிழனீரு மின்னுத வின்னு தமர்நீரு
மின்னுவா மின்னு செயின்.

பரி:—(இ-ள்.) ஒருவனுக்கு அனுபவிக்க வேண்டுவனவாய நிழலும் நீரும் முன் இனியவேனும் பின் நோய் செய்வன இன்னவாம்; அதுபோலத் தழுவ வேண்டுவனவாய ‡ தமரியல்புகளும் முன் இனியவேனும் பின் இன்னு செயினவ இன்னவாம், (எ-று).

நோய்-¶ பெருங்கால் பெருவயிறு § முதலாயின. தமர் என்றதனால் உட் பகையாதற் குரியராய () ஞாதிய ரென்பதறிக. இன்னுசெயல் - முன் வெளிப்படாமை நின்று துணைபெற்றவழிக் கெடுத்தல்.

தெளி:—(இ - ன்.) (ஒருவனுக்கு)
நிழனீரும்-(அனுபவிக்கவேண்டு வன வாகிய) நிழலும் நீரும்,
இன்னுத—(முன்பு இன்பஞ் செய்வனவாயி னும் பின்பு)
நோய் செய்வன, இன்னு - இனியனவல்லவாம், (அதுபோல),
தமர் நீரும் - (தழுவ வேண்டுவனவாகிய)
சுற்றத்தாரியல்புகளும், இன்னு செயின் - (முன்பு இன்பஞ் செய்வனவாயினும் பின்பு) துன்பஞ் செய்வன, இன்னுவாம் - இனியனவல்லவாம், (எ-று).

நோய்-பெருங்கால் பெருவயிறு முதலாயின. தமர் என்றதனால் உட்
பகையாதற் குரியராய ஞாதிய ரென்பதறிக. இன்னுசெயல்—(ஞாதியர்) முன்வெளிப்படாதிருந்து துணைபெற்ற விடத்துக் கெடுத்தல். செயின் என்

ஹும் வினையெச்சம் செய்வன என்று வினையாலணையும் பெயர்ப்பொருளில் வந்தது.

(க-து.) உட்பகையாயுள்ள சுற்றத்தார் முன்பு இன்பஞ் செய்து பின்பு துன்பஞ் செய்யும் நீரும் நிழலும்போலாவர் என்பது.

1. Shade and water, (though wholesome at first) are not pleasant* if they cause disease; so are the characteristics of one's relations not agreeable if they cause pain.

2. வாள்போற் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போற் பகைவர் தொடர்பு.

---

* உள்ளாய் - நட்பாய். † இதவும் - உட்பகையும்.

‡ தமரியல்புகளும் - சுற்றத்தாரது குணங்களும்.

¶ பெருங்கால் - யானைக்கால்; பெருவயிறு - மகோதரம்.

§ முதலாயின என்றமையின், குளிர்சுரம், குஷ்டம், குன்மம், கட்டி முதலியவற்றையுங் கொள்க. () ஞாதிபர் - தாயத்தார் (பங்காளிகள்).

பரி:—(இ - ள்.) வாள்போல எறிது மேன்று வெளிப்பட்டு நிற்கும் பகைவரை அஞ்சாதொழிக; அங்ஙனம் நில்லாது கேள்போலமறைந்து நிற்கும் பகைவர் நட்பினை அஞ்சுக. (எ - று).

முன்னே யறிந்து காக்கப்படுதலான் 'அஞ்சற்க' என்றும், அங்ஙனம் அறியவும் காக்கவும் படாமையிற் கெடுதல் ஒருதலை யென்பது பற்றி 'அஞ்சுக' என்றுங் கூறினர். பின்செய்யும் பகையினுங் கொடிதாகலானும் †காக்கலாகாதது ஆகலானும் அஞ்சப்படுவது முன்செய்த ¶ அவர் தொடர்பாயிற்று. இவை யிரண்டு பாட்டானும் உட்பகை ஆகாதென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) வாள்போல்-வாளைப்போல, (வெட்டுவோமென்று வெளிப்பட்டு நிற்கும்), பகைவரை-பகைவர்க்கு, அஞ்சற்க - அஞ்சாதிருக்கக் கடவர், (அவ்வாறு நில்லாமல்), கேள்போல்-உறவினரைப்போல, (மறைந்து நிற்கும்), பகைவர்-பகைவரது, தொடர்பு-நட்பிற்கு, அஞ்சுக-அஞ்சக்கடவர்.

(புறப்பகைவர்) முன்னே யறிந்து காக்கப்படுதலால் 'அஞ்சற்க' என்றும், அவ்வாறு (உட்பகைவரை) அறியவும் காக்கவுங் கூடாமையால் கெடு

தல் நிச்சய மென்பதுபற்றி 'அஞ்சுக' என்றும் சொல்லினர். (உட்பகைவர் முன் செய்யும் நட்பு) பின் செய்யும் பகையினும் கொடிதாகலானும் காத்தல் முடியாதது ஆகலானும் அஞ்சப்படுவது முன் செய்த அவர்நட்பாயிற்று. இவை இரண்டு பாட்டாலும் உட்பகையாகாதென்பது சொல்லப்பட்டது.

(க - து.) உறவினர்போலுள்ள பகைவர்க்கு மிகவுமஞ்சுதல் வேண்டும் என்பது.

2. Fear not enemies (who come forward & say they would cut† like a sword ; but fear the friendship of enemies who seemingly act like relations.

கூ. உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து

மட்பகையின் மாணத் தெறும்.

பரி:—(இ - ள்.) உட்பகையாயினரை யஞ்சித் தன்னைக் காத்துக் கொண்டொழுதுக; அங்ஙன மொழுகாதவழித் தனக்கோர் தளர்ச்சிவந்த விடத்துக் குயவன் மட்கலத்தை யுறுக்குங் கருவிபோல $ அவர் தப்பாமற் கெடுப்பர், (எ - று).

காத்தல் - * அவரினையாமலும் அவர்க் குடம்படாமலும் பரிகரித்தல்.

---

† காக்குங்கால மதுவாகலானும் என்றும் பாடமுண்டு.

¶ அவர் - கேள்போல மறைந்து நிற்கும் பகைவர்.

$ அவர் - உட்பகையாயினர்.

* உட்பகையாயினர் தன்னிடத்துச் சேராமலும் அப்பகைவரது செயல்களுக்கு உடன்படாமலும் (அவரை) விலக்குதல்.

† மண்ணைப் பகுக்குங் கருவி மட்பகையெனப்பட்டது. பகைமை தோன் றுமல் ‡ உள்ளாயிருந்தே ¶ கீழறுத்தலின், கெடுதல்தப்பாதென்பதாம்.

தெளி:—(இ - ள்.) உட்பகை - உட்பகையாயினர்க்கு, அஞ்சி-பயந்து, தற்காக்க-தன்னைக்காத்துக்கொண்டு நடக்கக்கடவன், (அவ்வாறு நடவாதவிடத்து), உலைவிடத்து - (தனக்கு ஒரு) தளர்ச்சிவந்தவிடத்து, மட்பகையின் - (குயவன்) மட்கலத்தை அறுக்கும் ஆயுதம்போல, மாண - தப்பாமல், தெறும்-(அவர்) கெடுப்பர், (எ - று).

காத்தல் - அவரிணையாமலும் அவர்க்கு உடன்படாமலும் பரிகரித்தல். மண்ணைப் பிரிக்குங் கருவி மட்பகை எனப்பட்டது. (உட்பகையாயினர்) பகைமை தோன்றுமல் உள்ளாயிருந்தே கீழறுத்தலால், கெடுதல் தப்பாதென் பதாம்.

(க - து.) உட்பகையாயினர் சமயமறிந்து கெடுத்தலால், அரசன் அவர்க்களஞ்சித் தன்னைப் பாதுகாத்துக்கொண் டொழுகுதல் வேண்டும் என்பது.

3. Fear internal enmity and guard yourself ; if not, it will destroy you in an evil hour as surely as the tool which cuts the potter's clay.

சு. மனமாணு வுட்பகை தோன்றி னினமாணு வேதம் பலவுந் தரும்.

பரி:—(இ-ள்.) $ புறந்திருந்தியதுபோன்று அகந்திருந்தாத உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின், * அஃது () அவனுக்குச் சுற்றம் வயமாகாமைக் கேதுவாகிய தற்றம் பலவற்றையுங்கொடுக்கும், (எ-று).

†† அவை - சுற்றத்தாரை உள்ளாய் நின்று வேறுபடுத்தலும், ¶¶ அதனால் $$ அவர் வேறுபட்டவழித் ** தான் தேறுமையும், பின் 0 அவற்றுன் விளைவனவுமாம்.

---

† மண்ணைப்பகுக்குங்கருவியைக் குலாலர் ஊசி யென்பர். இது குலா

லர் மண்ணி னின்றுங் கடமுதலியவற்றை யுண்பெண்ணுமிடத்துத்தான் உட னிருந்ததவி ழுடிவில் அவற்றைப் பிரித்துவிடுவதற் கேதுவாயிருப்ப தொருகருவியாம். ‡ உள்ளாயிருந்தே - நட்பாயிருந்தே. ¶ கீழறுத்தலின் - புறப்பகைக்கு இடமாக்கிக்கொடுத்து வருதலால்.

$ புறந்திருந்தியது போன்று அகந்திருந்தாத - வெளியில் கட்பிருப்பது போற்காட்டி மனத்தில் கட்புக்கொள்ளாத. * அஃது - உட்பகை.

() அவனுக்கு - அரசனுக்கு. †† அவை - பலகுற்றங்கள்.

¶¶ அதனல் - வேறுபடுத்தலால் (ஒற்றுமையைக் கெடித்தலால்).

$$ அவர் - சுற்றத்தார்.

** தான்தேறுமையும் - அரசனுகிய தான் சுற்றத்தாரை நம்பாமையும்.

0 அவற்றுன் வினவனவுமாம் - வேறுபடுத்தலாலும் தான் தேறுமையாலும் உண்டாகுந் தீமைகளுமாம்.



தெளி:—(இ-ள்.) மனமாணு - (புறந்திருந்தியதுபோன்று) அகந்திருந்தாத, உட்பகை-,தோன்றின்-(அரசனுக்கு) உண்டாவதானல், (அஃது அவனுக்கு), இனமாணு - சுற்றம் வசமாகாமைக்குக் காரணமாகிய, ஏதம்பலவும்-குற்றம்பலவற்றையும், தரும்-கொடுக்கும், (எ-று).

அவை - சுற்றத்தாரை உள்ளாய்நின்று வேறுபடுத்தலும், அதனல் அவர் வேறுபட்டவிடத்துத் தான் தேறுமையும், பின்அவற்றுல் வினவனவுமாம்.

(க - து.) உட்பகையுள்ள வரசன்

பலகுற்றங்களுக் காளா வன எனபது.

4. The secret enmity of a person of unreformed mind will lead to many evils causing disaffection in the king's house-hold.

உறன்முறையா னுட்பகை தோன்றி

னிறன்முறையா

னேதம் பலவுந் தரும்.

பரி:—(இ - ள்.) புறத்து * உறவுமுறைத்

தன்மையோடு கூடிய உட்

பகை அரசனுக்கு உண்டாவதாயின், † அஃது அவனுக்கு இறத்தன் முறை யோடு கூடிய குற்றம் பலவற்றையுங் கொடுக்கும், (எ-று).

‡ அவை - புறப்பகைத் துணையாய் நின்றே ¶ அது தோன்றுமற் கோறன் $ முதலிய வஞ்சனை செய்தலும், அமைச்சர் 0 முதலிய உறுப்புக்களைத் ‖ தேய்த்தலும் () முதலாயின.

தெளி:—(இ - ள்.) உறன்முறையான் - (புறத்தில்) உறவுமுறைத்தன்மையோடு, (கூடிய), உட்பகை-,தோன்றின்-(அரசனுக்கு) உண்டாவதாலும், (அஃது அவனுக்கு), இறன்முறையான் - இறத்தல் முறையோடு, (கூடிய), ஏதம்பலவும்-குற்றம் பலவற்றையும், தரும் - கொடுக்கும், (எ - று).

---

* உறவுமுறைத்தன்மை - பந்துத்துவம்.

† அஃது - உட்பகை; அவனுக்கு - அரசனுக்கு.

றங்கள்.

‡ அவை-பலகுற்

¶ அது - புறப்பகைக்குத் துணையா யிருத்தல்.

$ முதலிய என்றமையின், பகைவர்க்கு அடிமையாகச் செய்தல், தனியலைக்கி ஓடச்செய்தல் முதலியவற்றையுங் கொள்க.

0 முதலிய என்றமையின், நாடு, அரண், பொருள், யுங் கொள்க.

படை, நட்புக்களை

‖ தேய்த்தல் - நாளுக்கு நாள் தம்மூலிற் குறைதற்குரிய காரியங்களைச் செய்தல்.

() முதலாயின என்றமையின், அரசனது சோர்வையும், அவனை வெல்

லுங்காலத்தையும், அதற்குரிய இடத்தையும் பகைவர்க்குத் தெரிவித்தல் முதலியவற்றையுங் கொள்க.

அங்கவியல்—உசு-வது உட்பகை. 959

அவை-புறப்பகைக்குத் துணையாய்நின்றே அது தோன்றுமல் கொல்லுதல் முதலிய வஞ்சனைசெய்தலும், மந்திரிகள் முதலிய அங்கங்களைத் தெய்த்தலும் முதலாயின.

(க-து.) உறவுமுறைத் தன்மையோடு கூடிய உட்பகையினையுடைய அரசன் பல குற்றங்களையு மடைந்தழிவான் என்பது.

5. The appearance of internal hatred in a king's family will lead to many a fatal crime.

கூ. ஒன்றுமை யொன்றியார் கட்படி
னெஞ்ஞான்றும்

பொன்றுமை யொன்ற லரிது.

**பரி:—(இ - ள்.) பகைமை தனக்குள்ளாயினார் மாட்டே பிறக்குமா யின், அரசனுக்கு இறவாமை கூடுதல் எஞ்ஞான்று மரிது, (எ-று).**

பொருள் படை * முதலிய உறுப்புக்களாற் பெரியனைய காலத்து மென்பார் 'எஞ்ஞான்றும்' என்றார். இவை நான்கு பாட்டானும் † அதனாற் றனக்கு வருந்தீங்கு கூறப்பட்டது.

**தெளி:—(இ - ள்.) ஒன்றுமை - பகைமை, ஒன்றியார்கண் - (தனக்கு) உள்ளாயினரிடத்தே, படின் - உண்டாகுமாயின், பொன்றுமை - (அரசனுக்கு) இறவாமை, ஒன்றல்-கூடுதல், எஞ்ஞான்றும்-எக்காலும், அரிது-முடியாது, (எ - று).**

பொருள் படை முதலிய உறுப்புக்களால் பெரியனைய காலத்துமென்பார் 'எஞ்ஞான்றும்' என்றார். இவை நான்குபாட்டாலும் அதனால் தனக்கு வருந் தீங்கு சொல்லப்பட்டது. இறவாமை-சாவாமை.

(க - து.) அரசனுக்குத் தனக்குள்ளாயினரிடத்து உட்பகையுண்டாமாயின், அவன் பிழைத்திருப்பதரிதாம் என்பது.

6. If enmity arises among the king's relations, it will be impossible for him to escape death.

செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி.

பரி:—(இ - ள்.) செப்பினது புணர்ச்சிபோலப் புறத்து வேற்றுமை தெரியாமற் கூடினாயினும், உட்பகை உண்டாய குடியிலுள்ளார் அகத்துத் தம்முட் கூடார், (எ - று).

செப்பின் புணர்ச்சி - ‡ செப்பு மூடியோடு புணர்ந்த ¶ புணர்ச்சி. உட்

பகையான் மனம் வேறுபட்டமையிற் புறப்பகை பெற்றுழி வீற்றுவீற்றுவ

* முதலிய என்றமையின், அரண், நட்பு முதலியவற்றையுங் கொள்க.

† அதனால் - உட்பகையால்.

‡ செப்பு - சிமிழ். ¶ புணர்ச்சி - சேர்க்கை.



ரென்பதாம். * குடி கூடாதென்பதனை காடு வந்த தென்பது போலக் கொள்க. † உட்பகை தானுற்ற குடியோடு கூடாதென்றும் உட்பகையுண்டாய குடி அப்பகையோடு கூடாதென்றும் உரைப்பாரு முளர்.

தெளி:—(இ-ள்.) செப்பின் - செப்பினது, புணர்ச்சிபோல்-புணர்ச்சியைப்போல, கூடினும் - (புறத்துவேற்றுமை தெரியாமற்) கூடினாயினும், உட்பகை-,உற்ற உண்டாகிய, குடி-குடியிலுள்ளார், கூடாது-(அகத்துத் தம்முள்) கூடார், (எ-று).

செப்பின் புணர்ச்சி - செப்பு மேல்மூடியோடு புணர்ந்த புணர்ச்சி, அவர் உட்பகையால் மனம் வேறுபட்டமையால் புறப்பகைபெற்றவிடத்து வேறுவே றுவரென்பதாம். ஏ - அசை.

(க-து.) உட்பகையுண்டாகிய குடியிலுள்ளவர் புறத்து வேற்றுமை தெரியாமற் கூடினவராயிருந்தாலும், அகத்துத் தம்முள் கூடார் என்பது.

7. A family subject to internal hatred will never really unite though it may present an apparent union like that of a casket and its lid.

## அ. அரம்

‡ பொருத ¶ பொன்போலத் தேயு முரம்போரு
தூட்பகை யுற்ற குடி.

பதி:—(இ - ள்.) முன் வளர்ந்து வந்ததாயினும் உட்பகையுண்டாய குடி அரத்தாற் பொரப்பட்ட இரும்புபோல * அதனாற்பொரப்பட்டுவலி தேயும், (எ-று).

---

* நாடு வந்தது என்ற விடத்து நாடு

என்பது இடவாகு பெயராய் நாட்
டிலுள்ளார்க் காயதுபோல, குடி கூடாது என்ற விடத்துக் குடி யென்பது இடவாகுபெயராய்க் குடியிலுள்ளார்க் காயதென்க.

† உட்பகையுற்ற குடி கூடாது என்பதற்கு உட்பகை யுடையான் தானிருக்கிற குடியிலுள்ளாரோடு கூடான் என்றும், உட்பகையுண்டாகிய குடியிலுள்ளார் அவ்வுட்பகை யுள்ளாரோடு கூடாரென்றும் பொருளுரைப்பாருமுண்டென்பது.

‡ பொருத பொருது என்பன செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த செய்வினைகள். பொருத - உடன்பாட்டிறந்தகாலப் பெயரெச்சம்; பொருது - உடன்பாட்டிறந்தகால வினையெச்சம்.

¶ இரும்பிற்கும் பொன் என்னும் பெயரிருத்தலால், அதனைப் பொன் என்று கூறினர். "பொன்னென்ப வனப்பிரும்பு பூமகள் வியாழ நாற்-பேர்" என்பது நிகண்டு.

§ அதனைப் பொரப்பட்டு - உட்பகையால் கெடுக்கப்பட்டு.



பொருதென்னுஞ் செயப்பாட்டுவினையெச்சம் தேயுமென்னும் வினை கொண்டது. * அஃது உரத்தின் றொழிலாயினுங் குடிமே லேற்றுதலின், வினைமுதல் வினையாயிற்று. காரியஞ் செய்வதுபோன்று

பொருந்தி மெ
ல்லமெல்லப் பிரிவித்தலான், வலி தேய்ந்துவிடு மென்பதாம்.
இவை யிரண்டுபாட்டானும் † அவன் குடிக்கு வருந் தீங்கு
கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) (முன்னேவளர்ந்து வந்தாயினும்) உட்பகையுற்ற குடி-உட்பகையுண்டாகியகுடி, அரம்பொருத - அரத்தினால் பொரப்பட்ட, மொன்போல-இரும்புபோல, பொருது - (அதனால்) பொரப்பட்டு, உரம்.
வலி, தேயும்-குறையும், (எ-று).

செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த பொருது
என்னும் வினையெச் சம் தேயும் என்னும் வினைகொண்டு
முடிந்தது. அஃது (தேய்தல்) உரத்தி
னது தொழிலாயினும்(குடிதேயும் எனக்)குடிமேலேற்றிக்
கூறுதலால், குடி
யென்னும் வினைமுதலின் வினையாயிற்று.
உட்பகையாயுள்ளவர் காரியஞ்
செய்வதுபோன்று பொருந்தி மெல்லமெல்லக்
குடியிலுள்ளாரைப் பிரியச்
செய்தலால், குடிவலி தேய்ந்து விடுமென்பதாம். இவை
இரண்டுபாட்டா
லும் அவன் குடிக்குவரும் தீங்கு சொல்லப்பட்டது.
அரம்-வாள்வகையில்
ஒன்று; பொரப்பட்ட - ஆராவப்பட்ட; பொரப்பட்டு -

கீழறுக்கப்பட்டு.

(க-து.) உட்பகையுள்ளகுடி ஆரத்திலுல் தேய்க்கப்பட்ட இரும்புபோல வலிகுறைந்தொழியும் என்பது.

8. A family with internal dissensions will disintegrate and lose its strength like iron that has been filed away.



கூ. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு.

பரி:—(இ-ள்.) அரசனது உட்பகை ‡ அவன் பெருமையை முராக்க எள்ளின்பிளவை யொத்த சிறுமையுடைத்தே யாயினும், ¶ பெருமை யெல்லாம் அழியவருங்கேடு § அதனகத்த தாம், (எ-று).

---

* அஃது *(தேயும் என்னும் வினை) ஆரத்தின் (வலியின்) தொழிலா யிருந்தாலும் (குடிதேயும் என்று தேய்தற்கொழிலை) குடியின்மேலேற்றிக் கூறுதலால், (அது) குடியென்னும் வினைமுதலின் (எழுவாயின்) வினையா யிற்றென்க. குடி உரம் தேயும் என்பது மாடு கோடுகூரிது; கினை நீரு நிற்று என்பனபோல வந்ததென்க.

† அவன் - உட்பகையுடையான்.

‡ அவன் - உட்பகையையுண்டாக்க வல்லரசனது.

¶ பெருமையெல்லாம் - அவ்வரசனது பெருமையெல்லாம்.

$ அதனகத்ததாம்-அவ்வுட்பகையினிடத்ததாம்.





எத்துணையும் பெரிதாயகேடு தனக் கெல்லைவருந்துணையும் எத்துணையுஞ் சிறிதாய உட்பகையுள்ளே யடங்கியிருந்து, வந்தால் வெளிப்பட்டு நிற்குமென்பதாம். இதனால் * அது சிறிதென்று இகழப்படாதென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) உட்பகை-(அரசனது) உட்பகை, (அவன்பெருமையை நோக்க), எட்பகவன்ன-எள்ளின்பிளவையொத்த, சிறுமைத்தேயாயினும்-சிறுமையுடையதேயாயினும், கேடு—(பெருமையெல்லாம் அழியவரும்) கேடு, உள்ளதாம் - (அதன்) அகத்ததாம், (எ-று).

மிகவும் பெரிதாயகேடு தனக்கு எல்லைவருமளவும் மிகவுஞ் சிறிதாய உட்பகை யுள்ளே அடங்கியிருந்து, (தனக்கெல்லை) வந்தால் வெளிப்பட்டு நிற்குமென்பதாம். இதனால் அது சிறிதென்று இகழப்படாதென்பது சொல்லப்பட்டது. எல்லை-காலம்.

(க-து.) உட்பகை சிறிதாயிருந்தாலும், அதனாலுண்டாகுங் கேடு பெரிதாமென்பது.

9. Though internal enmity be as small as

the part of the sesamum seed, still does destruction dwell in it.



க0. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று.

பரி:—(இ-ள்.) மனப்பொருத்த மில்லாதாரோடுகூட ஒருவன் வாழும் வாழ்க்கை ஒருகுடிலுள்ளே பாம்போடுகூட உறைந்தாற்போலும்.

குடங்கமென்னும் வடசொற்றிரிந்து நின்றது. இடச்சிறுமையானும் பயிற்சியானும் பாம்பாற் கோட்படல் ஒருதலையாம்; ஆகவே † அவ்வுவமையால் ‡ அவனுயிர்க்கு இறுதி வருதல் ஒருதலையென்பது பெற்றும். இதனைத் ¶ கண்ணோடாது அவரைக் கடிகவென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) உடம்பாடிலாதவர் - மனப்பொருத்த மில்லாதாரோடுகூட, வாழ்க்கை - (ஒருவன் வாழும்) வாழ்வு, குடங்கருள் - ஒருகுடிசையினுள்ளே, பாம்போடுடன் - பாம்போடுகூட, உறைந்தற்று - வாழ்ந்தாற்போலும், (எ-று).

குடங்கம் என்னும் வடசொல் குடங்கர் எனத்திரிந்து நின்றது. இடச் சிறுமையாலும் பழக்கத்தாலும் பாம்பால் கடிக்கப்படுதல் நிச்சயமாம்; ஆக

* அது - உட்பகை. † அவ்வுவமையால்-குடங்கருட் பாம்போடனு றைந் தற்று என்னும் உவமானத்தினால்.

‡ அவனுயிர்க்கு-மனப்பொருத்தமில்லாதாரோடுகூட வாழுகின்றவனுயிர்க்கு.

¶ கண்ணேடாது அவரைக் கடிக - தாட்சண்யஞ் செய்யாது மனப்பொருத்தமில்லாதவரை விலக்கவேண்டும்.



வே, அவ்வுவமானத்தால் அவனுயிர்க்கு முடிவுவருதல் நிச்சயமென்பது பெற்றும். இதனால் கண்ணேட்டஞ்செய்யாது அவரைக் கடியக்கடவனென்பது சொல்லப்பட்டது.

(க - து.) மனப்பொருத்தமில்லாதவரோடுகூடி வாழ்பவன் தவறாது கெடுவான் என்பது.

10. Living with those who are not agreeable with one is like dwelling with a cobra in the same hut.

# இருபத்தேழாவது அதிகாரம்.

## பெரியாரைப்பிழையாமை—

## *Against disregard for the great.*

பரி:—அஃதாவது பெரியாயினுரை அவமதித்து ஒழுகாமை.

* இட்டுறமொழிதலென்பதனுற் பெரியாரென்பது ஆற்றலாற் பெரியராய வேந்தர் மேலும், தவத்தாற் பெரியராய முனிவர்மேலும் நின்றது

மேற்சொல்லாது எஞ்சிநின்றதாகலின், † இது ‡ வெதுளியான் வருவன வற்ற திறுதிக்கண் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது பெரியாரையினுரை அவமதித்து நடவாமை. இரட்டுற மொழிதலென்னும் உத்தியால் பெரியாரென்பது வலிமையால் பெரியராகிய வேந்தர்மேலும், தவத்தால் பெரியராகிய முனிவர்மேலும் நின்றது. மேற்சொல்லாமல் குறைந்து நின்றதாகலால், இது வெகுளியால் வருவனவற்றின் முடிவில் வைக்கப்பட்டது.

க. ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை.

பரி:—(இ - ள்.) எடுத்துக்கொண்டன யாவும் முடிக்க வல்லாருடைய ஆற்றல்போல அவமதியாமை, தங்கட் டீந்துவாராமற் காப்பார் செயியுங் காவல்க ளெல்லாவற்றினும் மிக்கது, (எ-று).

ஆற்றலென்பது பெருமை, அறிவு, முயற்சியென்னும் மூன்றன்மேலும் நிற்றலிற் ¶ சாதியொருமை. இகழ்ந்தவழிக் $ கலைய வல்லாரென்பது

---

* இரட்டுறமொழிதல் - ஒருவாக்கியத்தை யிரண்டு பொருள்படச் சொல்லுதல். இங்குப் பெரியார் என்பது ஆற்றலாற் பெரியராய அரசரையும் தவத்தாற் பெரியராய முனிவரையும் உணர்த்தி நின்றவாறறிக.

† இது-பெரியாரைப் பிழையாமை. ‡ வெகுளியான்-கோபத்தால்.

¶ சாதியொருமைப்பெயர் என்றும் பாடமுண்டு.

$ கலையவல்லார் - (இகழ்ந்தவரை) அழிக்கவல்லவர்.



தோன்ற 'ஆற்றலார்'என்றும், அரண்,படை,பொருள், நட்பு 0 முதலிய பிற காவல்கள் * அவரா னழியுமாகலின் அவ்விகழாமையைத் † 'தலை' என்றுங் கூறினர். பொதுவகையால் ‡ அவ் விருதிறத்தாரையும் ¶ பிழையாமை

யது சிறப்பு இதனும் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) ஆற்றுவார்-(எடுத்துக்கொண்ட காரியங்கள்யாவும்) முடிக்க வல்லாருடைய, ஆற்றல் - வல்லமைகளை, இகழாமை - அவமதியாமை, போற்றுவார் - (தம்மிடத்துத் தீங்குவாராமற்) காப்பவர், (செய்யும்), போற்றலுளெல்லாம் - காவல்களெல்லாவற்றினும், தலை-மிகுந்தது, (எ-று).

ஆற்றலென்பது பெருமை, அறிவு, முயற்சி என்னும் மூன்றன்மேலும் நிற்றலால் சாதி யொருமைப்பெயர். இகழ்ந்தவிடத்துக் கீளைய வல்லாரென்பதுதோன்ற 'ஆற்றுவார்' என்றும், அரண், படை, பொருள், ஈட்பு முதலிய மற்றைக்காவல்கள் அவரால் அழியுமாகலால் அவ்விகழாமையைத் 'தலை' என்றும் சொல்லினர். பொதுவகையால் அவ்விருதிறத்துப் பெரியார்க்கும் பிழைசெய்யாமையது சிறப்பு இதனுற் சொல்லப்பட்டது.

(க - து) தம்மைக்காக்குமாறு விரும்புவோர் எடுத்துக்கொண்ட காரியங்களெல்லாவற்றையும் தவறின்றி முடிக்கவல்ல ஆற்றலுள்ளவரை இகழாதிருத்தல் வேண்டும் என்பது.

1. Not to disregard the power of those who can carry out their intentions is more important than all the watchfulness of those who guard themselves against evil.

2. பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும்.

பரி:—(இ - ள்.) ஆற்றல்களாற் பெரியாராயினாரை வேந்தர் நன்கு மதியாது அவமதித்து ஒழுகுவாராயின், அவ்வொழுக்கம் அப்பெரியாரால் அவர்க்கு எஞ்ஞான்றும் நீங்காத துன்பங்களைக் கொடுக்கும், (எ-று).

அத்துன்பங்களாவன: $ இருமையினும் || இடையூறுதவரும் () மூவகைத் துன்பங்களுமாம். அவை யெல்லாந் தாமே செய்துகொள்கின்றன

0 முதலிய என்றமையின், அமைச்சர், புரோகிதர் முதலாயினோரையுங் கொள்க.

* அவரான் - பெருமை, அறிவு, முயற்சி யென்னும் ஆற்றலுடையவரால். † தலையாயகாவல் என்றும் பாடமுண்டு.

‡ அவ்விருதிறத்தார்-ஆற்றலாற் பெரியராய வேந்தர், தவத்தாற் பெரியராய முனிவர். ¶ பிழையாமையது - தவறு செய்யாமையின்.

§ இருமையினும்-இப்பிறப்பிலும் வருபிறப்பிலும்.

‖ இடையறாது-நடுவே நீங்காது.

() மூவகைத் துன்பங்கள்-தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப் பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவுமாகிய மூவகைப் பிறவித்துன்பங்கள்.



ரென்பது தோன்ற, *ஒழுக்கத்தை வினைமுதலாக்கியும் பெரியாரைக் கருவியாக்கியுங் கூறினர். பொதுவகையால் † அவரைப் பிழைத்தற்குற்றம் இதனற் கூறப்பட்டது; இனிச் சிறப்பு வகையாற் கூறுப.

**தெளி:**—(இ - ள்.) (வேந்தர்) பெரியாரை- (பெருமை, அறிவு, முயற்சி என்னும்) ஆற்றல்களாற் பெரியராயினோரை, பேணுது-நன்குமதியாமல், (அவமதித்து), ஒழுகின் - ஒழுகுவாராயின், (அவ்வொழுக்கமானது), பெரியாரால்-அப்பெரியவரால், போவிடும்பை - (எந்நாளும்) நீங்காத துன்பங்களை, தரும் - (அவ்வேந்தர்க்குக்) கொடுக்கும்,

(எ-று).

அத்துன்பங்களாவன: இருமையிலும் இடையறாது வரும் மூவகைத் துன்பங்களுமாம். (வேந்தர்) அத்துன்பங்களையெல்லாம் தாமே செய்துகொள்ளுகின்றன ரென்பது தோன்ற,(அவ்வொழுக்கமானது என)ஒழுக்கத்தை வினைமுதலாக்கியும் (அப்பெரியவரால் என) பெரியாரைக் கருவியாக்கியும் சொல்லினர். பொதுவகையால் அவர்க்குப் பிழைசெய்தற்குற்றம் இதனாற் சொல்லப்பட்டது; இனிச் சிறப்பு வகையாற் சொல்லுவர்.

(க-து.) அரசர் ஆற்றல்களாற் பெரியாரையினை அவமதித்து நடப்பாராயின், அஃது அவர்க்கு அப்பெரியாரால் எப்பொழுதும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும் என்பது.

2. If the king behave without respect for the great, irremediable evils will befall him.

கூ. கெடல்வேண்டிற் கேளாது செய்க
வடல்வேண்டி
னாற்று பவர்க ணிழுக்கு.

பரி:—(இ-ள்.) வேற்று வேந்தரைக்

கோறல் வேண்டியவழி

‡ அதனை அப்பொழுதே செய்யவல்ல வேந்தர்மாட்டுப் பிழையினைத் தான் கெடுதல் வேண்டினனாயின்; ஒருவன் நீதிநூலைக் கடந்து செய்க.

அப்பெரியாரைக் ¶ ''காலனுங் காலம் பார்க்கும் பாராது, வேலீண்டு

---

* ஒழுகின் என்னும் வினையெச்சத்தினின்றும் பிரிந்த அவ்வொழுக்கம் என்பதை எழுவாயாக்கியும், பெரியாரைப் பெரியாரால் என்று துணைக்கருவியாக்கியும், (அவ்வொழுக்கம்) 'பெரியாராற் பேரா விடும்பை தரும்' என்று கூறினர். † அவரை-பெரியாரை.

‡ அதனை-வேற்று வேந்தரை (பகையரசரை)க் கொல்லுதலை.

¶ புறநானூறு-41. இதன்பொருள். யமனும் தன்னால் உயிர் கொள்ளலாங்காலம் வருமளவும் பார்ப்பான்; அவ்வாறு காலம் பாராமல் வேற்படை நெருங்கிய சேனையினையுடைய சிறந்த அரசர்கள் சாகும்படி வேண்டிய விடத்துக் கொல்லும் வெல்லும் போரையுடைய அரசனே என்பது.



தானை விழுமியோர் தொலைய, வேண்டிடத் தடுஉம் வெல்போர் வேந்தே'' என்றார் பிறரும். நீதிநூல் செயலாகாதென்று கூறலின் 'கேளாது' என்றார்.

தெளி:—(இ - ள்.) அடல்வேண்டின்-(வேற்று வேந்தரைக்) கொல்லுதல் வேண்டிய விடத்து, ஆற்றுபவர்கண்-(அதனை அப்பொழுதே) செய்யவல்ல வேந்தரிடத்து, இழுக்கு-பிழையினை, கெடல் வேண்டின்-(தான்)கெடுதல் வேண்டினனாயின், கேளாது-(நீதிநூல் கூறுவதைக்) கடந்து, செய்க-

(ஒருவன்) செய்யக்கடவன், (எ-று).

நீதிநூல் (அடல்வேண்டின் ஆற்றுபவர்கணிழுக்கு) செயலாகாதென்று சொல்லுதலால் 'கேளாது' என்றார்.

(க-து.) தான் கெடவிரும்புகின்றவன் பகைவனை நினைத்த பொழுதே அழிக்கும் வல்லமையுள்ள வேந்தரிடத்துப் பிழை செய்யக் கடவன் என்பது.

3. If a king desires ruin, let him not listen to the righteous dictates of law, but commit crimes against those who are able to kill.

ச.

கூற்றத்தைக் கையால் விளித்தற்ரு லாற்றுவார்க்
காற்றுதா ரின்ரு செயல்.

பரி:—(இ-ள்.) முவகையாற்றலு முடையாரிகந்து அவையில்லாதார் தாம் முற்பட்டு * இன்னுதவற்றைச் செய்தல் தானேயும் வாற்பாலனைய † கூற்றுவனை அதற்குமுன்னே கைகாட்டி அழைத்தாலொக்குமே, (எ-று).

‡ கையால் விளித்தல் இகழ்ச்சிக் குறிப்பிற்று. தாமேயும் உயிர் ¶ முத லிய கோடற் குரியா-ரை அதற்குமுன்னே விரைந்து தம்மேல் வருவித்துக் கொள்வார் இறப்பினது $ உண்மையும் அண்மையுங் கூறியவாறு. இவை இரண்டு பாட்டானும் வேந்தரைப் பிழைத்தலின் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) ஆற்றுவார்க்கு - (பெருமை, அறிவு, முயற்சியென் னும்) மூவகையாற்றலு முடையார்க்கு, ஆற்றுதார் - அவ்வாற்றல்களில்லா தவர், (தாம்முற்பட்டு), இன்னு - இன்னுத செயல்களை, செயல்-செய்தல்,

---

* இன்னுதவற்றை-துன்பந்தருஞ்செயல்களை. † கூற்றுவனை-யமனை.

‡ ஒருவன் யமனை (அவன் வருவதற்குமுன்னே) கைகாட்டி வா வென்றழைத்தல் அவனிடத்துத் தனக்குள்ள இகழ்ச்சி (இழிவு) பற்றி யாக லின், 'கையால் விளித்தல் இகழ்ச்சிக் குறிப்பிற்று' என்று கூறப்பட்டது.

¶ முதலிய என்றமையின், இடம், பொருள், ஏவல் முதலியவற்றையுங் கொள்க.

$ உண்மையும் அண்மையும் - தவறுமையும், நெருக்கமும்.

கூற்றத்தை - (தானேயும்

வருந் தன்மையழிய) கூற்றுவனை, கையால் -

(அதற்குமுன்னே) கைகாட்டி,

விளிதற்று-அழைத்தாலொக்கும், (எ-று).

ஆல் - அசை. கையாலழைத்தல்

இகழ்ச்சிக்குறிப்பினது. தாமேயும்

உயிர் முதலியவற்றைக் கொள்ளுதற் குரியவரை அதற்கு முன்னே விரைந்து தம்மேல் வருவித்துக் கொள்வாரது மரணத்தினது உண்மையும் சமீபமும் சொல்லியவாறும். இவை யிரண்டு பாட்டாலும் வேந்தர்க்குப் பிழை செய்தலின் குற்றம் சொல்லப்பட்டது.

(க-து.) ஆற்றலுள்ள அரசர்க்கு அஞ்சாதிருத்தல் அரசர் முற்பட்டுப் பிழை செய்தல் யமனைக் கைகாட்டி அழைப்பது போலவாம்.

4. The weak doing evil to the strong is like beckoning yama to come and destroy them.

நு. யாண்டேச்சென் றியாண்டு முளராகார்
வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்.

பரி:—(இ-ள்.) பகைவரீக்த * வெய்தாய வலியினையுடைய வேந்த ஞற் செறப்பட்ட அரசர் அவனைத் தப்பி எங்கேபோ யுளராவர்; ஓரி டத்தும் உளராகார், (எ-று).

† இடைவந்த சொற்கள் அசாய்நிலையான் வந்தன. வெந்துப்பின் வேந்தாகலாற் றங்நிலம் விட்டுப்போயவர்க்கு இடங் கொடுப்பாரில்லை; ‡ உள ராயின் ¶ இவர் இனி யாகாரென்பது நோக்கி § அவனோடு மூட்புக்கோடற் பொருட்டும் தாமே வந்தெய்திய ‖ அவருடைமையை வௌவுதற்பொருட் டுக்கொல்வர்; ○அன்றெனின் உடனே ( )யழிவரென்பன நோக்கி 'யாண்டுச்

---

* வெய்தாயவலி - மிகு வுக்கிரமாய சாமர்த்தியம்.

†

யாண்டுச் சென்று என்பது அவனைத் தப்பி என்பதையும் உளாவர் என்பதையும் அவாவி (வேண்டி) நின்றது.

‡ உளராயின் - இடங் கொடுப்பவ ருண்டானால்.

¶ இவர் - வெந்தப்பின் வேந்தால் செறப்பட்ட இவர்.

§ அவரை - வெந்தப்பின் வேந்தரை.

‖ அவருடைமையை - வெந்தப்பின்வேந்தால் செறப்பட்டவருடைய பொருளை.

o அன்றெனின் - வெந்தப்பின் வேந்தாற்செறப்பட்ட அரசரை அவர்க்கிடங்கொடுத்தவர் கொல்லாது விடுவாயின்.

() அழிவர் - (வெந்தப்பின் வேந்தனால் கோபிக்கப்பட்டவர்) சாவர்.



சென் றியாண்டு முளராகார்' என்றார். இதனால் * அக்குற்றமுடையார் † அருமையுடைய அரண் சேர்ந்தும் உய்யா ரென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ ள்.) வெந்தப்பின் - (பகைவர்க்கு) வெய்தாகிய வலி யினை யுடைய, வேந்து-வேந்தனால், செறப்பட்டவர் - கோபிக்கப்பட்ட அரசர், யாண்டுச்சென்று - (அவனைத் தப்பி) எங்கேபோய், (உளராவர்), யா
ண்டும்-ஓரிடத்தும் - உளராகார்-, (எ-று).

(அவனைத்தப்பி, உளராவர் என) இடையில் வந்த சொற்கள் அவாய்

நிலையால் வந்தன. வெய்தாகிய வலியினையுடைய அரசனுகலால் தமது நிலம்

விட்டுப்போனவரசர்க்கு இடங் கொடுப்பாரில்லை; உளராலல் இவர் இனி

ஆகாரென்பது நோக்கி அவனை நட்புக் கொள்ளுதற் பொருட்டும் தாமே

வந்து அடைந்த அவருடைமையை அபகரித்தற் பொருட்டும் (அவரைக்) கொல்லுவர்; அன்றெனின் உடனே அவர் அழிவரென்பன நோக்கி 'யாண்டுச்சென் றியாண்டு முளராகார்' என்றார். இதனல் அக்குற்ற முடையவர் அருமையுடைய அரண் சேர்ந்தும் உய்டா ரென்பது சொல்லப்பட்டது.

(க - து). பேராற்றலுடைய அரசனற் கோபிக்கப்பட்ட அரசர் எவ்விடத்துச் சென்றலும் பிழைத்தல் முடியாது என்பது.

5. Those who have incurred the wrath of a cruel and mighty potentate will not prosper wherever they may go.

சு. எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்

பெரியார்ப் பிழைத்தொழுத வார்.

பரி:—(இ-ள்.) காட்டிடைச் சென்ற ஒருவன் ‡ ஆண்டைத் தீயாற் சுடப்பட்டானெயினும் ஒருவாற்றான் உயிருய்தல் கூடும்; ¶ தவத்தாற் பெரியாரைப் பிழைத்து ஒழுதவார்எவ்வாற்றானும் உய்குயியார்.

நீ முன் உடம்பினைக் கதுவி § அதுவழியாக உயிர்மேற் சேறலின்

*

அக்குற்றமுடையார் - பெரியாரைப்பிழைத்தற்குற்ற முடையவர்.

† அருமையுடைய அரண் - பிறர் புகுதற் கரிதாய கோட்டை. "அருமை யுடைய அரண்சேர்ந்து மூய்யார், பெருமை யுடையார் செறின்" என்று நாலடியார் கூறுகின்றது. உய்யார் - பிழையார்.

‡ ஆண்டைத்தீயால் - அக்காட்டுத் தீயால்.

¶ "குணமென்னுங் குன்றேறி நின்றூர் வெகுளி, கணமேயுங் காத்தலரிது" என்னுங் குறள் இங்குக் கவனித்தற் பாலது.

§ அது வழியாக - அவ்வுடம்பின்வாயிலாக.



இடையே உய்யவுங் கூடும்; * அருந்தவர் வெகுளி
அன்னதன்றித் தானிற்
பது கணமாய் அதற்குள்ளே யாவர்க்குங் காத்தலரிதாகலின்,
† அது கூடா

தாகலான் ‡ அதற்கேதுவாய பிழை செய்யற்க வென்பதாம்.

தெளி:—(இ-ள்.) (காட்டினிடத்துச் சென்று ஞெருவன்) எரியால்-(அவ்விடத்துத்) தீயால், சுடப்படினும்-சுடப்பட்டானுயினும், உய்வு - (ஒரு வழியால்) உயிர்பிழைத்தல், உண்டாம்-கூடும், பெரியார்-(தவத்தாற்) பெரியார்க்கு, பிழைத்தொழுகுவார்—பிழைசெய்து நடப்பவர், உய்யார்-(எவ்வழியாலும்) உயிர் பிழையார், (எ-று).

தீயானது முன்பு உடம்பினைப்பற்றி அது வழியாக உயிர்மேல்செல்லு தலால் நடுவே உய்யவுங் கூடும்; அருந்தவர் கோபம் அத்தன்மைய தல்லா மல் தான் நிற்பது கணமாய் அதற்குள்ளே யாவர்க்கும் காத்தல் அரிதாக லின், அது கூடாதாகலால், அதற்குக் காரணமாகிய பிழை செய்ய வேண்டா மென்பதாம். பிழை-தவறு ; கணம்-கணப்போது; காத்தல்-தடுத்தல்.

(க-து.) தவத்தாற் பெரியவர்க்குப் பிழை செய்து நடப்பவர் எவ்வாற்றலும் பிழைத்தல் முடியாதென்பது.

6. One may perhaps live, though burnt by a forest fire;
but never will he live who has shown disrespect

to the great
ascetics.



எ.

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னுந்
தகைமாண்ட தக்கார் செறின்.

பரி:—(இ-ள்.) ¶ சாப வருள்கட் கேதுவாய பெருமை மாட்சிமை ப்படட்ட அருந்தவர் அரசனே வேதுள்வாயின், உறுப்பழதுபேற்ற அவனா சாட்சியும் ஈட்டிவைத்த பெரும்போகமும் | என்பட்டுவிடும், (எ - று).

உறுப்பு-அமைச்சு, நாடு, அரண், படை யெனவிவை. செறினென்பது o அவர் செருமை தோன்ற நின்றது. இவ்வெச்சத்தான் ‖ முன் வருவன

---

* அருந்தவர்-செய்தற்கரிய தவத்தையுடையவர்.

"பொறீப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும், வெறுப்பன செய்யாமை வேண்டும்-வெறுத்தபின், ஆர்க்கு மருவி யணிமலை நன்னாட, போர்க்குதல் யார்க்கு மரிது" என்று காலடியார் கூறுவதிற்குணர்தற்பால தாம.

† அது - உயிர்பிழைத்தல். ‡ அதற்கு - உயிர்பிழையாமைக்கு.
¶ சாபம் - சபித்தல்; அருள் - கருணைசெய்தல்.

| என்பட்டுவிடும் - அடியோடழிந்துபோம்.

o அவர்-தகைமாண்ட தக்கார்.

‖ முன் வருவன - இவ்வதிகாரத்தின் 8-வது குறளில் 'மதிப்பின்' என்றும், 9-வது குறளில் 'சீறின்' என்றும், 10-வது குறளில் 'செறின்' என்றும் வருவன. (முன் என்றது இங்கு இடமுன்).

வற்றிற்கும் ¶ இஃதொக்கும். அரசர் தஞ் செல்வக்களிப்பான் அருந்தவர் மாட்டுப் பிழை செய்வராயின், அச்செல்வம் அவர் வெகுளித்தீயான் ஒரு கணத்துள்ளே வெந்துவிடுமென்பதாம்.

தெளி:—(இ-ள்.) தகை - (சாபானுக்கிரகங்களுக்குக் காரணமாகிய) பெருமையால், மாண்ட-மாட்சிமைப்பட்ட, தக்கார் - அருந்தவர், செறின் - (அரசனைக்) கோபிப்பாராஞல், வகை-அங்கத்திஞல், மாண்ட-அழகுபெற்ற, வாழ்க்கையும்-(அவ்வரசன்) அரசாட்சியும், வான்பொருளும்-(சம்பாதித்து வைத்த) பெரும்பொருளும், என்னும்-என்பட்டுவிடும், (எ-று).

அங்கம்-அமைச்சு, நாடு, அரண், படை எனவிவை. செறினென்பது அவர் செறுமை (கோபியாமை)தோன்றநின்றது. செறின் என்னும் இவ்வினையெச்சத்தால்முன்வருவனவற்றிற்கும் இஃது ஒக்கும். அரசர் தஞ்செல்வக்களிப்பால் அருந்தவரிடத்துப் பிழைசெய்வாராயின், அச்செல்வம் அவர் கோபத்தீயால் ஒருகணத்துள்ளே வெந்துவிடுமென்பதாம். வெந்துவிடுதல்-அழிந்துபோதல்.

(க-து.) தவப்பெருமையுடைய முனிவரால் கோபிக்கப்பட்ட அரசனது வாழ்வும் பொருளும் விரைந்துகெடும் என்பது.

7. What will become of the king's government with its regalities and all its wealth, if he incurs the wrath of the

righteous ascetics?

அ. குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியோடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

பரி:—(இ - ள்.) துன்றத்தையோக்கும் அருந்தவர் கெட நினைப்பா
ராயின், அப்பொழுதே இந்நிலத்து நிலைபெற்றற்போலுஞ் செல்வர் தங்

குடியோடும் மாய்வர் , (எ - று).

வெயில் மழை † முதலிய பொறுத்தலுஞ் சலியாமையும் உள்ளிட்ட குணங்க ளுடைமையின் *'குன்றன்னார்' என்றார். §"மல்லன் மலையனைய மாதவர்" என்றார் பிறரும். நிலைபெற்றாற் போறலாவது இறப்பப் பெரிய

¶ இஃது-அவர் (அருந்தவர்) செருமை (கோபியாமை).

† முதலிய என்றமையின், உண்டிசுருக்கல், தம்முயிர்க்கு வருந்தன் பங்களைப்பொறுத்தல் முதலியவற்றையுங் கொள்க.

* "குணமென்னுங் குன்றேறி" என்னுங் குறளின் விசேடவுரையில் "சலியாமையும் பெருமையும் பற்றிக் குணங்களைக் குன்றுக வுருவகஞ் செய்தார்" என்று வரைந்திருப்பது மிங்குணர்தற் பாற்றும்.

§ சீவக சிந்தாமணி-முத்தியிலம்பகம் - 191, இதன்பொருள். வளப்பம் பொருந்திய மலையை யொத்த பெரிய தபோதனர் என்பது.

ராகலின் † இவர்க்கு எஞ்ஞான்றும் அழிவில்லையென்று கண்டாராற் கருதப்படுதல்.

தெளி:—(இ - ள்.) குன்றன்னர் - மலையையொக்கும் அருந்தவர், குன்ற-கெட, மதிப்பின் - நினைப்பாராலும், (அப்பொழுதே), நிலத்து - இந்நில வுலகத்தில், நின்றன்னர் - நிலைபெற்றாற் போலுள்ளசெல்வர், குடியொடு - (தமது) குடியோடும், மாய்வர் - அழிவர், (எ - று).

வெயில் மழை முதலியவற்றைப் பொறுத்தலும் அசையாமையும் உட்
கொண்டுள்ள குணங்களுடைமையால் 'குன்றன்னர்' என்றார். (செல்வர்) நிலைபெற்றாற்போன் றிருத்தலாவது (செல்வத்தால்) மிகப் பெரியவராகலால் இவர்க்கு எந்நாளும் அழிவில்லையென்று கண்டவரால் நினைக்கப்படுதல்.

(க - து.) தவத்தாற் பெரியவர் கெடும்படி நினைப்பாராயின், அப்பொழுதே பெருஞ் செல்வமுடையவர் தங்குடியொடுங் கெடுவரென்பது.

8. If the ascetics who have mountain-like patience
resolve on destruction, those who seem to regard their
existence and riches as everlasting will be destroyed root and
branch from the earth.

கூ. எந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வெந்து கெடும்.

பரி:—(இ - ள்.) காத்தற் கருமையான் உயர்ந்த ‡ விராதங்களை உடையார் வேதஞ்வாயின், அவராற்றலான் இந்திரனும் இடையே தன் பதம் இழந்து கெடும், (எ - று).

¶ "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" என்றார் பிறரும். § நகுட

னென்பான் இந்திரன் பதம்பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்பு

மிகுதியான் அகத்தியன் வெகுள்வதோர் பிழைசெய அதனைச் சாபமெய்தி

அப்பதம் இடையே இழந்தானென்பதனை யுட்கொண்டு, இவ்வாறு கூறி

---

† இவர்கீது - இப்பெருஞ்செல்வ முடையவர்க்கு.

‡ விராதங்களாவன: இன்னவற்றுள் செய்வ லெனவும், இன்ன பாவ மொழிவ லெனவும் தம்மாற்றலுக் கேற்ப வரைந்து கொள்வன.

¶ தொல்காப்பியம் - பொருளதிகாரம்-அகத்திணையியல், 5. இதன்பொருள். இந்திரன் விரும்பிய இனியபுனல் (நீர்) சூழ்ந்தமருதநிலமும் என்பது.

நகுஷனென்னும் சந்திரவமிசத் தரசன் நூறு அசுவமேதயாகஞ் செய்து இந்திரனது பதவியைப்பெற்றுச் சப்தரிஷிகள் சுமக்கப் பல்லக்கின் மீதேறி இந்திராணியின் வீட்டிற்குப் போகும்போது, அவ்விந்திராணியின் மீதுள்ள ஆசைமிகுதியினால் சர்ப்ப சர்ப்ப (ஓடு ஓடு) என்று கூறினன்; அதனைக் கேட்டுச் சப்தரிஷிகளுள் ஒருவராய அகத்திய முனிவர் கோபித்து அந் நகுஷனைச் சர்ப்பமாக (பாம்பாக)ச் சபித்தானென்பது கதை. இக்கதையின் விரிவைத் திருவிளையாடற்புராணம் இந்திரன்பழிதீர்த்தபடலத்திற் காண்க.



னர்.

இவை நான்கு பாட்டானும் முனிவரைப் பிழைத்தலின் குற்றங் கூறப் பட்டது.

**தெளி:**—(இ - ள்.) எந்திய கொள்கையார் - (காத்தற்கருமையால்) உயர்ந்த விரதங்களையுடையவர், சீறின் - கோபிப்பாராஞல், (அவர் வலிமை யால்), வேந்தனும் - இந்திரனும், இடைமுரிந்து - நடுவே (தன்பதத்தை) இழந்து, வெந்து கெடும் - கெடுவான், (எ - று).

வேந்தன் என்பது இங்கு இந்திரன்மேல் நின்றது. இந்திரனுக்கு வேந் தன் என்னும் பெயரிருத்தல் "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" என்று தொல்காப்பியங்கூறுதலாலறிக. நகுஷனென்னும் அரசன் இந்திரனதுபதவி யைப் பெற்றுப்போகின்ற காலத்தி லடைந்த சந்தோஷத்தின் மிகுதியினால் அகத்தியமுனிவர் கோபிப்பதொரு தப்பிதத்தைச் செய்ய அத்தப்பிதத்தால் அவ்வரசன் அம்முனிவரது சாபத்தையடைந்து அவ்விந்திரபதவியை நடுவே யிழந்தா னென்பதனை மனத்துட்கொண்டு (எந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து, வேந்தனும் வெந்து கெடும் என்று) இவ்வாறுசொன்னர். இவை நான்குபாட்டாலும் முனிவர்க்குப் பிழைசெய்தலின் குற்றம் சொல் லப்பட்டது.

(க-து.) தவத்தாற் பெரியவர் கோபித்தால் இந்திரனுங் கெடுவான் என்பது.

9. If ascetics of exalted vows burst in a rage, even the king (Indra) will lose his status and be ruined.

க0. இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.

பரி:—(இ-ள்.) கழியமிக்க தவத்தினையுடையார் வேதுள்வாயின், அவரான் வேதளப்பட்டார் கழிய பெரிய சார்பு உடையாயினும்

* அதுபற்றி உய்யமாட்டார், (எ-று).

சார்பு-அரண், படை, பொருள், நட்பெனவிவை. † அவையெல்லாம் வெகுண்டவரது ஆற்றலாற் ‡திரிபுரம்போல அழிந்துவிடு மாகலின் 'உய்யார்'

---

* அது-சார்பு. † அவை-அரண், படை, பொருள், நட்பென்பன.

‡ திரிபுரம்-இரும்பு, பொன், வெள்ளியாலாகிய மதில்களையுடைய மூன்று பட்டணங்கள். வித்துவமாலி, தாருகாக்கன், கமலாக்கன் என்னு மூன்றசுரர்கள் பிரமனைநோக்கி யரியதவஞ்செய்து, அப்பிரமன்தந்த வரத்தி னால் திரிபுரத்தைப் பெற்றுப் பலவசுரர்களுடன் அத்திரிபுரத்துடன் கினை த்த விடத்திற்குச் சென்று பிராணிகளுக்குக் கேடுண்டாக்கிவந்தனர்; தேவர் கள் அதனைப் பொறுக்கமாட்டாது சிவபெருமானிடத்துச் சென்று முறை யிட்டனர்; அப்பெருமான் அம்முறைக்கிரங்கி அத்தேவர்கள் சமைத்துத்தந்த தேரின்மீ தேறிச்சென்று அத்திரிபுரத்தைச் சிரித்தெரித் தழித்தனர் என்

**973**

என்றார். * சிறுடையது சிறனெப்பட்டது. இதனால் † அக்குற்ற முடை யார் சார்புபற்றியும் உய்யாரென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) சிறந்தமைந்த-மிகவும் அதிகமான, சீரார்-தவத்தினை யுடையவர், செறின் - கோபிப்பாராஞல், (அவரால் கோபிக்கப்பட்டவர்), இறந்தமைந்த-மிகவும் பெரிய, சார்புடையராயினும் - பற்றுக்கோடுடையவ ராஞலும், உய்யார்.(அதுபற்றி) உய்யமாட்டார், (எ-று).

சார்பு-அரண், படை, பொருள், நட்பு என இவை. அவை யெல்லாம் கோபித்ததவத்தினரது வலிமையால் திரிபுரம்போல அழிந்துவிடுமாகலால் 'உய்யார்' என்றார். சீரையுடையதவம் சிறனெப்பட்டது. இதனால் அக்குற்ற முடையவர் சார்புபற்றியும் உய்யாரென்பது சொல்லப்பட்டது.

(க-து.) மிகப்பெரிய தவமுடையவரால் கோபிக்கப்பட்டவர் அரண் முதலிய சார்புடையவராயிருப்பினும் பிழையார் என்பது.

10. Though kings may be in possession of numerous auxiliaries, they will perish if they are exposed to the wrath of the noble ascetics.

## இருபத்தெட்டாவது அதிகாரம்.

## பெண்வழிச் சேறல்—*Inclining towards the wife.*

பரி:—இனிக் காமத்தான் வருவன நேரே பகையல்ல வாயினும், † ஆக்கஞ்சிதைத்தல் அழிவுதலைத்தருத லென்னுந் தொழில்களாற் பகை யோடொத்தலிற் பகைப்பாற் படுவனவாம்; ஆகலான் ‡ அவற்றைப் பகைப்பதுதிய திறுதிக்கட் கூறுவான் றொடங்கி, முதற்கட் பெண்வழிச் சேறல் கூறுகின்றார். § அஃதாவது ‖ தன்வழி யொழுகற் பாலளாய இல்லாள் வழியே தான் ஒழுகுதல்.

---

பதுகதை.["வளைத்த வெஞ்சிலை தாங்கிலேன் மால்களை செலுத்தி,யிளைத்த தூண்ணிடை பங்கர்பார்த் திளமகை விளைப்பத், திளைத்த மூவெயிற் றீமலிந் தொருகணஞ் செலாமுன், தொளைத்த தீமையோர் மாய்ந்தனர் சாம்பரா யொழிந்தே" என்று பாரதங் கூறுகின்றது] இதன் விரிவைப் பாரதம் பதி னேழாவது போர்ச்சருக்கத்திற்காண்க.

* சீர் (சிறப்பு) என்னுங் காரியப்பெயர் அதற்குக் காரணமாய தவத்தி னையுணர்த்துதலால் காரியவாகுபெயராம்.

† அக்குற்றம்-பெரியாரைப் பிழைத்தற் குற்றம்.

‡ ஆக்கம்-மேன்மேலுயர்தற்குக் காரணமாய செல்வம்.

¶ அவற்றை-காமத்தினால் வருந்தீமைகளை.

§ அஃதாவது-பெண்வழிச் சேறலாவது.

‖ "தன்னு லாளப் படுமனை வி தன்னு லாளப் படுவானேல், அன்னுற் கறனும் பொருளுமுள வாகா தொல்லைப் பொருளானும், மன்னு பயன்தன்



தெளி:—இனிக் காமத்தால் வருந் தீமைகள் நேரே பகையல்லவாயினும், ஆக்கத்தைச் சிதைத்தல் அழிவினைத்தருதல் என்னுந் தொழில்களால் பகையோடு ஒத்தலால் பகையினிடத்துப் பொருந்துவனவாம்; ஆகலால் அவற்றைப் பகைப்பகுதியின் முடிவில் சொல்லத்தொடங்கி, முதலில் பெண்வழிச்சேறல் சொல்லுகிறார். அஃதாவது தன்வழியி லொழுகுதற்கு உரியவளாகிய மனையாள் வழியே தான் ஒழுகுதல்.

ஒழுகுதல்-நடத்தல்.

க. மனைவிழைவார் மாண்பய னெய்தார்
வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது.

பரி:—(இ-ள்.) இன்பநீ காரணமாகத் தம் மனையாளை விழைந்து

*அவடன்மையாயி ஒழுதவார் தமக்கு இன்றுணையாய அறத்தினை யெயி

தார்; இனிப் பொருள் செய்தலை முயல்வார் அதற் கிடையீடென்று இக

ழும் பொருளும் அவ்வின்பம், (எ-று).

† மனையும் விழைவும் பயனும் ஆகுபெயர்.

அவ்வின்பம் - அவடன்

மையராதற்கு ஏதுவாய வின்பம். அஃது ‡ அவளாற் பயனுய வறத்தினும்

அவ்வறத்திற்குந் தனக்கும் ஏதுவாய பொருளினுஞ் செல்லவிடாமையின்,

விடற்பாற்றென்பதாம்.

தெளி:—(இ - ள்.) மனைவிழைவார் - (இன்பங் காரணமாகத்) தம்

மனையாளை விரும்பி அவள் தன்மையரா யொழுகுவார், மாண்பயன் - (தம

க்கு) இனியதுணையாகிய அறத்தை, எய்தார் - அடையார், வினைவிழைவார்-

(இனிப் பொருள்) சம்பாதித்தலை முயல்பவர், வேண்டாப்பொருளும் - (அப்

பொருளுக்குத்தடையென்று) இகழும் பொருளும், அது - அவ்வின்பம்.

மனை - இடவாகு பெயர்; விழைவு - கருவியாகு பெயர்;

பயன்-காரிய
வாகு பெயர். •அவ்வின்பம் - அவளது தன்மையாதற்குக் காரணமாயவின்
பம். அவ்வின்பம் அவளால் பயனுகிய அறத்திலும் அவ்வறத்திற்கும் தன்
னதிகாரத்திற்கும் காரணமாகிய பொருளிலும்
செல்லவிடாமையால், விடப்
படுந் தன்மையதென்பதாம்.

வினைமுடியா மறுமை யணுகா தெப்பிழையும், முன்னும் பின்னும் பெரு
காணு மூவாப் பழியு மறிமைந்தா" என்பது
விநாயகபுராணம். * அவடன்
மையராயொழுகுவார்-மனையாள் கூறியவாறு நடப்பவர்.

† மனை (வீடு) என்னும் இடப்பெயர் அங்குள்ள பெண்ணினை (மனை
விளை) உணர்த்துதலால் இடவாகுபெயராம்.

விழைவு என்னும் கருவிப்பெயர் அதன் காரியமாய மனையாளின் றன்மையராய் ஒழுகுதலை யுணர்த்துதலால் கருவியாகுபெயராம்.

பயன் என்னும் காரியப்பெயர் அதற்குக் காரணமாய அறத்தினையுணர்த்துதலால் காரியவாகு பெயராம்.

‡ அவளால் - மனையாளால். (இல்லறத்தானுக்குப் பயனுய அறத்திற்கு மனையாள் துணையாயிருத்தலால் 'அவளாற் பயனுய வறத்தினும்' என்று கூறப்பட்டது).

(க - து.) இன்பங் காரணமாகத் தமது மனையாள் கூறிய வழியில் நடப்பவர் அறத்தின் பயனையடையார்; பொருள் தேடுதலில் முயற்சியுடையவர் அவ்வின்பத்தை விரும்பார் என்பது.

1. Those who lust after their wives (and do their biddings) will not attain the excellence of virtue; and it is just this that is not desired by those who are bent on acquiring wealth.

உ. பேணுது பெண்விழைவா னுக்கம்
பெரியதோர்
நாணுக நாணுத தரும.

பரி:—(இ - ள்.) * தன் ஆண்மையைவிட்டு மனையாளது பெண்மையை விழைவான் எய்தினின்ற செல்வமும், இவ்வுலகத்து ஆண்பாலார்கீகெல்லாம் பெரியதோர் நாணுண்டாகத் தனகீதும் †

நாணுதலைக் கொடுக்கும், (எ - று).

† எய்திநின்றதாயிற்று; படைடக்கும் ஆற்றலிலனுதலின்.

¶ அச்செல்வத் தால் ஈதலுந் துய்த்தலும் o முதலிய டயன்கொள்வான் () அவளாகலின், அவ்வாண்மைச்செய்கை அவள் கண்ணதாயிற்றென்று ஆண்பாலார் யாவரும் நாண அதனுற் றன் ஆண்மையின்மை அறிந்து பின் தானும் நாணுமென் பது நோக்கிப் 'பெரியதோர் நாணுக நாணுத் தரும்' என்றார். இவை இரண்டோபாட்டானும் மனைவிழைதற் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) பேணுது - (தன்னாண்மையை) விரும்பாமல், (விட்டு), பெண்விழைவான் - (மனையாளது) பெண்மையை விரும்புவான், ஆக்கம் - (அடைந்துநின்ற) செல்வம், (இவ்வுலகத்து ஆண்பாலார்க்கெல்லாம்), பெரியதோர்நாண் - பெரியதொரு வெட்கம், ஆக - உண்டாக, நாணு- (தனக்கும்), நாணுதலை, தரும் - கொடுக்கும், (எ - று).

(பேணுது பெண்விழைவான் செல்வத்தைச்) சம்பாதிக்கும் வலிமையில னாகலின், (அவனிடத்துச் செல்வம் முன்னரே) அடைந்துநின்ற

---

* தன் ஆண்மையை விழையாது விட்டு என்றும் பாடமுண்டு.

† நாணுதலாவது சால்பு பண்பு முதலிய குணங்களாலுயர்ந்தோர் தமக் கொவ்வாத கருமங்களில் நாணுதல்.

‡ பேணுது பெண்விழைவான் பொருளைச் சம்பாதிக்கும் வல்லமை யில்லாதவனு யிருத்தலால், அவனிடத்துச் செல்வம் எய்தி (அடைந்து)நிற்ப தாகாது எய்தி நின்றதாயிற்றென்க.

¶ அச்செல்வத்தால் - தனது முயற்சியாலன்றி முன்னரே யடைந்து நின்ற செல்வத்தினால்.

o முதலிய என்றமையின் புகழ்பெறுதல் முதலியவற்றையுங் கொள்க. முதலிய பயன்கள் அவளனவாகலின் என்றும் பாடமுண்டு.

() அவளாகலின் - மனையாளாகலால்.



தாயிற்று அச்செல்வத்தால் கொடுத்தலும் அனுபவித்தலும் முதலிய பயன் கொள்வாள் அவளாகலால், அவ்வாண்மைச் செய்கை அவளிடத்ததாயிற் றென்று ஆண்பாலார் யாவரும் நாண அதனால் தன்னாண்மை யில்லாமை யையறிந்து பின்னர்த் தானும் நாணுவனென்பது நோக்கிப் 'பெரியதோர் நாணுக காணுத் தரும்' என்றார். இவை இரண்டு பாட்டாலும் மனையாளை விரும்புதற் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து) தன தாண்மையை விரும்புவ தொழிந்து தன் மனையாளது பெண்மையை விரும்புவானது செல்வம் அவனுக்கு வெட்கத்தைத் தரும் என்பது.

2. The wealth of him who, regardless of his manliness, devotes himself to his wife's feminine

nature will cause a great shame to all men and to himself.

கூ.

இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணாணுத் தரும்.

பரி:—(இ - ள்.) ஒருவன் இல்லாண்மாட்டுத் தாழ்தற்கு ஏதுவாய அச்சம் அமைதிலராய நல்லாரிடைச் செல்லுங்கால் நாணுதலை அவனுக்கு எக்காலத்துங் கொடுக்கும், (எ - று).

† அவடான் அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின், அவளை யஞ்சுதல்இயல் பின்மையாயிற்று. அங்ஙனமஞ்சி யொழுகுதலின், அவளை நியமிப்பாரில்லை யாம்; ஆகவே, எல்லாக்குற்றமும் விளையுமென்பது நோக்கி, எஞ்ஞான்றும் நாணுததருமை எனறார்.

தெளி:—(இ - ள்.) (ஒருவன்) இல்லாள்கண் - மனையாளிடத்து, தாழ் ந்த வியல்பின்மை - தாழ்தற்குக் காரணமாகிய அச்சம், நல்லாருள் - (அவ் வச்சமிலராய) நல்லாரிடத்து, (செல்லுங்கால்), நாணு - நாணுதலை, (அவ னுக்கு), எஞ்ஞான்றும் - எந்நாளும், தரும் - கொடுக்கும், (எ - று).

அவள்தான் தனக்கு அஞ்சி யொழுகுதல் இயல்பாகலால், அவளுக் குத்தான் அஞ்சுதல் இயல்பில்லாமையாயிற்று. அவ்வாறு அஞ்சி யொழு குதலால், அவளை நியமிப்பார் இல்லையாம்; ஆகவே, எல்லாக் குற்றமும் விளையுமென்பது நோக்கி, எஞ்ஞான்றும் நாணுத்தரும் என்றார்.

(க-து.) மனையாளிடத்து அச்சமுடையவனுயிருப்பவன் அவ் வச்சமில்லாரிடத்துச்செல்லும்போது வெட்கமடைவான் என்பது.

3. The frailty that stoops to a wife will always make ıer husband feel ashamed among the good.

சு. மனையாளஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை † வீறெய்த லின்று.

† அவடான் - மனையாள்.
‡ வீறெய்தலின்று-பெருமையடைதலில்லை.

அங்கவியல்—உ அ-வது பெண்வழிச்சேறல்.

977

பரி:—(இ-ள்.) தன் மனையாளை யஞ்சி ஒழுதகின்ற மறுமைப்பய
னில்லாதானுக்கு வினையை ஆளுந்தன்மை
உண்டாயவழியும் நல்லோ
ராற்ற கொண்டாடப்படாது, (எ-று).

* உண்டாயவழியு மென்பது அவாய்நிலையான்

வந்தது. † இல்லறஞ் செய்தற்குரிய நன்மை யின்மையின் 'மறுமையிலாளன்' என்றும்; வினையை யாளுந்தன்மை ‡ தன்றன்மை யில்லாத ¶ அவனுன் முடிவுபோகாமையின் 'வீறெய்தலின்று' என்றுங் கூறினர்.

தெளி:—(இ - ள்.) மனையாளை-(தன்) மனையாளுக்கு, அஞ்சும்-அஞ்சி யொழுகுகின்ற, மறுமையிலாளன் - மறுமைப் பயனில்லாதவனுக்கு, வினை

யாண்மை-தொழிலையாளுந்தன்மை, (உண்டாயவழியும்); வீறெய்தலின்று - (நல்லோரால்) கொண்டாடப்படுதலில்லை, (எ-று).

உண்டாய வழியும் என்பது அவாய்நிலையால் வந்தது. இல்லறஞ் செய் தற்குரிய நன்மை இல்லாமையால் 'மறுமையிலாளன்' என்றும், தொழிலை

யாளுந்தன்மை தன்தன்மை யில்லாத அவனுல் முடிவுபோகாமையால் 'வீறெய்தலின்று' என்றுஞ் சொல்லினர்.

(க-து.) மனையாளுக்கஞ்சி யொழுகுகின்றவன் செய்யுந் தொழில் செவ்வையாக முடிவுபெறாது என்பது.

4. Though one may have the power of accomplishing any undertaking it will not be applauded by the wise, if one fears one's wife and thereby loses the fruits of after-life.

குரு. இல்லாஎ யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல்.

பரி:—(இ-ள்.) தன்மனையாஎ யஞ்சுவான் தான் தேடிய பொரு ளேயாயினும் அதனல் நல்லார்க்கு நல்லன செயிதலே எஞ்ஞான்றும் அஞ்சாநிற்கும், (எ-று).

நல்லார்-தேவர், அருந்தவர், சான்றோர், இரு முதுகுரவர் 0 முதலாயினரும் () நல்விருந்தினரும். நல்லன செய்தல்-அவர் விரும்புவன கொடுத்தல்.

---

* வீறெய்தலின்றென்பது உண்டாயவழியும் என்பதை அவாவி (வேண்டி) நின்றது.

† தன் மனையாளுக்கஞ்சுவானிடத்து இல்லறஞ் செய்தற் குரிய நற் செயலில்லாமையின், அவனுக்கு இல்லறத்தின் பயனுகிய மறுமையின்ப மில்லையா மென்பது. ‡ தன்றன்மை-ஆண்மை.

¶ அவனன்-தன் மனையாளுக்குப் பயந்து நடப்பவனல்.

0 முதலாயினர் என்றது நட்பினர், வமிசகுரு, ஞானகுரு முதலிய வர்களை.

() நல்விருந்து- வாராவிருந்தினர். அவராவார் - விதான் இல்லத்திற் குக் கண்ணபிரானும் அப்பூதியடிகள் இல்லத்திற்கு அப்பர் சுவாமிகளும் வந்தாற்போன்றவிருந்தினர்.





*அது செய்யவேண்டும் † நாள்களினு மென்பார் 'எஞ்ஞான்றும்' என்றார். ‡ "இல்லாஎ யஞ்சி விருந்தின்முகங் கொன்ற நெஞ்சிற், புல்லாள ரூக" என்றார் பிறரும்.

தெளி:—(இ-ள்). இல்லாஎயஞ்சுவான்-(தன்) மனையாளுக்கு அஞ்சு நின்றவன், (தான் தேடியபொருளேயாயினும் அப்பொருளால்), நல்லார் க்கு—நல்லசெயல் - நல்லவற்றைச் செய்தற்கு, எஞ்ஞான்றும்-எந்நாளும்,

அஞ்சும்- அஞ்சாநிற்பன், (எ-று).

மற்று-அசைநிலை. நல்லார்-தேவர், அருந்தவர், சான்றோர், தாய்தந்தை யர் முதலாயினோரும் நல்விருந்தினரும். நல்லனவற்றைச் செய்தல்-அந்நல்ல வர் விரும்பியவற்றைக் கொடுத்தல். அது செய்யவேண்டும் நாட்களிலுமென் பார் 'எஞ்ஞான்றும்' என்றார்.

(க-து.) தன் மனையாளுக்கஞ்சுகின்றவன் நல்லவர்க்கு நல்லனவற்றைச் செய்தல் முடியாது என்பது.

5. He who fears his wife will always be afraid of doing good deeds even to the great souls.

சு இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா ளமையார்தோ ளஞ்சு பவர்.

பரி:—(இ-ள்). தம் மில்லாளுடைய ¶ வேயீடோலுந் தோளினை அஞ்சுவார் \$ வீரத்தாற் றுறக்கமெய்திய அமரர்போல இவ்வுலகத்து வாழ்ந்தாராயினும் ஆண்மை யிலர், (எ-று).

* அது- விரும்புவன கொடுத்தல். † நாள்கள் - சிரார்த்தம், தேவ பூசை, முதலியவற்றைச் செய்தற்குரிய தினங்கள்.

‡ சீவகசிந்தாமணி-மண்மகளிலம்பகம் - 218. இதன் பொருள். மனை யாளுக்குப் பயந்து விருந்தினரது முகத்தை மகிழ்ச்சி செய்யாது விட்டமனத்தினையுடைய புல்லாளனுகக்கடவேன் என்பது. [புல்லாளனுதல் - அற்பபுத்தியை யுடையவனுதல்]. விருந்தினரது முகம் மகிழ்ச்சியுடையாது போதற்கேது 'மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து" என்னுங் குறளாலறியப் படுவதாம்.

¶ வேய் - இளமூங்கில். தோள் அளவு, வடிவு, பசுமை நிறம் என்பவற்றுல் வேய்போன்றிருப்பதாம். இது "அளவே வடிவொப்ப தன்றியே பச்சை, யிளவேய் நிறத்தானு மொக்கும்—தோள்" என்றுள்ள பிரயோகம் இங்குணர்தற் பாலதாம்.

§ போர்க்களத்தில் பகைவர்க்குப் பின்வாங்காது போரிட்டு மடிந்தவர் தேவராகி வீரசுவர்க்கத்தை யடைதல் பற்றி 'வீரத்தாற் றுறக்கமெய்திய அமர்போல' என்று கூறப்பட்டது. பாரதம் 18-ம் போர்ச்சருக்கத்தில் (235-ம் பாடல்) "குருகுல மகிபதி திறல்வெஞ் செருமுனை யதனின் மேதகு, மயிர்



அமர்போல வாழ்தலாவது பகைத்த வீரர் தோள்களையெல்லாம் வேறலான் நன்குமதிக்கப்பட்டு வாழ்தல். * அது கூடாமையின் † 'வாழினும்' என்றூர். 'அமையார்தோள்' எனவே அஞ்சுதற் காரணத்தது எண்மை கூறியவாறு. வீரர்தோள்களை வென்றூராயினும் இல்லாடோள்களை அஞ்சுவார் ஆண்மையில ரென்பதாம். இவை நான்கு பாட்டானும் அவளை யஞ்சுதற்குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) இல்லாள் - (தம்) இல்லாளுடைய, அமையார் தோள் - வேய்போலுந்தோளுக்கு, அஞ்சுபவர் - அஞ்சுகின்றவர், இமையா நின் - (வீரத்தால் சுவர்க்கமடைந்த) தேவர்போல, வாழினும் - (இவ்வுல கத்தில்) வாழ்ந்தாராயினும், பாடிலர் - ஆண்மையிலர், (எ - று).

தேவர்போல வாழ்தலாவது பகைத்தவீரர் தோள்களையெல்லாம் வெல் லுதலால் நன்குமதிக்கப்பட்டு வாழ்தல். அது கூடாமையால் 'வாழினும்' என்றார். 'அமையார்தோள்' எனவே, அஞ்சுதற் காரணத்தது எளிமை சொல்லியபடியாம். வீராது தோள்களை வென்றாராயினும்இல்லாளதுதோள் களுக்கு அஞ்சுவார் ஆண்மையிலரென்பதாம். இவை நான்குபாட்டாலும் அவளுக்கு அஞ்சுதற்குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) தமது மனையாளுக் கஞ்சுவோர் தேவர்போலச் சிறப்புற்று வாழ்ந்தாலும் பெருமையடையார் என்பது.

6. They who are afraid of their wives will be destitute of manliness though they may flourish (on earth) like the gods.

எ. பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி
னாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து.

பரி:—(இ - ள்.) நாணின்றித் தன்னில்லாளது ஏவற்றொழிலைச் செய்து திரிகின்றவனது † ஆண்டன்மையின் நாணையுடைய அவள் ¶ பெண்டன்மையே மேம்பாடுடைத்து, (எ - று).

0 நாணுடைப் பெண்ணை வேண்டாது கூறியது

நண் குழலா மடநல் லார்பல ராளிகொண். டெதிர்கொள வமர ஞனபின், உயிர்கொண் டதுசூ ருறையும் வானுல குடல்கொண் டதுதன தடைய பூமியே" என்று கூறுவது மிங்கறிதற்பாலதாம்.

* அது - நன்குமதிக்கப்பட்டு வாழ்தல்.

† வாழினும் என்ற உம்மை எதிர்மறைப்பொருளது.

‡ ஆண்மை-ஆளுந்தன்மை; அஃதாவது ஒன்றற்குந் தளராது நிற்றல்.

¶ பெண்மை - கட்புலனுயதோர் அமைதித்தன்மை. (கட்புலனுதல் - நேத்திரேந்திரியத்திற்கு விஷயமாதல்).

0 வேண்டாது கூறல் வேண்டியதொன்றை முடித்தற்காதலால், பெண் ணே என்றுகூறுது காணுடைப் பெண்ணே எனவேண்டாது கூறி, அதனுல் நாணின்மை யென்னும் வேண்டியதொன்றை முடித்தார்.



செய்வானது நாணின்மை முடித்தற் காதலின், * அம்மறுதலைத்தொழில் வருவிக்கப்பட்டது. எவல் - ஆகுடெயர். இறுதிக்கட் பெண்ணென்பதூஉம் அது: எவல் செய்வித்துக் கோடற்சிறப்புத் தோன்றப் பெண்ணே எனப் பிரித்தார்.

தெளி:—(இ - ள்.) (நாணமின்றி) பெண் - (தனது) இல்லாளது; எவல் - எவற்றொழிலை, செய்தொழுகும் - செய்துதிரிகின்றவனது, ஆண் மையின் - ஆண்தன்மையைக்காட்டினும், நாணுடை - நாணத்தையுடைய, பெண்ணே - (அவள்) பெண்தன்மையே, பெருமை-மேம்பாட்டை, உடை

த்து - உடையது, (எ - று).

பெண்ணே என வாளாகூறுது அடைகொடுத்து நாணுடைப்பெண் ணென வேண்டாமற் சொல்லியது அவளேவல் செய்வானது நாணில்லா மையை முடித்தற்காதலால், அந்நாணில்லாமை என்னும் மறுதலைத்தொழில் (நாணமின்றி யென) வருவிக்கப்பட்டது. ஏவல் என்பது ஏவுதலாற் செய்யுந் தொழிலை யுணர்த்துதலால் கருவியாகு பெயராம். இறுதியில் பெண் என்ப தும் ஆகுபெயர். பெண் என்னும் பொருட்பெயர் அவள் தன்மையையுணர்த் துதலால் பொருளாகு பெயராம். ஏவல் செய்வித்துக்கொள்ளுதற் சிறப்புத் தோன்ற பெண்ணே எனப்பிரித்தார். ஏகாரம் பிரிநிலைப் பொருளது.

(க-து.) பெண்ணேவல் செய்தாழுகுவானது ஆண்தன் மையிலும் அப்பெண்ணினது பெண்தன்மையே மேம்பாடுடைய தாம எனபது.

7. Even shame-faced womanhood is more to be esteemed than the shameless manhood that performs the behests of a wife.

---

அ. நட்டார் குறைமுடியார் நன்குற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர்.

பரி:—(இ-ள்.) தாம் வேண்டியவா றன்றித் தம்மனையாள் வேண் டியவாறு ஒழுகுவார் தம்மோடு நட்புச்செய்தார் உற்ற துறை முடிக்க மாட்டார்; அதுவேயன்றி மறுமைக்குத் துணையாய அறஞ்செய்யவுமாட் டார், (எ-று).

† 'நன்னுதலாள்' என்பதனை "அமையார்தோள்" என்புழிப்போலக் கொள்க. அவடானே அறிந்து ஏவலும் பொருள் கொடுத்தலுங் கூடாமை யின், ‡ இருமைக்கும் வேண்டுவன செய்யமாட்டா ரென்பதாம்.

---

* நாணுடைமைக்கு மறுதலைத்தொழில் நாணின்மை.

† 'அமையார்தோள்' எனவே அஞ்சுதற்காரணத்தது எண்மை கூறிய

வாறு' என்றுகூறிஞற்போன்று நன்னுதலாள் எனவே அஞ்சுதற் காரணத்தது எண்மை கூறியவாறு என்று கூறிக்கொள்க. (நன்னுதலார் - அழகிய நெற்றியையுடைய பெண்கள்.)

‡ இருமைக்கும் - இப்பிறப்பிற்கும் வருபிறப்பிற்கும்.

## அங்கவியல்—உரு-வது பெண்வழிச்சேறல்.

## 981

தெளி:—(இ - ள்.) (தாம்வேண்டியவா றல்லாமல்) நன்னுதலாள் (தம்) மனையாள், பெட்டாங்கு - வேண்டியவாறு, ஒழுகுபவர் - நடப்பவர், நட்டார் - (தம்மோடு) நட்புச்செய்தவர், (உற்ற), குறை - குறையை, முடியார் - முடிக்கமாட்டார், (அதுவேயல்லாமல்), நன்று - (மறுமைக்குத்தினையாகிய) அறத்தை, ஆற்றார் - செய்யவுமாட்டார், (எ-று).

'நன்னுதலாள்' என்பதனை "அமையார்தோள்" என்ற விடத்துப்போலக் கொள்க. அவள்தானே (நட்டார்குறை முடித்தல் வேண்டும்; நன்றூற்றல் வேண்டுமென்று) அறிந்து எவுதலும் பொருள்கொடுத்தலும்கூடாமையால், (நன்னுதலாள் பெட்டாங்கொழுகுபவர்) இருமைக்கும் வேண்டுவனவற்றைச் செய்யமாட்டா ரென்பதாம்.

(க - து.) தம் மனையாள் விரும்பியவாறு நடப்பவர் தமது நட்பினர்க்கு முதவார்; தருமமுஞ் செய்யார் என்பது.

8. Those who act according to the wishes of their wives will neither relieve the wants of their friends nor perform virtuous deeds.

பிறவினையும்

பெண்ணேவல் செய்வார்க ணில்.

பரி:—(இ - ள்.) அறச்செயலும் † அது முடித்தற்பொ நுட் செயலும் ‡ அவ்விரண்டின் வேறய * இன்பச் செயல்களும் தம் மனையாள் ஏவல்செய்வார்மாட்டு உளவாகா, (எ - று).

¶ புலன்க ளைந்தாகலின் பிறவினையெனப் பன்மை யாயிற்று அவை நோக்கி அறச்செயல் பொருட்செயல்கள் முன்னே யொழிந்தார்க்குத் 0 தலைமை அவள் கண்ணதாகலின், பின் $ அவைதாமும் இலவாயின வென் பது தோன்ற, () அவற்றைப் பிரித்துக் கூறினர். இவை மூன்றுபாட்டா னும் †† அவளேவல் செய்தற் குற்றங் கூறப்பட்டது.

---

† அது - அவ்வறச் செயலை.

‡ அவ்விரண்டின்-அறச்செயல் பொருட்செயல் என்னும்இரண்டிற்கும்.

* கண்டுகேட் டெண்ணியிர்த் துற்றறிதலாகிய இன்பச் செயல்கள்.

¶ அறவினையும் ஆன்ற பொருளும் என்று ஒருமையாற் கூறியதற் கேற்ப இன்பச் செயலை யொருமையாற் கூறாது பிறவினை (இன்பச்செயல் கள்) என்று பன்மையாற்கூறியது இன்பச்செயல் மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம்புலன்களுக்கும் விஷயமா யிருத்தலினென்க. (பிற என்பது இங்குப் பன்மை; இதற்கொருமை பிறிது என்பது). இதனைக் "கண்டுகேட் டெண்ணியிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள" என்று பின்வரும் குறளாலும் அறிக.

0 தலைமை . முதன்மை (அதிகாரம்).

$ அவைதாமும் - இன்பச் செயல்களும்.

() அவற்றை - இன்பச் செயல்களை. †† அவள் - மனையாள்.



தெளி:—(இ - ள்.) அறவினையும் - அறச்செயலும்,

ஆன்றபொரு
ளும் - அது முடித்தற்குக் காரணமாகிய பொருட்செயலும், பிறவினையும் -
அவ்விரண்டின் வேறுகிய இன்பச்செயல்களும், பெண்ணைவல் - (தம்)மனை
யாளைவலை, செய்வார்கண் - செய்பவரிடத்து, இல் - உண்டாகா, (எ - று).

காமவின்பம் செவி முதலிய ஐம்புலன்களாலும் அனுபவித்தற்குரியதா
யிருத்தலின் அதனை ஒருமையாற் கூறாது பிறவினை என்று பன்மையாற்
கூறினார். அவ்வின்பச் செயல்களைநோக்கி அறச்செயல் பொருட்செயல்களை
முன்னே ஒழிந்தார்க்குத் தலைமை அவளிடத் திருத்தலால், பின் அச்செயல்
களும் இல்லையாயின வென்பது தோன்ற, அவற்றைப் பிறவினை யெனப்
பிரித்துச் சொல்லினார். இவை மூன்று பாட்டாலும் அவளைவற் செய்தற்
குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) மனையாளைவலில் நிற்போரிடத்து அறம்பொருள் இன்பங்களுக்குரிய செயல்களில்லையாம் என்பது.

9. From those who obey the commands of their wives are to be expected neither virtuous deeds, nor good ways of acquiring wealth, nor even acts conducive to happiness.

## க0. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்

பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.

பரி:—(இ - ள்.) கருமச் சூழ்ச்சிக்கட் சென்ற நெஞ்சத்தினையும் அதனையு செல்வத்தினையும் உடையாராய வேந்தர்க்கு மனையாளைச் சேர்த்தலான் வினையும் பேதைமை எக்காலத்தும் உளவாகாது, (எ - று).

* "இடனில் பருவத்தும்" எனவும் † "இடனின்றி யிரந்தோர்க்கு" எனவும் வந்தமையான், இடனென்பது ‡ அப்பொருட்டாதலறிக. இளமைக் காலத்து மென்பார் 'எஞ்ஞான்றும்' என்றார். அப் ¶ பேதைமையாவது § மேற் சொல்லிய விழைதல், அஞ்சல், எவல்செய்தலென்னும் மூன்றற்குங் காரணமாயது. 0 எதிர்மறை முகத்தான் அம்மூன்றும் இதனைற் றொகுத்துக் கூறப்பட்டன,

---

* திருக்குறள் - ஒப்புரவறிதல் - 8. இதன்பொருள். செல்வஞ் சுருங்கிய காலத்தும் என்பது.

† கலித்தொகை-பாலைக்கலி-1. இதன்பொருள் (தம்முடைய இல்வாழ்க்கைக்கு வேண்டும்) பொருளில்லாது யாசித்தவர்க்கு என்பது.

‡ அப்பொருட்டாதல் - செல்வம் என்னும் அருத்தத்தினை யுடையதாதல். ¶ பேதைமை - யாதுமறியாமை.

$ இவ்வதிகாரத்தின் 1-வது 2-வது குறள்களில் விழைதலும், 3-வது முதல் 6-வது குறள்வரையில் அஞ்சுதலும், 7-வது முதல் 9-வது குறள்வரையில் எவல்செய்தலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

0 'பெண்சேர்ந்தாம் பேதைமையில்' என்று எதிர்மறை வாயிலாக விழைதல் அஞ்சுதல் எவல் செய்தலென்னும் மூன்றும் இக்குறளால் சங்கிரகித்துச் சொல்லப்பட்டன.

## அங்கவியல்—உசு-வது வரைவின்மகளிர்.

## 983

தெளி:—(இ - ள்.) எண்சேர்ந்த - (மேற்கொண்ட கருமத்தை) ஆலோசித்தவிற் சென்ற, நெஞ்சத்து - மனத்தினையும், இடன் - (அவ்வாலோசனையிலாகிய) செல்வத்தினையும், உடையார்க்கு - உடையராகிய அரசர்க்கு, பெண்சேர்ந்து - மனையாளைச் சேர்தலால், ஆம் - உண்டாகும், பேதைமை - அறியாமை, எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், இல் - உண்டாகாது.

இடன் என்பது இங்குச் செல்வமென்னும் பொருளில் வந்தது. இல்லைமைப் பருவத்தும் பெண்சேர்ந்தாம் பேதைமையில் என்பார் 'எஞ்ஞான்றும்' என்றார். அப்பேதைமையாவது மேற்குறள்களில் சொல்லிய விரும்புதல், அஞ்சுதல், எவல் செய்தல் என்னும் மூன்றற்கும் காரணமாயிருப்பது, எதிர்மறைவாயிலாக அம்மூன்றும் இதனால் தொகுத்துச் சொல்லப்பட்டன.

(க - து.) நல்ல மனமும் நல்ல செல்வமும் உடையவரிடத்துப் பெண்வழிச் சேறல் என்னும் பேதைமை யில்லை என்பது.

10. The foolishness arising from devotion to a wife

will never be found in those who possess a reflecting mind

and a resultant prosperity.

இருபத்தோன்பதாவது அதிகாரம்.

வரைவின்

மகளிர்:—Prostitutes.

பரி:— அஃதாவது * தந்நலம் விலை கொடுப்பார் யாவர்க்கும்

விற்பதல்லது ‡ அதற்று † ஆவார் ஆகாதார் என்னும் வரைவிலாத மக

ளிரது இயல்பு; ஆதலால் ¶ தமக்குரிய மகளிரான் வருங் குற்றத்தின்

பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது தமது நலத்தை

விலைகொடுப்பவர் யாவர்க்கும்

விற்பதல்லாமல் அந்நலத்திற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரைவில்லாத

மகளிரது இடல்பு; ஆதலால் தமக்குரிய வைக்கப்பட்டது.

மகளிரால் வருங் குற்றத்தின்பின்

---

* தந்நலம்,- தமது போகத்தை.

‡ "இழிபவ ருயர்ந்தோர் மூத்தோ ரிளையவர் கழியா நோயோர், கழிப

வர் யாவரேனுங் கண்ணிலப் பட்டு நெஞ்சம், அழிபவர் பொருள்கொண் டெள்ளுக் கெண்ணெய்போ லளந்து காட்டிப், பழிபடு போகம் விற்பார்"

ஆதலால், 'அதற்கு (தமது நலத்திற்கு) ஆவார் ஆகாதார் என்னும் வரைவி லாத (நியமமில்லாத) மகளிர்' என்று கூறப்பட்டது.

† ஆவாரிவர், ஆகாதாரிவரென்னும் நியமமில்லாத வேசியாது தன்மை.

¶ கற்புடைய மாதர் இளமைப் பருவத்தில் பிதாவினாலும், யௌவன பருவத்தில் கணவனாலும், வயோதிக பருவத்தில் புத்திரனாலும், காக்கத்தக்க வராயிருக்கின்றனர்; பொதுமகளிர் அவ்வாறு காக்கத்தக்க வல்லராகலின், அவரைத் 'தமக்குரிய மகளிர்' என்றார். எனவே, பொதுமகளிர் தாம் விரும்

பியவாறு நடப்பா ரென்பதாயிற்று.

அன்பின் விழையார் பொருள் விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும்.

பரி:—(இ - ள்.) ஒருவனே அன்புபற்றி விழையாது பொருள் பற்றி விழையும் மகளிர் அது கையுறுந் துணையும் தாம் அன்புபற்றி விழைந்தாகச்சொல்லும் இனியசொல் அவனுக்குத் பின் * இன்னுமை யைப் பயக்குந்தும், (எ - று).

பொருளென்புழி இன் விகாரத்தாற் றொக்கது. ‡ 'ஆய் தொடியார்' என்றதனானும், 'இன்சொல்' என்றதனானும், அவர் † கருவி கூறப்பட்ட டது. அச்சொல் அப்பொழுதைக்கு இனிதுபோன்று பின் வறுமைபயத் தலின், அது கொள்ளற்க வென்பதாம்.

தெளி:—(இ - ள்.) அன்பின்விழையார் - (ஒருவனே) அன்புபற்றி விரும்பாது, பொருள்விழையும் - பொருள்பற்றி விரும்பும், ஆய்தொடியார்- மகளிர், இன்சொல் - (அப்பொருள் கைக்கு வருமளவும் தாம் அன்புபற்றி விரும்பினவராகச் சொல்லும்) இனியசொல், (அவனுக்கு), இழுக்கு - (பின்பு) இன்னுமையை, தரும் - உண்டாக்கும், (எ - று).

பொருள் என்றவிடத்து இன்சாரியை செய்புள் விகாரத்தாற் றொக்கு நின்றது, இச்சாரியையெதாகாது நின்றால் அது பொருளின்(பொருள்பற்றி) வரும். இன் என்பது இங்குப்பற்றி என்னும் பொருளில்வந்தது. ஆய்தொடியார்-ஆராய்ந் தணிந்த வளையலையுடைய பெண்கள். 'ஆய்தொடியார்' என்றதனாலும், 'இன்சொல்' என்றதனாலும், அவ்வாய்தொடியாரது (மயக்கும்) சாதனம் சொல்லப்பட்டது. அவ்வினியசொல் அக்காலத்திற்கு இனிமை தருவது போன்றிருந்துபின்பு தரித்திரத்தை யுண்டாக்குதலால், அவ்வினிய சொல்லைக் கொள்ளலாகா தென்பதாம்.

(க - து.) அன்புபற்றி விரும்பாது பொருள்பற்றி விரும்பும் பாத்தையாது இன்சொல் துன்பத்தையே தரும் என்பது.

1. The sweet words of prostitutes who love a man not from affection but from a desire to ring wealth, will cause sorrow.

உ. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல்.

---

* இன்னுமையை - துன்பத்தை.

‡ ஆய்ந்ததொடியினையுடையாரென்றதனாலும், இனியசொல் என்றதனாலும் என்றும் பாடமுண்டு.

†. கருவி - ஆய்தொடியும் இன்சொல்லும்.

பரி:—(இ - ள்.) ஒருவனுக்கு உள்ளபொருளை அளந்தறிந்து அஃ தெய்துந்துணையும் தம் பண்புடைமை சொல்லும் * பண்பில்லாத மக ளிரது ஒழுகலாற்றினை ஆராய்ந்தறிந்து † அவரைப்பொருந்தாதுவிடுக.

பண்பு சொல்லின்க ணல்லது தங்கட் கிடவாமை தோன்றப் 'பண்பின் மகளிர்' என்றும், ‡ அவர்க்கு ¶ அது சாதிதருமமாதல் நூலானே யன்றி $ அவர் செயலானு மறிந்தென்பார் 'நயன்றூக்கி' என்றும், 0 அவ்வறிவு அவரை விடுதற்கு உபாயமென்பது தோன்றப் பின் 'நள்ளாவிடல்' என் றும் கூறினர்.

தெளி:—(இ - ள்.) பயன் றூக்கி - (ஒருவனுக்கு உள்ள) பொருளை அளந்தறிந்து, பண்புரைக்கும் - (அப்பொருள் கிடைக்கு மளவும் தமது) குணமுடைமையைச் சொல்லும், பண்பின் மகளிர் - குணமில்லாத மகளி ரது, நயன்றூக்கி - நடக்கையின் வழியை ஆராய்ந்தறிந்து, நள்ளா - (அவ ரைப்) பொருந்தாமல், விடல் - விடக்கடவர், (எ - று).

பண்பு சொல்லிலல்லது அவர்தம்மிடத் தில்லாமை தோன்றப் 'பண் பின் மகளிர்' என்றும், அவர்க்கு அது சாதிதருமமாதலே நூலாலே யல்லா மல் அவர் செயலாலும் அறிந்தென்பார் 'நயன்றூக்கி' என்றும், அவ்வறிவு அவரை விடுதற்கு உபாயமென்பது தோன்றப் பின்பு 'நள்ளாவிடல்' என் றும் சொல்லினர்.

(க-து) பயனைக்கருதி யினியவார்த்தையைப்பேசும் பாத்தை யரின் ஒழுக்கத்தை யறிந்து அவரைச் சேராதிருத்தல் வேண்டும்.

2. One must discriminate the character of the ill- natured women, who after

ascertaining the wealth of a man and speak as if they were of good-nature till acquiring that wealth, and avoid their friendship.

கூ. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று.

பரி:—(இ - ள்.) கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையை யுடைய முயக்கம் பிண மெடுப்பார் இருட்டறைக்கண்ணே தான் னறியாத பிணத்தைத் தழுவினற் போலும், (எ - று).

---

* பொதுமகளிர்க்குப் பண்பில்லை யென்பது காலடியார் பொதுமகளி

னில் "பொத்தநூற் கல்லும் புணர்பிரியா வன்றிலும்போல், நித்தலு நம்மைப் பிரியல மென்றுரைத்த, பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினள் நன் னெஞ்சே, நிற்றியோ போதியோ நீ" என்று கூறுவதனாலு மறிதற் பாற் றும். † அவரை - பண்பில்லாத மகளிரை. ‡ அவர்க்கு - பொதுமகளிர்க்கு. ¶ அது - பண்பில்லாமை. § அஃ - பொதுமகளிர். 0 அவ்வறிவு - பொதுமகளிர்க்குப் பண்பில்லாமை சாதிதருமமாயிருத் தலேச் சாஸ்திரவாயிலாகவன்றி அவரது ஒழுக்கத்தினாலு மறிந்த அறிவு.

பொருட்கு முயங்கும் மகளிர் கருத்துஞ் செயலும்
ஆராயாது சாதியும் பருவமும் ஒவ்வாதானே முயங்குங்கால் *
அவர் குறிப்புக் கூலிக்குப் பிண
மெடுப்பார் காணப்படாததோ ரிடத்தின்கண்
இயைபில்லாததோர் பிணத்தை எடுக்குங்கால் † அவர் குறிப்போ
டொக்கு மெனவே, ‡ அகத்தால் அருவா
நின்றும் பொருணோக்கிப் புறத்தாற் றழுவுவர்; ¶
அதனையொழிக வென்ப
தாம். இவை மூன்றுபாட்டானும் $ அவர் சொல்லும் செயலும் பொய்யென்
பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) பொருட்பெண்டிர் - (கொடுப்பாரை விரும்பாது)
பொருளையே விரும்பும் பொதுமகளிரது, பொய்ம்மை - பொய்ம்மையை
யுடைய, முயக்கம் - தழுவுதலானது, (பிணமெடுப்பவர்), இருட்டறையில் -
இருட்டுவீட்டிலே, எதிர்பிணம் - முன்னறியாத பிணத்தை, தழீஇயற்று -
தழுவினாற்போலும், (எ. - று).

பொருளுக்குத்தழுவும் பரத்தையர்கருத்தும் செயலும் ஆராயாமல் சாதியும் பருவமும் ஒவ்வாதானைக் கூடும்போது அவர் குறிப்புக் கூலிக்குப் பிணமெடுப்பவர் காணப்படாததோரிடத்தில்
சம்பந்தமில்லாததொரு பிணத்தை

எடுக்கும்போது அவர் குறிப்போடொக்கும் எனவே, அகத்தால் அருவராநின்றும் பொருளேநோக்கிப் புறத்தால் தழுவுவர்; அதனை ஒழியக் கடவரென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் அவர் சொல்லும்
செயலும் பொய்யென்
பது சொல்லப்பட்டது.

(க - து.) பரத்தையர் பிறரைப் புணருதல் கூலிக்குப் பிண மெடுப்பவர் இருட்டுவீட்டில் பிணத்தைத்தழுவுதலொடொக்கும்.

3. The false embrace of wealth-loving women are like bearers embracing a strange corpse in a dark room.

சு.

பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னவர்.

பரி:—(இ - ள்.) இன்பமாகிய பொருளை இகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது புல்லிய நலத்தை அருளோடுகூடிய †† பொருளை ஆராய்ந்து செய்யும் அறிவினையுடையார் தீண்டார்,(எ-று).

0 அறமுதலிய நான்கும் பொருளெனப்படுதலின், பொருட்பொருள்

---

* அவர் குறிப்பு - பொதுமகளிரது எண்ணம்.

† அவர் - கூலிக்குப் பிணமெடுப்பவர்.

‡ அகத்தால் அருவாகின்றும் - மனத்தால்வெறுத்தும்.

¶ அதனை - தழுவுதலை. § அவர் - பொதுமகளிர்.

†† பொருளை - அறமாகிய பொருளை.

0 அறமுதலியவற்றைப் பொருளாகக்கூறுதல் தார்க்கிகருள் ஒருசாராராய வைசேடிகரது மதம்.



அருட்பொருளென * விசேடித்தார். புண்மை - †

இழிந்தார்க்கே உரித்தா

தல். தாம் விரும்புகின்ற அறத்திற்கு ‡ அவர் மெய்ந்நலம் மறுதலை யாக

வின், தோயார் என்பதாம்.

தெளி:—(இ -

ள்.) பொருட்பொருளார் - (இன்பமாகிய பொருளை இகழ்ந்து) பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது, புன்னலம் -

புல்லிய நலத்தை, அருட்பொருள் - அருளோடுகூடிய பொருளை, ஆயும் -

ஆராய்ந்து சம்பாதிக்கும், அறிவினவர் - அறிவினையுடையவர், தோயார் -

தீண்டார், (எ - று).

அறமுதலிய நான்கும் பொருளெனப்படுதலால், பொருட்பொருள் அருட்பொருள் என விசேடித்துக் கூறினர். புன்மை - இழிந்தார்க்கே உரியதாதல். (அருட்பொருளாயு மறிவினவர்) தாம் விரும்புகின்ற அறத்திற்கு அவரது மெய்ந்நலம் விரோதமாகலால், தோயார் என்பதாம்.

(க - து.) அருளை நாடும் அறிஞர் பொருளை நாடும் பரத்தை

. . .

யரைப புணரார எனபது.

4. The wise who seek the wealth of grace will not desire the base favours of women who desire wealth and not pleasure as their riches.

## (இ). பொதுநலத்தார் புன்னலந் தோயார்

## மதிநலத்தின்

## மாண்ட வறிவி னவர்.

பரி:—(இ - ள்.) இயற்கையாகிய மதிநன்மையான் மாட்சிமைப் பட்ட ¶ செயற்கை யறிவினை யுடையார் பொருள் கொடுப்பார்க் கெல் லாம் பொதுவாய ஆசையினையுடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார், (எ - று).

மதிநன்மை - முற்பிறப்புகளிற் செய்த கல்வினைகளான் மனந் தெளி வுடைத்தாதல். அதனு னன்றிக் கல்வியறிவு மாட்சிமைப்படாமையின் 'மதி

---

* விசேடித்தல் - விசேடணத்துடன் (அடையோடு) கூடி வருதல். இந்தப் பொருட் பொருள், அருட் பொருள் என்னு மிரண்டனுள் முன் னுள்ள பொருள்என்பது பொருள் என்னும் விசேடணத்தையும், பின்னு ள்ள பொருளென்பது அருள் என்னும் விசேடணத்தையும் பெற்றுவந்தன.

† இழிந்தார் - சாதியாலிழிந்தார், ஒழுக்கத்தா லிழிந்தாரென் றிருதிறத் தாராவர். "சாதிசண் டாளன் கதிபெறுந் தருமம் வழுவலிற் சண்மசண் டா ளன், ஓதிய வழிக ளொன்றினுக் கதிதா ணுற்றிடா னென்பதுண்மை.தே" என்று ஞானசித்தி கூறுவதிற் கறிதிற்பாலதாம்.

‡ அவர் மெய்ந்நலம்-பொதுமகளிரது உடம்பைத்தழுவிப் போகித்தல்.

¶ செயற்கையறிவு • கல்விகேள்விகளாலாயவறிவு.



நலத்தின் மாண்டவறிவினர்' என்றும், * அவ்வறிவுடையார்க்கு † அவ ராசையது பொய்ம்மையும் மெய்ந்நலத்தது புன்மையும் விளங்கித் தோன்

றலின் 'தோயார்' என்றுங்கூறினர்.

தெளி:—(இ · ள்.) மதிநலத்தின் - (இயற்கையாகிய) மதிநன்மையால், மாண்ட - மாட்சிமைப்பட்ட, அறிவினவர் - (செயற்கை) அறிவினையுடையார், பொதுநலத்தார் - (பொருள் கொடுப்பவர்க்கெல்லாம்) பொதுவாகிய ஆசையினையுடைய மகளிரது, புன்னலம் - புல்லிய நலத்தை, தோயார் - தீண்டார், (எ - று).

மதிநன்மை - முற்பிறப்புகளிற்செய்த நல்வினைகளால் மனந் தெளிவுடையதாதல். அத்தெளிவினு லல்லாமல் கல்வியறிவுமாட்சிமைப்படாமையால் 'மதிநலத்தின் மாண்ட வறிவினவர்' என்றும், அவ்வறிவுடையார்க்கு அவராசையது பொய்ம்மையும் மெய்ந்நலத்தது இழிவும் விளங்கித் தோன்றலால் 'தோயார்' என்றும் சொல்லினர்.

(க - து.) இயற்கையறிவினுல் மேம்பட்ட செயற்கையறிவினையுடையார் பரத்தையரது புணர்ச்சியை விரும்பார் என்பது.

5. Those whose knowledge is heightened by their natural sense will not covet the trifling delights of women whose favours are common (to all who give wealth).



சு. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

பரி:—(இ - ள்.) ஆடலும் பாடலும் அழகென்பனவற்றைக் களித்துத் தம் புல்லிய நலத்தை விலைகொடுப்பார் யாவர்மாட்டும் பரப்பும் மகளிர் தோளினை அறிவொழுக்கங்களா லுயர்தம்புகழை உலகத்துப் பரப்புதற்குரிய உயர்ந்தோர் தீண்டார், (எ - று).

ஆடன் முதலிய மூன்று முடைமை அவர்க்குமேம்பாடாகலின் 'தகை' என்றும், தோயின் அறிவொழுக்கங்கள் அழியுமாகலின் அவற்றைப் புகழ்

பரப்புவார் 'தோயார்' என்றும் கூறினர். தங்கல மென்புழி ¶ நலம் ஆகு பெயர். இவைமூன்று பாட்டாலும் () அவரை உயர்ந்தோர் நீண்டா ரென்பது கூறப்பட்டது.

* அவ்வறிவுடையார்க்கு - இயற்கையறிவும் செயற்கையறிவு மூடையார்க்கு. † அவர் - பொதுமகளிர்.

‡ "எழிலாற் பாட லாடலிவ ரிச்சை பெருக்கி யுளமொவ்வா, மொழியாற் செயலால் வயமாக்கி முற்றும் பொருளைப் பறித்துவிடும், பழிகா ணுத பரத்தையரைப் பற்றா ராய்ந்த பண்புடையார்" என்பது விநாயக புராணம்.

¶ நலம் என்பது நலத்திலுலாய புகழை யுணர்த்துதலால் கருவியாகு பெயராம். () அவரை - பரத்தையரை.

## அங்கவியல்—உக-வது வரைவின்மகளிர்.

# 989

தெளி:—(இ - ள்.) தகை - ஆடல் பாடல் அழகென்பன வற்றால், செருக்கி - களித்து, புன்னலம் - (தமது) புல்லிய நலத்தை, பாரிப்பார் - (விலைகொடுப்பார்யாவரிடத்தும்) பரப்பும்மகளிரது, தோள் - தோளை, தங்கலம் - (அறிவொழுக்கங்களா லாகிய) தமது புகழை, பாரிப்பார் - (உலகத்தில்) பரப்புதற்குரிய உயர்ந்தோர், தோயார் - நீண்டார், (எ - று).

ஆடல் பாடல் அழகென்னு மூன்று முடைமை அப்பரத்தையர்க்கு மேம்பாடாகலால் 'தகை' என்றும், தோய்ந்தால் அறிவொழுக்கங்கள் அழியுமாகலால் அவ்வறிவொழுக்கங்களால் புகழைப் பரப்புவார் 'தோயார்' என்றும் சொல்லினர். தங்கலம் என்றவிடத்து நலமென்பது கருவியாகுபெயராம். இவை மூன்று பாட்டாலும் அவரை உயர்ந்தோர் நீண்டாரென்பது

சொல்லப்பட்டது.

(க - து.) தமது புகழைப் பரப்பும் பெரியார் பொதுமகளி

ரை விரும்பார் என்பது.

6. Those who would spread the fame of their greatness,
will not desire the shoulders of women who rejoice in their
accomplishments and bestow their despicable favours on all
who pay.

எ. நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்

பேணிப் புணர்பவர் தோள்.

பரி:—(இ - ள்.) நெஞ்சினுற் பிறவற்றை ஆசைப்பட்டு அவ்வ காரண

மாகக் கொடுப்பானை மெய்யாற் புணரும் மகளிர் தோள்களை † நிறை

யாற் றிருந்திய நெஞ்ச மில்லாதார் தோய்வர், (எ - று).

பொருளும் அதனாற் படைக்கப்படுவனவும் விரும்பும் நெஞ்சு * அவற்

றின் மேலதாகலின் புணர்வது உடம்புமாத்திர மென்ப தறிந்து ‡ அதுவழி

ஓடாது நிற்கும் நெஞ்சினையுடையார் தோயாமையின், ¶ அஃதிலார் 'தோய்வர்' என்றார்.

தெளி:—(இ - ள்.) நெஞ்சின் - நெஞ்சினால், பிற - வேறு பொருள் கள், பேணி : ஆசைப்பட்டு, (அப்பொருள் காரணமாகக் கொடுப்பவரை), புணர்பவர் - (மெய்யினால்) புணரும் மகளிரது, தோள் - தோள்களை, நிறை நெஞ்சமில்லவர் - நிறையினால் திருந்திய நெஞ்சமில்லாதவர், தோய்வர் - புணர்வர், (எ - று).

---

† ஆடவர்க்குரிய நிறை, மகளிர்க்குரியநிறை யென நிறை யிருதிறத்தாம். ஆடவர்க்குரிய நிறை-காப்பனகாத்துக் கடிவன கடிந்து ஒழுகுமொழுக்கமாம்; மகளிர்க்குரிய நிறை - நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்துதலாம்.

இங்குக்கூறிய நிறை ஆடவாக்குரியு நிறையாம்.

* அவற்றின்மேலதாகலின்-பொருளும் அப்பொருளால் உண்டாக்கிக் கொள்ளும் போகப்பொருள்களும் என்னும் இரண்டன்கணிருப்பதாகலின்.

† அதுவழி - அப்புணர்ச்சியின் வழி. ¶ அஃதிலார்-நிறைநெஞ்சமில்லவர்.

பொருளையும் அப்பொருளால் சம்பாதிப்பனவற்றையும் விரும்புகிற நெஞ்சு அவற்றின்மேலதாகலின் புணர்வது அவருடம்பு மாத்திரமென்ப தறிந்து அதன்வழி ஒடாது நிற்கும் நெஞ்சினையுடையார் தோயாமையால், அஃதிலார் 'தோய்வர்' என்றார்.

(க - து.) நிறையால் திருந்திய மனமில்லாதவர் பாத்தையரைச் சேர்வர் என்பது.

7. Those who are devoid of a controlled mind will covet the shoulders of women who embrace them, while their mind covet other things.

அ. ஆயு மறிவினர் ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.

பரி:—(இ - ள்.) உருவு சொற் செயல்களான் வஞ்சித்தலே வல்ல மகளிரது முயக்கத்தை அவ்வஞ்சனை ஆராயுந்தறியு மறிவுடையரல்லார்க்கு † அணங்குதாக்கென்று சொல்லுவர் நூலோர், (எ - று).

அணங்கு - காமநெறியான் உயிர்கொள்ளும் தெய்வமகள். தாக்கு-தீண்டல். ‡ இவ்வுருவகத்தான் ¶ அம்முயக்கம் முன் இனிதுபோன்று பின்னுயிர் கோடல் பெற்றும். $ இது நூலோர் துணிவென்பது தோன்ற அவர்மேல் வைத்துக்கூறினார். † அப்பெயர் அவாய்நிலையான் வந்தது.

---

* அணங்குதாக்கு - மோகினிபிடித்தல். காமசித்தனையுடைய வாலிபர்களை மோகினி யென்னுந் தெய்வம் பிடித்துக் கனவில் பிரியமுள்ள மங்கையர்போல வந்து புணர்ந்து, வீரியத்தைவெளிப்படுத்தி நாளடைவில் இளைக்கச்செய்து கொல்லும் என்பது சம்பிரதாயம். காமத்துப்பால் - தகையணங்குறுத்தலென்னும் அதிகாரம் 2-வது குறளில் "தாக்கணங்கு" என்று

வந்திருத்தலும், அதற்குப்பொருள் "தானேதாக்கி வருத்துவதோ ரணங்கு" என்று பொருள் கூறியிருத்தலு மிங்குணர்தற் பாலனவாம்.

‡ இவ்வுருவகத்தான் - மாயமகளிர் முயக்கத்தை அணங்கு (தாக்கு) என்று உருவகஞ் செய்திருத்தலால்.

¶ "ஆமாபோ னக்கி யவர்கைப் பொருள்கொண்டு, சேமாப்போற் குப் புறஉஞ் சிக்லேக்க ணன்பினே,எமாந் தெமதென் றிருந்தார் பெறுபவே, தா மாம் பலரா ணகை" என்று நாலடியார் கூறுவ நிங்கறியத்தக்கதாம். (ஆமா - காட்டுப்பசு. காட்டுப்பசு முன்னே ஒருவரை யினிமை யுண்டாமாறு நக்கிப் பின்னே கொல்வதுபோன்று பொதுமகளிரது புணர்ச்சியும் முன்னே இனி மை யுண்டாமாறு செய்து பின்னே தன்னைப் பெற்றுரை முதலற அழிக்கு மென்பதாம்). $ இது - பொதுமகளிரது புணர்ச்சி முன்னே இனிதுபோ ன்றிருந்து பின்னே உயிரைக் கொள்ளுதல்.

• † என்ப என்பது நூலோர் என்பதை யவாவி (விரும்பி) நின்றமை யின், அது வருவிக்கப்பட்டது.



தெளி:—(இ - ள்.) மாயமகளிர் - (உருவு சொல் செயல்களால்) வஞ் சித்தலில் வல்லமகளிரது, முயக்த - புணர்ச்சியை, ஆயும் - (அவ்வஞ்சனை யை) ஆராய்ந்தறியும், அறிவினரல்லார்க்கு - அறிவுடையவ ரல்லாதவர்க்கு, அணங்கு - அணங்குதாக்கு, என்ப-என்று சொல்லுவர், (நூலோர்) (எ-று).,

அணங்கு - காமவழியால் உயிரைக்கொள்ளுந் தெய்வமகள். தாக்கு - தீண்டுதல். இவ்வுருவகத்தால் அப்புணர்ச்சி முன்னே இனிதுபோலத் தோன்றிப் பின்பு உயிரைக்கொள்ளுதல் பெற்றும். இது நூலோர் துணி

வென்பதுதோன்ற 'என்ப' என்று அந்நூலோர்மேல் வைத்துச் சொல்லி

னர். நூலோரென்னும் அப்பெயர் அவாய்நிலையால் வந்தது.

(க-து) நூலோர் பரத்தையர் புணர்ச்சியை அறிவில்லார்க்கு அணங்கு தாக்காமென்று சொல்லுவர் என்பது.

8. The wise say that to those who are devoid of discri-
minating sense, the embrace of the faithless women are as
ruinous as those of the celestial females.

கூ. * வரைவிலா மாணிழையார்
மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு.

பரி:—(இ - ள்.) உயர்ந்தோர் இழிந்தோ ரென்னாது விலைகொடுப்போர் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லிய தோள்கள் † அகந்தம்
றத்தை யறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புக்கழுந்து நரகம், (எ - று).

உயர்தற் கேதுவாகலின் 'புரை' எனப்பட்டது. சாதியா னிழிந்தாரினீக்குதற்குப் 'புரையிலாப் பூரியர்கள்' என்றும், ‡ அவர் ஆழ்தற்கேது உருவமுதலிய மூன்றுமென்பதுதோன்ற 'மாணிழையார் மென்றோள்' என்

றும், ¶ அவர்க்கு அளற்றினை யிடையின்றிப் பயக்கு மென்பது தோன்ற § உருவகமாக்கியுங் கூறினர்.

தெளி:—(இ - ள்.) வரைவிலா - உயர்ந்தோர் இழிந்தோரென்னுது விலைகொடுப்பவர் யாவரையும் கூடும், மாணிழையார் - மகளிரது, மென் றோள் - மெல்லியதோள்கள், புரையிலா - (அக்குற்றத்தை அறியும்) அறிவில்லாத, பூரியர்கள் - கீழ்மக்கள், ஆழும் - (புகுந்து) அழுத்தும், அளறு - நாகமாம், (எ - று).

பொதுமகளிர் யாவரையுங் கூடுங் குற்றத்தை யொருவாறிதல் அவருயர்தற்குக் காரணமாயிருத்தலால் அவ்வறிதல் 'புரை' என்று கூறப்பட்டது.

---

* வரைவிலாத - ஒரெல்லைக்குள் நிற்றலில்லாத

† அக்குற்றத்தை - பொதுமகளிர் யாவரையும் புணருங் குற்றத்தை.

‡ அவர் - புரையிலாப் பூரியர்கள். ¶ அவர்க்கு-புரையிலாப் பூரியர்க்கு.

§ உருவகமாக்கியும் - வரைவிலாமாணிழையார் மென்றோளை அளறு (நரகம்) என்ற உருவகஞ்செய்தும்.



சாதியா லிழிந்தாரினின்றும் நீக்குதற்குப்
'புரையிலாப்பூரியர்கள்' என்றும்,

அவாவாழ்தற்கேது உருவு சொல் செயல் என்னும்
மூன்றுமென்பது தோன்ற
'மாணிழையார் மென்றோள்' என்றும், அவர்க்கு நரகத்தைத்
தடையில்லா மல் தருமென்பது தோன்ற (தோள் அளறு

என்று) உருவகமாக்கியுஞ் சொல்லினர். மாணிழையார் - மாட்சிமைப்பட்ட ஆபரணத்தை யணிந்தமகளிர்.

(க - து.) பரத்தையரது தோள்கள் கீழ்மக்கள் சென்றழுந் துங் நரகமாம் என்பது.

9. The delicate shoulders of prostitutes with priceless jewels are a hell into which are plunged the ignorant base.

கo. இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுங்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

பரி:—(இ - ள்.) * கவர்த்த மனத்தினையுடைய மகளிரும் கள்ளும் சூதுமென இம்மூன்றும் திருமகளாற் புறங்கப்பட்டார்க்கு நட்பு, (எ-று).

இருமனம் - ஒருவனேடு புணர்தலும் புணராமையும் ஒருகாலத்தே யுடையமனம். † கவறு - ஆகுபெயர். ஒத்த குற்றத்தி வாகலின், கள்ளும் சூதும் உடன் கூறப்பட்டன. வடநூலாரும் ‡ இக்கருத்தான் விதனமென உடன்கூறினர். வருகின்ற அதிகார முறைமையும் இதனானறிக. ¶ திணை விரா யெண்ணியவழிப் பன்மைபற்றி முடிபு கோடலின், ஈண்டு அஃறிணை யாற் கொண்டது. திரு நீக்கப்பட்டமை § இக்குறிகளான் அறியப்படு மென்பதாம். இவை நான்குபாட் டானும் 0 சேர்வார் இழிந்தோ ரென்பது கூறப்பட்டது.

---

* கவர்த்த - இரண்டுபட்ட.

† பாய்ச்சிகை (சூதாடுகருவி) என்னும் பொருளதான கவறு என்னும்
சினைப்பெயர் அதன் முதலாகிய
சூதினையுணர்த்துதலால்சினையாகுபெயராம்.

‡ இவ்வபிப்பிராயத்திலல் காடங் கள் சூது என்னும் மூன்றனையும் விசனமென்று உடன்வைத்து "வேட்டங் கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூது பொரு, ளீட்டங்கட் காமமோ டேழு" என்று கூறினரென்க.

¶ 'பலவயி னானு மெண்ணுத்தினை விரவுப்பெயர், அஃறினை முடி பின செய்யு ளுள்ளே" என்னும் (தொல்காப்பிய சூத்திர) விதியினால், அஃறினையோடு உயர்தினை விரவி மிகுதியினல் தொடர்பு என்று அஃறினை முடிபுகொண்டதென்க.

$ இக்குறிகளால் - இருமனப்பெண்டிர் நட்பு, கள்ளுண்டல், கவறுடல் என்னு மிவ்வுடையாளங்களால்.

0 சேர்வார் - பொதுமகளினைப் புணர்வார்.

அங்கவியல்—கூ0-வது கள்ளுண்ணுமை.

தெளி:—(இ - ள்.) இருமனப்பெண்டிரும்-கவர்த்தமனத்தையுடைய மகளிரும், கள்ளும் -,கவறும் - சூதும், (என இம்மூன்றும்), திரு - திரு மகளால், நீக்கப்பட்டார் - நீக்கப்பட்டவர்க்கு, தொடர்பு - நட்பாம், (எ-று).

இருமனம் - ஒருவனேடு கூடுதலும் கூடாமையும் ஒருகாலத்திலே யுடையமனம். கவறு - இனையாகுபெயர். கள்ளும் சூதும் இருமனப்பெண் டிரோடொத்த குற்ற முடையனவாகலால், அக்கள்ளும் சூதும் இருமனப் பெண்டிருடன் சொல்லப்பட்டன. வடநூலாரும் இவ்வபிப்பிராயத்தினால் காமம் கள் சூது என்பனவற்றை வேட்டை கடுஞ்சொல் முதலியவற்றோடு விசனமென்றுடன் சொல்லினர்.(கள்ளுண்ணுமையென்று பின்வருகின்ற) அதிகாரமுறைமையையும் (இருமனப் பெண்டிருங் கள்ளும் என்னும்) இதனால் அறிக. இருமனப்பெண்டிர் என்னும் உயர்திணையும் கள்ளுங் கவறும் என்னும் அஃறிணையும் கலந்தெண்ணியவிடத்து (கள்ளுங் கவறும் என் னும் அஃறிணைப்) பன்மை பற்றி (அஃறிணை) முடிபு கொள்ள வேண்டி யிருத்தலால், இங்குத்தொடர்பு என்னும் அஃறிணையால் (உயர் திணை) முடிபுகொண்டது. திருநீக்கப்பட்டமை இவ்வடையாளங்களால் அறியப்படு மென்பதாம். இவை நான்குபாட்டாலும் சேர்பவர் இழிதோ ரென்பது சொல்லப்பட்டது.

(க - து.) இருமனப்பெண்டிர் நட்பும், கள் குடித்தலும்,
சூதாடுதலு முடையவர் தவறுது தரித்திரராவார்

ன்பது.

10. Treacherous women, liquor and gambling are the associates of such as have been forsaken by the Goddess of fortune.

## முப்பதாவது அதிகாரம்.

### கள்ளுண்ணாமை:—Against drunkenness.

பரி:—இனி ஒழுக்கமும் உணர்வும் அழித்தற்கண் அவ்வாசைவின் மகளிரோ டொப்பதாய கள்ளினை யுண்ணாமையாகிய சிறப்பு † எதிர்மறை முகத்தாற் கூறுகின்றார்.

தெளி:—இனி ஒழுக்கமும் உணர்வும் அழித்தலில் அப்பாத்தையரோடு ஒப்பதாகிய கள்ளினை உண்ணாமையது சிறப்பினை எதிர்மறைமுகத்தால் சொல்லுகிறார்.

க. உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்.

† எதிர்மறைமுகத்தால் - (கள்ளுண்டல் என்று உடன்பாட்டு வாயிலாகக் கள்ளுண்ணாமையின் சிறப்பினைக் கூறுது கள்ளுண்ணாமை யென்று) எதிர்மறைவாயிலாக.

பரி:—(இ - ள்.) கள்ளின்மேற் காதல்செய்தொழுத மாசரீ ஞான்றும் பகைவரா னஞ்சப்படா ரீ, அ துவேயன்றி முன்னெயிதி நின்ற ஒளியினையு மிழப்பர். (எ - று).

அறிவின்மையால், பொருள் படை † முதலியவற்றுற் பெரியராய காலத்தும் பகைவர் அஞ்சார்; தம்முன்னோரா னெய்திநின்ற ‡ ஒளியினையும் இகழற்பாட்டான் இழப்பரென்பதா ம். ¶ இவை யிரண்டானும் அரசு இனிது செல்லாதென்பது இதனாற் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கட்காதல் கொண்டு-கள்ளின்மேல் ஆசைகொண்டு, ஒழுகுவார் நடக்குமரசர், எஞ்ஞான்றும்-எந்நாளும், உட்கப்படா அர்-(பகைவ ரால்) அஞ்சப்படார், (அதுவேயல்லாமல்), ஒளி-(முன்பெற்று நின்ற) ஒளி யினையும், இழப்பர் - இழந்துவிடுவர், (எ-று).

அறிவில்லாமையால், பொருள் படை முதலியவற்றால் பெரியராகிய காலத்தும் (கட்காதல்கொண்டொழுகுவார்க்குப்) பகைவர்

அஞ்சார்; (அவர்)
தம்முன்னோரால் அடைந்துநின்ற ஒளியினையும் (பிறரால்) இகழப்படுதலால்
இழப்பரென்பதாம். இவை இரண்டாலும் அரசு இனிது செல்லாதென்
பது இதனால் சொல்லப்பட்டது.

(க - து.) கள்ளுண்ணுதலை விரும்பும் அரசர் தம் பகைவரால் அஞ்சப்படார்; அதுவேயுமன்றி மதிப்பினையும் இழப்பர் என்பது.

1. Those kings who thirst after drink will never inspire fear in their enemies nor retain their fame.



உ. உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா
னெண்ணப் படவேண்டா தார்.

பரி:—(இ-ள்.) அறிவுடையராயினார் அஃதிலராதற்கு ஏதுவாய கள்

வினை உண்ணுதொழிக; * அன்றியே
உண்ணல்வேண்டுவார் உளராயின்,
நல்லோரால் எண்ணப்படுதலே வேண்டாதார்
உண்க.(எ - று).

பெறுதற்கரிய அறிவைப் பெற்றுவைத்தும்
கள்ளாணழித்துக் கொள்
வாரை இயல்பாகவே அஃதில்லாத விலங்குகளுடனும்
எண்ணுராகலின்,
சான்றோரா லெண்ணப்பட வேண்டாதார் உண்க என்றார்.

தெளி:—(இ - ள்.) (அறிவுடையராயினும்) கள்ளே - (அவ்வறிவிலாமைக்குக் காரணமாகிய) கள்ளினை, உண்ணற்க-உண்ணாதிருக்கக் கடவர்,

† முதலிய என்றமையின், அறிவும் ஆண்மையுங் கொள்க.
‡ ஒளி - தானுளனெயகாலத்து மிக்குத்தோன்றுதலுடைமை (மதிப்பு).
¶ இவையிரண்டாலும் - பகைவரஞ்சாமை, ஒளியினை (மதிப்பை) யிழத்தலென்னு மிவ்விரண்டாலும்.
* அன்றியே - கள்ளினை யுண்ணுத லொழியாமல்.



(அல்லாமலே), உணில்-உண்ணல் வேண்டுவாரிருப்பாராயின், சான்றோரான்-நல்லோரால், எண்ணப்பட வேண்டாதார்-எண்ணப்படுதலே விரும்பாதவர்,

உண்க-உண்ணக்கடவர், (எ - று).

பெறுதற்கரிய அறிவைப் பெற்றிருந்தும் கள்ளால் அழித்துக் கொள்

ளுவாரை இயல்பாகவே அவ்வறிவில்லாத மிருகங்களுடனும் எண்ணுராகலால், சான்ரோரா லெண்ணப்படவேண்டாதார் உண்க என்றார்.

(க - து.) கள்ளிற்ை யுண்போர் பெரியோரால் மதிக்கப்படார்.

2. Let no liquor be drunk (by the wise); if it is desired, let it be drunk by those who care not for the esteem of the great.

ஈன்றுண் முசத்தேயு மின்னுதா லென்மற்றுச்

சான்ரோர் முகத்துக் களி.

பரி:—(இ - ள்.) யா து செய்யினும் உவகீதந் தாயிழன்பாயினும்

கள்ளுண்டு களித்தல் இன்னுதாம்; ஆனபின் குற்றம் யா தும் சான்றோர்முன்பு களித்தல் † அவர்க்கியாதாம், (எ-று).

பொறுத

மனமொழிமெய்கள் தம்வயத்த வன்மையான் நாணழியும்; அழியவே ஈன்ருட்கும் இன்ஞதாயிற்று; ஆனபின், கள் ‡ இருமையுங் கெடுத்த லறிந்து சேய்மைக்கண்ணே கடியுஞ் சான்ரோர்க்கு இன்ஞதாதல் சொல்ல வேண்டுமோ வென்பதாம்.

தெளி:—(இ - ள்.) ஈன்ருண் முகத்தேயும் - (யாதுசெய்தாலும் மகிழும்) தாய் முன்பாயினும், களி - (கள்ளுண்டு) களித்தல், இன்ஞது - துன்பஞ் செய்வதாம், மற்றுச் சான்ரோர் முகத்து-ஆனபின் (குற்றம் யாதும் பொருத) பெரியோர் முன்பு, (களித்தல்), என்-(அவர்க்கு) யாதாகும், எ-று.

ஆல்-அசை. (கள்ளுண்ணுதலால்) மனமொழி மெய்கள் தம் வசத்திருப்பனவாகாமையால் நாணம் அழியும்; அழியவே, (அது) தாய்க்கும் துன்பஞ் செய்வதாயிற்று; ஆனபிறகு, கள் இருமையும் கெடுத்தலறிந்து தூரத்தே விலக்கும் பெரியோர்க்குத் துன்பஞ் செய்வதாதல் சொல்லவேண்டுமோ வென்பதாம்.

(க - து.) ஒருவன் கள்ளுண்டு களித்தல் அவனேயீன்றதாய்க்குந் துன்பந் தருமாயின், அது பெரியார்க்குத் துன்பந்தருவது பற்றிச் சொல்லவேண்டுமோ? என்பது.

3. Intoxication is painful even in the presence of one's mother; what will it not then be in that of the wise?

† அவர்க்கு - சான்ரோர்க்கு.

‡ இருமையும் - இப்பிறப்பின் பயனையும், வருபிறப்பின்பயனையும்.

ச. நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்

* பேணுப் பெருங்குற்றத் தார்க்கு.

பரி:—(இ-ள்) கள்ளென்று சொல்லப்படுகின்ற யாவரு மிகழும் மிக்க தீமைத்தினை யுடையாரை நாணென்று சொல்லப்படுகின்ற உயிர்த் துவள் நோக்கதற்கஞ்சி † அவர்க் கெதிர்முக மாகாள், (எ-று).

காணுதற் கு மஞ்சி உலகத்தார் செய்மைக்கண்ணே நீங்குவராகலிற் 'பே ணு' என்றும், பின் ஒருவாற்றானுங் ‡ கழுவப்படாமையின் 'பெருங்குற்றம்' என்றும், இழிந்தோர்பா னில்லாமையின் 'நல்லாள்' என்றும் கூறினர். § நாணென்னுகண்மை யெனற்பாலதனை நல்லாளெனப் பெண்பாலாகக்கூறி யது வடமொழி முறைமைபற்றி. இவை மூன்று பாட்டானும் () ஒளி யிழத்தற் காரணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கள்ளென்னும் - கள் என்று சொல்லப்படுகிற,

பேணு-(யாவரும்) இகழும், பெருங்குற்றத்தார்க்கு - மிகுந்த குற்றத்தினை யுடையவரை, நாணென்னு நல்லாள் - நாணமென்று சொல்லப்படுகிற உயர்

ந்தவள், (பார்த்தற்கு அஞ்சி), புறங்கொடுக்கும் - (அவர்க்கு) எதிர்முகமாகாள்.

(கள்ளுண்டு களிப்பவரைக்) காணுதற்கும் அஞ்சி உலகத்தார் தூரத்தே நீங்குவராதலால் 'பேணு' என்றும், (கள்ளுண்ணுங் குற்றம்) பின்னொருவழி யாலும் நீக்கப்படாமையால் 'பெருங்குற்றம்' என்றும், (நாண்) இழிந்தோரிடத்து நில்லாமையால் 'நல்லாள்' என்றும் சொல்லினர். நாணென்னு நன்மையெனற் பாலதனை நாணென்னு நல்லாளென்று நாணினைப் பெண்பாலாகக் கூறியது வடமொழி முறைமை பற்றியாம். இவை மூன்றுபாட்டாலும் கள்ளுண்பார் ஒளியினையிழத்தற்குக் காரணம் சொல்லப்பட்டது.

(க - து.) கள்ளுண்பாரிடத்து நாணமின் றென்பது.

4. The fair maid of modesty will turn her back on those who are guilty of the despicable great crime of drunkenness.

---

நி. கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

---

* பேணு - விரும்பாத. † அவர்க்கெதிர்முகமாகாள் - கள்ளென்னும் பேணுப் பெருங்குற்றத்தார்க்குப் பிரசன்னமாகாள்.

‡ கழுவப்படாமையின்-பிராயச்சித்தத்தாற் போக்கப்படாமையால்.

$ பிரயோகவிவேகம் திங்நூப்படலம் 15-வது பாடலினுரையில் "நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும், பேணுப் பெருங்குற்றத் தார்க்கு' என்னுந்திருவள்ளுவரில் பரிமேலழகர் 'நாணென்னு நன்மையெனற் பாலதனை நல்லாள் எனப் பெண்பாலாகக் கூறியது வடமொழி முறைமைபற்றி' என்றாராதலின், வடமொழியுள் லச்சை (வெட்கம்) என்பது பெண்பாற்சொல்லென்க" என்றிருப்பதிங்குக் கவனித்தற்பாலதாம். பெண்பாலாக்கியது வடமொழி முறைமைபற்றி என்றும் பாடமுண்டு.

() ஒளி - பிறரால் மதிக்கப்படுதல்.

பரி:—(இ - ள்.) ஒருவன் விலைப்பொருளைக் கொடுத்துக் கள்ளாற் றனக்கு மெய்ம்மறப்பினைக் கொள்ளுதல் அவன் பழவினைப் பயனுய செய்வதறியாமையைத் தனக்குக் காரணமாக வுடைத்து, (எ - று).

தன்னை யறியாமை சொல்லவே, ஒழிந்தன யாவு மறியாமை சொல்ல வேண்டாவாயிற்று, கை † அப்பொருட்டாதல் ‡ "பயனுடைப் பெரு மரம் o வீழ்ந்தெனக் கையற்று" என்பதனுளு மறிக.

அறிவார் விலைகொடு த்து ஒன்றனைக் கொள்ளுங்காற் றீயது கொள்ளாமையின், ⊖ மய்யறியாமை கொளல் * முன்னை யறியாமையான் வந்த தென்பதாம்.

தெளி:—(இ - ள்.) (ஒருவன்) பொருள் கொடுத்து - விலைப்பொரு

ளைக் கொடுத்து, மெய்யறியாமை - (கள்ளால் தனக்கு) மெய்ம்மறப்பினை, கொளல்-கொள்ளுதல், கையறியாமை-(அவன் பழவினைப் பயனுகிய) செய்வ தறியாமையை, உடைத்து - (தனக்குக் காரணமாக)

உடையதாம், (எ-று).

கள்ளுண்டு களிப்பவன் தன்னை யறியாமை சொல்லவே, ஒழிந்தன வெல்லா வற்றையும் அறியாமை சொல்லவேண்டாவாயிற்று. இங்குக் கை யென்பது செய்வது என்னும் பொருளில் வந்தது அறிவார் விலை கொடுத்து ஒன்றைக் கொள்ளுங்கால் தீயதைக் கொள்ளாமையால், மெய்யறியா
மை கொளல் முன்னை யறியாமையால் வந்த தென்பதாம். (மெய்-உடம்பு).

(க-து.) ஒருவன் பொருளைக் கொடுத்துக் கள்ளுண்டு மெய்ம்மம் மறந்துவிடுதல் அவன் செய்வ தறியாமையின் டயனும் என்பது.

5. To give money and purchase unconsciousness is the result of one's ignorance of (one's own actions).

சு. துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரேஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

பரி:—(இ – ள்.) உறங்கினார் செத்தாரின் வேறுத லுடையரேனும் அக்காலத் தறிவின்மையான் வேறெனப்படார், அவ்வாறே கள்ளுண் பார் 0 நஞ்சுண்பாரின் வேறுத லுடையரேனும்,எக்காலத்துமறிவின்மை யான் வேறெனப்படார், $ அவர் தாமே யாவர், (எ - று).

உறங்கினார்க்கும் கள்ளுண்பார்க்கும் வேற்றுமை உயிர்ப்பு நிற்றல். வே றுதலும் வேறன்மையு முடைமை காட்டற்கு உவமை புணர்க்கப்பட்டது.

† அப்பொருட்டாதல் - செய்வதென்னும் பொருளினையுடையதாதல்.

‡ புறநானூறு-209 - இதன் பொருள். (பறவைகள்) பழங்களையுடைய பெரிய மரம் பழுத்தமாறியதென்று செய்வதொழிந்து என்பது.

o தீர்ந்தெனக் கையற்று என்றும் பாடமுண்டு.

* முன்னே யறியாமை - சன்மாந்தரத்திற்செய்த தீவினையின் பயனை அறியாமை. 0 கஞ்சு - எட்டிவிதை, பாம்பின்விஷ முதலியனவாம்.

$ அவர்தாமே - தஞ்சுண்பாரே.



† இதனை நிரனிறையாக்கித் திரிக்கப்படுதலால் உறங்கினருரும் கஞ்சுண்பாரு மொப்பர்; கைவிடப்படுதலாற் செத்தாருங் கள்ளுண்பாரு மொப்பவென் றுரைப்பாரு முளர். ‡ அதிகாரப் பொருள் பின்னதாயிருக்க யாதுமியையில்

லாத கஞ்சுண்பார்க்கு உவமை புணர்த்து ஈண்டுக்கூறல் பயனின்றாகலானும், தொற்றிடக்கை நிரனிறைக்கேலாமையானும் அஃதுரையன்மை யறிக. இவை யிரண்டு பாட்டானும் அலர் தறிவிழத்தற் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்) துஞ்சினர்-உறங்கினவர், செத்தாரின்- மாணமடைந்தவரிலும், வேறல்லர்-(வேறுதலுடையரோனும் அக்காலத்தில் அறிவில்

லாமையால்) வேறெனப்படார், (அவ்வாறே),கள்ளுண்பவர் - கள்ளுண்பார், (கஞ்சுண்பவரிலும் வேறுதலுடையரோனும்), எஞ்ஞான்றும் - எக்காலத்தும், (அறிவில்லாமையால் வேறெனப்படார்), கஞ்சுண்பார்-அவர்தாமே யாவர். ()

உறங்கினவர்க்கும் கள்ளுண்பவர்க்கும் செத்தார் கஞ்சுண்பார் என்பவ

ருடன் வேறுபாடு மூச்சுநிற்றல். வேறுதலும் வேறல்லாமையு முடைமை யைக் காட்டுதற்கு (துஞ்சினர் செத்தாரின் வேறல்லர்' என்னும்)உவமானம் சேர்த்துச் சொல்லப்பட்டது. இவை இரண்டோட்டாலும் அவரது (கள் ளுண்பாரது) அறிவிழத்தலின் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) கள்ளுண்பாரும் நஞ்சுண்பாரும் அறிவில்லாமை யால் தம்முளொப்பர் என்பது.

6. They that sleep are likened to the dead; likewise they that drink are no better than poison-eaters.

எ. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரேஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

பரி:—(இ - ள்.) கள்ளை மறைந்துண்டு அகீகளிப்பாற் றம்மறிவு தளர்வார் உள்ளூர் வாழ்பவரான் உண்ணீகழ்கின்ற துயத்துணர்ந்து எஞ்ஞான்றும் நதுதல் செய்யப்படுவர், (எ - று).

---

† இக்குறளை (துஞ்சினர் நஞ்சுண்பார், செத்தார் கள்ளுண்பவர் என்று) முறை நிரனிறைப் பொருள்கோளாக்கி (பதங்கள்) மாற்றப்படுதலால், துஞ் சினர் - உறங்கினரும், நஞ்சுண்பார்-நஞ்சுண்பாரும், வேறல்லர்-ஒப்பர், (கை விடப்படுதலால்), செத்தார்-செத்தாரும், கள்ளுண்பவர்-கள்ளுண்பாரும், வே றல்லர்-ஒப்பர் என்று பொருள் கூறுவாருமுண்டு. இவர் செத்தாரின் என் பதன்கணுள்ள இன் என்பதனைச் சாரியையாகக் கொள்வர்.

‡ கள்ளுண்ணாமையென்னும் அதிகாரத்தின்

பொருள் (நஞ்சுண்பார் கள்ளுண்பவர் என்று) பின்னதா
யிருக்க எச்சம்பந்தமுமில்லாத நஞ்
சுண்பார்க்கு (துஞ்சினாரென்பவரை) உவமானமாக்கி யிந்தச் சொல்லுதல்
ப்யனின்மையாலும், சொற்சினிருப்பு நிரணிறையாகக் கொள்ளுதற்குப்
பொருந்தாதிருத்தலாலும், அவ்வுரை உரையாகா தென்பதாம்.

அங்கவியல்—ஈ0-வது கள்ளுண்ணாமை.

## 999

† உள்ளூர் - ஆகுபெயர். ‡ உண்டென்பது அவாய்
நிலையான் வந்தது. உய்த்துணர்தல் - தளர்ச்சியாற் களிப்பினை
யுணர்ந்து அதனாற் கள்ளுண்ட தணர்தல்.

தெளி:—(இ - ள்.) கள்ளொற்றி - கள்ளைமறைந்து
(உண்டு), கண் சாய்பவர் - (அக்களிப்பால் தமது)
அறிவுசோர்பவர், உள்ளூர் - உள்ளூர் வாழ்பவராவ்,
உள்ளொற்றி - உள்ளே (நிகழுகின்ற காரியத்தை) ஆராய்ந்தறி
ந்து, எஞ்ஞான்றும் - எந்நாளும், நகப்படுவர் - சிரிக்கப்படுவார்,
(எ - று).

உள்ளூர் என்பது உள்ளூரில் வாழ்பவரை
யுணர்த்துதலால், இடவாகு
பெயராம். உண்டு என்பது அவாய்நிலையால் வந்தது.

ஆராய்ந்தறிதல் - சோர்விலுல் களிப்பினை அறிந்து அதனுல் கள்ளுண்டதை யறிதல்.

(க - து.) கள்ளைக் குடித்து, அதனுல் சோர்வடைபவர் தம தூரிலுள்ளவரால் சிரித்தவமதிக்கப்படுவர் என்பது.

7. Those who stealthily drink and intoxicate themselves will have their secrets detected and always laughed at by their fellow-townsmen.

## ஆ. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்

## தொளித்ததூஉ மாங்கே மிகும்.

பரி:—(இ - ள்.) மறைத்துண்டுவைத்து யான் கள்ளுண் டறியே னென்று உண்ணுதபோழது தம்மொழுக்கங் கூறுதலே யொழிக; அவ் வுண்டபோழதே பிறாறியின் இழக்காமென்று முன்னெஞ்சத்தொளித்த தும்றமும் முன்னையவினின்மிக்து வெளிப்படுதலான், (எ - று).

¶ 'களித்தறியேன்' எனக் காரணத்தைக் காரியத்தாற் கூறினர். இவை யிரண்டு பாட்டாலும் அது மறைக்கப்படா தென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) களித்தறியே னென்பது-(மறைந்துண்டுவைத்து யான்) கள்ளுண்டறியேனென்று (உண்ணுதபொழுது தமதொழுக்கத்தைச்) சொல்லுதலே, கைவிடுக - விடக்கடவர், (அவ்வுண்டபொழுதே பிறரறிந்தால் தவறுமென்று முன்னர்), நெஞ்சத்தொளித்ததூஉம்-மனதில் ஒளித்த குற்றமும், ஆங்கேமிகும் - முன்னையளவிலும் மிகுந்து வெளிப்படும், (ஆதலால்), (எ - று).

கள்ளுண்டறியேனென்று கூறுது 'களித்தறியேன்' என்று கள்ளுண்டலாகிய காரணத்தைக் காரியத்தாற் சொல்லினர். இவை இரண்டுபாட்டாலும் அது மறைக்கப்படாதென்பது சொல்லப்பட்டது.

† ஊருள் என்பது உள்ளுரென்றுமாது இலக்கணப் போலியாம்.

‡ உண்டு என்பதை கண்சாய்பவரென்பது அவாவி (வேண்டி) நிற்றலால், அது வருவிக்கப்பட்டது.

¶ கள்ளுண்டலால் களித்தலுண்டாதலின், கள்ளுண்டல் காரணமாம்; களித்தல் - அதன் காரியமாம். $ அது - கள்ளுண்டல்.



(க - து.) கள்ளுண்டபோது மனத்தின்கண் நிகழ்வனவெல்லாம் வெளிப்பட்டுவிடுதலால், கள்ளுண்பார் கள்ளுண்ணுதபோது தமதொழுக்கத்தைப்பற்றிப் பேசுதலை யொழிக்கவேண்டும்.

8. Let the drunkard give up saying " I

have never drunk"; for when he drinks he will only betray his former attempt to conceal.



கூ. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

பரி:—(இ - ள்·) கள்ளுண்டு களித்தானெருவனை † இஃதாகாதென்று பிறனெருவன் காரணங்காட்டித் தெளிவித்தல் நீருண்மூழ்கினனெருவனைப் பிறனெருவன் விளக்கிஞல் நாடுதலை யொக்கும், (எ - று).

களித்தானை யென்னுமிரண்டாவது ‡ "அறிவுடையந்தண னவனைக் காட்டென்றனே" என்புழிப்போல நின்றது. நீருள் விளக்குச் செல்லாதாற்போல * அவன் மனத்துக் காரணஞ் செல்லாதென்பதாம். இதனுன் § அவனைத் தெளிவித்தல் முடியாதென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) களித்தானை - (கள்ளுண்டு) களித்தானெருவனை, காரணங்காட்டுதல்-(இஃது ஆகாதென்று மற்றெருருவன்) காரணங்காட்டித் தெளிவித்தல், கீழ்நீர்க்குளித்தானை - நீருள் மூழ்கினனெருவனை, (மற்றெருருவன்), தீ - விளக்கினால், துரீஇயற்று-தேடுதலையொக்கும், (எ - று).

களித்தானை என்னுமிரண்டனுருபு களித்தானுக்கு என்னும் நான்கனுருபின் பொருளிலும் வந்தது. இவ்வாறு வருவது பொருள் மயக்கமெனப்படும். நீருள் விளக்குச் செல்லாமைபோல அவன் மனத்துள் பிறன்கூறும் காரணஞ்செல்லாதென்பதாம். இதனலவனைத்தெளிவித்தல் முடியாதென்பது சொல்லப்பட்டது.

(க - து.) கள்ளுண்டு களிப்பவனைப் பிறன் கள்ளுண்டலா லுண்டாகுந் தீமையைக்கூறித் தெளிவித்தல் முடியாது என்பது.

9. Reasoning with a drunkard is like searching a drowned man with a light.

† இஃது - கள்ளுண்டுகளித்தல்.

‡ கலித்தொகை-மருதக்கலி - எ, இதன்பொருள். அறிவில்லாத அந்தணன் (பிராமணன்) அவளை (அவட்கு)க் காணப்பண்ணென்று சொன்னானே என்பது. (அறிவுடைதல் - அறிவுகெடுதல்).

* அவன் - கள்ளுண்டு களித்தவன்.

§ அவனை - கள்ளுண்டு களித்தவனை.

அங்கவியல்—நக-வது சூது.

# 1001

கo. கள்ளுண்ணுப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு.

பரி:—(இ - ள்.) கள்ளுண்பானொருவன் தான் அஃதுண்ணுது தெளிந்திருந்த பொழுதின்கண் உண்டு களித்த பிறனைக் காணுமன்றே; காணுங்கால் தானுண்டபொழு தவனதாஞ் சோர்வினை அவன் சோர் வால் * அதுவு மிற்றென்று கருதான்போலும், (எ-று).

சோர்வு - மன மொழி மெய்கள் தன் வயத்தவல்லவாதல். † கருதலள வையான் ‡ அதனிழுக்கினை யுய்த்துணரின், ஒழியுமென இதனுல் ¶ அஃ தொழிதற் காரணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (கள்ளுண்பா னொருவன்தான்) கள்ளுண்ணுப் போழ்தில்-அக்கள்ளையுண்ணுமல் தெளிந்திருந்த பொழுதில், களித்தானை -

(கள்ளுண்டு)களித்தபிறனை,(காண்பானல்லனா), காணுங்கால்-காணுமிடத்து, உண்டதன் சோர்வு - (தான்) உண்டபொழுது உண்டாகுஞ் சோர்வினை, உள்ளான்கொல் - (அவன் சோர்வால் அதுவும் இத்தன்மையதென்று) நினையான்போலும், (எ - று).

சோர்வு-மன மொழி மெய்கள் தன்வயத்தனவல்லவாதல். அனுமானப் பிரமாணத்தால் அக்கள்ளுண்டலி னிழிவை ஆராய்ந்தறிந்தால், ஒழியுமென இதனுல் அஃது ஒழிதற்குக் காரணம் சொல்லப்பட்டது.

(க - து.) கள்ளுண்பவன் தான் குடியாது தெளிந்திருந்த போது, கள்ளுண்டுகளிக்கும் பிறனது சோர்வை ஆராய்ந்தறிவா னுயின், கள்ளுண்பதொழிவான் என்பது.

10. When a drunkard who is sober sees one who is not, it looks as if he remembered not the evil effects of his own drink.

மூப்பத்தொன்றுவது அதிகாரம்.

## சூது:—Gambling.

பரி:—இனி அக்கள்ளுண்டல்போல அறம் பொருள் இன்பங்கட்கு இடையீடாகிய சூதாடலும் பிணியுழத்தலுங் கூறுவான் றொடங்கி, முதற்கட் சூதினதியல்பு கூறுகின்றார்.

*, அதுவு மிற்றென்று - தானுண்டபோது தனக்குண்டாகும் சோர்வும் (தளர்ச்சியும்) இத்தன்மையதாமென்று.

† கருதலளவை - அனுமானப் பிரமாணம். அது வருமாறு:—யானும் சோர்வுடையவனுவேன் என்பது பிரதிஞ்ஞை; கள்ளுண்டலால் என்பது ஏது; யாண்டு யாண்டுக் கள்ளுண்டலுண்டு, ஆண்டு ஆண்டுச் சோருதலுண்டு கள்ளுண்டுசோரும் பிறனைப்போல என்பது உதாரணம்.

‡ அவனிழுக்கினை என்றும் பாடமுண்டு. ¶ அஃது-கள்ளுண்டல்.





தெளி:—இனி அக்கள்ளுண்டல்போல அறம் பொருளின்பங்களுக்குத் தடையாகிய சூதாடலும் நோயாற்றுன்புறுதலும் சொல்லத்தொடங்கி, முதலில் சூதினது இயல்பினைச் சொல்லுகின்றார்.

க. வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை
வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

பரி:—(இ - ள்.) தான் வெல்லுமாற்றலுடையனாயினும் சூதாடலை விரும்பாதொழிக; வென்று பொருளையீட்டுவார் உளராகலின், அவ் வென்ற பொருடானும் இரையான் மறைந்த தூண்டிலை விரும்பினை இரை யெனக்கருதி மீன்விழுங்கினன் போலும், (எ - று).

வேறல் ஒருதலை யன்மையின் 'வென்றிடினும்' என்றும், * கருமங்கள் பலவுங்கெடுதலின் 'வேண்டற்க' என்றுங் கூறினர். † எய்தியபொருள் சூதாடுவார் நீங்காமைக்கு இட்டதோர் ‡ தூண்டிலையென்பதூஉம், பின்றுயருழத்தலும் 0 உவமையாற் பெற்றாம்.

¶ அதனுற்

தெளி:—(இ - ள்.) வென்றிடினும்-(தான்)வெல்லும் ஆற்றலுடையனாயினும், சூதினை-சூதாடலை, வேண்டற்க - விரும்பாதிருக்கக் கடவன்; (வென்று பொருள் பெறுவார் இருக்கின்றனரெனின்), வென்றதூஉம் - அவ்வென்றபொருளும், தூண்டிற்பொன் - (இரையால்மறைந்த) தூண்டிலை விரும்பினை, மீன்விழுங்கியற்று - (இரையெனக்கருதி) மீன்விழுங்கினன் போலும், (எ-று).

(சூதாட்டத்தில்) வெல்லுதல் நிச்சயமல்லாமையால் 'வென்றிடினும்' என்றும், (அதனால்) கருமங்கள் பலவுங்கெடுதலால் 'வேண்டற்க' என்றும், சொல்லினர். பெற்றபொருள் சூதாடுவார் நீங்காமைக்கு இட்டதோர் தூண்டிலையென்பதும், அதனால் பின் துயருழத்தலும் 'தூண்டிற்பொன் மீன்விழுங்கியற்று' என்னும் உவமானத்தால் பெற்றாம்.

(க - து.) ஒருவன் சூதாடுவதில் திறமையுள்ளவனு யிருப்பினும், அச்சூதினால் வரும்பொருள் பலகேட்டிற்குக் காரணமா யிருத்தலால், அதனை விடக்கடவன் என்பது.

1. Though able to win, let not one desire gambling; for even what is won is like a fish swallowing the iron in a fish-hook.

---

* கருமங்கள் பலவும் - மேற்கொண்டு செய்யுங் காரியங்கள் பலவும்

† எய்தியபொருள் - சூதாடிவென்றடைந்த பொருள்.

‡ தூண்டில் - காலிலிடும் விலங்கு. ¶ அதனால் - அத்தூண்டிலால்.

0 இரையால் மறைந்துள்ள தூண்டில் விழுங்கியமீன் நீங்கிப்போகா

ஏ மக்குத்தூண்டில் (தடை)யாக, அத்தூண்டிலால் பின்பு அம்மீன் துன்பமடைதல் போன்று சூதாடுதலால் கிடைத்தபொருள் சூதாடுவோர் நீங்கிப்போகாமைக் குப் போட்டதோர் விலங்காக, அதனால் பின்பு அவர் துன்பமடைவார் என் பதாம். இதனால் சூதாடலால் வரும்பொருள் பின்னரும் சூதாடற்குக் காரண மாயிருந்து துன்பத்தை யுண்டாக்கு மென்பது பெறப்பட்டது.



உ. ஒன்றெய்தி நூற்றழக்குஞ் சூதர்க்கு

முண்டாங்கோ

னன்றெய்தி வாழ்வதோ ராறு.

பரி:—(இ – ள்.) அத்தூ ண்டிற் போ ன்போ ன்ற ஒன்றனை முன் பெற்று இன்னும் பெறுதுமென்னுங் கருத்தால் நூற்றினை யிழந் து வறிய ராஞ் சூதர்க்கும் பொருளால் அறனுமின்பமுமெய்தி வாழ்வதொரு நெறி யுண்டாமோ; ஆகாது, (எ று).

* அவ்வாற்றுற் பொருளிழந்தே வருதலான், †

அதனுலெய்தும் பய

னும் அவர்க்கில்லை யென்பதாம்.

தெளி:—(இ - ன்.) ஒன்றெய்தி - (அத்தூண்டிலிரும்புபோன்ற)ஒன் றனை முன்புபெற்று, (இன்னும் பெறுவோமென்னுங் கருத்தால்), நூறிழக் கும் - நூற்றினை இழந்துவறியராகும், சூதர்க்கும் - சூதாடிகளுக்கும், நன் றெய்தி - (பொருளால்) அறமு மின்பமும்பெற்று, வாழ்வதோராறு-வாழ்வ தொருவழி, உண்டாங்கொல் - உண்டாமோ, (உண்டாகாது), (எ - று).

(சூதாடிகள்) அவ்வழியால் பொருளையிழந்தே வருதலால், அதனால் பெறும் பயனும் அவர்க்கு

இல்லையென்பதாம்.

(க - து.) ஒருபொருளைப் பெற்றுப் பலபொருள்களை யிழக்குஞ் சூதாடிகளுக்குப் பொருளால் அறமும் இன்பமுமெய்தி வாழுமெறி யுண்டாவதில்லை என்பது.

2. Is there indeed a means of livelihood that can bestow virtue and happiness on gamblers who gain one and lose a hundred.

---

கூ. உருளாய மோவாது கூறிற் பொருளாயம்

போழ்ப் புறமே படும்.

பரி:—(இ - ள்.) உருளுங் † கவற்றினீங்கட் பட்ட 0 ஆயத்தை இடை விடாது கூறிச் சூதாடுமாயின், அரசனீட்டியபொருளும் அவன் பொருள் வருவாயும் அவனை விட்டுப்போமிப் பகைவரீண்டை தங்குதும், (எ-று).

* அவ்வாற்றால் - சூதாடும் வழியால்.

† அதனாலெய்தும் பயனும் அவர்க்கில்லையென்பதாம் - அப்பொருளாலடையும் அறமும் இன்பமும் சூதாடிகளுக்கில்லை யென்பதாம்.

‡ கவறு - பாய்ச்சிகை. 0 ஆபத்தை -கெலிப்புப் பொருளை.



* கவற்றினதுருட்சியை அதனினுய ஆயத்தின்மே லேற்றியும், †சூதாடலை அது கூறலாகிய காரணத்தின்மே லிட்டுங்கூறினர்.பொருளாய மென்பது ‡ உம்மைத்தொகை. ¶ ஆயம்—வடமொழித்திரிசொல். காத்தற் கண்ணும் இயற்றற்கண்ணும் கருத்திலுகலின், $ அவையிரண்டும் பகை வர்பாற் செல்லுமென்பதாம்.

தெளி:—(இ - ள்.) உருளாயம் - உருளும் (கவற்றில் அகப்பட்ட)

ஆதாயத்தை, ஒவாது - இடைவிடாமல், கூறின் - கூறிச் சூதாடுவானுயின், பொருள் (அரசன் சம்பாதித்த) பொருளும், ஆயம் - (அவன்) பொருள்வருவாயும், போஒய் - (அவனை விட்டுப்) போய், புறமேபடும் - பகைவரிடத்தே தங்கும், (எ - று).

கவற்றினது உருட்சியை அதனுலாகிய ஆயத்தின்மேல் ஏற்றியும்,சூதாடலை அதனைச் சொல்வதாகிய காரணத்தின்மேல் வைத்தும் சொல்லினர்.

பொருளாயமென்பது பொருளும் ஆயமுமென விரிதலால் உம்மைத்தொகையாம். ஆயம் என்பது வடமொழித்திரிசொல். பொருளையும் ஆயத்தையும் காத்தலிலும் சம்பாதித்தலிலும் கருத்திலனுகலால், அவை இரண்டும் பகைவரிடத்துச் செல்லுமென்பதாம்.

(க - து.) ஓயாது சூதாடுவார்க்குப் பொருளும் பொருள் வருவாயும் விரைவில் ஒழியும் என்பது.

3. If the king be incessantly addicted to rolling dice in the hope of gain, his wealth and the resources thereof will leave him and fall into the hands of his enemies.

---

* கவற்றினது(பாய்ச்சிகையினது) உருட்சியை(உருளுதலை)அக்கவற்றினது உருட்சியிலுளாய ஆயத்தின்மேலேற்றி 'உருளாயம்' என்று கூறப்பட்டது. இது காரணத்தின் தொழில் காரியத்தின் மேலாய உபசாரவழக்கு

† சூதாடுதலை அது (அச்சூதாடுதலைக்) கூறலாகிய காரணத்தின்மேல் வைத்துக் 'கூறின்' என்று கூறப்பட்டது. கூறுதல் என்னும் கருவியின் பெயர் அதன்காரியமாகிய சூதாடுதலையுணர்த்துதலால் கருவியாகு பெயராம்.

‡ உம்என்னும் இடைச்சொல் தொக்கு நிற்பது உம்மைத்தொகையாம்.

¶ ஆயம் என்பது பலபொருள் குறித்த ஒரு பெயர்த்திரிசொல். இங்கு

ஆயம் என்பது ஆதாயத்தையும் பொருள்வருவாயையும் உணர்த்தி நின்றது. "ஆயமே கவற்றிற் ருய மாதாய மாதர் கூட்டம்" என்று நிகண்டு கூறுகின்றது. வடசொல் இன்னதென்பது "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ, யெழுத்தொடு புணர்ந்த சொல்லா குமே" என்று தொல்காப்பியங் கூறுவதா லினிது விளங்கும். திரிசொல்-இயற்சொல்லின் வேறுபட்டசொல்.

ஆயமென்பது "ஆயஃ" என்னும் வடசொற்றிரிபாம்.

§ அவையிரண்டும் - சம்பாதித்தபொருளும் பொருள்வரும் வழியும்.

அங்கவியல்—ங்க்-வது சூத்.

**1005**

சு. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதோன் றில்.

பரி:—(இ - ள்.) தன்னை விழைந்தார்க்கு முன்னில்லாத துன்பங் கள் பலவற்றையும் விளைத்து உள்ளபுகழையுங் கெடுத்துஞ் சூதுபோல் நல்தாவினைக் கொடுக்கவல்லது பிறிதொன்றில்லை, (எ - று).

அத்துன்பங்கள் முன்னர்க்கூறுப. நல்வினைகளையும் நல்லினத்தையும் நீக்கித் தீவினைகளையுந் தீயினத்தையுங் கூட்டுதலால் 'சீரழிக்கும்' என்றார். வறுமைக்கு எல்லையாவ தொன்பதாம்.

தெளி:—(இ - ள்.) சிறுமைபல - (முன்னில்லாத) துன்பங்கள் பல வற்றையும், செய்து - (தன்னை விரும்பினவர்க்கு) உண்டாக்கி, சீர்-(உள்ள) புகழையும், அழிக்கும் - கெடுக்கும், சூதின் - சூதுபோல, வறுமை - வறுமையை, தருவது - கொடுக்கவல்லது, ஒன்று - வேறொன்று, இல் இல்லை, (எ-று).

அத்துன்பங்களைப் பின்வருங்குறள்களிற் சொல்லுவார். நல்வினைகளையும் நல்லினத்தினையும் நீக்கித் தீவினைகளையும் தீயினத்தினையும் கூட்டுதலால் (சூது) 'சீரழிக்கும்' என்றார். சூதாடுவார் வறுமைக்கு எல்லையாவ ரென்பதாம்.

(க - து.) துன்பங்கள் பலவற்றையுமுண்டாக்கிப் புகழையுங் கெடுக்குஞ் சூதுபோல வறுமையைத் தருவது பிறிதொன்றில்லை.

4. There is nothing else that brings one poverty like gambling which causes many a misery and destroys one's reputation.

நு. கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார்.

பரி:—(இ - ள்.) * முற்காலத்துத் தாழனாகியே லிலாகியொழுகினர் கவற்றினையும் † அஃதாடுங் களத்தினையும் அவ்வாடற்கு வேண்டுங் கைத்தொழிலினையும் மேற்கொண்டு கைவிடாத

வேந்தர், (எ-று).

கைத்தொழில்—‡ வெல்லுமாயம்படப் பிடித்தெறிதல். ¶ அவ்விவறு தலாற் பாண்டவர் தம்மரசுவிட்டு வனத்திடைப்போய் ஆண்டு மறைந்தொழு

---

* முற்காலத்தில் (துவாபரயுகத்தில்) தாமுயிருடையவராயிருந்தபொருளில்லாதவராகிக் காட்டில் திரிந்தவேந்தர் பாண்டவரென்பது.

† அஃது - சூதாடுங்கருவியான கவறு (பாய்ச்சிகை).

‡ வெல்லுமாயம்படப்பிடித்தெறிதல்-கெலிக்கும் ஆதாயமுண்டாமாறு பாய்ச்சிகையினை யுளவாகப் பிடித்தெறிதல்.

¶ அவ்விவறுதலால் - சூதாடுங்கருவியையும், அஃதாடுமிடத்தினையும், அதனையாடுதற்கு வேண்டும் கைத்தொழிலினையும் கைவிடாதிருத்தலால்.

அவ்வாயந் தவறுதலால் என்றும் பாடமுண்டு.



கிறைன அனுபவங் காட்டியவாறு. இவை யைந்துபாட்டானும் * அதனது வறுமை பயத்தற் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்). இல்லாகியார் - (முற்காலத்தில் தாமிருப்பவராயிருந்தே) இல்லாதவராயொழுகினவர், கவறும்-கவற்றினையும், கழகமும்-அஃதாடுமிடத்தினையும், கையும் - (அவ்வாடற்கு வேண்டுங்) கைத்தொழிலினையும், தருக்கியிவறியார் - மேற்கொண்டு கைவிடாதவேந்தர், (எ - று).

கைத்தொழில் - வெல்லும் ஆதாயமுண்டாமாறு பாய்ச்சிகையைப் பிடித்தெறிதல். அவற்றை மேற்கொண்டு

கைவிடாமையினால் பாண்டவர் தம்மர சிழந்து காட்டிற்சென்று அங்கு மறைந்தொழுகினாரென்று அனுபவங்காட் டியவாறாம். ஈனது சரித்திரமுமிங்கறியத் தக்கதாம். இவை ஐந்துபாட் டாலும் அதனது வறுமையுண்டாக்குதற்குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) சூதையும் சூதாடுமிடத்தையும் சூதாடுந் தொழிலை யும் கைவிடாத வரசர் யாது மிலராவர் என்பது.

5. Penniless are those kings who by their attachment would never forsake gambling, the gambling - place and the handling of dice.

௬. அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார்.

பரி:—(இ-ள்.) † தன் பெயர் சொல்லல் மங்கலமன்மையிற் சூதென்று சொல்லப்படும் முகடியான் விழுங்கப்பட்டார் இம்மைக்கண் வயி றாப்பெறார், மறுமைக்கண் நிரயத்துன்ப முழப்பர், (எ-று).

செல்வங்கெடுத்து நல்குரவு கொடுத்தற்றொழில் வேறுபடாமையிற்

'சூதென்னு முகடி' என்றும், வெற்றி தோல்விக ணோக்கி ஒருபொழுதும் விடாராகலின் ‡ ஈண்டு 'அகடாரார்' என்றும், பொய்யுங் களவும் 0 முத

லிய பாவங்க ளீட்டலின் ¶ ஆண்டு 'அல்லலுழப்பர்' என்றுங் கூறினர். $ வயிறூராமை சொல்லவே, ஏனைப்புலன்க ளுகரப்பெறுமை சொல்ல வேண்டாவாயிற்று. )( உழப்பரென்பது எதிர்கால வினைச்சொல்.

---

* அதனது-சூதினது.

† தன் பெயர் சொல்லல்-மூதேவியென்று தனது பெயரைச் சொல்லுதல். ‡ ஈண்டு-இம்மையில்.

0 முதலிய என்றமையின், கொலை முதலியவற்றையுங்கொள்க.

¶ ஆண்டு-மறுமையில். $ வயிறூராமை - வயிறு நிரம்பவுண்ணுமை.

)( பகர வினைகளிலே நிகழ்காலத்தையு முணர்த்துதலின், 'உழப்பர் என்பது எதிர்கால வினைச்சொல்' என்று கூறப்பட்டது. (சூதென்னும் முகடி டால் மூடப்படுதல் காரணமாயும் அல்லலுழத்தல் காரியமாயும் இருத்தலால்) மூடப்பட்டார் என்று இறந்த காலமாகவும் உழப்பர் என்று எதிர்காலமாகவும் கூறினர்.

அங்கவியல்—ஈக-வது சூத்.

தெளி:—(இ - ள்.) சூதென்னும் - (தன் பெயர்சொல்லல் மங்கலமல் லாமையால்) சூதென்று (வேறுபெயரால்) சொல்லப்படும், மூகடியால்-மூதேவியால், மூடப்பட்டார் - விழுங்கப்பட்டவர், அகடாரார் - (இம்மை யில்) வயிறு நிறையப்பெறார், அல்லலுழப்பர் - (மறுமையில்) நரகத்துன்ப மனுபவிப்பர், (எ-று).

சூதிற்தும் மூகடிக்கும் செல்வத்தைக்கெடுத்து வறுமையைக் கொடுத் தற் றொழில் வேறுபடாமையால் 'சூதென்னு மூகடி' என்றும், சூதாடுதலை வெற்றி தோல்விகள் நோக்கி ஒருபொழுதும் விடாராகலால் இங்கு 'அகடா ரார்' என்றும், பொய்யும் களவும் முதலிய பாவங்களைச் சம்பாதித்தலால் அங்கு 'அல்லலுழப்பர்' என்றும் சொல்லினர். வயிறுநிறையாமை சொல்லவே, மற்றை ஆடை யணிமுதலிய விஷயங்களை யனுபவிக்கப்பெறுமை சொல்ல வேண்டாவாயிற்று. உழப்பரென்பது எதிர்காலத்தெரிநிலை வினைமுற்று.

(க - து.) சூதென்னும் மூதேவியால் விழுங்கப்பட்டவர் இம் மையில் வறுமையையும் மறுமையில் நரகத்தையும் அநுபவிப்பர்.

6. Those who are swallowed by the goddess of

gambling will never have their desire satiated, but will suffer the pangs of hell in the next world

எ. பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்.

பரி:—(இ - ள்.) * அறம் பொருளின்பங்கட் கடைத்தகாலம் அரசனுக்குச் சூதாடு களத்தின்கட் கழியுமாயின், அக்கழிவு தொன்றுதொட்டு வந்த அவன் செல்வத்தினையும் நற்குணங்களையும் போக்கும்,(எ-று).

† பழகிய என்பது பண்புடனுமியையும். தான் செய்துகொள்ளும் அற முதலியவேயன்றி முன்னுரைத்தொடங்கி வருகின்ற செல்வமும் முன்செய்த நல்வினையின் பயனுய பண்பும் இலவாமென்பதாம்.

தெளி:—(இ - ள்.) காலை - (அறம்பொருளின்பங்களுக்கு விதித்த) காலம், (அரசனுக்கு), கழகத்து - சூதாடுமிடத்து, புகின் - கழியுமாயின், (அக்கழிவு), பழகிய - தொன்றுதொட்டுவந்த, செல்வமும் - (அவன்) செல்வத்தையும், பண்பும்-நற்குணங்களையும், கெடுக்கும் - போக்கும், (எ - று).

பழகிய என்பது பண்பென்பதனுடனும் இயைந்து நின்றது. சூதாடுதலில் தன் காலத்தைக் கழிக்குமாசனுக்குத் தான் செய்துகொள்ளும் அறமுதலியன்வேயல்லாமல் தன் முன்னுரைத் தொடங்கிவருகின்ற செல்வமும் முன்செய்த நல்வினையின்பயனுகிய நற்குணங்களும் இல்லாமற் போமென்பதாம்.

---

* அறத்தைச் செய்தற்கும், பொருளைத் தேடுதற்கும், இன்பத்தை யனுபவித்தற்கு முரிய காலம்.

† பழகிய என்பதனைப் பண்பு என்பதனேடுங் கூட்டித் தொன்று தொட்டுவந்த நற்குணங்களையும் என்று பொருள் கொள்க.



(க - து.) அரசன் இடைவிடாது சூதாடுவானுயின், அஃது அவனது செல்வத்தையும் நற்குணங்களையும் கெடுக்கும் என்பது.

7 To waste time at the place of gambling

will destroy

the king's inherited wealth and good character.

அ. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்

தல்ல லுழப்பிக்குஞ் சூது.

பரி:—(இ - ள்.) சூது தன்னைப் பயின்றவன்பொருளைக் கெடுத்து பொய்ம்மையை மேற்கொள்ளப்பண்ணி மனத்தெழும் அருளைக் கெடுத்து இவ்வாற்றன் * அவனை இருமையினுந் துன்புழுவிக்கும், ()

† இத்தொழில்கண் மூன்றற்கும் சூது வினைமுதலாகவும், தோல்வி, வெற்றி, செற்றமென்பன முறையே கருவிகளாகவுங் கொள்க. ‡ முன்ன தனுன் இம்மையினும், ¶ ஏனையவற்றுன் மறுமையினும் $ ஆம். 0 பொருள் கொடுத்தென்பது பாடமாயின், அவ்வெச்சத்திற்கு முடிவு மேற்கொளீஇ யென்புழி மேற்கோடலாகிய வினைமுதல்வினை.

தெளி:—(இ-ள்.) சூது—சூதானது, பொருள்கெடுத்து - (தன்னைப் பழகினவனது) பொருளைக் கெடுத்து. பொய்-பொய்யை, மேற்கொளீஇ - மேற்கொள்ளப்பண்ணி, அருள்கெடுத்து - (மனதில் எழுகிற) அருளைக்

* அவனை - சூது தன்னைப் பயின்றவனை.

† பொருளைக்கெடுத்தல், பொய்யைமேற்கொள்ளப்பண்ணல், அருளைக் கெடுற்தல் என்னுமித்தொழில்கள் மூன்றற்கும் சூதினைக்கர்த்தாவாகவும், பொருளைக் கெடுத்தற்குத் தோல்வியைக் கருவியாகவும், பொய்யை மேற் கொள்ளுதற்கு வெற்றியைக்கருவியாகவும், அருளைக்கெடுத்தற்குச் செற் றத்தை (கோபத்தை)க் கருவியாகவும் கொள்ளுக வென்பதாம். கருவி - துணைக்காரணம். சூதானது தோல்வியால் பொருளைக்கெடுத்து,வெற்றியால் பொய்யைமேற்கொள்ளப்பண்ணி, செற்றத்தால் அருளைக்கெடுக்குமென்று கொள்க.

‡ முன்னதனான் - பொருளைக்கெடுத்தலால்.

¶ ஏனையவற்றான் - பொய்யைமேற்கொள்ளுதல் அருளைக்கெடுத்தல் என்பனவற்றால். $ ஆம் - துன்பமாகும்.

0 பொருள்கெடுத்து என்பதற்குப் பிரதியாகப் பொருள்கொடுத்து என்பது பாடமானால், அக்கொடுத்து என்னும் (செய்தென்னும் வாய்பாட் டிறந்த காலவினை) எச்சத்திற்கு முடிக்குஞ்சொல் மேற்கொளீஇ என்றவிட த்து (அதனது பகுதியதான) மேற்கோடலாகிய வினைமுதல் (கருத்தா வாகிய சூதாடுவானது) வினையாமென்க. கொடுத்து மேற்கோடல் என்றி யையும்.



கெடுத்து, (இவ்வழியால்), அல்லலுழப்பிக்கும் - (அவனை இம்மை மறுமை யென்னும் இருமையிலும்) துன்பமுறுவிக்கும், (எ - று).

பொருள்கெடுத்தல் முதலிய இத்தொழில்கள் மூன்றற்கும் சூதினை எழுவாயாகவும், தோல்வி, வெற்றி, கோபம் என்பனவற்றை முறையே கருவிகளாகவுங் கொள்க. அல்லல் முன்னதனுல் இம்மையிலும், மற்றவற்றுல் மறுமையிலுமாம்.

(க - து.) சூதானது தன்னைப் பழகினவனது பொருளைக் கெடுத்து, பொய்யை மேற்கொள்ளச்செய்து, அருளைக்கெடுத்து, அவனை யிருமையிலுந் துன்ப முறச்செய்யும் என்பது.

8. Gambling destroys wealth, leads to falsehood, stifles benevolence and brings in misery in the two worlds.

கூ † உடைசெல்வ மூணெளி கல்வியேன் றைந்து

மடையாவா மாயங் கொளின்.

பரி:—(இ-ள்.) அரசன் சூதினைத் தனக்கு விநோதத்தொழிலாக விரும்புமாயின், அவனை * ஒளியும் கல்வியும் செல்வமும் ஊணும் † உடையுமென்றிவ்வைந்துஞ் சாராவாம், (எ-று).

¶ ஆயம்—ஆகுபெயர். § இச்சிறப்புமுறை செய்யுளைக்கிப் பிறழ

† "அடியு மாண்மையும் வலிமையுஞ் சேனையு மழகும்வென் றியுந்தத் தன், குடியு மானமுஞ் செல்வமும் பெருமையுங் குலமுமின் பமுந்தேசும், படியு மாமறை யொழுக்கமும் புகழுமுன் பயின்றகல் வியுஞ்சார, மடியு மான்மதி யுணர்ந்தவர் சூதின்மேல் வைப்பரோ மனம்வையார்." என்று பாரதங்கூறுவது இக்குணர்தற்பாலதாம். * ஒளி-மதிப்பு. ‡ உடை - ஆடை.

¶ ஆயம் என்பது ஆதாயத்தைத் தரும் சூதினையுணர்த்துதலால் காரியவாகு பெயராம். ஆயம்- சூதால்வரும் ஆதாயமென்பதை "உருளாயம்" என்பதனு லறிக.

§ ஒளி, கல்வி, செல்வம், ஊண், உடை யென்னும் இச்சிறப்புமுறை செய்யுள் நோக்கி 'உடைசெல்வ மூவெளி கல்வி' என்று பிறழ (மாறுபட) நின்றது.

சிறப்பு முறையாவது மதிப்பினுல் கல்வியின் சிறப்பும், கல்வியினுல் பொருளின் சிறப்பும், பொருளினுல் உண்டலின் சிறப்பும், உண்டலி னுல் தேகபுஷ்டி யுண்டாவதுவாயிலாக உடையுடுத்தலின் சிறப்பும் அமைந் திருப்பதாம். (உடையில்லாதானுக்கு உண்டியும், உண்டியில்லாதானுக் குச் செல்வமும், செல்வமில்லாதானுக்குக் கல்வியும், கல்வியில்லாதானுக்கு மதிப்பும் இல்லையாம் என்பது கருத்து). இறைமாட்சி அதிகாரத்தின் முதற்





நின்றது. செல்வம்—* அறுவகை யுறுப்புக்கள். ‡ ஊணுடை யென்பனவற் றுல் துப்புரவுக ளெல்லாங்கொள்ளப்படும். ○ காலமும் கருத்தும் பெருமை யின், † இவை யுளவாகா வென்பதாம். இவை நான்குபாட்டானும் சிறுமை பல செய்து அவற்றுனிருமையுங் கெடுத்தல் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (அரசன்) ஆயம் - சூதினை, கொளின் - (தனக்கு விநோதத் தொழிலாக) விரும்புவானாயின், ஒளி - ஒளியும், கல்வி - கல்வியும், செல்வம் - செல்வமும், ஊண் - உணவும், உடை - உடையும், என்றைந்தும் - என்ற இவ்வைந்தும், அடையாவாம் - (அவனைச்) சேராவாம், (எ - று).

ஆயம் - காரியவாகு பெயர். ஒளி கல்வி என்றற்றொடக்கத்து இச்சிறப்பு முறை செய்யுள் நோக்கிப் பிறழ நின்றது. செல்வம் - அறுவகை யுறுப்புக் கள். ஊணுடை யென்பனவற்றால் அனுபவிக்கும்பொருள்களெல்லாங்கொள் ளப்படும். (சூதாடு மரசன்) காலமும் கருத்தும் பெருமையால், இவை உண் டாகா வென்பதாம். இவை நான்கு பாட்டாலும் சூது சிறுமை பல செய்து அவற்றால் இம்மைப்பயன் மறுமைப்பய னென்னு மிரண்டையுங் கெடுத்தல் சொல்லப்பட்டது.

(க - து.) சூதாடுவானுக்கு மதிப்பு மில்லை, கல்வியு மில்லை, செல்வமு மில்லை, உணவுமில்லை, உடையுமில்லை என்பது.

9. If the king betakes to gambling as a pastime it will prevent the attainment of these five: clothing, wealth, food, fame and learning.

கo இழத்தோறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப

முழத்தோறூஉங் காதற் றுயிர்.

பரி:—(இ – ள்.) சூதாடலான் ¶ இந்மைப்பயன்களையு மிழக்கித்தீ

குறளின் விசேடவுரையில் "ஈண்டுச் செய்யுணோக்கிப்பிறழவைத்தார்" என் றிருப்பது மிங்கறியத்தக்கதாம்.

* அறுவகை யுறுப்பு - அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு.

‡ ஊணுடை அடையாவாம் என்றமையின், அனுபவிக்கும பொருள்க ளெல்லாம் அடையாவாமென்பது கொள்ளப்படும். உண்ண உணவும் உடுக்க வுடையுமில்லாதவன் அனுபவிக்கும் பொருள்களுள் யாதுமிலனெவ னென்பது கருத்து.

o காலமும் கருத்தும் பெறுமையின் - சூதாடுமரசன் ஒளிமுதலியவற் றைப் பெறுதற்கேற்ற காலத்தையும், அவற்றைப்பெறவேண்டுமென்னு மெண்ணத்தையும் பெறுதிருத்தலால்.

† இவை - ஒளி, கல்வி, செல்வம், ஊண், உடை என்பன.

• ¶ இருமைப்பயன் - இப்பிறப்பிலும் வருபிறப்பிலும் உண்டாகும் வினையின் பயனுய) சுகபோகம்.

(நல்

அங்கவியல்—ஈக-வது சூத்.

**1011**

தோறும் * அதன்மேற் காதல் செய்யுஞ் சூத னன்போல உடம்பா னின் † முவ கைத் துன்பங்களையும் அனுபவிக்குந்தோறும் ‡ அதன்மேற் காதலை யுடைத் துயிர், (எ - று).

¶ சூது-ஆகுபெயர். §உயிரினதறியாமைகூறுவார் போன்று சூதன தறி யாமை கூறுதல் கருத்தாகவின், ○ அதனை யாப்புறுத்தற் பொருட்டு உவம மாக்கிக் கூறினர். | இத : னெதிர்மறை முகத்தாற் () சூதினைவெறுத்தொ ழிவானை யொக்கும் உடம்பினை வெறுத்தொழியு முயிரெனவுங் கொள்க. இதனுன் ○ அஃதொழிதற் கருமையும் ஒழிந்தாரது பெருமையுங் கூறப் பட்டன.

தெளி:—(இ - ள்.) இழத்தொறூஉம் - (சூதாடலால் இருமைப் பயன் களையும்) இழக்குந் தொறும், காதலிக்கும் - (அதன்மேல்) காதல் செய்யும், சூதே போல் - சூதன் போல,

உயிர் - உயிரானது, துன்பமுழத்தொறூஉம்- (உடம்பால்) மூவகைத் துன்பங்களையும் அனுபவிக்குந்தோறும், காதற்று, (அதன்மேல்) காதலை யுடையது, (எ - று).

சூது-பண்பாகுபெயர். உயிரினது அறியாமையைச் சொல்வார்போன்று சூதனது அறியாமையைச் சொல்லுதல் கருத்தாகலால், அதனை உறுதி செய்தற் பொருட்டு 'இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோல்' என்று உவமானமாக்கிக்கூறினர். இதனைதிர்மறைமுகத்தால் சூதினை வெறுத்தொழிகின்றவனையொக்கும் உடம்பினை வெறுத்து ஒழியும் உயிரெனவுங் கொள்க.

இதனால் அதனை விடுதற் கருமையும் விட்டவரது பெருமையும் சொல்லப்பட்டன. காதல்-விருப்பம்.

---

* அதன்மேல் - சூதாடலின்மேல்.

† மூவகைத் துன்பங்கள் - (1) தன்னைப் பற்றியும், (2) பிறவுயிர்களைப் பற்றியும், (3) தெய்வத்தைப் பற்றியும் வரும் பிறவித் துன்பங்கள்

‡ அதன்மேல் - உடம்பின் மேல்.

¶ சூது என்னும் பண்பாகு பெயராம்.

பண்புப்பெயர் அதனையுடையவனை யுணர்த்துதலால்

$ உயிரின தறியாமை கூறுவார்போன்று 'துன்பமுழுத்தொறூஉங் காதற்றுயிர்' என்று உயிரினது அறியாமையைக் கூறுவார்போல.

0 அதனை - சூதனது அறியாமையை.

| இதன் - 'இழுத்தொறூஉம்' என்னும் இக்குறளின்.

: காதலிக்கும் என்பதற்கு (சூதினை) வெறுத்தொழியும் என்பதும், காதற்று என்பதற்கு (உடம்பினை) வெறுத்தொழியும் என்பதும் எதிர்மறையாகும்.

() உடம்பினை வெறுத்தொழியுமுயிர் சூதினை வெறுத்தொழிவானை யொக்கும் என்றுகொள்க.

o அஃது - சூது. அஃது ஒழித்தற் கருமையும் ஒழித்தாது பெருமையும் என்றும் பாடமுண்டு.



(க - து.) சூதாடுவான் தான் சூதாடலால் இருமைப் பயன் கழுயு மிழத்தலை யறியாது அதனையே விரும்புவான் என்பது.

10. As the gambler loves his vice the more

he loses by it, so does the jeevas love the body the more it suffers through it.

## முப்பத்திரண்டாவது அதிகாரம்.

## மருந்து:— *Medicine.*

பரி:— * பழவினையானும் காரணங்களானும் மக்கட்கு வாத முதலிய பிணிகள்வரும்;அவற்றுட் பழவினையான்வருவன ‡ அதன் கழிவின்கணல் லது தீராமையின், † அவை யொழித்து() ஏனைக் காரணங்களான் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின் நிறங் கூறுகின்றார். காரணங்களாவன உணவு செயல்களதோவ்வாமையாகலின், பிணிகளுங் காரணத்தான் வருவனவாயின.

தெளி:— பழவினையாலும் காரணங்களாலும் மக்களுக்கு வாதமுத லிய பிணிகள்வரும்; அப்பிணிகளுள் பழவினையால் வருவன அப்பழவினை கழியுமிடத் தல்லாமல் தீராமையால், அவற்றை யொழித்து,மற்றைக்காரணங் களால் வரும் பிணிகளைத் தீர்க்கும் மருந்தின் திறத்தைச் சொல்லுகின்றார். காரணங்களாவன உணவு செயல்களின தொருந்தாமையாகலால், பிணி களும் காரணத்தால் வருவனவாயின. பிணி-நோய்.

க. மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

பரி:—(இ - ள்.) உணவுஞ் செயல்களும் ஒருவன் பதுதிக்கொத்த

---

* பழவினை - முற்பிறப்பிற் செய்த கருமம்.

‡ அதன்கழிவின்கணல்லது—அப்பழவினையின் ஒழிவின்கணல்லாமல்.

† அவையொழித்து - பழவினையால் வரும் நோய்களை யொழித்து.

() "கல்லினுண் மயிரினுண் மீதூண் விரும்பலாற் கருதிய விசாரத்தி னுற், கடுவழி நடக்கையான் மலசல மடக்கையாற் கனிபழங் கறியுண்ணலா ல்; நெல்லினு லுமியினு லுண்டபின் மூழ்கலா னித்திரைக ளில்லாமையால், நீர்ப்பகையி னுற்பனிக் காற்றினுட னேதலால் னீசெரு நிலையூறலால்; மெல் லிதல் லார்சலவி யதிகமுன் விரும்பலால் வீழ்மலஞ் சிக்குகையினுன், மிகு சுமை யெடுத்தலா வளவையிற் காய்தலான் மெய்வாட வேலைசெயலால்;வல் லிரவி லேதயிர்கள் சருகாதி யுண்ணலில் வன்பிணிக் கிடமென்பர்காண்" என்று சுமரேசசதகங் கூறுவதால் வேனைக் காரணங்கள் இவையென விளங்கு வனவாம்.

வளவினவன்றி * அதனின் மிகுமாயினும் குறையுமாயினும் † ஆயுள்வேத முடையாரால் ‡ வாதமுதலாக வெண்ணப்பட்ட மூன்று நோயும் அவனுக்குத் துன்பஞ்செய்யும், (எ-று).

நூலோர் எண்ணிய எனவே, அவர் ¶அவ்வாற்றான் வருத்த வாதப்பகுதி பித்தப்பகுதி §ப்பகுதியென்னும் பகுதிப்பாடும் பெற்றும். ‖ அவற்றிற் குணமொத்தலாவது 0 சுவை () வீரியங்களானும் அளவானும் பொருந்துதல். செயல்களொத்தலாவது மன மொழி மெய்களாற் செய்யுந் தொழில்களை ¦ அவை வருந்துவதற்கு முன்னேயொழிதல். : இவையிரண்டும் இங்ஙனமன்றி மிகுதல் குறைதல் செய்யின், ** அவை தத்தநிலையினில்லாவாய் வருத்துமென்பதாம். †† காரண மிரண்டும். அவாய்நிலையான் வந்தன. ‡‡ மூற்றும்மை விகாரத்தாற் றொக்கது. இதனால், யாக்கைகட் கியல்பாகிய நோய் ¶¶ மூவகைத் தென்பதூஉம், அவை துன்பஞ் செய்தற் காரணம் 00 இருவகைத் தென்பதூஉம் கூறப்பட்டன. இன்பஞ்செய்தற் காரணம் முன்னார்க் கூறுப

தெளி:—(இ - ள்.) (உணவும் செயல்களும் ஒருவன் சரீர சுபாவத்திற்கு ஒத்த வளவினவன்றி) மிகினும் - (அதனின்) மிகுமாயினும், குறையினும் -

---

* அதனின்-சரீரசுபாவத்தினும். †

ஆயுள்வேதம்-வைத்திய சாஸ்திரம்.

‡ வாதமுதலாக-வாயு முதலியனவாக.

¶ அவ்வாற்றான்-அவ்வாதமுதலியவற்றின் வாயிலாக."நீதி க ணை நிலை மை யளிமானம், போத மவையின்மை போரிற் புறங்கொடுத்தல், மெதக் கவர்ப்பழித்தல் வேண்டா தவைபிதற்றல், வாத (வாயு)க் குணனா மதி." "அறிவுடைமை யைந்தடக்க லாகத்தழகு, நெறியுடைமை சொல்வன்மை நீர்மை பெறவரிய, வத்துவித ஞானத் தாதரவா மாண்மையிவை, பித்த(பித் தம்) குண னாவதெனப் பேசு." "பொறிபிற ழாமை புகழ்கருணை யூக்கம், குறிமதுகை கோப மிலாமை - பொறையோர், நிபமின் றியவீகை நெஞ்சத் துவகை, கப (சிலேத்தும)மொன் றியகுணனாக் காண்"என்று அமிர்தசாரங் கூறுகின்றது.

$ அவற்றிற்கு-வாதப்பகுதி (பிரிவு) முதலிய பகுதிப்பாட்டிற்கு.

0 சுவை-உருசி. () வீரியம்-பலம். | அவை-மனமொழிமெய்கள்.

: இவைவிரண்டும்-உணவு ஒத்தல் செயல்கள் ஒத்தல் என்னுமிவ்விர ண்டும். ** அவை-மன மொழி மெய்கள்.

†† மிகினும் குறையினும் என்பன அவாவி (வேண்டி) நிற்றலால், (நோய்க்குக் காரணமான) உணவும் செயல்களும் வருவித் துரைக்கப்பட் டன.

‡‡ மூன்றும் என்னும் (இனைத்தென் றறிபொருளில்வந்த) முற் றும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கு நின்றது.

¶¶ மூவகைத்து-வாதப்பகுதி, பித்தப்பகுதி, சிலேத்துமப்பகுதி என்று மூன்றுவகையது.

00 இருவகைத்து-உணவு செயல்களென்று இரண்டுவகையது.

குறையுமாயினும், நூலோர்-ஆயுள்வேத முடையார்கள், வளிமுதலா-வாத முதலாக, எண்ணிய-எண்ணப்பட்ட, மூன்று-மூன்றுநோயும், (அவனுக்கு), நோய்-துன்பத்தை, செய்யும்-உண்டாக்கும், (எ-று).

நூலோர் எண்ணிய எனவே, அவர் அவ்வாற்றால் வகுத்த வாதப்பகுதி பித்தப்பகுதி சிலேத்துமப்பகுதி என்னும் பகுதிப்பாடும் பெற்றாம். அவற் றிற்கு உணவு ஒத்தலாவது சுவை வீரியங்களாலும் அளவாலும் பொருந்து தல். செயல்கள் ஒத்தலாவது மனமொழிமெய்களால் செய்யுந்தொழில்களை அவைவருந்துவதற்கு முன்னே யொழிதல். இவையிரண்டும் இவ்வாறல்லா மல் மிகுதல் குறைதல் செய்தால், அவை தத்தம் நிலையினில்லாமல் வருத்து மென்பதாம். உணவும் செயல்களும் என்னுங் காரணமிரண்டும் அவாய் நிலையால் வந்தன. மூன்றும் என்னும்முற்றும்மை விகாரத்தாற் றொக்குநின் றது. இதனால் உடம்புகளுக்கு இயல்பாகியநோய் மூவகைத்தென்பதும், அவை துன்பம் செய்தற்குக் காரணம் இருவகைத் தென்பதும் சொல்லப் பட்டன. இன்பஞ்செய்தற்குக் காரணத்தைப் பின்னே சொல்லுவர்.

(க - து.) ஒருவனுக்கு உணவும் செயல்களும் ஒத்த வள

வின்றி மிகுமாயினும் குறையுமாயினும் அவனுக்கு வாதமுதலிய மூன்று நோயும் துன்பஞ் செய்யும்

என்பது.

1. If food and work are either excessive or deficient, the three things enumerated by medical experts, flatulance biliousness and phelegm, will cause one disease.

உ. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்
கருந்திய
தற்றது போற்றி யுணின்.

பரி:—(இ - ள்.) ஒருவன் முன்னுண்டது அற்றபடியைக் குறிகளாற் றெளியவறிந்து பின்னுண்ணுமாயின், அவன் யாக்கைக்கு மருந்தென்று வேறுவேண்டாவாம், (எ-று).

குறிகளாவன: யாக்கைநொய்ம்மை, நோக்கின்றாய்மை, காணுங்க டொழிற் குரியவாதல், பசிமிகுதலென விவை முதலாயின. பிணிகள் யாக் கையவாகலின் 'யாக்கைக்கு' என்றார். உணினென்பது அதனருமை தோன்ற நின்றது.

தெளி:—(இ- ள்.) (ஒருவன்) அருந்தியது-(முன்) உண்டவுணவு, அற்
றது-சீரணித்தபடியை, போற்றி - (குறிகளால்) தெளியவறிந்து, உணின்-
(பின்னே)உண்பானாயின், யாக்கைக்கு-(அவன்) உடம்பிற்கு, மருந்தென - மருந்தென்று, வேண்டாவாம் - (வேறு) வேண்டுவதில்லையாம், (எ - று).

குறிகளாவன: உடம்பு சிறுகியிருத்தல், நோக்கம் பரிசுத்தமா யிருத்தல், காசரணுதி காரணங்கள் தொழிற்தரியவாதல், பசிமிகுதல் என விவைமுதலா

---

$ அதனருமை-(அருந்தியதற்றதுபோற்றி) உண்ணுதலினருமை.



யின . பிணிகள் உடம்பின்க ணிருப்பனவாகலால் 'யாக்கைக்கு' என்றார். உணினென்பது அதனருமைதோன்ற நின்றது.

(க - து.) ஒருவன் உண்டவுணவு சீரணித்தபடியை நன்றுயறி ந்து உண்பானுயின், அவனுடம்பிற்குவேறுமருந்துவேண்டாவாம்.

2. No medicine is necessary for him who eats after assuring himself that what he has already eaten has been digested.

ஈ. அற்ற லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்ற னெடிதுய்க்கு மாறு.

பரி:—(இ - ள்.) முன்னுண்ட து * அற்றற் பின்னுண்பதனை † அறுமள வறிந் து ‡ அவ்வளவிற்றாக உண்க, ¶ இறப்பவும் பலவாயபிறயாக்கை களிற் பிழைத் துப் பெறற்கரிய இம்மானுடயாக்கையைப் பெற்றான் ஒ அதனை நெடுங்காலங் கொண்டுசெலுத்து நெறி

அதுவாகலான், (எ-று).

இம்மை மறுமை வீடு பேறுக ளெய்தற் பாலது ஈதொன்றுமேயாக லின் 'உடம்பு பெற்றான்' என்றும், அது நெடிது நின்றுழி அவை பெருகச்செய்து கொள்ளலாமாகலின் 'நெடிதுய்க்குமாறு' என்றுங் கூறினார். பெற்றானென்று பாடமோதுவாருமுளர்.

தெளி:—(இ-ள்.) அற்றால்-(முன்னுண்டவுணவு) அற்றால், (பின்னுண்ணுமுணவை), அளவறிந்து - அறுமளவறிந்து, உண்க-(அவ்வளவினதாக) உண்ணக்கடவன், உடம்பு-(மிகவும் பலவாய வேறு சரீரங்களினின்றுந் தப் பிப் பெறுதற்கரிய விம்மானுட) உடம்பை, பெற்றான்-பெற்றவன், நெடிது- (அதனை) நெடுங்காலம், உய்க்குமாறு-கொண்டு செலுத்தும்வழி, அஃது- அதுவாம், (ஆகலால்). (எ-று).

இம்மை மறுமை வீடு பேறுகளை அடைதற் குரியது இம்மானுடவுடம்

பொன்றுமேயாகலால் 'உடம்பு பெற்றான்' என்றும், அது நெடுங்காலம்

நின்ற விடத்து அவற்றைப் பெருகச் செய்து கொள்ளலாமாகலால் 'நெடி துய்க்குமாறு' என்றும் சொல்லினார்.

---

* அற்றால்- சீரணித்தால். †

அறுபடவு-சீரணிக்குமளவு

‡ அவ்வளவிற்றாக-சீரணிக்கும் அளவினையுடையதாக.

¶ "புன்மர நெளிபுழுப் புள்வி லக்கெலும், பன்மைய துயர்செயும்
பசங்கள் தப்பியே, வன்மைகொ ணிலமிசை மக்க ளாகுதல், நன்மைகொ
ளுயிர்க்கலா லரிது நந்தியே" என்பது பிறபுலிங்கலீலை.

§ அதனை-மாணுடயாக்கையை

0 அதுவாக்கலான்-அளவறிந்துண்ணுதலாகலின். 7 அது-மாணுடயாக்கை.

¶¶ அவை-இம்மை மறுமை வீடுபேறுகள். (பேறு-பெறப்படுவது).

o பெற்றான் என்பதனைப் பெற்றால் என்று பாடங்கூறுவாரு முண்டு.

# 1016 திருக்குறள் - பொருட்பால்.

(க - து.) மாணுடயாக்கையின் பயனை யடைய விரும்புவான் உணவினை அளவறிந்துண்ணக்கடவன் என்பது.

3. If one's food has been digested let one eat with moderation; for that is the way to prolong one's embodied life.



ச. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல

## துய்க்க துவரப் பசித்து.

பரி:—(இ - ள்.) முன்னுண்டது அற்றபடியையறிந்து பின் மிகப் பசித்து உண்ணுங்கால் மாறுகொள்ளாத உணவுகளைக் * குறித்துக் கொண்டுண்க. (எ - று).

† 'அற்றதறிந்து' என்னும் பெயர்த்துரை அதனையாப்புறுத்தற் பொருட்டு. உண்டது அற்றலும் அதன் பயனுகிய ‡ இரத மறுதாகலான் ¶ அதுவுமறல் வேண்டுமென்பார் § 'துவரப்பசித்து'என்றார். O பசித்தல் வினை சுண்டி உடையான்மேனின்றது. மாறுகொள்ளாமையாவது உண்பான்பகுதியோடு மாறுகொள்ளாமையும், காலவியல்போடு மாறுகொள்ளாமையும், சுவைவீரியங்களாற் றம்முண் மாறுகொள்ளாமையுமாம். () அவையாவன: o முறையே வாத பித்த சேக்களாலுய பகுதிக் கடாதவற்றைச்செய்வனவாதலும், | பெரும்

---

* ஆராய்ந்துகொண்டுண்க. † 'அற்றலளவறிந் துண்க' என்று கூறினவர் அவ்வளவோடமையாது பின்னும் 'அற்றதறிந்து'என்று கூறியது அதனை [அற்றலளவறிந்துண்ணுதலை) உறுதி செய்தற்கென்க. 'அற்ற தறிந்து' என்னும் பெயர்த்துரை-அற்றதறிந்து என்னும் அனுவாதம். முன்னார்க் கூறியதொன்றனைப் பின்னர் ஒருநிமித்தம்பற்றிக் கூறுதல் அனுவாதமாம்.

‡ இரதம் - சாரம். ¶ அதுவும் - இரதமும்.

§ மிகப்பசித்து என்றும் பாடமுண்டு.

O பசித்து என்னும் சினை (வயிற்றின்) வினை இங்கு அப்பசியை யுடையான்மேல் (முதலின்மேல்) நின்றது.

() அவையாவன - மாறுகொள்ளுதல்களாவன.

o (1)உண்பான்பகுதியோடு மாறுகொள்ளுதல்-வாதபித்த சிலேத்துமங்களாலாகிய உடம்பிற்குப் பொருந்தாதனவற்றைச்செய்தல்; (2) காலவியல் போடு மாறுகொள்ளுதல் - பெரும்பொழுது சிறு பொழுது என்னுங் காலவேறுபாடுகளுள்ஒருகாலத்திற்காவனமற்றொருகாலத்திற்குஆகாமற்போதல்; (3) சுவை வீரியங்களால் தம்முள் மாறுகொள்ளுதல்-தேனும் நெய்யும் தம்முள் ஒத்து நஞ்சாதல் போல்வனவாம் என்பது முறையே என்பதன்அடைவாம்.

| பெரும்பொழுது - கார் (ஆவணி புரட்டாசி), கூதிர் (ஐப்பசி, கார்த்திகை), முன்பனி (மார்கழி, தை), பின்பனி (மாசி, பங்குனி), இளவேனில் (சித்திரை, வைகாசி) முதுவேனில் (ஆனி, ஆடி) என்று ஆறுபருவினை யுடையதாம்.



பொழுது † சிறுபொழுதென்னுங் கால வேறுபாடுகளுள் ஒன்றற்கா வண பிறிதொன்றற் காகாமையும், தேனு நெய்யுங் § தம்முளொத்து நஞ்சா தல் போல்வனவுமாம். ‡ அவற்றைக் குறித்துக் கொள்ளாது மணம்பட்ட வாற்றாற்றுய்ப்பின் ¶ அதனையே நோயும் மரணமும் வருதலின் 'கடைப் பிடித்து' என்றார்.

தெளி:—(இ - ள்.) அற்றதறிந்து (முன்னுண்டவுணவு) அற்றபடியை அறிந்து, துவரப் பசித்து - (பின்னே) மிகப்பசித்து, (உண்ணும்போது),

மாறல்ல-மாறு கொள்ளாத உணவுகளை,

கடைப்பிடித்து-குறித்துக்கொண்டு,

துய்க்க - உண்ணக் கடவன், (எ - று).

'அற்ற தறிந்து' என்று பின்னுஞ் சொல்லியது அதனை உறுதிசெய்தற்
பொருட்டாம். உண்டது அற்றலும் அதன் பயனிய இதம் அறுதாக
லால் அதுவும் அறல் வேண்டு மென்பார் 'துவரப்பசித்து' என்றார். பசித் தல் என்னும்வினை இங்கு அதனை யுடையவன்மேல் நின்றது. மாறுகொ
ள்ளாமையாவது உண்பவன் சரீர சுபாவத்தோடு மாறுகொள்ளாமையும், கால
வியல்போடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களால் தம்முள் மாறு
கொள்ளாமையுமாம். அவையாவன: முறையே வாத பித்த சிலேத்துமங்களா
லாகிய சரீர சுபாவத்திற்குப் பொருந்தாதனவற்றைச் செய்வனவாதலும்,
பெரும்பொழுது சிறுபொழுது என்னும் காலவேறுபாடுகளுள் ஒன்றற்கு ஆவன மற்றொன்றற்கு ஆகாமையும், தேனும் நெய்யும் தம்முள் ஒத்து நஞ்
சாதல் போல்வனவுமாம். அவற்றைக் குறித்துக்கொள்ளாது மனம் விரும்
பிய வழியால் உண்டால் அதனாலே நோயும் மரணமும் வருதலால் 'கடைப் பிடித்து' என்றார்.

(க - து.) ஒருவன்
முன்னுண்டவுணவு சீரணித்ததையறிந்து

நன்றாய்ப் பகித்தபின் மாறுபா டில்லாத
வுணவுகளை யாராய்ந்
துண்ணக்கடவன் என்பது.

4. After assuring that food has been digested one
should eat, when hungry, whatever is not disagreeable.

நி. மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு.

† சிறுபொழுது - மாலை (1 - 10 நாழிகை இரா), யாமம் (11 -20 )நாழிகை இரா), வைகுறு (21 - 30 நாழிகை இரா), காலை (1 - 10 நாழிகை பகல்) நண்பகல் (11 - 20 நாழிகை பகல்), எற்பாடு (21 - 30 நாழிகை பகல்) என்று ஆறுபகுதியினை யுடையதாம்.

§ தம்முளளவொத்து என்றும் பாடமுண்டு.

‡ அவற்றை - உணவுகளை. ¶ அதனானே - உண்டலாலே.





பரி:—(இ - ள்.) † அம்முவகை மாறுகோளு மில்லாத உணவைத் ‡ தன்னுள்ளும் வேண்டிய வளவினனன்றிப் பிணிவாரா வளவினுள்

ஒருவனுண்ணுமாயின், அவனுயிர்க்குப் பிணிகளாற் றுன்பம் விளைதலுண்டாகாது, (எ - று).

¶ உறுவதனை ஊறு என்றார்; அஃது இன்பத்திற் செல்லாதாயிற்று, இல்லை யென்பது தொடர்பாகலின். துன்பமுறுவது உயிரே யாதலின் ஆ-அ தன்மேல் வைத்துக் கூறினர். மாறுபாடில்வழியுங் குறைதல் நன்றென்ப தாம். இவை நான்கு பாட்டாலும் உண்ணப்படுவனவும், அவற்றளவும், காலமும், பயனுங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) மாறுபாடில்லாத (அம்மூவகை) மாறுகோளும்இல் லாத, உண்டி-உணவை, மறுத்து - (தன்மனம் வேண்டிய வளவை) மறு த்து, (பிணி வாராதவளவினல்), உண்ணின் (ஒருவன்) உண்ணுவானுயின், உயிர்க்கு - (அவன்) உயிர்க்கு, ஊறுபாடு - (பிணிகளால்) துன்பம் விளைதல், இல்லை - உண்டாகாது, (எ - று.)

உறுவதாகிய துன்பத்தினை ஊறு என்றார்; அவ்வூறு இன்பத்திற்செல் லாதாயிற்று,இல்லை யென்பது தொடர்பாயிருத்தலாலென்க. துன்பமுறுவது உயிரே யாதலால் ' ஊறுபா டில்லையுயிர்க்கு ' என்று அதன்மேல் வைத்துச் சொல்லினர். உணவு மாறுபாடில்லாத விடத்தும் குறைதல்நன்றென்பதாம்.
இவை நான்கு பாட்டாலும் உண்ணப்படுவளவும், அவற்றினளவும், காலமும், பயனும் சொல்லப்பட்டன.

(க - து.) மாறுபாடில்லாத வுணவை யளவறிந் துண்போனு க்கு வியாதிகளால் துன்பமுண்டாதல் இல்லை என்பது

---

† அம்மூவகை மாறுகோளாவது உணவுகள் உண்பவன் சரீரசுபாவத் தோடு மாறுகொள்ளுதல், காலவியல்போடு மாறுகொள்ளுதல், சுவை வீரி யங்களால் தம்முள் மாறுகொள்ளுதல் என்பனவாம்.

‡ தன்னுள்ளம் வேண்டிய வளவினனன்றி - தனது மனம் விரும்பிய அளவாகவுண்ணுதி.

¶ உறுவதாகிய துன்பத்தை ஊறு என்று ஆகுபெயரால் கூறினர்; [ஊறு என்பது முதனிலைத் திரிந்த தொழிற் பெயர்.] அஃது (ஊறு என் பது இங்கு) இன்பத்தில் (இன்ப மென்னும் பொருளில்) செல்லாதாயிற்று, (ஊறுபாடு) இல்லை என்பது தொடர்பாகலின் (தொடர்பா யிருத்தலால்) என்க. மாறுபாடில்லாத உண்டியை மறுத்துண்பவர்க்கு இன்பமுண்டாத லன்றித் துன்ப முண்டாதலில்லை யாதலால், இல்லை யென்பதனோடு தொட ர்ந்து நிற்கும் ஊறு என்பது (உறுவதாகிய இன்பம் எனப் பொருள் படாது) உறுவதாகிய துன்பம்எனப் பொருள்பட்டு நின்ற தென்க. ஊறு என்பது இன்பமென்னும் பொருளில் இங்குவந்தால், மாறுபாடில்லாத வுண் டியை மறுத்துண்பவர்க்கு இன்ப முண்டாதலில்லை (அஃதாவது துன்ப முண்டாதலுண்டு) என்று பொருள்பட்டு முரணுப்போமென்க.

§ அதன்மேல் - உயிரின்மேல்.

5. There will be no misery (through disease) to one's life, if one eats with moderation, food which is not disagreeable.



சு. இழிவறிந் துண்பான்க ணின்பம்போ
னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய்.

பரி:—(இ - ள்.) * அக்குறைதலே நன்றென்றறிந்து † அவ்வாறே யுண்பவன்மாட்டு இன்பம் நீங்காது நிற்கு மாறுபோல மிகப் பெரிய விரையை விழுங்குவான்மாட்டு நோய் நீங்காது நிற்கும், (எ-று)).

அவ்வாறேயுண்டல்-உண்ணலா மளவிற் சிறிது குறையவுண்டல், இன்ப மாவது வாத முதலிய மூன்றும் தத்தநிலையிற் றிரியாமையின் மல மொழி மெய்கள் அவன் வயத்த வாதலும் ‡ அதனுன் அறமுதலிய நான்கு மெய் தலுமாம். இரையை யளவின்றி யெடுத்து அதனுன் வருந்தும் விலங்கோ டொத்தலின் 'இரையான்' என்றார். ¶ விதி யெதிர்மறைகளே உவமமும் பொருளுமாக்கியது $ இரண்டானும் பெறுதற்கு.

தெளி:—(இ - ள்.) இழிவறிந்து - அக்குறைதலே (நல்லதென்று) அறிந்து, உண்பான்கண் - (அவ்வாறே) உண்பவனிடத்து, இன்பம்போல் - இன்பம் நீங்காது நிற்கும் விதம்போல, கழிபேரிரையான்கண் - மிகப்பெரிய இரையை விழுங்குவா னிடத்து, நோய் - பிணி, நிற்கும் - நீங்காது நிற் கும், (எ - று).

அவ்வாறே யுண்டல்-உண்ணலாமளவிற் சிறிது குறையவுண்டல். இன்ப மாவது வாத முதலிய மூன்றும் தமது தமது நிலையில் வேறுபடாமை

* அக்குறைதலை - மாறுபாடில்லாத விடத்தும் உணவு குறைவாதலை.

† அவ்வாறே - மாறுபாடில்லாத வுணவு குறைதலை நன்றென் றறிந்த

விதமே.

‡ அதனான் - மன மொழி மெய்கள் இழிவறிந் துண்பானது வயத்த

வாதலினால்.

¶ இழிவறிந் துண்பான்க ணின்பம் நிற்கும் என்பதுவிதி (உடம்பாடு); கழிபே ரிரையான்க ணோய் நிற்கும் என்பது எதிர்மறை. (இழிவறிந்துண் பானுக்குக் கழிபேரிரையான் எதிர்மறையாம்; இன்பத்திற்கு நோய் எதிர் மறையாம்.) இழிவறிந் துண்பான்க ணின்பம்போல் என்பது உவமம் (உவ மானம்); கழிபே ரிரையான்கணோய் நிற்கும் என்பது பொருள் (உவமே யம்).

§ இரண்டானும் பெறுதற்கு - உடம்பாட்டானும் எதிர்மறையானும் முறையே மாறுபாடில்லாத வுணவை யுண்ணலாமளவிற் சிறிது குறைய உண்டால் இன்பமுண்டாதலும், மிருகம்போ லளவுகடந்து மிகப் பெரிய இரையை விழுங்கினால் நோயுண்டாதலும் பெறுதற் கென்க.

யால் மன மொழி மெய்கள் அவன் வசத்திருப்பனே வாதலும் அதனால் அற முதலிய நான்கும் அடைதலுமாம். (அளவுகடந் துண்பவன்) இரையை அருந்து மளவின்றி எடுத்து அதனால் வருந்தும் மிருகத்தோடொத்தலால் (அவனை) 'இரையான்' என்றார். உடம்பா டெதிர்மறைகளை உவமானமும் உவமேயமு மாக்கியது இரண்டாலும் பெறுதற் கென்க.

(க - து.) மாறுபாடில்லாத வுணவை அளவறிந்து குறைவாக உண்பவனிடத்து இன்பமும், அஃதறியாது உணவை மிகுதியாக உண்பவனிடத்து நோயும் நிங்காதுநிற்கும் என்பது.

6. As pleasure dwells with one who eats moderately so disease dwells with the glutton who eats voraciously.

எ. தீயள வன்றித் தெரியான். பேரிதுண்ணி
னேயள வின்றிப் படும்.

பரி:—(இ - ள்.) தன் பதனீயும் அதற்கேற்ற வுணவும் காலமுமா ராயாது வேண்டியதோருணவை வேண்டியதோர் காலத்து வயிற்றுத் தீயளவன்றி ஒருவன் மிகவுண்ணுமாயின், அவன்மாட்டு நோய்கள் எல்லையற வளரும். (எ - று).

* தெரியாமை வினைக்குச் செயப்படு பொருள்கள் அதிகாரத்தான் வந்

தன. நோய்-சாதியொருமை. இவை இரண்டு பாட்டானும் † அவ்வகை

யுண்ணுவழிப்படு மிழுக்குக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) தெரியான் - (தன் சரீரசுபாவமும் அதற்கேற்ற
வுணவும் காலமும்) ஆராயாது, (வேண்டியதோருணவை வேண்டிய தோர்
காலத்து), நீயளவன்றி - (வயிற்றுத்) நீயளவல்லாமல், பெரிதுண்ணின் -
(ஒருவன்) மிகவுண்ணுவானுயின், (அவனிடத்து), நோய் - பிணிகள், அள
வின்றி - அளவில்லாமல், படும்-வளரும், (எ- று).

தெரியான் என்பதன் தெரியாமை வினைக்குச் செய்யப்படு பொருள்
கள் அதிகாரத்தால் வந்தன. நோய் என்பது ஈறுதோன்றுத சாதி யொரு
மைப்பெயர். இவை இரண்டு பாட்டாலும் அவ்வாறு உண்ணுதவிடத் துண்
டாகும் தவறு சொல்லப்பட்டது.

(க – து.) உணவினைச் சீரணிக்கும் அளவறியாது மிகுதியாக
உண்பவனிடத்து நோய்கள் அளவில்லாம லுண்டாகும் என்பது.

* (தெரியான் என்பதன்) தெரியாமை வினைக்குத் தன்பகுதியும் அதற் கேற்றவுணவும் காலமும் என்னும் செயப்படு பொருள்கள் (மருந்து என்னு மிந்த) அதிகாரத்தால் வந்தன.

† அவ்வகை யுண்ணுவழி - மாறுபாடில்லாத வுண்டியை மறுத்துண் ணுதவிடத்தி.



7. He will be afflicted with numerous diseases, who eats immoderately without discrimination, ignorant of the rules of health.

அ. * நோய்நாடி நோய்முத லுடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

பரி:—(இ - ள்.) மருத்துவனுயினன் ஆதுான்மாட்டுநிகழ்கின்ற நோ யை அதன் தறிகளான் இன்ன தென்று துணிந்து, பின் அது வருதற் காரணத்தை ஆராயிந்து தெளிந்து, பின் அது தீர்க்த முபாயத்தினை யறி நீந்து, அதனைச் செய்யும்வழிப் பிழையாமற் செயீக, (எ - று).

காரணம்—உணவு செயலென † முற்கூறிய விரண்டும்.

அவற்றை ஆயுள்வேத முடையார் நிதானமென்ப. ¶
அவைநாடுதற் பயன் - நோயினை யும் வாயினையும் நியமறத் தணிதல். மருந்து செய்தல், உதிரங்களைதல், அறுத்தல், சுடுதன் முதலிய செயல்களெல்லாம் அடங்குதற்கு ‘அது தணிக்கும் வாய்’ என்றார். 0 “கழுவாயுமுள” என்றார் பிறரும். பிழை
யாமை—பழைய மருத்துவர் செய்து வருகின்ற முறைமையிற் றப்பாமை.

தெளி:—(இ - ள்.) (மருத்துவனுயிலுன்)
நோய்-(நோயாளியினிடத்து நிகழ்கின்ற) நோயை, நாடி-(அதன் குறிகளால் இன்னதென்று) தணிந்து, நோய் முதல் - (பின்பு) அந்நோய்வருதற்குக் காரணத்தை, நாடி - ஆராய்ந்து தெளிந்து, அது தணிக்கும் வாய் - (பின்பு) அந்நோயைத் தீர்க்கும் உபாயத் தினை, நாடி - அறிந்து, வாய்ப்பச் செயல்—(அவ்வுபாயத்தினைச் செய்யும் வழிப்) பிழையாமற் செய்யக்கடவன், (எ - று).

காரணம் - உணவுசெயலென்று முற்கூறிய விரண்டும்.

அவற்றினை
மருத்துவ நூலார் நிதான மென்பர்.

அவற்றை நாடுதற்குப் பயன்-நோயினை

* "இங்ஙனம் இந்த யோகசாஸ்திரம் வைத்திய சாஸ்திரம் போன்று நான்கு பிரிவினை யுடைத்தா யிருக்கின்றது. எங்ஙனம் வைத்திய சாஸ்திரம் ரோகம், ரோக ஏது, ஆரோக்கியம், ஔஷதம் என்னு மிவற்றைப்பற்றிக் கூறுகின்றதோ, அங்ஙனமே யோக சாஸ்திரமும் சம்சாரம், சம்சார ஏது, மோட்சம், மோட்சவுபாயம் என்னு மிவற்றைப்பற்றிக் கூறுகின்றது" என்று சர்வதரிசன சங்கிரகம் பதஞ்சலி தரிசனத்திற் கூறுவது இங்குணர்தற்பாலதாம்.

†மூற்கூறிய - 'மிகினுங் குறையினும்' என்னுங் குறளிற் கூறிய.

‡ அவற்றை - உணவுசெயல்களை. ¶ அவை - உணவு செயல்களை.

§ முதலிய என்றமையின், பற்றிடல், கலிக்கமிடுதல், நியம் வார்த்தல் முதலியவற்றையுங் கொள்க.

0 புறநானூறு, 34. இதன் பொருள். (பாதகங்களைப்) போக்கும் வழியும் (பிராயச்சித்தமும்) உள என்பது.



(அதனைத் தீர்க்கும்) உபாயத்தினையும் ஐயமறத்துணிதல். மருந்துசெய் தல், உதிரங்களைதல், அறுத்தல், சுடுதல் முதலிய செயல்களெல்லாம் அடங்கு தற்கு 'அது தணிக்கும் வாய்' என்றார். பிழையாமை - பழையமருத்துவர் செய்து வருகின்ற முறைமையிற் றவறுமை மருத்துவன் - வைத்தியன்.

(க - து.) மருத்துவனுயிரன் வியாதியாள னிடத்து நிகழ் கின்ற நோய் முதலியவற்றை நன்காராய்ந்து மருத்துவஞ் செய்யக் கடவன் என்பது.

8. Let the physician ascertain the nature of the disease, its cause and the means for its cure and treat it according to medical rules.



கூ. உற்ற னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றுன் கருதிச் செயல்.

பரி:—(இ - ள்.) ஆயுள்வேதத்தினைக் கற்றமருத்துவன், * அவ்வுபா யத்தினைச் செய்யுங்கால் ஆதானளவினையும், அவன்க ணிகழ்கின்ற நோயி னளவினையும், தன் செயற்கேற்ற காலத்தினையும், ‡ அந்நூனெறியால் நோக்கி ¶ அவற்றோடு பொருந்தச் செய்க, (எ - று).

ஆதானளவு—பகுதி † பருவம் வேதனை வலிகளினளவு. பிணியளவு—0 சாத்தியம் அசாத்தியம் யாப்பிய மென்னுஞ் சாதி வேறுபாடும், தொடக்க நடுவீறென்னும் () அதன் பருவ வேறுபாடும், வன்மை மென்மைகளு முத லாயின. காலம் - + மேற்சொல்லியன. ‡ இம்மூன்றும் பிழையாமல் நூனெறியானும் உணர்வு மிகுதியானும் ஆராய்ந்து செய்க வென்பார் 'கற்றுன் கருதிச் செயல்' என்றார். இவை யிரண்டு பாட்டானும் | அவ்விழுக்குப்பட்டுழி மருத்துவன் நீர்க்குமாறு கூறப்பட்டது.

* அவ்வுபாயத்தினை - நோய் தீர்க்கும் உபாயத்தினை.

‡ அந்நூனெறியால் - ஆயுள் வேதத்தின் வழியால்.

¶ அவற்றோடு - உற்றுனளவு, பிணியளவு, காலம் என்பவற்றோடு.

† பருவம் - நோயாளியின் வயது.

0 சாத்தியம் - தீர்க்கத் தக்கது; அசாத்தியம் - தீர்க்கத் தகாதது; பாப்பியம் - பெரும்பான்மை தீர்க்கத் தக்கதும் சிறுபான்மை தீர்க்கத் தகாதது மெனக்கொள்ளத் தக்கது.

() அதன்பருவவேறுபாடும் - பிணியின் காலவேறுபாடும்.

+ மேற் சொல்லியன - "அற்றதிறிந்து" என்னும் குறளின் விசேட வுரையிற் சொல்லிய பெரும்பொழுது, சிறுபொழுது.

: இம்மூன்றும் - உற்றுனளவும், பிணியளவும், காலமும்.

| அவ்விழுக்குப் பட்டெழி - அளவறியாதண்டோ நோயால்வருந்தும்போது.

அங்கவியல்—ஈஉ-வது மருந்து.

**1023**

தெளி:—(இ · ள்.) கற்றான் (ஆயுள்வேதத்தினைக்)

கற்றமருத்துவன், (அவ்வுபாயத்தினைச் செய்யுங்கால்), உற்றுணளவும் - நோயாளியினளவினை யும், பிணியளவும் - (அவனிடத்து நிகழ்கின்ற) நோயினளவினையும், காலமும் (கண் செயற்கேற்ற) காலத்தினையம், கருதி-(அந்நூல் வழியால்) நோக்கி, செயல்-(அவற்றோடு பொருந்தச்) செய்யக் கடவன், (எ - று).

நோயாளியினளவு-சரீர சுபாவம் பருவம் வேதனை வலிகளினளவு.பிணி யளவு - சாத்தியம் அசாத்தியம் யாப்பியம் என்னும் சாதி வேறுபாடும், தொடக்கம் நடு ஈறு என்னும் அதன் பருவ வேறுபாடும்,வன்மை மென்மை களும் முதலாயின. காலம்-முன் சொல்லியன. இம்மூன்றும் தப்பாமல் நூல் வழியாலும். அறிவு மிகுதியாலும் ஆராய்ந்து செய்க வென்பார் 'கற்றுன் கருதிச்செயல்' என்றார். இவை இரண்டு பாட்டாலும் அவ்வீழுக்குண்டான விடத்து மருத்துவன் தீர்க்கும்வழி சொல்லப்பட்டது.

(க - து.) மருத்துவனுயினன் பிணியாளிபினளவையும் பிணிபினளவையும் காலத்தையும் மருத்துவ நூல்வழியா லாராய்ந்தறிந்து அவற்றோடுபொருந்த மருத்துவஞ் செய்யக்கடவன் என்பது.

9. Let the expert physican ascertain the condition of his patient, the nature of his disease, and the season of medication and then treat accordingly.

உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பாலுற் கூற்றே மருந்து

பரி:—(இ - ள்.) பிணிகீத மருந்தாவது அதனையு
ற்றவன் அதனைத் தீர்க்கு மருத்துவன் அவனுந்தக்
கருயிராகிய மருந்து அதனைப்பிழையா மல் இயற்றுவா
னென்று சொல்லப்பட்ட நான்கு பகுதியையுடைய
நான்குதிறத்தது, (எ - று).

† நான்கென்னு மெண் வருகின்றமையின், அது
நோக்கி அப்பால் என்றொழிந்தார். ‡ நான்கு கூற்றதென்பது
விகாரமாயிற்று. அவற்றுள்,

உற்றவன்வகை நான்காவன:—பொருளுடைமை, மருத்துவன் வழிநிற்றல், நோய்நிலையுணர்த்தல் வன்மை, மருத்துத் துன்பம் பொறுத்தலென விவை

தீர்ப்பான்வகை நான்காவன:— ¶ நோய் கண்டஞ்சாமை, ஆசிரியனை வழி பட்டோதியெய்திய கல்வியுடன்னறிவுமுடைமை, பலகாலுந்தீர்த்துவருதல், மனமொழி மெய்க ளேவாதலென விவை. மருந்தின்வகை நான்காவன:— பகுபிணிகட்கு மேற்றல், சுவை வீரியம் விளாவாற்றல்களான் மேம்படுதல், எளிதினெய்தப்படுதல், பகுதியோடுபொருந்துதலென விவை. இயற்றுவான் வகை நான்காவன: ஆதுரன்மாட்டன்புடைமை, மனமொழி மெய்க ளேவா

---

† நான்கு என்னும் எண் (நாற் கூற்றே என பின்) வருகின்றமை யின், அது (அந்நான்கை) நோக்கி (நான்கு என்று கூறவேண்டுவதை) அப் பால் என்று (சுட்டிக்கூறி) யொழிந்தார் (நீங்கினார்) என்பது.

‡ நான்குகூற்றதென்பது செய்யுள்விகாரத்தால்நாற்கூற்றுஎன்றுமியிற்று.

¶ பல பிணிநோய் காண்டற்கஞ்சாமை யென்றும் பாடமுண்டு.

தல், சொல்லியன அவ்வாறேசெய்தல் வண்மை, அறிவுடைமையெனவிவை.
இவை யெல்லாங் கூடியவழி யல்லது பிணி தீராமையின்,
இத்தொகுதியை

யும் 'மருந்து' என்றார். ஆயுள்வேத முடையாரும் † இவை ‡ கால்களாக நடக்கு மென்பது பற்றிப் பாதமென்றும், இவை மாறுபட்டவழிச் சாத்தியமும் முதிர்ந்து அசாத்தியமாமென்றுங்கூறினர். இதனால் ¶ அதனைத் தீர்த்தற்கு வேண்டுவன வெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) மருந்து - (பிணிக்கு) மருந்தாவது, உற்றவன் (அப் பிணியை). உற்றவன், தீர்ப்பான் - (அப்பிணியைத்) தீர்க்கு மருத்துவன், மருந்து - (அம்மருத்துவனுக்குச் சாதனமாகிய) மருந்து, உழைச்செல்வான்- (அம்மருந்தினைத் தப்பாமல்) செய்பவன், என்ற-சொல்லப்பட்ட, அப்பால்-நான்கு பகுதியையுடைய, நாற்கூற்று-நான்கு திறத்தது, (எ - று)

நான்கு என்னும் எண் வருகின்றமையின், அது நோக்கி அப்பால் என்று கூட்டி யொழிந்தார். நான்கு கூற்றதுஎன்பது நாற்கூற்று என்று விகாரமாயிற்று. அந்நான்கனுள், உற்றுழ் வகை நான்காவன:—பொருளுடைமை, மருத்துவன் வழி நிற்றல். நோய்நிலையை யறிவித்தல் வன்மை, மருந்தின் தன்பம்பொறுத்தல் என விவை. தீர்ப்பான் வகை நான்காவன:—நோய் கண்டஞ் சாமை, ஆசிரியனை வழிபட்டோதியடைந்த கல்வியும் நுண்ணறிவு முடைமை, பலகாலுந் தீர்த்த வருதல், மனமொழி மெய்கள் பரிசுத்தமாதல் என விவை. மருந்தின்வகைநான்காவன:—பல பிணிகளுக்கும் ஏற்றல், சுவைவீரியம் விளைவு ஆற்றல்களால் மேம்படுதல், எளிதிற் பெறப்படுதல், சரீரசுபாவத்தோடுபொருந்துதல்என விவை. இயற்றுவான் வகை நான்காவன:—நோயாளியினிடத்து அன்புடைமை, மனமொழி மெய்கள் பரிசுத்தமாதல், சொல்லியவற்றைச் சொல்லியபடியே செய்தல் வல்லமை, அறிவுடைமை என விவை. இவையெல்லாங் கூடிய விடத்தல்லது பிணி தீராமையால், இக் கூட்டத்தையும் 'மருந்து' என்றார். மருத்துவ நூலாரும் இவை கால்களாக நடக்குமென்பது பற்றிப் பாதமென்றும், இவை விரோதப் பட்ட விடத்துச் சாத்தியமும் முதிர்ந்த அசாத்தியமாகு மென்றும் சொல்லினர். இதனால் அதனைத் தீர்த்தற்கு வேண்டுவன வெல்லாம் தொகுத்துச் சொல்லப்பட்டன. என்ற என்னும் பெயரெச்சத் தகரம் செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது.

(க - து.) மருந்து பிணியாளி, அப்பிணியைத் தீர்க்கும் மருத்துவன், அம்மருத்துவனுக்குச் சாதனமான மருந்து, அம்மருந்தைத்தவறுமற் செய்பவன் என்னும் நான்கு வகையை யுடைய நான்கு திறத்ததாம் என்பது.

10. Medical science is four-fold, viz patient, physician, medicine and compounder; and each of these again consists of four subdivisions.

அங்கவியல் முற்றிற்று.

† இவை - உற்றவன்வகை, தீர்ப்பான்வகை, மருந்தின்வகை, இயற்றுவான்வகை. ‡ கால்களாக - மருந்திற்குக் கால்களாக.

¶ அதனை - அவ்விழுக்கினை (நோயை).

# ஒழிபியல்.

பரி:—இனி அவ்வாசியலினும் அங்கவியலினும் அடங்கா தொழிந்த வற்றை யியல்பு பதின்மூன் றதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி, முதற்கட் குடிமை கூறுகின்றார்.

தெளி:—இனி அவ்வாசியலிலும் அங்கவியலிலும் அடங்கா தொழிந்த வற்றி னியல்பைப் பதின்மூன் றதிகாரத்தால் சொல்லத் தொடங்கி, முதலில், குடிமை சொல்லுகின்றார்.

## முதலாவது அதிகாரம்.

## குடிமை:—Noble birth.

பரி:—அஃதாவது உயர்ந்த குடியின்கட்பிறந்தாரது தன்மை. உயர்ந்த குடிப்பிறப்பு * நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாதாகலின், அச்சிறப்புப்பற்றி † இது முன் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது உயர்ந்த குடியினிடத்துப் பிறந்தவரது தன்மை. உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் அவசியமாக வேண்டுவதாகலால்,

அச்சிறப்புப்பற்றி இது முன் வைக்கப்பட்டது.

க. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

பரி:—(இ - ள்.) செம்மையும் நாணும் சோர்வு தடிப்பிறந்தார்மாட்டல்லது பிறர்மாட்டியற்கையாக உளவாகா, (எ - று).

‡ இல்லுக்குடி யென்பன ஈண்டுயர்ந்தவற்றின் மேல. செம்மை— ¶ கருத்துஞ்சொல்லுஞ் செயலும் தம்முள் மாறுகாமை. நாண்— $ பழி பாவங்களின் மடங்குதல். () இவை இற்பிறந்தார்க்காயின் ஒருவர் கற்பிக்க

---

* நால்வகை வருணத்தார் (சாதியார்)—பிரஹ்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர். † இது-குடிமை.

‡ இல்லுக் குடி குல மென்பன ஈண்டுயர்ந்தவற்றின்மேல என்றும் பாடமுண்டு. இல், குடி, குல மென்பன இங்கு உயர்வுடையதென்னும் ஒரு பொருட் சொற்களாம்.

¶ மனம் வாக்குக் காயமென்னுந் திரிகரணங்களின் செயல்கள் தம்முள் ஒத்து நிகழுதல். அஃதாவது அவை நினைப்பதொன்று; சொல்வதொன்று; செய்வதொன்றுமாயிராமை.

$ பழிபாவங்களுக் கேதுவாய செயல்களைச் செய்வதற்கஞ்சுதல்.

() இவை-செம்மையும் நாணும்.





வேண்டாமற் ரூமேயுளவாம்; ¶ பிறர்க்காயிற் கற்பித்த வழியும் நெடிது நில்லா வென்பதாம்.

தெளி:—(இ - ள்.) செப்பமும் - செம்மையும், நாணும் - நாணமும், ஒருங்கு - ஒருசேர, இற்பிறந்தார்கண்ணல்லது - உயர்ந்த குடியிற் பிறந்தவரிடத் தல்லாமல், (பிறரிடத்து), இயல்பாக - சுபாவமாக, இல்லை - உண்டாவ தில்லை, (எ - று).

இல் என்பதும் குடி யென்பதும் இங்கு உயர்ந்தவற்றின்மேல் நின்

றன. செம்மை-கருத்தும் சொல்லும் செயலும் தம்முள் மாறுகாதிருத்தல். நாண் - பழிபாவங்களின் மடங்குதல். இவை உயர்ந்த குடியிற் பிறந்தவர்க் காயின் ஒருவர் கற்பிக்க வேண்டாமல் தாமே யுண்டாகும்; மற்றவர்க்காயின் பிறர் கற்பித்தவிடத்தும் நெடுங்காலம் நில்லா வென்பதாம்.

(க – து.) செம்மையும் நாணமும் உயர்ந்த குடியிற் பிறந்தவரிடத்தல்லது மற்றவரிடத்து இயல்பாக விருத்தலில்லை என்பது.

1. Consistency of thought, word and deed and fear of sin are conjointly natural only to men of noble birth.

உ.

ஒழுக்கமும் வாய்மையு நாணுமீம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார்.

பரி:—(இ - ள்.) உயர்ந்த குடியின்கட் பிறந்தார் தமக்குரிய * ஒழுக்கம் மெய்ம்மை நாணெனப்பட்ட இம்மூன்றன்கண்ணும் † கல்வியான் ஈன்றித் ‡ தாமாகவே வழுவார், (எ - று).

§ ஒழுக்க முதலிய மெய்ம்மொழி மனங்களின வாக்கலின், | அம்முறையவாயின. இழுக்குதல் அறியாது வருகின்றமையின் 'இழுக்கார்' என்றார்.

தெளி:—(இ - ள்.) குடிப்பிறந்தார் - உயர்ந்த குடியிற் பிறந்தவர், (தமக்குரிய), ஒழுக்கமும் - ஒழுக்கம், வாய்மையும் - மெய்ம்மை, நாணும் - நாணம்,

---

¶ பிறர்க்காயின் - தாழ்ந்த குடியிற் பிறந்தவர்க்காயின்.

* ஒழுக்கமாவது அத்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல்.

† கல்வியானன்றி - கல்வியறிவால் வழுவாதிருத்தலல்லாமல்.

‡ தாமாகவே வழுவார் - தாமியல்பாகவே தவறாது நடப்பர்.

§ ஒழுக்கம் மெய்க் (உடம்பிற்)கு உரியதென்றும், வாய்மை (மெய்ப் பேசுதல்) மொழிக் (வாக்கிற்)கு உரியதென்றும், நாண் (பழிபாவங்களின் மடங்குதல்) மனத்திற்கு உரியதென்றும் அறிக.

| அம்முறையவாயின - ஒழுக்கமும் வாய்மையு நாணும் என்று அம்முறையினவாயின.



(எனப்பட்ட),

இம்மூன்றும் - இம்மூன்றனிடத்தும், இழுக்கார் -(கல்வியா
லல்லாமல் தாமாகவே) வழுவார், (எ - று),

ஒழுக்கமுதலியன மெய்ம்மொழி
மனங்களுக்குரியனவாகலால், அம் முறையவாயின.
இழுக்குதல் (தவறிப்போதல்) தாமறியாது வருகின்றமை
யால் (குடிப்பிறந்தார்) 'இழுக்கார்' என்றார்.

(க - து). உயர்ந்த குடியிற்பிறந்தவர் தமக்குரிய ஒழுக்கம், வாய்மை, நாணம் என்னும் இம்மூன்றனிடத்தும் வழுவாதொழுகுவர் என்பது.

2. Men of noble birth will never deviate from good manners, truthfulness and modesty.

ஈ. நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.

பரி:—(இ - ள்.) எக்காலத்துந் திரிபில்லாத குடியின்கட் பிறந்தாரீகை வறியார் சென்றவழி முகமலர்ச்சியும், உள்ளன கொடுத்தலும், இன்சொற் சொல்லுதலும், இகழாமையுமாகிய இந்நான்கும் உரிய

கூறென்று சொல்லுவர் நூலோர், (எ-று)).

பொய்ம்மை திரிபுடைமையிற் றிரிபின்மையை 'வாய்மை' என்றும், * "இல்லாரை யெல்லாரு மெள்ளுவர்" ஆகலின் இகழாமையை † அவர் கூருக்கியுங் கூறினர். ‡ குடி—ஆகுபெயர், ¶ நான்கின்வகையென்பது பாடமாயின், வாய்மைக் குடிப்பிறந்தார்க்குப் பிறரின் வேறுபாடு இந்நான்காலுளதாமென்றுரைக்க. இவை மூன்றுபாட்டானுங் குடிப்பிறந்தார் தியல்பு கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) வாய்மை-(எக்காலத்தும்) வேறுபடாத, குடிக்கு-குடியிற் பிறந்தவர்க்கு, (வறியவரீ சென்றவிடத்து), நகை - முகமலர்ச்சியும், ஈகை (உள்ளவற்றைக்) கொடுத்தலும், இன்சொல் - இன்சொற் சொல்லுதலும், இகழாமை-இகழாமையும், (ஆகிய), நான்கும்-இந்நான்கும், வகை-(உரிய) வகையாகும், என்ப-என்று சொல்லுவர், (நூலோர்), (எ-று).

---

* திருக்குறள்-பொருள்செயல்வகை - 2. இதன்பொருள். (எல்லா நன்மையுமுடையவராயினும்) பொருளில்லாதவரை யாவரும் இகழ்வர் என்பது.

† அவர் கூருக்கியும் - குடியின்கட்பிறந்தாரது பகுதியாக்கியும்.

‡ குடியென்னும் இடப்பெயர் குடியிற் பிறந்தவரை யுணர்த்துதலால், இடவாகு பெயராம்.

¶ நான்கும் வகை என்பதற்குப் பிரதியாக நான்கின் வகை என்பது பாடமாஞல், அதற்கு வாய்மையுடைய குடியிற்பிறந்தவர்க்கு மற்றவரிலும் வேறுபாடு 'நகையீகை யின்சொல் இகழாமை' என்னு மிந்நான்கா லுண்டாகும் என்று பொருளுரைத்துக்கொள்க.



பொய்ம்மை வேறுபடுநலுடைமையால் வேறுபடாமையை 'வாய்மை'

என்றும், பொருளில்லாதவரை எல்லாரும் இகழ்வாராகலால் இகழாமையை

அவர் கூறுக்கியும் சொல்லினர். குடி-இடவாகுபெயர். இவை மூன்று

பாட்டாலும் குடிப்பிறந்தாரது இயல்பு சொல்லப்பட்டது.

(க - து) உயர்ந்த குடியிற் பிறந்தார்க்கு நகை, ஈகை, இன் சொல், இகழாமை என்னும் இந்நான்கும் உரிமையாயிருக்கும்.

3. A cheerful countenance, liberality, pleasant words,

and an unrevilling disposition (at the approach of the poor), are said to be the proper qualities of men of truly noble birth.

ச. அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர்.

பரி:—(இ - ள்.) பலவாக வடுக்கிய கோடி யளவிற்றய பொரு
ளைப் பெற்றாயினும், உயர்ந்த குடியின்கட் பிறந்தார் தம் மொழுக்
கங் குன்றுந் தொழில்களைச் செய்யார், (எ-று).

அடுக்கிய † கோடியென்பது ஈண் டெண்ணப்படும் பொருண்மேனின்
றது. குன்றுந் தொழில்கள் - குன்றுதற் கேதுவாய தொழில்கள்.

தெளி:—(இ - ள்.) அடுக்கிய - (பலவாக) அடுக்கிய, கோடி - கோடி
யளவின தாகிய பொருளை, பெறினும் - பெற்றாலுலும், குடிப் பிறந்தார்-
உயர்ந்த குடியில் பிறந்தவர், குன்றுவ - (தம்மொழுக்கங்) குன்றுந் தொழில்
களை, செய்தலிலர் - செய்யார், (எ - று).

அடுக்கிய கோடியென்பது இங்கு எண்ணப்படும்

பொருளின்மேல்நின்

றது. குன்றுந் தொழில்கள் - குன்றுவதற்குக் காரணமாகிய தொழில்கள்.

(க - து.) உயர்ந்த குடியிற் பிறந்தவர் அளவிறந்த பொருள்களைப் பெற்றாராயினும், தம்மொழுக்கங் குன்றுவதற்குக் காரணமாகிய தொழில்களைச் செய்யார் என்பது.

4. Though possessing immense wealth, men of noble birth will never do any thing unbecoming.

இ. ‡ வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.

† கோடி யென்னும் எண்ணலளவைப் பெயர் அவ்வளவினதாகிய பொருளை யுணர்த்துதலால், எண்ணலளவையாகு பெயராம்.

‡ "உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணும், குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றார்" என்பது நாலடியார்.

## ஒழிபியல்—க-வது குடிமை.

**1029**

பரி:—(இ - ள்.) தொன்று தொட்டு வருகின்ற குடியினிடத் பிறந்தார் தாங்கொடுக்கும் பொருள் பண்டையிற் சுருங்கிய விடத்தும் தம் பண்புடைமையின் நீங்கார், (எ - று).

தொன்று தொட்டு வருதல் - சேர சோழ பாண்டிய ரென்னுற் போலப்

* படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல். † அவர்க்கு நல்குரவா

வது வழங்குவது உள் வீழ்வதாகலின், ‡ அதனையே கூறினர்.

தெளி:—.(இ - ள்.) பழங்குடி-தொன்று தொட்டு வருகின்ற குடியில்

பிறந்தவர், வழங்குவது - (தாம்) கொடுக்கும் பொருள், உள் வீழ்ந்தக் கண்ணும் - முன்னை யளவில் சுருங்கிய விடத்தும், பண்பின் - (தமது) குண முடைமையி னின்றும், தலைப்பிரிதலின்று - நீங்கார், (எ - று).

தொன்று தொட்டு வருதல் -சேர சோழ பாண்டிய ரென்னுற் போலப்

படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல். அவர்க்கு வறுமையா

வது தாம் கொடுக்கும் பொருள் முன்னையளவில் சுருங்குவதாகலால், அத

னையே சொல்லினர்.

(க - து.) பழங்குடியிற்

பிறந்தவர் தாம் பிறர்க்குக் கொடுக்

கும் பொருள் முன்னையளவிற் சுருங்கிய

விடத்தும், தமது குண
முடைமையி னின்றும் நீங்கார் என்பது.

5. Men born in ancient families will not lose their
character for liberality,
though their resources fall off.

சுஈ சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்.

பரி:—(இ-ள்.) வசையற்று வருகின்ற ¶ நங் குடிமரபிலே டொத்து

வாழக்கடவே மென்று கருதி ‖ அவ்வாறு வாழ்வார், வறுமையுற்றவழியும், வஞ்சனையைப் பொருந்தி, அமைவிலவாய தொழில்களைச் செய்யார், (எ-று).

அமைவின்மை—அம்மரபிற் கேலாமை. இவை மூன்று பாட்டானும்

| அவர் வறுமையுற்ற வழியும் ‖ அவ்வியல்பின் வேறுபடாரென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) மாசற்ற - வசையற்று வருகின்ற, குலம்பற்றி - (நமது) குடிமரபிலேடொத்து, வாழ்துமென்பார்-வாழக்கடவோ மென்று

* படைப்புக் காலம்-பரமேசுவர னுலகைப் படைத்த காலம்.
† அவர்க்கு-பழங்குடியிற் பிறந்தவர்க்கு.
‡ அதனையே - வழங்குவது உள்வீழ்வதையே.
¶ தங்குடிமாபிலே டொத்து என்றும் பாடமுண்டு.
§ அவ்வாறு - அக்கருதிய வண்ணம்.
| அவர் - குடிப்பிறந்தார். || அவ்வியல்பின் - தம்குடிமரபினின்றும்.



நினைத்து அவ்வாறு வாழ்பவர், (வறுமை யுற்றவிடத்தும்), சலம்பற்றி - வஞ்சனையைப் பொருந்தி, சால்பில-அமைவில்லாதனவாகிய தொழில்களை, செய்யார் - செய்ய மாட்டார், (எ-று).

அமைவில்லாமை-தங்குடி மரபினுக்குப் பொருந்தாமை. இவை மூன்று பாட்டாலும் அவர் வறுமையுற்றவிடத்தும் அவ்வியல்பின் வேறுபடாரென்பது சொல்லப்பட்டது.

வசை - பழி.

(க-து.) மாசற்ற குடியிற்பிறந்து, தாம் பிறந்த குடிமரபிற் கேற்றவாறொழுகுபவர் வறுமையுற்றவிடத்தும், வஞ்சனையுடைய வாய் அமைவில்லாதனவாகிய தொழில்களைச் செய்யார் என்பது.

6. Men who seek to preserve the irreproachable honor of their families will not viciously do what is detrimental thereto.

எ. * குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம்
விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.

பரி:—(இ - ள்.) உயர்ந்த குடியின்கட் பிறந்தார்மாட் டோன்றுங் குற்றம், தான் சிறிதேயாயினும் விசும்பின்கண் மதியிடத்து மறுப்போல ஓங்கித் தோன்றும், (எ - று).

† உயர்குடி முதலிய பொருள்வகை மூன்றற்கும் விசும்பு முதலிய உவமைவகை யொத்துப் பான் மாறுபட்டது. குடிய துயர்ச்சியானும், மதி போன்ற அவர் நற்குணங்களோடு மாறுதலானும், உலகெங்கும் பரந்து வெளிப்படு மென்பதாம்.

தெளி:—(இ - ள்.) குடிப்பிறந்தார்கண் - உயர்ந்த குடியிற் பிறந்தவரிடத்து, (உண்டாகும்), குற்றம் - குற்றமானது,(தான் சிறிதேயாயினும்), விசும்பில் - ஆகாயத்தில், மதிக்கண் - சந்திரனிடத்து, மறுப்போல்-களங்கம் போல, உயர்ந்து-ஓங்கி, விளங்கும் - தோன்றும், (எ - று).

உயர்ந்தகுடி, அதிற்பிறந்தார், அவரிடத்துள்ள குற்றமென்னு மூவமேய வகை மூன்றற்கும் விசும்பு, அதன்கணுள்ள மதி, அம்மதியினிடத்துள்ள

* "அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்,
திங்களுஞ் சான்றோரு

மொப்பர்மற் - றிங்கள், மறுவாற்றுஞ் சான்றே ரஃதாற்றூர் தெருமந்து, தேய்வ ரொருமா சுறின்" என்பது காலடியார்.

† உயர்குடி, அதிற் பிறந்தார், அவரிடத்துள்ள குற்றம் என்னும் பொருள் (உவமேய) வகை மூன்றற்கும் (முறையே) விசும்பு, அதிலுள்ளமதி, அதனிடத்துள்ள மறு என்னும் உவமை (உவமான) வகையொத்து, மதியென்னும் ஒருமைப்பா லுவமானத்திற்குக் குடிப்பிறந்தார் என்னும் பன்மைப்பா லுவமேயம் மாறுபட்டு நின்றது. "மிகுதலுங் குறைதலுந் தாழ்தலு முயர்தலும், பான்மாறு படுதலும் பாகுபா டெடைய" என்று தண்டியலங்காரங் கூறுவதிங் குணர்தற்பாலதாம்.

## ஒழிபியல்—க-வது குடிமை.

**1031**

மறு என்னும் உவமானவகை யொத்துப் பால் மாறுபட்டது. குடியினது உயர்ச்சியினாலும் சந்திரன் போன்ற அவர் நற்குணங்களோடு மாறுதலாலும் அக்குற்றமானது உலகெங்கும்பரந்து வெளிப்படுமென்பதாம்.

மதியினது நற்குணங்கள் இருளை யொழித்தல் உலகையை விளைத்தல் முதலியனவாம்; குடிப்பிறந்தாரது நற்குணக்கள் அறியாமையை நீக்குதல், உலகையை விளைத்தல்

முதலியனவாம்.

(க - து.) குடிப்பிறந்காரிடத் துண்டாகும் குற்றம் சிறிதேயாயினும், சந்திரனிடத்துள்ள களங்கம் போன்று தான்
ஓங்கி
விளங்கும் என்பது.

7. The defects of men of noble birth will be observed as clearly as the dark spots in the moon.

அ.

நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும்.

பரி:—(இ - ள்.) குலநல முடையனாய் வருகின்றவன்க ண்ணே ஈர மின்மை யுளதாமாயின், அவனை அக்குலப்பிறப்பின்கண்ணே ஐயப் படும் உலகம், (எ-று).

* நலமும் குலமும் ஆகுபெயர். † நாரின்மையாற் கொடாமையுங் கடுஞ்சொல்லு முதலிய பெற்றாம். தோன்றினென்பது தோன்றாமை விளக்கிநின்றது. நலனுடையனாய் வருதலினிடையே ‡ இவை தோன்ற லின், ¶ உள்ளது ஐயமாயிற்று. $ உலகமென்பது அவாய் நிலையான் வந்தது. ஐயப்படலென்பது பாடமாயின், ⋮ ஐயப்படுகவென விதியாக்கி யுரைக்க. இவை

யிரண்டுபோட்டானும் | வேறுபட்டவழிப்படு மிழுக்குக் கூறப்பட்டது

தெளி:—(இ - ள்.) நலத்தின்கண்-(குல) நலமுடையவனுய் வருகின்ற வனிடத்தே, நாரின்மை-அன்பில்லாமை, தோன்றின்-உளதாமாயின், (உலகம்), அவனே—, குலத்தின்கண்-அக்குலப் பிறப்பிடத்தே ஐயப்படும் - சந்தேகப்படும், (எ-று).

---

* நலம் என்னும் பண்புப்பெயர் நலமுடையவனை யுணர்த்துதலால், பண்பாகுபெயராம்; குலம் என்னும் இடப்பெயர் குலத்திற்றோன்றிய பிறப்பினையுணர்த்துதலால், இடவாகுபெயராம்.

† அன்பில்லாதவனிடத்து இன்முகமும் ஈகையும் இன்சொல்லும் இகழாமையும் நாவென்பதாம்.

‡ இவை-கொடாமை, கடுஞ்சொல் முதலியன.

¶ உள்ளது-குலப்பிறப்பிருத்தல்.

§ ஐயப்படும் என்பது உலகம் என்பதையவாவி (வேண்டி) நின்றது.

: ஐயப்படும் என்பதற்குப் பிரதியாக ஐயப்படல்என்பது பாடமாயின், அதற்கு ஐயப்படுக என்று உடன்பாட்டு வியங்கோள்வினைமுற்றாக்கிச் சொல்லிக்கொள்க. ஐயப்படல் என்பது அல்லீற்று வியங்கோள்வினைமுற்று.

| வேறுபட்டவழி-உயர்குடிப்பிறப்பினின்றும் வேறுபட்டவிடத்து.



நலம் - பண்பாகுபெயர்; குலம் - இடவாகுபெயர். நாரின்மையால் கொடாமையும் கடுஞ்சொல்லும் முதலியன பெறப்பட்டன. தோன்றினென்பது நாரின்மை தோன்றுமையை விளக்கி நின்றது. நலமுடையவனுய் வருதலினாலே இவை தோன்றலால், உள்ளது ஐயமாயிற்று. உலகமென்பது அவாய்நிலையால் வந்தது. இவை இரண்டுபோட்டாலும் வேறுபட்ட

வீடத்துண்டாகும் இழுக்குச் சொல்லப்பட்டது

(க-து.) குலகுலமுடையவனிடத்து அன்பில்லாமை யுண்டாமாயின், அவனது குலப்பிறப்பிலே உயர்ந்தோர்க்கு ஐயமுண்டாகும் என்பது.

8. If a man of good family betrays want of affection, his discent will be questionable.

---

கூ. நிலத்திற் கிடந்தமை காற்காட்டுங் காட்டுங்
* குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

பரி:—(இ - ள்.) நிலத்தினியல்பை அதன்கண் முளைத்த முளைகாட்டும்; அதுபோலக் குலத்தினியல்பை அதன்கட் பிறந்தார்வாயிற்சொற் காட்டும், (எ-று).

கிடந்தமை-உள்ளபடி. ‡ முளைத்தமாத்திரத்தானே நன்மையுந் தீமையுந் தெரிதலின், † இலைமுதலிய கூறுராயினும்; ஆகவே, ¶ பொருளினுஞ் செயன் | முதலியன வேண்டாவாயின. குலத்தியல் பறிதற் ‖ கருவி கூறுகார்போன்று, இன்சொல் வேண்டுமென்றவாறாயிற்று.

தெளி:—(இ - ள்.) நிலத்திற்கிடந்தமை - நிலத்தினியல்பை, கால்-(அந்நிலத்தினிடத்து முளைத்த) முளையானது, காட்டும்-காட்டாநிற்கும், (அதுபோலக் குலத்தினியல்பை), குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்-அக்குலத்திற்பிறந்தாரதுவாயிலுண்டாகுஞ் சொல், காட்டும்-காட்டாநிற்கும், (எ-று).

---

* "வடுப்பட வைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார், கூறுர்தம் வாயிற் சிதைத்து" என்று நாலடியார்மேன்மக்களிற்கூறுவது மிங்ஙனோர்த்தற்பாலதாம்.

‡ முளையைப்பார்த்து அது முளைத்த நிலத்தினியல்பை யறிவதுபோல

ஒருவாது சொல்லுக்கேட்டு அவர்பிறந்த குலத்தினியல்பை யறியலாமென் பதாம்.

† இலேமுதலியன காட்டுமென அவற்றைக் கூறுதவிட்டார்.

¶ உவமேயமான குலத்திற் பிறந்தாரிடத்தும் அவர்கூறும் சொல்மாத் திரத்தாலே அவர் குலத்தினது நன்மையும் தீமையும் தெரிதலால், (குலத் தியல்பை யறிதற்கு அவரது) செயல் முதலியன வேண்டாவாயினஎன்பது.

| முதலியன என்றமையின், குணம், இனம் முதலியவற்றையுங் கொள்க.

‖ கருவி-சாதனமாகிய சொல்.

## ஒழிபியல்—க-வது குடிமை.

## 1033

கிடந்தமை - உள்ளகுணம். முளை முளைத்தமாத்திரத்தாலே நிலத்தின் நன்மையும் தீமையும் தெரிதலால், இலைமுதலியவற்றைச் சொல்லா ராயினர்; ஆகவே, உவமேயமான குலத்திற்பிறந்தாரிடத்தும் செயல்முதலியன வே ண்டாவாயின. குலத்தியல் பறிதற்குச் சாதனம் சொல்லுவார்போன்று, இன்சொல்வேண்டு மென்றபடியாயிற்று.

(க-து.) ஒருகுலத்தி னியல்பை அக்குலத்திற் பிறந்தாரது வாய்ச்சொல் தெரிவிக்கும் என்பது.

9. As the sprout indicates the nature of the soil, so the speech of men of noble birth indicates that of their birth.

கo நலம்வேண்டி னுணுடைமை
வேண்டுக யார்க்கும் பணிவு.

வேண்டுங் குலம்வேண்
[டின்

பரி:—(இ - ள்.) ஒருவன் தனக்கு நலனுடைமையை வேண்டுவ தின், தானுணுடையனுதலை வேண்டுக; குலனுடைமையை வேண்டுவ னாயின், பணியப்படுவார் யாவர்மாட்டும் பணிதலை வேண்டுக, (எ-று).

நலம்—புகழ், புண்ணியங்கள். † வேண்டு மென்பது விதிப் பொருட் டாய் நின்றது; ‡ "வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்" என்புழிப் போல. ¶ அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்மூன்றோர் தந்தைதா யென்றிவரெல்லாரு மடங்க'யார்க்கும்'என்றார். பணிவு - § இருக்கை யெழ

---

† "நன்னூல் விருத்தி யுரைகாரர் "வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன" என்னுஞ் சூத்திரத்தின் விசேடவுரையில் (வேண்டும், தகும், படும் என்னும்) "இம்மூன்றும் ஒருபொருட் கிளவியாய்த் தொழிற் பெயராய்த்

தேற்றப் பொருள் பட்டே நிற்குமென்க. இங்ஙனம் வருஞ் செய்யுட்கெல்லாம், நச்சினார்க்கினியர் சேனாவரையர் பரிமேலழகர்உரையாசிரியர் முதலாயினோர் முற்றும் எச்சமாயும்" பொருளுரைக்கின் வழுவாமென்று கருதி வியங்கோட் பொருட்டென்றும், விதிப்பொருட்டென்றும், ததுதிப் பொருட்டென்றும், வேண்டுபவென்றும் தமக்கு வேண்டியவாறே பொருளெழுதிச் சொற்குணம் வாளா போயினர்" என்று குறை கூறுகின்றனர்.

‡ தொல்காப்பியம் - இளவியாக்கம் - 33 இதன் பொருள். முடிக்குஞ் சொல்லோடுபடுந் தொகுதிக்கண் உம்மை கொடுத்துச் சொல்லுக என்பது.

¶ "அந்தணர் சான்றோ ருருத்தவத் தோர் தம்முன்னோர், தந்தைதா யென்றிவர்க்குத் தார்வேந்தே - முந்தை, வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி, மொழிநின்று கேட்டன் முறை' என்பது புறப்பொருள் வெண்பாமாலை.

§ 'இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை, விடுப்ப வொழிதலோ டின்ன குடிப்பிறந்தார், குன்ற வொழுக்காக் கொண்டார் கயவரோ, டொன்ற வுணராற்பாற் றன்று' என்பது நாலடியார்.





லும் எதிர்செலவும் முதலாயின. இவை யிரண்டு பாட்டானும் குடிமைக்கு வேண்டுவன கூறப்பட்டன.

தேளி — (இ - ள்.) (ஒருவன் தனக்கு) நலம் வேண்டின் - நலமுடைமையை வேண்டுவானுயின், நாணுடைமை - (தான்) நாணமுடையவனுதலை, வேண்டும் - வேண்டக்கடவன், குலம் வேண்டின் - குலமுடைமையை வேண்டுவானுயின், யார்க்கும் - (வணங்கப்படுவார்) யாவரிடத்தும், பணிவு - வணங்குதலை, வேண்டுக - வேண்டக் கடவன், (எ - று).

நலம் - புகழ், புண்ணியங்கள். வேண்டும் என்பது விதிப் பொருளில் வந்த உம் ஈற்று வியங்கோள் வினைமுற்று. அந்தணர் சான்றோர் அருந்தவத் தோர் தம் முன்னோர் தந்தை தாய் என்ற இவரெல்லாரும் அடங்க 'யார்க் கும்' என்றார். பணிவு - இருக்கை யெழுதலும் எதிர் செல்லுதலும் முதலா யின. இவை இரண்டு பாட்டாலும் குடிப்பிறந்தார்க்கு வேண்டுவன சொல் லப்பட்டன.

(க - து.) ஒருவன் தனக்கு நலமுண்டாமையை விரும்புவானு யின் நாணத்தையும், குலமுண்டாமையை விரும்புவானுயின் வணங் கத்தக்கவரை வணங்குதலையும், விரும்பக்கடவன் என்பது.

10. He who desires a good name must desire modesty,
and he who desires the continuity of family greatness must
be submissive to all.

இரண்டாவது அதிகாரம்.

## மானம்:—*Honor.*

பரி:—இனிக் குடிப்பிறந்தார்க் குரியவாய குணங்கள்கூறுவான்றெடங்கி, முதற்கண் மானங் கூறுகின்றார். அஃதாவது எஞ்ஞான்றுந் தந்நிலையிற் றழாமையும், தெய்வத்தாற் றுற்வுலந்துழி உயிர்வாழாமையுமாம். †

இஃது அகீதுடிப்பிறப்பினை நிறுத்துதலுடைமையின், அச்சிறப்புப் பற்றி முன்வைக்கப்பட்டது.

தெளி:—இனிக் குடிப்பிறந்தவர்க்கு உரியனவாகியகுணங்களைச்சொல்லத் தொடங்கி, முதலில் மானம் சொல்லுகின்றார். அஃதாவது அவர் எந்நாளுந்தமதுநிலையினின்றுந் தாழாமையும், ஊழால் தாழ்வு வந்தவிடத்து உயிர்

*வாழாமையுமாம். இஃது அக்குடிப் பிறப்பினை (அழியாது) நிலைபெறச் செய்தலுடைமையால், அச்சிறப்புப் பற்றி முன் வைக்கப்பட்டது.

---

† இஃது-மானம்.

க. ‡ இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்.

பரி:—(இ - ன்.) செயியாதவழித் † தாம் அமையாத சிறப்பினை
யுடையவே யெனினும், தங்குடிப் பிறப்புத் தாழவருஞ் செயல்களை
யொழிக, (எ - று).

அமையாமை—இறத்தல். ¶ குடிப்பிறப்பென்பது அதிகார முறைமை
யான்வந்தது. § இறப்பவரும்வழி இளிவந்தன செய்தாயினும்உய்கவென்னும் வடநூன்முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையுந் தூக்கி * அவை செய்யற்க வென்பதாம்.

தெளி:—(இ - ள்.) இன்றியமையா - செய்யாத விடத்துத் தாம்அமை யாத, சிறப்பினவாயினும் - சிறப்பினை யுடையனவே யெனினும், குன்ற (தங்குடிப்பிறப்பானது) தாழ, வருப - வருஞ்செயல்களை, விடல் - விடக் கடவர்; (எ - று),

அமையாமை - இறத்தல். குடிப்பிறப்பென்பது

அதிகாரமுறைமையால்

வந்தது தாம் இறக்கவருமிடத்து இழிவுதருஞ்செயல்களைச் செய்தாயினும் பிழைக்கக்கடவரென்னும் வடநூலின் முறைமையை மறுத்து, உடம்பினது நிலையில்லாமையையும் மானத்தினது நிலையுடைமையையும் ஆராய்ந்து அவற்றைச் செய்யவேண்டுமென்பதாம்.

(க-து.) தங்குடிப்பிறப்புத் தாழவருஞ் செயல்களால் இன்றியமையாதசிறப்பு வருவதாயிருப்பினும், அவற்றைவிடல்வேண்டும்.

---

‡ "கடமா தொலைச்சிய காணுறை வேங்கை, இடம்வீழ்ந்த தண்ணு திறக்கும்—இடமுடைய, வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர், மான மழுங்க வரின்" என்பது நாலடியார்.

† தாம் அமையாத – தாமுயிரோடிருத்தற் கியலாத.

¶ குடிமைக்குப் பின்னர் மானமுள்ளமையின், அவ்வதிகார முறைமை

பற்றிக் குடிப்பிறப்பென்பது வருவிக்கப்பட்டது. இவ்வதிகாரத்தின் அவதாரிகையில் "இனிக் குடிப்பிறந்தார்க் குரியவாய குணங்கள் கூறுவான் மு

டங்கி, முதற்கண் மானங் கூறுகின்றார்" என்று கூறி யிருத்தலு மிங்குண

தற்பாலதாம்.

$ மனுதருமசாஸ்திரம் - பத்தாவது அத்தியாயம் - 81-வது சுலோக முதல் 180-வது சுலோகம்வரை "இறப்பவரும்வழி இளிவந்தன செய்தாயி னும் உய்க" என்பதுபற்றி விரிவாய்க் கூறுகின்றது. விருப்ப முடை யோர் அண்டுக்காண்க.

* அவை - தங்குடிப்பிறப்புத்தாழவருஞ் செயல்களை.



1. Actions that would degrade the dignity of one's family should not be done, though they may be so important that not doing them would end in destruction.

உ. சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

பரி:—(இ - ள்.) புகழ் செயியுமிடத்துந் தங்குடிமைக் கோவ்வாத இழிவரவுகளைச் செயியார், புகழுடனே மானத்தை நிறுத்துதலே விரும்புவார், (எ-று).

எவ்விடத்தும் நிலைகுலையாத தின்மையான் உளதாதல்பற்றிப் 'பேராண்மை' எனப்பட்டது. நிலையுடைய புகழின்பொருட்டாகவுஞ் செய்யா ரென்பதாம்.

தெளி:—(இ - ள்.) சீரொடு - புகழுடனே, பேராண்மை - மானத்தை, (நிறுத்துதலே), வேண்டுபவர்-விரும்புவார், சீரினும் - புகழைச் சம்பாதிக்குமிடத்தும், சீரல்ல - (தங்குடிப்பிறப்பிற்கு ஒவ்வாத) இழிதொழில்களை, செய்யார்-செய்யமாட்டார், (எ - று).

எவ்விடத்தும் நிலைகுலையாத வலிமையால் உளதாதல்பற்றி மானம் 'பேராண்மை' என்றுகூறப்பட்டது. (குடிப்பிறந்தார்) நிலையுடைய புகழின் பொருட்டாகவும் சீரல்லவற்றைச் செய்யாரென்பதாம்.

(க - து.) புகழுடனே மானத்தை நிறுத்துதலே விரும்புவார் தங்குடிப்பிறப்பிற் கொவ்வாத இழிதொழில்களைச் செய்யார்.

2. Those who desire to maintain their honor with credit, will surely do nothing ignoble even for the sake of fame.

ங. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு.

பரி:—(இ - ள்.) குடிப்பிறந்தார்க்கு நிறைந்த செல்வமுளதாயவழி யாவரிடத்தும் பணிவு வேண்டும்; குறைந்த நல்தாவுளதாயவழிப் பணியாமை வேண்டும், (எ - று).

பணியாமை - தாழ்வுவாராமற் பழையவுயர்ச்சிக்கண்ணே நிற்றல். செல்வக்காலே †அஃதுயர்ச்சி செய்யத் தாம் தாழ்தலும், அல்லற்காலே ‡ அது தாழ்வு செய்யத் தாமுயர்தலும் வேண்டுமென்பதாம். இவை மூன்று பாட்டானும் தாந்தாழ்தற்கேதுவாயின செய்யாமைச்சிறப்புக் கூறப்பட்டது.

† அஃது - செல்வம். ‡ அது - அல்லல் (வறுமை).



தெளி:—(இ - ள்.) (குடிப்பிறந்தவர்க்கு) பெருக்கத்து - நிறைந்தசெல்வம் உளதாயவிடத்து, பணிதல் - (யாவரிடத்தும்) வணங்குதல், வேண்டும்—, சிறிய - குறைந்த, சுருக்கத்து - வறுமை யுளதாயவிடத்து, உயர்வு - வணங்காமை, வேண்டும்—, (எ-று).

வணங்காமை-தாழ்வு வாராமல் பழையவுயர்ச்சியிலே நிற்றல். செல்வ முடையபோது அஃது உயர்ச்சி செய்தலினால் தாம் தாழ்தலும், வறுமை யுடையபோது அது தாழ்வு செய்தலினால் தாம் உயர்தலும் வேண்டுமென்ப தாம். இவை மூன்று பாட்டானும் குடிப்பிறந்தார் தாம் தாழ்தற்குக் காரண மாயவற்றைச் செய்யாமையின் சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) குடிப்பிறந்தார்க்குச் செல்வமுண்டாகிய காலத்து யாவரிடத்தும் பணிதலும் வறுமையுண்டாகிய காலத்துப் பணியாமையும் வேண்டும் என்பது.

3. (To men of noble birth) humility is becoming in great prosperity; dignity, in great adversity.

## ச. † தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர் நிலையி னிழிந்தக் கடை.

பரி:—(இ - ள்.) குடிப்பிறந்த மாந்தர், தம்முயர்ந்த நிலையைவிட்டு அதனினின்றுந் தாழ்ந்தவழித் தலையைவிட்டு அதனினின்றும் வீழ்ந்த மயிரினை யொப்பர், (எ - று).

‡ அந்நிலையை விடாது நின்றவழிப் பேணப்படுதலும், விட்டுத் தாழ்ந்தவழி இழிக்கப்படுதலும், உவமையாற் பெற்றாம்.

தெளி:—(இ-ள்.) மாந்தர் - (குடியிற்பிறந்த) மனிதர், நிலையின்-(தம்மு யர்ந்த நிலையை விட்டு அந்) நிலையினின்றும், இழிந்தக்கடை-தாழ்ந்தவிடத்து, தலையினிழிந்த - (தலையை விட்டு அத்) தலையினின்றும் வீழ்ந்த, மயிரனை யர் - மயிரினை யொப்பர், (எ - று).

(குடிப்பிறந்தார்) அந்நிலையை விடாமல் நின்றவிடத்துப் பிறரால் மதிக் கப்படுதலும், அதனை விட்டுத்தாழ்ந்தவிடத்து அவமதிக்கப்படுதலும் 'தலையி னிழிந்த மயிரனையர்' என்னும் உவமானத்தாற் பெற்றாம்.

(க - து.) தமது நிலையினின்றுந் தவறிய குடிப்பிறந்தவர் ஒருபொருளாக மதிக்கப்படாதவராவர் என்பது.

---

† "தலைமயிருங் கூருகிரும் பெண்பல்லும் தத்த, நிலையுடைமை யான" விட நிற்கு - நிலைதவறுத், தானதனிற் பூச்சியமே சாரு நிலைதவறுந், தானதனிற் பூச்சியமே தான்" என்பது நீதிவெண்பா.

‡ அந்நிலையை-தமது உயர்ந்த நிலையை.

4. Those (of noble birth) who have fallen from their exalted position are likened to the hair which has fallen from the head.

ரு. குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்.

பரி:—(இ - ள்.) குடிப்பிறப்பான் மலைபோல வுயர்ந்தோருந் தாழ்தற் கேதுவாகிய செயல்களை ஒருகுன்றி யளவாயினுஞ் செய்வராயிற் றாழ்வர். (எ - று).

குன்றியனையவுமென்னும் இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தாழ்தற்கேதுவாய செயல்களாவன:-இளிவந்தன. † சொற்பின் வருநிலை.

தெளி:—(இ - ள்) குன்றினனையாரும் - (குடிப்பிறப்பால்) மலைபோல வுயர்ந்தவரும், குன்றுவ - தாழ்தற்குக் காரணமாகிய செயல்களை, குன்றி யனைய - ஒருகுன்றிமணியளவாயினும், செயின் - செய்வாராயின், குன்று வர் - தாழ்வார், (எ - று).

குன்றியனையவும் என்னும் இழிவுசிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. தாழ்தற்குக் காரணமாகிய செயல்களாவன:-(பழிப்பதற் கேதுவாய) இழிவுதருஞ் செயல்கள். இது சொற்பின் வருநிலையணி.

(க-து.) உயர்ந்தகுடியிற் பிறந்தவர் தாம் தாழ்தற்கேதுவா கிய செயல்களிற்சிறிது செய்வாராயினும், அதனாற் றாழ்வடைவர்.

5. Even those who (are noble by birth) like a hill will be deemed low, if they commit deeds that are debasing.

சு

புகழின்றுற் புத்தேணாட் டெய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை.

பரி:—(இ - ள்.) ‡ மானத்தைவிட்டுத்

தன்னையவமதிப்பார் பின்
னே ஒருவன் சென்று நிற்கின்றநிலை இவ்வுலகத்துப் புகழ்பயவாது; வானப்புத்தே ளுலகத்துச் செலுத்தாது; இனி அவனுக்கு அது செய்வ

தியாது ? (எ - று).

---

† முன்வந்த சொல் பின்னும் வந்து பொருள்வேறுபட்டிருப்பது சொற்பின் வருநிலையணியாம். இக்குறளில் முன்வந்த சொல் பின்னும் வந்து பொருள்வேறுபட்டிருப்பதறிக. முன்வந்தசொல் குன்றின் என்பதாம்; அது பின்னர்க் குன்றுவர், குன்றுவ, குன்றி எனவந்திருப்பதுணர்க.

‡ "என்பா யுகினு மியல்பிலார் பின்சென்று, தம்பா டுரைப்பரோ தம் மூடையார்" என்பது நாலடியார்.

* புகழ் பயப்பதனைப் புகழ்என்றார். † பயனுய இவ்விரண்டு மின்றிக் கொன்னே மானங் கெடுகின்றது என்னை யென்பதாம். இவை மூன்று பாட்டானும் ‡ அவை செய்தற் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) இகழ்வார்பின் - (மானத்தைவிட்டுத் தன்னை) அவமதிப்பவர் பின்னே, சென்றுநில்லா - (ஒருவன்)சென்று (நிற்கின்ற)நிலை, புகழின்று-(இவ்வுலகத்தில்) புகழுண்டாக்காது, புத்தேள்நா - (மற்றைத்) தேவருலகத்தில், உய்யாது - செலுத்தாது, மற்று - இனி, என் - (அவனு க்கு அது செய்வது) யாது, (ஏ - று).

ஆவிரண்டும் - அசைநிலைகள். புகழுண்டாக்குவதனைப் புகழ் என்றார். இம்மைமறுமைப்பயனுகிய இவ்விரண்டும் இல்லாமல் வீணே மானங்கெடு கின்றது யாதுபற்றி யென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் அவற்றைச் செய்தலின் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) மானத்தைவிட்டுத் தன்னை அவமதிப்பார் பின்னே சென்று நிற்பானுக்குப் புகழுமில்லை; புண்ணியலோகத்தை யடைதலுமில்லை என்பது.

6. Of what good is it to men of noble birth to go and stand in vain before those who revile them. It only brings them dishonor in this world and exclusion from the other world.

எ. †ஒட்டார்பின் சென்றிருவன் வாழ்தலி னஃதிலையே கேட்டா னெனப்படுதே னன்று.

பரி:—(இ - ள்.) தன்னை யிகழ்வார் பின்னே சென்று போநள் பேற்று ‡ அதனலொருவன் உயிர்வாழ்தலின் () அது செய்யாது இறந்தானென்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று, (எ-று).

---

* புகழை யுண்டாக்கும் செயலைப் புகழ்என்று காரிய வாகுபெயராற் கூறினர்;

அச்செயல் - மானத்தைவிட்டுத் தன்னை யவமதிப்பார் பின் செல்லாமை. அது புகழை யுண்டாக்குவதாம்.

† பயனுய இவ்விரண்டுமின்றி - புகழ் பயத்தல் புத்தேளுலகத்திற் செலுத்துத லென்னும் (மானம்விடாமையின்) பயனுய இவ்விரண்டு மில்லாமல். புகழைப் பெறுதல் இம்மைப்பயனும்; புத்தேளுலகத்தை யடைதல் மறுமைப் பயனும்

‡ அவை - தாம் தாழ்தற்குக் காரணமாகிய செயல்களே.

¶ ஒட்டார் - தன்னுடன் பொருந்துதலில்லாதவர் (பகைவர்).

§ அதனால் - பொருளைப்பெறுதலால்.

() அது செய்யாது - தன்னையிகழ்வார் பின்னே சென்று பொருளைப்-பெற்று அதனால் உயிர் வாழுதல் செய்யாமல்.



ஒட்டுதல்—பொருந்துதல். அந்நிலையே யென்றது செல்லாத முன்னை நிலைக்கண்ணே நின்றென்றவாறு; அப்பொழுதே யென்றுமாம். புகழும் புத்தேளுலகும் பயவாதேனும் பொருள் பெற்று உயிர்வாழ்வா மென்பாரை நோக்கிக் கூறியது.

தெளி:—(இ - ள்.) ஒட்டார்பின் - (தன்னை) இகழ்பவர்பின்னே, சென்று-போய், (பொருளைப்பெற்று), ஒருவன் வாழ்தலின் - (அதனால்) ஒருவன் உயிர் வாழ்தலைக்காட்டிலும், (அது செய்யாமல்), அந்நிலையே-முன்னை நிலையிலே, (நின்று) கெட்டானெனப்படுதல்-இறந்தானென்று சொல்லப்படுதல், நன்று - (அவனுக்கு) நல்லது, (எ - று).

ஒட்டுதல் - தன்னுடன் பொருந்தியிருத்தல். அந்நிலையே என்றது தன்னையிகழ்வார் பின்னே செல்லாத முன்னை நிலையிலே நின்று என்றவாறும்; அதற்கு அப்பொழுதே என்றுபொருள் கூறினும் ஒக்கும். மானத்தைவிடுதல் புகழையும் வானுலகத்தையும் தாராதாயினும் அதனால்பொருளைப்பெற்று உயிர்வாழ்வாமென்பாரை நோக்கிச் சொல்லியதாம்.

(க - து.) ஒருவன் தன்னை யிகழ்பவர் பின்னே சென்று பொருளைப் பெற்று அதனால் வாழ்தலைக்காட்டிலும், அது செய்யாது இறத்தலே அவனுக்கு நல்லதாம் என்பது.

7. It is better for a man to be said of him that he died in his usual state than that he eked out his life seeking the help of those who reviled him.

அ. மருந்தோமற் றூணும்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து.

பரி:—(இ - ன்.) உயர்குடிப்பிறப்புத் தன்னலியாகிய மானம் அழிய வந்துழி, இறத்தலொழிந்து பயனில்லாத வுடம்பினைக்காக்கும் வாழ்க்கை பின்னு மிறவாமைக்கு மருந்தாமோ? (எ - று).

‡ மற்றென்பது மேற்சொல்லிய இறப்பினை மாற்றி நின்றது. நற் குணங்கட்கெல்லாம் இடனுதற் சிறப்புப்பற்றிப் 'பெருந்தகைமை' என்றும், அவை யெல்லாவற்றுள்ளும் அதற்கு வலியாதற் சிறப்புப்பற்றிப் 'பீடு' என்றும், அஃதழிந்தால் நின்றவெற்றுடம்பு இழிக்கப்படுதலின் அதனை 'ஊன்' என்றும், பின்னுமிறத்தல் ஒருதலையென்பார் 'மருந்தோ' என்றும்

‡ மற்று என்னுமிடைச்சொல் 'ஒட்டார்பின்' என்னுங்குறளிற் கூறிய 'கெட்டானெனப்படுதல் (இறந்தானென்று சொல்லப்படுதல்)' என்னும் (இற

த்தலென்னும்) வினையை மாற்றி இறவாமை யென்னும் வினையைத்தந்து நின்றது. இவ்வாறு வருவது வினைமாற்றெனப்படும்.

## ஒழிபியல்—உ-வது மானம்.

# 1041

கூறினர். *

மானத்தின்மேழில் அதற்கிடனாகிய குடிப்பிறப்பின்மே னின்றது.

தெளி:—(இ - ள்.) பெருந்தகைமை - உயர்குடிப்பிறப்பானது, பீடு- (தன்) வலியாகிய மானம், அழியவந்தவிடத்து—,ஊனேம்பும்-(இறத்தலொழிந்து பயனில்லாத) உடம்பைக்காப்பாற்றும், வாழ்க்கை - வாழ்வானது, மற்றுமருந்தோ - (பின்னும்) இறவாமைக்கு மருந்தாமோ? (எ - று).

மற்றென்னுமிடைச்சொல் முன்னர்க் கூறிய இறப்பினை மாற்றி நின்றது. உயர்குடிப்பிறப்பு

நற்குணங்களுக்கெல்லாம் இடமாதற்சிறப்புப் பற்றி அதனைப் 'பெருந்தகைமை' என்றும், அக்குணங்களெல்லாவற்றிலும் மானமானது அவ்வுயர் குடிப்பிறப்பிற்கு வலியாதற் சிறப்புப்பற்றி அதனைப் 'பீடு' என்றும், அம்மானம் அழிந்தால் நின்ற வெற்றுடம்பு இழிக்கப்படுதலால் அதனை 'ஊன்' என்றும், பின்னுமிறத்தல் நிச்சயமென்பார் ஊனேனும்பும் வாழ்க்கையை 'மருந்தோ' என்றும் சொல்லினர். மானத்தினது (இறத்தல்) தொழில் அதற்கிடமாகிய குடிப்பிறப்பின்மேல் நின்றது.

(க - து.) மானங்கெட்ட விடத்து இறவாதிறந்தால் அது பின்னும் இறவாமைக்கு மருந்தாகுமோ என்பது.

8. For men of noble birth to preserve their body when their honor is stake will certainly not prove a remedy against death.

கூ.

† மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
ருயிர்நீப்பர் மானம் வரின்

பரி:—(இ - ன்.) நன் மயிர்த்தாளின் ஒருமயிர் நீங்கினும் உயிர் வாழாத கவரிமானை யொப்பார்; உயிர் நீக்கத்தான் மானமெய்து மெல்லி வரின், அதனைத்தாங்கா திறப்பர், (எ-று).

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. உயிரும் மானமும் உட னில்லாமைக்கண், பின்னும் போவதாய உயிரைநீத்து எஞ்ஞான்றும் நிற்ப

---

* உயர் குடிப்பிறப்பில் நிகழும் மானத்தினது அழிதற்றொழிலை அவ் வுயர்குடிப்பிறப்பின்மீ தேற்றி 'பெருந்தகைமை பீடழிய வந்தவிடத்து' என்று கூறினமையின், 'மானத்தின்றொழில் அதற்(மானத்திற்) கிடனாகிய குடிப் பிறப்பின்மே னின்றது' என்று கூறப்பட்டது. இஃது இடத்துநிகழ் பொரு ளின் தொழில் இடத்தின்மே லாய உபசாரவழக்காம்.

† அச்சுவத்தா மாப்பட்டா னென்ன வமர்துறந்தான், துச்சில் துரோண னென்பான் சோமேசா - நச்சு, மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்" என்னும் வெண்பா இக்குணர்தற்பாலதாம்.





தாயமானத்தை யெய்துவரென்பதாம். * உவமை † அவர்க்கு ‡ அஃதியல்

பென்பது விளக்கி நின்றது.

தெளி:—(இ - ள்.)

மயிர்நீப்பின்- (தன் மயிர்த்திரளில் ஒரு) மயிர்நீங்கி ஞலும், வாழா-(உயிர்) வாழாத, கவரிமாவன்னர் - கவரிமானை யொப்பவர்,

மானம்வரின்-(உயிரைவிடுதலால்) மானத்தை(ப் பெறுமளவு)வந்தால், உயிர்-அவ்வுயிரை, நீப்பர் - (தாங்காது) விடுவர், (எ-று).

நீப்பினுமென்னு மிழிவு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது.குடிப்பிறந்தார்,உயிரும் மானமும் உடனில்லாதவிடத்து, பின்னும் போவதாகிய வுயிரைவிட்டு எந்நாளுநிற்பதாகிய மானத்தை யடைவரென்ப

தாம். உவமானம் அவர்க்கு அஃது இயல்பென்பதை விளக்கி நின்றது.

(க - து.) மானமுடையார் அவமானம் நேர்ந்தவிடத்து

உயிர்வாழார் என்பது.

9. They who give up their life when their honor is at

stake are like the yak which dies at the loss of even one of

its hairs.

## க0. இளிவரின் வாழாத மான முடையா ரொளிதோழு தேத்து முலகு.

பரி:—(இ - ள்·) தமக்கோ ரிழிவு வந்தவழிப் பொறுத்து உயிர் வா

ழாது அதனை நீத்த மானமுடையாரது புகழ்வடிவினை எஞ்ஞான்றுந்

தொழது துதியா நிற்பர் உலகத்தார், (எ - று).

¶ "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவ னேவா வான வூர்தி, யெய்த" வாகலின், $ துறக்கச் செலவு சொல்லவேண்டா வாயிற்று. இவை நான்கு பாட்டானும் மானப்பொருட்டாய இறப்பினது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) இளிவரின் - (தமக்கோர்) இழிவு வந்த விடத்து,

வாழாத - (பொறுத்து உயிர் வாழாது) அவ் வுயிரைவிட்ட, மானமுடையார்-

---

* உவமை - 'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா' என்னுமுவமானம்.

† அவர்க்கு - கவரிமானை யொத்த மானமுடையவர்க்கு.

* அஃதியல் பென்பது - மானத்தைப் பெறுமளவு வந்தால் உயிர்விடுதல் சுபாவமென்பது.

¶ புறநானூறு-27. இதன்பொருள். புலவரால் பாடப்படும் புகழை யுடையோர் ஆகாயத்தின்கண் பாகனற்ற செலுத்தப்படாத விமானத்தைப் பொருந்துவார் என்பது.

§ துறக்கச் செலவு-இனிவரின் வாழாத மான முடையார் சுவர்க்கத்தை யடைதல்.

## ஒழிபியல்—ங-வது-பெருமை.

# 1043

மன்முடையவரது, ஒளி - புகழ்வடிவினை, உலகு - உலகத்தார், தொழுதே த்தும்-(எந்நாளுந்) தொழுது துதியா நிற்பர், (எ - று).

புலவர்பாடும் புகழுடையோர் விசும்பில் பாகனல் செலுத்தப்படாத வானவூர்தியையெய்துவராகலால், அவர் சுவர்க்க மடைதல் சொல்லவேண் டாவாயிற்று. இவைநான்குபாட்டாலும் மானத்தின்பொருட்டுயிரைவிடுவதா கிய இறப்பினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) தமக்கோர் இழிவு வந்த விடத்துப் பொறுத்து வாழாது இறந்தமானமுடையவரது புகழ்வடிவை யுலகத்தார் எப் பொழுதும் துதியாநிற்பர் என்பது.

10. The wise will always praise and adore the fame of the honorable who would rather die than suffer ignominy.

# மூன்றாவது அதிகாரம்.

## பெருமை:—Greatness.

பரி:—அஃதாவது செயற்கரியசெய்தல்,
தருக்கின்மை, பிறர்குற்
றங் கூறாமை யென்றிவை முதலிய நற்குணங்களாற்
பெரியாரதுதன்மை
* நிலையினு மேன்மேலுயர்த்தற் பயத்தவாய விவை
உளவாவது நிலை
யிற் றாழாமை யுள்வழியாகலின், † இது
மானத்தின்பின் வைக்கப்
பட்டது.

தெளி:—அஃதாவது செய்தற் கரியவற்றைச்
செய்தல், செருக்கில்
லாமை, பிறர் குற்றஞ் சொல்லாமை என்ற இவை முதலிய நற்குணங்
களால் பெரியராயினாரது தன்மையாம். நன்னிலையி னின்றும் மேலுமே
லும் உயர்த்துதற்றன்மையனவாகிய
இக்குணங்கள்உண்டாவது நிலையினின்
றுந் தாழாமை உள்ளவிடத்தாகலால்,
இதுமானத்தின்பின் வைக்கப்பட்டது

க. ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல்.

பரி:—(இ - ன்.) ஒருவனுக் கொளியாவது பிறராற் செயற்கரிய

செய்வேமென்று கருதும் ‡ ஊக்கமிதுதி; ஒருவனுக்கு மாசாவது அச்செயலை யொழிந்து உயிர்வாழக்கடவே மென்று கருதுதல், (எ - று).

---

* "நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை, நிலைகலக்கிக் கீழிடுவானு நிலையினு, மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத், தலையாகச் செய்வானுந் தான்" என்பது நாலடியார். † இது-பெருமை.

‡ ஊக்கமாவது மனம் மெலிதலின்றி வினைசெய்தற்கண் கிளர்ச்சி (எழுச்சி)யுடையதாதலாம். அஃதாவது மன முயற்சியாம்.



ஒளி-தானுளனெயகாலத்து மிக்குத் தோன்றுத லுடைமை. * "ஒளிநிரு னேங்குபுகழ் செய்யான்" என்றூர் பிறரும். மேலும் ‡ "செயற்கரிய செய்வார் பெரியர்" என்றூராயினும், சண்டை ¶ அவை அளவிறந்த வொப்புரவு ஈகை முதலியவாம். | அவற்றினுய பெருமையை † அதன் காரணத்தின் மே லிட்டு 'உள்ளவெறுக்கை' என்றும், ‖ அதுதன்னையே அதன் காரியமா கிய ஒளியாக்கியுங் கூறினூர். : இவ்வாறு இத னெதிர்மறைக்கண்ணு மொக்கும். இதனைப் பெருமையின் சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒளி-ஒளியாவது, உள்ள வெறுக்கை - (பிறரால் செய்தற்கரிய செயல்களைச் செய்வோ மென்று நினைக்கும்) ஊக்க மிகுதி, ஒருவற்கு - ஒருவனுக்கு, இளி - மாசாவது, அஃதிறந்து - அச்செயலை யொழிந்து, வாழ்துமெனல் - (உயிர்) வாழக் கடவோ மென்று நினைத்தல், (எ - று).

ஒளி - (ஒருவன்) தான் உளனெயகாலத்து

மேம்பட்டுத் தோன்றுத

லுடைமை. முன்னும் "செயற்கரிய செய்வார் பெரியர்"

என்றாராயினும்

இங்கு அவை அளவிறந்த உபகாரம் ஈகைமுதலியனவாம். அவ்வுபகாரமுத லியவற்றாலாகிய பெருமையை அதன்காரணத்தின்மேல் வைத்து 'உள்ள வெறுக்கை' என்றும், அதனையே அதன் காரியமாகிய ஒளியாக்கியும் சொல் லினர். இவ்வாறு இதனது எதிர்மறையிலு மொக்கும். இதனாற் பெருமை

யின்சிறப்புச் சொல்லப்பட்டது.

---

* நாலடியார்-செல்வ நிலையாமை. 9. இதன்பொருள். மதிப்பை நிலை பெறச் செய்யான், பெருகுகின்ற (உரையும் பாட்டுமாகிய) புகழைச்செய்து கொள்ளான் என்பது.

‡ திருக்குறள்-நீத்தார்பெருமை-6-இதன் பொருள். (ஒத்தபிறப்பினரா கிய மக்களுள் செய்தற்கெளிய வற்றைச் செய்யாமல்) செய்தற்கருமை யாய இயம நியம முதலியவற்றைச் செய்பவர் பெரியோராவர் என்பது.

¶ அவை - செய்தற் கரிய செயல்கள்.

| அவற்றினுய - அளவுகடந்த உபகாரம், கொடை, கல்வி, ஆண்மை முதலியவற்றாலாகிய

† செய்தற்கரியவற்றைச் செய்தலின் காரணமாகிய ஊக்க மிகுதியின் மேல் வைத்து 'உள்ளவெறுக்கை' என்று கூறினர். உள்ளம் - ஊக்கம்; வெறுக்கை - மிகுதி. உள்ளவெறுக்கை என்பது முன் அதன் காரியமாய செய்தற் கரியவற்றை யுணர்த்தி, பின் அதன் காரியமாய பெருமையை யுணர்த்துதலின், இருமடியாகு பெயராம்.

‖ ஆகுபெயரால் பெறப்பட்ட பெருமையையே அதன் காரியமாகிய ஒளி என்றுருவகமாக்கி, ஒருவற்குள்ள வெறுக்கை ஒளி என்று கூறினர். ஊக்கமிகுதி செய்தற் கரியவற்றைச் செய்தற்குக் காரணமாம்; அது பெருமைக்குக் காரணமாம்; அஃது ஒளிக்குக் காரணமாமென்ப தணர்க.

: ஊக்கமிகுதி யில்லாதவர்க்குச் செய்தற் கரியவற்றைச் செய்தலும், அவை செய்யாதவர்க்குப் பெருமையும், பெருமை யில்லாதவர்க்கு ஒளியும் சம்பவியாமைபற்றி 'இவ்வாறு இதனெதிர்மறைக் கண்ணுமொக்கும்' என்று கூறப்பட்டது.

## ஒழிபியல்—ங-வது பெருமை.

**1045**

(க-து) ஒருவனது பெருமைக்குக் காரணம் செய்தற்கரிய வற்றைச் செய்வதில் ஊக்கமிகுதியாம்; இழிவிற்குக் காரணம் அவற்றைச் செய்யாதிருத்தலாம் என்பது

1. One's greatness is the unbounded energy in accomplishing deeds which others cannot do; one's deca- dance is the desire to live destitute of such a state of mind.

உ. பிறப்போக்கு மெல்லா வுயிர்க்குஞ்

சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்.

பரி:—(இ - ள்.) எல்லா மக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்குமேயெனினும், பெருமை சிறுமை யெனப்பட்ட சிறப்பியல்புக ளொவ்வா; அவைசெய்யுந் தொழில்களது வேறுபாட்டான், (எ-று).

வேறுபாடு— † நல்லனவும், தீயனவும், இரண்டுமாயினவும், இரண்டு மல்ல வாயினவுமாய அளவிறந்த பாகுபாடுகள். வினையத்தாற் பஞ்சபூத * பரிணமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று அதன்பய னனுபவித்தல் எல்லாவுருணத்தார்க்கு மொத்தலிற் 'பிறப்பொக்கும்' என்றும், ‡ பெருமை சிறுமைகட்குக் கட்டளைக்கல்லாகிய தொழிற் பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலிற் 'சிறப்பொவ்வா' என்றுங்கூறினர்.

தெளி:—(இ - ள்.) எல்லாவுயிர்க்கும் - எல்லாமக்களுயிர்க்கும், பிறப்பு- (பொதுவாகிய) பிறப்பியல்பு, ஒக்கும் - ஒக்குமே, (எனினும்), சிறப்பு - (பெருமை சிறுமை எனப்பட்ட) சிறப்பியல்புகள், ஒவ்வா-ஒவ்வாவாம், செய் தொழில் - (அவ்வுயிர்கள்) செய்யுந்தொழில்களது, வேற்றுமையான்-வேறு பாட்டால், (எ - று).

வேறுபாடு - நல்லனவும், தீயனவும், இரண்டுமாயினவும்,

இரண்டுமல் லவாயினவுமாய அளவுகடந்த, பிரிவுகள். வினைவசத்தால் பஞ்சபூதகாரிய
மாகிய உடம்பைப் பொருந்தினின்று அவ்வுடம்பின்பயனை யனுபவித்தல் எல்
லாச்சாதியார்க்கும் ஒத்திருத்தலால் 'பிறப்பொக்கும்' என்றும், பெருமை சிறு
மைகளுக்குக் கட்டளைக்கல்லாகிய தொழிற்பிரிவுகள் சாதிதோறும் உடம்பு
தோறும் வேறுபடுதலால் 'சிறப்பொவ்வா' என்றும் சொல்லினர்.

---

† நல்வினைகள், தீவினைகள், இவ்விரண்டுங் கலந்த வினைகள், இவ்வி
ரண்டுமல்லாத வினைகளென அளவிறந்த பாகுபாடுகள். இவ்விரண்டு மல்
லாத வினைகள்-திரும்புக்கிள்ளல், நீரடித்தல்முதலியனவாம்.

* ஒருபொருள் தன்னிலையை விட்டுவேறுநிலையை யடைவது பரிணாம
மெனப்படும். பரிணாம மெனினும், திரிபு எனினும் ஒக்கும். அது பால்
தயிராதல் ஆடைவீடாதல் போல்வதாம்.

‡ "பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங், கருமமே கட்டளைக்
கல்" என்னுங் குறளிற்குணர்தற்பாலதாம். கட்டளைக்கல் - உரைகல்.



(க - து.) மக்களுக்குப் பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்கு
மேயாயினும், அவர் செய்யுந்தொழில்களது வேறுபாட்டால் சிறப்
பியல்புகள் ஒவ்வா என்பது.

2. All (human) beings are alike as regards their birth, but differ in respect of their characteristics, on account of

the different grades of their actions.

கூ.

மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்.

பரி:—(இ - ள்) செயற்கரிய செய்கலாது சிறியராயினும், உயர்ந்த அமளி முதலியவற்றின்மிசை யிருந்தாராயினும் பெரியராகார்; * அவைசெய்து பெரியராயினும், தாழ்ந்த வறுநிலத் திருந்தாராயினும் சிறியராகார், (எ - று).

‡ மேலிருத்தல் கீழிருத்தல்களாற் செல்வ நல்குரவுகளும், மேல் கீழ்க ளாற் பெருமை சிறுமைகளும் கருதப்பட்டன. இவை யிரண்டுபோட்டா ணும் முறையே குடிமை மாத்திரத்தாலுஞ் செல்வமாத்திரத்தாலும் அஃ தலதாகாமை கூறப்பட்டது.

தெளி.—(இ - ள்.)

மேலல்லார்-(செய்தற்கரிய செயல்களைச் செய்வதி ன்றிச்) சிறியராயினும், மேலிருந்தும் - உயர்ந்த ஆசன முதலியவற்றின்மி திருந்தாராயினும், மேலல்லர் - பெரியராகார், கீழல்லவர் - (அவற்றைச் செ ய்து) பெரியராயினும், கீழிருந்தும் - தாழ்ந்தவறு நிலத்தில் இருந்தாராயி ணும், கீழல்லார் - சிறியராகார், (எ - று).

மேலிருத்தல்

கீழிருத்தல்களால் செல்வவறுமைகளும், மேல்கீழ்களால்

பெருமை சிறுமைகளும் கருதப்பட்டன. இவை இரண்டொட்டாலும் முறையே குடிப்பிறப்புமாத்திரத்தாலும், செல்வமாத்திரத்தாலும் அஃதுண்டாகாமை சொல்லப்பட்டது. அஃது-பெருமை.

(க - து.) மேன்மைக்குணமுடையார் கீழிருந்தாலும் சிறியராகார்; அக்குணமில்லாதார் மேலிருந்தாலும் பெரியராகார்.

3. Though raised above, those who cannot accomplish great things cannot become great; though brought low, those who can accomplish great things cannot become base.

---

* அவை - செய்தற்கரிய செயல்கள்.

† மேலல்லார் மேலிருத்தலால் அவர்க்குச் செல்வமுடைமையும், கீழல்லவர் கீழிருத்தலால் அவர்க்குத் தரித்திரமுடைமையும், மேல் என்றதனால் பெருமையும், கீழ் என்றதனால் சிறுமையும் கருதப்பட்டன வென்பதாம். மேலல்லார் பெருமையிலராவர்; கீழல்லவர் சிறுமையிலராவரென்று கொள்க.

க. † ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு.

பரி:—(இ - ள்.) கவாத மனத்தினை யுடைய மகளிர் ‡ நிறையின் வழுவாமற் றம்மைத் தாங் காத்துக்கொண் டொழுதமாறுபோல, பெரு மைக்குணனும், ஒருவன் ¶ நிறையின் வழுவாமற் றன்னைத் தான் காத்துக் கொண்டொழுதவனையின், அவன்கணுண்டாம், (எ - று).

§ பொருளின்றொழில் உவமையினும் வந்தது. கற்புண்டாதல்தோன்ற

நின்றமையின், உம்மை எச்சவும்மை. ஒழுகுதல் ‡ மன மொழி மெய்களை

யொடுக்கி ஒப்புரவு முதலிய செய்து போதல்.

கூறப்பட்டது.

இதனால் அஃதுளதாமாறு

தெளி:—(இ-ள்.) ஒருமை - பிளவுபடாத மனத்தினை யுடைய, மகளிரே போல - பெண்கள் (நிறையினின்றுந் தவறுது தம்மைத்தாம் பாதுகாத்துத்

கொண்டொழுகும் விதம்) போல, பெருமையும் - பெருமைக் குணமும், தன்னைத்தான் கொண்டொழுகின் - (ஒருவன் நிறையி னின்றும் தவறுமல்) தன்னைத் தான்

பாதுகாத்துக்கொண் டொழுகுவானுயின், உண்டு (அவனி
டத்து) உண்டாம். (எ - று)

உவமேயத்தின் தொழிலாய 'தன்னேத்தான்
கொண்டொழுகின்' என் பது 'ஒருமை மகளிர்' என்னும்
உவமேயத்திலும் வந்தது. ஒருமை மகளிர்க் குக் கற்புண்டாதல்
தோன்ற நின்றமையின், பெருமையும் என்ற வும்மை
இறந்தது தழுவிய எச்சவும்மையாம். ஒழுகுதல்-மன மொழி
மெய்களை யட க்கி உபகார முதலிய வற்றைச் செய்து வருதல்.
இதனுல் அஃதுண்டாமாறு சொல்லப்பட்டது.
அஃது-பெருமை.

(க - து.) தன்னேத்தான் பாதுகாத்துக்கொண்
னிடத்துப் பெருமைக்குணம் உண்டாகும் என்பது.
டொழுவா

4. Even greatness, like a woman's chastity, belongs only to him who guards himself against evil ways.

† ஒருமை - ஏகாக்கிரசித்தம்; அஃதாவது மனம் பலதலைப்பட்டு விரிவ
தொழிந்து, ஒருமுகப்பட் டிருத்தல்.

‡ நிறை - கற்பு; அஃதாவது மகளிர் தமதுகணவரைத் தெய்வமென் றுணர்ந்து நெஞ்சைக் கற்பு வழியில் நிறுத்துதல்.

¶ நிறை - காப்பனகாத்துக் கடிவனகடிந்து ஒழுகும் ஒழுக்கும். "நிறை யெனப் படுவது மறைபிற ரறியாமை" என்பது கலித்தொகை.

§ பொருள் - உவமேயம். அஃதிங்கு ஒருவனும்; அவனது தொழில் - தன்னேத்தான் கொண்டொழுகுதலாம்.

† மன மொழி மெய்களை யொடுக்குதலின்பயன் "வாயி னடங்குதல் துப் புரவா மாசற்ற, செய்கை யடங்குதல் திப்பியமாம் பொய்யின்றி, நெஞ்ச மடங்குதல் வீடாகு மிம்மூன்றும், வஞ்சத்திற் றீர்ந்த பொருள்" என்று திரிகடுகம் கூறுவதாலினிது விளங்கும்.



## ருபேருமை யுடையவ ராற்றுவா ராற்றி னருமை யுடைய செயல்.

பரி:—(இ - ள்.) * அவ்வாற்றற் பெருமை யுடையராயினர் தாம் வறிய ராயவழியும் பிறராற் செய்தற்கரியவாய தஞ்செயல்களை விடாது † அவை செய்யு நெறியாற் கடைபோகச்செய்தலவல்லராவர்.(எ-று).

வறியராய வழியு மென்பது முன் செய்து போந்தமை தோன்றப் 'பெருமை யுடையவர்' என்றதனாலும் 'ஆற்றுவார்' என்றதனானும் பெற்றும். இதனால் ‡ அதனை யுடையார் செய்தி கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) பெருமையுடையவர் - (அவ்வழியால்) பெருமையுடையவராயினார், (தாம் வறியராகிய விடத்தும்), அருமையுடைய-(பிறரால் செய்தற்கு) அரியனவாகிய, செயல்-(தமது) செயல்களை, ஆற்றின்-(விடாது அவற்றைச் செய்யும்) வழியால், ஆற்றுவார் - (முடிவுபெறச்) செய்தலில் வல்லவராவர், (எ - று).

வறியராகியவிடத்தும் என்பது பிறரால் செய்தற் கரியனவாகிய தமது செயல்களை முன்செய்து வந்தமை தோன்றப் 'பெருமையுடையவர்' என்றதனாலும், ,ஆற்றுவார்' என்றதனாலும் பெற்றாம். இதனால் அதனையுடையவர் செய்தி சொல்லப்பட்டது. செய்தி - ஒழுக்கம்.

(க-து.) பெருமையுடையவர் தமக்கு வறுமை நேர்ந்த விடத்தும் பிறரால் செய்தற்கு அருமையாகிய செயல்களை முடிவுபெறச் செய்ய வல்லவராவர் என்பது.

5. Though poverty-stricken, the great will be able to accomplish, in the proper way, deeds difficult for others to do.

சு சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு.

பரி:—(இ - ள்.) ¶ அப்பெற்றியராய பெரியாரை வழிபட்டு அவரியல்பினை யாங்கோடு மென்னுங் கருத்து மற்றைச் சிறியராயினார் மனத்தின்கண் உளதாகாது (எ-று).

குடிமை, செல்வம், கல்வி யென்றிவற்றது உண்மை மாத்திரத்தால் தம்மை வியந்திருப்பார்க்கு () அவை நமக்கியல்பென்று அமைந்திருப்பாரை வழிபட்டு அஃதுடையராதல் கூடாதென்பதாம்.

---

* அவ்வாற்றால் - செய்தற்கரியவற்றைச் செய்தலால்.

† அவை - செய்தற்கரியசெயல்களை. ‡ அதனை - பெருமையை.

¶ அப்பெற்றியராய - செய்தற்கரியசெயல்களைச் செய்யும் வழியால் முடிவுபெறச்செய்யுந் தன்மையுடையவராய.

() அவை - குடிமை, செல்வம், கல்வி. குடிமைஉயர்குடிப்பிறப்பு.



தெளி:—(இ - ள்.) பெரியாரை - (அத் தன்மையராய) பெரியாரை, பேணி-வழிபட்டு, கொள்வே மென்னும் - (அவரியல்பினை யாம்) கொள்ளுவோமென்னும், நோக்கு - கருத்து, சிறியார்-(மற்றைச்) சிறியராயினோரது, உணர்ச்சியுள் - மனத்தினிடத்து, இல்லை - உளதாகாது, (எ - று).

குடிப்பிறப்பு,செல்வம், கல்வியென்ற இவற்றின் இருப்பு மாத்திரத்தால் தம்மை வியந்திருப்பார்க்கு அவை நமக்கியல்பென்று அடங்கி யிருப்பாரை வழிபட்டு அவ்வியல்புடையராதல் கூடாதென்பதாம்.

(க - து.) சிறியாரதுமனத்தின்கண் யாம் பெரியாரைவணங்கி அவர் தன்மையைக் கொள்வோமென்னுங் கருத்துண்டாவதில்லை.

6. It is never in the nature of the mean to seek the society of the great and acquire their nature.

எ. இறப்பே புரிந்த தொழிற்ருஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்.

பரி:—(இ - ள்.) தனக்கொக்கும் பெரியாரிடத்து ‡ அமைந்திருத்த லைச் செய்வதாய சிறப்புத்தானும், தனக்கொவ்வாத சிறியாரிடத்துப் படுமாயின், அதனை யொழித்து தருக்கின்கண்ணே மிக்கசெயலை யுடை த்தாம், (எ - று),

* தருக்கினை மிகச்செய்யு மென்பதாயிற்று. சிறப்பு - குடிமை, செல் வம், கல்விகளினைய மிகுதி. இவை யிரண்டு பாட்டானும் அஃதிலார் செய்தி கூறப்பட்டது.

தெளி:—(இ - ள் ) சிறப்புந்தான் - (தனக்கொத்துள்ள பெரியாரிட த்து அமைந்திருத்தலைச் செய்வதாகிய) சிறப்புத் தானும், சீரல்லவர்கட் படின் - (தனக்கொவ்வாதுள்ள) சிறியாரிடத்து உண்டாமாயின், இறப்பே புரிந்த - (அவ்வமைந்திருத்தலைச்செய்வ தொழிந்து) செருக்கினிடத்திலே மிகுந்த, தொழிற்ரும்-செயலை யுடையதாம், (எ - று).

சிறப்புச் செருக்கினை மிகச் செய்யுமென்பதாயிற்று. சிறப்பு - குடிப் பிறப்பு, செல்வம், கல்விகளினுலாகிய மிகுதி. இவை இரண்டுபாட்டாலும் அஃதில்லாதவர் செய்தி சொல்லப்பட்டது. அஃது-பெருமை.

(கீ-து.) சிறியாரிடத்துச் சிறப்புண்டாயின், அவர் மிகவுங் கர்வங் கொண்டு தகாதவற்றைச் செய்வர் என்பது.

‡ அமைந்திருத்தல் - அடங்கி யொழுகுதல்.

* சிறியாரிடத்துண்டாய சிறப்பானது சருக்கினை (கர்வத்தை) மிகச் செய்யுமென்று கொள்க.





7. Even noble birth, wealth and learning if in possession of the mean, will only produce increasing pride.

அ. பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

பரி:—(இ - ள்.) பெருமையுடையார் * அச்சிறப்புண்டாய ஞான்றுந் தருக்கின்றி அமைந்தொழுதவர்; மற்றைச் சிறுமையுடையார் அஃதில்லாத ஞான்றுந் தம்மை வியந்து புனையாநிற்பர், (எ - று).

† பொருளின் வெறுழில்கள் பண்பின்மே
லேற்றப்பட்டன. இஃது

‡ 'அற்ற மறைக்கும் பெருமை' என்புழியு மொக்கும். ¶ என்று மென்பது பின்னும் வந்தியைந்தது. ஆமென்பன விரண்டும் § அசை. புனைதல்—பிற

நிற் றமக்கோர் மிகுதியை யேற்றிக் கோடல்.† இதற்கு உயர்ந்தார் தாழ்வார் தாழ்ந்தார் உயர்வார்; இஃதொரு விரோத மிருந்தவாறென்னென உலகி யலே வியந்து கூறிற்றுக்குவாருமுளர்.

தெளி:—(இ-ள்.) பெருமை - பெருமையுடையவர், என்றும் - அச்சி றப்புண்டாகிய காலத்தும், பணியும்-(செருக்கில்லாமல்) அமைந்தொழுகுவர், சிறுமை - (மற்றைச்) சிறுமையுடையவர், என்றும் - அச்சிறப்பில்லாத காலத்தும், தன்னை வியந்து - தம்மை மெச்சி, அணியும் - சிறப்பியா நிற்பர்.

பெருமையுடையவர் சிறுமையுடையவர் என்னும் பொருள்களின் (முத லின்) தொழிலாய பணிதலையும் அணிதலையும் அவர்களது குணமாய பெரு

---

* அச்சிறப்பு - குடிமை, செல்வம், கல்விகளினுய மிகுதி.

† இது "சிற்றினமஞ்சும்பெருமை" என்றுற்போன்று குணவினை குணிவினையாய உபசாரவழக்காம்.

‡ 'அற்ற மறைக்கும் பெருமை' என்பது இவ்வதிகாரத்தின் பத்தாவது குறள். பெருமையுடையாரென்னும் பொருளின் தொழிலாய மறைக்கும் என்பதைப் பெருமையென்னும் பண்பின்மேலேற்றி, 'அற்றமறைக்கும் பெருமை' என்று கூறப்பட்டதென்க.

¶ என்றும் என்பது சிறுமை யென்பதனோடும் வந்தியைந்து நின்றது.

§ பொருளுணர்த்தாது சொற்களையசைத்து நிற்பது அசைநிலையெனப் படும்.

+ இக்குறளிற்குப் பெருமை—உயர்ந்தார், பணியும் - (என்றும்) தாழ்வார், சிறுமை-தாழ்ந்தார், (என்றும் தம்மைவியந்து), அணியும் - உயர்வார்; இஃதொரு விரோதம் இருந்தவாறு என்னை என்று உலகியலை வியந்து (இக்குறள்) கூறிற்று என்னும் பொருள் கூறுவாருமுண்டென்பது. இந்தப் பிரபுலிங்கலீலை "தாழ்ந்தோ ருயர்வ ரென்றுமிக வுயர்ந்தோர் தாழ்வ ரென்றுமறஞ், சூழ்ந்தோ ருரைக்கு முரைகண்டாம்" என்று கூறுவதும் உணர்தற்பாலதாம்.

மை மேலும் சிறுமைமேலும் ஏற்றிப் பெருமை பணியும் என்றும், சிறுமை அணியும் என்றும், கூறப்பட்டன. இதுபின்வரும் 'அற்றமறைக்கும் பெருமை' என்றவிடத்தும் ஒக்கும். என்றும் என்பது பின்னும்வந் தியைந்து நின்றது. ஆமிரண்டும் அசைநிலை. சிறப்பித்தல் - சிறுமையுடையவர் மற்றவரிலுந்தமக்கு ஒருமிகுதியை ஏற்றிக்கொள்ளுதல். மிகுதி-மேன்மை.

(க - து.) பெருமையுடையவர் கர்வமின்றியமைந்து நடத்தலையும், சிறுமையுடையவர் தம்மை மிகுத்து சிறப்பித்தலையும் உடையவராவர் என்பது.

8. The great will always be humble; but the base will exalt themselves in self-praise.

சூ. பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்.

பரி:—(இ - ள்.) பெருமைக்குணமாவது காரண முண்டாய வழியும் * அஃதியல் பாதலைகீகித் தருகின்றி யிருத்தல்; சிறுமைக்குணமாவது அஃதில் வழியும் † அதனை யேற்றிக்கொண்டு தருகின்ன் முடிவின்கண்ணே நின்றுவிடுதல், (எ-று).

‡ அளவறத்தருக்குதலென்பதாயிற்று. ¶ விடுமென்று பாடமோது வாருமுளர். $ முற்றுத் தொடரும் எழுவாய்த் தொடரும் தம்முளியை யாமையின், அது பாடமன்மை யுணர்க.

---

* அஃது - பெருமை. † அதனை-பெருமையை.

‡ தருக்கின் முடிவின்கண்ணே நின்றுவிடுதல் என்பது அளவுகடந்து கர்வங் கொள்ளுதலென்பதாயிற்று.

¶ விடல் என்னும் தொழிற்பெயரை விடும் என்று (செய்யுமென்னு மூற்றுகப்) பாடங் கூறுவாருமுண்டு.

$ சிறுமை பெருமித மூர்ந்து விடும் என்பது வினைமுற்றுத்தொடர்; பெருமை பெருமிதமின்மை என்பது எழுவாய்த்தொடர். வினைமுற்றுத் தொடரும் எழுவாய்த்தொடரும் தம்முள் பொருந்திவருதற்கு விதியில்லா

மையின், விடல் என்பதை விடும் என்று செய்யுமென்னு முற்றுகக்கூறல் வழுவாமென்றுமறுத்தார். செய்யுமென்னுமுற்று யாண்டும் பெயர்க்கு (எழுவாய்க்குப்பின்) பயனிலையாகவே வரும்; ஏனையமுற்றுக்கள் போன்று பெயர்க்கு முன்னர் வந்தால் எச்சமா யொழியும். அதுபற்றியே சிறுமை விடும் என்பது முற்றுத்தொடராகக் கருதப்பட்டது. "எச்சப் பெயர்வினையெய்து மீற்றினும்" என்னுஞ் சூத்திரத்தின் விசேட வுரையில் நன்னூல் விருத்தி யுரைகாரர் "எழுவாயுருபு வினைமுற்றுப் பயனிலையை யிறுதிக் கட்கொண்டதூஉம், வினைமுற்றுப் பெயர்ப்பயனிலையை முதற்கட் கொண்டதூஉம் சத்தான் வந்தான் எனவரும். தம்முள் வேற்றுமை



தெளி:—(இ - ள்.) பெருமை - பெருண்மைக்குணமாவது, பெருமிதமின்மை-(காரணம் உண்டாகிய விடத்தும் அஃது இயல்பாதல்நோக்கிச்) செருக் கில்லாதிருத்தல், சிறுமை-சிறுமைக் குணமாவது, பெருமித மூர்ந்துவிடல்—(அக்காரணம் இல்லாதவிடத்தும் அதனை ஏற்றிக்கொண்டு) செருக்கின் மூடி விலை நின்று விடுதல், (எ-று).

அளவறச் செருக்குதலென்பதாயிற்று.

(க - து.) பெருமைக் குணமுடையார் செருக்கில்லாதிருப்பர்; சிறுமைக் குணமுடையார் அஃதுடையரா யிருப்பர் என்பது.

9. Freedom from vanity is the nature of true

greatness; while self-conceitedness is that of baseness.

## 60. அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான் குற்றமே கூறி விடும்.

பரி:—(இ-ள்.) பெருமையுடையார் பிறர் மானத்தையே கூறி அவ மானத்தை மறையா நிற்பர்: மற்றைச் சிறுமையுடையார் பிறர்தஞ்சத்தை மறைத்துக் குற்றத்தையே கூறி விடுவர், (எ-று).

* மறைத்தலுங் கூறலும் ஏனையிடத்து மியைந்தன. † அற்றம் - ஆகு

யாதோவெனின், கேட்போர்க்குச் சாத்தனிது செய்தான் என வினையை யுணர்த்துவதூஉம், இது செய்தான் சாத்தன் என வினைமுதலை யுணர்த்துவ

தூஉமாமென்க. வந்தான் சாத்தன் எனவருவனவுமன்ன"என்று கூறுவதிங் குக்கவனித்தற்பாலதாம்.பெருமை என்னும் எழுவாய்க்கு இன்மையென்னும் (குறிப்புத்)தொழிற்பெயர் பயனிலையாகவந்தாற்போன்று சிறுமையென்னும் எழுவாய்க்கும்விடல் என்னும் தொழிற்பெயர் பயனிலையாக வருதல் வேண்டும். அவ்வாறுவருதலே சிறப்புடைத்தாம். மேற்படி தொடராகிய வாக்கியங்கள் அவ்வாறு வாராது(தம்முளொவ்வாது)முற்றுத்தொடராகவும் எழுவாய்த் தொடராகவும் வருதல் வழுவாமென்று கருதப்பட்டது. பூரிமேலழகர் எழுவாய்த்தொடரும் முற்றுத்தொடரும் தம்மு ளியையாமையினென்று கூறுது 'முற்றுத்தொடரும் எழுவாய்த்தொடரும் தம்முளியையாமையின்'என்று கூறியது பொருள் நோக்கைக் கருதியாமென்க. எதிர்மறை யுணர்ச்சி பெற்

ருவன்றி யுடம்பாட்டினைர்ச்சி வாராது என்னும் நியமப்படி சிறுமையினுணர்ச்சி பெற்றுவன்றிப்பெருமையினுணர்ச்சி வாராதிருக்கின்றமையே பொருள் நோக்காமென்க.

* மறைத்தல் என்பது சிறுமையென்பதனேடும், கூறல் என்பதுபெருமையென்பதனேடும் (சென்று) பொருந்தினின்றன. சிறுமை மறைத்துக் கூறிவிடும்; பெருமைகூறி மறைக்கும் என்றுகொள்க.

† அற்றத்தா (சோர்வா) லுண்டாகும் அவமானத்தை அற்றமென்று கூறினமையின், இது கருவியாகுபெயராம்.



பெயர். தானென்பது அசை. இவை மூன்று பாட்டானும் * இருவர் செயலும் ஒருங்கு கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) பெருமை - பெருமையுடையவர், அற்றமறைக்கும்-(பிறர் மானத்தையே சொல்லி) அவமானத்தை மறையாகிற்பர், சிறுமை-மற்றைச் சிறுமையுடையவர், குற்றமே கூறிவிடும் - (பிறர்குணத்தை மறைத்துக்) குற்றத்தையே சொல்லிவிடுவர், (எ - று).

மறைத்தலும் சொல்லலும் மற்றையிடத்திலும் பொருந்தி நின்றன. அற்றம் - கருவியாகுபெயர். தான்-அசை. இவைமூன்று பாட்டாலும் இருவர் செயலும் சேர்த்துச் சொல்லப்பட்டன.

(க - து.) பெருமையுடையவர் பிறரது மானத்தைக்கூறியவமானத்தை மறையாகிற்பர்; சிறுமையுடையவர் பிறரது குணத்தை மறைத்துக் குற்றத்தையே கூறுகிற்பர் என்பது.

10. The great screen the defects of others; while the mean only divulge them.

## நான்காவது அதிகாரம்.

### சான்றுண்மை—*Perfection of good qualities.*

பரி:—அஃதாவது பலதுணைங்களானு நிறைந்து அவற்றை யாடற் றன்மை. ‡ பலதுணைங்களானு மென்பது சாலுதற் றொழிலாற் பெறப் படுதலின், அவற்றையென்பது வருவிக்கப்பட்டது. பெருமையு டைங் காத துணைங்கள் பலவற்றையுந் தொகுத்துக்கொண்டு நிற்றலின், †இஃத தன்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது பலகுணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளுதற் றன்மை. பலகுணங்களாலுஞ் என்பது சாலுதல் (என்னும்) தொழிலால் பெறப்படுதலால், அவற்றை என்னும் செயப்படுபொருள் வருவிக்கப்பட் டது. பெருமையுள் அடங்காத குணங்கள் பலவற்றையும் தொகுத்துக் கொண்டு நிற்றலால், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

---

* இருவர் - பெருமையுடையார், சிறுமையுடையார்.

‡ சான்றுண்மை யென்பதற்கு நிறைந்து ஆளுந்தன்மை யென்பது பொருளாம். சான்று (நிறைந்து) என்னும் (செய்தென்னும்) வினையெச்சத்தின் பகுதியாய சால் (சாலுதல்—நிறைதல்) என்னும் தொழிலால் பலகுணங்களா லும் என்பது பெறப்படுதலால், (ஆண்மையென்னும் தொழிற்கிளைய) அவ ற்றை (அப்பலகுணங்களை) யென்னும் செயப்படுபொருள் வருவிக்கப்பட்ட தென்பது.

† இஃததன்பின்—சான்றாண்மை யென்னு மதிகாரம் பெருமை யென்னு மதிகாரத்தின்பின்.



க. கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

பரி:—(இ - ள்.) நமக்குத் ததுவது இதுவென் றறிந்து சான்றாண்மையை மேற்கொண்டொழுதுவார்க்கு நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பாயிருக்குமென்று சொல்லுவர் நூலோர். (எ - று).

* சிலகுணங்களிலவாயவழியும், உள்ளனசெய்துகொண்டனவாய வழியும், சான்றாண்மையென்னுஞ் சொற்பொருள் கூடாமையின், நூலோர் இவ்வேதுப்பெயர்பற்றி அவரிலக்கணம் இவ்வாறு கூறுவரென்பதாம்.

தெளி:—(இ - ள்.) கடனறிந்து - (நமக்கு இது) தகுவதென்று அறிந்து, சான்று - (பலகுணங்களாலும்) நிறைந்து, ஆண்மை

- (அவற்றை)
ஆளுதற்றன்மையை, மேற்கொள்பவர்க்கு - மேற்கொண்டு நடப்பவர்க்கு, நல்லவையெல்லாம்-நல்லனவாய குணங்களெல்லாம், கடன் - இயல்பாயிருக்கும், என்ப-என்று சொல்லுவர், (நூலோர்), (எ - று)

சிலகுணங்களில்லாதவிடத்தும், உள்ளகுணங்கள் இயல்பாகவிராது செய்துகொண்டனவாய விடத்தும், சான்றாண்மையென்னுஞ்சொற்பொருள் கூடாமையால், நூலோர் இவ்வேதுப்பெயர்பற்றி அவரிலக்கணத்தை இவ்வாறு சொல்லுவரென்பதாம்.

(க - து.) சான்றோர்க்கு நல்லனவாகிய குணங்களெல்லாம் இயல்பாயிருக்குமென்பது.

1. Those who are conscious of their duty and behave with perfect goodness are said to possess naturally all that is good.



உ. குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெந்நலத் துள்ளதூஉ மன்று.

பரி:—(இ - ள்.) சான்றோர் நலமாவது குணங்களாலாய நலமே; அஃதொழிந்த ‡ வுறுப்புக்களாலாய நலம் ஒரு நலத்தினுள்ளதன்று.

* நல்லனவாய குணங்களுள் சிலகுணங்களில்லாத விடத்தும், உள்ளன

(உள்ள நல்லனவாய குணங்கள் இயல்பாக விராது பிறாது சம்பந்தத்தால்) சம்

பாதித்துக் கொண்டவிடத்தும், சான்றாண்மை யென்னும் சொல்லுக்குப் பல

குணங்களாலும் நிறைந்து அவற்றை யாளுதற்றன்மை என்னும் பொருள்

சம்பவியாமையால், நூலோர் சான்றாண்மை யென்னு மிக்காரணப்பெயர்

பற்றி அவர் (சான்றோராது) இலக்கணத்தை (' நல்லவையெல்லாங் கடன்'

என்று) இவ்வாறு கூறுவரென்பதாம்.

‡ உறுப்புக்கள்-குடிப்பிறப்பு, கல்வி, கேள்வி, செல்வ முதலியன.

:: பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு, நிலக்கிழமை மீக்கூற்றங் கல்வியோ யின்மை, யிலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப வென்றும், ஒழுக்

கம் பிழையா

தவர்" என்று ஆசாரக்கோவை கூறுவதிற்குணர்தற்பாலதாம்.

ஒழிபியல்—சு-வது சான்றாண்மை.

அகநலத்தை முன்னே * பிரித்தமையின் ஏனைப் புறநலத்தைப் 'பிற நலம்' என்றும், † அது குடிப்பிறப்புங் கல்வியு முதலாக நூலோதெடுத்த நலங்களுட் புகுதாமையின் 'எந்நலத்துள்ளதூஉ மன்று' என்றுங் கூறினர். இவை யிரண்டுபோட்டானும் ‡ சால்பிற்கேற்ற குணங்கள் பொதுவகையாற் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) சான்றோர்நலன் - சான்றோர்நலமாவது, குணநல

மே - குணங்களாலாகிய நலமே, பிறநலம்-அஃதொழிந்த உறுப்புக்களாலா கிய நலம், எந்நலத்துள்ளதூஉம் - ஒரு நலத்திலுமுள்ளது, அன்று-அல்ல. ()

அகநலத்தை குணநலமேயென்று முன்னே பிரித்தமையால் மற்றைப்புற

நலத்தைப் 'பிறநலம்' என்றும், அது குடிப்பிறப்புங் கல்வியுமுதலாக நூலோ தெடுத்த நலங்களுள்

செல்லாமையால் 'எந்நலத்துள்ளதூஉ மன்று' என்

றும் சொல்லினர். இவை இரண்டுபோட்டாலும் சால்பிற்கு ஏற்றகுணங்கள்

பொதுவகையாற் சொல்லப்பட்டன.

(க - து.) குணங்களாலாய நலமே சான்றோர்க்கு நலமாம்;

அஃதொழிந்த நலம் எந்த நலத்திலும்

சேர்வதாகாது என்பது.

2. The only delight of the great is perfection of goodness; all other sensual delights are not regarded as true delights.

நஉ. அன்புநா ணெைப்புரவு கண்ணேட்டம் வாய்மையொ
டைந்துசால் பூன்றிய தூண்.

பரி:—(இ - ள்.) சுற்றத்தார்மேலே யன்றிப் பிறர்மேலு முளதாய அன்பும், பழிபாவங்களி ஞணலும், யாவர்மாட்டு மொப்புரவு செயித லும், பழையார்மேற் கண்ணேடலும், எவ்விடத்தும் மெய்ம்மைகூற லும் எனச் சால்பென்னும் பாரத்தைத்தாங்கிய தூண்களைநீ து, (எ-று).

¶ எண்ணெே முன்னவற்றேடுங் கூடிற்று. § இக்குணங்க ளில்வழிச்

* பிரித்தமையின் - குணநலமே என்று பிரித்துக் கூறினமையின். (நலனே என்பதன் எகாரம் குணநலம் என்பதனேடு பிரித்துக்கூட்டப்பட்டது. இவ்வேகாரம் பிரிநிலைப் பொருளில்வந்தது.)

† அது - குணநலமாகிய அக (உள்) கலம்.

‡ சால்பிற்கு - நிறைவிற்கு.

¶ வாய்மையொடு என்பதன்கணுள்ள எண்ணுப்பொருளில் வந்த ஒடு என்னும் இடைச்சொல் அன்பொடு, நாணொடு, ஒப்புரவொடு, கண்ணோட்டமொடு என்று முன்னுள்ளவற்றோடுங் கூடிநின்றது. "என்று மெனவு மொடுவுந் தோன்றி, ஒன்றும் வழியுடைய வெண்ணினுட் பிரிந்தே" என்பது தொல்காப்பியம்.

§ இக்குணங்கள் - அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் குணங்கள். கண்ணோட்டம் - தாட்சணியம்.

## 1056 திருக்குறள் - பொருட்பால்.

சால்புநிலைபெருமையின் * இவற்றைத் 'தூண்'

என்றார். † எகதேச வுரு வகம்.

தெளி:—(இ-ள்.)

அன்பு - (சுற்றத்தார்மேலேயல்லாமற் பிறர்மேலும் உண்டாகிய) அன்பும், நாண் - (பழிபாவங்களில்) நாணலும், ஒப்புரவு - (யாவரிடத்தும்) உபகாரஞ்செய்தலும், கண்ணோட்டம் - (பழையவர்மேல்) கண்ணோடலும், வாய்மை - (எவ்விடத்தும்) உண்மை கூறுதலும், (என), சால்பு-சால்பென்னும் பாரத்தை, ஊன்றிய - தாங்கிய, தூண் - தூண்கள், ஐந்து - ஐந்தாம், (எ - று).

எண்ணுப் பொருளில் வந்த ஓடு என்னும் இடைச்சொல் முன்னுள்ள வற்றோடு கூடி நின்றது. இக்குணங்கள் இல்லாவிடத்துச் சால்பு நிலைபெறுமையால், இவற்றைத் 'தூண்' என்றார். இஃது ஏகதேச உருவகவணி.

(க-து.) சான்றோர் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை யென்னுங்குணங்களை யுடையவராயிருப்பர் என்பது.

3. Affection, fear of sin, benevolence, favour, and truthfulness are the five-fold pillars on which perfect goodness rests.



ச.

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

பரி:—(இ-ள்.) ‡ பிறவறங்களும் வேண்டுமாயினுந் தவம் ஒருயிரை யுங் கொல்லாத அறத்தின் கண்ணதாம்; அதுபோலப் ¶பிறதுணைகளும் வேண்டுமாயினுஞ் சால்பு பிறர் குற்றத்தைச் சொல்லாத துணத்தின்கண் ணதாம், (எ - று.)

: நலமென்னும் ஆகுபெயர்ப்பொரு | ளிரண்டனையுந் தலைமைதோன்ற

---

* இவற்றை - அன்புமுதலிய குணங்களை.

† அன்புமுதலிய குணங்களைத் தானுக வருவகஞ்செய்தவர் அதற்கினை யச் சால்பினைப்பாரமென்றுருவகஞ் செய்யாமையின், இக்குறள் ஏகதேச வுருவகமாயிற்று.

‡ பிறவறங்களைத்தவமென்னும் அதிகாரத்தின்அவதாரிகையிற்காண்க.

¶ பிறகுணங்களென்றது அன்பு, நாண், ஒப்புரவு முதலியவற்றை.—

: முன்னுள்ளநலத்தது என்பதன் பகுதியதான நலமென்னும்பண்புப் பெயரும் பின்னுள்ள நலத்தது என்பதன் பகுதியதான நலம் என்னும் பண் புப் பெயரும் முறையே அறத்தினையும் குணத்தினையுமுணர்த்தி நின்றமை யின், ஆகு பெயர்களாம். (நலத்திற்கேதுவாய அறத்தையும் குணத்தையும் நலம் நலமெனக்கூறினமையின், இவை காரியவாகுபெயராம்).

| இரண்டனையும் - அறத்தினையும் குணத்தினையும்.

## ஒழிபியல்—சு-வது சான்றாண்மை.

**1057**

† இவ்விரண்டற்கு மதிகாரமாக்கிக் கூறினார். தவத்திற்குக் கொல்லாவறஞ் சிறந்தாற்போலச் சால்பிற்குப் பிறர் குற்றஞ் சொல்லாக்குணஞ் சிறந்த தென்

பதாம்:

தெளி:—(இ - ள்.) நோன்மை—தவமாவது,கொல்லா நலத்தது - (பிற அறங்களும் வேண்டுமாயினும்) ஒருயிரையுங் கொல்லாத அறத்தினிடத்த

தாம், (அதுபோல), சால்பு - சால்பாவது, பிறர்தீமை சொல்லா நலத்ததா -

(பிறகுணங்களும் வேண்டுமாயினும்) பிறர் குற்றத்தைச் சொல்லாத குணத்

தினிடத்ததாம், (எ - று).

நலம் என்னும் ஆதபெயர்ப்பொரு ளிரண்டனையும் தலைமை?தான்று மாறு நோன்மை சால்பு என்னு மிவ்விரண்டனுக்கும் அதிகாரமாக்கிச் சொ

ல்லினர். தவத்திற்குக் கொல்லாத அறம் சிறந்தாற்போன்று சால்பிற்குப் பிறர் குற்றம் சொல்லாதகுணம் சிறந்த தென்பதாம்.

(க - து.) சான்றோர் பிறர் குற்றத்தைச் சொல்லார் என்பது.

4. Penance consists in the virtue of not killing (any living being), and perfection in the goodness that reveals not others faults.



ரு. ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்

## மாறுரை மாறறுமம படை.

பரி:—(இ - ள்.) ஒரு கருமத்தைச் செய்து முடிப்பார் தாற்ற லாவது † அதற்குத் துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக்கொள்ளுதல்—

இனிச் சால்புடையார் தம் பகைவரைப் பகைமை
யொழிக்குங் கரு வி
யும் ¶ அது, (எ - று).

ஆற்றல்—அது () வல்லாந் தன்மை.

*இறந்ததுதழீஇய வெச்சவும்மை

விகாரத்தாற் றொக்கது. சால்பிற்கேற்ற பணிதற் குணத்தது சிறப்புக் கூறுவார் $ எனையது முடன் கூறினர்.

தெளி:—(இ - ள்.) ஆற்றுவார் - (ஒருகருமத்தைச்) செய்து முடிப்ப

வாது, ஆற்றல் - வலிமையாவது, பணிதல் - (அதற்குத் துணையாவாரைத்) தாழ்ந்து கூட்டிக்கொள்ளுதல், சான்றோர் - (இனிச்) சால்புடையவர், மாற் றுரை - (தமது) பகைவரை, மாற்றும்படை - (பகைமை) யொழிக்குஞ் சாதனமும், அது - அதுவாம், (எ - று).

---

† இவ்விரண்டற்கும் - தவத்திற்கும் சால்பிற்கும்

‡ அதற்கு - அக்கருமத்தைச்செய்து முடிப்பதற்கு.

¶ அது - பணிதல். () அது-பணிதல்.

* ஒரு கருமத்தைச்செய்துமுடித்தலே யன்றி யென்பதைத் தழுவி நிற்றலின், தொக்குநின்றவும்மை இறந்ததுதழீஇயதாயிற்று.

$ எனையதும் - ஆற்றுவா ராற்றல் பணிதல் என்பதும்.

ஆற்றல் - அதனைச் செய்யவல்லராந்தன்மை. படையும் என்ற இறந்தது தழுவியஎச்சவும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. சால்பிற்கு ஏற்ற பணிதற் குணத்தது சிறப்பினைச்சொல்லுவார் ஒன்றினமுடித்தல் தன்னினமுடித்தலென்னு முத்தியால் மற்றதையு முடன் சொல்லினார்.

(க-து.) சான்றோர் எப்பொழுதும் பணிவுடையவரா யிருத்தலால், அவர்க்குப் பகைவரிலர் என்பது.

5. Submitting (to inferiors and rallying them to their side) is the strength of those who can accomplish an undertaking; and that is the weapon with which the wise avert the enmity of their foes.

சு. சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
* துலையல்லார் கண்ணுங் கொளல்.

பரி:—(இ - ள்.) சால்பாகிய பொன்னி னளவறிதற்கு உரைகல்லா கிய செயல் யாதெனின், † அது தம்மி னுயர்ந்தார் மாட்டுக் கொள்ளுந் தோல்வியை இழிந்தார்மாட்டுங் கோடல், (எ - று).

துலை—ஒப்பு.

‡ எச்சவும்மையான் இருதிறத்தார் கண்ணும் வேண்டுதல் பெற்றும். கொள்ளுதல்—வெல்லுமாற்றலுடையராயிருந்தே ஏற்றுக்கொள் ளுதல். இழிந்தாரை வெல்லுதல் கருதித் தம்மோ டொப்பித்துக்கொள் ளாது தோல்வியான் ¶ அவரி னுயர்வாயின், ‖ அதனுற் சால்பளவறியப் படு மென்பதாம்.

தெளி:—(இ-ள்.) சால்பிற்கு - சால்பாகிய பொன்னினளவறிதற்கு, கட்டளை - உரைகல்லாகிய செயல், யாதெனின் - யாதென்றால், (அது), தோல்வி - (தம்மினுமுயர்ந்தவரிடத்துக் கொள்ளுந்) தோல்வியை, துலையல் லார்கண்ணும்-இழிந்தவரிடத்தும், கொளல் - கொள்ளுதலாம், (எ-று).

துலை-சமானம். துலையல்லார்கண்ணும் என்ற எச்சவும்மையால் தோல் வியை இருதிறத்தாரிடத்தும் விரும்புதல்பெற்றும். கொள்ளுதல்-(சான்றோர் இழிந்தாரை) வெல்லும்வலிமையுடையராயிருந்தே (அவரிடத்துத்தோல்வி யை) ஏற்றுக்கொள்ளுதல். சான்றோர் இழிந்தாரை வெல்லநினைத்துத் தம்

---

* துலையல்லார்-ஒப்பாகாதவர். † அது - அச்செயல்.

‡ துலையல்லார் கண்ணும் என்ற எதிரது தழுவிய எச்சவும்மையினால் உயர்ந்தார் இழிந்தாரென்னும்

இருதிறத்தாரிடத்தும் (தோல்வி) வேண்டுதல் பெற்றும்.

உயர்ந்தார்கண் கொள்ளுங்
தோல்வியைத் தூலையல்லார் கண்ணும் கொளல் என்று
கொள்க.

$ எற்றுக்கொள்ளுதல் - அங்கீகரித்துக் கொள்ளுதல்.

¶ அவரின் - இழிந்தாரைக்காட்டிலும்.

‖ அதனல் - தோல்வியாலுயருதலால்.



மோடு சமானமாக்கிக் கொள்ளாமல் தோல்வியால் அவரிலும் உயர்வசாயின், அதனல் அவரது சால்பினளவு அறியப்படு மென்பதாம்.

(க - து) சான்றோர் தம்மிலும் உயர்ந்தாரிடத்துக் கொள்ளுந்தோல்வியை இழிந்தாரிடத்துங் கொள்ளுவர் என்பது.

6. The touch-stone of perfection is to acknowledge defeat even at the hands of one's inferiors.

எ.

இன்னுசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு.

பரி:—(இ - ள்.) தமக்கின்னுதவற்றைச் செய்தார்க்குத் சால்புடை யார் இனியவற்றைச் செய்யாராயின், அச்சால்பு வேறென்ன பயனை யுடைத்து, (எ - று).

சிறப்புமை அவர் இன்னுசெய்தற் கிடனுதல் விளங்கி நின்றது. ஓகாரம்-அசை. * விஞ-எதிர்மறைப் பொருட்டு. † தாமும் மின்னு செய்வாராயின், சால்பா லொருபயனுமில்லை யென்பதாம். இவை சிறப்புவகையாற் கூறப்பட்டது.

யைந்து பாட்டாலுஞ்

தெளி:—(இ-ள்.) (சால்புடையார்) இன்னு - (தமக்குத்) தன்பந்தரு வனவற்றை, செய்தார்க்கும்-செய்தவர்க்கும், இனியவை-இன்பந் தருவன வற்றை, செய்யாக்கால்-செய்யாராயின், சால்பு-அச்சால்பு, என்ன பயத்தது- (வேறு) என்ன பயனை யுடையது, (எ - று).

இன்னுசெய்தார்க்கும் என்ற இழிவுசிறப்புமை அவர் சால்புடையார்

இன்னுதவற்றைச் செய்தற்கு இடமாதலை விளக்கிநின்றது. ஓ-அசை.என்ன என்னும்வினு எதிர்மறைப் பொருளது.தாமும் இன்னுசெய்தவர்க்கு இன்னு செய்வாராயின், தம்முடைய சால்பால் ஒருபயனும் இல்லை யென்பதாம். இவை ஐந்து பாட்டாலும் சால்பு சிறப்புவகையாற் சொல்லப்பட்டது.

(க - து.) சால்புடையார் தீமை செய்தவர்க்கும் நன்மைசெய்யாராயின்,* அவர் சால்பா லொருபயனுமில்லை என்பது.

7. Of what avail is perfect goodness if one cannot do delightful actions even to those who do evil (for good).



அ. இன்னை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

* என்ன என்னும்வினா இங்குஎதிர்மறைப்பொருளில் வந்தது.[என்ன என்பது யாதொருபயனையு முடையதன்றுமென்னும் பொருளில் வந்ததென்பதாம்.] † தாழும் - சால்புடையாகும்.



பரி:—(இ - ள்.) சால்பென்று சொல்லப்படும் வலியுண்டாகப் பெறின், ஒருவனுக்கு நல்தாவு இளிவாகாது, (எ - று).

† தளராமை நாட்டுதலின், வலியாயிற்று. * இன்மையான் வருவதனை இன்மைதானுக வுபசரித்துக் கூறினர். சால்புடையார் நல்கூர்ந்தவழியும் மேம்படுதலுடைய ரென்பதாம்.

தெளி:—(இ - ள்.) சால்பென்னும் - சால்பென்று சொல்லப்படும், திண்மை - வலிமை, உண்டாகப்பெறின் - உண்டாகப்பெற்ற ல், ஒருவற்கு- ஒருவனுக்கு, இன்மை-வறுமை, இளிவன்று - இழிவாகாது, (எ - று).

தளராமல் நாட்டுதலால், சால்பு வலியாயிற்று. இன்மையால் வரும் வறுமையை இன்மையாகவே உபசரித்துக் கூறினர். சால்புடையவர் வறுமை நேரிட்டவிடத்தும் மேம்படுதலுடையாரவ ரென்பதாம்.

(கூ - து.) சால்புடையார் வறுமை யடைந்தவிடத்தும் அது ஞல் இழிவடைவதில்லை என்பது.

8. Poverty is no dishonor to one who abounds in good qualities.

ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.

பரி:—(இ - ள்.) சால்புடைமையாகிய கடற்குக் கரையென்று சொல்லப்படுவார் ஏனைக்கடலுங் கரையுணில்லாமற் காலந்திரிந்தாலும், தாந்திரியார், (எ - று).

சாண்றாண்மையது பெருமைதோன்ற ¶ அதனைக் கடலாக்கியும், | அதனைத்சாங்கிக்கொண்டு நிற்றலின் : அஃதுடையாரைக் கரையாக்கியுங்

---

† தளராமை நாட்டுதலின்-சால்பு வறுமையால் மனந்தளராவாறு நிலை பெறச் செய்தலால்.

* இன்மை (பொருளில்லாமை)யால் வரும் வறுமையை இன்மையாக வே உபசரித்துச் சொல்லினர். இது காரணம் காரியமாய வுபசாரவழக்காம்; கருவியாகுபெயரெனினு மொக்கும்.

‡ " தலைப்படு சால்பினுக் குந்தள ரேன்சித்தம் பித்தனென்று, மலைத் தறி வாரில்லை யாரையுந் தேற்றுவன்" என்று திருக்கோவையார் கூறுவதிற் குணர்த்தற்பாலதாம்.

அதனை -சான்றாண்மையை

| அதனை-சான்றாண்மையாகியகடலை.

அஃதுடையாரை - சான்றாண்மையுடையவரை.

கூறினர். * "பெருங்கடற் காழி யனையன் மாதோ" என்றார் பிறரும். () ஏக தேச வுருவகம்.

தெளி:—(இ - ள்). சான்றாண்மைக்கு - சால்புடைமையாகிய கடலுக்கு, ஆழியெனப்படுவார் - கரையென்று சொல்லப்படுவார், ஊழிபெயரினும் - (மற்றைக்கடலும் கரையுள் நில்லாமற்) காலம் வேறுபட்டாலும், தாம் பெயரார் - தாம் வேறுபடார், (எ - று).

சான்றாண்மையின் பெருமை தோன்ற அதனைக் கடலாக்கியும், அதனைத் தாங்கிக்கொண்டு நிற்றலால் அதனை யுடையாரைக் கரையாக்கியும் சொல்லினர். இஃது ஏகதேசவுருவகவணி.

(க - து.) சால்புடையார் தமக்குப் பெருந்துன்பமுண்டாய விடத்தும் தமது நிலையினின்றும் மாறுபடார் என்பது.

9. Those who are said to be the shore of the sea of perfection will never change, though ages may change.

கo. சான்றவர் சான்றுண்மை குன்றி
னிருநிலந்தான்
* றுங்காது † மன்னே பொறை.

பரி:—(இ-ள்.) ‡ பலதுணங்களானு நிறைந்தவர்
த்நீதன்மை தன்
றுவாயின், மற்றையிருநிலந்தானுந் தன் பொறையைத்
தாங்காதாய்
முடியும், (எ-று).

¶ தானுமென்னு மெச்சவும்மை விகாரத்தாற்
றொக்கது. § அவர்க்

---

* புறநானூறு, - 330. இதன்டெருள்
(பகைவரதுசேனை தன்னளவு
கடந்துவாராதபடி விலக்குதலிலுலே)பெரியகடலுக்கு
(அதனீரை யளவுகட
ந்து வாராதபடி விலக்குகின்ற) கரையை யொத்தவன்
என்பது.

() சான்றுண்மையுடையாரை ஆழியாக

(கரையாக) வருவகஞ் செய்த

வர் அதற்கியையச் சான்றாண்மையைக் கடலாக வருவகஞ் செய்யாமையின்,

இஃது ஏகதேச வருவகமாயிற்று.

† மன்னே என்பதன்கண் மன் என்னு மிடைச்சொல் ஒழியிசைப்

பொருளிலும், ஓ என்னு மிடைச்சொல் அசைநிலைப்பொருளிலும் வந்தன.

ஒழியிசையாவது எச்சமாய் ஒழிந்து நின்ற சொற்பொருளை யுணர்த்துவதாம்.

‡ சான்றவர் சான்றாண்மை குன்றுவதால் இருநிலம் பொறை தாங்

காது போதலால், சான்றாண்மை குன்றுதல் காரணமாம்; பொறை தாங் காமை காரியமாம். ¶ இருநிலந்தாஞும் என்பது சான்றவர் சான்றாண்மை குன்றுதலைத் தழுவி நிற்றலின், தாங்குநின்ற தானு மென்றவும்மை எதிரதழீஇய வெச்சவும்மையாயிற்று.

$ அவர்க்கது - சான்றவர்க்குச் சான்றாண்மை.



காது குன்றாமையும் * அதற்காது தாங்கலும்
இயல்பாகலான், † அவை

யெஞ்ஞான்று முளவாகா நின்றனவென்பது தோன்ற நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் - அசை. ¶ இதற்கு இருநிலம் பொறை தாங்குவது சான்றவர் துணையாக வருதலான், அதுவும் அது தாங்கலாற்று தென்றுரைப்பாருமுளர். இவை மூன்று பாட்டானும் அவற்று ளிறைந்தவ ரது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) சான்றவர் - (பல குணங்களாலும்) நிறைந்தவர், சான்றுண்மை - (தமது) தன்மை, குன்றின் - குன்றுவராயின், இருநிலந் தான் - மற்றைப் பெரிய பூமிதானும், பொறை-(தன்) பாரத்தை, தாங்காது- தாங்காதாய் முடியும், (எ - று).

தானுமென்ற எதிரது தழுவிய எச்சவும்மை செய்புள் விகாரத்தால் தொக்குநின்றது. அவர்க்கு அது குன்றுமையும் அதற்கு அது தாங்கலும் இயல்பாகலால், அவை எந்நாளும் உளவாகா நின்றன வென்பது தோன்ற நின்றமையால், மன்னென்னு மிடைச்சொல் ஒழியிசைப் பொருளில் வந்தது. ஓகாரம் - அசை. இவை மூன்று பாட்டாலும் அப் பலகுணங்களாலும் நிறைந்தவரது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) சால்புடையார் தமது நிலையினின்றும் மாறுபடுவராயின், உலகம் நிலைபெறுது போம் என்பது.

10. If there be a descent in the character of the perfect, even the great world cannot bear its burden.

## ஐந்தாவது அதிகாரம்.

## பண்புடைமை:—Proper Behaviour.

**பரி:—அஃதாவது பெருமை சான்றாண்மைகளிற் றும் வழுவாது**

நின்றே எல்லாரியல்புகளு மறிந்தொத்தொழுதுதல்; ‡ "பண்பெனப்

---

* அதற்கது - பூமிக்குப் பாரம்.

† அவை - சான்றவர்க்குச் சான்றாண்மை குன்றாமையும், பூமிக்குப்

பாரந்தாங்கலும்.

¶ இதற்கு (இக்குறளுக்கு) இருநிலம் - பெரிய பூமி, பொறை-பாரத்

தைத் தாங்குவது, சான்றவர் - (பல குணங்களாலும்) நிறைந்தவர், (துணையாக வருதலான்), (அவர் சான்றாண்மை குன்றின்), தாங்காது - (அப்பூமியும் அப்பாரத்தை) தாங்குதல் செய்யாது என்று பொருள் கூறுவாருமுண்டு.

‡ கலித்தொகை - நெய்தற்கலி. 16. இதன் பொருள்.

மக்கட் பண்பு என்று சொல்லப்படுவது உலக வொழுக்க மறிந்தொழுகுதல் என்பது.

படுவது பாடறிந் தொழுதல்" என்றார் பிறரும். † அதிகார முறைமையும் இதனுளே விளங்கும்.

தெளி:—அஃதாவது பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாதிருன்றே எல்லாரியல்புகளும் அறிந்து அவற்றிற்கொத்தொழுகுதல். அதிகார முறைமையும் இதனுலே விளக்கும்.

க. எண்பதத்தா லெய்த லெளிதென்ப
யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

பரி:—(இ-ள்.) யாவர்மாட்டு ‡ மெளியசெவ்வியாதலால் அரிதாய பண்புடைமை யென்னும் நன்னெறியினை யேமுதல் எளிதென்று சொல்லுவர் நூலோர், (எ - று).

குணங்களா னிறைந்து செவ்வியெளியரு மாயக்காற் பண்புடைமை தானே உளதா மாகலின் 'எண்பதத்தா லெய்த லெளிது' என்றும், ¶ அஃது திலகத்தை யெல்லாம் வசிகரித்தற் பயத்த தாகலின்+ அதனைத் தொல் லோர் சென்ற § நன்னெறி யாக்கியும், * அதனை யெளிதி

னெய்துதற்கு

: இது நூலோரோதிய வுபாயமென்பார் | அவர்மேல் வைத்துங் கூறினர்.

தெளி:—(இ - ள்.) யார்ப ராட்டும்-யாவரிடத்தும், எண்பதத்தால்-எளிய சமயத்தராதலால், பண்புடைமை யென்னும் - (அரிதாகிய) பண்புடைமை

யென்று சொல்லப்படுகின்ற, வழக்கு - நல்வழியினை, எய்தல் - அடைதல், எளிது-இலேசு, என்ப - என்று சொல்லுவர், (நூலோர்), (எ-று).

குணங்களால் நிறைந்து எளிய
சமயத்தருமாகியவிடத்துப் பண்புடைமை தானே
உளதாமாகலால் 'எண்பதத்தா லெய்த லெளிது' என்றும்,
அஃது உலகத்தையெல்லாம் தன்வயப்படுத்தற் றன்மையதாக
விருத்தலால் அதனை

"வழக்கு' என்று பழையோர் சென்ற நல்வழியாக்கியும், அதனை எளிதி லடைவதற்கு இது நூலோரோதிய உபாயமென்பார் 'என்ப' என்று அவர் மேல் வைத்தும் சொல்லினர்.

(க - து.) குணங்களால் நிறைந்து யாவரிடத்தும் எளிய சமயத்தை யுடையவராயிருப்பவர் பண்புடைமையை யெளிதிற் பெறுவர் என்பது.

1. By being easily accessible to all, it will be easy for one to acquire the virtue of goodness.

† பெருமை, சான்றாண்மை யென்னு மதிகாரங்களின்பின் பண் புடைமை யென்னும் அதிகாரம் வைத்த முறைமையும்.

‡ எளிய செவ்வியராதல் - காண்பதற் கெளிதாய சமயத்தாராயிருத்தல்.

¶ அஃது - பண்புடைமை. + அதனை - பண்புடைமையை.

§ நன்னெறி - சன்மார்க்கம். * அதனை - பண்புடைமையை.

: இது—யாவரிடத்தும் எளியசமயத்தாராயிருத்தல். | அவர்-தூலோர்.



## உ. அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்

### பண்புடைமை யென்னும் வழக்கு.

பரி:—(இ - ள்.) பிறர்மே லன்புடைய ராதலும் உலகத்தோ டமைந்த குடியின்கட் பிறத்தலுமாகிய இவ்விரண்டும் ஒருவனுக்குப் பண் புடைமை யென்று உலகத்தார் சொல்லும் நன்னெறி, (எ - று).

அமைதல் - † ஒத்துவருதல். § குடிப்பிறத்த லென்றது பிறந்தார் செயலை. ‡ தனித்த வழி ஆகாது இரண்டுங் கூடிய வழியே ஆகுதென்பது தோன்ற, முற்றும்மை கொடுத்தார். * காரணங்கள் காரியமாக வுபசரிக்கப் பட்டன. இவையிரண்டு பாட்டானும் பண்புடையராதற் காரணங் கூறப் பட்டது.

தெளி:—(இ - ள்.) அன்புடைமை - (பிறர்மேல்) அன்புடைய ஞத

லும், ஆன்றகுடிப் பிறத்தல் - (உலகத்தோடு) அமைந்த குடியிற் பிறத்தலும், (ஆகிய); இவ்விரண்டும்—, பண்புடைமை யென்னும்—(ஒருவனுக்குப்) பண் புடைமை யென்று (உலகத்தார்) சொல்லும், வழக்கு-நல்வழியாம், (எ - று).

அமைதல் - ஒத்துவருதல். குடிப்பிறத்தலென்றது குடியிற் பிறந்தவரது செயலே. தனித்தவிடத்து ஆகாது இரண்டுங் கூடியவழியே பண்புடைமை யாவதென்பது தோன்ற, இவ்விரண்டும் என முற்றும்மை கொடுத்தார். 'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல்' என்னும் காரணங்கள் 'பண்புடை மை யென்னும் வழக்கு' என்று காரியமாக உபசரிக்கப்பட்டன. இவை இரண்டு பாட்டாலும் பண்புடையாதற்குக் காரணம் சொல்லப்பட்டது.

---

† ஒத்துவருதல் - உலகத்தோடொத்தொழுகுதல்.

§ குடிப்பிறத்தல் என்பது குடிப்பிறந்தாரது செயலே யுணர்த்துதலின், இருமடியாகுபெயராம். குடிப்பிறத்தலென்பது குடிப்பிறந்தாரை யுணர்த் துதலால் தொழிலாகுபெயராம்; குடிப்பிறந்தாரென்பது அவரது செயலே யுணர்த்துதலால் பொருளாகுபெயராம்.

‡ அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் என்னு மிரண்டனுள் ஒன்று தனித்துள்ள விடத்துப் பண்புடைமை யுண்டாகாது இவ்விரண்டுங் கூடிய விடத்தே (பண்புடைமை) யுண்டாவ தென்பது தோன்ற 'இவ்விரண்டும்' என முற்றும்மை கொடுத்தார்.

* அன்புடைமையாலும் ஆன்ற குடிப்பிறத்தலாலும் உண்டாகும் பண்புடைமையை 'அன்புடைமை யான்ற

குடிப்பிறத்த லிவ்விரண்டும், பண் புடைமை யென்னும் வழக்கு' என்றொற்றுமை செய்து கூறினமையின் ' காரணங்கள் (அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் என்னுங் காரணங் கள்) காரியமாக (பண்புடைமை யென்னும் வழக்கு என்று காரியமாக) வுப சரிக்கப்பட்டன ' என்று கூறப்பட்டது. இவ்வாறு வருவது காரணம் காரியமாய வுபசார வழக்காம்.



(க - து.) பண்புடைமை அன்புடைமையாலும் உயர்ந்த குடியிற் பிறத்தலாலு முண்டாவதாம் என்பது.

2. Affectionateness and high born dignity, these two are beaten paths of courtesy.

---

ரு. உறுப்பொத்தன் மக்களோப் பன்ருல் ‡
வெறுத்தக்க

பண்பொத்த லொப்பதா மொப்பு.

பரி:—(இ - ள்.) செறியத்தகாத வுடம்பாலொத்தல் ஒருவனுக்கு நன்மைக்களோ டொப்பாகாமையின், ¶ அது பொருந்துவதன்று; இனிப் பொருந்துவதாய வொப்பாவது செறியத்தக்க பண்பா லொத்தல்.

§ வடநூலார் அங்கமென்றமையின் 'உறுப்பு' என்றார் ஒருவனுக்கு நன்மக்களோடு பெறப்படு மொப்பாவது * உயிரின் வேறாய் நிலையுதலில்லா வுடம்பொத்தலன்று; வேறன்றி நிலையுதலுடைய பண்பொத்தலாகலான், அப் பெற்றித்தாய ‡ அவர் பண்பினையுடையரெனவென்பதாம்.

தெளி:—(இ - ள்.) உறுப்பொத்தல் - (நெருங்கத்தகாத) உடம்பா லொத்தல், மக்களொப்பன்று - (ஒருவனுக்கு) நன்மக்களோடு ஒப்பாகாது, (ஒப்பாகாமையால் அது பொருந்துவதன்று), ஒப்பதாம் - (இனிப்) பொருந்துவதாகிய, ஒப்பு - ஒப்பாவது, வெறுத்தக்க - நெருங்கத்தக்க, பண்பொத்தல், பண்பாலொத்தல், (எ - று)

வடநூலார் உடம்பை அங்கமென்று கூறுகின்றமைபற்றி 'உறுப்பு' என்றார். ஒருவனுக்கு நன்மக்களோடு பெறப்படும் ஒப்பாவது உயிரின் வேறாய் நிலைபெறுவதில்லாத உடம்பா லொத்தலன்று; வேறாகாது நிலை பெறுதலுடைய பண்பா லொத்தலாகலால், அத்தன்மையதாகிய அவர் பண்பினை யுடையவனென வென்பதாம்.

(க - து.) நன்மக்களோடு உடம்பா லொத்திராது குணத்தா லொத்திருப்பவரே பண்புடையாராவர் என்பது.

‡ வெறுத்தக்க என்பது வெறுக்கத்தக்க என்பதன் விகாரம். வெறுத்தல் செறிதல் அல்லது நெருங்கல். ¶ அது-உடம்பா லொத்தல்.

§ நீதிநெறி விளக்கம் 'அங்கங் (உடல்) குலைவதறிவு' என்று கூறுவது

மிங்குணர்த்தற் பாலதாம்.

* ஒருவன் உடம்பு உயிரின் வேறும் நிலைபெறுவதில்லா திருந்தலின், அதனால் நண்மக்களோடு ஒப்பாதல் கூடாது; பண்பு (நற்குணம்) உயிரின் (நீரில் நெகிழ்ச்சிபோல) வேறுகாது நிலைபெறுவதாக விருத்தலின், அதனால் ஒப்பாதல் வேண்டும் என்றுணர்ந்து நண்மக்களது பாடறிந்தொழுகும் பண்பினைக் கடவனென்பதாம். ‡ அவர்-நண்மக்கள்.





3. Men

are not one because their members seem alike; similitude of kindred qualities makes true likeness.



ச. நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.

பரி:—(இ - ள்.) நீதியையும் அறத்தையும் விரும்புதலாற் பிறர்கீதந் தமகீதம் பயன்படுத லுடையாரது பண்பினை உலகத்தார் கொண்டாடா நிற்பர், (எ - று).

* புரிந்த வென்னும் பெயரெச்சம் ஈண்டுக் காரணப் பொருட்டு.
† நயனெடு நன்றிபுரிதலும் பயனுடைமையும் பண்புகாரணமாக வந்தமை யின், ‡ அதனைப் 'பாராட்டும்' என்றார்.

தெளி:—(இ-ள்.) நயனெடு-நீதியையும், நன்றி-அறத்தையும், புரிந்த- விரும்புதலால், பயனுடையார்-(பிறர்க்குந் தமக்கும்) பயன்படுத லுடையவ

ரது, பண்பு - பண்பினை, உலகு - உலகத்தார், பாராட்டும் - கொண்டாடா

நிற்பர், (எ - று).

புரிந்த என்னும் பெயரெச்சம் இங்குக் காரணப் பொருளில் வந்தது.

நயனெடு நன்றிபுரிதலும் பயனுடைமையும் பண்பு காரணமாக வந்தமை

யால், (உலகு) அதனைப் 'பாராட்டும்' என்றார்.

(க - து.) பண்புடையார் நீதியையும் தருமத்தையும் விரும்

புதலால் பிறர்க்கும் தமக்கும் பயன்படுதலுடையவராக விருத்த லின், அவரது குணத்தை உலகத்தார் கொண்டாடாநிற்பர் ().

4. The great applaud the character of those whose fruitfulness results from their equity and charity.

நகையுள்ளு மின்னு திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

பரி:—(இ - ள்.) † தன்னை யிகழ்தல் ஒருவற்கு வினையாட்டின்கண்ணும் இன்னாது; ஆகலாற் பிறர்பாடறிந் தொழுதுவார் மாட்டுப் பகைமையுள்வழியும் அஃதுளதாகாது இனியவாய பண்புகளேஉளவாவன, எ-று.

* புரிந்த என்னும் பெயரெச்சம் பயனென்னும் பெயர் கொண்டுமுடிந்தது. (நயனுடைநன்றி) புரிதலால் பயனுண்டாவதால் புரிதல் காரணமாம்; பயன் காரியமாம்.

† பண்பில்லாரிடத்து நயனுடைநன்றி புரிதலும் அது காரணமாகப் பிறர்க்கும் தமக்கும் பயன்படுதலு மிலவாமென்க. 4 அதனை-பண்பினை.

† பிறர் தன்னை யிகழ்ந்து பேசுதல்.



**1067**

'பாடறிவார்' எனவே † அவ்வின்னுமை

யறிதலும் பெற்றும். ‡ அது னையறிந்தவர் பின் ¶ அது

செய்யார்; இனியவே செய்வரென்பது கருத்து. * இதற்குப் பிறரெல்லாம் §இரண்டு தொடருந் தம்மு ‖ ளிணைபயாம லுரைப்பாரும், இன்னுதென்னுஞ் சொற்குப் பிறவாதென் றுரைப்பாரு மாயினர்.

தெளி:—(இ - ள்.) இகழ்ச்சி - (தன்னை) இகழ்தல், நகையுள்ளும் - (ஒருவனுக்கு) விளையாட்டினிடத்தும், இன்னுது-துன்பந்தருவதாம், (ஆக லால்), பாடறிவார் மாட்டு - (பிறர்) இயல்பினையறிந்து நடப்பவரிடத்தி, பகையுள்ளும் - பகையுள்ளவிடத்தும், பண்பு - (அப்பகை யுண்டாகாமல் இனிமையனவாகிய) பண்புகளே, உள - உண்டாவனவாம்; (எ - று).

'பாடறிவார்' எனவே அவ்வின்னுமையை யறிதலும் பெற்றும். அதனை அறிந்தவர் பின் அது செய்யார்; இனியனவே செய்வாரென்பது கருத்து.

(க - தி.) பண்புடையார் பகையுண்டாயவிடத்தும் இனிமைக்குணமுடையவராகவே இருப்பார் என்பது.

5. Contempt is painful even in sport; they who know
man's nature therefore exhibit courteous qualities even when they are hated.

சு. பண்புடையார்

பட்டுண் டுலக மதுவின்றேன்

மண்புக்கு மாய்வது மன்.

பரி:—(இ - ள்.) பண்புடையார்கண்ணே படுதலால் உல | கியல் எஞ்ஞான்று முண்டாய் வாராநின்றது; () ஆண்டுப்பதே லில்லையாயின், அது மண்ணின்கட் புக்க மாய்ந்து போவதாம், (எ - று).

: படவென்பது திரிந்து நின்றது. o உலகு-ஆகுபெயர். மற்றைப்பண் பில்லார் சார்பன்மையின் ஓர் []சார்புமின்றி மண்ணின்கட்புக்கு o மாயுமது

---

† நகையுள்ளும் இகழ்ச்சி யின்னுதென்பதை.

‡ அதனை - நகையுள்ளும் இகழ்ச்சியின்னு தென்பதை.

¶ அது - இன்னுமை. * இதற்கு - இக்குறளிற்கு.

§ இரண்டு தொடரும் - இகழ்ச்சி

நகையுள்ளுமின்னுது; பாடறிவார்

மாட்டுப் பகையுள்ளும் பண்புள என்னும் இரண்டு தொடரும்.

‖ இயையாமல் - பொருந்தாமல். | இயல் - ஒழுக்கம்.

() ஆண்டுப்படுதல் (உலகியல்) பண்புடையவரிடத்தே பொருந்துதல்.

: காரணப்பொருளில் வந்த படவென்னும் செயவெனெச்சம் பட்டு எனத் திரிந்து நின்றது. o உலகு என்னுமிடப்பெயர் உலகில் நிகழும் இயலை (ஒழுக்கத்தை) யுணர்த்துதலால், இடவாகுபெயராம்.

[] சார்புமின்றி - ஆதாரமுமில்லாமல்.

o மாயுமது (நாசமுறும் உலகியல்) வேண்டாவாயிற்று; (தானிருத்தற் காதாரமாகப் பண்புடையவ ரிருத்தலால் நாசமுறுதலை விரும்பாதாயிற்று).

வேண்டாவாயிற் றென்பது படு நின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. இவை நான்கு பாட்டானும் † அதனை யுடையாரதுயர்ச்சி கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) பண்புடையார் - பண்புடையவரிடத்தே, பட்டு-படுதலால், உலகம்-உலகியல், உண்டு - (எங்ஙனமும்) உளதாய்வராநின்றது, இன் றேல் - (அங்ஙனப்படுதல்) இல்லையாயின், அது - அவ்வுலகியல், மண்புக்கு- மண்ணிற்புகுந்து, மாய்வது - மாய்ந்துபோவதாம்,(எ - று).

படவென்னும் எச்சம் பட்டெனத் திரிந்து நின்றது. உலகு-இடவாகு

பெயர். மற்றைப்பண்பில்லார் சார்பல்லாமையால் ஒருசார்பு மில்லாமல் மண் ணிற் புகுந்து மாயுமது வேண்டாவாயிற்றென்பது தோன்ற நின்றமையால், மன்னென்னுமிடைச்சொல் ஒழியிசைப் பொருளில் வந்தது. இவை நான்கு பாட்டாலும் அதனை யுடையவரது உயர்ச்சி சொல்லப்பட்டது.

(க - து.) உலகியல் டண் டுனடயவரிடத்தன்றி மற்றவரிடத் தில்லையாம் என்பது.

6. The world abides by contact with the good; if not,
it would fall to dust and perish.

எ. அரம்போலுங் கூர்மைய ரேனு
மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

பரி:—(இ - ள்.) நன்மக்கட்கேயுரிய பண்பில்லாதவர் அரத்தின் கூர்மைபோலுங் கூர்மையையுடையரே யாயினும் ( )ஓரறிவிற்றய மரத்தினை யொப்பர். (எ - று).

‡ அரம்-ஆகுபெயர். ஓரறிவு-ஊற்றினையறிதல். ¶ உவமையிரண்டனுள், * முன்னது தான் $ மடிவின்றித் தன்னையுற்ற பொருள்களை () மடிவித்தலாகிய தொழில் பற்றி வந்தது; | எனையது : விசேட வறிவின்மையாகிய

† அதனை - பண்பினை.
() " புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர் " என்பதனுன்னுல்.

‡ அரம் என்னும் பொருட்பெயர் அரத்தின் பண்பாகிய கூர்மையை யுணர்த்துதலால், பொருளாகுபெயராம்.

¶ உவமை யிரண்டனுள் - அரத்தின்கூர்மை, மரம் என்னுமுவமான மிரண்டனுள்.

* முன்னது - அரத்தின் கூர்மை யென்பது.
$ மடிவு - மடங்குதல். () மடிவித்தல் - கெடச் செய்தல்.
| ஏனையது - மரம் என்பது.

: விசேடவறிவு - மனவுணர்வு (பகுத்தறிவு). "மக்கடாமே யாறறி
வுயிரே" என்பது தொல்காப்பியம். ஆறுவதறிவு-மனவுணர்வு.



பண்புபற்றி வந்தது.

அவ்விசேட வறிவிற்குப் பயனுய மக்கட்பண்பின்மையின், † அதுதானுமில்லை யென்பதாயிற்று.

தெளி:—(இ - ன்.) மக்கள் - நன்மக்களுக்கே, (உரிய), பண்பில்லாத வர், குணமில்லாதவர், அரம்போலும், அரத்தின் கூர்மைபோலும், கூர்மைய

ரேனும் - கூர்மையை யுடையவரேயாயினும்,

மரம்போல்வர் - (ஓரறிவின தாகிய) மரத்தினை யொப்பர், (எ - று).

அரம் - பொருளாகு பெயர். ஓரறிவு - பரிசத்தை யறிதல். உவமான

மிரண்டனுள், முன்னது தான் மடிதலில்லாமல் தன்னையுற்ற பொருள்களை மடிவித்தலாகிய தொழில் பற்றி வந்தது; மற்றது விசேட அறிவில்லாமை யாகிய குணம்பற்றி வந்தது. அவ்விசேட வறிவிற்குப் பயனாகிய மக்கட் பண்பில்லாமையால், அவ்வறிவுதானுமில்லை யென்பதாயிற்று.

(க - து.)பண்பில்லாதவர் அரத்தின் கூர்மை போலுங் கூரிய

புத்தியையுடையவராயிருப்பினும்

மரத்தோடொப்பாவர் என்பது. 7.

He who is devoid of humane courtesy only resembles a tree, though sharp his wit may be as a file.



அ. நண்பாற்ற ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்ற ராதல் கடை.

பரி:—(இ - ள்.) தம்மோடு நட்பினைச் செய்யாது பகைமையைச்
செய்தொழுதவர்மாட்டும் தாம் பண்புடையரா
யொழுகாமை அறி
வுடையார்க்கிழுக்காம், (எ - று).

நயம் - ‡ ஈரம். சிறப்பும்மை ¶ அவர் பண்பாற்றுமைக் கிடனுதல் தோன்ற நின்றது. o அதனைச் செய்யிற் * றுமும் () அவர் தன்மையராவ ரென்பார் 'கடை' என்றார்.

தெளி:—(இ - ள்.) நண்பு* - நட்பினை, ஆற்றாராகி - (தம்மொடு) செய்யாதவராகி, நயமில - பகைமையை, செய்வார்க்கும் - செய்து நடப்பவரிடத்தும், பண்பாற்றாராதல்-(தாம்) பண்புடையவராய் நடவாமை, கடை-(அறிவுடையவர்க்கு) இழுக்காம், (எ - று).

நயம் - ஈரம். செய்வார்க்கும் என்ற இழிவு சிறப்பும்மை அவர் பண்புடையார் பண்புடையவராய்நடவாமைக்கு இடமாதல்தோன்ற நின்றது. அதனைச் செய்யின் தாமும் அவர் தன்மைய ராவரென்பார் 'கடை' என்றார்.

(க - து.) பண்புடையார் பகைவரிடத்தும்
அன்புடையவராக
விருப்பர் என்பது.

† அதுதானும் - விசேட வறிவும். ‡ ஈரம் - அன்பு.

¶ அவர்-நயமிலசெய்வார். o அதனை-பண்புடையவராய் நடவாமையை.

* தாமும்-பண்புடையாரும். () அவர் - நயமிலசெய்வார்.



8. It is uttermost disgrace to fail in courtesy even towards those who bearing no friendship for them do only what is harmful.

கூ. நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

பரி:—(இ - ள்.) பண்பின்மையான் ஒருவரோடுங்கலந்து உண்மைகிழ்தன்மாட்டாதார்க்கு மிகவும் பெரிய ஞாலம் இருளில்லாப் பகற்பொழுதிலும் இருளின்கட் கிடந்ததாம், (எ - று).

எல்லாரோடுங் கலந்தறியப் பெருமையிற்
பண்பில்லார்க்கு உலகியல் தெரியாதென்பார், (†) மாயிரு ஞாலம் பகலும் இருள்பாற் பட்டன்று என் றார். ‡

பாழ்பட்டன்றிரு ளென்று பாடமோதி,
இருணீங்கிற்றன்றென் றுரைப்பாரு மூளர்.

தெளி:—(இ - ள்.) நகல்வல்ல ரல்லார்க்கு - (பண்பில்லாமையால் ஒருவரோடுங் கலந்து) உள் மகிழ்தல் மாட்டாதவர்க்கு, மாயிருஞாலம் - மிகவும் பெரிய பூமியானது, பகலும் - (இருளில்லாத) பகற் பொழுதிலும், இருள்பால் - இருளினிடத்து. பட்டன்று - கிடந்ததாம், (எ - று).

எல்லாரோடும் கலந்து அறியப் பெருமைபால் பண்பில்லாதவர்க்கு உலகியல் தெரியாதென்பார், மாயிருஞாலம் பகலும் இருள்பாற் பட்டன்று என்றார்.

(க - து.) பிறரோடு நட்புச் செய்தொழுகும் பண்பில்லாத வர்க்கு உலகியல் தெரியாது என்பது.

9. To those who cannot rejoice in kindnes, darkness broods over the vast & mighty world even in day time.

கo.

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று.

பரி:—(இ - ள்.) பண்பில்லாதவன் முன்னை நல்வினையானெய்திய பெரிய செல்வம் ¶ அக்குற்றத்தால்

(†) உலக மிருளின்கட் பட்டது என்றும் பாடமுண்டு.

‡ பாற்பட்டன் றிருள் என்பதற்குப் பிரதியாகப் பாழ்பட்டன் றிருள் என்று பாடஞ் சொல்லி, (மாயிரு ஞாலம் பகலிலும்) இருள் நீங்கியதன் றென்று பொருள் கூறுவாருமுண்டு, இருள் பாழ்பட்டன்று (இருள் பாழ் பட்டதில்லை) என்று கொள்க.

¶ அக்குற்றத்தால் - பண்பில்லாதிருக்குங் குற்றத்தால்.

## ஒழிபியல்—நூ-வது பண்புடைமை.

**1071**

**தல் நல்ல வான் பால் ஏற்ற * கலத்தின் தூற்றத்தால் இன்சுவைத் தாகாது கெட்டாற்போலும், (எ - று).**

† கலத்தீமை யென்பது மெலிந்து நின்றது. ‡ தொழிலுவமமாகலின், ¶ பொருளின்கண் § ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது. ⁝ படைக்குமாற்ற லிலனுத லேன்றப் 'பெற்ற' என்றும், எல்லாப்பயனுங் கோடற்கேற்ற இடனுடைமை தோன்றப் 'பெருஞ் செல்வம்' என்றுங் கூறினர். அச் செல்வமும் பயன்படா தென்ற இதனான் வருகின்ற () அதிகாரப் பொருண்மையும் 0 தோற்றுவாய் செய்யப்பட்டது. இவை நான்கு பாட்டானும்

| அஃதில்லாதிழிவு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.)

பண்பிலான் - பண்பில்லாதவன், பெற்ற (முன்னை நல்வினையால்) அடைந்த, பெருஞ் செல்வம் - பெரிய செல்வம், (அக்குற்றத் தால் ஒருவர்க்கும் பயன்படாது கெடுதல்), நன்பால் - நல்ல (பசுவின்) பால், கலம் - (ஏற்ற) கலத்தினது, தீமையால் - குற்றத்தால், (இனியசுவையுடைய தாகாது), திரிந்தற்று - கெட்டாற் போலும், (எ - று).

கலத்தீமை யென்பது கலந்தீமை யென மெலித்தல் விகாரமடைந்து நின்றது. தொழிலுவம மாகலால், உவமேயத்தில் ஒத்ததொழில் வருவிக்கப் பட்டது. படைக்கும் வலிமையிலனுதல் தோன்றப் 'பெற்ற' என்றும், எல்லாப் பயனுங் கொள்ளுதற்கு ஏற்ற இடமுடைமை தோன்றப் 'பெருஞ் செல்வம்' என்றும் சொல்லினர். அச் செல்வமும் பயன்படாதென்ற இத னால் வருகின்ற அதிகாரப் பொருண்மையும் தோற்றுவாய் செய்யப்பட்டது. இவை நான்கு பாட்டாலும் அஃதில்லாதவாது இழிவு சொல்லப்பட்டது.

(க - து.) பண்பில்லாதவனது செல்வம் ஒருவர்க்கும் பயன் படுதலில்லை என்பது.

---

* கலத்தின் - பாத்திரத்தின்,

† செல்வத்தகைத்து என்பது செல்வந் தகைத்து என மெலிந்து

நின்றுற்போன்று கலத்தீமை யென்பது கலந்தீமையென மெலிந்து நின்றது.

‡ தொழிலுவம மாகலின் - 'நன்பால் கலந்தீமையால்' திரிதற்றொழில் உவமானமா யிருத்தலால்.

¶ பொருளின்கண் - 'பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம்' என்னும் உவமேயத்தில்.

ஓ ஒத்ததொழில் - அக்குற்றத்தால் ஒருவர்க்கும் பயன்படாது கெடுதல்

என்றொத்த தொழில்.

: படைக்கும் - பொருளைச் சம்பாதிக்கும்.

() அதிகாரப் பொருண்மையும் - அதிகாரத்தினது பொருளும்.

θ தோற்றுவாய் - தொடக்கம்.

| அஃதில்லாதது - பண்பில்லாதவாது.



10. The great wealth possessed by an unkind man will perish like sweet cow's milk spoilt by the impurity of the vessel.

# ஆறாவது அதிகாரம்.

## நன்றியில் செல்வம்:—Unprofitable Wealth.

பரி:—அஃதாவது ஈட்டியாதும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினது இயல்பு. * உடையானது குற்றந் செல்வத்தின்மேலேற்றப்பட்டது. 0 அதிகார முறைமை † மேற்றேற்றுவாய் செய்தவதனாற் பெற்றும்.

தெளி:—அஃதாவது (தன்னைச்) சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினியல்பு. செல்வமுடையானது குற்றம் செல்வத்தின்மேல் ஏற்றப்பட்டது. அதிகார முறைமை முன் தோற்றுவாய் செய்தவதனாற் பெற்றும்.

க.

வைத்தான் வாய் சான்ற | பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்.

பரி:—(இ - ள்.) தன் மனையகல மெல்லாம் நிறைதற் கேதுவாய பெரும்பொருளை † மீட்டுவைத்து உலோபத்தால் அதனை யுண்ணாதவன் உளனாயினுஞ் செத்தானும்; அதனாலன்ன அவனுற் செயக்கிடந்ததோ நன்மை யின்மையான், (எ - று).

* செல்வத்தைத் தேடினனது நன்றியின்மையாகிய குற்றத்தை அவனது செல்வத்தின்மே லேற்றி 'நன்றியில் செல்வம்' என்று கூறினமையின், இஃது உடையவன் குற்றம் உடைமைமேலாய உபசார வழக்காம்.

0 பண்புடைமையென்னும் அதிகாரத்தின்பின் நன்றியில் செல்வ மென்னும் அதிகாரத்தைவைத்த இராமம்.

† மேல் அதிகாரத்தி னிறுதியில் "பண்பிலான் பெற்ற பெருஞ் செல்வ நன்பால், கலந்தீமை யாற்றினிந் தற்று" என்று தொடக்கஞ்செய்த வதனால் பெறப்பட்டது.

| "வைத்துப் பொருளைத் தானுகரான் வழங்கா னிருந்துஞ் செத்தானே, செத்த பின்ன ரென்செய்வான்" என்பது விநாயகபுராணம்.

‡ "தீயாலோ நீராலோ தேர்வேந்தர் தம்மாலோ, மாயாத தெவ்வர் வலியாலோ - யாதாலோ, இப்பொருள்போய் மாய்கின்ற தென்றுபொருள் வைத்தார்கள், எப்பொழுது நீங்கா நிடர்" என்று பெருந்தேவனார் பாரதங் கூறுவதிங் கறிதற்பாலதாம்.

ஒழிபியல்—சூ-வது நன்றியில் செல்வம்.

**1073**

* வைத்தானென்பது முற்றெச்சம். உண்ணுதல் -

அதனை † ஐம்புலன்

களையும் நுகர்தல். ‡ வாய்சான்றபெரும்பொருளை வைத்தானொருவன் அதனை யுண்ணுது செத்தவழி அதன்கண் அவனுற் செயக்கிடந்ததோ ருரிமை யில்லையாகலான், வையாது பெற்றபொழுதே நுகர்கவென் றுரைப்பினு மமையும். ¶ இதற்குச் செத்தானென்பது எச்சம். இதனல் ஈட்டியானுக் குப் பயன்பட லின்மை கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) வாய்சான்ற - (தன்) மனையகலமெல்லாம் நிறைத் தற்குக் காரணமாகிய, பெரும்பொருள்-பெரிய பொருளை, வைத்தான் (சம்பா தித்து) வைத்து, அஃது-அப்பொருளை, உண்ணுன் - (உலோபத்தால்) அனு பவியாதவன், (உளனுயினும்), செத்தான் - செத்தானும், செயக்கிடந்தது- (அப்பொருளினிடத்து அவனல்) செயக்கிடந்ததோ ருரிமையானது, இல்- இல்லை, (ஆகலால்): (எ-று).

வைத்தான் என்பது எச்சப்பொருளில் வந்தமுற்று.

உண்ணுதல் - அப்

பொருளால் ஐம்புலன்களையுமனுபவித்தல். இதனல் செல்வத்தைச் சம்பாதித் தவனுக்கு அச்செல்வம் பயன்படுதலில்லாமை சொல்லப்பட்டது.

(க - து.) பெரும்பொருளைத் தேடிவைத்து உலோபகுணத்தால் அதனை யனுபவியாதவன் உயிரோடிருக்குங் காலத்திலுஞ் செத்தவனுக் கொப்பாவன் என்பது.

1. He who (earns &) fills his house

with immense riches, enjoying none, is to be considered as dead, as naught (with the useless heap) is achieved by him.

---

* வைத்தான் என்னும் தெரிநிலை வினைமுற்று வைத்து என வினையெச்சப் பொருளில் வந்தது. வினைமுற்று, பெயர்கொண்டு முடியாது வினைகொண்டு முடியுமிடத்து எச்சமாம். இந்த வைத்தான் என்பது உண்ணான் என்பதைக் கொண்டு முடிந்தது.

† ஐம்புலன்கள் - (சுகத்தைத் தருவதாய் அனுபவித்தற்கு விரோதமின்றிய) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்னும் விஷயங்கள்.

‡ இக்குறளிற்கு மற்றோருரை கூறுகின்றார். அது வருமாறு:—வாய்சான்ற - தன்மனையகல மெல்லாம் நிறைதற்குக் காரணமாகிய, பெரும்பொருள்-பெரும்பொருளை, வைத்தான்-(சம்பாதித்து) வைத்தானொருவன், அஃதுண்ணான்-அப்பொருளை யனுபவியாது, செத்தான்-செத்தவிடத்து, செயக்கிடந்தது - (அப்பொருளினிடத்து அவனால்) செய்யக் கிடந்ததோ நரிமை (சுதந்தரம்), இல்-இல்லை. [ஆகலால்], (பொருளைச் சேர்த்து) வையாது பெற்றகாலத்திலேயே அனுபவிக்கக் கடவன் என்பதாம்.

¶ இதற்கு - [இந்த அருத்தத்திற்குச்] செத்தான் என்னும் தெரிநிலை வினைமுற்று, செத்தவிடத்து என வினையெச்சப் பொருளில் வந்தது.

உ. பொருளானை மெல்லாமென் றீயா திவறு
† மருளானை மாணைப் பிறப்பு.

பரி:—(இ - ள்.) பொருளொன்று முண்டாக அதனு லெல்லா முண்டாமென்றறிந்து ‡ அதனை ஈட்டிப்பின் பிறர்க்கீயாது தம்முள்ளஞ் செய்யு மயக்கத்தாலே ஒருவனுக்கு ¶ நிறைதலில்லாத பேரிப்பிறப் புண்டாம், (எ-று).

இருமையினு மெய்து மின்பங்கள் பலவுமடங்க 'எல்லாம்' என்றும்,

ஈட்டுதற்கு முன்னுண்டாய வறிவு பின்மயங்குதலின் 'மருள்' என்றும்,

பொருளுண்டாயிருக்கப் பிறர்பசி கண்டிருந்த தீவினை ற்றி உணவுகளுளவா

யிருக்கப் பசித்து வருந்தும் பிறப்புளதா மென்பார் மாணைப்பிறப்பாம் என்

றும் கூறினர்.

தெளி:—(இ - ள்). பொருளான் - (பொரு ளொன்றுமுண்டாக அப்)

பொருளால், எல்லாம் ஆம் - எல்லாமுண்டாகும், என்று - என்று (அறிந்து

அதனைச் சம்பாதித்து), ஈயாது - (பின் பிறர்க்குக்)

கொடாது. இவறும் -

பற்றுள்ளஞ்செய்யும், மருளான்-மயக்கத்திஞலே, மாணு-நீறைதலில்லாத,

பிறப்பு - (பேய்ப்) பிறப்பு, ஆம்-(ஒருவனுக்கு) உண்டாம், (எ-று).

(இம்மை மறுமை யென்னுஃ) இருமையிலும் அடையும் இன்பங்கள்

பலவும் அடங்க 'எல்லாம்' என்றும், பொருளைச் சம்பாதிப்பதற்கு முன்

உண்டாகிய அறிவானது சம்பாதித்தபின் மயங்குதலால் 'மருள்' என்றும், பொருளுண்டாயிருக்கப் பிறருடைய பசி கண்டிருந்த தீவினைபற்றி உணவு தள் உண்டாயிருக்கப் பசித்து வருந்தும் பிறப்புண்டா மென்பார் மாணுப்

பிறப்பாம் என்றும் சொல்லினர். பற்றுள்ளம்-உலோபகுணம்.

(க - து.) பொருளின்

பயனையறிந்து அதனைச்சம்பாதித்துப் பிறர்க்கீயாது பற்றுள் ளஞ் செய்பவனுக்கு மறுமையில் பேய்ப் பிறப்புண்டாம் என்பது.

2. He who knows that from wealth all blessings spring and yet is blind as to lead a miserly life (by giving naught to others) takes a degraded demon birth.

## ங. * ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்

## தோற்ற நிலச் குப் பொறை.

† "பொருளல்லவற்றைப் பொருளென் றுணரு, மருளாஞ மாணப் பிறப்பு" என்னும் பிரயோகமுமிங் குணர்தற் பாலதாம்.

‡ அதனை - பொருளை. ¶ நிறைதல் - திருப்தியடைதல்.

* ஈட்டம் என்பது அம் ஈற்றுத்தன்மைப்பண்மை வினைமுற்று.

## ஒழிபியல்—சூ-வது நன்றியில் செல்வம்.

**1075**

பரி:—(இ - ள்.) யாம் பிறரின்மிக வீட்டது மென்று பொருளின நீட்டன் மாத்திரத்தையே விரும்பி அதனீபயனைய புகழை விரும்பாத மகீ களது பிறப்பு நிலத்திற்குப் பாரமா மத்துணையே, (எ - று).

† இசை இருமைக்கு முறுதியாய அறமாகலின், ‡ ஈகையான் அதனை யே வேண்டல் செய்யாது ஈட்டற்றன்பத்தையும் காத்தற் றுன்பத்தையும் வேண்டிய

வறிவின்மைபற்றி 'நிலக்குப்பொறை' என்றார். பிறப்பென்றது அதற்குரிய வுடம்பினை.

தெளி:—(இ - ள்.) ஈட்டம் (யாம்பிறரைக் காட்டிலும் மிகுதியாகச்) சம்பாதிப்போம், (என்று),

இவறி-(பொருள்சம்பாதித்தல் மாத்திரத்தையே) விரும்பி,
இசை - (அப்பொருளின் பயனாகிய) புகழை,
வேண்டாவாடவர் - விரும்பாத மக்களது,
தோற்றம்-பிறப்பு,-நிலக்கு—பூமிக்கு, பொறை - பார மாம், (அவ்வளவே), (எ - று).

புகழ் இருமைக்கும் உறுதியாகிய அறமாகலால், ஈகையால் அப்புகழி

னாசை விரும்புதல் செய்யாமல் பொருளைச் சம்பாதித்தற் றுன்பத்தையும்,

காப்பாற்றற் றுன்பத்தையும் விரும்பிய அறிவில்லாமைபற்றி (ஈட்டமிவறி யிசைவேண்டாவாடவர், தோற்றத்தை) 'நிலக்குப்பொறை'என்றார். பிறப் பென்றது அப்பிறப்பிற் குரிய உடம்பினை.

(க - து.) பொருளைச் சம்பாதித்து அதன் பயனாகிய புகழை

விரும்பாத மக்கள் உலகிற்குப் பாரமாக விருப்பாரன்றிப்பயனுடை யவராக விரார் என்பது.

3. Who lust to heap up wealth but not glory, are burden to the earth.



ச. எச்சமென் றெண்ணெண் ணுங்
கொல்லோ வொருவரா
னஞ்சப் படாஅ தவன்.

பரி:—(இ. ள்.) ஒருபொருளு மீந்தறியாமையின் ஒருவராலும் நஞ்சப் படுதலில்லாதவன் தானிறந்தவழி ஈண்டொழிந்து நிற்பதாக யாதனோ கருதுமோ? (எ - று).

* ஈகையாலுண்டாகும் அறம் இசை (புகழ்) வடிவமாக விளங்குதலின்,
'இசை இருமைக்கு முறுதியாய அறமாகலின்' என்றுகூறப்பட்டது. இசையுடையார் இம்மைக்குரிய உறுதியும் மறுமைக்குரிய வுறுதியு மடைவரென்பதாம்.

† "ஈத லிசைபட வாழ்த லதுவல்ல, தூதிய மில்லை யுயிர்க்கு" என்னுங் குறளிற் குணர்தற்பாலதாம்.

ஈண்டொழிந்து * நிற்கும் புகழ் ஈவான்மேலன்றி
நில்லாமையின்,

† அவனுக்கதனே டியாது மியைபில்லையென்பார் 'என்னெண்ணுங் கொல்லோ' என்றார். ஓகாரம் - அசை. இவை மூன்றுபாட்டானும் பிறர்க்குப் பயன்படலின்மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) ஒருவரான் - (ஒருபொருளுங் கொடுத்து அறியாமையால்) ஒருவராலும், நச்சப் படாதவன் - விரும்பப்படுதலில்லாதவன், (தான் இறந்தவிடத்து), எச்சமென்று (இங்கு) ஒழிந்து நிற்பதாக, என்- எதனை, எண்ணுங்கொல்-நினைப்பாரே, (எ - று).

இங்கு ஒழிந்து நிற்கும் புகழ் ஈவான்மேலல்லாமல் (பிறன் மேல்) நில்லாமையால், அவனுக்கு அப்புகழோடு எவ்வளவும் சம்பந்தம் இல்லையென்
பார் 'என்னெண்ணுங்கொல்லோ' என்றார். ஓ - அசை. இவை மூன்றுபாட்
டாலும் அச்செல்வம் பிறர்க்குப் பயன்படலில்லாமை சொல்லப்பட்டது.

(க - து.) உலோபகுணமுடையவனை

யிருத்தலால் ஒருவரா லும் விரும்பப்படுதலில்லாதவன் தான் இறந்தபின் இங்கொழிந்து நிற்பதாக எதனை நினைப்பானே? என்பது.

4. What will the miser whom none loves (when he shall pass away) look to leave behind?

ரு. கொடேப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க்
கடுக்கிய
கோடியுண் டாயினு மில்.

பரி:—(இ - ள்.) பிறர்க்கீவதும் தானுகர்வதுமாய இரண்டு செயற் கையு முடையரல்லாதார்க்குப் பலவாக வடுக்கிய கோடிபோரு ளுண் டாயினும் ஒன்றுமில்லை, (எ - று).

‡ இன்பத்திலும் அறஞ் சிறந்தமையின்,

கொடுத்தற்றொழில் முற்கூறப்
பட்டது. ¶ அடுக்கியகோடியென்றது எண்ணெண்ணப்படும் பொருண்மே

* "உலைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன், லிற்கும் புகழ்" என்னுங் குறளிற் குணர்தற்பாலதாம்.

றீவார்மே

†

அவனுக்கு - ஒருவராலும் நச்சப்படுத லில்லாதவனுகிய வுலோபிக்கு.

‡ தாய்ப்பதாலுண்டாகும் இன்பத்திலும் ஈதலாலுண்டாகும் அறஞ் சிறந்திருத்தலால் 'கொடுப்பதூஉம்' என்று கொடுத்தற்றொழில் முன்னர்க் கூறப்பட்டது. "ஈதலறம்" என்று ஔவைப்பிராட்டியார் கூறியிருப்பது இங்குணர்தற் பாலதாம்.

¶ கோடி என்னும் எண்ணுப் பெயர் கோடியளவினதாகிய பொருளை யுணர்த்துதலின், எண்ணிலளவை யாகுபெயரும். குடிமையதிகாரத்தில் "அடுக்கிய கோடி" என்று வந்திருத்தலு மிங்குணர்தற்பாலதாம்.



னின்றது. ஒன்றுமில்லார் போலப் * பயனிரண்டு

மிழுத்தலின் 'இல்' என்றார்.

தெளி:—(இ - ன்.) கொடுப்பதூஉம் - (பிறர்க்கு) ஈவதும், துய்ப்ப தூஉம் - (தாம்) அனுபவிப்பதும், (ஆகிய இரண்டு செய்கையும்), இல்லார் க்கு-உடைய ரல்லாதார்க்கு, அடுக்கிய - (பலவாக) அடுக்கிய, கோடியுண்டாயி னும்-கோடி பொருளுண்டாயினும், இல் - (ஒன்றும்) இல்லை, (எ - று).

இன்பத்தினும் அறம் சிறந்தமையால், கொடுத்தற்றொழில் கொடுப்ப தூஉம்என்று முன் சொல்லப்பட்டது. அடுக்கியகோடி யென்றது இங்கு எண்ணப்படும் பொருளின்மேல் நின்றது. (கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்) ஒருபொருளு மில்லார்போலப் பயனிரண்டும் இழத்தலால் 'இல்' என்றார்.

(க - து.) அறத்தின் பொருட்டுப் பிறர்க்குக் கொடுத்தலும் இன்பத்தின் பொருட்டுத் தாம் அனுபவித்தலும் ஆகிய இரண்டு செய்கையும் இல்லாதார்க்கு எவ்வளவு பொருளிருந்தாலும் அது னால் யாதொரு பயனுமில்லை என்பது.

5. They who neither give to others nor enjoy their

property themselves are truly poor, though possessing accumulated millions.

சு. † ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்
றீத லியல்பிலா தான்.

பரி:—(இ - ள்.) தானுகராஞய் அதன்மேலுந் தததியுடையார்க்கு
அவர் வேண்டிய தொன்றனை யீதலியற்கை யிலனாயினான் ‡ இரண்டுஞ்
செய்தற்கிடனுடைத்தாய செல்வத்திற்கு ஒரு நோய், (எ - று).

---

* பயனிரண்டும்-கொ டுத்தலா லுண்டாகும் அறப்பயனையும் துய்ப்பதா
லுண்டாகும் இன்பப்பயனையும்.

† ஈதலியல்பிலாதான் ஏதம் (நோய்) என்பது 'ஏவவுஞ்

செய்கலான் முன்றேரா னவ்வுயிர், போ ஒ மளவுமோர் நோய்'' என்பதுபோலச் செறலி னுல் (கோபத்தினுல்)உயர்தினை அஃறினையாய வழுவமைதியாம். ஈதலியல் பிலாதான் உயர்தினை ; ஏதம் - அஃறினை. இவ்வாறு வருவதனை நச்சினர் க்கினியர் இழிபிஞல் உயர்தி ணை அஃறினையாயவழுவமைதியாமென்பர்.

‡ இரண்டும் - தானுகர்தலும், தகுதியுடையார்க்கு அவர் வேண்டிய தொன்றனை யீதலும்.

**1078** திருக்குறள் - பொருட்பால்.

தகுதி - * தானம் † கோடற் கேற்புடைமை. ‡ ஏதம் - ஆகுபெயர். நுகரப்படுதலும் ஈயப்படுதலுமாகிய தொழிற் குரியதனை ¶ அன்றுக்கின மையின் (†)'ஏதம்' என்றார். $ ஈதலியல்பிலாதானது பெருஞ்செல்வம் அவ னுக்கு | ஈட்டல் காத்தன் முதலியவற்றுல் துன்பமே யாமென் றுரைப் பாருமுளர். இவை யிரண்டு பாட்டாலும் || அவ்விருமையும் உடன் கூறப் பட்டன.

தெளி:—(இ . ள்.) தான்றுவ்வான்-தான் அனுபவியாதவனுகி,(அதன் மேலும்), தக்கார்க்கு - தகுதியுடையவர்க்கு, ஒன்று - (அவர் வேண்டியது) ஒருபொருளை, ஈதலியல்பிலாதான் - கொடுத்தற் நன்மை யில்லாதவனுயி

ணும், பெருஞ்செல்வம் - (இரண்டுஞ் செய்தற்கு இடமுடையதாகிய) பெரிய செல்வத்திற்கு, ஏதம்- ஒருநோய், (எ-று).

தக்கார் - தானம் வாங்குதற்கு ஏற்றவர். ஏதம் - காரியவாகு பெயர். அனுபவிக்கப்படுதலும் ஈயப்படுதலுமாகிய தொழிற்குரிய பொருளினை அன்றுகச் செய்தமையால் (ஈதலியல்பிலாதானை) 'ஏதம்' என்றார். இவை இரண்டு பாட்டாலும் அவ்விருமையும் உடன் சொல்லப்பட்டன.

(கு-து.) செல்வத்தைத் தான் அனுபவித்தலும் தகுதியுடையார்க் கீதலும் இல்லாதவன் அதற்கொரு நோயாவன் என்பது.

6. He who enjoys not his riches nor relieves the wants of the worthy is a disease to his wealth.

---

* தானமாவது தருமவழியால் கிடைத்த பொருள்களைத் தக்கவர்க்கு மகிழ்ச்சியுடன் கொடுத்தலாம்.

† கோடற்கேற்புடைமை - கொள்ளுவதற்குத் தகுதியுடைமை.

‡ ஏதம் (துன்பம்)என்னுங் காரியப்பெயர் அதனைத்தருவதற்குக் கருவி யாகிய நோயை யுணர்த்துதலால்,

காரியவாகு பெயராம்.

¶ அன்றுக்கினமையின் - அத்தொழிற்குரிய தல்லதாகச் செய்தமையால்.

(†) நோய் என்றும் பாடமுண்டு.

§ (சானனுபவியாதவனுகி அதன்மேலும் தக்கார்க்கு அவர் வேண்டிய தொன்றனை) ஈதலியல்பிலாதான் - கொடுத்தற்றன்மை யில்லாதவனது, பெருஞ்செல்வம் - பெருஞ்செல்வமானது, ஏதம் - (அவனுக்கு ஈட்டல் காத்தல் முதலியவற்றுல்) துன்பமேயாம் என்று இக்குறளிற்குப் பொருள் கூறுவாருமுண்டு.

| ஈட்டல் - சம்பாதித்தல். "ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக், காத்தலு மாங்கே கடுந்துன்பங் காத்தல், குறைபடிற்றுன்பங் கெடிற் றுன்பந் துன்பக், குறைபதி மற்றைப் பொருள்" என்று நாலடியார் கூறுவதிங் கறியத்தக்கதாம்.

‖ அவ்விருமையும் - (நன்றியில் செல்வம்) சம்பாதித்தவனுக்குப் பயன் படலில்லாமையும், பிறர்க்குப் பயன்பட வில்லாமையும்.

## ஒழிபியல்—கூ-வது நன்றியில் செல்வம்.

**1079**

எ. அற்றூர்க்கொன் றூற்றுதான் செல்வ மிகலம்
பெற்று டமியண்மூத் தற்று.

பரி:—(இ - ள்.) ஒருபொருளு மிலாயிஹரீக்கு அவர் வேண்டிய தொன்றனைக் கொடாதானது செல்வங் கொன்னே கழிதல் † பெண்டிரின் மிக்க நலத்தினைப் பெற்றனொருத்தி கொடுப்பாரின்மையிற் கொழுநனின்றித் § தமியளாயி ழுத்த நன்னலமத்து, (எ - று).

நலம்—வடிவினன்மையும் குணத்தினன்மையும் 0 இரண்டு மொருங்கு பெறுத லரிதாகலின், 'பெற்றுள்' என்றார். கொடுப்பாருங் கொழுநனுமே யன்றித் தானும் பயனிழந்து கழிந்த ‡ குமரியோ * டுவமை கூறின மையின், () தானு மேற்பானுமே யன்றிச் செல்வமும் பயனிழந்து கழியு மென்பதாயிற்று.

தெளி:—(இ - ள்.) அற்றார்க்கு - (ஒரு பொருளும்) இலாயினர்க்கு, ஒன்று - (அவர்வேண்டியது) ஒரு பொருளினை, ஆற்றுதான் - கொடாதவ னது, செல்வம் - செல்வமானது, (வீணைகக் கழிதல்), மிகநலம் - (பெண்டிரின்) மிக்க நலத்தினை, பெற்றுள் - பெற்ற வொருத்தி, (கொடுப்பா ரில் லாமையினால்), தமியள் - (கணவனில்லாமல்) தமியளாய், மூத்தற்று-மூத்த தன்மைத்து, (எ - று).

நலம்—வடிவினன்மையும் குணத்தி னன்மையும். இரண்டும் ஒருசே ரப் பெறுதல் அரிதாகலால் 'பெற்றுள்' என்றார். கொடுப்பாரும் கண வனுமே யல்லாமல் தானும் பயனிழந்து கழிந்த குமரியோடு (அற்றார்க்கொன் றூற்றுதானது செல்வத்தை) உவமை கூறினமையால் தானும் ஏற்பானுமே யல்லாமல் செல்வமும்

பயனிழந்து கழியுமென்பதாயிற்று.

(க - து.) வறியார்க்கு அவர் வேண்டிய தொரு பொருளைக் கொடாதவனது செல்வம் பயனின்றிக் கெடும் என்பது.

7. The wealth of him who bestows naught on needy men is like a woman of beauty growing aged without a husband.

அ. ¶ நச்சப் படாதவன் செல்வ நடுவூரு
ணெச்சு மரம்பழுத் தற்று.

---

† பெண்டிரின் - பெண்களுள்ளே. § தமியளாய் - தனித்தவளாய்.

0. இரண்டும்-வடிவத்தின் (உருவத்தின்) அழகும் குணத்தினழகும் (நற் குணமும்). ‡ (திக்கற்ற) குமரி தன்னைக்கொடுப்பாரும் கொள்வாருமில் லாது வீணேயொழிவதுபோல உலோபியின் செல்வமும் தன்னைக் கொடுப் பாரும் கொள்வாருமில்லாது வீணேயொழியுமென்பதாம். * உவமை-ஒப்பு. () தானும் - (பொருளைத் தரித்திரார்க்குக்கொடாதவனுகிய) தானும்.

¶ "அருகல் சாகிப் பழபழுத்தக் கண்ணும், பொரிதாள் விளவினு வாவல் குறுகா, பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வம், கருதுங் கடப் பாட்ட தன்று" என்று நாலடியார் கூறுவது இங்குணர்தற் பாலதாம்.

பரி:—(இ - ள்.) வறியார்க்கணியனை யிருந்தும் ஒன்றுங் கொடாமையின் † அவரா னசீசப்படாத்வன் செல்வமெய்துதல் ஊரிடை நிற்ப தோர் நச்சுமரம் பழுத்தாற்போலும், (எ - று).

* நடுவூரென்பது பின்முன்னுகத் தொக்க வாரும்வேற்றுமைத் தொகை. அண்மை யுடைமைகளாற் பயனில்லை யென்பதாம்.

தெளி:—(இ - ள்) (வறியார்க்குச் சமீபத்திலிருப்பவனை யிருந்தும் ஒன்றுங் கொடாமையால்) நச்சப்படாதவன் - (அவரால்) விரும்பப் படாதவன், செல்வம் - செல்வத்தை, (பெறுதல்), நடுவூருள் - ஊர்நடுவில், (நிற்ப தோர்), நச்சுமரம் - எட்டிமரம், பழுத்தற்று - பழுத்தாற்போலும், (எ - று).

ஊர்நடு என்பது - நடுவூர் என்றாயிற்று, இவ்வாறு வருதல் இலக்கணப் போலியாம். நச்சுமரம் ஊர் நடுவேயிருப்பதாலும் பழுத்திருப்பதாலும்

பிறர்க்குப் பயனில்லாமைபோல, உலோபி சமீபத்திருத்தலாலும் பொருளுடைமையாலும் வறியர்க்குப் பயனில்லை யென்பதாம்.

(க - து.) வறியவரால் விரும்பப்படாதவன் செல்வமடைதல் நடுவூருள் எட்டிமரம் பழுத்தாற் போலுமாம் என்பது.

8. The wealth of him who is disliked by all is like the fruit bearing of the etty tree in the midst of a town.

$ அன்போரீஇத் தற்சேற் றறநோக்கா தீட்டிய
வோண்பொருள் கோள்வார் பிறர்.

பரி:—(இ-ள்.) ஒருவன் கோடாமைப்
பொருட்டுச் சுற்றத்தார்
நட்டார்கண் அன்பு செய்தலை யோழிந்து வேண்டுவன நுகராது தன்
னைச் செறுத்து வறியார்க்கு ஈதன் முதலியவறத்தை நினைப்பதுந் செய்
யாது ஈட்டிய வொள்ளிய பொருளைக் கொ
ண்டுபோய்ப் () பயன் பெறுவார் பிறர் (எ-று).

பயனை அறனும் இன்பமுஞ் செய்துகொள்ளாதானுக்குப் பொருளா
லுள்ளது ஈட்டற்றன்மை யென்பது தோன்ற 'ஈட்டிய' என்றும், அவன்
வழியினுள்ளார்க்கும் உதவாதென்பது தோன்றப் 'பிறர்' என்றுங் கூறி
னர்.

---

† அவரால் - வறியவரால்.

* ஊர்நடு என்னும் ஆரும் வேற்றுமைத் தொகை
நிலைத்தொடர்
நடுவூர் எனப் பின்முன்னுகமாறி நின்றது. அஃது
ஊரினது நடு என
விரியும்.

$ "பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு,
பிறர்க்குதவி யாக் குபவர் பேரும்" என்று நன்னெறி கூறுவ
திங்குணர்தற்பாலதாம்.

() பயன் கொள்வார் என்றும் பாடமுண்டு.

**1081**

தெளி:—(இ - ள்.) (ஒருவன்) அன்பொரீஇ - (கொடாத திருத்தற் பொருட்டுச் சுற்றத்தாரிடத்தும் நட்பினரிடத்தும்) அன்புசெப்தலைஒழிந்து, தற்செற்று - (வேண்டுவனவற்றை யனுபவியாமல்) தன்னை வருத்தி' அறம் - (வறியவர்க்குக் கொடுத்தல் முதலிய)அறத்தை, நோக்காது - நினைப்

பதஞ் செய்யாமல், ஈட்டிய-சம்பாதித்த, ஒண்பொருள்-ஒள்ளிய பொருளை, கொள்வார் - (கொண்டுபோய்ப் பயன்) பெறுவார், பிறர் - அன்னியராவர்.

(பொருளின்) பயனுகிய அறமும் இன்பமும் செய்துகொள்ளாதவனுக்குப் பொருளால் உள்ளது சம்பாதித்தற் றுன் பமே யென்பது தோன்ற 'ஈட்டிய' என்றும், அவன் சந்ததியி லுள்ளவர்க்கும் அப்பொருள் உதவா தென்பது தோன்றப் 'பிறர்' என்றும் சொல்லினர்.

(க - து.) உறவினர் முதலாயினோர்க்குங் கொடாது தானும் அனுபவியாது சம்பாதித்துச் சேர்த்து வைத்தவனது பொருளைப் பிறர்கொண்டுபோய் அனுபவிப்பர் என்பது.

9. Strangers will take (and enjoy) the

wealth (of those who) hoarded (it) by abandoning love, self-affliction and forsaking virtuous ways.

கo. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
* வறங்கூர்ந் தனைய துடைத்து.

பரி:—(இ - ள்.) புகழுடைத்தாய செல்வத்தினை யுடையவரது நிற் துங்காலத்' சிறியதாய வறுமை உலகத்தை யெல்லாம் நிலை நிறுத்து மேகம் வறுமை மிக்காற்போல்வதோ ரியல்பினை யுடைத்து, (எ - று).

† துனி - வெறுப்பு ; அதனைச் செய்தலாற் றுனியெனப்பட்டது. யா
வர்க்கும் பயன்பட்டார் ‡ அதனுன் வறியராய வழியும் அவ்வறுமை கடிதி னீங்குதலிற் பின்புஞ் செல்வராய்ப் பயன்படுவரென்பது ¶ உவமையாற் பெறப்பட்டது; படவே, நன்றியில்லாத செல்வம் எஞ்ஞான்றும் பயன்படா

---

* வறங்கூர்தல் - வறுமைமிகுதல்.

† துனியை (வெறுப்பை)ச் செய்யும் வறுமையைத் துனியென்றமை யின், அது காரியவாகு பெயராம். வறுமை-காரணம்; துனி-காரியம்.

‡ அதனுன் - யாவர்க்கும் பயன்படுதலால்.

¶ உவமையால்

மாரிவறங்கூர்ந்தனையது என்னுமுவமானத்தால். மே

கம் மழை பொழிதலால் நீரில்லாது வறுமையடைந்த விடத்தும் அந்நீரில்லா வறுமை விரைவில் நீங்கப்பெற்றுப் பின்பும் நீருடையதாய் மழை பொழி வதுபோலச் சீருடைச் செல்வர் யாவர்க்கும் பயன்படுதலால் தரித்திராய விடத்தும் அத்தரித்திரம் விரைவில் நீங்கப்பெற்றுப் பின்பும் செல்வமுடை யவராய்ப் பயன் படுவரென்பதாம்.

136



தென்பதாயிற்று. * இதற்குச் சீருடைச் செல்வர் இரவலரோடு வெறுக்கும் நிலையில்வெறுப்பு மாரி வறங் கூர்ந்தனைய தன்மையை யுடைத்தென அதி காரத்தோடு பொருந்தாமைமேலும் ஓர் பொருட்டொடர்பு படாமலுரைப் பாருமுளர். இவை நான்கு பாட்டாலும் அச்செல்வத்தது குற்றங் கூறப் பட்டது.

தெளி:—(இ - ள்.) சீருடை - புகழுடையதாகிய, செல்வர் - செல்வத் தினையுடையவரது, சிறு தனி - (நிற்குங்காலம்) சிறியதாய வறுமை, மாரி- (உலகத்தை யெல்லாம் நிலைநிறுத்தும்) மேகம், வறங்கூர்ந்தனையது - வறுமை மிக்காற் போல்வதோ ரியல்பினை, உடைத்து - உடையதாம்.

தனி-வெறுப்பு; அவ்வெறுப்பைச்செய்தலால் வறுமை

தனி எனப்பட் டது. யாவர்க்கும் பயன் பட்டவர் அதனால் வறியவராகிய விடத்தும் அவ் வறுமை விரைவில் நீங்குதலால் பின்புஞ் செல்வராய்ப் பயன்படுவ ரென் பது உவமானத்தாற் பெறப்பட்டது; படவே, நன்றியில்லாத செல்வம் எந்நா ளும் பயன்படா தென்பதாயிற்று. இவை நான்கு பாட்டாலும் அந்நன்றியில் செல்வத்தினது குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) ஈகையாளர் ஈகையால் வறுமை யடைந்த விடத் துப், விரைவில் அது நீங்கப்பெற்று யாவர்க்கும் பயன்படுத லுடையவராவர் என்பது.

10. The short-lived poverty of those who are noble
and wealthy is like the rain-cloud becoming dry for a while.

## எழுபத்தொன்பதாவது அதிகாரம்.

## நாணுடைமை:—Modesty.

பரி:—அஃதாவது மேற்சொல்லிய ☨ சால்பு ‡ பண்பு ¶ முதலிய

துணைங்களா னுயர்ந்தோர் தமக்கோவ்வாத கருமங்களில் நாணுதலுடை

* இக்குறளுக்குச் சீருடைச் செல்வர் - சீரினை (புகழினை) யுடையதா கிய செல்வத்தை யுடையவர், சிறுதுனி - (யாசகரோடு வெறுக்கும்) நிலை யில்லாத வெறுப்பு, மாரிவறங் கூர்ந்தனையது - மேகம் வறுமைமிகுந்த தொ

த்த தன்மையை, உடைத்து - உடையதாம் என்று நன்றியில் செல்வம் என் னு மிவ்வதிகாரத்தோடு பொருந்தாமை மேலும் ஓர் பொருட் சம்பந்தம் படாமற் பொருள் கூறுவாரு முண்டு. சீருடைச் செல்வர் இரவலரோடு வெறுத்தல் யாண்டு மின்மையின், அஃதுரையாகாதாயிற் றென்க.

† சால்பு - பல குணங்களாலும் நிறைதல்.

‡ பண்பு - எல்லாரியல்புகளு மறிந்தொத்தொழுகுதல்.

¶ முதலிய என்றமையின், நன்றியில் செல்வ மின்மை முதலியனவுங் கொள்க.



யாரீதன்மை. * அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

தெளி:—அஃதாவது முற்கூறிய சால்பு பண்பு முதலிய குணங்களால் உயர்ந்தோர் தமக்குப் பொருந்தாத கருமங்களில் நாணுதலுடையாரென் தன் மை. அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

க. † கருமத்தா ணுணுத ணுணுத் திருநுத
ணல்லவர் நாணுப் பிற.

பரி:—(இ - ள்.) நன்மக்கணுணுவது இழிந்த கருமங் காரணமாக நாணுதல்; ‡ அஃதன்றி மன மொழி மெய்கள தொடுக்கத்தான் வரு வனவோ வெனின், அவை ¶ அவாளவல்ல; அழகிய நுதலினையுடைய தலமகளிர் $ நாண்மகள், (எ - று).

பிற ○ திருநுதனல்லவர் நாணென்றதனான் ()எனையது நன்மக்கணுணை ன்பதும், நாணுதலென்றதனாற் கருமத்திழிவும் பெற்றும். திருநுதனல் லவ ரென்பது | புகழ்ச்சிக் குறிப்பு. ‖ ஏதுப் பன்மைபற்றிப் 'பிற' என் றார். : இனி அற்றமறைத்தன் முதலியன பொதுமகளிர் நாணு டொக்கு .....

.....

* சான்றாண்மை, பண்புடைமை, நன்றியில் செல்வங்களின் பின் நாணுடைமையை வைத்த அதிகாரக்கிரமமும்.

† "இழிந்த தொழிலி ணுணுவதே யெய்தற் கரிய நாணென்பர், ஒழிந்த மனவாக் குடலொடுக்க மொளிவா ணுதலார் நாணேயாம்' என்பது விநாயக புராணம்.

‡

அஃதன்றி - இழிந்த கருமங் காரணமாக நாணுதலல்லாமல்.

¶ அவாவளவல்ல - நன்மக்க ளளவி லிருப்பன வல்ல.

§ "நாணென்பது பெண்டிர்க்கு இயல்பாக
வுளதொருதன்மை" என்
றனர் நக்கீரனார்; "நாணுவது ஓசயத் தகாதனவற்றின்கண் உள்ள
குதல்" என்றனர் நச்சினார்க் கினியர்.
மொடுங்

o குலமகளிர் என்றும் பாடமுண்டு.
() ஏனையது - கருமத்தால் நாணுதல்.

| புகழ்ச்சிக் குறிப்பு - புகழ்ச்சிப்பொருளில் வந்த குறிப்புச்சொல்.

‖ மனவொடுக்கத்தான் மொழியொடுக்கத்தான்
மெய்யொடுக்கத்தான் என வதுப்பன்மை பற்றி
(சாதனம்பலவாயிருத்தலால்) 'பிற' என்று பன் மையாற்
கூறப்பட்டது. பிற வென்பது அஃறிணைப்பலவின்பால்
படர்க் கைப் பெயர்ச்சொல். பிற - கருமத்தால் நாணுதலொழிந்த
நாண்கள்.

: இனித் 'திருநுத, னல்லவர் நாணுப் பிற' என்பதற்குப் பிற - அற்ற
(அவமானத்தை) மறைத்தல் முதலியன, திருநுதல் நல்லவர் நாணு - பெ
தமகளிர் நாணெடொக்கும், என்று பொருள் கூறுவாரு முண்டி. அவர்க்கு
(பொதுமகளிர்க்கு) நாண் கேண்டாக்கும் என்று விலக்கப்பட்டிருத்தலா

மென் றுரைப்பாருமுளர். அவர்க்கு நாண் கேடு பயக்குமென விலக்கப் பட்டமையானும், அவர் பெயராற் கூறப்படாமையானும், அஃதுரையன் மையறிக. இதனுன் நாணின திலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) நாணு - (நன்மக்களது) நாணுவது, கருமத்தால் - (இழிந்த) கருமங் காரணமாக, நாணுதல் - நாணுதலாம், பிற - அஃதல்லா மல் மன மொழி மெய்களது ஒடுக்கத்தால் வரும் நாணுக்களோ என்றல் அவை, (அவாளவல்ல), திருநுதல் - அழகிய நெற்றியை யுடைய, நல்லவர்- குலமகளிரது, நாணு - நாணங்கள், (எ - று).

பிற திருநுதனல்லவரது நாணென்றதனால் மற்றது நன்மக்களது நா ணென்பதும், நாணுத லென்றதனால் கருமத்தினதிழிவும் பெற்றும். திரு நுத னல்லவரென்பது புகழ்ச்சிக் குறிப்புச்சொல். காரணத்தினதுபன்மை பற்றிப் 'பிற' என்றார். இதனால் நாணினது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து.) நன்மக்களுக்கு நாணுவது இழிந்தகருமங் காரண மாக நாணுதலாம்; மன

மொழி மெய்களது அடக்கத்தால் வரும் நாணன்றும் என்பது.

1. True modesty is the fear of evil deeds; all other modesty is simply the bashfulness of the bright browed virtuous maids.



உ. ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

பரி:—(இ - ள்.) ஊணும் உடையும் அவை யொழிந்தனவும் மக்க ளுயிர் க்கெல்லாம் பொ து; நன்மக்கட்குச் சிறப்பாவது நாணுடைமை யே; † அவையல்ல, (எ -று).

ஒழிந்தன - உறக்கமும்

அச்சமுங் காமமும். * சிறப்பு - அவ்வுயிர்க

---

லும், (திருநுதனல்லவர் என்பதன்றி) அவர் (பொதுமகளிர்க் குரிய) பெயரால் கூறப்படாமையாலும், அவ்வுரை யுரையன்றென்பதாம். பொது மகளிர் நாணமுடையவரா யிருந்தால் அஃதவர்க்குக் கேடுண்டாக்கு மென்பது "பெற்றமையு மென்னுப் பெரியோரும் பெற்றபொருள், மற்றமையு

மென்றே மகிழ்வேந்து - முற்றியநன், மானமில்லா வில்லாளு மானமுறும் வேசியரும், ஈன முறுவா ரிவர்'' என்று நீதிவெண்பா கூறுவதனால் கன்கு விளங்கும்.

† அவை - உணவு உடை முதலியன.

* ஊணும், உறக்கமும், அச்சமும், காமமும் கரண (மன) வியாபாரத்தைச் செவ்வையாகவுடைய பிராணிகளுக்கெல்லாம் பொதுவாயிருப்பனவாம்; அவற்றுள், மக்களுக்கோ உடை சிறப்பாயிருப்பதாம்; அவருள் நன்மக்களுக்கோ நாணுடைமை சிறப்பாயிருப்பதாம். மக்களினும் நன்மக்

## ஒழிபியல்—எவது நாணுடைமை.

**1085**

ளின் வேறுபாடு. * அச்சமென்று பாடமோதுவாரு முளர்.

தெளி:—(இ - ள்.) ஊண் - உணவும், உடை - ஆடையும், எச்சம்-(அவை) ஒழிந்தனவும், உயிர்க்கெல்லாம் - (மக்கள்) உயிர்க்கெல்லாம், வேறல்ல- வேறுபட்டனவன்றும் (பொதுவாம்), மாந்தர் சிறப்பு - நன்மக்களுக்குச் சிறப்பாவது, நாணுடைமை - நாணமுடைமையே, (அவையல்ல), (எ-று).

ஒழிந்தன - உறக்கமும் அச்சமும் காமமும். சிறப்பு - அவ்வுயிர்களின் வேறுபாடு.

(க - து.) மக்களுக்கு ஊணும், உடையும், உறக்கமும், அச் சமும், காமமும் பொதுவாயிருப்பனவாப்; நன்மக்களுக்குரான் சிறப்பாயிருப்பதாம் என்பது.

2. Food, clothes and other things are alike to all men; but modesty is peculiar to the good.

ரு. ஊணைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு.

பரி:—( இ - ள்.) எல்லாவுயிர்களும் உடம்பினைத் தமக்கு நிலைக்கள னாகக் கொண்டு அதனைவிடா ; அதுபோலச் சால்பு நாணென்னு நன்மைக் தூணத்தைத் தனக்கு நிலைக்களனாகக் கொண்டு அதனை விடாது.

உடம்பென்பது , சாதி யொருமை. † நன்மை - ஆகுபெயர். உயிர் உடம்போடு கூடியல்லது பயனெய்தாதவாறு போலச் சால்பு நாணோடு கூடியல்லது பயனெய்தா தென்பதாம். ‡ ஊணைக் குறித்தவென்று பாட மோதுவாரு முளர்.

தெளி:—(இ - ள்.) உயிரெல்லாம் - எல்லா வுயிர்களும், ஊனை - உடம்பினை, குறித்த - தமக்கு இருப்பிடமாகக் கொண்டு அதனை விடாவாம்,

---

கள் வேறுபட்டவனென்றறிதற்குச் சிறந்தகுறி அவரிடத்து நிகழும் (கருமத்தால் நாணுதலாகிய) நாணும்.

கரணவியாபார்ங் குறைந்துள்ள பிராணிகளிடத்து, ஊணும் உறக்கமும் தவறு திருப்பனவாம்; அச்சமும் காமமுமோ அவ்வப்பிராணிகளின் தன்மைக்கேற்பக் குறைந்தும் மிக்கு மிருப்பனவாம்.

* சீச்சம் என்பதனை அச்சமென்று பாடஞ் சொல்லுவாரு முண்டு. அச்சம் - பயம். அது விலங்கு முதலியவற்றினும் கள்வர் முதலாயினோரா லும் வருவதாம்.

† நன்மையென்பது நன்மைக்கேதுவாய குணத்தை யுணர்த்துதலின், காரியவாகுபெயராம்.

‡ ஊனைக் குறித்த என்பதனை ஊணைக் குறித்த என்று பாடங் கூறுவாருமுண்டு. ஊண் - உணவு.



(அதுபோல), சால்பு – (நற்குணங்களின்) நிறைவானது, நாணென்னு நன்

மை - நாணென்னும் நன்மைக் குணத்தை, குறித்தது - தனக்கு இருப்பிட மாகக்கொண்டு அதனை விடாது, (எ - று).

உடம்பென்பது ஈறுதோன்றுத சாதியொருமைப்பெயர். நன்மை-காரி யவாகுபெயர். உயிர் உடம்போடு கூடியல்லது பயனடையாத விதம்போன்று சால்பு நாணோடு கூடியல்லது பயனடையாதென்பதாம்.

(க - து.) சால்பு நிலைக்குஇடம் நாணென்னும் நன்மைக் குணமாம் என்பது.

3. As the body is the abode of the jivas, so perfect virtue has modesty as its abode.

க.

அணியன்றே நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றே பீடு நடை.

பரி:—(இ - ள்.) சான்றோர்க்கு நாணுடைமை யாபரணமாம்; அஃ
தாபரண மில்லையாயின், அவர் * பெருமிதத்தையுடைய
நடை கண்டோர்
கீதுப் பிணியாம், (எ - று).

அழகு செய்தலின் 'அணி' என்றும், பொறுத்தற் கருமையிற் 'பிணி' என்றுங் கூறினர். † ஓகாரவிடைச் சொற்கள் எதிர்மறைக்கண் வந்தன. இவை மூன்றுபாட்டானும் அதன் சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) சான்றோர்க்கு - நற்குணங்களால் நிறைந்தவர்க்கு, நாணுடைமை - நாணமுடைமை, அணியன்றே - ஆபரணமாம், அஃதின் றேல் - அவ்வாபரணம் இல்லையாயின், பீடுநடை - (அவர்) பெருமிதத்தை யுடைய நடை, பிணியன்றே - (கண்டவர்க்கு) நோயாம், (எ - று).

நாணுடைமை அழகு செய்தலால் அதனை 'அணி' என்றும், நாணில்லாதவர் பீடுநடை பொறுத்தற் கருமையால் அதனைப் 'பிணி' என்றும், சொல்லினர். ஓகாரவிடைச்சொற்கள் எதிர்மறைப்பொருளில் வந்தன. இவை மூன்று பாட்டாலும் அந்நாணினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து.) நாணுடைமை என்னும் ஆபரணமில்லார்க்குப் பெருமிதநடையில்லை என்பது.

---

* பெருமிதம் - மேம்பாடு; அஃதாவது கம்பீரம்.

† அன்று அன்று என்னும் எதிர்மறைக் குறிப்புவினைமுற்றுக்களிரண்டும் எதிர்மறைப்பொருளில் வந்த ஓகாரவிடைச்சொற்களுடன் புணர்ந்து ஆம், ஆம் என்னும் பொருளை யுணர்த்தி நின்றன. இரண்டெதிர்மறைச் சொற்கள் தம்முட் புணருமிடத்து ஒருடம்பாட்டுப் பொருளை யுணர்த்து மென்பது நியமமாம்.

4. Is not modesty an ornament to the noble? without it, their haughtiness would be painful to others.



ரு. பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு.

பரி:—(இ - ள்.) பிறரிக்கு வரும் பழியையுந் தமக்கு வரும் பழியையும் ஒப்பமதித்து நாணுவாரை உலகத்தார் நாணுக் குறைவிடமென்று சொல்லுவர், (எ - று).

ஒப்பமதித்தல் - அதுவுந் தமக்கு வந்ததாகவே கருதுதல். அக்கருத்துடையார் பெரியாராகலின், அவரை உயர்ந்தோர் யாவரும் புகழ்வரென்பதாம். இதனால் அதனை யுடையவரது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) பிறர் பழியும் - பிறர்க்கு வரும் பழியையும், தம் பழியும் - தமக்குவரும் பழியையும், நாணுவார் - (சமமாக மதித்து) நாணுவாரை, உலகு - உலகத்தார், நாணுக்கு-நாணத்திற்கு, உறைபதியென்னும்-

இருப்பிடமென்று சொல்லுவர், (எ - று).

சமர்காகமதித்தல் - அதனையும் (பிறர்க்கு வரும் பழியையும்) தமக்கு வந்ததாகவே கருதுதல். அக்கருத்துடையவர் பெரியராகலால், அவரை உயர்ந்தோர் யாவரும் புகழ்வரென்பதாம். இதனால் அந்நாணினை யுடையவரது சிறப்புச்சொல்லப்பட்டது.

(க-து.) பிறர்க்குவரும் பழியையுந் தமக்குவரும் பழியாகக் கருதி நாணுவாரே நாணத்திற் கிருப்பிடமாவர் என்பது.

5. The world regards as the abode of modesty him who feels ashamed for others guilt as for his own.

சு.

நாண்வேலி கொள்ளாது மன்னே வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

பரி:—(இ - ள்.) உயிர்நீத்தவர், தமக்கேமமாக

நாணினைக் கொள் வதன்றி, அகன்றஞாலத்தைக் கொள்ள விரும்பார், (எ - று).

பழிபாவங்கள் புகுதாமற் காத்தலின் 'வேலி' என்றார். * நாணும் ஞால மும் தம்முண்மாறுயவழி அந்நாணினைக் கொள்வதல்லது அவை புகுது நெறி யாய ஞாலத்தினைக்கொள்ள விரும்பா ரென்பதாம். மன்னும் ஓவும்-அசை.

---

* நாணும் ஞாலமும் தம்முண் மாறுயவழி - நாணம் ஞாலம் என்னு மிரண்டனுள் யாதாவதொன்றினைக்கொள்ள நேர்ந்தவிடத்து.



0. நாணுகிய வேலியைப் பெற்றல்லது ஞாலம்பெற விரும்பாரென் றுரைப் பாருமுளர்.

தெளி:—(இ - ள்.) மேலாயவர் - உயர்ந்தவர், வேலி - (தமக்குக்) காப் பாக, நாண் - நாணத்தை, கொள்ளாது - கொள்வதல்லாமல், வியன்ஞாலம்- பரந்த பூமியை, பேணலர் -

கொள்ளவிரும்பார், (எ-று).

பழிபாவங்கள் அடையாவாறுசாத்தலால் நாணினை 'வேலி' என்றார்.

(உயர்ந்தவர்) நாணமும் பூமியும் தம்முள் மாறுய விடத்து அந்நாணத்தைக் கொள்வதல்லது அப்பழிபாவங்கள் புகும் வழியாகிய பூமியைக் கொள்ள விரும்பாரென்பதாம். மன்னும் ஓவும் - அசைநிலைகள்.

(க-து.) உயர்ந்தவர் நாணத்தைவிடுதலால் உலகத்தைப்பெறுவதாயிருப்பினும், அது செய்யார் என்பது.

6. The great make modesty their barrier of defence and not the wideworld.



எ. நாண லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
ணண்றேவார் நாணுள் பவர்.

பரி:—(இ - ள்.) நாணினது சிறப்பறிந்து அதனை விடாதொழுகுவார் † அந்நாணு முயிருந் தம்முண் மாறுயவழி நாண்சிதையாமற்பொருட்டு உயிரை நீப்பர், உயிர் சிதையாமற்பொருட்டு நாணினை நீக்கார். ()

‡ உயிரினும் நாண் சிறந்ததென்பதாம். இவையிரண்டொட்டானும் ¶

அவர் செயல் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) நாணுள்பவர் (நாணினது சிறப்பையறிந்து) அந் நாணத்தினை விடாது ஒழுகுகின்றவர், (அந்நாணும் உயிருந் தம்முள்மாறுய விடத்து), நாணுல் - நாண் சிதையாமற் பொருட்டு, உயிரை—, துறப்பர்-நீக்குவர், உயிர்ப்பொருட்டு - உயிர்சிதையாமற்பொருட்டு, நாண் - நாணினை, துறவார்-நீக்கார், (எ - று).

நாண் உயிரினுஞ் சிறந்ததென்பதாம். இவை இரண்டுபோட்டாலும் அவர் செயல் சொல்லப்பட்டது. பின்னுள்ள ஆல் அசைநிலை.

---

o மேலாயவர்—, நாண்வேலி - நாணுகிய வேலியை, கொள்ளாது - பெற்றுலல்லாமல், வியன்ஞாலம் பேணலர் - பெரிய உலகத்தைப் பெற விரும்பார், என்றுரை கூறுவாரு முண்டு.

† நாணும் உயிரும் தம்முண் மாறுயவழி - நாண் உயிரென்னுமிரண்டனுள் யாதாவதொன்றனை நீக்க நேர்ந்தவிடத்து.

‡ "உயிரினுஞ் சிறந்தன்று நாணே" என்பது தொல்காப்பியம்.

¶ அவர் - நாணமுடையார்.

(க-து.) நாணின் சிறப்பை யறிந்தவர் அது கெடும்படிவரின், உயிரைவிட்டேனும் அந்நாணத்தைக் காப்பர் என்பது.

7. The modest would rather sacrifice their life for the sake of modesty than abandon it to preserve their life.

அ. பிறர்நாணத் தக்கது தாணுணை ணுயி
னறநாணத் தக்க துடைத்து.

பரி:—(இ - ள்.) கேட்டாருங் கண்டாரு நாணத்தக்க பழியை ஒருவன் தாணுணுது செய்யுமாயின், அந்நாணுமை அவனை அறம் விட்டு நீங்கத்தக்க தற்றத்தினை யுடைத்து, (எ-று).

தானெனைச் செய்வானைப் பிரிக்கின்றுராகலின் 'பிறர்' என்றுர். நாணே டியைபில்லாதானை அறஞ்சாரா தென்பதாம்.

தெளி:—(இ - ள்.) பிறர் - கேட்டவரும் கண்டவரும், நாணத்தக்கது- நாணத்தக்கபழியை, தாணுணுயின்—(ஒருவன்) தான்நாணுது செய்வானுயின், (அந்நாணுமை), அறம் - அறமானது, நாணத்தக்கது. (அவனை) விட்டு நீங்கத்தக்க குற்றத்தினை, உடைத்து - உடையதாம், (எ - று).

தான் என்று பழியைச் செய்வானைப்பிரிக்கின்றுராகலால் (கேட்டவரையும் கண்டவரையும்) 'பிறர்' என்றுர். நாணோடு சம்பந்தமில்லாதவனை

அறம் சாராதென்பதாம்.

(க-து.) பிறர் நாணத்தக்க

பழியைச் செய்கின்றவனிடத்து

அறம் சாராது என்பதாம்.

8. Virtue will forsake him who shamelessly does what others are ashamed of doing.



கூ.

குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னிலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை.

பரி:—(இ - ள்.) ஒருவனுக் கொழுக்கம் பிழைக்குமாயின், அப் பிழைப்பு அவன் குடிப்பிறப் பொன்றனையுங் கெடுக்கும்; ஒருவன்மாட்டு நாணின்மை நின்றவழி அந்நிலை அவனலம் யாவற்றையுங் கெடுக்கும்.

நிற்றல் - ஒருபொழுதும் நீங்காமை. நலம் சாதியொருமை யாகலின், பிறப்பு, கல்வி, குணம், செயல், இனமென் றிவற்றுன் வந்தனவெல்லாங் கொள்ளப்படும். ஒழுக்க அழிவினும் நாணழிவு இறப்பத் தீ தென்பதாம்.

தெளி:—(இ - ள்.) கொள்கை - ஒழுக்கம், பிழைப்பின் - (ஒருவனுக்குத்) தவறுமாயின், (அத்தவறு), குலம் - (அவன்) குடிப்பிறப்பொன்றனையும், சுடும்-கெடுக்கும், நாணின்மை - நாணில்லாமை, நின்றக்கடை - (ஒருவ-

னிடத்து) நின்றவிடத்து, (அந்நிலை), நலம் - (அவனது) நன்மை யெல்லாவற்றையும், சுடும் - கெடுக்கும், (எ-று).

நிற்றல் - (நாணின்மை) ஒருகாலத்தும் நீங்காமை. நலம் சாதியொரு மைப் பெயராகலால், பிறப்பு, கல்வி, குணம், செயல், இனம் என்ற இவற் றுல் வந்த நன்மைகளெல்லாங் கொள்ளப்படும். ஒழுக்க அழிவினும் நாணழிவு மிகத் தீ தென்பதாம்.

(க - து.) ஒருவனிடத்து நாணில்லாமை யிருக்குமாயின், அஃது அவனது நன்மைகள் எல்லாவற்றையும் கெடுக்கும்.

9. Failing of good manners consumes one's family; but want of modesty consumes every kind of goodness.

க0. நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணு லுயிர்மருட்டி யற்று.

பரி:—(இ-ள்.) தம்மனத்தின்கண் நாணில்லாத மக்கள் உயிருடை யார் போன்றியங்துகின்ற வியக்கமும் மாத்தாற் செய்த * பாவை † இயற்
திரக் கயிற்றினுயி தன்னியக்கத்தால்
உயிருடைத்தாக மயக்கினும்
போலும், (எ-று).

‡ கருவியே கருத்தாவாயிற்று, நாணில்லாத மக்களியக்கம் ¶ நாணு டைய பாவை யியக்கம் போல்வ தல்லது உயிரியக்க மன்றென்பதாம். இவை மூன்றுபாட்டானும் நாணில்லார திழிவு கூறப்பட்டது.

---

* பாவை - பிரதிமை (பொம்மை). † இயந்திரக்கயிறு-சூத்திரக்கயிறு.

‡ நாணல் என்னும் துணைக்கருவியே கருத்த (செய்பவ) ஞக நின்றது. சேனவரையர் தொல்காப்பியம் மூன்றும்வேற்றுமைச் சூத்திரத்தி னுரையில் "வினைமுதலாவது (கருத்தாவாவது) கருவிமுதலாயின காரணங் களைத் தொழிற்படுத்தவது. கருவியாவது வினைமுதற்றொழிற் பயனைச் செயப்படுபொருட்கணுய்ப்பது"என்றனர். "செயப்படு பொருளைச்செய்தது போல" என்னும் தொல்காப்பிய சூத்திரத்தின் விசேடவுரையில் நச்சினர்க் கினியார் "இனி ஒன்றெனமுடித்தலால் இவ்வாளெறியும் எனக் கருவியைத் தானே செய்வதாகக்கூறுங் கருவிக்கருத்தாவும்.....கொள்க" என்றனர். நக் கீரனர் இறையனுகப்பொருள் "குறியெனப்படுவது" என்னுஞ் சூத்திர வுரையில் "கருத்தன், ஏதுக்கருத்தன், கருவிக்கருத்தன், கருமக்கருத்தன் என இவை. அவற்றுள், (1) கருத்தனென்பது தச்சன் எடுத்தமாடம், கொல்லன்செய்தவாள்; (2) ஏதுக்கருத்தனென்பது ஏவிஞலைக்கருத்தா

வாகச் செய்வது. அரசர்தொட்ட குளம், அரசர் எடுத்த தேவகுலம் என

• இத்தொடக்கத்தன; (3) இனிக்கருவிக்கருத்தனென்பது வாள் எறியும், சுரிகை குற்றும், இம்மிடா நாற்குருஞ்ஞி யரிஞிச்சோறு அடும் என இத் தொடக்கத்தன; (4) இனிக்சருமக்சருத்தனென்பது திண்ணெமழுகிற்று, கலங்கழுவிற்று, மாங்குறைத்தது என்றுசொல்வது" என்றனர். இவை யிங் குணர்த்தற் பாலனவாம். ¶ நாணுடைய - சூத்திரத்தையுடைய

## ஒழிபியல்—அ-வது குடிசெயல்வகை.

**1091**

தெளி:—(இ - ள்.) அகத்து - (தம்) மனத்தில், நாண் - ஞாணம், இல்லார் - இல்லாதமக்கள், இயக்கம் - (உயிருடையார்போன்று இயங்கு கின்ற) இயக்கமானது, மரப்பாவை - மரத்தாற் செய்தபாவை, நாணுல் -எந் திரக்கயிற்றினுல், (ஆகிய தனது இயக்கத்தால்), உயிர் - உயிருடையதாக, மருட்டியற்று - மயக்கினாற்போலும், (எ - று).

நாணுல் என்னும் கருவியே கருத்தாவாக நின்றது. நாணில்லாத மக்க

ளியக்கம் நாணுடைய பாவையியக்கம் போல்வ தல்லது உயிரியக்கமன் றென்பதாம். இவை மூன்று பாட்டாலும் நாணில்லாதவரது இழிவு சொல் லப்பட்டது. இயக்கம் - அசைதல்.

(க - து.) நாணமில்லாதார் நடைப்பிணமாவர்

என்பது.

10. The actions of those who are void of modesty at heart are like those of a wooden puppet moved by a string.

## ஆ-வது அதிகாரம்.

### குடிசெயல்வகை—

## *Method of maintaining the Faimly.*

பரி:—அஃதாவது ஒருவன் முன்பிறந்த குடியை உயரச்செய்தலின் நிறம். † இது தாழ்வின்கணுணுதலுடையார்க் குளதாவதாகலின், நாணுடைமையின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது ஒருவன் தான்பிறந்த குடியை உயரச்செய்தலின் நிறம். இது தாழ்வினிடத்து நாணுதலுடையவர்க்கு உண்டாவதாகலால், நாணுடைமையின்பின் வைக்கப்பட்டது.

க.

கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

பரி:—(இ—ள்.) தன்குடி செய்தற்பொருட்டுத்

தோடங்கிய ‡ கருமம்

முடியாமையின், எண்ணிய கருமஞ் செய்தற்கியான் ¶ கையொழியே னென்னும் ஆள்வினைப் பெருமைபோல ஒருவனுக்கு மேம்பாடைய பெருமை பிறிதிலீலை, (எ - று).

குடிசெய்தற்பொருட்டென்பது | அதிகாரத்தான் வந்தது. பலவகைத்

தாய கருமச்செயலாற் செல்வமும் புகழுமெய்திக் குடியுயருமாகலின் 'பீடு டையதில்' என்றார். ‖ குடிசெய்தற் கருமமே நடத்தலால், தன் கருமஞ்

---

† இது - குடிசெயல்வகை.

‡ கருமம் - காரியம். ¶ கையொழியேன் - விடேன்.

| அதிகாரத்தான் - குடிசெயல்வகை யென்னுமிவ்வதிகாரத்தால்.

‖ கருமஞ்செய என்பதற்குக் குடிசெய்தற்கருமமே நடத்தலால், தன் கருமஞ் செய்ய என்றும், பிறர் கருமஞ்செய்ய என்றும், (இருவகையாகப்

செய்யவென்றும் பிறர் கருமஞ் செய்யவென்று முரைப்பாரு முளர்; தன் கருமமும் அதுவேயாகலானும், பிறரேவல் செய்தல் நலமையன்மையானும், அவையுரையன்மை யறிக.

தெளி:—(இ - ள்.) (தன்குடியை யுயரச்செய்தற்பொருட்டுத் தொடங்கிய கருமமுடியாமையால்), கருமஞ்செய - (என்னிய) கருமத்தைச் செய்தற்கு, கைதூவேனென்னும் - (யான்) கையொழியே னென்கிற, பெருமையின் - ஆள்வினைப்பெருமைபோல, ஒருவன்-ஒருவனுக்கு, பீடையது-மேம்பாடையை பெருமை, இல்-(மற்றொன்று) இல்லை, (எ-று).

குடியையுயரச் செய்தற்பொருட்டென்பது அதிகாரத்தால் வந்தது. பல வகைத்தாகிய கருமத்தைச்செய்தலால் செல்வமும்புகழுமடைந்து குடியுயருமாகலால் 'பீடையதில்' என்றார். ஆள்வினை-முயற்சி.

(க-து.) தன்குடியை யுயரச்செய்தற்பொருட்டுத் தான் மேற்கொண்ட கருமத்தைச்செய்து முடிப்பவனுக்கு மேம்பாடையை பெருமையுண்டாகும் என்பது.

1. There is no higher dignity than that of one saying
that I will not slack in my effort to raise my faimly.

உ. ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினையா னீளுங் குடி.

பரி:—(இ - ள்.) முயற்சியும் நிறைந்த

வறிவுமென்று சொல்லப் பட்ட இரண்டினையுமுடைய * இடையறாத கருமச்செயலால் ஒருவன் குடியுயருமீ, (எ - று),

நிறைதல் - † இயற்கையறிவு செயற்கையறிவோடுகூடி நிரம்புதல்.

---

பொருள்) கூறுவாரு முண்டு; தன்கருமமும் அதுவே (குடிசெய்தற் கருமமே) யாகலாலும், (இது குடிசெய்தற் கருமமே கடைத்தலால், தன்

கருமஞ்செய்ய என்று கூறிய முதலுரையின் மறுப்பு. தன் கருமமும் குடி செய்தற்கருமமாயே யிருத்தலறியாது குடிசெய்தற்கருமம் வேறு; தன் கரு மம் வேறு என்று பிரித்தது வழுவா மென்பது கருத்து.)

பிறரது ஏவலைச் செய்தல் தலைமையல்ல வாதலாலும், [இது பிறர் கருமஞ்செய்ய என்று கூறிய இரண்டாமுரையின் மறுப்பு. சுதந்தரமாக விருத்தலைக் கூறாது

பிறரது ஏவலைச்செய்திருத்தல் உத்தமமான அவை யுரையாகா வென்றறிக.

தன்றென்பது கருத்து.]

* இடையறாத - கடமை நீக்காத. † இயற்கையறிவு - முற்பிறப்பிற் செய்த நல்வினையா

லிப்பிறப்பில் கல்வி கேள்விகளி னுதவியின்றி யுண்டாய நல்லறிவு.

## ஒழிபியல்— அ-வது குடிசெயல்வகை.

**1093**

$ ஆள்வினை - மடிபுகுதாமற் பொருட்டு; ஆன்றவறிவு - உயர்தற்கேற்றசெயல்களும் அவைமுடிக்குந் திறனும் பிழையாம லெண்ணுதற் பொருட்டு. இவை யிரண்டு பாட்டானும் | அச்செயற்குக் || காரணங் கூறப்பட்டது.

தெளி:—(இ- ; .) ஆள்வினையும்-முயற்சியும், ஆன்றவறிவும்-நிறைந்த வறிவும், என விரண்டின் - என்று சொல்லப்பட்ட இரண்டினையுமுடைய, நீள் - இடையறாத, வினையால் - கருமச்செயலால், குடி-(ஒருவனது),குடி யானது, நீளும் - உயரும், (எ - று).

நிறைதல் - இயற்கையறிவு செயற்கையறிவோடுகூடி நிரம்புதல். ஆள்
வினை- சோம்பல் அடையாமற்பொருட்டாம்;
ஆன்றவறிவு-(குடி) உயர்தற்கு
ஏற்றசெயல்களையும் அவற்றை முடிக்கும் விதத்தையும்

தவறுமல் என்னு

தற்பொருட்டாம். இவை யிரண்டுபாட்டாலும்
அச்செயற்குக் காரணம் சொல்லப்பட்டது.

(க - து.) ஒருவனது குடியானது அவனது முயற்சியும் நிறைந்த அறிவுமென்று சொல்லப்பட்ட

இரண்டினையுமுடைய

இடையறுத தொழிலால் உயரும் என்பது.

2. •The status of one's family is raised by untiring perseverance in both effort & wise cantrivances.

ங. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ

மடிதறறுத தானமுந துறுமம.

பரி:—(இ - ள்.) என் குடியினை

யுயரச்செய்யக்கடவே னென்று

---

செயற்கையறிவு - கல்விகேள்விகளினுலாய நல்லறிவு.

இப்பிறப்பில் காரணமின்றி யுண்டாய நல்லறிவு இயற்கையறிவாம்; காரணத்தாலுண்டாய நல்லறிவு செயற்கை யறிவாமென்று கொள்க.

§ ஒருவன் தான் பிறந்த குடியை யுயரச்செய்தற் பொருட்டு அதற்கு வேண்டிய செயல்களைச் செய்யும்போது, அவனுக்கு அவற்றைச் செய்தற் கண் சோம்பலுண்டாகாமைப் பொருட்டு ஆள்வினை (முயற்சி)யும், அச்செய

ல்களையும் அவற்றை முடிக்கும் வகையையும் தவறுமலாலோசித்தற்பொருட்டு ஆன்றவறிவும் வேண்டுவனவாயின. ஆள்வினை-மெய்ம்முயற்சி; ஆன்றவறிவு - செயற்கையறிவோடு கூடி நிரம்பிய இயற்கையறிவு.

| அச்செயற்கு - தான் பிறந்த குடியை யுயரச்செய்தற்கு.

‖ காரணம்—கைதூவே னென்னும் பெருமை, ஆள்வினை, ஆன்ற அறிவு என்பனவாம்.



கொண்டு அதற்கேற்ற கருமங்களின் முயலும் ஒருவனுக்குத் * தெய்வம் ஆடையைத் தற்றுக்கொண்டு தான் முந்துற்று நிற்கும், (எ - று).

முயற்சியை † அதன் காரணத்தாற்கூறினர்.

தற்றுதல்-இறுகவுடுத்தல். ‡ முன்னடப்பார் செயல் நியதிமேலேற்றப்பட்டது.

தெளி:—(இ - ள்.) குடிசெய்வலென்னும்-(என்) குடியினை உயரச் செய்யக்கடவே னென்று கொண்டு (அதற்கு ஏற்றக நமங்களில்) முயலும், ஒருவற்கு - ஒருவனுக்கு, தெய்வம்-தெய்வமானது, மடி-ஆடையை, தற்று-தற்றுக்கொண்டு, தான் முந்துறும் - தான் முன்னே வந்து நிற்கும். (எ - று).

முயற்சியை அதனது காரணத்தால் 'தெய்வம்' என்று சொல்லினர். தற்றுதல் - இறுக வுடுத்தல் ; அஃதாவது ஆடையை நன்றாக அரையில் இழுத்துக்கட்டுதலாம். முன்னடப்பாரது செயல் ஊழ்மேல் ஏற்றப்பட்டது..

(க - து.) தன் குடியை யுயரச்செய்தற் பொருட்டு அதற்

கேற்ற கருமங்களில் முயலுபவனுக்கு அவனது நல்வினையே முன்னின்று அக்கருமங்களை முடிவுபெறச்செய்யும் என்பது.

3. The Deity will gird its loins and come forward to help him who resolves himself to make his family renowned.

ச. சூழாமற் றூனே முடிவெய்துந் தங்குடியைத்

தாழா துளுற்று பவர்க்கு.

பரி:—(இ-ள்.) தங்குடிக்காம் வினையை ¶

விரைந் து முயல்வார்க்கு அவ்வினை முடிக்குந்திறம் அவர் நூழவேண்டாமற் றனே முடிவெய்தும்.

குடி—ஆகுபெயர். : தெய்வ

முந்துறுதலால் பயன்கூறியவாறு. இவை

---

* தெய்வம்-ஊழ். † அதன்காரணம்-முயற்சியின் காரணம்(தெய்வம்). முயற்சியென்று கூறாது தெய்வம் என்று கூறினமையின், 'முயற்சியை அதன் காரணத்தாற் கூறினர்' என்று கூறப்பட்டது. தெய்வத்தின் காரிய மாய முயற்சியைத் தெய்வமென்று கூறினமையின், இது கருவியாகு பெயராம.

‡ எமது குடியினை உயரச்செய்யக் கடவேமென்று கொண்டு அதற் கேற்ற காரியங்களைச்செய்ய முன்னடப்பவரது செயல் (அவரது செயலுக் குக் காரணமான) நியதி (தெய்வத்தின்)மே லேற்றிக் கூறப்பட்டது. இஃது ஒன்றன்செயல் மற்றொன்றன் மேலாய வுபசாரவழக்காம்.

¶ விரைந்து - தாமதியாது.

: தங்குடிக்காந் தொழிலை

விரைந்துசெய்ய முயல்வார்க்குத் தெய்வம்

(ஆகூழ் - நல்வினை) தன்பயனைத்தர முற்பட்டு நிற்றலால், அவர் அது



**1095**

யிரண்டு பாட்டானும் * அதற்குத் தெய்வந் துணையாதல் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) தங்குடியை - தமது குடிக்காந்தொழிலை, தாழாது- விரைந்து, உளற்றுபவர்க்கு - முயல்பவர்க்கு, (அத்தொழிலை முடிக்கும்விதம்), சூழாமல் - (அவர்) ஆலோசிக்க வேண்டாமல், தானே முடிவெய்தும் - தானே முடிவுபெறும், (எ - று).

குடியென்பது அது விருத்தியாதற்குக் கருவியாய தொழிலை யுணர்த்துதலால், காரிய ஆகுபெயராம். ஊழ்முன்வந்து நிற்றலாற் பயன்சொல்லிய படியாம். இவை இரண்டு பாட்டாலும் அதற்கு ஊழ்துணையாதல் சொல்லப்பட்டது.

(க - து.) தமதுகுடி யுயர்தற்காந் தொழிலை விரைந்து செய்பவர்க்கு அத்தொழில் பாதொரு தடையுமின்றி முடிவுபெறும்.

4. Those who labor unremittingly for the betterment of their family, need no deliberation; such efforts spontaneously fructifiy.



ரு. குற்ற மிலனெய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச சுற்று முலகு.

பரி:—(இ - ள்.) தற்றமாயின செய்யா து தன் குடியை யுயரச்
செய் தொழுதவானை அவனுக்குதச் சுற்றமாக வேண்டித் தாமே சென்று
சூழ்வர் உலகத்தார், (எ - று).

குற்றமாயின—அறநீதிகட்கு மறுதலையாய செயல்கள். தாழும் பய
னெய்தலேக்கி யாவருஞ்சென்று சார்வ தென்பதாம்.

தெளி:—(இ - ள்.) குற்றமிலனெய் - குற்றமாயினவற்றைச் செய்யா
மல், குடி செய்து - (தன்) குடியை யுயரச்செய்து, வாழ்வானை-ஒழுகுகின்ற
வனை, சுற்றமா - (அவனுக்குச்) சுற்றமாக, (வேண்டி), உலகு - உலகத்தார்,
சுற்றும் - (தாழ்ந்சென்று) சூழ்வர், (எ - று).

குற்றமாயின - அறத்திற்கும் நீதிக்கும் விரோதமாய செயல்கள். தாமும்பயனடைதல் நோக்கி யாவரும்சென்று (குற்றமிலனுய்க் குடிசெய்து வாழ்வானைச்) சார்வரென்பதாம்.

(க-து.) அறத்திற்கும் நீதிக்கும்மாறுய செயல்களைச் செய்யாமல், தன்குடியை யுயரச்செய்தொழுகுகின்றவனை உலகத்தார் அவனுக்குச் சுற்றமாக வேண்டித்தாமே சென்று சூழாநிற்பர்.

---

பற்றி யாலோசிக்க வேண்டாமல் அத்தொழில் இனிது முடிவுபெறு மென்பதாம். "ஊழையு முப்பக்கங் காண்ப ருலவின்றித், தாழா தருற்று பவர்" என்னுங்குற ளிங்குக் கவனித்தற்குரியதாம்.

* அதற்த - குடியை யுயரச்செய்தற்கு.



5, The world will circle and seek the friendship of the blamless man who raised his family by fair means.



நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல்.

பரி:—(இ - ள்.) ஒருவனுக்கு நல்ல ஆண்மையென்று உயர்த்துச் சொல்லப்படுவது தான் பிறந்த குடியினை யாளுந்தன்மையைத் தனக் குளதாக்கிக்கோடல், (எ -று).

* போர்த்தொழிலி னீக்குதற்கு 'நல்லாண்மை' என விசேடித்தார். குடியினையாளுந்தன்மை—குடியிலுள்ளாரை யுயரச்செய்து தன்வழிப்படுத் தல். † அதனைச் செய்துகோடல் நல்லாண்மையாமாறு வருகின்ற பாட் டாற் பெறப்படும்.

தெளி:—(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, நல்லாண்மையென்பது- நல்ல ஆண்மை யென்று உயர்த்திச் சொல்லப்படுவது, தான் பிறந்த இல் - தான் பிறந்த குடியினை, ஆண்மை-ஆளுந்தன்மையை, ஆக்கிக்கொளல்- (தன க்கு) உளதாக்கிக் கொள்ளுதல், (எ - று).

போர்த்தொழிலி னீக்குதற்கு 'நல்லாண்மை' என விசேடித்தார். குடி யினையாளுந் தன்மை-தன் குடியிலுள்ளவரை உயரச்செய்து தன்வழிப்படுத் தல். அதனைச் செய்துகொள்ளுதல் நல்லாண்மையாம்விதம் வருகின்ற பாட் டாற் பெறப்படும்.

(க - து.) தான்பிறந்த குடியையுயரச்செய்து, அதனையாளுந் தலைத் தனக்குரியதாகக் கொள்ளுதல் ஒருவனுக்குச் சிறந்த ஆண்மையாம் என்பது.

6. A man's true manliness consists in making himself
the head and benefactor of his family.

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவார் மேற்றே பொறை.

பரி:—(இ-ள்.) ‡ களத்தின்கட் சென்றார் பலராயினும் போர்தாங்கு தூதல் வன்கண்ணார் மேலதாஞற்போல, குடியின்கட் பிறந்தார் பலரா

* ஆண்மை யென்று வாளா கூறுது நல் என்னும் விசேடந்தந்து, 'நல் லாண்மை' என்று கூறியது போர்த்தொழிலிற் காட்டும் ஆண்மையை நீக்குதற்காம். [விசேடித்தல் - பிரித்துக் காட்டல்].

† அதனை - தன்வழிப்படுத்தலை.

‡ களத்தின்கண் - போர்செய்யு மிடத்தில்.



**1097**

யினும் * அதன்பாரம் பொறுத்தல் † அதுவல்லார் மேலதாம், (எ-று).

‡ பொருட்கொக்க வேண்டுஞ்சொற்கள்

உவமைக்கண் வருவிக்கப் பட்டன. நன்குமதிக்கப்படுவார் அவரே யென்பதாம். இவை மூன்று பாட்டானும் 0 அது செய்வா ரெய்துஞ் சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்:) அமரகத்தி - போர்க்களத்தினிடத்து, (சென்றவர் பலராயினும் போரைத் தாங்குதல்), வன்கண்ணர்போல - சூரர்(மேலதானுந்) போல, தமரகத்தும் - குடியினிடத்து (பிறந்தவர் பலராயினும்), பொறை - (அதனது பாரத்தை) பொறுத்தல், ஆற்றுவார் மேற்றே - (அது) வல்லவர் மேலதேயாம், (எ - று).

உவமேயத்திற் கொக்க வேண்டுஞ் சொற்கள் உவமானத்தில் வருவிக்கப்பட்டன. நன்குமதிக்கப்படுவார் அவரேயென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் அது செய்வாரடையும் சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து,) குடியின் பாரத்தை (உரிமையை)ப் பொறுத்தல் அக்குடியிற்பிறந்தார் பலருள் ஒருவரிடத்ததேயாம் என்பது.

7. Like heroes bearing the brunt of the fight in the battle-field the burden of protection of the family rests upon those who are efficient in it.

அ. குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்.

பரி:—(இ - ள்.) தங்குடியினை யுயர்ச்செய்வார் அச்செயலையே நோக்காது காலத்தை நோக்கி மடியினைச் செய்துகொண்டு மானத்தையுங் கருதுவாயிற் குடிகெடும்; ஆகலான் அவர்க்குக் காலநியதியில்லை, (எ - று).

---

* அதன் - குடியினது. † அது - பாரத்தைப் பொறுத்தல்.

‡ தமரகத்து மாற்றுவார் மேற்றே பொறை என்னும் பொருட்கு (உவமேயத்திற்கு) ஒக்க (ஒத்திருக்கும்படி) சென்றூர் பலராயினும் போர்தாங்குதல் மேலதாஞல் என்னும் வேண்டுஞ் சொற்கள், அமரகத்து வன்கண்ணர் போல என்னும் உவமைக்கண் (உவமானத்தில்) வருவிக்கப்பட்டன. உவமேயத்தில் பிறந்தார் பலராயினும் என்றும் அதன்பாரம் (பொறுத்தல்) என்றும் வருவித்தற் கேற்ப, உவமானத்தில் சென்றூர் பலராயினும் என்றும் போர்தாங்குதல் மேலதாஞல் என்றும் வருவிக்கப்பட்டன. பொருட்கேற்க என்றும் பாடமுண்டு.

¶ அவரே - குடியின் பாரத்தைப் பொறுப்பாரே.

0 அதுசெய்வார் - தாம் பிறந்த குடியை யுயர்ச்செய்வார்.

காலத்தை நோக்கி மடிசெய்தல்—வெயின் மழை பனியென்பனவுடை

மை நோக்கிப் பின்னர்ச் செய்துமென் றொழிந்திருத்தல்-மானங் கருதுதல்-

இக்குடியிலுள்ளார் யாவரும் இன்பமுற இக்காலத்துத் துன்பமுறுவேன்

யாதே வென்று உட்கோடல். மேல் * 'இகல்வெல்லும், வேந்தர்க்கு வேண்

டும் பொழுது' என்ற துட்கொண்டு † இவர்க்கும் வேண்டுமோ வென்று

கருதினும் ‡ அது கருதற்கவென்று மறுத்தவாறு.

தெளி:—(இ - ள்.) மடிசெய்து - (தமது குடியினை யுயரச்செய்வார்

அச்செயலையே நோக்காது காலத்தை நோக்கிச்) சோம்பலைச் செய்துகொ

ண்டு, மானம் - மானத்தையும், கருத - நினைப்பாராயின், கெடும் - (குடி)

கெடும், (ஆகலால்), குடி செய்வார்க்கு - அக்குடியினை யுயரச்செய்வார்க்கு,

பருவம்-காலநியதி, இல்லை—, (எ - று).

காலத்தை நோக்கிச் சோம்பலைச் செய்தல் - வெயில் மழை பனியென்

பனவுடைமை நோக்கிப் பின்னே செய்வோமென்று ஒழிந்திருத்தல். மானங்

கருதுதல்-இக்குடியிலுள்ளார் யாவரும் இன்பத்தையடைய இக்காலத்தில் துன்பத்தை யடைகின்றவன் யாரே வென்று உட்கொள்ளுதல். முன் 'இகல்வெல்லும், வேந்தர்க்கு வேண்டும் பொழுது' என்றதனையுட்கொண்டு இவர்க்கும் வேண்டுமோவென்று நினைக்கினும் அது நினைக்கலாகாதென மறுத்தவாறும்.

(க - து.) தமது குடியினையுயரச்செய்வார் சோம்பலையும் மானத்தையும் மேற்கொள்ளாது, மேற்கொண்ட கருமத்தை விரைந்து செய்து முடிப்பர் என்பது.

8. One who strives to uprear one's family should wait for no season; it would perish through one's false dignity.

indolence and

கூ.

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக் குற்ற மறைப்பா னுடம்பு.

பரி:—(இ- ள்.) ¶ மூவகைத் துன்பமு முறற்பாலதாய தன்குடியை அவை யுறுமற்காக்க முயல்வானது உடம்பு அம்முயற்சித் துன்பத்திற்கே

---

* திருக்குறள் - காலமறிதல் - க. இதன்பொருள். பகைவரது வலிமை

யை வெல்லநினைக்கும் அரசர்க்கு அதற்கேற்றகாலம் வேண்டும் என்பது.

† இவர்க்கும் வேண்டுமோ - குடிசெய்வார்க்கும் காலத்தை நோக்கி

மடி செய்தல் (சோம்பிக் கிடத்தல்) வேண்டுமோ என்றெண்ணினாலும்

அது (மானத்தைக்) கருதுதல் கூடாதென்று மறுத்துக்கூறியவாறுமென்க.

‡ குடி செய்வார் காலத்தை நோக்கி மடிசெய்தாலும் மானங்கருதலாகா

தென்பதாம்.

¶ தன்னை(உடம்பை)ப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவுமென மூவகையால்வரும் பிறவித் துன்பங்கள்.

கொள்கலமா மத்துணையோ, * அஃதொழிந்து இன்பத்திற் காதலில் லையோ (எ - று).

† "உறைப்பெய லோலை போல, மறைக்குவன் பெருமனிற் குறித்து

வரு வேலே" என்புழியும் மறைத்தல் ‡ இப்பொருட்டாயிற்று. என்குடி முழுதுமின்புற்றுயரவே 0 நானிருமையுமெய்துதலான் இம்மெய்வருத்த மாத்திரம் எனக்கு நன்றென்று முயலுமறிவுடையான் அஃதொருஞான்று மொழியாமை நோக்கி 'இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ' என்றார். ¶ இது குறிப்புமொழி. இவை யிரண்டுபோட்டனும் | அவர் : அது செய்யுமியல்பு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) குடும்பத்தை - (மூவகைத்துன்பமும் அடைதற்பாலதாகிய தன்) குடியை, குற்றமறைப்பான் - அம்மூவகைத் துன்பமும் (அடையாமற்) காக்க முயல்பவனது, உடம்பு-தேகம், இடும்பைக்கே - (அம் முயற்சித்) துன்பத்திற்கே, கொள்கலங்கொல்லோ - கொள்கலமா மவ்வளவோ, [அத்துன்ப மொழிந்து இன்பத்திற் காதலில்லையோ], (எ - று).

மறைத்தல் என்பது இங்குக் காத்தல் என்னும் பொருளில் வந்தது.

என்குடியிலுள்ளார் யாவரும் இன்பமுற்று உயரவே நான் இருமையும் அடைதலால் இம்மெய்வருத்த மாத்திரம் எனக்கு நல்லதென்றுமுயலும்அறிவுடையவன் அம்மெய்வருத்தத்தை ஒருநாளும் விடாமையை நோக்கிக் குடும்பத்தைக் குற்றமறைப்பானுடம்பு 'இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ' என்றார். இது குறிப்புமொழி. ஒ-அசை. இவை

இரண்டொட்டானும் அவர் அது செய்யு
மியல்பு சொல்லப்பட்டது. மெய் - உடம்பு.

---

* அஃதொழிந்து - [அம்முயற்சித் தன்பத்திற்குக் கொள்கல (பாத்
திர)மாதலொழிந்து] இன்பத்திற்காத லில்லையோ (இன்பத்திற்குக் கொள்
கலமாத லில்லையோ].

† புறநானூறு - 290. இதன்பொருள். மழை
பெய்தலை (மேல்விழ வொட்டாது) ஓலைக் குடையான்று
காப்பதுபோன்று காப்பாற்றுவன் (என்று) பெருமானே
உன்னைக்கருதி வருவேன் என்பது.

‡ இப்பொருட்டாயிற்று - காத்தல்
என்னும் பொருளினதாயிற்று.

0 நானிருமையு மெய்துதலான் - நான் இம்மைப்பயன்
மறுமைப்பய னென்னு மிரண்டையு மடைதலால்.

¶ இது (உடம்பு இடும்பைக்கே கொள்கலங்
கொல்லோ என்பது)குறி

ப்புமொழி. குறிப்பாற் பொருளுணர்த்து மொழி குறிப்பு மொழியாம். குடும்
பத்தைக் குற்றமறைப்பானுடம்பு இடும்பைக்கே கொள்கலமாயினும், அவன்
இருமையின்பமு மடைதற்குக் காரணமாயிருத்தலால், அஃது அவனுக்கு
இன்பத்திற்கே கொள்கலமா மென்பது குறிப்பாற் பெறப்படுவதா மென்க.
"இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே" என்று கல்வழி கூறுகின்றது.

| அவர் - குடிசெய்வார்.

அது செய்யுமியல்பு – குடியை யுயரச்செய்தலின் திறம்.



(க - து.) தனது குடியைக்காக்க முயலுகின்றவனது உடம்பு அம்முயற்சித் துன்பத்திற்கே யிருப்பிடமாம் என்பது.

9. Is it only to suffering that his body is exposed who wishes to preserve his family from evil?

கo.

இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி.

பரி:—(இ - ள்.) துன்பமாகிய நவியம் புகுந்து தன்முதலை வெட்டிச் சாயிக்க ஒரு * பற்றின்றி வீழாநிற்கும், † அக்காலத்துப் ¶ பற்றவன கொடுத்துத் தாங்கவல்ல நல்லவாண்மகன் பிறவாத குடியாகிய மரம்.

முதல்—‡ அதன்வழிக்குரியார். வளர்ப்பாரைப் பெற்றுழி வளர்ந்து பயன்படுதலும் அல்லாவழிக் கெடுதலு முடைமையின், மரமாக்கினார்; 0

"தூங்குஇறை வாவலுறை தொன்மரங்க ளென்ன,ஓங்குகுல நையவத னுட் பிறந்த வீரர், தாங்கல்கட ஞுகுந்தலை சாய்ப்பவரு நீச்சொ, னீங்கன்மட வார்கள்கட னென்றெழுந்து போந்தான்" என்ரூர் பிறரும். | இது குறிப் புருவகம். இதனுன் : அவரில்லாத குடிக்குளதாங் குற்றங் கூறப்பட்டது.

* பற்றின்றி - ஆதாரமில்லாமல்.

† அக்காலத்து-தான் விழும்பொழுது.

¶ பற்ரூவன - வீழாது தாங்கவல்ல மூட்டுக்கள் (உதவிகள்).

‡ அதன் வழிக்குரியார் - அக்குடியிற்ரோன்றியவர் (சந்ததியார்).

0 சீவகசிந்தாமணி - காந்தருவதத்தையாரிலம்பகம் 6. இதன்பொருள். தொங்கிய சிறகுகளையுடைய வாவல் (வவ்வால்) வசிக்கின்ற ஆலமரங்கள் (தாம் கெட அவை கெடாதபடி அவற்றுட்டோன்றிய விழுது தாங்கிஞற்) போல, ஓங்கிய தமது குலமானது (உதவியின்றித்) தளர்ச்சியடைகின்ற அளவிலே அக்குடியினுட்பிறந்த வீரர் தலைசாய்க்குமா றுண்டாகா நின்ற (இவன் பிறந்து இக்குலங்கெட்டதென்னும்) நீச்சொல் (பிறவாதபடி தமது குலத்தைத்) தாங்குதல் (உயரச்செய்தல்) கடனையாகும்; (தமது குலத் தைத் தாங்காது) போதல் பேதைய (மூட)ரது கடனையாகும்; (ஆத லால் யானுமுயன்று பொருள் தேடி என்குலத்தைத் தாங்குவேன்) என்று கூறியெழுந்து வந்தான் சீதத்தன் என்பது. "சிதலை தினப்பட்ட வால மரத்தை, மதலையாய் மற்றதன் வீழுன்றி யாங்குக், குதலைமை தந்தைகட் டோன்றிற்ரூன் பெற்ற, புதல்வன் மறைப்பக் கெடும்" என்று நாலடியார் கூறுவது மிங்கறியத்தக்கதாம்.

| இடுக்கணை கலியமாகவும் குடியை மரமாகவும் அடுத்தூன்றும் என் னும் ஏதுவால் குறிப்பாக வுணருமாறு உருவகஞ்செய்தமையின், இக்குறள் குறிப்புருவகமாயிற்று.

: அவர் - தாங்குவார்.



# 1101

தெளி:—(இ - ள்.) அடித்து - (தான் விழும்போது பற்றுவன) கொடித்து, ஊன்றும் - தாங்கவல்ல, நல்லாள் - நல்லவாண்மகன், இலாத -

பிறவாத, குடி - குடியாகிய மரம், இடுக்கண் - துன்பமாகிய கோடாரியானது, (புகுந்து), கால் - (தன்) முதலை, கொன்றிட - வெட்டிச்சாய்க்க, வீழும் - (ஒருபற்றில்லாமல்) வீழாநிற்கும், (எ - று).

முதல்-அக்குடியின் வழிக்கு உரியவர். (மரம்) வளர்ப்பாரைப் பெற்ற விடத்து வளர்ந்து பயன்படுதலும் அல்லாவிடத்துக் கெடுதலும் உடைமை யால், குடியை மரமாக்கினர். இது குறிப்புருவகவணி. இதனால் அவரில்லாத குடிக்கு உளதாம் குற்றம் சொல்லப்பட்டது.

(க-து.) தன்னைத் தாங்கவல்ல நல்ல ஆண்மகனில்லாத குடி யானது ஆதரவற்றுக்கெடும் என்பது.

10. If there be no strong man nigh to

prop up and maintain a tottering family in distress, it would fall at the stroke of the axe of misfortune

## கூ-வது அதிகாரம்.

## உழவு:—*Agriculture.*

**பரி:—அஃதாவது சிறுபான்மை † வாணிகர்க்கும் பெரும்பான்மை**

**வேளாளர்க்கு முரித்தாய உழுதற்றொழில்; செய்விக்குங்கால் ‡ ஏனையோர்க்கு முரித்து. ¶ இது, மேற் குடியுயர்தற் கேதுவென்ற ஆள்வினைவகை யாகலின், குடிசெயல்வகையின் பின் வைக்கப்பட்டது.**

**தெளி:—அஃதாவது சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளார்க்கும் உரியதாகிய உழுதற்றொழிலாம். இது செய்விக்கும்போது மற்றவர்க்கும் உரியதாம். இது, முன்னே குடி உயர்தற்கு ஏதுவென்ற முயற்சிவகையாகலால், குடிசெயல்வகையின் பின் வைக்கப்பட்டது.**

† "வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல, திவ்வென மொழிய பிறவகை நிகழ்ச்சி" என்னும் (தொல்காப்பியம் மரபியற்) சூத்திரத்தின் விசேடவுரையில் நச்சினார்க் கினியார் "அவருள் வணிகர்க்கும் ஒழிந்த வேளாளர்க்கும் ஒத்தசெய்தியனவாகிய உழவுதொழிலும் நிரைகாத்தலும் வாணிகமுமென்பன அவற்றின் ஒத்தசிறப்பினவன்றி அவற்றுள்ளும் ஒரோவொன்று ஒரோவருணத்தார்க்கு உரியவாமாகலானும் எண்டி அவை விதந்து கூறினனென்பது. நிரைகாவலும் உழவுதொழிலும் வணிகர்க்கும் வே

ளாளர்க்குந்தடுமாறுதல் போலாது வாணிகவாழ்க்கை வேளாண்மாந்தர்க்குச் சிறுவரவிற்றெனவும் உழுதுண்டல் வணிகர்க்குச் சிறுவரவிற்றெனவும் எண்வகைக் கூலத்தோடுபட்டதே பெருவரவிற்றெனவுங் கூறினான் இச் சூத்திரங்களானென்பது." என்று கூறியதிங்கறியத்தக்கதாம்.

‡ ஏனையோர்க்கும்-பிராமணர் முதலாயினவர்க்கும்.

¶ இது - உழவு.



க. * சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனை
ஒழந்து முழுவே தலை.

பரி:—(இ - ள்.) உழுதலான்வரும் மெய்வருத்த நோக்கிப் பிறதொழில்களைச் செய்துதிரிந்தும், முடிவில் ஏருடையார் வழியதாயிற்று உல
கம்; ஆதலான், எல்லாவருத்த முற்றும் தலையாயதொழில் உழவே. ()

ஏர்—† ஆகுபெயர். பிறதொழில்களாற் பொருளெய்தியவழியும்உண
வின்பொருட்டு உழுவார்கட் செல்லவேண்டுதலிற் 'சுழன்றுமேர்ப்பின்ன துலகம்' என்றும், வருத்த மிலவேனும் பிறதொழில்கள் கடையென்பது போதர 'உழந்து முழுவே தலை' என்றுங் கூறினார். இதனால் உழவினது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) உலகம்—, சுழன்றும் -
(உழுதலால் வரும் உடல்
வருத்த நோக்கிப் பிறதொழில்களைச் செய்து) திரிந்தும்,
ஏர்ப்பின்னது - (முடிவில்) ஏருடையார் வழியதாயிற்று,
அதனால் - ஆதலால், உழந்தும் - எல்லாவருத்த முற்றும், தலை
- தலைமையாகிய தொழில், உழவே - உழுதற்றொழிலே, (எ
- று).

ஏர் என்பது ஏருடையாரை யுணர்த்துதலால்
ஆகுபெயராம். பிறதொழில்களால் பொருளைப்
பெற்றவிடத்தும் உணவினிமித்தம் உழுவாரிடத்துச்
செல்லவேண்டுதலால் 'சுழன்றுமேர்ப்பின்னதுலகம்'
என்றும், வருத்தம் இல்லையாயினும் பிறதொழில்கள்
கடையென்பதுதோன்ற 'உழந்தும் உழவே தலை' என்றும்
சொல்லினர். இதனால் உழவினது சிறப்புச் சொல்லப்
பட்டது.

(க - து.) எத்தொழிலுள்ளும்
உழவுதொழிலே தலைமை

1. Agriculture, though laborious, is the most excellent form of labour ; for though people go about in quest of less

laborious avocations, they have at last to resort to the farmer.

உ. ‡ உழவா ருலகத்தார்க் காணி யஃதாற்று
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

---

* "தொழுதூண் சுவையின் உழுதூ ணினிது" என்பது கொன்றை வேந்தன்.

† எர்(கலப்பை) என்னும் உடைமைப்பெயர் அதனை யுடையவரை யுணர்த்துதலால், உடைமையாகுபெயராம். இது "பொருண்முத லாறேடு" என்னும் நன்னூல் ஆகுபெயர்ச் சூத்திரத்தின் 'ஆதி' என்பதனுளடங்கும்.

‡ "அல்கிலா மறைவிளங்கு மந்தணா குதிவிளங்கும், பலகலையாந் தொகைவிளங்கும் பாவலர்தம் பாவிளங்கும், மலர்குலாந் திருவிளங்கு மழை விளங்கு மனுவிளங்கும், உலகெலா மொளிவிளங்கு முழவருழு முழவாலே" என்பது ஏரெழுபது.

பரி:—(இ - ள்.) அவ்வுழுதலைச் செய்யமாட்டாது பிறதொழிற்கண் மேற் செல்வார் யாவரையுந் தாங்குதலால், * அதுவல்லார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவர், (எ - று).

† "காடு கொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு"என்றாற்போல ‡ உழுவா
ரென்றது உழுவிப்பார்மேலுஞ் செல்லும். உலகத்தாரென்றது ஈண்டிவரை
யொழிந்தாரை. கலங்காமை நிறுத்தற்கண் ஆணிபோறலின் 'ஆணி' என்றார்.
பொறுத்தலான் என்பது திரிந்து நின்றது. ¶ எகதேச வுருவகம். 0 அஃ
தாற்றார் தொழுவாரே யெல்லாம் பொறுத்தென்று பாடமோதி, அது
மாட்டாதார் புரப்பார் செய்யும் பரிபவமெல்லாம் பொறுத்து அவரைத்
தொழுவாரே யாவரென் றுரைப்பாரு முளர்.

தெளி:—(இ - ள்.) உழுவார்-உழுதலில்வல்லவர், அஃதாற்றாது-அவ்
வுழுதலைச் செய்யமாட்டாமல், எழுவாரை யெல்லாம் - (பிறதொழில்கள்
மேல்) செல்வார் யாவரையும், பொறுத்து - தாங்குதலால்,
உலகத்தார்க்கு - உலகத்தாராகிய தேர்க்கு, ஆணி -
அச்சாணியாவர், (எ - று).

உழுவாரென்பது உழுவிப்பார்க்குமாம். உலகத்தாரென்றது இங்கு இவ்
வுழவரை யொழிந்தவரை. உலகத்தாரைக் கலங்காமல் நிறுத்தலில் உழுவார்
அவர்க்கு ஆணிபோன்றிருத்தலால்,(உழுவாருலகத்தார்க்கு)'ஆணி' என்றார்.
இஃதேகதேச வுருவகவணி. பொறுத்தலான் என்னும் (செயினென்னும்
வாய்பாட்டு) வினையெச்சம் பொறுத்து என்னும் (செய்து என்னும் வாய்
பாட்டு) வினையெச்சமாகத் திரிந்து நின்றது.

* அது - உழுதல்.

† பத்துப்பாட்டு, பட்டினப்பாலை, 283, 284 வதுவரி. இதன்பொருள்.

(சோழ மண்டலத்தில்) காடாகிய இடங்களை வெட்டிப் போட்டு (முன்பு

போலக்) குடியிருந்து விளையப்பண்ணி, (தூர்ந்துபோன) குளங்களைத்

தோண்டி என்பது.

‡ கொன்று, ஆக்கி, தொட்டு என்னுந் தன்வினை கொன்றுவித்து,

ஆக்குவித்து, தொடுவித்து எனப் பிறவினையும் ஆனாற்போல, உழுவார் என்னுந் தன்வினை உழுவிப்பார் எனப் பிறவினையுமாயிற் றென்பதாம்.

¶ உழுவாரை (அச்சு) ஆணியாக உருவகஞ்செய்தவர் அதற் கியைய உலகத்தாரைத் தேராக உருவகஞ் செய்யாமையின், இக்குறள் ஏகதேச உருவகவணியாயிற்று.

0 'அஃதாற்றா, தெழுவாரை யெல்லாம் பொறுத்து' என்பதற்குப் பிரதியாக அஃதாற்றார் தொழுவாரே யெல்லாம் பொறுத்து என்று பாடங் கூறி, அதற்கு அஃதாற்றார்-அது (உழுதல்) செய்யமாட்டாதவர், எல்லாம் பொறுத்து—(காப்பவர் செய்யும் துன்பம்) எல்லாவற்றையும் பொறுத்து, தொழுவாரே - (அவரைத்) தொழுவாரேயாவர் என்று பொருள் கூறுவாரு

முண்டென்பது.



(க - து.) உலகத்தை நிலைபெறச் செய்வோர் உழுவாரே யாவா எனபது.

2. Agriculturists are as it were the linch - pin of the world, as they support all other workers who cannot till the soil.



ரு.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

பரி:—(இ - ள்.) யாவரு முண்ணும் வகை உழுதலைச்செய்து † அதனாற் றாமுமுண்டு வாழ்கின்றாரே தமக்குரியராய் வாழ்கின்றவர்; மற்றையாரெல்லாம் பிறரைத் தொழுது ‡ அதனாற்றாமுண்டு அவரைப் பின் செல்கின்றவர், (எ - று).

0 மற்றென்பது வழக்குப்பற்றி வந்தது. தாமு மக்கட்பிறப்பினராய் வைத்துப் பிறரைத்தொழுது அவர் சிலகொடுப்பத் தம்முயிரோம்பி அவர்

பின் செல்வார் தமக்குரியரல்லரென்பது கருத்து.

தெளி:—(இ - ள்.) உழுது - (யாவரும் உண்ணும்படி) உழுதலைச் செய்து, உண்டு - (அதனால் தாமும்) உண்டு, வாழ்வாரே - வாழுகின்றவரே, வாழ்வார் - (தமக்குரியராய்) வாழ்கின்றவர், மற்றெல்லாம் - மற்றையாரெல்லாம், தொழுது - (பிறரைத்) தொழுது, உண்டு - (அதனால், தாம்) உண்டு, பின் செல்பவர் - (அவரைப்) பின் செல்லுகின்றவர், (எ - று).

மற்றென்பது உலகவழக்குப் பற்றிப் பிறிது என்னும் பொருளில் வந்தது. தாமும் மக்கட்பிறப்பினராய்ப் பிறந்திருந்தும் பிறரைத் தொழுது அவர் சிலபொருள் கொடுப்பத் தம்முயிரைக்காத்து அவர்பின் செல்லுகின்றவர் தமக்குரியரல்லரென்பது கருத்து.

(க - து.) உழுதுண்டுவாழ்வார் வாழ்வே வாழ்வா மென்பது.

3. They alone are said to be living who live agriculture; all others lead a cringing, dependant life.

by



பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர
லகுடை நீழ லவர்.

† அதனல் - உழுதலால். ‡ அதனல்-பிறரைத் தொழுதலால். 0 மற்றெல்லாம் என்பதன்கணுள்ள மற்றென்னு மிடைச்சொல் வினைமாற்றிலும் அசைநிலையிலும் வாராது உலகவழக்குப்பற்றி (மற்றையாரெனப்) பிறிது என்னும் பொருளில் வந்தது. பிறிது என்பது வினைமாற்றி லடங்கும் என்பாருமுண்டு.

"மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை, யப்பா லிரண்டென மொழி மனூர் புலவர்" என்பது தொல்காப்பியம். "வினைமாற் றசைநிலை பிறி தெனு மற்றே" என்பது நன்னூல்.

## ஒழிபியல்—கூ-வது உழவு.

# 1105

பரி:—(இ - ள்.) உழுதற்றொழிலான் நெல்லினை யுடையராய தண்ணளியுடையார் பல வேந்தர் குடைநிழலதாய மண் முழுதினையுந் தம் வேந்தர் குடைக்கீழே காண்டர், (எ - று).

அலகு - கதிர்; * அஃதீண்டாகு பெயராய் நென்மேலதாயிற்று. † உடையவென்பது குறைந்துநின்றது. ‡ நீழல்போறலின் நீழலெனப்பட்டது. நீழலவரென்றது இரப்போர்க்கெல்லாம் ஈதலேக்கி. ¶ ஒற்றுமை பற்றித் 'தங்குடை' என்றார். 0 குடைநீழலென்பதூஉம் ஆகுபெயர். ‖ "ஊன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே" என்றதனல் தம்மரசனுக்குக் கொற்றம் பெருக்கி மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பரென்பதாம். : "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமு, முழவிடை விளப்போர்" என்றார் பிறரும்

தெளி.—(இ - ள்.) அலகுடை - (உழுதற்றொழிலால்) நெல்லினை யுடையராகிய, நீழல்வர் - தண்ணளியுடையோர், பலகுடை நீழலும் - பல வேந்தர் குடை நிழலதாய பூமிமுழுவதையும், தங்குடைக்கீழ்-தமது (வேந்தர்) குடைக்கீழே, காண்பர் - காணுவர், (எ - று).

---

* அலகு என்னும் மூதற்பெயர் அதன் சினையாகிய நெல்லினையுணர்த் துதலால், முதலாகு பெயராம்.

† உடைய என்னும் குறிப்புப்பெயரெச்சம் ஈறுகுறைந்து உடை என நின்றது.

‡ உழுவா ரிடத்துள்ள தண்ணளி (கிருபை) யாகிப்பவர்க்கு நீழல் போன்றிருத்தலால், நீழல் (நிழல்) என்று கூறப்பட்டது. (வெயிலால் வரு ந்தினவர்க்கு மரத்தினது நீழல் ஆதாரவாயிருப்பது போன்று வறுமையால் வருந்தினவர்க்கு உழுவாரதுதண்ணளி ஆதாரவாயிருக்கின்ற தென்பதாம்).
நீழல்போன்ற தண்ணளியை நீழலென்றது உவமையாகு பெயராம்.

¶ அரசர்க்கும் உழுவார்க்கு முள்ள ஒற்றுமைபற்றி அரசரது குடை யை உழுவாரின்மே லேற்றித் 'தங்குடை' என்று கூறினர். இவ்வொற்று மையை "வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும், நீர்சான் றுயரவே நெல் லுயரும் -

சீர்சான்ற, தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்,
ஓவா துரைக்கு முலகு" என்று சிறுபஞ்சமூலங்
கூறுதலானுமறிக.

0 குடைநீழல் என்னும் தானியின் பெயர்
பூமியையுணர்த்துதலால், தானியாகு பெயராம்.
அதற்குத் தானமாகிய

| புறநானூறு - 35. இதன்பொருள். (உழுகின்ற கலப்பை நிலத்தினிடத்தே) ஊன்றியசாலினிடத்து விளைந்த நெல்லினது பயனே என்பது.

: சிலப்பதிகாரம் - நாடுகாண்காதை. 149-150-வது வரி. இதன்பொருள். யாசிப்பவருடைய சுற்றத்தாரையும் தம்மைக்காக்கும் அரசருடைய வெற்றியையும் தமது உழவினிடத்தே யுண்டாக்குவோர் என்பது.





அலகு - நெற்கதிர்; அஃது இங்கு ஆகுபெயராய் நெல்லின்மேலதாயிற்று. உடைய என்பது உடையெனக் குறைந்துநின்றது. தண்ணளி நீழல் போன்றிருத்தலால் நீழலெனப்பட்டது. உழவரை நீழலவரென்றது அவர் இரப்போர்க்கெல்லாம் ஈதலேநோக்கியாம். அவ்வுழவரது அரசாதுகுடையை ஒற்றுமைபற்றித் 'தங்குடை' என்றார். குடை நீழலென்பதும் ஆகுபெயர். உழவர் விளைவினை மிகுதியாகச் செய்து தம்மரசனுக்கு வெற்றியைப்பெருகச்செய்து மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்ப ரென்பதாம். தண்ணளி-பெருங்கருணை; நீழல் - நிழல். தங்குடை - தம்மரசன் குடை.

(க-து.) உழுதற் றொழிலாலுண்டாகிய செல்வத்தினையுடையவர் பலவரசரது நாட்டையும் தம்மரசரது ஆட்சிக்குள் காணுந்

தன்மையராவர் என்பது.

4. Patriotic farmers desire their monarch to bring all other lands under the sway of their own king.

## ரு. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
## கைசெய்தூண் மாலை யவர்.

பரி:—(இ - ள்.) தங்கையா லுழுதுண்டலே யியல்பாகவுடையார் பிறரைத் தாமிரவாரீ; தம்மையிரப்பார்க்கு அவர் வேண்டியதொன்றை னுங் கரவாது கொடுப்பரீ, (எ - று).

* செய்தென்பதற்கு உழுதலெனவருவிக்க. † கைசெய்தூண்மா லையவரென்பது ¶ ஒரு ஞான்றும் அழிவில்லாத செல்வமுடையரென்னும் ஏதுவையுட்கொண்டு நின்றது.

* செய்து என்னும் (செயப்படுபொருள் குன்றுத) வினைக்கிளையெ

உழுதலே என்னும் செயப்படுபொருளை வருவித்துரைத்துக் கொள்க.

‡ கைசெய்தூண் மாலையவர் என்பது எதுகர்ப்ப விசேஷணமுடைய தாம். விசேஷணத்தையுடையது விசிட்டமெனப்படும். இங்குக் கைசெய் தூண்என்பதுஎதுகர்ப்ப விசேஷணமாம்;மாலையவர் என்பதுவிசேஷியமாம். எதுகர்ப்ப விசேஷணமாவது எதுவை யுட்கொண்டுள்ள விசேஷணபரம். கைசெய்தூண் மாலையவர் என்னும் விசிட்டம் ஒரு ஞான்றும் அழிவில்லாத செல்வமுடையரென்னும் எதுவை யுட்கொண்டு நின்றமையின், கைசெய் தூண் என்னும் விசேஷணம் (அடை),ஒரு ஞான்றும் அழிவில்லாத செல்வ முடைமையென்னு மேதுவை யுட்கொண்டு நின்றதென்க.

கைசெய்தூண் மாலையவர் ஒருஞான்றும் அழிவில்லாத செல்வமுடை யவராக விருத்தலால்,பிறரைத் தாம் இரவாது தம்மை இரப்பவர்க்கு அவர் வேண்டிய தொன்றனைக் காவாது கொடுக்கின்றரென்பதாம்.

¶ " ஆற்றங் கரையின் மரமும் மரகரிய, வீற்றிருந்த வாழ்வும் விழுமன் றே - யேற்றம், உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேரோர் பணிக்கு" என்று நல்வழி கூறுவதும் "மேழிச் செல்வங் கோழை படாது" என்று கொன்றைவேந்தன் கூறுவதும் இங்கறியத்தக்கனவாம்.

## ஒழிபியல்—சூ-வது உழவு.

# 1107

தெளி:—(இ - ன்.) கை - (தமது) கையால், செய்து - (உழுதலைச்) செய்து, ஊண்மாலையவர் - உண்ணுதலை இயல்பாகவுடையவர், இரவார் - (பிறரைத்தாம்) இரவார், இரப்பார்க்கு - (தம்மை) இரப்பவர்க்கு, ஒன்று - (அவர் வேண்டியது) ஒருபொருளை, கரவாது - ஒளிக்காமல், ஈவர் - கொடுப்பார், (எ-று).

செய்து என்னும் வினைக்கிளையய உழுதலை யென்பது வருவிக்கப்

பட்டது. கைசெய்தூண்மாலையவரென்பது ஒருநாளும் அழிவில்லாதசெல்

வமுடையாரென்னுங் காரணத்தை உள்ளே கொண்டு நின்றது.

(க - து.) தங்கையாலுழுதுண்பவர் தாம் பிறரையாசியாமல்

தம்மை யாசிப்பவர்க்கு அவர் வேண்டிய தொன்றினை யில்லையென்

னாது கொடுப்பர் என்பது.

5. They who by nature live on the food raised by their

own hands, will never ask anything from others, but give something to those who beg.

---

சு. உழவினுர் கைம்மடங்கி னில்லை

விழைவதூஉம்

விட்டேமென் பார்க்கு நிலை.

பரி:—(இ - ள்) உழுதலையுடையாரிகை மடங்குமாயின், யாவரும் விழையுமுணவும்

அதனைச் செய்யாது
யாந்துறந்தே மென்
பார்க்கத * அவ்வறத்தின்கணிற்றலு முளவாகா, (எ - று).

† உம்மை இறுதிக்கண்ணும் வந்தியைந்தது.

உணவின்மையால்,

தாமுண்டலும் இல்லதஞ் செய்தலும் யாவர்க்கு மில்லையாயின். ‡ அவ
ருறுப்பு மாத்திரமாய கை வாளாவிருப்பின் உலகத்து இம்மை மறுமை
வீடென்னும் பயன்கள் நிகழா வென்பதாம். ¶ ஒன்றனை மனத்தால் விழை
தலுமொழிந்தே மென்பார்க்கென வுரைப்பாரு முளர். இவையைந்து பாட்
டானும் 0 அதனைச் செய்வாரது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—*(இ - ள்.) உழவினர் - உழுதலையுடையவர்,
கைம்மடங்கின் -

கை (அவ்வுழுதலைச் செய்யாது) மடங்குமாயின், விழைவதூஉம் - (யாவ
ரும்) விரும்புமுணவையும், விட்டேமென்பார்க்கு-(யாம்) துறந்தோ மென்
பார்க்கு, நிலை - (அவ்வறத்தின்கண்) நிற்றலும், இல்லை-உளவாகா, (எ-று).

*. அவ்வறத்தின்கண் - துறவறத்தில்.

† விழைவதூஉம் என்னும் உம்மை நிலையென்பதன்கண்ணும் வந்து
பொருந்தியது. ‡ அவர் - உழவினர்

¶ விழைவதூஉம் விட்டே மென்பார்க்கு என்பதற்கு ஒரு பொருளை
மனத்தால் விரும்புதலும் ஒழிந்தே மென்பார்க்கு என்று பொருள் கூறு
வாரு முண்டென்பது. 0 அதனை - உழுதலை.

உம்மை இறுதியிலும் வந்தியைந்தது. (உழவினர் கைம்மடக்கின்) உணவில்லாமையால், தாமுண்டலும் இல்லறம் செய்தலும் பாகார்க்குமில்லையாயின. அவருறுப்பு மாத்திரமாகிய கை சும்மாவிருக்கின் உலகத்தில் இம்மை மறுமை வீடென்னும்பயன்கள் நிகழாவென்பதாம். இலையைந்து பாட்டாலும் அதனைச் செய்வாரது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) உழுதற்றொழில் நின்றவிடத்துத் துறவிகள் நம் மறத்தின்கணிற்றலுமில்லை என்பது.

6. If the farmers' hands remain folded, the state of the

ascetics who have left all what other men love, will fail.

எ.

தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்

வேண்டாது சாலப் படும்.

பரி:—(இ - ள்.) ஒரு நிலத்தினை யுழுதவன் ஒரு

லடிபுழுதி கஃசா

சாம் வண்ணம் † அதனைக் காயவிடுவழியின், ‡ அதன்கட் செய்தபயிர்

ஒரு பிடியின்க ணடங்கிய எருவுமிட வேண்டாமற் பலனைத் தரு வினையும்.

பிடித்து—பிடியின்கண்ணது; * பிடித்தவென்பதன் விகாரமென்பாரு

முளர். வேண்டாமல். சான்று என்பன நிரிந்து நின்றன.

தெளி:—(இ - ள்.) (ஒரு நிலத்தினை யுழுதவன்) தொடிப்புழுதி - ஒரு

பலப்புழுதி, கஃசா - காற்பலமாம்படி, உணக்கின் - (அதனைக்) காயவிடுவ

ழியின், (அதனிடத்துச் செய்த பயிர்), பிடித்தெருவும்-ஒரு பிடியில் அடங்

கிய எருவும், வேண்டாது - (இட) வேண்டாமல், சாலப்படும் - பருத்து

வினையும், (எ - று).

பிடித்து - பிடியிலுள்ளது. வேண்டாமல் என்பது வேண்டாது என்

றும், சான்று (பருத்து) என்பது சால என்றும் நிரிந்து நின்றன.

(க - து.) உழுதலாலுண்டாகிய புழுதி நன்றும்

உழுமாறு

செப்துபயிரிடும்நிலத்திற்குஎருவிடுதல்

அருமையுடைத்தாம் என்பது.

7. If the land is dried so as to reduce one pollum of

earth to a quarter, it will secure abundant crops even without a handful of manure.

---

† அதனை-புழுதியை.

‡ அதன்கண் - அந்நிலத்தில்.

* பிடித்தெரு என்பதைப் பிடித்து எரு எனப்பிரிக்காது, பிடித்த எரு எனப்பிரித்து, பிடித்த என்னும் பெயரெச்சத்து அகர விகுதி (அ) செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது என்று கூறுவாருமுளர்.

4. எரினு நன்ரு லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு.

பரி:—(இ - ள்.) அப்பயிர்க்கு அவ்வுழுதலினும் எருப்பெய்தல் நன்று; * இவ்விரண்டுஞ் செய்து களைகட்டால் † அதனைக் காத்தல் ‡ அதற்கு நீர்கால் யாத்தலினு நன்று, (எ - று).

எர்—0 ஆகுபெயர். காத்தல்—பட்டி ¶ முதலியவற்றான் அழிவெய் தாமற் காத்தல். உழுதல், எருப்பெய்தல், களைகட்டல், ¶¶ நீர் கால்யாத்தல், காத்த லென்றிம்முறையவாய இவ்வைந்தும் வேண்டு மென்பதாம்.

தெளி:—(இ - ள்.) (அப்பயிர்க்கு) எரினும் - அவ்வுழுதலினும், எரு விடுதல் - எருப்பெய்தல், நன்று - நல்லது, கட்டபின் - (இவ்விரண்டுஞ் செய்து) களைபிடுங்கினால், அதன் காப்பு - அதனைக் காத்தல், (அதற்கு), நீரினும் - நீர் பாய்ச்சலினும், நன்று - நல்லது, (எ - று).

எர் என்பது (எரினல்) உழுதலையுணர்த்துதலால் கருவியாகு பெயராம். ஆல் - அசை. காத்தல் - பட்டிமாடு முதலியவற்றால் அழிவடையாமற் (பயி
ரைக்) காத்தல். உழுதல், எருப்பெய்தல். களைபிடுங்கல், நீர் பாய்ச்சல், காத் தல் என்று இம்முறையினவாகிய இவ்வைந்தும் (பயிர்க்கு) வேண்டுமென்ப தாம்.

(க - து.) உழுது பயிர் செய்வோர் அதற்கு உழுதல் முத
லிய ஐந்தும் செய்யவேண்டும் என்பது.

8. Manuring is better than ploughing; after weeding
well, watching is better than watering.

கூ. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

பரி:—(இ - ள்.) அந்நிலத்திற் றரியவன் அதன்கு ணுேடாறுஞ் செ
ன்று பார்த்து அடுத்தனசெயியாது மடிந்திருக்கிதமாயின், அஃது அவ
னில்லாள்போலத் தன்னுள்ளே வெறுத்துப் பின்னவனே டிடிவிடும்.

§ செல்லுதல்-ஆகுபெயர், பிறரை யேவியிரது தானே சேறல்வே

---

* இவ்விரண்டும் - உழுதலும் எருவிடுதலும்.

† அதனை - அப்பயிரை. ‡ அதற்கு - அப்பயிர்க்கு.

0 ஏர் என்னும் கருவியின் பெயர் அதன் காரியமாகிய த்துதலால், கருவியாகு பெயராம்.

உழுதலையுணர்

¶ முதலிய என்றமையின், பறவை, பூச்சி முதலியவற்றையுங் கொள்க.

¶¶ நீர்கால்யாத்தல் - நீரைக் கால்வாயினின்றும் பாயச் செய்தல்.

§ செல்லுதல் என்னும் கருவியின்பெயர் அதன் காரியமாகிய பார்த்து அடித்தன செய்தலை யுணர்த்துதலால், கருவியாகுபெயராம். பார்த்து அடித்தன செய்தற்குச் செல்லுதல் காரணமா மென்க. செல்லுதல் என்பது செல்லானென்னும் முற்றெச்சத்தின் பகுதியாயசெல்என்பதாம்.



ண்டுமென்பது போதரக் 'கிழவன்' என்றார். † அதன்கட்சென்று வேண்டுவன செய்யாது வேறிடத் திருந்தவழி ¶ மனையாளுடுமாறுபோல வென்றது ‡ அவன் போகமிழத்தலைக்கி. இவை மூன்றுபாட்டாலும் * அது செய்யுமாறு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கிழவன்-(அந்நிலத்திற்கு) உரியவன், செல்லான்-(அந்நிலத்தினிடத்து நாள்தோறும்) சென்றுபார்த்து வேண்டியவற்றைச் செய்யாமல், இருப்பின் - (சோம்பி) இருப்பானாயின், நிலம் - அந்நிலம், இல்லாளின் - (அவன்) மனைவிபோல, புலந்து - (தன்னுள்ளே) வெறுத்து, (பின்), ஊடிவிடும் - (அவனைநீடு)

பிணங்கிவிடும், (எ-று).

செல்லுதல்-ஆகுபெயர். (பயிர் செய்யும் நிலத்தின்கண்) பிறரை எவியிரா மல் தானே செல்லுதல் வேண்டுமென்பது தோன்றக் 'கிழவன்' என்றார். அந்நிலத்தினிடத்துச்சென்று வேண்டுவனவற்றைச் செய்யாது வேறிடத் திருந்தவிடத்து இல்லாளுடுமாறுபோல வென்றது அவன் போக மிழத் தலைக் கருதியாம். இவை மூன்றுபாட்டாலும் அது செய்யும்விதம் சொல் லப்பட்டது. ஊடுதல் - பிணங்குதல்.

(க - து.) விளைநிலத்திற்கு வேண்டுவனவற்றைச் செய்யாது சோம்பியிருப்பவன் அதன் பயனை யடையான் என்பது.

9. If the owner stands aloof without personally atten- ding to his cultivation, his land will sulk like an angry wife and yield him no pleasure.



கo. இலமென்றசைஇ யிருப்பானைக் காணி னிலமென்னு நல்லா ணகும்.

பரி:—(இ - ள்.) யாம் வறியேமென்று சோல்லி மடிந்திருப்பா னைக் கண்டால், நிலமகளென்று உயர்த்துசீ

சொல்லப்படுகின்ற நல் லாள் தன்னுள்ளே நகாநிற்கும், (எ-று).

† ஒருவன் தன் மனைவியினிடத்து நாடோறும் சென்று வேண்டுவன வற்றைச் செய்யாது வேறிடத்திருந்த விடத்து அவள் தன்னுள்ளே வெறுத் துப் பின் அவனோடு பிணங்குவதுபோல விளைநிலத்திற் குரியவனும், அத னிடத்து நாடோறும் சென்று வேண்டுவனவற்றைச் செய்யாது வேறிடத் திருந்தவிடத்து அது (அவ்விளைநிலம்) தன்னுள்ளே வெறுத்துப் பின் அவ னோடு பிணங்கு மென்பதாம். தன்கட்சென்று-(மனையியாகிய தன்னிடத்து வந்து) என்றும் பாடமுண்டு.

¶ இல்லாளூடுமோறுபோல என்றும் பாடமுண்டு.

‡ அவன் போகமிழத்தலைக்கி என்றது அந்நிலத்திற்குரியவன் அந் நிலத்தின் போகத்தை (விளைவாகிய பயனை) யிழத்தலைக் கருதியாம். * அது - உழவு.

## ஒழிபியல்—கO-வது நல்குரவு. 111

1

உழுதன் முதலிய செய்வார் யாவர்க்குஞ் செல்வங் கொடுத்து வரு கின்றவாறுபற்றி 'நல்லாள்' என்றும், * அது கண்டுவைத்தும், ¶ அவை செய்யாது வறுமை யுறுகின்ற பேதைமைபற்றி 'நகும்' என்றுங் கூறினார்.

‡ இரப்பாரை யென்று பாட மோதுவாரு முளர். இதனுண் 0 அது செய் யாதவழிப்படு மிழுக்குக் கூறப்பட்டது. † வருகின்ற வதிகார முறைமைக் குக் காரணமுமிது.

கெளி:—(இ - ள்.) இலமென்று - (யாம்) வறியேமென்று சொல்லி, அசைஇ - யிருப்பாரை-சோம்பியிருப்பவரை, காணின் - கண்டால், நில மென்னுநல்லாள் - நிலமகளென்று உயர்த்திச் சொல்லப்படுகிற நல்லாள், நகும்-(தன்னுள்ளே) சிரியாநிற்பள், (எ - று.)

உழுதல்முதலியவற்றைச் செய்வார் யாவர்க்கும் செல்வங்கொடுத்து வருகின்ற விதம்பற்றி 'நல்லாள்' என்றும், அதகண்டிருந்தும் அவற்றைச் செய்யாது வறுமையுறுகின்ற அறிவில்லாமைபற்றி 'நகும்' என்றும் சொல்லினர். இதனால் அது செய்யாதவிடத்து உண்டாகும் இழுக்குச் சொல்லப்பட்டது. வருகின்ற அதிகார முறைமைக்குக் காரணமுமிது.

(க - து.) யாம் வறியேமென்றுகூறி, உழுதல் முதலியவற் றைச் செய்யாது சோம்பியிருப்பவர் அவமதிப்படைவர்.

10. The maiden earth will laugh to see men seated idle, pleading poverty.



## க0 - வது அதிகாரம்.

## நல்குரவு—Poverty.

பரி:—அஃதாவது நுகரப்படுவனயாவு மில்லாமை.

தெளி:—அஃதாவது அனுபவிக்கப்படுவனயாவும் இல்லாமை.

க. * இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது.

---

* அது கண்டுவைத்தும் - உழுதல், எருவிடுதல், களைபிடுங்கல், நீர் பாய்ச்சல், பட்டி (திருட்டு) மாடு முதலியவற்றாலழிவடையாமற் காத்தல் செய்வார் யாவர்க்கும் செல்வங்கொடுத்து வருகின்றவிதத்தைப் பார்த்தும்.

¶ அவை - உழுதல் முதலியவற்றை.

‡ இருப்பாரை என்பதற்குப் பிரதியாக இரப்பாரை (யாசிப்பாரை) என்று பாடங் கூறுவாருமுண்டு. 0 அது - உழவு.

† வருகின்ற அதிகாரம் - நல்குரவாம்; நல்குரவிற்குக்காரணம் இல மென்றசைஇ யிருத்தலாம் (யாம் வறியேமென்றுகூறிச் சோம்பியிருத்த லாம்). அதுபற்றி உழவின்பின் நல்குரவு வைக்கப்பட்டது.

* "வறுமை போல வின்னாது வறுமை யன்றி வேறில்லை" என்று விநாயகபுராணங் கூறுகின்றது.



பரி:—(இ-ள்.) ஒருவனுக்கு வறுமைபோல வின்னாதது யாதென்று வினவின், வறுமைபோல வின்னாதது வறுமையே, பிறிதில்லை. ()

இன்னாதது - துன்பஞ்செய்வது. ‡

ஒப்பதில்லையெனவே, மிக்கதின்மை சொல்லவேண்டாவாயிற்று.

தெளி:—(இ - ள்.) இன்மையின்-(ஒருவனுக்கு) வறுமைபோல, இன்னாதது-துன்பஞ்செய்வது, யாதெனின்-யாதென்று கேட்டால், இன்மையின் - வறுமைபோல, இன்னாதது - துன்பஞ் செய்வது, இன்மையே - வறுமையே, (வேறில்லை), (எ - று).

வறுமைக்கு ஒப்பதில்லை யெனவே, அதற்கு மிக்கதில்லாமை சொல்ல வேண்டாவாயிற்று.

(க - து.) வறுமைபோலத் துன்பஞ் செய்வது பிறிதொன்றில்லை என்பது.

1. If you ask what sharper pain than poverty is, you will find there is nothing that afflicts one more than poverty, than poverty alone.

உ. இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்.

பரி:—(இ - ள்.) வறுமையென்று சொல்லப்படுவ தொருபாவி

ஒருவனுழை வருங்கால் அவனுக்கு மறுமையின்பழ

மில்லையாக வரும், (எ - று).

'இன்மை யெனவொரு பாவி' என்பதற்கு மேல் † 'அழுக்காறென
வொருபாவி' என்புழி யுரைத்தாங் குரைக்க. ¶ மறுமை இம்மையென்பன

---

‡ இன்மையின் இன்னுதது இன்மையே என்றுரைப்பதில்லை யெனவே.

† அழுக்காறுமை - அ. (இலக்கண நூலார் கொள்கைப்படி) இன்மை யென்னும் பண்பிற்கு (குணத்திற்கு)ப் பகர் பி (பண்பியாந்தன்மை அஃதா வது இன்மை யென்னுங் குணமே மற்றொரு குணத்தையேற்றுக் குணி யாகுந் தன்மை) யில்லையேனும், தன்னை (இன்மையாகிய தன்னை) யாக்கி னானை (சோம்பலா லுண்டுபண்ணினவனை) இருமையும் (இம்மைப் பய னும் மறுமைப் பயனும்) கெடுத்தற் கொடுமைபற்றி இன்மையைப் பாவி

என்றார்; கொடியாலே ப் பாவி யென்னும் வழக்குண்மையின் என்பது.

இஃது உரைத்தாங்குரைக்க என்பதன் விரிவு.

¶ மறுமை, இம்மை

என்னு மிடப்பெயர்கள் மறுமையிலும் இம்மை யிலும் நிகழும் இன்பங்களையுணர்த்துதலால், இடவாகுபெயர்களாம்.

*மறுமை - தேவருலகம்; இம்மை - இவ்வுலகம்.



ஆகுபெயர். * ஈயாமையானுந் துவ்வாமையானும் அமையிலவாயின. † இன்றிவிடுமென்று பாடமோதிப் பாவியாலென விரித்துரைப்பாரு முளர்.

தெளி:—(இ - ள்.) இன்மை யெனவொரு பாவி - வறுமை யென்று சொல்லப்படுவதொரு பாவி, (ஒருவனிடத்து வரும்போது அவனுக்கு), மறுமையும்-மறுமையின்பமும், இம்மையும் - இம்மையின்பமும், இன்றி - இல்லையாக, வரும் - வாராநிற்கும், (எ - று).

'இன்மை யெனவொரு பாவி' என்பதற்கு மேல் 'அழுக்கா றெனவொருபாவி' என்றவிடத்துச் சொல்லியவாறு சொல்லிக்கொள்க. மறுமை இம்மை யென்பன இடவாகுபெயர். கொடாமையாலும் அனுபவியாமையாலும் அவையிலவாயின.

(க - து.) வறுமை புடையவனுக்கு இம்மையின்பமும் மறு

மையின்பமும் இல்லை என்பது.

2. When poverty comes, it destroys this world's and the next world's joys.

---

ரு. தொல்வரவுந்
தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்கூர வென்னு நசை.

பரி:—(இ - ள்.) நல்தாவென்று சொல்லப்படு மாசை தன்னும் ‡ பற்றப்பட்டாருடைய பழைய துடிவாவினையும் ¶ அதற்கேற்ற சோலி னையும் ஒருங்கே கெடுக்கும், (எ - று).

§ நசையில்வழி நல்குரவு மில்லையாகவின், நல்குரவையே நசையாக்கி, o அஃது அக்குடியிற்றொல்லோர்க்கில்லாத

இழிதொழில்களையும் இளிவந்த

* ஈயாமையால் மறுமையின்பமும் துவ்வாமையால் இம்மையின்பமும் இலவாயின வென்பதாம்.

† இன்றிவ்ரும் என்பதற்குப் பிரதியாக இன்றிவிடும் என்று பாடங் கூறி, பாவி யென்பதனைப் பாவியால் என (மூன்றனுருபு) விரித்து, (வறுமை யென்று சொல்லப்படுவதொரு பாவியால் மறுமையின்பமும் இம்மையின்பமும் இல்லா தொழியும் என்று) சொல்லுவாரு முண்டு

‡ பற்றப்பட்டார் - பிடிக்கப்பட்டவர்.

¶ அதற்கேற்ற - பழைய குடிவரவிற்குத் தகுந்த.

§ "நசையிற் பெரியதோர் நல்குர வில்லை" என்பது முதுமொழிக் காஞ்சி.

o அஃது - நசை (ஆசை).

சொற்களையு முளவாக்கலான் * அவ்விரண்டனையுந் ¶ தொகையாகக் கெடுக்கும் என்றார். † "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்" என்றார் பிறரும். தோலாவது ‡ "இழுமென் மொழியால் விழுமியது நுவறல்" என்றார் தொல்காப்பியனாரும். | இதற்கு உடம்பென்றுரைப்பாரு முளர்; 0 அஃததற்குப் பெயராயினும் உடம்பு கெடுக்கு மென்றற்கோர் பொருட் சிறப்பில்லாமையறிக.

தெளி:—(இ - ள்.) கல்குரவென்னும் - வறுமை யென்று சொல்லப் படும், நசை - ஆசை, தொல்வரவும் - (தன்னால் பற்றப்பட்டவருடைய) பழைய குடிவரவினையும், தோலும்-(அதற்கேற்ற) சொல்லினையும், தொகையாக - ஒருமிக்க, கெடுக்கும்—,(எ - று).

நசையில்லாதவிடத்து கல்குரவும் இல்லையாகலால், கல்குரவையே நசையாக்கி, அஃது அக்குடியிற் பிறந்த முன்னோர்க் கில்லாத இழிதொழில்களையும் இளிவந்தசொற்களையும் உண்டாக்கலால் அவ்விரண்டனையும் தொகையாக (ஒருமிக்க)க் கெடுக்கும் என்றார்.

(க - து.) வறுமையானது உயர்குடிப்பிறப்பினையும் அதற்கேற்ற சொல்லினையு மொருங்கே கெடுக்கும் என்பது.

3. Hankering poverty destroys both the ancient descent and the dignity of its fame.

இற்பிறந்தார் கண்ணேயு மின்மை பிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

பரி:—(இ - ள்.) இளிவந்த சொற்பிறவாத குடிப்பிறந்தார் மாட்டேயும் அது பிறத்தற்கேதுவாகிய சோர்வினை நல்தாவு உண்டாக்கும்.

: சிறப்பும்மை $ அவர்மாட்டு o அது பிறவாமை தோன்ற நின்றது.

---

* அவ்விரண்டனையும் - தொல்வரவையும் தோலையும்.

¶ ஒருங்கு கெடுக்கும் என்றும் பாடமுண்டு.

† மணிமேகலை-பாத்திரம் பெற்ற காதை. 76-வதுவரி: இதன் பொருள். (பசிப்பிணியானது தன்னைப் பற்றப்பட்டாருடைய) உயர்குடிப்பிறப்பையும் கெடுக்கும்; (அக்குடிக்கிருந்த) சிறப்பையும் அழிக்கும் என்பது

‡

தொல்காப்பியம்-செய்யுளியல், 239. இதன் பொருள். மெல்லென்ற சொல்லால் (அறம் பொருள் இன்பம் வீடு என்னும்) சிறந்த பொருள் (உண்டாகச்) சொல்லுதல் என்பது.

| இதற்கு - தோல் என்பதற்கு. 0 அஃதற்கு-தோல் உடம்பிற்கு

: சிறப்பும்மை - இற்பிறந்தார் கண்ணேயுமென்ற வுயர்வு சிறப்பும்மை.

$ அவர் - இற்பிறந்தார். o அது - இளிவந்தசொல்.

# 1115

இளிவந்தசொல் - * இளிவருதற்கேதுவாகியசொல்; அஃதாவது எமக்கீய வேண்டு மென்றல். சோர்வு - தாமுறுகின்ற துன்பமிகுதிபற்றி ஒரோ வழித் தம்பிறப்பினை மறந்து † அது சொல்லுவதாக நினைத்தல்.

தெளி:—(இ - ள்.) இன்மை - வறுமையானது, இற்பிறந்தார்கண் ணேயும்-(இளிவந்த சொல்பிறவாத) குடியிற் பிறந்தவரிடத்தேயும், இளி வந்தசொல் - அவ்விளிவந்தசொல், பிறக்கும் - பிறத்தற்குக் காரணமாகிய, சோர்வு - சோர்வினை, தரும் - உண்டாக்கும், (எ - று).

சிறப்பும்மை அவரிடத்து அது பிறவாமை தோன்ற நின்றது. இளி வந்த சொல்லாவது இளிவருவதற்குக் காரணமாகிய சொல்; அஃதாவது எம க்கு ஈயவேண்டு மென்றல். சோர்வு - இற்பிறந்தார் தாம் அடைகின்ற துன்பமிகுதிபற்றி ஒரோவிடத்துத் தக்குடிப்பிறப்பினை மறந்து அதனைச் சொல்லுவதாக நினைத்தல். இளி - இழிவு.

(க - து.) வறுமையானது உயர்ந்த குடியிற் பிறந்தாரிடத் தும் அவமானச் சொல்லை உண்டாக்கும் என்பது.

4. Even in those of noble birth, poverty will give rise to words that bring disgrace.

நு. நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

பரி:—(இ - ள்.) நல்தாவென்று சொல்லப்படுந்

துன்பமொன்ற

னுள்ளே பலதுன்பங்களும் வந்து விளையும், (எ - று).

குரை - ‡ இசைநிறை. ¶ செலவு—வரவின்கண் வந்தது. 0 தின்

---

* இளிவருதற்கேதுவாகியசொல் - 'இழிவுவருதற்குக் காரணமாகிய சொல்; அஃதாவது இல்லார்உள்ளாரை நோக்கி யாதாவது எமக்கியவேண்டுமென்றுகூறுதலாம். "ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே" என்பது தொல்காப்பியம்.

† அது - இளிவந்தசொல்.

‡ செய்யுளில் இசை (ஓசையை) நிறைத்துவருவது இசைநிறை யெனப்படும். தொல்காப்பியம் - இடைச்சொல்லியல் "வயங்கு குரையு மிசைநிறை யசைநிலை, யாயிரண் டாகு மியற்கைத் தென்ப" என்று கூறுகின்றது.

¶ சென்று என்பதன் பகுதியான செலவு என்பது வரவென்னும் பொருளில் வந்தது. செலவு-விரைவின்கண்வந்தது என்றும் பாடமுண்டு.

0 நல்குரவு (வறுமை) நிகழ்ந்தபோதே துன்பமும் நிகழ்தலின், விரைவு பற்றி நல்குரவைத் துன்பமாக்கி 'நல்குர வென்னு மிடும்பையுள்' என்று கூறினர். இது காரணம் காரியமாய வுபசார வழக்காம். நல்குரவு - காரணம்; இடும்பை-காரியம்.

பமும் ‡ தானுமுடனே நிகழ்தலின் நல்குரவைத் துன்பமாக்கியும், அத் துன்பமடியாகச் செல்வர் கடைநோக்கிச் சேறற்றுன்பமும், அவரைக் காண் டற்றுன்பமும், கண்டான் மறுத்துழி நிகழுந்துன்பமும், மருவழியும் அவர் கொடுத்தது வாங்கற் றுன்பமும், அது கொடுவந்து நுகர்வன கூட்டற்றுன் பமு முதலாயின நாடொறும் வேறுவேறுக வருதலின் † 'பல்குரைத் துன் பங்கள் சென்று படும்' என்றுங் கூறினர். இவை யைந்துபாட்டாலும் நல் குரவின்கொடுமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) நல்குரவென்னும் - வறுமையென்று சொல்லப்
படும், இடும்பையுள் - துன்பமொன்றனுள்ளே, பல் - பலவாகிய, துன்பங்
கள் - துன்பங்களும், சென்று - வந்து, படும்-விளையும், (எ - று).

குரை - இசைநிறை. செலவு - வருதலென்னும் பொருளில் வந்தது.

துன்பமும் தானும் உடனே தோன்றுதலால் 'நல்குரவென்னு மிடும்பையுள்'

என்று வறுமையைத் துன்பமாக்கியும், அத்துன்பம் சாரணமாகச் செல்வர்
மனைவாயிலேநோக்கிச் செல்லுதற்றுன்பமும்,

அவரைக்காணுதற்றுன்பமும்,
கண்டால் அவர் இல்லையென்று மறுத்தவிடத்து
உண்டாகுந்துன்பமும்,
மறுக்காதவிடத்தும் அவர் கொடுத்தபொருளை
வாங்குதற்றுன்பமும், அப்
பொருளைக்கொண்டுவந்து அனுபவிப்பனவற்றைக்
கூட்டுதற்றுன்பமும் முத
லானவை நாள்தோறும் வேறுவேறாகவருதலால்
பல்குரைத் துன்பங்கள்
சென்றுபடும்' என்றும் சொல்லினார். இவை
ஐந்துபாட்டாலும் வறுமை
யின் கொடுமை சொல்லப்பட்டது.

(க - து.) வறுமையுடையான் துன்பம்
பலவற்றிற் குறைவிட
மாவன் என்பது.

5.

From the misery of poverty, attendant sorrows grow plentiously.

சு. * நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு
நல்கூர்ந்தார்

சொற்பொருள் சோர்வு படும்.

பரி:—(இ - ள்.) மெய்ந்நூற்பொ ருளை த் தெளியவறிந்து சொன் னாயினும், நல்கூர்ந்தார் சொல்லியசொல் பொருளின்மையைத் தலைப்படும், (எ - று).

பொருளின்மையைத் தலைப்படுதலாவது யாமிவர் சொல்லியன விரும்

---

‡ தானும்-கல்குரவும் (வறுமையும்).

† பல துன்பங்களும் வந்து விளையும் என்றும், எல்லாத் துன்பங்களு முளவாமென்றும் பாடமுண்டு.

* "எனைத்தானை யேனு மிலம்பாட்டார் கல்வி, தினைத்தானை யுஞ் சீர்ப்பா டிலவாம்" என்று நீதிநெறிவிளக்கங் கூறுகின்றது.



பிக் () கேட்குமாயிற் கண்ணோடி இவருறுகின்ற குறை முடிக்கவேண்டு மென்றஞ்சி யாவருங் கேளாமையிற் பயனில்சொல்லாய்முடிதல். கல்வியும் பயன்படா தென்பதாம்.

தெளி:—(இ - ள்.) நற்பொருள் - மெய்ந்நூற்பொருளை, கன்குணர்ந்து - தெளியவறிந்து, சொல்லினும் - சொன்னாலுலும், கல்கூர்ந்தார் - வறுமையுடையவர், சொல் - சொல்லிய சொல்லானது,

பொருள் சோர்வு -

பொருளில்லாமையை, படும் - தலைப்படும், (எ - று).

பொருளில்லாமையைத் தலைப்படுதலாவது யாம் இவர் சொல்லியவற்

றை விரும்பிக் கேட்போமாயின் முகங்கொடுத்து இவரடைகின்ற குறை

யை முடிக்கவேண்டுமென்று அஞ்சி யாவரும் கேளாமையால், பயனில்

சொல்லாய் முடிதல். (வறுமையுடையவர்) கல்வியும் பயன்படா தென்ப

தாம்.

(க - து.) வறியவர் மெய்ந்நூற்பொருளைத் தெளிபவறிந்து

சொன்னாலும், அது பயன்படாதுபோம் என்பது.

6. The words of the poverty-stricken, will be valueless, though they may be deep in sense and clear in expression.



எ * அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்

பிறன்போல நோக்கப் படும்.

பரி:—(இ - ள்.) அறத்தோ டியையில்லாத நல்தாவுடையான்

தன்னையீன்ற தாயானும் பிறனேக்
கப்படும், (எ - று).

கருதுமாறுபோலக் கருதி நோக்

‡ அறத்தோடுகூடாமை- †

காரணகாரியங்களு ளொன்றுனுமியையாமை.

---

() கேட்டுமோயின் (கேட்டோமாலுல்) என்றும் பாடமுண்டு.

* "தாயும் பகைகொண்ட பெண்டீர் பெரும்பகை தன்னுடைய, சேயும் பகையுற வோருந் பகையிச் செகமும்பகை, ஆயும் பொழுதி லருஞ்செல்வ நீங்கில்" என்று பட்டினத்தடிகள் கூறுவதிங்குணர்தற்பாலதாம்.

‡ அறத்தோ டியைபில்லாமை என்றும் பாடமுண்டு.

† அறத்தின் காரியம் செல்வமாயும் பாவத்தின் காரியம் தரித்திரமாயு மிருத்தலின், 'காரணகாரியங்களு ளொன்றுனுமியையாமை' என்று கூறப் பட்டது. கல்தரவு அறத்தின் காரியமாகாமையின் 'அறஞ்சாரா கல்குரவு' என்று கூறினர். காரணகாரியங்களுள் ஒன்றுனுமியையாமையாவது அறத் தோடு கல்தரவும், பாவத்தோடு செல்வமும் பொருந்தாமையாம், எனவே, அறத்தோடு செல்வமும் பாவத்தோடு கல்தரவும் பொருந்துமென்பதா யிற்று. இங்குப் பொருந்துதலாவது செல்வம் அறத்தின்காரியமும் கல்குரவு பாவத்தின் காரியமும் மாதலாம்.

* நல்குரவு - ஆகுபெயர் சிறப்பும்மை † அவளதியற்கை யன்புடைமை விளக்கிநின்றது. கொள்வதின்றுதலே யன்றிக் கொடுப்பதுண்டாதலு முடைமையின், ‡ அது நோக்கிச் சுற்றத்தார் யாவருந் துறப்பரென்பதாம்.

தெளி:—(இ - ள்.) அறஞ்சாரா - அறத்தோடு பொருந்துதலில்லாத, நல்குரவு - வறுமையையுடையவன், ஈன்றதாயாலும் - (தன்னைப்) பெற்ற தாயாலும், பிறன்போல - அன்னியனைக் (கருதும் விதம்) போல, நோக்கப்படும் - (கருதி) பார்க்கப்படுவான், (எ - று).

அறத்தோடு பொருந்துதலில்லாமை-காரண காரியங்களுள் ஒன்றுமின் அமையாமை. நல்குரவு - பண்பாகுபெயர். ஈன்றதாயாலும் என்ற உயர்வு சிறப்பும்மை அவளது இயற்கையன்புடைமையை விளக்கிநின்றது. வறுமையுடையவனிடத்துக் கொள்வதில்லாமையே யன்றிக் கொடுப்பதுண்டாதலு முடைமையால், அது நோக்கிச் சுற்றத்தார் யாவரும் அவனைக் கை விடுவரென்பதாம்.

(க - து.) வறுமையுடையவன் தன்னைப் பெற்றதாயாலும் மிகழப்படுவான் என்றது.

7. The poor man devoid of virtue's grace will be regarded as a stranger even by his mother.

4. இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு.

பரி:—(இ - ள்.) நெருநற்றுங் கொன்றது போன்று எனக்கின்னுத வற்றைச் செய்த நல்குரவு இன்றும் என்பால் வரக்கடவதோ, வந்தால் இனியாது செய்வேன், (எ - று).

அவ்வின்னுதனவாவன:-¶ மேற்சொல்லிய துன்பங்கள். நெருநன்மிக வருந்தித் தன்வயிறு நிறைத்தானொருவன் கூற்று.

தெளி:—(இ - ள்.) நெருநலும் - நேற்றும், கொன்றது போலும்-கொ*

ன்றதுபோன்று (எனக்குத் துன்பங்களைச்) செய்த, நிரப்பு - வறுமையானது, இன்றும் - இன்றைக்கும், வருவதுகொல்லோ - (என்னிடத்து) வரக்கடவதோ, (வந்தால் இனியாது செய்வேன்), (எ - று).

---

* நல்குரவு என்னும் பண்புப்பெயர் அதனை யுடையவனை யுணர்த்துதலால், பண்பாகுபெயராம்.

† அவளது (தாயினது) இயற்கையன்புடைமை விளக்கின்றது எனவே, அவளுக்குமைந்தனிடத்துச் செல்வங் காரணமாகவன்றி இயற்கையாக அன்பில்லையென்பது பெறப்பட்டவாறறிக.

‡ அது - கொடுப்பது.

¶ மேற்சொல்லிய - இவ்வதிகாரத்தின் 8ந்தாவது குறளிற்சொல்லிய.

அத்தன்பங்களாவன:--முன்னேசொல்லிய துன்பங்கள். இது நேற்று மிகவும்வருந்திக் தன்வயிற்றை நிறைத்தாளெருவன் சொல்லிய சொல்லாம்.

(க - து.) வறுமைத்து ன்பத்தைச் சகித்தல்முடியாதென்பது.

8. Will the grief of want that killed me yesterday come to me today too.

கூ. நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது.

பரி:—(இ - ள்) மந்திர மருந்துகளான் ஒருவனுக்கு நெருப்பிடை யே கிடந்துறங்கலுமாம்; நிரப்பு வந்துழி யா தொன்றனு முறக்கமில்லை.

நெருப்பினும் நிரப்புக் கொடிதென்றவா றுயிற்று. * இதுவுமவன் கூற்று. இவை நான்குபாட்டானும் நல்கூர்ந்தார்க்குளதாங் குற்றங்கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) நெருப்பினுள்-தீயின்நடுவே, தஞ்சலும்-(இடத்து) தூங்கலும், ஆகும் - (மந்திரமருந்துகளால் ஒருவனுக்குக்) கூடும், நிரப்பி னுள் - வறுமை வந்தவிடத்து, யாதொன்றும் - யாதொன்றாலும், கண்பாடு - தூங்குதல், அரிது - இல்லை, (எ - று).

('நெருப்பினுட் டஞ்சலு மாகும்' என்றதனால்) நெருப்பினும் வறுமை கொடிதென் றபடி யாயிற்று. இதுவும் அவன் சொல்லிய சொல்லாம். இவை நான்கு பாட்டாலும் வறுமையுடையார்க்கு உண்டாகுங் குற்றம் சொல்லப் பட்டது.

(க-து.) வறுமையுடையவனுக்குத் தூக்கமும் இல்லையென்பது.

9. One may sleep in the midst of fire; but in poverty the eye knows no repose.

## கஎ. துப்புர வில்லார் துவரத் துறவாமை
## யுப்பிற் தங் காடிக்குங் கூற்று.

பரி:—(இ - ள்.) நுகரப்படும் பொருள்க ளில்லாதார் தம்மாற் செயற்பாலது முற்றத்துறத்தலேயாகவும், : அது செய்யா தொழிதல் பிறரில்லி னுளவாய உப்பிற்தங் காடிக்தங் கூற்றும், (எ - று).

மான மழியாமையிற் செயற்பாலது † அதுவே யாயிற்று. மூற்றத்

---

* இதுவும் அவன் கூற்று - இக்குறளும் நேற்று மிகவும் வருந்தித் தன் வயிற்றை நிறைத்தானெருவன் சொல்லியசொல்லாம்.

: அது - முற்றத் துறத்தல்.
† அதுவே-முழுதுந்துறத்தலே (இறத்தலே).



துறத்தல் - ! சுற்றந் தானே விட்டலமையின் ஒருவாற்றுற் றுறந்தாராயினுர் நின்ற தம்முடம்பினை யுந் துறத்தல். * அது செய்யாது கொண்டிருத்

தல் † இண்டனேயு மாளப்பண்ணுதலின், ! அதனை ¶ அவர்நிற்குக் 'கூற்று' என்றுர். இனி முற்றத்துறத்தலாவது 0 துப்புர வில்லாமையின் ஒருவாற்றுற் றுறந்தாராயினுர் பின்னவற்றை மனத்தாற்றுறவாமை யென் றுரைப்பாரு முளர். இதனுன் o அஃதுளதாயவழிச் செய்வது கூறப் பட்டது.

தெளி:—(இ-ள்.) துப்புரவில்லார்-அனுபவிக்கப்படும் பொருள்களில்

லாதவர், (தம்மால் செயற்பால க முழுதுந் துறத்தலே யாகவும்), துவரத்

துறவாமை-அம்முழுதுந் துறவாதொழிதல், (பிறர்வீட்டிலுள்ள), உப்பிற்

குங் காடிக்கும்—, கூற்று-யமனும், (எ-று).

மானமழியாமையால் (துப்புரவில்லார்) செயற்பாலது அதுவேயா

யிற்று. முழுதுந் துறத்தல்-சுற்றந் தானே விட்டமையால் ஒருவழியால்

துறந்தாராயினுர் நின்ற தம்முடம்பினையுந் துறத்தலாம். அது செய்யாது

கொண்டிருத்தல் இரண்டனையும் மாளப்பண்ணுதலால், அதனை அவற்

றிற்குக் 'கூற்று' என்றார் இதனால் அஃது உண்டானவிடத்துச் செய்வது

இறத்தலே யெனச் சொல்லப்பட்டது. சுற்றம்-உறவினர்.

(க-து ) அனுபவிக்கப்படும்பொருள்களுள் யாதொன்றும் மில்லா

தவர் முழுதுந்துறத்தலைமேற்கொள்ளுதலே தகுதியாம் என்பது.

10. The destitute poor who do not utterly deny them- selves, are a burden to their neighbours' salt and vinegar.



பரி:—இனி மானந் தீரா விரவு இரவாமையோ டொத்தலின்,

அதனாலும் வீடேயிதற்பயத்ததாய உடம் போம்படுமென்னும் அற

---

| சுற்றந் தானே விட்டமையின்-நல்கூர்ந்தாரைச் சீற்றம் (கொள்ள தின்மை பற்றியும் கொடுப்பது பற்றியும்) தானே (கெகிழ) விட்டமையால்.

* அது-உடம்பினைத்துறத்தல் (இறத்தல்).

† இரண்டனையும்-உப்பையும் காடியையும் (புளித்தநீரையும்).

‡ அதனை-துவரத்துறவாமையை.

¶ அவற்றிற்கு-உப்பிற்கும் காடிக்கும்.

0 அனுபவிக்கப்படும் பொருள்களில்லாமையால் ஒருவழியினால் துறந்தவராயினும் பின்பு அவ்வனுபவிக்கப்படும் பொருள்களை மனத்தால் துறவாமை (விடாமை அஃதாவது நினைத்துக்கொண்டேயிருத்தல்) என்று கூறுவாருமுண்டு. 0 அஃதுமறுமை.



நூல் வழக்குப்பற்றி ¶ மேலெய்திய () துவரத்துறத்தல் விலக்கதற் பொருட்டு இரவு கூறுகின்றார். † அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

தெளி:—இனி மானங்கெடாத விரத்தல் இரவாமையோடு ஒத்தலால், அவ்விரவினாலும் வீடுபெறுதற்கு உதவிசெய்வதாகிய உடம்பு பாதுகாக்கப் படுமென்னும் அறநூல் வழக்குப்பற்றி முன்னர்க்கூறிய துவராத்துறத்த லென்னும் இறத்தலே விலக்குதற்பொருட்டு இரவுசொல்லுகின்றார். அதி காரமுறைமையும் இதனாலே விளங்கும். இரவு-யாசித்தல்; இரவாமை-யாசி யாமை; வீடு-மோட்சம்.

க. இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று.

பரி:—(இ - ள்.) நல்கூர்ந்தார் இரத்தற் * கேற்புடையாரைக் கா ணின் அவர்மாட் டாகக, இரந்தால் அவர் காந்தாராயின், அவர்க்குப் பழியாவதல்லது தமக்குப் பழியாகாமையான், (எ-று).

‡ இரவென்னு மூதனிலைத் தொழிற்பெயரா திறுதிக்கண் நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது. இரத்தற் கேற்புடைய ராவார் - உரையாமைமுன் னுணருமென்மை யுடையராய் மாற்ற தீவார். அவர் உலகத்தரியராகலிற் 'காணின்' என்றும், அவர்மாட் டாகந்தார்க்கு இரவான்வரு மிழிவின்மை யின் 'இரக்க' என்றும், அவரிதலிற் குறைகாட்டாமையிற் 'கரப்பின்' என்

றும், 0 காட்டுவராயின் அப்பழி தூவெள்ளறுவைக்கண் மாசுபோல அவர் கட் கடிதுசேறலின் 'அவர் பழி' என்றும், ஏற்பிலார்மாட் டிரவன்மையின் 'தம்பழியன்று' என்றுங் கூறினார்.

தெளி:—(இ-ள்.) (வறுமையுடையார்) இரத்தக்கார் - இரத்தற்கு ஏற்புடையவரை, காணின்-கண்டவிடத்து, இரக்க-(அவரிடத்து) இரக்கக்கடவர், (இரந்தால்), கரப்பின் - (அவர்) ஒளித்தாராயின், அவர்பழி-அவர்க்குப் பழி,(ஆவதல்லாமல்), தம்பழியன்று-தமக்குப்பழியாகாது, (ஆதலால்). ()

இரவு என்னும் முதனிலைத்தொழிற்பெயரது இறுதியில் நான்கனுருபு விகாரத்தால் தொக்கு நின்றது. இரத்தற் கேற்புடையராவார்-சொல்லாமைக்குமுன்னே அறியுஞ்சிறப்புடையவராய் இல்லையென்னாதுகொடுப்பவர். அவர்

¶ மேலெய்திய - நல்குரவதிகாரத்தின் பத்தாவது குறளிற்கூறிய.

() துவரத் துறத்தல் - முழுதுந் துறத்தல்

‡ நல்குரவு என்னும் அதிகாரத்தின்பின் இரவு என்னும் அதிகாரம் வைத்த முறைமையும்.

* எற்புடையார்-தகுதியுடையார்.

‡ இரத்தக்கார் என்பதன் பகுதியான இரவு என்பதனிறுதியில் (கு என்னும்) நான்கனுருபு செய்யுள்விகாரத்தாற்றொக்குநின்றது.

0 காட்டுவராயின்-(உரையாமைமுன் னுணரு மொண்மை யுடையராய் மாற்றாதீவார்) குறைகாட்டுவாரானால்.

141

உலகத்தில் அரியாகலால் 'காணின்' என்றும், அவரிடத்து இரந்தவர்க்கு இரவால்வரும் இழிவு (அவமானம்) இல்லாமைபால் 'இரக்க' என்றும், அவர் கொடுத்தலில் குறைகாட்டாமையால் 'கரப்பின்' என்றும், காட்டுவாளால் அப்பழி பரிசுத்தமான வெள்ளைத்துணியில் அழுக்குச் சேருதல் போல அவரிடத்துக் கடிதுசெல்லுதலால் 'அவர் பழி' என்றும், ஏற்பில்லாதவரிடத்து இரவல்லாமையால் 'தம்பழியன்று' என்றும் சொல்லினர்.

(க-து.) யாசிப்பவர் யாசித்தற்குரியாரிடத்தே யாசிக்கக்கடவர்; அஃதவர்க்குப் பழியாகாது என்பது.

1. When you find those from whom it is meet to ask for help, you may beg; but theirs is the sin and not yours if they with-hold their gift.

உ. இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறுஅ வரின்.

பரி:—(இ - ள்.) ஒருவற்கு இரத்தற்றனும் இன்பத்திற் கேதுவாம், இரந்த பொருள்கள் ஈவார துணர் வுடைமையாற் றன் றுன்புறுமல் வருமாயின், (எ-று).

இன்பம் - ஆகுபெயர். உறுமலென்பது கடைக்குறைந்து நின்றது.

துன்பம்—சாதியொருமைப்பெயர். அவையாவன:—ஈவார்கட் காலமு மிடனு மறிந்து சேறலும், அவர் குறிப்பறிதலும், அவரைத் தம்வயத்தராக் கலும், அவர் மனநெகிழ்வன நாடிச் சொல்லலு முதலியவற்றுன் வருவன வும், மறுத்துழி வருவனவுமாம். * அவையுருமல் வருதலாவது அவர் முன்னுணர்ந்தியற் கோடல். † இரந்தவர் துன்ப முறுஅ வரி னென்று பாடமோதி, இரக்கப்பட்டவர் பொருளின்மை முதலியவற்றுற் றுன்புறுது எதிர்வந் தீவராயி னென்றுரைப்பாரு முளர். இவை யிரண்போட்டானும் நல்குரவா னுயிர்நீங்கு மெல்லைக்கண் இளிவில்லாவிரவு விலக்கப்படா தென் பது கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, இரத்தல்-இரத்தல்தானும், இன்பம்-இன்பத்திற்கு ஏதுவாம், இரந்தவை-இரந்தபொருள்கள், (ஈவாரது அறிவுடைமையால்), துன்பமுறுஅ, (தான்) துன்பமுறுமல், வரின்-வரு மாலுல், (எ-று).

இன்பம் என்பது இன்பத்திற்கேதுவையுணர்த்துதலால், காரியவாகு பெயராம். உறுமலென்பது உறுஅ எனக் கடைக்குறைந்துநின்றது. துன்பம்-

---

* அவை - துன்பங்கள்.

† இரந்தவை துன்ப முறுஅ வரின் என்பதற்குப்பிரதியாக இரந்தவர் துன்ப முறுஅ வரின் என்று பாடங்கூறி, அதற்கு யாசிக்கப்பட்டவர் பொரு ளில்லாமை முதலியவற்றுல் துன்பமடையாது எதிர்வந்து கொடுப்பாராலுல் என்று பொருள் கூறுவாரு முண்டென்பது.

ஈறுதோன்றுதசாதியொருமைப்பெயர். அத்தன்பங்களாவன:--ஈவாரிடத்துக் காலமும் இடமும் அறிந்துசெல்லுதலும், அவாதுகுறிப்பறிதலும், அவரைத் தம்வயத்தாக்கலும், அவர் மன மிரங்கத்தக்கனவற்றை யாராய்ந்து சொல்லலும் முதலியவற்றுல் வருவனவும், அவரில்லையென்று மறுத்தவிடத்து வருவனவுமாம். அலையுறுமல் வருதலாவது அவர் முன்னறிந்து கொடுக்கக்கொள்ளுதல். இவை இரண்டொட்டாலும் வறுமையால் உயிர்நீங்குமளவில் அவமானமில்லாவிரவு விலக்கப்படாதென்பது சொல்லப்பட்டது.

(க - து.) யாசிப்பவனுக்கு யாசிக்கும்பொருள் தன்பமின்றி வருமாயின், யாசித்தல் அவனுக்கு இன்பத்திற்கேதுவாம்.

2. Even begging may give pleasure, if what is asked is obtained without annoyance.

ரு. கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேர ருடைத்து.

பரி:—(இ - ள்.) கரத்த லில்லாத நெஞ்சினையுடைய மானமறிவார் முன்னர் நின்று அவரிமாட் டொன்று நிரத்தலும் நல்கூர்ந்தாரிக்கு ஓரழகுடைத்து, (எ-று).

* 'சிறிய கருக்கத்து வேண்டு முயர்வு' என்றதனால்,

† அவர்க்கு ‡ அது கடனெனப்பட்டது. ¶
*அதனையறிதல்—சொல்லுதலுற் றுணைக்கலா

காமைக் கேதுவாய () அதனியல்பினை யறிதல். 0 அவ்வறிவுடையார்க்கு முன்னிற்றன் மாத்திரமே யமைதலின் 'முன்னின்று' என்றும், சொல்லுத லான் வருஞ் சிறுமை யெப்தாமையின் 'ஓரேருடைத்து' என்றுங் கூறினர். உம்மை அதனிழிபு விளக்கி நின்றது.

சென்:—(இ - ள். ) கரப்பிலா - ஒளித்தலில்லாத, நெஞ்சின்-நெஞ்சினையுடைய, கடனறிவார்முன்னின்று-மானமறிவார்முன்னர் நின்று, இரப்பும் - (அவரிடத்து ஒருபொருளை) இரத்தலும், (வறுமையுடையார்க்கு) , ஓரேர்ர்-ஓரழகை, உடைத்து-உடையதாம், (எ-று).

'சிறிய சூருக்கத்து வேண்டு முயர்வு' என்றதனால் அவர்க்கு அதுகட னெனப்பட்டது.
அதனையறிதல்-சொல்லத்தொடங்கிச் சொல்லமாட்டா மைக்குக் காரணமாகிய அதனியல்பினை அறிதல். அவ்வறிவுடையவர்க்கு முன்னே நிற்றல்மாத்திரமே போதுமாகையால் 'முன்னின்று' என்றும்,
சொல்லுதலால் வருஞ் சிறுமையை யடையாமையால் 'ஓரேருடைத்து'

---

* மானம் - 3. இதன்பொருள். குறைந்த வறுமை யுண்டாயவிடத்து வணங்காமை வேண்டும் என்பது.
† அவர்க்கு-கரப்பிலாநெஞ்சத்தார்க்கு. ‡ அது - மானமறிதல்.

¶ அதனை-மானத்தை. ()
அதனியல்பினை-மானத்தின் தன்மையை.
0
அவ்வறிவுடையார்க்கு-மானத்தினியல்பினையறிதலுடையார்க்கு.



என்றும் சொல்லினார். இரப்பும் என்ற உம்மை அவ்விரத்தலினிழிவை விளக்கி நின்றது.

(க-து.) கொடுக்கக் கூடியதை இல்லையென்று ஒளிக்காது மானமறிந்தீவாரிடத்து யாசித்தல் யாசகர்க்கோரழகாகும் என்பது.

3. There is grace even in standing as suppliants before those who deny nothing and understand their duty.



ச. இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு.

பரி:—(இ - ள்.) தமக்குள்ளது காத்தலைக் கனவின்கண்ணு மறியா தா ர்மாட்டுச்சென் றென்றனை யிரத்தலும் வறியார்க் கீதலே போலும்.

உம்மை ஈண்டு * மவ்வாறு நின்றது. † தான் புகழ் பயவா தாயினும்

முன்னுளதாய புகழ்கெட வாராமையின் 'ஈதலேபோலும்' என்றார். ஏகாரம்-ஈற்றசை.

தெளி:—(இ - ள்.) கரத்தல் - (தமக்கு உள்ளது) மறைத்தலே, கனவிலும் - சொப்பனத்திலும், தேற்றுதார்மாட்டு - அறியாதவரிடத்து, இரத்தலும் - (சென்றொருபொருளே) யாசித்தலும், ஈதலேபோலும் - (வறியவர்க்குக்) கொடுத்தலேபோலும், (எ - று):

இரத்தலும் என்ற வும்மை இவ்விடத்தும் அவ்வாறு நின்றது. தான் புகழுண்டாக்கா தாயினும் முன்னுண்டாகிய புகழ்கெடும்படிவாராமையால் 'ஈதலே போலும்' என்றார். (ஈதலே என்பதன்) ஏகாரம் - ஈற்றசை.

(க - து) தமக்குள்ள தொனித்தலைச் சொப்பனத்திலும் நினையாதவரிடத்துச் சென்றொன்றனை யாசித்தல் யாசகர்க்குத்தா மொன்றனைப் பிறர்க்குக்கொடுத்தல் போல்வதாம் என்பது.

4. To seek alms from those who never think of denial even in their dreams is tantamount to giving (it oneself).



## நி. கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணினின்

நிரப்பவர் மேற்கொள் வது.

பதி:—(இ - ள்.) சொல்லுதன் மாட்டாது முன்னிற்றன் மாத்திரத் தான் இரப்போர் ¶ உயிரோம்பற்பொருட்டு அதனை மேற்கொண்டு போதுகின்றது ‡ அவரிக்கத உள்ளது கரவாது

கொடுப்பார் சிலர் உல *கத்துளாய தன்மையானே,
பிறிதொன்று னன்று, (எ-று).

---

* அவ்வாறு - இரத்தலினிழிவைவிளக்கி. † தான் - இரத்தல்.
¶ உயிரோம்பற்பொருட்டு-தமது உயிரைக் காப்பாற்றுதற்பொருட்டு.
‡ அவர்க்கு - யாசகர்க்கு.

## ஒழிபியல்—கக-வது இரவு.

# 1125

* அவரில்லையாயின், மான நீக்கமாட்டாமையின்
உயிர் நீப்பரென்ப தாம்.

தெளி:—(இ - ள்) கண்ணின்று - (சொல்லுதல் மாட்டாமல்) முன் னிற்றல் மாத்திரத்தால், இரப்பவர் - யாசிப்பவர், (உயிர்காத்தற்பொருட்டு), மேற்கொள்வது - (அவ்யாசித்தலை) மேற்கொண்டு செல்லுகின்றது, கரப் பிலார்-(அவர்க்கு உள்ளதை) ஒளிக்காமற்கொடுப்பவர், (சிலர்), வையகத்து- உலகத்தில்,
உண்மையான்-இருக்கின்றபடியினாலே,
(பிறிதொன்றுலன்று).

அவரில்லையாலால், (இரப்பவர்) மானம்விட மாட்டாமையால் உயிர் விடுவரென்பதாம்.

(க - து.) குறிப்பறிந்து உள்ளதொளிக்காது

கொடுக்கவல் லார் சில: இருப்பதனுற்றுன்,
மான முடையார் உயிர்விடாது யாசகத்தொழிலே
மேற்கொண்டிருக்கின்றனர் என்பது.

5. As there are men in this world who give without saying nay, there are also those who prefer to beg by simply standing before them.



கூ. ‘ கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
யெல்லா மொருங்கு கெடும்.

பரி:—(இ - ள்.) உள்ளது கரத்தலாகிய நோயில்லாரைக் கண்டால், மானம் விடாதிரப்பார்க்கு நிரப்பான்வருந் துன்பங்களெல்லாஞ் சோர்கெடும், (எ - று).

காத்தல் ஒருவற்கு வேண்டுவ தொன்றன்மையின், ‡ அதனை () நோய் என்றும், † அஃதில்லாத இரக்கத்தக்காரைக் கண்ட பொழுதே ¶ அவர் கழியுவகைய ராவராகலின் ‘எல்லா மொருங்கு கெடும்’ என்றுங் கூறினர்.

0 இடும்பை - ஆகுபெயர். | முழுதுங் கெடுமென்று பாடமோதி, எஞ்சா மற்கெடுமென் றுரைப்பாருமுளர்.

தெளி:—(இ-ள்.) கரப்பிடும்பை - (உள்ளதை)

ஒளித்தலாகிய நோய், இல்லாரை - இல்லாதவரை, காணின் - கண்டால், (மானம் விடாமலிரப்ப

---

* அவர் - கரப்பிலார்.

‡ அதனை - காத்தலை. () இடும்பை என்றும் பாட்டமுண்டு.

† ஆஃதில்லாத - உள்ளது காத்தலாகிய நோயில்லாத.

¶ அவர் - யாசிப்பவர்.

0 துன்பம் என்னும் பொருளதான இடும்பையென்னுங் காரியப்பெயர் அதனைத் தருவதற்குக் கருவியாகிய நோயினை யுணர்த்துதலால், காரியவாகுபெயராம்.

| ஒருங்குகெடும் என்பதற்குப் பிரதியாக முழுதுங்கெடும் என்று பாடங்கூறி, அதற்குக் குறையாமற்கெடும்என்று பொருளுரைப்பாருமுண்டு.



வர்க்கு), நிரப்பிடும்பையெல்லாம் - வறுமையால்வருந் துன்பங்களெல்லாம், ஒருங்குகெடும் - ஒரு சேரக்கெடும், (எ - று).

காதல் ஒருவனுக்கு வேண்டுவ தொன்றல்லாமையால், அதனை (ஆகு பெயரால்) நோய் என்றும், அந்நோயில்லாத யாசிக்கத்தக்கவரைக்கண்ட பொழுதே அவ்விரப்பவர் பெருமகிழ்ச்சியினராவராகலால் 'எல்லாமொருங்கு கெடும்' என்றும் சொல்லினர். இன்பை - காரியவாகுபெயர்.

(க - து.) மானம் விடாது யாசிப்பவர் உள்ளதொளிர்த்தலின் இந் நோயில்லாரைக் காண்பாராயின், அவரது வறுமைத்துன் பங்களெல்லாம் ஒருங்கேகெடும் என்பது.

6. All plague of poverty will flee at the sight of those who are free from the evil of denial.

எ.

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள முள்ளு ளுவப்ப துடைத்து.

பரி:—(இ - ள்.) தம்மை யவமதித் திழிவு சொல்லாது பொருள் கொடுப்பாரைக் கண்டால், அவ்விரப்பாரது உள்ளமகிழ்ந்து * உள்ளு ள்ளே யுவக்குந்தன்மை யுடைத்து, (எ - று).

'இகழ்ந்தெள்ளாது' எனவே, † நன்குமதித்தலும் இனியவைகூறலும் ‡ பெறுதும். நிரப்பிடும்பை கெடுதலளவேயன்றி 0 ஐம்புலன்களாலும்

போன்பமெய்திஞராகக் கருதலான்,
'உள்ளுளுவப்பதுடைத்து' என்ஞர்.
இவையைந்துபாட்டானும் அவ்விரத்தக்கார தியல்பு
கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) இகழ்ந்து - (தம்மை) அவமதித்து, எள்ளாது - இழிவுசொல்லாமல், ஈவாரை - (பொருள்) கொடுப்பவரை, காணின் - கண் டால், உள்ளம் -(அவ்விரப்பவரது) மனம், மகிழ்ந்து - மகிழ்ச்சியடைந்து, உள்ளுள் - உள்ளுள்ளே, உவப்பது - உவக்குந்தன்மையை, உடைத்து-உடை யதாம், (எ - று).

'இகழ்ந்தெள்ளாது'

எனவே, (இகழ்ந்தெள்ளாதீவார் இரப்பாரை)நன்கு மதித்தலும், அவர்க்கு இனியவை கூறலும பெறப்படும்.(அவ்விரப்பவர்)வறுமைத்துன்பம் கெடுவதுமாத்திரமே யன்றி ஐம்புலன்களாலும் போன்பத் தை யடைந்தவராக (தம்மை) நினைத்தலால் (அவர் மனம்) 'உள்ளுளுவப்ப துடைத்து' என்ஞர். இவையைந்து பாட்டாலும் அவ்விரக்கத் தக்கவரினியல்பு சொல்லப்பட்டது.

---

* உள்ளுள்ளே யுவக்கும் - உள்ளுக்குள்ளே களிக்கும்.

† நன்குமதித்தல் - கௌரவித்தல். ‡ பெறுதும் - பெறுவோம்.

0 ஐம்புலன்களாலும் - செவி முதலிய ஐந்து இந்திரியங்களாலும்.

ஒழிபியல்—கக-வது இரவு.

**1127**

(க - து.) தம்மை யவமதித்திழிவு சொல்லாது பொருள் கொடுப்பவரைக் கண்டால், யாசிப்பவர்க்கு அளவிறந்த மகிழ்ச்சியுண்டாகும் என்பது.

7. The minds of beggars will thrill with joy through and through at the sight of those who give alms with kindness & courtesy.

அ. * இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால மரப்பாவை சென்றுவந் தற்று.

பரி:—(இ - ள்.) வறுமையுற் றிரப்பா ரில்லையாயின், தளிர்த்தவிட தீதையுடைய பெரியஞாலத்துள்ளார் செலவு வரவுகள் உயிரில்லாத மரப்பாவை † இயந்திராக் கயிற்றற் சென்றுவந்தாற் போலும், (எ - று).

() ஐகாரம் - அசைநிலை. ‡ ஞாலமென்னும் ¶

ஆகுபெயர்ப்பொருட்கு உவமையோடொத்ததொழில் வருவிக்கப்பட்டது. ஞாலத்துள்ளாரென்றது அவரை யொழிந்தாரை. †† அவர்க்கீதலேச்செய்து புகழும் புண்ணியமுமெய்தாமையின், உயிருடையரல்லரென்பதாம். : "ஈவாருங் கொள்வாருமில்லாத வானத்து, வாழ்வாரே வன்கணவர்" என்றார் பிறரும். 0 இத்தொடையின்ப நோக்காது, இரப்பவரில்லாயினென்று பாடமோதுவாருமுளர்.

---

* நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் - சொல்லதிகாரம் 'ஈதாகொடு' என்னுஞ்சூத்திரவுரையில் (1) இரப்பார் (பொருளிருந்தும்) இல்லென இரப் பார், (2) இடனின்று (பொருளில்லாது) இரப்பார், (3) (உள்ளபொருள்) தொலைவாகி யிரப்பாரென முத்திறப்படுவரென்று கூறுகின்றனர்.

† இயந்திரக்கயிறு - சூத்திரக்கயிறு.

() இரப்பாரை என்னும் ஐகாரம் "நேரை நோக்க நாரி பருகி" என்பதுபோல அசைநிலையாம்.

‡ ஞாலமென்னும் இடப்பெயர் ஞாலத்திலுள்ளவரை யுணர்த்துதலால், இடவாகு பெயராம். ஞாலம்-பூமி.

¶ ஆகுபெயராற் பெற்ற ஞாலத்துள்ளார் என்னும்

பொருட்கு (உவமேயத்திற்கு) மரப்பாவை சென்றுவந்தற்று என்னும் உவமானத்தோடொத்த (செலவு வரவுகள் என்னும்) தொழில் வருவிக்கப்பட்டது.

†† அவர்க்கு – வறுமையுற் றிரப்பார்க்கு.

: இதன்பொருள்.

கொடுக்கின்றவருங்கொள்ளுகின்றவருமில்லாத சுவர்க்கலோகத்தில் வாழுகின்றவரே கொடுமையுடையோராவர் என்பது.

0 இரப்பாரை மரப்பாவை என்னுமித் தொடையின்பத்தைநோக்காது, இர்ப்பாரை யில்லாயின் என்பதனை இரப்பவரில்லாயின் என்று பாடங்கூறுவாரு முண்டென்பது.



தெளி:—(இ - ள்.) இரப்பார் - (வறுமையடைந்து) இரப்பவர், இல்லாயின்-இல்லையாயின், ஈர்ங்கண்மாஞாலம் - குளிர்ந்த இடத்தையுடைய பெரிய பூமியிலுள்ளவரது, (செலவு வரவுகள்), மாப்பாவை - (உயிரில்லாத) மரப்பாவை, சென்றுவந்தற்று-(இயந்திரக்கயிற்றால்) சென்றுவந்தாற் போலும்.

(இரப்பாரை யென்பதன்) ஐகாரம் அசைநிலை. ஞாலம் - இடவாகுபெயர்; அவ்வாகுபெயர்ப் பொருளாகிய உவமேயத்திற்கு உவமானத்தோடு ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது. பூமியிலுள்ளாரென்றது இரப்பவரொழிந்தவரை. அவர்க்குக் கொடுத்தலைச்செய்து புகழும்புண்ணியமும் அடையாமையால், (இரப்பாரில்லாத ஞாலத்தார்) உயிருடையரல்ல ரென்பதாம். மாப்பாவை-மரப்பொம்மை.

(க - து.) யாசகரில்லாதவிடத்து உலகத்துள்ளாரது இயக்கம் மரப்பாவையின் இயக்கம் போல்வதாம் என்பது.

8. If there be no beggars, the actions done in this mighty world would resemble a stage where wooden puppets come and go.

கூ.

ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண்
மேவா ரிலாஅக் கடை.

பரி:—(இ - ள்.) * அவரிடம்பாற் சென்று ஒன்றனை யிரந்துகோடலை விரும்புவாரில்லாவழிக் கொடுப்பார்மாட்டென்ன புகழுண்டாம்? யாதுமில்லை, (எ - று).

† தோற்றம் - ஆகுபெயர். மேவுவா ரென்பது விகாரமாயிற்று. கொடுத்தல் வன்மை வெளிப்படாமையின், ‡ அதனைப் புகழெய்தா ரென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் உலகிற் கிரப்பார் வேண்டுமென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) இரந்துகோள் - (அவரிடத்திற்சென்று ஒருபொருளை) இரந்துகொள்ளுதலை, மேவா ரிலாஅக் கடை - விரும்புவாரில்லாதவிடத்து, ஈவார்கண் - கொடுப்பவரிடத்து, என் - என்ன, தோற்றம் - புகழ், உண்டாம் - உண்டாகும், (யாதுமில்லை), (எ - று).

தோற்றம் - கருவியாகு பெயர். மேவுவாரென்பது மேவார் என இடைக்குறை விகாரமாயிற்று. (இரப்பாரில்லாதவிடத்து) கொடுத்தல்வல்லமை வெளிப்படாமையால், அதனால் (கொடுப்பார்) புகழுடையாரென்பதாம். இவை யிரண்டு பாட்டாலும் உலகிற்கு இரப்பவர் வேண்டுமென்பது சொல்லப்பட்டது.

---

*. அவர்பால் - கொடுப்பாரிடத்து.

† தோற்றம் என்னுங் கருவிப்பெயர் அதனாலாகிய புகழினை யுணர்த்துதலால், கருவியாகு பெயராம். தோற்றம் - சிறந்து விளங்குதல்.

‡ அதனால் - கொடுத்தல் வன்மை வெளிப்படாமையால்.

## ஒழிபியல்—கக-வது இரவு.

**1129**

(க - து.) இரப்பாரில்லாதவிடத்து ஈவார்க்குப் புகழுண்டாவதில்லை என்பது.

9. What glory would there be to givers of alms if there were no beggars to seek for alms.

க0. () இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி.

பரி:—(இ - ள்.) ஈவானுக்குப்

பொருளுதவாவழி, இவனெனைக்கீக்கின் றிலனென்று * அவனை
யிரப்பான் வெகுளா தொழிதல் வேண்டும்; †
அதுவேண்டியபோழது உதவாதென்பதற்கு வேறுசான்று
வேண்டா; நிரப்பாகிய தன்னிடும்பைதானேயுஞ் சான்றுத
லமையும், (எ - று).

யாவர்க்கும் தேட வேண்டுதலும் நிலையின்மை
முதலிய பிறசான்று முண்டென்பதுபட நின்றமையின், ‡
உம்மை எச்சவும்மை. ¶தனக்கேயன்றி மற்றையிரந்தார்க்கும்
அற்றைக்கன்று பொருள் கடைக்கூட்டற்கு § அவனுறுந்
துன்பத்தைத் தனக்கேயாகவைத்துத் தானுறுந்துன்பந்
தானறிந்து வெகுளற்க வென்பதாம். இதனால் ‖
அவர்க்கின்றியமையாததோ ரியல்பு

கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (ஈவானுக்குப் பொருள்
உதவாதவிடத்து) இரப்

பான் - இரப்பவன், வெகுளாமைவேண்டும் - (இவன் எனக்குக் கொடுக்கி
ன்றிலனென்று அவனைக்) கோபியாதொழிதல்வேண்டும், (அது வேண்டிய
பொழுது உதவாதென்பதற்கு வேறுசான்று வேண்டாம்), நிரப்பிடும்பை
தானேயும் - வறுமையாகிய தன்னோய்தானேயும், கரி -
சான்றுதல், சாலும் - அமையும், (எ - று).

யாவர்க்குந் தேடவேண்டுதலும் நிலையில்லாமை முதலியபிறசான் றும் (பொருளுக்கு) உண்டென்பது தோன்றநின்றமையால், உம்மை எச்சவும்மையாம். (இரப்பவன்), தனக்கேயல்லாமல் மற்றை இரந்தவர்க்கும் அன்றைக்கன்று பொருள் சம்பாதித்தற்கு அவனடையும் துன்பத்தைத் தனக்கேயாகவைத்துத் தானடைகின்ற துன்பத்தைத் தானறிந்து கோபியா

---

() "பிச்சைபுக் குண்பான் பிளிருமை முன்னினிதே" என்று இனி யவை நற்பது கூறுகின்றது.

* அவனை - ஈவானை. † அது - அப்பொருள்.

‡ உம்மை - தானேயும் என்றவும்மை; இஃது எதிரதுதழுவிய எச்சவும்மையாம்.

¶ தனக்கேயன்றி - யாசிப்பவனுகிய தனக்கேயல்லாமல்.

§ அவன் - ஈவான். ‖ அவர்க்கு - யாசிப்பவர்க்கு.

: இயல்பு - ஈவானைக் கோபியாதிருத்தல்.





திருக்கக்கடவனென்பதாம். இதனால் அவர்க்கு

அவசியமானதோரியல்பு சொல்லப்பட்டது. சான்று-சாட்சி.

(க - து.) பொருள் வேண்டியபோ துதவா தென்பதற்குத் தனதுவறுமையே சாட்சியாக விருத்தலின், இரப்பான் ஈவான் பொருளில்லையென்ற விடத்து அவனைக் கோபியாதிருக்கக் கடவன் என்பது.

10. He who begs ought not to be angry at a refusal; as the misery of his own poverty should serve as a sufficient testimony for so doing.

## கஉ-வது அதிகாரம்.

## இரவச்சம்:—Fear of begging.

பரி:—அஃதாவது மானந்தீர வருமாவிற் கஞ்சுதல். † அதிகார முறைமையும் இதனுளே விளங்கும்.

தெளி:—அஃதாவது மானங்கெடவரும் இரத்தலுக்கு அஞ்சுதல். அதி காரமுறைமையும் இதனுலே விளங்கும்

க. ‡ காவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணுமி
ரவாமை கோடி யுறும்.

பரி:—(இ - ள்.) தமக்குள்ளது காவாது இவர் வாப்பெற்றே மென்று உண்மகிழ்ந்து கொடுக்குங் கண்போலச் சிறந்தார் மாட்டும் இரவாதே ஒருவன் வறுமை கூர்தல் இரந்து செல்வமெய்தலிற் கோடிமடங்கு நன்று, (எ - று).

நல்குரவு மறைக்கப்படாத நட்டார்மாட்டும் ஆகாதென்பதுபட நின்றமையின், ¶ உம்மை உயர்வுசிறப்பின்கண்வந்தது. அவ்விரவான் மானந்தீராதென்னுந் துணையல்லது ‖ அதற்கு ⁝ மிகுதி கூடாமையின், வல்லதோர் முயற்சியா னுயிரோம்பலே நல்லதென்பது கருத்து.

தெளி:—(இ - ள்.) (ஒருவன்) கரவாது - (தமக்குள்ளதை) ஒளிக்காமல், உவந்து - (இவர் வரப்பெற்றேமென்றுமன) மகிழ்ந்து, ஈயும் - கொடுக்

---

† இரவிற்குப்பின் இரவச்சம் வைத்த அதிகாரமுறைமையும்.

‡ " கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—யிரவினை
உள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு " என்று நாலடியார் கூறுவதிங் குணர்தற் பாலதாம். ¶ கண்ணன்னார் கண்ணும் என்ற வும்மை.

‖ அதற்கு - அவ்விரத்தலுக்கு. ⁝ மிகுதிகூடாமையின் - மேம்பாடு பொருந்தாமையால்.



கும், கண்ணன்னார்கண்ணும் - கண்போலச் சிறந்தவரிடத்தும், இரவாமை - இரவாமலே, (வறுமையை யடைந்திருத்தல்), கோடியுறும் - (இரந்து செல்வ மடைதலினும்) கோடிமடங்கு நல்லது, (எ-று).

வறுமை மறைக்கப்படாத நட்பினரிடத்தும் இரத்தலாகாதென்பது தோன்ற நின்றமையால்,உம்மை உயர்வுசிறப்பில் வந்தது. (கரவா துவந்தீயுங் கண்ணன்னார்கண்ணும் இரக்கும்) அவ்விரவால் மானங்கெடாதென்னும் அளவல்லாமல் அதற்கு மிகுதி கூடாமையால், செய்யவல்லதோர் முயற்சி

யால் சீவனஞ்செய்தலே நல்லதென்பது கருத்து.

(க - து.) ஒருவன் தமக்குள்ளதை மறைக்காது கொடுக்குஞ் சிறந்தவரிடத்தும் யாசியாது வறுமை யடைந்திருத்தல் மிக நல்ல தாம் என்பது.

1. Not to beg at all is far greater than seeking alms even from those who cheerfully give without refusing.

2. * இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
• கெடுக வுலகியற்றி யான்

பரி:—(இ - ள்) இவ்வுலகத்தைப் † படைத்தவன் இதன்கண்வாழ்

வாரிக்கு முயன்றுயிர்வாழ்தலே யன்றி இரந்து முயிர்வாழ்தலேவேண்டி

விதித்தானுயின், ‡ அதுகொடியபோன்றனும் ¶ அவனைப்பீடன்று எங்கு

மலமந்து கெடுவானாக, (எ - று).

மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும், ' அதற்கு வேண்டுவதாய வுண்டியும், | அதற்கேதுவாய செய்தொழிலும் பழவினை வயத்தாற் கருவொடு கலந்தவன்றே ‖ அவன் கற்பிக்குமன்றே; ⁝ அவற்றுட் சிலவுயிர்க்கு இரத்தலேயும் ஒரு செய்தொழிலாகக் கற்பித்தானுயின், அத்தீவினையாற்றானும் அத்தன்ப முறல்வேண்டு மென்பதாம். இவை யிரண்டுபோட்டானும் அவ்

* "காரூர் தகடேபோ னன்மலர்மேற் பொற்பாவாய்
நீரூர் நிலத்து விளியரோ—வேரூய
புன்மக்கள் பக்கம் புதுவாய்நீ பொன்போலும்
நன்மக்கள் பக்கம் நிறைந்து" என்று நாலடியார் கூறுவதிங் குணர்

தற் பாலதாம்.

† படைத்தவன் - பிரமன்.
‡ அக்கொடியோன்றனும் - பிரமனும்.
¶ அவரை - இரந்து (யாசித்து) சீவனஞ்செய்பவரை.
() அதற்கு - அவ்வாழ்நாளிற்கு. | அதற்கு - அவ்வுண்டிக்கு.
‖ அவன் கற்பிக்குமன்றே - அப்பிரமனேற்படுத்துவானல்லவா.
⁝ அவற்றுள் - வாழ்நாள், உண்டி, செய்தொழிலென்பனவற்றுள்.



தெளி:—(இ - ள்.) உலகியற்றியான் - இவ்வுலகத்தைப்படைத்தவன், (இவ்வுலகினிடத்து வாழ்வார்க்கு முயற்சிசெய்து சீவனஞ்செய்தலே யல்லாமல்), இரந்தும் - யாசித்தும், உயிர்வாழ்தல் வேண்டின் - சீவனஞ்செய்தலே வேண்டியேற்படுத்திலனெயின், (அக்கொடியோன்றனும்), பரந்து - (அவரைப்போன்று எங்கும்), சுழன்று, கெகெ - கெடக்கடவனெக, (எ - று).

மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும், அதற்கு வேண்டுவதாகிய உண்டியும், அதற்குக்காரணமாகிய செய்தொழிலும், பழவினை வசத்தாற் கருவோடும் (கருப்பத்துடன்) கலந்த வப்போதே அவன் கற்பிப்பானன்றே; அவற்றுள் சிலவுயிர்க்கு யாசித்தலேயும் ஒரு செய்தொழிலாக வேற்படுத்திலனெயின், அத்தீவினையால் அவன்றனும் அத்தன்மைடைதல் வேண்டுமென்பதாம். இவையிரண்டு பாட்டாலும் அவ்யாசித்தலின் கொடுமை சொல்லப்பட்டது

(க - து.) பிரமன் சிலரை யாசித்துப் பிழைக்குமாறு படைத்தானுயின், அவனும் அவர்போல எங்குஞ் சுழன்று வருந்தக் கடவன் என்பது.

2. If the creator of the universe has ordained even
seeking alms as a means of livelihood,
begging and founder.
may he too go a



இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

பரி:—(இ - ள்.) வறுமையான் வருந்துன்பத்தை முயன்று நீக்கக் கடவேமென்று கருதாது இரந்து நீக்கக்கடவேமென்று கருதும் வன்மைபோல வலிமைப்பாடுடையது பிறிதில்லை, (எ - று).

நெறியாய முயற்சி கிற்க நெறியல்லாத இரவாற்றீர்க்கக் கருதுதலின்,

வன்மையாயிற்று. வன்பாடு - முருட்டுத்தன்மை ; * அஃதாவது ஓராது செய்துநிற்றல். இதனுன் வறுமை நிர்த்தற்குமெறி இரவன்றென்பது கூறப் பட்டது.

தெளி:—(இ - ள்.) இன்மை - வறுமையால், (வரும்), இடும்பை - துன்பத்தை, (முயற்சி செய்து நீக்கக்கடவோமென்று நினையாமல்), இரந்து தீர்வாமென்னும் - யாசித்து நீக்கக்கடவோமென்று நினைக்கும், வன்மை யின் - வல்லமைபோல, வன்பாட்டது - வலிமைப்பாடுடையது, இல் - (வேறு) இல்லை, (எ - று).

வறுமைத் துன்பத்தை நீக்கிக்கொள்ளுதற்கு வழியாகிய முயற்சி இருக்க வழியல்லாத யாசித்தலால், அதனை நீக்கநினைத்தலால், (இரந்துதீர்வா மென்பது) வன்மையாயிற்று. வன்பாடு - முருட்டுத்தன்மை; அஃதாவது,

---

* அஃதாவது - முருட்டுத்தன்மையாவது.

மேற்கொள்ளுங் காரியத்தை யாலோசியாது செய்துநிற்றல். இதனால் வறுமை தீர்தற்கு வழி யாசித்தலன்றென்பது சொல்லப்பட்டது.

(க - து.) வறுமையுடையவன் தனது வறுமையை முயற்சி செய்து நீக்கக் கருதாது, யாசகத்தால் நீக்கக் கருதுதல் அறிவீன மாம் என்பது.

3. There is nothing so powerful as the determination with which one seeks to surmount the misary of poverty by begging, rather than by working.

சு.

இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு.

பரி:—(இ - ள்.) நுகாவேண்டுவனவின்றி நல்கூர்ந்தவழியும் பிறர் பாற்சென்றிரத்தலை யுடம்படாத அமைதி எல்லாவுலகும் ஒருங்கியைந் தாலுங் கொள்ளாத பெருமையுடைத்து, (எ - று).

அவ்விரத்தலைச் * சால்பு விலக்குமாகலின், † இரவொல்லாமை அதன் மேலேற்றப்பட்டது. இதனுன் ‡ அந்நெறியல்லதனைச் சால்புடையார்செய் யாரென்பது கருத்து.

தெளி:—(இ - ள்.) இடமில்லாக்காலும் - (அனுபவிக்கவேண்டும்)பொருள்களில்லாமல் வறுமையடைந்த விடத்தும், இரவு-(பிறரிடத்துச்சென்று) யாசித்தலே, ஒல்லா - உடம்படாத, சால்பு - அமைதி, இடமெல்லாம் - எல்லாவுலகமும், (ஒருசேரப் பொருந்திலுலும்), கொள்ளாத்தகைத்தே - கொள்ளாத பெருமையை யுடையது, (எ - று).

அவ்விரத்தலைச் சால்பு விலக்குமாகலால், இரவொல்லாமையை அச்சால் பின்மேல் ஏற்றி 'இரவொல்லாச் சால்பு' என்று கூறப்பட்டது. இதனால் அவ்வழியல்லாததனைச் சால்புடையார் செய்யாரென்பது கருத்து.

(க - து.) சால்புடையார் அனுபவித்தற்குரிய பொருள்களின்றி வறுமையுற்ற விடத்தும், பிறரிடத்துச் சென்று யாசியார்.

4. The universe cannot adequately praise the dignity that would not stoop to beg even in dire destitution.

---

* சால்பு - பலகுணங்களாலும் நிறைதல்.

† சால்பிலுலுண்டாகும் இரவொல்லாமையை (யாசித்தலுக்கு உடன்படாதிருத்தலை) அச்சால்போடொற்றுமைசெய்து 'இரவொல்லாச்சால்பு' என்றுகூறினமையின், இது காரியங் காரணமாய வுபசாரவழக்காம். "பிறப்பென்னும் பேதைமை" என்பதற்குப் பிறப்பிற்குக் காரணமாகிய பேதைமையென்று பொருள் கொண்டாற்போன்று, இரவொல்லாச் சால்பு என்பதற்கும் இரவொல்லாமைக்குக் காரணமாகிய சால்பு என்று பொருள் கொள்க.

‡ அஃதெறியல்லதனை - பிறர்பாற்சென்றிரத்தலை.

## ரு. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த துண்ணலி னூங்கினி ய தில்.

பரி:—(இ - ள்.) நெறியாய முயற்சி கொடுவந்து தந்தது தெளிந்த நீர்போலும் அடுபுற்கையேயாயினும், * அதனை யுண்டற்குமே லினிய தில்லை, (எ - று).

தாடந்த கூழ் செறிவின்றித் தெண்ணீர் போன்றதாயினும் இளிவாய இரவான் வந்ததன்றித் தம்முடைமை யாகலின், அமிழ்தத்தோடொக்கு மென்பதாம். இதனால் நெறியினுனையது சிறிதேனும் † அது செய்யுமின் பம் பெரிதென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) தாள் - (வழியாகிய) முயற்சி, தந்தது—(கொண்டு வந்து) தந்தது, தெண்ணீர் - தெளிந்த நீர்போலும், அடுபுற்கையாயினும் - சமைத்த கூழேயாயினும், உண்ணலினுங்கு - (அதனை) உண்ணுதற்கு மேல், இனியது - இன்பந்தருவது, இல் - இல்லை, (எ - று).

முயற்சி தந்த கூழ் அழுத்தமில்லாமல் தெளிந்த நீர்போன்ற தாயினும் இழிவாய யாசித்தலால் வந்ததல்லாமல் தம்முடையதாக விருப்பதாகலால், அமிழ்தத்தோடு ஒக்கு மென்பதாம். இதனால் முயற்சிவழியா லாகியது சிறி தெனினும் அது செய்யுமின்பம் பெரிதென்பது சொல்லப்பட்டது.

(க - து.) யாசித்தலாலன்றி முபற்சியாற் கிடைத்த பொருள் சிறிதாயிருப்பினும், அஃது அனுபவிக்கும்போது அமிழ்தம் போன்று பேரின்பத்தைத் தரும் என்பது.

5. Even thin gruel would be delicious to him who has obtained it by labor.

கூ. ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.

பரி:—(இ - ள்-) தண்ணீர்பெறாது இறக்குநிலைமைத் தாயதோ ராவினைக் கண்டு அறவோர்க்கி இதற்குத் தண்ணீர் தரல்வேண்டுமென் றிரந்து சொல்லுங்காலும், அவ்விராவுபோல ஒருவனுவிற் கிளிவந்தது பிறிதில்லை, (எ - று)

ஆகாத்தோம்பல் பேறமாகலின் 'ஆவிற்கு' என்றும், பொருள்கொடுத்துக்கொள்ளவேண்டாத எண்மைத்தாகலின் 'நீர்' என்றும், இரக்கின்றுனுக்கு இளிவு ‡ அச்சொல்லளவேயாகலின் 'நாவிற்கு' என்றும், ¶ அது

---

* அதனை - கூழை. † அது - வழியாலாயது.
‡ அச்சொல்லளவே - இப்பசுவிற்குத் தண்ணீர்தரல்வேண்டும் என்
னுஞ் சொல்மாத்திரமே. ¶ அதுதான் - அச்சொல்லே.

தான் எல்லாவிளிவினும் மேற்படுதலின் 'இளிவந்ததில்' என்றுங் கூறினர். இதனுன் அறனும் * முயன்று செய்வதல்லது இரந்துசெய்யற்கவென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.)

ஆவிற்கு - (தண்ணீர்பெறுமவிறக்கும் நிலைமைய தாகியதோர்) பசுவினை (க்கண்டு), நீரொன்று - (அறநோக்கி இதற்குத்) தண்ணீர்தரல் வேண்டுமென்று, இரப்பினும் - இரந்து சொல்லும்போதும்,

இரவின் - அவ்விரவுபோல, நாவிற்கு - (ஒருவன்) நாவிற்கு, இளிவந்தது - அவமானம்வந்தது, இல்-(ஆற்றொன்று) இல்லை, (எ - று)

ஆவைக்காத்திரட்சித்தல் பெரியவதமாகலால் 'ஆவிற்கு' என்றும்,

பொருள் கொடுத்துக் கொள்ளவேண்டாத எளிமையதாகலால் 'நீர்' என்றும்,

யாசிப்பவனுக்கு அவமானம் அச்சொல்லளவே யாகலால் 'நாவிற்கு' என்றும், அதுதான் எல்லா அவமானங்களிலும் மேற்படுதலால் 'இளிவந்ததில்'

என்றும் சொல்லினர். இதனால் அறமும் முயற்சிசெய்து செய்வதல்லது

யாசித்துச் செய்தலாகாதென்பது சொல்லப்பட்டது.

(க - து.) அறஞ்செய்தற் பொருட்டும் யாசித்தல் கூடாது.

6. There is nothing more desgraceful to one's tongue

than to use it in begging water even for a thirsting cow.

எ. இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்

கரப்பா ரிரவன்மி னென்று.

பரி:—(இ - ள்.)

இரப்பானை யெல்லாம் யானிரவா தின்றேன், யாது சொல்லியெனின், நுமக்கிரக்கவேண்டுமாயிற் றமக்குள்ளது கரப்பாரை யிரவா தொழிமி னென்று சொல்லி, (எ - று).

† இரண்டாவது விகாரத்தாற்றொக்கது. இவ்வினிவந்த ‡ செயலான் ‖ ஊட்டிய வழியும் உடம்பு நில்லாதாகலின், ‖ இதுவேண்டாவென்பது தோன்ற 'இரப்பன்' என்றார். இதனான் மானந்தீரவருமிரவு விலக்கப்பட்

டது.

---

* முயன்று செய்வதல்லது - முயற்சிசெய்து பொருளைச் சம்பாதித்துச் செய்வதல்லாமல்

† கரப்பாரை என்னும் (ஐயென்னும்) இரண்டனுருபு செய்யுள்விகாரத்

தால் தொக்கு நின்றது.

‡ செயலான் - இடத்தற்றொழிலால்.

| "மான வருங்கல நீக்கி யிரவென்னு, மீன விளிவிலுல் வாழ்வேன் மன் - ஈனத்தால், ஊட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு, நீட்டித்து நிற்கு மெனின்" என்று நாலடியார் கூறுவதிங்குணர்தற்பாலதாம்.

‖ இது - இளிவந்த செயல்.



தெளி:—(இ - ள்.) இரப்பாரையெல்லாம் - யாசிப்பவர் யாவரையும், இரப்பன் - (யான்) யாசியா நின்றேன், (யாது சொல்லியெனின்), இரப்பின் - (உமக்கு) யாசிக்கவேண்டுமாயின், கரப்பார் - (தமக்கு உள்ளதை) ஒளிப்பவரை, இரவன்மினென்று-யாசியாதொழியுங்களென்று, (சொல்லி).

கரப்பாரை என்னும் இரண்டனுருபு விகாரத்தால் தொக்கு நின்றது. இவ்வவமானச் செயலால் ஊட்டிவளர்த்தவிடத்தும் உடம்புநில்லாதாகலால், இது வேண்டாமென்பது தோன்ற 'இரப்பன்' என்றார். இதனால் மானங்

கெடவரும் இரவு விலக்கப்பட்டது.

(க - து.) யாசிப்பவர் தமக்குள்ளதை யில்லையென்று கூறி

யொளிப்பவரிடத்துச் சென்று யாசித்தல் கூடாது என்பது.

7. I beg all beggars and say "if you need to beg, never beg of who unwillingly give".

அ.

இரவென்னு மேமாப்பி றோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

பரி:—(இ - ள்.) இவ்வறுமையென்னுங்கடலை * இதனாற் கடத்து

மென்றுகருதி ஒருவனேறிய இரவென்னுஞ் சேமமற்ற தோணி, † அதன் கணோடுங்காற் கரத்தலென்னும் ‡ வன்னிலத்தோடு தாக்குமாயிற் பிவந்துபோம், (எ - று).

முயற்சியாற் ¶ கடப்பதனை இரவாற் கடக்கலுற்றான் | அதன் கரை காணுமையின் 'எமாப்பிரேணி' என்றார். ‖ எமாப்பின்மை தோணிமேலேற்றப்பட்டது. +அது கடத்தற்கேற்ற தன்மையானும், நிலமறியாதுசெலுத்

---

* இதனால் - யாசித்தலென்னுங் காவலற்ற தோணியால்.
அதன்கண் - வறுமையென்னுங் கடலில். ‡ வன்னிலம்-கற்பாறை.
¶ கடப்பதனை - கடப்பதாகிய வறுமைக்கடலை.

| அதன் - வறுமைக்கடலினது.

‖ எமாப்பின்மை (பாதுகாப்பவரில்லாமை)யாலுண்டாகும் இரவென்னுந் தோணியை அவ்வெமாப்பின்மையோடொற்றுமைசெய்து 'எமாப்பிரேணி' என்று கூறினமையின், இது காரணம் காரியமாய உபசாரவழக்காம். எமாப்பின்மை - காரணம்; இரத்தல் - காரியம்.

+அது (இரவென்னுமேமாப்பிரேணி) கடத்தற்கேற்ற தன்மையாலும் (தரித்திரமென்னுங் கடலைக்கடந்து செல்லுவதற்குத் தகுதியுடைய தல்லாமையாலும்), நிலமறியாது (இடமறியாது) செலுத்தியவழி (போன விடத்து) உடைதலானும் (மாறுபட்டுப் போதலாலும்), அதன்கண் (இரவென்னுந் தோணியில்) ஏறற்கு வென்பதாம். [யாசித்தல் வறுமையை யொழித்தற்குரிய தல்லாமையாலும், தகுதியில்லாதவரிடத்துப் போனபோது அதனால் அவமானம் நேரிடுதலாலும், அது செய்யலாகாதென்பது இதன் திரண்டபொருளாம்].

தியவழி யுடைதலானும், அதன்கணேறற்க வென்பதாம். இஃ * தவயவ வுருவகம்.

தெளி:—(இ - ள்.) (இவ்வறுமை யென்னுங்கடலை இதனைக்கடப்போ மென்று நினைத்து ஒருவனேறிய) இரவென்னும் - யாசகமென்னும், எமாப் பில் - காவலற்ற, தோணி - மரக்கலம் (அதனிடத்து ஓடுங்கால்), காவென் னும் - ஒளித்தலென்னும், பார் - வன்னிலத்தோடு, தாக்க - தாக்குமாயின், பக்குவிடும் - பிளந்துபோம். (எ - று).

முயற்சியாற் கடப்பதனை யாசகத்தால் கடக்கலுற்றவன் அதன் கரை யைக் காணுமையால் 'எமாப்பிலோணி' என்றார். எமாப்பின்மையைத் தோணி யின்மேல் ஏற்றி 'எமாப்பிலோணி' என்று கூறப்பட்டது. அது கடத்தற்கு ஏற்றதல்லாமையாலும், நிலமறியாது செலுத்தியவிடத்து உடைதலாலும், அதனிடத்து ஏறலாகாதென்பதாம். இஃ தவயவ வுருவகவணி.

(க - து.) வறுமையை யிரத்தலாலொழிக்கப்

புகுந்தவன் ஈவாரில்லை யென்றவிடத்துச் செயலற்று வருந்துவான் என்பது.

8. The unsafe ship of begging will striketh on the rock of refusal.
split when it

கூ. இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
வுள்ளதூஉ மின்றிக் கெடும்.

பரி:—(இ - ள் ) உடையார் முன் இல்லார் சென்றிரந் து நிற்றலின் கொடுமையை நினைந்தால், எம்முள்ளங் கரைந் துருகாநிற்கும்; இனி அந் நிலையைக் கண்டுவைத்தவர் இல்லையென்றலின் கொடுமையை நினைந் தால், அவ்வுருகுமளவுதானு மின்றிப் பொன்றிவிடும், (எ - று).

† "இரவினை, யுள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ, கொள் ளுங்காற் கொள்வார் குறிப்பு" என்றார் பிறரும். இரவினுங்கரவு கொடிதெ

* அவயவியை (உறுப்பியை) நீக்கி அவயவங்களை

(உறுப்புகளை) மாத்திரம் உருவகஞ்செய்வது அவயவ வுருவகமாம். இங்கு வறுமையென்னும் அவயவியை நீக்கி, இரவு காவு என்னும் அவயவங்களைமாத்திரம் தோணி யென்றும் பாரென்றும்உருவகஞ் செய்தமையின், இக்குறள் அவயவ வுருவக வணியாம். (வறுமை யென்னும் முதலுக்கு இரவும் காவும் அவயவ மாம்). இரவென்னு மேமாப்பி ரேணி என்பதும், காவென்னும் பார் என் பதும் உருவகமாம்.

† காலடியார் இரவச்சம், 5. இதன்பொருள். (பொருளுடையார் முன் னர் அஃதில்லாதார் சென்று) இரந்து நிற்றலின் கொடுமையை நினைந் தால் எமதுள்ளங் கரைந்துருகாநிற்கும் ; எற்பவருடைய கருத்து எற்குங் காலத்து யாதாகுமோ என்பது. இரவினை யுள்ளுங்காலுள்ள முருகும்; கொள்வார்குறிப்பு, கொள்ளுங்கால்என்கொலோ என்றந் வயித்துக்கொள்க.





என்பதாம். * இதற்குப் பிறரெல்லாம் இரக்கின்றவருள்ள முருகுமென் றுரைத்தார்.

தெளி:—(இ - ள்.) இரவு - (பொருளுடையார்முன் அஃதில்லார்செ ன்று) யாசித்து நிற்றலின் கொடுமையை, உள்ள - நினைந்தால், உள்ளம் - (எமது) உள்ளமானது, உருகும் - கரைந்துருகாநிற்கும், காவு - (இனி அந் நிலையைக் கண்டிருந்தவர்) இல்லை யென்றலின் கொடுமையை, உள்ள - நினைந்தால், உள்ளதூஉம் - அவ்வுருகுமனவுதானும், இன்றி - இல்லாமல்,

கெடும் - அழிந்துபோம், (எ - று).

யாசித்தலிலும் இல்லையென்றுள்ளதை யொளித்தல் மிகக்கொடிதென் பதாம்.

(க - து.)

யாசிப்பாரது கொடுமையிலும் உள்ளதை யொளித் தில்லை யென்பாரது கொடுமை மிகத்தியது என்பது.

9. Even the thought of the lot of begging is enough to melt one's heart; but the thought of rebuff makes it die away.



கo. காப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர்.

பரி:—(இ - ள்.) காப்பார் இல்லையென்று சொல்லாடிய துணை யானே இரப்பார்க்கீத உயிர்போகாதின்றது; இனிச்சொல்லாடுகின்ற அவர்தமக்கு உயிர் பின்னுநிற்றலான் † அப்பொழுது ‡ எப்புரையுட் டுகீகொளித்து நிற்கும், (எ-று).

¶ உயிர்போகலாவது இனி யாமென்செய்தமென் றேங்கிச் செயலற்று நிற்றல்; ‖ "அந்நிலையே, மாயாதே மாற்றி விடின்" என்றார் பிறரும். கேட்டாரைக் கொல்லவற்றுயசொல் சொல்வாரைக் கோறல் சொல்லவேண் டா வாயினும், ⁝ அது காண்கின்றிலம் ; இஃதென்னே யென்பதாம்.

* இதற்கு (உள்ளமுருகும் என்பதற்கு) எனைய வுரைகாரர் யாசிக்கின்றவரது உள்ளம் உருகும் என்று பொருள் கூறினர். யாவரும்

† அப்பொழுது - இரப்பார்க்குக் காப்பார் பொருளில்லையென்னு மக் காலத்தில். ‡ எப்புரையுள் - எவ்வுட்டுளையில்.

¶ உயிர்போகலாவது - இரப்பவர்க்கு உயிர்போதலாவது.

‖ நாலடியார் இரவச்சம்,8. இதன்பொருள். (மானந்தீராத யாசகனெருவன் பொருளுடைய ஒருவனிடத்துச் சென்று எனக்குப்பொருள் ஈவாயென்று சொல்லியாசிக்க வுன்படுவானுளன்) மாற்றிவிடின் - (அப்பொருளுடையான் பொருளில்லையென்று சொல்லி) மறுத்துவிட்டால், அக்கிலேயே - அப்பொழுதே, மாயானே - (அவன்) உயிர்நீங்காம லிருப்பானே, (இரான்) என்பது.

: அது - சொல்வாரைக் கொல்லுதல்.



* வறுமையுற்றுழி மறையாது இரக்கப்படுவாராய கேளிர்கட்கும் அதனைச் சொல்லாட உயிர்போம்; ஆனபின்,

மறைக்கப்படுவாராய பிறர்க்குச்சொல்லா டியக்காற்
போகாதெங்கே யொளித்துநிற்கும் ; இரண்டானும்
போமேயன் றேவெனை இரவஞ்சிஞ னெருவன் கூற்றுக்கி
யுரைப்பாருமுளர். இவை மூன்று பாட்டானும் அவ்விரவின்
குற்றமும் காவின் குற்றமும் ஒருங்கு கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) சொல்லாட - (ஒளிப்பவர்
இல்லையென்று) சொல்லிய வளவாலே,
இரப்பவர்-இரப்பவர்க்கு, உயிர்போழும்-உயிர் போகா நின்றது,
காப்பவர்க்கு - (இனிச்சொல்லுகின்ற) அவ்வொளிப்பவர்க்கு,
(உயிர் பின்னும் இருத்தலால் அப்பொழுது),
யாங்கு-எப்புரையுள், ஒளிக்குங்கொல்- புகுந்தொளித்து
நிற்குமோ, (எ-று).

உயிர் போகலாவது (ஒளிப்பவரில்லையென்று சொல்லிய
வளவாலே இரப்பவர்) இனியாமென்ன செய்வோமென்று
ஏங்கிச் செயலற்று நிற்றல். (இல்லையென்பதைக்) கேட்டாரைக்
கொல்லவல்லதாகிய சொல் (அதனைச்) சொல்வாரைக்
கொல்லுதல் சொல்லவேண்டாவாயினும், அது காண்கின்றில
ர்; இஃது என்றே வென்பதாம். இவை மூன்றுபாட்டானும்
அவ்விர வின் குற்றமும் காவின் குற்றமும் சேர்த்துச்
சொல்லப்பட்டன.

(கி - து.) தமக்குள்ளதை யொளிப்பார்
இல்லையென்று கூறிய வளவாலே இரப்பார்க்கு உயிர்
போகா நின்றது; அவ்வாறாக, அவ்வொளிப்பார்க்கு

உயிர்போகா திருத்தல் வியப்பே என்பது.

10. Where doth the life of the refuser hide itself when

he says nay to the beggar? on hearing the sound of rebuff, the beggar's life ebbeth away.

கரு-வது அதிகாரம்.

கயமை;—Baseness.

பரி:—அஃதாவது மேல் அரசியலுள்ளும் அங்கவியலுள்ளுஞ் சிறப்பு வகையாற் கூறப்பட்ட குணங்களுள் ஏற்புடையன குறிப்பினால் யாவர்க்கு மெய்த வைத்தமையின், ‡ ஆண்டுக் குறிப்பாற் கூறியனவும்

---

* (வறுமையுற்றவிடத்து மறையாமல் யாசிக்கப்படுவாராகிய சுற்றத்தார்க்கும் அவ்வறுமையை) இரப்பவர் - யாசிப்பவர், சொல்லாட-சொல்ல, போஒமூயிர் - உயிர்போம், (ஆனபின்), கரப்பவர்க்கு - மறைக்கப்படுவாராய பிறர்க்கு, யாங்கொளிக்குங்கொல் - (சொல்லாடியக்கால் போகாது) எங்கே ஒளித்து நிற்கும், (சொல்லுதலிரண்டாலும் உயிர் போமேயன்றோ) என்று

இரத்தலுக்கஞ்சினா னொருவன் சொல்லாக்கி
உரைப்பாரு முண்டென்பது.

(இக்குறளுக்குப்பொருள்)

ஈண்டொழிபியலுள் வெளிப்படக் கூறியனவுமாய குணங்கள் யாவு

மிலாய கீழோரது தன்மை. அதனுல் * இஃ தெல்லாவற்றிற்கும் பின்

வைக்கப்பட்டது.

தெளி:— அஃதாவது முன்னே அரசியலுள்ளும் அங்கவியலுள்ளும்

சிறப்புவகையாற் சொல்லப்பட்ட குணங்களுஞ் எற்புடையவற்றைக் குறிப்

பிஞல் யாஞ்க்கும் பொருந்தலவத்தமையால், அங்குக் குறிப்பாற் சொல்லி

யனவும் இங்கு ஒழிபியலுள் வெளிப்படச் சொல்லியனவும் ஆகிய குணங்

கள் யாவுமிலாகிய கீழோரதுதன்மை. அதனுல் இஃது எல்லாவற்றிற்கும்

பின் வைக்கப்பட்டது.

க. † மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்.

பரி:—(இ - ள்.) வடிவா ன் முழுதும் மக்களை யொப்பர் கயவர்;
அவர் மக்களை யொத்தாற்போன்ற வொப்பு ¶ வேறிரண்டு சாதிக்கண்
யாங்கண்டதில்லை, (எ-று).

| முழுதுமொத்தல் ‖ தேற்றேகாரத்தாற்பெற்றும். :

அவரென்றது
அவர்மாட்டேதாய () வொப்புமையை, மக்கட்சாதிக்கும் கயச்சாதிக்கும் வடி
வொத்தலிற் †குணங்களது உண்மையின்மைகளா னல்லது வேற்றுமை யறி
யப் படாதென்பதாம். இதனாற் கயவாது குற்றமிகுதி
கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கயவர் - கீழோர், மக்களேபோல்வர் - (வடிவால் முழுதும்) மக்களை யொத்திருப்பர், அவரன்ன வொப்பாரி - அவர் மக்களை யொத்தாற் போன்ற வொப்பு, யாம் கண்டதில் - (வேறிரண்டு சாதிக்களிட த்து) யாம் கண்டதில்லை, (எ - று).

---

* இஃதெல்லாவற்றிற்கும் பின் - இக்கயமை
யொருட்பாவின் எல்லா

வதிகாரங்கட்கும் பின்னே.

† "மக்க ளாமே யாறறி வுயிரே" என்று தொல்காப்பியங் கூறுதலால்,

வடிவால்முழுதும் மக்கள் போல்பவராகிய கயவர்க்கு ஆறாவ தறிவின்றென் பது பெறப்படுவதாம். ஆறுவதறிவு-மனவுணர்வு; அஃதாவது தக்கதின்னது; தகாததின்னதென் றுணர்தல்.

¶ வேறிரண்டுசாதிக்கண் - மக்கட்சாதி கயச்சாதி யென்னுமிரண்டு சாதியு மொழிந்த வேறிரண்டு சாதியினிடத்து.

| முழுதுமொத்தல் - மக்களும் கயவரும் வடிவால் முழுதுமொத்திருத் தல். ‖ தேற்றம் - தணிவு. : அவரென்றது - கயவரென்று கூறியது.

() ஒப்புமையை - (வடிவால் முழுதும் மக்களே) ஒத்திருத்தலே.

‡ குணமுடையவர் மக்கள்; அஃதில்லாதவர் கயவரென்றறிய வேண்டு மென்பதாம்.



41

மக்களும் கயவரும் வடிவால் முழுதுமொத்தல் மக்களே என்னும் தேற்றேகாரத்தாற் பெற்றும். அவரென்றது அக்கயவரிடத்துளதாய வொப்பு மையை.

மக்கட்சாதிக்கும் கயச்சாதிக்கும் வடிவு ஒத்திருத்தலால் குணங்களினிருப்பாலும், இல்லாமையாலும் அல்லது அவ்விரு திறத்தார்க்கும் வேற்றுமை அறியப்படாதென்பதாம். இதனாற் கயவாது குற்றமிகுதிசொல் லப்பட்டது. ஒப்பாரி - ஒப்பு.

(க - து.) மக்களுங் கயவருமெ வடிவால் முழுதுமொத்துக் குணங்களா லொவ்வாதிருப்பர் என்பது.

1. The base resemble men perfectly in form; and we have never seen likeness so exact among other species.

2 நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.

பரி:—(இ - ள்.) தமக்கு நுதியாவன வறிவாரின் * அவை யறியாத கீழ் மக்கள் நன்மையுடையர், † அவர்போல ‡ அவை காரணமாகத் தந் நெஞ்சத்தின்கட் கவலையில ராகலான், (எ - று).

நன்மை யென்பது சாதியொருமை. உறுதிகளாவன: ¶

இம்மை மறுமை வீடெட்குரியவாய புகழறஞானங்கள். |
இவற்றையறிவார் ‖ இவை செய்யா நின்றே மிகச்
செயப் பெறுகின்றிலே மென்றும், செய்கின்ற வினைதம
க்கு இடையூறு வருங்கொ லென்றும், : இவற்றின் †
மறுதலையாய பழி பாவ மறியாமை யென்பனவற்றுள்
யாதுவினையுமோ வென்றும் இவ்வாற் றூற் கவலையெய்துவர்;
கயவர் அப்புகழ் முதலிய வொழித்துப் பழி முதலிய செய்யா.
நின்றும் யாதுங் கவலையுடையரல்லராகலான் 'திருவுடையர்'
எனக் குறிப்பா லிகழ்ந்தவாறு. இதனற் கயவர்
பழிமுதலியவற்றிற் கஞ்சாரென் பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.)

நன்று-(தமக்கு)உறுதியாவனவற்றை, அறிவானின்-
அறிவோரைக் காட்டிலும், கயவர் - (அவற்றை யறியாத) கீழ்மக்கள், திருவு

---

* அவை-தமக்கு உறுதியாவனவற்றை

† அவர்-நன்றறிவார்.

‡ அவை - தமக்குறுதியாவன.

¶ இம்மைக்குரியது புகழ் என்றும், மறுமைக்குரியது அறமென்றும், வீட்டிற் குரியது ஞானமென்றும் கொள்க.

| இவற்றை - புகழற ஞானங்களை.

‖ இவை - புகழறஞானங்கள்.

: இவற்றின் - புகழறஞானங்களின்.

+ புகழ்க்கு மறுதலையாயது பழி; அறத்திற்கு மறுதலையாயது பாவம்; ஞானத்திற்கு மறுதலையாயது அறியாமை (அஞ்ஞானம்) என்று கொள்க. மறுதலை - விரோதம்.



டையர் - நன்மையுடையவராவர், (அவர்போல அவைகாரணமாக), நெஞ்சத்து-(தமது) நெஞ்சினிடத்து, அவலமில்லர்-கவலையிலர், (ஆகலால்), (எ - று).

நன்றென்பது ஈறுதோன்றாத சாதியொருமைப் பெயர். உறுதிகளாவன: இம்மை மறுமை வீடுகளுக்கு உரியனவாகியபுகழ்புண்ணியஞானங்கள். இவற்றையறிவார் இவை செய்யாநின்றே மிகுதியாகச் செய்யப்பெறுகின்றிலே மென்றும், செய்கின்ற இவற்றிற்கு இடையூறுவருமோ வென்றும், இவற்றின் மறுதலையாகிய பழி பாவம் அறியாமை யென்பனவற்றுள் யாது வினையுமோ வென்றும் இவ்வழியால் கவலையையடைவர்; கயவர் அப்புகழ் முதலியவற்றை யொழித்துப் பழி முதலியவற்றைச் செய்யா நின்றும் சிறிதுங் கவலையுடைய ரல்லாகலால் 'திருவுடையர்' என அவரைக் குறிப்பா லிகழ்ந்தவாறும். இதனால் கயவர் பழிபாவ முதலியவற்றிற்கு அஞ்சாரென்பது சொல்லப்பட்டது.

(க - து.) கீழ்மக்கள் பழிமுதலியவற்றிற் கேதுவாய காரிய

ங்களை அஞ்சாது செய்தும் அதுபற்றிக் கவலையில்லாதுமிருப்பர்.

2. The base are happier than those who know what is good ; as they have no anxiety as to the good.

கூ. தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான்.

பரி:—(இ - ள்.) தேவருங் கயவரும் ஒரு தன்மையர்; அஃதியாதினெனின், தேவரைப்போன்று தம்மை நியமிப்பாரின்றிக் கயவருந்தாம் விரும்புவனவற்றைச் செய்தொழுகலான், (எ - று).

* உயர்வும் இழிவுமாகிய தங் காரணவேறுபாடு குறிப்பாற்றோன்ற நின்றமையின், இது † புகழ்வார்போன்று பழித்தவாருயிற்று. இதனால் கயவர் விலக்கற்பாடின்றி வேண்டிய செய்வரென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) தேவரனையர்கயவர்-தேவரும் கயவரும் ஒருதன் மையராவர், (அஃது எதனாலெனின்), அவரும் -

அக்கயவரும், (தேவரைப்

* விரும்புவனவற்றைச் செய்யாமை உயர்விற்குக் காரணமாமென்றும், (விலக்கப்படாதவில்லாமல்) விரும்புவனவற்றைச் செய்தல் இழிவிற்குக் காரணமா மென்றுங் கொள்க. 'உயர்ச்சியும் தாழ்ச்சியுமாகிய' என்றும் பாடமுண்டு.

† 'தேவ ரனையர் கயவர்' என்று புகழ்வார்போன்று 'மேவன செய்தொ ழுகலான்' என்னும் எதிரிலால் கயவரைப்பழித்தா ரென்க.

• இது புகழ்வது போலப் பழித்திறம் புணர்தலாம்; அஃதாவது ஒன்றனைப் புகழ்ந்தாற் போன்று பழிப்பதாம்.

## ஒழிபியல்—கஉ-வது கயமை.

**1143**

போன்று தம்மை நியமிப்பாரில்லாமல்), தாமேவன - தாம்விரும்புவன வற்றை, செய்தொழுகலான் - செய்து நடத்தலால், (எ - று).

உயர்வும் இழிவுமாகிய தமது காணை வேற பாடு குறிப்பால் தோன்ற நின்றமையால், இது கயவரைப் புகழ்வார் போன்று பழித்தபடியாயிற்று.

இதனுல் கயவர் விலக்கப்படுத லில்லாமல் வேண்டியவற்றைச் செய்வாரென் பது சொல்லப்பட்டது.

(க - து.) கீழ்மக்கள் விலக்கப்படுதலில்லாது தாம்விரும்பிய வற்றை விரும்பியவாறே செய்வர் என்பது

3. The base are likened to gods; for they act as they like.

ச. அகப்பட்டி யாளொரைக் காணி னவரின் மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.

பரி:—(இ - ள்.) கீழாயினுந் தன்னிற் சுருங்கிய * பட்டியா யொ

ழுதவாரைக் கண்டானுயின், அவ்வொழுக்கத்தின்கண் † அவரிற் றான் மே மீப்பட்டு ‡ அதனுற் றன்மிதுதிகாட்டி யிறுமாக்கும், (எ - று).

() அகப்பட்டி - அகமாகியபட்டி பட்டியே என்று

வேண்டியவாறே

யொழுகலின் 'பட்டி' என்றார்; § "நோதக்க செய்யுஞ் சிறுபட்டி" என்றார் பிறரும். இதனால் : அவர் மேம்படுமாறு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கீழ் - கீழாயினான், அகப்பட்டியாவாரை - (தன்னிற்) கூருங்கியபட்டியாய் நடப்பவரை, காணின் - கண்டானுயின், (அந்நடக்கையில்), அவரின் - அவரைக் காட்டிலும், மிகப்பட்டு - (தான்) மேம்பட்டு, செம்மாக்கும் - (அதனால் தன் மிகுதியைக் காட்டி) இறுமாப்படைவன், ()

அகப்பட்டி - அகமாகியபட்டி. (கீழாயினர்) பட்டிபோன்று வேண்டியபடியே நடத்தலால் (அவரை) 'பட்டி' என்றார். இதனால் அவர் மேம்படும் விதம் சொல்லப்பட்டது.

---

* பட்டியாய் - காவலில்லாதவராய்.

† அவரின் - அகப்பட்டியாயொழுகுவாரிலும்.

: அதனால் - அம்மேம்பாட்டினால்.

() அகப்பட்டி - அகமாகிய மனம்

சுருங்குதலுடையவராய்ப் பட்டி

(கள்வன்) போன்று தாம்விரும்பியவாறே யொழுகுகின்றவர்.

$ கவித்தொகை-குறிஞ்சிக்கலி, 15. இதன்பொருள். நோவத்தக்க தொழில்களைச் செய்யுஞ் சிறியனாகிய காவலில்லாதவன் என்பது.

: அவர் - கயவர்.

## 1146 திருக்குறள் - பொருட்பால்.

மறை - வெளிப்பட்டால் குற்றம் விளையுமென்று பிறரைமறைத்து ஒருவன் சொல்லியசொல் பிறர்-அவ்விரகசியங்களை மறைத்தற்குரியவர். 'உய்த்து' என்றார்; அவர்க்கு அது பெரும்பாரமாதலை நோக்கி. பறை ஒருவன் கையால் தன்னையறிவித்ததொன்றனை இடந்தோறுங் கொண்டுசென்று அறியாதவர் யாவரையும் அறிவிக்குமாதலால், இது தொழிலுவமமாம். இதனால் அவரது செறிவில்லாமை சொல்லப்பட்டது.

(க - து.) கீழ்மக்களிடத்து இரகசியம் வெளியாகாதிருக்க வில்லை என்பது.

6. The degenerate are like a drum that is beaten, for they reveal the secrets they have heard.

எ. * ஈர்ங்கை விதிரார் கயவர்
கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு.

பரி:—(இ - ள்.) கயவர்தங் † கதுப்பினை நெரிப்பதாக வளைந்த
கையினையுடைய ரல்லாதார்க்குத் தாழ்வீடு † பூசியகையைத் தெறித்
தல் வேண்டுமென்றிருந்தாலுந் தெறியார், (எ-று).

*

வளைந்தகை - முறுக்கியகை. ¶ மெலிவார்க்கு யாதுங்கொடார்; கலி
வார்க்கு எல்லாங்கொடுப்பரென்பதாம்.

தெளி:—(இ - ள்.) கயவர் - கீழ்மக்கள்,
கொடிறுடைக்கும் - (தமது)

கதுப்பினை நெரிப்பதாக, கூன் - வளைந்த, கையல்லாதவர்க்கு - கையினை
யுடைய ரல்லாதவர்க்கு, ஈர்ங்கை - (தாம் உண்ட) பூசியகையை, (தெறிக்க

வேண்டுமென்று இரந்தாலும்), விதிரார் - தெறியார், (எ - று)

வளைந்தகை-முறுக்கியகை. கீழ்மக்கள் மெலிவார்க்கு ஒன்றுங்கொடார்; தம்மை வருத்துவார்க்கு எல்லாங் கொடுப்பரென்பதாம்.

(க - து.) கீழ்மக்கள் தம்மை வருத்துவார்க்கன்றி மெலிவார் க்கு அவர் யாதுகூறினும் ஒன்றுங் கொடார் என்பது.

---

* "தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா, உளிநீரார் மாதோ

கயவர் - அளிநீரார்க், கென்னானுஞ் செய்யா ரெனைத்தானுஞ் செய்பவே' இன்னாங்கு செய்வார்ப் பெறின்" என்று நாலடியார் கூறுவதும், "பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில், உற்றா ருகந்தா ரெனவேண்டார் - மற் றோர், இரணங் கொடுத்தா லிடுவ ரிடாரே, சரணங் கொடுத்தாலுந் தான்' என்று நல்வழி கூறுவது மிங்குணர்தற்பாலன்வாம்.

‡ கதுப்பினை - கன்னத்தை. † பூசியகை - கழுவிய கை.

¶ மெலிவார்க்கு-உணவின்மையால் வருந்தி யாசிப்பவர்க்கு.

7. The degenerate would grudge even to shake off (a bit of rice) that sticks to their hands save to those who would break their jaws with clenched fists.

அ. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

பரி:—(இ - ள்.) மெலியார் சென்று தங்குறையைச் சொல்லிய
துணையானே இரங்கிப் பயன்படுவர் மேலாயினோர்; மற்றைக்கீழாயினோர்
கரும்புபோலவலியார் நையநெருக்கியவழிப் பயன்படுவர் , (எ-று).

பயன்படுதல் - உள்ளதுகொடுத்தல்.

கீழாயினோதிறிவுதோன்ற மேலா
யினரையும் உடன் கூறினர். இவை யிரண்டுபாட்டானும் * அவர் கொடுக்கு
மாறு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) சான்றோர் - மேலாயினோர், சொல்ல - (மெலிய
வர் சென்று தங்குறையைச்) சொல்லியவளவானே,

பயன்படுவர்-(இரங்கிப்)

பிரயோசனப்படுவர், கீழ் - மற்றைக்கீழாயினர், கரும்புபோல் - கரும்பை

(கையினெருக்குவது) போல, கொல்ல-(வலியவர்) கையெருக்கிய விடத்தில்

பயன்படும் - பிரயோசனப்படுவர், (எ - று).

பிரயோஜனப்படுதல் - உள்ளபொருளைக் கொடுத்தல். கீழாயினோரது

இழிவுதோன்றச் 'சொல்லப்பயன்படுவோர் சான்றோர்' என மேலாயினரையும்

(ஒன்றின முடித்தல் தன்னின முடித்தலென்னு முத்தியால்) உடன்

சொல்லினர். இவை இரண்டுபோட்டாலும் அவர் கொடுக்கும் விதம் சொல்

லப்பட்டது. வலியவர்—கொடுங்கோல்மன்னர், கள்வர் முதலாயினர்.

(க-து.) கீழ்மக்கள் வலியார் தம்மை என்றுக வருத்தியவிட

த்தே அவர்க்குத் தமக்குள்ள பொருளைக் கொடுப்பரென்பது.

8. The noble become fruitful (by

giving alms on hearing
the sufferings of the poor; but the base, like the sugar-cane,
only give when tortured.

கூ. உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற்
பிறர்மேல்
வடுக்காண வற்றுகுங் கீழ்.

பரி:—(இ - ள்.) பிறரீ செல்வத்தாற் பட்டுநீ தகிலு முடுத்தலையும்
பாலோ டடிசி லுண்டலையுங் கீழாயிஞன் காணுமாயின், † அவற்றைறப்
பொறுது ‡ அவர்மாட்டு வடுவில்லையாகவும் உண்டாகிக வல்லனும், ()

---

* அவர் - கயவர். † அவற்றை - உடுத்தலையும் உண்டலையும்.

‡ அவர்மாட்டு - பிறரிடத்து- "உண்டு
குணமிங் கொருவர்க் கெனி
னீங்கீழ், கொண்டு புகல்வதவர் குற்றமே" என்று
ரன்னெறி கூறுவதிங்

குணர்தற்பாலதாம்.



(க - து.) கீழ்மகன் தன்னிற் கீழாயினாரைக் கண்டவிடத்து அவரிடத்துத் தனது செய்கைகளை வியந்து கூறி, இறுமாப் படைவன் என்பது.

4. The base prides himself when he sees those whose acts are meaner than his own.

ரு. அச்சமே கீழ்கள தாசார மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

பரி:—(இ-ள்.) * கயவரதாய வாசாரங் கண்டதுண்டாயின், † அத்ற்குக் காரணம் அரசனான் ஏதம் வருமென்றஞ்சு மச்சமே; ‡ அஃதொழிந்தால், தம்மால் அவாவப்படும்பொருள் ¶ அதனாலுண்டாமாயிற் துண்டாம், (எ - று).

| சிறி

|| ஆசாரத்தின் காரணத்தை 'ஆசாரம்' என்றும், :

அவாவப்படுவதனை 'அவா' என்றும் கூறினர். ○
எச்சத்தின்கண் ணென்னுமேழாவது இறுதிக் கட் டொக்கது. §
பெரும்பான்மை அச்சம், சிறுபான்மை பொருட்பேறு,
இவ்விரண்டானு மன்றி இயல்பாக வண்டாகாதென்பதாம்.
வேண்டியசெய்
தலே இயல்பு, ஆசாரஞ் செய்தல்
டது.
இயல்பன்றென்பது இதனைக் கூறப்பட்

தெளி:—(இ - ன்.) கீழ்களதாசாரம் - கீழோரது ஆசாரத்தை, (கண்ட
துண்டாயின் அதற்குக் காரணம்). அச்சமே-(அரசனால் துன்பம் வருமென்
று அஞ்சும்) அச்சமே, எச்சம் - (அஃது) ஒழிந்தால், அவா - (தம்மால்)
அவாவப்படும் பொருள், உண்டேல் - (அதனால்) உண்டாமாயின், சிறி
துண்டாம் - (அது) சிறிதுண்டாகும். (எ - று).

---

* கயவரதாய - கயவர்களுடையதாகிய.

† அதற்கு - அவ்வாசாரத்திற்கு. ‡ அஃது -
அவ்வச்சம்.

¶ அதனால் - அவ்வாசாரத்தால்.

| சிறிதுண்டாம்-கீழ்மக்களிடத்து அவ்வாசாரம்
சிறிதுண்டாயிருக்கும்.

‖ கீழ்மக்களது ஆசாரத்தின் காரணமாகிய அச்சத்தை

'அச்சமே கீழ்கள தாசாரம்' என்றொற்றுமை செய்து
கூறினமையின், இது காரணம் காரிய மாய உபசார
வழக்காம்-அச்சம்-காரணம்; ஆசாரம் - காரியம்.

: அவா என்பது அவாவப் படுதற்கே
துவாயபொருளை யுணர்த்துத லால், காரியவாகு பெயராம்.
பொருள்—காரணம்; அவா - காரியம்.

o எச்சம் என்பதனிறுதியில் கண் என்னும் எழுனுருபு செய்யுள் விகா
ரத்தால் தொக்கு நின்றது; அதன் பொருள் ஒழிந்தால் என்பதாம்.

§ கீழ்மக்களிடத்து ஆசாரம் பெரும்பான்மை
அச்சங்காரணமாகவும்
சிறுபான்மை பொருட்பேறு காரணமாகவு மிருப்பதன்றி,
ப்பதில்லை யென்பதாம். பொருட்பேறு - மணி, பொன்,
இயல்பாக இரு
நெல் முதலிய
பொருள்களைப் பெறுவதாம்.

## ஒழிபியல்—கந-வது கயமை

**1145**

ஆசாரத்தின் காரணத்தை 'ஆசாரம்' என்றும்,
அவாவப்படும் பொருளை 'அவா' என்றும் சொல்லினர்.

எச்சத்தின்கண் என்னும் (கண் என்னும்)
எழுவருபு இறுதியில் தொக்கு நின்றது கீழ்மக்களுக்கு
ஆசாரம் பெரும் பான்மை அச்சம், சிறுபான்மை
பொருட்பேறு என்னுமிவ்விரண்டாலு மல்லாமல் இயல்பாக
உண்டாகா தென்பதாம். கீழ்மக்களுக்கு வேண்டிய வற்றைச்
செய்தலே யியல்பு, ஆசாரஞ் செய்த லியல்பன் றென்பது
இதனாற்சொல்லப்பட்டது. ஆசாரம் - ஒழுக்கம்.

(க - து.) கீழ்மக்களிடத்து ஆசாரம் அச்சம்
பொருட்பேறு என்னு மிவற்றுள் ஒன்றுலன்றி
இயல்பாக விருப்பதில்லை என்பது.

5. Fear is the only motive power in the degenerate ; if any other, hope of gain, to some extent.



5. அறையறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

பரி:—(இ - ள்) தாங்கேட்டமறைகளை இடந்தோறுந்
தாங்கிக்கோண்டு சென்று பிறர்க்குச் சொல்லுதலான்,
கயவர் அறையப்படும் * பறையினை யொப்பர், (எ - று).

மறை - வெளிப்படிற் குற்றம் விளையுமென்று பிறரை மறைத்து ஒருவன் சொல்லிய சொல். பிறர் - அம்மறைத்தற்குரியார். 'உய்த்து' என்றார்; † அவர்க்கது பெரும்பாரமாதலேக்கி. பறை ஒருவன் கையாற்றன்னை யறி வித்த தொன்றனை இடந்தோறுங் கொண்டுசென்று யாவரையு மறிவிக்கு மாகலான், ‡ இது தொழிலுவமம். இதனுல் ¶ அவரது செறிவின்மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) தாங்கேட்ட—, மறை-இரகசியங்களை, உய்த்து— (இடந்தோறும்) தாங்கிக்கொண்டுபோய், பிறர்க்கு—, உரைக்கலான் - சொல்லுதலால், கயவர் - கீழ்மக்கள், அறைபறையன்னர் - அறையப்படும் பறை யினை யொப்பாவர், (எ-று).

---

* பறை - பறையர் கொட்டும் வாத்தியங்களுள் ஒன்று.

† அவர்க்கு (கீழ்மக்களுக்கு) அது (தாங்கேட்ட இரகசியம்) பெரும் பாரமாதல் (பெரும்பளுவா யிருத்தலை) நோக்கி.

‡ பறை ஒருவன் கையால் தன்னை யறிவித்ததொரு விஷயத்தையிடந்தோறுங்கொண்டு சென்று யாவர்க்கும் அறிவித்தல்போன்று கீழ்மக்கள் தாங்கேட்ட இரகசியத்தை யுட்கொண்டு பலவிடங்களிற் சென்று பிறர்க்குச் சொல்லுதலால், இக்குறள் தொழிலுவமை யாயிற்றென்க. பறையறிவித்தல் உவமானம்; கீழ்மக்கள் சொல்லுதல்-உவமேயம்.

¶ அவரது செறிவின்மை - கயவரது அடக்கமில்லாமை.

* உடுப்பது உண்பதென்பன ஈண்டவ்வத் தொழின்மே னின்றன; † அவற்றுற் பூண்டல் ஊர்தன் ‡ முதலிய பிறதொழில்களுங் கொள்ளப் படும். ¶ அவற்றைக்கண்ட தூணையானே பொருமையெய்தலிற் 'காணின்' என்றும், கேட்டார் இது கூடுமென் றியையப்படைத்தல் அரிதாகலின் 'வற்றுகும்' என்றுங்கூறினர். இதனற் | கயவர் பிறர்செல்வம் பொருமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கீழ் - கீழாயினேன், (பிறர்செல்வத்தால்), உடுப்ப தூஉம் - (பட்டுந்துகிலும்) உடுத்தலையும், உண்பதூஉம் - (பாலுடன்சோறு) உண்ணுதலையும், காணின் - கண்பானுயின், (அவற்றப்பொருமல்), பிறர் மேல் - அவரிடத்து, (குற்றமில்லையாகவும்), வகேக்காண - குற்றமுண்டாக்க, வற்றுகும் - வல்லவனுவன், (எ - று).

உடுப்பது உண்பது என்பன இங்கு அவ்வத்தொழிலின்மேல் நின்றன; அவற்றுல் ஆபாணம் பூணுதல் வாகனமேறுதல் முதலிய பிறதொழில் களும் கொள்ளப்படும். கீழாயினேன் அவற்றைக் கண்டவளவாலே பொ ருமையடைதலால் 'காணின்' என்றும், கேட்டவர் இக்குற்றம் இவரிடத் திருக்கலாமென்று உடன்படச்செய்தல் அரிதாகலால் 'வற்றுகும்' என்றும், சொல்லினர். இதனல் கயவர் பிறர்செல்வம் பொருமை சொல்லப்பட்டது.

(க - து.) கீழ்மக்கள் பிறருடுப்பதையும் உண்பதையும் காண் பாராயின், பொருமையடைந்து, அவரைப்பழித்துக்கூறுவர்.

9. The vile man will bring an evil accusation against others when he sees them well clothed & fed.

## 80. எற்றிற் குரியர் கயவரோன் றுற்றக்கால் விற்றற் குரியர் விரைந்து.

* உடுப்பது உண்பது என்னும் வினைமுற்றுக்கள் இங்கு உடுத்தல் உண்டல் என அந்தந்தத் தொழிலின்மேல் நின்றன. "உலகந் தழீஇய தொட்பம்" என்னுங் குறளின் விசேடவுரையில் "தழீஇயது இல்லது என்பன அவ்வத்தொழின்மே னின்றன" என்று வரைந்திருப்பதும் இங்குணர்தற்பாலதாம்.

† அவற்றால் - உடுத்தல் உண்டல்களால்.

‡ முதலிய என்றமையின், கலவைபூசுதல், பூச்சூடுதல் முதலியவற்றையுங் கொள்க.

¶ அவற்றை - உடுத்தல் உண்டல் முதலியவற்றை.

| கயவர் பிறர்செல்வம் பொறுமை - கீழ்மக்கள் பிறர் செல்வமுடைய வாயிருத்தலைக்கண்டு பொறுமையடைதல்.

* உடுப்பது உண்பதென்பன ஈண்டவ்வத் தொழின்மே லின்றன; † அவற்றுற் பூண்டல் ஊர்தல் ‡ முதலிய பிறதொழில்களுங் கொள்ளப் படும். ¶ அவற்றைக்கண்ட தூணையானே பொருமையெய்தலிற் 'காணின்' என்றும், கேட்டார் இது கூடுமென் றியையப்படைத்தல் அரிதாகலின் 'வற்றுகும்' என்றுங்கூறினர். இதனைற் | கயவர் பிறர்செல்வம் பொருமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கீழ் - கீழாயினேன், (பிறர்செல்வத்தால்), உடுப்ப தூஉம் - (பட்டுந்துகிலும்) உடுத்தலையும், உண்பதூஉம் - (பாலுடன்சோறு) உண்ணுதலையும், காணின் - கண்பாலையின், (அவற்றப்பொருமல்), பிறர் மேல் - அவரிடத்து, (குற்றமில்லையாகவும்), வடுக்காண - குற்றமுண்டாக்க, வற்றுகும் - வல்லவனுவன், (எ - று).

உடுப்பது உண்பது என்பன இங்கு அவ்வத்தொழிலின்மேல் நின்றன;

அவற்றுல் ஆபரணம் பூணுதல் வாகனமேறுதல் முதலிய பிறதொழில் களும் கொள்ளப்படும். கீழாயினேன் அவற்றைக் கண்டவளவாலே பொ ருமையடைதலால் 'காணின்' என்றும், கேட்டவர் இக்குற்றம் இவரிடத் திருக்கலாமென்று உடன்படச்செய்தல் அரிதாகலால் 'வற்றுகும்' என்றும், சொல்லினர். இதனல் கயவர் பிறர்செல்வம் பொருமை சொல்லப்பட்டது.

(க - து.) கீழ்மக்கள் பிறருடுப்பதையும் உண்பதையும் காண் பாராயின், பொருமையடைந்து, அவரைப்பழித்துக்கூறுவர்.

9. The vile man will bring an evil accusation against others when he sees them well clothed & fed.

கo. எற்றிற் குரியர் கயவரோன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

* உடுப்பது உண்பது என்னும் வினைமுற்றுக்கள் இங்கு உடுத்தல் உண்டல் என அந்தந்தத் தொழில்மேல் நின்றன. "உலகந் தழீஇய தொட்பம்" என்னுங் குறளின் விசேடவுரையில் "தழீஇயது இல்லது என்பன அவ்வத்தொழின்மே னின்றன" என்று வரைந்திருப்பதும் இங் குணர்தற்பாலதாம்.

† அவற்றால் - உடுத்தல் உண்டல்களால்.

‡ முதலிய என்றமையின், கலவைபூசுதல், பூச்சூடுதல் முதலியவற்றையுங் கொள்க.

¶ அவற்றை - உடுத்தல் உண்டல் முதலியவற்றை.

| கயவர் பிறர்செல்வம் பொறுமை - கீழ்மக்கள் பிறர் செல்வமுடைய வாயிருத்தலைக்கண்டு பொறுமையடைதல்.

பரி:—(இ - ள்.) கயவர் தம்மை யா தானுமொரு துன்ப முற்றக் கால் அதுவே பற்றுக்கோடாக விரைந் து தம்மைப் பிறர்க்கீத விற்ற ற் தரியர்; அதுவன்றி வேறெத்தொழிற்குரியர், (எ-று).

உணவின்மையாகப் ‡ பிறிதாக ஒன்றுவந் துற்றதுணையானென்பது தோன்ற 'ஒன்றுற்றக்கால்' என்றும், கொள்கின்றார் தங் கயமையறிந்து வேண்டா வென்றற்குமுன்னே விற்று நிற்றலின் 'விரைந்து' கூறினர். ஒரு தொழிற்கு முரியரல்லரென்பது குறிப்பெச்சம். என்றுங் இதனற்

கயவர் தாம்பிறர்க்கடிமையாய் நிற்பரென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ -ள்.) கயவர் - கீழாயினர், ஒன்று-(தம்மையாதாகிலும்)

ஒரு துன்பம், உற்றக்கால் - அடைந்தவிடத்து, (அத்துன்பமேசார்பாக), விரைந்து—, விற்றற்குரியர் - (தம்மைப் பிறர்க்கு) விலைசெய்தற்கு உரியவ ராவர், எற்றிற்குரியர் (அதுவல்லாமல் வேறு) எத்தொழிற்கு உரியவ ராவர், (எ-று).

உணவில்லாமையாகவாவது வேறுகவாவது ஒருதுன்பம் வந்தடைந்த

அளவாலென்பது தோன்ற 'ஒன்றுற்றக்கால்' என்றும், கீழாயினர் தம்மைக்கொள்ளுகின்றவர் தமது கீழ்மையை அறிந்து வேண்டாமென்றற்கு முன்னே விற்று நிற்றலால் 'விரைந்து' என்றும் சொல்லினர். (கயவர்) ஒரு தொழிலுக்கும் உரியரல்லரென்பது குறிப்பெச்சமாம். இதனால் கயவர் தாம் பிறர்க்கு அடிமையாய் நிற்பரென்பது சொல்லப்பட்டது.

(க-து.) கீழ்மக்கள் தமக்கொரு துன்பம் சேர்ந்தவிடத்து, அதுவே சாக்காகத்தம்மைப் பிறர்க்கு விற்றற்குரியவராவரன்றி வேறெதற்கு முரியவராகார் என்பது.

10. The ignoble will quickly sell themselve as soon as a calamity befalleth them. For what else are they fitted ?

ஒழிபியல் முற்றிற்று.

பொருட்பால் முற்றிற்று.

பொருட்பாலின் அதிகாரத்தொகை 70;

அவற்றுள், அரசியல் 25, அங்கவியல் 32, ஒழிபியல் 13 ஆம்.

திருவள்ளுவமாலையில் பொருட்பால் ஏழுவகைப்படுமென்று கூறப்பட்டிருக்கின்றது. பரிமேலழகர் அவ்வேழும் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்னுமூன்றனுளடங்குமென்றுட்கொண்டு, பொருட்பால் அரசியல், அங்கவியல், ஒழிபியலென மூன்றுவகைப்படுமென்று, அதனைவகுத்துக்கொண்டாரென்பது இங்குணர்தற்பாலதாம். அவ்வேழாவன:(1)அரசியல், (2)அமைச்சியல், (3) அரண், (4) கூழ் (பொருள்), (5) படை, (6) நட்பு, (7) குடியென்பனவாம். போக்கியார் திருவள்ளுவமாலையில் "அரசிய லையைந் தமைச்சிய லீரைந், துருவல் லரணிரண்டொன் றொண்கூழ்—இருவிய, றிண் படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன், றெண்பொரு ளேழா மிவை". என்று கூறியிருப்பதிங்குணர்தற்பாலதாம்.

‡ பிறிதாக-உடுப்பது முதலியவற்றுள் ஒன்றில்லாமையாலாவது.

# 3. காமத்துப்பால்—ON LOVE.

## † 1—களவியல்—In Union.

பரி:—‡ இனி அப்பொருளைத் துணைக்காரணமாகவுடைத்தாய் இம்மையே பயப்பதாய வின்பங் கூறுவா னெடுத்துக்கொண்டார். ஈண்டின்பமென்றது ஒருகாலத்தொருபொருளான்ஐம்புலனுநுகர்தற்சிறப்புடைத்தாய காமவின்பத்தினை. இச்சிறப்புப்பற்றிவடநூலுட் ¶ போச

† ''களவு கொலை காமம் இணைவிழைச்சு என்பனவன்றே சமயத்தா

ரானும் உலகத்தாரானுங் கடியப்பட்டன? அவற்றுள் ஒன்றன்றுலோ இஃ

தெனின், அற்றன்று; களவெனுஞ் சொற்கேட்டுக்களவு தீதென்பதூஉங்

காமமெனுஞ் சொற்கேட்டுக் காமந்தீதென்பதூஉமன்று; மற்றவை நல்லவா மாறு முண்டு; என்னை? ஒரு பெண்டாட்டி தமியோடு கலாய்த்து நஞ்சுண்டு சாவலென்னும் உள்ளத்தாளாய் நஞ்சுகூட்டிவைத்து விலக்குவார் இல்லாத

போழ்து உண்பலென்று நின்றவிடத்து, அருளுடையான் ஒருவன் அது

னைக்கண்டு, இவள் இதனையுண்டுசாவாமைக்கொண்டுபோய் உகுப்பலென்று அவளைக்காணுமே கொண்டுபோய் உகுத்திட்டான்; அவளுஞ் சனநீக்கத்

துக்கண் நஞ்சுண்டு சாவான் சென்றுழ்; அதுகாணுளாய்ச் சாக்காடு நீங்கி

னள். அவன் அக்களவினன் அவளை உயக்கொண்டமையான் நல்லூழிச்

செல்லுமென்பது. மற்றும் இதுபோல்வன களவாகா, நன்மை பயக்கு

மென்பது.'' என்றும், ''சிறப்பினாற் பெயர்பெற்றது களவியலென்பது

என்னை? களவு கற்பு என்னும் கைகோள் (ஒழுக்கம்)

இரண்டனுள் ஈள
வினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன்;
என்னை? 'மூற்ப
டப்புணர் ரதசொல் லின்மையிற், சுற்பெனப் படுவது
களவின் வழித்தே'
என்று வேண்டுதலின். கற்புக் களவுபோல ஒருதலையான
அன்பிற்றன்று''
என்றும், இறையனாகப் பொருளின் முதற்சூத்திரவுரையிற் கூறப்பட்டிரு
த்தலிற்குக் கவனித்தற்பாலதாம்.

‡ இலக்கணவிளக்கநூலார் ''இன்பமாவது பொருள் துணைக்காரண
மாக ஒருகாலத்து ஒரு பொருளான் ஐம்புலன்களும் நுகர்தற்சிறப்புடைய
தாம்'' என்றனர்.

¶ போஜராஜனென்பவன் தாராநகரத்தை யாண்டவரசர்களுள் ஒரு
வன். இவ்வரசன் சிறுவயதிலேயே தந்தையையிழந்து, தனது சிறியதந்
தையாகியமுஞ்சன் செய்யவெண்ணிய கொலையினின்றுந் தப்பிச் சிம்மாசன
மேறி, காளிதாசன், வாருசி, பாணன் முதலிய பண்டித ரத்தினங்கள்
சூழுமாறிருந்து, புலவர்களுக்கு வரையாதுகொடுத்துப் பெரும்புகழ்பெற்று
வாழ்ந்து வந்தானென்பது கதை.

ராசனும் * சுவைபலவென் று கூறுவார் கூ றுக ; யாங்கூறுவ † தின்பச்சுவை யொன்றனையுமே' என இதனையே மிதத்துக் கூறி னன். இது ‡ புணர்ச்சி பிரிவென விருவகைப்படும். ஏனையிருத்தல், இரங்கல், ஊடலென்பனவோ வெனின், இவர் ¶ பொருட்பா தபாட்டினை அறம் பொரு ளின்பமென வடநூல்வழுத்தப் பற்றி யோதுதலான், அவ் வாறே நி யவற்றைப் பிரிவின்க ணடக்கிஞரென்க. இனி | அவை தம்மையே தமிழ் நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென் றும் பிரிவைக் கற்பென்றும் பேரும்பான்மைபற்றி வகுத்து' () அவற் றைச் சுவை மிதுதிபயப்ப உலகநடையோடு ஒப்பு மொவ்வாமையு முடையவாக்கிக் கூ றுகின்றார். o

அக்கைகோளிரண்டினுள்ளுங் களவா

வது பிணிழப்பிறப்புக்களின்றி எந்நான்று மொருதன்மையராய் உரு வுந் திருவும் பருவமுங் தலனுங் தனனு மன்பு முதலியவற்றற் றம்மு ளொ

---

* சுவை - சொற்சுவை, பொருட்சுவையெனவிருவகையாம். சொற் சுவை-குணம் அலங்காரம் என விருவகையாம்; பொருட்சுவை- காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தமென ஒன்பது வகையாம். பொருட்சுவை மெய்ப்பாட்டினடியாகப் பிறக்கும். மெய்ப்பாடாவது புறத்தக்கண்ட தோர் பொருள் காரணமாக நெஞ்சின்கட் டோன்றிய விகாரத்தின் விளவாம்.

† இன்பச்சுவையாவது புணர்ச்சிபற்றிய விருப்பம். இதனைச் சிங் காரசம் என்பர் வடநூலார். இன்பம்,

காமம், சிங்காரம் என்பன ஒரு பொருட்கிளவி.

‡ முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் மூன்றனுள் புணர்ச்சி முதலியன உரிப்பொருளாம் குறிஞ்சித்திணைக்குப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும், பாலைத்திணைக்குப் பிரிதலும் பிரிதல் நிமித்தமும், முல்லைத்திணைக்கு இருத்தலும் இருத்தல் நிமித்தமும், மருதத்திணைக்கு ஊடலும் ஊடல் நிமித்தமும், நெய்தற்றிணைக்கு இரங்கலும் இரங்கல் நிமித்தமும் உரிப்பொருளா மென்பதிங் கறிதற்பாலதாம்.

¶ பொருட்பாகுபாட்டினைத் தமிழ்நூலார் அகப்பொருள் புறப்பொருள் என இருவகைப்படுத்திக் கூறுவர். [அகத்தை (மனத்தை)ச் சார்ந்து வரும் பொருள் அகப்பொருளாம்; புறத்தைச்சார்ந்து வரும் பொருள் புறப்பொருளாம்.] "போக்கறு மரபிற் பொருளெனப் படுவது" என்னுஞ் சூத்திரத்தினுரையில் இலக்கண விளக்கநூலார் "உலகநடையானும் வேதநடையானும் அறமும் பொருளு மின்பமுமென மூன்று வகைப்படும். அங்ஙனம் விரித்துக்கூறப்படும் பொருளே தொகுத்துக் கூறுந் தமிழ்நடையான் அகப்பொருளும் புறப்பொருளுமென இரண்டு வகைத்தாய்" என்று கூறுவதிங் குணர்தற் பாலதாம்.

§ அவற்றை–இருத்தல், இரங்கல், ஊடலென்பனவற்றை.

| அவைதம்மையே-புணர்ச்சி, பிரிவுகளையே.

() அவற்றை-புணர்ச்சி பிரிவுகளை.

o களவு கற்பென்னும் கைகோள் (ஒழுக்கம்) இரண்டனுள்ளும்.

ப்புமையுடையராய தலைமகனுந் தலைமகளும் பிறர்கொடுப்பவு மடுப்பவுமன்றிப் பால்வகையாற் றமே யெதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது. அதனை யெழுதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி, முதற்கட் டகையணங் குறுத்தல் கூறுகின்றார்.

தெளி:—இனி அப்பொருளைத் துணைக்காரணமாக வுடையநாய் இம்மைப் பயனையே தருவதாகிய இன்பத்தைச்சொல்லும்படி யெடுத்துக்கொண்டார். இங்கு இன்பமென்றது ஒருகாலத்தில் ஒருபொருளால் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புலன்களையும் ஐம்பொறிகளாலும் அனுபவித்தற் சிறப்புடையதாகியகாமவின்பத்தினை இச்சிறப்புப்பற்றி வடநூலுள் போச ராசனும் 'சுவைபலவென்று சொல்லுவார் சொல்லுக: யாம் சொல்வது இன் பச்சுவை யொன்றனையுமே' என்று இதனையே மிகுதியாகக் கூறினன். இவ்வின்பச்சுவை புணர்ச்சி பிரிவு என விருவகைப்படும். மற்றை இருத்தல் இரங்கல் ஊடல் என்பனவோ வென்றால், இவர் பொருட்பாகுபாட்டினை அறம்பொருளின்பமென வடநூல் வழக்குப்பற்றிச் சொல்லுதலால், அவ் வாறே அவற்றைப்பிரிவினிடத் தடக்கினரென்றறிக. இனி அவற்றையே தமிழ்நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக்களவென்றும் பிரிவைக் கற் பென்றும் பெரும்பான்மைபற்றி வகுத்து, அவற்றைச் சுவைமிகுதி தோன்ற உலக நடையோடு ஒத்தலும் ஒவ்வாமையுமுடையனவாக்கிச் சொல்லுகின்றார். அக்கைகோளிரண்டினுள்ளும் களவாவது பிணி மூப்பு இறப்புக்களில் லாமல் எப்போதும் ஒருதன்மையராய் உருவும், திருவும், பருவமும், குலமும், குணமும், அன்பம் முதலியவற்றால் தம்முள் ஒப்புமை யுடையவராகிய

தலைமகனும் தலைமகளுக்கு பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இல்லாமல் ஊழ் வகையால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது. அதனை ஏழதிகாரத் தாற் சொல்லத்தொடங்கி, முதலில் தகையணங்குறுத்தல் சொல்லுகின்றார்.

ஐம்பொறி-ஐந்து இந்திரியங்கள்; ஊழ்வகையால் - விதிவசத்தால்.

## முதல் அதிகாரம்.

### தகையணங்குறுத்தல்—Pain at the sight of Beauty.

பரி:—அஃதாவது * பொழில்வினோயாட்டி விருப்பான் ஆய நீங்க அதன்கட் டமியனாயி நின்றோள் வேட்டவிருப்பான் இனையாரீ நீங்கத் தமியனுயிவந்து கண்ணுற்ற தலைமகள் அவள் வனப்புத் தன்னை வருத்தழுவித்தலைச் சொல்லுதல். இது கண்ணுற்றபொழுதே நிகழ்வதாகலின், முதற்கட் கூறப்பட்டது.

---

* "ஒன்றே வேறே" என்னுஞ் சூத்திரத்தினுலையில் இலக்கண விளக்கதூலார் "அதுவே, தானே யவனே" என்னும் இறையனாகப்பொருட் சூத்திரத்தினுரையை யனுசரித்து, "இக்களவொழுக்கங் கொடுப்போரும் அடுப்போரும் இன்றித் தாமே தனியிடத்து எதிர்ப்பட்டுப் புணருங் கந்தருவத்தோடு ஒக்குமென்றலின், இவரும் அவ்வாறு ஓரிடத்தும் வேறிடத்துங்

காண்புழித் தனித்துக் காண்பரென்பதூஉம் பெற்ரும்; பெறவே, இருவ

ரும் முட்டில் செல்வத்தராதலின் தலைவனுங் கறங்குங் கந்துகத்தேரேறிப்

போத்துங் கடுங்கண்யானையுந் தறுகட் பன்றியும் கருவரையும் இருநிலனும்

பெருவிசும்பும் அனையார் ஆளிமொய்ம்பின் அரிமான்றப்பினர், பற்பன் னூருயிரவர் கூர்வேலினாளர் தற்சூழவேட்டை விருப்பாற் செல்வானென் பது முடிந்தது. தலைவியும் உடன்பிறந்து உடன் வளர்ந்து நீர் உடனுடிச் சீர் உடன்பெருகி ஓல் உடனூட்டப் பால் உடனுண்டு பல் உடனெழுந்து சொல் உடன் கற்றுப் பழைமையும் பயிற்சியும் பண்பும் நண்பும் விழுப்ப மும் ஒழுக்கமும் மாட்சியும் உடையார் பற்பன் னூருயிரவர் கண்ணும் மன முங்கவரும்

ஒண்ணுதன் மகளிர் தற்சூழத் தாரணை நடுவண் தண்மதிபோலப் பொழில் விளையாட்டு விருப்பாற் செல்வானென்பது முடிந்தது. முடிய வே, தனித்துக் காண்டன் முடியாதெனின், முடியும்; என்னை? அவள் ஆயங்களும் பொழிலிடம் புகுதலும் விளையாட்டு விருப்பினல் ஒவ்வொரு

வரின் முன்னங் தழைவிழைந்தன கொடித்து மென்றும், கண்ணிதண்ணறு நாற்றத்தனசெய்து மென்றும், போதுமேதக்கன கொய்து மென்றும், மயிலொடு மாறுடது மென்றும், குயிலொடு மாறு கூறுதுமென்றும், அருவி யாடி ஆற்சுனைகுடைகுது மென்றும், வாசமலர்க் கொடியினூசலாடது மென்றும் பரந்து, அப்பாலுள்ளார் இப்பாலுள்ளார் கொல்லோ வென்றும்,

இப்பாலுள்ளார் அப்பாலுள்ளார் கொல்லோவென்றும்,இவ்வகை நினைத்துப் பிரிவசென்க. இவ்வகை தமியளாகப் பிரிவரோவெனின், எட்டியுஞ் சுட் டியுங்காட்டப்படுங்

குலத்துள்ளாளல்லாளாதலானும், பான்மை அவ்வகைத் தாதலானும், பிறவாறு நினையார் பிரிவசென்க. ஆயின், இவ்வகைப்பட்ட

ஆயத்திடை மேலுட் பிரிந்தறியாதாள் தமியளாய் நிற்குமோ வெனின், நிற்கும்; தான் பயின்ற இடமும் தன்னுயத்தோடு ஒக்குமாதலானென்க. யாங்ஙனம் நிற்குமோவெனின், சந்தனமுஞ் சண்பகமும் தேமாவும் தண்

பலாவும் ஆசினியும் அசோகமும் கோங்கமும் வேங்கையுங் குரவமும் விரிந்து, நாகமுங் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பரவைஞாழலும் பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கிணைடு

முகை திற ந்து, வண்டறைந்து தேனுர்த்து வரிக்குயிலினம் வரிபாடச் சிறுதென்றல் இடை விராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழில் துன்றி, அவண

தோர் மாணிக்கச் செய் குன்றின்மேல் விசும்பு துடைத்துப் பசும்பொன்

பூத்து வண்டுதுவைப்பத் தண்டேன் துளிப்பதோர் வெறியுறும் கறுமலர் வேங்கை கண்டாள்; கண்டுபெரியதோர்காதற்களிகூரத், தன்செம்மலர்ச்சீறடி

மேற் சிலம்பு சிடந்து சிலம்பு புடைப்ப அம்மலரணி கொம்பர் கடை கற்ப தென நடந்து சென்று, நறுவிய வேங்கை நாண்மலர் கொய்தாள்; கொய்த விடத்து மாகத விளிம்படுத்த மாணிக்கச் சுனைமருங்கின் ஒருமாதவிவல்லி மண்டபத்திற் போதுவேய்ந்த பூநாறுபொழில் நிழற்றக், கடிக்குருக்கத்திக் கொடிப்பிடித்துத் தகடுபடு பசும்பொற்சிகரங்களின் முகடுதொறும் ஞான்று வந்து இழியும் மணியருவிபொன்கொழித்து மணிவான்றி மாணிக்கத்தோடு



## 1154 திருக்குறள் - காமத்துப்பால்.

தெளி:—அஃதாவது பொழில்விளையாட்டு விருப்பால் மகளிர் கூட்டம் நீங்க அப்பொழிலிடத்துத் தனிமையளாய் நின்றவளை வேட்டை விருப்பால் இளையார்நீங்கத் தனிமையளுய்வந்து கண்ட தலைமகன் அவ ளழகு தனக்கு வருத்தமுண்டாக்குதலைச் சொல்லுதல். இது கண்டபொ ழுதே தோன்றுவதாகலால், முதலில் சொல்லப்பட்டது.

க. அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை

மாதர்கொன் மாலுமென் னெஞ்சு.

[தலைமகளுருவு முதலியன முன்கண்டறிவனவன்றிச் சிறந்தமையின்,

அவளே தலைமகளேயுற்றது].

பரி:—(இ - ள்.) இகிகனவிய நுழையையுடையாள் இப்பொழிற்

கணுறைவாளோர் தெய்வமகளோ, அன்றி யோருமயில்விசேடமோ,

அன்றியோருமானுடமாதரோ, இவையின்னளென்று துணியமாட்டாது

என்னெஞ்சு மயங்காநின்றது. (எ - று).

ஓ - அசை. ஆய்மயில் - படைத்தோன் விசேடமாக வாய்ந்து படைத்த மயில்; மயிற்சாதியுட்டொரிந்தெடுத்த மயிலென்றுமாம். * கனங்குழை - வயிரம் உந்தி அணிகிளர் அருவி ஆடகப்பாறைமேல் அதிர்குரான்மூசின் இரட்ட,வண்டுந்தேனும் யாழ்முரல,வரிக்குயிலும் கிளியும் பாடத்,தண்டாது தவிசுபடப்போர்த்ததோர் பளிக்குப்பாறை மணித்தலத்துமிசை ஆலவட்டம்

விரித்தாற்போலத் தன் கோலக்கலாபம் விரித்து இளஞாயிற்றின் எதிர்

கதிர் எறிப்ப ஓர் இளமயில் ஆடுவது கண்டு நின்றுளென்க. அப்பால் தலை

வனும் பற்பன்னூறுயிரவர் கூர்வேலிளைஞரொடு குளிர்மலைச் சாரல் வேட்டம்போய் விளையாடுகின்றுன் ஆண்டொழுந்தோர் கடமானின் பின்னே

டிக் காவலிளைஞரைக்கையகன்று, நெடுமான்றேரொடு

பாகனே நிலவு

மணற்கான்யாற்றில் நிற்கச்செய்து,

தொடுகழல் அடியதிரச் சுருளுறு

குஞ்சி பொன்னணிற் பிணித்துக்கட்டிக் கமழ்தாறுங்கண்ணிக்கண் வண்டு மணமயர, அஞ்சாந்தின் நறுகாற்றந் தண்பொழிலிடைப் பரந்தாற, வரி சிலை எதிர்கனை எந்தி வடிவுகொண்ட காமன்போலச் சென்று அவள் நின்ற இரும்பொழில்புகும். அஃது யாங்ஙனமோ வெனின், வடகடலிட்ட ஒருதகம் ஒருதூள தென்கடலிட்ட ஒருகழிசென்று கோத்தாற்போலவும், வெங்கதிர்க்கனலியுந் தண்கதிர்மதியமுந் தங்கநிவழுவித் தலைப்பெய்தாற் போலவும், புகுமென்க. அதனால் ஒருவர் ஒருவரைத்தலைப்பெய்து காண்ப தென்பது. 'அதுவே,தானே யவளே தமியர் காணக்,காமப் புணர்ச்சி யிருவயி னெய்த்தல்' என்றார் ஆசிரியர் இறையனாரு மெனக்கொள்க" என்று வரைந்

திருப்பது இங்குணர்தற்பாலதாம்.

* கனம் என்னும் அடையடுத்த குழை யென்னுந் தானியின் பெயர் அதற்குத் தானமாகிய பெண்ணையுணர்த்துதலால், அடையடுத்த தானியாகு பெயராம்; குழையென்பதனைப் புறத்துறுப்பாகக் கொண்டால்,அடையடுத்த சினையாகு பெயராம். கனங்குழையென்பது தொகைநோக்கத்தில் அன்

ஆகுபெயர். ‡ கணங்குழையென்று பாடமோதிப் பலவாய்த் திரண்ட குழையென்றுரைப்பாரு முளர். எழுதலாகா வுருவுந் தன் வருத்தமும்பற்றி 'அணங்குகொல்' என்றும், சாயலும் பொழில்வயி னிற்றலும் பற்றி 'ஆய் மயில்கொல்' என்றும், தன்னெஞ்சழுந் தென்றமையும் அவளெதிர்நோக்கிய வாறும் பற்றி 'மாதர்கொல்' என்றுங் கூறினான்.

தெளிவு:—(தலைமகளது உருவுமுதலியன முன்கண்டறிவனவல்லா மல் சிறந்திருத்தலால், அவளைத் தலைமகன் ஐயுற்றது.) (இ - ள்.) கணங்குழை - இக்கனமாகிய குழையையுடையவள், அணங்குகொல் - (இச் சோலையில் வசிப்பவளாகிய ஒரு) தெய்வப்பெண்ணே, (அல்லாமல்), ஆய் மயில்கொல் - ஒருமயில் விசேஷமோ, (அல்லாமல்), மாதர்கொல் - (ஒரு) மானுடமாதரோ, என்னெஞ்சு - என்மனம், மாலும் - (இவளை இன்ன வென்று துணியமாட்டாமல்) மயங்கா நின்றது, (எ - று).

ஓ - அசை. ஆய்மயில் - படைப்புக்கடவுள் (பிரமன்) விசேஷமாக ஆராய்ந்து படைத்த மயில்; மயிற்சாதிகளுள் ஆராய்ந்தெடுத்த மயிலெனினும் ஒக்கும். கணங்குழை - அடையடுத்த தானியாகு பெயர்; பண்புத்தொகைப்புறத் துப் பிறந்த அன்மொழித் தொகையுமாம். தலைமகன் தெய்வப்பெண்போல எழுதலாகாதவுருவும் தன் வருத்தமும்பற்றி 'அணங்குகொல்' என்றும், மயில் போல்சாயலும் பொழிலிடத்து நிற்றலும் பற்றி

'ஆய்மயில்கொல்' என்றும், தன்மனம் சென்றமையும் அவள் எதிர் நோக்கிய விதமும்பற்றி 'மாதர் கொல்' என்றும் சொல்லினன். சாயல்-ஈம்பொறியால் நிகரும் மென்மை.

(க-து.) தலைமகள் தனித்து நிற்றலைக் கண்ட தலைமகன் அவளை இன்னளென்று துணிந்தறியமாட்டாது மயங்கினன். ()

1. Is this jewelled female a celestial maiden, a choice peahen, or a human being? my mind is bewildered.

2. நோக்கினு ணோக்கெதிர் நோக்குத லுக்கணங்கு தானைக்கொண் டன்ன துடைத்து.

---

மொழித்தொகையாம்; பெயர்நோக்கத்தில் ஆகுபெயராம். பரிமேலழகர் பெயர்நோக்கம்பற்றி ஆகுபெயரென்றார். சிலப்பதிகாரம் புறஞ்சேரியிறுத்த காதையினுரையில் அடியார்க்கு நல்லார் "அருந்திறல் - இராமன்; அன் மொழித்தொகையாகுபெயர்" என்று கூறியிருப்பது மிங்குணர்தற்பலதாம். இதுபற்றி விரிவாயறிய விரும்புவோர் "முதலிற் கூறுஞ் சினையறி கிளவி யும்" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தின் சேனாவரையருரையிலும், "பொருண் முதலாறே" என்னும் இலக்கண விளக்கச் சூத்திரத்தினுரை யிலும் கண்டுகொள்க. இஃதறியாது பரிமேலழகரை வாளாபுறங்கூறுவாரு முண்டு.

‡ கணங்குழை யென்பதனைக் கணங்குழை யென்று பாடங்கூறி, * அதற்குப் பலவாய்த்திரண்டகுழை யென்று பொருள் கூறுவாருமுண்டு.

¶ அணங்கு - காமநெறியான் உயிர்கொள்ளும் தல் - நீண்டதல்.

தெய்வமகள்; தாக்கு



[மாணுடமாதராதல் தெளிந்த தலைமகன் அவணேக்கிழையை வருத்தங் கூறியது].

பரி:—(இ - ள்.) இப்பெற்றித்தாய வனப்பினையுடையாள் என்னேக்கிற் கேதிர்நோக்குதல் தானே தாக்கி வருத்துவதோரணங்கு தாக்குதற்குத் தானையையுங் கொண்டு வந்தாற்போலுந் தன்மையையுடைத்து, (எ - று).

மேலும் 'அணங்குகொ லாய்மயில்கொல்' என்றமையான், * இகாச் சுட்டு வருவிக்கப்பட்டது. 'எதிர்நோக்குதல்' என்றமையின், அது குறிப்பு நோக்காயிற்று. வனப்பால் வருந்துதன் மேலுங் குறிப்புநோக்கால் வருந்துதல் கூறியவாறு. † நோக்கினை யென்பதற்கு என்னை நோக்கப்பட்டாளென் றுரைப்பாருமுளர்.

தெளி:—[மாணுடமாதராதலைத் தெளிந்தறிந்த

தலைமகன் அவள் நோக் கினுலாகிய வருத்தத்தைச் சொல்லியது.] (இ-ள்.) நோக்கினுள் - இத்தன் மையதாய அழகினையுடையவள், நோக்கு-(என்) நோக்கிற்கு, எதிர்நோக்கு தல் - எதிரே நோக்குதல், தாக்கணங்கு - (தானை) தாக்கிவருத்துவ தொரு தெய்வப்பெண், தானைக்கொண்டன்னது - (தாக்குதற்குச்) சேனையையுங் கொண்டுவந்தாற் போலுந் தன்மையை, உடைத்து - உடையதாம், (எ - று).

மேற் செய்யுளிலும் 'அணங்குகொ லாய்மயில்கொல்' என்றமையால், இக ாச் சுட்டு வருவிக்கப்பட்டது. 'எதிர்நோக்குதல்' என்றமையால், அந்நோக்கு குறிப்பு நோக்காயிற்று. தலைமகன் அடிகால் வருந்துதல்மேலும் குறிப்பு நோக் கால் வருந்துதல் சொல்லியபடியாம்.

(க - து.) கால்நிலந் தோய்தல் கண்ணிமைத்தல் முதலியகுறி களால், இவள் மானுடப்பெண்ணென் றறிந்த தலைமகன் அவளது குறிப்புப் பார்வையால் வருந்தினன் என்பது.

2. This beauty returning my looks (by her glance) is like a celestial maiden leading an armed band to war against me.

ரு. பண்டறியேன் கூற்றென் பதனை
யினியறிந்தேன் தன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு.
[இது வுமது.]

பரி:—(இ - ள்.) கூற்றென்று நூலோர் சொல்வதனைப் பண்டுதே
ட்டறிவதல்லது கண்டறியேன்; இப்போழது கண்டறிந்தேன்; அது பெ
ண்டகையுடனே பெரியவாய் அமர்த்த கண்களை யுடைத்து, (எ - று).

---

* இகரச்சுட்டுச் சமீபத்திலுள்ளபொருளைக் குறித்தக்காட்டும்; அஃது இக்கோக்கிளை (இப்பெற்றித்தாய வனப்பினையுடையாள்) என்பதாம்.

† கோக்கிளை என்பதற்கு என்னால் கோக்க (பார்க்க)ப்பட்டாள் என் றுரைகூறுவாரு முண்டு.

களவியல்—க-வது தகையணங்குறுத்தல். 157

பெண்டகை: * நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னுங் குணங்கள் அவை அவ்வக்குறிகளா னறியப்பட்டன. அமர்த்தல் - அமர்செய்தல்; † பெ யரடியாய வினை. பெண்டகையால் இன்பம் பயத்தலு முண்டேனும் துன் பம் பயத்தன் மிகுதிபற்றிக் ‡ கூற்றுருக்கிக் கூறினான்.

தெளி:—(இதுவுமது.) (இ - ள்.) கூற்றென்பதனை - கூற்றுவனென் ன்று (நூலோர்) சொல்லுவதை, பண்டறியேன்-முன் (கேட்டறிவதல்லா மல் கண்டு) அறிந்திலேன், இனியறிந்தேன்-இப்பொழுது கண்டறிந்தேன், (அது), பெண்டகையால் - பெண்தகையுடனே, பேரமர்-பெரியவாயமர்த்த, கட்டு-கண்களையுடையது, (எ - று).

பெண்டகை: நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னுங் குணங்கள். அக்குணங்கள் அந்தந்தக் குறிகளால் அறியப்பட்டன. அமர்த்தல் - போர் செய்தல்; இஃது அமர் என்னும் பெயரடியாகப்பிறந்தவினைச்சொல். தலை மகன் பெண்தகையால் இன்பந்தருதலும் உண்டாயினும் மிகுதியாகத் துன்பந்தருதல் பற்றித் தலைமகள் கண்களைக்கூற்றுக்கி(யமனுக்கி)ச் சொல் லினாள்.

(க - ஙு.) வருத்தமிகுதிபற்றித் தலைமகன் தலைமகளது கண்களைக் கூற்றுக்கிக் கூறினன் என்பது.

3. I knew not death's form before; I see it now coming
in lovely maiden's guise with fascinating eyes.

சு. கண்டா ருயிருண் ணனுந் தோற்றத்தாற்
பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்.

---

* இறையனாரகப்பொரு ளிரண்டாஞ் சூத்திரத்தி
னுரையில் "தலை மகட்கு நாணம், மடம், அச்சம்,
பயிர்ப்பென்பன குணம். அவற்றுள், நாணென்பது பெண்டிர்க்கு இயல்பாக வுளதொருதன்மை ; மடமென்பது கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை ; அச்சமென்பது பெண்மையிற் ருன் காணப்படாததோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவது; பயிர்ப்பென்பது பயிலாத பொருட்கண் அருவருத்து கிற்கும் நிலைமை" என்று கூறப்பட்டிருத்தில் இங்குணர்த்தற்பாலதாம்.

† அமர்த்தல் என்பது அமர் என்னும் பெயரடியாகப் பிறந்த செயற்கை வினை. வினையடியாகப் பிறந்த வினைச்சொல் இயற்கைவினையென்றும், பெயர், இடை, உரி அடியாகப்பிறந்த வினைச்சொல் செயற்கைவினை யென்றுஞ் சொல்லப்படும்.

‡ 'பண்டறியேன் கூற்றென்பதனை' எனக் கண்களைக் கூற்றுக்கிக் கூறினன். கூற்று - யமன்.

[இ து வு ம து.]

பரி:—(இ - ள்.) பெண்டகையையுடைய விப்பேதைக்கு உளவாய கண்கள் தம்மைக்கண்டா ருயிருண்ணுந் தோற்றத்துடனேகூடி அமர்த்திருந்தன, (எ - று).

அமர்த்தல் - மாறுபடுதல். குணங்கட்கும் பேதைமைக்கு மேலாது கொடியவாயிருந்தன வென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) பெண்டகை - பெண்தகையையுடைய, பேதைக்கு - இப்பேதைக்கு, கண்-(உளவாய) கண்கள், கண்டார் - (தம்மைக்) கண்டவாது, உயிருண்ணுந் தோற்றத்தால் - உயிரையுண்ணுந்தோற்றத்துடனேகூடி, அமர்த்தன - அமர்த்திருந்தன, (எ - று).

அமர்த்தல் - (கண்கள்) மாறுபட்டிருத்தல். கண்கள் நாணமுதலியகுணங்களுக்கும் பேதைமைக்கும் பொருந்தாது கொடியனவாயிருந்தன வென்பதாம்.

(க - து.) தலைமகன் இவள் கண்கள் தம்மைக் கண்டாரைக் கொல்லுந் தோற்றத்துடனே கூடியிருக்கின்றன வென்று கூறினன என்பது.

4. These eyes that apparently drink the life of those who look at them are at strife with this feminine simplicity.



ரு. கூற்றமோ கண்ணே பிணையோ மடவர

ளேக்கமீம் மூன்று முடைத்து.

[இ து வு ம து.]

பரி:—(இ - ள்.) என்னை வருத்துதலுடைமையாற் கூற்றமோ, என் மேலோடுத லுடைமையாற் கண்ணே, இயல்பாக வேருவுத லுடைமை யாற் பிணையோ, அறிகின்றிலேன்; இம் † மடவால் கண்களி னேகீகம் ¶ இம்மூன்றன் றன்மையையு முடைத்தா யிராநின்றது, (எ - று).

இன்பமும் துன்பமும் ஒருங்கு செய்யாகின்ற தென்பதாம். தொழில் பற்றிவந்த ○ ஐயவிலேயுவமம்.

---

† மடவரல் - மடமைவாய்பெற்றவள்.
மடமை - யெளவுகப்பருவம்.

¶ இம்மூன்றன் றன்மையையும் - வருத்துதல், ஓடுதல், வெருவுதல் என்னு மிம்மூன்றன் தன்மையையும்.

○ உவமானத்தையும் உவமேயத்தையும் ஐயமுற்றுரைப்பது ஐயவிலே யுவமையாம். (ஐயம் - சந்தேகம்).

தெளி:—(இதுவுமது.) (இ - ள்.) கூற்றமோ - (என்னை வருத்துத லுடைமையால்) கூற்றமோ, கண்ணே - (என்மேலோடுதலுடைமையால்) கண்ணே, பிணையோ - (இயல்பாக அஞ்சுதலுடைமையால்) பெண்மானே, (அறிகின்றிலேன்), மடவரனேக்கம் - இம்மடவாரலது (கண்களின்) நோக் கம், இம்மூன்றும் - இம்மூன்றன் தன்மையையும், உடைத்து-உடைய தாயிருக்கின்றது, (எ - று).

நோக்கம் இன்பமும் துன்பமும் ஒருசேரச் செய்யாநின்றதென்பதாம். இது வருத்துதல் முதலிய தொழில்பற்றிவந்த இயனிலை யுவமையணி.

(க - து.) தலைமகன் இன்பமுந் துன்பமுஞ் செய்தல்பற்றித் தலைமகளது கண்களைக் கூற்றமோ, கண்ணே, பிணையோ வென் றையமுற்றுக் கூறினன் என்பது.

5. Is it death's dart, eye's bright beams or a hind's glance? I know not; these three are in the looks of this maiden.

கா.

கோடும்புருவங் கோடா மறைப்பி னெடுங்கணூர்
செய்யல மன்னிவள் கண்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) பிரியாநட்பாய கோடும்புருவங்க

டாந் † செப்ப

முடையவாயி விலக்கினவாயின், அவற்றைக் கடந்து இவள் கண்கள் எனக்கு நடுங்குதந்துயரைச் செய்யமாட்டா, (எ - று).

நட்டாரைக் ‡ கழறுவார்க்குத் தாஞ்

செம்மையுடையாதல் வேண்ட

லிற் 'கோடா' என்றும், செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்ற தனக்கும் இடை நின்று விலக்குங்காலுஞ் சிறிதிடைபெறின் ¶ அது வழியாக வந்து அளர் செய்யுமாகலின் 'மறைப்பின்' என்றுங் கூறினன். நடுங்களர் - நடுங் கற்கேதுவாய வளர். | தாமியல்பாகக் கோடுதலுடைமையான் ‖ அவற்றை ⁝ மிகுதிக்கண் மேற்சென்றிடிக்க மாட்டாவாயின வென்பதுபட நின்ற மையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

† செப்பம் - நடுவுநிலைமை யுடைமை; அஃதாவது மாறுபடாமை.

‡ கழறுதல்-இடித்துக்கூறல் ; அஃதாவது உறுதிச்சொல்லுரைத்தல்.

¶ அதுவழியாக - சிறிதிடைபெறுதல் வாயிலாக.

| தாம் - புருவங்களாகியதாம்.

‖ அவற்றை - கண்களை.

⁝ மிகுதிக்கண் மேற்சென்றிடித்தல் - தகாதசெய்கை யுண்டான விடத்து முற்பட்டுச்சென்று கண்டித்துப் புத்திசொல்லுதல். "நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண், மேற்சென் றிடித்தற் பொருட்டு" என்னுங் குறளிங்குணர்தற்பாலதாம்.

தெளி:—(இதுவுமது) (இ - ள்.) கொடும்புருவம்-(பிரியா கட்பாகிய) கொடும் புருவங்கள், கோடா-(தாம்) செப்பமுடையனவா யிருந்து, மறைப் பின்-விலக்கினவாயின், (அப்புருவங்களைக் கடந்து), இவள்கண் - இவளது கண்கள், நடுங்கஞர் - (எனக்கு) நடுங்கும் துன்பத்தை, செய்யல - செய்ய மாட்டா, (எ-று).

நட்பினரைக் கண்டித்துப் புத்திசொல்வார்க்குத் தாம் செம்மையுடை யவராதல் வேண்டுதலால் 'கோடா' என்றும், துன்பத்தைச் செய்கின்ற அக் கண்களுக்கும் துன்பத்தை யடைகின்ற தனக்கும் நடுவின்று விலக்கும்போ தும் சிறிதுசந்துகிடைக்கப்பெற்றுல்அதுவழியாகவந்து துன்பஞ்செய்யுமாக லால் 'மறைப்பின்' என்றும், தலைமகன் சொல்லினன். நடுங்கஞர்-நடுங்குதற் குக் காரணமா கிய அஞர்; இது நான்காம் வேற்றுமையுருபும் பொருளு முடன்தொக்க தொகையாம். தாம் இயல்பாகக்கோணுதலுடைமையால்அவற் றை மிகுதிக்கண் மேற்சென்றிடிக்க மாட்டாவாயின வென்பதுதோன்ற நின்றமையால், மன்னென்னுமிடைச்சொல் தொழியைசப்பொருளில் வந்தது.

கொடும்புருவம்-வளைந்தபுருவம்.

(க - து.) இவள் கண்கள் புருவங்களால் விலக்கப்பட்டால், எனக்குத் துன்பஞ் செய்யமாட்டாவென்று தலைமகன் கூறினன்.

6. Her eyes will cause no trembling sorrow if their glances are properly veiled by her cruel arched eyebrows.

எ. கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்.

[அவண் முலைகளிலைய வருத்தங் கூறியது].

பரி:—(இ - ள்.) இம்மாதர் படாமுலைகளின் மேலிட்ட துகில், * அவைகொல்லாமற் காத் தலின், கொல்வதாய மதக்களிற்றின்மே லிட் ட முகபடாத்தினை யொக்கும், (எ - று).

† கண்ணை மறைத்தல் பற்றிக் 'கட்படாம்' என்றான். துகிலான் மறைத்தல் நாணுடை மகளிர்க் கியல்பாகலின், அத்துகிலோடு அவற்றின் ‡ வெம்மையும் பெருமையுங் கண்டு இத்தனையாற்றலுடையன இனியெஞ் ஞான்றுஞ் சாய்விலவெனக் கருதிப் 'படாஅமுலை' என்றான். ¶ உவமை சிறிதுமறையாவழி உவை கொல்லுமென்பது தோன்றநின்றது.

---

* அவைகொல்லாமல் - அம்முலைகள் (என்னைக்) கொல்லாமல்.

† யானைமுகத்திடும் படாம் (ஆடை) பற்றி, கட்படாம் என்று கூறப்பட்டது.

அதனது கண்ணைமறைத்தல்

† வெம்மையும் - உக்கிரத்தையும்.

¶ உவமை - கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் என்னும் உவமானம்.

களவியல்—க-வது தகையணங்குறுத்தல்.

**1161**

தெளி:—(அவளது முலைகளினலாகிய வருத்தத்தைச் சொல்லியது.) (இ-ள்.) மாதர்-இம்மாதர், படாஅ முலைமேற்றுகில் - சாய்தலில்லாத முலை களின்மேலிட்ட ஆடையானது, (அவை கொல்லாமற் காத்தலால்), கடாஅக் களிற்றின்மேல் - (கொல்வதாகிய) மதயானையின்மேல், (இட்ட), கட் படாம்-முகபடாத்தினை, (ஒக்கும்), (எ - று).

கண்ணைமறைத்தல்பற்றிக் 'கட்படாம்' என்றுன். (தமது முலைகளை) ஆடையால் மறைத்தல் நாணமுடையமகளிர்க்கு இயல்பாகலால், தலைமகன் அவ்வாடையோடு அம்முலைகளின் வெம்மையையும் பெருமையுங்கண்டு இவ்வளவு வலிமையுடையன இனி எந்நாளுஞ் சாயாவென்று நினைத்துப் 'படாஅமுலை' என்றுன்.

உவமானம் ஆடையால் சிறிது மறையாதவிடத்து இம்மூலைகள் கொல்லுமென்பது தோன்ற நின்றது.

(க - து.) இவள் தனது ஸ்தனங்களை ஆடையால் மறைக்காத விடத்து, அவை என்னை நிச்சயமாகக் கொல்லுமென்று தலை மகன் கூறின்ன் என்பது.

7. The cloth which covers the unbending breast of this maiden is like the veil which covers the eyes of a raging elephant.

அ

* ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணுரு முட்குமென் பீடு.

(தலைவியை வருத்தங் கூறியது.)

பரி:—(இ-ள்.) போர்க்களத்து வந்து நேராத பகைவரும் நேர்ந்

தார் வாய்க்கேட் டஞ்சுதற் கேதுவாய என்வலி
இம்மாதா தோள்ளிய
நுதலொன்றந்தமே அழிந்துவிட்டது, (எ-று).

மாதரென்பது அதிகாரத்தான் வந்தது. 'ஞாட்பினுள்' என்றதனாற்
பகைவராதல் பெற்றும். † பீடென்ற பொதுமையான் மனவலியுங் காய
வலியுங் கொள்க. ‡ ஓ வென்னும் வியப்பின்கட் குறிப்பு ¶ அவ்வலிகளது

---

* "கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை குஞ்சாங்
கோளிழைக்கும்,
பாம்பைப்பிடித்துப் படங்கழித் தாங்கப்
பிணமூலைக்கே, தெம்பற் றுடியிடை
மான்மட நோக்கிதில் லெச்சிவன்ரு, ளாம்பொற் றடமலர்
சூடுமென் ஞற்ற
லகற்றியதே" என்று திருக்கோவையார்
கூறுவ திங்குணர்தற்பாலதாம்.

† இன்னபீடென்று சிறப்புவகையாற் கூறுதி,
பொதுவகையால்பீடு
என்றமையின், இருவகைப்பீடுங் கொள்ளவேண்டு மென்பதாம். அவை
மனவலி, காயவலி என்பனவாம்.

‡ ஓ என்பது வியப்புப் பொருளில்வந்த குறிப்பிடைச்சொல்.

¶ அவ்வலிகளது - மனவலி காயவலிகளது.





பெருமையும் தூதலது சிறுமையுந் தோன்ற நின்றது. * கழிந்ததற் கிரங் கல்லிற் † றற்புகழ்த லென்றுயிற்று.

தெளி:—(நெற்றியாலாகிய வருத்தத்தைச் சொல்லியது.) (இ - ள்.)

ஞாட்பினுள் - போர்க்களத்தில், நண்ணுரும் - (வந்து) எதிர்க்காதபடைவரும், உட்கும்-(எதிர்த்துநின்றவர் வாய்ச்சொற்கேட்டு) அஞ்சுதற்குக்காரணமாகிய, என்பீடு-என்வலி, ஒண்ணுதற்கோஓ - (இம்மாதருடைய) ஒளிபொருந்திய நெற்றி யொன்றற்குமே, உடைந்தது - அழிந்து விட்டது, (எ - று).

மாதரென்பது தகையணங் குறுத்த லென்னும் அதிகாரத்தால் வந்தது.

'ஞாட்பினுள்' என்றதனால் 'நண்ணுரும்' என்பது பகைவராதல் பெற்றும். பீடென்ற பொதுமையால் மனவலியும் காயவலியும் கொள்க. ஓ வென்னும் வியப்பினிடைச்சுக் குறிப்பு அவ்வலிகளின் பெருமையும் நெற்றியின் சிறுமையும் தோன்ற நின்றது. தலைமகன் கழிந்ததற்

கிரங்கலால் இது தற்புகழ்த லன்றுயிற்று.

(க - து.) தலைமகன் என்னுடைய சிறந்த வலிமை இவளது

நெற்றியொன்றற்குமே அழிந்துவிட்டதென்று கூறினன்.

8. Even my might which awed the most fearless foes in the battlefield is destroyed by the lustre of her beaming brow.

கூ. பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனே வேற்ல தந்து.

(அணிகலத்தானுய வருத்தங் கூறியது.)

பரி:—(இ-ள்.) புறத்து மான்பிணையோத்த மடநோக்கினையும் அகத்து நாணினையுமுடையளாய விவட்த ஒற்றுமையுடைய இவ்வணி களே யமைந்திருக்க வேற்றுமையுடைய வணிகளைப் படைத்தணிதல்

என்னபயனுடைத்து, (எ-று).

மடநோக்கு - வெருவுதலுடையநோக்கு. இவட்குப் பாரிமாதலும் எனக்

கணங்காதலுங் கருதாமையின், அணிந்தார் அறிவில ரென்பதாம்.

தெளி:—(அணிகலத்திலுலாகிய வருத்தத்தைச் சொல்லியது.)(இ-ள்.)

பிணையோர் - (புறத்தில்) பெண்மானையொத்த, மடநோக்கும் - மடநோக்

கினையும், நாணும் - (அகத்தில்) நாணினையும், உடையாட்கு - உடையவ

ளாய இவளுக்கு, (ஒற்றுடையுடைய நோக்கமும் நாணமும் ஆகிய இவ்வணி

களே பொருந்தியிருக்க), எதிலதந்து - வேற்றுமையுடைய அணி களைச்செய்து, அணி - அணிதல், எவன் - என்னபயனுடையது, (எ - று).

---

* கழிந்ததற் கிரங்கலின் - கழிந்தொழிந்த தனது வலியை யெண்ணி

அதற்கு வருந்துதலால்.

† தற்புகழ்தல் - ஒருவன் தன்னைத் தானே யுயர்த்திப் பேசுதல்.



ஓ - அசை. மடநோக்கு - அஞ்சுதலுடைய பார்வை. இவ்வேற்றுமை யுடைய அணிகள் இவளுக்குப் பாரமாதலேயும் எனக்கு வருத்தமாதலேயும் எண்ணுமையால், அவ்வணிகளை அணிந்தார் அறிவிலா ரென்பதாம்.

(க - து.) தலைமகன் இவளுக்கு நோக்குழ் நாணும் ஆபாணங்களா யிருக்க, இவற்றையறியாது, வேறு ஆபாணங்களை அணிந்தவர் அறிவிலாரா வரென்று கூறினன் என்பது

9. What added beauty can be lent by alien jewels to her who is clothed with modesty and tender looks of a hind.

க0. உண்டார்க ணல்ல தநேரூக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று.

(தலைமகள் குறிப்பறிதலுற்றான் சொல்லியது.)

பரி:—(இ-ள்.) அடப்படு * நறு தன்னையுண்டார்மாட்டு மகிழ்ச்சி- யைச் செய்வதல்லது காமம்போலக் கண்டார்மாட்டு மகிழ்ச்சியைச் செய்த லுடைத்தன்று, (எ-று).

† அநேரூ - வெளிப்படை. ‡ காமமென்றது ஈண்டு

அது நுகர்தற் கிடனுகியாரை. ¶ கண்டார்களென்னு மேழாவது இறுதிக்கட்டொக்கது.

மகிழ்செய்தற்கட் காமம் நறவினுஞ் சிறந்ததே யெனினும் இவள் குறிப்பா ராய்ந்தறியாமையின் : யானது பெற்றிலனெனக் குறிப்பெச்சம் வரு வித்துரைக்க; ‖ "அரிமயிர்த்திரண்முன்கை" என்னும் புறப்பாட்டிற் குறிப்புப்போலு.

தெளிவு—(தலைமகளது குறிப்பறியலுற்ற தலைமகன் சொல்லியது.) (இ - ள்.) அருநரு - காய்ச்சப்பட்டமதுவானது, உண்டார்களல்லது - (தன்னை) உண்டவரிடத்து மகிழ்ச்சியைச் செய்வதல்லாமல், காமம்போல் - காம

---

* நரு - கள். † அருநரு-காய்ச்சியகள்; அஃதாவது சாராயம். வெளிப்படை - வெளிப்படைச் சொல்

‡ காமம் என்னும் தானியின் பெயர் அது நுகர்தற்குத் தானமாகிய மகளிரை யுணர்த்துதலால், தானியாகு பெயராம். தானி - தானத்தை யுடையது ; தானம் - இடம்.

¶ கண்டார் என்பதன் இறுதியில் கண்ணென்னும் எழனுருபு தொக்கு நின்றது.

யானது - யான் அம்மகிழ்ச்சியை.

புறநானூறு. 11. இதன்பொருள். அழகிய மயிரையுடைய நிரண்டமுன்கை என்பது. 'அரிமயிர்த்திரண்முன்கை' என்னும் பாட்டின் விசேடவுரையில் 'பாடினி இழைபெற்றாள்; பாணன்பூப்பெற்றான்; யான் அது பெறுகின்றிலேன்' எனக் குறிப்பெச்சம்வருவித்துரைக்கப்பட்டிருக்கின்றது.



த்தைப்போல, கண்டார் - கண்டவரிடத்து, மகிழ்செய்தல் - மகிழ்ச்சியைச் செய்தல், இன்று - உடையதன்று, (எ - று.)

காமமென்றது இங்கு அக்காமத்தையனுபவித்தற்கு இடமாகிய மகளிரை. கண்டாரிடத்து என்னும் ஏழனுருபு இறுதியில் தொக்குநின்றது. மகிழ்ச்சியைச் செய்தலில் காமமானது மதுவினும் சிறந்ததே யெனினும் இவள் குறிப்பை ஆராய்ந்தறியாமையால் யான் அது பெற்றிலேனெனைக் குறிப்பெச்சம் வருவித்துரைத்துக்கொள்க.

(க - து.) தலைமகளது குறிப்பறிந்த தலைமகன் மகிழ்ச்சிசெய்வதில் கள்ளினுங் காமஞ் சிறந்த தென்றான் என்பது.

10. Unlike boiled honey which gives delight only when it is drunk, love hath great felicity for those that only look at.

## 2 – வது அதிகாரம்.

### * குறிப்பறிதல்—

## Recognition of the signs (of mutual love).

பரி:—அஃதாவது தலைமகன் தலைமகள் † குறிப்பினை யறிதலும், தோழி குறிப்பினை யறிதலும், அவடான் அவ்விருவர் குறிப்பினையு மறிதலுமாம். தகையணங்குற்ற தலைமகள் றலைமகளைக் கூடுங்கால் ‡ இது வேண்டுமாகலின், தகையணங் குறுத்தலின் பின் வைக் கப்பட்டது.

தெளி:—அஃதாவது தலைமகன் தலைமகளது குறிப்பினை யறிதலும், பாங்கியின் குறிப்பினை யறிதலும், அப்பாங்கி அவ்விருவர் குறிப்பினையும் அறிதலுமாம். தலைமகளது அழகைக்கண்டு வருந்திய தலைமகன் தலைமகளைக் கூடும்போது இது வேண்டுமாகலால், தகையணங்குறுத்தலின் பின் வைக் கப்பட்டது.

க. ¶ இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

(தலைமகன் றலைமகளுளப்பாட்டுக் குறிப்பினை அவணுக்கிது வறிந்தது.)

பரி:—(இ-ள்.) இவளுடைய வுண்க ணைகத்ததாய நோக்கு இது போழது என்மே லிரண்டு நோக்காயிற்று; அவற்றுள் ஒருநோக்கு என்க ணோய்செய்யு நோக்கு, ஏனையது அந்நோய்க்கு மருந்தாய நோக்கு, (எ-று).

* குறிப்பறிதல் - பிறர் கருதியதனை அவர் கூறுமலறிதலாம்.

† குறிப்பு - கருத்து. ‡ இது - குறிப்பறிதல்.

¶ "பிணியு மதற்கு மருந்தும் பிறழப் பிறழமின்னும், பணியும் புரை மருங் குற்பெருந்தோளி படைக்கண்களே" என்று திருக்கோவையார் கூறுகின்றது.

## களவியல்—உ-வது குறிப்பறிதல்.

## 1165

உண்கண் - * மையுண்டகண். நோய் செய்யுநோக்கு - அவண் மனத்திலுள்ள காமக்குறிப்பினை வெளிப்படுக்கின்றநோக்கு; மருந்தாயநோக்கு -† தன்கண்ணிகழ்கின்ற அற்புநோக்கு கோய்செய்யு நோக்கினைப் பொதுநோக்கென் பாருமுளர்; ‡ அது நோய்செய்யிற் ¶கைக்கிளையாவதல்லது +அகமாகாமை யறிக. () இவ்வருத்தந் தீரும் | வாயிலு முண்டாயிற் றென்பதாம்.

தெளி:—(தலைமகன் தலைமகளதுஉளப்பாட்டுக் குறிப்பினை அவள்நோக்கினால் அறிந்தது.) (இ - ள்.) இவளுண்கண் - இவளுடைய (மை) உண்ட கண்களில், உள்ளது - இருப்பதாகிய நோக்கம், இருநோக்கு - (இப்பொழுது என்மேல்) இரண்டு நோக்கமாயிற்று, (அவற்றுள்), ஒருநோக்கு - ஒரு நோக்கமானது, நோய்நோக்கு - (என்னிடத்து) நோய்செய்யும் நோக்கமாம், ஒன்று - மற்றொருநோக்கு, அந்நோய் மருந்து -

அந்நோய்க்கு மருந் தாய நோக்கமாம், (எ - று).

நோய்செய்யும்நோக்கு-அவளது மனத்தில்உண்டாகியகாமக்குறிப்பினை வெளிப்படுத்துகின்ற நோக்கு; மருந்தாயநோக்கு - தன்னிடத்து உண்டா கின்ற அன்பு நோக்கு. எனக்கு இவ்வருத்தம் தீரும்வழியும் உண்டாயிற் றென்பதாம். நோக்கு - பார்வை. உளப்பாட்டுக் குறிப்பு - மனத்தின்கணுண் டாகிய காமக் குறிப்பு.

(க - து.) தலைமகளது கருத்தினையறிந்த தலைமகன் இவளது நோக்கு எனது வருத்தத்தைத் தீர்ப்பதற்கு வாயிலாயிற் றென்று கூறினன் என்பது.

---

* மையுண்டகண் - மையிட்டகண்.

† தன்கண் - தலைமகனிடத்து. ‡ அது - அந்நோக்கு.

¶ கைக்கிளை - ஒருதலைக்காமம்; அஃது ஆண்பெண் என்னுமிருவருள் ஒருவரிடத்துண்டாய புணர்ச்சி பற்றிய விருப்பமாம். "கையென்பது சிறுமை; கிளையென்பது உறவு; ஆகலின் சிறுமையுற வொ ராது கைக்கிளை யென்று பெயராயிற்று" என்பர் சொக்கப்பநாவலர்.

"மெய்க்கிளை யாழோர்(கந்தருவர்)வேண்டும் புணர்ச்சிமுன், கைக்கிளை நிகழ்தல் கடனென மொழிப" என்பது விதியாதலால், களவொழுக்கத்திற்கு முன்னர்க்கைக்கிளை நிகழவேண்டுமென்க. கைக்கிளையில்

காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் என்பன நிகழும்; "காட்சி யையந் துணிவுகுறிப் பறி
வென, மாட்சி நான்கு வகைத்தே காகக்கிளை" என்பது விதியாதலாலென்க.

+ ஒருவனும் ஒருத்தியும் தம்முள் ஒத்த அன்பினராய்க் கூடுங் கூட்டத்தின்கண் பிறந்த இன்பம் அகமெனப்படுமென்க. 'அகமெனப் படுவது வகையொரு மூன்றனுள், இன்ப மென்னு மியல்பிற் றாகி, யகத்துங்க ழொழுக்க மாதல் வேண்டும்" என்பது இலக்கண விளக்கம்.

() இவ்வருத்தம் - (அவளழகா லுண்டாகிய) இக்காமத் துன்பம். | வா யில் - இருவகைநோக்கு.



1. The glances in the dyed eyes of this maiden have a double witchery; one causes pain and the other is the cure thereof.

உ. கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது.

[இ து வு ம தி .]

பரி:—(இ-ள்.) இவள்கண்கள் யான்காணுமல்

என்மே லுறைத்து கின்ற அருகிய நோக்கம் † மெய்யுறு புணர்ச்சியின் ஒந்த பாதியள வன்று, ‡ அதனினுமிதும், (எ-று).

தானேக்கியவழி நாணியிறைஞ்சியும் நோக்காவழி உற்று நோக்கியும் வருதலாற் 'களவுகொள்ளும்' என்றும், ¶அஃதளதாங் காலஞ் சிறிதாகலிற் 'சிறு நோக்கம்' என்றும், அஃது உளப்பாடில்வழி நிகழ்வதாகலின் இனிப் புணர்தல் ஒருதலை யென்பான் 'செம்பாகமன்று பெரிது'என்றுங்கூறினான். தெளி:—(இதுவுமது) (இ - ள்.) கண் - (இவளது) கண்கள், களவு கொள்ளுஞ் சிறு நோக்கம் - யான் காணுமவ் என்மேல் நோக்குகின்ற அருகியநோக்கம், காமத்தில் - மெய்யுறுபுணர்ச்சியில், செம்பாகமன்று - ஒத்த பாதியளவன்று, பெரிது - (அதனிலும்) மிகும், (எ - று).

தான் நோக்கியபோது நாணித் தலை வணிந்தும் நோக்காவிடத்து உற்று நோக்கியும் வருதலால் 'களவு கொள்ளும்' என்றும், அஃது உண்டாகுங் காலம் சிறிதாகலால் 'சிறுநோக்கம்' என்றும், அச்சிறுநோக்கம் உளப்பாடு

உள்ளவிடத்து உண்டாயதாகலால் இனி இவளைக் கூடுதல்நிச்சயமென்பான் 'செம்பாக மன்று பெரிது' என்றும் சொல்லினான். அருகிய நோக்கம் - சுருங்கிய பார்வை. உளப்பாடு - சம்மதம்

(க - து.) தலைமகன் இவளது அருகிய நோக்கம் எனக்கு

அளவுகடந்த மகிழ்ச்சியைச் செய்கின்றதென்று கூறினன் என்பது.

2 The furtive glance that gleams bright one instant from her eyes is more than half the pleasure of sexual embrace.

---

† மெய்யுறு புணர்ச்சி - மெய் (உடம்பு) தொட்டுப் புணரும் புணர்ச்சி உள்ளப் புணர்ச்சியென் றொன்றிருத்தலால், அதனினும் வேற்றுமைதோன்ற (புணர்ச்சி யென்று வாளா கூறாது மெய்யுறு என்னும் விசேடணந் தந்து) மெய்யுறு புணர்ச்சி என்று கூறப்பட்டது. "உள்ளப் புணர்ச்சியு மெய்யுறு புணர்ச்சியுங், கள்ளப் புணர்ச்சியுட் காதலர்க் குரிய" என்பது அகப்பொருள் விளக்கம்.

‡ அதனினும் - மெய்யுறு புணர்ச்சியிலும்.

¶ அஃது - கண் களவு கொள்ளுதல்.

## களவியல்—உ-வது குறிப்பறிதல். 1167

௩. நோக்கினா ணோக்கி யிறைஞ்சினா ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர்.

[நோக்கினானும் நாணினானு மறிந்தது.]

பரி:—(இ-ள்.) யானோக்காவளவிற் றானென்னை யன்போடு நோக் கினாள், நோக்கி * ஒன்றனை யுட்கொண்டு

நாணி இறைஞ்சினள், அக் குறிப்பு † இருவேமிடையுந் தோன்றிய அற்புப் பயிர்வளர ‡ அதன்க ணவள் வார்த்த நீராயிற்று, (எ - று).

அஃதென்னுஞ் சுட்டுப்பெயர் ¶ அச்செய்கைக் கேதுவாய குறிப்பின் மேனின்றது. † யாப்பிலு யதனை யாப்பென்றார். ()வகதேசவுருவகம்.

தெளி:—(தலைமகன் தலைமகளது குறிப்பை அவளதுநோக்கினாலும் நாணினாலும் அறிந்தது.) (இ - ள்.) நோக்கினாள்-(யான் நோக்காதவளவில் தான் என்னை அன்போ டு)பார்த்தாள், நோக்கி-பார்த்து, இறைஞ்சினள்-(என்றனை உட்கொண்டு நாணித்) தலை குனிந்தாள், அஃது-அக்குறிப்பு, யாப்பி னுள் - (இருவே மிடத்தும் தோன்றிய) அன்பாகிய பயிருள்,(அது வளரும் படி), அவள் அட்டியநீர் - அவள் வார்த்த நீராயிற்று, (எ - று).

யாப்பு - கட்டு. அஃதென்னுஞ் சுட்டுப்பெயர் அச்செய்கைக்குக் காரணமாகிய குறிப்பின்மேல் நின்றது. யாப்பினாலாகிய அன்பையாப்பென்றார். இஃது வகதேச வுருவகவணி.

(க - து.) இவளது குறிப்பு நோக்கு எம்மிருவரிடத்துந் தோன்றிய காமப்பயிரைவளர்ப்பதற்கு

நோயிற்றென்றுகூறினன்.

3. She looked at me and looking drooped her head, and that sign waters as it were the corn of our love.

ச. யானேக்குங் காலே நிலனேக்கு நோக்காக்காற்
றுனேக்கி மெல்ல நகும்.
[நாணினனும் மகிழ்ச்சியினனு மறிந்தது.]

---

* ஒன்றனை யென்றது புணர்ச்சியை.

† இருவேமிடையும் - எம்மிருவரிடத்தும்.

‡ அதன்கண் - அன்பாகிய பயிரில்.

¶ அச்செய்கைக்கு - நோக்கி யிறைஞ்சுதலாகிய அச்செய்கைக்கு.

+யாப்பினுலாகிய அன்பை யாப் பென்றமையின், இது கருவியாகு பெயராம். யாப்பு-ஒருவர்க்கு மற்றொருவரிடத்துண்டாய சம்பந்தம்.

() நோக்கித்தலுகுனிதலுக்குக் காரணமாகிய குறிப்பினை நீராக வருவகஞ்செய்தவர் அதற்கியைய, யாப்பினை (யாப்பினுலாகிய அன்பைப்) பயிராக வருவகஞ் செய்யாமையின், இஃது ஏகதேசவுருவகமாயிற்றென்க.

பரி:—(இ - ள்.) யான் றன்னை நோக்குங்காற் றனெதிர் நோக்காது இறைஞ்சி நிலத்தை நோக்காநிற்கும்; அஃதறிந்தியா னோக்காக்காற் றனென்னை நோக்கித் தன்னுள்ளே மகிழாநிற்கும், (எ - று).

மெல்ல—வெளிப்படாமல். மகிழ்ச்சியாற் புணர்தற்குறிப்பினிதுவிளங்கும். மெல்ல நகு மென்பதற்கு †முறுவலிக்குமென் றுரைப்பாருமுளர்.

தெளி:—(தலைமகன் தலைமகளது குறிப்பை அவளதுநாணினாலும்மகிழ்ச்சியினாலும் அறிந்தது.)(இ-ள்.) யானோக்குங்காலை-(தன்னை)யான் நோக்கும்போது, நிலனோக்கும் - (தான் எதிர்நோக்காமல் நாணித் தலைகுனிந்து)நிலத்தை நோக்கி நிற்கின்றாள், நோக்காக்கால் - (அதனையறிந்து யான்)நோக்காதபோது, தானோக்கி - தான் (என்னை) நோக்கி, மெல்லநகும் - (தன்னுள்ளே) வெளிப்படாது மகிழா நிற்பள், (எ-று).

மெல்ல நகுதல் - வெளிப்படாமல் மகிழ்தல்.

அம்மகிழ்ச்சியால்

(தலைமகளது) புணர்தற் குறிப்பு இனிது விளங்கும்.

(க - து.) இவள் யான் பார்க்கும்போது நிலத்தைப்பார்க்கின்றாள்;பாராதபோது என்னைப்பார்த்து மெல்ல மகிழ்கின்றாளென்று கூறினான் தலைமகன் என்பது.

4. When I look at her, she looks down; when I look away she looks on me with timid smile.

நு. குறிக்கொண்டு நோக்காமையல்லா
லொருகண்
சிறக்கணித்தாள் போலு நகும்.

[இ து வ ம தி]

பரி:—(இ - ள்.) நேரே குறிக்கொண்டு நோக்காத் துணையல்லது ஒரு கண்ணைச் சிறுங்கணித்தாள்போல என்னை நோக்கிப் பின் றன் னுள்ளே மகிழா நிற்கும், (எ - று).

சிறக்கணித்தா ளென்பது செய்யுள்விகாரம்.

சிறுங்கணித்தல் - சுருங்கு தல். ‡ அதுதானும் வெளிப்படை நிகழாமையிற் 'போல' என்றான். கோக்கி யென்பது சொல்லெச்சம். இனி இவளை யெய்துதல் ஒருதலை யென்பது குறிப்பெச்சம்.

தெளி:—[இதுவுமது..] (இ - ன்.) குறிக்கொண்டு - (மேரே) குறிக்

கொண்டு நோக்காமையல்லால் - நோக்காத அளவல்லது, ஒருகண் - ஒரு கண்ணை, சிறக்கணித்தாள்போல - சுருங்கினவள்போல, நகும் - (என்னை நோக்கிப் பின் தன்னுள்ளே) மகிழாநின்றான், (எ - று).

† முறுவலிக்கும்-புன்னகைசெய்வாள்.

‡ அதுதானும் - கண் சுருக்குதலும்.

களவியல்—உ-வது குறிப்பறிதல்.

**1169**

சிறங்கணித்தாளென்பது செய்யுள் விகாரத்திலுல் சிறக்கணித்தாளென் றுயிற்று; இதுவலித்தல் விகாரமாம். சிறங்கணித்தல் - சுருங்குதல்.. அது

வும் வெளிப்படத் தோன்றுமையால் 'போல' என்றுன். நோக்கி என்பது சொல்லெச்சம். இனி இவளை அடைவது நிச்சயமென்பது குறிப்பெச்சம்.

(க - து.) இவள் நேரே யென்னை நோக்காது கீழ் நோக்கால் நோக்கிப் பின் தன்னுள்ளே மகிழ்கின்றாளென்று கூறினன்.

5. She seems not to see me direct, but looks with a side-long glance and smiles.

சூ. உறுஅ தவர்போற் சொலினுஞ் செறுஅர்சொ
லொல்லை யுணரப் படும்.

[* தோழி சேட்படுத்தவழி அவள் குறிப்பறிந்த தலைமகன்

தன்னுள்ளே சொல்லியது.]

பரி:—(இ - ள்.) புறத்து நொதுமலர்போலக் கடுஞ்சொற் சொன் னாயினும், அகத்துச் செறுதலிலாதார்சொற் பிற்பயத்தல் துறையும் றாற் கடிதினறியப்படும், (எ - று).

கடுஞ்சொலென்பது இவ்விடங் காவன் மிகுதியுடைத்து; † வாற்பாலிர

ல்லீரென்றன் ‡ முதலாயின. 'செறு அர்' எனவே, அருளுடைமை பெறப் பட்டது. தன்குறை முடிக்கக் கருதியே சேட்படுக்கின்றமை குறிப்பானறி

---

* தோழிசேட்படுத்தலென்பது பாங்கியிற் கூட்டம் பன்னிரண்டனுள்

ஒன்று. திருக்கோவையாருரையில் "சேட்படை யென்பது தலைமகளைக் குறைநயப்பித்துத் தன்னிறைய கூட்டங் கூட்டலுறுந்தோழி தலைமகளது பெருமையும் தனது முயற்சியகருமையும் தோன்றுதல் காரணமாக வும், இத்துணையருமையுடையாள் இனி நமக்கெய்துதற் கருமையுடைய னென இதனையே புனர்ச்சியாக நீட்டியாது விரையவரைந்துகோடல் (கலி யாணஞ் செய்துகொள்ளுதல்) காணமாகவும், தலைமகனுக்கியையமறுத்துக் கூறுகிற்றல்" என்று கூறப்பட்டிருக்கிறது.

†"விரைகமழ் சாரல் விளைபுனங் காப்பார், வரையிடை வானீ யைய— வுரைகடியர், வில்லினர் வேலர் விரைசெலு மம்பினர், கல்லிடை வாழ்ந ரெமர்" என்று தினைமொழிகூறுவ திங்குணர்தற்பாலதாம்.

‡ முதலாயின என்றமையின், பாங்கிதலமுறைகளத்தல் முதலாயின வெல்லாங் கொள்க. (பாங்கியிற் கூட்டத்தில் தலைமகன் சொல்லுவன வெல்லாம் இரந்து பின்னிற்றற்கும் பாங்கிசொல்லுவனவெல்லாம் சேட் படுத்தற்கும் உரியனவாமென்றுணர்க.)





ந்து, * உலகியன்மே லிட்டுக் கூறியவாறு. இது வருகின்ற பாட்டிற்கு மொக்கும்.

தெளி:—(பாங்கிசேட்படுத்தியவிடத்து அவளது குறிப்பை அறி ந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.) (இ - ள்.) உரு அதவர்போல்- (புறத்து) அயலார்போல, சொலினும் - (கடுஞ்சொல்) சொன்னாலும், செரு அர்சொல் - (அகத்து) பகையாதவர்சொல், (பின் பயனேத்தருதல்), ஒல்லையுணரப்படும்-(குறையுற்றவரால்) கடிதில் அறியப்படும், (எ-று).

கடுஞ்சொலென்பது இவ்விடம் காவல்மிகுதியை யுடையது; வாராதே ரென்று சொல்லுதல் முதலாயின. 'செறுஅர்' எனவே, (தோழியிற்) அருளுடைமை பெறப்பட்டது. தலைமகன் பாங்கி தன்குறையை முடிக்கவினைத் தே சேட்படுத்தலைக் குறிப்பால் அறிந்து,உலகியலின்மேல்வைத்துச் சொல்லியபடியாம். இது வருகின்றபாட்டிற்கும் ஒக்கும். புறம்-வெளி; அகம்-உள்.

பாங்கிசேட் படுத்தலாவது தலைமகளது தோழி தலைமகனுக் கியைய மறுத்துக் கூறுதலாம்.

(க - து.) பாங்கிசேட்படுத்திய விடத்து அவள் குறிப்பினை யறிந்த தலைமகன் அன்புடையார் கடுஞ்சொல்கூறினும் அச்சொல் நன்மையை யுண்டாக்குமென்று கூறினன் என்பது.

6. Though they may speak harshly as if they were strangers, the words of the friendly are soon known.

எ. செறுஅச் † சிறுசொல்லுஞ் செற்றார்போ லேக்கு.

முறுஅர்போன் றற்றார் குறிப்பு.

[இ து வு ம து].

பரி:—(இ - ள்.) பின்னினிதாய் முன்னின்னுதாய சொல்லும் அகந்

துச் செறுதிருந்தே புறத்துச் செற்றார்போன்ற வெதிளிநோக்கும் நோதுமலர் போன்று நட்பாயினர்க்கு ஒரு குறிப்புப்பற்றி வருவன. ()

குறிப்பு:—‡ ஆகுபெயர். ¶ இவைஉள்ளே யொருபயன் குறித்துச் செய்கின்றனை; இயல்பல்லவாகலான், இவற்றிற் கஞ்சவேண்டா வென்பதாம்.

---

* தலைமகன் 'உரு அ தவர்போற் சொலினுஞ் செரு அர்செ, லொல்லை யுணரப் படும்'
என்றுலகியல்மேல்வைத்துக் கூறியவாறும்.

† சிறுசொல் - கடுஞ்சொல்.

‡ குறிப்புப்பற்றி வருவனவற்றைக் குறிப்பு என்றமையின், இது கரு 'வியாகுபெயராம். குறிப்பு - காரணம்; வருவன - காரியம்.

¶ இவை - செரு அச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்.

தெளி:—(இதுவுமது.) (இ - ள்.) செரு அச் சிறுசொல்லும் - பின் இனி தாவதாய் முன்னே இன்னாததாகியசொல்லும், செற்றார்போலேக்கும்- (அகத்துப் பகையாதிருந்தே புறத்து) பகைத்தவர்போன்ற கோபப்பார்வை யும், உரு அர்போன்றுற்றார்-அயலார்போலிருந்து நட்பாயினவர்க்கு, குறிப்பு- ஒருகுறிப்புப் பற்றி வருவனவாம், (எ - று).

குறிப்பு - கருவியாகுபெயர். இவை உள்ளே ஒருபயன் குறித்துச் செய்கின்றன; இயல்பல்லவாகலால், இவற்றிற்கு அஞ்சவேண்டா மென் பதாம். இன்னாதது-துன்பஞ்செய்வது.

(க - து.) அன்புடையாரிடத்து ஒரு குறிப்புப்பற்றிக் கடுஞ் சொல்லும் வெகுளிநோக்கு முண்டாமென்று கூறினன் என்பது.

7. Slighting words that are harsh and looks that are hateful are but the feigned expressions of lovers who wish to act like strangers.



அ. அசையியற் குண்டாண்டோ ரேளர்யா
னேக்கப்
பசையினள் பையநகும்.

[தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைக் கண்டு தலைமகன் கூறியது.]

பரி:—(இ - ள்.) என்னையகற்றுகின்ற சொற்காற்று தியானிரந்து நோகியவழி * அஃதறிந்து நெகிழ்ந்து உள்ளே மெல்ல நகாநின்றுள், அதனுல் நுடங்கிய வியல்பினையுடையாட்டி அந்நகையின்கண்ணே தோன்றுகின்ற தோர் நன்மைக் குறிப்புண்டு, (எ - று).

வர் - † ஆகுபெயர். ‡ அக்குறிப்பு இனிப்பழுதாகா தென்பதாம்.

தெளி:—(தன்னைநோக்கி மகிழ்ச்சி யடைந்த தலைமகளைக்கண்டு தலை மகன்சொல்லியது.) (இ - ள்.) யானேக்க - (என்னை நீக்குகின்ற சொல்லு க்குப் பொருமல்) யான் (இரந்து) நோக்கியவிடத்து, பசையினள் - (அதனை யறிந்து) இரக்கினையுளாகி, பையநகும் - (உள்ளே) மெல்ல நகா நின்றுள், (அதனுல்), அசையியற்கு - அசைந்த வியல்பினை யுடையவளுக்கு, ஆண்டு - அந்நகையினிடத்தே, ஓரேஎர் - (தோன்றுகின்றதாகிய) ஒரு நன்மைக் குறிப்பு, உண்டு - உளது, (எ - று).

வர் - ‡ காரியவாகுபெயர். அக்குறிப்பு இனிப் பழுதாகா தென்பதாம்.

---

* அஃதறிந்து - யானிரந்து நோக்கியதை யறிந்து.

† வர் (நன்மை) என்னும் காரியத்தின் பெயர் அதற்குக் காரணமாகிய

குறிப்பினை யுணர்த்துதலால், காரியவாகு பெயராம்.

‡ அக்குறிப்பு-அந்தலைவியினிடத்தே தோன்றுகின்ற நன்மைக்குறிப்பு.



(க - து.) பாங்கிசேட்படுத்துவதன்பொருட்டு வருந்துகின்ற வென்னைக் கண்டு இவள் நகைத்தலால், இந்நகையினிடத்து ஒரு நன்மைக்குறிப் புண்டென்று கூறினன் தலைமகன் என்பது.

8. When I look, the maid pitying me looks in return with tender smiles ; and in that smile there is a sign of her grace.

கூ. எதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்

காதலார் கண்ணே யுள.

[† தோழி மதியுடம்படுவா டன்னுள்ளே சொல்லியது.]

பரி:—(இ-ள்.) முன்னறியாதார்போல ஒருவரை யொருவர் பொது நோக்கத்தா னெக்குதல் இக்காதலி யுடையார்கண்ணே யுளவாகா நின்றன, (எ - று).

பொதுநோக்கு-யாவர்மாட்டும் ஒரு தன்மைத்தாய நோக்கு. நோக்குதற் றொழில் ஒன்றே யாயினும் இருவர்கண்ணு நிகழ்தலானும், ஒருவர்கட்டா னுங் குறிப்பு வேறுபாட்டாற் பலவா மாகலானும் 'உள' எனப் பன்மையாற் கூறப்பட்டது. ‡ இருவரும் மதுமறைந் தண்டோர் மகிழ்ச்சிபோல உள்ளத்துள்ளே மகிழ்தலின் அதுபற்றிக் 'காதலார்' என்றும், ¶ அது புறத்தி வெளிப்படாமையின் 'எதிலார்போல' என்றுங் கூறினுள்.

தெளி:—(பாங்கி மதியுடன்படக் கருதித்தன்னுள்ளே சொல்லியது.) (இ -ள்.) எதிலார்போல - முன்னறியாதவர்போல, பொதுநோக்கு நோக்குதல் - (ஒருவரை ஒருவர்) பொது நோக்கத்தால் நோக்குதல், • காதலார் கண்ணே - இக்காதலையுடையவரிடத்தே, உள - உண்டாகா நின்றன.

பொதுநோக்கு - யாவரிடத்தும் ஒரு தன்மையதாகிய நோக்கு.நோக்குதல் தொழில் ஒன்றேயாயினும் இருவரிடத்தும் உண்டாதலாலும், ஒருவரிடத்திலேயும் குறிப்புவேறு பாட்டால் பலவாமாகலாலும் (உளது என்று ஒருமை

---

† தோழி மதியுடம்படுவா ளாவது பாங்கி தலைமகளது வேறுபாட்டைக்

கண்டு புணர்ச்சி யுண்மையை யாராய்ந்தறிந்து தன்மதியை (புத்தியை)

யுடன்படுத்துதலாம்.

‡ இருவரும் - தலைமகனும் தலைமகளும். "எனல் காவ லிலனு மல்

லள், மான்வழி வருகுவ னிவனு மல்லன், நரந்தங் கண்ணி யிவனே டிவ

ளிடைக், காந்த வுள்ளமொடு கருதியது பிறிதே, நம்மு ணுணினர் போ

லத் தம்முள், மதிமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல, வுள்ளத் துள்ளே

மகிழ்ப, சொல்லு மாடுப கண்ணி னனே." (தொல்-பொரு - கள. 23-உரை) . என்னுஞ் செய்யுள் இக்குணார்த்தற்பாலதாம்.

¶ அது - அம்மகிழ்ச்சி.



யாற் கூறாது) 'உள' என்றுபன்மையாற் சொல்லப்பட்டது. இருவரும் மதுமறைந்துண்டோர் மகிழ்ச்சிபோல உள்ளத்துள்ளே மகிழ்தலால் அது பற்றிக் 'காதலார்' என்றும், அது புறத்து வெளிப்படாமையால் 'ஏதிலார் போல' என்றும்சொல்லினாள். மது-கள்.

(க - து.) பாங்கி இக்காதலை யுடையவரிடத்து முன்னறியாதவர்போல ஒருவரை யொருவர் பொதுநோக்கத்தால் நோக்குதல் உளவாகா நின்றனவென்று கூறினள் என்பது.

9. The indifferent look that would disguise love is only possible with lovers.

க0. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க

ளென்ன பயனு மில.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) காமத்திற்குரிய விருவருள் ஒருவர் கண்களோடு ஒருவர்கண்கள் நோக்கா லொக்குமாயின், அவர் வாய்மைதோன்ற* சொல்லுகின்ற வாய்ச்சொற்கள் ஒருபயனு முடையவல்ல, (எ - று).

நோக்காலொத்தல் - காதலைக்கினவாதல்.
வாய்ச்சொற்கள் - மனத்தின்கணின்றி வாயளவிற் றோன்றுகின்ற சொற்கள். * இருவர் சொல்லுங் கேட்டு உரைகியன்மேல் வைத்துக் கூறியவாறு.
இருவர்சொல்லுமாவன;— † அவள் புனங்காவன்மேலும் அவன் வேட்டத்தின்மேலுஞ் சொல்லுவன. பயனில் சொற்களாகலின், இவை கொள்ளப்படா வென்பதாம். இவை ‡ புணர்த்தினிமித்தம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) (காமத்திற்குரிய விருவருள்) கண் ணெடு - (ஒருவரது) கண்களோடு, கண்ணினை - (ஒருவரது) கண்கள், நோக்கொக்கின்-நோக்கால் ஒக்குமாயின், வாய்ச்சொற்கள் - (அவர் உண்மை

---

* பாங்கி தலைமகன் தலைமகளென்னும் இருவர் சொல்லையுங் கேட்டு 'கண்ணெடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்க, ளென்ன பயனு மில' என்றுரைகியலின்மேல் வைத்துக்கூறியவாறும்.

† "மெய்யே யிவற்கில்லை வேட்டையின் மேன்மன மீட்டிவளும், பொய்யே புனத்தினை காப்ப திறைபுலி யூரனையாள், மையேர் குவளைக்

கண் வண்டினம் வாழுஞ்செங் காமரைவாய், எய்யே மெனினுங் குடைந் தின்பத் தேனுண் டெழிறருமே" என்று திருக்கோவையார் கூறுவது இங்குணர்தற்பாலதாம்.

‡ "புணர்தல் பிரிதல்" என்னும் (தொல்காப்பியச்) சூத்திரத்தின் ~ விசேடவுரையில் நச்சினர்க்கினியார் "தலைவன் தோழியைக் குறையுறும் பகுதியும், ஆண்டுத்தோழி கூறுவனவும், குறை நேர்தலும், மறுத்தலு முதலி யன புணர்ச்சி நிமித்தம்" என்று கூறியதிங் குணர்தற் பாலதாம்.



தோன்றச் சொல்லுகின்ற) வாய்ச்சொற்கள், என்னபயனும் - ஒருபயனும், இல - உடையவனல்ல, (எ - று).

நோக்கா லொத்தல்-(இருவர் கண்களும்) காதல்நோக் குடையனவாதல். வாய்ச்சொற்கள் - மனத்தினிடத்தில்லாமல் வாயளவில் தோன்றுகின்ற சொற்கள். இருவர்சொல்லும்கேட்டு உலகியலின்மேல் வைத்துச் சொல்லிய படியாம். இருவர் சொல்லுமாவன:—அவள் புனங்காவலின்மேலும் அவன் வேட்டத்தின் மேலும் சொல்லுவன. பயனில் சொற்களாகையால், இச் சொற்கள் கொள்ளப்படா வென்பதாம். இவை புணர்தல் நிமித்தம். புனம்-தினைப்புனம்; வேட்டம் - வேட்டை; காதல் - புணர்ச்சிபற்றிய விருப்பம்.

(க - து.) பாங்கி காமத்திற்குரிய விருவர் நோக்கம் தம்முள் ஒக்குமாயின், அவர்தம் பேச்சாற் பயனில்லையென்று கூறினள்.

10. All words uttered through lips will prove useless, when there is perfect agreement between the eyes of lovers.

## 3 - வது அதிகாரம்.

## புணர்ச்சி மகிழ்தல்:— Rejoicing in sexuality.

பரி:—அஃதாவது அங்ஙனங் குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் அப்புணர்ச்சியினை மகிழ்ந்து கூறல். * அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

தெளி:—அஃதாவது அப்படி குறிப்பறிந்து தலைமகளைப்புணர்ந்த தலைமகன் அப்புணர்ச்சியினை மகிழ்ந்து சொல்லுதல். அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

க. † கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு
மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள.

[† இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கட் சொல்லியது];

* குறிப்பறிதற்குப்பின் புணர்ச்சி மகிழ்தல் வைத்த அதிகார முறை மையும்.

† "கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலு மைங்கருவி, கண்டவின்பந் தெரிவரிய வளவில்லாச் சிற்றின்பம், ஒண்டொடியா டிருமகளு நீயுமே நிலாநிற்பக், கண்டதிர் கண்டொழிந்தே னடைந்தேனுன் றிருவடியே" என்று திருவாய்மொழி கூறுகின்றது.

‡ "இயற்கைப்புணர்ச்சி யென்பது பொருளதிகாரத்திற் கூறப்பட்ட தலைமகனும் தலைமகளும் அவ்வாறொரு பொழிலிடத் தெதிர்ப்பட்டுத் தெய்வ மிடைநிற்பப் பாண்மை (விதி) வழியோடி யாவிற் (பசுவிற்) கிருகோடு



பரி:—(இ - ள்). கண்ணுற் கண்டும் செவியாற் கேட்டும் நாவா லுண்டும் முகர்ந்தும் மெய்யாற் றீண்டியும் அனுபவிக்கப்படு * மைம்புலனும் இவ்வொள்ளிய தொடியை யுடையாள்கண்ணே யுள வாயின, (எ - று).

† உம்மை - முற்றும்மை. ‡ தேற்றேகாரம் வேறிடத்தின்மை விளக்கி நின்றது. வேறுவேறு காலங்களில்

வேறுவேறு. பொருள்களா னனுபவிக் கப்படுவன ஒருகாலத்து இவள்கண்ணே யனுபவிக்கப் பட்டனவென்பதாம். வடநூலார் ¶ இடக்கர்ப் பொருளவாகச் சொல்லிய $ புணர்ச்சித் தொழில் களும் ஈண்டடக்கிக் கூறப்பட்டன.

தெளி:—(தலைமகன் இயற்கைப்புணர்ச்சியின் முடிவில்சொல்லியது.) (இ -ள்.) கண்டு - (கண்ணால்) கண்டும், கேட்டு - (செவியால்) கேட்டும், உண்டு - (நாவால்) உண்டும், உயிர்த்து - (மூக்கால்) மோந்தும், உற்று-(மெய் யால்) தீண்டியும், அறியும் - அனுபவிக்கப்படுகிற, ஐம்புலனும் - ஐந்துவிட யங்களும், ஒண்டொடிகண்ணே - இவ்வொளி பொருந்திய வளையலை யுடை யவளிடத்தே, உள - உளவாயின, (எ - று).

ஐம்புலனுமென்னும் உம்மை - முற்றுமை.
ஒண்டொடிகண்ணே என்
னும் தேற்றேகாரம்அவை வேறிடத்தில்லாமையை விளக்கி நின்றது. வேறு வேறுகாலங்களில் வேறுவேறு இந்திரியங்களால் அனுபவிக்கப்படும் விடயங் கள் ஒருகாலத்தில் இவளிடத்தே என்னால்
அனுபவிக்கப்பட்டன வென்ப தாம். வடநூலார்
இடக்கர்ப்பொருளினவாகக் கூறிய புணர்ச்சித்தொழில் களும்
இவ்விடத்தடக்கிச் சொல்லப்பட்டன.

(கொம்புத்) தோன்றிறைற்போலத் தம்மூளொத்த வன்பினாரய் அவ்விருவ ரொத்தார் தம்முட்டாமே கூடுங் கூட்டம்'' என்று திருக்கோவையாருரை யிற் கூறப்பட்டிருக்கின்றது.

* ஐம்புலனும்-சுவை யொளி யூரோசை நாற்றமென்னும் ஐந்துவிட

யக்களும். கண்ணால் காண்டல் உருவம், செவியால் கேட்டல் ஓசை, நாவாலுண்டல் சுவை, மூக்கால் மோத்தல் நாற்றம், மெய்யால்தீண்டல் பரிசம் என்றுகொள்க. நாற்றம் - வாசனை; மெய் - உடம்பு.

† ஐம்புலனும் என்றவும்மை இனத்தென்றறிபொருளில் வந்த முற்

றுமையாம.

‡ ஒண்டொடி கண்ணே என்ற தேற்றேகாரம் ஐந்திந்திரியங்களாலும் சுவைமுதலிய ஐந்து விஷயங்களையும் (வேறு வேறு காலங்களி லல்லாமல்) ஒருகாலத்தி லனுபவித்தல் இவளிடத்தன்றி வேறிடத்தில்லை யென்பதை விளக்கிநின்றது

¶ இடக்கர்ப்பொருளவாக - மறைத்த சொல்லின் பொருளினவாக.

§ புணர்ச்சித்தொழில்கள் - பயோதரங்களை வருடல், ஆடையை கெழிழ்த்தெறிதல், இறுகத்தழுவல், இதழ் சுவைத்தல் முதலியனவாம் இவற்றின் பாகுபாட்டை மதனநூலிற் காண்க.

(க - து.) தலைமகன் இயற்கைப்புணர்ச்சியின்முடிவில் இவள் பஞ்சேந்திரியங்களுக்கும் விடயமாயிருக்கின்றாளென்று கூறினன்.

1. The enjoyment of the five senses of sight, hearing, taste, smell and touch at one and the same time are to be found in this beautious maiden.

உ. பிணிக்கு மருந்து பிறம ணணியிழை
தன்னேய்க்குத் தானே மருந்து.

(* இடந்தலைப்பாட்டின்கட் சொல்லியது.)

பரி:—(இ - ள்.) வாத முதலிய பிணிகட்கு மருந்தாவன அவற்றிற்கு † நிதானமாயினவன்றி ‡ மாறுபடியல்பினை யுடையனவாம்; அவ்வா றன்றி இவ்வணியிழையினையுடையாள் தன்னையபிணிக்கு மருந்துந் தானேயாயினள், (எ - று).

இயற்கைப் புணர்ச்சியை நினைந்து முன்வருந்திநினைகலின் 'தன்னேய்' என்றும், அவ்வருத்தந் தமியாளை யிடத்தெதிர்ப்பட்டுத் தீர்ந்தாளைகலின் 'தானேமருந்து' என்றுங் கூறினன். ¶ இப்பிணியும் எளியவாயவற்றாற் றீரப்பெற்றிலமென்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

தெளி:—(தலைமகன் இடந்தலைப்பாட்டில் சொல்லியது.) (இ - ள்,) பிணிக்கு - (வாதமுதலிய) பிணிகளுக்கு, மருந்து - மருந்தாவன, பிற - அப்பிணிகளுக்குக்காரணமாயின வல்லாமல் மாறுபடுகுணத்தினை யுடையன வாம், (அவ்வாறல்லாமல்), அணியிழை - இவ்வணியிழையினையுடையவள், தன்னேய்க்கு - தன்னாலாகிய பிணிக்கு, மருந்து - மருந்தும், தானே - தானேயாயினள், (எ - று).

(தலைமகன்) இயற்கைப்புணர்ச்சியை நினைந்து முன் வருந்திநினைக

லால் 'தன்னோய்' என்றும், அவ்வருத்தம் தனித்துவந்து நின்ற தலைமகளை

முன் கூடிய விடத்துச் சென்று எதிர்ப்பட்டுத் தீர்ந்தாளைகலால் 'தானே

மருந்து' என்றும் சொல்லினான். இப்பிணியும் எளியவாய •பொருள்களால்

தீரப்பெற்றில மென்பதுதோன்ற நின்றமையால், மன் என்னும் இடைச்

சொல் ஒழியிசைப்பொருளில் வந்தது. இழை - ஆபரணம்.

---

* இடந்தலைப்பாடாவது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்ததலைமகன் மற்றைத் தினத்தில் புணர்ந்தவவ்விடத்தில் வந்து தலைமகளைக் கூடுதல்.

† "நோய்நாடி" என்னுங்குறளின் விசேடவுரையில் "(நோய்வருதற்) காரணம்-உணவு செயலென மூற்கூறியவிரண்டும். அவற்றை ஆயுள்வேத முடையார் நிதானமென்ப" என்றிருப்பது இந்நூணர்தற்பாலதாம்.

‡ மாறுய - விரோதமாய.

¶ இப்பிணியும் - தலைமகளாலாய இந்நோயும்.

(க - து.) தலைமகன் பிணிக்குமருந்து அது வருதற்குக் காரணமாவதாகாமல் அதற்கு மாறுபடுவதாக விருப்பதாம்; ஆனல்

இவள் தன்னுலாகிய காமநோய்க்குத் தானே
கின்றுளென்று கூறினன் என்பது.

மருந்துமா றிருக்

2. The remedy for a disease is surely something antagonistic to it ; but the cure for the disease caused by this maiden is herself.

ங. தாம்வீழ்வார் மென்றோட் டியிலி னினிதுகொ
ருமரைக் கண்ணை னுலகு.

(* நிரதிசய வின்பத்திற்குரியதே இச்சிற்றின்பத்திற் கின்னேயாதல்

தகாதென்ற பாங்கற்குச் சொல்லியது.)

பரி:—(இ - ள்.) ஐம்புலன்களையு நுகர்வார்க்குத் தாம் விரும்பு மக ளிர் மெல்லியதோளின்கட்டியிலுந்

துயில்போல வந்தாம லெய்த லாமோ; † அவற்றைத் துறந்த தவயோகிகளெய்துஞ் ‡ செங்கண்மா லுலகம், (எ - று).

¶ ஐம்புலன்களையு நுகர்வார்க்கென்னும் பெயர் அவாய்நிலையான் வந்தது. § இப்பெற்றித்தாய துயிலைவிட்டுத் தவயோகங்களான் வருந்த வேண்டுதலின் எம்மனோர்க் காகாதென்னுங் கருத்தால் 'இனிதுகொல்' என்

---

* இன்பம் அதிசயவின்பம் நிரதிசயவின்பமென விருவகைத்தாம். அதிசயவின்பம் - சிற்றின்பமாம்; நிரதிசயவின்பம் - பேரின்பமாம். அதி சயம் - பேதம்; நிரதிசயம் - பேதமற்றது.

† அவற்றை - சப்தமுதலிய அவ்வைம்புலன்களை.

‡ செங்கண்மாலுலகம் - செந்தாமரைமலர்போலுங் கண்களையுடைய விஷ்ணுமூர்த்தியினது வைகுண்டலோகம்.

"தூஉய்மை யென்ப தவாவின்மை"

என்னுங் குறளின் விசேடவுரையில் "வீடாவது உயிர் அவிச்சை முதலிய மாசு நீங்குதலாகலின்" என்று

வரையப்பட்டிருப்பது ஏண்டுக் கவனித்தற் பாலதாம்.

¶ துயிலின் என்பது ஐம்புலன்களையு நுகர்வார்க்கு என்னும் பெயரை அவாவி (வேண்டி) நின்றது.

§ இப்பெற்றித்தாய-தாம் விரும்பும்மகளிர் மெல்லிய தோளின்கட்டுயி

லுவதாகிய.

‖ தவயோகங்களான் வருந்தவேண்டுதலின்-(தாமரைக் கண்ணுனுல கினையுடைய) தவத்தைச்செய்வதாலும் யோகத்தைச்செய்வதாலும் வருந்த வேண்டுதலால்.





ருன். * இந்திரனுல கென்றுரைப்பாரு முளர்; தாமரைக்கண்ணனென்பது † அவனுக்குப் பெயரன்மையின், அஃதுரையன்மை யறிக.

தெளி:—(பேரின்பத்திற்குரியதீ இச்சிற்றின்பத்திற்கு இத்தன்மைய தல் தகாதென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.) (இ - ள்.) (ஐம் புலன்களையும் அனுபவிப்பவர்க்கு) தாம் வீழ்வார் - தாம்விரும்பும் மகளிரது, மென்றோள் - மெல்லிய தோள்களிடத்து, துயிலின் - (துயிலுக்) துயில் போல, தாமரைக் கண்ணுலகு -(அவற்றைத் துறந்த தவயோகிகள் அடை யும்)கமலக்கண்ணனது உலகம், இனிதுகொல் - வருந்தாமலடையலாமோ?

ஐம்புலன்களையும் அனுபவிப்பவர்க்கென்னும் பெயர் அவாய்நிலையால் வந்தது. இத்தன்மையதாகிய தூயில விட்டுத் தவயோகங்களால் வருந்த வேண்டுதலால் (தாமரைக் கண்ணுலகு) எம்மனோர்க்கு ஆகாதென்னுங் கருத்தால் 'இனிதுகொல்' என்றான். எம்மனோர் - எம்மை யொத்தவர்.

(க - து.) தலைமகன் தாம் விரும்பிய மகளிரது மெல்லிய தோளிற்றுயிலும் இன்பம் எளிதிற் பெறப்படுவதாக விருத்தலால், அது தாமரைக் கண்ணுலகின்பிலும் சிறந்ததாகு மென்று கூறினன்.

3. Can the lotus-eyed Vishnu's heaven be attained easily and become as sweet to those who delight to sleep in the delicate embrace of their beloved.



நு, நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற்
றண்ணெனன்னுந்
தீயாண்டுப் பெற்ற ளிவள்.

[‡ பாங்கற்கூட்டத்திறுதிக்கட் சொல்லியது,]

பரி:—(இ - ள்.) தன்னை யகன்றுழிச் சுடாநிற்றும், அணுதுழிக் குளிரா நிற்றும், இப்பெற்றித்தாய தீயை யெங்கட் டருதற்கு இவ ளெவ் வுலகத்துப் பெற்றுள், (எ - று).

கூடாமுன் றுன்புறுதலின் 'நீங்கிற் றெறூஉம்' என்றும், கூடியபி னின்புறுதலிற் 'குறுகுங்காற் றண்ணெண்ணும்' என்றும், இப்பெற்றிய தோர்தீ உலகத்தில்லையாமாகலின் 'யாண்டுப்பெற்றூள்' என்றுங் கூறினான். தன் காமத்தீத்தன்னையே அவட ந்தாளாகக் கூறினான்; அவளான் ¶ அது வெளிப்படுதலின்.

தெளி:—(தலைமகன் பாங்கனது கூட்டத்துமுடிவில் சொல்லியது.) (இ - ள்.) நீங்கின் - (தன்னை) நீங்கியவிடத்து, தெறுஉம் - சுடாநிற்கும்,

---

* தாமரைக்கண்ணுலகு என்பதற்கு இந்திரனுலகென்று பொருள் கூறுவாரு முண்டு. † அவனுக்கு - இந்திரனுக்கு.

‡ பாங்கற்கூட்டமாவது(மூன்றுநாள்) பாங்க (தோழ)னைத் துணையாகக் கொண்டு தலைமகன் தலைமகளைக் கூடுதல்.

¶ அது - தனது காமத்தீ.

களவியல்—ஈ-வது புணர்ச்சி மகிழ்தல்.

**1179**

குறுகுங்கால் - நெருங்கியவிடத்து, தண்ணெண்ணும் - குளிராநிற்கும், தீ " (இத்தன்மையதாகிய) நீயை,

(என்னிடத்துத்தருவதற்கு), யாண்டு - எவ் வுலகத்தில், இவள்-, பெற்றாள்-பெற்றனள், (எ-று).

கூடாமுன் துன்பமடைதலால் 'நீங்கிற்றெறாஉம்' என்றும், கூடிய பின் இன்பமடைதலால் 'குறுகுங்காற் றண்ணென்னும்' என்றும், இத்தன் மையதாயதோர்தீ உலத்திலின்றுமாகலின் 'யாண்டுப் பெற்றாள்' என்றும் சொல்லினான். தன் காமத்தீயையே அவள் தந்தாளாகச் சொல்லினான்; அவளால் அது வெளிப்படுதலால்.

(க - து.) இவள் தன்னை நீங்கினால் சுடுதலும் நெருங்கினால் குளிர்ந்திருத்தலுமாகிய தீயை யென்னிடத்துத் தருவதற்கு எவ் விடத்துப் பெற்றாளென்று வியந்து கூறினான் தலைமகன் என்பது.

4 Whence has the maiden got this wondrous fire that burns when I withdraw and soothes the pain when I approach.

நு * வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பி னவள்.

(† தோழியிற்கூட்டத் திறுதிக்கட் சொல்லியது.)

பரி:—(இ-ள்.) மிகவினியவாய போருள்களைப் பெறுது அவற்றின் மேல் விருப்பங் கூர்ந்த பொழுதின்கண் அவையவை தாமேவந் தின் பஞ்செய்யுமாறுபோல இன்பஞ்செய்யும், எப்பொழுதும் பெற்றுப் புணரினும் பூவினையணிந்த தழைந்த கூந்தலினையுடையா டொள்

கள், (எ - று).

தேர்டு—ஆகுபெயர். இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டத்துக்கண் முன்னரே நிகழ்ந்திருக்கப் பின்னரும் புதியவாய் நெஞ்சம் பிணித்தலின், அவ் ‡ வாராமைபற்றி ¶ இவ்வாறு கூறினான். $ தொழிலுவமம்.

---

* "உணர்ந்தார்க் குணர்வறி யொன்றில்லைச் சிற்றம் பலத்தொருத்தன், குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாயிக் கொடியிடைதோள், புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய், மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே' என்று திருக்கோவையார் கூறுவதிற் கொப்பிட்டறிதற் பாலதாம்.

† தோழியிற் கூட்டமாவது தலைமகளைத் தோழி (பாங்கி) கூட்டுவிக்கத் தலைமகன் கூடுங் கூட்டம்.

‡ ஆராமை - விருப்பந் தணியாமை.

¶ இவ்வாறு கூறினான்-'வேட்ட பொழுதி னவையவை போலுமே, தோட்டார் கதுப்பினு டோள்' என்றிவ்வாறு தலைமகன் கூறினான்.

$ வேட்டபொழுதின் அவையவை தாமே வந்து இன்பஞ்செய்யும் தொழிலைத் தோட்டார் கதுப்பினுள் தோள் இன்பஞ்செய்தலுக்கு உவமானமாகக் கூறினமையின், இது தொழிலுவமமாயிற்றென்க.

தெளி:—(தலைமகன் பாங்கியினது கூட்டத்து முடிவில் சொல்லியது.) (இ - ள்.) (எப்பொழுதும் பெற்றுப்புணர்ந்தாலும்) தோடு-மலரினை, (அணிந்த), ஆர் - தழைந்த, கதுப்பிலுள்-கூந்தலையுடையவளது, தோள்–தோள்கள், வேட்டபொழுதின் - (மிகவும் இனியவாயபொருள்களைப் பெறுமல் அப்பொருள்களின் மேல்) விருப்பமிருந்த பொழுதில், அவையவைபோலுமே - அவ்வப்பொருள்கள் தாமேவந்து இன்பஞ் செய்யும் விதம்போல இன்பஞ் செய்யும், (எ - று).

தோடு (இதழ்) என்னுஞ் சினைப்பெயர் அதன் முதலாகிய மலரினை யுணர்த்துதலால் சினையாகுபெயராம். இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டத்தின்கண் முன்னரே அத்தோள்கள் அனுபவிக்கப்பட்டிருக்கப் பின்னரும் புதியனவாயிருந்து நெஞ்சத்தைப் பிணித்தலால், அவ்வாறாமைபற்றி இப்படி சொல்லினன். இது தொழிலுவமையணி.

(க - து.) தலைமகன், இவளது தோள்கள் புணருந்தோறும் புதியனவாயிருக்கின்றனவென்றன் என்பது.

5. The embrace of the maiden whose locks are adorned with flowery wreaths delight me as if it were the very sweets I desired to enjoy.

சு. உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்.

(இதுவுமது.)

பரி:—(இ - ள்.) தன்னைப்பெறாது வாடிய என்னுயிர் பெற்றுறுந் தோறும் தளிர்க்கும்வகை தீண்டுதலான், இப்பேதைக்குத் தோள்கள் தீண்டப்படுவதோ ரமிழ்தினாற் செய்யப்பட்டன, (எ - று).

* எதுவாகலாற் றீண்டல் அமிழ்திற்கு மெய்திற்று. வாடிய வுயிரைத் தளிர்ப்பித்தல்பற்றி, அவை 'அமிழ்தி னியன்றன' என்றான். தளிர்த்தல். இன்பத்தாற் றழைத்தல்.

தெளி:—(இதுவுமது.) (இ - ள்.) உயிர் - (தன்னைப்பெறுதுவாடிய என்) உயிர், உறுதோறும் - (பெற்று) உறுந்தோறும், தளிர்ப்ப - தளிர்க்கும் படி, தீண்டலால் - தீண்டுதலால், பேதைக்கு - இம்மங்கைக்கு, தோள் - தோள்கள், அமிழ்தினியன்றன - (தீண்டப்படுவதோர்) அமிழ்தினால் செய் யப்பட்டன, (எ - று).

---

* உயிர்தளிர்ப்பதற்குத் தோள்களைத் தீண்டுதல் எதுவா (காரணமா)

யிருத்தலால் அத்தீண்டுதல் அத்தோள்களைச் செய்வதற் கேதுவாகிய அமிழ்திற்கும் பொருந்தியதென்க. தீண்டுந் தோள்களைச் செய்வதற்குக் காரணமா யிருந்த அமிழ்தமும் தீண்டப்படுதலால் 'தோள்கள் தீண்டப் படுவதோரமிழ்திணைச் செய்யப்பட்டன' என்று கூறப்பட்டது.

## களவியல் ரு-வது புணர்ச்சி மகிழ்தல்.

**1181**

தீண்டுந்தோளுக்கேதுவாகலால் தீண்டல் அமிழ்திற்கும் பொருந்தியது. வாடிய உயிரைத் தளிர்ப்பித்தல்பற்றி, அத்தோள்களை 'அமிழ்தினியன்றன' என்றான். தவிர்த்தல் - இன்பத்தால் தழைத்தல். உறுந்தோறும் - புணருந்தோறும். (தீண்டப்படாத அமிழ்தம் - மோட்சம்).

(க - து.) இவள் தோள்கள் புணருந்தோறும் என்னுயிரின் பத்தாற் றழைக்குமாறு செய்கின்றன வென்றான் என்பது.

6. The maiden's shoulders are made of ambrosia as they revive me with pleasure every time I embrace them.

எ. தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்ரு
லம்மா வரிவை முயக்கு.

(இவளே நீவைரந்துகொண்டு உலகோர் * தம்மிலிருந்து தமது † பாத் துண்ணு மில்லறத்தோடு படல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது).

பரி:—(இ - ள்.) அழகிய மாமை நிறத்தையுடைய அரிவையது

முயக்கம் இன்பம் பயத்தற்கட் டமக்குரிய வில்லின்கணிருந்து உலகோர் தந்தாமுரான் வந்தபொருளைத் தென்புலத்தார் தெய்வம் விருந்தோக்கல் கட்டுப் பகுத்துத் தங் கூற்றை உண்டாற்போலும், (எ - று).

‡ தொழிலுவமம். இல்லறஞ்செய்தா ரெய்துந் துறக்கத்தின்பம் எனக் இப் புணர்ச்சியே தருமென வரைவுடன்படான் கூறியவாருயிற்று.

நேளி:—(இவளை நீ கலியாணஞ்செய்துகொண்டு உலகோர் தமது இல்லிலிருந்துதமது பாகத்தை உண்ணும்இல்லறத்தோடுபொருந்தல்வேண்டு மென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது) (இ - ள்.) அம்மாவரிவை முயக்கு - அழகிய பொன்னிறத்தையுடைய மங்கையின் புணர்ச்சியானது, (இன்பந்தருதலில்), தம்மிலிருந்து - தமக்குரிய மனையிலிருந்து, தமது— (உலகோர்) தமது (முயற்சியால் வந்தபொருளை), பாத்து - (தென்புலத்தார் தெய்வம் விருந்து சுற்றத்தார் என்னு மிவர்களுக்கு) பகுத்துக்கொடுத்து, உண்டற்று - (தமது பாகத்தை) உண்டாற்போலும், (எ - று).

இது தொழிலுவமையணி. இல்லறஞ் செய்தாரடையும் சுவர்க்க வின் பத்தை எனக்கு இப்புணர்ச்சியே தருமென்று கலியாணத்திற்கு உடன் படாதவன் சொல்லியபடியாயிற்று.

(க - து.) தலைமகன் தலைமகளது புணர்ச்சி உலகோர் தம தில்லிலிருந்து தமது முயற்சியால் வந்த பொருளைத் தென்புலத்

*தம்மில் - தமது வீடு.

† பாத்துண்ணுதலைத் "தென்புலத்தார் தெய்வம்" என்னும் குறளி னுரையிற் காண்க.

‡ தம்மிலிருந்து தமது பாத்துண்டற்றொழிலை அரிவை முயக்கிற்கு உவமானமாகக் கூறினமையின், இது தொழிலுவமமாயிற்றென்க.



தார் முதலாயினோர்க்குப் பகுத்துக் கொடுத்துத் தமது பாகத்தை புண்டாற்போலு மின்பத்தைச் செய்வதாமென்றான் என்பது.

7. The embrace of the gold-complexioned maiden is as pleasant as dwelling in one's own house and living in one's own earning, sharing it in charity.

அ. வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.

(ஒத்தவன்புடைய நமக்கு ஒருபொழுதும்விடாத முயக்கமே

இனியதென வரைவுகடாய தோழிக்குச்

சொல்லியது.)

பரி:—(இ - ள்.) நீசொல்லுகின்றதொகுதும். ஒருபொழுது *நெகிழாமையிற் காற்றுவிடையறுக்கப்படாத முயக்கம் ஒருவரையொருவர் விழைவாரிருவர்க்கு மினிதே, (எ - று).

முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. ஏகாரம் தேற்றத்தின்கண்வந்தது. ஈண்டு † இருவரில்லை; இன்மையான் ‡ இஃதொவ்வாதென்பது கருத்து. களவிற் புணர்ச்சியை மகிழ்ந்து வரைவுடன்படான் கூறியவாறு.

தெளி:—(ஒத்த அன்புடைய உமக்கு ஒருபோதும் விடாத புணர்ச்சியே இனியதென விவாகஞ் செய்துகொள்ளென்று விலக்கிய தோழிக்குத் தலைமகன் சொல்லியது.) (இ - ள்.) (நீ சொல்லுகின்றது ஒக்கும்) வளி யிடை போழப்படாஅ-(ஒருபொழுதும் நெகிழாமையால்) காற்றால் இடையறுக்கப்படாத, முயக்கு - புணர்ச்சியானது, வீழுமிருவர்க்கு - (ஒருவரை ஒருவர்) விரும்புவாரிருவர்க்கும், இனிதே - இனியதேயாம், (எ - று).

இருவர்க்கும் என்னும் முற்றும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. இனிதே என்னும் ஏகாரம் தேற்றத்தில் வந்தது. இங்கு இருவரில்லை; இல் லாமையால், இஃது ஒவ்வாதென்பது கருத்து. களவுப்புணர்ச்சியை மகிழ்ந்து விவாகத்திற்கு உடன்படாதவன் சொல்லியபடியாம்.

(க - து.) ஒருவரையொருவர் விரும்பு மிருவர்க்கே காற்றால் இடையறுக்கப்படாத புணர்ச்சி யினிதாகு மென்றான் என்பது.

8. Sweet is the embrace of those whom fond affection binds, when no dissevering breath of discord finds entrance.

---

* நெகிழாமை - தளராமை.

† இருவரில்லை - நான் இவள் என்னும் இருவரில்லை.

வேற்றுமையோடு கூடிய

‡ இஃது - விவாகஞ்செய்துகொள் ளென்றல்.

களவியல்—௩-வது புணர்ச்சி மகிழ்தல்.

**1183**

௯. ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்

## கூடியார் பெற்ற பயன்.

[காத்தல் வேண்டாமையின் இடையறவில்லாத கூட்டமே இன்பப்பய னுடைத்தென வரைவுகடாவியாட்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) புணர்ச்சி யினிதாதற்பொருட்டு வேண்டுவதாய ஊடலும் அதனை யளவறிந்து நீங்குதலும் அதன்பி னிகழ்வதாய வப்புண ர்ச்சிதானு மென விவையன்றே வரைந்துகொண்டு காமத்தையிடை விடாதெய்தியவர் பெற்ற பயன்கள், (எ - று).

ஆடவர்க்குப் பிரிவென்பதொன் றுளதாதன்மேலும் அதுதான் * பாத் தையர்மாட் டாதலும், அதனையறிந்து மகளி † ருடனிற்றலும், அவ்வூடலைத் தவறு செய்தவர் தாமே தந்தவறின்மைகூறி நீக்கலும், பின்னுமவ் விருவ ரும் ஒத்த வன்பினராய்க் கூடலுமன்றே முன்வரைந் தெய்தினர் பெற்ற பயன்; அப்பயன் ‡ இருதலைப்புள்ளி னொருயிராய ¶ உழுவலன்புடைய வெமக்கு வேண்டாவென அவ்வரைந் தெய்தலி னிகழ்ந்து கூறியவாறு.

தெளி:—[மறைத்தல்வேண்டாமையால் நடுவே நீங்குதலில்லாத புண ர்ச்சியே இன்பப்பயனுடையதென விவாகஞ்செய்து கொள்ளென்று விரை விய தோழிக்குத் தலைமகன் சொல்லியது.] (இ - ள்.) ஊடல் - (புணர்ச்சி இனிதாதற்பொருட்டு வேண்டுவதாய) ஊடலும், உணர்தல் - (அதனை அள வறிந்து) நீங்குதலும், புணர்தல் - (அதன்பின் உண்டாவதாய) அப்புணர்ச்சி யும், (என), இவை - இவையல்லவா, காமங் கூடியார் - (விவாகஞ்செய்து

கொண்டு) காமத்தை இடைவிடாதடைந்தவர். பெற்றபயன் - பெற்றபயன் கள், (எ - று).

ஆடவர்க்குப் பிரிவென்பதொன்று உண்டாதல்மேலும் அப்பிரிவதான் பாத்தையரிடத்தாதலும், அதனை அறிந்து மகளிர் ஊடிநிற்றலும், அவ்வூட லைத் தவறுசெய்தவர் தாமே தமது தவறில்லாமையைச் சொல்லி நீங்கலும், பின்னும் அவ்விருவரும் ஒத்தவன்பினராய்க்கூடலு மல்லவா மூன் விவாகஞ் செய்துகொண்டவர் பெற்றபயன்; அப்பயன் இருதலைப்புள்ளி னொருயிரா கிய மாறு அன்புடைய எமக்கு வேண்டாமென்று அவ்விவாகஞ் செய்து கொண் டின்பமடைதலை யிகழ்ந்து சொல்லியபடியாம்.

(க - து.) விவாகஞ்செய்துகொண்டு காமத்தை யிடைவிடா தடைந்தவர் பெற்ற பயன்கள் பிணங்கலும், அதனை யளவறிந்து நீங்குதலும், அப்பாற் புணர்தலு மல்லவாவென்று கூறினன்.

9. The jealous variance, reconciliation and intercourse-
these are the fruits accruing from wedded love.

---

* பர்த்தையர் - பொதுமகளிர். † ஊடி - பிணங்கி.

‡ இருதலைப்புள் = இருதலைப்பட்சி.

¶ உழுவலன்பு = முழுவன்பு.



கo. அறிதோ றறியாமை கண்டற்றுற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு.

[புணர்ந் * தடன்டோகின்றுன் றன்னுவள்ளே சொல்லியது.]

பரி:—(இ - ன்.) நூல்களாலும் நுண்ணுணர்வாலும் பொருள்களை

யறிய வறிய முன்னேயறியாமை கண்டாற்போலக் காணப்படா நின்றது சிவந்த விழையினையுடையாளை இடைவிடாது செறியச்செறிய இவண் மாட்டுக் காதல், (எ - று).

களவொழுக்கத்திற் பல † விடையீடுகளா னெய்தப்பெறுது அவாவுற்றுன் இதுபொழுது ‡ நிரக்காமாக வெய்தப்பெற்றமையின் 'செறிதோறும்' என்றுன். அறிவிற் கெல்லையின்மையான் மேன்மேலறியவறிய முன்னே

யறிவு அறியாமையாய் முடியுமாறுபோலச் செறிவிற் கெல்லையின்றி மேன்

மேற் செறியச்செறிய முன்னைச்செறிவு செறியாமையாய்முடியாநிற்கின்ற

தெனத் தன்ஞராமை கூறியவாறு. இப்புணர்ச்சிமகிழ்தல் தலைமகட்கு முண்

டேனும் அவண்மாட்டுக் குறிப்பானிகழ்வதல்லது கூற்ரு னிகழாமையறிக. ——— தெளி :—(தலைமகளைப் புணர்ந்து உடன்கொண்டு போகின்ற தலைமகன்

தன்னுள்ளே சொல்லியது.) சேயிழைமாட்டு - சிவந்தவாபரணத்தை யுடை யவளை, (இடைவிடாமல்), செறிதோறும் - புணரப்புணர, (இவளிடத்து), காமம் - காதல், அறிதோறும் - (நூல்களாலும் தண்ணறிவாலும் பொருள் களை) அறியவறிய, அறியாமை - (முன்னை) அறியாமை, கண்டற்று - கண் டாற்போலக் காணப்படா நின்றது, (எ - று).

களவொழுக்கத்தில் பலவிடையீடுகளால் தன் கருத்தின்படி அனுபவிக்

கப்பெருமல் ஆசையுற்ற தலைமகன் தலைமகளை உடன்கொண்டுபோ மிப்

போது புணர்ச்சியை நிரந்தரமாக அடையப்பெற்றமையினால் 'செறி தோறும்' என்ரு ன். அறிவிற்கு எல்லையில்லாமையால் மேலுமேலும் அறி யவறிய முன்னையறிவு அறியாமையாய் முடியும்விதம்போலப் புணர்ச்சிக்கு எல்லையில்லாமல் மேலுமேலும் புணரப்புணர முன்னைப்புணர்ச்சி புண ராமையாய் முடிகின்றதென்று தன்ஞராமையைச் சொல்லியபடியாம். இப் புணர்ச்சிமகிழ்தல் தலைமகளுக்கு முண்டாயினும் அவளிடத்துக் குறிப்பால் நிகழ்வதல்லாமல் சொல்லால் நிழாமையை யறிக, ஆல் - அசை.

(க - து.) இவளைப் புணரப் புணர இவளிடத்

தாசையான து

பொருள்கள் நூல்களாலும் நுண்ணறிவாலும் அ
றிய அறிய முன்னுள்ளவறியாமையைக் கண்டாற்போ
லிருக்கின்றதென்றான்.

10. The more one learns the more one's ignorance is discovered; so the repeated intercourse with a jewel bedec- ked maiden only creates a desire for more.

---

* உடன்போக்காவது தலைமகன் தலைமகளைப்
பாங்கியினுணர்ப்படி யிர
கசியமா யழைத்துக்கொண்டு தன்னூர்க்குச் செல்லுதல்.
† இடையீடுகள் - தடைகள். ‡ நிரந்தரமாக - எப்பொழுதுமாக.



## 4-வது அதிகாரம்

## நலம்புனைந் துரைத்தல்:—Praise of Pleasure.

பரி:—அஃதாவது தலைமகன்
றலைமகணலத்தைப்புனைந்து சொல் லியது. * இது

புணர்ச்சி மகிழ்ந்துழிநிகழ்வதாகலின், புணர்ச்சிமகிழ்த லின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது தலைமகன் தலைமகளது நலத்தினை வருணித்துச் சொல்லியது. இது புணர்ச்சி மகிழ்ந்தவிடத்து உண்டாவதாகலால், புணர்ச்சி மகிழ்தலின்பின் வைக்கப்பட்டது. நலம் - (அவயவங்களின்) அழகு.

க. நன்னீரை வாழி † யனிச்சமே நின்னினு
மென்னீரள் யாம்வீழ் பவள்.

(இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கட் சொல்லியது.)

பரி:—(இ - ள்.) அனிச்சப்பூவே! வாழ்வாயாக, ‡ மென்மையால் நீயெல்லாப்பூவினு நல்லவியற்கையை யுடையை, அங்ஙனமாயினும் எம்மால் விரும்பப்பட்டவள் நின்னினுமெல்லிய வியற்கையையுடை யள், (எ -று).

அனிச்சம் - ¶ ஆகுபெயர். § வாழியென்பது உடன்பாட்டுக்குறிப்பு. இனி யானே மெல்லியனென்னுந் தருக்கினை யொழிவாயாக வென்பதாம். அதுபொழு தற்றறிந்தாளாகலின், ஊற்றினினிமையையே பாராட்டினாள். ‖ இன்னீரளென்று பாடமோதுவாரு முளர்.

* இது - நலம்புனைந்துரைத்தல்.

† அனிச்சமே என்று கேளாதது கேட்பதுபோல விளித்துக் கூறப் பட்டது. "ஞாயிறு திங்க ளறிவே" என்னும் தொல்காப்பியச் சூத்திரமும் "கேட்குந போலவும்" என்னும் நன்னூற் சூத்திரமும் இங்குக் கவனித்தற் பாலனவாம்.

‡ அனிச்சப்பூ எல்லாப்பூவினும் மென்மையுடையதென்பது "மோப் பக் குழையு மனிச்சம்" என்னுங் குறளாலு மறிதற்பாலதாம்.

¶ அனிச்சம் என்னும் முதற்பொருளின் பெயர் அதன் சினைப்பொரு ளாகிய மலரினையுணர்த்துதலால், பொருளாகு பெயராம்.

$ வாழியென்பது (வாழ்வாயாக என்பது) உடன்பாட்டுப்பொருளில் வந்த குறிப்புச்சொல்.

(அனிச்சப்பூவே ! இனி நீ யானேமென்மைத் தன்மை யுடையவனென்று செருக்குற்று வாழமாட்டாய் என்பது அக்குறிப் பின் கருத்து). இஃது உடன்பாட்டுச் சொல்லால் எதிர்மறைப்பொருளை யுணர்த்திய குறிப்பாம்.

‖ மென்னீரள் என்பதற்குப் பிரதியாக இன்னீரள் (இனியதன்மை யை யுடையவள்) என்று பாடங் கூறுவாருமுண்டு.

நேளி:—[தலைமகன் இயற்கைப்புணர்ச்சியின் முடிவில் சொல்லியது.] (இ – ள்.) அனிச்சமே - அனிச்சப்பூவே, வாழி - வாழ்வாயாக, நன்னீரை- (மென்மையால் நீ எல்லாப்பூவினும்) நல்ல தன்மையையுடைத்தாயிருக்கின் றாய், (அவ்வாறிருந்தாலும்), யாம்வீழ்பவன் - எம்மால் விரும்பப்பட்டவள், நின்னினுமென்னீரள் - உன்னிலும் மெல்லிய தன்மையையுடையவள், ()

அனிச்சம் - பொருளாகுபெயர். வாழியென்பது உடன்பாட்டு வியங் கோள் குறிப்புச்சொல். (அனிச்சமே! நீ) இனி யானே மெல்லியதன்மை யை யுடையவனென்னுஞ்செருக்கினை ஒழிவாயாகவென்பதாம். (தலைமகன் தலைமகளை) அப்பொழுது பரிசித்து அறிந்தாளுகலால், பரிசத்தி னினிமை யையே பாராட்டினன். ‡ செருக்கு - கர்வம். பரிசித்து - தொட்டு.

(க - து.) தலைமகன் தலைமகளது பரிசத்தின் இனிமையை அனுபவித்து, அவளது மென்மைத்தன்மையை வியந்து கூறி னன் என்பது.

I.

phane).

May you flourish, O anicham! (of the sensitive You have a tender nature; but my beloved maiden is more tender than you.



உ.

மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று.

[இடந்தலைப்பாட்டின்கட் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நெஞ்சே! யானேகாணப்பெற்ற இவள்கண்களைப் பலரானுங் காணப்படும் பூக்கள் ஒத்தமென்று கருதித்தாமரை, குவளை, நீலமுதலிய மலர்களைக்கண்டால் மயங்காநின்றாய், நின்னறிவிருந்வா றென்? (எ - று).

. மையாத்தல் - ஈண்டு ஒவ்வாதவற்றை யொக்குமெனக்கோடல்; இறுமாத்தல் செம்மாத்த லென்பனபோல * வொருசொல். இயற்கைப்புணர்ச்சி நீக்கமுதலாகத் தலைமகள் கண்களைக் காணப்பெறுமையின் அவற்றோ டொருபுடை யொக்கு மலர்களைக் கண்டழியெல்லாம் அவற்றின்கட் காதல் செய்தபோந்தான், இதுபொழுது அக்கண்களி னலமுழுதுந் தானே தமி

யாளை யிடத்தெதிர்ப்பட்டனுபவித்தாலுகவின், அம்மலர்கள் ஒவ்வாமை கண்டு ஒப்புமைகருதிய நெஞ்சை யிகழ்ந்து கூறியவாறு.

தெளி:—[தலைமகன் இடந்தலைப்பாட்டில் சொல்லியது.] (இ - ள்.) நெஞ்சே - மனமே, இவள்கண் - (யானேகாணப்பெற்ற) இவள்கண்களை, பலர்காணும் - பலரானும் காணப்படும், பூவொக்குமென்று - மலர்கள் ஒக்கு

* மையாத்தல் என்பது (மை - மயக்கத்தை, யாத்தல் - கொள்ளுதல் என்று இருசொல்லாகக் கொள்ளாது) ஒருசொல்லாகக் கொள்ளப்பட்டது; ஒரு சொல்லாகக் கொள்ளுமிடத்து மையாபகுதி, கல்தொழிற்பெயர்விகுதி.



மென்று, (நினைத்து), மலர்காணின் - (தாமரை குவளை நீலமுதலிய) மலர் களைக் கண்டால், மையாத்தி - மயங்காநின்றாய், (உன் னறிவிருந்தவிதம் என்ன)? (எ - று).

மையாத்தல் - இங்கு ஒப்பாகாதவற்றை ஒப்பாமென்று கொள்ளுதல்; இறுமாத்தல் செம்மாத்தல் என்பனபோல ஒருசொற்றன்மையது. இயற் கைப்புணர்ச்சியி னீக்கம் முதலாகத் தலைமகளது கண்களைக் காணப்பெறு மையால் அக்கண்களோ டொருசிறிதொத்திருக்கிற மலர்களைக் கண்ட விடத்தெல்லாம் அம்மலர்களிடத்து ஆசைசெய்து வந்ததலைமகன், இப்பொ ழுது அக்கண்களினலமுழுதும் தானே தனித்தவந்தநின்றவளை இடத் தெதிர்ப்பட்டு அனுபவித்தாலுகலால், அம்மலர்கள் (அவள் கண்களுக்கு) ஒப்பாகாமையைக்கண்டு ஒப்புமைகருதிய நெஞ்சை இகழ்ந்து சொல்லியபடி யாம்.

(க - து.) நெஞ்சே ! நீ யானைகாணும் இவளது கண்களைப்

பலர்காணும்மலர்களுக்கொப்பாகக்கருதிமயங்குதல் கூடாதென்று தலைமகன் தன்மனத்தை நோக்கி யிகழ்ந்து கூறினன் என்பது.

2. O my mind! deeming that flowers seen by many can resemble the eyes of my beloved, you become confused at their sight.

---

ங. முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

[* கூட்டுதலுற்றபாங்கற்குத் தலைமகன்றலைமகளதியல்பு கூறியது.]

பரி:—(இ - ள்.) வேய்போலுந் தோளினையுடையவட்கு நிறந் தளிர்நிறமாயிருக்கும், பல்லுமுத்தமாயிருக்கும், இயல்பாயநாற்றம் நறுநாற்றமாயிருக்கும், உண்கண்கள் வேலாயிருக்கும், (எ - று).

† பெயரடையாலும் ஓரியல்பு கூறப்பட்டது.

‡ முறி, முறுவ

---

* கூட்டுதலுற்ற - (தலைமகளைத்தான்) கூடுதலைச் செய்த.

† வேய்த்தோளவட்கு என்னும் பெயரின் அடை (விசேடணம்) வேய் என்பது. அப்பெயரடையான வேய் என்பதனானும் தலைமகளுக்கு

ஓரியல்பு கூறப்பட்டது. அவ்வியல்பாவது தலைமகளது தோள்கள் அள வாலும் வடிவாலும் பசுமை நிறத்தாலும் வேயை (மூங்கிலை) ஒத்திருக் கும் என்பது. "அளவே வடிவொப்ப தன்றியே பச்சை, யிளவேய் நிறத் தானு மேய்க்கும் - தளவேய், கலைக்குமரி போர்த்தளக்குங் காரவுணர் வீரந், தொலைக்குமரி யேறுகைப்பா டோள்" என்றார் பிறரும்.

‡ முறி (தளிர்) என்னும் முதலின் (பொருளின்) பெயர் அதன்பண் பாகிய நிறத்தினையும், முறுவல் (சிரிப்பு) என்னும் பண்பின்பெயர் அதன்



லென்பன ஆகுபெயர். * உருவகவகையாற் கூறினமையின், புனைந்துரை யாயிற்று. நின்னுற் கருதப்பட்டாளோ யறியேனென்று சேட்படுத்த தோழி க்குத் தலைமகன் சொல்லியதூஉமாம்.

தெளி:—[கூட்டுதலுற்ற பாங்கனுக்குத்தலைமகன் தலைமகளது இயல் பினைச்சொல்லியது.] (இ - ள்.) வேய்த்தோளவட்கு-மூங்கில்போலுந் தோ ளினையுடையவளுக்கு, மேனி-நிறம், முறி-தளிர்நிறமாயிருக்கும், முறுவல்-பல்லு, முத்தம் - முத்தமாயிருக்கும், நாற்றம்-இயற்கையாயவாசனை, வெறி-நல்லவாசனையாயிருக்கும், உண்கண் - (மை) உண்டகண்கள், வேல் - வேலா யிருக்கும், (எ - று).

வேய்த்தோளவட்கு என்பதன்கணுள்ள வேய் என்னும் பெயரடையாலும் ஒருதன்மை சொல்லப்பட்டது. முறி-பொருளாகு பெயர்; முறுவல்-பண்பாகுபெயர். (மேனிமுறி, முறுவல் முத்தம், நாற்றம் வெறியென்று) உருவகவகையால் சொல்லினமையால், இது புனைந்துரையாயிற்று. இஃது உன்னுல் கருதப்பட்டவளே யானறியேனென்று சேட்படுத்திய தோழிக்குத் தலைமகன் சொல்லியதுமாம்.

(க - து.) தலைமகளது அழகைத் தலைமகன் தன்பாங்கனுக்கு உருவகவகையால் மேனிமுறி, முறுவல் முத்தம், நாற்றம் வெறியென்று சிறப்பித்துக் கூறினன் என்பது.

3. The complexion of the bamboo—shouldered maiden is like a tender shoot ; her teeth are like pearls ; her breath
emits good fragrance ; and her dyed eyes are like the darts of a lance.

ச. காணிற் குவளை கவிழ்ந்து நிலனேக்கு
மாணிழை கண்ணெவ்வே மென்று.

[பாங்கற்கூட்டத்திற்சென்று † சார்தலுறுவான் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) குவளைப்பூக்கடாழும் காண்டற்றொழிலை யுடைய வாயின், மாண்டவிழையினை யுடையாள் கண்களை ‡ யாமோவ்வே மென்று கருதி அந்நாணினை யிறைஞ்சி நிலத்தினை நோக்கும், (எ - று).

முதலாகிய பல்வினையு முணர்த்துதலால், முறையே இவை முதலாகு பெயரும், பண்பாகுபெயருமாம்.

* மேனி மூறியென்றும், முறவல் முத்தம் என்றும், நாற்றம் வெறி யென்றும் உருவகவகையால் கூறினமையின், (இக்குறள்) புனைந்துரை (அலங்காரித்துச்சொல்லுதல்) ஆயிற்றென்பது. உருவகமாவது உவமானத் தையும் உவமேயத்தையும் வேற்றுமை யொழிவித்து ஒன்றென்னும் உள் ளுறை (கருத்து) தோன்றக் கூறுவதாம்.

† சார்தலுறுவான்–தலைமகளைக் கூடுந் தலைமகன்.

‡ யாமொவ்வேம் = யாம் ஒப்பாகோம்.

## களவியல்—நூ-வது நலம்புனைந்துரைத்தல். 11

## 89

பண்பாணே யன்றித் தொழிலா னு
மொவ்வாதென்பான் 'காணின்' என்றும், கண்டால்
அவ்வொவ்வாமையால் நாணுடைத்தாமென்பது தோன்றக்
'கவிழ்ந்து' என்றுங் கூறினான். காட்சியு நாணுமின்மையிற்
செம்மாந்து வானைநோக்கின வென்பதாம்.

தெளி:—[பாங்கற் கூட்டத்திற்சென்று
சார்தலுறுந்தலைமகன் சொல்லியது.] (இ - ள்.) குவளை -
குவளை மலர்களும், காணின் - காணுதற்றொழிலை
யுடையனவாயின், மாணிழைகண் - மாட்சிமையுடைய

ஆபரணங்களை யுடையவளது கண்களை,
ஒவ்வேமென்று—(யாம்) ஒவ்வேமென்று (நினைத்து),
கவிழ்ந்து - (அந்நாணத்தினால்) தலைகுனிந்து, நிலன் -
நிலத்தினை, நோக்கும் — பார்க்கும், (எ - று).

(தலைமகன் தலைமகளது கண்களுக்கு) குவளைப்பூ

கருமை நிறமென் னும்பண்பாலேபன்றிக்
காண்டற்றொழிலாலும் ஒவ்வாதென்பான்'காணின்' என்றும்,
கண்டால் அவ்வொவ்வாமையால் நாணுடையதாமென்பது
தோன்றக் 'கவிழ்ந்து' என்றும்சொல்லினான். காணுதலும்
நாணுதலும் இல்லாமையால் குவளைப்பூக்கள் இறுமாந்து
ஆகாயத்தை நோக்கினவென்பதாம.

(க - து.) தலைமகன் இவளது கண்களைக்
குவளைமலர்கள்
காணுந்தன்மையனவா யிருக்குமாயின், அவையாமிவளது கண்
களுக்கொப்பாகோமென்று கருதி நாணமுற்றுத் தலைகுனிந்து
நிலத்தை நோக்குமென்று கூறினான் என்பது.

4. If the lotus could see, it would bend looking at the ground as if with shame saying "I can never resemble the eyes of the jewelled maiden".

ரு. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா

ணைசுப்பிற்கு

நல்ல படாஅ பறை.

[* பகற்குறிக்கட் பூவணிகண்டு சொல்லியது.]

பரி:—(இ - ள்.) இவள் தன்மென்மை கருதாது அனிச்சப்பூவை † முகிழ்களையாது சூடினாள்; இனி யிவளிடைக்கு நல்லபறைக ! ளோலி யா, (எ - று).

---

* பகற்குறியாவது பகலிற் கூடுமிடத் தடையாளமாம்; அஃதாவது பகலில் ஓரிடத்தைக் குறியா (அடையாளமா)க வேற்படுத்திக்கொண்டு தலைமகன் வந்து தலைமகளைக்கூடுதலாம். "பகற்குறி யென்பது தலைமகளைத் தழையேற்பித்தலோழி தலைமகனுடன் அவளைப் பதற்குறிக்கண் தலைப் பெய்வியா (கூட்டா) நிற்றல்" என்று திருக்கோவையாருரையிற் கூறப் பட்டிருக்கிறது. † முகிழ் - காம்பினடி; களையாது - நீக்காது.

‡ ஓலியா என்பது ஒலிக்கும் என்னும் பொருளது. [படாஅ என்னும் எதிர்மறைச்சொல் படும் (ஒலிக்கும்) என்றுடன்பாட்டுப்பொருள் நின்றது].



அம்முகிழ்ப்பாரம் பொறுமையின் இடைமுரியும்; முரிந்தால், அதற்குச் செத்தார்க்குரிய * நெய்தற்பறையே பலவதென்பதாம். மக்கட்குரிய சாக்காடும் பறைபடுதலும் † இலக்கணைக்குறிப்பால் நுகுப்பின்மே லேற்றப்

பட்டன.

தெளி:—[தலைமகன் பகற்குறியில் தலைமகளது பூவணிகண்டு சொல்லியது.) (இ - ன்.) (இவள் தன்மென்மையை நினையாமல்) அனிச்சப்பூ - அனிச்சமலரை, காலினையான் - தாள்தினையாது, பெய்தாள் - சூடினாள், நுசுப்பிற்கு - (இனியிவள்) இடைக்கு, நல்லபறை - நல்லபறைகள், படாஅ-

ஒலியா, (எ - று).

அம்மலர்த்தாளின்பாரம் பொறுமையால் (இவள்) இடைமுரியும்: முரிந்தால், அவ்விடைக்குச் சென்றவர்க்கு உரிய நெய்தற்பறையே ஒலிக்குமென்பதாம் மக்கட்குரியசாவும் பறையொலித்தலும் இலக்கணைக் குறிப்பால் நுசுப்பின் (இடையின்) மேல் ஏற்றப்பட்டன. இதனால் நுசுப்பு மிக நுண்மையதென்பது பெறப்படுவதாம்.

(க - து.) தலைமகன் தலைமகளதுஇடையினுண்மையைக்காம்பு தினையாத பூவணிவாயிலாக விபந்நாகூறினன் என்பது.

5. No merry drums will be beaten as the anicham adorned by the maiden without removing the stems will wring down her delicate waist.

சு. மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்.

(1 இரவுக்குறிக்கண் மதிகண்டு சொல்லியது.)

பரி:—(இ - ள்.) வானத்து ¶ மீன்கள் வேறுபாடு

பேரிதாகவும் தம்மதியினையும் எம்மடந்தை முகத்தினையும் இதுமதி இதுமுகமென்
றறியமாட்டாது தந்நிலையினின்றுங் கலங்கித் திரியாநின்றனன், (எ-று).

---

* நெய்தற்பறை - சாப்பறை.

† "ஆக்கும் பிரதி பதத்துடனே" என்னும் பிரயோகவிவேகச் செய்யுளினுரையில் "நசுப் பிற்கு, கல்லபடாஅ பறை" என இலக்கணையடியாய்த் தோன்றிய குறிப்பை இலக்கணமூலத்தோனி என்பர்" என்று கூறப்பட் டிருக்கிறது. இலக்கணைக் குறிப்பாவது ஒருபொருளினது இலக்கணத்தை மற்றொருபொருட்குத் தந்துரைப்பதாம். இங்கு மக்கட்குரிய சாதலும் பறை படுதலும் இடையின்மேலேற்றப்பட்டவாறறிக.

‡ இரவுக்குறியாவது இரவிற் கூடுமிடத் தடையாளமாம்; அஃதாவது தலைமகன் தலைமகளை இரவில் அவளதுமனையினருகே குறித்ததோ நிடத்தில் வந்து புணருதலாம். ¶ மீன்கள் - நட்சத்திரங்கள்.

ஓரிடத்து நில்லாது எப்பொழுதும் † மியங்குதல்பற்றிப் 'பதியிற்கலங் கிய' என்றான். ‡வேறுபாடு வருகின்றபாட்டாற்பெறப்படும். ¶ இனி யிரண் டனையும் பதியிற்கலங்காத மீன்களறியுமல்லது கலங்கின மீன்கள் அறியா வென்றுரைப்பினு மமையும்.

தெளி:—[இரவுக்குறியில் தலைமகன் சந்திரனைக்கண்டு சொல்லியது.) (இ - ள்.) மீன் - (வானத்துத்) தாரகைகள், (வேறுபாடு பொறிதாயிருக்க வும்), மதியும் - (தமது) சந்திரனையும், மடந்தை முகனும் - (எமது) மடந் தையின் முகத்தையும், அறியா - (இது சந்திரன் இது முகமென்று) அறிய மாட்டாமல், பதியின் - (தமது) நிலையினின்றும், கலங்கிய-கலங்கித்திரியா நின்றன, (எ - று).

வானத்துத் தாரகைகள் ஓரிடத்து நில்லாமல் எப்போதும் இயங்குதல் பற்றிப் 'பதியிற்கலங்கிய' என்றான். வேறுபாடு பின்வரும் பாட்டாற் பெ றப்படும். இனி (மதி, மடந்தை முகமென்னும்) இரண்டனையும் நிலையிற் கலங்காத தாரகைக ளறியுமல்லாமல் கலங்கிய தாரகைகள் அறியமாட்டா வென்றுரைகூறினு மொக்கும். தாரகை - நட்சத்திரம்.

(க - து.) தலைமகளது முகத்திற்கும் மதிக்கும் உள்ள வேறு பாட்டினை யறியாது நட்சத்திரங்கள் தமது நிலையினின்றுங் கலங் கித்திரிந்தன வென்று

கூறினன் தலைமகன் என்பது.

6. The stars perplexed are rushing from their spheres, not being able to distinguish between the moon and the maiden's face.

எ. அறுவாய் நிறைந்த வயிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.
(இதுவுமது.)

பரி:—(இ - ள்.) அம்மீன்கள் அங்ஙனங் கலங்குததற்குக் காரணம்

யாது? முன்தூறைந்தவிடம் வந்து நிரம்பியே
இம்மாதர் முகத்து மறுவுண்டோ, (எ - று).

விளங்குமதிக்குட்போல

இடம் - கலை. ‡ மதிக்கென்பது வேற்றுமை மயக்கம். தெய்தலும்

---

† இயங்குதல் - திரிதல்.

‡ வேறுபாடு—மதிக்கும் மடந்தைமுகத்திற்கு முள்ளவேற்றுமை.

¶ இனி 'மதியு மடந்தை முகனும்' என்னும்

இரண்டனையும் பதி
(தமது நிலை)யிற் கலங்காத மீன் (நட்சத்திரங்)கள்
அறியுமல்லாமல் (பதி
யிற்) கலங்கின மீன்(நட்சத்திரங்) கள் அறியா என்று
பொருளுரைப்பினும் பொருந்தும்.

மதிக்கு என்பதன்கணுள்ள கு என்னும்
நான்கனுருபு தனக்குரிய
பொருளைவிட்டு மதிக்கண் என ஏழனுருபின் பொருளில்
வந்தமையின்,
வேற்றுமை மயக்கமாயிற்று.



வளர்தலும் மறுவுடையையு மின்மைபற்றி
வேறுபாடறியலாயிருக்க அறிந் திலவென விகழ்ந்து
கூறியவாறு.

தெளி:—(இதுவுமது.) (இ - ள்.) (அத்தாரகைகள்
அவ்வாறு கலங்கு தற்குக் காரணம்யாது? ) அறிவாய் -
முன்குறைந்த விடம், நிறைந்த - வந்து நிரம்பியே, அவிர் -
விளங்குகிற, மதிக்குப்போல - சந்திரனிடத்துப்போல,
மாதர்முகத்து-இம்மாதர் முகத்தினிடத்து, மறு-களங்கம்,
உண்டோ-இருக் கின்றதோ, (இல்லை), (எ-று).

இடம்-கலை. மதிக்கு என்பது மதிக்கண்ணன வேற்றுமை மயக்கமா

யிற்று. (முகத்திற்குத்) தேய்தலும் வளர்தலும் களங்கமுடைமையும் இல்லா மைபற்றி (இதுமதி இதுமுகமென்று) வேறுபாடு அறியலாயிருக்கத் தா கைகள் (அவ்வேறுபாட்டை) அறிந்திலவென்று (தலைமகன் அவற்றை) இகழ்ந்து சொல்லியபடியாம். நிறைந்த என்பது இங்கு வினையெச்சப் பொ ருளில் வந்தது.

(க - து.) தேய்தலும் வளர்தலும் களங்கமு முடைய சந் திரன் அலைபில்லாத தலைமகளது முகத்திற்கு ஒப்பாகாதென்றான்.

7. Could there be dark spots in the face of this maiden like the waxing & waning of the moon.

## ஆ. மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற் காதலை வாழி மதி.

(இதுவுமது.)

பரி:—(இ - ள்.) மதியே! வாழ்வாயாக, இம்மாதர் முகம்போல யான் மகிழும்வகை ஒளிவீசவல்லையாயின், நீயுமென்காதலை யுடையை யாதி, (எ - று).

மறுவுடைமையின் அது மாட்டாய்; மாட்டாமையின், என்னுற் காத லிக்கவும் படாயென்பதாம். 3 வாழியென்பது இகழ்ச்சிக் குறிப்பு.

தெளி:—(இ - ள்.) (இதுவுமது.) (இ - ள்.) மதி - சந்திரனே, வாழி- வாழ்வாயாக, மாதர்முகம்போல் - இம்மாதர் முகத்தைப்போல, ஒளிவிட வல்லையேல் - (நான்மகிழும்படி) ஒளி வீசவல்லையாயின், காதலை - (நீயும் என்) காதலை (உடையையாவாய்), (எ - று).

மதியே! உன்னிடத்துக் களங்கமிருத்தலால் நீ இம்மாதர்முகத்தைப் போலொளிவிடமாட்டாய்; ஒளிவிட மாட்டாமையால், என்னுல் விரும்பவும் படாயென்பதாம். வாழி - இகழ்ச்சிக்குறிப்புச்சொல். காதல் - விருப்பம்.

---

* வாழியென்பது இகழுதற்கண்வந்த குறிப்புச்சொல். இவ்வாறுவரு தலைப் "பல்சான் றீரோ பல்சான் றீரே, கயன்முள் ளன்ன வைமுத் திரை கவுட், பயனின் மூப்பிற் பல்சான் றீரே" என்பதனாலு மறிக.



(க - து.) தலைமகன் சந்திரனேநோக்கி நீ களங்கமுடைமை யால், இவள் முகம்போல ஒளிவீசுந் தன்மையனல்லை என்றிழித் துக்கூறினன் என்பது.

8. Farewell O moon ! if you can shine bright like the face of the maiden you would be worth loving.

கூ. மலரன்ன கண்ணுண் முகமோத்தி யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி.

(இதுவுமது)

பரி:—(இ - ள்.) மதியே! இம்மலர்போலுங் கண்ணினையுடை யாண் முகத்தை நீயோ கீகவேண்டுதியாயின், இதுபோல யான் காணத் தோன்று, பலர்காணத் தோன்றுதோழி, (எ - று).

தானே முகத்தி னலமுழுதுங்
கண்டனுபவித்தாஞகலின், * எண்டிம் பலர்
காணத்தோன்றலே யிழிச்துக் கூறினன். தோன்றின்
நினக்கவ்வொப் புண்டாகா தென்பதாம்.

தெளி:—(இ தவுமது.) (இ - ள்.) மதி - சந்திரனே, மலரன்னகண் ணுள் - இம்மலர்போலுங் கண்களையுடையவளது, முகம் - முகத்தை, ஒத்தி யாயின் - (நீ) ஒத்திருக்க விரும்பு யாயாயின், (இம்முகத்தைப்போல யான் காணத்தோன்று), பலர்காணத் தோன்றல் - பலர்காணத்தோன்று தொழி.

(தலைமகன்) தானே (தலைமகளது) முகத்தினலமுழுதும் கண்டனுப விச்தாஞகலால், இங்கும் (சந்திரன்) பலர்காணத் தோன்றலே இழிச் துச்சொல்லினன். (சந்திரனே! நீ பலர்காணத்)தோன்றினால் உனக்கு அம் முகத்தோடு ஒப்பு உண்டாகா தென்பதாம். நலம்-அழகு.

(க - து.) தலைமகன் சந்திரனே! நீ என்

தலைவியின் முகத்திற் கொப்பாக விரும்புவாயாயின்,
பலர் காணத்தோன்றுவ தொழியக்
கடவாயென்றதனையிழித்துக் கூறினன் என்பது.

9. O moon ! if you wish to resemble the face of her
whose eyes are like flowers, do not appear for all to see.

---

* "மலர்காணின் மையாத்தி லெஞ்சே
யிவள்கண், பலர்காணும் பூவொ க்கு மென்று" என்றுள்ள
இவ்வதிகாரத்தி னிரண்டாவது குறளில் மலர் பலராணுங்
காணப்படுதலை யிழித்துக் கூறினாற்போல, சண்டும்
தலைமகன்
மதி பலர்காணத்தோன்றலை யிழித்துக் கூறினன் என்பது.





கo. அனிச்சமு மன்னத்தின் ஹாவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்.

(* உடன்போக்குவரத்த தோழிக்கு † அதனதருமைகூறி
மறுத்தது.)

பரி:—(இ - ள்.) உலகத்தாரான் மென்மைக்கோடுக்கப்பட்ட அனிச்சப்பூவும் அன்னப்புள்ளின் சிறதமாகிய விரண்டும் மாதாடிக்கு நெருஞ்சிப்பழம்போல வருத்தஞ்செய்யும், (எ - று).

† முல் வலிதாத லுடைமையிற் 'பழம்' என்றான். இத்தன்மைத் தாயவடி ¶ "பாத்தியன்ன குடுமிக் கூர்ங்கற்"களையுடைய § வெஞ்சுரத்தை யாங்ஙனங் கடக்குமென்பது குறிப்பாற் பெறப்பட்டது. ‡ செம்பொருளே யன்றிக் குறிப்புப் பொருளும் அடிகல னழியாமையாகலின், () இதுவுமிவ் வதிகாரத்த தாயிற்று.

தெளி:—(உடன்போக்குரைத்த தோழிக்குத் தலைமகன் அதனது அருமையைக்கூறி மறுத்தது.) (இ-ள்.) (உலகத்தாரால் மென்மைக்கு எடுக்கப்பட்ட) அனிச்சமும் - அனிச்சமலரும், அன்னத்தின் றாவியும் - அன்னப் பறவையின்சிறகும், (ஆகிய இரண்டும்), மாதரடிக்கு - மாதாது பாதத்திற்கு, நெருஞ்சிப்பழம்-நெருஞ்சிப்பழம் (போல வருத்தஞ்செய்யும்),(எ-று).

முல்வலிதாதலுடைமையால் 'பழம்' என்றான். இத்தன்மையதாய அடி பாத்தியிட்டாற்போன்ற வச்சியினையுடைய கூரியகற்களையுடைய பாலைநிலவழியை எவ்வாறு கடக்குமென்பது குறிப்பால் பெறப்பட்டது. செம்பொருளே யன்றிக் குறிப்புப்பொருளும் அடிகல னழியாமையாகவின், இதுவும் இவ்வதிகாரத்ததாயிற்று.

---

* உடன்போக்கு-தலைமகன் தன்னூர்க்குத் தலைமகளை யுடன் கொண்டு

போதல். † அதனருமை - உடன்போக்கினருமை.

‡ தலைமகன் நெருஞ்சிப்பழத்தின்மூள் வலிதாத (கடினமாத) லுடை மையால், நெருஞ்சிமுள் என்று கூறுது நெருஞ்சிப்பழம் என்று கூறினான்.

¶ அகநானூறு, களிற்றியானைநிரை. § இதன்பொருள். பாத்தியிட் டாற்போன்ற உச்சியினையுடைய கூரியகல் என்பது. பார்ப்பதி யன்ன என் றும் பாடமுண்டு. பார்ப்பதி – பெருநெருஞ்சில்.

§ வெஞ்சுரம்–சூடுமிக்க மணற்காடு; அஃதாவது பாலைவனம்.

: "இத்தன்மைத்தாயவடி...யாங்ஙனம் கடக்கும்" என்பதுவரை குறிப்புப் பொருள்; மற்றது செம்பொருள். குறிப்புப்பொருள் - நோற்றலால்றிக் குறிப்பாற் பெறப்படும் பொருள். நோற்றல் இச்சொல்லாலிப் பொருளையறிக வென்னுஞ் சங்கேதம் (இச்சை). செம்பொருள் - செஞ் சொல்லாற் பெறப்படும்பொருள். செஞ்சொல் - வெளிப்படைச்சொல்.

() இதனும் - இக்குறளும்.

## களவியல்—நு-வது காதற்சிறப்புரைத்தல். 1

## 195

(க - து.) தலைமகன் தலைமகளது பாதத்தின் மென்மைச்சிறப்பை வியந்துகூறினன் என்பது.

10. The (flowers of the sensitive plant) anicham and the feathers of the swan are to the (delicate) feet of woman like the thorny Nerunji fruit.

## 5--வது அதிகாரம்

## காதற்சிறப்புரைத்தல்:—Declaration of excessive love.

பரி.—அஃதாவது தலைமகன் தன்காதன் மிகுதிகூறலும், தலை
மகள் தன்காதன் மிகுதிகூறலுமாம். † இது புணர்ச்சியும் நலனும் பற்றி நிகழ்வதாகலின், புணர்ச்சிமகிழ்தல் நலம்புனைந்துரைத்தல் களின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது தலைமகன் தன்காதல்மிகுதியைச் சொல்லுத
லும், தலைமகள் தன்காதல் மிகுதியைச் சொல்லுதலுமாம். இது புணர்ச்சி யும் நலனும்பற்றி நிகழ்வதாகலால், புணர்ச்சிமகிழ்தல் நலம்புனைந் துரைத்தல்களின்பின் வைக்கப்பட்டது. காதல் - ஆசை

க. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

(இயற்கைப்புணர்ச்சி யிறுதிக்கட் டலைமகன்

றன்னயப்புணர்த்தியது.)

பரி:—(இ - ள்.) இம்மெல்லிய மொழியினை யுடையாளது வாலிய வெயிறூறியநீர் பாலுடனே தேனைக்கலந்த கலவைபோலும், (எ-று).

கலந்ததற்றென்பது விகாரமாயிற்று;

கலக்கப்பட்டதென்றவாறு. 'பாலொடு தேன்' என்றவதனால் ‡ அதன்சுவைபோலுஞ் சுவையினையுடைத் தென்பதாயிற்று. 'வெயிறூறிய' என ¶ இடத்துநிகழ்பொருளின் றொழில் இடத்தின்மே னின்றது. வேறுவே றறியப்பட்ட சுவையவாய பாலுந்தே னுங் கலந்துழி அக்கலவை இன்னதென்றறிவரிதாத இன்சுவைத்தாமாகலின், இது பொருளாகிய நீர்க்கு மெய்த்துவிக்க.

தெளி:—[இயற்கைப்புணர்ச்சியின் முடிவில் தலைமகன் தன் காதலை யறிவித்தது] (இ - ள்.) பணிமொழி - இம்மெல்லிய சொல்லினை யுடையவளது, வாலெயிறு - தூய்மையான பல்லில், ஊறிய நீர் - ஊறிய நீரானது, பாலொடுதேன் கலந்தற்று - பாலுடனே தேனைக் கலந்த கலவை போலும், (எ - று).

---

† இது - காதற்சிறப்புரைத்தல்.

‡ அதன் - பாலொடுகூடிய தேனினது.

¶ எயிறு (பல்) என்னும் இடத்தினிகழ்வதான நீரொன்னும் பொருளினது ஊறுதல் (சுரத்தல்) என்னும் தொழிலை இடத்தின் (பல்லின்) மேல் ஏற்றி 'எயிறூறிய' என்று கூறப்பட்டது.



கலந்ததற்றென்பது கலந்தற்று என விகாரமாயிற்று; அதன்பொருள் கலக்கப்பட்டதென்பதாம். 'பாலொடுதேன்' என்றவதனால் 'வாலெயிறூறிய நீர்' அதன் சுவைபோலுஞ் சுவையினை யுடையதென்ப தாயிற்று. 'எயிறூறிய' என்பது இடத்தினிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேலாய உபசார வழக்காம். வேறு வேறறியப்பட்ட சுவையினையுடையனவாயபாலையும் தேனையும் கலந்தவிடத்து அக்கலவை இன்னதென்று அறியலாகாத இனிய சுவையை யுடையதாமாகலால், இச்சுவையை உவமேயமான நீர்க்கும் அடைவிக்க. பணிமொழிவாலெயிறூறியநீர் இன்னதென்றறியலாகாத இனிய சுவையையுடையதாமென்க. எ-அசை.

(க - து.) தலைமகளது அதரபானஞ்செய்த தலைமகன் அதனது சிறப்பைப் 'பாலொடு தேன்கலந்தற்றே' என்றுவமை வாயிலாக வியந்து கூறினன் என்பது.

1. The water soaked in the white teeth of this soft speeched maiden is like the admixture of milk & honey.

## உ. உடம்பொ டியிரிடை யென்னமற் றன்ன மடந்தையொ டெம்மிடை நட்பு.

(* பிரிவச்சங் கூறியது.)

பரி:—(இ - ள்.) உடம்போடுயிரிடையுளவாய நட்புக்கள் எத்தன்மைய அத்தன்மைய இம்மடந்தையோடு எம்மிடையுளவாய நட்புக்கள், (எ - று).

'என்ன' எனப் பண்மையாற் கூறியது, இரண்டுந் † தொன்று தொட்டு வேற்றுமையின்றிக் கலந்து வருதல், இன்பத்தன்பங்க ளொக்கவனுபவித்தல், இன்றியமையாமை யென்றிவற்றை நோக்கி. ‡ தெய்வப்புணர்ச்சியாகலான் அது பொழுது உணர்ச்சியிலளாகியாள் பின்னுடையளாமன்றே, ஆயவழி இவன் யாவன் கொலெனவும், என்கணன்புடையன்கொ லெனவும், இன்னுமிவனேத் தலைப்பெய்தல் கூடுங்கொலெனவும், அவண்மனத்

---

* பிரிவச்சங்கூறியது-தலைமகன் தலைமகளைப்பிரியும்போ தண்டாகிய அச்சத்தைச்.சொல்லியது. அச்சம் - பயம்.

† தொன்றுதொட்டு - அநாதியாக.

‡ இயற்கைப்புணர்ச்சி தெய்வத்தாற் புணரும் புணர்ச்சியும் தலைமக ளாற் புணரும் புணர்ச்சியுமென் றிருவகையாம். அவற்றுள், தெய்வப்புணர் ச்சியாவது தெய்வம் (ஊழ்) கூட்டத்தன்னறிவு மாறுபட்டுத்தலைமகன் தலை மகளைப் புணருதலாம்; "வேட்கை யுணர்த்தல் மறுத்த லுடன்படல், கூட்ட மென் றிறைவியிற் கூட்டோ வகைத்தே" என்பது மற்றதாம்.



தின்க ணிகழும்; அந்நிகழ்வனவற்றைக் குறிப்பானறிந்து அவைதீரக் கூறிய வாறு. * என்னே யென்று பாட மோதுவாரு முளர்.

தெளி:—(தலைமகன் பிரிவிலுண்டாகிய அச்சத்தைச் சொல்லியது.)

(இ - ள்.) மடந்தையொடெம்மிடை-இம்மடந்தையோடு எம்மிடத்து, (உள வாகிய), கட்பு - கட்புக்கள், உடம்பொடுயிரிடை - உடம்போடு உயிரிடத்து, (உளவாகிய கட்புக்கள்), என்ன - எத்தன்மையன, அன்ன - அத்தன்மை யனவாம், (எ - று)

'என்ன' எனப் பன்மையாற் சொல்லியது, உயிரும் உடம்புமாகிய இர

ண்டும் தொன்றுதொட்டு வேற்றுமையில்லாமல் கலந்துவருதல், இன்பத்துன்

பங்களே யொக்க அனுபவித்தல், ஒன்றற்கொன்று அவசியமாதல் என்ற இவ

ற்றை நோக்கியாம். தெய்வப் புணர்ச்சி பாகலால் அப்பொழுது உணர்ச்சியில் லாதிருந்தவள் பின்னே உணர்ச்சியுடையவளாமன்றே, ஆகியவிடத்து இவன் எவனேவென்றும், என்னிடத்து அன்புடையவனேவென்றும், இன்னும் இவனைக் கலத்தல் கூடுமோ வென்றும் அவளுள்ளத்துத் தோன்றும்; அவ்வாறுதோன்றுவனவற்றைத் தலைமகன் குறிப்பால் அறிந்து (தலைமகளுக்கு) அவை நேரச்சொல்லியபடியாம். மற்று-அசைநிலை.

(க - து.) தலைமகன் இவளுக்கும் எனக்கும் உளவாகிய நட்புக்கள் உயிருக்கும் உடலுக்கும் உளவாகிய நட்புக்கள் போன்றன வாமென்று கூறினன் என்பது.

2. The friendship between this maiden & myself is like
the union of the body & atman.

க.



கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம்.

[இடந்தலைப் பாட்டின்கட் டலைமகணீக்கத்துச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) என்கண்ணிற் கருமணியின்க ணுறையும் பாவாய், நீ யங்குநின்றும் போதருவாயாக, போதாதிருத்தியாயின், எம்மால் விரும்பப் பட்ட திருநுதலை யுடையாட்கு இருக்க விடமில்லையாம், (எ - று).

யான் காணு தமையாமையின் இவள் புறத்துப்போகற்பாலளன்றி என் கண்ணு ளிருக்கற்பாலள்; இருக்குங்கால் நின்னெடொருங்கிருக்க இடம் போதாமையின், நின்னினுஞ் சிறந்த விவட்கு அவ்விடத்தைக் கொடுத்து நீ போதுவாயாக வென்பதாம்.

தெளி:—[இடந்தலைப்பாட்டில் தலைமகள் நீங்கும்போது தலைமகன் சொல்லியது.] (இ - ள்.) கருமணியிற்பாவாய் - (என் கண்ணிற்) கருமணி

---

* என்ன என்பதற்குப் பிரதியாக என்னை யென்று பாடங்கூறுவாருமுண்டு.



யில் வசிக்கும் பாவையே, நீ போதாய் - நீ (அவ்விடத்தினின்றும்) போ

வாயாக, (போகாதிருந்தாயானால்), யாம் வீழும் - எம்மால் விரும்பப்பட்ட,

திருநுதற்கு - அழகிய நெற்றியை யுடையவளுக்கு, இடம் - இருக்கவிடம்,

இல்லை - இல்லையாம், (எ - று).

(இவளை) யான் காணுதிருத்தல் முடியாமையால் இவள் புறத்திற் போ

குந்தன்மையளாகாமல் என் கண்ணுள் இருக்குந் தன்மையள்;இருக்கும்போ

து (கருமணியிற் பாவையே ! கருமணியில்) உன்னுடனொருமித்திருக்க

இடம் போதாமையால், உன்னிலுஞ் சிறந்த இவளுக்கு அவ்விடத்தைக்

கொடுத்து நீ போய்விடுவாயாக வென்பதாம்.

(க - து) அன்பின் மிகுதியால் தலைமகன் தலைமகளை உறுப்

பிற் சிறந்த கண்ணின் கருமணியின் பாவையிலும் சிறந்தவளாகக்

கூறினன் என்பது.

3. O pupil of my eye ! begone; there is no room for my fair browed beloved.

ச. வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து.

[பகற்குறிக்கட் புணர்ந்தீங்குவான் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) தெரிந்த விழையினை யுடையாள் எனக்குப் புணருமிடத்து உயிர்க்குடம்போடு கூடிவாழ்தல் போலும்; பிரியுமிடத்து அதற்று அதனினீங்கிப் போதல் போலும், (எ - று).

* எனக்கென்பதும் புணருமிடத்தென்பதும் அவாய் நிலையான்வந்தன. † வாழுங்காலத்து வேற்றுமையின்றி ‡ வழிநிற்றலானும், சாங்காலத்து ¶ வருத்தஞ் செய்தலானும், () அவற்றை அவள்புணர்வுபிரிவுகட் குவமை யாக்கினான்.

தெளி:—[பகற்குறியில் தலைமகளைப் புணர்ந்து நீங்குந் தலைமகன் சொல்லியது]. (இ - ள்.) ஆயிழை-ஆராய்ந்தணிந்த ஆபரணத்தையுடையவள், (எனக்குப் புணருமிடத்து), உயிர்க்கு-, வாழ்தலண்ணள் - (உடம்போடுகூடி)

---

* உயிர்க்கு வாழ்தலண்ணள் என்பது எனக்கு என்பதையும், புணருமிடத்து என்பதையும் அவாவி (வேண்டி) நின்றது.

†

வாழுங்காலத்து - உயிர் உடம்போடுகூடி வாழுங்காலத்தில்.

‡ வழிநிற்றல் - ஒருசொல்; அதன்பொருள் இருத்தல்.

¶ வருத்தஞ் செய்தலானும் - உயிர்க்கு உடம்பு

தன்பத்தைச் செய்த . லாலும.

() அவற்றை-வாழ்தலையும் சாதலையும்.

வாழ்தல்போ லாகின்றுள், நீங்குமிடத்து - பிரியுமிடத்து, அதற்கு - அவ் வுயிர்க்கு, சாதலன்னள் - அவ்வுடம்பி னின்றும் நீங்கிப்போதல்போ லா கின்றுள்.

எனக்கென்பதும் புணருமிடத்தென்பதும் அவாய்நிலையால் வந்தன. வாழுங்காலத்து (உயிருமுடம்பும்) வேற்றுமையிலாமல் வழிநிற்றலாலும், சாங்காலத்து வருத்தஞ்செய்தலாலும், தலைமகன் அவற்றை அவள் புணர் வுபிரிவுகளுக்கு உவமையாக்கினான்.

(க - து.) தலைமகன் இவளென்றோடு புணருதல் உயிருடம் போடுகூடி வாழ்தலையொக்கும்; இவளென்னினின்றும் பிரிதல் உயி ருடம்பினின்றும் பிரிதலை யொக்குமென்று கூறினன்.

4. The fair - jewelled maiden resembles the life in the body when she is in union with me, & when she leaves me. the lifeless body

நி. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்டறியே

## ளெள்ளமர்க் கண்ணுள் குணம்.

(* ஒருவழித்தணந்துவந்த தலைமகன் நீயிர்தணந்தநாண்று எம்மை
யுள்ளியுமறிதிரோவென்ற
தோழிக்குச் சொல்லியது.)

பரி:—(இ - ள்.) ஒள்ளியவாய் அமைச்செய்யுங் கண்ணினை யுடையாள் குணங்களை யான்மறந்தேனெயின், நினைப்பேன், ஒருபொழுதும் மறத்தலையறியேன், ஆகலான் நினைத்தலையுமறியேன், (எ-று).

ம்ன்—ஒழியிசைக்கண்வந்தது. குணங்கள்—நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு † முதலாயின. இத்துணையுந் தலைமகன்கூற்று ; மேற்றலைமகள் கூற்று.

தெளி:—[ஒருவழித்தணந்து வந்த தலைமகன் நீர் தணந்த காலத்தில் எம்மை நினைத்து மறிவீரோவென்ற தோழிக்குச் சொல்லியது ] (இ - ள்.) ஒள்ளமர்க்கண்ணுள்குணம் - ஒள்ளியவாய்ப் போரைச்செய்யுங் கண்களை யுடையவளது குணங்களை, யான் மறப்பின் - யான் மறந்தேனெயின், உள்ளுவன் - நினைப்பேன், மறப்பறியேன் - (ஒருகாலத்தும்) மறத்தலையறியேன், (ஆகலால் நினைத்தலையு மறியேன்), (எ-று).

---

* ஒருவழித்தணத்தலாவது அலாடங்குமாறு சிலகாள்

ஓரிடத்தில்
தலைமகன் தலைமகளைப் பிரிந்துவசித்தல். அலராவது களவுப்புணர்ச்சியைப் பலரறிந்து பழித்துப்பேசுதல்.

† முதலாயின என்றமையின், மனைத்தக்கமாண்பு, தெய்வந்தொழாமை, தற்காத்தல், தற்கொண்டாற்பேணல், சொற்காத்தல், நிறை முதலியவற்றையுங்கொள்க.



மன் என்னுமிடைச்சொல் நினைத்தலையுமறியேனென்னும் ஒழியிசைப்பொருளில் வந்தது. குணங்கள் - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலாயின. இவ்வளவும் தலைமகன் கூற்று ; பின்வருவது தலைமகள் கூற்று. கூற்று - வார்த்தை. ஒள்ளியவாய்-பிரகாசமுடையனவாய்.

(க - து.) தோழிக்குத் தலைமகன் யானிவளை மறந்தாலன்றோ நினைப்பேன் ; ஆகலான் யானிவளை மறத்தலையுமறியேன் நினைத்தலையுமறியேன் என்றாளென்பது.

5. If I could forget the maiden whose eyes gleam like warriors dart, I might remember thee

(maid); but I never forget her charms.

சூ கண்ணுள்ளிற் போகா விமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்.

(ஒருவழித்தணப்பின்கட் டலைமகனைத் தோழி † இயற்பழிக்குமென்றஞ்சி அவள்கேட்பத் தன்னுள்ளே சொல்லியது.)

பரி:—(இ - ள்.) தாங்காணுமைபற்றிச் சேய்மைக்கட்போயினு மொன்று கருதுவார் கருதுக; எம்முடையகாதலர் எங்கண்ணகத்துநின் றும் போகார்; யாமறியாதிமைத்தேமாயின் ‡ அதனல் வருந்துவதுஞ் செய்யார்; ஆகலாற் காணப்படாநுண்ணியர், (எ -று).

இடைவிடாத நினைவின் முதிர்ச்சியான் காதலன்றேற்றம் எப்பொழு தும் முன்னே தோன்றலிற் 'கண்ணுள்ளிற் போகார்' என்றும், இமைத்துழி யும் ¶ அது நிற்றலான் 'இமைப்பிற்பருவரார்' என்றுங் கூறினுள்.

தெளி:—[ஒருவழித்தணத்தலில் தலைமகனைத் தோழி இயற்பழிப்பா ளென்று அஞ்சி அவள்கேட்பத் தலைமகள் தன்னுள்ளே

சொல்லியது.]

(இ - ள்.) (தாம் காணுமபற்றித் தாமதேயத்தின்கண் போயினரென்று நினைப்பவர் நினைக்கக்கடவர்) எங்காதலவர் - எம்முடைய காதலர், கண்ணுள்ளில் - (எமது) கண்ணிடத்தினின்றும், போகார்-, இமைப்பின் - (யாமறியாமல்) இமைத்தேமாயின், பருவார் - (அதனால்) வருந்துவதஞ் செய்யார், (ஆகலால்), நுண்ணியர் - (காணப்படாத) நுண்ணியர், (எ - று).

இடை விடாத நினைவின் முதிர்ச்சியால் காதலனது தோற்றம் எப்போதும் முன்னே தோன்றலால் 'கண்ணுள்ளிற்போகார்' என்றும், இமைத்தபோதும் அது நிற்றலால் 'இமைப்பிற் பருவார்' என்றும் சொல்லினள்.

(க - து.) தலைமகள் தனது தோழி கேட்குமாறு எங்காதலர் எங்கண்ணினின்றும் நீங்காதிருக்கின்றார்; யாமிமைத்தேமாயின்,

---

† இயற்பழிக்கும்-ஒழுக்கமில்லாதவனென்று பழித்துப் பேசுவாள்.

‡ அதனால் - இமைத்தலினால். ¶ அது - காதலனது தோற்றம்.

அதனால் வருந்துவதுஞ் செய்யார்; ஆகலாலவர் மிக நுண்ணிய வடி வினரென்று கூறினாள் என்பது.

6. My lover would not depart from my eyes ; I wink them not lest I should pain him ; he is so subtle.

எ. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து.

(இதவுமது.)

பரி:—(இ - ள்.) காதலர் எப்பொழுது மெங்குண்ணினுள்ளாராகி
லாற் கண்ணினை யஞ்சனத்தா லெழுதுவதுஞ் செய்யேம், அத்துணைக்
காலமும் அவர் மறைதலையறிந்து, (எ - று).

* இழிவுசிறப்பும்மை மாற்றப்பட்டது. † கரப்பாக்கென்பது வினைப்

பெயர்; வருகின்ற வேபாக்கென்பது மது. யா ‡
னிடையீடின்றிக் காண்கி
ன்றவரைப் பிரிந்தாரென்று கருதுமாறென்னை யென்பது
குறிப்பெச்சம்.

தெளி:—[இதுவுமது.] (இ-ள்.) காதலவர் - தலைவர்,
(எப்பொழுதும்),
கண்ணுள்ளாராக-(எமது) கண்ணினுள் இருக்கின்றாராகலால்,
கண்ணுமெழு
தேம் - கண்ணினை (மையினால்) எழுதவதுஞ் செய்யேம்,
கரப்பாக் கறிந்து-
(அவ்வளவு காலமும் அவர்) மறைதலை அறிந்து, (எ - று).

கண்ணும் என்னும் இழிவு சிறப்புமை பிரித்துக்
கூட்டப்பட்டது.

கரப்பாக்கு என்பது தொழிற் பெயர்; பின் வருகின்ற
வேபாக்கு என்பதும்
தொழிற் பெயர். யான் இடைவிடாமற் காணுகின்ற
தலைவரைப் பிரிந்தாரெ
ன்று (தோழி) நினைக்கும் விதம் என்னை யென்பது
குறிப்பெச்சம்.

(க-து.) தலைமகள் எப்பொழுதுங் காதலர்
எமதுகண்ணின்க
ணிருக்கின்றார்; ஆகலால், அவர்
மறைந்துபோவாரென்று கருதிக்

கண்ணுக்கு மையிடுவதுந் செய்யேமென்றுள் என்பது.

7. As my lover (ever) abides in my eyes, I will not paint them; lest I should hide his form.

---

* கண்ணும் என்னும் இழிவு சிறப்பும்மை (எழுதம்என) எழுது என் பதனோடு பிரித்துக் கூட்டப்பட்டது. எழுதும் என்பதன் பொருள் எழுது வதும எனபதாம.

† காப்பாக்கு என்பது பாக்குவிகுதிபெற்ற தொழிற்பெயர்; வருகிற பாட்டில் வேபாக்கு என்றுள்ளதும் அது (பாக்குவிகுதி பெற்ற தொழிற் பெயர்).

‡ இடையீடின்றி-தடையில்லாமல்.





அ. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து.

[இதவுமது.]

பரி:—(இ - ள்.) காதலர் எந்நெஞ்சினுள்ளாராகலான் உண்ணுங் கால் வெய்தாக உண்டலை யஞ்சாநின்றேம், அவர் * அதனுள் வெய்து றலை யறிந்து, (எ - று).

எப்பொழுதும் எங்நெஞ்சின்க ணிருக்கின்றவரைப் பிரிந்தா மென்று கருதுமா றென்னை யென்பது குறிப்பெச்சம்.

தெளி:—[இதவுமது.] (இ - ள்.) காதலவர் - தலைவர், நெஞ்சத்தாராக- (எமது) நெஞ்சினுள் இருக்கின்றாராகலால், (உண்ணும்போது), வெய்துண் டல் - சூடுடையதாக உண்ணுதலை, அஞ்சுதும் - அஞ்சாநின்றேம், வேபாக் கறிந்து - (அவர் அதனால்) சூடுறுதலை அறிந்து, (எ - று).

எப்பொழுதும் எமது நெஞ்சிலிருக்கின்ற தலைவரைப் பிரிந்தாமென்று (தோழி) நினைக்கும் விதம் என்னையென்பது குறிப்பெச்சம்.

(க - து.) தலைமகள் எப்பொழுதும் காதலர் எமது நெஞ்சின்க ணிருக்கின்றார்; ஆகலால், அவர் சூடுறுவாமென்றஞ்சி யுணவினைச் சூடாக வுண்பதுஞ் செய்யேமென்று மென்பது.

8. As my lover abides in my heart, I am

afraid of
eating anything hot lest it would burn him.

கூ. இமைப்பிற் கரப்பாக் கறிவ லவைத்திற்கே
யேதில ரென்னுமிவ் வூர்.

[† வரைவிடைவைத்துப் பிரிவின்கட்
டலைமகளாற்றுதற்பொருட்டுத்

---

* அதனுன்-வெய்தாக வுண்டலால்:

† வரைவிடைவைத்துப் பிரிதல் - கலியாணஞ்
செய்துகொள்ளுதலை

இடையில் வைத்து அது காரணமாகப் பொருள் சம்பாதிக்கப் பிரிதல். தஞ்சைவாணன் கோவையினுரையில் "வரைவிடைவைத்துப் பெருள் வயிற் பிரிதல்: அஃதாவது வரைவையிடையிலெனவைத்து வரைதற்கு வேண்டும் பொருள்காரணமாகப் பிரிதல். தலைவன் வரைதற்குப் பொருள் காரணமாகப் பிரிந்தானெனின், பொருளிலதெயிற்று; ஆகவே, பொருளிறந்தா

(ஒப்பில்லாதவ) னென்பதனேடு மாறுகொள்ளுமெனின், மாறுகொள்ளாது. பழங்கிடையாய்க் கிடக்குஞ் செம்பொருள் பலவுளவேனும் அதனை யெடுத்து நகர்வோன் சிறியனுகலானும், ஆள்வினை (முயற்சி) யுடையனல்ல னெனப்படுதலானும், இவன் தன்னுக்கத்தால் (முயற்சியால்) ஈட்டிய (சம்

பாதித்த) பொருளைப் பலவாற்றானும் நுகர்தல்

(அனுபவித்தல்) உத்தம

களவியல்—நு-வது காதற்சிறப்புரைத்தல். 1

203

தோழி தலைமகனை யியற்பழித்தவழி அவ * ளியற்பட மொழிந்தது.]

பரி:—(இ - ள்.) என்கண்ணிமைக்குமாயின் உள்ளிருக்கின்ற காதலர் மறைதலை யறிந்து இமையேன், அவ்வளவிற்று அவரைத் துயிலா நோய் செய்தார் அன்பிலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர், (எ - று).

தன் கருத்தறியாமை பற்றிப் புலந்து சொல்லுகின்றாளாகலின், தோழியை வேறுபடுத்து 'இவ்வூர்' என்றாள். ஒரு பொழுதும் பிரியாதவரைப் பிரிந்தாரென்று பழிக்கற்பாலையல்லை யென்பதாம்.

தெளி:—(வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைமகள்பொறுத்திருத்தற்பொருட்டுத் தோழிதலைமகனை இயற்பழித்த விடத்து அவள் இயற்படச் சொல்லியது.) (இ-ள்.) இமைப்பின் - (என்கண்) இமைக்குமாயின், கரப்பாக்கறிவல் - (உள்ளிருக்கின்ற காதலர்)

மறைதலை யறிந்து
இலமேன், அனைத்திற்கு - அவ்வளவிற்கு, இவ்வூர் -, எதிலரென்னும் - (அவரைத் தூங்காத நோய் செய்தார்) அன்பிலரென்று சொல்லா நிற்கும்.

தலை மகள் தோழி தன்சருத்தறியாமைபற்றிக் கோபித்துச் சொல்லுகின்றாளாகலால், அவளை வேறுபடுத்தி 'இவ்வூர்' என்றாள். தோழியே நீ ஒருபோதும் பிரியாததலைவரைப் பிரிந்தாரென்று பழித்தல் செய்யாதிருக்கக்கடவா யென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியைவெறுத்து என்கண்ணுளிருக்கும் காதலர் மறைவாரென்று கருதி யான் இமைத்தலுஞ் செய்யேன்; அஃதறியாது இவ்வூர் அவரைப் பழித்துப் பேசுகின்றதென்று கூறினாள் என்பது.

9. I would not wink lest my lover would hide his form;
for this reason the towns-people say he is unloving.

க0. உவந்துறைவ ருள்ளத்து ளென்று
மிகந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர்.
[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) காதலர் எஞ்ஞான்றும் என்னுள்ளத்துள்ளே யுவந்துறையா நிற்பர்,

அதனையறியாது அவரைப் பிரிந்துறையாநின்றார்
அன்பிலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர், (எ - று).

---

விலக்கணமென்றுகருதிப் பொருள்வயிற் பிரிக்தாவெனண்
ணுணர்க" என்று கூறப்பட்டிருக்கின்றது.

* இயற்படமொழிதல் - சொற்பொருள்
ஓரியல்புபடக் கூறுதல். "அடம்பமர் நெடுங்கொடி யுள்புதைத்
தெளிப்ப, வெண்மணல் விரிக்கும்

தண்ணந் துறைவன், கொடிய னுயினு மாக, அவனே தோழியெண் ணுயி
ர்க்கா வலனே" என்பதிங்குணர்தற்பாலதாம். (தொல்-பொருள் - 234 - வது
பக்கம்).



'உவந்துறைவர்' என்றதனால் அன்புடைமைகூறினாள். பிரியாமையும்
அன்புமுடையாரை * இலரெனப் பழிக்கற்பாலையல்லை யென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) (காதலர்) என்றும் - எப்போதும்,
உள்ளத்துள் - (என்) உள்ளத்தினுள்ளே, உவந்து - மகிழ்ந்து, உறைவர் -
வாசஞ்செய்யா நிற்பர், (அதனையறியாமல் அவரை), இவ்வூர் -, இகந்துறை
வர் - பிரிந்துவசியா நின்றார், எதிலரென்னும் - அன்பிலரென்று சொல்லா
நிற்கும், (எ - று).

'உவந்துறைவர்' என்றதனால் தலைமகனது அன்புடைமையைக் கூறினள். பிரியாமையும் அன்பும் உடையவரை இலரென்று தோழியே! நீ பழித்தல் செய்யாதிருக்கக் கடவா யென்பதாம்.

(க - து.) தலைமகள் இவ்வூர் காதலர் என்மனதின்க ணைப் போது முவந்து வசித்தலை யறியாது அவரைப்பிரிந்துபோனரென்றும் அன்பில ரென்றும் சொல்லுதல் தகுதியாகா தென்று ளென்பது.

10. My lover ever lives in my heart rejoicing; but the towns-people say he is unloving and therefore dwells afar.

## 6 - ம். அதிகாரம்.

நாணுத்துறவுரைத்தல்—*Abandonment of modesty.*

பரி:—அஃதாவது சேட்படுக்கப்பட்டு † ஆற்றலைய தலைமகன் தோழிக்குத் தன் ‡ ஒண்டுறவுரைத்தலும், ¶ அறத்தோடு நிற்பிக்க

---

* இலரென - பிரியாமையும் அன்புமில்லாதவரென்று.

† ஆற்றலைய - தலைமகளைப் பிரிந்திருக்கச் சகியாதவனை.

‡ நாண் - சால்பு பண்பு முதலாய குணங்களாலுயர்ந்தோர் தமக்கு ஒவ்வாத கருமங்களில் நாணுதல்.

¶ அறத்தொடு நிற்பிக்கலுற்ற - களவுப்புணர்ச்சியை முறையே வெளிப்படுத்தி நிற்கத்தொடங்கிய, தஞ்சைவாணன் கோவையினுரையில் "அற

த்தொடு நிற்றலென்பது களவை முறையே வெளிப்படுத்தி நிற்றல். முறை யே வெளிப்படுத்தி நிற்றலாவது தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும், பாங்கி (பக்கத்திலிருப்பவள்) செவிலி (வளர்க்குந் தாய்)க்கறத்தொடு நிற்கும்; செவிலி கற்ருய் (பெற்றதாய்)க் கறத்தொடு நிற்கும்; கற்ருய் தந்தை தன் னையர் (தமையன்மார்)க்கறத்தொடு நிற்குமென்று கொள்க, அறத்தொடு நிற்றற்குப் பொருள் முறையேவெளிப்படுத்தி நிற்றலென்பது. இப்பொ ருள் எவ்விடத்திற்குமாகாது; இவ்விடத்திற்குமாத்திரா மென்று கொள்க" என்று கூறப்பட்டிருக்கின்றது.

## களவியல்—சூ-வது நாணுத்துறவுரைத்தல்.

**1205**

லுற்ற தலைமகள் அவட்குத் தன்னுண்டுறவுரைத்தலுமாம்.*இது காதன் மிக்குழி நிகழ்வதாகலின், காதற்சிறப் புரைத்தலின்பின், வைக்கப் பட்டது.

தெளி;—அஃதாவது சேட்படுத்தப்பட்டுப் பொருதவனுகிய தலை மகன் தோழிக்குத் தனது நாணமிழத்தலைச் சொல்லுதலும், அறத்தொடு நிற்பிக்கலுற்ற தலைமகள் அத்தோழிக்குந் தனது நாணமிழத்தலைச் சொல் லுதலுமாம். * இது காதல்மிக்கவிடத்து நிகழ்வதாகலால், காதற்சிறப்

புரைத்தலின் பின் வைக்கப்பட்டது.

க. காம முழந்து வருந்தினர்க் கேம
மடலல்ல தில்லை வலி.

[சேட்படுக்கப்பட்டு ஆற்றுணைய தலைமகன் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) அரியாராய மகளிரோடு காமத்தை யனுபவித்துப் பின் † னதுபெறாது துன்புற்ற வாடவர்க்குப் பண்டும் ஏமமாய்வருகின்ற ¶ மடலல்லது இனியெனக்கு வலியாவதில்லை, (எ - று).

ஏமமாதல்-§ அத்துன்ப நீங்கும்வகை o அவ்வனுபவத்தினைக்கொடுத்தல். : வலி—ஆகுபெயர். பண்டுமாடவராயினர் இன்பமெய்தி வருகின்ற வாறு நிற்க, நின்னை ( ) யதற்குத்துணையென்று கருதிக் கொன்னேமுயன்ற யான் இதுபொழுது அல்லாமையை யறிந்தேனுகலான், இனியானு | மவ் வாற்றுன் ‖ அதனை யெய்துவலென்பது கருத்து.

தெளி:—[சேட்படுத்தப்பட்டுப் பொருதவனுகிய தலைமகன் சொல்லியது.] (இ - ள்.) காமமுழந்து - (அரியராகிய மகளிரோடு) காமத்தை யனுபவித்து, (பின் அதுபெருமல்), வருந்தினர்க்கு - துன்பமடைந்த ஆடவர்க்கு, ஏமமடலல்லது - (முன்னும்) ஏமமாய்வருகின்ற மடன்மாவல்லாமல், (இனி யெனக்கு), வலியில்லை - வலியாவதில்லை, (எ - று).

ஏம்மாதல் - அத்துன்பம்நீங்கும்வகை அவ்வனுபவத்தைக் கொடுத்தல். வலி-பண்டாகுபெயர். முன்னும் ஆடவராயினர் இன்பமடைந்து வருகின்ற வழியிருக்க, உன்னை அதற்குத் துணையென்று நினைத்து வீணுகமுயன்ற

* இது - நாணுத்துறவுரைத்தல்.

† அதுபெறுது - அக்காமத்தை யனுபவித்தலைப் பெறுமல்.

¶ மடல் - பனைமடலாற் செய்த குதிரை.

§ அத்தன்பம் - காமத்தை யனுபவித்தலைப் பெறுமையாலுண்டாகிய தன்பம்.

o அவ்வனுபவத்தினை-அரியாயமகளிரோடு காமத்தை யனுபவித்தலை.

: வலியென்னும் பண்புப்பெயர் அதனையுடையபொருளையுணர்த்துதலால், பண்பாகு பெயராம். () அதற்கு - அவ்வின்பமடைதற்கு.

| அவ்வாற்றான் - முன்னும் ஆடவ(புருஷ) ராயினர் மடன்மாவேறியின்பமடைந்து வருகின்ற வழியால். ‖ அதனை - அவ்வின்பத்தை.



நான் இப்போது நீ துணையாகாமையை அறிந்தேனுகலால், இனியாவும் அவ் வழியால் அதனையடைவேனென்பது கருத்து. ஆடவர் - புருஷர்.

(க - து.) தோழியால் சேட்படுத்தப்பட்டு வருந்திய நலமகன் இனி யான்தலைமகளை யடைதற்கு எனக்கு மடல்மா வேறுவதல்லது வேறு வலியாவதில்லை யென்று கூறினன் என்பது.

1. To those who have experienced loves joy and suffer afflicted, there is no help so efficient as

உ. நோனு வுடம்பு முயிரு மடலேறு
நாணினை நீக்கி நிறுத்து.

[நாணுடையநுமக்கு அது முடியாதென
சொல்லியது.]

மடல்விலக்கலுற்றூட்குச்

பரி:—(இ - ள்.) அவ்வருத்தத்தினைப் பொறுத வுடம்பு முயிரும்

*அதற் கேமமாய மடன்மாவினை †யூரக் கருதாநின்றன, ○ அதனைவிலக் குவதாய நாணினையகற்றி, (எ - று).

‡ 'வருந்தினார்க்கு' என மேல்வந்தசெய்யிற் செயப்படுபொருள் ஈண் டுக் கூறாயினர். ¶ மடல்—ஆகுபெயர். § நீக்கிநிறுத்தென்பது ஒரு சொன்னீர்மைத்து. ‖ அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி ‡ முதலிய மூன்றே நீங்கவும் நாணீங்காது நின்றது; அதுவு மிதுபொழுது நீக்கிற்

---

* அதற்கு-அவ்வருத்தத்தினை நீக்குவதற்கு.

† ஊர்தல் - எறிச் செலுத்துதல்.

○ அதனை - மடன்மாவேறுதலை.

† 'வருந்தினர்க்கு' என்று மேலுள்ள குறளில் வந்தமையின், அவ் வருத்தத்தினை யென்னுஞ் செயப்படுபொருளை யிங்குச் சொல்லாதுவிட்டார்.

¶ மடல் (பனைமடல்) என்னுங் கருவியின்பெயர் அதன் காரியமாகிய குதிரையை யுணர்த்துதலால், கருவியாகுபெயராம்.

§ நீக்கநிறுத்து என்பது (தொடர்மொழியாகாது) அக்கற்றி என்னும் பொருளைத்தந்து ஒருசொல்லின் தன்மையதாய் நின்றது.

‖ இறையனாரகப்பொருளி னிரண்டாவது சூத்திரவுரையில் "தலை மகற்கு அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்பன வுணர்ம். அறிவென் பது என்னையெனின், 'எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு' என்றாராகலின், எப்பொருளாயினும் அப் பொருட்கணின்று அம்மெய்ம்மையை யுணர்வது அறிவு; நிறையென்பது என்னையெனின், காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம்; ஓர்ப்பென்பது ஒருபொருளை ஆராய்ந்துணர்தலென்பது; கடைப்பிடியென் பது கொண்டபொருள் மறவாமை" என்று கூறப்பட்டிருக்கின்றது.

‡ முதலிய என்றமையின் அன்புடைமை, இனியவைகூறல், நடுவுநிலை மை முதலியவற்றையுங் கொள்க.



றென்பான் 'உடம்பு முயிரும்' என்றான். * அவைதாந் தம்முணீங்காமற் பொருட்டு † மடலேறுமென்றது அவள் தன்றாற்றுமையறிந்து கடிதிற் குறைநேர்தலேக்கி.

தெளி:—(நாணமுடைய உமக்கு அம்மடன்மாவேறுதல் முடியாதென்று அதனை விலக்கலுற்ற தோழிக்குத் தலைமகன்

சொல்லியது.) (இ-ள்.) நோலை - (அவ்வருத்தத்தினைப்) பொறுத்து, உடம்புமுயிரும் -, மடலேறும் - (அதற்கு ஏமமாகிய) மடன்மாவினை யூர்வினையாகின்றன, நாணினை - (அதனை விலக்குதலாகிய) நாணத்தை, நீக்கிநிறுத்து - ஒழித்து, (எ - று).

'வருந்திலர்க்கு' என்று முன்னேவந்தமையின், செயப்படுபொருளை இங்குச் சொல்லாராயினர். மடல்-கருவியாகுபெயர். நீக்கி நிறுத்து என்பது ஒருசொல்லின்றன்மையது. அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி முதலா யின முன்னே நீங்கவும் காண்நீங்காது நின்றது; அந்தநாணும் இப்பொழுது நீங்கிற்றென்பான் 'உடம்பு முயிரும்' என்றான். அவைதாம் தம்முள் நீங் காமைப்பொருட்டு மடலேறுமென்றது அவள் தன்னாற்றுமையை (சகிக்க முடியாமையை) யறிந்து விரைவில் உடன்படுதல் குறித்தாம்.

(க - து.) தலைமகன் வருத்தமிகுதியால், யான் நாணத்தை விட்டு மடன்மாவேறுவனென்று கூறினான் என்பது.

2. Laying reserve aside, the body & atman that can endure no more will mount the palmyra horse.

* அவைதாம் - உடம்பும் உயிரும்.

† "மடலேறலாவது தலைவன் ஒவ்வாக்காமத்தால் பனங்கருக்காற் குதிரையும், பனந்தருவினுள்ளனவற்றால் வண்டில் முதலானவுஞ்செய்து அக்குதிரையின்மே லேறுவது. மடலேறுவான் திகம்பரனாய் உடலெங்கும் நீறு பூசிக் கிழி ஓவியர் கைப்படாது தானே தீட்டிக் கிழியின் தலைப்புறத்தில் தன் பேரைவணர்ந்து கைப்பிடித்து, ஊர்நடுவே நாற்சந்தியில் ஆகாரநித் திரையின்றி, அக்கிழிமேற் பார்வையுஞ் சிந்தையுமிருத்தி, வேட்கைவயத் தனாய் வேறுணர்வின்றி, ஆஹாரினும் அழல்மேற் படினும் அறிதலின்றி மழை வெயில் காற்றுண்மயங்காதிருப்புழி, அவ்வூரிலுள்ளார் பலருங் கூடி வந்து நீ மடலேறுதியோ? அவளைத்தருதும், சோதனைதருதியோ? என்ற வழி இயற்கையின், அரசனுக்கறிவித்து, அவனேவலால் அவன் இனை ந்துரையத்தந்து மடலேறென்றவழி

ஏறுமுறைமை:-வெண்பூளைப்பூ, எலும்பு, எருக்கமுகை இவைகளாற் கட்டியமாலை யணிந்துகொண்டு அம்மாவி லேற, அவ்வடத்தை வீதியிலீர்த்தலும் அவ்வுருளை யுருண்டோடும்பொழுது பனங்கருக்கு அறுத்தவிடமெல்லாம் இரத்தந் தோன்றுது வீரியந்தோன்றின், அப்போது அவளை யலங்கரித்துக்கொடுப்பது ; இரத்தங்கண்டுழி அவனைக் கொலைசெய்துவிடுவது. இவை புலவரால் காட்டிய

வழக்கென்



௩. நாணொடு

நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்றா ரேறு மடல்.

[நாணையன்றி நல்லாண்மையுமுடைமையின்
முடியாதென்றாட்குச்
சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நாணும் மிக்கவாண்டகைமையும் யான் பண்டுடையேன்; * அவை காமத்தானீங்குதலான், அக்காமமிக்கா ரேறும் மடலினை யின்றுடையேன், (எ - று).

நாண் - இழிவாயினசெய்தற்கண்விலக்குவது. ஆண்மை - ஒன்றற்குந் தளராதுநிற்றல். † அவை பண்டுள்ளன; இன்றுள்ளது ‡ இதுவேயாகலிற் கடிதின் முடியுமென்பதாம்.

தெளி:—[நாணமேயன்றி நல்லாண்மையும்
உடைமையால் மடலேறு
தல் முடியாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.] (இ - ள்.) நாணொடு நல்லாண்மை - நாணத்தையும் மிக்க ஆண்தன்மையையும், (நான்), பண்டுடையேன் - முன்புடைத்தா யிருந்தேன், (அவை காமத்தால் நீங்குதலால்), காமுற்றாரேறுமடல் - அக்காமமிக்கவரேறுமடலினை, இன்று - இப்

போது, உடையேன் - உடையவனாயிருக்கின்றேன், (எ - று).

நாண் - இழிவாயவற்றைச் செய்யுமிடத்து விலக்குவது. ஆண்மை-ஒன்றற்குந் தளராது நிற்றல். அவை முன்னுள்ளன; இன்றுள்ளது இதுவேயாகலால் விரைவில் முடியுமென்பதாம்.

(க - து.) தலைமகன் தோழிக்கு யான் முன்பு நாணமும் நல்

லாண்மையு முடையவனாயிருந்தேன்; அவை காமத்தால் நீங்கின; இப்போது மடன்மாவேறுதலை யுடையவனாயிருக்கின்றேனென் றான் என்பது.

3. I once possessed modesty and manliness; now I own the palmyra horse ridden by the lustful.

---

கூ. காமக் கடும்புன லுய்க்குமே நாணெனும்
நல்லாண்மை யென்னும் புணை.

---

துணர்க" என்று தஞ்சைவாணன் கோவையிலுரையில் கூறப்பட்டிருக்கிறது. "கழிகின்ற வென்னையு நின்றநின் கார்மயி றன்னையும்யான், கிழி யொன்ற நாடி யெழுதிக்கைக் கொண்டென் பிறவிசுட்டின், றிழிகின்ற தாக்கிய தாளம்பலவன் கயிலையந்தேன், பொழிகின்ற சாரலுஞ் சீரூர்த் தெருவிடைப் போதுவனே" என்று திருக்கோவையார்

கூறுவது மிங் குணர்தற்பாலதாம்.

* அவை - நாணும் கல்லாண்மையும். † அவை-நாணும் கல்லாண்மையும். ‡ இதுவே - மடலேறுதலே.

## களவியல் சூ-வது நாணுத்துறவுரைத்தல்.

# 1209

[நாணுநல்லாண்மையுங் காமவெள்ளத்திற்குப் புணையாகலின் * அதனால் † அவை நீங்குவனவல்லவே யென்றூட்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) யான் ‡ றன்னைக் கடத்தற்குக் கொண்டநாணும் நல்லாண்மையுமாகிய புணைகளை யென்னிற்பிரித்துக் காமமாகிய கடிய புனல் கொண்டுபோ காநின்றது, (எ - று).

¶ அது செய்யமாட்டாத வஃறப்புனலினீக்குதற்குக் 'கடும்புனல்' என்றான் $ இப்புனற்கு o அவை புணையாகா: | அதனான் || அவை நீங்கு மென்பதாம்.

தெளி:—(நாணமும் கல்லாண்மையும் காமவெள்ளத்திற்குப் புணையாத லால் அதனால் அவை நீங்குவனவல்லவே யென்ற தோழிக்குத் தலைமகன்

சொல்லியது. ) (இ - ள்.) (யான் தன்னைக் கடத்தற்குக்கொண்ட) நாணுடு நல்லாண்மை யென்னும் புணை - நாணமும் நல்லாண்மையும் ஆகிய புணை களை, (என்னிற்பிரித்து), காமக்கடும்புனல் - காமமாகிய கடிய புனல், உய்க்கும் - கொண்டுபோகா நின்றது, (எ - று).

அது செய்யமாட்டாத மற்றைப் புனவி னீக்குதற்குக் 'கடும்புனல்' என்றான். இப்புனற்கு அவை புணையாகா; அதனால் அவை நீங்குமென்ப தாம். புனல் - நீர்; புணை - தோணி.

(க - து.) தலைமகன் யான் காமவெள்ளத்தைக் கடத்தற்குக் கொண்ட நாணமும் நல்லாண்மையுமாகிய புணைகளை அவ்வெள்ளம் என்னிற் பிரித்துக்கொண்டு போகாநின்றதென்றான் என்பது.

4. The raft of modesty and manliness is swept away by love's rushing tide.

நி. தோடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு மாலை யுழக்குந் துயர்.

(இவ்வாற்றாமையும் மடலும் நமக்கெவ்வாறு வந்தனவென்றாட்குச் சொல்லியது.)

பரி:—(இ - ள்.) மாலைப்பொழுதின்க ணனுபவிக்குந் துயரினையும் அதற்கு மருந்தாய மடலினையும் முன்னறிவேன், இதுபொழுது எனக்கு மாலைபோலத் தோடர்ந்த சிறுவளையினையுடையாடந்தாள், (எ - று).

---

* அதனுல் - காமவெள்ளத்தினுல்.

† அவை - நாணும் நல்லாண்மையும்.

‡ தன்னை - காமமாகிய கடிய (வேகமுள்ள) புனலை.

¶ அது - நாணும் நல்லாண்மையுமாகிய புணைகளை என்னிற்பிரித்தல்.

§ இப்புனற்கு-காமக்கடும்புனற்கு ○ அவை-நாணும் நல்லாண்கூமையும்.

| அதனுன் - காமக்கடும்புனலால். ‖ அவை-நாணும் நல்லாண்மையும்.

* காமம் ஏனைப்பொழுதுகளினுமுளதேனும் மாலைக்கண் மலர்த லுடைமையின் 'மாலை யுழக்குந் துயர்' என்றும், மடலும் † அதுபற்றி வந்த தாகலின் ‡ மடறந்தாள் என்றும், அவடான் நீகூறியதே கூறுமிலைமைய லென்பது தோன்றக் 'தொடலைக்குறுந் தொடி' என்றுங் கூறினன். ¶ அப் பெயர் உவமைத்தொகைப்புறத்துப் பிறந்தவன்மொழித்தொகை. $ இவை

யவடந்தனவாகலின், நின்னுனீங்குமென்பது கருத்து.

தெளி:—(இப்பொறுக்க மாட்டாமையும் மடலும் உமக்கு எவ்வாறு வந்தன வென்ற தோழிக்குத் தலையகன் சொல்லியது.) (இ - ள்.) மாலை யுழக்குந் துயர் - மாலைக்காலத்தில் அநுபவிக்குந் துன்பத்தையும், மடலொடு- (அதற்கு மருந்தாகிய) மடன்மாவையும், (முன் அறியேன், இப்பொழுது எனக்கு), தொடலைக் குறுந்தொடி - மாலைபோலத் தொடர்ந்த சிறிய வளை

யலையுடையவள், தந்தாள் - கொடுத்தாள், (எ - று).

காமம் மற்றைப்பொழுதுகளிலும் உளதாயினும் மாலைப்பொழுதில் மலர்தலுடைமையால் 'மாலையுழக்குந் துயர்' என்றும், மடலும் அதுபற்றி

வந்ததாகலால் மடல் தந்தாள் என்றும், அவள்தான்
நீ சொல்லியதே

சொல்லும் இளமையனென்பது தோன்றத்
'தொடலைக் குறுந்தொடி'

என்றும் சொல்லினன். தொடலைக்குறுந்தொடி
யென்னும்பெயர் உவமைத்

தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இவை
அவள் தந்தனவா

கலால், உன்னால் நீங்குமென்பது கருத்து.

(க - து.) தலைமகன் மாலைக்காலத்தி

லனுபவிக்குந் துன்பத்

தினையும் அதனை நீக்குவதற்கு மருந்தாகிய மடன்மாவையும் எனக்

குத் தொடலைக் குறுந்தொடி தந்தாளென்றான் என்பது.

5. The maid that wears the small garland-like anklets has given me the palmyra horse and the pangs of eventide.

---

* "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்"

என்னுங்குற ளிங்குணர்தற்பாலதாம்.

† அதுபற்றி - காமம்பற்றி.

‡ அவ்விழிவும் (மடலேறும் இழிவும்) அவளாற்றாப்பட்டது என்

றும் பாடமுண்டு.

¶ தொடலைக் குறுந்தொடி யென்னும் பெயர் மாலைபோலத் தொடர்

ந்த சிறுவளையினையுடையாள் என்று விரிந்தமையின், 'அப்பெயர் ஐவமைத்

தொகைப்புறத்துப்பிறந்த வன்மொழித்தொகை' என்று கூறப்பட்டது.

இது,போல என்னுமுவமை யுருபும், உடையாள் என்னும் அல்லாத மொழி யும் தொக்கு நின்றமையின், உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகையாயிற்று. அன்மொழித்தொகை என்பதன்பொருள் அல் லாத மொழி தொக்கு நிற்பதென்பது. "ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி" என்பது நன்னூல். $ இவை-மாலையுழக்குந் தயரும் மடலும்.

## களவியல்—சூ-வது நாணுத்துறவுரைத்தல்.

**1211**

சூ. மடலூர்தல் யாமத்து மூள்ளுவேன் *
படலோல்லா பேதைக்கென் கண்.

மன்ற

[† மடலூரும்பொழுது இற்றைக்குங் கழிந்ததென்றுட்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நின்பேதைகா ணமாக என்கண்கள் ஒருகாலுந் துயிறலைப்பொருந்தா, அதனல் எல்லாநந் துயிலு மிடையாமத்தும் யானிருந்து மடலூர்தலேயே கருதாநிற்பேன், (எ - று).

‡ பேதையென்றது பருவம் பற்றியன்று, ¶ மடமைபற்றி. இனிக் குறை முடிப்பது நாளையென வேண்டா வென்பதாம்.

தெளி:—(மடல்மாவேறும் பொழுது இன்றைக்கும் கழிந்ததென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.) (இ - ள்.) பேதைக்கு-(உன்)பேதை

காரணமாக, என்கண் - எனது கண்கள், படலொல்லா - (ஒருபோதும்)

தூங்குதலைப் பொருந்தா, (அதனால்), யாமத்தும் - (எல்லாரும் தூங்குகிற)

பாதியிரவிலும், மன்ற - நிச்சயமாக, மடலூர்தல் - (யானிருந்து) மடல்மா

வேறுதலையே, உள்ளுவேன் - நினையாநிற்பேன், (எ - று).

பேதை யென்றது பருவம் (வயது) பற்றியன்று, மடமைபற்றியாம். இனிமடல்மாவேறுங் குறையை முடிப்பதுகாளையெனல் வேண்டா மென்ப

தாம.

(க - து.) தலைமகன் தோழியே! உன்பேதை காரணமாகப் பாதியிரவிலும் மடல்மா வேறுதலைப் பற்றியே யான் கருதுகின்றே னென்றான் என்பது.

6. My eyes know no repose on account of your simple maid; even at midnight will I think of mounting the palmyra horse.

எ. கடலன்ன காம முழந்து மடலேறுப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.

[ o பேதைக்கெண்கண்படலொல்லா வென்பதுபற்றி அறிவிலாய மகளிரினும் அஃதுடையராய வாடவரன்றே ஆற்றற்பால ரென்றுட்குச் சொல்லியது.]

---

* மன்றவென்பது துணிவுப் பொருளில் வந்தது. "மன்றவெண் கிளவி தேற்றஞ் செய்யும்" என்பது தொல்காப்பியம்.

† மடலூரும் பொழுதை இற்றைக் கொழிந்தது ரென்றுட்குச் சொல்லியது என்றும் பாடமுண்டு.

‡ பேதை - ஐந்து முதல் எட்டுவயதுள்ள பெண். "பேதைக் கியாண்டே ஐந்துமுத லெட்டே" என்பது பன்னிருபாட்டியல்.

¶ மடமை - அறியாமை.

o பேதைக்கெண்கண்படலொல்லா-நின்பேதை காரணமாக என்கண்கள் ஒருகாலும் துயிறலைப் பொருந்தா.

பரி:—(இ - ள்.) கடல்போலக் கரையற்ற காமநோயினை யனுபவித்தும் *மடலூர்தலைச் செய்யாது ஆற்றியிருக்கும் பெண்பிறப்புப் போல மிக்க தகுதியினையுடைய பிறப்பு உலகத்தில்லை; (எ - று).

† பிறப்பு விசேடத்தால் ‡ அவ்வடக்கம் எனக்கில்லையாகா நின்றது; நீயஃதறிகின்றிலை யென்பதாம். இத்துணையுந் தலைமகன் கூற்று; மேற் றலைமகள் கூற்று.

தெளி:— [' படலொல்லா பேதைக்கென் கண் ' என்பது பற்றி அறிவில்லாதவராய மகளிரினும் அவ்வறிவுடையவராய ஆடவான்றே பொறுத்தற்குரியவ ரென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது. ]

(இ - ள்.) கடலன்ன காமமுழந்தும் - கடல்போலக் கரையற்ற காமநோயை

அனுபவித்தும், மடலேறு - மடன்மாவேறுதலைச் செய்யாமல், (பொறுத்திருக்கும்), பெண்ணின் - பெண் (பிறப்புப்) போல, பெருந்தக்கது - மிக்க

தகுதியினை யுடைய பிறப்பு, இல் - (உலகத்தில்) இல்லை, (எ - று).

பிறப்பு விசேடத்தால் அவ்வடக்கம் எனக்கு இல்லையாகா நின்றது;

நீ அவ்வடக்கத்தினை யறிகின்றிலை யென்பதாம். இவ்வளவுந் தலைமகன்

கூற்று; இனிவருவது தலைமகள் கூற்று. கூற்று-சொல்.

(க - து.) தலைமகன் கடல்போலக் கரையற்ற காமநோயினை யனுபவித்தும் மடல்மாவேறாது பொறுத்திருக்கும் பெண்பிறப்பே தகுதியினையுடைய பிறப்பாமென்றான் என்பது.

7. There is nought of greater worth than woman's enduring nature that would not ride the palmyra horse though plunged in a sea of love.

அ. நிறையரியர் மன்னளிய யென்னாது காம
மறையிறந்து மன்று படும்.

---

* மடலூர்வேனென்று கருதுதலும் சொல்லுதலும் மடலூர்தலும்
ஆடவர்க்குரியவென்றும், மடலூர்வேனென்று கருதுதலும் சொல்லுதலும்
மகளிர்க்குரிய வென்று மிங்குணர்தற்பாலவாம்.
"நினைத்தருகு மேங்கும்
விழி நீரிலுற் கொங்கை, நனைக்குமட லூர்ந்திடவு நாடும்" என்றும், "யாமட லூர்ந்தமெம் மாழியங்கைப் பிரானுடைத், தாமடற் றண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோம்" என்றும் வருவன
முறையேமகளிர் மடலூர்தல்
பற்றிக்கருதுதற்கும், சொல்லுதற்குமுதாரணங்களாம்.
"எத்தினை மருங்கினு
மகடூஉ மடன்மேற், பொற்புடை நெறிமை யின்மை யான" என்று தொல் காப்பியங் கூறுகின்றது.

† பிறப்பு விசேடத்தால் - ஆணுகப்பிறந்திருத்தலால்.

‡ அவ்வடக்கம் , மடல்மாவேறுதலைச் செய்யாது பொறுத்திருக்கும் அடக்கம்.

## களவியல்—சூ-வது

## நாணுத்துறவுரைத்தல். 1213

[* காப்புச்சிறைமிக்குக் காமம்பெருகியவழிச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) இவர் நிறையால் நாமீதூர்தற் கரியரென்றத்தூதல் செய்யாது மிகவுமளிக்கத் தக்காரென் றிரந்துதல் செய்யாது மகளிர்காமமும் அவர் மறைத்தலைக் கடந்து மன்றின்கண்ணே வெளிப்படுவதாயிருந்தது, (எ - று).

என்றுது என்பது முன்னுங்கூட்டி மகளிரென்பது வருவிக்கப்பட்

டது. † எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. ‡ மன்றென்பது தன்னை தன்

னையரை நோக்கி.

உலகத்துப்பெண்பாலார்காமத்தியல்புகூறுவாள்போன்று,

தன்காமம் பெருகியவாறும் இனி யறத்தொடு நிற்றல் வேண்டுமென்பதுங்

குறிப்பாற் கூறியவாறுயிற்று.

தெளி:—[காப்புச்சிறை அதிகரித்துக் காமம்பெருகியபோ துதலைமகள் சொல்லியது.] (இ - ள்.) நிறையரியர் (என்னுது) -(இவர்) நிறையால் (காம் மேற்கொள்ளுவதற்கு) அரியரென்று அஞ்சுதல் செய்யாமலும், மன்னளிய ரென்னுது-மிகவும் அளிக்கத்தக்கவரென்று இரங்குதல் செய்யாமலும், காமம்-

(மகளிர்) காமமும், மறையிறந்து - (அவர்) மறைத்தலைக் கடந்து, மன்று-

சபையினிடத்தே, படும் - வெளிப்படுவதா யிருந்தது, (எ - று).

என்னுது என்பது நிறையரியரென்பதனுடனும் கூட்டி மகளிரென்

பது வருவிக்கப்பட்டது. காமமுமென்ற இறந்தது தழுவிய எச்ச வும்மை

செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. மன்றென்பது தன்தை தமையன்

மார்களை நோக்கியாம். தலைமகள் உலகத்துப் பெண்களது காமத்தியல்பு

சொல்லுவாள்போன்று, தன்காமம் பெருகிய விதமும் இனி அறத்தொடு

நிற்றல் வேண்டுமென்பதும் குறிப்பாற் சொல்லியவா றுயிற்று.

(க - து.) தலைமகள் தன்காமம் பெருகிய விதத்தை, மகளி

தது காமமும் இவர் நிறையரியர், மன்னளிய சென்று கருதாது அவர் மறைத்தலைக் கடந்து மன்றின்கண்ணே வெளிப்படுவதா பிருந்தெனப் படர்க்கை வாயிலாகக் கூறினள் என்பது.

8. Even the love of women rends the veil of secrecy

and courts publicity, forgetting that they are too virtuous

and liberal to be overcome by it.

---

*• காப்புச்சிறை - காவலாகிய சிறை.

தானினைத்தவாறெழுகுதலின்

றிப் பிறர் நினைத்தவாறே யொழுகும்படி காத்தல் சிறையெனப்படும்.

† தொக்குநின்றகாமமும் என்றவும்மை நாணுத்துறவே யன்றி யென்னும் பொருளைத் தந்துநின்றமையால், இறக்கதுதழீஇய வெச்சவும்மையாயிற்று.

‡ மன்றென்பது இங்குத் தந்தை தமையன்மார் கூடிய கூட்டமாம்.

கூ. அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம
மறுகின் மறுகு மருண்டு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) யான் முன்னடங்கி நிற்றலான் எல்லாரு மென்னை யறிதலிலரீ,இனியவ்வாறு நில்லாதியானே வெளிப்பட்டறிவிப்பலென்று கருதி என்காமம் இவ்வூரீமறுகின்கண்ணே மயங்கிச் சுழலாநின்றது.

மயங்குதல் - * அம்பலாதல்; மறுகுதல் - அலராதல். அம்பலுமலரு மாயிற்று; இனியறத்தொடுநிற்றல் வேண்டு மென்பதாம். † அறிவிலா ரென்பதூஉம் பாடம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்) (யான் முன் அடங்கி நிற்றலால்) எல்லாரும் - யாவரும், அறிகிலாரென்று.(என்னை) அறிதலிலர் (இனி அவ்வாறு அடங்கி நில்லாமல் யானேவெளிப்பட்டு அறிவிப்பேன்) என்று நினைத்து, என் காமம் - என்னுடைய காமம், மறுகில் - (இவ்வூர்)வீதியிலே, மருண்டு - மயங்கி, மறுகும்-சுழலாநின்றது, (எ - று).

மயங்குதல் - அம்பலாதல்; மறுகுதல்- அலராதல். என் காமம் அம்பலும் அலருமாயிற்று; இனி அறத்தொடு நிற்றல் வேண்டு மென்பதாம்.

(க - து.) தலைமகள் என்காமம்
அளவுகடந்த தாயிற்
றென்றுள் என்பது.

9. My love, feeling no one knows it, roves in public

ways perturbed.

க0. யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

---

* அம்பல் - சிலாறிந்து தம்முள்
இரகசியமாய்ப் பேசிக்கொள்ளுதல்;

அலர்-பலாறிக்து வெளிப்படையாகச் சொல்லுதல். "அம்பலு மலருங் களவு" என்னும் இறையனர் அகப்பொருளின் சூத்திரவுரையில் 'அம்ப
லென்பது சொல்நிகழாதே முகிழ்முகிழ்த்தச்
சொல்வதாயிற்று; இன்ன
தின் கண்ண தென்பது அயலறியலாகா தென்பது.
அலரென்பது இன்ன
னேடு இன்னளிடை இதபோலும்பட்டதென விளங்கச் சொல்லி நிற்பது. அம்பலென்பது பெரும்போதாய்ச் சிறிதநிற்க அலருமென நிற்பது; அல ரென்பது அப்பெரும்போது தாதம் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற் போல நிற்கும் நிலைமையதென வேற்றுமை சொல்லப்பட்டதாம்' என்று கூறப்பட்டிருப்ப திங்குணர்தற்பாலதாம்.

† அறிகிலார் என்பதற்குப் பிரதியாக அறிவிலார் என்றும் பாட

## களவியல்—கூ-வது நாணுத்துறவுரைத்தல்.

# 1215

[ ! செவிலிக்கறத்தொடு நின்றுவைத்து யானிற்குமாறென்னை
யென்று நகையாடிய தோழியோடு புலந்து
தன்னுள்ளே சொல்லியது.]

பரி:—(இ- ள்.) யாங் கேட்குமாறுமன்றிக் கண்ணும் * காணுமாறு எம்மை யறிவிலார் நகாநின்றார், அவராங்ஙனஞ் செய்கின்றது யாழற்ற நேர்ப்கள் தாழறுமையான், (எ - று).

'கண்ணின்' என்றது † முன்கண்டறியாமை யுணராநின்றது. ‡ அறத் தொடுநின்றமை யறியாது வரைவுமாட்சிமைப் படுகின்றிலளெனப் புலக் கின்றாளாகலின், எதிலாளாக்கிக் கூறினாள். ¶ இது நகாநின்று சேட்படுக் குந் தோழிக்குத் தலைமகன் கூறிய தாங்கால், அதிகாரத்திற் கேலாமை யறிக.

தெளி:—[செவிலிக்கு அறத்தொடு நின்றுவைத்து யான் நிற்கும்விதம் என்னென்றுகூறி நகைசெய்த தோழியோடு பிணங்கித் தலைமகள் தன்னுள்

ளே சொல்லியது.] (இ - ள்.) யாம் —,கண்ணிற்காண - (கேட்குமாறு மன்றிக்) கண்ணுற்காணுமாறு, (எம்மை), அறிவில்லார் நகுப - அறிவில்லாதவர் சிரிக்கின்றார்,( அவர் அவ்வாறு செய்கின்றது), யாம்பட்ட - யாம் அடைந்த நோய்களை, தாம்படாவாறு - தாம் அடையாமையால், (எ - று).

'கண்ணின்' என்றது முன் கண்டறியாமை யுணர்கின்றது - (தோழி செவிலிக்கு) அறத்தொடு நின்றமையை யறியாமல் மணஞ்செயுமாட்சிமையிற் பொருந்துகின்றில ளென்று பிணங்குகின்றாளாகலால் 'யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்' என்று (தோழியை) அயல ளாக்கிச் சொல்லினள்.

(க - து.) தலைமகள் தோழியின் கருத்தறியாது அவளை வெறுத்துத் தன்னுள்ளே யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லாரென்று கூறினளென்பது.

---

| செவிலி – தலைமகளை வளர்த்தவள்.

• காணுமாறும் என்றும் பாடமுண்டு.

† முன் கண்டறியாமை - முன் தோழிதன்னெதிரே நின்று சிரிப்புதைப்பார்த்தறியாமை.

‡ தலைமகள், தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றமையை (களவொழுக்கத்தை வெளிப்படுத்திநின்றமையை) யறியாமல், வரைவுமாட்சிமைப்படுகின்றிலளென்று பிணங்குகின்றாளாகலால், அவளை அயலாளாக்கி, 'யாங் கண்ணிற் காண நகுப வறிவில்லார்' என்று கூறினள். வரைவுமாட்சிமைப் படுதலாவது தோழி பூத்தருபுணர்ச்சி புனல்தருபுணர்ச்சி, களிறுதரு புணர்ச்சிகளை யறிவித்து, தலைமகனுக்கும் தலைமகளுக்கும் விவாகஞ் செய்விக்கப் பெருமுயற்சி செய்தலாம். பூத்தருபுணர்ச்சி முதலியவற்றி னியல்பைத் தஞ்சைவாணன் கோவை 300, 301, 302-வது செய்யுள்களிற் காண்க.

¶ இக்குறள் சிரியாநின்று சேட்படுத்துகின்ற தோழிக்குத் தலைமகன் கூறிய தாமிடத்து, நாணுத்துறவுரைத்தல் என்னுமிவ் வதிகாரத்திற்குப் பொருந்தாமையை யறிந்துகொள்க.



10 Before our eyes the foolish laugh at us, for they have not endured the pangs we suffer from.

## 7 - ம் அதிகாரம்.

### அலரறிவுறுத்தல்—*Talk about Rumour.*

பரி:—அஃதாவது களவொழுக்கம் வேண்டிய தலைமகன் பிறர் கூறுகின்ற வலர் தனக்காகின்றவாற்றைத் தோழிக் கறிவுறுத்தலும், வரைவாக உடன்போக் காக ஒன்றுவேண்டிய தலைமகளுந் தோழியும் அவ்வலரை யவன்றனக் கறிவுறுத்தலுமாம்- † இது நாணுத்துறந்தவழி நிகழ்வதாகலான், நாணுத்துறவுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது களவொழுக்கத்தை வேண்டிய தலைமகன் பிறர் சொல்லுகின்ற அலர் தனக்காகின்ற விதத்தைத் தோழிக்கு அறிவித்தலும், மணமாவது உடன்போக்காவது ஒன்று வேண்டிய தலைமகளும் தோழியும் அவ்வலரை அவனுக்கு அறிவித்தலுமாம். இது நாணுத்துறந்தவிடத்து நிகழ்வதாகலால், நாணுத்துறவுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

க. அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்

பலரறியார் பாக்கியத் தால்.

[† அல்லகுறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி

அலர்கூறி வரைவுகடாயவழி அவன் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) ‖ 'மடந்தையோ டேம்மிடைநட்பு' ஊரின்க ணல ராயெழுதலான் அவளைப்பெறுது வருந்துமென் னரியவுயிர் பேற்றது போன்று நிலைபெறும், அந்நிலைபேற்றைத் தெய்வத்தால் யானேயறி வதல்லது கூறுகின்ற பலரு மறியார், (எ-று).

அல்லகுறிப்பட்டுத் தலைமகளை யெய்தப் பெறுத வருத்த மெல்லாந் தோன்ற :'ஆருயிர்' என்றும், அங்ஙனமறியாளை எளியளாத்கியெடுக்கின்ற

---

† இது - அலரறிவுறுத்தல்.

‡ அல்லகுறி-குறியல்லாத குறி ; குறி - அடையாளம்.

இல் முன் என்பது முன்றில் என்றுயதுபோலக் குறியல்ல என் பது அல்லகுறியென்றுயிற்று. அல்லகுறியாவது தலைமகனால் உண்டாக்கப் படுவனவாகிய புள்ளெழுப்பல், இளநீர்வீழ்த்தல், நீரில் கல்லெறிதல் முத லாயின மற்றொன்றனால் உண்டாதல். இதன்விரிவை "அல்லகுறிப் படுத லும்" என்னும் இறையனாரகப் பொருளின் சூத்திரவுரையிற் கண்டு கொள்க.

‖ காதற்சிறப்புரைத்தல் - 2.

: அரியவுயிர் என்றும் பாடமுண்டு.



7

மையின், * அஃ † தவ்வாருயிர்க்குப் பற்றுக் கோடாகாநின்ற தென்பான் 'அலரெழ வாருயிர் நிற்கும்'என்றும், ‡ பற்றுக்கோடாதலை ¶ அவ்வூரா ரறியிற் றூற்று தொழிவர்; ஒழியவே,ஆருயிர்போமாகலான் அவரறியாதொ ழிகின்றது | 'பாக்கியத்தால்'என்றுங் கூறினான். முற்றும்மை விகாரத் தாற்றொக்கது.

தெளி:—[இரவுக்குறி தவறிய மறுநாள் வந்த தலைமகனை நோக்கித் தோழி அலர்கூறி மணம் விழுவிய விடத்து, அவளுக்கு அவன் சொல் லியது.] (இ - ள்.)

(இம்மடந்தையோடு எம்மிடத்துளவாகிய கட்புக்கள்)
அலரெழ-(ஊரில்) அலராயெழுதலால்,
ஆருயிர்-(அவளைப்பெறுது வருந்து கிற என்) அரியவுயிரானது,
நிற்கும் - (அவளைப் பெற்றதுபோல) நிலை பெறும், அதனை
- அந்நிலை பேற்றை, பாக்கியத்தால் - நல்லூழால், (யாளை
அறிவதல்லது), பலர் - (தூற்றுகின்ற) பலரும், அறியார் -,
(எ - று).

இரவுக்குறிதவறித் தலைமகளை அடையப்பெறுத வருத்தமெல்லாம் தோன்ற 'ஆருயிர்' என்றும், அவ்வாறு அரியவளை எளியவளாக்கி எடுக்கின் றமையால், அஃது அவ்வாருயிர்க்குப் பற்றுக்கோடாக நிற்கின்ற தென் பான் 'அலரெழ வாருயிர் நிற்கும்' என்றும், பற்றுக்கோடாதலை அவ்வூனர் அறிந்தால் தூற்று தொழிவர்; ஒழியவே, ஆருயிர்போமாகலால் அவரறியா திருக்கின்றது 'பாக்கியத்தால்' என்றும் சொல்லினன். பலருமென்னும் முற்றும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது.

(க - து.) தோழியைநோக்கித் தலைமகன் அலர்காரணமாக என் னுயிர் நிலைபெற்றி நக்கின்றது; அதனைத் தூற்றுகின்றவரறியா திருக்கின்றனரென்றன் என்பது.

1. My precious life stands fast by the rise of rumour, and to my good fortune, many know this not.

உ. மலரன்ன கண்ணு ளருமை யறியா
தலரேமக் கீந்ததிவ் வூர்.

[இதுவுமது]

பரி:—(இ - ள்.) மலர்போலுங் கண்ணையுடையாளது எய்தற்கரு மை யறியாது இவ்வூர் அவளை யெளியளாக்கி அவளோ டலர்கூறலை எமக்குபகரித்தது, (எ - று).

---

* அஃது - அடைதற்கரியவளை யெளியவளாக்கி ஊராரொடுத்துக்கூறுதல். † அவ்வாருயிர்க்கு - வருந்துகின்ற எனதரியவுயிர்க்கு.

‡ பற்றுக்கோடாதலை - ஆதாரமாகவிருத்தலை.

¶ அவ்வேதிலர் எறியினென்றும் பாடமுண்டு.

| தெய்வத்தானென்றும் பாடமுண்டு.

அருமை - * அல்ல குறிப்பாட்டானும் † இடையீடுகளானும் ஆயது. ‡ 'ஈந்தது' என்றான்; தனக்குப் பற்றுக்கோடாகலின். அலர் கூறுவாரை அவர் செய்த உதவிபற்றி 'இவ்வூர்' என்றான்.

தெளி:—[இதுவுமது.] (இ -ள்.) மலரன்ன கண்ணுள் - குவளை மலர் போலுங் கண்களையுடையவளது, அருமை-(அடைதற்கு) அருமையை, அறியாது-அறியாமல், இவ்வூர்—,(அவளை எளியவளாக்கி), அலர்- (அவளோடு) அலர் கூறலை, எமக்கு—, ஈந்தது-உபகரித்தது. (எ - று).

அருமை - இரவுக்குறி தவறுதலாலும் இடையீடுகளாலும் ஆயது. அலர்கூறல் தனக்குப்பற்றுக் கோடாகலால் 'ஈந்தது' என்றான். அலர்கூறுவாரை அவர்செய்த உதவிபற்றி 'இவ்வூர்' என்றான்.

(க - து.) தலைமகன் இவ்வூரார் கூறும் அலர் எனக்குபகாரஞ் செய்வதாயிருக்கின்றதென்று னென்பது.

2. Not knowing the rareness of her with flower-like eyes, this village has got up a rumour that makes her mine.



குஈ. உருஅதோ வூரறிந்த கௌவை யதனைப்
பெருஅது பெற்றன்ன நீர்த்து.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) எங்கட்குக் கூட்டமுண்மைஇவ்வூரறிதலான் வீளா நந்தவலர் எனக்கறுவதொன்றன்றே, † அதுகேட்ட வேன்மனம் அக்கூட்டத்தைப் பெறுதிருந்தே பெற்றற்போலு நீர்மையையுடைத்தாகலான், (எ - று).

பெற்றன்னநீர்மை - பெற்றவழியுளதா மின்பம்போலு மின்பமுடை மை. நீர்த்தென்பதற்கேற்ற மனமென்னும் வினைமுதல்வருவிக்கப்பட்டது.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்-) ஊரறிந்தகௌவை - (எங்களுக் குப் புணர்ச்சி உண்டாயிருத்தலை) இவ்வூர் அறிதலால் விளைந்த அலாணது, உறுஅதோ - (எனக்கு) உறுவதொன்றன்றோ, (அதுகேட்ட என் மனம்), அதனைப்பெறுஅது - அப்புணர்ச்சியைப் பெறுதிருந்தே, பெற்றன்ன நீர்த்து - பெற்றுற் போலும் நீர்மையை யுடையது, (ஆகலால்), (எ - று).

பெற்றன்னநீர்மை - (புணர்ச்சியைப்) பெற்றவிடத்துண்டாகும் இன் பம்போலு மின்பமுடைமை. நீர்த்தென்னும் பயனிலைக்கு ஏற்ற மனம் என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது. மனம் நீர்த்து என்று கொள்க.

---

* "அல்லகுறி வருந்தொழிற் கருமை யென்றுங், கெல்லிக்குறி யிடையீ டிருவகைத் தாகும்' என்று அகப்பொருள் விளக்கங் கூறுகின்றது.

† இடையீடுகள் - தடைகள்.

‡ அலர் கூறல் (பலரறிந்து தூற்றுதல்) தலைமகளைத் தானடைதற்குப் பற்றுக்கோடாகவிருத்தலால், தலைமகன் (இவ்வூர் அலரெமக்கு) 'ஈந்தது' என்று கூறினனென்க.

(க - து.) தலைமகன் இவ்வூரி லுண்டாகிய அலரைக் கேட்ட என்மனம் தலைமகளை யடைந்தாற்போல இன்பமுடையதாயிற்று என்றுரைத்தது.

3 Will not the rumour that is known to the town be a gain to me; for what I have not got is as though that were obtained.

கூ. கவ்வையாற் கவ்வித காம மதுவின்றேற்
றவ்வென்னுந் தன்மை யிழந்து.

[இதுவுமது].

பரி:—(இ - ள்.) என்காமம் இவ்வூரோடுகின்ற அலராலே யலரீ தலை யுடைத்தாயிற்று; அவ்வல ரில்லையாயின், தன்னியல்பிழந்து சுருங்குதும், (எ - று).

அலர்தல் - மேன்மேன்மிகுதல். செவ்வையுடையதனைச் செவ்வியென்ன முற்போலக் கவ்வையுடையதனைக் 'கவ்வித' என்றார். இயல்பு - இன்பம் பயத்தல்.* தவ்வென்னுமென்பது குறிப்புமொழி; * "நால்கால் யாத்த மாலை வெண்குடை, தவ்வென் றசைஇத் தாழ்துளி மறைப்ப" என்புழியு மது.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) காமம் - (என்) காமம், கவ்வை

யால் - (இவ்வூர்) எடுக்கின்ற அலராலே, கவ்வித - அலர்தலையுடையதா யிற்று, அதனின்றேல் - அவ்வலர் இல்லையாயின், தன்மையிழந்து - தன்னி யல்பிழந்து, தவ்வென்னும் - சுருங்கிப்போகும், (எ - று).

அலர்தல் - (காமம்) மேலுமேலுமிகுதல். செவ்வையுடையதனைச் செவ்வித என்று கூறுவதுபோலக் கவ்வையுடையதனைக் 'கவ்வித' என்றார். இயல்பு - (காமம்) இன்பந்தருதல். தவ்வென்னும் என்பது குறிப் பிடைச்சொல்.*

(க - து.) தலைமகன் அலரில்லாவிடின், என் காமந் தன்னியல் பிழந்து சுருங்கிப்போமென்று னென்பது.

4. Rumour increases my love ; otherwise it

would lose its power & languish.

---

* பத்துப்பாட்டு நெடுநல்வாடை, 184, 185-வது வரி. இதன்பொ ருள். நூலாலே சட்டத்தைக் கட்டின முத்துமாலையினையுடைய வெண் கொற்றக் குடையானது சுருங்கியசைந்து தாழ்துளியை(பெய்கின்ற மழைத் துளியை) (மேல்விழுவொட்டாது) தடுக்காநிற்க என்பது. தாழ்துளி என்ப



நு. களித்தோறுங் கள்ளுண்டல் வேட்டற்றுற் காமம்

வெளிப்படுந் தோறு மினிது.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) கள்ளுண்பார்க்குக் களிக்குந்தோறுங் கள்ளுண் டல் இனிதாமாறுபோல, எனக்குக் காமம் அலராந்தோறும் இனிதாகா நின்றது, (எ - று).

வேட்கப் பட்டதற்றுவென்பது வேட்டற்றுவென நின்றது. வேட்கை மிகுதியால் அலரும் இன்பஞ் செய்யாநின்ற

தென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) (கள்ளுண்பார்க்கு) களித்தொறும்-களிக்குந்தோறும், கள்ளுண்டல் - கட்குடித்தல், வேட்டற்று - இனிதாம் விதம்போல, காமம் - (எனக்குக்) காமம், வெளிப்படுந்தோறும் - அலாந் தோறும், இனிது - இனிதாகா நின்றது, (எ - று).

ஆல் - அசை. வேட்கப்பட்டதற்குலென்பது செய்யுள் விகாரத்தால் வேட்டற்குலென நின்றது. வேட்கையிகுதியால் அலரும் இன்பம் செய் கின்ற தென்பதாம். வேட்கை - புணர்ச்சி விருப்பம்.

(க - து.) தலைமகன் அலர் மிகுந்தோறும் எனக்குக் காமம் இனிதாகா நின்ற தென்று னென்பது.

5. As drinking liquor is delightful whenever a drun- kard is in mirth, so love is sweeter to me the more it is revealed.

சு. கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.

[இடையீடெளாணும் அல்லகுறியாணுச் தலைமகனை யெய்தப்பெறுத தலைமகள் அவன் சிறைப்புறத்தாணுகத் தோழிக்குச் சொல்லுவாளாம்

அலரறிவுறீஇ வரைவுகடாயது.]

பரி:—(இ - ன்.) யான் காதலரைக் கள்ளுறப்பெற்றது ஒரு ஞான்றே, அதனையவலர் அவ்வளவிற்றன்றித் திங்களைப் பாம்பு

கொண்ட வலரீபோன்று உலகெங்தும் பாந்தது, (எ - று).

† காரியத்தைக் காரணமாக வுபசரித்துப் †

'பாம்புகொண்டற்று'

தற்குப் பிரதியாகத் தாதளி என்றும் பாடமுண்டு. தவ்வென்று என்ப தற்கு கச்சினார்க்கினியர் "தவ்வென்னும் ஓசைப்பட்டு" என்றுரையிட் டிருக்கின்றனர்.

† திங்களைப்பாம்பு கொள்ளுதலாலாகிய அலரைத் 'திங்களைப் பாம்பு கொண்டற்று' என்று கூறினமையின், காரியத்தைக் காரணமாக வுபசரித்த





என்றார். * இருவழியும் மன்னும் உம்மையும் அசைநிலை. காட்சியின்றி

யும் அலர்பரக்கின்ற இவ்வொழுக்கம் இனியாகாது, வரைந்துகோடல்

வேண்டுமென்பதாம்.

தெளி:—[இடையீடுகளாலும்

இரவுக்குறி தவறுதலாலும் தலைமகனை

யடையப்பெறுததலைமகள் அவன் சிறைப்புறத்தாளாகத் தோழிக்குச் சொல்லு

வாளாய் அலரை அறிவித்து மணஞ்செயல் விழுமியது.] (இ - ள்.) கண்

டது - யான் காதலரைக் காணப்பெற்றது,

ஒருநாள்-ஒருநாளேயாம், அலர்-

(அதனாலுண்டாகிய) அலரானது, (அவ்வளவினதன்றி),

திங்களைப் பாம்பு

கொண்டற்று - சந்திரனைப் பாம்புகொண்ட அலர்போல

உலகெங்கும் பரந்

தது, (எ - று).

அலராகிய காரியத்தைப் பாம்புகொள்ளுதலாகிய காரணமாக உபசரித்

துப் 'பாம்பு கொண்டற்று' என்றாள். இரண்டிடத்தும் மன்னும் உம்மையும்

அசைநிலைகள். காதலரைக்காணுதலின்றியும் அலர்பரக்கின்ற

இவ்வொழுக்

கம் இனியாகாது, மணஞ்செய்துகொள்ளுதல்

வேண்டுமென்பதாம். சிறைப்

புறம் - வேலிப்புறம்.

(க - து.) தலைமகள் சிறைப்புறத்து வந்து நிற்கும் தலைமகன்

கேட்கத் தோழிக்கு அலர் தன்னளவு கடந்து எங்கும் பரவிற் றென்று ளென்பது.

6. It was but a single day that I saw my lover ; but
the rumour thereof has spread like the darkness when the dragon seizes the moon.

---

தாயிற்று. திங்களைப்பாம்புகொள்ளுதல் காரணம் ; அலர் காரியம். இங்கு அலர் திங்களைப் பாம்புகொண்டதென்றுலகத்தாரறிந்து கூறுதலாம்.

பாகவதம் ஆசிரியரை யுரைத்த வத்தியாயத்தில் "களங்க மென்பது
மதிக்கிலை கருதிமக் களங்கம், வளங்கொள் பூமியின் சாயையென் பாரதை மதித்தேன்" என்று கூறுகின்றது.

(இரகணகாலங்களில்) சந்திரனை மறைக்கின்ற பூமியின் சாயையினை

யும் சூரியனை மறைக்கின்ற சந்திரனது சாயையினையும் இராகு கேதுக்க ளென்னும் அரவுவடிவக்கிரகங்கள் சந்திரனையும் சூரியனையும் விழுங்குகின் றனவென்று கூறுதல் புராணமரபாம். இராகுவும் கேதுவும் சாயாக்கிரகங்க ளெனப்படும். இராகு கருநிறப்பாம்பாம்; கேது செந்நிறப் பாம்பாம். "இரா குக்கோள் கரும்பாம்பு" "கேதுக்கோள் செம்பாம்பு" என்பது சேந்தன் திவாகரம்.

ரிபுகீதை 31-வது அத்தியாயத்தில் "இந்துவினன் சம்பந்த மன்றி ராகு வெங்கேனுந் தெரிவுற்றுற் சகத்துளு சத்தாம்" என்று கூறுவதால், சந்திரனைப்பிடிப்பது ராகுவென்று விளங்குகின்றதென்க. இந்து—சந்திரன்.

* இருவழியும் - கண்டது மன்னும், அலர் மன்னும் என்னும் இரண் டிடத்திலும். மன்னும் உம்மையும் - மன் என்பதும், உம் என்பதும்.



எ. * ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொன்
னீராக நீளுமிந் நோய்

[வரைவுநீட ஆற்றாளாய தலைமகளைத் தலைமகன் சிறப்புறத்தாஞ்செ லறிந்ததோழி ஊரவரலரும் அன்னை சொல்லுநோக்கி யாற்றல் வேண்டுமெனச் சொல்லெடுப்பியவழி அவள் சொல்லியது.]

பரி:—(இ- ள்.) இக்காமநோயாகிய பயிர் இவ்வூரின்மகளிரேடுக் கின்ற அலர் எருவாக † அதுகேட்டு அன்னை வெதுண்டுசொல்லுகின்ற வெஞ்சொல் நீராக வளரா நின்றது, (எ - று).

‡ ஊரவனென்பது தொழிலான் ஆணுழித்து நின்றது. ¶ எகதேச வுருவகம். & சுருங்குதற் கேதுவாவனதாமே விரிதற்கேதுவாகா நின்றன வென்பதாம். வரைவாணுதல் | பயன்.

தெளி:—[கலியாணஞ் செய்துகொள்ளுதல் தாமதமாகப் பொறுக்கா தவளாய தலைமகளைத் தலைமகன் சிறைப்புறத்தாளுதலறிந்த தோழி ஊரவ ரலரையும் அன்னைசொல்லையும் நோக்கி நீ பொறுத்தல் வேண்டுமெனச் சொல்லெழுப்பியவிடத்து அத்தோழிக்கவள் சொல்லியது.] (இ - ள்.) இந் நோய் - இக்காம நோயாகிய பயிர், ஊரவர்கௌவை - இவ்வூரிலுள்ளமகளிர் எடுக்கின்ற அலராவது, எருவாக—, அன்னைசொல்-(அதுகேட்டுக் கோபித் து) அன்னைசொல்லுகின்ற கடுஞ்சொல்லானது, நீராக-, நீளும் - வளர்ந் நின்றது, (எ - று).

ஊரவனென்பது கௌவையென்னுந் தொழிலால் ஆண்பாலையொழித் துப் பெண்பாலை யுணர்த்தி நின்றது. இஃது எகதேசவுருவகம். காமநோய்

---

* ஊரவர் கௌவை யொருவிட் டன்னைசொன் னீர்மதித், தீரநெல் வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ்செய்யுள், போமர் காதல் கடல்புரைய விளைவித்த, காரமர் மேனிநங் கண்ணன் தோழி கடியனே" என்று திரு வாய்மொழி கூறுவதிற்கறிதற்பாலதாம்.

† அதுகேட்டு - அவ்வலரைக்கேட்டு.

‡ ஊரவர் என்னும் (ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாகிய) சொல் கௌவையென்னுந் தொழிலால் ஆண்பாலை யொழித்துப் பெண் பாலை யுணர்த்திநின்றமையின், ஒன்றொழி பொதுச்சொல்லாம்.

¶ ஊரவர் கௌவையை யெருவாகவும் அன்னை சொல்லை நீராகவும் உருவஞ்செய்தவர் அதற்கியையக் காமநோயைப் பயிராக வுருவகஞ்செய்யா மையின், இக்குறள் எகதேசவுருவகமாயிற்று.

§ காமநோய் சுருங்குதற்குக் காரணமாய ஊரவர் கௌவையும் அன்னை சொல்லுமே அது விரிதற்குக்காரணமாகாநின்றன என்பதாம்.

| இது சொல்ல இன்னது பயக்குமென்றறிவது பயனும். "இப் பொருள் பயக்குமிஃ தென்பது பயனே" என்பது அகப்பொருள் விளக்கம்.

'ஊரவர் * * நோய்' என்பது இது சொல்லலாம்; வரைவானென் றறிவது இன்னது பயக்குமென்றறிவதாம்.



சுருங்குதற்குக் காரணமாவனதாமே விரிதற்குக் காரணமாகா நின்றன வென்பதாம். மணஞ்செய்வானுதல்

பயன். அன்னை - தாய்.

(க - து.) தலைமகள் தோழிக்கு இவ்வூரிலுள்ள மகளிரெடுக் கின்ற அலராலும் எனதன்னை சொல்லுங்கடுஞ்சொல்லாலும் எனக் குக் காமநோய் அதிகப்படுவதாயிற் றென்றுளென்பது.

7. This malady of lust grows apace by the talk of women manuring it and the harsh words of my mother watering it.



அ. நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றுற் கௌவையாற் காம நுதுப்பே மெனல்.

[இதுவுமது]

பரி:—(இ - ள்.) ஏதிலாரெடுக்கின்ற அலால் நாங் காமத்தை யவித்துமென்று கருதுதல் நெய்யாலெரியை யவித்துமென்று கருது தலோ டொக்கும், (எ - று).

மூன்றனுருபுகள் கருவிக்கண் வந்தன. இளர்தற் காரணமாய அலரால் அவித்தல் கூடாதென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) கௌவையால் -

(அயலவரெடுக்கி ன்ற) அலால், காமம் - (நாம்) காமத்தை, நுதுப்பேமெனல் - அவிப்போ மென்று நினைத்தல், நெய்யால்-, எரி – நெருப்பை, நுதுப்பேமென்றற்று - அவிப்போமென்று நினைத்தலோடொக்கும், (எ – று).

நெய்யால், கௌவையால் என்னும் மூன்றனுருபுகள் துணைக்கருவிப் பொருளில் வந்தன. காமம் வளர்தற்குக் காரணமாகிய அலால் அக்காமத் தை அவித்தல் கூடாதென்பதாம். ஆல்-அசை.

(க - து.) தலைமகள் அயலவரெடுக்கின்ற அலால் நாம் காமத்தை யடக்குதல் முடியாதென்றாள் என்பது.

8. To say that one could extinguish love by rumour, is like extinguishing fire with ghee.

கூ. அலர்நாண வொல்வதோ
வஞ்சலோம் பென்றூர்
பலர்நாண நீத்தக் கடை.

[வரைவிடைவைத்துப் பிரிவின்க ணூற்றாளாய தலைமகள் அவன்
வந்து சிறைப்புறத்தா னுதலறிந்து அலராஞ்சி

யாற்றல்

வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]



பரி:—(இ - ள்.) * தம்மை யெதிர்ப்பட்டஞான்று † நின்னிற் பிரி யேன் ‡ அஞ்சுலோம்பென்றவர்தாமே இன்று கண்டார் பலரும் நாணும் வகை நம்மைத் துறந்தபின் நாமேதிலார் கூறுமலருகீத நாணுகூடு மோ? கூடாது, (எ - று).

¶ நாணவென்னும் வினையெச்சம் ஒல்வதென்னுந் தொழிற்பெயருள் ஒல்லுதற் றொழிலோடு முடிந்தது. கண்டார் நாணுநிலைமையமாய யாம் நாணுதல் யாண்டைய தென்பதாம்.

தெளி:—[மணஞ்செய்தலை யிடையிலெனவைத்து அதற்குவேண்டும் பொருள் சம்பாதிக்கத் தலைமகன் பிரிந்தபோது பொறுக்காதவளாகிய தலை மகள் அவன்வந்து சிறைப்புறத்தானுதலறிந்து அலரஞ்சிப் பொறுத்தல் வேண்டுமென்றதோழிக்குச் சொல்லியது.] (இ - ள்.) (தம்மை யெதிர்ப் பட்டுக் கண்டநாளில்) அஞ்சுலோம்பென்றூர் - (உன்னைவிட்டு நீங்கேன்) அஞ்சுதலொழி யென்றவர்தாமே, பலர்நாண - (இன்றுகண்டார்) பலரும் நாணும்வகை, நீத்தக்கடை -

(நம்மைவிட்டு) நீக்கியபின், அலர் - (அயலவர் கூறும்) அலருக்கு, நாணவொல்வதோ-(நாம்) நாணக்கூடுமோ, (கூடாது).

நாண என்னும் வினையெச்சம் ஒல்வதென்னும்தொழிற்பெயரின்பகுதி யாய ஒல் என்பது கொண்டு முடிந்தது. கண்டார் நாணும் நிலைமையமா கிய நாம் நாணுதல் எவ்விடத்த தென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழிக்கு இன்று கண்டார் பலரும் நாணமுறுமாறு காதலர் நம்மைவிட்டுப் பிரிந்தபின், நாம் அயலார் கூறும் அலர்க்காக நாணுதல் கூடாதென்றாள் என்பது.

9. When he who said "fear not" has put me to shame before others by leaving me, why should I be ashamed of scandal.

---

கo. தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங்
கௌவை யெடுக்குமிவ் வூர்.

[தலைமகன் சிறைப்புறத்தானுகத் தோழி

தலைமகட்குச்சொல்லுவாளாய்

அலரறிவுறீஇ அவன் உடன்போக்கு நயப்பச்

சொல்லியது.]

---

* தம்மை யென்றது தலைமகனை.

† "ஆவியன் னுய்க்கவ லெலக லேமென்

றளித்தொளித்த, ஆவியன் னூர்' என்று திருக்கோவையார்

கூறுவதிங்கறிதற்பாலதாம்.

‡ அஞ்சலோம்பென்றவர் - அஞ்சவேண்டாம் ; கைவிடோமென்று

கூறியவர்.

¶ நாண என்னும் (செயவென்னும் வாய்பாட்டு)

வினையெச்சம் ஒல்

வது என்னும் தொழிற்பெயரின் பகுதியதான

ஒல்லுதற்றொழிலோடு

முடிந்தது.

களவியல்—எ-வது அலரறிவுறுத்தல்.

பரி:—(இ - ள்.) உடன்போகற் கேதுவாகனெக்கி யாம்பண்டே

விரும்புவதாய அலரை இவ்வூர்தானே யெடாநின்றது; இனிக் காதலர்தாழும் யாம் வேண்டியக்கால் * அதனை யினிதினேர்வர், † அதனால் இவ்வலர் நமக்கு நன்றாய் வந்தது, (எ - று).

‡ எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது.

கங்கட்காதலுடைமையின் மறு ரென்பது தோன்றக் 'காதலர்' என்றாள். இவ்விருபதுபாட்டும் புணர்த லிமித்தம்.

தெளி:—[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகளுக்குச் சொல்லுவாளாய் அலரறிவித்து அவன் உடன்போக்குவிரும்பச் சொல்லியது.] (இ - ள்.) யாம் வேண்டுங்கெளவை - (உடன்போகற்குக் காரண மாதலை நோக்கி) யாம் முன்னரே விரும்புவதாகிய அலரை, இவ்வூர் எடுக்கும் - இவ்வூர்தானே எடாநின்றது, காதலர்தாம் - (இனிக்) காதலர்தாமும், வேண்டின் - (நாம்) வேண்டினால், கல்குவர்-(அதனையினிதாக) உடன்படுவர், (அதனால் இவ்வலர் நமக்கு நன்றாய் வந்தது), (எ - று).

தாமுமென்ற எதிரது தழுவிய வெச்சவும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. நம்மிடத்துக்காதலுடைமையால் (தலைவர் உடன்போக்கை) மறுக்காரென்பதுதோன்றக் 'காதலர்' என்றாள். "காமமுழந்து" என்னுங் குறள்முத லிவ்விருபது பாட்டும் புணர்தல் நிமித்தம்.

(க - து.) தோழி, தலைமகன்

கேட்கத் தலைமகளை நோக்கி வரா

றெடுக்கின்ற அலர் நமக்கு உடன்போக்கிற்குற்ற துணையாக விருக் கின்றது; நாம் விரும்பினால் காதலதற் குடன்படுவாரென்று கூறினாள் என்பது.

10. The town raises the rumour I desire; and my lover would if desired grant my request (to follow him).

களவியல் முற்றிற்று.

* அதனையினிதினேர்வர்-உடன்போக்கை யினிதாகவேற்றுக்கொள்வர்.

† அதனால் - உடன்போகற் கேதுவாயிருத்தலால்.

‡ தொக்குநின்ற தாமும் என்றவும்மை யாம்விரும்புவதேயன்றியென் னும் பொருளைத் தந்தமையால், எதிரதழீஇய வெச்சவும்மையாயிற்று.



† கற்பியல்—

## Wedded Love.

பரி:—இனிக் கற்புப் பதினேட்டதிகாரத்தாற்

கூறுவான் றொடங்கி, முதற்கட் பிரிவாற்றுமை கூறுகின்றார்.

தெளி:—இனிக்

கற்புப் பதினெட்டதிகாரத்தால் சொல்லத்தொடங்கி, முதலில் பிரிவாற்றுமை சொல்லுகின்றார்.

## 1-ம் அதிகாரம்.

## பிரிவாற்றுமை—Unendurable Separation.

பரி:—அஃதாவது வரைந்தெய்தியபின் தலைமகன் அறம் பொரு
ளின்பங்களின் பொருட்டுச் ‡ சேயிடையினும்
ஆயிடையினுந் தலைமக
ளைப் பிரிந்துசெல்லும்; செல்லுழான்று அப்பிரிவினை அவளாற்று

ளாந் தன்மை. ¶ அஃது ஈண்டுப் பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி கூறலும், அவடனக்குத் தலைமகடானே அவன் குறிப்பாலுணர்ந்து கூறலும், பிரிவுணர்த்தியவழிக்கூறலும், தலைமகன் பிரிந்துழி ஆற்றுவிக் குந் தோழிக்குத் தலைமகள் மறுத்துக் கூறலுமென நால்வகையாற் கூறப்படும்.

தெளி:—அஃதாவது மணஞ் செய்துகொண்ட பின் தலைமகன் அறம் பொரு ளின்பங்களின் பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினும் தலைமக ளைப் பிரிந்து

செல்லும்; செல்லுநாளில் அப்பிரிவினை அவள் பொறுக்க மாட்டாதவனாந் தன்மையாம். அஃது இங்குப் பிரிவை அறிவித்த தலைமக

---

† கற்பியல் — கற்பினது இலக்கணம்.

"பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது" என்னும் இலக்கண விளக்கச் சூத்திரவுரையில் "அஃதாவது (கற்பாவது) கொண்டானிற் சிறந்த தெய்வமின்றெனவும் அவனை யின்னவாறே வழிபடுகவெனவும் இரு முதுகுரவரானும் அந்தணர் நிறத்தும் சான்றோர் தேத்தும் ஐயர்பாங்கினும் அமரர்ச்சுட்டியும் ஒழுகு மொழுக்கமும், தலைமகனுங் கற்பித்தவாறொழு குதலும், இனித் தலைமகளும் களவின்கண் ஓரையும் நாளும் தீதென்றது ணத் துறந்தொழுகினாற் போல ஒழுகாது ஓத்தினும் காணத்தினும் யாத்த

சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக்கொண்டு துறவறத்திற் செல்லுந் துணையும் இல்லற நிகழ்த்தலுமாம்" என்ற கூறப்பட்டிருப்பதும், "கற்பெனப் படுவது காணமொடு புணரக், கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக், கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே" என்று தொல்காப்பி யங் கூறுவதும் இங்குணர்தற்பாலனவாம். [காணம் - வேள்விச் சடங்கு.]

‡ சேயிடை - தூரதேசம்; ஆயிடை - அவ்விடம், அஃதாவது நகர்ப்புறம்.

## கற்பியல் க-வது பிரிவாற்றுமை.

**1227**

னுக்குத் தோழி சொல்லுதலும், அத்தோழிக்குத் தலைமகள்தானே அவன் குறிப்பால் அறிந்துசொல்லுதலும், அவள் பிரிவை அறிவித்தவிடத்துச் சொல்லுதலும், தலைமகன் பிரிந்தவிடத்து ஆற்றுவிக்குந் தோழிக்குத் தலைமகள் மறுத்துச்சொல்லுதலும் என நால்வகையாற் சொல்லப்படும்.

க. செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

[பிரிந்து கடிதின் வருவலென்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நீ யெம்மைப் பிரியாமை யுண்டாயின் அதனை யெனக்குச் சொல், * அஃதோழியப் பிரிந்துபோய் நின்விரைந்து வருதல் சொல்லையாயின் அதனை அப்பொழுது உயிர்வாழ்வார்க்குச் சொல், (எ -

று).

தலைமகளை யொழித்து 'எனக்கு' என்றாள்; தானவனென்னும் வேற்றுமை யின்மையின்: அக்காலமெல்லா மாற்றியிருந்து | அவ்வரவு காண வல்லளல்லள்; பிரிந்தபொழுதே யிறந்துபடுமென்பதாம். † அழுங்குவித் தல் பயன். ‡ இதனைத் தலைமகள் ¶ கூற்றுக்கி யுரைப்பாருமுளர். ☙

தெளி:—[பிரிந்து விரைவில் வருவேனென்ற தலைமகனுக்குத் தோழி சொல்லியது.] (இ - ள்.) செல்லாமையுண்டேல் - (நீ எம்மைப்) பிரியாமை உண்டாயின், எனக்கு உரை - (அதனை) எனக்குச் சொல்லு, மற்று - அஃ தொழிய, நின் வல்வரவு - (பிரிந்துபோய்) உன்விரைந்து வருதலை,(சொல் வையாதலால் அதனை), வாழ்வார்க்கு - (அப்பொழுது உயிர்) வாழ்வார்க்கு, உரை - சொல்லு, (எ - று).

தோழி தலைமகளை யொழித்து 'எனக்கு' என்றாள்; தான் அவள் என்னும் வேற்றுமையில்லாமையால். தலைமகள் நீ பிரிந்திருக்கு மக்காலமெல்லாம் பொறுத்திருந்து அவ்வரவுகாண வலிமையுடையளல்லள்; பிரிந்த பொழுதே இறந்து விடுவளென்பதாம். அழுங்குவித்தல் பயன்.

(க - து.) தலைமகளை நோக்கித் தோழி நீ பிரிந்துபோவாயாயின், தலைமகளுடனே இறந்துவிடுவாளென்று கூறினள் என்பது.

1. If it is not separation from me, then tell me so; but if it is your quick return, tell it to those who would be alive then.

உ. இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு.

---

* அஃது - பிரியாமை.

| அவ்வாவுகாணு மதுகையவல்லல் என்றும் பாடமுண்டு. மதுகை - வல்லமை.

† அழுங்குவித்தல் - இரங்கச்செய்தல்.

‡ இதனை - இக்குறளை ¶ கூற்றாக்கி - சொல்லாக்கி.



[பிரிவு தலைமகன் குறிப்பானறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) தழையுங் கண்ணியுங்கொண்டு பின்னின்ற ஞான்று அவர் நோக்கு மாத்திரமும் புணர்ச்சி குறித்தமையான் நமக்கின்ப முடைத்தாயிருக்கும், இன்று அப்புணர்ச்சிதான் நிகழா நிற்கவும் அது பிரிவரென்றஞ்சு மச்சத்தினை யுடைத்தாயிற்று, அவரன்பி னிலைமை யிது, (எ - று).

'பார்வல்' என்றதனாற் புணர்ச்சிபெறுத பின்னிலைக்காலம் பெறப் பட்டது. * புன்கண் என்னுங் காரியப்பெயர் காரணத்தின்மேல தாயிற்று.

அவ்வச்சத்தினையுடைத்தாதலாவது †
"முள்ளுறழ்முளையெயிற்றமிழ்தூறுந் தீநீரைக், கள்ளினு
மகிழ்செய்யு மெனவுரைத்து மமையாரென், னொள்ளி ழை
திருத்து"ம் ‡ பண்டையிற் சிறப்பால் அவன்
பிரிதற்குறிப்புக்காட்டி அச்சஞ்செய்தலுடைமை.
அழுங்குவித்தல் பயன்.

தெளி:—[தலைமகனது பிரிவை அவன் குறிப்பால் அறிந்த தலைமகள்
தோழிக்குச் சொல்லியது.] (இ-ள்.) (தழையும் மாலையுங் கொண்டு பின்னின்ற நாளில்), அவர் பார்வல் - அவரது பார்வை மாத்திரமும், (புணர்ச்சி குறித்தமையால்), இன்கணுடைத்து-(நமக்கு) இன்பமுடையதாயிருக்கும், (இன்று அப்புணர்ச்சிதான் நிகழ்ந்துகொண்டிருக்கவும்), புணர்வு-அப்புணர்ச்சி, பிரிவஞ்சும்-பிரிவரென்றஞ்சுகின்ற, புன்கண் - அச்சத்தினை, உடைத்து - உடையதாயிற்று, (அவரன்பினிலைமை இது); (எ - று).

ஆல்-அசை 'பார்வல்' என்றதனால் புணர்ச்சி பெறாமல் தலைமகன் பின்னின்ற காலம் பெறப்பட்டது. புன்கண் என்னுங் காரியப்பெயர் காரணத்தின்மேல தாயிற்று. புன்கண் - துன்பம்; அதற்குக் காரணம் அச்ச
மாம். அவ்வச்சத்தினை யுடையதாதலாவது புணரும்போது பல்லினிடத் தூறும் நீரைக் கள்ளைக்காட்டிலுங் காட்டில் மகிழ்ச்சியைத் தருமென்று மிகப் புகழ்வதாலும், அணிகளைத் திருத்தலாலும் தலைமகன் தன்பிரிதற் குறிப்புக்காட்டி அச்சஞ் செய்தலுடைமை. அழுங்குவித்தல் பயன்.

(க - து.) தலைவர்க்கு நம்மிடத் தன்பில்லாமை அவரது பிரிவின் குறிப்பால் தெரிகின்றதென்று தலைமகள் தோழிக்குக் கூறினாள் என்பது.

* புன்கண் என்னும் காரியப்பெயர் புன்கண்ணுக்கு (துன்பத்திற்கு)க் காரணமான அச்சத்தின்மேலதாய் நின்றது. இது காரியவாகு பெயராம்.

† கலித்தொகை—பாலைக்கலி, 3. இதன்பொருள். முள்ளைமாறுபடுகின்ற முனையினையுடைய நாணல்முளைபோலும் பல்லினிடத்து விடாமல் ஊறும் அமிழ்துபோலும் இனிய நீரைக் கள்ளினும் காட்டில் மகிழ்ச்சியைத் தருமென்று கூறியும், வேட்கைதணியாராகி யென்னுடைய ஒள்ளிய பூண்கள் (புணர்ச்சியால் நிலைகுலைந்தவற்றைப் பழையநிலைகளிலே கிடக்கும்படி) திருத்துகின்ற என்பது.

‡ பண்டையின் - பழைமையின்.



229

2. His very look was once joyful; but now, the fear
of parting saddens even embrace.



௩. அறிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்.

[இதுவுமது.]

பரி:—(இ- ள்.) பிரியேனென்ற தஞ்சொல்லும்

நம்பிரிவாற்றுமை யும் அறிதலுடையாராய காதலரீ கண்ணும், ஓரோவழிப் பிரிவு நிகழ்த லான் அவர் சொல்லும் * தலையளியும் பற்றி நம்மாட் டன்புடைய ரொனத் தேறுந்தேற்றம் அரிதாயிருந்தது, (எ - று).

அரோ—அசைநிலை. உம்மை உயர்வு சிறப்பின்கண் வந்தது.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.) அறிவுடையார் கண்ணும் - (பிரியே னென்ற தஞ்சொல்லையும் நம்பிரிவாற்றுமையையும்) அறிதலுடைய ராய காதலரிடத்தும், ஓரிடத்து - ஒரேவழி, பிரிவுண்மையான் - பிரிவு நிகழ்தலால், தேற்றம் - (அவர்சொல்லும் தலையளியும் பற்றி நம்மிடத்து அன்புடைய ரென்றுதெளியுந்) தெளிவு, அரிது-அரிதாயிருந்தது, (எ-று).

அரோ - அசைநிலை. (அறிவுடையார் கண்ணும் என்ற) உம்மை உயர்வு சிறப்புப் பொருளில் வந்தது.

(க - து.) தலைமகள் தோழியை நோக்கித் தலைவரிடத்துப் பிரிவு நிகழ்தலால், நம்மிடத்தன்புடையவரென்று அவரை நம்புதல் கூடாதென்றாள் என்பது.

3. Confidence is hardly possible, as even the lover who knows (his promise and my

breaking - heart) may at times depart.

சு.

அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு.

[இதுவுமது.]

பரி;—(இ - ள்.) எதிர்ப்பட்ட ஞான்றே தலையளிசெய்து நின்னிற் பிரியேன் அஞ்சலென்றவர்தாமே பின்பிரிவாயின்,† அவர்க்கன்றிஅவர் தெளிவித்த சொல்லே மெய்யெனத் தெளிந்தார்க்குத் தும்றமுண்டோ?

‡ தேறியாரென்பது தன்னைப் பிறர்போற் கூறல். § சொல்லுஞ்

---

* தலையளி - பூரணவிசுவாசம். † அவர்க்கன்றி - தலைவர்க்கல்லாமல்.

‡ தலைமகள் பாங்கியைநோக்கித் 'தேறியார்க்கு' எனத்தன்னைப் பிறர் போல் வைத்துக்கூறினாள். தன்னைப் பிறாபோல் வைத்துக் கூறலை காந்தி என்பர். § சொல்-நின்னிற் பிரியேன், அஞ்சல் என்பது; செயல்-பிரிவு.



செயலு மொவ்வாமைக் குற்றம் அவர்க்கெய்தும்; *
அஃதெய்தாவகை

† யழுங்குவி யென்பது கருத்து.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.) அளித்து - (எதிர்ப்பட்ட காளே) தலேயளி செய்து, அஞ்சலென்றவர் - (உன்னே விட்டுப்பிரியேன்) அஞ்ச வேண்டாமென்றவர்தாமே, நீப்பின்-(பின்னே) பிரிவாராயின்,(அவர்க்கல்லா மல்), தெளித்த சொல் - (அவர்) தெளிவித்த சொல்லே, தேறியார்க்கு - (மெய்யென்று) தெளிந்தவர்க்கு, தவறு - குற்றம், உண்டோ—,(எ - று).

தேறியாரென்பது தன்னேப் பிறர்போற் சொல்லுதல். சொல்லும் செயலும் ஒத்திராமைக்குற்றம் அவர்க்கு உண்டாம்; அஃது உண்டாகா

வாறு அழுங்கச்செய்யென்பது கருத்து.

(க - து.) தலேமகள் தோழியை நோக்கிப் பிரியேனென்று கூறிய தலேவர் பின் பிரிவாராயின், அவரிடத்தன்றி அவர் சொல்லே நம்பிய நம்மிடத்துக் குற்றமுண்டாமோ என்றாள் என்பது.

4. If he who fondly said "fear not" should depart

what blame is incurred by those who believed in his re-assur-

ing words.

நி. ஏம்பி னமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்
தீங்கி னரிதாற் புணர்வு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) என்னுயிரைச் செல்லாமற் காத்தியாயின், அதனையாளுதற் கமைந்தாருடைய ‡ செலவினை அழுங்குவிப்பாயாக; நீ அழுங்குவிப்பாரின்றி அவர் செல்வாராயின் அவராலாளப்பட்ட வுயிருஞ் செல்லும், சென்றுற் பின்னவரைக் கூடுதல் எனக்கரிதாம், (எ - று).

ஆளுதற்கமைதல் - இறைவராதற்குத் தெய்வத்தாலேற்புடையாதல்.

மற்று வினைமாற்றின்கண் வந்தது.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) ஓம்பின் - (என்னுயிரைச் செல்லா மற்) காப்பாற்றுவையாயின், அமைந்தார் - (அவ்வுயிரை ஆளுதற்கு) அமைந்த வரது, பிரிவு - செலவினை, ஓம்பல் - அழுங்குவிப்பாயாக, மற்று - அழுங்கு விப்பாரில்லாமல், அவர்—, நீங்கின்-செல்வாராயின், (அவரால் ஆளப்பட்ட

---

* அஃதெய்தாவகை - சொல்லும் செயலும் ஒவ்வாமைக்குற்றம் தலைவர்க்கு அடையாதபடி.

† அழுங்குவி - தோழி! நீ தலைவர் பிரியாவாறு அவர் பிரிவைத் தடைசெய். ‡ செலவினை - பிரிவை.

¶ அழுங்குவிப்பாரின்றி - தண்டஞ்செய்வாரில்லாமல்.

கற்பியல்—க-வது பிரிவாற்றுமை.

**1231**

உயிரும் செல்லும், சென்றால்), புணர்வு-(பின்பு அவளைக்) கூடுதல், அரிது- (எனக்கு) அரிதாம், (எ - று).

ஆல் - அசை. ஆற்றுதற்கமைத்தல் - தலைவரானதற்கு ஊழால் தகுதியுடையவராதல். மற்றென்னும் இடைச்சொல் ஓம்பல் என்னும் வினையையோ ழித்து ஓம்பாமை யென்னும் வினையை யுணர்த்தினமையின், வினைமாற்றுப் பொருளதாயிற்று.

(க - து.) தலைமகள் தோழி! நீ தலைவர் பிரிவைத் தடுக்கா தொழிவையாயின், உடனே என்னுயிர் நீங்கிப்போமென்றாள்.

5. If you would save my life, restrain the departure of him who fills my heart; if he depart, hardly we meet again.

சு. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயினரிதவர்
நல்குவ ரென்னு நசை.

[தலைமகன் * பிரிவுணர்த்தியவாறு வந்துசொல்லிய தோழிக்குச்

சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நங்கவவுக்கடுமையறிந்த தலைவர்தாமே நம்மு னின்று தம்பிரிவினை யுணர்த்தும் வன்கண்மை யுடையராயின், அத்தன் மையார் பின்பு நம்மாற்றமை யறிந்துவந்து தலையளி செய்வரென் றிருக்கு மாசை விடப்படும், (எ-று).

† அருமை—பயன்படுதல் இல்லாமை. கூடியிருந்தே அன்பின்றிப் பிரி வெண்ணுதலும் உணர்த்தலும் வல்லாயினர் பிரிந்துபோய் அன்புடைய ராய் நம்மை நினைத்துவந்து நல்குதல் யாண்டையதென்பதாம். அழுங்கு வித்தல் பயன்.

தெளி:—[தலைமகன் தன் பிரிவை அறிவித்தவாறு வந்துசொல்லிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) அவர் - (நமது கவவுக்கடு மையை யறிந்த) அத்தலைவர்தாமே, (நம்முன்னின்று), பிரிவுணர்த்தம் - (தம்) பிரிவினை யறிவிக்கும், வன்கண்ணராயின் - அருளில்லாமையை யுடையவராயின், (அத்தன்மையார் பின்பு), நல்குவரென்னுமசை - (நமது ஆற்றுமையை அறிந்துவந்து) தலையளிசெய்வரென்றிருக்குமாசை, அறுத்து விடப்படும், (எ - று).

---

* "ஓதல் காவல் பகைதணி வினையே, வேந்தர்க்

குற்றழிப் பொருட் பிணி பரத்தையென், றுங்கவ் வாறே யவ்வயிற் பிரிவே'' என்பது இறை யனுகப் பொருள்.

† அருமை - அரிது என்னும் குறிப்பு வினைமுற்றின் பகுதியதான அருமை. அரிது - தலைவர் நல்குவரென்னு நசை பயன்தருவ தாகாது.



அருமை - பயன்படுதலில்லாமை. (நம்மோடு) கூடியிருந்தே அன் பில்லாமற் பிரிவெண்ணுதலும் அறிவித்தலும் வல்லராயினர் பிரிந்துபோய் அன்புடையவராய் நம்மை நினைத்து வந்து தலையளி செய்தல் எவ்விடத்த தென்பதாம். அழுங்குவித்தல் பயன். கவவுக்கடுமை - கையால் இறுக வணைத்துக் கொள்ளுதலின் பிரிவைச் சகியாமை.

(க - து.) தலைமகள் தோழியைநோக்கி நமதாற்றுமையை யறி ந்துள்ள தலைவர் தம்பிரிவினை யறிவிப்பாராயின், அவர் பின்புவந்து தலையளி செய்வாரென்னுமாசையை நாம்விடல் வேண்டுமென்றுள்.

6. If he be so cruel as to mention his departure, the longing hope that he would bestow his love should be given up.

எ.

துறைவன் துறந்தமை தூற்றுகொன் முன்கை

யிறையிறவா நின்ற வளை

[இதுவுமது.]

பரி:—(இ - ள்) துறைவன் என்னைப் பிரியலுற்றமையை அவனுணர்த்தாமற் றமே யுணர்ந்து என் முன்கையி * னிறையினின்றுங் கழலாநின்ற வளைகள் எனக்கறிவியாவோ, அவனுணர்த்த வுணர்ந்து வந்து நீ யறிவித்தல் வேண்டுமோ, (எ-று).

† முன்னே நிகழ்ந்தமையின் 'துறந்தமை' என்றும், ‡ கேட்ட தலை யான் மெலிந்த ஆற்றுமையின் 'இறவாநின்ற' என்றுங் கூறினள். அழுங்குவித்து வந்து கூறற்பாலையல்லையாய நீயும் இவ்வளைகள் செய்தனவே செய்தாயெனப் புலந்து கூறியவாறு.

தெளி;—[இதுவுமது.] (இ - ள்.) துறைவன் - தலைவன், துறந்தமை - (என்னைப்) பிரியலுற்றமையை, (அவன் அறிவிக்காமல் தாமே அறிந்து), முன்கையிறை - (என்) முன்கையின் இறையினின்றும், இறவா நின்றவளை - கழலாநின்ற வளையல்கள், தூற்றுகொல் - (எனக்கு) அறிவியாவோ, [அவன் அறிவிக்க அறிந்து வந்து நீ அறிவித்தல் வேண்டுமோ].

(பிரிவு) முன்னே நிகழ்ந்தமையால் 'துறந்தமை' என்றும், கேட்ட வளவால் மெலிந்த பொருமையால் 'இறவாநின்ற' என்றும் சொல்லினள். அழுங்குவித்து வந்து சொல்லுந் தன்மையளல்லாத நீயும் இவ்

---

* இறையினின்றும் - தங்குமிடத்திலிருந்து

† முன்னே நிகழ்ந்தமையின்-பிரிவு முன்னே உண்டாயிருத்தலால்.

‡ கேட்டதுணையான்-தலைமகனது பிரிவைப் பாங்கிசொல்லக் கேட்டு வளவாள்.

கற்பியல்—க - வது பிரிவாற்றுமை.

**1233**

வளையல்கள் செய்தனவே செய்தாயென்று பிணங்கிச் சொல்லியவாறும்.

நெய்தல் நிலத்துத் தலைவனுக்குத் துறைவன் என்று பெயராம்.

(க – து.) தலைமகள் தோழியை நோக்கித் தலைவனது பிரி

வை நீ வந்துணர்த்துவதற்கு முன்னே எனது வளையல்கள் என

க்கு உணர்த்தின என்றுரைன்பது.

7. Do not the bracelet slipping from my wrist forebode

the separation of my lord.

4. இன்ன தினனில்லூர் வாழ்த லதனினு

## மின்னு தினியார்ப் பிரிவு.

[இதுவுமது.]

பரி:—(இ-ள்.) மகளிர்க்குத் தங்குறிப்பறியுந் தோழியில்லாத வேற்றூரின்கண் வாழ்தலின்னாது; அதன்மேலுந் தங்காதலரைப் பிரிதல் அதனினு மின்னாது, (எ-று).

தலைவன் செலவினை * யழுங்குவித்து

வாராது † உடன்பட்டு வந்த

மைபற்றிப் புலக்கின்றாளாகலின், 'இனனில்லூர்' என்றாள். உலகியல் கூறுவாள் போன்று தனக் ‡ கவ்விரண்டு முண்மை கூறியவாறு.

தெளி:—(இதுவுமது). (இ - ள்.) இனனில்லூர் - (மகளிர்க்குத் தங் குறிப்பறியும்) தோழியில்லாத வேற்றூரினிடத்து, வாழ்தல் - வாழுதல், இன்னாது - துன்பஞ்செய்வதாம், (அதன்மேலும்), இனியார்ப்பிரிவு -(தங்) காதலரைப் பிரிதல், அதனினூம் - அவ்வாழ்சலைக்காட்டிலும், இன்னாது- துன்பஞ்செய்வதாம், (எ - று).

தலைமகள் தோழி தலைவன் செல்லுதலை அழுங்குவித்து வாராமல் உடன்பட்டு வந்தமை பற்றிப் பிணக்குகின்றாளாகலால், 'இனனில்லூர்' என்றாள். தலைமகள் உலகத்தியல்பு சொல்லுவாள்போன்று தனக்கு அவ்விரண்டுமிருத்தலைச் சொல்லியவாறும்.

(க - து.) தலைமகள் தங்குறிப்பறியுந் தோழியில்லாதவூரில் வாழ்தலினும் தமது காதலரைப் பிரிந்திருத்தல் மகளிர்க்குக் கொடியதென்றவாறு.

8. Painful is it to live in a town bereft of intimate friends; but far more painful is it to separate from one's lover.

* அழுங்குவித்து - தடைப்படுத்தி. † உடன்பட்டு - சம்மதித்து.
‡ அவ்விரண்டும் - இனனில்லூர் வாழ்தலும் இனியார்ப்பிரிவும்.





கூ. தோடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ.

[காமந் தீயேபோன்று
தானின்றவிடத்தைச் சுடுமாகலான், நீயாற்றல் வேண்டுமென்று
தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) தீத் தன்னைத்தொட்டாற் சுடுமாயிற் சுடுதலல்லது காமமாகிய நோய்போலத் தன்னையகன்றும் நட்பாது சுடுதலையாற்ற வற்றே, மாட்டாது, (எ - று).

சுடுமாயினென்பது மந்திரமருந்துகளாற் * தம்பிச்சப்படாதாயி னென்றவாறு. காமத்திற் † கதுவுமில்லை யென்பாள் ‡ வானா 'சுடல்' என்றாள். அகறல்-நகராமை. ¶ சுடலென்பது முன்னுங்கூட்டப்பட்டது. § தீயினுங் கொடியதனை யாஞற்றுமா றென்னை யென்பதாம்.

தெளி.—[காமம் தீயேபோன்று தான் நின்றவிடத்தைச் சுடுமாகலால், நீ பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) தீ - நெருப்பு, தொடின் - (தன்னைத்) தொட்டால், சுடிற் (சுடல்) அல்லது - சுடுமாறுற் சுடுதலல்லாமல், காமநோய்போல - காமமாகிய நோய்போல, விடின் - (தன்னை) விட்டுநீங்கிறுல், சுடலாற்றுமோ-

(தப்பாது) சுடுதலைச் செய்யவல்லதோ, (சுடாது), (எ - று).

சுடுமோவெனபது மந்திரமருந்துகளால் தம்பிக்கப்படாதாயி னென் றவாரும். காமத்திற்கு அதுவும் இல்லையென்பாள் சும்மா 'சுடல்' என் றாள். நீங்கல் - (காமத்தை) அனுபவியாமை. சுடலென்பது முன்னும் கூட்டப்பட்டது. தீயினுங் கொடிய காமநோயை யான் பொறுக்கும் விதம் எப்படி யென்பதாம்.

(க - து.) காமந் தீயினுங் கொடியதென்றாளென்பது.

9. Fire burns (the hands) when touched; but can it also burn, like the sickness of love (burning the hearts) when far away removed?

---

* தம்பிக்கப்படாதாயின் - (தீ) தடுக்கப்படாதாலால்.

† அதுவும் - மந்திர மருந்துகளால் தம்பிக்கச் செய்தலும்.

‡ வாளா - யாதொரு விசேடணமுந்தாராது. சுடின் என்பதற்குத் தொடின் என்னும் விசேடணந்தந்து, (தீ) தொடிற்சுடின் என்றுரைத்திருப்பது இங்குணர்தற் பாலதாம்.

¶ சுடல் என்பது சுடின் என்பதனோடும் சேர்க்கப்பட்டது.

§ காமநோய் தீயினுங் கொடியதென்பது "ஊரு ளெழுந்த வருகெழு செந் தீக்கு, நீருட் குளித்து முயலாகு - நீருட், குளிப்பினுங் காமஞ் சுடுமே குன் றேறி, யொளிப்பினுங் காமஞ் சுடும்" என்று நாலடியார் கூறுவதாலு மறிதற்பாற்றும்.

க0. அரிதாற்றி யல்லனேய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்.

[தலைவியர்பலரும் பிரிவாற்றியிருப்பர்; அது நீசெய்கின்றிலை யென்ற
தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நீ சொல்லுகின்றதொக்கும். பிரிவுணர்த்தியவழி
அதற்குடன்பட்டுப் பிரியுங்கால் நிகழும் அல்ல னேயினையும் நீக்கிப்
பிரிந்தால் அப்பிரிவுதன்னையு மாற்றிப் பின்னுமிருந்து உயிர்வாழ மக
ளிர் உலகத்துப் பலர், (எ - று).

பண்டையிற் சிறப்பத் தலையளிபெற் றின்புறுகின்ற வெல்லைக்கண்

னே * அஃதிழந்து தன்புறுதற் குடம்படுதல் அரியதொன்றுகலின் † 'அரிதாற்றி' என்றும், செல்லுந் தேயத்து அவர்க்கியாது நிகழுமென் றும் வருந்துனையும் யாமாற்றி யிருக்குமா றென்னென்றும் அவ்வாவுதான்

எஞ்ஞான்று வந்தெய்து மென்றும் இவ்வாற்று னிகழுங்கவலை மனத்து நீங்காதாகலான் 'அல்லலுைய் நீக்கி' என்றும், பிரிந்தால் வருந்துணையும் அகத்து நிகழுங் காமவேதனையும் புறத்து யாழிசை, மதி, தென்றலென் றிவை ‡ முதலாகவந்து ¶ அதனை வளர்ப்பனவும் ஆற்றலரியவாகலிற் 'பிரி வாற்றி' எனறும், தங்காதலரை $ யின்றியமையா மகளிருள் இவையெல் லாம் பொறுத்துப் பின்னுமிருந்து உயிர்வாழ்வார் ஒருவருமில்லை யென் பது குறிபாற்றேன்றப் 'பின்னிருந்து வாழ்வார் பலர்' என்றுங் கூறினுள். × அரிதென்பது வினைக்குறிப்புப்பெயர். + பிரிவின்க ணிகழ்வனவற்

* அஃதிழந்து - இன்பத்தை யிழந்து.

† அரியதனைச்செய்து என்றும் பாடமுண்டு.

‡ முதலாக என்றமையின் யாழிசை, சந்திரோதயம், தென்றற்காற்று என் னும் இவையேயன்றிச் செக்கர்வானம், மாலைப்பொழுது, இருட் காலம், குயிலோசை, அன்றிலோசை, சே (பசு) மணிமியோசை, கட லோசை முதலியவற்றையுங் கொள்க.

"தென்றற்கும் வீணைக்குஞ் சேமணிக்குங் கோகிலத்துக், கன்றிற் கமைக் காழிக் கம்புலிக்கு - நின்றசத்தும், அன்னைக்கு மாறற் கயர்ந்தாளென் றன்னமே, யென்னைக் குமாறற் கியம்பு" என்று இராத்தினச் சுருக் கம் கூறுவது மிங்குணர்தற் பாலதாம்.

[தென்றல் - சிறுகாற்று. சேமணி - பசுவின்கழுத்திற்கட்டியமணி. கோகி லம் - குயில். அன்றில் - இரவுகுரற்பட்சி. அமை - இருள். ஆழி - கடல். அம்புலி - சந்திரன். அன்னை - சன்ருள். மாரன்-மன்மதன்.]

¶ அதனை - காமவேதனையை. $ இன்றியமையா - இல்லாது முடியாத.

× அரிது என்னுங் குறிப்புவினைமுற்றுப் பெயர்த்தன்மை யடைந்து நின் றது; இங்குப் பிரிவென்னும் பொருளது.

+ பிரிவின்கண் நிகழ்வன - அகத்து நிகழும் காமவேதனையும், புறத்து யாழிசை, மதி, தென்றல் என்றிவை முதலாகவந்து அதனை வளர்ப்

றைப் 'பிரிவு' என்றுள். * ஆற்றி,நீக்கி, ஆற்றியென்பன ஒசை வகையான் அவ்வவற்ற தருமையுணர நின்றன. சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. யாஞுமிறந்துபடுவ லென்பது கருத்து.

தெளி:—[தலைவியர்பலரும் பிரிவைப்பொறுத்திருப்பார்; அது நீ செய்கின்றிலையென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ-ள்.) (நீசொல்லுகின்றது ஒக்கும்.) அரிதாற்றி-பிரிவை (அறிவித்தவிடத்து அதற்கு) உடன்பட்டு, அல்லல்நோய்-(பிரியும்போது நிகழும்) துன்பநோயினையும், நீக்கி-ஒழித்து, பிரிவாற்றி-(பிரிந்தால்) அப்பிரிவையும்பொறுத்து, பின்னிருந்து-பின்னும் இருந்து, வாழ்வார்-உயிர்வாழுமகளிர், பலர்-(உலகத்திற்) பலர், (எ-று).

முன்னிலுஞ் சிறப்பத் தலையளிபெற்று இன்பத்தை யனுபவிக்கிற சமயத்திலே அதனை யிழந்து துன்பத்தை யனுபவித்தற்கு உடம்படுதல் அரியதொன்றுகலால் 'அரிதாற்றி' என்றும், செல்லுந்தேசத்தில் அவர்க்கு யாது சம்பவிக்குமோ வென்றும் அவர் வருமளவும் நாம் பொறுத்திருக்கும் விதம் எவ்வாறென்றும் அவ்வரவுதான் எப்பொழுது வந்து கிடைக்குமோ வென்றும் இவ்விதங்களால் தோன்றுங்கவலை மனத்தினின்றும் நீங்காதாகலால் ' அல்லலேய் நீக்கி' என்றும், பிரிந்தால் வருமனவும் உள்ளேதோன்றும் காமவேதனையும் புறத்தே வீணையிசை சந்திரன் தென்றற்காற்று என்ற இவைமுதலாக வந்து அதனை வளர்ப்பனவும் பொறுத்தல் அரியனவாகலால் 'பிரிவாற்றி' என்றும், தமது காதலரைவிட்டிருக்கமாட்டாத மகளிருள் இவையெல்லாம் பொறுத்துப் பின்னும் இருந்து உயிர்வாழ்

வார் ஒருவரும் இல்லையென்பது குறிப்பினுல் தோன்றப் 'பின்னிருந்து வாழ்வார் பலர்' என்றும் சொல்லினுள். அரிது என்பது குறிப்புவினையா லணையும் பெயர். பிரிவில் நிகழ்வனவற்றைப் 'பிரிவு' என்றுள். ஆற்றி நீக்கி ஆற்றி என்பன ஒசைவகையால் அவ்வவற்றினது அருமை யுணர்நின் றன. பிரிவு மென்னும் இழிவு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்குநின்றது. யாரும் இறந்துபடுவேனென்பது கருத்து.

(க-து.) தலைமகள் தோழிக்குத் தமது தலைவரது பிரிவிற் குடன்பட்டு அதனுலுண்டாகுந் துன்பங்களையும் பொறுத்து வாழும் மகளிரும் உண்டென்றுளென்பது.

10. There are many indeed who can sustain separation meekly, driving distress away, endure separation and thereafter continne to live.

---

பனவுமாமென்க. பிரிவின்கண் நிகழ்வனவற்றைப் பிரிவு என்றமை யின், இஃதிடவாகு பெயராம்; இங்குப் பிரிவென்னுந்தொழி லிடமாயிற்று. * செய்து என்றும் பாடமுண்டு.

## 2-ம் அதிகாரம்.

## படர்மெலிந்திரங்கல்:—Languishing in sorrow.

பி:—அது * படரான் மெலிந்திரங்கலென விரியும்; அஃதாவது பிரிவாற்றுளாய தலைமகள் தானுறுகின்ற துன்பத்தினை எப்பொழுதும் நினைத்தலின், அந்நினைவான் மெலிந்திரங்குதல். † அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

தெளி:—அது படரால் மெலிந்து இரங்கலென்று விரியும்; அஃதாவது பிரிவினைப் பொறுக்கமாட்டாதவளாகிய தலைமகள் தான் அடைகின்ற துன்பத்தினை எப்போதும் நினைத்தலின், அந்நினைவால்மெலிந்து இரங்குதலாம். அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

க. மறைப்பேன்மன் யானஃதோ நோயை யிறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும்.

[காமநோயை வெளிப்படுத்தல் நின்னுழைக்கேலாதென்ற தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ-ள்.)¶ இந்நோயைப் பிறாறிதனுணி யான் மறையா நின்றேன்; ‡ நீர்பவும், இஃது அந்நாணினவரை நில்லாது நீர்வேண்டு மென் றிறைப்பவரிக்கு ஊற்றுநீர் மிதமாறுபோன் மிகாநின்றது. (எ.று)

அம்மறைத்தலாற் பய னென்னென்பதுபட நின்றமையின், மன் ஓழியிசைக்கண் வந்தது. “ ※ இஃதோ செல்வர்க் கொத்தனென்யான்” என் புழிப்போல சண்டுச்சுட்டுப்பெய ரீறுதிரிந்து நின்றது.

× இஃதோர் நோயையென்று பாடமோதுவாருமுளர்; அது பாட மன்மையறிக. இனி அதற்கதித்தது நீசெயல் வேண்டுமென்பதாம்.

தெளி:—[காமநோயை வெளிப்படுத்துதல் உன் நாணத்திற்குப் பொருந்தாதென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ-ள்.) நோயை-இந்நோயை, யான் மறைப்பேன்-(பிறாறிதற்கு நாணி) யான் மறையாநின்றேன், (நிற்பவும்), இஃது-இக்காமநோய், (அந்நாணளவில் நில்

---

* படரான்-துன்பத்தினை நினைத்தலால், மெலிந்து-இளைத்து, இரங்

கல் - வருந்துதல். † பிரிவாற்றுமையென்னும் அதிகாரத்தின்பின் படர் மெலிந்திரங்கல் என்னும் அதிகாரம் வைத்த முறைமையும். ¶ இந்நோயை-இக்காமநோயை. ‡ நிற்பவும்-காமநோயை மற்றத்து நிற்கவும்.

§ இதன்பொருள் யான் இவ்விடத்தில் செல்வரைபோத்திருக்கி றேன் என்பது.

× இஃதோ நோயை என்பதற்குப் பிரதியாக இஃதோர் நோயை என்று பாடஞ் சொல்லுவாருமுண்டு; அது பாடமன்றென்க.



லாது), இறைப்பவர்க்கு (நீர்வேண்டுமென்று) இறைப்பவர்க்கு, ஊற்றுநீர் போல-ஊற்றுநீர் மிகும்விதம்போல, மிகும்-மிகாநின்றது, (எ-று).

அம்மறைத்தலால் பயன்யாது என்பதுதோன்ற நின்றமையால், மன் என்னுமிடைச்சொல் ஒழியிசைப்பொருளில் வந்தது. இஃது என்னும் சுட்டுப்பெயரீறுதிரிந்து இஃதோ என என்றது. இனி அந்நோய்க்கு அடுத்ததைத் தோழியே! நீ செயல்வேண்டும் என்பதாம்.

(க-து.) தலைமகள் தோழியே! காமநோய் யான் மறைத்தா லுார் மறையாது மிகுகின்றதென்றுளென்பது.

1. I would conceal this pain from others (out of shame); but it wells out like a spring to those who drain it.



உ.

காத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும்.

[ஈண்டையா

றியாமன் மறைத்தல் * ஆண்டையா றியத் † தூது

விடுதலென்னு மிரண்டனுள் ஒன்றுசெயல்

வேண்டுமென்ற

தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) இந்நோயை ஈண்டையா

றியாமன் மறைத்த

லும் வல்லேனுகின்றிலேன்; ஆகாகிகால், நோய் செய்தவரிக் தரைக்க வேனின், அதுவும் எனகிது நாணினைத் தாாாநின்றது, இனியேன் செய்கோ? (எ - று).

ஒருகாலைக்கொருகான் மிகுதலிற் 'காத்தலு மாற்றேன்' என்றும், சேயிடைச் சென்றவர்க்கு ‡ இது சொல்லித் தூது விட்டால் இன்னு மிருந்தேனென்பது பயக்குமென்னுங் கருத்தால் 'நாணுத்தரும்' என்றுங் கூறினுள்.

தெளி:—[இவ்விடத்திருப்பவரறியாமல் மறைத்தல். அவ்விடத்திருப்பவரறியத் தூதுவிடுதல் என்னும் இரண்டனுள் ஒன்று செயல்வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) இந்நோயை - இக்காமநோயை, காத்தலுமாற்றேன் - (இவ்விடத்திருப்பவரறியாமல்) மறைத்தலும் வல்லேனாகின்றிலேன், (ஆதலால்), நோய் செய்தார்க்கு -

---

* ஆண்டையார்-தலைவர். † "இயம்புகின்ற காலத் தெகின்மயில் கிள்ளை, பயம்பெறுமே கம்பூவை பாங்கி-நயந்தருயில், பேதைநெஞ்சந் தென்றல் பிரமரமீ ரைந்துமே, தூதுரைத்து வாங்குந் தொடை" என்று இரத்தினச் சுருக்கங்கூறுவ திங்குணர்தற்பாலதாம். [எகினம் - அன்னம், கிள்ளை - கிளி, பூவை - நாகணவாய், பிரமரம் - வண்டு.]

‡ இது - காமநோய் ஒருகாலைக்கொருகால் மிகுதலை.

## கற்பியல்—உ - வது படர்மெலிந்திரங்கல்.

## 1239

நோயைச் செய்தவர்க்கு, (சொல்லவென்றால்), உரைத்தலும் - அச்சொல்லுதலும், நாணுத்தரும்—(எனக்கு) நாணத்தைத் தாராநின்றது, (இனி என் செய்வேன்)? (எ-று).

காமநோய் ஒருவேளைக்கு ஒருவேளை மிகுதலால் 'காத்தலுமாற்றேன்' என்றும், தூரதேசத்திற் சென்றிருக்கும் தலைவர்க்கு இதுசொல்லித் தூது விட்டால் இன்னும் (யான் சாவாது) இருந்தேனென்பது (அவர்க்குத்) தோன்றுமென்னுங் கருத்தால்

'நாணுத்தரும்' என்றும் சொல்லினள்.

(க - து.) தலைமகள் தோழிக்குக் காமநோயை மறைத்தலும்

அதனைச் செய்த தலைவர்க்குரைத்தலும் எனக்குமுடியா வென்று

ளென்பது.

2. I cannot hide this pain (from others), nor can I

reveal it without shame to him who caused it.

கூ. காமமு நாணு முயிர்காவாத் துங்குமென் னேனை வுடம்பி னைகத்து.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) காமநோயும் * அதனைச் செய்தவரீகத உரைக்க லொல்லாத நாணும் † தம்மைப் பொறாத என்னுடம்பின்கண்னே உயிர் காத்தண்டாக ‡ அதனிருதலையினுந் தூங்காநின்றன, (எ - று).

பொழுமை - மெலிவானையது. ¶ தூங்குமென்பது ஒன்றினென்று

மிகாது × இரண்டும் + ஒத்தசீர வென்பது தோன்ற நின்றது. தூதுவிடவும் ஒழியவும் பண்ணுவனவாய காம நாண்கள் தம்மொளொத்து உயிரினை | யிறுவியா நின்றன; யான் || அவற்றுளொன்றின்க ணிற்கமாட்டாமையின், †† இஃதிற்றேவிடு மென்பதாம்.

தெளி:—(இ - ள்.) [இதுவுமது] (இ - ள்.) காமமும் - காமநோயும், நாணும்-(அதனைச் செய்தவர்க்குச் சொல்லுதற்கமையாத) நாணும், நோனு என் உடம்பினகத்து - (தம்மைப்) பொருத என்னுடம்பினிடத்தே, உயிர்-உயிரானது, காவா - காவடித்தண்டாக, தூங்கும் - (அதனிருதலையிலும்) தொங்குகின்றன, (எ - று).

பொருளை - மெலிவிலுலாகியது. தூங்குமென்பது ஒன்றிலொன்று மிகாமல் இரண்டும் ஒத்த சீரவென்பது தோன்றநின்றது. தூதுவிடப்

---

* அதனை - காமநோயை. † தம்மை - காமநோய், நாண் என்னுந் தம்மை. ‡ அதன் - உயிரின். ¶ தூங்குதல் - தொங்குதல். × இரண்டும்-காமநோயும் நாணும். + ஒத்தசீர - தம்முள் ஒத்திருக்குந் தன்மையன. | இறுவியாநின்றன - வருத்தாநின்றன. || அவற்றுள் - காமநாண்களுள். †† இஃதிற்றேவிடும் - உயிர் இறந்தேபோம்.



பண்ணுவதாய காமமும் அதனை ஒழியப்பண்ணுவதாய நாணும் தம்முள் ஒத்து உயிரினை இறச்செய்கின்றன; யான் அவற்றுள் ஒன்றின்கண் நிற்கமாட்டாமையால், இஃது இற்றேவிடுமென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழிக்குக் காமமும் நாணும் தம்மொளொத்து நின்று என்னை வருத்துகின்றனவென்றுளென்பது.

3. Both love & shame with my life like shoulder poles balance themselves on my wearied body that cannot sustain their burthen.



சு. காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து
மேமப் புணைமன்னு மில்.

[தலைவியர் காமக்கடற்படார்; படினும், அதனை * ஏற்றபுணையானீந்
திக் கடப்பரென்ற தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) யாவர்க்கும் உளவாய் வருகின்ற † இவ்விரண்டனுள்ளும் எனக்குண்டாகின்றது காமக்கடலே; அதனை நீந்தும் அமைகியபுணை யில்லை, (எ - று).

இருவழியும் மன்னும் உம்மும் அசைநிலை. தாதுவிட்டு ‡ இதற்குப் புணையாகற்பாலையாய நீயும் ஆயிற்றிலை யென்பது கருத்து.

தெளி:—[தலைவியர் காமக்கடலில் வீழார்; வீழினும், அக்காமக்கடலை ஏற்றபுணையால் நீந்திக் கடப்பரென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) (யாவர்க்கும் உளவாய்வருகின்ற இவ்விரண்டனுள்ளும்) உண்டு—(எனக்கு) உண்டாகின்றது, காமக்கடலே - காமமாகிய கடலேயாம், அது நீந்தும் - அக்கடலைக் கடக்கும், ஏமப்புணை - காப்பாகிய புணை, இல் - இல்லை, (எ - று.)

(காமக்கடன் மன்னும், ஏமப்புணை மன்னுமென்னும்)

இரண்டிடத்து

முள்ள மன்னும் உம்மும் அசைநிலைகள். (தோழியே!) தூதுவிட்டு இதற்குப் புணையாதற்குரிய நீயும் ஆனையில்லை யென்பதுகருத்து.*

(க - து.) தலைமகள் தோழிக்குக் காமக்கடலைக் கடக்கும் புணை என்னிடத்தில்லையென்றாளென்பது.

4. It is true there is a sea of love ; but there is no trusty raft to cross it with.

---

* ஏற்றபுணையால் - கடத்தற்குத் தக்கதாயதோணியால்.

† இவ்விரண்டனுள்ளும் - காமக்கடல் அதனை நீந்திக் கடத்தற்குரிய புணையென்னு மிரண்டனுள்ளும்.

‡ இதற்கு - காமக்கடலை நீந்திக்கடப்பதற்கு.

## கற்பியல்—உ - வது படர்மெலிந்திரங்கல்.

**1241**

ரு. துப்பி னெவனுவர் மற்கொ றுயர்வரவு
நட்பினு ளாற்று பவர்.

[தூதுவிடாமைநோக்கித் தோழியோடு புலந்து சொல்லியது.]

பரி:—(இ - ள்.) இன்பஞ் செய்தற்குரிய

நட்பின்கண்ணே துன்ப வரவினைச் செய்ய வல்லவரி துன்பஞ் செய்தற்குரிய பகைமைக்கண் என்செய்வரி கொல்லோ? (எ - று).

துப்புப் பகையுமாதல் * "துப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சேய்மைய,
னட்பெதிர்ந் தோர்க்கே யங்கை யண்மையன்" என்பதனுனு மறிக. அப் பகைமையை ஈண்டுக் காணுமையின், † அவர் செய்வது மறியப்பெற்றிலே மென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. துயர்வரு தலே விலக்கலாயிருக்க ‡ அது செய்கின்றிலேயெனப் புலக்கின்றமையின், துயர்வரவு செய்தாளாக்கியும் பிறளாக்கியுங் கூறினுள்.

தெளி:—[தூதுவிடாமைநோக்கித் தோழியோடு தலைமகள் பிணங்
கிச் சொல்லியது.] (இ-ள்.) நட்பினுள் - (இன்பஞ்செய்தற்குரிய) நட் பினிடத்தே, துயர்வரவு - துன்பத்தின்வரவினை, ஆற்றுபவர்-செய்யவல்ல வர், துப்பின் - (துன்பஞ்செய்தற்குரிய) பகையிடத்து, எவனுவர்கொல்— என்னசெய்வரோ, (எ-று).

துப்பு என்பது இங்குப் பகை யென்னும் பொருளில் வந்தது. அப் பகையினை இங்குக் காணுமையால், அவர் செய்வதும் அறியப்பெற் றிலேமென்பதுதோன்ற நின்றமையால், மன் ஒழியிசைப்பொருளில் வந் தது.துயர்வருதலே விலக்கலாயிருக்க (தோழியே! நீ) அது செய்கின்றிலே யென்று பிணங்குகின்றமையால், தோழியைத் துயர்வரவு செய்தாளாக்கி யும் பிறளாக்கியும் சொல்லினுள்.

(க - து.) தலைமகள் தோழியோடு பிணங்கி நட்பாயுள்ளபோ தே துன்பஞ் செய்யவல்லவர் பகை நேர்ந்தபோது துன்பஞ் செய்

யா தொழிவரோ என்றுளென்பது.

5. He who can work woe in friendship, what can he
not produce out of enmity ?

---

* புறநானூறு 380. இதன்பொருள். பகையாய் எதிர்ந்தோர்க்குக் கருதுதற் கியலாத சேண்மையனுவன் ; நட்பாய் எதிர்ந்துவந்தவர்க்கு அகங்கை (நெல்லிக்கனிபோன்று) அண்மையா யிருப்பவன் என்பது. போர்முகத்தன்றி யேனைய் விடத்துப் பகைவர் காண்டற்கரியனுயும் நண்பினர் காண்டற்கெளியனுயும் இருப்பன் என்பது கருத்து. இங்குத் துப்பென்பது பகையென்னும் பொருளை யுணர்த்தியவாறறிக. சேய்மை-தூரம் ; அண்மை-சமீபம்.

† அவர் - பகைவர். ‡ அது - துயர்வருதலை விலக்கலை.





கூ.

இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது.

[காமத்தா னின்பமுற்றூர்க்கு * அதனினுய துன்பமும் வருமென்ற

தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) காமம் புணர்வா லின்பஞ்செய்யுங்கால், அவ்வின் பங் கடல்போலப் பெரிதாம் ; இனி அதுதானே பிரிவாற் றுன்பஞ்செய் யுங்கால், அத்துன்பம் அக்கடலினும் பெரிதாம், (எ - று).

† மற்று-வினைமாற்றின்கண் வந்தது. அடுங்கால் என வந்தமையின், ‡ மறுதலை யெச்சம் வருவிக்கப்பட்டது. பெற்றவின்பத்தோ ¶ டொத்து வரின் ஆற்றலாம் ; § இஃதத னளவன்றென்பது கருத்து.

தெளி:—[காமத்தால் இன்பமுற்றவர்க்கு அதனினுகிய துன்பமும் வருமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்) காமம்- காமமானது [புணர்ச்சியால் இன்பஞ்செய்யுங்கால்), இன்பம்-அவ்வின்பம், கடல் - கடல் (போலப் பெரிதாம்), மற்றஃது-இனி அக்காமந்தானே, அடுங்கால்-(பிரிவினால்) துன்பஞ்செய்யுங்கால், துன்பம்-அத்துன்பம், அத னிற்பெரிது - அக்கடலினும் பெரிதாம், (எ - று).

மற்றென்னுமிடைச்சொல் வினைமாற்றுப் பொருளில் வந்தது. அடுங்கால் என வந்தமையால், அதற்கு மறுதலையான இன்பஞ்செய்யுங்கால் என்னும் வினையெச்சம் வருவிக்கப்பட்டது. பெற்றவின்பத்தோடு

ஒத்து வரின் பொறுத்தல்கூடும் ; இஃது அதனது அளவன்று என்பது கருத்து.

(க - து.) தலைமகள் தோழிக்குக் காமம் புணர்ச்சியால் வினைக் கும் இன்பத்தினும் பிரிவால் வினைக்கும் துன்பம் பெரிதாமென் றுரை என்பது.

6. The pleasure of love is as great as the sea ; but the pain of parting love is far greater.

---

* அதனின் - அக்காமத்தினுல்.

† மற்று என்னுமிடைச்சொல் (காமம் கடல்போலப் பெரிது என்ப தன்கண்) பெரிது என்னும் வினையை மாற்றி (யொழித்து)ச் சிறிது என் னும் வினையைத் தந்து நின்றமையின், வினைமாற்றுயிற்று.

‡ மறுதலையெச்சம்-இன்பஞ்செய்யுங்கால் (இன்பஞ்செய்யும் போது) என்னும் (செயின் என்னும் வாய்பாட்டு) வினையெச்சம்.

¶ ஒத்துவரின் - (துன்பம்) சமமாகவந்தால்.

§ இஃது அதன் அளவன்று - இத்துன்பம் அவ்வின்பத்தின் அள வன்று.

எ. காமக் கடும்புன லீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்.

[காமக்கடல் * நிறை புணையாக நீந்தப்படு மென்றூட்குச் சொல்லியது.]

பரி:—(இ-ள்.) காமமாகிய கடலை † நீந்தாதே னல்லேன்; நீந்தி யும் ‡ அதற்குக் கரைகாண்கின்றிலேன், அக்காணுமைக் காலந்தான் எல்லாருந் துயிலும் அரையிருளாயிற்று, அவ்வரை யிருட்கண்ணும் ¶ அதற்கொரு துணையின்றியானேயாயினேன், ஆயும் | இறந்து பட்டுய்ந்துபோகாதுளனாகா நின்றேன், ஈதொரு தீவினைப்பயனிருந்த வாறென்? (எ - று).

: கடுமை ஈண்டு மிகுதிக்கணின்றது. [] உம்மை முன்னுங் கூட்டப் பட்டது. யானேயாயினேனென்பது நீதுணையாயிற்றிலை யென்னுங் குறிப் பிற்று.

தெளி:—[காமக்கடல் நிறைபுணையாக நீந்தப்படுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.)

காமக்கடும்புனல்-காமமாகிய பெரிய கடலை, (நீந்தினேன்), நீந்தி—நீந்தியும், - கரைகாணேன் - (அதற்குக்)கரை காண்கின்றிலேன், (அக்காணுமைக் காலந்தான் எல்லாரும் நித்திரைசெய் யும் பாதியிரவாயிற்று), யாமத்தும் - அப்பாதியிரவிலும், யானே - (அதற்கு ஒரு துணையில்லாமல்) யானே (ஆயினேன்), (ஆயும்), உளேன்-இறவா திருக்கிறேன், (ஈதொரு தீவினைப்பயன் இருந்தவிதம் என்?) (எ - று).

கடுமை யென்பது இங்கு மிகுதிப்பொருளில் வந்தது. உம்மை முன் னுங் கூட்டப்பட்டது. யானேயாயினேனென்பது (தோழியே!) நீ துணை யாயிலையில்லையென்னுங் குறிப்பினதாம்.

---

* மறைந்ததாகிய ஒரு காரியத்தைப் பிறரறியாமல் செய்தல் நிறை யெனப்படும். "நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை" என்பது கலித்தொகை.

† நீந்தாதேன் அல்லேன் என்னும் இரண்டெதிர்மறைவினையும் நீந் தினேனென்னும் ஒருடன்பாட்டுப்பொருளைத் தந்து நின்றன.

‡ அதற்கு - காமமாகிய கடலுக்கு.

¶ அதற்கு - காமமாகியகடலுக்கு.

⁋ இறந்துபட்டு - மடிந்து, உய்ந்துபோகாது - அக்காமக்கடலினின்று (துன்பத்திலிருந்து) தப்பிப்போகாது, உளேனுகா நின்றேன் - உயிரோ டிருக்கிறேன்.

: காமக்கடும்புனல் என்பதன்கணுள்ள கடுமை (கடும்) என்பது இங்
குக் காமக்கடலின் மிகுதியை யுணர்த்திநின்றது.

[] யாமத்தும் என்ற வும்மை கீந்தி யென்பதனோடு கூட்டப்பட்டது.



## திருக்குறள்-காமத்துப்பால்.

(க-து.) தலைமகள் தோழிக்குக் காமக்கடலை நீந்தமுடியாது ஒருதுணையுமின்றி உறக்கமற்றிருக்கின்றே னென்றாள் என்பது.

7. I swam across the cruel tide of love, but have not descried its shore; even at midnight I am alone; withal I live!



ஆ. மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
வென்னல்ல தில்லை துணை.

[இரவின் கொடுமைசொல்லி யிரங்கியது.]

பரி:—(இ - ள்.) இவ்விரா அளித்தாயிருந்தது; உலகத்து * நிலை

பெறுகின்ற உயிர்களெயெல்லாந்தானே
துயிலப்பண்ணுதலான் என்னை
யல்லது வேறுதுணை உடைத்தாயிற்றில்லை, (எ - று).

† துயிற்றியெனத் திரிந்துநின்ற வினையெச்சம் அவாய்நிலையான் வந்த உடைத்தாதலோடு முடிந்தது. துணையோ ‡ டொன்றுகின்ற உயிர்களெல்லாம் விட்டு இறந்துபடு மெல்லையேனுகிய என்னையே துணையாகக் கோடலின் அறிவின்றென்பதுபற்றி 'அளித்து' என்றுள்; ¶ இகழ்ச்சிக் குறிப்பு.

•

தெளி:—[தலைமகள் இரவின் கொடுமையைக் கூறி இரங்கியது.]

(இ - ள்.) இரா - இவ்விரவு, அளித்து - அன்புடையதாயிருந்தது, மன்னுயிரெல்லாம் - (உலகத்தில்) நிலைபெறுகின்ற உயிர்களெயெல்லாம், துயிற்றி- (தானே) தூங்கச்செய்தலால், என்னல்லது - என்னையல்லாமல், துணை- (வேறு) துணை, இல்லை - (உடையதாயிற்று) இல்லை, (எ - று).

துயிற்றியெனத் திரிந்து நின்ற துயிற்றலான் என்னும் வினையெச்சம் அவாய்நிலையால் வந்த உடையதாயிற்று என்பதைக்கொண்டு முடிந்தது.

(இரா) துணையோடு ஒன்றுகின்ற உயிர்களெயெல்லாம்விட்டு இறந்துபடுஞ்

* நிலைபெறுதலாவது பிறப்பு இடையறுமையின், எஞ்ஞான்றும் உடம்போடு காணப்பட்டுவருதல்.

† துயற்றலான் என்னும் (செயின் என்னும் வாய்பாட்டு) வினையெச்சம் துயிற்றியென (ச்செய்து என்னும் வாய்பாட்டெச்சமாய்த்) திரிந்து நின்றது; அவ்வினையெச்சம் அவாய்நிலையா (வேண்டிநிற்றலா)ல் வந்த உடைத்தாயிற்று என்னும் வினையோடுமுடிந்தது. துயிற்றியெனத் திரிந்து நின்ற வினையெச்சம் உடைத்தாதலென்பதனை யவாவி நின்றதென்க.

‡ ஒன்றுகின்ற - பொருந்தியிருக்கின்ற.

¶ இரவினை அளித்து என்று குறிப்பாக விகழ்ந்து கூறினனென்க. குறிப்பாக இகழ்ந்து கூறலை "பல்சான் றீரே பல்சான் றீரே, கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட், பயனின் மூப்பிற் பல்சான் றீரே" என்றீ புறநானூறு கூறுதலாலுமறிக.

## கற்பியல்—உ - வது படர்மெலிந்திரங்கல்.

# 1245

சமயமுடையேனுகிய என்னையே துணையாகக் கொள்ளுதலால் அறிவுடையதன்றென்பது பற்றி 'அளித்து' என்றாள்; இகழ்ச்சிக்குறிப்பு.

(க - து.) தலைமகள் துயில்வாராமைபற்றி யிரவையிகழ்ந்து கூறினளென்பது.

8. The night which graciously lulls all living beings in soft slumber, keeps me alone for her companion.



கூ. கோடியார் கொடுமையிற் ருங்கோடிய விந்நா
ணெடிய கழியு மிரா.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) காதலரோடு நாமின்புற்ற முன்னுள்களிற் † குறிய வாய் அவர்பிரிவாற்றேமாகின்ற இந்நாள்களிலே ‡ நெடியவாய்ச் செல்கின்றகங்துல்கள் அக்கோடியா
ரதுகொடுமைக்குமேலே தாங்
கொடுமை செய்யா நின்றன, (எ - று).

தன்னுற்ருமை கருதாது பிரிதலின்
'கொடியார்'என்ருள். கொடுமை-
கடிதின் வாராது நீட்டித்தல். அவர் பிரிவானும்நீட்டிப்பானு
முளதாய ஆற்
ருமைக்குக் கண்ணேணடாமைமேலும் பண்டையி
னெடியவாய்க் கொடிய
வாதா நின்றன வென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) (காதலரோடு நாம்

ளுள்களில் குறியவாயிருந்து) இந்நாள் - (அவர்பிரிவைப் பொறுக்கமாட்டேமாகின்ற) இந்நாள்களிலே, நெடிய - நெடியவாய், கழியும் - செல்கின்ற, இரா - இரவுகள், கொடியார் - அக்கொடியவாது, கொடுமையின் - கொடுமைக்குமேலே, தாம்கொடிய-தாம்கொடுமைசெய்யாநின்றன, (எ-று).

தனதாற்றுமையை நினையாது பிரிதலால் (தலைமகனைக்) 'கொடியார்' என்றாள். கொடுமை-விரைவில்வாராமல்நீட்டித்தல். (இரவுகள்) அவர் பிரிவாலும் நீட்டிப்பாலும் உண்டாகிய ஆற்றுமைக்கு முகங்கொடாமைமேலும் முன்னாயினெடியவாய்க் கொடியவாகா நின்றனவென்பதாம்.

(க - து.) தலைமகள் தலைவர் கொடுமையிலும் இரவின் கொடுமை பெரிதென்றாளென்பது.

9. The long (hours of) night of these (sad) days are more cruel than the cruelty of him who is torturing me.

ம. உள்ளம்போன் றுள்வழிச் செல்கற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோவென் கண்.

குறியவாய் - குறுகியனவாய். ‡ நெடியவாய்-நீண்டனவாய்.



[நின்கண்கள் பேரழ கழிகின்றனவாகலின், அழற்பாலை
யல்லை யென்றாட்குச் சொல்லியது].

பரி:—(இ - ள்.) மனம்போலக் காதலருள்ள தேயத்துக் கடிதிற் செல்ல வல்லனவாயின், என் கண்கள் இங்ஙனம் வெள்ளமாகிய தந் நீரை நீந்தா, (எ - று).

† அது மாட்டாமையின் இனி அவற்றிற்கு நீந்துதலே யுள்ளதென் பது படநின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. ‡ மனத்திற்குச் செலவாவது நினைவே யாகலின் 'உள்ளம் போன்று' என்றும், மெய்க்கு

நடந்து செல்லவேண்டுதலிற் கண்கள் அதனெடு சென்று காதலரைக்காண் டல் கூடாதென்னுங் கருத்தாற் 'செல்கற்பின்' என்றுங் கூறினள். இத னான் வருகின்ற வதிகாரமுந் தோற்றுவாய் செய்யப்பட்டது.

தெளி:—[நின் கண்கள் போழகு அழிகின்றன வாகலின், அழாதிரு வென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ-ள்.)உள்ளம்போன்று—மனம்போல, உள்வழி - (காதலர்) இருக்கின்ற நாட்டிற்கு, செல்கற்பின் - (கடிதில்) செல்லவல்லனவாயின், என்கண் - எனது கண்கள், (இப்படி), வெள்ளநீர் - வெள்ளமாகிய (தமது) நீரை, நீந்தல - நீந்தமாட்டா, (எ-று.)

அது மாட்டாமையால் இனி அக்கண்களுக்கு நீந்துதலே உள்ளதென் பது தோன்ற நின்றமையால், மன் ஒழியிசைப்

பொருளில்வந்தது. ஓ - அசை. மனத்திற்குச் செலவாவது நினைவேயாகலால் ' உள்ளம்போன்று ' என்றும், மெய்க்கு நடந்து செல்லவேண்டுதலால் கண்கள் அதனோடு போய்க் காதலரைக் காணுதல் கூடாதென்னுங் கருத்தால் 'செல்கற்பின்' என்றும் சொல்லினாள். இக்குறளால் வருகின்ற அதிகாரமும் தோற்றுவாய் செய்யப்பட்டது. செலவு - செல்லுதல்; மெய் - உடம்பு ; தோற்றுவாய்-தொடக்கம்.

(க - து.) தலைமகள் தோழிக்கு மனம்போலக் கண்கள் தலைவருள்ள தேயத்திற்குப் போக முடியாமையால், ஓயாதழுகின்றனவென்றாளென்பது.

10. Could mine eyes, like my thoughts, go forth to the abode of my absent lover, they would not swim in this flood of tears.



† அது - (கண்களுக்கு) மனம்போலக் காதலருள்ள தேயத்திற்கு விரைந்து செல்லுதல்.

‡ "சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெருந்தினையு, நின்றதுகொ னேர்மருங்கிற் கையூன்றி - முன்றின், முழங்குங் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற், குழந்துபின் சென்றவென் னெஞ்சு" என்னுஞ் செய்யுளு மிங்குக் கவனித்தற் பாலதாம்.

## 3 - ம் அதிகாரம்.

## கண்விதுப்பழிதல்--Eyes consumed with

sorrow.

பரி:—அஃதாவது கண்கள் தங்காட்சி விதுப்பான் வருந்துதல்.

காட்சி விதுப்பு—தலைமகனைக் காண்டற்கு விரைதல். * இது படரான் மெலிந்தவழி நிகழ்வதாகலின், படர்மெலிந்திரங்கலின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது கண்கள் தமது காட்சிவிதுப்பினால் வருந்துதல்.

காட்சிவிதுப்பாவது தலைமகனைக்காணுதற்கு விரைதல். இது படரால் மெலிந்தவிடத்து நிகழ்வதாகலால், படர்மெலிந்திரங்கலின்பின் வைக்கப் பட்டது.

க. கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ
தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது.

[நின்கண்கள் கலுழ்ந்து தம்மழ கிழவாகின்றன; நீயாற்றல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) இத்தணியா நோயை யாமறிந்தது

† தாமெமக்

தக் காதலரைக் காட்டலானன்றே; ‡ அன்று ¶ அத் தாழிலவாய கண்கள் இன்று எம்மைக் காட்டச்சொல்லி யழுகின்றது என் கருதி? (எ - று).

காட்டவென்பதற் கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ††இன்றுந்தாமே காட்டுதலல்லது யாங்காட்டுதல் யாண்டைய தென்பதாம்.

**தெளி:**—[நின்கண்கள் அழுது தமது அழகை இழக்கின்றன; நீ

பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத்தலைமகள் சொல்லியது.] (இ-ள்.) தண்டாநோய் - இத்தீராத (காம) நோயை, யாம் கண்டது - யாம் அறிந்தது, தாங்காட்ட - தாம் (எமக்குக் காதலரைக்) காட்டலாலன்றே, கண் தாம் - (அன்று அத்தொழிலவாய) கண்கள், கலுழ்வது - (இன்று எம்மைக் காட்டச்சொல்லி) அழுகின்றது, எவன் கொல் - யாது நினைத்து? (எ-று).

காட்ட வென்பதற்கேற்ற காதலரை யென்னும் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. (கண்கள்) இன்றுந் தாமே (அவரை எமக்குக்) காட்டுதலல்லாமல் யாம் (அவற்றிற்குக்) காட்டுதல் எவ்வாறுமென்பதாம்.

---

* இது - கண்விதுப்பழிதல்.

† தாம் - கண்கள். ‡ அன்று - காதலர் எதிர்ப்பட்ட அந்நாளில்.

¶ அத்தொழிலவாய - காணுதற்றொழிலையுடையனவாய.

†† இப்பொழுதும் கண்கள் தாமே எமக்குக் காதலரைக் காட்டுவதல்லாமல் யாம் அக்கண்களுக்கு அவரைக்காட்டுவது எவ்வாறுமென்பது.

(க - து.) தலைமகள் தோழிக்குத் தாம் காட்ட யாங்கண்ட தலைவரைக் கண்கள் எம்மைக் காட்டச்சொல்லி யழுகின்றன வென்றுளென்பது.

1. As this incurable love - sickness has been caused by my eyes which showed him to me, why then should they now weep for him.

உ. தெரிந்துணரா நோக்கிய வுண்கண்
பரிந்துணராப் பைத லுழப்ப தெவன்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) மேல் விளைவதனை யாராய்ந்தறியாது அன்று காதலரை நோக்கிநின்ற உண்கண்கள் இன்று * இது † நம்மால்வந்த தாகலிற் பொறுத்தல் வேண்டு மெனக் கூறுபடுத் துணராது துன்ப முழப்பது என்கருதி? (எ - று).

• விளைவது—பிரிந்துபோயவர் வாராமையிற் காண்டற்கரியராய் வருந் துதல். முன்னே வருவதறிந்து அது காவாதார்க்கு ‡ அது வந்தவழிப் பொறுத்தலன்றே யுள்ளது; ¶ அதுவுஞ்செய்யாது வருந்துதல் • கழிமடச் செய்கை யென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ-ள்.) தெரிந்துணரா - (மேல்வினைவதனை)

ஆராய்ந்தறியாமல், நோக்கிய - (அன்று காதலரை) நோக்கிநின்ற, உண் கண்-(மை) உண்டகண்கள், (இன்று இது நம்மால் வந்ததாகலின் பொறுத் தல் வேண்டுமென்று), பரிந்துணரா - கூறுபடுத்தி யறியாமல், பைதலுழப் பது - துன்பத்தை யனுபவிப்பது, எவன் - யாது நினைத்து? (எ - று).

வினைவது - பிரிந்துபோய காதலர் வாராமையால் காணுதற்கரியராய் வருந்துதல். முன்னே வருவதை யறிந்து அதனைக் காவாதார்க்கு அது வந்தவிடத்துப் பொறுத்தலன்றே உள்ளது; அதுவுஞ்செய்யாது வருந்துதல் கழிமடச்செய்கையென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழிக்கு முன்னர்ப் பின்வருவதை யாராய்ந்தறியாது காதலரை நோக்கி நின்ற கண்கள் இப்போது அவரைக்காணாது வருந்துதல் யாதுநினைத்தோவென்றுள் என் பது.

2. Why should the eyes that then looked unwittingly now endure sorrow, without feeling keenly their fault.

---

* இது - இவ்வருத்தம். † நம்மால் - கண்களாகியநம்மால்.
‡ அது - மேல்வினையும் வருத்தம். ¶ அதுவும் - பொறுத்தலும்.

1249

கூ. கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிதுநகத் தக்க துடைத்து.

[இதுவுமது.]

பரி:—(இ-ள்.) இக்கண்தாள் அன்று காதலரைத் தாமே விரைந்து நோக்கி இன்றுந் தாமே யிருந்தழுகின்ற விது நம்மாற் சிரிக்கத் தக்க வியல்பினையுடைத்து, (எ - று).

கண்களென்பது * அதிகாரத்தான் வந்தது.

இதுவென்றது † மேற்

கூறிய கழிமடச் செய்கையை.

‡ அது வருமுன்னர்க் ¶ காப்பார்க்கு நகை

விளக்கு மாகலான் 'நகத்தக்க துடைத்து' என்றார்.

தெளி:—[இதுவுமது.] (இ-ள்.) (இக்கண்கள்) தாம் கதுமெனநோக்கி- (அன்று காதலரைத்) தாமே விரைந்து நோக்கி, தாமேகலுழும் - (இன்றும்) தாமேயிருந்து அழுகின்ற, இது - இவ்வறியாமைச் செயல், நகத்தக் கது - (நம்மால்) சிரிக்கத்தக்க இயல்பினை, உடைத்து-உடையது, (எ-று).

கண்களென்பது அதிகாரத்தால் வந்தது.

இதுவென்றது முன்னர்க்
கூறிய கழிமடச் செய்கையை. அச்செயல் வருமுன்னே நகைவிளைக்கு மாகலால் 'நகத்தக்க துடைத்து' என்றாள்.
காப்பார்க்கு

(க - து.) தலைமகள் தோழிக்கு அன்று காதலரைத் தாமே விரைந்துநோக்கிய கண்கள் இன்றுந் தாமேயிருந்தழுதல் நகைக்கிடமாயிற்றென்றாளென்பது.

3. The eyes themselves looked keenly on him and now
they weep ; Is not this folly laughable ?



௪. பேயலாற்றா நீருலந்த வுண்க ணுயலாற்றா
வுய்வினோ யென்க ணிறுத்து.

[இதுவுமது.]

பரி:—(இ-ள்.) உண்கண்கள் அன்று யானுய்யமாட்டாமைக் கேதுவாய ஒழிவில்லாத நோயை என்கண்ணே நிறுத்தி, தாழ மழுதலை மாட்டாவண்ணம் நீர் வற்றிவிட்டன, (எ - று).

* கண்விதுப்பழிதலென்னும் அதிகாரத்தினால்.

† மேற்கூறிய - இவ்வதிகாரத்தின் இரண்டாவது குறளின் விசேட வுரையிற்கூறிய.

‡ அது - கழிமடச்செய்கை; (மிக்கவறியாமையாற் செய்யுஞ்செயல்).

¶ காப்பார்க்கு - கழிமடச்செய்கை வாராதபடி யதனைக் தடுப்பார்க்கு.





நிறுத்தல்—பிரிதலும் பின்கூடாமையு முடையாரைக் காட்டி * அதனல் நிலைபெறச்செய்தல். முன் எனக்கின்னுதன செய்தலாற் பின் † தமக்கின்னுதன தாமே வந்தன வென்பதாம்.

தெளி:—(இதுவுமது.) (இ - ள்.) உண்கண் - (மை) உண்டகண்கள், (அன்று), உயலாற்று - (யான்) பிழைக்கமாட்டாமைக்குக் காரணமாகிய, உய்விலேய் - ஒழிவில்லாத நோயை, என்கண் - என்னிடத்தே, நிறுத்து-நிறுத்தி, பெயலாற்று - (தாமும்) அழுதலேமாட்டாவண்ணம், நீருலந்த - நீர்வற்றிவிட்டன, (எ - று).

நிறுத்தல் - (உண் கண்கள்) பிரிதலும் பின்கூடாமையுமுடையாரை (எனக்குக்) காட்டி அதனல் (நோயை என்னிடத்து) நிலைபெறச்செய்தல். (உண் கண்கள்) முன் எனக்குத் துன்பங்களைச் செய்தலால் பின் தமக்குத் துன்பங்கள் தாமே வந்தனவென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழிக்குக் கண்கள் யான் பிழைக்க மாட்டாமைக்குக்காரணமாய நோயை

என்னிடத்தே நிலைபெறச் செய்து தாமுமழுது நீர்வற்றிவருந்துகின்றன வென்றுளென்பது.

4. These eyes have brought on me everlasting disease that knows no remedy; and they can weep no more, the fountain of tears having dried up.

நி. படலாற்ற பைத லுழக்குங் கடலாற்றுக்
காமநோய் செய்தவென் கண்.

(இதுவுமது.)

பரி:—(இ-ள்.) எனக்குக் கடலுஞ் சிறிதாம் வண்ணம் பெரிதாய காமநோயைச் செய்த என் கண்கள் ‡ அத்தீவினையாற் ¶ றுழந் துயில் கிலவாய்த் துன்பத்தையு முழவா நின்றன, (எ - று).

காமநோய் ×காட்சியான் வந்ததாகலின், +அதனைக் கண்களே செய் ததாக்கிக் கூறினுள். துன்பம் - அழுதலாலுயது.

தெளி:—(இதுவுமது.) (இ - ள்.) (எனக்குக்) கடலாற்ற - கடலுஞ் சிறிதாம் வண்ணம், (பெரிதாகிய), காமநோய்-காமநோயை, செய்த—,என் கண் - எனது கண்கள், (அத்தீவினையால்), படலாற்ற - (தாமும்) தூங்கா தனவாய், பைதலுழக்கும் - துன்பத்தையும் அனுபவிக்கின்றன, (எ - று).

* அதனல் - காட்டுதலால். † தமக்கு - கண்களுக்கு.

‡ அத்தீவினையால் - காமநோயைச்செய்த அத்தீவினையால்.

¶ தாமும் - கண்களும். × காட்சியான் - தலைமகனைக்காணுதலால்.

+ அதனை - காமநோயை.

## கற்பியல்—ங - வது கண்விதுப்பழிதல்.

## 1251

காமநோய் காட்சியால் வந்ததாகலால், அதனைக் (கடலாற்றுக், காம நோய் செய்தவென் கண் எனக்) கண்களே செய்ததாக்கிச் சொல்லினுள். துன்பம் - அழுதலாலாகியது.

(க-து.) தலைமகள் தோழிக்கு எனக்குக் கடலுஞ் சிறிதாம் வண்ணம் பெரிதாய காமநோயைச் செய்த என் கண்கள் அத் தீவினையால் தாமுந்துயிலாது வருந்துகின்றனவென்றுளென்பது.

5. Mine eyes have caused me a love that is greater than the sea and they now endure the pangs that banish sleep.

கூ. ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது.

[இதவுமது.]

பரி:—(இ - ள்.) எமக்கிக் காமநோயினைச் செய்த கண்கடாழும் இத்துயிலா தழுதற்கண்ணே பட்டது மிகவு மினிதாயிற்று, (எ - று).

ஓவென்பது மிகுதிப்பொருட்கண்வந்த குறிப்புச்சொல். * தம்மால் வருத்தமுற்றவெமக்கு † அது தீர்ந்தாற்போன்ற தென்பதாம்.

தெளி:—[இதவுமது.] (இ - ள்.) எமக்கு—, இந்நோய் - இக்காம நோயினை, செய்தகண் - செய்தகண்கள், தாஅம் - தாமும், இதற்பட்டது - இத்தூங்காமல் அழுதலிலே பட்டது, ஓஒவினிதே - மிகவும் இனிதா யிற்று, (எ - று).

ஓவென்பது மிகுதிப்பொருளில் வந்த குறிப்பிடைச்சொல். தம்மால் வருத்தமடைந்த எமக்கு அவ்வருத்தம் தீர்ந்தாற்போன்ற தென்பதாம்.

(க - து.) எனக்கு இக்காமநோயைச் செய்த கண்கள் துயிலாது வருந்துதல் எனக்கினிதாயிற்றென்று ளென்பது.

6. The eyes that brought on me this love-sickness have themselves been seized with this (sleepless) suffering. Oh ! this great delightfulness.

---

* தம்மால் - கண்களால்.

† எமக்குக் காமநோயினைச்செய்த கண்கள் தாமும் துயிலாது வருத்தமுறுதல் அக்காமநோய் தீர்ந்தாற்போன்றதா மென்று தலைமகள் கூறினளென்பதாம். ஒருவர் தமக்குத் தீமைசெய்தவர்க்குத் தீமை வந்தால், தமக்கு அத்தீமை தீர்ந்தாற்போலக்கருதுதல் உலகியல்பா மென்க.



எ. உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.)விழைந்து உண்ணெகிழ்ந்து

விடாதே அன்று அவரைக் கண்ட கண்கள் இன்று
இத்துயிலாதழுங்கலாய துன்பத்தினை யுழந்துழந்து †
தம்மகத்துள்ள நீர் அற்றேபோக, (எ - று).

அடுக்கு இடைவிடாமைக்கண் வந்தது.
அறுதலாகிய இடத்து நிகழ்
பொருளின்றொழில் இடத்தின்மே னின்றது.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) விழைந்து - விரும்பி, இழைந்து . உள்குழைந்து, வேண்டி - விடாதே, அவர்க்கண்டகண் - (அன்று) அத்தலை வரைப் பார்த்த கண்கள், உழந்துழந்து - (இன்று இந்தத் தூங்காமல் வரும் துதலாகிய துன்பத்தினை) அனுபவித்து அனுபவித்து, உண்ணீர் - (தம்) அகத்துள்ள நீர், அறுக - அற்றேபோகுக, (எ-று).

உழந்துழந்து என்னும் அடுக்கு இடைவிடாமைப் பொருளில் வந்தது. இடைவிடாமை - நடுவே நீங்காமை. அறுதலாகிய இடத்து (கண்களில்) நிகழ்பொருளின் (நீரின்) தொழிலை இடத்தின் (கண்களின்) மேலேற்றிக் 'கண்...நீறுக' என்று கூறினமையின், இஃது இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேலாம் உபசாரவழக்காம்.

(க - து.) அன்று காதலரை ஆசையாய்க்கண்ட கண்கள் இன்று மிகவும் வருந்தி நீரற்றுப்போகுக வென்றாளென்பது.

7. Let the eyes that became tender by gazing intently on him, suffer so much as to exhaust the stream of their tears.

ஆ. பேணாது பெட்டாங் குளர்மன்னே மற்றவர்க்
காணா தமைமவில கண்.

[காதலர் பிரிந்துபோயிருக்கல்லர்; அவரீண்டுளர்; அவரைக் காணுமளவும்
நீயாற்றல்வேண்டு மென்ற தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நெஞ்சால் விழையாதுவைத்துச் சொன்மாத்
திரத்தால் விழைந்தவர் இவ்விடத்தேயுளர்; அவ்வுண்மையாற்பயன்
யாது? அவரைக்கண்கள் காணா தமைகின்றனவில்லையாயின்,(எ-று).

செயலாற்பிரிந்து நின்றமையிற் 'பேணாது' என்றும், முன் *னலம்

† தம்மகத்துள்ள - தம்மிடத்திருக்கின்ற

* நல்கூர்ாாட்டல் - தலைவனைப் புணராதமுன்பு நின்றவேட்கை யன்பு புணர்ந்தபின்பும் அதிகரித்தலால், அப்புணர்ச்சி நலத்தைத் தலைவன் புகழ்ந்து சொல்லுதல்.

**1253**

பாசாட்டிப் * பிரிவச்சமும் † வன்புறையுங் கூறினாகலிற் 'பெட்டாள்' என்றுங் கூறினாள். ‡ மன்-ஒழியிசைக்கண் வந்தது. ¶ மற்று-வினைமாற்றின்கண் வந்தது. ஓகாரம் - அசைநிலை.

யாஞற்றவுங் கண்கள் அவனைக் காண்டற்கு விரும்பாநின்றன வென்பதாம். × இனிக் கொண்கனெனயென்று

பாடமாயின், என் கண்கள் தம்மைக் காணுதலைநின்ற கொண்கனைத் தாங் காணுதலைநின்றனவில்லை ; இவ்வாறே தம்மை யொருவர் விழையாதிருக்கத் தாமவரை விழைந்தார் உலகத்துளரோ வென்றுரைக்க. இதற்கு மன் அசைநிலை.

தெளிவு:—[காதலர்பிரிந்து போனாரல்லர்; அவர் இங்கு இருக்கின்றார்; அவரைப் பார்க்குமளவும் நீ பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலை மகள் சொல்லியது.] (இ - ள்.) பெறுது-(மனத்தால்) விரும்பாதிருந்தும்,

"உணர்ந்தார்க் குணர்வரி யோன்றில்லைச் சிற்றம் பலத்தொருத்தன், குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாயிக் கொடியிடைதோள், புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய், மணந்தாழ் புரிகுழலா ளல்குல் போல வளர்கின்றதே." என்று திருக்கோவையார் கூறுவதிங் குணர்தற்பாலதாம்.

* பிரிவச்சம் - பிரிதற்கு அஞ்சுதல். "பிரிவச்சமென்பது தான் பிரிய அஞ்சிற்றும் பிரிவச்சம்; அவளைப்பிரியவஞ்சுவித்ததும் பிரிவச்சம்; ஆகலிற் பிரிவச்சமெனப்பட்டது. அது யாங்ஙனம் சொல்லுமோவெனின், நின்னிற் பிரியேன், பிரியின் ஆற்றேன் என்னும்" என்று இறையனாரகப்பொருளிரண்டாவது சூத்திரத்தினுரையிற் கூறப்பட்டிருக்கின்றது.

† வன்புறை - தலைமகள் ஐயுற்றவிடத்துத் தலைமகன் ஐயந்தீரவற் புறுத்திக் கூறுதல். (கைவிடேனென்று பலவுறுதிமொழிகளைக்கூறல்). "ஐயந் தீர்த்தல் பிரிவறி வுறுத்தலென், றெய்திய வன்புறை யிருவகைத் தாகும்" என்பது அகப்பொருள் விளக்கம்.

‡ அவ்வுண்மையாற்பயன்யாது என்னும் ஒழிந்தசொற்பொருளைத் தந்துநின்றமையின், மன் என்னுமிடைச்சொல் ஒழியிசைக்கண் வந்ததா யிற்று.

¶ மற்று என்னும் இடைச்சொல் உளர் என்னும் வினையைமாற்றி இலர் என்னும் வினையைத்தந்து நின்றமையின், வினைமாற்றுயிற்று.

※ பேணுது பெட்டாருளர்மன்னே கொண்கனைக், காணு தமைவில கண் என்றுபாடமாயின், அதற்குக் கண் - எனதுகண்கள், கொண்கனை - (தம்மைக்காணுமற்பொருந்தியிருக்கின்ற) தலைமகனை, காணுது - (தாம்) காணுமல், அமைவில - பொருந்துகின்றன வில்லை, பேணுது - (இவ்வாறே தம்மை யொருவர்) விழையாதிருக்க, பெட்டார் - (தாமவரை) விரும்பினர், உளரோ - (உலகத்தில்) இருக்கின்றாரோ, என்பதுரை. இவ்வுரைக்கு மன் என்பது அசைநிலை.

பெட்டார் - (சொல்மாத்திரத்தால்) விரும்பியவர், உளர் மன் - (இங்கே) இருக்கின்றார், (அவ்விருத்தலால் பயன்யாது), கண் - கண்கள், மற்று அவர்க்காணுது - அவரைக் காணுமல், அமைவில - பொறுக்கின்றன இல்லே யாயின், (எ - று).

(காதலர்) செயலாற்பிரிந்து கின்றமையால் 'பேணுது' என்றும், முன்னே கலம்பாராட்டிப் பிரிவச்சமும் வன்புறையும் சொன்னராக லால் 'பெட்டார்' என்றும் சொல்லினுள். மன் - ஒழியிசைப் பொருளில் வந்தது. மற்று - வினைமாற்றுப் பொருளில் வந்தது. ஓகாரம்-அசைநிலே. யான்பொறுக்கவும் கண்கள் அவரைக் காணுதற்கு விரும்புகின்றன வென் பதாம்.

(க - து.) தலைமகள் தோழிக்கு மனத்தால்விரும்பாது சொல் மாத்திரத்தால் விரும்பிய தலைவரை என்கண்கள்காண விரை கின்றன வென்றுள் என்பது.

8. Here he is who loved me with his lips, but not with his heart ; but mine eyes cannot rest by not seeing him.

கூ. வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்.

[நீயுமாற்றி நின்கண்களுந் துயில்வனவாதல்
வேண்டுமென்ற
தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) காதலர் வாராதநாண்று அவர் வரவு பகர்த்துத் துயிலா ; வந்தநாண்று அவர் பிரிவதூசித் துயிலா ; ஆகலான், * அவ் விருவழியும் என்கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்தினையுடைய, ().

† ஆயிடையெனச் சுட்டு நீண்டது. இனி அவற்றிற்குத் துயில் ஒரு ஞான்றுமில்லை யென்பதாம்.

தெளி:—[நீயும்பொறுத்து உன்கண்களும் துயில்வனவாதல் வேண்டு மென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) வாராக்கால் - (காதலர்) வாராத நாள்களில், துஞ்சா - (அவர் வரவுபார்த்துத்) தூங்கா வாம், வரின் - வந்தநாள்களில், துஞ்சா - (அவர் பிரிவரென்று அஞ்சித்) தூங்காவாம், (ஆகலால்), ஆயிடை-அவ்விருவழியும், கண் - (எனது) கண் கள், ஆரஞருற்றன-பொறுத்தற்கரிய துன்பத்தையுடையனவாம், (எ-று).

* அவ்விருவழியும் - வாராதஞான்று வந்தஞான்று என்னும் இரண்டிடத்தும்.

† " தூக்கிற் சுட்டு, நீளின் யகரமுந் தோன்றுத னெறியே " என்று நன்னூல் கூறுவ திங்குணர்தற்பாலதாம்.

## கற்பியல்—௩ - வது கண்விதுப்பழிதல். 1

**255**

ஆயிடை யென்பதன்கண் அ என்னும் சுட்டு ஆ என நீண்டு நின் றது. இனி அக்கண்களுக்குத் தூக்கம் ஒருநாளும் இல்லையென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழிக்குத் தலைவர் வாராதபோதும் வந்தபோதும் என்கண்கள் தூங்காது வருந்துகின்றன வென்று கூறினாளென்பது.

9. When he comes not, they do not sleep; when he is present, no sleep comes; in either case mine eyes have troubles hard to bear.

௰. மறைபெற லூசார்க் கரிதன்றா லெம்போ
லறைபறை கண்ணா ரகத்து

[காதலரை இவ்வூர் இயற்பழியாமல் அவர் கொடுமையை மறைக்க
வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது).

பரி:—(இ - ள்.)எம்மைப்போலும் * அறைபறையாகிய
யுடையார் தந்நெஞ்சின்க ணடக்கிய
கண்ணினே கணுள்ளார்க்கு எளிது, (எ - று).
மறையை யறிதல் இவ்வூரின்

மறையென்றது ஈண்டு மறைக்கப்படுவதனை. அகத்து நிகழ்வதனைப்
புறத்துள்ளார்க் கறிவித்தலாகிய தொழிலான் ஒற்றுமை யுண்மையின்,
† "அறைபறை கண்" என்றுள். இங்ஙனஞ் ‡ செய்யுள் விகார மாக்காது
அறைபறைக் கண்ணொன்று பாட மோதுவாரு முளர். யான் மறைக்க வும் இவை வெளிப்படுத்தாநின்றன வென்பதாம்.

தெளி:—[காதலரை இவ்வூரார் இயற்பழியாமல் அவர் கொடுமையை மறைக்க வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) எம்போல் - எம்மைப்போலும், அறைபறைகண்ணார் - அறைபறையாகிய

கண்ணினையுடையவர், அகத்து - (தமது) நெஞ்சில் (அடக்கிய), மறைபெறல் - இரகசியத்தை யறிதல், ஊரார்க்கு - இவ்வூரிலுள்ளவர்க்கு, அரிதன்று - எளிது, (எ - று).

ஆல் ஆசை. மறையென்றது இங்கு மறைக்கப்படுவதனை. உள்ளே நிகழ்வதனை வெளியே யிருப்பவர்க்கு அறிவித்தலாகிய தொழிலால் பறை

---

* அறைபறை - அறையப்படும்பறை. பறை - ஒருவாத்தியவிசேடம். "அறைபறை" என்னுங்குறளின் விசேடவுரையில் "பறை ஒருவன் கையாற் றன்னை யறிவித்த தொன்றனை யிடந்தோறுங் கொண்டுசென்று யாவரையு மறிவிக்குமாகலான்" என்று கூறியிருத்தலு மிங்குணர்தற் பாலதாம். † அறைபறையாகிய கண் என்றும் பாடமுண்டு.

‡ பறைக்கண் என்னும் பண்புத்தொகை ஒற்றுமிகாது 'பறைகண்' என்றுமாயது செய்யுள் விகாரமாமென்று கொள்ளாது அறைபறைக் கண்ணர் என்று பாடங் கூறுவாருமுண்டு.



போடு கண்களுக்கு ஒற்றுமையுடைமையால் 'அறைபறை கண்' என்றார். (காதலர் கொடுமையை) யான் மறைக்கவும் இக்கண்கள் வெளிப்

படுத்துகின்றன வென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழிக்கு என் மனத்துள்ள இரகசியத்தை என் கண்கள் இவ்வூரார்க்கு வெளிப்படுத்துகின்றன வென்று வென்பது.

10. If is easy for the people of this village to understand the mystery when eyes, as mine, like beaten drums, make plain.

## 4 - ம் அதிகாரம்.

### பசப்புறுபருவரல்:—Suffering sallowness.

பரி:—அது பசப்புற்றபருவாலென விரியும்; அஃதாவது பசப்புறுதலாலாய வருத்தம். இதனைப் * பந்தெறிந்த வயர் வென்பது போலக் கோள்க. ‡ பசப்பாவது பிரிவாற்றுமையான் வருவதோர் நிறவேறுபாடு. † இது தலைமகனைக் காணப்பெறுதவழி நிகழ்வதாகலின், கண்வி துப்பழிதலின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—பசப்புறுபருவரல் என்பது பசப்புற்றபருவரல் என்று விரியும்; அஃதாவது பசப்புறுதலாலாகிய வருத்தம். இதனைப்பந்தெறிந்த அயர்வு என்பது போலக்கொள்க. பசப்பாவது பிரிவினைப் பொறுமையால் வருவதோர் நிறவேறுபாடு. இது தலைமகனைக் காணப்பெறுத விடத்து நிகழ்வதாகலால், கண்வி துப்பழிதலின்பின் வைக்கப்பட்டது.

* பந்தெறிந்தவயர்வு என்பது பந்தெறிந்தாலுண்டாகிய அயர்வு (சோர்வு) என்று பொருள்படுதல்போன்று பசப்புறு பருவால் என்பது பசப்புறுதலாலுண்டாகிய பருவால் (வருத்தம்) என்று பொருள்பட்ட தென்க. இங்கு உறு என்னும் வினைத்தொகை காரணப்பொருளில் வந்தது. உண்ட இளைப்பு என்பதும் இதுபோன்றதே யாம். பந்தெறிந்த வெயர்வு என்றும் பாடமுண்டு.

‡ "தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல், வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி, யஞ்சனத் தன்ன பசலை தணிவாமே, வங்கத்துச் சென்றூர் வரின்' எனவரும். இதனுள் வங்கத்துச் சென்றூர் வரின் அஞ்சனத்தன்ன பைங்கூந்தலையுடையாள் மாமேனிமேல் தெங்கங் காய்போலத் திரண்டுருண்ட கோழிவெண்முட்டை யுடைத்தன்ன பசலை தணிவாம் எனக்கொண்டுகூட்டுக" என்று கன்னூல் விருத்தியுரையில் வரைந்திருப்பது இங்குக் கவனிக்கத் தக்கதாம்.

† இது - பசப்புறுபருவால்.

கற்பியல்—ச - வது பசப்புறு பருவால்

**1257**

க. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேதன்
பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற.

[மூன் பிரிவுடம்பட்ட தலைமகள் † அஃதாற்றாது பசந்தவழித்
தன்னுள்ளே சொல்லியது.]

பரி:—(இ - ள்.) என்னை நயந்தவர்க்கு அதுபொழுது பிரிவை யுடம்பட்ட நான் அதனையாற்றாது இதுபொழுது பசந்த வெள்ளியல் பினை யார்க்குச்சொல்வேன், (எ - று).

பிறவென்பது அசைநிலை. உடம்படாவழி ‡ ஒழிதல்குறித்துப் பிரிவுணர்த்தினராகலின் அவரன்புடையரென்னுங் கருத்தான் 'நயந்தவர்' என்றும், இதுவேயுடம்பாடாக மேலும் பிரிவுங்கழுமாகலின் இனி அவரைக் கூடுதலரிதென்னும் கருத்தான் 'நல்காமை' என்றும், முன்னருடம்படுதலும் பின்னாற்றாது பசத்தலும் பிறர்செய்தனவல்ல வென்பாள் 'பசந்தவென் பண்பு' என்றும், யான் செய்துகொண்ட துன்பத்தினை இனி யொருவர்க் குச் சொல்லலும் பழியாமென்னுங் கருத்தால் 'யார்க்குரைக்கோ' என்றுங் கூறினாள்.

•

தெளி:—[முன் பிரிவிற்கு உடன்பட்ட தலைமகள் அதுபொறாமல் பசப்புநிறமடைந்தவிடத்துத் தன்னுள்ளே சொல்லியது.] (இ - ள்.) நயந் தவர்க்கு - (என்னை) விரும்பிய தலைவர்க்கு, நல்காமை - பிரிவை, சேர்ந் தேன்-(அப்பொழுது) உடன்பட்ட நான், பசந்த-(அப்பிரிவைப் பொறாமல் இப்பொழுது) பசப்பு நிறமடைந்த, என் பண்பு - என்னியல்பினை, யார்க் குரைக்கோ - யார்க்குச்சொல்வேன், (எ - று).

பிறவென்பது - அசைநிலை. (தலைமகள் தான்) உடம்படாதவிடத்து ஒழிதல் குறித்துப் பிரிவை (தனக்கு) அறிவித்தாராகலால் அவரன்புடையா ரென்னுங் கருத்தால் 'நயந்தவர்' என்றும், இதுவே உடம்பாடாக மேலும் பிரிவு நிகழுமாகலால் இனி அவரைக் கூடுதல் அரிதென்னுங் கருத்தால் 'கல்காமை' என்றும், முன்பு உடம்படுதலும் பின்பு பொறுமல் நிற வேறுபாடடைதலும் பிறர் செய்தனவல்ல வென்பாள் 'பசந்தவென் பண்பு' என்றும், யான் செய்துகொண்ட துன்பத்தை இனி ஒருவர்க்குச் சொல்லுதலும் பழியாமென்னுங் கருத்தால் 'யார்க்குரைக்கோ' என்றும் சொல்லினாள்.

(க - து.) தலைமகள் தன்னுள்ளே தலைவர் பிரிவுக் குடன்பட்ட பான் அதனாலுண்டாய நிறவேறு பாட்டினை எவரிடத்துச் சொல்லுவே னென்றாளென்பது.

---

† அஃதாற்றாது - தலைமகனது பிரிவைப் பொறுக்காமல்.

‡ ஒழிதல் குறித்து - சாதலைக் கருதி.



## 1258 திருக்குறள்-காமத்துப்பால்.

1. I who (then) consented to the separation of my lover, to whom shall I (now) complain about my having turned sallow ?

உ. அவர்தந்தா ரென்னுந் தகையா
லிவர்தந்தென்

மேனிமே லூரும் பசப்பு.

[ஆற்றுளெனைக் கவன்ற தோழிக்கு
ஆற்றுவலென்பது
படச் சொல்லியது.]

பரி:—(இ-ள்.) யானுற்றியுளேனுகவும் இப்பசப்புத்தான் என்னை யுண்டாக்கினர் * அவரென்னும் † பெருமிதத்தான்; என்மேனியை மேற்கொண்டு செலுத்தாநின்றது, (எ - று).

‡ "குருதிகொப் புளிக்கும் வேலான் கூற்றன்மா விவர்ந்து செல்ல" என்புழியும் இவர்தல் ¶ இப்பொருட்டாத லறிக. †இஃது ×உரிமைபற்றி யூர்கின்றது; இதற்கு நீ கவலல் வேண்டா வென்பதாம்.

தெளி:—[பொருளென்று கவலையுற்ற தோழிக்குத் தலைமகன் பொறுப்பேனென்பது தோன்றச் சொல்லியது.] (இ ள்.) (யான் பொறுத்திருக்கின்றே னுகவும்) பசப்பு - இப்பசப்புநிறம், தந்தார் அவர் என்னுந் தகையால் - (என்னை) உண்டாக்கினர் அவரென்னும் பெருமிதத்தால், என் மேனிமேல் - என் மேனியை, இவர்ந்து - மேற்கொண்டு, ஊரும் - செலுத்தா நின்றது, (எ - று).

இவர்தல் - மேற்கொள்ளல். `இஃது உரிமைபற்றி ஊர்கின்றது; இதற்குத் தோழியே! நீ கவலையடைதல் வேண்டாமென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழிக்குத் தலைவர் என்னை யுண்டாக்கினரென்னும் உரிமைபற்றிப் பசப்பு என் மேனிமுற்றும் பரவா நின்றதென்று கூறினளென்பது.

2. This sallowness, as if proud of having been caused by him, would now climb and ride on my person.

---

* அவர் - தலைவர். † பெருமிதத்தான் - களிப்பு மிகுதியால்.

‡ சீவகசிந்தாமணி-விமலையாரிலம்பகம், க. இதன்பொருள். இரத்தத் தையுமிழும் (சிந்தும்) வேலையுடைய சீவகன் கூற்றலை (கழுத்தின்கண் மயிரை) யுடைய குதிரையின்மேலேறிப் போகாநிற்க என்பது.

¶ இப்பொருட்டாதல்-மேற்கொள்ளல் என்னும் பொருளினையுடைய தாதல்.

+ இஃது - பசப்பு. × உரிமைபற்றி - சுதந்தரத்தினால்.

கற்பியல்—நா - வது பசப்புறு பருவரல்.

**1259**

ஈ. சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து.

[அழகு நாணு மழியாமல் நீ யாற்றல்

வேண்டுமென்ற

தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) பிரிகின்ற ஞான்றே * அவ்விரண்டற்குந் † தலை

மாறாக இக்காமநோயினையும் பசலையையும் எனக்குத் தந்து, என்மேனி அழகினையும் நாணினையும் அவர் கொண்டுபோயினர், (எ - று).

¶ எதிர் நிரனிறை. அடக்குந்தோறும் மிகுதலான், நோய் நாணிற்குத் தலைமாறுயிற்று. இனி அவர் தந்தாலல்லது +அவை யுளவாகலும் × இவை யிலவாகலுங் கூடாவென்பதாம்.

தெளி:—[அழகும் நாணமும் அழியாமல் நீ பொறுத்தல்வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) (பிரிகின்ற பொழுதே) கைம்மாறு - (அவ்விரண்டற்கும்) தலைமாறாக, நோயும் பசலையும்-இக்காமநோயையும் பசலையையும், தந்து - (எனக்குத்) தந்து, சாயலு நாணும் - (என்மேனி) அழகையும் நாணத்தையும், அவர்கொண்டார்-அவர் கொண்டுபோயினர், (எ - று).

இஃ தெதிர்நிரனிறை.

அடக்குந்தோறுமிகுதலால், காமநோய் நாணிற் குத் தலைமாறுயிற்று. இனி அவர் தந்தாலல்லாமல் அவை உளவாதலும்

இவை இலவாதலும் கூடாவென்பதாம். இது பரிமாற்றமென்னு மலங் காரம்; அது பொருள்கொடுத்துப் பொருள் கொள்வதாகக்கூறல்.

(க - து.) தலைமகள் தோழிக்குக் காமநோயினையும் பசலை

யையும் எனக்குத்தந்து என்மேனி யழகினையும் நாணினையுங் கவர்வர் கொண்டுபோயினரென்று கூறினளென்பது.

3. He has taken away my comeliness and modesty and given me in recompense love-sickness and sallowness.

---

* அவ்விரண்டற்கும் - அழகு நாண் என்னுமிரண்டற்கும்.

† தலைமாறுக - பிரதியாக (விரோதமாக).

¶ நோய்க்கு நாணும், பசலைக்குச் சாயலும்ஆக மாறி நிற்றலால் இக்குறள் எதிர்நிரனிறையாயிற்று. நிரனிறையாவது வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்தமுள்ளவற்றை யம்முறையே சொல்லுதலாம்; எதிர்நிரனிறை இவ்விதியில் மாறிவருவது. நோயைத்தந்து நாணினையும், பசலையைத்தந்து சாயலையும் கொண்டாரென்று கொள்க.

+அவை - அழகும் நாணும். ×இவை - நோயும் பசலையும்.



ச.

உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு.

[பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர்
கற்றிறங்களையு
மறிதியாகலின், நீட்டியாது

வருவதொன்றவழிச்

சொல்லியது.]

பரி:—(இ - ள்.) அவர் சொற்களை யான் மனத்தா னினையாநிற்

பேன், வாகீகாலுரைப்பதும் அவர் நற்றிறங்களையே ; அங்ஙனஞ் செய்

யா நிற்கவும், பசப்பு வந்து நின்றது, இது வஞ்சனையா யிருந்தது, ()

பிறவும் ஓவும் அசைநிலை. * மெய் மற்றை மனவாக்குக்களின் வழித்

தாகலின், † அதன் கண்ணும் ‡வரப்பாற்றன்றுயிருக்க வந்தமையின், இதன்

செயல் கள்ளமா யிருந்ததெனத் தானுற்றுகின்றமை கூறியவாறுயிற்று.

தெளி:—[தோழி பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர் நற்

குணங்களையும் நீ அறிவாயாகையால், அவர்

தாமதியாதுவருவதொன்ற விட

த்து அவளுக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) யான் உள்ளுவன் -

யான் - (அவரதுசொற்களை மனத்தால்)

நினைக்கின்றேன், உரைப்பது -
(வாயால்) சொல்வதும், அவர்திறம் - அவரது
நற்றிறங்களையே,(அவ்வாறு
செய்யா நிற்கவும்), பசப்பு - பசலைநிறம், (வந்து
நின்றது), கள்ளம்-(இது)
வஞ்சனையாயிருந்தது, (எ - று).

பிறவும் ஒவும் ஆலும் அசைநிலை. மெய் மற்றை மனவாக்குக்களின் வழியாயுள்ளதாகலால், அதனிடத்தும் பசப்பு வருந்தன்மைய தன்றுயிருக்க வந்தமையால், இதன்செயல் கள்ளமாயிருந்தென்று தான் பொறுக்கின்றமையைச் சொல்லியபடியாயிற்று.

(க - து.) தலைமகள்

தோழிக்குத் தலைவரதுசொற்களைநினைத்
தும் அவரது குணங்களைப் பேசியுமிருக்கும்
என்னிடத்துப்பசலை
வந்தது வஞ்சனையாயிருக்கின்ற தென்றுளென்பது.

4. I think (of his words) ; and what
I say is but the
theme of his worth; still is there sickly hue
; and this is
deceitful.

* பசப்பு மனம் வாக்குக்களிடத்து வாராமைபோல அவற்றின் வழியி

லுள்ள உடம்பினிடத்தும் வருதற்குரியதன்றும்; அங்ஙனமிருக்க, அஃது உடம்பினிடத்து வந்தது; வந்தமையால், இப்பசப்பின் செயல் வஞ்சனையா யிருந்ததென்று தலைமகள் தான் பொறுத்திருக்கின்றமையைக் கூறினா ளென்பதாம். † அதன்கண்ணும் - மெய்யி (உடம்பி) னிடத்தும். ‡ வாற்பாற்றன்றுயிருக்க என்றும் பாடமுண்டு.

## கற்பியல்—சு - வது பசப்புறு பருவரல்.

**1261**

உ. உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது.

[காதலர் பிரிந்தணித்தா யிருக்கவும்
ஆற்றுகின்றிலையென்ற
தோழிக்கு முன்னிகழ்ந்தது கூறியது.]

பரி:—(இ - ள்.) பண்டும் நங்காதலர் உங்கே செல்வாராக, என் மேனி பசப்பூரீவ திங்கே யன்றே, அப்பெற்றியது இன்று பிறிதோன் றுமோ, (எ - று).

* உவக்காண் இவக்காணென்பன ஒட்டிநின்ற விடைச்சொற்கள். † தேயவண்மையாற் காலவண்மை கருதப்பட்டது. ‡ அவர் செலவும் பசப் பினது வரவும் பகலிரவுகளின் செலவும் வரவும் போல்வ தறிந்துவைத்து அறியாதாய்போல நீ சொல்லுகின்ற தென்னேயென்பதாம்.

**தெளி:**—[காதலர்பிரிந்து சமீபமாயிருக்கவும் நீ பொறுக்கின்றிலே யென்ற தோழிக்குத் தலைமகள் முன்னே நிகழ்ந்தது சொல்லியது.] (இ-ள்.) (முன்னும்) எங்காதலர் - நமதுகாதலர், உவக்காண்-உவ்விடத்தே, செல்வார்-(பிரிந்து) செல்வாராக, என்மேனி-எனதுவடிவம், பசப்பூர்வது—பசலைநிறமடைவது, இவக்காண் - இங்கே, (அன்றே), (அத்தன்மையதாய பசப்பு இன்று வேறொன்றுமோ), (எ-று).

உவக்காண் இவக்காணென்பன ஒட்டிநின்ற விடைச்சொற்கள். உவக் காண் என்னும் தேயவண்மையாற் காலவண்மை கருதப்பட்டது. அவரது செலவும் பசப்பினது வரவும் பகலிரவுகளின் செலவும் வரவும் போல்வதை அறிந்திருந்தும் அறியாதாய்போன்று நீ சொல்லுகின்றது என்னேயென்ப தாம். தேயம் - இடம்; அண்மை - சமீபம்.

•(க - து.) தலைமகள் தோழிக்குக் காதலர் பிரிந்ததும் பசப்பு வந்துவிட்டது; யான் பொறுத்திருப்ப தெவ்வாறும் என்று கூறி

. .

ளை எனபது.

5. Just as my lover separated then, did not pallor spread on•my body ?

---

* உங்கு இங்கு என்னும் சுட்டிடைச்சொற்கள் காண் என்னும்

இடைச்சொல்லோடொட்டி உவக்காண் இவக்காண் என்று விகாரப்பட்டு நின்றமையின், 'உவக்காண் இவக்காண் என்பன ஒட்டிநின்றவிடைச்சொற்கள்' என்று கூறப்பட்டது. உகரச்சுட்டு நடுவிலுள்ள பொருளையும் பின்னுள்ள பொருளையும் மேலுள்ள பொருளையும், இகரச்சுட்டுச் சமீபத்திலுள்ள பொருளையு முணர்த்தி நிற்கும்.

† 'உவக்காணெங்காதலர்' என்று கூறினமையால், காதலர் சமீப தேசத்திலிருக்கின்றரென்பது பெறப்பட்டது; அதனாலவர் சமீபகாலத்தில் வருவாரென்பது கருதப்பட்டது. ‡ அவர் - காதலர்.



சு. விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற்

## முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) விளக்கினது மேலிவுபார்த்து நேருங்கிவரு மிருளே போலக் கொண்கன் முயக்கினது மேலிவுபார்த்து நேருங்கி வரும் இப்பசப்பு, (எ - று).

* பார்க்குமென்பன இலக்கணைச் சொல். முன் பிரியாதிருக்கவும் தனக்கவகாசம் பார்த்துவரும் பசப்புப் பிரிவுபெற்றால் என் செய்யா தென் பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) விளக்கு - விளக்கினது, அற்றம் பார்க்கும் - சோர்வுபார்த்து நெருங்கிவருகிற, இருளேபோல் - இருளே போன்று, பசப்பு - இப்பசப்புநிறமானது, கொண்கன் - தலைவனுடைய, முயக்கு - புணர்ச்சியினது, அற்றம்பார்க்கும் - சோர்வு பார்த்து நெருங்கி வரும், (எ - று).

பார்க்குமென்னு மிரண்டும் இலக்கணைச்சொல். முன் பிரியாதிருக்க வும் தனக்குச் சமயம்பார்த்து வரும் பசப்புப் பிரிவுபெற்றால் (என்னை) என்ன செய்யாதென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழிக்குக் காதலர் பிரிந்துள்ளபோது யான் பசப்பின்றியிருத்தல் முடியாதென்று ளென்பது.

6. Just as darkness waits for the failing light (to fill the place), so does the pallor wait for the laxity of my lover's embrace.



எ. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே
னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) முன்னொரு ஞான்று காதலரைப்
புல்லிக்கிடந்த
யான் அறியாது புடைபெயர்ந்தேன்;
அப்புடைபெயர்ந்த வளவிலே
பசப்பு
அள்ளிக்கொள்வதுபோல வந்து செறிந்தது, (எ - று).

---

* நெருங்கிவருதலைப் பார்க்கும் என்று கூறினமையின், பார்க்கு மென்னு மிரண்டும் இலக்கணைச் சொல்லாயின. பார்க்குந்தன்மை யில்லாத இருளிற்கும் பசப்பிற்கும் பார்க்குந்தன்மை யுளதாகக் கூறினமை யின், இது பாராதது பார்ப்பதுபோற் கூறிய இலக்கணையாம். இலக்கணை

யாவது ஒருபொருளி னிலக்கணத்தை மற்றொரு பொருட்குத் தந்துரைப் பதாம். கண்ணிற்குரிய பார்க்குந்தன்மை இருளிற்கும் பசப்பிற்கும் தந் துரைத்தவாறுணர்க.

## கற்பியல்—சு - வது பசப்புறு பருவரல்.

# 1263

¶ கொள்வென்பது குறைந்து நின்றது. அள்ளிக்கொள்வது-அள்ளிக் கொள்ளப்படும் பொருள். அப்புடைபெயர்ச்சிமாத்திரத்திற்கு † அவ்வாறு யது இப்பிரிவின்கணுமாறு சொல்லவேண்டுமோ வென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ-ள்.) புல்லிக்கிடந்தேன் - (முன்னொரு நாள் காதலனைத்) தழுவிக்கிடந்த நான், புடைபெயர்ந்தேன் - (அறி யாது) சிறிது விலகினேன், அவ்வளவில் - அச்சிறிதுவிலகிய வளவிலே, பசப்பு - பசப்பு நிறமானது, அள்ளிக்கொள்வற்றே - அள்ளிக் கொள்ளப் படும் பொருள்போல வந்து நிறைந்தது, (எ - று).

கொள்வென்பது அகரங்குறைந்து கொள் என நின்றது.- அச்சிறிது விலகிய மாத்திரத்திற்கு அவ்வாறுகிய பசப்பு இப்பிரிவிடத்து ஆகும் விதம் சொல்லவேண்டுமோ வென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழிக்கு யான் தலைவனைத் தழுவிக் கிடந்த ஒருநாள்

சிறிதுவிலகினேன்; விலகியவளவிலேயே எனக் குப்
பசப்புண்டாயிற்றென்று தனது
அனுபவங்கூறினளென்பது.

7. I who lay in close embrace
(unwittingly) turned aside;
forth with, this hue came on me.

ஆ. பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில.

[நீ யிங்ஙனம் ‡ பசக்கற்பாலையல்லையென்ற தோழியொடு புலந்து சொல்லியது.]

பரி:—(இ ள்.) இவள் ஆற்றியிராது பசந்தாளென்று என்னைப் பழிகூறுவதல்லது இவளை யவர் துறந்து போயினரென்று அவரைக் கூறுவாரொருவருமில்லை, (எ - று).

'என்பார்' என வேற்றுமைத்துக்கூறினாள்; தன்னையே * நெருங்குதல் பற்றிப் புலக்கின்றமையின்.

தெளி:—[நீ இவ்வாறு பசப்புநிறமடைவது தகுதியாகாதென்ற தோழியோடு பிணங்கித் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) இவள்—,பசந்தாளென்பதல்லால் - (பொறுத்திராது) பசலைநிற மடைந்தாளென்று (என்

¶ கொள்வதென்பது (கொள் எனக்) குறைந்து நின்றது என்றும் பாடமுண்டு; கொளலென்பது குறைந்து நின்றது என்றும் பாடமுண்டு.

† அவ்வாறுயது—அள்ளிக்கொள்ளப்படும் பொருள்போல வந்து நிறைந்த பசப்பு.

‡ பசக்கற்பாலையல்லே—பச்சப்புநிற மண்டதற் குரியையல்லே.

* நெருங்குதல் - பொறுத்திருக்க வேண்டுமென்று பலமுறையுங் கண்டித்துக்கூறுதல்.



னைப்) பழிசொல்லுவ தல்லாமல், இவளை—, அவர்—, துறந்தானென்பார்—துறந்து போயினானென்று (அவரைச்) சொல்லுவார், இல் - (ஒருவரும்) இல்லை, (எ - று).

தலைமகள் தோழி தன்னையே நெருங்குதல் பற்றிப் பிணங்குகின்றாளாகலின், அவளை 'என்பார்' என்று வேறுபடுத்திச் சொல்லினாள்.

(க - து.) தலைமகள் தோழியோடு பிணங்கி, என்னைவிட்டுப் பிரிந்த தலைவரைப் பழியாது, அப்பிரிவு காரணமாகப் பசப்பு கிற மடைந்த என்னைப்பழிப்பது தகாதென்று கூறினாளென்பது.

8. Besides those who cast a slur that she has turned sallow, there are none who say he has deserted her.

கூ. பசக்கமற் பட்டாங்கென்

மேனி நயப்பித்தார்

நன்னிலைய ராவ ரெனின்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) இப்பிரிவை யானே யுடம்படும் வகை சொல்லி யவர் இன்று நிகழ்ந்தான் நல்ல நிலையின ராவராயின், என்மேனி

* பட்டதுபடப் பசிப்பதாக, (எ - று).

நன்னிலையராதல் - † நன்மைக்கண்ணே நிற்றலையுடையராதல் பட்டாங்காகவென ஆக்கம் வருவித்துரைக்க. முன் இப்பிரிவின் கொடுமை

யறியாத வென்னை இதற்குடம்படுத்திப் பிரிந்தவர் தவறிலராகவே வேண்டுவது, என் மேனியும் பசப்பும் யாதுசெய்யினென் னென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

தெளி:—[இதுவுமது.] (இ-ள்.) நயப்பித்தார் - (இப்பிரிவை யானே) உடம்படும்வகை சொல்லியவர், நன்னிலையராவரெனின் - (இன்று உண்கருத்தால்) நல்லநிலையின ராவராயின், என்மேனி - என்னுடம்பு, பட்டாங்கு (ஆக) - பட்டதுபட, பசக்க - பசலைநிற மடைவதாக, (எ - று).

நன்னிலையாதல் - நன்மைக்கண்ணே

நிற்றலையுடையாதல். ஆக

வென்னும் ஆக்கச்சொல் வருவித்துப் பட்டாங்காக எனச் சொல்லப்பட்டது. முன் இப்பிரிவின் கொடுமையை யறியாத என்னை இப்பிரிவிற்கு உடம்படுத்திப் பிரிந்தவர் தவறிலராகவே வேண்டுவது, என்மேனியும் பசப்பும் யாது செய்யின் என் என்பது தோன்ற நின்றமையால், மன்னென்னும் இடைச்சொல் ஒழியிசைப்பொருளில் வந்தது.

---

* பட்டதுபட - துன்பமடைவதடைய.

† கண்ணைக்கண்ணே - கல்லொழுக்கத்தினிடத்தே.

## கற்பியல்—சு - வது பசப்புறு பருவரல்.

**1265**

(க-து.) தலைமகள் தலைவர் நல்லநிலையினையுடையராயின், என் மேனி பசலைநிறமடைதல் எனக்கினிதே யாமென்று ளென்பது.

9. If he be clear of guilt who won my consent for his departure, let my body suffer its due and turn sallow.



பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்

நல்காமை தூற்றுரெனின்.

[தலைமக ளாற்றுதற்பொருட்டுத் தோழி தலைமகனை யியற்

பழித்தவழி அவள் இயற்படமொழிந்தது.]

பரி:—(இ-ள்.) அன்று தாங் * துறை நயப்பித்துக் † கூடினவர்க்கு இன்று நல்காமையை நட்டார் தூற்றாயின், பசப்புற்றனென வேற்று மையானன்றிப் பசப்புத்தானுயினுனென ஒற்றுமையாற் றுஞ்சொல்ல அப்பெயரைப் பெறுதல் எனக்கு நன்று, (எ - று).

‡ நட்டாரென்பது அவாய் நிலையான் வந்தது. இயற்பழித்தல் பொருது புலக்கின்றுளாகலின், இகழ்ச்சிக் குறிப்பாற் கூறினுள். அவனை அருளிலனென்றது இன்னும் பசந்தாளிவளென்கையே யாஞற்றுளேறி யாவதென்பதாம்.

தெளி:—[தலைமகள் பொறுத்தற் பொருட்டுத் தோழி தலைமகனை

இயற்பழித்தவிடத்து அவள் இயற்படச் சொல்லியது.] (இ - ள்.) நயப் பித்தார் - (அன்று தாம்) குறை நயப்பித்துக் கூடினவர்க்கு, நல்காமை - (இன்று) அருளாமையை, தூற்றுரெனின் - (நட்புடையார்) தூற்று ராயின், பசப்பென - (பசப்புற்றுனென்று வேற்றுமையாலன்றிப்) பசப் புத் தானுயினுனென்று (ஒற்றுமையால் தாம்) சொல்ல, பேர்பெறுதல் - அப்பெயரைப் பெறுதல், நன்று - (எனக்கு) நன்றும், (எ - று).

நட்புடையாரென்பது அவாய் நிலையால் வந்தது.

தலைமகள் தோழி தலை

மகனை யியற்பழித்தற்குப் பொருமற் பிணங்குகின்ற ளாகலால் 'பசப் பெனப் போற்பெறுத னன்றே' என்று இகழ்ச்சிக் குறிப்பால் சொல்லினாள். அவளை அருளிலனென்றது இன்னும் பசலையடைந்தான் இவளென்று கூறுதலே நான் பொறுக்கும்வழி யாவ தென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியோடு பிணங்கித் தலைவர் அருள் செய்யாமையை நட்டார் தூற்றுராயின், பசப்புத் தானுயினாள் என்னும் பெயரைப் பெறுதல் எனக்கினிதா மென்று ளென்பது.

---

* குறைநயப்பித்து - தமது குறைகளைவிரும்பி யேற்குமாறுசொல்லி.

† கூடினவர் என்றும் பாடமுண்டு.

‡ தூற்றுர் என்னும்வினை நட்டார் என்னும் வினைமுதலை அவாய் (வேண்டி) நிற்றலின், அது வருவிக்கப்பட்டது.



திருக்குறள்-காமத்துப்பால்.

10. It is well to be said of me that I have turned sallow, if friends refrain from reproaching with unkindness him who won my love then.

## 5 - ம் அதிகாரம்.

தனிப்படர் மிகுதி:—The solitary anguish.

பரி:—அது தனியாகிய படர்மிகுதியென விரியும்; அஃதாவது படர்மிகுதி தலைவன்க ணின்றித் தன் கண்ணே யாதல் கூறுதல்.† அற மும் ‡ பொருளு நோக்கிப் பிரிதலின் அவன்கண் இல்லையாயிற்று.

---

† அறநோக்கிப் பிரிதல் - காவற் பிரிவாம்.
காவற்பிரிவு - நாடுகாத்

தற்குப் பிரியும் பிரிவு. இறையனாகப்பொருள் "ஓதல் காவல்" என்னுஞ் சூத்திரத்தினுரையில் "இனி நாடுகாத்தற்குப் பிரியுமென்பது நலிவாருள ராக நலிவுகாத்தற்குப் பிரியுமென்பதன்று; நாட்டகத்துநின்றும் நகரகத்து வந்து தமக்கு உற்றது உரைக்கல்லாத மூத்தார்களும் பெண்மக்களும் இரு க்கை முடவரும் கூனரும் குருடரும் பிணியுடையாரும் இத்தொடக்கத் தார்தம் முறைக்கருமங் கேட்டுத் திருத்துதற் பொருட்டாகவும், காட்ட கத்து வாழும் உயிர்ச் சாதிகள் ஒன்றனையொன்று நலிவன வேளாயின

விடத்துத்தீதென்று அவற்றை முறை செய்தற்கும், கொடிவலைப்பட்டுக் கிடந்தனவற்றைத் துறை நீக்குதற் பொருட்டாகவும், வள னில்வழி வளங் தோற்றுவித்தற் பொருட்டாகவும், தேவகுலமே சாலையே அம்பலமே யென்று இத்தொடக்கத்தனவற்றை யாராய்தற்கும், அழிகுடியோம்புதற் கும் பிரியுமென்பது. அல்லதூஉம் பிறந்த உயிர் தாயைக்கண்டு இன்புறு வதுபோலத்தன்னுற் காக்கப்படும் உயிர்வாழ் சாதிகள் தன்னைக்கண்டு இன் புறுதலிற்றான் அவைகட்கும் தன் உருவுகாட்டுதற்கும், மாற்றாசர் ஒற்று வந்த விடத்து அவர் முன்னம் தனது ஊக்கம் காட்டுதற்பொருட்டாகவும் பிரியும். அதனானே மாற்றாசர் நிறைகொடுப்பாரென்பது" என்று கூறப்பட்டிருக்கின்றது.

‡ பொருள் நோக்கிப் பிரிதல் - பொருளீட்டுதல் காரணமாகப் பிரியும் பிரிவு. தஞ்சைவாணன் கோவையினுரையில் "பொருள்வயிற் பிரிவு என்பது பொருளீட்டுதல் காரணமாகப் பிரியும் பிரிவு எனின், முன்பொருளிலனும்; ஆகவே, 'எள்ளுநர்ப்பணித்தலு மிரந்தோர்க்கீதலும் கள்ளுநர் நாட்டலும் நயவாசொறுத்தலும்' என்னுமிவையெல்லாம் பொருட்குறைபாடுடைபார்க்கு நிகழாமையான், இக்குறைபாடெல்லாம் உடையனும்; அவையுடைபானது பொருளிறப் பென்னையோவெனின், பொருளிலனுய்ப் பிரியுமென்பதன்று; தன்முதுகுரவாற் படைக்கப்பட்ட பலவேறு வகைப்பட்ட பொருள்களெல்லாங் கிடந்தது, மன்னன் அதுகொண்டு தய்ப்பது ஆண்மைத்தன்மை யன்றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொருள் கொண்டு வழங்கி வாழ்தற்குப் பிரியுமென்பது. அல்லதூஉம் தேவகாரி

## கற்பியல்—டு - வது தனிப்படர் மிகுதி.

**1267**

*** இது † பசப்புற்று வருந்தியாட் தூயதாகலின், பசப்புறு பருவரலின் பின் வைக்கப்பட்டது.**

தெளி:—தனிப்படர்மிகுதியென்பது தனிமையாகிய படர்மிகுதி யென்றுவிரியும்; அஃதாவது படர்மிகுதி தலைமகனிடத்தில்லாமல்

தன்னிடத்தேயாதலைத் தலைமகள் சொல்லுதல்.

தலைமகன் அறமும்

பொருளுங்
கருதிப் பிரிதலால், தனிப்படர்மிகுதி அவனிடத்தில்லையாயிற்று.
இது பசப்புற்று வருந்திய தலைமகளுக்குரியதாகலால்,
பசப்புறுபருவாலின்
பின்னர் வைக்கப்பட்டது. படர் - துன்பம்.

க. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி.

[ † காதலரும் நின்னினுமாற்றாராய்க் கடிதின்வருவர்;
நீயவரோடு
பேரின்பநுகர்தி யென்ற தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) தம்மாற் காதலிக்கப்படுங்
கணவர் தம்மைக்

காதலிக்கப் பெற்ற மகளிர் பெற்றாரே காமநுகர்ச்சியென்னும் பா
லில்லாத கனியை, (எ - று).

¶ காமம் - ஆகுபெயர். அத்து அல்வழிக்கண் வந்தது. முன்னைநல்
வினை இல்வழிப் பெறப்படாமையிற் 'பெற்றார்' என்றும், | அவாாற்
றடையின்றி நுகாப்படுதலிற் 'காழில்கனி' என்றுங் கூறினாள். நங்காத
லர் பிரிதலேயன்றிப் பின் வாராமையுமுடைமையின், : அக்கனி யாம்
பெற்றிலே மென்பதாயிற்று.

தெளி:—[காதலரும் உன்னினும் பொறுக்காதவராய்க் கடிதில் வரு
வர் ; நீ அவரோடு பேரின்பத்தை அனுபவிப்பாயென்ற தோழிக்குத் தலை
மகள் சொல்லியது.] (இ-ள்.) தாம்வீழ்வார்-தம்மால் விரும்பப்படுங் கண

யும் பிதிர்க்காரியமும் தனது தாளாற்றலாற் படைத்த பொருளாற்செயத் தனக்குப் பயன்படுவன ; என்னை ? 'தாயப்பொருளாற் செய்தது தேவரும் பிதிரரும் .இன்புறூர்' ஆகலான் அவர்களையும் இன்புறுத்தற்குப் பிரியுமெனக்கொள்க " என்று கூறப்பட்டிருக்கின்றது.

* இது - தனிப்படர்மிகுதி.

† பசப்புற்று - (தலைமகனது பிரிவைச் சகிக்க முடியாமையால்) நிற வேறுபாடடைந்து. ‡ காதலர் என்றும் பாடமுண்டு.

¶ காமம் என்னும் கருவியின்பெயர் அதன்காரியமாகிய நுகர்ச்சியை (புணர்ச்சியை) யுணர்த்துதலால், கருவியாகு பெயராம். காமநுகர்ச்சி - காமானுபவம்.

| அவரால் - பெற்றமகளிரால்.

: அக்கனி - காமத்துக்காழில்கனி. காமநுகர்ச்சி காமத்துக்காழில் கனியென்று உருவகஞ் செய்துரைக்கப்பட்டது.



வர், தம்வீழ-தம்மை விரும்ப, பெற்றவர்-பெற்றமகளிர், காமத்து-காமநுகர்சியென்னும், காழில் - வித்தில்லாத, கனி-பழத்தை, பெற்றூரே-பெற்றூரன்றே, (எ - று).

காமம்-கருவியாகுபெயர்.காமத்து என்பதன்கணுள்ளஅத்து அல்வழிக்கண்வந்த சாரியை. (காமநுகர்ச்சி) முன்னை நல்வினையில்லாவிடத்துப் பெறப்படாமையால் 'பெற்றூர்' என்றும், அவரால் தடையில்லாமல் (காமம்) அனுபவிக்கப்படுவதால் 'காழில் கனி' என்றும் சொல்லினள். நங்காதலர் பிரிதலேயல்லாமல் பின் வாராமையுமுடைமையால், அக்கனியை யாம் பெற்றிலே மென்பதாயிற்று.

(க - து.) தலைமகள் தோழியை நோக்கி, தாம் விரும்பும் கணவரால் விரும்பப்பட்ட மகளிரே காமநுகர்ச்சியைப் பெற்றூரா வர் என்றூள் என்பது.

1. The women who are beloved by those they love,

have obtained the seed-less luscious fruit of sexual delight.

உ. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றூல் வீழ்வார்க்கு.

வீழ்வா ரளிக்கு மளி.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) அறமும் பொருளுநோக்கிப் பிரிந்தாம் நம்மை † யின்றியமையா மகளிர்க்கு அவரை யின்றியமையாக் கணவர் அளவறி நீதுவந்து செய்யுந்தலையளி தன்னையே நோக்கி உயிர்வாழ்வார்க்கு வானம் அளவறிந்து வந்து பெய்தாற்போலும், (எ - று).

நங்காதலர் நம்மை விழையாமையின் அத்தலையளியில்லே யாகலான், மழைவறந்தூழி ‡ அதனுன் ¶ வாழாதார்போல இறந்துபடுதலே நமக்குள்ள தென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) (அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்தால்) வீழ்வார்க்கு - (தம்மை) விட்டிருக்கமாட்டாத மகளிர்க்கு, வீழ்வார் - (அவரை) விட்டிருக்கமாட்டாத கணவர், அளிக்கும் - அளவறிந்து வந்து செய்யும், அளி - தலையளி, வாழ்வார்க்கு - (தன்னையே நோக்கி) உயிர்வாழ்வார்க்கு, வானம் - மேகம், பயந்தற்று - அளவறிந்து வந்து மழை பெய்தாற்போலும், (எ - று).

---

† இன்றியமையா - இல்லாது முடியாத, அஃதாவது அவசியமாக வேண்டிய.

‡ அதனுன் - மழைபெய்யாமையினுல்.

¶ வாழ்வார்போல என்றும் பாடமுண்டு.

## கற்பியல்—டு - வது தனிப்படர் மிகுதி.

# 1269

நம்காதலர் நம்மை விரும்பாமையால் அத்தலையளியில்லே யாகலால், மழை பெய்யாவிடத்து அதனுல் வாழாதார்போல இறத்தலே நமக்கு உள்ள தென்பதாம். தலையளி - போன்பு ; அஃதாவது முகமலர்ந்தினியகூறல்.

ஆல் - அசை.

(க - து.) தலைமகள் கணவராருள்பெற்ற மகளிரே வாழ்தற் குரியாரவரென்றுள் என்பது.

2. The bestowal of love by the beloved on those they love, is like heaven showering rain on those who live by it.



## ரு. வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
## வாழுந மென்னுஞ் செருக்கு

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) தாம் விழையுங் கணவான் விழையப்படு மகளிர்க்கு ஏற்புடைத்து; காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து கடிதின் வருவர், வந்தால் நாமின்புற்று வாழ்துமென்றிருக்குந் தருக்கு, ஏ().

நாம் அவரான் வீழப்படாமையின், நமக்கமைவது இறந்துபாடென் பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) வீழுநர் - (தாம்) விரும்புங்கணவ ரால், வீழப்படுவார்க்கு - விரும்பப்படுகின்ற மகளிர்க்கு, (காதலர் பிரிந்தா ராயினும் நம்மை நினைந்து கடிதின் வருவார், வந்தால் நாம் இன்புற்று), வாழுநமென்னும் - வாழ்வோமென்றிருக்கும், செருக்கு-தருக்கு, அமை யும் - ஏற்புடையதாம், (எ - று).

நாம் அவரால் விரும்பப்படாமையால், நமக்குப்பொருந்துவது இறந்து படுதலென்பதாம். இறந்துபடுதல்-சாதல். தருக்கு-இறுமாப்பு.

(க - து.) தலைமகள் தாம் விரும்புங் கணவரால் விரும்பப்படு மகளிர்க்கு அவர் பிரிந்தவிடத்தும் நாம் இன்புற்று வாழ்வோ மென்னுஞ்செருக்கு உண்டாமென்றுளென்பது.

3. The boast that says "we shall live to enjoy" belongs to those only who are loved by their beloved.

ச. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின்.

[காதலரை யியற்பழித்தலையஞ்சி அவாருளின்மை மறைத்த நீ கடவுட் கற்பினையாகலிற் கற்புடை மகளிரால் நன்குமதிக்கப்படுதி யென்ற தோழிக்குச் சொல்லியது.]



பரி:—(இ-ள்.) கற்புடை மகளிரால் நன்கு மதிக்கப்படுவோரும் தாம் விரும்புங் கணவரான் விரும்பப்படாராயிற் றீவினையாட்டியர், (சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. * கெழீஇயின்மை—நல்வினை யின்மை ; அஃது † அருத்தாபத்தியாற் றீவினை யுடைமையாயிற்று. தீவினை யுடையேற்கு ‡ அங்ஙன்கு மதிப்பாற் பயனில்லை யென்பதாம்.

தெளி:—[காதலரை இயற்பழித்தலுக்கு அஞ்சி அவரது அருளில்லாமையை மறைத்த நீ தெய்வத்தன்மை பொருந்திய கற்புடையை யாகலால், கற்புடைய மகளிரால் நன்கு மதிக்கப்படுவாயென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ-ள்.) வீழப்படுவார்-(கற்புடையமகளிரால்) நன்கு மதிக்கப்படுவாரும், தாம் வீழ்வார்-தாம் விரும்புங் கணவரால், வீழப்படாஅ ரெனின்-விரும்பப்படாராயின்,

கெழீஇயிலர்-தீவினையுடையவராவர்.

வீழப்படவொரும் என்ற உயர்வு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. கெழீஇயின்மை - நல்வினை யில்லாமை; அந்நல்வினை யில்லாமை அருத்தாபத்தியால் தீவினை யுடைமையாயிற்று. தீவினையுடை யேனுக்கு அந் நன்கு மதிப்பால் பயனில்லை யென்பதாம்.

(க-து.) தலைமகள் தோழியை நோக்கித் தாம் விரும்பும்

கணவரால் விரும்பப்படாத மகளிர்க்கு யாதொரு சிறப்புமில்லை என்றுளென்பது.

4. Even those who are esteemed (by virtuous women) will luckless prove, if they be not loved by their beloved.

ரு. நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை.

[அவர்மேற் காதலுடைமையின், அவர் கருத்தறிந் தாற்றினு
மென்ற தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நம்மாற் காதல்செய்யப்பட்டவர் நமக்கென்ன வின்பத்தைச் செய்வர்; ¶ அவ்வாறே தாமும் நங்கட்காதல் செய்யா வழி, (எ - று).

---

* கெழீஇயின்மை - பொருந்துதலில்லாமை; கெழுமுதல் - பொருந் துதல், இன்மை - இல்லாமை. கெழீஇ என்பது கெழுமு என்னும் முத னிலை திரிந்த தொழிற்பெயர்; அஃதிங்கு நல்வினையை யுணர்த்தி நின்றது.

† இங்ஙன மன்றுயின் இதுகூடாதென்றுணர்வது அருத்தாபத்தியாம். நல்வினையின்றுயின் தீவினையின்றுதல் கூடாதென்பது இக்கருத்தாபத்தி

யாம். நல்வினையின்மை சம்பவித்தலால் தீவினையுடைமை பெறப்பட்டது.

‡ அந்தன்கு மதிப்பால் - கற்புடையமகளிர் மேம்பாடுசெய்து பேசுதலால். ¶ அவ்வாறே - நாம் காதல் செய்தபடியே.

## கற்பியல்—டு - வது

## தனிப்படர் மிகுதி. 1271

எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது.

அக்காதலுடைமையால் நாம் பெற்றது துன்பமே யென்பதாம்.

தெளி:—[அவர் மேல் காதலுடைமையால், அவர் கருத்தறிந்து பொறுத்தாயென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) நாங் காதல்கொண்டார் - நம்மால் காதல் செய்யப்பட்டவர், நமக்கு—,எவன் - என்ன வின்பத்தை, செய்ப - செய்வார், (அவ்வாறே), தாங்காதல் கொள் ளாக்கடை - தாமும் (நம்மிடத்துக்) காதல் செய்யாத விடத்து, (எ - று).

தாமுமென்ற எதிரது தழுவிய வெச்ச வும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கு நின்றது. அக்காதலுடைமையால் நாம்பெற்றது துன்பமேயென்ப தாம். காதல் - ஆசை. ஓ - அசை.

(க - து.) தலைமகள் தோழியைநோக்கி நம்மிடத்துக் காதல் செய்யாத தலைவர் நமக்கென்ன இன்பத்தைச் செய்யப்போகின்றா ரென்றாளென்பது.

5. What will he who is beloved by me, do to me if I am not beloved by him.

கூ. ஒருதலையா னின்னுது காமங்காப் போல
இருதலை யானு மினிது.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) மகளிர் ஆடவரென்னு மிருதலையினும் வேட்கை ஒருதலைக்கண்ணே யாயின் அஃதின்னாது ; காவினது பாரம்போல இருதலைக்கண்ணுமொப்பின், அஃதினிது, (எ - று).

† மூன்றனுருபுகள் எழன்பொருண்மைக்கண் வந்தன: ‡ கா—ஆகு பெயர். என்மாட்டுண்டாய வேட்கை அவர்மாட்டு முண்டாயின், யானிவ் வாறு தன்பமுழத்தல் கூடுமோ வென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) (மகளிர் ஆடவர் என்னும் இரண் டிடத்திலும்) காமம் - ஆசையானது, ஒருதலையான் - ஓரிடத்திலே, (உண் டாயின்), இன்னாது - (அவ்வாசை) துன்பஞ்செய்வதாம், காப்போல - காவடியினது பாரம்போல, இருதலையானும் - இரண்டிடத்திலும், (ஒத் திருக்குமாயின்), (அவ்வாசை), இனிது - இன்பஞ்செய்வதாம், (எ - று).

---

† ஒருதலையான் இருதலையான் என்பவற்றிலுள்ள ஆன் என்னும் மூன்றனுருபுகள் தமக்குரிய பொருளைவிட்டு எழனுருபி னிடப்பொருளில் வந்தன. இவ்வாறு வருதல் உருபுமயக்கமெனப்படும்.

‡ கா (காவடி) என்னு மிடப்பெயர் அதன்கணுள்ள பாரத்தினை யுணர்த்துதலால், இடவாகுபெயராம்.



ஆனுருபுகள் கண்ணுருபின் பொருளில் வந்தன. கா - இடவாகு பெயர். என்னிடத்து உண்டாகிய ஆசை அவரிடத்தும் உண்டாயின்,

கான் இப்படி துன்பமனுபவித்தல் கூடுமோ வென்பதாம்.

(க - து.) தலைமகள் மகளிர் ஆடவரென்னு மிருவரிடத்தும் காமம் காவடியின் பாரம்போல ஒத்திருக்குமாயின், இனிதாம் என்றாளென்பது.

6. Love, like the weight of the *kavadi*, pains if it lies in one end only, but pleases if it is balanced on both sides.

எ. பருவரலும் பைதலுங் காணுங்கொல் காம
ரொருவர்க ணின்றொழுகு வான்.

[இதுவுமது.]

பரி:—(இ ள்.) காமநுகர்தற்குரிய விருவரிடத்தும் ஒப்பநிற்றலொழி நீத்து ஒருவரிடத்தே நின்று பொருகின்ற காமக்கடவுள் † அவ்விடத்துப் பசப்பாகிய பருவரலும் படர்மிகுதியும் அறியாங்கொலோ, (எ - று).

† விழைவும் வெறுப்புமின்றி எல்லார்கண்ணு நிகழ்த்தனவறிதற்குரிய கடவுளும் என்கண் வேறுபட்டான்; இனி யானுய்யுமாறென்னை யென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) (காமத்தை யனுபவித்தற்குரியஇரு வரிடத்தும் சமமாக நிற்றலொழிந்து) ஒருவர்கணின்று - ஒருவரிடத்தே நின்று, ஒழுகுவான் - போர்செய்கின்ற, காமன் - காமக்கடவுளென் னும் மன்மதன், (அவ்விடத்தில் பசப்பாலாகிய), பருவாலும் - வருத்தத் தையும், பைதலும் - துன்பமிகுதியையும், காணன்கொல் - அறியானே?

விருப்பும் வெறுப்புமில்லாமல் எல்லாரிடத்தும் நிகழ்ந்தனவற்றை யறிதற்குரிய (காமக்) கடவுளும் என்னிடத்து வேறுபட்டான்; இனி யான் பிழைக்கும்வித மெப்படி யென்பதாம். ஒழுகுவானென்பது பெயரெச்சப் பொருளில் வந்தது.

(க - து.) தலைமகள் காமமேவதனையைப் பொறுத்துக்கொள்ள முடியாது, காமக்கடவுள் காதலரிடத்துப் பருவாலையும் பைதலை யும் அறியான் போலுமென்றவனை இழித்துக் கூறினளென்பது.

---

† அவ்விடத்து - காதலருள்ள விடத்தில்.

‡ "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்று கடவுள் வாழ்த்தில் கூறியிருப்பது மறிக.

கற்பியல்—டு - வது தனிப்படர் மிகுதி.

**1273**

7. Would not Kama who abides and

contends in one party (only) witness the pain and wasting grief (in that party).

அ. வீழ்வாரி னின்சொற் பெருஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணை ரில்.

[தலைமகன் றூதுவராக்காணுது சொல்லியது.]

**பரி:—(இ - ள்.) தம்மால் விரும்பப்படுங்**
**காதலரீதிறத்துநின்றும்**
**ஓரின்சொல்லளவும் பெறுதே பிரிவாற்றி உயிர்வாழ்கின்ற மகளிர்போல**
**வன்கண்மையுடையார் இவ்வுலகத்தில்லை, (எ - று).**

காதலர் திறத்துச்சொல் யாதானும் எனக்கினிதென்னுங் கருத்தால் 'இன்சொல்' என்றாள். இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. யான் * வன்கண்ணேனாகலின், † அதுவும் பெறுது உயிர்வாழாநின்றே னென்பதாம்.

**தெளி:—**[தலைமகனது தூதுவராக்காணுமல் தலைமகள் சொல்லியது.]

(இ - ள்.) வீழ்வாரின் - (தம்மால்) விரும்பப்படுங் காதலரிடத்திருந்து, இன்சொல் - ஓரின்சொல்லளவும், பெறுஅது - பெறுமலே, வாழ்வாரின் - (பிரிவினைப்பொறுத்து) உயிர்வாழ்கின்ற மகளிர்போல, வன்கணர்-தையரிய

முடையவர், உலகத்து - இவ்வுலகத்தில், இல் - இல்லை, (எ - று).

காதலரிடத்திருந்துவருஞ் சொல் யாதாயினும் எனக்கு இனிதாமென்னுங் கருத்தால் 'இன்சொல்' என்றாள். இன்சொல்லும் என்ற இழிவு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. நான் வன்கண்ணேனைகலால், அதுவும் பெறுமல் உயிர்வாழ்கின்றே னென்பதாம்.

(க் - து.) தலைமகள் தந்தலைவரிடத்திருந்து ஓரின்சொல்லளவும் பெறுதுஅவரது பிரிவினைப் பொறுத்து வாழுமகளிரேகொடியவ ரென்றாளென்பது.

8. There is no one in the world braver than they who can live out their life without receiving even a kind word from their lover's (lips).

கூ. நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) என்னுல் நச்சப்பட்ட காதலர் என்மாட் டன்பிலரேயாயினும் அவர் திறத்து யாதானு மோரிசொல்லும் என்செவிக் கினியதாம், (எ - று).

* வன்கண்ணேனைகலின் - கொடுமையுடையேனைகலின். † அதுவும்-ஓரின்சொல்லளவும். ‡ கினியவாம் என்றும் பாடமுண்டு.

இழிவுசிறப்பும்மை, அவர் வாலனென்னுஞ் சொல்லாயினும் அமையு மென்பதுபட நின்றது. அதுவும் பெற்றிலேனென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) நசைஇயார் - (என்னுல்) விரும் பப்பட்டகாதலர், நல்காரொனினும் - (என்னிடத்து) அன்பில்லாதவரே யாஞலும், அவர்மாட்டு - அவர்திறத்து, இசையும் - யாதானுமோர் சொல் லும், செவிக்கு - என்காதுக்கு, இனிய(து)-இன்பஞ்செய்வதாம், (எ-று).

நல்காரொனினும் என்ற இழிவு சிறப்பும்மை, அவர் (காதலர்) வாரா ரென்னுஞ் சொல்லாயினும் (என்செவிக்கு) இனிதா யமையுமென்பது தோன்ற நின்றது. அச்சொல்லும் பெற்றிலேனென்பதாம்.

(க - து) தலைமகள் காதலர்

என்மேலன்பிலராயினும் அவரி டத்திருந்து வரும் மென்றாளென்பது.

யாதாயினுமொருசொல்லும் எனக்கினிதா.

9. Though my beloved accords no grace on me, still any of his words is sweet to my ears.

ய. உருஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செருஅய் வாழிய நெஞ்சு.

[தலைமகன் றூதுவரப்பெறுது தான் றூதுவிடக்கருதியாள் நெஞ்சொடு சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நின்னேறேதார்க்கு நின்னுறுநோயை யுரைக்கலுற்ற நெஞ்சே! நீயாற்றயாயினும் அரிதாய * அதனையொழிந்து, நினக்குத் துயரஞ் செய்கின்ற கடலைத் தூர்க்க முயல்வாயாக, † அஃதெளிது.

உரைக்கலுற்றது அளவிறந்தனோ யாகலானும் ‡ கேட்பார் உறவிலராகலானும் ¶ அது முடிவதொன்றன்று; முடிந்தாலும் பயனில்லையென்பது கருதாது முயலாநின்றமையென்னும் | குறிப்பான் 'வாழிய' என்றான்.

தெளி:—[தலைமகனது தூதுவரப்பெறாமல் தான் தூதுவிட நினைத்த தலைமகள் நெஞ்சோடு சொல்லியது.] (இ - ள்.) உரு அர்க்கு - (உன்னோடு) உறுதவர்க்கு, உறுநோய் - (உனது) மிகுந்தநோயை, உரைப்பாய் - சொல்லலுற்ற, நெஞ்சு - நெஞ்சே, (நீ பொறுயாயினும் அரிதாகிய அதனையொழிந்து), கடலை - (உனக்குத் துயரஞ்செய்கின்ற) கடலை, செரு அய் - தூர்க்க முயற்சிசெய்வாயாக, (அஃது எளிது), (எ - று).

---

* அதனை - உன்னுடன் பொருந்தாதவர்க்கு உனது மிகுந்த காமநோயைச் சொல்லத் தொடங்கியதை.

† அஃது - கடலைத் தூர்த்தல். ‡ கேட்பாரென்றது தலைவரை.

¶ அது - உரைக்கலுற்றது. | குறிப்பான் - இகழ்ச்சிக் குறிப்பால்.

(தலைமகள் நெஞ்சே ! நீ உன்னோடு பொருந்தாதார்க்கு)

சொல்லலுற்

றது அளவிறந்தனோ யாகலாலும் கேட்பார் உறவிலராகலாலும் அது முடி வதொன்றன்றும்; முடிந்தாலும் பயன் இல்லை யென்பது கருதாமல் முயல் கின்றாய் என்னுங் குறிப்பால் 'வாழிய' என்றாள். உரைப்பாயென்பது பெயரெச்சப்பொருளில் வந்தது.

(க - து.) தலைமகள் உன்னோடு கூடாத தலைவர்க்கு உனது நோயைச்சொல்லத்தொடங்கிய நெஞ்சே ! நீ அதனை யொழித்து உனக்குக் காமநோயை மிகச்செய்யும் கடலைத்தூர்க்க முயல்வா யாக என்றாளென்பது.

10. Farewell O my mind ! would you who relate your great grief to strangers, try to fill up your own sea of (grief).

## 6-வது அதிகாரம்.

நினைந்தவர் புலம்பல்:—Sad memories.

பரி:—அஃதாவது முன்கூடிய ஒரின்றையின்பத்தினை நினைந்து தலை மகடனிமை யெய்தலும், * பாசறைக்கட் டலைமகன் றனிமையெய்தலு மாம். இவ்வாறு இருவர்க்கும் பொதுவாதல்பற்றிப் பன்மைப்பாலாற் கூறப்பட்டது. † இது படர்மிகுதி தன்கண்ணதாகநினைந்த தலைமகட்கு முரித்தாகலின், அவ்வியைபுபற்றித் தனிப்படர் மிகுதியின்பின் வைக்கப் பட்டது.

தேவி:—அஃதாவது முன்கூடிய காலத்தின்பத்தை நினைந்து தலை மகள் தனிமை யடைதலும், பாசறையிடத்துத் தலைமகன் தனிமையடை தலுமாம். இவ்வாறு தனிமையடைதல் தலைமகன் தலைமகளென்னு மிரு வர்க்கும் பொதுவாதல் பற்றி 'நினைந்தவர்' என்று பலர்பாலால் சொல்லப் பட்டது. இது படர்மிகுதி தன்னிடத்ததாக நினைந்த தலைமகளுக்கும் உரியதாகலால், அச்சம்பந்தம்பற்றித் தனிப்படர்மிகுதியின்பின் வைக்கப் பட்டது. படர்மிகுதி - பெருந்துன்பம்.

க. உள்ளினுங் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது.

---

* பாசறை - பகைமேற் சென்றோருறைவிடம். பாசறைக்கண் தலை மகன் தனிமை யெய்தல் - துணைவயிற் பிரிவாம்; அஃதாவது நண்பாகிய வேந்தனுக்குப் பகைவேந்தர் இடையூறுற்றவிடத்து அவ்விடையூறு தீர்த்தற் பொருட்டுத் தலைமகன் துணையாகப் பிரிதல்.

† இது - நினைந்தவர் புலம்பல்.

[தூதாய்ச்சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) முன்கூடிய ஓன்றையின்பத்தினைப் பிரிந்துழி நினைந்தாலும் அதுபோழது பெற்றற்போல நீங்காத மிக்க மகிழ்ச்சியைத் தருதலால், உண்டுழியல்லது மகிழ்ச்சி செய்யாத கள்ளினுங் காமம் இன்பம் பயத்தலுடைத்து, (எ - று).

தன்றனிமையுந் தலைமகளை மறவாமையுங் கூறியவாறு.

தெளி:—[தூதாய்ச் சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.) (இ - ள்.) (முன்கூடிய காலத்தின்பத்தை) உள்ளினும் - (பிரிந்த விடத்து) நினைந்தாலும், (அப்பொழுது பெற்றுற்போன்று), தீராப் பெருமகிழ் செய்தலால்-நீங்காத பெருமகிழ்ச்சியைத் தருதலால், கள்ளினும் - (உண்ட போதல்லது மகிழ்ச்சி செய்யாத) கள்ளைப்பார்க்கிலும், காமம்-, இனிது - இன்பந்தருதலுடையது, (எ - று).

தலைமகன் தனது தனிமையையும், தலைமகளை சொல்லியவாறும்.

மறவாமையையும்

(க-து.) தூதாய்ச்சென்ற பாங்கனுக்குத் தலைமகன் மகிழ்ச்சி செய்வதில் கள்ளினும் காமம் மேன்மையுடையதாமென்றுனென்பது.

1. Sexual love is sweeter than liquor,

as the thought

of it creats an unfailing rapturous joy.

உ.

எனைத்தோன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதோன் றில்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) தம்மால் விரும்பப்படுவாரைப் பிரிவின்க ணினைந் தால் அந்நினைந்தவர்க்கு அப்பிரிவான் வருவதோர் துன்பமில்லையாம்; அதனற் காமம் எத்துணையேனு மினிதோன்றேகாண், (எ-று).

புணர்ந்துழியும் பிரிந்துழியும் ஒப்ப வினிதென்பான் எனைத்துமினிது என்றான். சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தானுற்றியவகை கூறிய வாறு.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) தாம் வீழ்வார் - தம்மால் விரும்பப் படுவாரை, நினைப்ப - (பிரிவினிடத்து) நினைந்தால், (அந்நினைந்தவர்க்கு), வருவதொன்று - (அப்பிரிவால்) வருவதோர் துன்பம், இல்—இல்லையாம், (அதனால்), காமம், எனைத்தும் - எவ்வளவாயினும், ஒன்றினிதேகாண் - இன்பந்தருவ தொன்றே காண், (எ - று).

(காமம்) புணர்ந்த விடத்தும் பிரிந்த விடத்தும் சமமாக இனிமை யைத்தருவதென்பான் எனைத்து மினிது என்றான். எனைத்தும் என்ற

## கற்பியல்—கூ - வது நினைந்தவர் புலம்பல்.

**1277**

வுயர்வு சிறப்புமம்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. தலைமகன்

தான் பொறுத்திருந்த விதத்தைச் சொல்லிய வாறும்.

(க-து.) தலைமகன் காமம் நினைக்குந் தோறும் இன்பத்தைச்

செய்தலால், அதனினும் சிறந்தது பிறிதொன்றில்லையென்றானென் பது.

2. Even to think on one's own lover knows no grief ; sexual love in any degree is always sweet.

கூ. நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல் சினைப்பது போன்று கெடும்.

[தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) எனக்குத் தும்மல் எழுவதுபோன்று தோன்றிக் கெடாநின்றது ; அதனற் காதலர் என்னை நினைப்பாரிபோன்று நினையாராகல் வேண்டும், (எ - று).

சினைத்தல் - அரும்புதல். சேய்மைக் கண்ணாராய கேளிர் நினைந்துழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்மலுண்டு மென்னு முலகியல்பற்றித் தலைமகனெடுத்துக்கொண்ட வினை முடிவதுபோன்று முடியாமை யுணர்ந்தாள் சொல்லியதாயிற்று.

தெளி:—[தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது.] (இ - ள்.) (எனக்கு) தும்மல்-, சினைப்பதுபோன்று - எழுவதுபோன்று, (தோன்றி), கெடும் - கெடுகின்றது, (அதனால்), நினைப்பவர்போன்று - (காதலர் என்னை) நினைப்பார் போன்று, நினையார்கொல்- நினையாராகல் வேண்டும், (எ - று).

சினைத்தல் - அரும்புதல். தூரதேயத்துள்ளாராகிய உறவினர் நினைந்த விடத்து அந்நினைக்கப்பட்டவர்க்குத் தும்மல் தோன்றுமென்னும் உலக வழக்குப்பற்றித் தலைமகன் எடுத்துக்கொண்ட தொழில் முடிவதுபோன்று முடியாமையை யறிந்ததலைமகள் சொல்லியதாயிற்று.

(க-து.) தும்மல் தோன்றியவிடத்துத் தலைமகள் தோழியை நோக்கிக் காதலர் என்னை நினைக்கின்றரென்று கூறினளென்பது.

3. A fit of sneezing threatens, but passes away; therefore, my beloved seemes to think of me, but his fancies stray.

ச. யாழ முளேங்கோ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்

தோஒ வுளரே யவர்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) எம்முடைய நெஞ்சத்து அவர் எப்பொழுது முளரோயா யிராநிற்றீர், அவ்வகையே அவருடைய நெஞ்சத்தும் யாமுளமாதுமோ, ஆகேமோ? (எ-று).

ஓகார விடைச்சொல் ஈண்டிடைவிடாமை யுணர்த்தி நின்றது. உள

மாயும் வினை முடியாமையின் வாராராயினுரோ, அது முடிந்தும் இலமாகலின் வாராராயினுரோவென்பது கருத்து.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) எம்நெஞ்சத்து-எமது நெஞ்சத்தில், அவர்-, ஒஒவுளரே - (எப்பொழுதும்) உள்ளவராயேயாயிருக்கின்றார், (அப்படியே), அவர் நெஞ்சத்து-அவரது நெஞ்சிலும், யாமும்—, உளேங்கொல்-உளமாகின்றேமோ, (ஆகேமோ), (எ - று).

ஓகார விடைச்சொல் இங்கு இடைவிடாமையை உணர்த்தி நின்றது. (காதலர்) யாம் இருந்தும் தொழில் முடியாமையால் வாராயினுரோ, அத்தொழில் முடிந்தும் யாம் இல்லாமையால் வராயினுரோ வென்பது கருத்து. இடைவிடாமை-நடுவே நீங்காமை.

(க - து.) தலைமகள் எமது நெஞ்சத்திற் காதலரெப்போதுமிருப்பதுபோல அவர் நெஞ்சத்தும் யாமிருக்கின்றேமோ என்றவாறு.

4. He continues to abide in my heart; do I likewise abide in his?

நே. தங்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணுர்கோ
லெங்நெஞ்சத் தோவா வரல்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) தம்முடைய நெஞ்சின்கண்ணே யாஞ்செல்லாமல் எம்மைக் காவல்கொண்ட காதலர் தாமெம்முடைய நெஞ்சின்கண் ஒழியாது வருதலே நாணுர்கொல்லோ, (எ - று).

ஒருவரைத் தங்கண் வருதற்கு ஒருகாலு முடம்படாது தாமவர்கட் பல காலுஞ் சேறல் நாணுடையார் செயலன்மையின் 'நாணுர்கொல்' என்றுள்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) தங்நெஞ்சத்து - தமது நெஞ்சினிடத்தே, (யாம் செல்லாமல்), எம்மைக் கடிகொண்டார் - எம்மைச் காவல் கொண்டகாதலர், (தாம்), எங்நெஞ்சத்து - எமது நெஞ்சினிடத்து, ஓவா வரல்-ஒழியாமல் வருதலுக்கு, நாணுர்கொல் - நாணுரோ, (எ - று).

ஒருவரைத் தம்மிடத்து வருதலுக்கு ஒருகாலும் உடம்படாமல் தாம் அவரிடத்துப் பலகாலுஞ் செல்லுதல் நாணுடையார் செயலல்லாமையால் 'நாணுர்கொல்' என்றுள்.

## கற்பியல்—சு - வது நினைந்தவர்புலம்பல்.

**1279**

(க - து.) தலைமகள் காதலாது நெஞ்சினிடத்து யாஞ் செல்லாதிருக்க, எம்முடைய நெஞ்சினிடத்து அவர் ஒழியாது வருதல் தகாதென்றுளென்பது.

5. He who has imprisoned me in his heart, has he no
shame to ceaselessly intrude my heart?

சு. மற்றியா
னென்னுளேன் மன்னே வவரோடியா
னுற்றநா ளுள்ள வுளேன்.

[அவரொடு புணர்ந்தநான்றையின்பத்தை நினைந்து † இறந்துபா
டெய்தா நின்றாய்; அதுமறத்தல்வேண்டு மென்றாட்குச்
சொல்லியது.]

பரி:—(இ - ள்.) யான் அவரோடு புணர்ந்த ஞான்றையின்பத்தை நினைதலான் இத்துன்ப வெள்ளத்தும் உயிர்வாழ்கின்றேன்; ‡ அதுவின்றியின் யான் ¶ வேறெவற்றல் உயிர்வாழ்வேன்? (எ - று).

நாள் - ஆகுபெயர். உயிர்வாழ்தற்கு வேறுமுள; அவை பெற்றிலே னென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அவை அவன் றூதுவருதல், தன் றூதுசேறன் () முதலாயின. அவையாவுமின் மையின், இதுவல்லது எனக்குப் பற்றுக்கோடில்லை யென்பது கருத்து.

தெளி:—(அவரோடு கூடிய காலத்தின்பத்தை நினைந்து இறந்துபடு தலை அடைகின்றாய்; அதனை மறத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலை மகள் சொல்லியது.) (இ - ன்.) யான் அவரோடு - யான் அத்தலைவருடன், உற்றநாள்—கூடியகாலத் தின்பத்தை, உள்ள - நினைதலால், உளேன்-

(இத்தன்ப வெள்ளத்திலும்) உயிர்வாழ்கின்றேன். மற்று - அது இல்லையாயின், யானென்னுளேன் - யான் வேறெவற்றுல் உயிர்வாழ்வேன், ()

நாள் என்னும் காலப்பெயர் அந்நாளிலுண்டாய இன்பத்தினை யுணர்த்துதலால் காலவாகு பெயராம். (அவரோடு யான் உற்றநாளின்பத்தை யுள்ளுதலே யல்லாமல்) உயிர்வாழ்தற்கு வேறுமுண்டு; அவை பெற்றிலேனென்பது தோன்ற நின்றமையால், மன் ஒழியிசைப் பொருளில் வந்தது. அவை அவனது தூதுவருதல், தனது தூதுசெல்லுதல் முதலாயின. அவை யாவும் இல்லாமையால், இன்னினைப்பல்லாமல் எனக்குப் பற்றுக்கோடு இல்லையென்பது கருத்து. ஓ-அசை. பற்றுக்கோடு - ஆதாரம்.

---

† இறந்துபா டெய்தாநின்றுய் - பெருந்துன்பத்தை யடைகின்றுய்.

‡ அது - (அவரோடு புணர்ந்தநூன்றை யின்பத்தை) நினைத்தல்.

¶ வேறெத்தால் என்றும் பாடமுண்டு.

(•) முதலாயின என்றமையின், காதலர்வருந் தேரொலி கேட்டல், காதலர் வருதல் முதலியவற்றையுங் கொள்க.



(க - து.) தலைமகள் தோழிக்கு யான் தலைவரோடு புணர்ந்த காலத்தின்பத்தை நினைதலால் உயிர்வாழ்கின்றேன்; அஃதில் லாவிட்டால், வேறெவற்று லுயிர்வாழ்வேனென்று சொன்பது.

6. I live by pondering over my former days of bliss enjoyed with him; if it were not so,

how could I live?

எ. மறப்பி னெவனுவன் மற்கோன் மறப்பறியே
னுள்ளினு முள்ளஞ் சுடும்.

[இதுவுமது.]

பரி:—(இ-ள்.) † அவ்வின்பத்தை மறத்தலறியேனுயி
இன்றுள்ளா நிற்கவும், பிரிவு என்னுள்ளத்தைச்
சுடாநின்றது ; அங்ஙனம் பிரிவாற்
றுத யான் மறந்தால் இறந்து படாது உளேனுவது () எவற்றுல்,(எ-று).

: செயப்படுபொருள் ‡ அதிகாரத்தான் வந்தது. மன் ஈண்டும் ¶ அதுபடின்று ஒழியிசையாயிற்று. கொல் - அசைநிலை.

• தெளி:—(இதுவுமது.) (இ - ள்.) மறப்பறியேன்-(அவ்வின்பத்தை) மறத்தலறியேனுய், உள்ளினும் - (இன்று) நினையா நிற்கவும் (பிரிவா னது), உள்ளம் - (என்) உள்ளத்தை, சுடும் - சுடுகின்றது, (அவ்வாறு பிரி வினைப் பொருத நான்), மறப்பின் - மறந்தால், எவனுவன் - சாவாது உளே னுவது எவற்றுல், (எ - று).

அவ்வின்பத்தை யென்னுஞ் செயப்படுபொருள் அதிகாரத்தால் வந் தது. மன்னென்பது இங்கும் மேற்குறனுரையிற் கூறியது தோன்ற நின்று ஒழியிசைப் பொருளதாயிற்று. கொல் - அசைநிலை.

(க - து.) தலைமகள் யான் தலைவரோடு புணர்ந்தகாலத் தின் பத்தைமறந்தால் இறவாதிருப்பது எவற்றுலாமென்று வென்பது.

7. I have never forgotten (the bliss); even to think of it burns my spirit; could I live, if I should ever forget it?

ச.

எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றே
காதலர் செய்யுஞ் சிறப்பு.

---

† அவ்வின்பத்தை - யான் காதலரோடு கூடிய காலத் தின்பத்தை.
() எத்தால் என்றும் பாடமுண்டு.
: மறக்கப் படுவது என்றும் பாடமுண்டு.
‡ நினைந்தவர் புலம்பலென்னு மிவ்வதிகாரத்தினுல்.
¶ அதுபட - உயிர்வாழ்தற்கு வேறுமுள, அவை பெற்றிலேனென் பது தோன்ற.

கற்பியல்—சூ - வது நினைந்தவர் புலம்பல்.

1281

(இத்துன்ப மறிந்துவந்து காதலர் நினைக்கின்பஞ்

செய்வ தொன்றுட்குச் சொல்லியது.)

பரி:—(இ - ள்.) தம்மை யானேத்துணையும் மிக நினைந்தாலும்

அதற்து வேதளார் ; காதலர் எனக்துச் செய்யுமின்பமாவது வளவன்றே ? (எ - று).

‡ அவ்

வெகுளாமை - அதற்குடம்பட்டு நெஞ்சின்கணிற்றல். தனக்கு அவ் வின்பத்திற் சிறந்த தின்மையின், அதனைச் ‘ சிறப்பு ’ என்றாள். ¶ காத லர் நம்மாட் டருளென்றும், செய்யுங் குணமென்றும் பாடமோதுவாரு முளர். தோழி கூறியவதனைக் குறிப்பானிகழ்ந்து கூறியவாறு.

தெளி:—[இத்துன்பத்தை அறிந்துவந்து காதலர் உனக்கு இன்பத் தைச் செய்வாரென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) எனைத்து நினைப்பினும் - (யான் தம்மை) எவ்வளவும் மிக நினைந்தாலும், காயார் - (அதற்குக்) கோபியார், காதலர் - தலைவர், செய்யுஞ் சிறப்பு - (எனக்குச்) செய்யுமின்பமாவது, அனைத்தன்றே - அவ்வளவன்றே ?

கோபியாமை-அந்நினைத்தற்கு உடன்பட்டு நெஞ்சின்கணிற்றல். தன க்கு அவ்வின்பத்திலும் சிறந்தது இல்லாமையால், அதனைச் ‘ சிறப்பு ’ என்றாள்.•தலைமகள் தோழிசொல்லிய வதனைக் குறிப்பால் இகழ்ந்துசொல் லியவாறும்.

(க - து.) தலைமகள் தோழிக்குக் காதலர் யான் எவ்வளவு நினைந்தாலும் கோபியாது, அதற்குடன்பட்டு என்னெஞ்சின்கணின்று இன்பஞ் செய்கின்றரென்றாள் என்பது.

8. However much I may think of him he excites no wrath ; is this not so much the delight my beloved bestows on me ?



கூ. விளியுமென் னின்னுயிர் வேறல்ல மென்பா
ரளியின்மை யாற்ற நினைந்து.

[தலைமகன் றூதுவரக் காணுது வருந்துகின்றாள்†வற்புறுத்தற் தோழிக்குச் சொல்லியது.]

† அதற்கு - மிகநினைத்தற்கு.

‡ அவ்வளவன்றே - வெகுளாதிருத்த லல்லவோ-

¶ காதலர் செய்யுஞ் சிறப்பு என்பதற்குப் பிரதியாகக் காதலர் நம்மாட்டருள் என்றும், காதலர் செய்யுங் குணம் என்றும் பாடங் கூறுவாருமுண்டு.

† வற்புறுத்தம் - (தூதுவரும் ; அஞ்சவேண்டாமென்று) உறுதி மொழி கூறும்.

பரி:—(இ - ள்.) முன்பெல்லாம் நாமிருவரும் வேறல்லமென்று சொல்லுவார தளியின்மையை மிகவு நினைந்து எனதினியவுயிர் † கழியா நின்றது, (எ - று).

அளியின்மை - பின்வருவாதலுமாய்ப் பிரிதலும், பிரிந்து வாராமையும், ஆண்டுநின்றுழித் தூதுவிடாமையும் ‡ முதலாயின. பிரிவாற்றல் வேண்டுமென வற்புறுத்தாட்கு என்னுயிர் கழிகின்றது பிரிவிற்கன்று, அவரன்பின்மைக்கென ¶ எதிரழிந்து கூறியவாறு.

தெளி:—[தலைமகனது தூதுவரக் காணுது வருந்துகின்ற தலைமகள் வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.] (இ - ள்.) வேறல்லமென்பார் - (முன்பெல்லாம் நாமிருவரும்) வேறல்லேமென்று சொல்லுவாரது, அளியின்மை - அருளில்லாமையை, ஆற்றநினைந்து - மிகவும் நினைந்து, என்னின்னுயிர் - எனது இனியவுயிர், விளியும் - கழிகின்றது, (எ - று).

அளியின்மை - பின்வருவாதலுமாய்ப் பிரிதலும், பிரிந்துவாராமையும், அங்கு நின்றவிடத்துத் தூதுவிடாமையும் முதலாயின. பிரிவினைப் பொறுத்தல் வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுந்தோழிக்கு என்னுயிர் கழிகின்றது பிரிவைக் குறித்தன்று, அவரது அன்பில்லாமையைக் குறித்தென்று (தலைமகள்) எதிரழிந்து சொல்லியவாறும்.

(க - து.) தலைமகள் தோழிக்குக் காதலரது அருளில்லாமை யை நினைந்து என்னுயிர் வருந்துகின்றதன்றி, அவரது பிரிவை நினைந்து வருந்த வில்லையென்று ளென்பது.

9. My dear life is wasting away by pondering too much over the ungracious deeds of him who said we were not different.

கo. விடாஅது சென்றுரைக் கண்ணினுற் காணப்
படாஅதி வாழி மதி.

[வன்புறை யெதிரழிந்தாள் காமமிக்க × கழிபடராற் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) மதியே! o என்னெஞ்சினை இடைவிடா திருந்தே விட்டுப் போயினரை யானென் கண்ணளவாவினும் எதிர்ப்படும் வகை நீ படாதொழிவையாக, (எ - று).

---

† கழியா நின்றது - வருந்துகின்றது.

‡ முதலாயின என்றமையின், தூதுவிட நினையாமை முதலிய வற்றையுங்கொள்க.

¶ எதிரழிந்து - (தோழிக்கு) எதிரே வருந்தி.

× கழிபடர் - பெருந்துன்பம்.

o என்னெஞ்சின் என்றும் பாடமுண்டு.

கண்ணளவா னெதிர்ப்படுதலாவது மதி † இருவானு நோக்கப்படுத லின் இருவர் கண்ணும் ‡ அதன்கண்ணே சேர்தல். ¶ முதலொடு சினைக் கொற்றுமை யுண்மையிற் சென்றுரைக்காண என்றும், || குறையுற்றின் ரூளாகவின் 'வாழி' என்றுங் கூறினாள். * இனிப்படாதென்பது பாடமா யின், கனவிடைக் கண்ணினுற் காணுமாறு மதி படுகின்றதில்லையென, அதனுற் றுயில்பெறுது வருந்துகின்றாள் கூற்றுக்குக. இப்பொருட்கு வாழியென்பது அசைநிலை.

தெளி:—[தோழிகூறிய வன்புறைக்கு எதிரழிந்ததலைமகள் காம்மிக்க கழிபடரால் சொல்லியது.] (இ - ள்.) மதி - சந்திரனே, விடாஅது—(என்னெஞ்சினை) இடைவிடாதிருந்தே, சென்றுரை - (விட்டுப்) போயி னுரை, (யானென்), கண்ணினுல் - கண்ணளவாலாயினும், காண - எதிர்ப் படும்வகை, படாஅதி - (நீ) மறையாதிருப்பாயாக, (எ - று).

கண்ணளவா லெதிர்ப்படுதலாவது மதி யிருவராலும் பார்க்கப்படுத லால் இருவர் கண்களும் அதனிடத்தே சேர்தல். (தலைவனென்னும்) மூத லுடன் (அவரது கண் என்னும்) உறுப்பிற்கு ஒற்றுமை யிருக்கின்றமை யால் சென்ருரைக்காண என்றும், குறையுறு கின்ருளாகலால் மதியே! நீ 'வாழி' என்றும் சொல்லினுள்.

(க - து.) தலைமகள் சந்திரனே! யான் காதலரை யுன்னிடத் துக்காண நீ மறையாதிருப்பாயாக என்ருளென்பது.

10. O Moon! may you live. Set not that my eyes may
see him who departed, ever biding with me.

†

இருவராலும் - தலைமகன் தலைமகளென்னு மிருவராலும்.

‡ அதன்கண்ணே - அச்சந்திரனிடத்தே.

¶ சந்திரனைக்காணும் தலைமகளுடு அவனது கண்ணுக்கு உறுப்புத் தற்கிழமைச் சம்பந்தமிருத்தல் பற்றிச் சென்ருரைக்காண என்று கூறி னுள். தலைமகனது கண் சம்பந்தப்பட்டுள்ள சந்திரனிடத்துத் தன்னு டைய கண் சம்பந்தப்பட்டிருத்தலையே தலைமகள் அவனைக் காண்டலாகக் கருதினுளென்க.

குறையுறுகின்ருள்-தன்னுடைய குறைகளைச் சொல்லுகின்ருள்.

* படாஅதி யென்பதற்குப் பிரதியாகப் படாது என்பது பாடமாஞல், கண்ணிஞற்காண-கனவினிடத்துக் (காதலரைக்) கண்ணிஞற் காணும்படி, மதிபடாது - சந்திரன் மறைகின்ருனில்லையென்று அச்சந்திரன் மறையாமையால் நித்திரை யடையாது வருந்துகின்றவளது சொல்லாக்குக. இவ்வர்த்தத்திற்கு வாழியென்பது அசைநிலை.

## 7-வது அதிகாரம்.

## * கனவுநிலையுரைத்தல்:—Relating the dreams.

பரி:—அஃதாவது தலைமகள் தான் கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல். அக்கனவு † நனவின்க ணினவு மிதுதியாற் கண்டதாகலின், ‡ இது நினைந்தவர் புலம்பலின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது தலைமகள் தான் கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல். அக்கனவு நனவினிடத்துள்ள நினைவின் மிகுதியால் கண்டதாகலால், இது நினைந்தவர் புலம்பலின்பின் வைக்கப் பட்டது.

க. காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து.

[தலைமகன் தூது வரக்கண்டாள் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) யான் வருந்துகின்ற தறிந்து அது தீரக் காதலர் விடுத்த தூதினைக்கொண்டு என்மாட்டுவந்த கனவினுக்கு யான் விருந்தாக யாதனைச் செய்வேன், (எ - று).

விருந்தென்றது விருந்திற்குச் செய்யு முபசாரத்தினை. ¶ அது | கனவிற்கொன்று காணுமையின் 'யாதுசெய்வேன்' என்றான்.

தெளி:—[தலைமகன் தூதுவரக்கண்ட தலைமகள் சொல்லியது.) (இ - ள்.) (யான் வருந்துகின்றதை அறிந்து அதுதீர) காதலர் - தலைவர், (விடுத்த), தூதொடு - தூதினைக்கொண்டு, வந்த - (என்னிடத்து) வந்த,

* கனவு - சொப்பனம். எந்த அவஸ்தையில் (காலத்தில்) இந்திரியங்களின் சகாயமில்லாமல் ஹிதா என்னும் நாடியில் தங்கியிருக்கின்ற ஜாக்கிரத்தின் (நனவின்) சம்ஸ்காரத்தால் (வாசனையால்) விஷயங்கள் அறியப்படுகின்றனவோ அது சொப்பனாவஸ்தை யெனப்படும். சொப்பனாவஸ்தையில் சிவனுக்கு ஸ்தானம் - கண்டம், சக்தி - ஞானம், மத்திமை - வாக்கு, போகம் - சூட்சுமம், குணம் - ராசதம், பெயர் - தைஜசனும்.

† சொப்பன சுழுத்தி யவஸ்தைகளுக்கு வேறாயும் இந்திரியங்களாலுண்டாகும் ஞானத்திற்கும் அதன் சம்ஸ்காரத்திற்கும் ஆதாரமாயுமிருக்கும் காலம் ஜாக்கிராவஸ்தை (நனவு) எனப்படும். இவ்வவஸ்தையில் சிவனுக்கு நேத்திரம் - ஸ்தானம், கிரியை - சக்தி, வைகரி - வாக்கு, போகம் - ஸ்தூலம், குணம் - சத்துவம், பெயர் - விசுவனும்.

‡ இது - கனவுநிலையுரைத்தல்.

¶ அது - உபசாரம்.

## கற்பியல்—எ - வது கனவுநிலையுரைத்தல்.

**1285** கனவினுக்கு - சொப்பனத்திற்கு, விருந்து - (யான்) விருந்தாக, யாதுசெய் வேன் - எதனைச் செய்வேன், (எ - று).

கொல் - அசைநிலை. விருந்தென்றது விருந்தினர்க்குச் செய்யும் உப சாரத்தை. அது கனவிற்கு ஒன்று காணுமையால் 'யாதுசெய்வேன்' என்றாள்.

(க - து.) காதலரது தூதுவரக் கனவிற்கண்ட தலைமகள் அக்கனவை வியந்து கூறினளென்பது.

1. What feast shall I prepare for the dream which brought to me my lover's message.

உ. கயலுண்கண் ணானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.

(தூதுவிடக் கருதியாள் சொல்லியது.)

பரி:—(இ - ள்.) துஞ்சாது வருந்துகின்ற என் கயல்போலு நிண் கண்கள் * யானிரந்தாற் றுஞ்சுமாயின் கனவிடைக் காதலரைக் காண் பேன், கண்டால் அவர்க்கியா னுற்றியுளேனய தன்மையை யானே விரி யச்சொல்வேன், (எ - று).

'கயலுண்கண்' என்றுள்; கழிந்த † நலத்திற்கிரங்கி. உயல் - காம நோய்க்குத் தப்புதல். தூதர்க்குச் சொல்லாது யாமடக்குவனவும் சொல் லுவனவற்றுள்ளுஞ் சுருக்குவனவற்றின் பயப்புந் தோன்றச் சொல்வே னென்னுங் கருத்தாற் 'சாற்றுவேன்' என்றுள். இனி ‡ அவையுந் துஞ்சா; ¶ சாற்றலுங் கூடாதென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக் கண் வந்தது. () முன்னுங்கண்டாள் கூற்றுகலின், கனவுநிலை யுரைத்த லாயிற்று.

தெளி:—[தூதுவிடக் கருதிய தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) கயலுண்கண் - (தூங்காது வருந்துகின்ற எனது) கயல்போலும்மையிட்ட கண்கள், யான் இரப்ப - யான் இரந்தால், துஞ்சின் - தூங்குமாயின், (கன வினிடத்துக் காதலரைக் காண்பேன் கண்டால்), கலந்தார்க்கு - அக்காத

* யானிரந்தால் - யான் யாசித்து வேண்டினால்.

† நலத்திற்கு - அழகிற்காக.

‡ அவையும் - கண்களும்.

¶ சாற்றலும் - தலைவர்க்கு யான் பொறுத்திருக்கின்றேனுகிய தன் மையைச் சொல்லுதலும்.

() முன்னுங்கண்டாள்-முன்னுங் காதலரைக் கனவினிடத்துக் கண்ட தலைமகளது.

லர்க்கு, உயலுண்மை - (யான்) பொறுத்திருக்கின்றேனைய தன்மையை, சாற்றுவேன்—(யானே) விரியச்சொல்லுவேன், (எ - று).

'கயலுண்கண்'

நோய்க்குத் தப்புதல்.

என்றுள்; கழிந்தநலத்திற்கிரங்கி. உயல் - காம • தூதர்க்குச் சொல்லாமல் யாம் அடக்குவனவும் சொல்லுவன வற்றுள்ளும் சுருக்குவனவற்றின் விரிவும் தோன்றச்சொல்லு வேனென்னுங் கருத்தால் 'சாற்றுவேன்' என்றுள். இனி அவையுந்துஞ்சு வனவல்ல; சாற்றுவதும் கூடாதென்பதுதோன்ற நின்றமையால், மன் ஒழியிசைப்பொருளில் வந்தது. முன்னுங்கண்டவளது சொல்லாகலால், (இக்குறள்) கனவுநிலை யுரைத்தலாயிற்று.

(க - து.) தலைமகள் என்
கண்களுறங்குமாயின், கனவினிடத்
துக் காதலரைக் கண்டு அவர்க்கு யான்
பொறுத்திருக்கின்ற
விதத்தை விரித்துச் சொல்வேனென்று ளென்பது.

2. If my dark fish - like eyes will close in sleep as I
implore, I will fully relate the tale of my sufferings to my
lord.



௩ நனவினா னல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் னுயிர்

[ஆற்றாளெனக் கவன்றாட்கு ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நனவின்கண் வந்து தலையளி செய்யாதாரை
யான் * கனவின்கட் கண்ட கா ட்சியானே
என்னுயிருண்டாகா நின்றது.

† மூன்றனுருபுகள் ஏழன் பொருண்மைக்கண் வந்தன. ‡ அக்காட்சியானே யானாற்றியுளேனாகின்றேன், நீ கவலல்வேண்டாவென்பதாம்.

தெளி:—[பொறுக்கமாட்டாளென்று கவலையுற்ற தோழிக்குப் பொறுப்பேனென்பது தோன்றத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) நனவினான் - நனவினிடத்து, (வந்து), நல்காதவரை - தலையளி செய்யாத தலைவரை, கனவினான் - (யான்) கனவினிடத்து, காண்டலின் - (கண்ட) காட்சியாலே, என்னுயிர் —, உண்டு - உண்டாகாநின்றது, (எ - று).

* கனவின்கட் காண்டலானே என்றும் பாடமுண்டு.

† நனவினுன் கனவினுன் என்னும் (ஆன் என்னும்) மூன்றனுருபுகள் தமக்குரிய பொருளைவிட்டு நனவின்கண், கனவின்கண் என ஏழனுருபினிடப்பொருளில் வந்தன. இவ்வாறு வருவது உருபுமயக்கமெனப்படும்.

‡ அக்காட்சியானே-காதலரை யான் கனவினிடத்துக் கண்ட காட்சியாலே.

## கற்பியல்—எ - வது கனவுநிலையுரைத்தல்.

**1287**

மூன்றனுருபுகள் ஏழனுருபின் பொருளில் வந்தன. அக்காட்சியாலே யான் பொறுத்திருக்கின்றேனுகின்றேன், (தோழியே!) நீ கவலையுறல் வேண்டாம் என்பதாம். தலையளி - கருணை.

(க - து.) தலைமகள் தோழியை நோக்கி, யான் தலைவரைக் கனவினிடத்துக் கண்டகாட்சியாலே என்னுயிர் நீங்காதிருக்கின்றதென்றுளென்பது.

3. My lifetime passes, because in my dreams I see him who in waking hours shows no kindness.

ச. கனவி னுண்டாகுங் காம நனவி
னல்காரை நாடித் தாற்கு.
[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) நனவின்கண் வந்து தலையளி செய்யாதாரை

அவர் சென்றுழி நாடிக்கொண்டுவந்து கனவு தருதலான் அக்கனவின் கண்ணே எனக்கின்பமுண்டாகாநின்றது, (எ-று).

காமம் - * ஆகுபெயர். † நான்காவது மூன்றன் பொருண்மைக்கண் வந்தது. ‡ இயல்பான் நல்காதவரை அவர்சென்ற தேயமறிந்து சென்று கொண்டுவந்து தந்து நல்குவித்த கனவால் யாதுற்றுவ லென்பதாம்.

தெளி:—(இதுவுமது.) (இ-ள்.) நனவினன் - நனவின்கண் (வந்து),

நல்காரை - அருள்செய்யாதவரை, நாடி - (அவர் சென்றவிடத்துத்) தேடி, தாற்கு—(கொண்டுவந்து கனவு) தருதலால், கனவினன் - அக்கனவினிடத்தே, காமம் - (எனக்கு)

இன்பம், உண்டாகும்-உண்டாகின்றது, (எ - று).

காமம் - கருவியாகுபெயர். நான்கனுருபு மூன்றனுருபின் பொருளில் வந்தது. இயல்பாக அருள்செய்யாதவரை அவர் சென்ற தேயத்தை யறிந்து சென்று கொண்டுவந்து கொடுத்து அருள்செய்வித்த கனவால் யான் பொறுப்பேனென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழிக்குத் தலைவரைக் கனவினிடத்துக் காண்டலால், எனக்கு அக்கனவினிடத்து இன்பமுண்டாகின்ற தென்று ளென்பது.

---

* காமமென்னுங் கருவியின் பெயர் அதனாலுண்டாகும் இன்பத்தை யுணர்த்துதலால், கருவியாகு பெயராம்.

† தாற்கு என்னுங் குவ்வுருபு (நான்கனுருபு) தனக்குரிய பொருளை விட்டு மூன்றனுருபின் கருவிப்பொருளில் வந்தது.

‡ இயல்பாக என்றும் பாடமுண்டு.



4. I enjoy some pleasure in my dream because it searches out and makes me see him who does not favor me in my wakefulness.

ரு. கனவிற்றற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்

கண்ட பொழுதே யினிது.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) முன்னனவின்கண் அவரைக்கண்டு நுகர்ந்த வின்பந்தானு மினிதாயிற்று; அப்பொழுதே, இன்று கனவின்கட் கண்டு நுகர்ந்த வின்பமும் அக்கண்டபொழுதே யினிதாயிற்று; அதனன் எனக்

* கிரண்டுமோத்தன, (எ - று).

† இனிதென்பது முன்னுங் கூட்டப்பட்டது. ‡ கனவு—ஆகுபெயர்.

¶ முன்னும்யான்பெற்ற () திவ்வளவே; இன்னும் | அதுகொண்டாற்றுவ

லென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) நனவினன் - (முன்னே) நனவி

னிடத்து, கண்டதூஉம் - (அத்தலைவனைக்) கண்டனுபவித்த வின்பமும்,

ஆங்கே - அப்பொழுதே, இனிது - இனிதாயிற்று, கனவுந்தான் - (இன்று)

கனவினிடத்து, (கண்டனுபவித்தவின்பமும்), கண்டபொழுதே - அக்

கண்டபொழுதே, இனிது - இனிதாயிற்று, (அதனால்

எனக்கு இரண்

டும் ஒத்தன), (எ - து).*

இனிதென்பது முன்னுங் கூட்டப்பட்டது. கனவு - இடவாகுபெயர். முன்னும் யான் பெற்றது இவ்வளவே; இன்னும் அதுகொண்டு பொறுப்பேனென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழிக்குத் தலைவரை யான் முன் கனவிற்கண்டனுபவித்த இன்பமும் இப்போது கனவிற் கண்டனுபவித்த இன்பமும் எனக்கொத்திருக்கின்றன வென்றாளென்பது.

5. It was sweet when I beheld him in my waking hours; it is equally pleasant when I see him in *my dreams.

---

* இரண்டும் - காதலரை கனவின்கண் கண்டனுபவித்த இன்பமும் கனவின்கண் கண்டனுபவித்த இன்பமும்.

† இனிது என்பது கண்டதூஉம் என்பதனோடுங் கூட்டப்பட்டது.

‡ கனவு என்னும் இடப்பெயர் அங்கு அனுபவித்த இன்பத்தினை யுணர்த்துதலால், இடவாகுபெயராம்.

¶ முன்னும் - காதலர் பிரியாததன் முன்னும்.

() இவ்வளவே - இவ்வள வின்பமே.

| அதுகொண்டு - அவ்வளவின்பங் கொண்டு.

நு. நனவென வொன்றில்லை யாயிற் கனவினுற்
காதலர் நீங்கலர் மன்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) † நனவென்று சொல்லப்படுகின்ற ஒருபாவி இல்லையாயின், கனவின்கண் வந்து கூடியகாதலர் என்னைப்பிரியார்.

ஒன்றென்பது அதன் கொடுமை விளக்கி நின்றது. † அஃது இடையே புகுந்து கனவைப் போக்கி அவரைப் பிரிவித்ததென்பது படநின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கனவிற்பெற் றூற்றுகின்றமை கூறியவாறு.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) நனவெனவொன்று - நனவென்று சொல்லப்படுகின்ற ஒருபாவி, இல்லையாயின்-இல்லையானால், கனவினுன்-கனவினிடத்து, (வந்து கூடிய), காதலர் - தலைவர், நீங்கலர் - (என்னைப்) பிரியார், (எ - று).

ஒன்றென்பது அந்நனவின்கொடுமையை விளக்கிநின்றது. அதுகடுவே புகுந்து கனவைப்போக்கி அவரைப் பிரிவித்ததென்பது தோன்றநின்றமையால், மன் ஒழியிசைப்பொருளில்வந்தது. (தலைமகள்) கனவினிடத்தீக்காதலரைப்பெற்றுப் பொறுக்கின்றமையைச் சொல்லியவாறும்.

(க - து.) தலைமகள் தோழிக்கு நனவில்லையாயின், தலைவரைக் கனவின்கண் விடாதுகூடியிருப்பே னென்று ளென்பது.

6. If there were no such thing as wakeful state, my beloved who came in my dream would never depart from me.



எ. நனவினு னல்காக் கொடியார் கனவினு
னென்னெஞ்சைப் பீழிப் பது.

[விழித்துழிக் காணாளாயினுள் கனவிற்கூட்ட நினைந்து
ஆற்றாளாய்ச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) ஒரு ஞான்றும் நனவின்கண் வந்து தலையளி செய்யாத கொடியவர் நாடோறுங் கனவின்கண் வந்து நம்மை வருத்துவது எவ்வியையபு பற்றி, (எ - று).

பிரிதலும் பின்னிலைந்து வாராமையு நோக்கிக் 'கொடியார்' என்றும், கனவிற் றோண்மேலராய் விழித்துழிக்காத்தலின் † அதனுலுந் தன்ப

† "அழுக்கா றெனவொரு பாவி" என்னுங்குறளும், "இன்மையென வொரு பாவி" என்னுங் குறளும் இங்குணர்தற்பாலனவாம்.

† அஃது - கனவு. ¶ அதனுலும் கனவிற் றோண்மேலராய் விழித்துழிக்காத்தலினுலும்.





மாகா நின்ற தென்பாள் 'பீழிப்பது' என்றுங் கூறினுள். † கனவினில்லது கனவினுமில்லை யென்பார், ‡ அது கண்டிலமென்பதாம்.

தெளி:—[விழித்தவிடத்துத் தலைமகனைக் காணுதவளாகிய தலைமகள் கனவிற் புணர்ச்சியை நினைந்துபொறுக்காதவளாய்ச்சொல்லியது.] (இ-ள்.) நனவினுன் - (ஒருநாளும்) நனவில் (வந்து), நல்கா - அருள்செய்யாத, கொடியார்-கொடியவர், கனவினுன், (நாள்தோறும்) கனவில் (வந்து), எம்மை—, பீழிப்பது - வருத்துவது, என் - எச்சம்பந்தம் பற்றி, (எ - று).

தன்னைவிட்டுப் பிரிதலும் பின்னிலைந்து வாராமையும் நோக்கிக் 'கொடியார்' என்றும், கனவில் தோளின்மேலராய் விழித்தபோது மறைதலால் அதனுலும் துன்பமாகின்ற தென்பாள் 'பீழிப்பது' என்றும் சொல்லினுள். உலகத்தார் நனவில் இல்லாதது (காணுதது) கனவிலும் இல்லை யென்பார், யாம் அதுகண்டில மென்பதாம்.

(க - து.) தலைமகள் ஒருநாளும் நனவின்கண் வந்து அருள் செய்யாததலைவர் நாள்தோறும் கனவின்கண் வந்து என்னை வருத்துதல் தகுதியுடையதாகாதென்றுள் என்பது.

7. The cruel one who would not favour me in my wakeful state, why should he thus torment me in my nightly dreams ?

---

அ. தஞ்சுங்காற் றேண்மேல ராகி விழிக்குங்கா
னெஞ்சத்த ராவர் விரைந்து.

[தானுற்றுதற்பொருட்டுத் தலைமகனே ¶ யியற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது.]

பரி:—(இ - ள்.) என்னெஞ்சு விடர்துறைகின்ற காதலர் யான் றுஞ்சும்பொழுது வந்து என்றேண்மேலாய்ப் பின் விழிக்கும் பொழுது விரைந்து பழைய நெஞ்சின்கண்ணை ராவர், (எ - று).

கலவிவிட்டு மறைப்புங் கடுமைபற்றி ' விரைந்து ' என்றாள். ஒருகாலும் என்னினீங்கி யறியாதாரை நீ நோவற்பாலையல்லை யென்பதாம்.

தெளி:—(தான் பொறுத்தற்பொருட்டுத் தலைமகனே இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட‌ச் சொல்லியது.) (இ - ள்.) (என்னெஞ்

---

† நனவினில்லது கனவினுமில்லையென்பது உலக வழக்கு. சிவன் சாக்கிர (நனவு) வாசனாவிஷய போகத்தை மனமென்னுங் காரணத்தாலனுபவிக்குங் காலம் சொப்பனமாமென்ப திருக்குணர்த்தற் பாலதாம்.

‡ ஒருநாளும் நனவின்கண் வந்து தலையளிசெய்யாத கொடியவரை நாள்தோறுங் கனவின்கண் காணுதலால், யாம் அது (நனவினில்லது கனவினு மில்லையென்பதைத்) கண்டிலம் என்று தலைமகள் கூறினாள்.

¶ இயற்பழித்தல்-காதலர் அன்பிலரொன்று பாங்கிபழித்தற்பேசுதல்.

சின்சண் விடாமல் உறைகின்ற காதலர்) துஞ்சுங்கால் - (யான்) தூங்கும் போது, (வந்து எனது), தோண்மேலராகி - தோளின்மேலுள்ளவராகி, விழிக்குங்கால் - (பின்) விழிக்கும்போது, விரைந்து—,நெஞ்சத்தாவர் - (பழைய) நெஞ்சிலுள்ளவராவர், (எ - று).

புணர்ச்சியைவிட்டு மறையுங் கடுமைபற்றி 'விரைந்து' என்றாள். ஒருகாலும் என்னினின்றும் நீங்கி யறியாத காதலரை (தோழியே!) நீ பழித்துப் பேசவேண்டாமென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியை நோக்கித் தூங்கும்போது என் தோளின்மே லிருக்குந் தலைவர் விழிக்கும்போது விரைந்து என் மனத்திலிருக்கின்று ரென்றாள் என்பது.

8. When I sleep, my beloved rests embracing me; but when I wake up, he hastens to fill my heart.



கூ. நனவினு னல்காரை நோவர் கனவினுற்
காதலர்க் காணு தவர்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) தமக்கொருகாதலின்மையின் அவரைக் கனவிற் கண்டறியாத மகளிர் தாமறிய நனவின்கண் வந்து நல்காத நங்காதலரை அன்பிலரென நோவா நிற்பர், (எ - று).

இயற்பழித்தது பொறாது புலக்கின்றாளாகலின், † நன்மைதோன்றக் கூறினாள். தமக்குங் காதலருளராய் அவரைக் கனவிற்கண் டறிவாராயின், நங்காதலர் கனவின்கணாற்றி நல்குதலறிந்து நோவாரென்பதாம்.

தெளி:—(இதுவுமது.) (இ-ள்.) (தமக்கு ஒரு காதலர் இல்லாமையால்) கனவினான் - கனவில், காதலர்க் காணாதவர் - அக்காதலரைக் கண்டறியாத மகளிர், நனவினான் - (தாம் அறிய) நனவில், (வந்து), நல்காரை- அருள்செய்யாத (நமது) காதலரை, நோவர் - (அன்பிலரென்று) நோவாநிற்பர், (எ - று).

தலைமகள் பாங்கி இயற்பழித்தது பொறாது பிணங்குகின்றாளாகலால், நன்மை தோன்றச் சொல்லினாள். தமக்கும் காதலருளராய் அவரைக் கனவிற் கண்டு அறிவாராயின், நமது காதலர் கனவினிடத்து (நாம் அறியவந்து) பொறுத்திருக்கும் வகைசெய்து அருள்செய்தலறிந்து நோவாரென்பதாம்.

---

† துஞ்சுங்காற் றோண்மேலராவர், விழிக்குங்கால் நெஞ்சத்தராவர், கனவின்கண் நல்குவரென்று தலைமகனது நன்மை தோன்றக் கூறினாள்.



(க - து.) தலைமகள் கனவில்வந்து எனக்கு அருள்செய்கின்ற காதலரை நனவிற்காணாதமகளிர் அன்பிலரென்று பழிக்கின்றனரென்றாள் என்பது.

9. They who have no lovers to behold in their dreams, blame him who shows not in my waking hours.

௰. நனவினா னந்நீத்தா ரென்பர் கனவினாற்
காணார்கொ லிவ்வூ ரவர்.

(இதுவுமது.)

பரி:—(இ - ள்.) இவ்வூரின் மகளிர் நனவின்கண் நம்மை நீத்தா ரென்று நங்காதலரைக் கொடுமை கூறநிற்பர்; அவர் கனவின்கண் நீங் காது வருதல் கண்டறியாரோ, (எ - று).

* என்னெடு தன்னிடை வேற்றுமையின்றாயின், யான் கண்டது தானுங் கண்டமையும்; † அது காணாது அவரைக்கொடுமை கூறுகின்றமை யின் அயலாளேயா மென்னுங் கருத்தால் 'இவ்வூரவர்' என்றாள்.

தெளி:—(இதுவுமது.) (இ - ள்.) இவ்வூரவர் - இவ்வூரிலுள்ள மக ளிர், நனவினுள் - நனவினிடத்து, நங்நீத்தாரென்பர் - நம்மைவிட்டு நீங் கினரென்று (நமது காதலரைக் கொடுமை) சொல்லாநிற்பர், கனவினுள்- (அவர்) கனவினிடத்து, காணர்கொல் - (நீங்காது வருதலைக்) கண்டறி யாரோ, (எ - று).

என்னெடு (அவள்) தன்னிடத்து வேற்றுமை யில்லையானால், (அவள்) யான்கண்டது தானுங்கண் டமைவள்; அதுகாணுமல் அவரைக் கொடுமை சொல்லுகின்றமையால் அயலாளேயாம் என்னுங் கருத்தால் 'இவ்வூரவர்' என்றாள்.

(க - து.) தலைமகள் எமது கனவினிடத்து நீங்காது வரு கின்ற காதலரை யறியாதமகளிர் நனவினிடத்து நம்மை விட்டுப் பிரிந்தாரென்றவரைப் பழிகூற நிற்பரென்றாள் என்பது.

10. The women of this town say that he has forsaken me in my waking hours; they surely see him not visiting me in my dreams.

* என்னெடு தன்னிடை - தலைவியாகிய என்னுடன் தோழியாகிய தன்னிடத்து; எனக்கும் அவளுக்கும் என்பதாம்.

† அது காணுது - கனவினிடத்துக் காதலர் நீங்காது வருதலைக் காணுமல்.

## 8-வது அதிகாரம்

பொழுதுகண்டிரங்கல்:—

### Lamenting at the approach of night.

பரி:—அஃதாவது மாலைப்பொழுது வந்துழி அதனைக்கண்டு தலை மகளிரங்குதல். † கனுழந்துறுத வினையில்லை என்பதுபற்றிப் பகற் பொழுதாற்றி யிருந்தாட்கு உரியதாகலின், ‡ இது கனவுநிலை யுரைத்த லின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது மாலைப்பொழுது வந்தவிடத்து அதனைக்கண்டு தலைமகள் இரங்குதல். கனுமுந்துறுத வினையில்லை யென்பது பற்றிப் பகற்பொழுது பொறுத்திருந்த தலைமகளுக்கு உரியதாகலால், இது கனவு நிலை யுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

க * மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது.

[பொழுதொடு புலந்து சொல்லியது.]

பரி:—(இ - ள்.) பொழுதே ! நீ முன்னுள்களின் வந்த மாலையோ வெனின், அல்லை ; இருந்தவாற்றன் அந்நாட் காதலனை மணந்த மகளிருயிரை யுண்ணும் இறுதிக்காலமாயிருந்தாய், (எ - று).

முன்னுள் - ¶ கூடியிருந்த நாள். ✕ அந்நாண் மணந்தானெனவே, பின் பிரிந்தாராதல் பெறுதும். | வாழியென்பது குறிப்புச்சொல்

† பழமொழி—கல்வி 2. கனவினிடத்து முந்துறுத (னனவினிடத்து நிகழாத) வினை நிகழுவதில்லை என்பது.

னனவில் நிகழும் வினையின் சம்ஸ்காரமே கனவில் நிகழுதலால், கனவில் ஒருவினை நிகழுமாயின் அதற்குமுன் னனவின்கண் அவ்வினை நிகழ்ந்திருக்கவேண்டுமென்பது கருத்து. கனவு நிலையுரைத்தலின் எழாவது குறளின் விசேடவுரையில் "னனவினில்லது கனவினு மில்லையென்பார், அது கண்டலும்" என்றிருத்தலுங் காண்க. (கல்லாதான் கண்ட கழிநட்பங் கற்றார்முற், சொல்லுங்காற் சோர்வு படுதலால் - நல்லாய், விளுமந் துறுத வுரையில்லை யில்லை, களும்ந் துறுத வினை என்பது பழமொழி.) " னனவிற்றான் செய்தது மனத்த தாகலிற், கனவிற் கண்டு கதமென வோரி" என்று கலித்தொகை-(குறிஞ்சிக்கலி 13.) கூறுவதும் இங்குணர்தற்பாலுதாம்.

‡ இது - பொழுதுகண்டாங்கல்.

* மாலையில்லை என்றும் பாடமுண்டு.

¶ கூடியிருந்த நாள் - தலைமகனைத் தலைமகள் கூடியிருந்தநாள்.

✕ அந்நாள் - முன்னுள்.

• | வாழியென்பது மாலைப்பொழுதே ! நீ வாழமாட்டாய் என்பது தோன்ற நின்ற இகழ்ச்சிக் குறிப்புச்சொல்.

* "வாலிழை மகளிர் நுயிர்ப்பொதி யவிழ்க்குங் காலே" என்றுற்போலாண்டுப் பொதுமையாற் கூறப்பட்டது. † வேலை யென்பது ஆகுபெயர். ‡ வேலையென்பதற்கு வேலா யிருந்தா யென்பாரு முளர்.

தெளி:—[தலைமகள் பொழுதொடு பிணங்கிச் சொல்லியது.] (இ-ள்.) பொழுது - பொழுதே, நீ மாலையோவல்லை - நீ (முன்னாள்களில் வந்த) மாலையோ (என்றால்) அல்லை, மணந்தார் - (இருந்தவிதத்தால் அந்நாள்களில் காதலரைக்) கூடிய மகளிரது, உயிருண்ணும் - உயிரை யுண்ணுகிற, வேலை - முடிவுக்காலமா யிருந்தாய், (எ - று).

முன்னாள் - கூடியிருந்த நாள். அந்நாள் மணந்தாரெனவே, பின் பிரிந்தாராதல் பெறப்பட்டது. வாழி யென்பது இகழ்ச்சிக் குறிப்புச்சொல். இங்கு மாலைக்காலத்தின் தன்மை பொதுவகையாற் சொல்லப்பட்டது. வேலை யென்பது காரியவாகு பெயர்.

(க - து.) தலைமகள் மாலைப்பொழுது கணவரைப் பிரிந்தார்க்கு இறுதிக்காலமா யிருக்கின்றதென்றதனை வெறுத்துக் கூறினளென்பது.

1. Live, o evening hour! Thou art not (the former) evening, but the season that slays the hearts of brides.

உ· ¶ புன்கண்ணை வாழி | மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ணை தோகின் றுணை.

[† தன்னுட்கையாற்றை அதன்மேலிட்டுச் சொல்லியது.]

* கலித்தொகை-நெய்தற்கலி. 2. இதன்பொருள். பரிசுத்தமான வாபரணங்களையுடைய மகளிரது உயிரை (அவ்வுயிரைப்) பொதிந்து (மறைத்து) நின்றவுடலினின்றும் போக்கும் (மாலைக்) காலத்தினது என்பது.

† முடிவு என்னும் பொருளதான, வேலையென்னுங் காரியப்பெயர் அதற்குக் காரணமான காலத்தினை யுணர்த்துதலால், காரிய வாகுபெயராம்.

‡ வேலையென்பதனை முன்னிலை யொருமைக் குறிப்புவினை முற்றாக்கி அதற்கு 'வேற்படையா யிருந்தாய்' என்று பொருள் கூறுவாருமுண்டு.

¶ "புன்கண்கூர் மாலை புலம்புமென் கண்ணேபோற், றுன்ப முளவாய்த் துயிலப் பெறுதியால்" என்பது, மிங்குக் கவனித்தற்பாலதாம்.

1 மாலைக்காலம் பகற்காலமென்றுவது இராக்காலமென்றுவது குறிப்பிட்டறியக் கூடாமைபற்றி 'மருண்மாலை' என்று கூறப்பட்டது.

தன்னுட்கையாற்றை - தன்னிடத்துள்ள துன்பத்தை.



பி:—(இ - ள்.) மயங்கியமாலாயீ, நீயு மெம்போலப் புன்கணுடையையாயிருந்தாய்; நின்றுணையும் எந்துணைபோல வன்கண்மையுடையதோ? கூறுவாயாக, (எ - று).

மயங்குதல் - பகலுமிரவுந் தம்முள்ளே விரவுதல்; * கலங்குதலுந் தோன்ற நின்றது. புன்கண் - ஒளியிழத்தல்; அதுபற்றித் துணையுமுண்டாக்கிக் கூறினாள். எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. எமக்குத் துன்பஞ் செய்தாய், நீயு மின்பமுற்றிலை யென்னுங் குறிப்பால் 'வாழி' என்றாள்.

தெளி:—[தலைமகள் தன்னுட்கையாற்றை அம்மாலைப் பொழுதின் மேல் வைத்துச் சொல்லியது.] (இ - ள்.) மருண்மாலை-மயங்கியமாலையே, (நீயும்), புன்கண்ணை (எம்மைப்போலப்)-புன்கண் ணுடையையா யிருந்தாய், நின்றுணை - உனது துணையும், எங்கேள்போல் - எமது துணைபோல, வன் கண்ணதோ - இரக்கமில்லாமையை யுடையதோ, (சொல்லுவாயாக), ()

மயங்குதல் - பகலும் இரவும் தம்முள்ளே கலத்தல்; அம்மயங்குத லென்பது கலங்குதலுந் தோன்ற நின்றது. புன்கண் - ஒளியிழத்தல்; அவ்வொளி யிழத்தல் பற்றி மருண்மாலைக்குத் துணையும் உண்டாக்கிச் சொல்லினாள். துணையுமென்ற இறந்தது தழுவிய வெச்சவும்மை செய் யுள் விகாரத்தால் தொக்குநின்றது. எமக்குத் துன்பஞ் செய்தாய், நீயும் இன்பமுற்றிலையென்னு மிகழ்ச்சிக் குறிப்பால் 'வாழி' என்றாள்.

(க - து.) தலைமகள் மாலைப்பொழுதே! உனது துணையும் எமது துணைபோலக் கொடுமையுடையதோ என்றாள் என்பது.

2. Long live o dark eventide! You (too) are sightless (like myself); Is your help-mate (also) as hard-hearted as is my spouse?

பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும்.

[ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) காதலர் கூடிய நாளெல்லாம் என்முன் நடுக்க மெய்தித் † பசந்து வந்த மாலை இந்நாள் எனக் கிறந்துபாடு வந்து தோன்றி ‡ அதற்குளதாந் துன்பம் ஒருகாலுங் கொருகால்மிக வராது நின்றது, (எ - று).

---

* கலங்குதல் - தெளிவின்றியிருத்தல்.

† பசந்து - மங்கி.

‡ அதனால் குளிதாந் துன்பம் - அவ்விறத்தலுக் குண்டாகுந் துன்பம்.



† குளிர்ச்சிதோன்ற மயங்கிவரு மாலையென்னுஞ் செம்பொருள் * இக்குறிப் புணரநின்றது. துனி - உயிர்வாழ்தற்கண் வெறுப்பு. ‡ அதனால் யானாற்றுமாறென்னை யென்பது குறிப்பெச்சம்.

**தெளி:**—[பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது,] (இ - ள்.) (காதலர் கூடிய நாளெல்லாம்) பனியரும்பி - (என் முன்னே) நடுக்கமடைந்து, பைதல்கொண்மாலை - பசத்துவந்த மாலைப் பொழுதானது, துனியரும்பி - (இந்நாள் எனக்கு) இறந்துபடுதல் வந்து தோன்றி, துன்பம்—(அதற்கு உண்டாகுந்) துன்பம், வளர - (ஒருகாலைக் கொருகால்) மிக, வரும்-வாராநின்றது, (எ - று).

குளிர்ச்சிதோன்ற மயங்கிவரும் மாலையென்னுஞ் செம்பொருள் இக்குறிப்பு அறியநின்றது. துனி - உயிர்வாழ்தலில் வெறுப்பு. அதனால் யான் பொறுக்கும் விதம் என்னென்பது குறிப்பெச்சம்.

(க - து.) தலைமகள் தோழியோடு காதலருள்ளபோது என் முன்னே நடுங்கிவந்த மாலைப்போது இப்போ தெனக்கு மிகு வருத்தத்தைச்செய்கின்றதென்றாள் என்பது.

3. The evening that came in with trembling and dimness (when my lover was beloved), now brings me an aversion for life and growing sorrow.

காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்). காதலருள்ள பொழுதெல்லாம் என்னுயிர் தளிர்ப்ப வந்தமாலை, அவரில்லாத இப்பொழுது அஃதொழிந்து நிற்றலே யன்றிக் கொல்லுங் களரியிற் கோலஞர் வருமாறுபோலஅவ்வுயிரைக் கோடற்கு வாராநின்றது. (எ - று).

எதிலர் - அருள்ளாதுமில்லார். முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ் செய்துவந்த பொழுதும் இன்று எனக்குப் பகையாய்த் துன்பஞ் செய்ய என்னுயிர்மேல் வாராநின்றது; இனி யாதுற்றுமா றென்னே யென் பதாம்.

---

† பனியரும்பி - குளிர்ச்சிதோன்ற, பைதல்கொண்மாலை - மயங்கி வரும் மாலைக்காலம் என்னுஞ் செம்பொருள் (செஞ்சொல் வாயிலாகப் பெறப்படும் பொருள்) (காதலர்கூடியநாளெல்லாம் என் முன்) நடுக்கமெய் திப் பசந்துவந்த மாலை என்னுமிக் குறிப்புப்பொரு ளுணர நின்றது.

* சண்டுக் குறிப்புணர நின்றது என்றும் பாடமுண்டு.

‡ அதனால் - உயிர்வாழ்தற்கண் வெறுப்புண்டாக வரும் மாலைக்காலத் தினால்.



தெளி:—[இதுவுமது] (இ - ள்.) மாலை - (காதலர் உள்ள பொழு தெல்லாம் என்னுயிர் தளிர்க்க வந்த) மாலை, காதலரில்வழி - அக்காதலரில் லாத இப்பொழுது, (என்னுயிர் தளிர்க்க வருதலொழிந்து நிற்றலேயல்லா மல்), கொலைக்களத்து- கொலைசெய்யுமிடத்தில், எதிலர்போல - கொலை ஞர் (வருமாறு)போல, வரும் - (அவ்வுயிரைக் கொள்ளுதற்கு) வருகின் றது, (எ - று).

எதிலர் - அருள் சிறிதுமில்லாதவர். முன்னெல்லாம் எனக்கு நட் பாயின்பஞ் செய்து வந்த பொழுதும் இன்று எனக்குப் பகையாய்த் துன் பஞ் செய்ய என்னுயிர்மீது வருகின்றது; யான் பொறுக்கும்விதம் என்

னென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியோடு காதலரில்லாத விப்பொழுது மாலைக்காலம் என்னுயிரைக்கொள்ள வருகின்றதென்றாள்.

4. When my lover is absent, the evening hour comes in like slayers on the field of slaughter.

நி. காலைக்குச் செய்தான் றென்கொ லேவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) காலையும் மாலையும் அவர் கூடிய ஞான்றுபோலாது இஞ்ஞான்று வேறுபட்டு வாரா நின்றன; அவற்றுள், யான் காலைக்குச்செய்த வுபகாரம் யாது, மாலைக்குச் செய்த அபகாரம் யாது. (எ - று).

* கூடியஞான்று பிரிவொன்றஞ்சப் பண்ணிய காலை † அஃதொழிந்து

இஞ்ஞான்று கங்குல் வெள்ளத்திற்குக் கரையாய் வாரா நின்ற தென்னுங் கருத்தால் 'நன்றென்கொல்' என்றும், கூடியஞான்று இன்பஞ் செய்து வந்த மாலை ‡ அஃதொழிந்து இஞ்ஞான்று அளவிறுன்பஞ் செய்யாநின்ற தென்னுங் கருத்தாற் பகையெவன்கொல் என்றுங் கூறினாள். $ பகை-ஆகுபெயர். தன்னோடொத்த காலைபோலாது மாலை தன் கொடுமையாற் றுன்பஞ் செய்யாநின்ற தென்பதாம்

தெளி:—(இதுவுமது.)(இ-ள்.)(காலையும் மாலையும் அக்காதலர் கூடிய நாள்போ லாகாமல் இப்போது வேறுபட்டு வருகின்றன;அவற்றுள்) யான்-

---

* கூடியஞான்று - காதலர் புணர்ந்தகாலத்தில்.

† அஃதொழிந்து - அஞ்சப்பண்ணுவதொழிந்து.

‡ அஃதொழிந்து - இன்பஞ்செய்வதொழிந்து.

$ பகையென்னுங் காரியப்பெயர் அதற்குக் காரணமான அபகாரத்தை யுணர்த்துதலால், காரியவாகுபெயராம்.





நான், காலைக்குச் செய்த—, நன்று - உபகாரம், என் - யாது, மாலைக்குச் செய்த—,பகை - அபகாரம், எவன் - யாது, (எ - று).

கொல்லிரண்டும் அசைநிலைகள். கூடிய நாளில் பிரிவாரென்று அஞ்சப் பண்ணிய காலை அது நீங்கி இந்நாளில் கங்குல் (இருள்) வெள்ளத்திற்குக் கரையாய் வருகின்றதென்னுங் கருத்தால் 'நன்றென்கொல்' என்றும், கூடிய நாளில் இன்பஞ் செய்துவந்த மாலை அது நீங்கி இந்நாளில் அளவில்

லாத துன்பஞ் செய்யா நின்றதென்னுங் கருத்தால்

பகையெவன்கொல்

என்றும் சொல்லினுள். பகை - காரியவாகுபெயர். தன்னோடு ஒத்த காலை போலாகாமல் மாலை தன் கொடுமையால் துன்பஞ்செய்கின்ற தென்பதாம்.

(க-து.) தலைமகள் தோழியோடு யான் காலைப்பொழுதிற்குச் செய்த உபகாரம்யாது ; மாலைப்பொழுதிற்குச் செய்த அபகாரம் யாது என்றுள் என்பது.

5. What good have I done to the morning hour (to bring me relief) and what evil have I done to the evening hour (to renew my grief)?



சு. மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன்.

[இன்று இன்னையாகின்ற நீ அன்று அவர்பிரிவிற்குடம்பட்ட தென்னையென்றுட்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ் செய்து போந்த மாலை இன்று பகையாய்த் துன்பஞ் செய்தலைக் காதலர் பிரிக்கற்கு முன்னே அறியப் பெற்றிலேன், (எ - று).

இங்ஙனம் * வேறுபடுதலறிந்திலேன்; அறிந்தேனுயின் அவர் பிரிவிற்குடம்படேனென்பதாம்.

தெளி:—(இன்று இத்தன்மையளாகின்ற நீ அன்று அவர் பிரிவிற்கு உடம்பட்டதெப்படியென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.) (இ-ள்.) மாலை - (முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ் செய்துவந்த) மாலை, நோய்செய்தல் - (இன்று பகையாய்த்) துன்பஞ் செய்தலை, மணந்தார் - காதலர், அகலாத காலை - பிரிதற்கு முன்னே, அறிந்திலேன் - அறியப் பெற்றிலேன், (எ - று).

இவ்வாறு (மாலை) வேறுபடுதல் அறிந்திலேன்; அறிந்தேனுயின் அவர் பிரிவிற்கு உடன்படேனென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியோடு மாலைப்பொழுது இப்போது பகையாய்த் துன்பஞ் செய்தலைக் காதலர் பிரிதற்கு முன்பு அறிந்திலேனென்றாள் என்பது

---

* வேறுபடுதல்-முன்னெல்லாம் எனக்கு நட்பாயின்பஞ் செய்துவந்த மாலைக்காலம் இப்போது வேறுபட்டுப் பகையாய்த் துன்பஞ் செய்தல்.



6. I never knew the pangs that the evening hour brings till my husband's departure.

எ. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி

மாலை மலருமிந் நோய்.

(மாலைப்பொழுதின்கண் இன்னோயாதற்குக் காரண மென்னை யென்றூட்குச் சொல்லியது.)

பரி:—(இ - ள்.) இக்காம நோயாகிய பூ காலைப்பொழுதின்க ணரும்பிப் பகற்பொழுதெல்லாம் போதும்பாய் முதிர்ந்து மாலைப்பொழு தின்கண் மலரா நிற்கும், (எ - று).

துயிலெழுந்த பொழுதாகலிற் கனவின்கட் கூட்ட நினைந்தாற்றுதல் பற்றிக் 'காலையரும்பி' என்றும், பின் பொழுது செலச்செல அது மற ந்து பிரிவுள்ளி யாற்றுளாதல் பற்றிப் 'பகலெல்லாம் போதாகி' என்றும், தத்தந் துணையை யுள்ளிவந்து சேரும் விலங்குகளையும் மக்களையுங் கண்டு தான் அக்காலத்தி னுகர்ந்த வின்பநினைந்தாற்றுமை மிகுதல்பற்றி 'மாலை மலரும்' என்றுங் கூறினுள். பூப்போல இந்நோய் காலவயத்த தாகா நின்றதென்பது உருவகத்தாற் பெறப்பட்டது. * ஏகதேச வுருவகம்.

தெளி:—(மாலைப்பொழுதில் இத்தன்மைய ளாதற்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.) (இ - ள்.) இந்நோய் - இக்காமநோயாகிய பூ, காலையரும்பி - காலைப்பொழுதில் அரும்பி, பகலெல் லாம் போதாகி - பகற்பொழுதெல்லாம் போரும்பாய் முதிர்ந்து, மாலைமல ரும் - மாலைப்பொழுதில் மலரா நிற்கும், (எ - று).

துயிலினின்றெழுந்த பொழுதாகலால் கனவில் தலைமகளோடு புணர்ந்

தமையை நினைந்து பொறுத்தல் பற்றிக் 'காலையரும்பி' என்றும், பின்பு பொழுது செல்லச் செல்ல அப்புணர்ந்தமையை மறந்து பிரிவை நினைத்துப் பொருளாதல்பற்றிப் 'பகலெல்லாம் போதாகி' என்றும், தமது தமது துணைகளை நினைத்துவந்து சேரும் விலங்குகளையும் மக்களையும் கண்டு தான் அக்காலத்தில் அனுபவித்த இன்பத்தை நினைந்து பொருமை மிகுதல்பற்றி 'மாலை மலரும்' என்றும் சொல்லினள். பூவைப்போன்று இக்காமநோய் அரும்புதல் முதலிய தொழிலால் காலத்தின் வசத்ததாகா நின்றதென்பது உருவகத்தாற் பெறப்பட்டது. இஃது ஏகதேச வுருவகவணி.

---

* ஆற்றுதல் முதலிய செயல்களை அரும்புதல் முதலிய செயலாக வுருவகஞ்செய்தவர், அதற்கியையக் காமநோயைப் பூவாக வுருவகஞ் செய்யாமையின், இஃது ஏகதேச வுருவகமாயிற்று.



(க - து.) தலைமகள் தோழியோடு காமநோய் காலைப்பொழுதில் தோன்றிப் பகற்பொழுதில் வளர்ந்து மாலைப்பொழுதில் அதிகரிக்கின்றதென்று சொன்னது.

7. This love - sickness buds forth in the morning, and grows all day long and blossoms in the evening.



அ. அழல்போலு மாலைக்குத் தூதாகி பாயன்
குழல்போலுங் கொல்லும் படை.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) முன்னெல்லாம் இனியதாய்ப்போந்த ஆயன்குழல் இதுபோழுது அழல்போலச் சுடுவதாய மாலைக்குத் தூதுமாய் அது வந்தென்னைக் கொல்வுழிக் கொல்லும் படையுமாயிற்று, (எ - று).

பின்னின்ற போலுமென்பது * உரையசை. முன்னரே † வரவுணர்த்தலிற் றூதாயிற்று ; ‡ கோறற்கருவி யாகலிற் படையாயிற்று. தானே சுடவல்லமாலை ¶ இத்துணையும் பெற்றால் என்செய்யா தென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) ஆயன்குழல் - (முன்னெல்லாம் இன்பஞ்செய்வதாய் வந்த) இடையனது வேணுநாதம், அழல்போலும்- (இப்போது) நெருப்புப்போலச் சுடுவதாகிய, மாலைக்குத்தூதாகி - மாலைக்குத்தூதுமாய், (அம்மாலைவந்து என்னைக் கொல்லுமிடத்து), கொல்லும் படை - கொலைசெய்யும் படையுமாயிற்று, (எ - று).

பின்னுள்ள போலுமென்பது உரையசை. (ஆயன்குழல்) முன்னரே (மாலையின்) வரவை அறிவித்தலால் தூதாயிற்று; (அம்மாலை) கொல்லுதற்குக் கருவியாகலின் படையாயிற்று, தானே சுடவல்லமாலைப்போழுது இந்தத் துணையையும் பெற்றால் யாது செய்யாதென்பதாம். வேணுநாதம் - வேய்ங்குழலோசை. வேய் - மூங்கில். படை - ஆயுதம்.

(க-து.) தலைமகள் ஆயன் குழலோசை மாலைக் காலத்திற்குத் துணையாகி வந்து யென்னை வருத்துகின்ற தென்றாளென்பது.

8. The shepherd's flute sounds like the forerunner of of the hour of the evening's fiery anguish, and is become a murderous weapon.

---

* சிறிதுபொரு ளுணர்த்து மிடைச்சொல் உரையசையாம்.

† வரவுணர்த்தலிற் றூதாயிற்று— (ஆயன்குழல்) மாலைக்காலத்தின் வரவை யறிவித்தலால், அம்மாலைக்காலத்திற்குத் தூதாயிற்று.

‡ கோறற்கருவியாகலின்—(ஆயன்குழல்) அம்மாலைக்காலம் வந்து கொல்லும்போது அக்கொல்லுதற்குச் சாதனமாயிருத்தலால்

கூ. பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

(இதுவுமது.)

பரி:—(இ - ள்.) இதற்கு முன்னெல்லாம் யானே மயங்கி நோயுழந்தேன்; இனிக் கண்டாரும் மதிமருளும் வகை மாலை வரும்போழது இப்பதியெல்லாம் மயங்கி நோயுழக்கும், (எ - று).

* மதிமருளவென்பது மதிமருண்டெனத் திரிந்துநின்றது. கூற்றமாகக் கருதிக் கூறினளாகலின் 'மாலைபடர்தரும் போழ்து' என்றாள். † யான் இறந்துபடுவ லென்பதாம். ‡ மாலை மயங்கிவரும் போழ்தென் பதி மதிமிலகலங்கி நோயுழக்குமென் றுரைப்பாருமுளர்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) (இதற்கு முன்னெல்லாம் யானே மயங்கி நோயால் வருந்தினேன்) மதிமருண்டு - (இனிக்கண்டாரும்) மதி மயங்கும் வகை, மாலை-மாலைக்காலம், படர்தரும் போழ்து-வரும்பொழுது, பதி - இவ்வூரெல்லாம், மருண்டு - மயங்கி, பைதலுழக்கும் - நோயை யனுபவிக்கும், (எ - று).

மதிமருள என்னும் செயவெனெச்சம் மதிமருண்டு எனச்செய்தெனெச்சமாகத் திரிந்து நின்றது. (மாலைப்பொழுதை) யமனுகவெண்ணிக் கூறினளாகலால் 'மாலை படர்தரும் போழ்து' என்றாள். யான் இறந்து படுவன் என்பதாம்.

(க - து.) தலைமகள் மாலைக்காலம் வரும்போது இவ்வூரா ரெல்லாம் மயங்கி வருத்தத்தை யடைவாராயின், யான் யாது செய்வேனென்று ளென்பது.

9 When the evening shades come on confusing every one's mind, the whole town will become confused and be afflicted with grief.

1. பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர்.

---

* மருண்டு என்னும் செய்தெனெச்சம் படர்தரும் என்னும் வேறு வினைமுதலின் வினையைக்கொண்டு முடிதற்கு விதியில்லாமையால், 'மதி மருளவென்பது மதிமருண்டெனத் திரிந்துநின்றது' என்று கூறப்பட்

ட்து. இங்கு வேறு வினைமுத லென்றது மாலையை.

† யான் இறந்துபடுவல்-(மதிமருளும்வகை மாலைக்காலம் வருவதால்) நான் செத்துப்போவேன்.

‡ மாலை மருண்டு படர்தரும் போழ்து பதி மதிமருண்டு பைத லுழக்கும் என்றநவயஞ்செய்து, அதற்கு மாலை (மாலைப்பொழுது) மயங்கிவரும் பொழுது (என்) பதி (ஊரிலுள்ள யாவரும்) மதி (அறிவு) நிலைகலங்கி நோயை நுனுபவிக்கும் என்றுபொருள் கூறுவாருமுண்டு.



[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) காதலர் பிரிவைப் பொறுத்துஇறந்துபடாதிருந்த என்னுயிர் இன்று பொருளியல்பே தமக்கியல்பாக வுடையவரை நினைந்து, இம்மயங்குமாலைக்கண்ணே இறந்துபடாநின்றது, (எ-று).

*குறித்தபருவங்கழியவும் பொருண்முடிவுநோக்கிவாராமையிற் சொல் வேறுபடாமையாகிய தம்மியல்பொழிந்தவர் அப்பொருளியல்பே தம்மியல் பாயினர்; காலமிதுவாயிற்று; இனி நீ சொல்கின்றவாற்றாற் பயனில்லை யென்பதாம்.

தெளி:—(இதுவுமது.) (இ - ள்.) மாயா என் உயிர் - (காதலாது பிரிவைப் பொறுத்து) இறவாதிருந்த என்னுயிரானது, பொருண்மாலை யாளரை - (இப்பொழுது) பொருளியல்பே தமக்கியல்பாகவுடையவரை, உள்ளி - நினைந்து, மருண்மாலை-இம்மயங்கும் மாலைப்பொழுதிலே, மாயும்-மாய்கின்றது, (எ - று).

வருதற்குக் குறித்த பருவம் கழியவும் பொருள் முடிவு நோக்கி வாராமையால் சொல்வேறுபடாமையாகிய தம்மியல்பொழிந்தவர் அப்பொருளியல்பே தம்மியல்பாயினர்; காலம் இதுவாயிற்று; இனி (தோழியே) நீ சொல்லுகின்றவிதத்தால் பயன் இல்லையென்பதாம்.

(க - து.) தலைமகள் மாலைக்காலத்தில் பொருள் கருதிப் பிரிந்த காதலரை நினைந்து மிகவும் வருந்துகின்றே னென்றாள்.

10. My hitherto unextinguished life now perishes in this darkening eve remembering him who has the nature of wealth.

## 9-வது அதிகாரம்.

### உறுப்புநலனழிதல்:—Wasting away of the limbs.

பரி:—அஃதாவது தலைமகடன் கண்ணும், தோளும், நுதலுழுதலாய அவயவங்கள் தம்மழகழிதல். ‡ இஃது இரக்கமிக்குழிநிகழ்வதாகலின், பொழுதுகண் டிரங்கலின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது தலைமகளது கண்ணும், தோளும், நெற்றியும் முதலாகிய அவயவங்கள் தம்மழகழிதல், இஃது இரக்கமிகுந்தவிடத்திகழ்வதாகலால், பொழுதுகண்டிரங்கலின்பின் வைக்கப்பட்டது.

க. சிறுமை நமக்கொழியச் சேட்சென்ற ருள்ளி
நறுமலர் நாணின கண்.

---

* குறித்தபருவம் - (காதலர்) வருவேனென்று குறிப்பிட்டுக் கூறிய காலம். ‡ இஃது-உறுப்பு நலனழிதல்.



[ஆற்றுமைமிகுதியான் வேறுபட்ட தலைமகட்குத்

தோழி சொல்லியது.]

பரி:—(இ-ள்.) இவ்வாற்றமை நங்கண்ணே நிற்பத் தாஞ் சேணிடைச் சென்ற காதலரை நீ நினைந்தழுதலால் நின்கண்கள் ஒளியிழந்து முன்றமகிந்த நாணிய * நறும்லர்கட்டு இன்று தாம் நாணிவிட்டன, ().

நமக்கென்பது வேற்றுமை மயக்கம். † உள்ளவென்பது உள்ளி யெனத்திரிந்து நின்றது. உள்ளுதலென்பது காரணப்பெயர் காரியத்திற் காய வாகுபெயர் ‡ இவை கண்டார் அவரைக் ¶ கொடுமை கூறுவர்; நீயாற்றல் வேண்டுமென்பது கருத்து.

தெளி:—[பொருமையின் மிகுதியால் வேறுபட்ட தலைமகளுக்குத் தோழிசொல்லியது.] (இ-ள்.) சிறுமை - இப்பொறுமை, நமக்கொழிய - நம்மிடத்தே நிற்க, சேட்சென்றார் - (தாம்) தூரதேயத்திற் சென்ற காதலரை, உள்ளி - (நீ) நினைந்தழுதலால், கண்-(உன்) கண்கள்,(ஒளியிழந்து), நறுமலர் - (முன்னே தமக்கு நாணிய) நறுமலர்களுக்கு, நாணின-(இன்று தாம்) நாணிவிட்டன, (எ - று).

நமக்கு என்பதன் நான்கனுருபு தனக்குரிய பொருளைவிட்டு நம்மிடத்து என ஏழனுருபின் இடப்பொருளில் வந்தது; இவ்வாறு வருவது வேற்றுமை மயக்கமெனப்படும். உள்ள என்னும் செயவெனெச்சம் உள்ளி யெனத் திரிந்து நின்றது. உள்ளுதல் என்னும் காரணப்பெயர் அதன் காரியமாகிய அழுதலையுணர்த்துதலால், காரணவாகுபெயராம். இவற்றைக் கண்டார் அவரைக் கொடியவரென்று சொல்லுவர்; நீ பொறுத்தல்வேண்டுமென்பது கருத்து.

(க - து.) தோழி தலைவியே! நீ காதலரை நினைந்தழுதலால் உன் கண்கள் ஒளியிழந்து வாட்டமடைந்துவிட்டன என்றாள்.

1. While we endure misery, your eyes weep for him who wanders afar, and are ashamed to see the fragrant flowers.

* நறுமலர்கள் - வாசனையுள்ள பூக்கள்; அவை குவளை, தாமரை முத லியனவாம்.

† உள்ளவென்பது காரணப்பொருளில் வந்த (இறந்தகால) செயவெ னெச்சம். செய்தென்னும் வாய்பாட்டுவினையெச்சம் காரணப்பொருளில் வாராமையின், 'உள்ளவென்பது உள்ளியெனத் திரிந்து நின்றது' என்று கூறப்பட்டது.

உள்ள, கண் நறுமலர்க்கு நாணின என்று கொள்க. உள்ளுதல் காரணம்; நாணுதல் - காரியம்.

இவை - ஒளியிழந்துள்ள உன் கண்களை.

கொடுமை கூறுவர் - அன்பில்லாதவரென்று சொல்லுவர்.



உ. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண்

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) பசப்பெய்தன்மே * னீர்வார்கின்ற நீள் கண்கள் நம்மானயக்கப்பட்டவரது நல்காமையைப் பிறர்க்குச் சொல்லுவபோ லா நின்றன; இனி நீயாற்றல் வேண்டுக, (எ-று).

சொல்லுவபோறல் † அதனை ‡ யவருணர்தற் ¶ கனுமானமாதல்.

§ நயந்தவர்க்கென்று பாடமோதுவாருமுளர்

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) பசந்து - பசப்படைதல்மேல், பனி வாருங்கண் - நீர்வார்கின்ற (உனது) கண்கள், நயந்தவர் - (நம்மால்) விரும்பப்பட்டவரது, நல்காமை - நல்காமையை, சொல்லுவபோலும் - (பிறர்க்குச்) சொல்லுவபோலாகின்றன, (இனி நீ பொறுத்தல்வேண்டும்).

(கண்கள்) சொல்லுவபோறல் - அதனை அவர் அறிதற்கு அனுமான மாதல். நல்காமை-அருள்செய்யாமை. போறல் - போலுதல்.

(க - து.) தோழி தலைவியே! அழாநின்ற உன்கண்கள் தலைவரது அருளின்மையைப் பிறர்க்குச் சொல்வனபோலாகின்றன வென்றுளென்பது.

2. The discolored eyes that shed tears, seem to indicate the lack of love of our beloved.

ங. தணந்தமை சால வழிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.

---

* நீர்வார்கின்ற - அழுகின்ற.

† அதனை - நல்காமையை (அருள்செய்யாமையை).

‡ அவர் - பிறர்.

¶ சண்டனுமானமாமாறு:—தலைமகன் தலைமகளுக்கு அருள்செய்ய வில்லை என்பது பிரதிஞ்ஞை; தலைமகளது கண்களினின்றும் நீ சொழுகுதலால் என்பது ஏது; கணவரது அருள்பெறுதலுருந்தும் மகளிர் போல என்பது உதாரணம்.

[தலைமகள் தலைமகனது அருள்பெறுமையைப் பிறருணர்தற்கு அவளது நீர்வார்கின்ற கண்கள் சாதனமாயிருக்கின்றன வென்பது நிகண்டபொருளாம்.]

§ நயந்தவர் என்பதற்குப்பிரதியாக நயந்தவர்க்கு(விரும்பப்பட்டவர்க்கு) என்று பாடங்கூறுவாரு முண்டு.

[இதுவுமது.]

பரி:—(இ-ள்.) காதலர் மணந்த ஞான்று இன்பமிகுதியாற் பூரித்த நின் றோள்கள் இன்று அவர் பிரிந்தமையை விளங்க உணர்த்துவபோல மெலியாநின்றன, இது தகாது, (எ - று).

* அன்று மவ்வாறு பூரித்து † இன்று மிவ்வாறு மெலிந்தால் ‡ இரண்டுங் கண்டவர் கடிதினறிந்து அவரைத் ¶ தகவின்மை கூறுவரென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) மணந்தநாள் - (காதலர்) கூடிய நாளில், (இன்பமிகுதியால்), வீங்கிய - பூரித்த, தோள் - (உனது) தோள்கள், தண்டமை-(இன்று அவர்) பிரிந்தமையை, சாலவறிவிப்பபோலும் - விளங்க அறிவிப்பனபோன்று இளைக்கின்றன, (இது தகாது), (எ - று).

அன்றும் அவ்வாறு பூரித்து இன்றும் இவ்வாறு இளைத்தால் இரண்டுங் கண்டவர் விரைவில் அறிந்து அவரைத் தகவில்லாமை சொல்லுவ ரென்பதாம்.

(க - து.)தோழி தலைவியே! காதலரைக் கூடியநாளில் பூரித்த உன் தோள்கள் அவர் பிரிந்தமையைப் பிறர்க்கு விளங்க அறிவித்தல்போல இளைக்கின்றன வென்றுளென்பது.

3. These withered shoulders that swelled (with joy) on the nuptial day, now seem to announce our separation clearly to the public.

ச. பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தோல்கவின் வாடிய தோள்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) அன்றுந் தந்துணைவர் நீங்குதலான் அவராம் பேற்ற செயற்கை யழகே யன்றிப் பழைய வியற்கை யழகுமிழந்த இத் தோள்கள் இன் § றதற்குமேலே தம்பெருமை யிழந்து வளை கழலா நின்றன; || இவை யீங்ஙனஞ் செயற்பாலவல்ல, (எ - று).

---

* அன்றும் - கூடிய நாளிலும். † இன்றும் - பிரிந்தநாளிலும்.

‡ இரண்டும் - பூரித்தலும் மெலிதலுமாகிய விரண்டையும்.

¶ தகவின்மை கூறுவரென்பதாம் - குறித்தபருவத்து வாராமை, அன்பில்லாமை, சொற்றவறினமை முதலியவற்றைக் கூறிப் பழிப்பாரென்பதாம். தகவு - குறித்த பருவத்து வருதல் முதலியனவாம்.

§ அதற்குமேலே - செயற்கை யழகே யன்றிப் பழைய வியற்கை யழகையு மிழந்ததற்குமேலே.

|| இவை - தோள்கள்.





பெருமையிழத்தல் - மெலிதல். பைந்தொடி - பசியபொன்னாற்செய்த தொடி. சோருமென்னும் வினைத்தொழில் தோண்மே னின்றது. அன்றும் பிரிந்தாரென்று அவரன்பின்மை யுணர்த்தி இன்றுங் குறித்த பருவத்து வந்திலரென்று அவர் பொய்ம்மை யுணர்த்தா நின்றன; இனி * அவற்றைக் கூறுகின்றார்மேற் குறையுண்டோ வென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) துணைநீங்கி - (அன்றும் தமது) துணைவர் நீங்குதலால், (அவரால் பெற்ற செயற்கை யழகே யல்லாமல்), தொல்கவின் - பழைய இயற்கை யழகும், வாடியதோள் - இழந்த இத் தோள்கள், (இன்று அதற்குமேலே), பணை நீங்கி - (தமது) பெருமை யிழந்து, பைந்தொடி - வளையல்கள், சோரும் - கழலுகின்றன, (இவை இவ்வாறு செய்யுந் தன்மையனவல்ல), (எ - று).

பெருமையிழத்தல் - (தோள்கள்) இளைத்தல். பைந்தொடி - பசிய பொன்னுற்செய்த வளையல். வளையலது தொழிலான சோருதலைத் தோள் மேலேற்றித் தோள்சோரும் என்று கூறினமையின், இஃது இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேலாய வுபசார வழக்காம். தோள்கள் அன்றும் பிரிந்தாரென்று அவரன்பில்லாமையை யுணர்த்தி இன்றுங் குறித்த பருவத்தில் வந்திலரென்று அவர் பொய்ம்மையை யுணர்த்துகின்றன; இனி அவற்றைச் சொல்லுகிறவர்மீது குறையுண்டோ வென்பதாம்.

(க - து.) தோழி தலைவியே! காதலர் பிரிவால் செயற்கை யழகேயன்றி யியற்கையழகு மிழந்த உன் தோள்கள் வளையல்கள் கழலுமாறு மிகவும் மெலிந்தனவென்று ளென்பது.

4. Owing to the separation of the lover, the shoulders have lost their wonted charms, and the gold armlets have become loose.

ரு. கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியோடு
தோள்கவின் வாடிய தோள்.

[இதுவுமது.]

பரி:—(இ-ள்.) † கவவுக்கை நெகிழினும் ‡ ஆற்றதாட்ட இக்கால நீட்டத்து என்னுமென்று நினையாத கொடியாரது கொடுமையைத் தாமே சொல்லாநின்றன, வளைகளுங் கழன்று பழையவியற்கை யழகு மிழந்த இத்தோள்கள், இனி ¶ யதனை யாமறைக்குமாறெங்ஙனே?

---

* அவற்றை - காதலாது அன்பில்லாமையையும் பொய்ம்மையையும்.

† கலித்தொகை (பாலைக்கலி - 32.) "கவவுக் கைநெகிழாது (அகத்திடுதலே யுடைய கையை நெகிழாதே)" என்று கூறுவ திங்குணர்தற்பால தாம். ‡ ஆற்றுதாள் என்றும் பாடமுண்டு.

¶ அதனை - கொடியாரது கொடுமையை.

* உரைக்குமென்பது † அப்பொருண்மை தோன்ற நின்ற குறிப்புச் சொல். ‡ ஒடு வேறுவினைக்கண் வந்தது. அவரொடு கலந்த தோள்களே சொல்லுவனவாஞல், அயலார் சொல்லுதல் சொலல்வேண்டுமோ வென்பதாம்.

நேளி:—[இதுவுமது.] (இ - ள்.) கொடியார் - (தழுவுங்கை விலகினலும் பொறுதவளுக்கு இக்கால நீட்டிப்பில் என்னுமென்று நினையாத) கொடியவராது, கொடுமை - கொடுமையை, உரைக்கும் - (தாமே) சொல்லுகின்றன, தொடியொடு - வளைகளுங் கழன்று, தொல்கவின் வாடியதோள்- பழைய (இயற்கை) யழகுமிழந்த இத்தோள்கள், (இனி அதனை யாம் மறைக்கும் விதம் யாது,) (எ - று.)

உரைக்கும் என்பது அப்பொருள் தோன்ற நின்ற குறிப்புச்சொல். 'தொடியொடு' என்ற ஒடுவுருபு வேறு வினையில் வந்தது. அவரோடு கலந்த தோள்களே (அவரது கொடுமையைச்) சொல்லுவனவாஞல், அயலார் சொல்லுதல் சொலல்வேண்டுமோ வென்பதாம்.

(க - து.) தோழி தலைவியே! வளையல்களுடன் தமதழகையு மிழந்த உன்தோள்கள் தலைவரது அன்பில்லாமையைப் பிறர்க்குத் தெரிவிக்கின்றன வென்றாளென்பது.

5. These wasted shoulders with the loosened bracelets now declare the cruelty of the pitiless one.

* குறிப்புச்சொல்லாகிய உரைக்குமென்னுஞ் செய்யுமென்னுமுற்று

ஆண் பெண் ஒன்று பல என்னும் நாற்பாற்கும் பொதுவாயினும், ஈண்டுப் பொதுமையினின்றும் நீங்கிச் சொல்லா நின்ற என்று பலவின்பாற்கண் வந்தது. தோள் உரைக்கும் என்று கூறினமையின், உரைக்கும் என்பது இலக்கணைச்சொல். இலக்கணைச் சொல் குறிப்புச் சொல்லி லடங்குவதாம்.

† அப்பொருண்மை - விளங்க வுணர்த்துவபோல மெலியா நின்றன என்னுமப்பொருள். இவ்வதிகாரத்தின் மூன்றுவது குறளிலுள்ள 'சால வறிவிப்பபோலும்' என்பதற்கு 'விளங்க வுணர்த்துவபோல மெலியாநின்றன' என்று பொருள் வரைந்திருப்பதுணர்க.

பரத்துமென்னும் பொருண்மை என்றும் பாடமுண்டு.

‡ 'தொடியொடு தொல்கவின் வாடியதோள்' என்றவிடத்து வாடிய என்னும் வினைகொண்டு முடியும்பொருள் கவின்; அக்கவினது தொழில் வாடல்; அவ்வாடுதற் றொழிலுண்டாகுமிடத்து உண்டாகும் வேறுதொழில் சோர்தல்; அச்சோர்தலையுடையது தொடியாதலால், தொடி வேறுவினையுடனிகழ்ச்சிப் பொருளில் வந்ததாமென்க.



சூ. தொடியொடு தோணெகிழ * நோவ லவரைக்
கொடிய ரெனக்கூற லெந்து.

[சாலுற்றுதற்பொருட் டியற்பழித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) யானுற்றவும் என்வயத்த வன்றித் தொடிகள் கழலுமாறு தோள்கண் மெலிய, † அவற்றைக்கண்டு, நீ யவரைக் கொடியரெனக் கூறுதலைப் பொறாது யானென்னுள்ளே நோவா நின்றேன், (எ-று).

ஒடு மேல்வந்த பொருண்மைத்து. யானுற்றே னெகின்றது அவர் வாரா

தற்கன்று; நீ கூறுகின்றதற்கென்பதாம்.

தெளி:—(தான் பொறுத்தற்பொருட்டுத் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது.) (இ - ள்.) (யான் பொறுக்கவும் என் வயத்தனவாகாது) தொடியொடு - வளையல்கள் கழலும்படி, தோணெகிழ - தோள்கள் மெலிய, (அவற்றைக் கண்டு), அவரைக் கொடியரென்க் கூறல் - (நீ) அக்காதலரைக் கொடியவரென்று சொல்லுதலை, கொந்து-பொருமல், நோவல் - (யான் என்னுள்ளே) நோகின்றேன், (எ - று).

தொடியொடென்ற ஒடுவுருபு மேலுள்ள குறளிற்போல வேற்று வினையில் வந்தது. யான் பொறுதவளாகின்றது அவர் வாராதிருத்தற்கன்று; (தோழியே!) நீ சொல்லுகின்றதற்கென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியே! நீ காதலரைக் கொடியரெனப் பழித்துக் கூறுதல்பற்றி நான் வளையல்கள் கழலும்படி தோள்களிளைக்க வருந்துதல் மேலும் மிகவும் வருந்துகின்றே னென்றாளென்பது.

6. I grieve to hear you call him a cruel man, because the armlet has loosened from my wasted arm.

---

எ. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூச லுரைத்து.

[அவ்வியற் பழிப்புப் பொறுது தன் னெஞ்சிற்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நெஞ்சே! இவள் கொடியா ரென்கின்றவர்க்கு நீ சென்று என் மெலிகின்ற தோளினுல் விளைகின்ற ஆவாரத்தைச்

---

*நோவல் - அல்லீற்றுத் தன்மை யொருமை வினைமுற்று.

† அவற்றை - தொடிகள் கழறுமாறு தோள்கள் மெலிவனவற்றை.

சொல்லி ஒரு மேம்பாடெய்த வல்லையோ? வல்லையாயின், அதனை யோப்பதில்லை, (எ - று).

* 'கொடியார்க்கு' என்பது கொடியரல்ல ரென்பது தோன்ற நின்ற குறிப்புச்சொல், 'வாடுதோள்' என்பதும் † அவைதாமே வாடா நின்றன வென்பது தோன்ற நின்றது ()பூசல்-ஆகுபெயர்; † அஃது அவள்தோணெக்கி யியற்பழித்தன்மேலும் அதனைத் தனக்காற்றுமை மிகன் மேலும் நின்றது. ‡ நின்னுரை கேட்டலும் அவர் வருவர்; வந்தால் ¶ இவையெல்லாம் நீங்கும்; நீங்க, $ அஃதெனக்குக் § காலத்தினாற்செய்த நன்றியாமாகலின், || அதன் பயனெல்லா மெய்துதி யென்னுங்கருத்தாற் 'பாடுபெறுதியோ' என்றாள்.

தெளி:—(அவ்வியற்பழித்தல் பொறாது தலைமகள் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.) (இ - ள்.) நெஞ்சே-,கொடியார்க்கு - (இத்தோழி)கொடியவளொன்று சொல்லுகின்றவர்க்கு, (நீ சென்று),என் வாடுதோள் - எனது மெலிகின்ற தோளினுல், (விளைகின்ற), பூசல்-ஆரவாரத்தை, உரைத்து-சொல்லி, பாடு - ஒரு மேம்பாட்டை, பெறுதியோ - அடையவல்லையோ? (வல்லையாயின், அதனை யொப்பது இல்லை), (எ - று).

'கொடியார்க்கு' என்பது கொடியவரல்லரென்பது தோன்றநின்ற குறிப்புச்சொல். வாடுதோளென்பதும் அவைதாமே வாடா நின்றன வென்பது தோன்ற நின்றது. பூசல்—கருவியாகுபெயர்; அஃது அத்தோழி தோளைப்பார்த்துத் தலைமகனை யியற்பழித்தல் மேலும் அவ்வியற்பழித்தலால் தனக்குப் பொறுக்காமை மிகுதல் மேலும் நின்றது.உன் சொல்லைக் கேட்டவுடன் அவர் வருவார்; வந்தால் இவையெல்லாம் நீங்கும்; நீங்கவே,

---

*கொடியாரென்னு முடன்பாட்டுச்சொல் கொடியாரல்லரென்னும் எதிர்மறைப்பொருளை யுணர்த்தினமையின், குறிப்புச்சொல்லாயிற்று.

இது விதிச்சொல் மறைப்பொருளாகி வந்ததாம்.

† அவை - தோள்கள்.

() பூசலென்னுங் கருவிப்பெயர் அதனுலாகிய ஆரவாரத்தையுணர்த்து தலால், கருவியாகுபெயராம். பூசல் - சண்டை. + அஃது - ஆரவாரம்.

‡ நின்னுரை - நெஞ்சே! உன் வார்த்தையை.

¶ இவையெல்லாம்-தோழி தலைமகனது ஒழுக்கத்தைப் பழித்தலும், கண்கள் நாணுதலும், அழுதலும், தோள்கள் மெலிதலுமாகிய இவை யெல்லாம்.

$ அஃது - நின்னுரை.

§ திருக்குறள் செய்ந்நன்றி யறிதல்,உ. இதன் பொருள். ஒருவனுக்கு மூடிவு வந்தவிடத்து ஒருவன் செய்த வுபகாரம் என்பது.

|| அதன் பயனெல்லாம் - அந்நன்றியின் (அவ்வுபகாரத்தின்) பிர மோஜன மெல்லாம்.



அஃது எனக்குக் காலத்திலுற் செய்த நன்றியா மாகலின், அதன் பய னெல்லாம் அடைவாயென்னுங் கருத்தால் 'பாடு பெறுதியோ' என்ருள்.

(க - து. தலைமகள் தன்னெஞ்சை நோக்கி, நெஞ்சே! நீ எனது தோள்களின் மெலிவாலுண்டாகுந் துன்பத்தைக் காத லர்க்குரைத்து எனக்கு நன்மையுண்டாக்க வேண்டுமென்றதனை வேண்டிக்கொண்டனள் என்பது.

7. Can you O my heart! gain glory by complaining to the alleged cruel one the clamour of my wasting shoulders.

அ. முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

‡ வினைமுடித்து மீடலுற்ற தலைமகன் முன்னிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியது.]

பரி:—(இ - ள்.) தன்னையிறுக முயங்கிய கைகளை இவட்குநோ மென்று கருதி ஒருநாள் றியாளெகிழ்ந்தேனாக ; அத்துணையும் பொறாது † பைந்தொடிகளை யணிந்த பேதையது நுதல் பசந்தது; அப்பேர் றித்தாய நுதல் இப்பிரிவிற்கியாது செய்யுமோ, (எ - று).

இனிக் கடிதிற் செல்லவேண்டுமென்பது கருத்து.

தெளி:—[மேற்கொண்ட வினையை முடித்துத் திரும்பி வருதலுற்ற தலைமகன் முன்னிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியது.]

(இ - ள்.) முயங்கிய கைகளை - (தன்னையிறுகத்) தழுவிய கைகளை, (இவளுக்கு நோமென்று நினைத்து), ஊக்க - (ஒருநாள் யான்) தளர்த்தினேனாக, (அவ்வளவும் பொறாமல்), பைந்தொடிப்பேதை - பைந்தொடிகளை யணிந்த பேதையினது, நுதல் - நெற்றியானது, பசந்தது - நிற வேறுபாடடைந்தது, (அத்தன்மையதாய நெற்றி இப்பிரிவிற்கு யாது செய்யுமோ)? (எ - று).

இனி விரைவிற் செல்லவேண்டுமென்பது கருத்து.

(க - தி.) வினைமுடித்துத் திரும்பிவரும் தலைமகன் தனது சிறிது பிரிவினுண்டாகிய தலைமகளது நுதற்பசப்பைக் கருதி விரைந்து செல்ல வெண்ணினானென்பது.

---

‡ வினைமுடித்துமீடலுற்ற தலைமகன்-ஒருவேந்தனுக்குதவி செய்யப் பிரிந்து வினை (சண்டையை) முடித்துத் திரும்பிய தலைமகன்.

† பைந்தொடிகளை = பசும்பொன்னாற்செய்த வளையல்களை.

8. When I once loosened the pressure of my embracing arms, the forehead of the woman with gold armlet grew wan. (What would such a forehead do to this separation?)



கூ. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்பற்ற
பேதை பெருமழைக் கண்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள.) அங்ஙனங் கைகளை யூக்கதலான் அம்முயக்கிடை யே சிறு காற்று நுழைந்ததாக அத்துணை யிடையீடும் பொறாது, பேதையுடைய பெரிய மழைக் கண்கள் பசப்புற்றன; அத்தன்மைய வான கண்கள் மூவுலகும் காடும் நாடுமாய * இவ்விடையீடுகளையெல் லாம் யாங்ஙனம் பொறுத்தன? (எ - று).

தண்மை - ஈண்டு மென்மைமேனின்றது. போழவென்றது உடம்பி ரண்டும் ஒன்றானது தோன்ற நின்றது. மழை - குளிர்ச்சி.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) (அவ்வாறு கைகளைத்தளர்த்தலால்)

முயக்கிடை-அப்புணர்ச்சிக்கு நடுவே, தண்வளிபோழ-சிறுகாற்று நுழைந்ததாக, (அவ்வளவு இடையீடும் பொறாமல்), பேதை பெருமழைக்கண் - பேதையினது பெரியமழைக் கண்கள், பசப்புற்ற - பசலைநிறமடைந்தன, (அத்தன்மையனவாய கண்கள் மலைகளும் காடும் நாடும் ஆகிய இவ்விடைபீடுகளை யெல்லாம் எவ்வாறு பொறுத்தன)? (எ - று).

தண்மை-இங்கு (காற்றினது) மென்மைமேல் நின்றது. போழ என்றது இருவருடம்பும் ஒன்றுனமை தோன்ற நின்றது. மழை - குளிர்ச்சி. தண்வளி-- மெல்லிய (சிறு) காற்று.

(க - து.) தலைமகன் தனது சிறிது பிரிவினுலுண்டாகிய தலைமகளது கண்களின் பசப்பை யெண்ணி வருந்தினனென்பது.

9. When but a breath of breeze found entrance during our embrace, the woman's large liquid eyes turned sallow. (How did such eyes endure the intervening mountains, forests and countries?)

ம. கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே
பொண்ணுதல் செய்தது கண்டு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) தண்வளி போழவந்த கண்ணின் பசப்புத் துன்பமுற்றது, தனக்கியலாய ஒண்ணுதல் விளைத்த பசப்பைக் கண்டு, (எ).

* இவ்விடைபீடுகளை - இத்தடைகளை.

* அது கைகளை யூக்க அவ்வளவிற் பசந்தது ; யான் கைகளையு மூக்கி மெய்களு நீங்கிச் சிறுகாற்று ஊடறுக்கும் துணையும் பசந்திலனெனத் தன் வன்மையும் † அதன் மென்மையுங் கருதி ‡ வெள்கிற் றென்பதாம் ; ஆகவே, அவளுறுப்புக்கள் ஒன்றினொன்று முற்பட்டு ¶ கலனழியும் ; யாங் கடிதிற் சேறுமென்பது கருத்தாயிற்று.

தெளி:—[இதுவுமது.] ( இ - ள்.) கண்ணின் பசப்பு - (சிறுகாற்று நுழையவந்த) கண்ணின் பசப்பு, பருவாலெய்தின்று - தன்பமடைந்தது, ஒண்ணுதல் - (தனக்கு அயலாகிய) ஒளிபொருந்திய நெற்றி, செய்தது - விளைத்த பசப்பை, கண்டு - பார்த்து, (எ - று).

அது கைகளைத் தளர்த்த அவ்வளவில் பசந்தது ; (கண்) யான் கைகளையும் தளர்த்தி மெய்களும் நீங்கிச் சிறுகாற்று உள்ளே வந்து நுழையுமட்டும் பசந்திலே னென்று தன்வன்மையையும் அதன்மென்மையையும் கருதி வெள்கிற்றென்பதாம் ; ஆகவே, அவளுறுப்புக்கள் ஒன்றினொன்று முற்பட்டு கலனழியும், யாம் கடிதிற் செல்லுவோ மென்பது கருத்தாயிற்று. பசப்பு-நிறவேறுபாடு. மெய் - உடம்பு. ஒ, எ - அசை.

(க - து.) தலைமகன் தனது சிறிது பிரிவினல் தலைமகளது உறுப்புக்கள் ஒன்றினொன்று முற்பட்டு கலனழிந்தமையை யெண்ணி வருந்திஞ னென்பது.

10. Was it beholding what the bright forehead has done that the dimness of her eyes felt sorrow ?



## 10 - வது அதிகாரம்.

## நெஞ்சொடு கிளத்தல்:—Soliloquy.

பரி:—அஃதாவது ஆற்றமை மீதூரத் தனக்கேகார் பற்றுக்கோடு காணுத தலைமகள் தன்னெஞ்சொடு செய்திறனறியாது சொல்லுதல். || இஃது உறுப்புக்கள் தந்நலனழிந்தவழி நிகழ்வதாகலின், உறுப்பு நலனழிதலின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது பிரிவினைப்பொறுமை அதிகரிக்கத் தனக்கு ஓர் பற்றுக்கோடு காணுத தலைமகள் தன்னெஞ்சோடு செய்திறன் அறியாது

---

* அது - துதல்(நெற்றி).

† அதன் மென்மையும் - நெற்றியின் மென்மையையும்.

‡ வெள்கிற்று - வெட்கமடைந்தது. ¶ நலனழியும் - அழகுகெடும்.

|| இஃது - நெஞ்சொடு கிளத்தல்.



சொல்லுதல். இஃது உறுப்புக்கள் தமது நலனழிந்தபோது நிகழ்வதாகலால், உறுப்புநல னழிதலின்பின் வைக்கப்பட்டது.

க. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்று
மெவ்வநோய் தீர்க்கு மருந்து.

[தன்னேற்றமை நீருந்திறனுடியது.]

பரி:—(இ - ள்.) நெஞ்சே ! இவ்வெவ்வ நோயினைத் தீர்க்கு மருந் தாவதொன்றினை யானறியு மாற்றலிலன், எத்தன்மைய தியாதொன் றாயினும் நீ யறிந்தெனக்குச் சொல், (எ - று).

எவ்வம் - ஒன்றனுந் தீராமை. * உயிரினுஞ் சிறந்த நாணினை விட்டுச் செய்வதியாதொன்றுயினு மென்பான் ' எனைத்தொன்றும் ' என்றுள்.

தெளி:—(தலைமகள் தன்னுற்றுமை தீருந்திறத்தைநாடியது.](இ-ள்.) நெஞ்சே-, எவ்வநோய்-இவ்வெவ்வநோயினை, தீர்க்கு மருந்து ஒன்று - தீர்க்கும் மருந்தாவதொன்றனை, (நான் அறியும் வன்மையுடையேனல்லன்), எனைத்தொன்றும்-எத்தன்மையதுயாதொன்றுயினும், நினைத்து-(நீ) அறிந்து, சொல்லாய் - (என்க்குச்) சொல்வாய், (எ - று).

எவ்வம்-ஒருவகையாலும் தீராமை. (தலைமகள்) உயிரினுஞ் சிறந்த நாணினைவிட்டுச் செய்வது யாதொன்றுயினு மென்பாள் 'எனைத்தொன்றும்' என்றாள். எவ்வநோய் - எதனாலுந் தீராதநோய். ஓ - அசை.

(க - து.) தலைமகள்! நெஞ்சே எனது காமநோய் தீருதற்குரிய மருந்தொன்றை நீ யோசித்துச் சொல்ல வேண்டுமென்றாள் என்பது.

1. O my mind! Will you not think and tell me some medicine that can cure this incurable disease.

உ. காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு

* "தாயிற் சிறந்தன்று நாண்டையு லாருக்கந் நாண்டகைசால், வேயிற் சிறந்தமென் றோளிதிண் கற்பின் விழுமிதன்று" என்று திருக்கோவையார் கூறுவதும், "வெளிப்பட்ட பின்றையு முரிய கிளவி" என்னுமிறையனாரகப் பொருள் சூத்திர உரையில் "நாணுக் கற்பென்னும் இரண்டல்லவோ அவள் கண்ணுள்ள; அவற்றுள் நாணிற்கற்பு வலியுடைத்து; என்னை? வலியுடையவாறெனின், 'உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று' என்பதாகலான்; நாண் அழியினும் கற்பழியாமை நினைக்கும்." என்றிருப்பது மிங்குணர்த்தற்பாலனவாம்.

[தலைமகனைக் காண்டற்கண் வேட்கை மிகுதியாற் சொல்லியது.]

பரி:—(இ-ள்.) என்னெஞ்சே ! வாழ்வாயாக, அவர் நங்கட் காதலிலராகவும் நீ யவர் வாவுநோக்கி வருந்துதற்கேது நின்பேதைமையே, பிறிதில்லை, (எ-று).

நம்மை நினையாமையின் நங்கட் காதலிலரென்ப தறியலாம் ; * அஃ தறியாமை மேலும் அவர்பாற் செல்லக் கருதாது அவர் வாவு பார்த்து வருந்தா நின்றாய் ; இது நீ செய்துகொள்கின்ற தென்னுங் கருத்தாற் 'பேதைமை' என்றாள். வாழி இகழ்ச்சிக் குறிப்பு. யாமவர்பாற் சேறலே அறிவாவ தென்பதாம்.

தெளி:—(தலைமகள் தலைமகனைக் காணுதலில் ஆசை மிகுதியால் சொல்லியது.) (இ - ள்.) என்னெஞ்சு - என் நெஞ்சே, வாழி - வாழ்வாயாக, அவர் -, காதலிலராக - (நம்மிடத்து) ஆசையிலராகவும், நீ நோவது- நீ (அவர் வாவு பார்த்து) வருந்துதற்குக் காரணம், பேதைமை - (உன்) அறியாமையே, (வேறு இல்லை), (எ - று).

தலைமகள் நெஞ்சே ! காதலர் நம்மை நினையாமையால் நம்மிடத்து ஆசையிலரென்ப தறியலாம் ; அதனையறியாமல் மேலும்அக்காதலரிடத்துப் போக நினையாது அவர் வாவு பார்த்து வருந்துகின்றாய் ; இது நீ செய்து கொள்ளுகின்ற தென்னுங் கருத்தால் 'பேதைமை' என்றாள். வாழி - இகழ்ச்சிக் குறிப்புச்சொல். யாம் அவரிடத்துச் செல்லுதலே அறிவாவ தென்பதாம்.

(க - து.) தலைமகள் நெஞ்சே! நீ நம்மிடத்து ஆசையில்லாத தலைவரது வரவை நோக்கி வருந்துதல் தகுதியாகாதென்றாள்.

2. May you live O my mind! While he loves not, for you to smart is folly indeed.

ரு. இருந்துள்ளி யென்பரித நெஞ்சே பரிந்துள்ளல்
பைதலேய் செய்தார்க ணில்.

[இதுவும்.]

பரி:—(இ - ள்.) நெஞ்சே! அவர்பாற் செல்வதுஞ் செய்யாது ஈண்டிறந்து படுவதுஞ் செய்யாதிருந்து அவர்வாவு நினைந்து நீவருந்துகின்ற தென்னை? இப்பையுளேய் செய்தார்மாட்டு நமக்கிரங்கிவாக் கருதுதல் உண்டாகாது, (எ - று).

* அஃதறியாமை - தலைவர் நம்மிடத்து ஆசையில்லாதவரென்பதறியாமல்.



நம்மாட்டருளுடைய ரன்மையிற் ருமாக வாரார்; நாஞ்சேறலே இனித்தகுவ தென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) நெஞ்சே-, இருந்து-(அவரிடத்துச் செல்வதுஞ் செய்யாது இங்கு இறந்துபடுவதும் செய்யாது) இருந்து, உள்ளி - (அவர்வரவை) நினைந்து, பரிதல் - (நீ) வருந்துகின்றது, என் - என்னை, பைதலேய் செய்தார்கண்-இத்துன்பநோய் செய்தாரிடத்து, பரிந்து - (நமக்கு) இரங்கி, உள்ளல் - (வர) நினைத்தல், இல் - உண்டாகாது.

காதலர், நம்மிடத்து அருளுடையவரல்லாமையால் தாமாக வாரார்; நாம் அவரிடத்துச் செல்லுதலே இனித்தகுவ தென்பதாம்.

(க - து.) தலைமகள் நெஞ்சே ! நீ காதலரிடத்துச் செல்லா திருந்து அவராதுவரவை நோக்கிவருந்துதல் தகுதியுடைய தாகா தென்று வென்பது.

3. O my mind! Why remain here sitting in pining thought? there are no pitying thoughts (of you) in him who has caused you all these wasting owes.

ச. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) நெஞ்சே, நீயவர்பாற் சேறலுற்றாயின் இக் கண்களையும் உடன்கொண்டு செல்வாயாக; * அன்றி நீயே சேறியா யின், இவை தாங் காட்சி விதுப்பினஸ் அவரைக் காண்டல்வேண்டி நீ காட்டென்று என்னைத் தின்பனபோன்று நலியா நிற்கும், (எ - று).

கொண்டென்பது கொளவெனத்திரிந்து நின்றது. தின்னுமென்பது இலக்கணைக்குறிப்பு. † அந்நலிவு தீர்க்கவேண்டு மென்பதாம். ‡ என்றது தான் சேறல் குறித்து.

தெளி:—[இதுவுமது.] (இ-ள்.) நெஞ்சே-, (நீ அவரிடத்துச் செல்ல லுற்றாயின்), கண்ணுங்கொளச்சேறி - இக்கண்களையும் உடன்கொண்டு செல்வாயாக, (அல்லாமல் நீயே செல்வாயானால்), இவை - இக்கண்கள், அவர்க்காணலுற்று - (தாம் காண்டற்கு விரைதலால்) அவரைக்காணல்

---

* அன்றி - இக்கண்களையும் உடன்கொண்டு செல்வதன்றி.

† அந்நலிவு தீர்க்கவேண்டும் —கண்கள் என்னைத் தின்பனபோன்று வருத்துதலை யொழித்தல் வேண்டும்.

‡ என்றது - (தலைமகள் நெஞ்சே! நீ) அந்நலிவு தீர்க்கவேண்டு மென்றது தான் தலைமகளிடத்துச்செல்லுதலைக் குறித்தாம்.

வேண்டி, (நீ காட்டென்று),என்னை-, தின்னும் - தின்பனபோன்று வருத்தாநிற்கும், (எ - று).

கொண்டென்னும் செய்தெனெச்சம் கொளவென்னும் செயவெனெச்சமாகத் திரிந்துநின்றது, வாயினது தொழிலாயதின்னுதற்றொழிலைக் கண்ணின்மீதேற்றி இவை (கண்கள்) தின்னும் என்று கூறினமையின், தின்னும் என்பது ஒருபொருளின் தொழிலை மற்றொரு பொருளின்மீதேற்றிக் கூறிய இலக்கணைக் குறிப்புச்சொல்லாம். அந்நலிவு தீர்க்கவேண்டுமென்பதாம். என்றது தான் செல்லுதல் குறித்தாம்.

(க - து.) தலைமகள் நெஞ்சே! நீ காதலரிடத்துச் செல்வாயானால், என்னைவருத்தும் கண்களையுமுடன்கொண்டுபோ என்றாள்.

4. O my mind! take my eyes also with you; else, they longing to see him, wear my life away.

---

கு. செற்ற ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா
முற்ற லுருஅ தவர்.

[இதுவுமது.)

பரி:—(இ - ள்.) நெஞ்சே! யாம் தம்மையுறத் தாழுறத நீங்காத லரை வேறுத்தாரென்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும் வலி நமக்குண்டோ? இல்லை, (எ - று).

உறுதல் - அன்புபடுதல். † அவ்வலியின்மையின் அவர்பாற் செல்வதே நமக்குத் தகுவ தென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) நெஞ்சே-, யாம் - நாம், உற்றுல்- (தம்மை) விரும்ப, உறு அதவர் - (தாம்) விரும்பாத நமது காதலரை, செற்றாரென - வெறுத்தாரென்று (நினைந்து), கைவிடல் - (பிணங்கிக்) கைவிட்டிருக்கும் வலி, உண்டோ - (நமக்கு) உண்டோ, (இல்லை).

உறுதல் - அன்புபொருந்துதல். அவ்வலியில்லாமையால் அவரிடத்துச் செல்வதே நமக்குத் தகுவதென்பதாம்.

(க - து.) தலைமகள் நெஞ்சே! நம்மை வெறுத்துள்ள காதலரை நாம் வெறுத்திருத்தல் முடியுமோ? முடியாது என்றாளென்பது.

5. O my mind! Can I forsake him who, though I long for him, longs not for me?

† அவ்வலி - நம்காதலரை வெறுத்தாரென்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும் வலி. வலி - சாமர்த்தியம்.



கூ. கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென நெஞ்சு.

[தலைமகன் கொடுமை நினைந்து செலவுடன்படாத
தெஞ்சினைக் கழறியது.]

பரி:—(இ - ள்.) என்னெஞ்சே ! யான்றம்மொடு புலந்தால் அப் புலவியைக் கலவிதன்னுளே நீக்கவல்ல காதலரைக் கண்டாற் பொய் யேயாயினும் ஒருகாற் புலந்து பின்னதனை நீங்கமாட்டாய் ; * அதுவு மாட்டாத நீ இப்பொழுது அவர் கொடியரெனப் பொய்க்காய்வு காயா நின்றாய் ; இனி † யிதனை யொழிந்து அவர்பாற் செல்லத் துணிவா யாக, (எ - று).

கலத்தலா னென்னும் பொருட்டாய கலக்கவென்பது திரிந்து நின் றது. அதனை யுணர்த்தலாவது கலவியின்பத்தைக் காட்டி அதனுன் மயக் கிப் புலவிக் குறிப்பினை யொழித்தல். பொய்க்காய்வு - நிலையில் வெறுப்பு. கண்டான் மாட்டாத நீ காணுதவழி வெறுக்கின்றதனாற் பயனில்லை யென் பதாம்.

தெளி:—[தலைமகள் தலைமகனது கொடுமையை நினைந்து அவனிடத்துச் செல்லுதற்கு உடன்படாத நெஞ்சினையிடித்துச் சொல்லியது.] (இ - ள்.) என்னெஞ்சு-எனது நெஞ்சே, (யான் தம்மோடு பிணங்கினை லப் பிணக்கை), கலந்து-புணர்ச்சி தன்னிலே, உணர்த்தும் காதலர் - நீக்கவல்ல காதலரை, கண்டால் - பார்த்தால், புலத்து - (பொய்யாகவேயாயினும் ஒரு முறை) பிணங்கி, உணராய்-(பின் அதனை) நீங்கமாட்டாய்,(அதுவுமாட்டாத நீ இப்போது), பொய்க்காய்வுகாய்தி-(அவரைக் கொடியவரென்று) பொய்க் காய்வு காயாநின்றாய், (இனி யிதனை யொழிந்து அவரிடத்துச் செல்லத் துணிவாயாக), (எ - று).

கலத்தலால் என்னும் பொருளினதாய கலக்கவென்பது கலந்து எனத் திரிந்து நின்றது. அக்கலத்தலா லுணர்த்தலாவது கலவியின்பத்தைக் காட்டி அவ்வின்பத்திலுல் மயக்கிப் பிணக்கின்குறிப்பினை நீக்குதல். பொய்க்காய்வு - நிலையில்லாத வெறுப்பு. காதலரைக் கண்டால் வெறுக்க மாட்டாத நீ காணுதவிடத்து வெறுக்கின்றதனால் பயனில்லை யென்பதாம்.

(க - து.) தலைமகள் காதலரைக் கண்டவிடத்து வெறுக்காத நெஞ்சே! நீ இப்போது அவரைவெறுத்தல்தகுதியாகாது; ஆகவே, அவரிடத்துச் செல்லத் துணிவாயாக என்று ளென்பது.

---

* அதுவுமாட்டாத-பொய்யே யாயினும் ஒருகாற் புலத்தலுஞ்செய்ய மாட்டாத.

† இதனை - பொய்க்காய்வு காய்தலை. (நிலையில் வெறுப்புச் செய்தலை).



6. O my mind! When you see the lover who removes your displeasure by embrace, you cannot show it falsely at least; nay, false is the fire that burns in you.

ஏ. காமம் விடவொன்றே நாண்விட நன்னெஞ்சே
யாரே பொறேனிவ் விரண்டே.

[நாண் தடுத்தலின் அச்செலவொழிவாள் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நல்ல நெஞ்சே! ஒன்றி னுண்விடமாட்டாயாயிற் காம வேட்கையைவிடு, ஒன்றி னது விடமாட்டாயாயின் நாணினை விடு, அன்றியே * இரண்டும் விடாமை நின் கருத்தாயின், ஒன்றற்கோ

ன்று மறுதலையாய † இவ்விரண்டனையும் ‡ உடன்றுங்தமதுகை யாளி லன், (எ - று).

யாளெவென்னும் பிரிநிலை நீ பொறுப்பினு மென்பதுபட நின்றது. நன்னெஞ்சே யென்றது ¶ இரண்டையும் விடாது பெண்மையை நிலை பெறுத்தலின், $ நல்லையென்னுங் குறிப்பிற்று. || அது நன்றே யெனி னும் என்னுயிருண்டாதல் சாலாமையின், | அதற்காகின்றிலே னென் பதாம். முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

தெளி:—[நாணம் தடுத்தலால் அச்சொல்லுத லொழியுந் தலைமகள் சொல்லியது.] (இ - ள்) நன்னெஞ்சே - நல்ல நெஞ்சே, ஒன்று காமம் விடு - ஒன்றிலுல் (நாணத்தை விடமாட்டாயாயின்) காமவிருப்பத்தை விடு, (ஒன்று) நாண்விடு - ஒன்றிலுல் (அக்காமவிருப்பத்தை விடமாட்டா யாயின்) நாணத்தை விடு, (அல்லாமலே இரண்டும் விடாமை உன் கருத்தா யின்), இவ்விரண்டும் - (ஒன்றற்கொன்று பகையாகிய) இவ்விரண்டனை யும், யாளை—,பொறேன் - (ஒரு சேரத்) தாங்கும் வலிமையுடையே னல் லேன், (எ- று).

யாளெவென்னும் பிரிநிலை யோகாரம் ( நெஞ்சே !) நீ பொறுப்பினு மென்பது தோன்ற நின்றது. நன்னெஞ்சே யென்றது இரண்டையும் விடாமல் பெண்மையை நிலைபெறச் செய்தலால், நல்லையென்னுங் குறிப் பின்கண் வந்தது. அது நன்றே யெனினும் என்னுயிருண்டாதல் அமை

---

* இரண்டும் - காமமும் நாணுமென்னுமிரண்டனையும்.
† இவ்விரண்டனையும் - காமம் நாண் என்னுமிவ்விரண்டனையும்.
‡ உடன்றுங்குமதுகை - ஒருமித்துத்தாங்குஞ் சாமர்த்தியம்.
¶ இரண்டையும் - காமம் நாண் என்னு மிரண்டையும்.
$ நல்லை - நற்குணமுடையாய்.
|| அது - பெண்மையை நிலைபெறச்செய்தல்.
| அதற்கு - பெண்மையை நிலைபெறச்செய்தற்கு.

யாமையின், அதற்கு ஆகின்றிலே னென்பதாம். இரண்டுமென்னும் முற்றும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. ஓ - அசை.

(க - து.) தலைமகள் நெஞ்சே! யான் காமம் நாண் என்னும் இரண்டனையுந் தாங்கும் வலியின்றியவளா யிருக்கின்றேன்; ஆதலால், நீ இவ்விரண்டனுள் யாதாயினுமொன்றனை விட்டுவிடு என்றாளென்பது.

7. O my worthy mind! give up either love or honor; I cannot bear them both.

ஆ. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் னெஞ்சு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) என்னெஞ்சே! அவர் இவ்வாற்றமையை யறியாமையின் நொந்துவந்து தலையளி செய்யாராயினரென்று கருதி * அஃதறிவித்தற் பொருட்டு நம்மைப் பிரிந்து போயவர்பின் ஏங்கிச்செலலுற்ற நீ யாதுமறியாய், (எ - று).

ஆற்றுமை கண்டுவைத்தும் நல்காது போயினரைக் காணுத வழிச் சென்றறிவித்த தூணையானே நல்க வருவரென்று கருதினமையிற் 'பேதை' என்றாள்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) என்னெஞ்சு - எனதுநெஞ்சே, அவர் - அக்காதலர், (இவ்வாற்றுமையை அறியாமையால்), பரிந்து - நொந்து, (வந்து), நல்காரென்று - அருள்செய்யாராயினரென்று, (நினைத்து), (அதனை அறிவித்தற் பொருட்டு), பிரிந்தவர்பின் - (நம்மைப்) பிரிந்து போயவர் பின்னே, ஏங்கிச்செல்வாய் - இரங்கிப்போகலுற்றனீ, பேதை -

யாதுமறியாய், (எ - று).

ஆற்றுமை (பொறுக்காமை)யை யறிந்திருந்தும் அருள்செய்யாமல் போயினரைக் காணுதவிடத்துச் சென்று அறிவித்த அளவாலே அவர் அருள்செய்ய வருவாரென்று நினைத்தமையால் 'பேதை' என்றாள்.

(க - து.) தலைமகள் நம்மிடத்து அருள்செய்யாது சென்ற காதலரிடத்துவங்கிச் செல்லலுற்றநெஞ்சே! நீயாதுமறியாயென்று கூறினளென்பது.

8. O my mind! you are a fool to follow my departed one, while you grieve that he will not show pity & favour you.

---

* அஃது-ஆற்றுமையை (சகித்துக்கொண்டிருக்க முடியாண்மையை).



கூ. உள்ளத்தார் காத லவராக வுள்ளீநீ
யாருழைச் சேறியேன் னெஞ்சு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) என்னெஞ்சே! காதலர் நின்னகத்தாராக, முன் பெல்லாங் கண்டு வைத்து இப்பொழுது நீ புறத்துத் தேடிச்செல் கின்றது யாரிடத்து, (எ - று)

உள்ளமென்புழி அம்முப் பகுதிப்பொருள் விகுதி. * நின்னகத்திருக் கின்றவராக, † அஃதறியாது புறத்துத்தேடிச் சேறல் நகையுடைத்து; அதனை யொழி யென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ன்.) என்னெஞ்சு - எனதுநெஞ்சே, காதலவர் - காதலர், உள்ளத்தாராக - (உன்) அகத்திருப்பவராக, (முன் பெல்லாங்கண்டிருந்தும்), நீ-,உள்ளி-(இப்பொழுதுபுறத்துத்) தேடி,சேறி-செல்லுகின்றது, யாருழை - யாரிடத்து, (எ - று).

உள்ளம் என்றவிடத்து அம் பகுதிப்பொருளே யுணர்த்திய விகுதி. நெஞ்சே! காதலவர் உன்னகத்திருக்கின்றவராக, நீ அதனையறியாமல் புறத்துத்தேடிச்செல்லுதல் நகையுடைத்து; அதனை யொழி யென்பதாம். அகம்-உள்; புறம்-வெளி.

(க - து.) தலைமகள் நெஞ்சே ! காதலர் உன்னகத்திருக்க, அதனையறியாது நீ யவரைப் புறத்துத் தேடிச் செல்லுதல் தகுதியுடையதாகா தென்றாளென்பது.

9. O my mind! Whom do you think to find roaming while the dear one is within yourself.

கo. துன்னுத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
வின்னு மிழத்துங் கவின்.

[அவரை மறந்தாற்றல்வேண்டு மென்பதுபடச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நம்மைக் கூடாவண்ணந் துறந்துபோயினரை நாம் நம் மகத்துடையேமாக, முன்னிழந்த புறக்கவினே யன்றி நின்ற ‡ அகக்கவினு மிழப்பேம், (எ - று).

¶ "குன்றி, னெஞ்சுபக வெறிந்த-வஞ்சுடர் நெடுவேல்" என்புழிப் போல்நெஞ்சென்பது ஈண்டும் அகப்பொருட்டாய் நின்றது.அவர் நம்மைத்

---

* நின்னகத்திருக்கின்றவரை என்றும் பாடமுண்டு.

† அஃதறியாது - காதலர் நின்னகத்திருக்கின்றதறியாமல்.

‡ அகக்கவின் - நிறையாம்.

¶ குறுந்தொகை-கடவுள்வாழ்த்து. இதன்பொருள். கிரவுஞ்சமென்னும் மலையினுள்ளிடம் பிளவுபடுமாறு வீசிய வழகிய சுடர்நுனைய வீண்டவேற்படை என்பது. ஈண்டு அழகு மிகுதியாம்; சுடர்-பிரகாசம்.



துன்னுமற் றுறந்தாராகவும், நாமவரை மறத்தன் மாட்டேமாகவும், போன மெய்க்கவினேயன்றி நின்றநிறையு மிழப்பே மென்பதாம்.

தெளி:—[அவரைமறந்து பொறுத்தல் வேண்டுமென்பது தோன்ற நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.] (இ-ள்.) தன்னு-(நம்மைக்) கூடாத வண்ணம், துறந்தாரை-விட்டுப்போயினரை, நெஞ்சத்துடையேமா-(நாம் நமது) அகத்து உடையேமாக, இன்னுங் கவின் - முன்னிழந்த புறத்தழகையே யன்றி நின்ற அகத்தழகையும், இழத்தும்-இழப்போம், (எ-று).

நெஞ்சென்பது இங்கு அகம் (உள்) என்னும் பொருளதாய் நின்றது. அவர் நம்மைக்கூடாதவண்ணம் விட்டுபோனாகவும், நாம் அவரை மறத்தல் மாட்டே மாகவும், போன மெய்யழகையேயன்றி நின்றநிறையையும் இழப் போமென்பதாம். மெய் – உடம்பு.

(க - து.) தலைமகள் நெஞ்சை நோக்கி நம்மைக் கூடாதவண் ணஞ் சென்ற காதலரை மறவாதிருந்தால், நாமின்னும் அழகை யிழந்து விடுவோமென்றாள் என்பது.

10. If I retain in my mind him who utterly renounced me, I shall lose even the inward dignity that remains.

## 11.-வது அதிகாரம்.

### நிறையழிதல்:—Loss of modesty.

பரி:— அஃதாவது ‡ தலைமகள் மனத்தடக்கற்பாலனவற்றை வேட் கைமிகுதியான் அடக்கமாட்டாது வாய்விடுதல்; † "நிறையெனப் படு வது மறைபிற ரறியாமை" என்றார் பிறரும். அஃதழிதற் காரணம் நெஞ் சொடு கிளந்தமையின், ¶ இது நெஞ்சொடுகிளத்தலின்பின் வைக்கப் பட்டது.

தெளி:—அஃதாவது தலைமகள் மனதின்கண் அடக்கப்படவேனவற்றை ஆசைமிகுதியால் அடக்கமாட்டாமல் வாய்விட்டுச் சொல்லுதல். அந்நிறை

அழிதற்குக்காரணம் நெஞ்சொடு கிளந்தமை (கூறின்மை)யால், இது நெஞ்சொடு கிளத்தலின்பின் வைக்கப்பட்டது.

‡ பிறாறியாமன் மறைக்கப்படுவதாய காமவேட்கை தன்வரைத்தன்றிப்பெருகலிற் றலைமகளதனை மறைத்தலாற்றாது வெளிப்படநிற்றல் என்றும் பாடமுண்டு.

† தலித்தொகை - நெய்தற்கலி—16. இதன்பொருள். நிறையென்று சொல்லப்படுவது மறைந்தொருகாரியம் பிறாறியாமல் கடத்தல் என்பது.

¶ இது - நிறையழிதல்.





க. காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு

நாணுத்தாழ் வீழ்த்த சுதவு.

[நாணுநிறையுமழியாமை நீயாற்றல்வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நாணுகிய † தாழினைக் கோத்த நிறையென்னுங் கதவினைக் காமவேட்கை யாகிய கணிச்சி முறியா நின்றது, இனி ‡ அவை நிற்றலுமில்லை, யா னூற்றலுமில்லை, (எ-று).

கணிச்சி - ¶ குந்தாலி. நாணுள்ள தூணையும் நிறையழியா தாகலின் $ அதனைத் தாழாக்கியும், அகத்துக்கிடந்தன பிறர் கொள்ளாமற் காத்தலின் நிறையைக் கதவாக்கியும், * வலியவாய்த் தாமாக நீங்காத || அவ்விரண்டனையும் ஒருங்கு நீக்கலிற் றன் காமவேட்கையைக் கணிச்சியாக்கியுங் கூறினள்.

தெளி:—[நாணும் நிறையும் அழியாமல் நீ பொறுத்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) நாணுத்தாழ் வீழ்த்த - நாணுகிய தாழினைக்கோத்த, நிறையென்னுங்கதவு - நிறையென்னுங் கதவினை, காமக் கணிச்சி - காமவேட்கையாகிய குந்தாலி, உடைக்கும் - முறிக்கின்றது, (இனி அவை நிற்றலும் இல்லை, யான் பொறுத்தலும் இல்லை), (எ - று).

நாணுள்ளவளவும் நிறை அழியாதாகலால் அதனைத்தாழாக்கியும், அகத்துக் கிடந்தனவற்றைப் பிறர்கொள்ளாமற் காத்தலால் நிறையைக் கதவாக்கியும், வலியனவாய்த் தாமாக நீங்காத அவ்விரண்டனையும் ஒருசேர நீக்கலால் தன் காம வேட்கையைக் கணிச்சியாக்கியும் சொல்லினள்.

(க - து.) தலைமகள் தோழியோடு நாணுகிய தாழினைக் கோத்த நிறையென்னுங் கதவைக் காமமென்னுங் கணிச்சி முறித்தலால், யான் பொறுத்தல் முடியா தென்று ளென்பது.

1. The love's axe breaks through the door of chastity which is barred by the bolt of modesty.

உ. காம மெனவொன்றோ கண்ணிலென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில்.

† தாழ் - தாழ்க்கோல் (தாழ்ப்பாள்).
‡ அவை - நாணும் நிறையும்.
¶ குந்தாலி - கோடாரி (கோடாலி). § அதனை - நாணை.
* வலியவாய் - உறுதியுடையனவாய்.
‖ அவ்விரண்டனையும் - நாண் நிறையென்னு மவ்வரணடனையும்.



[நெஞ்சின்கட்டோன்றிய காமம் நெஞ்சாலடக்கப்படு மென்றோட்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) எல்லாருந் தொழிலொழியு மிடையாமத்தும் என்னெஞ்சத்தை யொறுத்துத் தொழில் கொள்ளா நின்றது; ஆகலாற் காமமென்று சொல்லப்பட்ட வொன்று † கண்ணோட்ட மின்றி யிருந்தது, (எ-று).

ஓவென்பது இரக்கக்குறிப்பு. தொழிலின் கண்ணே யாடல் - தலைமகன்பாற் செலவிடுத்தல். ‡ தாயைப்பணிகோடல் உலகியலன்மையிற் 'காமமென வொன்று' என்றும், * அது ¶ தன்னைக் கொள்ளுகின்றது அளவறியாது கோடலிற் 'கண்ணின்று' என்றுங் கூறினாள். அடக்கப்படாமை கூறியவாறு.

தெளி:—[நெஞ்சின்கண் தோன்றியகாமம் நெஞ்சால் அடக்கப்படு மென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) யாமத்தும் - (எல்லாருந் தொழிலொழிகின்ற) நடுராத்திரியிலும், என்னெஞ்சத்தை-, தொழில் ஆளும் - (தண்டித்துத்) தொழில்கொள்ளாநின்றது, (ஆகலால்), காமமென வொன்று - காமமென்று சொல்லப்பட்ட ஒன்று, கண்ணின்று-

கண்ணேட்டமில்லாததா யிருந்தது, (எ - று).

ஓ என்பது இரக்கக் குறிப்பிடைச்சொல். தொழிலின்கண்ணே ஆஞ தல் - (காமம்நெஞ்சத்தை) தலைமகனிடத்துச் செல்லவிடுத்தல். தாயைத் தொழில் கொள்ளுதல் உலகநடையல்லாமையால் 'காமமென்வொன்று' என்றும், அது தன்னைக் கொள்ளுகின்றது அளவறியாது கொள்ளுதலால் 'கண்ணின்று' என்றும் சொல்லினுள். காமம் தன்னுல் அடக்கப்படாமை யைத் தலைமகள் சொல்லியவாறும். தொழில் - ஏவற்றொழில்.

(க - து.) தலைமகள் தோழியோடு காமமானது என் நெஞ் சத்தைத் தன்வயஞ் செய்துகொண்டு தாட்சண்ணியமின்றி நடு ராத்திரியிலும் என்னை வருத்துகின்றதென்று ளென்பது.

2. What is called love is the one thing which mercilessly worries my mind even in the midnight hour.

ங. மறைப்பேன்மற் காமத்தை யாரே குறிப்பின்றித்
தும்மல்போற் ரோன்றி விடும்.

---

† கண்ணேட்டம் - தாட்சண்ணியம்.

‡ தாயையென்றது காமமுண்டாதற்குமுதற்காரணமாய நெஞ்சத்தை. தந்தையைத்தொழில்கோடல் என்றும்பாடமுண்டு.

* அது - காமம். ¶ தன்னைக் கொள்ளுகின்றது - நெஞ்சத்தைப் பணிகொள்ளுகின்றமை.



[மகளிர்காமம் மறைக்கப்படுமென்றூட்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) இக்காமத்தை யானென்னுள்ளே மறைக்கக் கருதுவேன்; அதனன் இஃதென் கருத்தின் வாராது தும்மல்போல வெளிப்பட்டே விடாநின்றது, (எ-று).

† மன் - ஒழியிசைக்கண் வந்தது. ‡ ஓகாரம் - பிரிநிலைக்கண்வந்தது. தும்மலடங்காதாற்போல அடங்குகின்றதில்லை யென்பதாம்.

தெளி:—[மகளிர்காமம் மறைக்கப்படுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது] (இ - ள்.) காமத்தை - இக்காமத்தை, யான் - நான், மறைப்பேன்-(என்னுள்ளே) மறைக்கநினைப்பேன், (அதனால்), குறிப்பின்றி-(இக்காமம்) என்கருத்தின் வழிவாராமல், தும்மல்போல்-தும்மல்போன்று, தோன்றிவிடும்-வெளிப்பட்டே விடுகின்றது, (எ - று).

மன் - ஒழியிசைப் பொருளில் வந்தது. ஓகாரம் - பிரிநிலைப்பொருளில் வந்தது. தும்மல் அடங்காமைபோலக் காமம் அடங்குகின்றதில்லை யென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியோடு காமம் யானடக்க அடங்காது தும்மல்போல வெளிப்பட்டேவிடுகின்ற தென்றாளென்பது.

3. I would conceal my love, but alas! like a sneeze it breaks out yielding not to my will.

ச. நிறையுடையே னென்பேன்மன் யானோவென் காம
மறையிறந்து மன்று படும்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) இன்றினூங்கெல்லாம் யானென்னை நிறையுடையே னென்று கருதி யிருந்தேன்; || அதனான் இன்றென் காமம் மறைத்தலைக் கடந்து மன்றின்கண் வெளிப்படா நின்றது, (எ-று).

¶ மன்னும் ஓவும் - மேலவற்றின்கண் வந்தன மன்றுபடுதல்—பலரு மறிதல். இனி என்வரைத்தன் றென்பதாம்.

---

† மறைப்பேன்மன் என்றவிடத்து மன் என்னுமிடைச்சொல் அதனான் (மறைத்தலால்) என்னும் ஒழிந்த சொற்பொருளைத் தந்து நின்றமையின், ஒழியிசைக்கண்வந்த தாயிற்று.

‡ தலைமகள் தன்னைத்தோழியினின்றும் பிரித்து யானோ என்று கூறினமையின், யானோ என்னும் ஓகாரவிடைச்சொல் பிரிநிலைப்பொருள தாயிற்று. ஓகாரம் இரங்கற்கண்வந்தது என்றும் பாடமுண்டு.

|| அதனாலென் [2] என்னும் பாடமுண்டு.

¶ மன் என்னு மிடைச்சொல் அதனான் (அவ்வாறுகருதி இருந்தமையால்) என்னும் ஒழிந்த சொற்பொருளைத் தந்து நின்றது.

## கற்பியல்—கக - வது நிறையழிதல். 1325

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) யான் நிறையுடையேனென்பேன்- (இதுவரைக்கெல்லாம்) யான் (என்னை) நிறையுடையேனென்று நினைத்திருந்தேன், (அதனால் இன்று), என்காமம் - எனது காமம், மறையிறந்து - மறைத்தலைக் கடந்து, மன்றுபடும் - மன்றின்கண் வெளிப்படா நின்றது, (எ-று).

மன்னும் ஓகாரமும் மேற்குறளிற்போன்று முறையே ஒழியிசைப் பொருளிலும் பிரிநிலைப் பொருளிலும் வந்தன. மன்றுபடுதல் - பலரும் அறிதல். இனி யிக்காமம் என்னளவினதன்று என்பதாம்.

(க-து.) தலைமகள் தோழியோடு இப்போதென்காமம் யானடக்க அடங்காது பலருமறிய வெளிப்படுகின்றதென்றுளென்பது.

4. I deemed my modesty would be firm, but alas my love-sickness casts away the veil and appears in public.



நி. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்ற ரறிவதோன் றன்று.

[தம்மை மறந்தாரை நாமும்மறக்கற்பால மென்றூட்குச்
சொல்லியது.]

பரி:—(இ - ள்.) தம்மையகன்று சென்றார்பின் செல்லாது தாமும் அகன்றுநிற்த † நிறையுடைமை காமநோயினையுறுதார் அறிவதொன் றன்றி உற்றார் அறிவதொன்றன்று, (எ-று).

இன்பத்தொடுகெழியுங் காலத்தைத் துன்பத்தொடுகெழியுமாறு செய்தலிற் 'செற்றார்' என்றாள். பின்சேறல் - மன்த்தால் இடைவிடாது நினைத்தல். ¶ பெருந்தகைமை - ஈண்டாகுபெயர். காமநோயுறுதார் - மானமுடையார். † நன்றெனவுணராார் மாட்டுஞ் சென்றேறினிற்கும் யானறிவதொன்றன்றென்பதாம்.

தெளி:—[தம்மைமறந்தவரை நாமும் மறந்துவிடுவோமென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.] (இ - ள்) செற்றார்பின் - (தம்மைநீங்கிப்) போனவர்பின், செல்லா - செல்லாமல், (தாமும் நீங்கிநிற்கின்ற), பெருந்தகைமை - நிறையுடைமையானது, காமநோயுற்றார் - (காமநோயினையடை-

---

‡ நிறையுடைமையானது காமநோயை யடையாதவரால் அறியப்படுமேயன்றி, அடைந்தவரால் அறியப்படுவதன் றென்பதாம்.

¶ பெருந்தகைமை என்னுங் காரியப்பெயர் அதற்கேதுவாய நிறையுடைமையை யுணர்த்துதலால், காரியவாகு பெயராம்.

† நன்றெனவுணராார்-காதலியைப் பிரியாதிருத்தல் நன்றென்றறியாதவர்.

யாதவர் அறிவதொன்றல்லாமல்) காமநோயையடைந்தவர், அறிவதான் றன்று - அறிவதொன்றன்றும், (எ - று).

இன்பத்தோடு கழியுங்காலத்தைத் துன்பத்தோடு கழியுமாறு செய்த லால் (காதலரை) 'செற்றார்' என்றாள். பின்செல்லுதல் - காதலரை மனத்தால் இடைவிடாது நினைத்தல். பெருந்தகைமை-இங்கு ஆகுபெயர். காமநோயுறுதார்-மானமுடையார். நிறையுடைமை, நன்றென அறியாரிடத் தும் சென்றே நிற்கும் யான் அறிவதொன்றன்றென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியோடு நிறை காமநோ யுறுதல வரிடத்தன்றி, அதனையுற்றவரிடத் திரா தென்றாளென்பது.

5. The dignity that would not seek an absent lover, is the one thing that the loving heart can never know.

சு. செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
வெற்றென்னை யுற்ற துயர்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) என்னையகன்று சென்றார்பின்னே யான்*சேறலே வேண்டுதலால், என்னையுற்றதுயர் எத்தன்மையது? சாலநன்று, (எ-று).

செற்றவனென்றது ஈண்டும் * அப்பொருட்டு. † வேண்டவென் பது வேண்டியெனத் திரிந்துநின்றது. ‡ அளித்தென்பது இகழ்ச்சிக் குறிப்பு. இக்காமநோய் யான்சொல்லவுங் கேட்கவுமாவ தொன்றன்று; சாலக்கொடி தென்பதாம்.

தெளி:—[இதுவுமது] (இ-ள்.) செற்றவர்பின் - (என்னை நீங்கிச்) சென்றவர்பின்னே, சேறல்வேண்டி - (யான்) செல்லுதலேவேண்டுதலால், என்னையுற்றதுயர் - என்னையடைந்த துன்பமானது, எற்று - எத்தன்மை யது, அளித்து - மிகநன்றுக விருக்கின்றது, (எ - று)

அரோ - அசை. செற்றவர் என்றது இங்கும் மேற்குறளின் பொருள தாய் நின்றது. வேண்ட என்பது வேண்டியெனத்திரிந்து நின்றது. அளித்தென்பது இகழ்ச்சிக்குறிப்புச்சொல். இக்காமநோயானது நான் சொல்லவும் கேட்கவும் ஆவதொன்றன்று; மிகக்கொடியதென்பதாம்.

---

* அப்பொருட்டு என்பது இன்பத்தொடு கழியுங்காலத்தைத் துன்பத் தொடு கழியுமாறு செய்தலின் என்பதாம்.

† காரியப்பொருளில் வந்த வேண்ட வென்னும் செயவெனச்சம் வேண்டியெனத் திரிந்து நின்றது. வேண்டல்-காரியம்; துயர்-காரணம்.

‡ அளித்தென்பது மிகக்கொடிய தென்னும் பொருளில் வந்த இகழ்ச் சிக் குறிப்புச் சொல்லாம்.



(க - து.) தலைமகள் தோழியோடு துன்பம் அதிகரித்தலால், என்னை விட்டுச்சென்ற தலைவர் பின்னே செல்ல யான் விரும்பு கின்றே னென்று ளென்பது.

6. How graceful is my grief which seeks to go after my absent lover!

எ. நாணென லொன்றோ வறிபலங் காமத்தாற்
பேணியார் பேட்ப செயின்.

(* பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகளோடு நிறையழிவாற்கூடிய தலைமகள் நீ புலவாமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குச்சொல்லியது.)

**பரி:—(இ - ள்.) நம்மால் விரும்பப்பட்டவர் வந்து காமத்தால் நாம்விரும்பியவற்றைச் செய்யுமளவின் நாணென்றொன்றையும் அறியமாட்டே மாயிருந்தேம், (எ-று).**

† பேணியாரெனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்

---

* பரத்தையிற்பிரிவு - தலைமகன் பரத்தைமேற்காதலாய்த் தலைமகளைப்பிரிந்து அப்பரத்தையர் சேரியிற்போதல் "பரத்தையிற் பிரிவென்றதனால், 'பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின், மாண்டவறிவினவர்' என்பதனாற் றலைமகனறிவிலனும், தலைவியிடத் தன்புமிலனும், பெருமையுமிலனும், பட்டியுமாமெனின், அற்றன்று; அரசுரிமையுடைமையின், அரசுரிமைக்குப் பரத்தையரினும் வரைதற்குரியராய்த் தொன்றுதொட்டு நடக்கு முறைமையராயும், வரையாத வுரிமையராய்ச் சேரியின்கணுறைவாருமாய இவரும் பிறந்தஞான்று தொட்டு இவர்க்கென விதித்திருக்கப்படுதலானும், அவரைநீக்குதல் தகுதியன்மையானும், பரத்தையிற் பிரிதல் குற்றமன்றெனக்கொள்க. அன்றியும் காலைக்கடன்கழித்தலும், உலகத்திருந்து நாடகவற்றொழிற் செய்தலும், விருந்துடனடிசில் கைதொடலும், நாவலோடு கல்வி பயிறலும், ஆடல்பாடல்களிற் களித்தலும், மடவாரோடுகூடலும், துயிறலும், துயிலுணர்ந்துதேவர்ப்பரவலுமாகிய காலவரையறையெட்டனுள் ஆடல்பாடல் ஒன்றுதலானும், அதற்குரியர் பரத்தையராதலானும், அதற் குரியகாலத்தில் அவரிடத்தில் மனம் செல்லுதலியல்பாதலானும், பரத்தையிற் பிரிதலாற் குற்றமின்றெனக்கொள்க. ஆயின், பரத்தையர்சேரியில் செல்லுமாறென்னையெனின், அவர் பலரோடும் விளையாடற்பொருட்டும், அவருடன் புணர்தற் குரியாரைப்புணர்தற்பொருட்டும் பரத்தையர் சேரியிற் செல்லுமென் றுணர்க." என்று தஞ்சைவாணன் கோவையினுரையிற் கூறப்பட் டிருக்கின்றது.

† மூன்றும் வேற்றுமைக் கருத்தாவின் செயப்படுபொருள் வினைமுதல்போலிருப்பது பற்றிப் 'பேணியாரெனச் செயப்படுபொருள் வினை

பட்டது. விரும்பியன - வேட்கைமிகவிளைத் கருதியிருந்த † கலவிகள். நாண்- ‡ பாத்தையர்தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல். ஒன்றென் பது ஈண்டுச் சிறிதென்னும்பொருட்டு. இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. நிறை யழிவான் அறியாது கூடிய தன்குற்றநோக்கி அவளாய் முளப்படுத்தாள்.

தெளி:—[பரத்தையினின்றும் பிரிந்துவந்த தலைமகனோடு நிறையழி வால் கூடிய தலைமகள் நீ பிணங்காமைக்குக் காரணம் யாதென்றதோழிக் குச் சொல்லியது.] (இ-ள்.) பேணியார்-(நம்மால்) விரும்பப்பட்டதலைவர், (வந்து), காமத்தால் - காமத்தினால், பெட்ப - (நாம்) விரும்பியவற்றை, செயின் - செய்யு மளவில், நாணெனவொன்று - நாணென்று சொல்லப் பட்ட ஒன்றையும், அறியலம் - அறியமாட்டோமா யிருந்தோம், (எ-று).

பேணியாரை யென்னும் செயப்படுபொருள் பேணியாரென எழு வாய்ப்போலச் சொல்லப்பட்டது. விரும்பின் - ஆசைமிகுதியால் நினைத் திருந்த புணர்ச்சிகள். நாண் - பொதுமகளிர் புணர்ந்தமார்பைப் புணர்தற்கு நாணுதல். ஒன்றென்பது இங்குச் சிறிதென்னும் பொருளது. ஒன்றும் என்றும் இழிவு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. (தலைமகள் தலைமகனை) நிறையழிவாலறியாமல் கூடிய தனது குற்றத்தை நோக்கித் தோழியையும் தன்னுளெப்படுத்தி 'அறியலம்' என்றுகூறினாள்.

(க - து.) தலைமகள் தோழியோடு நம்மால் விரும்பப்பட்ட வர் வந்து காமத்தால் நாம்விரும்பியவற்றைச் செய்யும்போது நாணத்தை யறியாது விட்டோமென்று ளென்பது.

7. I know no sense of shame when my beloved returns my longing heart to bless with love.

அ. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை.

---

† கலவிகள் - கொடிபோலச் சுற்றித்தழுவுதல், மரத்தைப்போலேறித் தழுவுதல், எள்ளுமரிசியும் போலக் கலந்துகலந்து தழுவுதல், பாலும் நீரும் போல ஒன்றுபடத் தழுவுதல், தொடையால் நெருக்கித்தழுவுதல், குறிகள் சேரத் தழுவுதல், கொங்கை யழுந்தத்தழுவுதல், நெற்றிபொருந்தத்தழுவுத லென்பனவாம்.

‡ "காதற் பரத்தையர் காமக் கிழத்தியர், பின்முறை வதுவைப் பெருங் குலக் கிழத்தியென், றன்னவ ருரிய ரவையிரண் டிற்கும்" "அவற்றுட், காதற் பரத்தையர் களவிற் குரியர்" என்று அகப்பொருள் விளக்கங்கூறுவ திங்குணர்தற் பாலதாம்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) நந்நிறையாகிய வாணையழிக்குந் தானை பலபோய் கூனவல்ல கள்வனுடைய தாழ்ந்தசொற்க ளன்றே? ஆனபின், அது நீர்மையாறென்னை, (எ - று).

பெண்மை - ஈண்டுத் தலைமைபற்றி நிறைமேனின்றது. வந்தாற் புலக்கக் கடவேமென்றும், புலந்தால் அவன் சொற்களானுஞ் செயல்களா னும் * நீங்கேமென்றும், † இவைமுதலாக வெண்ணிக்கொண்டிருந்த யாவுங்காணுது கலவிக்கட் டன்னினு முற்படும்வகை வந்துதோன்றினு னென்பாள் 'பன்மாயக்கள்வன்' என்றாள். பணிமொழி-நம்மினுந்தானன்பு மிகுதியுடையனுகச் சொல்லுஞ்சொற்கள். அவன் ‡ அத்தன்மையனுக, சொற்கள் ¶ அவையாக, நந்நிறை யழியாதொழியுமோ வென்பதாம்.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.) நம்பெண்மை - நமதுநிறையாகிய அரணை, உடைக்கும் - அழிக்கும், படை - ஆயுதம், பன்மாயக்கள்வன் - பல பொய்களைப் பேசவல்லகள்வனுடைய, பணிமொழியன்றே - தாழ்ந்தசொற் களன்றே? (ஆனபின், அந்நிறை நிற்கும் விதமெவ்வாறு)? (எ - று).

பெண்மை - இங்குத் தலைமைபற்றி நிறைமேல் நின்றது. (காதலன்) வந்தால் (யாம்) பிணங்கக்கடவேமென்றும், பிணங்கிலுல் அவன் சொற்க ளாலும்செயல்களாலும் நீங்கேமென்றும், இவை முதலாக எண்ணிக்கொண் டிருந்தன வெல்லாவற்றையும் காணுமல் கலவியில் தன்னிலும் முற்படும்படி வந்துதோன்றினனென்பாள் 'பன்மாயக்கள்வன்' என்றாள். பணிமொழி - நம்மினுந் தான் அன்பு மிகுதியுடையவனுகச்சொல்லுஞ்சொற்கள். அவன் அப்படிப்பட்டவனுக, சொற்கள் அவையாக, நமதுநிறை அழியாதொழி யுமோ வென்பதாம். பணிமொழியைப் படையாக வருவகஞ்செய்தவர் அதற்கேற்பப் பெண்மையை அரணுக (சோட்டையாக) உருவகஞ் செய் யாமையின், இஃதேகதேச வுருவகவணியாம். கலவி - புணர்ச்சி.

(க - து.) தலைமகள் தோழியோடு நமது நிறையானது பன் மாயக்கள்வனது பணிவாய சொற்களால் நில்லாதொழிகின்ற தென்று ளென்பது.

8. Are not the enticing words of my lover, versed in

wily art, the weapon that breaks away my feminine firmness.

* நீங்கேம் - அப்பிணக்கினின்றும் நீங்கேம்.

† இவைமுதலாக என்றமையின், அவளோடு பேசவுமாட்டேன், அவன்முகத்தைப் பார்க்கவுமாட்டேன், பிணங்கியிருப்பதுபற்றி யார் வந்து யாது கூறினும் அதனைக் கேட்கவு மாட்டேனென்றும் தலைமகள் எண்ணிக்கொண்டிருந்தாளென்று கொள்க.

* † அத்தன்மையலுக - பன்மாயக்கள்வனுக.
அவையாக - பாணிமொழியாக.





கூ. புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) அவர் வந்தபொழுது புலக்கக்கடவேனென்று கருதி முன்னில்லாது பிறிதோரிடத்துப் போயினேன்; போயும், என் னெஞ்சம் நிறையினில்லாது * அறைபோய் அவரோடு கலத்தலுறுதல் தலை யறிந்து, இனி † அது வாயாதென்று புல்லினேன், (எ - று).

வாயாமை - புலத்தற் கருவியாய நெஞ்சுதானே கலத்தற் கருவியாய் நிறைதலின், ‡ அது முடியாமை.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.) (அவர்வந்தபொழுது) புலப்பலென-பிணங்கக் கடவேனென்று, (நினைத்து), சென்றேன் - (முன்னே நில்லாமல் வேறோரிடத்திற்குப்) போயினேன், (போயும்), நெஞ்சம்-(என்) நெஞ்சமானது, (நிறையினில்லாமல் கீழறுத்துக் கொண்டுபோய்), கலத்தலுறுவது - (அவரோடு) கலத்தலைத் தொடங்குதலை, கண்டு - அறிந்து, புல்லினேன் - (இனி அதுவாயாதென்று) தழுவினேன், (எ - று).

வாயாமை - பிணங்குதற்குக் காரணமாகிய நெஞ்சுதானே கலத்தற்குக் காரணமாய் நிற்றலால், அது முடியாமை.

(க-து.) தலைமகள் தோழியோடு காதலர் வந்தபோது யான் பிணங்கி யிருக்கவேண்டுமென்று கருதி வேறோரிடத்திற்குச் சென்றேன்; சென்றும், காமவேதனையைப் பொறுக்க முடியாமையால், அவரோடு கூடிவிட்டேனென்றாளென்பது.

9. I said I would feign shun him; saying thus I went away; but I embraced him the moment I felt my heart begin to unite with him.

கo. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினர்க் கண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.

[இதவுமது.]

பரி:—(இ-ள்.) ¶ நிணத்தைத் தீயின்கண்ணிட்டால் § அஃதுருகு மாறுபோலத் தங்காதலரைக் கண்டால் நிறையழிந்துருகு *நெஞ்சினை

* "அறைபோகு நெஞ்சுடை யார்க்கு (கீழற்றுச் செல்லும் நெஞ்சினையுடைய மகளிர்க்கு)" என்று கலித்தொகை (மருதக்கலி - 2) கூறுகின்றது.

† ‡ அது - புலக்கக்கடவேனென்று கருதியது.

¶ நிணம் - கொழுப்பு. § அஃது - நிணம்.



யுடையமகளிர்கீது, அவர் புணரியாழடிப் * பின்புணராது † அந்நிலையே நிற்கக்கடவேமென்று கருதுதலுண்டாதுமோ, ஆகாது, (எ-று).

புணர்தல் - சண்டு மிகநணுகுதல்; எதிர்ப்படலுமாம். புணரவென்

பது புணர்ந்தெனத் திரிந்து நின்றது. ‡ யானத்தன்மையே ஞகலின், எனக் ¶ கஃதில்லையாயிற்றென்பதாம்.

நேளி:—(இதுவுமது.) (இ - ள்). நினைந்தீயிலிட்டன்ன-நினைத்தைத் தீயில் இட்டால் அஃது உருகுமாறுபோல, (தமது காதலரைக்கண்டால் நிறையழிந்து உருகும்), நெஞ்சினர்க்கு - நெஞ்சினையுடைய மகளிர்க்கு, புணர்ந்து - (அவர்) புணர, (யாம்), ஊடி - பிணங்கி, (பின்புணராமல்), நிற்பேமெனல் - (அந்நிலையிலே) நிற்கக்கடவேமென்று நினைத்தல், உண்டோ - உண்டாகுமோ, (உண்டாகாது), (எ - று).

புணர்தல் - இங்கு மிகநெருங்குதல்; எதிர்ப்படலுமாம். புணரவென்னும் செயவெனெச்சம் புணர்ந்தென்னும்செய்தெனெச்சமாகத்திரிந்துநின்றது. யானத்தன்மையே ஞகலால், எனக்கு அஃதில்லையாயிற்றென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியோடு தங்காதலரைக்கண்டால் நிறையழிந்துருகும் நெஞ்சினையுடைய மகளிர்க்கு அவரோடு பிணங்கியிருத்தல் முடியாதென்று ளென்பது.

10. Is it possible to stand aloof for those whose hearts melt like fat in the fire, and then embrace?

## 12 - வது அதிகாரம்.

அவர்வயின் விதும்பல்:—*Mutual desire.*

பரி:—அஃதாவது சேயிடைப் பிரிவின்கட் டலைமகனுந் தலைமக ளும் வேட்கை மிகவினன் ஒருவரை யொருவர் காண்டற்கு விரைதல். தலைமகன் பிரிவும் தலைமகளாற்றுமையும் [] அதிகாரப்பட்டு வருகின்ற மையின், இருவரையுஞ் சுட்டிப் பொதுவாகிய பன்மைப்பாலாற் கூறி னார். || பிறரெல்லாம் இதனைத் தலைமகனே நினைந்து தலைமகள்

---

* பின்பு உணராது என்றும் பாடமுண்டு.

† அந்நிலையே - பிணங்கிய நிலையிலேயே.

‡ யானத்தன்மையேனகலின் - யான் நினைந்தியிலிட்டன்ன நெஞ்சி னேனகலால். ¶ அஃது - ஊடிநிற்பேமெனல்.

[] அதிகாரப்பட்டு - அதிகாரங்களில் தொடர்ச்சியாகச் சொல்லப்பட்டு.

|| பிறரெல்லாம் அவ்வயின்விதும்ப லென்னுமிதனைத் தலைமகனை நினைந்து தலைமகள் காணுதற்கு விரைதல் என்று கூறினார். சுட்டுப்பெயர்

விதுப்புறலென்றார். * சுட்டுப்பெயர் சொல்லுவார் குறிப்போடு [] கூடிய பொருளுணர்த்துவதல்லது † தானென்றற்குப் பெயராகா மையானும், ‡ கவி கூற்றிய அதிகாரத்துத் தலைமகன் உயர்த்தும் ¶ பன்மையாற் கூறப்படாமையானும் : அஃதுளாயன்மையறிக. இதனுட் டலைமகள் கூற்று நிறையழிவா னிகழ்ந்ததாகலின், அவ்வினைபு பற்றி () இது நிறையழிதலின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது தூரதேசப் பிரிவின்கண் தலைமகனும் தலைமக ளும் ஆசைமிகுதியால் ஒருவரை யொருவர் காணுதற்கு விரைதல். தலை மகன் பிரிவும் தலைமகள் பொறுக்காமையும் அதிகாரப்பட்டு வருகின்றமை யால், தலைமகன் தலைமகள் என்னு மிருவரையுஞ் சுட்டி (குறித்து)ப் பொதுவாகிய பன்மைப் (பலர்) பாலால் 'அவர்' என்று சொல்லினர். இதனுள் தலைமகள்சொல் நிறையழிவால் உண்டாய தாகலால், அச் சம்பந்தம்பற்றி, இது நிறையழிதலின்பின் வைக்கப்பட்டது.

க. வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
| நாளொற்றித் தேய்ந்த விரல்.

---

சொல்லுவார் குறிப்போடுகூடிய பொருளை யறிவிப்பதல்லாமல் தான் ஒன்

றனுக்குப் பெயராகாமையாலும், கவியினது கூற்றிய அதிகாரத்தில் தலை மகன் உயர்த்துதற் பொருட்டுப் பன்மையா (பலர்பாலா)ற் சொல்லப்படா மையாலும் அஃது உரையாகாதென்க.

தலைமகனென்றது பாட்டுடைத் தலைவன் கிளவித்தலைவனென்னு மிருவருள் கிளவித் தலைவனை.

* சுட்டுப்பெயர் - அவன் அவள் அவர் அது அவை என்னும் சுட்டுப் பெயர்கள். " இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும், வினைக் கொருங் கியலுங் காலந் தோன்றிற், சுட்டுப் பெயர்க்கிளவி முற்படக் கிளவார், இயற்பெயர் வழிய வென்மனார் புலவர் " என்னும் தொல்காப்பி யச் சூத்திர மிங்குணர்தற்பாலதாம்.

[] கூடிப் பொருளுணர்த்துவதல்லது என்றும் பாடமுண்டு.

† தான்-சுட்டுப்பெயர்.

‡ கவி-தலைச்சிரியன்; கூற்று-சொல்.

¶ ஒருமைப்பாலால் "தலைமகற் கறிவுறுத்தல்" "அவன்குறிப்பறிதல்" என்றற் றொடக்கத்தனவாகச் சொல்லப்படுவதன்றிப் பன்மைப்பாலால் தலைமகர்க் கறிவுறுத்தல் அவர் குறிப்பறிதல் என்றற் றொடக்கத் தனவாகச் சொல்லப்படாமையாலும்.

⁝ அஃது-பிறரெல்லாங் கூறியவுரை.

() இது - அவ்வயின் விதும்பல்.

| "தெண்ணீரணிசிவன் சிற்றம்ப லஞ்சிந்தி யாதவரிற், பண்ணீர் மொழியிவ ளாப்பையு ளெய்தப் புனைத்தடங்க, ணுண்ணீ ருகவொளி வாடிட நீடுசென் றார்சென்றநா, ளெண்ணீர் மையினில னுங்குழி யும்விர லிட்ட றவே" என்று திருக்கோவையார் கூறுவது மிங்குணர்தற்பாலதாம்.

[தலைமகள் காண்டல் விதுப்பிறுற் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) அவர் நம்மைப் பிரிந்துபோய நாள்கள் சுவரின் கணிழைத்தவற்றைத் தொட்டு எண்ணுதலான் என் விரல்கடேய்ந்தன; அதுவேயன்றி அவர் வரும் வழிபார்த்து என் கண்களும் ஒளியிழந்து புல்லியவாயின; இவ்வாறுயும் அவர் வரவுண்டாயிற்றில்லை, (எ-று).

* நாள்—ஆகுபெயர் புல்லியவாதல்-நுண்ணிய காணமாட்டாமை. ஒற்றவென்பது ஒற்றியெனத் திரிந்து நின்றது. இனியான் காணுமா றென்னை யென்பதாம். நாளெண்ணலும் வழிபார்த்தலும் ஒருகாற் செய் தொழியாது இடையின்றிச் செய்தலான், † விதுப்பாயிற்று.

தெளி:—[தலைமகள் தலைமகனைக் காண்டற்கு விரைதலால் சொல்லி யது.] (இ-ள்.) விரல்-(என்) விரல்கள், அவர் சென்றநாள்-அவர் (நம்மைப் பிரிந்து) போயநாள்களை, (சுவரில் குறிவைத்து அக்குறிகளை), ஒற்றி - தொட்டெண்ணுதலால், தேய்ந்த - தேய்ந்தன, (அதுவேயல்லாமல்), கண் ணும்-(என்) கண்களும், வாளற்று-(அவர்வரும் வழிபார்த்து) ஒளியிழந்து, புற்கென்ற-புல்லியவாயின, (இவ்வாறுயும் அவர்வரவு உண்டாயிற்றில்லை).

நாள்-காலவாகுபெயர். புல்லியவாதல்-(கண்கள்) நுண்ணிய பொருள் களைக் காணமாட்டாமை. காரணப்பொருளில் வந்த ஒற்றவென்னுஞ் செய வெனெச்சம் ஒற்றியெனச் செய்தெனெச்சமாகத் திரிந்து நின்றது. இனி யான் (காதலரைக்) காணும் விதம் யாதென்பதாம். (தலைமகள்) நாளெண் ணலையும், வழிபார்த்தலையும், ஒருகாற்செய்தொழியாமல் எப்போதுஞ் செய்தலால், விதுப்பாயிற்று. புற்கென்ற, தேய்ந்த என்பன அன்சாரியை பெறுத வினைமுற்றுக்கள்; அன்சாரியை பெற்றால், புற்கென்றன தேய்ந் தன வெனவரும்.

(க - து.) தலைமகள் காதலர் பிரிந்து சென்றநாள்களைச் சுவ ரினகண் குறிவைத்தெண்ணுதலால் எனது விரல்கள் தேய்ந்து

போயின, அவர் வரும் வழியைப் பார்த்தலால் என்று கண்கள் ஒளியிழந்து போயின என்றாளென்பது.

1. My fingers have worn away with noting (on the wall) the days since he left me forlorn, while my eyes have lost their lustre and begin to fail (with expecting his return).

உ. இலங்கிழா யின்று மறப்பினென் றோண்மேற்
கலங்கழியுங் காரிகை நீத்து.

---

* நாள் என்னும் காலப்பெயர் அந்நாள்களிற் சுவரிற்செய்த குறிகளை யுணர்த்துதலால், காலவாகுபெயராம்.

† விதுப்பாயிற்று-காண்டற்கு விரைதலாயிற்று.

**1334** திருக்குறள் - காமத்துப்பால்.

[* ஆற்றாமை மிகுதலின் இடையின்றி நினைக்கற்பாலையல்லை;
சிறிது மறக்கல் வேண்டுமென்ற தோழிக்குச்
சொல்லியது.]

பரி:—(இ- ள்.) விளங்கா நின்ற விழையினையுடையாய்! காதலரை இன்று யான் மறப்பேனாயின், மேலுங் காரிகை யென்னை நீப்ப

என்றேள்கள் வளைகழல்வனவாம், (எ-று).

இலங்கிழா யென்பது † இதற்கு நீ யாதும் பரியலை யென்னுங் குறிப்பிற்று. இன்று - யானிறந்து படுகின்றவின்று. ‡ மேலும்-மறுபிறப்பினும். எச்ச உம்மை விகாரத்தாற்றொக்கது. () நீப்பவென்பது நீத்தெனத்திரிந்து நின்றது. கழியுமென்னும் இடத்து நிகழ்பொருளின்றொழில் இடத்தின் மேனின்றது. ¶ இவ்வெல்லைக்க ணினைந்தால், மறுமைக்கண் அவளை யெய்தியின்புறலாம்; அதனுன் மறக்கற்பாலேனல்லே னென்பதாம்.

தெளி:—(ஆற்றுமை மிகுதலால் எப்பொழுதுங் காதலரை நினையாதே; சிறிது மறத்தல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.) (இ - ள்.) இலங்கிழாய் - விளங்காநின்ற ஆபரணத்தையுடையாய், (காதலரை), இன்று - (இறந்துபடுகின்ற) இந்நாளில், மறப்பின் - (யான்) மறப்பேனையின், மேல் - மறுபிறப்பிலும், காரிகை - அழகானது, • நீத்து - (என்னைவிட்டு) நீங்க, என்றேள் - எனது தோள்கள், கலங்கழியும் - வளையல்கள் கழலப்பெறுவனவாம், (எ - று).

இலங்கிழாயென்பது தோழியே! இதற்கு நீ யாதும் பரிகின்றுயில்லை யென்னுங் குறிப்பின்கண் வந்தது. மேலும் என்னும் இறந்தது தழுவிய வெச்சவும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. நீப்ப என்னும்

---

* "காப்புக்கை மிக்குக் காமம் பெருகினும்" என்னும் இறையனாரகப் பொருள் சூத்திரவுரையில் "ஆற்றுமையாவது பிறிதெவ்வுணர்வுமின்றி ஆற்றுமைதானேயாவது" என்று கூறப்பட்டிருக்கின்றது.

† இதற்கு - அழகு நீங்கத் தோள்வளை கழலுதற்கு.

‡ மேலும் என்பது இன்றுமன்றி என்பதைத் தழுவிநின்றது.

() காரிகையின் வினையாய நீத்தென்னும் செய்தென்னெச்சம், கலத்தின் வினையாய கழியுமென்பதைக்கொண்டு முடிதற்கு விதியில்லாமையால், 'நீப்பவென்பது நீத்தெனத் திரிந்து நின்றது' என்று கூறப்பட்டது. இறந்தகால வினையெச்சம் தன் வினைமுதலின் வினையையன்றி வேறு

வினைமுதலின் வினையைக் கொண்டு முடியாதென்பது இங்குணர்தற்பால தாம்.

¶ இவ்வெல்லைக்கண்-இறந்துபடுகின்ற இந்நாளில், "குறப்பாவை நின் குழல் வேங்கையம் போதொடு கோங்கம்விராய், நறப்பாட லம்புனை வார் நினை வார்தம்பி ரான்புலியூர், மறப்பா னடுப்பதோர் தீவினை வந்திடிற் சென்றுசென்று, பிறப்பா னடுப்பினும் பின்னுந்துன் னத்தகும் பெற்றி யரே" என்று திருக்கோவையார் கூறுவதிங்குணர்தற்பாலதாம்.



செயலெனைச்சம் நீத்தெனச் செய்தெ னெச்சமாகத்திரிந்துநின்றது. கழியும் என்னும் இடத்து (தோள்களில்) நிகழ் (இருக்கும்) பொருளின் (வளையல்களின்) தொழில் தோள் கலங்கழியும் என இடத்தின் (தோள்களின்) மேல் நின்றமையால், இஃது இடத்துநிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேலாய வுபசார வழக்காம். இச்சமயத்திற் காதலரை நினைந்தால் மறவமையில் அவரையடைந்து இன்பமடையலாம்; அதனுல் மறக்குந் தன்மையுடையேனல்லே னென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியைநோக்கி, காதலரை யான் இன்று மறப்பேனுயின், மேலும் எனதழகு ஒழிவதுடன் என் தோள்களும் மெலிவடையும் என்றுளென்பது.

2. O brght-jewel bedecked maid! If I forget for this one day, my shoulders' beauty will wear away even in the next birth and make my bracelets slip.

கூ. உரனசை இ யுள்ளந் துணைபாகச் சென்றூர்
வரனசை இ யின்னு முளேன்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) இன்பநுகர்தலே நச்சாது.* வேறலேநச்சி நாந் துணையாதலே யிகழ்ந்து தம்முக்கந் துணையாகப் போயினர் † அவற்றை யிகழ்ந்து ஈண்டு வருதலே நச்சுதலான், யானிவ்வெல்லையினு முளேனு யினேன், (எ-று).

‡ உரனென்பது ஆகுபெயர். ¶ அந்நசையா னுயிர் வாழாநின்றேன்; அஃதில்லையாயின், இறந்துபடுவ லென்பதாம்.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.) உானசைஇ - (இன்பமனுபவித் தலே விரும்பாமல்) வெல்லுதலே விரும்பி, உள்ளந் துணையாக - (நாம் துணை யாதலே யிகழ்ந்து தம்) மனவெழுச்சி துணையாக, சென்றார் - போயினர், வானசைஇ, (அவற்றை இகழ்ந்து இங்கு) வருதலே விரும்புதலால், இன் னும் * (யான்) இவ்வெல்லையினும், உளேன் - உளேனுயினேன், (எ - று).

உரன் - கருவியாகுபெயர். அவ்விருப்பத்தால் உயிர்வாழ்கின்றேன்; அவ்விருப்பமில்லையாயின், இறந்துபடுவே னென்பதாம்.

---

* வேறலே-(பகைவனை) வெல்லுதலே. † அவற்றை-வேறலேயும் ஊக் கத்தையும்.

‡ உரன் (வலி) என்னுங் கருவியின்பெயர் அதன்காரியமாகிய வேறலே (வெல்லுதலே) யுணர்த்துதலால், கருவியாகுபெயராம்.

¶ அந்நசையான்-உானசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார் வருதலே விரும்புதலால்,

(க - து.) தலைமகள் தோழியைநோக்கி, பகைவனை வெல்லு தலை விரும்பிச் சென்ற காதலர் இங்கு வருதலை விரும்புதலால், யானின்னு முயிரோடிருக்கின்றே னென்றுசொன்னது.

3. I sustain my life yet by longing for the arrival of him who has gone out intent on victory with valour as his guide.



சு. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகோ டேறுமென் னெஞ்சு.

(இதுவுமது.)

பரி:—(இ - ள்.) நீங்கிய காமத்தராய் நம்மைப் பிரிந்துபோயவர் † மேற் கூடிய காமத்துடனே நங்கண் வருதலை நினைந்து, என்னெஞ்சு வருத்தமொழிந்து, ‡ மேன்மேற் பணைத்தெழா நின்றது, (எ-று).

() வினைவயிற் பிரிவுழிக் காமவின்ப நோக்காமையும் அது முடிந்துழி ¶ அதுவே நோக்கலுந் தலைமகற் கியல்பாகலின், கூடிய காமமென் றான். [] ஒவ்வொருபு விகாரத்தாற் றொக்கது. ⁝ கோடுகொண்டேறலாகிய மரத்தது தொழில் நெஞ்சின்மே லேற்றப்பட்டது. கொண்டென்பது குறைந்து நின்றது. | அஃதுள்ளிற்றிலேனாயின், இறந்துபடுவ லென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) பிரிந்தார் - (நீங்கிய காமத்தராய் நம்மைப்) பிரிந்துசென்ற காதலர், கூடிய காமம் - (மேல்) கூடிய காமத்துடனே, வரவுள்ளி - (நம்மிடத்து) வருதலை நினைந்து, என்னெஞ்சு - எனது நெஞ்சு, (வருத்தமொழிந்து), கோடுகொடேறும் (மேன்மேலும்) நிலைத்தெழுகின்றது, (எ - று).

---

† மேல்-பிரிதற்குமுன்.

‡ மேன்மேற் பணைத்தெழுதல்-மிகவுமுற்சாக முடையதாதல்.

() வினைவயிற்பிரிவு - வேந்தற்குற்றுழிப்பிரிவாம்; அஃதாவது * ஒரு வேந்தனுக் கொருவேந்தன் தொலைந்துவந்தடைந்தால், அவனுக்குதவி செய்யப் பிரிதலாம்.

¶ அதுவே-காமவின்பத்தையே.

[] காமமொடு என்னும் அடைமொழிப் பொருளதாகிய ஒடுவுருபு செய்யுள் விகாரத்தாற் றொக்குநின்றது.

: கோடுகொண்டேறலாகிய மரத்ததுதொழிலை நெஞ்சின்மேலேற்றிக் 'கோடுகொ டேறுமென் னெஞ்சு' என்று கூறினமையின், இஃது ஒருபொருளின்வினை மற்றொருபொருளின் வினையாய வுபசாரவழக்கமாம்.

| அஃது-பிரிந்தார் வருதலை.



வினைவயிற் பிரியுமிடத்துக் காமவின்ப நோக்காமையும் அவ்வினை முடிந்தவிடத்து அதுவே நோக்கலும், தலைமகனுக்கு இயல்பாகலால், கூடிய காமமொடு என்றார். ஒடுவுருபு விகாரத்தால் தொக்குநின்றது. கோடுகொண்டேறலாகிய (சிலைத்துக் கொண்டெழுதலாகிய) மரத்தினது தொழில் நெஞ்சின்மேல் ஏற்றப்பட்டது. கொண்டு என்பது கொடு எனனகரவொற்றுக் குறைந்துநின்றது. அதனை நினையாமற் போவேனையின், யான் இறந்துபடுவேனென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியை நோக்கி, நம்மைவிட்டுப் பிரிந்து சென்ற காதலர் நம்மிடத்தாசை யுடையவராய் வருவாரென்றெண்ணி, என் மனம் வருத்தமொழிந்து மேலும் மேலுங் சிலைத்தெழாநின்றது என்றாளென்பது.

4. My heart rid of its sorrow swells with rapture at the thought of my absent lover returning with his love.

நு. காண்கமற் கொண்கனைக் கண்ணுரக் கண்டபி
னீங்குமென் மென்றோட் பசப்பு.

[தலைமகன் வரவுகூறி ஆற்றுவாய்ப் பசக்கற்பாலை
யல்லையென்ற தோழிக்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) என் கண்களாறும்வகை என் கொண்கனை யான் காண்பேனாக ; அங்ஙனங் கண்டபின், என் மெல்லிய தோளின்கட் பசப்புத் தானே நீங்கும், (எ-று).

காண்கவென்பது ஈண்டு வேண்டிக்கோடற்பொருட்டு. * அது வேண்டுமென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கேட்டதுணையா னீங்காதென்பதாம்.

தெளி:—(தலைமகனது வரவைக்கூறிப் பொறுக்க முடியாதவளாய்ப் பசலைநிற மடையாதே என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.) (இ - ள்.) கண்ணுர - (என்) கண்க ளாறும்வகை, கொண்கனை - (என்) காதலனை, காண்க - (யான்) காண்பேனாக, கண்டபின் - (அவ்வாறு) கண்டபின்பு, என்மென்றோள் - எனது மெல்லிய தோளில், பசப்பு - நிறவேறுபாடு, நீங்கும் - (தானே) நீங்கும், (எ - று).

காண்க வென்னும் வியங்கோள்வினைமுற்று இங்கு வேண்டிக்கொள்ளுதற்பொருளில் வந்தது அது வேண்டுமென்பது தோன்றநின்றமையால், மன் ஒழியிசைப் பொருளில் வந்தது. தலைமகன் வரவைக் கேட்டவளவால் என்தோளின்கட் பசப்பு நீங்காதென்பதாம்.

---

* அதுவேண்டும் - கொண்கனைக் காண்டல் வேண்டும்.

(க - து.) தலைமகள் தோழியைநோக்கி, காதலனையான்கண்ட பிறகே என் தோளின்கண் பசப்பு ஒழியுமென்று ளென்பது.

5. Let me see my lover and sate these longing eyes, and then will vanish the pallor of my wasted shoulders.



சு. வருகமற் கொண்க ளெருநாட் பருகுவன்
பைதலை யெல்லாங் கெட.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) இத்துணை நாளும் வாராகிகொண்கன் ஒருநாள் என்கண் வருவானுக; வந்தாற் பையுளைச் செய்கின்ற * இந்நோயெல்லாங் கெட † அவ்வமிழ்த்தத்தை ‡ வாயில்க ளைந்தானும் பருகக்கட வேன், (எ-று).

வருக வென்பதற்கும் மன்னென்பதற்கும் ¶ மேலுரைத்தவாறே கொள்க. § அக்குறிப்பு அவ்வொருநாளைக்குள்ளே இனி வரக்கடவநோய் களுங் கெடுப்பவென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) கொண்கன் - (இவ்வளவு நாளும் வாராத) காதலன், ஒருநாள் வருக - ஒருநாள் (என்னிடத்து) வருவானுக, (வந்தால்), பைதலுறையெல்லாம் - துன்பத்தைச்செய்கின்ற இந்நோயெல்லாம், கெட - நீங்க, (அவ்வமிர்தத்தை), பருகுவன் - (இந்திரியங்களைந்தாலும்) நுகரக்கடவேன், (எ - று).

வருகவென்பதற்கும் மன்னென்பதற்கும் முன்சொல்லியபடியே கொள்க. அக்குறிப்பு அவ்வொருநாளைக்குள்ளே இனிவரக்கடவனவாய நோய்களையுங் கெடுப்பவென்பதாம். நுகர்தல்-அனுபவித்தல்.

---

* இந்நோயெல்லாம் - இக்காமநோயெல்லாம்.

† அவ்வமிழ்தத்தை - கொண்கனுகியவம்மருந்தினை.

‡ வாயில்களைந்தானும் - மெய், வாய், கண், மூக்கு செவியென்னும் இந்திரியங்களைந்தாலும். " கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள " என்னுங் குறளுமிங்குக் கவனித்தற்பால தாம்.

¶ மேலுரைத்தவாறேகொள்க - இவ்வதிகாரத்தின் ஐந்தாவது குறளின் விசேடவுரையிற் கூறியபடியே 'வருக' என்னும் வியங்கோள் வினை மூற்று வேண்டிக்கோடற்பொருளிலும், மன் என்னுமிடைச்சொல் அது (கொண்கன்வருதல்) வேண்டும் என்னும் ஒழியிசைப்பொருளிலும் வந்தன வென்றுகொள்க.

§ அக்குறிப்பு - தோண்கன் ஒருநாள்வருக என்னு மக்குறிப்பு.



(க - து.) தலைமகள் தோழியை நோக்கி, காதலன் என்னிடத்து ஒருநாள் வருவானுக ; வந்தால் அவனைக்கூடி என் காமநோயெல்லாவற்றையுங் கெடுப்பே னென்றுளென்பது.

6. Let my lover return to me one day; and then will I drink the nectar so as to drive away all the agonising sorrows.

எ. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) கண்போற் சிறந்த கேளிர் வருவாயின், அவர் வாவு நீட்டித்தமைநோக்கி யான் புலக்கக்கடவேனே, அன்றி என்னுற்றமை நோக்கிப் புல்லக்கடவேனே, அவ்விரண்டும் வேண்டுதலான் * அவ்விருசெயல்களையும் விரவக்கடவேனே, யாது செய்யக்கடவேன்? (எ - று).

புலவியும் புல்லலும் ஓர் பொழுதின்கண் விரவாமையிற் 'கலப்பேன் கொல்' என்றுள் † மூன்றனையுஞ் செய்தல் கருத்தாகலின், விதுப்பாயிற்று. ‡ இனிக் கலப்பேன்கொல் என்பதற்கு ஒரு ¶ புதுமை செய்யாதுபிரியாதநாட்போலக் கலந்தொழுகுவேனே வென்றுரைப்பாருமுளர்.

தெளி:—(இ - ள்.) [இதுவுமது.] கண்ணன்ன கேளிர் - கண்போற் சிறந்த காதலர், வரின் - வருவாராயின், புலப்பேன் கொல் - (அவர் வரவு தாமதித்தமையைக் குறித்து யான்) பிணங்கக்கடவேனே, புல்லுவேன்

கொல்-(அல்லாமல் எனது ஆற்றலுமையைக்குறித்தத்) தழுவக்கடவேனே, கலப்பேன்கொல் - (புலத்தலும் புல்லுதலுமாகிய அவ்விரண்டும் வேண்டுதலால் அவ்விரு செயல்களையும்) கலக்கக்கடவேனே, (யாது செய்யக் கடவேன்), (எ - று).

ஓ - அசைநிலை. பிணங்குதலும் தழுவுதலும் ஓர் பொழுதில் கலத்தல் கூடாமையால் 'கலப்பேன் கொல்' என்றாள். மூன்றனையும் செய்தல் கருத்தாக்கலால், (தலைமகள் தலைமகனைக்) காண்டற்கு விரைதலாயிற்று.

---

* அவ்விரு செயல்களையும் - புலத்தல் (பிணங்குதல்), புல்லல் தழுவுதல்) என்னு மவ்விருசெயல்களையும்.

† மூன்றனையும்-புலத்தல், புல்லல், கலத்தல் என்னும் மூன்று தொழிலையும்.

‡ இனிக் கலப்பேன்கொல் என்பதற்கு ஒரு புதுமை செய்யாமல் பிரியாதாள்போலக் கூடியொழுகுவேனே என்றுரை கூறுவாருமுண்டு.

¶ புதுமை - கூடலுடையவள்போன்று நடித்தல்.

(க - து.) தலைமகள் தோழியை நோக்கி, காதலர் வந்தால், யான் புலத்தல், புல்லல், கலத்தலென்பனவற்றுள் யாது செய்யக் கடவேன் என்றாளென்பது.

7. On the return of him who is as dear as my eyes, shall I be displeased (with him), or yield myself, or do both? (What shall I do?)

அ. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து.

[ * வேந்தற் குற்றுழிப் பிரிந்த தலைமகன் வினைமுடிவு கேட்டித் தழித் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.]

பரி:—(இ-ள்.) வேந்தன் வினை செய்தலைப் புரிந்து வெல்வானாக; யாமும் மனைவியைச் சென்று கூடி ஆண்டை மாலைப்பொழுதிற்ற விருந்தயர்வேமாக, (எ - று).

† மனையென்பது ஈண்டாகு பெயர்; ‡ "மங்கலமென்ப மனைமாட்சி" என்பழிப்போல. வினைசெய்தற்கண் வந்த மாலைப்பொழுதிற்கு எதிர் கோடல் அலங்காரித்தன் () முதலிய வின்மையின், மனைகலந்து மாலைக்கு விருந்தயர்கம் என்றான். நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது. இன வினைமுடியா முன் கூறலான் விதுப்பாயிற்று. $ பிறரெல்லாம் இதனைத் தலைமகள் கூற்றாக்கி யுரைத்தார்; தலைமகனைக் கூறாது வேந்தன் வெல்க என்றும், மனைகலந்து என்றும், மாலைப் பொழுதின்கண் விருந்தயர்கம் என்றும் வந்த அவ்வுரைதானே | அது கூடாமைக்குக் காரியாயிற்று.

---

* "வேந்தற் குற்றுழிப் பிரிவென்பது ஒரு வேந்தனுக் கொருவேந் தன் றொலைந்துவந் தடைந்தால், அவனுக்குதவி செய்யப் பிரியா நிற்றல்" என்று கிருக்கோவையார் [illegible]

† மனையென்னு மிடப்பெயர் அம்மனையி லிருப்பவளை யுணர்த்துத லால், இடவாகுபெயராம்.

‡ திருக்குறள்-வாழ்க்கைத் துணைநலம் - 10. இதன்பொருள்—(ஒருவனுக்கு) நன்மையென்று சொல்லுவர் (அறிந்தோர்) மனையாளது நற்குண நற்செய்கைகளே என்பது.

() முதலிய என்றமையின், மஞ்சளரிசி தூவல், கறும்புகை காட்டல், விளக்கிடல், கருப்பூர மேற்றல் முதலியவற்றையுங் கொள்க.

$ பிறரெல்லாம் இக்குறளைத் தலைமகள் வார்த்தையாக்கிக் கூறினர்; தலைமகனைக் கூறுமல் வேந்தன் வெல்க என்றும், மனைக்கிழத்தி என்றும், மாலைப்பொழுதின்கண் விருந்து செய்வோம் என்றும் வந்த அவ்வுரையே அது கூடாதென்பதற்குச் சாட்சியாயிற்று.

| அது - தலைமகள் கூற்றென்பது.

தெளி:—[வேந்தற்குற்றுழிப் பிரிந்த தலைமகன் வினை முடிவு தாமதித்த விடத்துத் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.] (இ-ள்.) வேந்தன் - அரசன், வினைகலந்து - வினைசெய்தலைவிரும்பி, வென்றீக - வெல்வானாக, (யாமும்), மனைகலந்து - மனைவியைச் (சென்று) கூடி, மாலை - (அவ்விடத்து) மாலைப் பொழுதிற்கு. விருந்துஅயர்கம் - விருந்தினைச் செய்யக்கடவோமாக, (எ - று).

மனையென்பது இங்கு இடவாகுபெயராம். வினைசெய்தற்கண் வந்த மாலைப்பொழுதிற்கு எதிர்கொள்ளுதல் அலங்கரித்தல் முதலியன இல்லாமையால், மனைகலந்து மாலைக்கு விருந்தயர்கம்என்றான். இது (தலைமகன்) வினைமுடியாத முன் சொல்லுதலால் (அவன் தலைமகளைக்) காண்டற்கு விரைதலாயிற்று. மாலைக்கு என்னும் நான்கனுருபு செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. வினை-போர்த்தொழில்.

(க - து.) தலைமகன் அரசன் பகைவரைப் போர்செய்து வெல்வானாக; யான் மனைவியைச் சென்று கூடி மாலைப்பொழுதிற்கு விருந்துசெய்வேனாக என்றானென்பது.

8. Let the king fight and gain (victories); but let me go home and be united to my wife and feast this evening.

ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.

[இதுவுமது.]

பரி:—(இ- ள்.) சேணிடைச் சென்ற தங்காதலர் மீண்டுவரக் குறித்த நாளை யுட்கொண்டு * அது வருந்துணையும் உயிர்தாங்கி வருந்து மகளிர்க்கு ஒருநாள் பலநாள் போல நெடிதாகக்காட்டும்,(எ-று).

ஏழென்பது அதற்குமேலாய மிக்கபன்மை குறித்து நின்றது:

† ஒருவர் கூறை யெழுவ ருடுத்து" என்றாற்போல. தலைமகள் வருத்தம் ‡ பிறர்மேலிட்டுக் கூறியவாறு. ¶ இதனுள் இதுவுந் தலைமகள் கூற்றாமையறிக. இருநாளென்று பாடமோதுவாரு முளர்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) சேட்சென்றார் - தூரதேசத்திற் சென்ற (தமது) காதலர், வருநாள்வைத்து—(திரும்பி) வரக்குறித்தநாளை

---

* அது - மீண்டுவரக் குறித்தநாள்.

† இதன்பொருள்—ஒருவரது ஆடையைப் பலருடுத்தி என்பது.

‡ பிறர்மேலிட்டு-தங்காதலரைப்பிரிந்துள்ள பிறமகளிர்மேல்வைத்து.

¶ இதனால் இக்குறளும் தலைமகள் வாய்த்தையாகாமையை யறிந்து தோழி எழுநாள் என்பதை இருநாள் என்று பாடமும் கூறுவாருமுண்டு.



உட்கொண்டு, எங்குபவர்க்கு - (அதுவருமளவும் உயிரைத்தாங்கி) வருந்தும் மகளிர்க்கு, ஒருநாள் எழுநாள்போல் - ஒருநாள் பலநாள்போல, செல்லும்-நெடிதாகக்காட்டும், (எ - று).

எழென்பது அவ்வேழற்குமேலாய மிக்கபன்மையைக் குறித்து நின்றது. (தலைமகன்) தலைமகளது வருத்தத்தைப் பிறர்மேலிட்டுச் சொல்லியவாறும்.

(க - து.) தலைமகன் தங்காதலரைப் பிரிந்து அவர்வருநாளை நோக்கி வருந்தும் மகளிர்க்கு ஒருநாள் பலநாள் போல நெடிதாகக் காட்டும் என்றானென்பது.

9. To those who watch and yearn for the day of return of lovers gone afar, one day will seem as long as seven days.

ய. பெறினென்னும் பெற்றக்கா லென்னு முறினென்னு
முள்ள முடைந்துக்கக் கால்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) காதலி நம்பிரிவினை யாற்றது உள்ளமுடைந் திறந்து பட்டவழி, நம்மைப் பெறக்கடவளாலெனென், அதுவன்றியே பேற்றலென், அதுவன்றியே மெய்யுறக்கலந்தாற்றனென், இவை யொன்றனும் பயனில்லை, (எ - று).

* இம்மூன்றும் † உடம்பொடு புணர்த்திக் கூறப்பட்டன; ‡ அதன் மேலும் ¶ முன்னே வழக்குண்மையின். $ அதற்கு முன்னே யான் செல்ல

---

* இம்மூன்றும் - பெறினென்னும், பெற்றக்காலென்னும், உறினென்னும் என்னு மிம்மூன்றும்.

† உடம்பொடு புணர்த்தல் என்பது யுக்தி வகையினுள் ஒன்று. ஒருவன் கூறவேண்டிய அருத்தத்தை வெளிப்படையாகக்கூறு தான்கூறுவதன் குறிப்பினால் விளங்கச்செய்தல் உடம்பொடு புணர்த்தலாம். ஒரு நிமித்தம் பற்றிக்காலம் நீட்டிக்கப் பிரிந்துசென்ற தலைமகன்தான் வருதற்கு முன்னரே தலைமகள் இறந்துபடும் வழக்குண்மையை வெளிப்படையாகக்கூறு தெறினென்னும், பெற்றக்காலென்னும், உறினென்னும் என்று தான் கூறுவதன் குறிப்பினால் விளங்கச்செய்தமையைக் கண்டுணர்க. 'உள்ள முடைந்துக்கக் கால்' என்பதனை உடம்பாகநிறுத்தி, அதனோடு பெறினென்னும், பெற்றக்காலென்னும், உறினென்னும் என்னுமிம்மூன்றும் புணர்த்திக்கூறப்பட்டனவென்பதுமொக்கும்.

‡ அதன்மேலும் - ஆற்றுமைமேலும்.

¶ முன்னே வழக்குண்மையின் - தலைமகன் வருதற்குமுன்னே தலைமகள் இறந்துபடும் வழக்கமிருத்தலால்.

$ அதற்குமுன்னே - காதலி இறந்துபடுதற்கு முன்னே.

வேண்டுமென்பது கருத்தாகலின், விதுப்பாயிற்று. † இது தலைமகள் கூற்றுயவழி இரங்கலாவதல்லது விதுப்பாகாமை யறிக.

நெளி:—(இதுவுமது.) (இ - ன்). உள்ளமுடைந்து (காதலி நம் பிரிவினைப் பொறுக்காமல்) மனமுடைந்து, உக்கக்கால் - இறந்தவிடத்து, பெறினென்னும்—(நம்மைப்) பெறக்கடவளாஞல் என்னபயன், பெற்றக் காலென்னும் - (அதுவன்றியே) பெற்றுலென்ன பயன், உறினென்னும்- (அதுவன்றியே) மெய்யுறக் கலந்தாற்றுன் என்னபயன், (இவை யொன் றுலும் பயனில்லை), (எ-று).

இம்மூன்றும் உடம்பொடு புணர்த்திச் சொல்லப்பட்டன; அதன் மேலும் முன்னே வழக்கமிருத்தலால். அதற்கு முன்னே யான் செல்ல வேண்டுமென்பது கருத்தாகலால் (தலைமகன் தலைமகளைக்) காண்டற்கு விரைதலாயிற்று. மெய்யுற - உடம்போடு பொருந்த.

(கு - து.) தலைமகன் காதலி எனது பிரிவினைச் சகியாமை யிறந்துபடுவதற்கு முன்னரே, யான் விரைந்துசெல்ல வேண்டுமென்றுனென்பது.

10. What good will my return, the meeting, the embrace worth, if after my wife has died of a broken heart.

## 13 - வது அதிகாரம்.

குறிப்பறிவுறுத்தல்:—*The reading of the feelings.*

பரி:—அஃதாவது தலைமகன், தலைமகள், தோழியென்றிவர் ஒருவர் குறிப்பினை யொருவர்க் கறிவுறுத்தல். ‡ இது பிரிந்துபோய தலைமகன் வந்து கூடியவழி நிகழ்வதாகலின், அவர்வயின் விதும்பலின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது தலைமகன், தலைமகள், தோழி என்ற இவர்கள் ஒருவர் குறிப்பினை ஒருவர்க்கு அறிவுறுத்தலாம். இது பிரிந்துபோய தலைமகன் வந்து கூடியவிடத்து உண்டாவதாகலால், அவர்வயின்விதும்பலின் பின்வைக்கப்பட்டது.

க. கரப்பினுங் கையிகந் தோல்லாநி ன் னுண்க
ணுரைக்க லுறுவதோன் றுண்டே.

† இக்குறள் தலைமகள் வார்த்தையாயவிடத்து இரங்கலா (வருந்துதலா)வதல்லாமல் விதுப்பாகாமையை யறிந்துகொள்க என்பதாம்.

‡ இது - குறிப்பறிவுறுத்தல்.

[பிரிந்துசூடிய தலைமகன் வேட்கை மிகவிஞற் புதுவது பன்னாளும் பாராட்டத் தலைமகள் இது வொன்றுடைத்தென வஞ்சியவழி அதனை யவள் குறிப்பானறிந்து, அவனவட்குச்சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நீ சொல்லாது மறைத்தாயாயினும், † அதற்குடம் படாதே நின்னைக் கைகடந்து நின் னுண்கண்களே எனக்குச் சொல்ல லுறுவதொரு காரியமுண்டா யிராநின்றது, இனி யதனை நீயே தெளி யச் சொல்வாயாக, (எ - று).

காத்தல் - நாணுடைக்குதல். தன்கட்பிரிதற் குறிப்புளதாகக் கருதி வேறுபட்டாளது வேறுபாடு குறிப்பானறிந்து அவட்குத் தன்பிரியாமைக் குறிப்பறிவுறுத்தவாறு.

தெளி:—[பிரிந்துவந்து கூடிய தலைமகன் ஆசைமிகுதியால் புணர்ச் சித் தொழிலேப்புதுவது புதுவதாகப் பலநாளும் பாராட்ட அதுகண்டு தலை மகள் இஃதொரு கருத்துடையதென்று அஞ்சியவிடத்து அவ்வஞ்சியதை அவன்குறிப்பால் அறிந்து, அவன் அவளுக்குச் சொல்லியது.] (இ - ள்.) காப்பினும்-(நீ சொல்லாது) மறைத்தாயாயினும், ஒல்லா-(அதற்கு) உடம் படாமலே, கையிகந்து-(உன்னைக்) கைகடந்து, நின்னுண்கண்-உன் (மை) உண்டகண்களே, உரைக்கலுறுவதொன்று - (எனக்குச்) சொல்லலுறுவ தொரு காரியம், உண்டு - உண்டாயிராநின்றது, (இனி அதனை நீயே தெளியச் சொல்வாயாக), (எ - று).

காத்தல் - (தலைமகள் தானஞ்சியதை) நாணல் அடக்குதல். (தலை மகன்) தன்னிடத்துப்பிரிதற்குறிப்பு இருக்கின்றதாக நினைந்து வேறுபட்ட காதலியினது வேறுபாட்டைக் குறிப்பால் அறிந்து அவளுக்குத் தன்பிரியா மைக்குறிப்பை அறிவுறுத்தியவாறும். அறிவுறுத்தல்-தெரிவித்தல்.

(க-து.) தலைமகன் காதலியே! நீ சொல்லாது மறைத்தாயா யினும் சொல்லவேண்டுவதொன்றினை யுன்கண்களே யெனக்குச் சொல்லுங் குறிப்பைப் புடையனவாயிருக்கின்றனவென்றன.

1. Though you would hide (your feelings), your painted eyes, disdaining all restraint, tell me something.

உ. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது

[காணல் அவள் ‡ அது சொல்லாளாயவழி அவன் தோழிக்குச் சொல்லியது.]

† அதற்கு - நீ சொல்லாது மறைத்தற்கு.

‡ அது - (தான்) அஞ்சியது.

பரி:—(இ-ள்.) என் கண்ணிறைந்த வழகினையும் வேயையொத்த தோளினையுமுடைய நின் பேதைக்குப் * பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை அவ்வளவன்றி மிகுந்தது, (எ - று).

இலதாய பிரிவினைத் தன்கணேற்றி அதற்கஞ்சுதலான், † இவ்வாறு கூறினன்.

தெளி:—[நாணத்தால் அவள் அதனைச் சொல்லாதவளாயவிடத்து அவன் தோழிக்குச் சொல்லியது.] (இ-ள்.) கண்ணிறைந்த காரிகை-(என்) கண்ணிறைந்த அழகினையும், காம்பொத்தோள் - மூங்கிலையொத்த தோளினையும், (உடைய), பேதைக்கு - (உன்னுடைய) மாதுக்கு, பெண்ணிறைந்த நீர்மை - பெண்பாலாரிடத்து நிறைந்த அறியாமை, பெரிது - (அவ்வளவன்றி) மிகுந்தது, (எ - று).

(தலைமகன் தன்னிடத்து) இலதாய பிரிவினைத் தலைமகள் தன்னிடத்து ஏற்றி அப்பிரிவிற்கு அஞ்சுதலால், இப்படி சொல்லினன்.

(க - து.) தலைமகன் தோழியை நோக்கி, உன் மாதிற்கு மடமை அளவுகடந்திருக்கின்ற தென்றன் என்பது.

2. Unusually great is the woman's modesty of your maid whose beauty fills my eyes and whose shoulders resemble the bamboo stem.

கூ. மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதோன் றுண்டு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) கோக்கப்பட்ட பளிக்குமணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுநூல்போல இம்மடந்தையது அணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுகின்றதொரு தறிப்புண்டு, (எ-று).

அணி—புணர்ச்சியாலுய வழகு; அதனகத்துக் கிடத்தலாவது அதனேடு உட்னிகழ்தற் பாலதன்றிவைத்து உடனிகழ்தல். † அதனை யானறிகின்றிலேன்; நீ யறிந்து கூறல்வேண்டுமென்பது கருத்து.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) மணியில் - (கோக்கப்பட்ட) படிக

மணியினுள, (இருந்து), நிகழ்தரும் - (புறத்துத்) தோன்றுகின்ற, நூல் போல்-நூலைப்போல, மடந்தை-இம்மடந்தையினது, அணியில்-அழகினுள், (இருந்து), நிகழ்வதொன்று-(புறத்துத்) தோன்றுகின்றதாகிய ஒருகுறிப்பு, உண்டு-இருக்கின்றது, (எ-று).

* "நுண்ணுணர்வுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறி வென்பது பெரும்பேதை மைத்தே" என்பதிற் குணர்தற்பாலதாம்.

‡ இவ்வாறு கூறினன் - தலைமகன் 'கண்ணிறைந்த ++பெரிது' என்றிவ்வாறு கூறினன். † அதனை-அக்குறிப்பினை.





அணி-புனர்ச்சியாலாகிய அழகு; குறிப்பு அவ்வழகினு ளிருத்தலாவது அவ்வழகோடு உடனிகழ்வதல்லா திருந்தும் உடனிகழ்தல். அதனை யான் அறிகின்றிலேன்; (தோழியே!) நீ அறிந்து சொல்லல் வேண்டுமென்பது கருத்து.

(க - து.) தலைமகன் தோழியை நோக்கி, என்காதலியின் அழகினுள் ஓர் குறிப்பு விளங்குகின்றது; அதனை நீ யறிந்துகூறல் வேண்டுமென்றான் என்பது.

3. As through the crystal beads is seen the thread on which they are strung, so there gleams something in the beauty of this woman.

ச. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதோன் றுண்டு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) முகையது முகிழ்ப்பினுளதாய்ப் புறத்துப் புலனு காத நாற்றம்போல் நின்பேதை என்னெஞ்சு நகக்கருது நகையது முகி ழ்ப்பினுளதாய்ப் புறத்துப் புலனுகாததோர் குறிப்புண்டு, (எ - று).

முகிழ்ப்பு-முதிர்ச்சியாற் * புடைபடுதல். நகை-புணர்ச்சி யின்பத்தா னிகழ்வது.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) முகைமொக்குள் - அரும்பினது முகிழ்ப்பினுள், உள்ளது-உளதாய்ப் (புறத்தில்தோன்றுத), நாற்றம்போல் - வாசனையைப்போல, பேதை - (உன்) மாது, நகைமொக்குள் - (என்னெஞ்சு நகைக்கக் கருதுகின்ற) நகையது முகிழ்ப்பினுள், உள்ளது-உளதாய்ப் (புறத் தில் தோன்றுத), ஒன்று-ஒருகுறிப்பு, உண்டு-இருக்கின்றது, (எ-று).

முகிழ்ப்பு-முதிர்ச்சியாற் புடைபடுதல். நகை-புணர்ச்சியின்பத்தா லுண் டாவது. நகையது முகிழ்ப்பு-புன்சிரிப்பு. புறம்-வெளி.

(க - து.) தலைமகன் தோழியை நோக்கி, என் காதலியின் புன்சிரிப்பினுள் வெளியாகாததோர் குறிப்பிருக்கின்றது; அதனை நீ யறிந்துகூறல் வேண்டுமென்றுன் என்பது.

4. Like the fragrance that is contained in the opening bud, there is something concealed in the budding smile of this maid.

ருு. செறிதோடி செய்திறந்த கள்ளமுறுதுயர்
தீர்க்கு மருந்தோன் றுடைத்து.

* புடைபடுதல்-உப்புதல்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) நேநங்கிய வளைகளை யுடையாள் என்கணில்லாத தொன்றனை யுட்கொண்டு * அது காரணமாக என்னை மறைத்துப் போன தறிப்பு என் மீக்க துயரைத் தீர்த்த மருந்தாவதொன்றனை யுடைத்து, (எ - று).

உட்கொண்டது-பிரிவு. † கள்ளம் - ஆகுபெயர். மறைத்தற்குறிப்பு - தானுமுடன்போக்குட்கொண்டது. உறுதுயர்-நன்று செய்யத்தீங்குவினைதலானும் அதுதான் தீர்திறம் பெருமையானும் உளதாயது. மருந்து-அப்பிரிவின்மை தோழியாற் றெளிவித்தல். † நீயதுசெய்தல் வேண்டுமென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) செறிதொடி - நெருங்கிய வளையல் களையுடையாள், செய்து - (என்னிடத்து இல்லாததொன்றினை) உட் கொண்டு, இறந்த கள்ளம் - (அதுகாரணமாக என்னைமறைத்துப்) போன குறிப்பு, உறுதுயர் - (என்) மிக்கதுயரை, தீர்க்குமருந்தொன்று-ஒழிக்கும் மருந்தாவ தொன்றினை, உடைத்து-உடையது, (எ-று).

உட்கொண்டது-பிரிவு. கள்ளம் - இடவாகுபெயர். மறைத்தற்குறிப்பு-(தலைமகள் தலைமகனுடன்) தானும் உடன்போதற்கு உட்கொண்டது. உறு துயர்-நன்றுசெய்யத் தீங்குவினைதலாலும் அத்தீங்கு தீர்க்குந்திறம் பெரு மையாலும் உளதாயது. மருந்து - அப்பிரிவில்லாமையைத் தோழியால் தெளியச்செய்தல். (தோழியே) நீ அது செய்தல்வேண்டு மென்பதாம்.

(க-து.) தலைமகன் தோழியை நோக்கி, என்காதலி யென் னிடத்தில்லாத தொன்றினை யுட்கொண்டு சென்ற குறிப்பு என் மிக்கதுயரைத் தீர்க்கும் மருந்தாவதொன்றினையுடைய தென்றான்.

5. The secret wiles of her whose armlets are tight fitting contains a remedy that can cure my great grief.



கூ. பேரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்ந துடைத்து.

[தலைமகன் குறிப்பறிந்த தலைமகள் ¶ அதனை $ அது தெளிவிக்கச்சென்ற தோழிக் கறிவுறுத்தது.]

---

* அது-அப்பிரிவு.

† கள்ளம் (கபடம்) என்னுமிடப்பெயர் அங்குநிகழுங் குறிப்பினை யுணர்த்துதலால், இடவாகுபெயராம்.

‡ நீயது செய்தல்வேண்டும்-தோழியே! நீயான் பிரியாமையைத் தலை மகளுக்குச் சொல்லி அவளைத் தெளியச் செய்தல் வேண்டும்.

¶ அதனை-தலைமகனது பிரிதற் குறிப்பினை.

$ அது - பிரிதற்குறிப்பு.

பரி:—(இ - ள்.) காதலர் வந்து தம்பிரிவினாலாய துன்பத்தினை மிகவுமாற்றி நாமகிழும் வண்ணங் கலக்கின்ற கலவி இருந்தவாற்றான் மேலு * மத்துன்பத்தினை அரிதாக வாற்றியிருந்து அவரன்பின்மையை நினையுந் தன்மையுடைத்து, (எ-று).

பிரிதற் குறிப்பினாற் செய்கின்ற தாகலான், முடிவில் இன்னாதாகா நின்றதென்பதாம்.

தெளி:—[தலைமகனது குறிப்பினையறிந்த தலைமகள் அதனை அது தெளிவிக்கச்சென்ற தோழிக்கு அறிவித்தது.] (இ - ள்.) பொரிதாற்றி:— (காதலர்வந்து தமது பிரிவினாலாகிய துன்பத்தை) மிகவும் நீக்கி, பெட்பங் கலத்தல் - (நாம்) மகிழும்வண்ணம் புணருகின்ற புணர்ச்சியானது, அரிதாற்றி - (இருந்தவிதத்தால் மேலும் அத்துன்பத்தை) அரிதாகப்பொறுத்திருந்து, அன்பின்மை-(அக்காதலரது) அன்பில்லாமையை, சூழ்வது-நினையுந்தன்மையை, உடைத்து-உடையது, (எ-று).

(காதலர் புணர்ச்சியைப்) பிரிதற்குறிப்பினால் செய்கின்றதாகலால், (அது) முடிவில் துன்பஞ்செய்வதாகின்ற தென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியோடு காதலர்வந்து தம்பிரிவினாலுண்டாகிய துன்பத்தை யொழித்து நாம் மகிழும்படி புணரும் புணர்ச்சியானது இருந்த விதத்தால், மேலும் அவரது அன்பில்லாமையை நினையுந் தன்மையையுடைய தென்றாளென்பது.

6. The loving embrace of my lover is capable of sustaining my former grief and meditating on his bereaved love.

எ. தண்ணந் ‡ துறைவன் றணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளை.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) குளிர்ந்த துறையை யுடையவன் நம்மை மெய் யாற் கூடியிருந்தே மனத்தாற் பிரிந்தமையை அவன் தெறிப்பானறிதற் குரிய நம்மினும் இவ்வளைகள் முன்னே யறிந்தன, (எ-று).

† கருத்து நிகழ்ந்ததாகலின் 'தணந்தமை' என்றும், யான் தெளிய வுணர்தற்கு முன்னே தோள்கண் மெலிந்தன வென்பாள் ¶ அதனை வளைமே லேற்றி [] அது தன்னை யுணர்வுடைத்தாக்கியுங் கூறினாள்.

---

* அத்துன்பத்தினை - பிரிவில்லாகிய துன்பத்தினை.
‡ துறைவன்-நெய்தனிலத்துத் தலைமகன்.
† கருத்து நிகழ்ந்ததாகலின் - பிரியுமெண்ணமுண்டாயிற்றுகலால்.
¶ அதனை - தோள்களின்மெலிவை.
[] அதுதன்னை - வளையலை.



தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) தண்ணந்துறைவன்-குளிர்ந்த துறை யையுடையவன், தணந்தமை-(நம்மை மெய்யால் கூடியிருந்தே மனத்தாற்). பிரிந்தமையை, நம்மினும்-(அவன் குறிப்பால் அறிதற்குரிய) நம்மைப்பார்க் கிலும், வளை-இவ்வளையல்கள், முன்னமுணர்ந்த-முன்னே அறிந்தன, ()

பிரிதற் கருத்து நிகழ்ந்ததாகலால் 'தணந்தமை' என்றும், (தண்ணந் துறைவனது பிரிவினை) யான் தெளிய அறிதற்குமுன்னே தோள்கள் மெலிந்தனவென்பாள் அதனை வளையல்மேலேற்றி 'முன்னமுணர்ந்தவனை' என்று அதனை அறிவுடையதாக்கியுஞ் சொல்லினாள். மெய்-உடம்பு.

(க-து.) தலைமகள் தோழியோடு காதலர்பிரிதலை நாம் அறிதற்கு முன்னரே இவ்வளையல்கள் அறிந்துவிட்டன வென்றாளென்பது.

7. My very armlets have understood long before me the mental separation from the lord of this cool shore



அ. நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமு

மெழுநாளே மேனி பசந்து.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) எங்காதலர் பிரிந்துபோயினர் நெருநற்றே; அப் பிரிவிற்ற யாமும் மேனிபசந்து ஏழுநாளுடைய மாயினேம், (எ-று).

நெருநற்றுச்செய்த தலையளியாற் பிரிவு துணியப்பட்டதென்பாள் 'நெருநற்றுச் சென்றார்' என்றும், * அதனை யையுற்றுச் செல்கின்றது ஏழுநாளுண்டாகலின் † அன்றே மேனி பசந்ததென்பாள் மேனிபசந்தெழு நாளேழ் என்றுங் கூறினாள். இவ்வாற்றாற் றலைமகனது பிரிதற்குறிப் பினை யுணர்த்தி நின்றது.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) எங்காதலர்-எமது காதலர், நெருநற்று-நேற்றே, சென்ஞர்-(பிரிந்து) போயினர், (அப்பிரிவிற்கு), யாமும்—, மேனிபசந்து - உடம்பு நிறவேறுபாடடைந்து, எழுநாளேம் - எழுநாளுடையேமாயினேம், (எ-று).

(காதலர்) நேற்றுச்செய்த தலையளியால் பிரிவு நிச்சயிக்கப்பட்டதென்பாள் 'நெருநற்றுச்சென்ஞர்' என்றும், அதனைச் சந்தேகித்துச் செல்கின்றது எழுநாள் உண்டாகலால் அன்றே மேனிநிறவேற்றுபாடடைந்ததென்பாள் மேனிபசந்தெழுநாளேம் என்றும் சொல்லினாள். (சந்தேகித்துச் செல்லும்) இவ்விதத்தால் தலைமகனது பிரிதற்குறிப்பை மேனிபசத்தல் அறிவித்து நின்றது. தலையளி-முகமலர்ந்தினியகூறிப் புணர்தல்.

---

* அதனை - அப்பிரிவை.

† அன்றே-அப்பொழுதே; அஃதாவது காதலாது பிரிவு உண்டாவதற்கு ஏழாவது நாளே.



(க - து.) தலைமகள் தோழியோடு காதலர் நேற்றுப்பிரிந்து போயினர்; என்மேனிபசந்து எழுநாளாயிற் றென்றாளென்பது.

8. It was but yesterday that my lover left me; and it is seven days since my body turned sallow (wasting away).

கூ. தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி
யஃதாண் டவள்செய் தது.

[தலைமகள் குறிப்பறிந்த தோழி அதனைத் தலைமகற் கறிவித்தது.]

பரி:—(இ-ள்.) * யானது தெளிவித்தவழித் தெளியாது அவர் பிரிய யாண்ண்டிருப்பின் † இவை நில்லாவெனத் தன்றோடியைநோக்கி, ‡ அதற்கேதுவாக ¶ இவை மெலியுமெனத் தன் மென்றோள்களையு நோக்கிப், பின் [] இவ்விரண்டும் நிகழாமல் நீர் நடந்து காத்தல் வேண்டுமெனத் தன்னடியையுநோக்கி, அங்ஙனம் அவள் செய்த குறிப்பு உடன்போக்கா யிருந்தது, (எ - று).

செய்தகுறிப்பு-செய்தற் கேதுவாய குறிப்பு. () 'அஃது' என்றுள்; 'செறிதொடி செய்திறந்த கள்ளம்' என்றுரைகலின். (*) பிரிதற் குறிப்புண்டாயின், அஃதழுங்குதல் பயன்.

தெளி:—[தலைமகளது குறிப்பினையறிந்த தோழி அக்குறிப்பினைத் தலைமகனுக்கு அறிவித்தது.] (இ-ள்.) (யான் அதனைத் தெளிவித்த விடத்துத் தெளியாமல் அவர் பிரிய யான் இங்கிருந்தால்) தொடிநோக்கி-(இவை நில்லாவென்று தனது) வளையல்களைப்பார்த்து,மென்றோளுநோக்கி-(அதற்குக்காரணமாக இவை மெலியுமென்று தனது) மெல்லிய தோள்களையும் பார்த்து, அடிநோக்கி-(பின் இவ்விரண்டும் உண்டாகாமல் நீர் நடத்து காத்தல் வேண்டுமென்று தனது) அடிகளையும் பார்த்து, ஆண்டு - அவ்வாறு, அவள் செய்தது-அவள் செய்த குறிப்பு, அஃது - உடன்போக்காயிருந்தது.

---

* யான்-தோழியாகியநான்; அது-உனதுபிரிவை.

† இவை - வளையல்கள்.

‡ அதற்கேதுவாக-வளையல்கள் நில்லாமைக்குக் காரணமாக.

¶ இவை - தோள்கள்.

[] இவ்விரண்டும் - வளையல்கள் நில்லாமையும் தோள்கள் மெலிதலுமாகிய இவ்விரண்டும்.

() உடன்போக்கினை 'அஃது' என்று தோழி தலைமகனுக்குச் சுட்டிக் கூறினாள்; (எனெனின்,) (இவ்வதிகாரத்தின் ஐந்தாவது குறளில் தலைமகன்) 'செறிதொடி செய்திறந்த கள்ளம்' என்று கூறினாளாகலினென்க. கள்ளம் - உடன் போதற்குறிப்பு.

(*) (தலைமகனிடத்துப்) பிரிதற்குறிப்புண்டாயின், அஃது (பிரிதற்குறிப்பு) (அவன் தன் காதலியைவிட்டுப் பிரிவதுபற்றி) 'அழுங்குதல் (இரங்குதல்) பயன். (அழுங்குதலைப்பயனாகவுடையது.)



செய்த குறிப்பு - செய்தற்குக் காரணமான குறிப்பு. (தோழி), 'அஃது' என்றாள்; (தலைமகன்) 'செறிதொடி செய்திறந்த கள்ளம்' என்று முன்னர்க் கூறினாளாகலால். பிரிதற் குறிப்புண்டாயின், அஃது அழுங்குதல் பயன்.

(கூ-து.) தோழி தலைமகனோடு தலைமகள் தன் தொடியையும் தோளையும் அடியையும் நோக்குதலால், அவள் குறிப்பு உடன் போக்கா யிருந்ததென்று கூறினாளென்பது.

9. She looked at her tender shoulders, the armlets slid from them, and her feet; this was what she did there.

ய. பெண்ணினுற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினுற்

காமநோய் சொல்லி யிரவு.

[தலைமகன் பிரியாமைக் குறிப்பினைத் தோழிக் கறிவுறுத்தது.]

பரி:—(இ - ள்.) மகளிர் தங் காமநோயினைத் தோழியர்கீதும் வாயாற் சொல்லாது கண்ணினுற் சொல்லி * அது தீர்க்கவேண்டுமென்று ¶ அவரையிரவாது உடன்போதல் குறித்துத் தம்மடியினை யிரத்தல் தமக்கியல்பாகிய பெண்மை மேலும் ஓர் பெண்மை யுடைத்தென்று சொல்லுவர் அறிந்தோர், (எ - று).

தலைமகள துடன்போதற்றுணிபு தோழியாற் † தெளிந்தாளுகலின், தன் பிரிவின்மைக் குறிப்பினை யறிவுறுப்பான், அவள் பெண்மையினைப் ‡ பிறர்மேலிட்டு வியந்து கூறியவாறு.

தெளி:—(தலைமகன் தனது பிரியாமைக் குறிப்பினைத் தோழிக்கு அறிவித்தது.] (இ - ள்.) காமநோய் - (மகளிர் தமது) காமநோயினை, கண்ணினுற் சொல்லி - (தோழியர்க்கும் வாயாற் சொல்லாது) கண்ணினுற் சொல்லி, இரவு-(அதனைத் தீர்க்க வேண்டுமென்று அவரை யிரவாமல் உடன்போதலைக் குறித்துத் தமது அடியினை) இரத்தல், பெண்ணினுல் - (தமக்கு இயல்பாகிய) பெண்மை மேலும், பெண்மை யுடைத்து-ஓர் பெண்மையை யுடையது, என்ப - என்று சொல்லுவர், (அறிந்தோர்), (எ - று).

(தலைமகன்) தலைமகளது உடன்போதற் றுணிபினைத் தோழியால் தெளிந்தாளுகலால், தனது பிரிவில்லாமைக் குறிப்பினை அறிவிப்பான், அவள் பெண்மையினைப் பிறர்மேலிட்டு வியந்து சொல்லியவாறும்.

---

* அது - காமநோய். ¶ அவரையிரவாது - தோழியரை யாசியாமல்.

† தெளிந்தாளுகலின் - அறிந்தாளுகலால்.

‡ பிறர்மேலிட்டு - 'பெண்ணினுற் + + இரவு' என்று பிறமகளிர் மேல்வைத்து.

(க - து.) தலைமகன் தோழிக்கு மகளிர் தமது காமநோயி னைத்தீர்க்குமாறு குறிப்பாற் கூறி, தந்தோழிபணைபிரவாது உடன் போதலைக் குறித்துத் தமது கால்சுளை யிரத்தல் அவர்க்கியல்பாகு மென்றுகூறித் தனது பிரிவின்மையை யுணர்த்திது னென்பது.

10. To express love sickness through eyes and for relief to pray, bespeaks woman-hood's most womanly device.



## 14 - வது அதிகாரம்

### புணர்ச்சி விதும்பல்:—*Desire for intercourse.*

பரி:—அஃதாவது தலைமகனுந் தலைமகளும் புணர்ச்சிக்கண்ணே விரைதல். * மேற் புணர்ச்சி மிகுதிபற்றித் தலைமகன் பிரிதற்குறிப் பறி வுறுத்த தலைமகள் அவன்மாட்டே நிகழாது வேட்கை மிகவினுற் பின் னுந் தன் கண்ணே நிகழ்தலான், † இது குறிப்பறிவுறுத்தலின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது தலைமகனும் தலைமகளும் புணர்ச்சிக்கண்ணே விரைதல். மேற் புணர்ச்சி மிகுதிபற்றித் தலைமகன் பிரிதற் குறிப்பை அறி வுறுத்த தலைமகள் அவனிடத்தே நிகழாது ஆசை மிகுதியினால் பின்னும் தன்னிடத்தே நிகழ்தலால், இது குறிப்பறிவுறுத்தலின்பின் வைக்கப்பட் டது.

சு. உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்

கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

[பிரிதற் குறிப்பினை யுகியாலேடு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நினைந்த துணையானே களிப்பெய்தலும் கண்ட துணையானே மகிழ்வெய்தலும் கள்ளுண்டார்க்கில்லை; காமமுடையார்க் குண்டு, (எ - று).

களித்தல் - உணர்வழியாதது; மகிழ்தல்- அஃதழிந்தது. ‡ இவ்விரண் டும் உண்டெழியல்ல தின்மையிற் 'கள்ளுக்கில்' என்றாள். உண்டென்பது

---

* மேல் புணர்ச்சி மிகுதிபற்றித் தலைமகன் பிரிதற்கேதுவாய குறிப் பினைத் தோழிக்குத்தெரிவித்த தலைமகள் (புணர்ச்சிக்கண்ணே விரைதல்) அத்தலைமகனிடத்தே நிகழாத ஆசைமிகுதியால் பின்னும் தன்னிடத்தே நிகழ்தலைக் கூறுதலால், இது குறிப்பறிவுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

† இது-புணர்ச்சி விதும்பல்.

‡ இவ்விரண்டும் - களித்தலும் மகிழ்தலும்.



இறுதி * விளக்கு. † அப்பெற்றித்தாய காமமுடைய யான் புலத்தல் யாண்டையது என்பதாம்.

தெளி:—[பிரிதற் குறிப்பினையுகிய தலைமகளோடு நீ பிணங்காமைக் குக் காரணம் யாதென்று நகைத்துப் பேசிய தோழிக்குத் தலைமகள் சொல் லியது.) (இ - ள்.) உள்ளக்களித்தலும் - நினைந்தவளவாலே களிப்படைத லும், காணமகிழ்தலும்-கண்ட வளவாலே மகிழ்ச்சி யடைதலும், கள்ளுக்கு-கள்ளுண்டார்க்கு, இல்-இல்லை, காமத்திற்கு - காமமுடையார்க்கு, உண்டு-உளவாம், (எ - று).

களித்தல் - அறிவழியாதது; மகிழ்தல்-அவ்வறிவழிந்தது. இவ்விரண்டும் (கள்ளே) உண்ட விடத்தல்லாமல் இல்லாமையால் 'கள்ளுக்கில்' என்றான். அத்தன்மையதாய காமமுடைய யான் பிணங்குதல் எவ்வாறென்பதாம். உண்டு என்பது கடைநிலைத் தொழிற் றீபகமாம்; இது களித்தலும் என்பதனுடனும் மகிழ்தலும் என்பதனுடனும் சென்றியைந்து, காமத்திற்கு உள்ளக்களித்தலுமுண்டு, காணமகிழ்தலுமுண்டு என நின்றது.

கள்ளென்பது கள்ளுண்டாரையும், காமமென்பது காமமுடையாரையு முணர்த்தி நின்றமையின், விடாதவர்கு பெயராம்.

(க - து.) தலைமகள் தோழியோடு காமமுடையார்க்குத் தங் காமத்திற்குரியாரை உள்ளக்களித்தலும் காண மகிழ்தலுமுண்டு; கள்ளுண்டார்க் கவை யில்லையென்று கூறினளென்பது.

1. To delight at the thought and rejoice at the sight is peculiar to love and not to liquor.

உ. ‡ தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையுங் காம நிறைய வரின்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) மகளிர்க்குக் காமம் பனையளவினும் மிகவுண்டாமாயின், அதனால், தங்காதலரோடு தினையளவு ழடுதல் செய்யாமை வேண்டப்படும், (எ - று).

* விளக்கு - தீபகாலங்காரம்; அஃதாவது ஒரு வாக்கியத்தில் ஒரு சொல் மத்திமமணி நியாயத்தாலாவது சட்டாலாவது உம்மையாலாவது பிறவாற்றாலாவது பிறவாக்கியத்திற்கும் பொருள் பொருந்த உபகாரப் படுதலாம்.

† அப்பெற்றித்தாய - உள்ளக்களித்தலும் காணமகிழ்தலுமாய.

‡ தினை, பனையென்பன சிறுமை பெருமைகட்குக் காட்டவேனவாய சில் வ்ளவையாம்.





பனைத்தினையு மென்புழி ஐந்தனுருபு விகாரத்தாற் றொக்கது. மாடின் வருத்த மிகுமெனப் பிறர்க்குறுதி கூறுவாள் போன்று, தன் விதுப்புக் கூறியவாறு.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.) காமம் - (மகளிர்க்குக்) காமமானது, பனைத்தினையும்நிறைய - பனையளவினுமிக, வரின்-உண்டாமாயின், (அம் மகனிரால் தம்து காதலரோடு), தினைத்தினையும்-தினையளவும், ஊடாமை-பிணங்குதல் செய்யாமை, வேண்டும் - விரும்பப்படும், (எ - று).

பனைத்தினையும் என்றவிடத்து உறழ்பொருவின்கண் வந்த இன் என்னும் ஐந்தனுருபு செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது; அது விரியுமிடத்துப் பனைத்தினையினும் என்று விரியும். (தலைமகள்) பிணங்கினுல் வருத்த மிகுமென்று பிறர்க்கு உறுதி சொல்லுவாள் போன்று, 'தினைத் தினையும்-வரின்' என்று தன் விதுப்பைச் சொல்லியவாறும். விதுப்பு-புணர்ச்சிக்கண்ணே விளைதல்.

(க - து.) தலைமகள் தோழியோடு மகளிர் காமமிகும்போது தங்காதலருடன் பிணங்குதல் செய்வதில்லையென்று ளென்பது.

2. If women have a love that exceeds even the measure of the palmyra tree, they will not desire deslike (with their lord) even as little as the millet grain.



கூ. பேணது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணு தமையல கண்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) நம்மை யவமதித்துத் தான் வேண்டியனவே செய்யுமாயினும், கொண்கனை என் கண்கள் காணுதமைகின்றன வில்லை, (எ - று).

* தன் விதுப்புக் கண்கண்மே லேற்றப்பட்டது. † அத்தன்மையா லெடு புலக்குமாறென்னை யென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) பேணது - (நம்மை) அவமதித்து, பெட்பவே-(தான்) வேண்டியவற்றையே, செய்யினும்-செய்வானாயினும், கொண்கனை - காதலனை, கண் - (என்) கண்கள், காணுது - பாராமல், அமையல - பொருந்துகின்றனவில்லை, (எ - று).

---

* தலைமகள் தன்னுடைய விதுப்பை (விரைதலை) கண்களின்மே லேற்றிக் 'கொண்கனைக், காணு தமையல கண்' என்று கூறினமையின், இது முதலின்தொழில் இனமேலாய வுபசார வழக்காம்.

† அத்தன்மையாலெடு - நம்மை அவமதித்துத் தான் விரும்பியவற் றையே செய்யுங் காதலனுடன். அத்தன்மையேன் அவனெடு புலக்குமா றென்னை யென்பதாம் என்றும் பாடமுண்டு.

தலைமகள் தன் விதுப்பைக் கண்களின்மேல் எற்றிக் 'கொண்கனைக், காணு தமையல கண்' என்று கூறினாள். அத்தன்மையாளோடு (அவனைக் காணுதலில்லாத கண்களையுடைய யான்) பிணங்கும் விதம் எவ்வா றென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியோடு நம்மையவமதித்துத்தான் வேண்டியவற்றையே செய்யுங் காதலனை என்கண்கள் காணுதிருத்தல் முடியாதென்று ளென்பது.

3. Though my husband disregard me and do what is pleasing to him, still my eyes will not be satisfied unless they see him.

சு. ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு.

[இதுவுமது.)

பரி:—(இ - ள்.) தோழீ! காதலரைக் காணுழன் அவர் செய்த தவற்றைத் † தன்னெடு நினைந்து யானவரோ டூடுதற்கண்ணே சென்றேன்; ‡ கண்டபின் என்னெஞ்சு அதனை மறந்து கூடுதற்கண்ணே சென்றது, (எ - று).

சேறனிகழ்தல் நினைத்த நெஞ்சிற்கு மொத்தலின் 'அது மறந்து' என்றாள். * அச்செலவாற் பயன் என் என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. ¶ அவ்வெல்லையிலே நெஞ்சு அறைபோகலான், § அது முடிந்ததில்லை யென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்;) தோழி - தோழியே, (காதலரைக் காணுமுன் அவர் செய்த குற்றத்தைத் தன்னெஞ்சு எண்ணி), ஊடற்கட் சென்றேன் - (யான் அவரோடு) பிணங்குதலிலே சென்றேன், என்னெஞ்சு - (கண்டபின்) எனது மனமானது, அது மறந்து - அப்பிணங்குதலே மறந்து, கூடற்கட்சென்றது - புணர்தலிலே சென்றது, (எ - று).

(ஊடற்கண்) செல்லுதல் நிகழ்தல் (அவ்வூடலே) நினைத்த நெஞ்சிற்கும் ஒத்தலால் (என்னெஞ்சு) 'அது மறந்து'என்றான். அச்செல்லுதலால் பயன் யாது என்பது தோன்ற நின்றமையால், மன் ஒழியிசைப்பொருளில் வந்தது. அசமயத்திலே நெஞ்சு கீழறுத்துக்கொண்டு போகலால், அது முடிந்ததில்லையென்பதாம்.

(க-து.) கலைமகள் தோழியோடு என் மனம் எனக்கு வசமாகாது போதலால் யான் காதலருடன் பிணங்கியிருத்தல் முடியாது என்றாளென்பது.

† தன்னெஞ்சு-நெஞ்சொடு. ‡ கண்டபின் - காதலரைக் கண்ட பிறகு.
* அச்செலவால் - பிணங்குதலிலே செல்லுதலால்.
¶ அவ்வெல்லையிலே - பிணங்குதற்கண் செல்லுஞ் சமயத்திலே.
§ அது - பிணங்குதல்.



4. Oh my friend! I went prepared to feign displeasure, but my mind forgetting it went to embrace him.



பழிசாணேன் கண்ட விடத்து.

(இதுவுமது.)

பரி:—(இ - ள்.) முன்னெல்லாங் கண்டிருந்தும் எழுதுங்காலத்து * அஞ்சனக்கோலினியல்பு காணமாட்டாத கண்ணேபோல, கோஷ்கனது தவறு காணுதவிடத் தெல்லாங் கண்டிருந்தும் அவனைக் கண்ட விடத்துக் காணமாட்டேன், (எ - று).

† கோல்—ஆகுபெயர். இயல்பு-கருமை. என்னியல்பிதுவாகலின், மேலும் ‡ அது முடியாதென்பதாம்.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.) (முன்னெல்லாங் கண்டிருந்தும்) எழுதுங்கால்-எழுதும்போது, கோல்-அஞ்சனக்கோலினியல்பை, காணு-காணமாட்டாத, கண்ணேபோல் - கண்ணேபோல, கொண்கன்பழி - காதலனதுகுற்றத்தை, (காணுதவிடத்தெல்லாங் கண்டிருந்தும்), கண்டவிடத்து-(அவனைக்) கண்டவிடத்து, காணேன்-காணமாட்டேன், (எ - று).

கோல் - பொருளாகுபெயர். இயல்பு - கருமை. என்னியல்பு இதுவாகலால், மேலும் அது முடியாதென்பதாம்.

(க-து.) தலைமகள் தோழியோடு காதலனைக்கண்டவிடத்து, அவனது தவறு எனக்குத் தோன்று தொழிகின்ற தென்றாள்.

5. Like the eye which sees not the rod that paints it, I cannot see my husband's fault, when I see him.

சூ. காணுங்காற் காணேன் றவறுய காணுக்காற்
காணேன் றவறல் லவை.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) கொண்கனை யான் காணும்போழது ¶ அவன் றவறுயவற்றைக் காண்கின்றிலேன், காணுதபோழது அவையேயல்லது பிறவற்றைக் காண்கின்றிலேன், (எ - று).

* அஞ்சனக்கோல் - (கண்ணிற்கு) மைதீட்டுங்கோல்.

† கோலென்னும் பொருளின்பெயர் அதன் பண்பாகிய இயல்பை (கருமையை) யுணர்த்துதலால், பொருளாகுபெயராம்.

‡ அது - பிணங்குதல். ¶ அவன்தவறுயவற்றை - கொண்கன் (தலைமகன்) செய்தகுற்றங்களை.



செயப்படுபொருள் * அதிகாரத்தான் வந்தது. முன்பு நானின்னுடு சொல்லிய தவறுகள் இதுபொழுது காணுமையிற் புலந்திலேனென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) காணுங்கால் - (கொண்கனையான்) காணும்பொழுது, தவறுய-(அவன்) தவறுயவற்றை, காணேன் - காண்கின்றிலேன், காணக்கால் - காணுதபொழுது, தவறல்லவை - அத்தவறுகளையேயல்லாமல் மற்றவற்றை, காணேன்-காண்கின்றிலேன், (எ - று).

கொண்கனையென்னுஞ் செயப்படுபொருள் அதிகாரத்தால் வந்தது. முன்பு நான் உன்னுடுசொல்லிய (கொண்கனது) தவறுகள் இப்போது காணுமையால் (அவனுடு) பிணங்கிலே னென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழியோடு யான் காதலனைக் காணுவிடத்து அவனது குற்றங்களைக் காண்கின்றேனல்லாமல், கண்டவிடத்துக்காண்கின்றிலே னென்றுளென்பது.

6. When I see my husband I am blind to his faults; but when I do not see him, I find nothing but faults.

எ. உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்

# பொய்த்த லறிந்தேன் புலந்து.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) தம்மை யீர்த்துக்கொண்டு போதலறிந்து வைத்து † ஓடுகின்ற புனலுட்பாய்வீர் செயல்போல, புலவி முடிவு போகாமை யறிந்து வைத்துக் கொண்டதனோடு புலந்து பெறுவ தென், (எ - று).

‡ பாய்பவனென்பது ஆகுபெயர். பொய்த்தல் - புரைபடுதல். புலந் தாலும் பயனில்லையென்பதாம். § பொய்த்தலறிந்தேனென்பது பாடமா யின், உய்த்தலறிய ஓடுநீருட் பாய்வார்போல ¶ முடிவறியப் பண்டொரு

---

* அதிகாரத்தான் - புணர்ச்சிவிதும்பலென்னு மதிகாரத்தால்.

† ஒழுகுகின்ற என்றும் பாடமுண்டு.

‡ பாய்பவனென்னும் பொருளின்பெயர் அவரது செயலினை யுணர்த் துதலால், பொருளாகுபெயராம்.

§ பொய்த்தலறிந்தென் என்பதற்குப் பிரதியாகப்பொய்த்தலறிந்தேன் என்பது பாடமாயின், உய்த்தலறிந்து- இழுத்துக்கொண்டு போதலையறியும் படி, புனல்பாய்பவரேபோல்-(ஓடுகின்ற) நீரில்பாய்பவர்போல, (முடிவினை யறியும்படி முன்னொருமுறை), புலந்து - பிணங்கி, பொய்த்தலறிந்தேன் - முடியாமையை யறிந்துகொண்டேன், [இனி அது செய்யத்தக்கதன்று] எனப்பொருளைத்துக்கொள்க. பாய்பவர் - வினையாலணையும் பெயர்.

¶ முடிவறிய - பிணக்கினது முடிவையறியுமாறு.

காற் புலந்து முடியாமையறிந்தேன்; இனி அதுசெயற்பாற் றன்றென வுரைக்க.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) உய்த்தலறிந்து - (தம்மை) இழுத்துக்கொண்டு போதலையறிந்திருந்தும், புனல்பாய்பவரேபோல்-(ஓடுகின்ற) நீரில் பாய்வார்செயல்போல, பொய்த்தலறிந்து - (பிணக்கு) முடிவுபோ காமையை யறிந்திருந்தும், புலந்து - (காதலனை) பிணங்கி, என்-(பெறு வது) யாது, (எ - று).

பாய்பவரென்பது பொருளாகுபெயர். பொய்த்தல் - பழுதுபடுதல்; அஃதாவது தவறிப்போதல். பிணங்கினலும் பயனில்லையென்பதாம்.

(க-து.) தலைமகள்தோழியோடுபிணங்குதலின்முடிவைக்காணு மையால், யான் காதலனுடன் அதுசெய்தல் முடியாதென்றாள்.

7. Like those who plunge into the stream which they know will carry them off, why should a wife feign dislike which she knows cannot hold out long.

நூ. இளித்தக்க வின்ன செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.

[தலைமகள் புணர்ச்சிவிதுப் பறிந்த தோழி தலைமகற்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) வஞ்சகா! தன்னையுண்டு களித்தார்க்கு இளிவரத்தக்க இன்னுதவற்றைச் செய்யினும், அவரால் மேன்மேல் விரும்பப்படுவதாய் கள்ளுப்போலும் எங்கட்கு நின்மார்பு, (எ - று).

அவ்வின்ஞதன - ¶ நாணின்மை, § நிறையின்மை, ஒழுக்கமின்மை, உணர்வின்மையென் றிவை † முதலாயின. எங்கட்கு நாணின்மை முத லியவற்றைச் செய்யுமாயினும் எங்களால் மேன்மேல் விரும்பப்படா நின்ற தென்பதாம். ' கள்வ ' என்றதும் * அதுநோக்கி.

தெளி:—[தலைமகளது புணர்ச்சி விதுப்பினை யறிந்த தோழி தலைமக னுக்குச் சொல்லியது.] (இ - ள்.) கள்வ - வஞ்சகா, நின்மார்பு - (எங்களு க்கு) உனது மார்பு, களித்தார்க்கு - (தன்னையுண்டு) களித்தவர்க்கு, இளித் தக்க - அவமானம்வாத்தக்க, இன்ஞசெயினும் - இன்ஞதனவற்றைச்

---

‡ இளிவாகத்தக்க என்றும்பாடமுண்டு.

¶ நாணின்மை - இழிவாயின செய்தற்கண் விலக்குவதின்மை.

§ நிறையின்மை - மனத்தடக்கற்பாலனவற்றை வேட்கை மிகுதியால் அடக்கமாட்டாது வாய்விடுதல்.

† முதலாயின என்றமையின் சோர்வடைதல் - தவறிவீழ்தல் முத லியவற்றையுங் கொள்க.

* அதுநோக்கி - இளித்தக்க வின்ஞ செய்தலைக்கருதி.



செய்தாலும், கள்ளற்றே - (அவரால் மேலும்மேலும் விரும்பப்படுவதாகிய) கள்ளைப்போலும், (எ - று).

அவ்வின்ஞதன - நாணில்லாமை, நிறையில்லாமை, ஒழுக்கமில்லா மை, உணர்வில்லாமை என்ற இவை முதலாயின. (கள்வ ! நின்மார்பு) எங்களுக்கு நாணில்லாமை முதலியவற்றைச் செய்யுமாயினும் எங்களால் மேலும் மேலும் விரும்பப்படுகின்ற தென்பதாம். ' கள்வ ' என்றதும் அதுநோக்கி.

(க - து.) தோழி தலைமகனை நோக்கி, கள்வனே ! நீ யாது தவறுசெய்யினும், உனது மார்பு எங்களால் விரும்பப்படுவதாயிற் றென்று கூறினளென்பது.

8. O traitor ! Your breast is to me what liquor is to those who rejoice in it; though it produces unpleasant disgrace.

மலரினு மெல்லிது காமஞ் சிலர்தன்
செவ்வி தலைப்படு வார்.

[ *உணர்ப்புவயின் வாரா வுடற்கட் டலைமகன் சொல்லியது.)

பரி:—(இ - ள்.) காமவின்பம் மலரினு மெல்லிதா யிருக்கும்; அங்ஙனம் மெல்லிதாதலை யறிந்து ¶ அதன் செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர், (எ - று).

தொட்டதுணையானே மணச்செவ்வி யழிவதாய மலர் எல்லாவற்றினும் மெல்லிதென்பது விளக்கலின், உம்மை சிறப்பின்கண் வந்தது. ‡ குறிப்பும், | வேட்கையும், தகர்ச்சியும், இன்பமும் ஒருகாலத்தின் கண்ணே யொத்து நுகர்தற்குரியாரிருவர் அதற்கேற்ற இடனும், காலமும், (*)உபகரணங்களும் பெற்றுக்கூடி நுகர வேண்டுதலின், அதன் செவ்வி தலைப்படுவார் சிலர் என்றும், () அவற்றுள் யாதானுமொன்றனுற் சிறிது வேறுபடினும் † வாடுதலின் 'மலரினு மெல்லிது' என்றுங் கூறினன். குறிப்பொவ்வாமையின் [] யானது பெறுதின்றிலே னென்பதாம். தலைமகனூடறீர்வது பயன்.

---

* உணர்ப்புவயின் வாரா வூடல்-உணர்த்துதற்கு இடம்வாராதபினைக்கு.

¶ அதன் - காமவின்பத்தின்

‡ குறிப்பு - புணர்க்கருதுதல். | வேட்கை - புணர்ச்சி விருப்பம்.

(*) உபகரணங்கள்—உதவியாயிருப்பன. அவை:—மெல்லணை, மலர், சாந்து, சிற்றுண்டி, இளங்காற்று, புணர்ச்சியின் வகைகளை வகுத்துள்ள [illegible] () அவற்றுள் - இடமுகலியவற்றுள்.

† வாடுதலின் - சுருங்கிப்போதலால்.
[] யானது - யான் அக்காமவின்பத்தை.



தெளி:—[தலைமகள் தணியாதபிணக்குடையா ளாயவிடத்துத் தலை மகன் சொல்லியது.] (இ - ள்) காமம்-காமவின்பம், மலரினும்-பூவினும், மெல்லிது - மெல்லிதா யிருக்கும், (அவ்வாறு மெல்லிதா யிருத்தலை யறிந்து), அதன்செவ்வி - அதன்பக்குவத்தை, தலைப்படுவார் - பெறுவார், சிலர் - (உலகத்தில்) சிலர், (எ-று).

தொட்டவளவாலே வாசனைப் பக்குவம் அழிவதாகிய மலர் எல்லாவற் றினும் மெல்லிதென்பதை விளக்கலால், மலரினும் என்ற உம்மை உய ர்வு சிறப்பின்கண் வந்தது. குறிப்பும், வேட்கையும், அனுபவித்தலும், இன் பமும் ஒருகாலத்திலே ஒத்து அனுபவித்தற்குரியாரிருவர் அவ்வனுபவத் திற்கு ஏற்ற இடமும், காலமும், உபகரணங்களும் பெற்றுக்கூடி யனுப விக்க வேண்டுதலால், அதன் செவ்வி தலைப்படுவார் சிலர் என்றும், அவற் றுள் யாதானும் ஒன்றால் சிறிது வேறுபடினும் (காமம்) வாடுதலால் 'மல ரினு மெல்லித' என்றும் சொல்லினான். குறிப்பொவ்வாமையால் யான் அது பெறுகின்றிலேனென்பதாம். (தலைமகன் 'மலரினும் + + தலைப் படுவார்' என்றிவ்வாறு கூற) தலைமகள் ஊடலொழிவது பயன்.

(த - து.) தலைமகன் காமவின்பத்தின் பக்குவமறிந்து, அதனை யனுபவிப்பவர் சிலரேயாவ ரென்று கூறினனென்பது.

9 Sexual bliss is more tender than a flower; and few are those who attain its real nature.

ம. கண்ணிற் றுனித்தே கலங்கினள் புல்லுத
லென்னினுந் தான்விதுப் புற்று.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) காதலி முன்னொருநாள் புல்லல் விதுப்பினைச் சென்ற என்னெடு தன் கண்மாத்திரத்தா னூடி, புல்லுதலை என்னினுந் தான் விதும்பலால் அது தன்னையும் அப்பொழுதே மறந்து கூடி விட்டாள்; அதனால் * யானித்தன்மையே னுகவும் விதுப்பின்றியூடி நீற்கின்ற விவள் அவளல்லள், (எ - று).

கண்மாத்திரத்தானூடல் - சொன்னிகழ்ச்சியின்றி அது சிவந்த தணையேயாதல். அவளாயின், இங்ஙன மூடற்கண்டா னென்பது பயன்.

---

* யானித்தன்மையேனுகவும்-யானிவ்வாறு வருந்துகின்றேனுக்கவும். "திருந்தே னுயங்கின்ற சிற்றம் பலவர்தென் னம்பொதியில், இருந்தே னுயங்கு மிணைமலர்க் கண்ணினின் னேக்கருளிப், பெருந்தே னெனநெஞ் சுகப் பிடித் தாண்டகம் பெண்ணமிழ்தம், வருந்தே லதுவன் றிதுவோ வருவ தொர் வஞ்சனையே" என்னுந் திருக்கோவையார்ச் செய்யுள் இங்குக்கவனித்தற்பாலதாம்.



தெளி:—[இதுவுமது]. (இ - ள்.) (காதலி முன்னொருநாள் புணர்ச்சி விதுப்பினுல் சென்ற என்னெடு) கண்ணிற்றுனித்து-(தன்) கண்மாத்திரத்தால் பிணங்கி, புல்லுதல் - புணர்தலை, என்னினும்-என்னைப்பார்க்கிலும், தான்விதுப்புற்று-தான்விதும்புதலால், கலங்கினள்-(அப்பிணக்கையும் அப்பொழுதே மறந்து) கூடிவிட்டாள், (அதனால் யான் இத்தன்மையேனுகவும் விதுப்பில்லாமல் பிணங்கிநிற்கின்ற இவள் அவளல்லள்), (எ - று).

கண்மாத்திரத்தால் பிணங்கல்-சொல் நிகழ்ச்சியில்லாமல் அக்கண் சிவந்தவளவேயாதல். அவளாயின், இவ்வாறு பிணங்குதலில் நீட்டித்திரா னென்

(க-து.) தலைமகன் இவள் என்மேனாடு கண்மாத்திரத்தாற் பிணங்கிக்கூடிய வென்காதலியல்லளென்று வருந்திக் கூறினன்.

10. She once feigned displeasure in her eyes, but the warmth of her embrace superposed my own.

## 15 - வது அதிகாரம்.

### நெஞ்சொடுபுலத்தல்:—Expostulation with oneself.

பரி:—அஃதாவது காரண முண்டாயவழியும் புலக்கக் கருதாது புணர்ச்சிவிதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும் தலைமகன் புலத்தலுமாம். † அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

தெளி:—அஃதாவது காரணம் உண்டாயவிடத்தும் பிணங்கினையாது புணர்ச்சிக் கண்ணே விரைகின்ற நெஞ்சுடனே தலைமகள் பிணங்குதலும் தலைமகன் பிணங்குதலுமாம். அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

க. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது.

[தலைமகன்கட் டவறுண்டாயவழியும் புலவிகருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நெஞ்சே! அவருடைய நெஞ்சு நம்மை நினையாது அவர்க்காய் நிற்றல் கண்டுவைத்தும், நீயெமக்காய் நில்லாது அவரை நினைத்தற் காணம் யாது? (எ - று).

அவர்க்காதல் - ‡ அவர் கருதியதற் குடம்படுதல். எமக்காகாதென்றது புல்லிக் குடம்படாமையை. ஒரு கருமத்தைத் தாமாக வறிந்து செய்ய

† புணர்ச்சிவிதும்பலின் பின் கெஞ்சொடு புலத்தலென்னும் அதிகாரம் வைத்த முறைமையும்.

‡ அவர் கருதியதற்கு - காதலர் நினைத்தகாரியத்திற்கு.





மாட்டாதார் செய்வானைக் கண்டாயினுஞ் செய்வர்; * நீ யதுவுஞ் செய்கின்றிலை யென்பதாம்.

தெளி:—[தலைமகனிடத்துத் தவறுண்டாகியவிடத்தும் பிணங்குதல் நினையாத நெஞ்சிற்குத் தலைமகள்சொல்லியது.] (இ - ள்.) நெஞ்சே-மனமே, அவர்நெஞ்சு - அவருடையமனம், அவர்க்காதல்கண்டும் - (நம்மை நினையாது) அவர்க்காய்நிற்றலைக் கண்டிருந்தும், நீயெமக்காகாதது - நீ எமக்காய் நில்லாது அவரை நினைத்தற்குக் காரணம், எவன்-யாது? (எ - று).

அவர்க்காதல்-அவர் நினைத்ததற்கு உடம்படுதல். எமக்காகாததென்றது பிணங்குதற்கு உடம்படாமையை. ஒருகாரியத்தைத் தாமாக அறிந்து செய்யமாட்டாதவர் செய்வாரைக் கண்டாயினும் செய்வார்; (நெஞ்சே!) நீ அதுவுஞ்செய்கின்றிலை யென்பதாம்.

(க - து.) தலைமகள் நெஞ்சே! நம்மை நினையாத காதலரை நீ நினைத்தற்குக் காரணம் யாதென்று வருந்திக் கூறினாளென்பது.

1. O My mind! Though you have seen his heart abiding by him, how is it you do not abide by me?

உ. உறாஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச்
சேறாஅரெனச் சேறியென் னெஞ்சு.

[இதுவுமது.]

பரி:—(இ-ள்.) என்னெஞ்சே, † மேலும் நம்மாட் டன்புடையராகாதவரை உள்ளவாறறிந்தவிடத்தும், நாஞ்சென்றால் வெகுளாரென்பது பற்றி நீ யவர்மாட்டுச் செல்லா நின்றாய்; இப்பெற்றியது மேலுமோ ரறியாமையுண்டோ, (எ - று).

‡ அவரையென்பது வேற்றுமை மயக்கம். பழங்கண்ணோட்டம் பற்றி

வெகுளாரென்பது கந்தாகச் ¶ சென்ரூய் ; நீ () கருதியது முடியுமோ வென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) என்னெஞ்சு - என்னுடைய மனமே, (மேலும்), உரூஅ தவர்க்கண்ட கண்ணும் - (நம்மிடத்து) அன்புடைய

---

* நீ யதுவும் - நீ அக்காரியத்தையும் (பிணங்குதலையும்).

† மேலும் - அவர்நெஞ் சவர்க்காதல் மேலும்.

‡ அவரையென்னும் இரண்டனுருபு தனக்குரிய பொருளைவிட்டு வழனுருபின் பொருளில் அவர்மாட்டு என வந்தமையின், வேற்றுமைமயக்கமாயிற்று.

¶ சென்ரூல், நீ கருதியது முடியாதென்பதாம் என்றும் பாடமுண்டு.

() கருதியது - சென்ரூல் காதலர் கோபியாரென் றெண்ணியது.



வாகாத காதலரை (உள்ளவாறு) அறிந்தவிடத்தும், செரு அரென - (நாம் சென்ரூல்) கோபியாரென்பது பற்றி, அவரை - (நீ) அவரிடத்து, சேறி - செல்லுகின்ரூய், (இத்தன்மையதுமேலும் ஓரறியாமை உண்டோ),(எ-று).

அவரையென்பது வேற்றுமை மயக்கம். (நெஞ்சே! காதலர்) பழைய தாட்சண்யம் பற்றிக் கோபியாரென்பதைப் பற்றுக்கோடாகக்கொண்டு சென்ரூய் ; நீ நினைத்தது முடியுமோ வென்பதாம்.

(க - து.) தலைமகள் நம்மிடத்தன்பில்லாத காதலரிடத்து நெஞ்சே ! நீ அவர் கோபியாரென்றெண்ணிச் செல்லுதல் தகுதியன்றென்ரூளென்பது.

2. O my heart! Though you know that my lord does not love me, still you go to him saying, "he will not be displeased".

கூ. * கேட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்.

[இதுவுமது].

பரி:—(இ - ள்.) நெஞ்சே! என்மாட்டு நிலாது நீ விரும்பிய வாறே அவர்மாட்டுச் செல்லுதற்குக் காரணம் கேட்டார்சீத நட்டார் உலகத்தில்லையென்னு நினைவோ, நின்னியல்போ, கூறுவாயாக, (எ-று).

என்னைவிட்டு அவர்மாட்டுச்சேறல் நீ பண்டே பயின்ற தென்பான் 'பெட்டாங்கு' என்றும், தானிதுபொழுது மானமிலளாகலிற் 'கெட்டார்க்கு' என்றுங் கூறினாள். † பின்னென்பது ஈண்டிடப்பொருட்டு ‡ செலலென்பது ஆகுபெயர். ஒல்கிடத்துல்ப்பிலா வுணர்வில்லார் தொடர் பாயிற்று நின்றொடர்பென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) நெஞ்சே-மனமே, (என்னிடத்து நில்லாமல்) நீ பெட்டாங்கு-நீ விரும்பியபடியே, அவர்பின்செலல் - அவரிடத்துச் செல்லுதற்குக்காரணம், கெட்டார்க்கு நட்டாரில்லென்பதோ - கெட்டவர்க்கு நட்பினர் (உலகத்தில்) இல்லையென்னும் நினைவோ, (உன்னியல்போ, சொல்லுவாயாக), (எ - று).

---

* "மூட்டின் றொருவ ருடைய பொழுதின்கண், அட்டிற்றுத் தின்பவ ராயிர வாபவே, கட்டலர்தார் மார்ப கலியூழிக் காலத்துக், கெட்டார்க்கு நட்டாரோ வில்" என்று பழமொழி கூறுவதிங்குணர்தற்பாலதாம்.

† பின் என்பது காலத்தையும் இடத்தையும் உணர்த்திவரும்; முன் என்பதும் இவ்வாறே யாம்.

‡ செலல் என்னுங் காரியம்பெயர் அதன் காரணத்தை யுணர்த்துதலால், காரியவாகுபெயராம். அக்காரணம்-புணர்ச்சிக்கண்ணே விளைதல்.

(நெஞ்சே!) என்னைவிட்டு அவரிடத்துச் செல்லுதல் நீ முன்னமே பழகியதென்பாள் 'பெட்டாங்கு' என்றும், தான் இப்பொழுது மானமில்லாதவளாகலால் 'கெட்டார்க்கு' என்றும் சொல்லினாள். பின் என்பது இங்கு இடப்பொருளில் வந்தது. செலல் என்பது காரியவாகுபெயர். (நெஞ்சே!) தளர்ந்தவிடத்து (உடனிருந்து) வருத்தமுறுத அறிவிலாது கட்பாயிற்று உனது கட்பென்பதாம்.

(க-து.) தலைமகள் நெஞ்சே! நீ என்வசமாக நில்லாது காதலரிடத்துச் செல்லுதற்குக்காரணம் கெட்டார்க்கு நட்டாரில்லையென்றெண்ணியோ, உன்னியல்போ, கூறுவாயாக என்றாள்.

3. O my heart! do you follow him at thy pleasure under the belief that the ruined have no friends?

ச. இனியன்ன நின்னைநெ சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) நெஞ்சே, நீயவரைக்கண்ட பொழுதே இன்பநுகராக் கருதுவதல்லது அவர் தவறுநோக்கி முன்புலவியை யுண்டாக்கி * அதனை † யளவறிந்து பின்னுகாக்கருதாய்; ஆகலான், இனியப்பேற்றிப்பட்டவற்றை நின்னைநெடுண்ணுவார் யார்? ‡ யானது செய்யேன்.

அப்பெற்றிப்பட்டன - ¶ புலக்குந்திறங்கள். () காணெனபது உரை

---

* அதனை - அவ்வின்பத்தை. † அளவறிந்து-பிணக்கின் அளவறிந்து.
‡ யானது செய்யேன் - (நெஞ்சே! உன்னைநெடு) யான் பிணங்கும் வகைகளை யாலோசித்தல் செய்யேன்.

¶ புலக்குந்திறங்கள் - முகங்கொடுத்துப் பேசாமை, கவிழ்ந்து படுத்

துக்கொள்ளல், எழுந்துசென் றொருபுறத் தொதுங்கித் தலைகுனிந்து நிற் றல் முதலியனவாம்.

"உணர்ப்புவயின்வாராவூடல்" என்னும் இறையனாகப்பொருள் சூத்திரவுரையில் நக்கீரனார் "தலைமகள்மாட்டு ஊடல் தோன்றுமிடத்து மூன்றுவகையான் ஊடல்தோன்றும்; செய்தான் கொல்லோவெனவும், செய்யாதின்றான் கொல்லோவெனவும், செய்யுங்கொல்லோவெனவும். அவற்றுட் செய்யாதின்றான் கொல்லோவென நிகழ்காலத்துப் பிறந்தது, பாத்தையைத் தேரேற்றினான், பூச்சூட்டினான், அவளோடு ஆடினான்கொ ல்லோவெனப் பிறப்பது. இனிச் செய்தானென்பது இறந்தகாலத்தைத் துணிவுபற்றி நிகழ்வது. இனி எதிர்காலத்தது செய்யுங்கொல்லோவென நிகழ்வது" என்று கூறியிருத்தல் இங்குணர்தற்பாலதாம்.

() சிறிது பொருளுணர்த்துமிடைச்சொல் உரையசையாம்.



யசை. * மற்று - வினைமாற்றின்கண் வந்தது. முன்னெல்லாம் புலப்பதாக வெண்ணியிருந்து பின் புணர்ச்சி விதும்பலின், † இவ்வாறு கூறினாள்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) நெஞ்சே-மனமே, (நீ அவரைக் கண்டபொழுதே இன்பத்தையனுபவிக்க நினைப்பதல்லாமல்), தனிசெய்து- (அவர் தவறு நோக்கிமுன்பு) பிணக்கை யுண்டாக்கி, மற்றுத்துவ்வாய் - (அதனை அளவறிந்து) பின்பு அனுபவிக்கநினையாய், (ஆகலால்), இனி யன்ன-இனி யத்தன்மைப்பட்டவற்றை, நின்னெடி-உன்னுடன், சூழ்வார்- எண்ணுவோர், யார்-எவர், (யான் அது செய்யேன்), (எ - று).

அத்தன்மைப்பட்டன - பிணங்குந்திறங்கள். கான்-உரையசை. மற்று- வினைமாற்றுப்பொருளில் வந்தது. முன்னெல்லாம் பிணங்குவதாக எண்ணி யிருந்து பின்பு புணர்ச்சிக்கண்ணே விரைதலால், இவ்வாறு சொல்லினாள்.

(கு-து.) தலைமகள் முன்பு காதலரோடு பிணங்குதல் செய்து பின்பு அவரைக்கூட நினையாத நெஞ்சே! உன்னோடு அப்பிணங்குந்திறங்களை யோசிப்பவர் யார் என்று சொன்பது.

4. O my heart! you would not at first feign dislike, and then enjoy; who would henceforth counsel you about such things.

இ. பெருஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு
மருஅ விடும்பைத்தென் னெஞ்சு.

[‡ வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) காதலரைப் பெறுதலான்று அப்பெறுமைக் கஞ்சா நின்றது; பெற்றக்கால் வாக்கடவ பிரிவினையுட்கொண்டு அதற் கஞ்சா நின்றது; ஆகலான், என்னெஞ்சம் எஞ்ஞான்றும் நீங்காத விடும்பையை யுடைத்தாயிற்று, (எ - று).

காதலரைப் பெற்றுவைத்துக் கலவியிழத்தல் உறுதியன்றென்னுங் கருத்தான் வழுவினோர்கின்றுளாகலிற் 'பெருஅமையஞ்சும்' என்றும், ¶ கல

---

* மற்றென்னு மிடைச்சொல் தனி செய்தல் என்னும் வினையை யொழித்துத் தனிசெய்யாமை என்னும் வினையைத்தந்து நின்றமையின், வினைமாற்றுப்பொருளதாயிற்று.

† நெஞ்சே! தனி செய்து துவ்வாய்; (ஆகலான்) இனியன்ன நின்னெஞ்சை சூழ்வார் யார் என்றிவ்வாறு கூறினாள்.

‡ "கொளைவல் பாணன் பாடினி கூத்தர், இளையர் கண்டோ ரிரு வகைப் பாங்கர், பாகன் பாங்கி செவிலி யறிவர், காமக் கிழத்தி காதற் புதல்வன், விருந்தாற் றுமை யென்றிவை யூடல், மருந்தாய்த் தீர்க்கும் வாயில்க ளாகும்" என்றகப்பொருள் விளக்கம் கூறுகின்றது. வாயில் - தூது.

¶ கலவியாராமையின் - புணர்ச்சிவிருப்பந் தணியாமையால்.

வியாராமையின் இன்னுமிவர் பிரிவாராயின் யாது செய்துமென்பது நிகழ்தலிற் 'பெறிற்பிரிவஞ்சும்' என்றும், * இவ்விரண்டு மல்லது பிறிதின்மையின் எஞ்ஞான்றும் 'அறு அவிடும்பைத்து' என்றுங் கூறினள்.

தெளி:—[தூதாகச்சென்ற தோழி கேட்பத் தலைமகள்சொல்லியது.] (இ - ள்.) (காதலரைப் பெறுதகாளில்) பெறு அமையஞ்சும் - அப்பெறுமைக்கு அஞ்சாநின்றது, பெறின் - பெற்றவிடத்து, பிரிவஞ்சும் - (வாக்கடவதாய) பிரிவினை (உட்கொண்டு அப்பிரிவிற்கு) அஞ்சாநின்றது, (ஆகலால்), என்னெஞ்சு-எனதுமனம், அறு அவிடும்பைத்து - (எந்நாளும்) நீங்காத துன்பத்தையுண்டையதாயிற்று, (எ - று).

காதலரைப் பெற்றிருந்தும் புணர்ச்சியை யிழத்தல் உறுதியன்றென்னுங் கருத்தால் தூதுக்கு உடன்படுகின்றுளாகலால் 'பெறு அமையஞ்சும்' என்றும், புணர்ச்சியாராமையால் இன்னும் இவர்பிரிவாராயின் யாது செய்வோமென்பது நிகழ்தலால் 'பெறிற்பிரிவஞ்சும்' என்றும், இவ்விரண்டு மல்லாமல் மற்றொன்றில்லாமையால் எந்நாளும் 'அறு அவிடும்பைத்து' என்றும் சொல்லினள்.

(க-து.) தலைமகள் தோழி கேட்ப, என்மனது காதலரைப் பெறுதகாலத்திலும் பெற்றகாலத்திலும் அஞ்சுகின்றமையால், நீங்காத துன்பத்தினை யுடையதாயிற்று என்று ளென்பதி.

5. My heart fears when without him; when with him it fears at the thought of losing him; thus it endures unceasing pain.

தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்ததென் னெஞ்சு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்) என்னெஞ்சு ஈண்டிருந்தது, காதலரைப் பிரிந்திருந்து அவர் கொடுமைகளை யான் † றன்னொடு நினைத்தக்கால், அவ்வளவறிந்து என்னைத் தின்பதுபோன்று துன்பஞ் செய்தற்கே, (எ-று).

என்மாட்டிருந்தது, ‡ அன்று அவர் கொடுமைகளை யுட்கொண்டு எனக்காற்றுமை செய்தற்கே; ‡‡ இன்று ¶ அவைநோக்கி அவரொடு புலத்தற்கன்றென்பதாம்.

---

* இவ்விரண்டு மல்லது - பெரு அமையஞ்சுதல், பெறிற்பிரிவஞ்சுத லென்னு மிவ்விரண்டு மல்லாமல்.

† தன்னொடு - நெஞ்சுடன்.

‡ அன்று - காதலரைப்பிரிந்திருந்த அக்காலத்தில்.

‡‡ இன்று-காதலர்வந்த இக்காலத்தில்.

¶ அவைநோக்கி - காதலரது கொடுமைகளையெண்ணி.



தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) என்னெஞ்சு-எனதுமனம், இருந்தது-(இங்கு) இருந்தது, தனியேயிருந்து-காதலரைப்பிரிந்திருந்து, நினைத்தக்கால்-(அவர்கொடுமைகளை யான் தன்னொடு) நினைத்தவிடத்து, (அவ்வளவறிந்து), என்னை—, தினிய-தின்பதுபோன்று துன்பஞ்செய்தற்கே, ()

என்மனம் என்னிடத்திருந்தது, அன்று அவர்கொடுமைகளை உட்கொண்டு எனக்குப் பொறுக்கமாட்டாமையைச் செய்தற்கே; இன்று அவை நோக்கி அவரோடு பிணங்குதற்கன் றென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழிகேட்ப, காதலர் பிரிந்துள்ள காலத்தில் என்மனது என்னைத் தின்பதுபோன்று வருத்துகின்ற தென்று ளென்பது.

6. My heart has been here to consume me when I ponder in solitude over my lover's cruelty.

எ. நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
மாணு மடநெஞ்சிற் பட்டு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) † தன்னைமறந்த காதலனைத் தான் மறக்கமாட்டாத என் மாட்சிமையில்லாத மடநெஞ்சுடனேகூடி, என்னுயிரினுஞ் சிறந்த நாண்டன்னையும் மறந்து விட்டேன், (எ - று).

மாணுமை - ஒருநிலையி னில்லாமை. மடமை - கண்டவழி நினைந்து காணுவழி மறக்குந்தவற்றைக் காணுவழி நினைந்து கண்டவழி மறத்தல். நாண் - எஞ்ஞான்றுங்கூடி யொழுகினும் () அஞ்ஞான்று கண்டார்போன் றொடுங்குதல். கண்டபொழுதே புணர்ச்சி விதும்பலின், ‡ அதனையும் 'மறந் தேன்' என்றாள்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) அவர்மறக்கல்லா - (தன்னைமறந்த) காதலரை (தான்) மறக்கமாட்டாத, என் மாணு - எனது மாட்சிமையில்லாத, மடநெஞ்சிற்பட்டு - மடநெஞ்சுடனே கூடி, நாணும் - (என்னுயிரினுஞ்சிறந்த) நாணத்தையும், மறந்தேன்-மறந்துவிட்டேன், (எ - று).

மாணுமை-ஒருநிலையில் நில்லாமை. மடமை-கண்டவிடத்து நினைந்து காணுதவிடத்து மறக்கத்தக்க குற்றங்களைக் காணுதவிடத்து நினைந்துகண்ட

---

† தன்னை யென்றது நெஞ்சினை.

() அஞ்ஞான்று - வேட்டை விருப்பால் இளையார் நீங்கத் தமியனாய் வந்த தலைமகன், பொழில் விளையாட்டு விருப்பால் ஆயம் நீங்க அப்பொழிலகத்துத் தமியளாய் நின்ற தன்னைக் கண்ட அக்காலத்தில்.

‡ அதனையும் - நாணத்தையும்.



விடத்து மறத்தல். நாண்-காதலரை எந்நாளும் கூடியொழுகினும் அந்நான் கண்டார்போன்று ஒடுங்குதல். (நெஞ்சு காதலரைக்) கண்டபொழுதே புணர்ச்சிக்கண்ணே விரைதலால், அதனையும் 'மறந்தேன்' என்றாள்.

(க-து.) தலைமகள் தோழிகேட்ப, காதலரை மறக்கமாட்டாத என்மனதின் வசப்பட்டு யான் நாணத்தையும் மறந்துவிட்டேனென்று சொன்னது.

7. I have forgotten my modesty having been swayed by my foolish heart which is not noble enough to forget him.

எ. எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற
முள்ளு முயிர்க்காத னெஞ்சு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) உயிர்மேற் காதலையுடைய என்னெஞ்சு, நம்மை யெள்ளிச் சென்றுரென்று நாமு மெள்ளுவோமாயிற் பின்னமக் கிளிவா மென்று கருதி, அவர் திறத்தினையே நினையா நின்றது, (எ - று).

எள்ளுதல் - வாயின் மறுத்தல். இளிவு - * வழிபடாமையாலும், பிரி வாற்றுமையாலும், நாணும் நிறையு † முதலிய விழத்தலாலும் உளதாவது. திறம்-வாயினேர்தலும், ‡ வருதலும், கூடலு $ முதலாயின. இளிவிற் கஞ்சுதலாலும், இறந்துபடமாட்டாமையாலுங் கூடக்கருதாநின்ற தென் பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.) உயிர்க்காதனெஞ்சு - உயிர்மேல் விருப்பத்தையுடைய (என்) மனது, (நம்மை இகழ்ந்து சென்றுரென்று), எள்ளின் - (நாமும்) இகழ்வோமாயின், இளிவாமென்றெண்ணி - (பின் நமக்கு) அவமானமாமென்று நினைத்து, அவர்திறம் - அவர்திறத்தையே, உள்ளும்-நினையா நின்றது, (எ - று).

எள்ளுதல் - தூதுமறுத்தல். இளிவு - வழிபடாமையாலும், பிரிவு பொறுமையாலும், நாணும் நிறையும் முதலியவற்றையிழத்தலாலும் உண் டாவது. திறம்-தூதுக்குடன்படலும், வருதலும், கூடுதலும் முதலாயின.

---

* வழிபடாமையாலும் - காதலர்வரவை யேற்றுக்கொண்டு அவரை யுபசரியாமையாலும்.

† முதலிய என்றமையின் மடம், அச்சம், பயிற்பு என்பனவற்றையுங் கொள்க.

‡ வருதலும் கூடலும்-காதலர் வருதலும் அவரைக் கூடுதலும்.

$ முதலாயின என்றமையின் மகிழ்தல், புகழ்த லென்பனவற்றையுங் கொள்க.

(என்னெஞ்சு) இளிவிற்கு அஞ்சுதலாலும், இறந்துபடமாட்டாமையாலும் (காதலனைக்) கூடநினைக்கின்ற தென்பதாம்.

(க - து.) தலைமகள் தோழிகேட்ப, என்மனது காதலது குற்றத்தைக்கருதாது அவரது திறத்தினையே நினையாநின்றது என்று சொன்னது.

8. My mind which clings to life thinks only of his own virtues in the belief that it would be disgraceful for it to despise him.

---

கூ. * துன்பத்திற் கியாரே துணையாவர் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி.

[† உணர்ப்புவயின்வாரா ஊடற்கட் டலைமகன் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) ஒருவர்க்குத் துன்பம் வந்துழி, அது நீக்குதற்குத் தாழாதித்தாகப் பெற்ற தம்முடைய நெஞ்சந் துணையாகாவழி, வேறு துணையாவார் ஒருவருமில்லை, (எ - று).

ஈண்டுத் துன்பமாவது ஊடலுணர்ப்புவயின் வாராமை. அதற்கு நெஞ்சந் துணையாகாமையாவது, அவளை யன்பில னென்றெழியாது கூடற் கண்ணே விதும்பல். ஒரு துணையு மின்மையின், இஃதுற்றுவிடுதலே யுள்ளதென்பதாம்.

தெளி:—[தனியச்செய்தற் கிடம்வாராத பிணக்கில் தலைமகன் சொல்லியது.] (இ - ள்.) துன்பத்திற்கு - (ஒருவர்க்குத்) துன்பம் வந்தவிடத்து, (அத்துன்பத்தை நீக்குதற்கு), தாமுடைய - தாம் உரியதாகப்பெற்ற, நெஞ்சம்-(தமது) மனமானது, துணையல்வழி-துணையாகாதவிடத்து, துணையாவார்-(வேறு) துணையாவார், யாரே - எவர், (ஒருவரும் இல்லை), (எ - று).

இங்குத் துன்பமாவது பிணக்கினைத் தனியச்செய்தற்கிடம் வாராமை;

தீராப் பிணக்கென்றவாறாம். அத்துன்பத்தை நீக்குதற்கு நெஞ்சந்துணை யாகாமையாவது தலைமகன் அவளை அன்பிலளென் றொழியாது கூடுதற்

* "உடனிகழ் கின்ற சகார்த்தாதி" என்னும் பிரயோகவிவேகச் செய்யுளின் விசேட வுரையில் "ஆதிசத்தத்தால் பூவிற்குச் சென்றான், 'துன்பத்திற் கியாரே துணையாவார்', 'மறத்திற்கு மஃதே துணை', 'பிணிக்கு மருந்து' என்பவற்றின்கண் பறித்தல் நீக்குதல் என நடுவே பெய்து பொருளுரைத்துத் துமர்த்தம் என்பதும் கொள்க" என்று கூறியிருத்தல் இங்குக் கவனித்தற்பாலதாம்.

† "உணர்ப்புவயின் வாரா வூட றோன்றிற், புலத்த றானே கிழவற்கும் வரையார்" என்றிறையனாரகப் பொருள் கூறுகின்றது. உணர்ப்புவயின் வாராவூடல் - உணர்த்துதற்கு இடம் வாராத வூடல்.





கண்ணே விரைதல். துன்பத்தை நீக்குதற்கு ஒருதுணையும் இல்லாமையால், இத்துன்பத்தை யடைந்துவிடுதலே உள்ளதென்பதாம்.

(க-து.) தலைமகன் தலைமகளது தீராப்பிணக்கின்கண் துன்பத்தை நீக்குதற்கு என் மனமே எனக்குத் துணையாகாதபோது வேறு துணையாவார் யாரென்றானென்பது.

9. Who would help me in my hour of grief, when my own heart comes not to my relief.

௰. தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய

நெஞ்சந் தமரல் வழி.

(இதுவுமது.)

பரி:—(இ - ள்.) தாழுரித்தாகவுடைய நெஞ்சம் ஒருவர்க்குத் தமரல்லாவழி, அயலார் தமரல்லாதல் சொல்லவேண்டுமோ, (எ - று).

பிறனொருத்தியைக் காதலியென்று கருதி என்னெஞ்சே என்னை வருத்தாநின்றபின், அப்பிறள் புல்கின்ற தெளி தென்பதாம்.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.) தாமுடைய - தாமுரியதாகவுடைய, நெஞ்சம்-மனம், தமரல்வழி-(ஒருவர்க்கு) உறவினராகாத போது, எனிலார்-அயலார், தமரல்லர் - உறவினரல்லராதல், தஞ்சம் - எளிதன்றே, (சொல்லவேண்டுமோ என்றவாறும்), (எ-று).

வேறொருத்தியைக் காதலியென்று நினைத்து என்னெஞ்சமே என்னை வருத்தாநின்றபின், அவ்வேறொருத்தி பிணங்குகின்றது எளிதென்பதாம்.

(க - து.) தலைமகன் ஒருவர்க்கு அவரது மனம் சுற்றத்தாராகாதபோது அயலார் சுற்றத்தாராதலைச் சொல்லவேண்டுமோ என்றுரைத்தது.

10. It is hardly possible for aliens to behave like relations, when one's own heart acts like an alien.

(*)

## 16 - வது அதிகாரம்.

## புலவி—Feigned dislike.

பரி:—அஃதாவது இருவர் நெஞ்சும் புணர்ச்சி விரும்பாது புலக்கக் கருதியவழி ஒருவரோ டொருவர் புலத்தல். † அதிகார முறைமையும் இதனானே வினங்கும்.

† நெஞ்சொடு புலத்தலின்பின் புலவி வைத்த அதிகார முறைமையும்.

தெளி:—அஃதாவது (தலைமகன் தலைமகளென்னும்) இருவர் நெஞ்சும் புணர்ச்சிக்கண்ணே விரையாது பிணங்க நினைத்தவிடத்து ஒருவரோடு ஒருவர்பிணங்கல். அதிகார முறைமையும் இதனுலே விளங்கும்.

க. புல்லா திராஅப் புலத்தை யவருறு
மல்லலேஞ் நெய் காண்கஞ் சிறிது.

[வாயிலாகச் சென்ற தோழி தலைமகள் வாயினேர்தற்பொருட்டு அவளொடு நகையாடிச் சொல்லியது.]

பரி:—(இ—ள்.)* அங்ஙனம் புலந்தாற் காதலநோய்து மல்லலே யினை யாஞ் சிறிது காணக்கடவேம்; நீ யவரை விரைந்து சென்று புல்லாதே * இத்தொழிலை மேலிட்டுக்கொண்டிருந்து புலப்பாயாக, ()

அல்லலேஞ் - துன்பத்தைச் செய்யுங் காமநோய். 'சிறிது' என்றுள்; புலவியை நீளவிடலாகாதென்பது பற்றி. புலத்தை யென்புழி ஐகாரம் † "கடம்பூண் டொருகா னீவந்தை" என்புழிப்போல முன்னிலவினை விகுதி. ‡ புலத்தி என்பதூஉம் பாடம். புலவிக் குறிப்புக் கண்டு அவள் வழியளாய் நின்று நாமுற்ற வருத்தம் அவருஞ் சிறிதுற்றறிதல் வேண்டு மென்ன நகையாடி ¶ நேர்வித்தவாறு.

தெளி:—[தூதாகச் சென்ற தோழி தலைமகள் தூதுக்கு உடன்படு தற்பொருட்டு அவளோடு நகைத்துச் சொல்லியது.] (இ - ள்.) அவருறும்— (அவ்வாறு பிணங்கினுல்) காதலரடையும், அல்லல் நோய் - அல்லல் நோயினை, சிறிது-(யாம்) சிறிது, காண்கம் - காணக்கடவோம், புல்லாது - (நீ அவரை விரைந்துசென்று) தழுவாதே, இராஅ - (இத்தொழிலை மேலிட்டுக்கொண்டு) இருந்து, புலத்தை - பிணங்குவாயாக, (எ - று).

அல்லல்நோய் - துன்பத்தைச் செய்யுங் காமநோய். பிணக்கை நீளவிடலாகாதென்பதுபற்றி (தோழி) 'சிறிது' என்றுள். புலத்தை என்றவிடத்து

---

* இத்தொழிலை - புலத்தற்றொழிலை.

† கலித்தொகை - குறிஞ்சிக்கலி-27. " இன்னும், கடம்பூண் டொரு கானீ வந்தை யுடம்பட்டாள், என்னுமை யென்மெய் தொடு " என்பதற்கு நச்சினார்க்கினியார் " (அதுகேட்ட தலைவி) நீவாராய், இன்னமும் ஒருகால் (அவனிடத்தே சென்று உன் குறை முடித்தலுத் தனக்குக்) கடனுக (அவள்) ஏறட்டுக்கொண்டு (கூட்டத்திற்கு) உடம்பட்டாளென்று (அவற் குக்) கூறுமைக்கு என் மெய்யைத் தொட்டுச் சூளுறுவாயாக (என்றுள்). வாவென்றது வந்தையெனத் திரிந்தது " என்றுரை கூறியிருக்கின்ற னர். கடம்பூண் டொருகானீ வந்தை என்பதனை நீ வந்தை ஒருகால் கடம் பூண்டு என்றன்வயஞ்செய்து நீ வாராய் ஒருமுறை கடமையாக மேற் கொண்டு என்று பொருள்கொள்க.

‡ புலத்தை யென்பதற்குப் பிரதியாகப் புலத்தியென்றும் பாடமுண்டு.

¶ நேர்வித்தல் - உடன்படச்செய்தல்.



ஐகாரம் முன்னிலையொருமை வினைமுற்று விகுதி. தோழி தலைமகளது பிணக்கின் குறிப்பைக்கண்டு அவள் வழியளாய் நின்று நாமுற்ற வருத் தத்தை அவரும் சிறிது உற்றறிதல் வேண்டுமென நகைசெய்து அவளை யுடன்படுத்தியவாறும்.

(க-து.) தோழி தலைமகளைநோக்கி, யாம் காதலானாமமெனா யினைச் சிறிது காணக்கடவோம்; நீ யவரை வினைந்து சென்று தழுவாது பிணங்கக்கடவாய் என்றாளென்பது.

1. Let us witness a little while his sore love-distress; just feign dislike and embrace him not.

உ. உப்பமைந் தற்றுற் புலவி யதுசிறி
தீக்கற்று னீள விடல்.

[புலவியொழிந்து வாயினேரும்வகை அவள் சொல்லியது].

பரி:—(இ - ள்.) புலவி கலவி இன்பந்செயற்கு வேண்டுமளவிற் றதல் உப்புத் † தூய்ப்பனவற்றை ‡ இன்சுவையவாக்கற்கு வேண்டுமளவிற்றதல்போலும்; இனி ¶ அதனை யவ்வளவிற் சிறிது மிகவிடுதல் அவ்வுப்பு அளவின் மிக்கார்ப்போலும், (எ-று).

நீளவிடல் - § அளவறிந் தணராது கலவிமேலெழுந்த குறிப் | பழுங்கு மளவுஞ் செய்தல். சிறிது நீளவிடலாகா தென்றுள்; நோய்க்கின்றுளாகலின். உப்புமிக்கவழித் தூய்ப்பது சுவையின் றுஞற்போலப் புலவி மிக்கவழிக் கலவி இன்பமன்று மென்றமையின், இது : பண்புவமை.

தெளி:—[பிணக்குநீங்கித் தூதுக்கு உடன்படும்வகை அத்தோழி சொல்லியது.] (இ-ள்.) புலவி-பிணக்கு, (புணர்ச்சி யின்பஞ்செய்தற்கு வேண்டுமளவினதாதல்), உப்பமைந்தற்று - உப்பானது (உண்பனவற்றை இன்சுவையவாக்குதற்கு) வேண்டுமளவினதாதல்போலும், சிறிது நீளவிடல்.—(இனி யதனை அவ்வளவிற்) சிறிது மிகவிடுதல், அதுமிக்கற்று - அவ்வுப்பு அளவில் மிகுந்தாற்போலும், (எ-று).

நீளவிடல் - (பிணக்கினை) அளவறிந்தணராமல் புணர்ச்சிமேலெழுந்த குறிப்பு அழுங்குமளவுஞ் செய்தல். (தோழி தலைமகனை) புணர்ச்சிக்கு

---

† தூய்ப்பன - பொரியல், கூட்டு, குழம்பு முதலியன.

‡ இன்சுவை - நல்ல ருசி. ¶ அதனை - அப்புலவியை.

§ அளவறிந்தொழியாது என்றும் பாடமுண்டு.

| அழுங்கு மளவும் - கெடுமளவும்.

: புலவி உப்பமைந்தற்று; (அதனைச்) சிறிது நீளவிடல் அது மிக்கற்று என உப்பின் சுவைப்பண்பை யுவமானமாகக் கூறினமையின், இது பண்புவமையாயிற்று.

உடன்படுத்து கின்றுளாகலால், (பிணக்கினை) சிறிது நீளவிடலாகாதென்றுள். உப்பு மிக்கவிடத்து உண்பது சுவையில்லாதாஞற்போலப் பிணக்கு மிக்கவிடத்துப் புணர்ச்சி இன்பமாகா தென்றமையால், இது பண்புவமை.

(க - து.) தோழி தலைமகளைநோக்கி, புணர்ச்சியின்பத்திற்குப் பிணக்கு ஓளவாக விருக்கவேண்டும் என்றுளென்பது.

2. A little reserve is like salt in proportion; to prolong it a little, is like salt in excess.

---

கூ. அலந்தாரை யல்லனெய் செய்தற்றுற் றம்மைமப்
புலந்தாரைப் புல்லா விடல்.

[* பாத்தையரிடத்து நின்றும் வந்த தலைமகனெடு தலைமகள் புலந்து சொல்லியது].

பரி:—(இ - ள்.) தம்மைப்பெறது புலந்த மகளிரைப் புலவி நீக்கிக் கலவர்து ஆடவர்சேறல் பண்டே துன்பமும் றழிந்தாரை அதன் மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தாற்போலும், (எ - று).

† பிறர்பாற் சேறலின் நம்மைப்பெறது புலந்தூடி யிருக்கின்ற பாத்தையரைப்போய்ப்புலவி நீக்கிப் புல்லீராயின், அவாற்று ரென்பதாம்.

தெளி:—[பாத்தையரிடத்திருந்துவந்த தலைமகனெடு தலைமகள் பிணங்கிச்சொல்லியது.] (இ - ள்.) தம்மைப் புலந்தாரை - தம்மைப் (பெறுது) பிணங்கிய மகளிரை, (பிணக்கு நீக்கி), புல்லாவிடல் - புணராமல் (ஆடவர்) செல்லுதல், அலந்தாரை—(முன்னரே துன்பமுற்று) அழிந்தவரை, அல்லல்நோய்செய்தற்று - (அதன்மேலும்) மிக்க துன்பத்தினைச் செய்தாற்போலும், (எ-று).

பிறரிடத்துச் செல்லுதலால் உம்மைப்பெறுது பிணங்கி வெறுத்திருக் கின்ற பாத்தையரைப் போய்ப் பிணக்குதீக்கிப் புணரா தொழிவீராயின், அவர் பொறுரென்பதாம்.

(க-து.) தலைமகள் தன்காதலனை நோக்கி, நீர் உம்மைப் பெறுது பிணங்கியுள்ள பாத்தையரது பிணக்கினைத் தீர்த்து, அவரைப்புணரா தொழிதல் தகுதியாகாதென்று ரென்பது.

3. For men not to embrace those who feigned dislike is like heaping grief on those already grieved.

---

* பாத்தையர்-பொதுமகளிர்; அவராவார் விலைகொடுப்பார்யாவர்க்கும் தம்து நலத்தை விற்பவர். † பிறர் என்றது தலைமகளை.



ச. ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.

[இதுவுமது.]

பரி:—(இ-ள்.) நும்மோ டூடிய பாத்தையரை ஊடலுணர்த்திக் கூடாதொழிதல் பண்டே நீர் பேறது வாடிய கோடியை அடியிலே யறுத்தாற்போலும், (எ - று).

நீர் பாத்தையரிடத்திராயவழி எம்புதல்வரைக்கண் டாற்றியிருக்கற்பா லமாய யாம் நும்மோ டேதற்குரியமல்லம்; அன்மையின், எம்மையுணர்த் தல் வேண்டா; உரியராயுடிய பாத்தையரையே உணர்த்தல்வேண்டுவது; அதனல் ஆண்டுச் சென்மினென்பதாம்.

தெளி:—[இதுவுமது] (இ-ள்.) ஊடியவரை-(உம்மோடு) பிணங்கிய பாத்தையரை, உணராமை - பிணக்குத்தீர்த்துக் கூடாதொழிதல், வாடிய-(முன்னரே நீர் பெறுது) வாடிய, வள்ளி-கொடியை, முதலரிந்தற்று-அடி யிலே அறுத்தாற்போலும், (எ-று).

நீர் பாத்தையரிடத் திருப்பீராயபோது எமது புதல்வரைக்கண்டு பொற்

த்திருக்க வல்லேமாய யாம் உம்மோடு பிணங்குதற்கு உரியேமல்லேம்; அல் லாமையால், எம்மைப் பிணக்குத்தீர்த்தல் வேண்டாம்; (உமக்கு) உரியராய்ப் பிணங்கிய பாத்தையரையே பிணக்குத் தீர்த்தல் வேண்டுவது; அதனல் அங்குச் செல்லுமென்பதாம்.

(க - து.) தலைமகள் தன் காதலரை நோக்கி, நீர் உம்மோடு பிணங்கியுள்ள பாத்தையரது பிணக்கைத் தீர்த்து, அவரைக் கூடாதொழிதல் மிகக் கொடியதாமென்று ளென்பது.

4 Not to conciliate those who feigned dislike is like cutting a faded creeper at its root.

நலத்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை
பூவன்ன கண்ணு ரகத்து.

[தலைமகளைப் புலவிநீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.]

பரி:—(இ - ள்.) நற்குணங்களாற் பதியுடையாராய தலைவர்க்கும் அழகாவது தம்பூவன்னகண்ணுர் நெஞ்சின்கண் நிகழும் புலவிமிகுதி யன்றே, (எ - று).

சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. தவறில்லார்க்கும் புலவி இனி தென்பான் நலத்தகை நல்லவர்க்கும் என்றுன். அழகு - இன்பப் பயனைத்

கற்பியல்—கசு-வது புலவி.

**1375**

தலைப்பெய்தல். தானுகர்ந்த வின்பத்திற் கேதுவாகிய கூறியவாறு.

புலவியை வியந்து

தெளி:—[தலைமகளைப் பிணக்குத் தீர்த்துக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.] (இ - ள்.) நலத்தகை - நற்குணங்களால் தகுதியுடையவராய, நல்லவர்க்கும் - தலைவர்க்கும், எள் - அழகாவது, பூவண்ண கண்ணைகத்து - (தமது) மலர்போலுங் கண்களையுடைய மகளிரது நெஞ்சில், (உண்டாகும்), புலத்தகை - பிணக்கின் மிகுதியன்றே, (எ-று).

நல்லவர்க்கும் என்னும் உயர்வு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. தவறில்லாதவர்க்கும் பிணக்கு இனிதென்பான் நலத் தகை நல்லவர்க்கும் என்றான். அழகு - இன்பப்பயனைப் பெறுதல். (தலைமகன்) தான் அனுபவித்த இன்பத்திற்குக் காரணமாகிய பிணக்கை வியந்துசொல்லியவாறும். நிலர்-கருங்குவளைமலர், காவிமலர், செந்தாமரைமலர்.

(க - து.) தலைமகன் தலைவியது பிணக்கின் மிகுதி தலைவர்க்குப்பேரின்பஞ்செய்தலால், அதுவே அவர்க்கழகாகுமென்றான்.

5. An increased shyness of consorts with flowery eyes*
is graceful even to virtuous worthy husbands.



கூ. * துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) † முதிர்ந்த கலாமாகிய துனியும் ‡ இளையகலா மாகிய புலவியும் இல்லையாயின், காமம் செவ்வி முதிர்ந்த பழமும் இளங்காயும்போலும்; (எ - று).

¶ மிகமுதிர்ந்திறு மெல்லேத்தாயகனி நுகர்வார்க்கு | மிகவு மினிமை

---

* காமம் துனியில்லாயின், கனியற்று; புலவியில்லாயின், கருக்காயற்று என்று கொள்க.

† முதிர்ந்தகலாம் - அளவுகடந்த பிணக்கு.

‡ இளையகலாம் - அளவிற்குட்பட்ட பிணக்கு.

¶ " விருந்திலா வுணவு விஷம் " என்புழி விருந்துள வுணவு அமிழ்து என்பது பெறப்படுமன்றே ? அங்ஙனமே, துனியிலாக் காமம் கனியற்று;புலவியிலாக்காமம் கருக்காயற்று என்புழித் துனியுள்ளகாமமும் புலவியுள்ள காமமும் செவ்விதாய பழமுண்பது போல்வனவாமென்பது பெறப்படுவதாம் துனியில்லாத காமம் செவ்வி முதிர்ந்த (பதனழிந்த) பழமுண்பதுபோல்வதாம்; புலவியில்லாத காமம் இளங்கா யுண்பது போல்வதா மென்றுகொள்க.

| மிகவு மினிமை செய்தலின் என்றும் பாடமுண்டு. அது பிறழ்ந்த பாடமாம். பின் கட்டிளமைத்தாயகாய் நுகருஞ் செவ்வித் தன்மைகலின்



செவ்வதன்மைகலிற் றுனி யில்லையாயிற் கனியற்று என்றும், * கட்டிள மைத்தாய காய் நுகருஞ் செவ்வித் தன்மைகலிற் புலவியில்லையாயிற் கருக் காயற்று என்றுங் கூறினன். † இவ்விரண்டும் வேண்டுமென்று வியந்து கூறியவாறு.

தெளி:—(இதுவுமது.) (இ - ள்.) துனியும் - பெரும் பிணக்கும், புலவியும் - சிறு பிணக்கும், இல்லாயின் - இல்லையானால், காமம் - காமமானது, கனியும்-பக்குவ முதிர்ந்த பழமும், கருக்காயும்-இளங்காயும், அற்று-போல்வதாம், (எ - று).

மிகமுதிர்ந்து கெடுமளவினதாகிய பழம் உண்பவர்க்கு மிகவும் இனிமைசெய்வ தன்றாகலின் துனி (பெரும் பிணக்கு) இல்லையானால் (காமம்) கனியற்று என்றும், கட்டிளமைத்தாகிய காய் உண்ணும் பக்குவத் ததன்றாகலால் புலவி (சிறுபிணக்கு) இல்லையானால் (காமம்) கருக்காயற்று என்றும் சொல்லினான். (தலைமகன்) இவ்விரண்டும் வேண்டுமென்று வியந்து சொல்லியவாறாம்.

(க - து.) தலைமகன் பெரும் பிணக்குஞ் சிறுபிணக்கு மில்லா விட்டால், காமம் கனியும் கருக்காயும் போல இனிதாகாதென்றான்.

6. Sexual love without long and short - lived dislike is like too ripe and immature fruit.

எ. ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது நீடுவ தன்றுகொ லென்று.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) இனிப் புணர்ச்சி நீட்டிதோ நீட்டியாதோ வென்று கருதலான், இன்பத்திற் கின்றியமையாத வூடலின் கண்ணே யும் ஒருதுன்ப நிகழும், (எ - று).

---

என்று எதிர்மறையாகக் கூறியிருத்தலின், முன் மிகவு மினிமைசெய்த

லின் என்றுடம்பாடாகக் கூறல் பொருத்தமுடைத்தாகாது. பதனழிந்த பழம் உண்பார்க்கு மிகவு மினிமை செய்யாமைபோலத் தணியிலாக் காலம் அனுபவிப்பார்க்கு மிகவு மினிமைசெய்யாது; இளங்காய் உண்பதற்குத் தகுதியாகாமைபோலப் புலவியில்லாக் காமம் அநுபவிப்பதற்குத் தகுதியுடையதாகாது என்றிங்குணர்த்தற்பாற்றும்.

* கட்டிளமைத்தாய காய் - மிகுதியும் (பிங்கு).

இளமையுடையதாயகாய்

† இவ்விரண்டும் - பெரும்பினைக்கென்னுந் துளியும், கென்னும் புலவியும்.

என்றென்னு மெச்சத்திற்குக் கருதலானென்பது வருவிக்கப்பட்டது, சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கொல்லென்பதனை நீடுவதென்பதனுடனுங் கூட்டுக. ஆங்கென்பது அசைநிலை. ஊடல் கூடற்கண்விரைவித்தல் கூறியவாறு.

தெளி:—[இதுவுமது.] (இ-ள்.) புணர்வது - (இனிப்) புணர்ச்சியானது, நீடுவதுகொல் - நீட்டிக்குமோ, அன்று கொல் - நீட்டியாதோ, என்று—, (கருதலால்), ஊடலின் - (இன்பத்திற்கு அவசியம்வேண்டுவதாய) பிணக்கிலேயும், ஓர் துன்பம் உண்டாம் - ஒருதுன்பம் உண்டாம், ()

என்று என்னும் செய்தெ னெச்சத்திற்கியையக் கருதலால் என்பது வருவிக்கப்பட்டது. ஊடலினுமென்னும் இழிவு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. கொல்லென்பது நீடுவதென்பதனுடனுங் கூட்டப்பட்டது. ஆங்கென்பது-அசைநிலை. (தலைமகன் தலைமகளது) ஊடல் கூடலில் விரைவித்தலைச் சொல்லியவாறும்.

(க - து.) தலைமகன் இனிப் புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோ என்று நினைத்தலால், இன்பத்திற்கு அவசியம்வேண்டுவதாகிய ஊடலின்கண்ணும் ஒரு துன்ப முண்டாகின்றதென்றான்.

7. The doubt as to whether re - union would be long delayed, creates suffering even in feigned dislike.



அ. நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்

காதலரில்லா வழி.

[உணர்ப்புவயின்வாரா வூடற்கட் டலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது.]

பரி:—(இ-ள்.) இவர் நம்பொருட்டாக நொந்தாரென்று அந்நோவினையறியுமன்புடையாளைப் பெறுவழி ஒருவர் நோகின்றதனாற் பயனென்? (எ-று).

அறிதல்-சான்றோடு பினிதுணர்தல். மற்று—வினைமாற்றின்கண் வந்தது. இவள் நங்காதலியல்லள்; அன்மையின், இந்நோவறியாள்; அறியாமையின், நாம் புலக்கின்றதனாற் பயனில்லையெனத் தன்னுற்றுமை புணர்த்தியவாறு.

தெளி:—[தணியச்செய்தற்கிடம்வாராத பிணக்கில் தலைமகன் தலைமகளோடு பிணங்கிச்சொல்லியது.] (இ-ள்.) நொந்தாரென்று-(இவர் நம்பொருட்டாக) நொந்தாரென்று, அஃதறியும் - அந்நோவினையறியும், காதலர்-அன்புடையாரை, இல்லாவழி - பெருதவிடத்து, நோதல் - (ஒருவர்) நோகின்றதனால், மற்றெவன்-(பயன்) யாது? (நோவாமையே நன்று), (எ-று).





அறிதல் - இங்குப் பிணக்கை நன்றுகவறிதல். மற்றென்னுமிடைச்சொல் நோதல் என்னும் வினையை மாற்றி நோவாமையென்னும் வினையைத்தருதலால் வினைமாற்றின்கண் வந்ததாயிற்று. (தலைமகன்) இவள் நமது காதலியல்லள்; அல்லாமையால், இந்நோவறியாள்; அறியாமை

யால், நாம் பிணங்குதலால் பயனில்லை யென்று அறிவித்தவாறும்.

தன்னுற்றுமையை

(க - து.) தலைமகன் நமது நோவினை யறியுமன்புடையவ ரைப் பெறுதலிடத்து, நாம் பிறரை நோவதிலுல் பயன்யாது? நோதல்கூடாது என்றுனென்பது.

8. What avails grief when none who love are there to understand the cause of my sorrow.



கூ. நீரு நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது.

[இதுவுமது.]

பரி:—(இ-ள்.) உயிர்க் கின்றியமையாத நீரும் நிழலின்கண்ணதே

இனிதாவது, ஏனை வெயிலின்கண்ணது ஆகாது; அதுபோலக் கல விக்கின்றியமையாத புலவியும் அன்புடையார்கண்ணே இனிதாவது, ஏனை யன்பிலார்கண் ஆகாது, (எ-று).

நிழற்கணிருந்த நீர் குளிர்ச்சிமிக்குத் தாகந்தணித்தலின், இனிதாயிற் று. வீழுநர் - ஆற்றுமைக்கு நோதலுங் கூடுதற்கண் வேட்கையு முடைய ராவார். இவள் கம்மாட்டு * அவ்விரண்டு மின்மையின், இப்புலவிதானு மின்னுதாகின்றதென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ-ள்). நீரும்-(உயிர்க்கு அவசியம்வேண்டுவ தாய) நீரும், நிழலதே-நிழலிலுள்ளதே, இனிது - இனிதாவதாம், (மற்றை வெயிலின்கணுள்ள நீர் இனிதாகாது, அதுபோல), புலவியுஞ்-(புணர்ச்சிக்கு அவசியம்வேண்டுவதாய) பிணக்கும், வீழுநர்கண்ணே யினிது-அன்புடைய வரிடத்தே இனிதாவதாம், (மற்றையன்பிலாரிடத்து இனிதாகாது), ()

நிழலிடத்துள்ளநீர் குளிர்ச்சி மிக்குத் தாகந்தணித்தலால், இனிதாயிற்று. வீழுநர் - ஆற்றுமைக்கு நோதலும் கூடுதலில் ஆசையும் உடையராவார். இவள் கம்மிடத்து அவ்விரண்டும் இல்லாமையால், இப்பிணங்குதலும் தன் பஞ்செய்வ தாகின்றதென்பதாம். ஆற்றுமை-பொறுத்திருக்க முடியாமை.

(க - து.) கலைமகன் புணர்ச்சிக்கு அவசியம் வேண்டுவதாய புலவியும் அன்புடையார்க்கே இனிதாவதாம்; மற்றவர்க்கினிதா காது என்றுரைத்தது.

---

* அவ்விரண்டும்-ஆற்றுமைக்கு நோதலுங் கூடுதற்கண் வேட்கையும்.

கற்பியல்—கஎ-வது புலவி நுணுக்கம்.

**1379**

9. As water is pleasant in the cooling shade, so dislike is delicious only with those we love.

௰. ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மென்ப தவா.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) தானூடற்கண்ணே மெலியா நிற்கவும், விட்டி
ருக்க வல்லாரோடு கூடக்கடவேமென்று என்னெஞ்சம் தன்னவாவே, பிறிதில்லை, (எ - று).
முயறற்கேது

அன்பு மருளு மில்லாதாரை உடையரென்றும் அவரோ டியாங்கூடுவ மென்றுங் கருதி * அதற்கு முயறல் அவாவுற்றார் செயலாகலின் 'கூடுவே மென்பதவா' என்றான். † காரியங் காரணமாக வுபசரிக்கப்பட்டது. இக்கூட்டம் முடியாதென்பதாம்.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.) ஊடலுணங்க - (தான்) பிணங்குதலிலே மெலியா நிற்கவும், விடுவாரோடு - விட்டிருக்க வல்லாரோடு, என்னெஞ்சம் - எனது மனம், கூடுவேமென்பது-கூடக்கடவோமென்று முயற்சி செய்தற்குக் காரணம், அவா - (தன்) ஆசையே, (வேறில்லை), (எ-று).

அன்பும் அருளும் இல்லாதாரை அவற்றை உடையாரென்றும் அவரோடியாம் கூடுவோமென்றும் நினைத்து அதற்கு முயலுதல் அவாவுற்றார் செயலாகலால் 'கூடுவேமென்பதவா' என்றான். கூடுவேம் என்னும் காரியம் அதன் காரணமாகிய முயற்சியாக வுபசரித்துக் கூறப்பட்டது. தலைமகன் யாம் கூடமுயலும் இக்கூட்டம் முடியாதென்றானென்பதாம்.

(க - து.) தலைமகன் என்மனம் தன்னோ யறிந்துந் தன்னை விட்டிருப்பவரைத் தான்கூட முயற்சிசெய்வதற்குக் காரணந் தன்னாசையேயன்றிப் பிறிதொன்றில்லை யென்றானென்பது.

10. It is nothing but fond desire which makes her heart unite with me who can leave her to her own dislike.



## 17 - வது அதிகாரம்.

### புலவி நுணுக்கம்:—Feigned dislike.

பரி:—அது புலவியது நுணுக்கமென விரியும். அஃதாவது தலைமகனுந் தலைமகளும் ஓரமளிக்கட் கூடியிருந்துழி அவன்மாட்டுப் புலத்தற் காரண

---

* அதற்கு - கூடுதற்கு.

† கூடுவேம் என்னுங் காரியத்தை அதன் காரணமாய முயற்சியாக வுபசரித்துக் கூறினமையின், இது காரியங் காரணமாய வுபசார வழக்காம்.

மில்லையாகவுங் காதல் கைம்மிகுதலான் நுண்ணியதோர் காரணமுளதாக வுட்கொண்டு அதனை யவன்மேலேற்றி அவள் புலத்தல். * காரணத்தி னுணுக்கம் காரியத்தின்மே னின்றது. † அதிகாரமுறைமையும் இத னானே விளங்கும்.

தெளி:—புலவி நுணுக்கமென்பது புலவியது நுணுக்கமென்று விரியும். அஃதாவது தலைமகனும் தலைமகளும் ஒரு சயனத்தில் கூடியிருந்த போது அவனிடத்துப் பிணங்குதற்குக் காரணம் இல்லையாகவும் காதல் அதிகரித்தலால் நுண்ணிதாகிய ஒரு காரணம் இருப்பதாக உட்கொண்டு அக்காரணத்தை அவன்மேல் ஏற்றி அவள் பிணங்குதல். காரணத்தினுணுக் கம் காரியத்தின்மேனின்றது. அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

க. பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேனென் பரத்தநின் மார்பு.

[உலாப்போய் வந்த தலைமகன் பள்ளியிடத்தா னகத்

தலைமகள் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) பாத்தமையுடையாய்! நின்னைப் பெண்ணியல் பினையுடையார் யாவருந் தங்கண்ணிற் பொதுவாக வுண்பர், அதனால் ‡ அவர் மிசிலாய நின்மார்பினைப் பொருந்தேன், (எ - று).

கற்பு நாண் ¶ முதலிய நற்குணங்க ளின்மையிற் பரத்தையர்க்குள்ளது பெண்ணியற்கை மாத்திரமே யென்னுங் கருத்தாற் 'பெண்ணியலார்,' என்றுள். பொதுவாக வுண்டல் - தஞ்சேரிச் செலவின் முறையானன்றி ஒருகாலத் தொருங்கு நோக்குதல்; அதுவுமோர் குற்றம். நாநோக்கி யின் புற்றவாறே அவரு நோக்கி யின்புறுவரென ‖ வாசங்கித்து அவர்பாற் பொருமை யெய்துதலின், நுணுக்கமாயிற்று.

தெளி:—[உலாவப்போய் வந்த தலைமகன் சயனத்தின்கண் வந்த போது தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) பரத்த - பரத்தையரிடத்துச் செல்லுதலுடையாய், (உன்னை), பெண்ணியலா ரெல்லாரும் - பெண்ணி யல்பினை யுடையார் யாவரும், கண்ணின் - (தமது) கண்களாலல், பொது வுண்பர் - பொதுவாக அனுபவிப்பார், (அதனால்), நின்மார்பு-(அவர்மிச்சி லாகிய) உன்மார்பை, கண்ணினன் - பொருந்தேன், (எ - று).

---

* தலைமகள் தலைமகனிடத்துக் காதல் மிகுதல்பற்றி யுட்கொண்ட காரணத்தின் நுணுக்கம் அதன் காரியமாகிய புலவிமேல்நிற்றலின், 'காரணத்தி னுணுக்கம் காரியத்தின்மே னின்றது' என்று கூறப்பட்டது. இது காரணத்தின் தர்மம் காரியத்தின் தர்மமாய வுபசாரவழக்காம்.

† புலவியின்பின் புலவி நுணுக்கம்வைத்த அதிகார முறைமையும்.

‡ அவர் மிச்சிலாய-அப்பரத்தையர் நோக்குதலால்

எச்சிலுடையதாய.

¶ முதலிய என்றமையின் மடம், அச்சம், பயிர்ப்பு என்பவற்றையுங் ' கொள்க. || ஆசங்கித்து - சந்தேகித்து.



(தலைமகள்) கற்பு காண் முதலிய கற்குணங்கள் இல்லாமையால் பரத்தையர்க்குள்ளது பெண்ணியல்பு மாத்திரமே யென்னுங் கருத்தால் ' பெண்ணியலார் ' என்றாள். பொதுவாகவுண்டல் - (பரத்தையர்) தமது சேரியில் (தலைமகன்) செல்லும்போது முறையாலன்றி ஒரு காலத்து ஒரு மிக்க நோக்குதல்; அவ்வாறு நோக்குதலும் ஓர் குற்றமாம். (தலைமகள் தன் காதலனை) தாம்நோக்கி இன்பமடைந்தபடியே அப்பரத்தையரும் நோக்கி இன்பமடைவ தொன்று ஆசங்கித்து அப்பரத்தையரிடத்துப் பொறுமை யடைதலால், தானுக்கமாயிற்று.

(க - து.) தலைமகள் தன் காதலனை நோக்கி, பரத்தையரது பார்வையால் மிச்சிலாகிய உனது மார்பை நான் கூடேனென்று கூறினளென்பது.

1. O thou of fickle mind! all those of womankind enjoy with their eyes in equal grace. I shrink from thine embrace

உ. ஊடி யிருந்தேமாத் தும்மினர் யாந்தம்மை

நீடுவாழ் கென்பாக் கறிந்து.

[தலைமகனீக்கத்துச் சென்ற தோழிக்குத் தலைமகள் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.]

பரி:—(இ - ள்.) யாந் * தம்மோடுடி யுரையாடா திருந்தேமாகக் காதலர் தும்மினர், அது நீங்கித் தம்மை நீடுவாழ்கென் றுரையாடு வேமாகக் கருதி, (எ - று).

தும்மியக்கால் வாழ்த்துதல் மாபாகலான், உரையாடல் வேண்டிற் றென்பதாம். இயல்பானிகழ்ந்த தும்மலைக் குறிப்பா னிகழ்ந்ததாகக் கோடலின், நுணுக்கமாயிற்று.

நேளி:—[தலைமகன் நீங்கியபோது சென்ற தோழிக்குத் தலைமகள் சயனத்திடத்து நிகழ்ந்ததைச் சொல்லியது.) (இ-ள்.)யாம்-நாம், ஊடி-(தம் மோடு) பிணங்கி, இருந்தேமா-(உரையாடாது) இருந்தேமாக,தும்மியினர்-(காதலர்) தும்மினர், (அப்பிணக்கு நீங்கி), தம்மை —, நீடுவாழ்கென்பாக் கறிந்து - நெடுங்காலம் வாழ்கவென்று சொல்லுவோமாகநினைத்து, (எ-று).

தும்மியவிடத்து வாழ்த்துதல் மாபாகலால், (யாம் காதலருடன்) உரை யாடல் வேண்டியதாயிற் றென்பதாம். (தலைமகள்) இயல்பாலுண்டாகிய தும்மலைக் குறிப்பால் உண்டாகியதாகக் கொள்ளுதலால், நுணுக்கமாயிற்று.

(க - து.) தலைமகள் தோழியோடு யாம் பிணக்குத்தீர்ந்து தம்மோடுபேசுமாறு காதலர் தும்மினரென்று கூறினளென்பது.

* தம்மோடு - காதலரோடு.



2 When I silent sulked he sneezed and thought I would wish him a long life.

௩. கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக் காட்டிய சூடினீ ரென்று.

[தலைமகளது புலவிக்குறிப்பினைக் கண்டு
நீவிர் கூடியொழுகா நிற்க
வும் இது நிகழ்தற்குக் காரணம் யாதென்ற
தோழிக்குத்
தலைமகன் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) யான் கோடுதலைச்செய்யு மாலையைச் சூடினே
னாயினும், நும்மால் காதலிக்கப்பட்டா ளொருத்திக்கு இப்பூவணி காட்டல்வேண்டிச் சூடினீரென்று வெகுளா நிற்கும் ; இத்தன்மையாட்கு ஒரு காரணம் வேண்டுமோ ? (எ - று).

* கோடென்பது முதனிலைத் தொழிற்பெயர். † பூ. - ஆகுபெயர்.
‡ வளையமாகச் சூடினுமென்பதாம்; ¶
"கோட்டங் கண்ணியுங் கொடுந்திரை
யாடையும்" என்றார் பிறரும். () இனி யம்மருத நிலத்துப்பூவன்றி | வேற்றுநிலத்துக் || கோட்டுப்பூவைச் சூடினேனாயினும் ஈண்டையாள் பிறளொருத்திக்கு அவ்வேற்றுப் பூவணி காட்டல் வேண்டிச் சூடினீரென்று வெகுளுமெனினு மமையும்.

* கோடு என்னும் முதனிலை (பகுதி), கோடுதல் (வளைதல்) என்னுந் தொழிற்பெயர்ப் பொருளை யுணர்த்துதலால், முதனிலைத் தொழிற்பெயராயிற்று.

† பூ (மலர்) என்னுங் கருவியின் பெயர் அதன் காரியமாகிய மாலையை யுணர்த்துதலால், கருவியாகு பெயராம்.

‡ கோட்டுப்பூச் சூடினும் என்பதற்கு, பூ-பூமாலையை, கோட்டுச்சூடினும் - வளையமாகச் சூடினாலும் என்றுரை கூறுவதும் பொருந்தும்.

¶ புறநானூறு-275. இதன்பொருள். வளையமாயுள்ள மாலையும் வளைந்த நிலைச்சீலையும் என்பது.

() இனி யிக்குறளுக்கு, கோட்டுப்பூச் சூடினும்-(அந்தமுருதநிலத்துப் பூவல்லாமல் வேற்று நிலத்திலுள்ள) கோட்டுப்பூவைச் சூடினாலும், ஒருத்தியை - (இவ்விடத்துள்ளான் பிறள்) ஒருத்திக்கு, காட்டிய * (அவ் வேற்றுப் பூவணியைக்) காட்டல்வேண்டி, சூடினீரென்று - தரித்தீரென்று, காயும் - கோபிப்பாள், என்றுரை கூறுவதும் பொருந்தும்.

| வேற்று நிலம் - குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை நிலங்கள்.

‖ கோட்டுப்பூ - கிளைகளிலுள்ள பூ. பூ-கோட்டுப்பூ, கொடிப்பூ; நீர்ப்பூ, நிலப்பூ என நால்வகைத்தாம்.

தெளி:—[தலைமகளது பிணக்கின் குறிப்பைக்கண்டு நீர் கூடியொழுகா
நிற்கவும் இப்பிணக்கு நிகழ்தற்குக் காரணம் யாதென்று வினவிய தோ
ழிக்குத் தலைமகன் சொல்லியது.] (இ - ள்.) கோட்டுப்பூ - (யான்) வளைத
லைச்செய்யும் பூமாலையை, சூடினும் - சூடினேனெயினும், ஒ ருத்தியை - (உம்மால் விரும்பப்பட்டாள்) ஒருத்திக்கு, காட்டிய - (இப்பூவணியைக்)
காட்டுதல் வேண்டி, சூடினீரென்று - தரித்தீரென்று, காயும் - கோபியா நிற்பள்,
(இத்தன்மையுடையாளுக்கு ஒரு காரணம் வேண்டுமோ), (எ-று).

கோடு என்பது முதனிலைத் தொழிற்பெயர். பூ என்பது கருவியாகு பெயர்.

(க - து.) தலைமகன் தோழியை நோக்கி, யான் பூமாலையைச்
சூடினும், அது காரணமாகப் பிணங்குகின்றவுன் தோழிக்குப்

பிறிதுகாரணம் வேண்டுமோ என்று னென்பது.

3. Even if I put on a garland flower, she would say I did so to show it to another woman.

யாரினுங் காதல மென்றேனை வூடினுள்
யாரினும் யாரினு மென்று.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) காம நுகர்தற்குரிய வீருவாயினுள் யாவரினும் யாம் மீக்க காதலையுடையே மென்பது கருதி யாரினுங் காதலமென் றேனை; நின்றேழி அது கருதாது, என்னும் காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளும் நின்கட்காதலுடையே னென்றேனைகக் கருதி, அம்மகளிர் யாரினும் யாரினும் என்கட் காதலுடையீராயினீரென்று சொல்லிப் புலந்தாள், (எ - று).

தலைமகள் கருத்திற்குத் தன்மைப்பன்மை உயர்ச்சிக்கண் வந்தது. யானன்பு மிகுதியாற் * சொல்லியதனைக் கருத்து வேறுபடக் கொண்டதல்லது பிறிதுகாரண மில்லை யென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ - ள்) (காமத்தையனுபவித்தற்குரிய இருவராயினுள் யாவரினும் யாம் மிக்க காதலையுடையோ மென்பது கருதி) யாரினுங் காதலமென்றேனை - யாரினுங் காதலை யுடையோ மென்றுகூறினேனைக, (உன்தோழி அதுகருதாது என்னுல் விரும்பப்பட்ட மகளிர் பலருள்ளும் உன்னிடத்துக் காதலையுடையேனென்று கூறினேனைகக் கருதி), யாரினும் யாரினுமென்று - (அம்மகளிர்) யாரினும் யாரினும் (என்னிடத்துக்காதலை யுடையீராயினீர்) என்று சொல்லி, வூடினுள் - பிணங்கினுள், (எ - று).

* சொல்லியதனை - ' யாரினுங் காதலம் ' என்று சொல்லியதனை.



தலைமகள் கருத்திற்குக் காதலம் என்னுந் தன்மைப்பண்மை வினை முற்று உயர்த்திக் கூறுதற்கண் வந்தது; இதற்குத் தலைமகன் தன்னைக் காதலமென்று தன்மைப் பன்மை வினைமுற்றாக உயர்த்திச் சொல்லினனென்று தலைமகள் கருதினளென்று கொள்க. யான் அன்பு மிகுதியால் சொல்லியதனை (என்காதலி) கருத்துவேறுபடக் கொண்டதல்லாமல் வேறு காரணம் இல்லை யென்பதாம்.

(க - து.) தலைமகன் தோழியை நோக்கி, யான் யாம் யாவரினும் மிக்க காதலையுடையேம் என்று நின்தோழியை நோக்கிக் கூறினேன்; அதற்கு அவள் நீர் யாரினும் யாரினும் என்னிடத்துக் காதலையுடையீராயினீரென்று கூறிப்பிணங்கினளென்றனென்பது.

4. When I said I loved her more than all other women, she said "more than all others, yes, more than all others", and remained sulky.

ரு.

இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனக்
கண்ணினிறை நீர்கொண் டனள்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) காதன் மீதூரியான் இம்மையாகிய பிறப்பின் கண் யாம் பிரியேமென்று சொன்னேனாக, † அதனான் ஏனைமறுமை யாகிய பிறப்பின்கட் பிரிவலென்னுங் குறிப்பினேனாகக் கருதி, அவள் தன் கண்ணிறைந்த நீரினைக்கொண்டாள், (எ - று).

‡ வெளிப்படுசொல்லைக் குறிப்புச்சொல்லாகக் கொள்கின்றதல்லது என்பாற் றவறில்லை யென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ-ள்.) (காதல் மிகுதியால்) இம்மைப் பிறப் பில் - இம்மையாகிய பிறப்பில், பிரியலமென்றேனா - (யாம்) பிரியோ மென்று சொன்னேனாக, (அதனால் மற்றை மறுமையாகிய பிறப்பில் பிரி வேனென்னுங்கருத்துடையேனாக நினைந்து), கண்ணிறை நீர்கொண்ட னள் - (அவள் தன்) கண்ணிறைந்த நீரினைக்கொண்டாள், (எ - று).

(யான் கூறும்) வெளிப்படுசொல்லை (என்காதலி) குறிப்புச்சொல்லா கக் கொள்கின்றதல்லாமல் என்னிடத்துத் தவறில்லையென்பதாம்.

(க - து.) தலைமகன் தோழியை நோக்கி, யான் யாம் இப்பிறப் பிற்பிரியோமென்றுன்தோழியைநோக்கிக்கூறினேன்; அதற்கவள்

---

† அதனான் - அவ்வாறு சொன்னதனால்.

‡ இம்மைப்பிறப்பிற் பிரியலம் என்னும் வெளிப்படுசொல் மறுமைப் பிறப்பிற் பிரிவல் என்னுங் குறிப்புச்சொல்லாகக் கொள்ளப்பட்டது. குறிப்புச்சொல் - குறிப்பாற் பொருளுணர்த்துஞ் சொல்.



யான் மறுபிறப்பில் உன்னைப் பிரிவேனென்று கூறினே னென்று கருதி யழுதாளென்று கூறினனென்பது.

5. (With extreme love) when I told I would never part from her while in this life, her eyes were filled with tears.

கூ.

உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

(இதுவுமது.)

பரி:—(இ - ள்.) பிரிந்தகாலத்து நின்னை யிடையின்றி நினைந்தே னென்னுங்கருத்தால் யானுள்ளினேனென்றேன்; எனை, அதனை ஒருகான் மறந்து பின்னினைந்தே னென்றதாகக் கருதி, என்னை யிடையே மறந்தீ ரென்று சொல்லி முன் னென்னைப் புல்லுதற் கமைந்தவள் * அஃதோ ழிந்து புலத்தற்கமைந்தாள், (என்று).

† மற்று—வினைமாற்றின்கண் வந்தது மறத்தலையுட்கொண்டு புலந்தாளென்பதாம்.

‡ அருத்தாபத்திவகையான்

தெளி:—[இதுவுமது.] (இ - ள்.)
உள்ளினேனென்றேன்-(பிரிந்த

காலத்தில் உன்னை யிடைவிடாமல் நினைந்தேனென்னுங்கருத்தால் யான்) நினைந்தேனென்றேன், (என்றுகூற, அவள் அதனை ஒருகால்மறந்து பின் நினைந்தேனென்று சொல்லியதாகக் கருதி), மற்றென்மறந்தீரென்று - என்னை (இடையே) மறந்தீரென்று சொல்லி, (முன்னே), என்னை—, (தழுவுதற்கு அமைந்தவள்), புல்லாள் - தழுவுதலொழிந்து, புலத்தக்கனள்-பிணங்குதற்கு அமைந்தாள், (எ-று).

மற்று-வினைமாற்றுப் பொருளில் வந்தது. (தலைமகள்) அருத்தாபத்தி வகையால் மறத்தலை யுட்கொண்டு பிணங்கினளென்பதாம்.

## (க - து.) தலைமகன் தோழியைநோக்கி, யான் பிரிந்

துள்ள காலத்தி லிடைவிடாதுன்னை நினைந்தேனென்றுன் தோ

---

* அஃதொழிந்து - என்னைப் புல்லுதற் கமைந்ததைவிட்டு.

† மற்றென்னுமிடைச்சொல் உள்ளினேன் என்னும் வினையைமாற்றி உள்ளாமையென்னும் வினையைத் தந்து நின்றமையின், வினைமாற்றுப் பொருளதாயிற்று.

‡ உள்ளினேன் (நினைந்தேன்) என்று தலைமகன் கூறினமையின், தலைமகள் அருத்தாபத்திவகையால் மறந்தீரென்று மறத்தலையுட்கொண்டு பிணங்கினள் என்பதாம். இங்ஙனமன்றியின் இதுகூடாதென்றுணர்தல் அருத்தாபத்தியின் வடிவமாம். மறத்தல் கூடாதாயின், நினைத்தல் கூடாதென்பதிங்கருத்தாபத்தியாம்; மறந்தமையால் நினைத்தல்வேண்டியதாயிற்றென்பதிதன் பொருளாம்.

*பிணையேரோக்கிக் கூறினேன் ; அதற்கவள்*
*என்னைமறந்தன்றே நினைக்க வேண்டுமென்றுகூறிப்*
*பிணங்கினை யென்றுனென்பது.*

6. When I told I had re-called her to mind,
she relaxed
her embrace saying I had forgotten her,
dislike.
and began to feign

எ. வழுத்தினு மென்மினை னெக வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று.

[இதுவுமது.]

பரி:—(இ-ள்) கூடியிருக்கின்றவள் யான்றும்மினேனெகத் தன்னியற்கை பற்றி வாழ்த்தினள் ; அங்ஙனம் வாழ்த்திய தானே மறித்து, நும்மை நினைத்து வருந்துகின்ற மகளிருள் யாவர் நினைத்தலாற் றும்மினீரென்று சொல்லிப் புலந்தழுதாள், (எ - று).

வாழ்த்தலொடு புலத்தல் இயையாமையின் 'அழித்து' என்றான். அன்புடையார் நினைத்தவழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்மலுண்டு மென்பது மகளிர் வழக்கு. † இல்வழக்கை ‡ உள்வழக்காகக் கருதிப் புலந்தாளென்பதாம்.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.) (கூடியிருக்கின்றவள்) தும்மினேனாக - (யான்) தும்மினேனாக, வழுத்தினுள் - (தன்னியற்கைபற்றி) வாழ்த்தினுள், (அவ்வாறு வாழ்த்திய தானே), அழித்து - மறித்து, (உம்மை நினைந்து வருந்துகின்ற மகளிருள்), யாருள்ளி - யாவர் நினைத்தலால், தும்மினீரென்று—தும்மினீரென்றுசொல்லி, அழுதார்-(பிணங்கி) அழுதாள்.

வாழ்த்தலோடு பிணங்குதல் பெரும்தாமையால் 'அழித்து' என்றான். அன்புடையார் நினைத்தபோது அந்நினைக்கப்பட்டவர்க்குத் தும்மல் தோன்றுமென்பது மகளிர் வழக்கு. (தலைமகள்) இவ்வழக்கை உள்வழக்காக நினைத்துப் பிணங்கினளென்பதாம்.

(க - து.) தலைமகன் தோழியை நோக்கி, யான் தும்மினேன்; என்றெடு கூடியிருக்கின்ற வுன்தோழி உம்மை நினைத்து வருந்துகின்ற மகளிருள் யார் நினைத்தலால் நீர் தும்மினீரென்று கூறிப் பிணங்கியழுதா ளென்றனென்பது.

7. She blessed me when I sneezed, but changed her mind instantly and wept, asking "At the thought of which woman you sneezed?".

---

† இல்வழக்கை - அன்புடையவர் நினைத்தவிடத்துடவர்க்குத் தும்மலுண்டாகும் என்னும் பொய்வழக்கை.

அந்நினைக்கப்பட்

‡ உள்வழக்காக, மெய்வழக்காக.

கற்பியல்—கள - வது புலவி நுணுக்கம்.

**1387**

அ. தும்முச் செறுப்ப வழுதா ணுமருள்ள
லெம்மை மறைத்திரோ வென்று.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) எனக்குத் தும்மறேன்றியவழி யாருள்ளித் தும்மி னீரென்று புலத்தலையத்தி, அதனை யர்னடக்கினேன்; அங்ஙனமடக்க வும், நுமர் நும்மை நினைத்தலை எம்மை மறைக்கலுற்றீரோ வென்று சொல்லிப் புலந்தழுதாள், (எ - று).

* தும்முவென்பது முதனிலைத் தொழிற்பெயர். † செறுப்பவு மென் புழி ‡ இறந்ததுதழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. எம்மை யென்பது நம்மோடியாது மியைபில்லாத வெம்மையென்பதுபட நின்ற ¶ இசையெச்சம். இதனை வடநூலார் காகுவென்ப. தும்மினுங்குற்றம் ஒழியினுங் குற்றமாயக்காற் செயற்பால தியாதென்பதாம்.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.) (எனக்குத் தும்மல் தோன்றியவிட த்து யாவர் நினைத்தலால் தும்மினீரென்று பிணங்குதற்கு அஞ்சி), தும்முச் செறுப்ப - அத்தும்மலை (யான் அடக்கினேன் அவ்வாறு) அடக்கவும், நுமருள்ளல்-உம்மவர் (உம்மை) நினைத்தலை, எம்மை மறைத்திரோவென்று-

எம்மை மறைக்கலுற்றீரோவென்று சொல்லி, அழுதாள் - (பிணங்கி) அழுதாள், (எ - று).

தும்மு என்பது முதனிலைத் தொழிற்பெயர். செறுப்பவும் என்ற விடத்து இறந்தது தழுவிய எச்சவும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு

---

* தும்மு என்பது தும்மல் என்னுந் தொழிற்பெயர்ப் பொருளை யுணர்த்துதலால், முதனிலைத் தொழிற்பெயராம். முதனிலை - பகுதி.

† செறுப்பவென்புழி என்றும் பாடமுண்டு.

‡ செறுப்பவும் என்ற வும்மை கோட்டுப்பூச் சூடல் முதலியவற்றை விட்டிருப்பதன்றி யென்னும் பொருளைத் தருதலின், இறந்தது தழுவிய வெச்சவும்மையாயிற்று.

¶ இசையெச்சமாவது வாக்கியங்களுள் அவ்வவ்விடத்திற்கேற்பப் பல சொல் வருவித்துரைக்கப்பட்டு வருவதாம். இங்கு 'நும்மோடியாது மியை பில்லாத' என்பது வருவித்துரைக்கப்பட்டவாறறிக. இசை - சொல்; எச்சம் - குறைவு. "ஆக்கும் பிரதி பதத்துடனே" என்னும் பிரயோக விவேகச் செய்யுளின் விசேடவுரையில் "இனி, அலங்கார நூலார் இசை யெச்சத்தைக் காகுவென்பர். அதற்குதாரணம் 'நுமருள்ள லெம்மைமறைத் திரோ' என்பதாம். அது சொல்லுங்கால் முகவிகாரமாதல் சொல்விகார மாதல் தோன்றநிற்கும்' என்று

கூறியிருத்தலும், நன்னூல்விருத்தியுரையில்
" இசையென்பது சொல். இசையெச்சமெனப் பொதுப்படக் கூறினமை யின், இவ்வெச்சமும் இது கொள்வதும் பெயர் வினை யிடை யுரி யென்னும் நால்வகைச் சொல்லுள் ஒன்றும் பலவும் தனித்தும் தொடர்ந்தும் வருமென்பது பெற்றும் " என்று கூறியிருத்தலும் இங்குணர்தற் பாலனவாம்.



நின்றது. எம்மையென்பது உம்மோடு யாதும் சம்பந்தமில்லாத எம்மை யென்பது தோன்ற நின்ற இசையெச்சம். இவ்விசையெச்சத்தை வடநூலார் காகு என்பர். தும்மினுங் குற்றம் (தும்மல்) ஒழியினுங் குற்றமாய விடத்து யான் செய்யத்தக்கது யாது என்பதாம்.

(க - து.) தலைமகன் தோழியை நோக்கி, தும்மியவிடத்துன் தோழி பிணங்குதல் பற்றி யானதனை யடக்கினேன் ; அவள் நீர் நும்மவர்நினைத்தலை யெமக்கு மறைக்கலுற்றீரோ வென்றுகூறிப் பிணங்கியழுதா ளென்று னென்பது.

8. When (next time) I checked sneezing, she wept saying " Perhaps you did so to hide from me your people remembering you ".

கூ. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரிங்நீர ராகுதி ரென்று.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) இவ்வாற்றானுரைத்திய தன்னை யான் பணிந்துணர்த்துங் காலும் வேதனா நிந்தம்; பிறமகளிர்க்கும் நீர் அவருடியனழி இவ்வாறே பணிந்துணர்த்து நீர்மையையுடையீ ராதுதி ரென்று சொல்லி.

இவன் தெளிவித்தவழியுந் தெளியாளென்பதுபற்றி என்மேலேற்றிய தவற்றை உடம்பட்டுப் பணிந்தேன்; பணிய, அதுதானும் புலத்தற்கேது வாய் முடிந்தது; இனி யிவண்மாட்டுச் செய்யத்தகுவ தியாதென்பதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ-ள்.) தன்னை-(இவ்விதத்தால் பிணங்கிய) தன்னை, உணர்த்தினும் - (யான்வணங்கிப்) பிணக்குத் தீர்க்கும்போதும், காயும்-கோபியாநிற்பள், பிறர்க்கும்-பிறமகளிர்க்கும், நீர்-, இந்நீராகுதி ரென்று-(அவர்பிணங்கியபோது) இவ்வாறே வணங்கிப் பிணக்குத் தீர்க்குந் தன்மையையுடையீராவீரென்று சொல்லி, (எ-று).

இவள் தெளிவித்தவிடத்துந் தெளியாளென்பதுபற்றி என்மேல் ஏற்றிய குற்றங்களை (யான்) உடன்பட்டு வணங்கினேன்; வணங்க, அதுவும் (அவள்) பிணங்குதற்குக் காரணமாய் முடிந்தது; இனி இவளிடத்துச் செய்யத்தகுவது யாதென்பதாம்.

(க - து.) தலைமகன் தோழியை நோக்கி, யான் பிணக்கொழியும் பொருட்டு, உன் தோழியைவணங்கினேன்; அவள் பிறமாதரிடத்தும் நீர் இத்தன்மையையுடையீராவீரென்று கூறிக் கோபியா நின்ற ளென்ற வனென்பது.

9. When I try to coax to calm her (jealousy) she becomes angry and says "This is the way you behave towards other women (when they are displeased).

கற்பியல்—கள-வது புலவி நுணுக்கம்.

**1389**

கo.

நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) என்சொற்களுஞ் செயல்களும் பற்றித் தான் வெதுடனான், † அவற்றை யொழிந்திருந்து தன்னவயவங்கள தொப்பின்மையை நினைந்து அவற்றையே நோக்கினும், என்னை வெதளாநிற்கும்; நீர் என்னவயவமனைத்தும் நோக்கினீர் அவற்ற நேர்ப்புமையான் ஏம்மகளினை நினைந்தென்று சொல்லி, (எ - று).

. யான் எல்லா வவயவங்களானும் ஒருத்தியோ டொத்தல் கூடாமை யின், ஒன்று லொருவராகப் பலரையு நினைக்கவேண்டும்; அவரெல்லாரை யும் யானறியச் சொல்லுமினென்னுங் கருத்தால், அனைத்து நீர் நோக்கி னீர் யாருள்ளி என்றாள். வாளாவிருத்தலுங் குற்றமாயிற் றென்பதாம்.

நெளி:—[இதுவுமது.] (இ-ள்.) (என்சொற்களும் செயல்களும் பற்றித் தான் கோபித்தலால்) இருந்து - (அவற்றையொழிந்து) இருந்து, நினைத்து-(தனது அவயவங்களது ஒப்பில்லாமையை) நினைந்து, நோக்கினும்-(அவ்வவயவங்களையே) பார்த்துக்கொண்டிருந்தாலும், காயும் -(என்னைக்) கோபியாநிற்பள், நீர்-, அனைத்தும் - (எனது அவயவம்) அனைத்தையும், நோக்கினீர்-பார்த்தீர், (அவ்வவயவங்களி னெப்புமையால்), யாருள்ளி யென்று-எம்மகளிரை நினைந்தென்று சொல்லி, (எ-று).

யான் எல்லா அவயவங்களாலும் ஒருத்தியோடு ஒத்தல் கூடாமையால், நீர் ஓரவயவத்தால் ஒருவராக மகளிர் பலரையும் நினைக்கவேண்டும்; அவரெல்லாரையும் யான் அறியச் சொல்லுமென்னுங் கருத்தால், அனைத்து நீர் நோக்கினீர் யாருள்ளி என்றாள். யான் சும்மாவிருத்தலும் குற்றமாயிற் றென்பதாம்.

(க - து.) தலைமகன் தோழியை நோக்கி, யான் உன்தோழியின் அவயவங்களினது ஒப்பில்லாமையை நினைந்து அவற்றையே நோக்கியிருந்தேன்; அவள் எம்மகளிரை நினைந்து நீர் எனது அவயவமனைத்தையும் நோக்கினீரென்று சொல்லிக் கோபியாநின்றாளென்று னென்பது.

10. (Sitting silently) even when I look on her, contemplating her beauty, she is angry and says "with whose thought have you thus eyed me over".

† அவற்றை – என்சொற்களையும் செயல்களையும்.

## 13 - வது அதிகாரம்.

### ஊடலுவகை:—

## The delights of Temporary displeasure.

பரி:—அஃதாவது அப்பெற்றித்தாய ஊடலாற் றமக்குக் கூடலின் பஞ் சிறந்துழி அச்சிறப்பிற் கேதுவாய அவ்வூடலைத் தலைமக ளுவத்த லும் தலைமக னுவத்தலுமாம். * அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

தெளி:—அஃதாவது அத்தன்மையதாகிய ஊடலால் தமக்குக் கூட் டின்பம் சிறந்தவிடத்து அச்சிறப்பிற்குக் காரணமாகிய அவ்வூடலைத் தலை மகள் விரும்பிப்பேசுதலும் தலைமகன் விரும்பிப்பேசுதலுமாம். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

க. இல்லை தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவாளிக்கு மாறு.

[தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்டதோழி

அங்ஙன மீ புலக்கின்றதென்னை யென்றூட்கு

அவள் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) அவர்மாட்டுத் தவறில்லையாயினும், நம்க்கவர் † தலையளி செய்கின்றவாறு அவரோடுதலை விளக்கவற்றுகின்றது, ()

‡ அவர்க்கென்பது வேற்றுமை மயக்கம். அளவிறந்த வின்பத்தராக லின், யானெய்தற் பாலதாய இத்தலையளி ஒழிந்தாரு மெய்துவனெனக் கருதி ¶ அது பொருமையான் ஊடனிகழாநின்ற தென்பதாம்.

தெளி:—[தலைமகள் காரணம் இல்லாமற் பிணங்குகின்றமையைக் கேட்டதோழி அவ்வாறு நீ பிணங்குகின்றதென்னே யென்றூட்கு அத்தலை மகள் சொல்லியது.] (இ - ள்.) அவர்க்கு-அவரிடத்து, தவறு-பிழைகள், இல்லையாயினும் - இல்லையானாலும், அவாளிக்குமாறு - (நமக்கு) அவர் தலையளி செய்கின்றவிதம், ஊடுதல்வல்லது - (அவருடன்) பிணங்குதலை (விளக்க) வல்லதாகின்றது, (எ - று).

அவர்க்கென்பது வேற்றுமை மயக்கம். (காதலர்) அளவிறந்த இன்பத் தையுடையவராகலால், யான் அடைதற்பாலதாகிய இத்தலையளியை

---

* அதிகாரமுறைமையும் - புலவி நுணுக்கத்தின்பின் ஊடலுவகை வைத்த அதிகாரமுறைமையும்.

† தலையளி - முகமலர்ந்தினியசூறி யுணர்வழியப்புணர்தல்.

‡ அவர்க்கு என்னும் நான்காமுருபு தனக்குரிய பொருளைவிட்டு அவர் மாட்டென ஏழாமுருபின் பொருளில் வந்தமையின், வேற்றுமை மயக்கமா யிற்று.

மற்றவரும் அடைவாரொன்று நினைந்து அது பொருமையால் ஊடல் நிகழ்கின்றதென்பதாம். மற்றவர்-பரத்தையர்.

(க - து.) தலைமகள் தோழியை நோக்கி, காதலரிடத்துத் தவறில்லை யாஞலும், அவர் செய்யுந் தலையளி யான் அவரோடு பிணங்குதலை யுண்டாக்குகின்றதென்று கூறினளென்பது.

1. Although there be no fault in him, the way in which he embraces me is such as to make me feign displeasure.



உ. ஊடலிற் ரோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்

[புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க, *அஃதிழந்து

புலவியான் வருந்துவதென்னையென்றூட்கு அவள்

சொல்லியது.]

பரி:—(இ - ள்.) ஊடலேதுவாக நங்கட்டோன்றுகின்ற சிறிய † துனிதன்னால் காதலர்செய்யு நல்ல தலையளி வாடுமாயினும் பெருமை எய்தும், (எ - று).

தவறின்றி நிகழ்கின்றவூடல் கடிதினீங்கலின் ‡ அத்துன்பமு நில்லா தென்பாள் ' சிறுதுனி ' என்றும், ¶ ஆாமைபற்றி நிகழ்தலின் § அதனன் நல்லளிவாடாதென்பாள் ' வாடினும் ' என்றும், பின்னே பேரின்பம் பயக்குமென்பாள் ' பாடுபெறும் ' என்றுங் கூறினாள். த்தமெனப் படாதென்பதாம்.

| அது வரு

தெளி:—[பிணங்காதிருக்கின்றகாலத்தும் அத்தலையளியைப் பெறுதலாயிருக்க, அதனை யிழந்து பிணக்கினால் வருந்துவதென்னை யென்ற தோழிக்கு அத்தலைமகள் சொல்லியது.] (இ - ள்.) ஊடலிற் றோன்றும் - பிணங்குதல் காரணமாக (நம்மிடத்துத்) தோன்றுகின்ற, சிறுதுனி - சிறியதுனியினால், நல்லளி - (காதலர் செய்யும்) நல்ல தலையளி, வாடினும் - வாடுமாயினும், பாடு - பெருமையை, பெறும் - அடையும், (எ - று).

(காதலரிடத்துத்) தவறில்லாமல் நிகழ்கின்ற ஊடல் விரைவில் நீங்கலால் அத்துன்பமும் நில்லாதென்பாள்'சிறுதுனி'என்றும், (அது) ஆாமை பற்றி நிகழ்தலால் அதனால் நல்லளிவாடாதென்பாள் ' வாடினும்' என்றும், (அத்தலையளி) பின்னே பேரின்பத்தை யுண்டாக்குமென்பாள் ' பாடுபெறும்' என்றும் சொல்லினாள். அது வருத்தமெனப்படாதென்பதாம்.

---

* அஃது - அத்தலையளி. † துனிதன்னால் - துன்பத்தினால்.

† அத்துன்பமும் - ஊடல் காரணமாக வுண்டாகின்ற அத்துன்பமும்.
¶ ஆராமை – (புணர்ச்சி விருப்பம்) தணியாமை.
§ அதனுன் - அத்துனியினுல். | அது = சிறுதுனி.



(க - து.) தலைமகள் தோழியை நோக்கி, ஊடல் காரணமாகத் தோன்றுஞ் சிறுதுனியினுல் காதலர் செய்யுந் தலையளி வாடுமாயினும், பின்னே பெருமையை யடையுமென்றுளென்பது

2. His love will bloom again though at first it may seem to fade through the short - lived pain caused by my feigned anger.

நே.

புலத்தலிற் புத்தேணு ணீண்டோ நிலத்தோடு
நீரினைந் தன்ன ரகத்து.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) நிலத்தோடு நீர்கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலர்மாட்டுப் புலத்தல்போல நமக்கின்பந் தருவதொரு புத்தேளுலகமுண்டோ, இல்லை, (எ–று).

* நீர்

தானின்ற நிலத்தியல்பிற்றுமாறுபோலக் காதலருந்

தாங்கூடிய மகளிரியல்பினாகலான் † அதுபற்றி அவரோடு புலவி நிகழுமென்பாள்

'நிலத்தொடு நீரியைந் தன்னராகத்து' என்றும், அவர் ‡ நமக்கும் அன்னராகலின் அப்புலவி பின்னே பேரின்பம் பயவாநின்றதென்பாள் 'புலத்தலிற் புத்தேணுடெண்டோ' என்றுங் கூறினாள். ¶ உவமம் பயன்பற்றி வந்தது.

---

* "நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகும்" என்னுங் குறளின் விசேடவுரையில் "விசும்பின்கட் டன்றன்மைத்தாய நீர் நிலத்தோடு சேர்ந்தவழி நிறம் சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போலத், தனிநிலைக்கட் டன்றமைத்தாய வறிவு பிறவினத்தோடு சேர்ந்தவழிக் காட்சி முதலிய தொழில்கள் திரியும்" என்றிருப்ப திங்குணர்தற்பாலதாம்.

† அதுபற்றி - காதலர் தாங்கூடிய மகளிரியல்பினாதல்பற்றி.

‡ நமக்கும் - தாம்கூடிய மகளிரிடத்தன்றி நமக்கும்.

¶ நிலத்தொடு நீரியைந்தன்னர் என்பது பயனுவமம். பயன் காரணமாக வருமுவமம் பயனுவமமாம். பயன் - செயல் காரணமாகத் தோன்றுவதாம். நீர்தானின்ற நிலத்தியல்பிற்றுதலென்னு முவமானத்தில் நீரின் செயல் நிற்றலாம், அது காரணமாகத் தோன்றுவது அது நிலத்தியல்பிற்றுதலாம்; காதலர் தாங்கூடிய மகளிரியல்பினாத லென்னு முவமேயத்தில் காதலரின் செயல் கூடுதலாம், அது காரணமாகத் தோன்றுவது அவர் மகளிரியல்பினாதலாம். இங்கு நீர் தானின்ற செயல் காரணமாக நிலத்தியல்பிற்றுதலும், காதலர் தாங்கூடிய செயல் காரணமாக மகளிரியல்பினர்தலும் தம்முள் ஒக்குமாறுணர்க. "வினைபயன் மெய்யுருவென்ற நான்கே, வகைபெற வந்த வுவமத் தோற்றம்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தின் விசேடவுரையில் நச்சினார்க்கினியார் "மாரி யன்ன வண்கைத், தோவே ளாயைக் காணிய சென்மே" என்பது பயனுவமம்; என்னை? மாரியான் விளைக்கப்படும் பொருளும் வண்கையாற் பெறும் பொருளும் ஒக்குமென்றவாறு" என்று கூறியிருத்தல் இங்குணர்தற்பாலதாம்.

தெளி:—[இதுவுமது.] (இ – ள்.) நிலத்தோடு - நிலத்தோடு, நீர் - நீரானது, இயைந்தன்னராகத்து - கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலரிடத்து, புலத்தலின் - பிணங்குதல்போல, (நமக்கு இன்பந்தருவதொரு), புத்தேணாடு - புத்தேளுலகம், உண்டோ—இருக்கின்றதோ, (இல்லை), ()

நீர் தானின்ற நிலத்தினியல்பினதாகும் விதம்போலக் காதலரும் தாம்கூடிய மகளிரினியல்பின ராகலால் அதுபற்றி அவரோடு பிணங்குதல் நிகழுமென்பாள் 'நிலத்தோடு நீரியைந்தன்னராகத்து' என்றும், அக்காதலர் நமக்கும் அத்தன்மையராகலால் அப்பிணக்குப் பின்னே பேரின்பம் தாராநின்ற தென்பாள்

'புலத்தலிற் புத்தேணாடுண்டோ' என்றும் சொல்லினாள்.

உவமம் - பயன்பற்றி வந்தது. புத்தேள் - தேவர்.

(க - து.) தலைமகள் தோழியைநோக்கி, காதலரிடத்துப் பிணங்குதல்போல நமக்கின்பந்தருவதொரு சுவர்க்கமுண்டோ? இல்லை என்றுளென்பது.

3. Is there a celestial world which can give bliss like the feigned dislike of those whose union resembles that of earth and water.

ஈ. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை.

[அப்புலவி இனி யாதானீங்குமென்றூட்குச் சொல்லியது.]

பரி:—(இ - ள்.) காதலரைப் புல்லிக்கொண்டு பின்விடாமைக் கேதுவாகிய அப்புலவிக்கண்ணே யுளதாம், அதன்மேற்சென்ற என் னுள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம், (எ-று).

* புலவியுளென்னு மேழாவது வினைநிகழ்ச்சிக்கண் வந்தது. 'என் னுள்ள முடைக்கும் † படை' என்றது வணக்கத்தையும் பணிமொழியை

---

* புலவியுள் என்னும் ஏழனுருபு படைதோன்றும் என ஒன்ற னது தொழிற்காலத்தைக் குறிக்கும் பிறிது தொழிற்பொருட்கண் வந்தது.

உள்-ஏழனுருபு. இஃது இருவரின் மூடியும் ஒருவினைத் தொழிற் பெயர் எனப்படும்.

"உடனிகழ்கின்ற" என்னும் செய்யுளின் விசேடவுரையில் பிரயோக விவேக நூலார் "சதிசத்தமியைத் தொல்காப்பியர் வினைசெய் யிடமென் பர்; பரிமேலகழகர் வினை நிகழ்ச்சி யென்பர்" என்று கூறியிருத்தல் இங் குணர்தற்பாலதாம். தொல்காப்பிய வுரையில் "வினைசெய்யிடத்தினில்" என்பதற்கு "தட்டுப்புடைக்கண் வந்தான்" என்பது உதாரணமாகக் காட் டப்பட்டிருக்கின்றது.

† படைக்கலம் என்றும் பாடமுண்டு.





யும். † 'படை' என்றுள்; அவற்றுள் அப்புலவியுள்ள மழிதலின். புலவி நீங் குந்திறங் கூறியவாறு.

தெளி:—[அப்பிணக்கு
இனி எதனுல் நீங்குமென்ற தோழிக்குத் தலை
மகள்சொல்லியது.](இ-ள்:)புல்லி-(காதலனைத்)தழுவிக்கொண்டு,
விடாஅ-
(பின்) விடாமைக்குக்காரணமாகிய, புலவியுள் - அப்பிணக்கினிடத்தே,
என்னுள்ளம்-(அப்பிணக்கின்மேற்சென்ற) என்னுள்ளத்தை, உடைக்கும்-
கெடுக்கும், படை-படைக்கலம், தோன்றும்-உண்டாகும், (எ-று).

புலவியுள் என்னும் ஏழனுருபு வினைநிகழ்ச்சிப் பொருளில் வந்தது. தலைமகள் 'என்னுள்ளமுடைக்கும்படை' என்றது தலைமகன்து வணக்கத்தையும் பணிமொழியையும். (வணக்கத்தையும் பணிமொழியையும் தலைமகள்) 'படை' என்றுள்; அவற்றுல் அப்பிணக்குள்ளம் அழிதலால். (தலைமகள் தோழிக்குப்) பிணக்கு நீங்கும்வகையைச் சொல்லியவாறும். பணிமொழி - பணிவையுணர்த்துஞ் சொல். பணிவு - அடக்கம்.

(க - து-) தலைமகள்
தோழியைநோக்கி, யான் காதலனைத்
தழுவிக்கொண்டு பின்விடாமைக்குக்காரணமாகிய பிணக்கிலே
அப்பிணக்கின்மீதுசென்ற என்மனத்தைக் கெடுக்கும் படைக்
கலம் உளதாகின்றது என்று ளென்பது.

4. In feigned dislike after an embrace there lurks a weapon which can break my heart.

நு. தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ
ளகறலி னுங்கொன் றுடைத்து.

[தலைமகளை யூடனீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகையலுப்த் தன்னுள்ளே சொல்லியது.]

பரி:—(இ-ள்.) ஊடவர் தங்கட் டவறிலாயினும் உடையர்போல ‡ ஊடப்பட்டுத் தாம் விரும்பு மகளிருடைய மெல்லிய தோள்களைக் கூடப்பெறுத வல்லிலகீதனீ அவர்கீது ¶ அஃதப்பெற்றியதோரின்பம் பயத்தலுடைத்து, (எ-று).

உடையராயக்கால் இறந்த வின்பத்தோடு வருமின்பமு மெய்துவ ராக லின் அது மிகநன்று, மற்றையிலாயக்காலும் வருமின்பத்தை யிழந்த தில்லையென்னுங் கருத்தால், தவறிலாயினு மாங்கொன்றுடைத்து. என் றான். ஊடலினுளைய வின்பம் அளவிறத்தலிற் கூறற்கரிதென்பான்

† படைக்கலம் என்றும் பாட்டமுண்டு.

‡ ஊடப்பட்டு-(ஆடவர் தமது காதலியால்) பிணங்கப்பட்டு.

¶ அஃதப்பெற்றியதோரின்பம் - தவறின்றி யூடியது அவ்வூடல் நீங் கிக் கூடியபோதுண்டாகும் இன்பம் போன்றதோரின்பம்.



**1395**

* 'ஆங்கொன்று' என்றான். தவறின்றி யூடியதூஉம் எனக்கின்பமாயிற்

றென்பதாம்.

தெளி:—[தலைமகளைப் பிணக்கு நீக்கிக் கூடிய தலைமகன் மிகுமகிழ்ச் சியுடையவனுய்த் தன்னுள்ளே சொல்லியது.] (இ - ள்.) தவறிலாயினும்- (ஆடவர் தம்மிடத்துத்) தவறில்லாதவராயினும், (தவறுடையார்போலப் பிணங்கப்பட்டு), தாம்வீழ்வார் - தாம் விரும்பும் மகளிரது, மென்றோள் - மெல்லிய தோள்களே, அகறலின் - கூடப்பெறுத சமயத்தில், ஆங்கொன்று - (அவ்வாடவர்க்கு அஃது) அத்தன்மையதாகிய தாரின்பம், உடைத்து - (தருதல்) உடையது, (எ-று).

ஆடவர் தவறுடையவராயவிடத்துக் கழிந்த வின்பத்தோடு வருமின்பமும் அடைவாராகலால் அத்தவறு மிகவும் நன்று, மற்றைத்தவறில்லாதவராயவிடத்தும் வருமின்பத்தை இழந்ததில்லையென்னுங் கருத்தால், தவறிலாயினும் ஆங்கொன்றுடைத்து என்றுன். ஊடலிலுலாகிய இன்பம் அளவுகடந்திருத்தலால் கூறுதற்கு அரிதென்பான் 'ஆங்கொன்று' என்றுன். (தலைமகன் என்னிடத்துத்) தவறிலதாக (என்காதலி) ஊடியதுவும் எனக்கு இன்பந்தருவதாயிற்றென்று னென்பதாம்.

(க - து.) தலைமகன் தாம்விரும்பும் மகளிர் பிணங்குதல் தவறுடையோர்க்கேயன்றி அஃதில்லார்க்கும் மிகவினிதாகுமென்று னென்பது.

5. Though free from fault, men feel charmed to be estranged from loved one's tender shoulders.

சூ. † உணலினு மூண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) உயிர்க்கு மேலுண்பதனினும் முன்னுண்டதறுதல் இன்பந்தரும்; அதுபோலக் காமத்திற்கு மேற்புணர்தலினும் முன்னைத் தவறுபற்றி யூடுதல் இன்பந்தரும், (எ - று).

‡ காமத்திற்கென்புழிச் சாரியையும் நான்கனுருபும் விகாரத்தாற் றொக்கன. பசித்துண்ணும்வழி மிகவுண்ணலுமாய் ¶ இன்சுவைத்துமாம்; அது

---

* அப்பெற்றிய தொன்று என்றும் பாடமுண்டு.

† "மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய, தற்றது போற்றி யுணின்" என்னுங்குற ளிங்குணர்த்தப்பாலதாம்.

‡ காமத்திற்கு என்பது காமம்-அத்து-இன்-கு எனப் பிரிபடுவதாம்.

¶ இன்சுவைத்து - இனிமையாகிய சுவையைத்தருவது. சுவை-ருசி.

போல, அகன்று கூடும்வழி ஆராததுமாய்ப் பேரின்பத்ததுமாமென்றி தன்னனுபவம்பற்றிக் கூறியவாறு.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.) (உயிர்க்கு) உணவினும்-(மேல்)

உண்பதனிலும், உண்டதறல்- (முன்) உண்டவுணவு சீரணித்தல், இனிது- இன்பந்தரும், (அதுபோல), காமம்-காமத்திற்கு, புணர்தலின் - (மேல்) புணர்தலினும், ஊடல்-(முன்னைத் தவறுபற்றிப்) பிணங்குதல், இனிது - இன்பந்தரும், (எ - று).

காமத்திற்கு என்றவிடத்து அத்து இன் என்னும் சாரியைகளும் கு என்னும் கான்கனுருபும் செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றன. பசித்துண்ணும்போது (உணவு) மிகவுண்ணலுமாய் இன்சுவையதுமாம்; அது போல, (காமம்) பிரிந்து கூடும்போது தணியாததுமாய்ப் பேரின்பத்ததுமாமென்று (தலைமகன்) தன்னனுபவம் பற்றிச் சொல்லியவாறும்.

(க - து.) தலைமகன் காமானுபவத்திற்கு மகளிரைமேற்புணர்தலினும் முன்னைத் தவறு பற்றி யவர் பிணங்குதல் மிக இன்பந்தருவதாமென்று னென்பது.

f. To digest what has been eaten is more wholesome than to eat more; likewise love is more delightful in feigned dislike than intercoure.

எ. ஊடலிற் றோற்றவர் வென்று ரதுமன்னுங்
கூடலிற் காணப் படும்.

(இதுவுமது.)

பரி:—(இ - ள்.) காமநுகர்தற்குரிய இருவருள் ஊடலின்கட்டோற் றவர் வென்றாவர், அஃதப்பொழுதறியப்படாதாயினும் பின்னைப் புனர்ச்சியின்கண் † அவரா லறியப்படுமே, (எ-று).

தோற்றவர் - ‡ எதிர்தலாற்றாது சாய்ந்தவர். ¶ அவர் புணர்ச்சிக்கட் பேரின்ப மெய்தலின் வென்றாராயினர். மன்னும் உம்மும் அசைநிலை. ⁝ யானதுபொழுது சாய்தலின், இதுபொழுது பேரின்பம் பெற்றே னென்பதாம்.

---

* பேரின்பத்தது - அளவுகடந்த இன்பத்தைத்தருவது.

† அவரால் - ஊடலிற்றோற்றவரால்.

‡ எதிர்தலாற்றாது சாய்ந்தவர் - ஊடலில் எதிர்த்துநில்லாது பணிவா யிருந்தவர்.

¶ அவர் - ஊடலில் தோற்றவர்.

⁝ யானது பொழுது சாய்தலின் - யான் அவ்வூடற்காலத்துத் தோற்ற மையால்.

தெளி:—[ இதுவுமது. ] (இ - ள்.) (காமத்தை யனுபவித்தற்குரிய இருவருள்) ஊடலிற் றோற்றவர் - பிணக்கின்கண் தோற்றவர், வென்றூர்-வென்றாராவார், அது-அவ்வென்றாதல், (அப்பொழுது அறியப்படாதாயினும்), கூடலின் - (பின்னே) புணர்ச்சியின்கண், காணப்படும் (அவரால்) அறியப்படும், (எ-று).

தோற்றவர் - எதிர்த்தல் செய்யாமல் சாய்ந்தவர். அவர் புணர்ச்சியின்கண் பேரின்பத்தை யடைதலால் வென்றாராயினர். மன்னும் உம்மும் அசைநிலைகள். யான் அப்பொழுது சாய்தலால் இப்பொழுது பேரின்பம் பெற்றேனென்பதாம். சாய்தல் - அடங்கிப்போதல்.

(க - து.) தலைமகன் ஊடலிற் றோற்றவர் காமானுபவத்தைதப்
பூரணமாகப் பெறுதலின், அவரே வென்றாரா
ரென்றான்.

7. Those have won whose feigned dislike has been
defeated; and that is proved by re-union's joy.

அ. ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) இதுபோழுது இவணுதல் வெயர்க்கும்வகை கலவியின்கணுளதாய இனிமையை இன்னுமோருகால் * இவளுடியாம் பெறவல்லேமோ ? (எ - று).

கலவியது விசேடம்பற்றி ' நுதல் வெயர்ப்ப ' என்றான். இனிமை- † கண்டுகேட் டெண்ணியிர்த் துற்றறிதலாலாய வின்பம். இனி ‡ அப்பேறு கூடாதெனப் பெற்றதன் சிறப்புக் கூறியவாறு.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.) நுதல்வெயர்ப்ப - (இப்போது இவளது) நெற்றி வெயர்க்கும்படி, கூடலிற்றோன்றிய - புணர்ச்சியின்கணுளதாகிய, உப்பு-இனிமையை, (இன்னுமொருகால்), ஊடி - (இவள்) பிணங்க, பெறுகுவங்கொல்லோ - (யாம்) பெறவல்லேமோ ? (எ-று).

புணர்ச்சியினது விசேடம்பற்றி ' நுதல்வெயர்ப்ப ' என்றான். இனிமை-கண்டுகேட் டெண்ணியிர்த் துற்றறிதலாலாகிய இன்பம். இனி அப்பேறு கூடாதென்று பெற்றவின்பத்தின் சிறப்புச் சொல்லியவாறும்.

---

* இவளுடி என்றும் பாடமுண்டு.

† " கண்டுகேட் டெண்ணியிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள " என்னுங்குற ளிக்குணர்தற் பாலதாம்.

‡ அப்பேறு - நுதல்வெயர்ப்பக் கூடலிற்றோன்றிய இனிமையைப் பெறுதல்.



(க - து.) தலைமகன் இவளது நெற்றி வெயர்க்கும்படி புணர்ச்சியினு லுண்டாகிய

இனிமையை இன்னுமொருமுறை

யிவள் பிணங்குதல் காரணமாக

யாம் பெறவல்லேமோ என்றான்.

8. Will I once more enjoy through her feigned dislike,

the pleasure of that intercourse which makes her forehead perspire.



கூ. ஊடுக மன்னே வொளியீழை யாமிரப்ப

நீடுக மன்னே விரா.

[இதுவுமது.]

பரி:—(இ-ள்) ஒளியிழையினை யுடையாள் இன்னுமெம்மோ டூடு வாளாக; அங்ஙனம் அவளூடி நிற்றற்தும் அதனை யுணர்த்துதற்பொருட் டியர்மிரந்து நிற்றற்குங் காலம் பெறும்வகை இவ்விரவு விடியாது நீட்டித்தல் வேண்டுக, (எ-று).

ஊடுக நீடுகவென்பன வேண்டிக்கோடற்பொருள. * மன்னிரண்டும் ஆக்கத்தின்கண் வந்தன. ஓகாரங்கள் அசைநிலை. கூடலின் ஊடலே யமையுமென்பதாம்.

தெளி:—[இதவுமது] (இ - ள்). ஒளியிழை - விளங்குகின்ற ஆபரணத்தையுடையவள், ஊடுகமன் - (இன்னும் எம்மோடு) பிணங்குவாளாக, (அவ்வாறு அவள்பிணங்கி நிற்றற்கும் அப்பிணக்கினைத்தீர்த்தற்பொருட்டு) யாம் - நாம், இரப்ப - இரந்து நிற்றற்கும், (காலம் பெறும்வகை), இரா - இவ்விரவு, நீடுகமன் - (விடியாது) நீட்டித்தல் வேண்டுக, (எ-று).

ஊடுக நீடுகவென்னும் வியங்கோள் வினைமுற்றுக்கள் வேண்டிக் கொள்ளுதற் பொருளில் வந்தன. மன்னிரண்டும் ஆக்கப்பொருளில் வந்தன. ஓகாரங்கள்-அசைநிலைகள். கூடலிலும் ஊடலே அமையுமென்பதாம்.

(க - து.) தலைமகன் எங்காதலி இன்னு மெம்முடன் பிணங்குவாளாக ; அப்பிணக்கைத் தீர்த்தற்குக் காலம் பெறுவகை இவ்விரவு விடியாதொழிக என்று னென்பது.

9. May the maiden with bright - jewels feign dislike, and may the night prolong for me to implore her.

---

* மன் என்னும் இடைச்சொலிரண்டும் ஆக்கப்பொருளில் வந்தன. [ஆக்கம்-ஆதல்.] "கழிவே யாக்க மொழியிஞ்சக் கிளவியென், றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே" என்பது தொல்காப்பியம். ஊடுகமன், நீடுக மன் என்புழி (ஊடுவாளாக; நீடுவதாக என) மன் என்பது ஆகவென்னும் ஆக்கப் பொருளில்வந்தது.

## கரி. ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங் கூடி முயங்கப் பெறின்.

[இதுவுமது.]

பரி:—(இ - ள்.) காமநுகர்ச்சிக் கின்பமாவது அதனை நுகர்தற் குரியாரிவர் ஆராமைபற்றித் தம்முளூடுதல்; அவ்வூடுதற் கின்பமாவது, அதனையளவறிந்து நீங்கித் தம்முட்கூடி முயங்குதல் கூடுமாயின், அம் முயக்கம், (எ - று).

கூடுதல் - * ஒத்தவளவினராதல். முதிர்ந்த துனியாயவழித் துன்பம் பயத்தலானும், முதிராத புலவியாயவழிக் கலவியின்பம் பயவாமையானும், † இரண்டற்கு மிடையாகிய வளவறிந்து நீங்குதலரிதென்பது பற்றிக் 'கூடிமுயங்கப்பெறின்' என்றான். ‡ அவ்விரண்டின்பமும் யான் பெற்றே னென்பதாம்.

ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம்பற்றிச் செலவு, ஆற்றுமை, விதுப்பு, புலவியென நால்வகைத்தாக்கிக் கூறினார். அவற்றுட் செலவு பிரிவாற் றுமையுள்ளும், ஆற்றுமை படர்மெலிந்திரங்கன் முதன் நிறையழிதலீறாய வற்றுள்ளும், விதுப்பு அவர்வயின் விதும்பன்முதற் புணர்ச்சிவிதும்ப லீறாய வற்றுள்ளும், புலவி நெஞ்சொடு புலத்தன் முதல் ஊடலுவகை யீறாயவற் றுள்ளுங்கண்டுகொள்க. அஃதேல், வடநூலார் இவற்றுடனே ¶ சாபத்தி னுனைய நீக்கத்தினையுங் கூட்டிப் பிரிவினை ஐவகைத் தென்றாராலெனின், அஃது அறம் பொருளின்பமென்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரி வன்மையானும் முனிவராணையான் ஒருகாலத் தோற்றத்துளதாவதல்

லது உலகியல்பாய் வாராமையானும்

ஈண்டொழிக்கப்பட்டதென்க.

தெளி:—[இதுவுமது] (இ - ள்.)

காமத்திற்கு-காமத்தை யனுபவித்

தற்கு, இன்பம்-இன்பமாவது, ஊடுதல்- (அக்காமத்தை யனுபவித்தற்குரி யராவர் தணியாமைபற்றித் தம்முள்) பிணங்குதலாம், அதற்கு - அப்பிணங் குதற்கு, இன்பம்-இன்பமாவது, கூடி-(அப்பிணங்குதலே யளவறிந்து நீங் கித்தம்முள்) கூடி, முயங்கப்பெறின்-புணர்தல் கூடுமாயின், (அப்புணர்ச்சி).

கூடுதல் - ஒத்தவளவின்றாதல். பெரும்பிணக்காகியவிடத்து (அது) துன்பம் தருதலாலும், சிறுபிணக்காகியவிடத்து (அது) புணர்ச்சியின்பம்

---

* ஒத்தவளவினராதல் - காமநுகர்ச்சிக் குரியராவார் தம்முள் அந் நுகர்ச்சியில் ஒத்தவளவினரா யிருத்தல்.

† இரண்டற்கும்-முதிர்ந்ததுனி முதிராதபுலவி யென்னுமிரண்டற்கும்.

‡ அவ்விரண்டின்பமும் – ஊடலின்பமும், கூடலின்பமும்.

¶ கண்மாடபாதன் என்று சிறப்புப்பெயர் பெற்ற மித்திராசகன் அல் லது சவுதாசன் என்னும் அரசன் வசிஷ்டரது சாபத்தால் பிரிந்தான்; குபேர னது சோலைக்காவற்காளனை வோரியக்கன் குபேரனது சாபத்தால் பிரிந்தானென்று முறையே ஸ்ரீவிஷ்ணு புராணமும் காளிதாசனியற்றிய மேகதூதக்காரிகையும் கூறுகின்றன.

தாராமையாலும், இரண்டற்கும் நடுவாகிய
அளவறிந்து நீங்குதல் அரிதென் பதுபற்றிக்
'கூடிமுயங்கப்பெறின்' என்றான். அவ்விரண்டின்பமும்
யான் பெற்றே னென்பதாம்.

இங்குப்பிரிவினை வடநூல் கொள்கைபற்றிச் செலவு, ஆற்றுமை, விதுப்பு, புலவியென்று நான்குவகையதாக்கிச் சொல்லினர். அந்நான்க னுள் செலவைப் பிரிவாற்றுமை யென்னும் அதிகாரத்திலும், ஆற்றுமை யைப் படர்மெலிந்திரங்கல் முதல் நிறையழிதலீறுயுள்ள அதிகாரங்களிலும்,

விதுப்பை அவர்வயின்விதும்பல் முதல் புணர்ச்சிவிதும்ப லீறுயுள்ள அதிகாரங்களிலும், புலவியை நெஞ்சொடு புலத்தல் முதல் ஊடலுவகை யீறுயுள்ள அதிகாரங்களிலுங் கண்டுகொள்க. அங்ஙனமாயின், வடநூலார் இந்நான்கனுடனே சாபத்தினாலாகிய பிரிவினையுங் கூட்டிப் பிரிவினை ஐவகைத்தென்று கூறினாலென்றால், அப்பிரிவு, அறம் பொருளின்பமென்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவல்லாமையாலும் முனிவரது கட்டளையால் ஒருகாலத்தில் ஒரு குற்றத்தினாலுண்டாவதல்லாமல் உலகியற்கையாய் வாராமையாலும் இங்கு ஒழிக்கப்பட்டதென்க.

(க - து.) தலைமகன் காமநுகர்ச்சிக்கின்பம் ஊடுதலும், அவ்வூடுதற்கின்பம் அதனை யளவறிந்து நீங்கிக்கூடுதலுமாமென்றான்.

10. Feigned dislike gives a zest to love;

and a hearty intercourse gives delight to dislike.

—(*)—

## கற்பியல் முற்றிற்று.



## * காமத்துப்பால் முற்றிற்று.

காமத்துப்பாலினதிகாரத்தொகை 25; அவற்றுள் களவியல் 7; கற்பியல் 18 ஆம்.

" ஆண்பாலே நாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராருக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றுகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு " என்பது திருவள்ளுவமாலை.

இதன்கண் காமத்துப்பால் மூன்றுவகையாகக்கூறப்பட்டிருக்கினும், அவை அகப்பொருளிலக்கணத்திற்கமைய களவியல், கற்பியலெனவிரண்டுவகையாகக்கூறப்பட்டனவென்க.

* " இனிக்காமம் நன்றுமாறுண்டு. சுவர்க்கத்தின்கட்சென்று போகந் துய்ப்பலென்றும், உத்தாகுரு (சன்மார்க்கரிருக்கும் நல்லனுபவ பூமி) வின்கட்சென்று போகந்துய்ப்பலென்றும், நன்ஞானங்கற்று வீடு பெறுவலென்றும், தெய்வத்தை வழிபடுவலென்றும் எழுந்த காமந்

# திருக்குறளின் பால்

# முதலிய வற்றின் விபரம்

வருமாறு:—

பால் - அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்.

| | | |
|---|---|---|
| அறத்துப்பாலினதிகாரம் | ... | 38 |
| பொருட்பாலினதிகாரம் | ... | 70 |
| காமத்துப்பாலினதிகாரம் | ... | 25 |

ஆக அதிகாரத்தொகை 133 ஆம்;
செய்யுட்டொகை 1330 ஆம்.

" அறமூப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய - முறைமையால்
வேத விழுப்பொருளே வெண்குறளால் வள்ளுவனூர்
ஓதவழுக் கற்ற தலகு " என்பது திருவள்ளுவமாலை.

---

கண்டாயன்றே ? மேன்மக்களானும் புகழப்பட்டு மறுமைக்கும் உறுதி

பயக்குமாதலின், இக்காமம் பெரிதும் உறுதியுடைத்தென்பது. உடை
த்தாமாறு:—அறுவகைப்பட்ட பாசாண்டிகரும் (மதவாதிகளும்)
இணைவிழைச்சு (பெண்போகம்) தீதென்ப. அஃதுண்டாமிடத்துச்
சுற்றத்து தொடர்ச்சியுண்டாம்; உண்டாகவே, கொலையே களவே
செருக்கே மானமே என்றித் தொடக்கத்துக் குற்றம் நிகழுமென்பது.
அதுகேட்டே தலையாயினர் அதன்கணின்று நீங்குவார். இனி இடை
யாயினர் பெண் என்பது எற்புச்சட்டகம் (எலும்புக்கூடு) மூடைக்
குரம்பை (மாமிசதேகம்) புழுப்பிண்டம் (புழுக்கூடு) பைமறியா (பை
யைத் திருப்பிப் பார்ப்பதுபோலத் திருப்பி) நோக்கப் பருந்தார்க்குந்
தகைமைத்து; ⌘ (கோழை)யும் பித்தும் வளியும் குடரும் கொழுவும்
(கொழுப்பும்) புரளியும் (இரத்தமும்) ஈரம்பும் மூத்திரப் புரீடங் (மலம்)
களும் என்று இவற்ற நியைபு (இவற்றாலாக்கப்பட்டது) பொருள்
அன்று; பொருளாயின், பூவே சாந்தே பாகே (தாம்பூலமே) எண்ணெ
யே அணிகலமே என்றிவற்றாற் புனையவேண்டா, தான் இயல்பாக
நன்றாயினென்று, அதன் அசுபத்தன்மை யுரைக்கக்கேட்டு நீங்குவர்.
கடையாயினர் எத்திறத்தாவது நீங்கார்; என்னை? பலபிறப்பிடை
ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று போகந்துய்த்து வருகின்றமையின்,
அவர்க்கு இது காட்டப்பட்டது; என்னை? பேதையைக்காதல் (மூட
னுக்காசை) காட்டிக் கைவிடுக்க என்பதனால் அவன் தாழ்ப்பட்ட
(அழுந்தியுள்ள) இணைவிழைச்சினுள்ளே மிக்கதொன்று காட்டப்பட்
டது. எஞ்ஞான்றும் மூப்புப் பிணி சாக்காடில்லது, நிச்ச நிரப்பிடும்
பை (வறுமையாலாகிய துன்பம்) இல்லது; இவனும் பதினாறட்டைப்
(16) பிராயத்தனும் இவளும் பன்னீராட்டைப் (12) பிராயத்தளாய்
ஒத்தபண்பும் ஒத்தகலனும் ஒத்த அன்பும் ஒத்த செல்வமும் ஒத்த கல்
வியும் உடையராய்ப் பிறிதொன்றிற் கூனமின்றிப் போகந்துய்ப்பா
ரென்று காட்டப்பட்டன. என்போலவோவெனின், கடி (கசப்பாய

மருந்தை)த் தின்னுதானைக் கட்டிபூசி (வெல்லத்தில் மறைத்து அது வாயிலாகக்) கடித்திற்றியவாறு (கசப்பாய மருந்தைத் தின்னச்செய்த விதம்) போலவும், கலங்கற் றின்னீர் தெருளாமையான் உண்பானை அறிவுடையாளெருவன் பேய்த்தேரை (கானல்நீரை)க் காட்டி, 'உது காணுய் நல்லதொருநீர்; தோன்றுகின்ற தண்ணீர் பருகாய்; இச் சேற்றுநீர்பருகி என்செய்தி?' என்று நன்னீர்காட்டி ஊட்டியதுபோல வும், தான் ஒழுகாநின்றதோர் இணைவிழைச்சினுள்ளே மிக்கதோர் ஒழுக்கங்காட்டினன். காட்டக்கேட்டு அது பெறுமாறு என்னை கொல்லோ எனும்; எனவே, மக்கட்பாட்டினுலும் (மக்களின் பெருமை யாலும்) வலியானும் வனப்பானும் பொருளானும் பெறலாவதன்று, தவஞ்செய்தாற்பெறலாம்; என்னை? 'வேண்டிய வேண்டியாங் கெய் தலாற் செய்தவ, மீண்டு முயலப் படும்' என்பதாகலான் என்பது. அதுகேட்டு, இனியானுந் தவஞ்செய்து இதனைப் பெறுவனென்று தன்மாட்டு வேட்கையாற் றவஞ்செய்யும்; செய்யாநின்றுனைப் பாவீ! இதன்பாத்ததோ (இக்காமியத் தவத்தினுலாவதோ) வீடுபேற் றின்பமென்று வீடுபேற்றின்பத்தை விரித்துரைக்கும். அதுதான் பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடு அவலக் கவலைக் கையாற்றி (பயனில்லாத வருத்தவழியி) னீங்கி மணியினது ஒளியும் மலரினது நாற்றமும் சந்தனத்துத் தட்பமும் (குளிர்ச்சியும்) போல உண்ணின்றெழுந்ததொரு பேரின்ப வெள்ளத்த தென்பது கேட்டு, அதனைவிட்டு வீடுபேற்றின்கண்ணே அவாவி(விரும்பி) நின்று தவமும் ஞானமும் புரிந்து வீடுபெறுவானுமென்பது. அவனை வஞ் சித்துக்கொண்டு சென்று நன்னெறிக்கண் நிறீஇயினமையிற் களவியலென் னுங் குறிபெற்றது" என்று இறையனாகப்பொருள் முதற்சூத்திரத்தி னுரையில் நக்கீரனார் கூறுவதாலும், "காமஞ் சான்ற கடைக்கோட் காலை, யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி. அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும், சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே" என்று தொல்காப்பிய னார் கூறுவதாலும், காமத்துப்பாலை வகுத்துக் கூறியதன் காரணம் இனிது விளங்கும். இஃதறியாதார் காமத்துப்பாலை மனம்போனவா றிழி மொழிகூறிப் பழிக்கின்றனர்; அவருரை பதருரையேயாம்.

"இக்காமத்துப் பாலுக்குக் காமத்தைக் குறித்துச் செம்பொருளாகச் சொல்லப்பட்ட இச்சிற்றின்பப் பொருளன்றி மோட்சத்தைக் குறித்துக் குறிப்புப் பொருளாகச் சொல்லப்பட்ட பேரின்பப் பொருளுமுண்டு" என்று கூறுவாருமுண்டு. அவ்வாறு கூறுதல் திருச்சிற்றம்பலக் கோவையார் முதலிய நூல்களுக்குப் பொருந்துமே யன்றி அறம் பொருளின்பங்களை முறையே வகுத்துக்கூறும் திருக்குறள், நாலடியார், பழமொழி முதலிய நூல்களுக்குப் பொருந்தாது ; ஏனெனின், காமத்துப்பாலிற்குச் சிற்றின்பப்பொருளன்றி வேறு மொருபொருள் குறிப்பாற் கொள்வதுபோல ஏனையபாலிற்குங் கொள்ளவேண்டி யிருத்தலினென்க.

திருவள்ளுவர் குறள் மூலமும், பரிமேலழகருரையும்,
ஸ்ரீசாது இரத்தின சற்குருவின் பாதசேகரராகிய
கோ. வடிவேலுசெட்டியாரியற்றிய தெளிபொருள் விளக்கமும்,
கருத்துரையும், குறிப்புரையும், ஆங்கிலேயமொழிபெயர்ப்புடன்
முற்றுப்பெற்றன.



உ

திருக்குறளின்

# சிறப்புப்பாயிரமாகிய

# திருவள்ளுவமாலை.

1. திருத்தகு தெய்வத் திருவள் ளுவமோ
டுருத்தகு நற்பலகை யொக்க—விருக்க
வுருத்திர சன்ம னெனவுரைத்து வானி
லொருக்கமோ வென்றதோர் சொல்.

(இ - ள்.) திருத்தகு தெய்வம் - அருட்செல்வத்தையும் (அதிற்குத்) தக்க தெய்வத்தன்மையையும் உடைய, திருவள்ளுவமோடு—, உருத்தகு நற் பலகை - (அவரிருத்தற்குத் தனது) உருவத்திலுலே தக்க நல்ல சங்கப் பலகையிடத்து, உருத்திரசன்மர்—, ஒக்க இருக்க என உரைத்து-சமானரா யிருக்கக் கடவரென்றுசொல்லி, வானில் - ஆகாசத்திலிருந்து, ஒருக்க - (அவ்விடத்துள்ள புலவர் கருத்தையெல்லாம்) ஒற்றுமைசெய்யும்படி, ஓர் சொல் - ஒரு வாக்கியம், ஓவென்றது - ஓவென்று இரைந்தெழுந்தது. ()

"அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்" என்பவாகலின், திரு வென்றதற்கு அப்பொருளுரைக்கப்பட்டது. தெய்வத்தன்மை - தெய்வத்தி னவதாரமாய் விளங்குகை. தெய்வத்தன்மை யில்லார்க்கு அருளுளதாயி னும் அதனுலே பெரும்பயன் விளையாமையின், தகுதி சொல்லப்பட்டது. திருவள்ளுவரென்னும் பெயருள் திருவென்பது உயர்வையும் வள்ளுவ ரென்பது வண்மையையுடைய ரென்பதையும் விளக்கிநின்றனவாகலின், அது வேதத்தில் இலைமறை காய்கள்போற் பலவிடங்களினு மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களை யெல்லாம் தொகுத்து உலகத்தா ருக்குக்கொடுத் தருள்செய்தவ ரென்னுங் காரணம்பற்றி வந்த பெயரா யிற்று. வள்—முதனிலை, அர்-இறுதிநிலை, உ-சாரியை அம்முதனிலைக் குப் பொருள்-ஈகை. உருத்திரசன்மர்-உருத்திரனுல் அடைந்த சன்மத்தை யுடையவரென விரியும். அவர் முருகக்கடவுள் திருவவதாரமாய் வணிகர் மரபிற்றோன்றிய மூங்கைப் பிள்ளையார். அசரீரி-அருவமாயெங்கு நிறைந் துள்ள முதற்றெய்வம். அரங்கேற்றத் தொடங்கிய காலத்துத் தெய்வப் புலமைசோடு ஒப்பவிருந்து கேட்டற்குத் தகுதியுடையார் யாரென யாவ ரும் எண்ணமுற்று நின்றவழி இவ்வசரீரி வாக்கியம் பிறந்தது. என்ற

## 2 திருவள்ளுவமாலை.

தெனப் படர்க்கை வினையாகக் கூறலின், ஆண்டு நின்றுகேட்ட ளுள் ஒருவர் அதனை இங்ஙனம் பாடலாகச் செய்தனரென்றறிக.

புலவர்க

2. நாடா முதலுன் மறைநான் முகலுவிற்
பாடா விடைப்பார தம்பகர்ந்தேன்—கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலைவேன் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

(இ-ள்.) கூடாரை எள்ளிய வென்றி இலங்கு இலை வேல் மாற-
பகைவனை (புறங்கொடுக்கச்செய்து) இகழ்ந்த வெற்றியை உண்டாக்கி விளங்காநின்ற இலைபோலுந் தகட்டு வடிவாயுள்ள வேற்படையையுடைய பாண்டியராசனே, நாடா-(உலகத்தார் விதிவிலக்குகளை அறிந்து உய்யும் வழியை) நாடி, முதல்-படைப்புக் காலத்திலே, நான்முகன் நாவில்-பிரமனது நாவிலிருந்து, நான்மறைபாடா-இருக்கு முதலாகிய நான்கு வேதங்களையும் பாடி, இடை-(இதற்கும் அதற்கும்) நடுவான காலத்திலே, பார தம் பகர்ந்தேன்-பாரதமாகிய வேதத்தைச் சொல்லினேன், பின்-(அதற்குப்) பிற்பட்ட இக்காலத்திலே, என் வாக்கு—, வள்ளுவன்வாயது-(திருக்குறளாகிய வேதத்தைச் சொல்லி) வள்ளுவன் வாயின்கண்ணதாயிற்று, எ-று.

வேதமும் சந்தோரூபமாகையால் 'பாடா' என்றுள். தன் கண்வலுகலின் நான்முகனுவி லிருந்தென்றும், அவனவதாரமாகலின் 'வள்ளுவன் வாயதென் வாக்கு' என்றும் கூறினுள். பாரதம் வியாசரைக்கொண்டு சொல்லப்பட்டது. இதனுல் நான்மறை-பூர்வவேதமும், பாரதம்-மத்தியவேதமும், திருக்குறள்-உத்தரவேதமும் என்றதாயிற்று. பூர்வவேதம் பின் வியாசராலே நான்காக வகுக்கப்பட்டமைபற்றி நான்மறை யெனப்பட்டது.

அன்றி நானெனப் பிரித்து எழுவாயாக்கினுமாம். வேதம் மூவகைத்தென் பதூஉம், இவற்றது தோற்றமுறையால் இது வாக்கியப் பிரமாணத்திற் சிறப்புடைத்தென்பதூஉம், சொல்லியபடி.

இறையனார்.

3. என்றும் புலாா தியாணர்நாட் செல்லுகினு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்—குன்றுத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

(இ-ள்.) மன் புலவன் வள்ளுவன் வாய்ச்சொல் - புலவர்க்கரசனுகிய வள்ளுவன் வாயிற் பிறந்த திருக்குறளானது, என்றும் யாணர் புலாாது-எக்காலத்துந் தன்னழகு கெடாமல், நாள் செல்லுகினும் நின்று அலர்ந்து-நெடுங்காலங்கழியினும் நிலைபெற்று மலர்ந்து, தேன்பிலிற்று நீர்மையதாய்-தேனைச்சொரிகின்ற குணமுடையதாய்,(விளங்குமாதலால்),குன்றுதசெந்தளிர்க் கற்பகத்தின்-குறைவுபடாத செய்யதளிர்களையுடைய கற்பகத்தினது, தெய்வத் திருமலர்போன்ம்-தெய்வத்தன்மை பொருந்திய உயர்வாகிய மலர் போலும், எ - று.

# திருவள்ளுவமாலை.

3

## திருக்குறளுக்கு அழகு - சொன்முடிபு

பொருண்முடிபின் குணங்

களும், அலர்தல் - எங்கும் பரவுதலும், தேன்பிலிற்றல் - இருமையின்பங் களும் விளைத்தலுமாம். சொல்—ஆகுபெயர். இறையனர் கடவுளாகலின்,

இனி இதிற் சிறப்பதொன் றுளதாவதின்றென்னும் துணிவுதோன்ற 'என் றும்' என்றும், பின்னும் அதனை வலியுறுத்தற்கு 'நாட்செல்லுகினு நின்று' என்றும் வாழ்த்துப் பொருள்பட இவ்வாறு கூறினர்.

இஃதழியாதுநின்று பெருகிப்பயன் படுமாறு சொல்லியபடி.

உக்கிரப்பெருவழுதியார்.

4. நான்மறையின் மெய்ப்பொருளை மூப்பொருளா நான்முகத் தோன், நூன்மறைந்து வள்ளுவனுப் தந்துரைத்த—
நூன்முறையை, வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக
நன்னெஞ்சு, சிந்திக்க கேட்க செவி.

(இ - ள்). வள்ளுவனுய்-, தான்மறைந்து - தனது திருமேனியை மறைத்து, நான்மறையின் மெய்ப்பொருளை - நான்கு வேதங்களி னுண்மைப்பொருளை, தந்து - (இவ்வுலகத்திலே) கொணர்ந்து,

மூப்பொருளா -
அறம்பொருளின்பமென்னு மூப்பாற்பொருளதாக,
பிரமனுல், உரைத்த - திருவாய்மலர்ந் தருளப்பட்ட,
நான்முகத்தோன் -
நூல் - தாலினது,

முறைனிய - புத்தகத்தை, சென்னிவந்திக்க - (எனது) தலையானது தொழுக்கடவது, வாய் வாழ்த்துக - வாயானது வாழ்த்தக்கடவது, நல் நெஞ்சம் சிந்திக்க - நல்லமனமானது நினைக்கக்கடவது, செவிகேட்க - காதுகளானை

வை கேட்கக்கடவன, எ - று.

மூப்பொருள்—ஆகுபெயர். இவ்வேதப்பொருள் ஆதியிலே வேதஞ் சொல்லியோனாலேயே சொல்லப்பட்டமையால் உலகத்துச் சமயாசாரியர் களாலும் பிறராலும் ஒன்றற்கொன்று மாறுகக்கொள்ளப்பட்ட பொருள் கள்போல்வ தன்றென்பது தோன்ற 'மெய்ப்பொருள்' என்றார். கலியுணர் புலமையிற் றலைமையோனாகி விதிமுறைவழாது முதுநிலம்புரக்கும் பெருந் தகையுக்கிரப் பெருவழுதி யென்னுந் தன்னிகரில்லா மன்னவர்பெருமான் தான்மேற்கொண்ட சிறப்பைப் பலரும் அறிந்துமேற்கொள்ள இவ்வாறு வழிபாடு கூறினன். "மன்ன னெப்படி மன்னுயி ரப்படி" ஆகலின், இப் புத்தகத்தை முன்னே பூசித்து மெய் மொழி மனங்களால் வணக்கஞ் செய்து பின் கேட்கவேண்டுமென்று சொல்லியபடி.

குமிலர்.

5. தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி.

•(இ - ன்.) மனை அளகு வள்ளைக்கு உறங்கும் வளநாட - மனையில் வளர்க்கப்படுகின்ற பறவைப்பேடுகள் உலக்கைப்பாட்டால் கண்ணுறங்கு

கின்ற வளம்பொருந்திய நாட்டையுடைய அரசனே, வள்ளுவனுர் வெள் ளைக் குறட்பாவிரி - திருவள்ளுவரால் அருளிச்செய்யப்பட்ட குறள்வெண் பா (மிகப்பெரிய பொருளைத்) தன்னுட்கொண்டு காட்டுதல், தினை அளவு போதாச் சிறுபுல் நீர் - தினையரிசியினளவுக்கும் போதாத சிறிய புல்லினது தனியின்கணுள்ள பனிநீரானது, நீண்ட பனை அளவுகாட்டும் படித்து - உயர்ந்த பனையினளவான அதன் சாயையைத் தன்னுட்கொண்டு காட்டுங் குணம்போலுங் குணத்தை யுடைத்து, எ - று.

பனை—ஆகுபெயர். ஆல்—அசை. பறவை - கிளிமுதலியவை. உலக் கைப்பாட்டு-மகளிர் பரிமளப்பொடி இடிக்கின்றபோது பாடும்பாட்டு. விரி-விரித்தல். எப்படி மிகச்சிறிய பனித்துளியிலே மிகப்பெரிய பனைமரத் தின் சாயை அடங்கிவிளங்குகின்றதோ அப்படியே மிகச்சிறிய இக்குறள் வெண்பாவில் மிகப் பெரியபொருள் அடங்கி விளங்குகின்றதென்பதாம். இது சுருங்கியிருந்தும் விரிவானபொருளை விளக்குமாறு சொல்லியபடி. இது முதலியன சங்கத்துப் புலவராலே பாடப்பட்டன.

பாணர்.

## 6. மாலுங் குறளாய்

வளர்ந்திரண்டு மாணடியான்

ஞால

முழுது நயந்தளந்தான்—வாலறிவின்

வள்ளுவனுந் தங்குறள்வெண்

பாவடியால் வையத்தா

ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.

(இ - ள்.) மாலும் - திருமாலும், குறளாய் - குறளாய்ப்பிறந்து, வளர்ந்து-, இரண்டு மாண் அடியால் - இரண்டுபெரிய அடிகளால், ஞாலம் முழுதும் - உலகமனைத்தையும், நயந்து அளந்தான் - விரும்பி அளந்தான், வாலறிவின் வள்ளுவரும் - மெய்யறிவினையுடைய திருவள்ளுவரும், தம் குறள்வெண்பா அடியால் - தம்மினின்றுந் தோன்றி (அந்நிலைநிற்கின்ற) வெண்பாக்குறளின் (இரண்டுசிறிய) அடிகளால், வையத்தார் உள்ளுவ எல் லாம் - அவ்வுலகமனைத்தினு முள்ளோராற் நினைக்கப்பட்டவற்றை யெல் லாம், ஓர்ந்து அளந்தார் - ஆராய்ந்து அளந்தார், எ - று.

உம்மையிரண்டும் முறையே தேவரிற் பெரியோனுகியவென்றும், மனிதரிற்சிறியராய்க் காணப்பட்டவென்றும் பொருள்பட நின்றன. உவ மானத்திலே வளர்தலும் பெருமையும் சொல்லுதலால் உவமேயத்திலே அவற்றுக்கு மூணுகிய நிலைநிற்றலும் சிறுமையும் வருவிக்கப்பட்டன. மாலுக்குத்தானே குறளாதலும் பின்பு அந்நிலைநில்லாது வளர்தலும் பேரடி களால் அளவுபட்ட உலகத்தை யளத்தலும், திருவள்ளுவருக்குத் தம்மினின் றுங் குறளை உண்டாக்குதலும், அது தன்னிலைநிற்றலும், அதன் சிற்றடிக களால் அளவுபடாத நினைப்பின் விடயங்களை அளத்தலும் சொல்லப்படுத லாலும் வேற்றுமை யறிக. நினைக்கப்பட்டனவெல்லாம் இதனகத்து அளவு செய்யப்பட்டமை சொல்லியவடி.



நக்கீரர்.

7. தானே முழுதுணர்ந்து தண்டமிழின்

வெண்குறளா

லானு வறமுதலா மந்நான்கு – மேனிருக்

கூழி னுரைத்தாற்கு மொண்ணீர்

முகிலுக்கும்

வாழியுல கென்னுற்று மற்று.

(இ-ள்.) தானே முழுதுணர்ந்து-தாமே (வேதப்பொருள்) அனைத் தையும் அறிந்து, தண் தமிழின்-தண்ணிய தமிழின்கண், வெண்குறளால்-குறள் வெண்பாக்களால், ஆனு அறம் முதல் ஆம் அந்நான்கும்-விட்டு நீங்கு தல் கூடாத அறமுதலாகிய அந்நான்கு பொருள்களையும், எனைருக்கு-அவற்றை யறியாதவர்களுக்கு, (அவர் எளிதினரிய), ஊழின்-முறையால், உரைத்தாற்கும்-சொல்லியருளிய திருவள்ளுவர்க்கும், ஒள்நீர் முகிலுக்கும்-ஒள்ளிய நீரைத்தந்த மேகத்துக்கும், உலகு-இவ்வுலகமானது, மற்று என் ஆற்றும்-எதிர்நன்றி யாதுசெய்யும், (செயக்கிடந்தது ஒன்றும் இல்லை), வாழி-(அவரும் அதுவும்) வாழ்க, எ-று.

ஆனமை-நீங்காமை. 'தானே முழுதுணர்ந்து' எனவே ஆசாரியராயிருந்து பிறாறிவிக்க அறிந்திலனென்றதாயிற்று.

முழுதுமென்னு மும்மை

தொக்கது. ஒண்மை-இனிமைமேல் நின்றது.
முறை—நூலின் முப்பொருள்
களின் கிடக்கையொழுங்கு.
நாயனார் கொடைச்சிறப்புச் சொல்லியபடி.

மாழலனார்.

8. அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந்
நான்கின்
றிறந்தெரிந்து செப்பிய
தேனவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை
யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

(இ-ள்.) அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அந்நான்கின்-அறமுத லாகச் சொல்லப்பட்ட அவ்வேதப்பொருள்களாகிய நான்கனது, திறம்தெரி ந்து-கூறுபாட்டையும் அறிந்து, செப்பிய-(உலகத்தார்க்குச்) சொல்லிய, தேனவை-தேவனை, மறந்தேயும்-மறந்தாயினும், வள்ளுவன் என்பான்-(ஒரு மனிதனுக உட்கொண்டு) வள்ளுவனென்று சொல்லுதற்கு ஒருவனுளனு யின் அவன், பேதை-அறிவில்லாதவனுவன், அவன் வாய்ச்சொல்-அவனது வாயிற்பிறந்த அச்சொல்லை, அறிவுடையார்-, கொள்ளார் - கொள்ள மாட்டார், எ-று.

அறமுதலியவற்றின் கூறுபாடு-அவற்றினது தொகைவகைவிரிகள். மறந்தேயும் என்றதனால் நினைப்புடன் சொல்லுவோன் பேதையிற் பேதையாமென்றதாயிற்று. முன்னும் பின்னுமுள்ள பாட்டுக்களில் இப்பெயர்தெய்வத்தன்மையைக் குறிப்பிக்கும்படி நன்கு மதித்து உயர்த்திச் சொல்லப்படுதலால், ஒரு மனிதனுக வுட்கொண்டென்பது வருவிக்கப்பட்டது. அன்றி உலிக்குறிப்பினாலே, சாதியிழிவு தோன்ற வள்ளுவனென்பா னெனினு



மனமயும்.

இக்குறிப்பொலியை வடநூலார் காகுசுரமென்பர்.

தெய்வப்

புலவரை அவமதிப்பினிழிவு சொல்லியபடி.

கல்லாடர்.

9. ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனூர்
முப்பான் மொழிந்த மொழி.

(இ-ள்.) ஆறு சமயத்தார்-அறுவகை மதத்தோரும், ஒன்றே பொருள் எனின் - (ஒருமதத்தார் தமது நூலிலே உலகமும் உயிரும் கடவுளுமாகிய) பொருள்கள் ஒன்றேயென்று நாட்டுவாயின், வேறு என்ப - (மற்றொரு மதத்தார் தமது நூலிலே அதனை மறுத்து அவை) வேறுமென்று நாட்டுவர், வேறு எனின்-(அப்படி) வேறென்றுநாட்டின், அன்று என்ப-(பின்

னெரு மதத்தார் அதனை) அன்றென்றுமறுப்பர், (ஆதலால் சமய நூல்க ளெல்லாம் இவ்வாறு மறுக்கப்படுகின்றன), வள்ளுவனார் முப்பான் மொழி ந்த மொழி—திருவள்ளுவராலே முப்பாலாகச் சொல்லப்பட்ட நூலை, நன்று என - நன்றென்று கொள்ளுதற்கு, எப்பாலவரும் - எவ்வகைப்பட்ட பகுதியோரும், இயைப-உடன்படுவார், எ-று.

மொழி—ஆகுபெயர். ஆறுமதமாவன—வியாசமதம், சைமினிமதம், பதஞ்சலிமதம், கபிலமதம், கணாதமதம், அக்ஷபாதமதம்; அன்றிச் சைவ வைணவ முதலியவற்றைக் கூறினுமாம். எச்சமயத்தாருமென்னுது எப்பால வரும் என்றதனால் வேதத்துக்கு உட்பட்ட சமயத்தாரேயன்றிப் புறப்பட்ட சைனம், பௌத்தம், சார்வாகம் முதலிய மதத்தாரும், பலவகைப்பட்ட சாதியாரும், தேசத்தாரும், காலத்தாரும், பிறரும் தழுவப்படுதலறிக. இதுவே பொதுவேதமென்றபடி.

சீத்தலைச்சாத்தனார்.

10. மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றூரன்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

(இ-ள்.) வள்ளுவர்-திருவள்ளுவரது, பா முறைதேர் முப்பால்-பாக்க வின்(முன்பின்) முறைதெரிதற்கிடனுகிய திருக்குறளானது, மும்மலையும்-

(கொல்லிமலை நேரிமலை பொதியமலை எனப்படுகின்ற) மூன்றுமலைகளை யும், முந்நாடும் - (குடநாடு புனனாடு தென்னாடு எனப்படுகின்ற) மூன்று நாடுகளையும், முந்நதியும் - (பொருனைநதி காவிரிநதி வையைநதி எனப்படு கின்ற) மூன்று நதிகளையும், முப்பதியும் - (கருவூர் உறையூர் மதுரை எனப்படுகின்ற) மூன்று பதிகளையும், மும்முரசும் - (மங்கலமுரசு வெற்றி

முரசு கொடைமுரசு எனப்படுகின்ற) மூன்று முரசுகளையும், முத்தமிழும்-[இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் எனப்படுகின்ற] மூன்று தமிழ்

திருவள்ளுவமாலை.

7

களையும், முக்கொடியும் - (விற்கொடி புலிக்கொடி மீனக்கொடி எனப்படு கின்ற) மூன்று கொடிகளையும், மும்மாவும்-(கனவட்டம் பாடலம் கோரம் எனப்படுகின்ற) மூன்று குதிரைகளையும், தாம் உடைய மன்னர் - தாம் முறையேயுடைய (சோ சோழ பாண்டியர் எனப்படுகின்ற) மூவரசருடைய, தடமுடிமேல் - பெரிய முடிகளின்மேலே, (கொள்ளப்பட்ட), தார் அன்றே - மாலையன்றே, எ-று.

அன்றேவென்றது பலாறி தேற்றம்.

மூப்பால்-ஆகுபெயர். மும்முரசும் முத்தமிழும் அம்மூவரசர்க்கும் பொதுமையவாயினும் இம்முறையுரிமை அவர் குடிமாபிற் கியைந்தனபோலும். அரசர் மூவரும் மேற்கொண்ட சிறப்புச் சொல்லியபடி.

மருத்துவன் றாமோதரனார்.

11. சிந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத்
தேனளாய்

மோந்தபின் யார்க்குந்

தலைக்குத்தில்—காந்தி

மலைக்குத்து மால்யானை வள்ளுவர்மூப்

பாலாற்

றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

(இ-ள்.) காந்தி மலைக்குத்து மால் யானை - (தன் பகையென) வெகுண்டு மலையைக் குத்துகின்ற பெரிய களிறுபோலுள்ள வாசனை, சிந்துநீர்க் கண்டம் - சிந்துநீர்ச் சருக்கரையையும், தெறி சுக்கு - சிதைக்கப்பட்ட சுக்கையும், தேன் அளாய் - தேனோடு கலந்து, மோந்தபின்-, (அதனால்), யார்க்கும் - (தலைக்குத்துடையோர்) யாவர்க்கும், தலைக்குத்து—, இல்-இல்லையாகும், வள்ளுவர் மூப்பாலால்—, சாத்தற்கு - சித்தலைச் சாத்தனுக்கு, தலைக்குத்து—, தீர்வு-இல்லையாயிற்று, எ-று.

யானைபோல்பவனை யானை யெனலால் ஆகுபெயர். முன் கேட்கப்பட்ட நூல்களிலெல்லாம் பல சொற்குற்றங்களும் பொருட்குற்றங்களும் கண்டு பொருமல் தலையில் அறைந்துகொண்டு வந்தமையால் புண்பட்டுக் குத்தல் உண்டாயிருந்தது ; இதன்கண் ஓர் குற்றமுங் காணப்பெறுமையால் அது நீங்கிற்றென்க. எப்படி அம்மூன்று சரக்கும் அதற்கு மருந்தாமோ அப்படியே இதற்கு இம்மூன்றுபாலும் மருந்தாயின வென்பதாம். தீர் வென்னுந் தொழிற்பெயர் முற்றுப் பொருளில் வந்தது. இதன் குற்ற மற்று விளங்குகை சொல்லியபடி.

12. தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதா

மப்பா லொருபாவை யாய்பவோ வள்ளுவனார்
மூப்பான் மொழிமூழ்கு வார்.

(இ-ள்.) தாளார் மலர்ப் பொய்கை - நாளத்தோடு பொருந்திய தாமரை மலர்களையுடைய ஒரு குளத்து நீரின்கண்ணே, குடைவார் - மூழ்குவோர்,





தாம்—, தண்ணீரை - (வேறு) தண்ணீரை, வேளாது ஒழிதல் - விரும்பா தொழிதல், வியப்பு அன்று - வியப்பைச் செய்வதன்று, வள்ளுவனார் மூப் பால் மொழி - திருவள்ளுவரது மூப்பால்களையுடைய நாலின்கண்ணே, மூழ்குவார்—, தாம்—, வாளா-வீணாக, அப்பால்—, ஒருபாவை - ஒரு நூலை, ஆய்பவோ - விரும்புவாரோ, (விரும்பார் ஆகலின் இதுவே வியப்பைச் செய்வதாம்), எ-று.

தாளார் மலரெனலால் தாமரை மலரெனப்பட்டது. வியப்பைச்செய் வதை வியப்பு என்றார். மூழ்குதல் - இங்கே கருத்து முழுதும் அழுந்தி நிற்றன்மே னின்றது. மொழி - ஆகுபெயர். ஓகாரம் - எதிர்மறை. விரும் புதலாகிய காரணத்தை ஆய்பவோ எனக் காரியமாக உபசரித்தார். அது வியப்பன்று என்றமையாலே இது வியப்பென்றதாயிற்று. உயர்வான பொருள் பெற்றோர்க்கு அதினிழிவான பொருளையும் பெற விரும்புதல் இயல்பா யிருக்க, குளிர்ச்சி இன்சுவை நறுமண முதலிய குணங்களாலே சிறந்த ஒரு தாமரைக்குளத்து நீரைப் பெற்றோர்க்கு அதனுற்றானே அமை திப்பெற்று வேறு தண்ணீரைப் பெற விரும்பாமை வியப்பைச் செய்வதா யிற்று. ஆயினும் இதுகாறும் ஒரு நூலைக் கற்றோர்க்கு வேறு நூலைக் கற்க விரும்புதலன்றி விரும்பாமை யில்லாதிருக்க இப்போது உளதாக வின், இதுவே பெருவியப்பைச் செய்வதென்றதாயிற்று. இதனால் இந்நூ லகத்து எந்நூற்பொருளும் அடங்கி யிருக்கின்றமை குறிப்பிக்கப்பட்டது. பல நூல்களையுங் கற்க விரும்புவோர்க்கு இஃதொன்றே அமைதல் சொல் லியபடி.

அரிசிற்கிழார்.

13. பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச்
சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

(இ-ள்.) பரந்த பொருள் எல்லாம் - (வேதத்திலே) ஒன்றோடொன்று மயங்கிநின்ற நால்வகைப் பொருள்களையும், பார் அறிய - இப்பூமியிலுள்ளோர் அறிதற்பொருட்டு, வேறு தெரிந்து—வேறுகப் பிரித்து, திறம் தொறும் சோ - (அது அது தனது தனது) வகையோடு சேரும்படி, சுருங்கிய சொல்லால்-சில சொற்களால், பொருள்விளங்க - கருத்துத் தோன்றும்படி, விரித்துச் சொல்லுதல் - விரியும்படி வைத்துச் சொல்லுதல், வல்லார்-வல்லவர், வள்ளுவர் அல்லால்—, ஆர் - (ஒருவரும்) இல்லை, எ – று.

பார்—ஆகுபெயர். திறம்-அற முதலியவற்றின் கூறுபாடு. சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தன் முதலிய அழகுகள் எப்படி இவரால் அமைக்கப்பட்டனவோ அப்படி பிறரால் அமைக்கப்படுதல் கூடாமை காட்டிய தாயிற்று. நூலுக்கும் நாயனுர்க்கும் தகுதி சொல்லியபடி.



## பொன்முடியார்.

14. கானின்ற தெதாங்கலாய் தாபெனுர்
தந்தது முன்
கூகின் றளந்த
குறளென்ப—நான்முறையான்
வானின்று மண்ணின் றளந்தமே தை
வள்ளுவனுர்

தாநின் றளந்த குறள்.

(இ-ள்.) கான் நின்ற தொங்கலாய் - மணந்தங்கப்பெற்ற மாலையையுடைய பாண்டியராசனே, முன் - முற்காலத்திலே, காசிபனுர் தந்தது - காசிபராலே தரப்பட்ட குறளை, கூ நின்று - மண்ணின்கண்ணே நின்று, அளந்த - (உலகத்தை) அளந்த, குறள் என்ப - குறளென்று சொல்லுவர், தாம்நின்று - தாம் (இங்கே) எழுந்தருளி, வள்ளுவனுர் அளந்த குறள் - திருவள்ளுவராலே தரப்பட்ட குறள், நூல் முறையான் - நூலின் முறையோடுகூடி, வான்நின்று - விண்ணின்கண்ணே நின்றும், மண் நின்று - மண்ணின்கண்ணே நின்றும், அளந்தது - (உலகத்தை) அளந்தது, எ-று.

கு கூ என நீண்டது. ஆனுருபு ஒடுவுருபின் பொருளில் வந்தது. அக் குறள் வஞ்சித்துப் பெற்றளத்தலால் நூன்முறையோடு கூடாததாயிற்று.

இக்குறளுக்கு ஒலிவடிவும் வரிவடிவுமென இரண்டு வடிவுண்மையால், ஒலி வடிவுக்கிடம் வாயுதலின் வாயின்று என்றும், வரிவடிவுக்கிடம் மண்ணுதலின் மண்ணின்று என்றும்

கூறினர். இக்குறளுக்கு நான்முறையோடு கூடலும் வாணிற்றலும் மிகுத்துச்சொல்லி வேற்றுமை செய்யப்பட்டது.

முன் மாலும் என்னும் பாட்டிலே நாயனார்க்கும் மாலுக்கும், இப்பாட்டிலே திருக்குறளுக்கும் மாலவதாகக் குறளுக்கும் ஒப்புமை குறித்துச் சொல்ல லால் வேறுபாடாம். உலகத்துப் பொருளெல்லாம் இஃதளத்தற் சிறப்புச் சொல்லியபடி.

கோதமனார்.

15.

ஆற்ற லழியுமென் றந்தணர்க ணான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா—சேட்டெ
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் மூப்பாலைச் [ழுதி
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று.

(இ - ள்.) அந்தணர்கள்—, நான்மறையை - நான்கு வேதங்களையும், உரைத்து - வாய்ப்பாடமாக, போற்றி - காப்பாற்றி, ஆற்றல் அழியும்

என்று - (எட்டின்கண் எழுதிவைத்தால் வலியில்லாரும் ஓதுவராகலின் இவற்றின்) வலிமை குறையுமென்று, எட்டின்புறத்து - எட்டின்கண், எழுதார் - எழுதார்கள், வள்ளுவனார் முப்பாலை - திருவள்ளுவரது திருக்குறளை, எட்டெழுதி - எட்டின்கணெழுதிவைத்து, வல்லாரும் - வலியுடையவரும், வல்லாரும் - வலியில்லாரும், சொல்லிடினும் - ஓதினாலும், ஆற்றல்சோர்வு இன்று - வலிமை குறைதலில்லை, எ-று.

அவ்வேதத்துக்கு உதாத்தம் அனுதாத்தம் சுவரிதமென்னுஞ் சாங்களின் வழுவாமலோதல் வேண்டுமென்னும் விதியுளதாகலின், அதற்குத்



தகுதியுடைய அந்தணரே அதிகாரிக ளாயினர்; இதற்கு அஃதில்லாமையால் யாவரும் அதிகாரிகளாவரென்றறிக. சொல்லிடினும் என்றதனால் பொருளுணர்ச்சிக்கு இதற்கும் வலிமை வேண்டுமென்பது பெறப்பட்டது. ஆற்றல் - சொற்செறிவின் றிட்பம். இங்ஙனங்கூறவே, அவ்வேதம் சொல்லின்கண்ணே தலைமையுடைத்தென்பதூஉம் இவ்வேதம் பொருளின்கண்ணே தலைமையுடைத்தென்பதூஉம் பெறப்பட்டன. ஓதப்படுதலின் அவ்வேதத்தினும் இது சிறப்புடைமை சொல்லியபடி.

நத்தத்தனார்.

16. ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு
தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

(இ-ள்.) பாயிரத்திலோடு - பாயிர நான்கதிகாரங்களோடு, ஆயிரத்து மூன்நூற்று முப்பது அருங்குறளும் - (சேர்ந்து தொகையாகிய) அரிய ஆயிரத்து மூன்நூற்று முப்பது குறள் வெண்பாக்களையும், பகர்ந்ததற்பின் - ஓதியுணர்ந்த பின்பு, போய் ஒருத்தர்வாய்-போய் ஒருவாது வாயாலே, கேட்க-கேட்டறிதற்கு, நூல் உளவோ - வேறுநூல் இருக்கின்றனவோ, [இல்லை என்றபடி], மன்னு தமிழ்ப்புலவராய் - நிலைபெற்ற தமிழிலே புலமை நிரம்பியோராகி, கேட்க - (பிறர் தம்மிடத்துவந்து) கேட்கும்படி, வீற்றிருக்கலாம் - சிறப்பாக விருக்கலாம், எ-று.

வீற்றிருத்தல்—ஒரு சபைநடுவிலே உயர்வாகிய ஆதனத்தில் எறியிருத்தல். இவற்றுட் பலவகைப்பட்ட நூல்களின் கருத்துக்களெல்லாம் விளங்கி நிற்றலின் கேட்க நூலுளவோ என்றார். புலவராய் எனவே புலமை நிரம்புதற்கு இவை ஆயிரத்து மூன்நூற்று முப்பது குறள்களும் போதுமென்பது பெறப்பட்டது. ஓதியோர்க்கு வரும் இம்மைப்பயன் சொல்லியபடி.

முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்.

17. உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்
தெள்ளுத லன்றே செயற்பால—வள்ளுவனார்
மூப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வா
ரெப்பா வலரினு மில்.

(இ-ள்.) வள்ளுவனார் மூப்பாலின் மிக்க -

திருவள்ளுவரது திருக்குற
ளின் மேற்பட்ட, மொழி - நூலொன்று, உண்டு எனப்பகர்வார் - உள
தென்று சொல்லவல்லவர், எப்பாவலரினும் - எவ்வகைப்பட்ட புலவருள்
ளும், இல்-இல்லை, (ஆதலால்), செயற்பால - (நாம் இந்நூலைக் குறித்துச்)
செயக்கடவன, உள்ளுதல் - (நாம் இதன்பொருளைச்) சிந்தித்துக்கொள்ளு
தலும், உள்ளி யுரைத்தல் - சிந்தித்துப் (பிறர்க்கு) அதனைச் சொல்லுதலும்,
உரைத்த அதனைத் தெள்ளுதல் அன்றே -
(பிறராலே) சொல்லப்பட்ட அதனைத் தெளிதலும் அன்றே,
என்று.

திருவள்ளுவமாலை.

11

மொழி—ஆகுபெயர். ஒப்பது வடமொழி வேதமிருத்தலின் மிக்க மொழி என்றும், தமிழின் மாத்திரமன்றி வடமொழி முதலியவற்றினுள்ள புலவரையுந் தழுவுதற்கு எப்பாவலரினும் என்றும், அறிவொப்புக் காண்டற்கு உரைத்ததனைத் தெள்ளுதல் என்றும் கூறினர். உள்ளுதலெனவே கேட்டலும், தெளிதலெனவே அவ்வாறெழுகலும், அடங்கின. இது பயிற்சி செய்தெழுகுமாறு சொல்லியபடி.

ஆசிரியர் நல்லந்துவனார்.

18. சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்—தோற்றவே
மூப்பான்
மொழிந்த முதற்பா வலரொப்பா
ரெப்பா வலரினு மில்.

(இ-ள்.) சாற்றிய பல்கலையும்-(அறிவுடையோரால்) சொல்லப்பட்ட பல நூல்களாலும், தப்பா அருமறையும் - தப்பாத அரிய வேதத்திலுலும்,

போற்றி - காப்பாற்றிவைத்திருந்து, உரைத்த - (உலகத்தார்க்குச்) சொல்

லப்பட்ட, பொருள் எல்லாம் - விடயங்களெல்லாம், தோற்ற - (தன்னிடத்தே) காட்டும்படி, மூப்பால்மொழிந்த - திருக்குறளைச் சொல்லிய, முதற் பாவலர் ஒப்பார் - திருவள்ளுவரை யொப்பவர்,

எப்பாவலரினும் - எவ்வ

கைப்பட்ட பாவலருள்ளும், இல் - இல்லை, எ-று.

தம்மாலே சொல்லப்பட்டவற்றில் வழுவுறுமையால் தப்பா என்றும், பொருளுணர்தற்கே யன்றி ஓதுதற்கும் எளிதன்றுதலின் அரு என்றும் விசேடணஞ் செய்யப்பட்டது எப்பாவலரினுமில் - இதற்கு முன்னுரைக்கப்பட்டபடியே கொள்க. முதற்பாவலர் - முதன்மையையுடைய பாவலர்; நால்வகைப் பாக்களில் வெண்பாக்களும் அவற்றுள்ளும் குறள்வெண்பாவும் தலைமைபெற்று நிற்றலின், அக்குறள் வெண்பாவால் நூல்செய்த வல்லமையுடையாரென்றுமாம். புலமையிலே நாயனாருக்கு ஒப்பின்மை சொல்லிய படி.

கீரந்தையார்.

19. தப்பா முதற்பாவாற் றுமாண்ட பாடலினுள்
முப்பாலி னுதபான் மொழிந்தவ—ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

(இ-ள்.) எப்பாலும் வை வைத்த கூர்வேல் வழுதி - எவ்விடத்திலும் கூர்மைவைத்த சிறப்புப்பொருந்திய வேலையுடைய பாண்டியராசன், மனமகிழ - மனங்களிக்க, தப்பா - (சொல்லப்பட்ட பொருள்) வழுவாமல், முதற்பாவால் - முதன்மையுடைய பாவாகிய குறள் வெண்பாக்களாலே, தாம் மாண்ட பாடலினுள் - தாம் மாட்சிபெற்ற பாடற்றொழிலினுலே, முப்பாலின் - மூன்று பால்களிலே, நாற்பால் - (அறமுதலிய) நான்கு பகுதிப் பொருள்களையும், மொழிந்தவர் - திருவாய்மலர்ந்தவர், தெய்வத் திருவள்ளு



வர் - தெய்வத்தன்மை பொருந்திய திருவள்ளுவநாயனர், எ-று.

கூர்-சிறப்பு. நான்கனுள் மூன்றடங்குவதன்றி மூன்றனுள் நான்கடங் காமையின், வியந்து கூறப்பட்டதாயிற்று. நூல்செய்த சிறப்பும் அதனுல் அரசனை மகிழ்வித்தமையும் சொல்லியபடி.

சிறுமேதாவியார்.

20. வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய மூப்பத்து

மூன்றொன்றூழ்—கூடுபொரு

வெள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்

வள்ளுவர் சொன்ன வகை.

(இ-ள்.) வள்ளுவர் சொன்ன வகை -

திருவள்ளுவராலே சொல்லப் பட்ட திருக்குறளின்

அதிகாரவகை, பாயிரம் நான்கு—பாயிரம் நான்கதிகா

ரத்தை யுடையது, அறம் முப்பத்து மூன்று—அறம் முப்பத்து மூன்றதிகாரத்தை யுடையது, ஊழ் ஒன்று—ஊழ் ஓரதிகாரத்தை யுடையது, பொருள் எழுபது—பொருள் எழுபததிகாரத்தை யுடையது, இன்பம் இருபதிற்றைந்து—காமம் இருபத்தைந் ததிகாரத்தை யுடையது, எ-று.

அறத்துப்பாலுளடங்காது அதனை விட்டு நூற்கெல்லாம் பொதுவாய்

நிற்றலின் வீடொன்று பாயிரம் என்றும், இம்மை மறுமை வீடுமூன்றும் பயத்தற் சிறப்பிற்றாய் மூன்றனுண் முதனிற்றலின் விளங்கறம் என்றும், யாவர்க்கும் பொதுப்படநாடித் தொகுக்கப்பட்ட அறத்தின் கூறுபாடு இவையே யாகலின் நாடிய முப்பத்துமூன்று என்றும், முன்னின்ற அறமும் பின்னின்ற இன்பமும் கைகூடுதற்குத் துணையாய் நிற்றலின் கூடு பொருள் என்றும், அப்பொருளின் பாகுபாடுகளெல்லாம் இவற்றினடங்குதலின் எள்ளிலெழுபது என்றும் கூறினார். எள்ளல் - இகழ்தல். பாயிர நான்கு-பாயிரமானது நான்கதிகாரங்களை யுடையது எனப் பிறவும் விரித்துரைத்துக்கொள்க.சிலபழைய நூல்களிலேசிலவற்றைச்சாதியாரும்சமயத்தாரும் மிகுத்தும் குறைத்தும் வேறுபடுத்தலால் அப்படிப்பட்ட வேறுபாடு

இதற்கும் வரினும் வருமென்று ஆசங்கித்து

இதனதிகாரங்களுக்கு இங்ஙனந் தொகைசெய்தார். பின்

இவ்வாறு தொகை செய்யப்பட்டு வருவன
வற்றிற்கும் இதுவே கருத்தாகக்கொள்க.
தொகை சொல்லியபடி.

மூப்பால்களுக்கும் அதிகாரத்

நல்கூர் வேள்வியார்.

21. உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா
னுத்தா மாமதுரைக் கச்சென்ப——விப்பக்க
மாதா னுபங்கி மறுகில் புலச்செங்காப்
போதார் புனற்கூடற் கச்சு.

(இ - ள்.) உப்பக்கம் நோக்கி - அப்பக்கத்தைக் குறித்து, உபகேசி தோள்மணந்தான் - கப்பின்னைப் பிராட்டியினது தோளை மணந்த கண்ண பிரானை, உத்தா மாமதுரைக்கு-வடமதுரைக்கு, அச்சென்ப-ஆசாரமென்று

சொல்லுவர், இப்பக்கம்—இப்பக்கத்தைதக் குறித்து, மாதானுபங்கி-மாதானு பங்கியெனப்படுகின்ற, மறுஇல் புலம் - குற்றமற்ற புலமையாகியதேனைச் சொரிகின்ற, செந்நாப் போதார் - செவ்விய நாவாகிய மலரையுடையவர், புனல்கூடற்கு , நீர்வளத்தையுடைய தென்மதுரைக்கு, அச்சு - ஆதாரமா வர், எ - று.

உபகேசி யென்பதற்கு நண்டியைபுநோக்கி நப்பின்னைப்பிராட்டி. யென்று பொருளுரைக்கப்பட்டது.

உபகேசி—கூந்தலழகுடையாள். நேமி நாத வுரையாசிரியர் "பாலே தினையே" என்னுஞ் செய்யுளில் "உபகேசி யாவாள்—நப்பின்னைப் பிராட்டியார்" என்றனர். இப்பிராட்டியார் கண்ணன் மனைவியர்களுள் ஒருவர். மாதா அனுபங்கி-மாதாவை நிகராகக் கொண்டு கடக்கின்ற ஒழுங்கினனெனப்படுதலின் அவள் பிள்ளைமேலருள் செய்தல்போல் இவர் உலகத்தார்மேல் அருள்செய்தல் சொல்லப்பட்டதா யிற்று. நாப்போ தென்றதற்கேற்பப் புலமையிலே தேன் ஆரோபிக்கப்பட் டது. அச்சுபோற் றாங்குதலால் அச்சு என்றார். நாயனாலே திங்கட்குடை யுடைச் சீர்சால் வழுதியும் சங்கப்புலவருந் தழைத்தினிதோங்கிய மதுரை க்கு உண்டான சிறப்புச் சொல்லியபடி.

தொடித்தலைவிழுத்தண்டினர்.

22. அறநான் கறிபொரு ளேழொன்று காமத்

திறமூன் றெனப்பகுதி

செய்து—பெறலரிய

நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்

போலு மொழிந்த பொருள்.

(இ - ள்.) அற(த்திறம்) நான்கு - (பாயிரம் இல்லறம் துறவறம் ஊழ் என) அறப்பாலி னுட்பிரிவுகள் நான்கும், அறிபொருள் (திறம்) ஏழ் - (அரசு அமைச்சு அரண் கூழ் படை நட்பு ஒழிபு என) அறியப்பட்ட பொருட்பாலி னுட்பிரிவுகள் ஏழும், ஒன்று-பொருந்திய, காமத்திறம் மூன்று ஏனப் பகுதிசெய்து - (ஆண்பால் பெண்பால் அவ்விருபால் என) காமத்துப்பாலி னுட்பிரிவுகண் மூன்றுமாகப் பகுதிசெய்து, பெறல் அரியனாலும்-பெறுதற்கரிய (அறம் பொருள் இன்பம் வீடு எனப்படுகிற) நான்கு பொருள்களையும், மொழிந்த-சொல்லிய, பெருநாவலரே—, ஒழிந்த பொருள்—(அவற்றுள் அடங்காது) ஒழிந்தபொருள், (உளதாயின் அதனை), நன்கு உணர்வார் போலும் - நன்றாக அறியவல்லவர்போலும், எ - று.

திறமென்றது அறமுதலியவற்றோடுங்

கூட்டப்பட்டது. நாவலரே என்றமையால் பிறரால்

அறியப்படுவதன் றென்றதாயிற்று. மூப்பாலியற்

றொகையும் இவற்றி னடங்காதது ஒன்றில்லையென்பதும் சொல்லியபடி.

வெள்ளி வீதியார்.

23. செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரியா ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரியா ரல்லாதா ரில்.

## 14 திருவள்ளுவமாலை.

(இ - ள்). செய்யா மொழிக்கும் - (ஒருவாலே) செய்யப்படாத மொழியாகிய வேதத்துக்கும், திருவள்ளுவர் மொழிந்த - திருவள்ளுவரால் அருளிச்செய்யப்பட்ட, பொய்யா மொழிக்கும் - (தன்வழியி லொழுகுவோர்க்குப் பயன் விளைவிலே) பொய்படாத மொழியாகிய திருக்குறளுக்கும், பொருள் ஒன்றே—, ஆராயின்-ஆராயுமிடத்து, செய்யா அதற்கு உரி யார் - செய்யப்படாத அவ்வேதமோதுதற்குரியவர், அந்தணரே—, ஏனை இதற்கு உரியார் அல்லாதார் - பொய்படாத இத்திருக்குற ளோதுதற்குரிய வல்லாதவர், இல் - (உலகத்தில்) இல்லை, எ - று.

பூர்வவேதத்தை நித்தியமென்பார் மதம்பற்றிச் செய்யாமொழி என் றார். அது வடமொழியும் இது தென்மொழியுமாய் நின்று சில வேறுபா டெடையனபோற்

ரேன்றினும் நுண்ணுணர்வா ரேக்குவார்க்குக் கருத்து வேறுபடாமையின், பொருளொன்றே எனத் தேற்றேகாரங் கொடுத்துக் கூறினர். செய்யாமொழி, பொய்யாமொழி—அன்மொழித்தொகைகள். இதற்குரியா ரல்லாதா ரில்லென்றதனாலும் பொதுவேதமாத லறிக. அதற்கும் இதற்கும் பொருள் வேறுவென்றும் இதனையோதற் கதிகாரிகளா வார் யாவரோ வென்றும் நிகழ்கின்ற ஐயமொழித்தபடி.

மாங்குடிமருதனார்.

24. ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றே
ருள்ளுந்தோ றுள்ளுந்தோ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(இ-ள்.) வள்ளுவர் வாய்மொழி - திருவள்ளுவரது வாயினின்றுந்

தோன்றிய திருக்குறளினது, மாண்பு - மாட்சியைச் சொல்லின், (அது), ஓதற்கு எளிதாய் - ஓதப்படுதற்கெளிய சொற்களை யுடையதாகியும், உணர்தற்கு அரிது ஆகி - அறியப்படுதற்கரிய பொருள்களை யுடையதாகியும், வேதப்பொருள் ஆய்-வேதமெனப்படுகின்ற பொருளாகியும், மிக விளங்கி-(அவ்வேதத்தின்) மிகவிளங்கி, தீது அற்றோர் - குற்றமற்றோர்கள், உள்ளுதோறு உள்ளுதோறு - நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும், உள்ளம் - (அவர்களுடைய) மனத்தை, உருக்கும் - கரைக்கும், எ - று.

ஓதற்கெளிதாய் எனவே கவின்றேர்க்கினிமை கன்மொழி புணர்த்தல் களும், உணர்தற்கரிதாகி எனவே ஆழமுடைமையும், வேதப்பொருளாய் எனவே விழுமியது பயத்தலும், பிறவுமாகிய அழகுகளி னமைதி சொல்லப் பட்டதாயிற்று. தீநற்றேர் - பொருளாராய்ச்சிக்கேற்ற நுண்ணறிவுடை யோர். உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளமுருக்கும் எனவே முன் காணப்பட் டதினும் பின் காணப்படும் பொருள் சிறந்தும் விரிந்துந் தோன்றுதலுடை மை பெறப்பட்டது. இதனது அற்புதமான குணமுடைமைச் சிறப்புச் சொல்லியபடி.



## எறிச்சலூர்மலாடனார்.

25. பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
துய துறவறமொன் றூழாக - வாய
வறத்துப்பா லுல்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

(இ - ள்.) வள்ளுவனார்—, ஆய்ந்து - (அவ்வேதத்தின் கருத்துக்களை) ஆராய்ந்து, நூலின்திறத்துப்பால் - (தம்மாலே செய்யப்பட்ட) நூலினது திறத்திற்குத்தக்க கன்மையுடைமையால், தேர்ந்து - (இவையே உரியவை யென்று) தெரிந்து, பாயிரம் நான்கு—பாயிரம் நான்கதிகாரமும், இல்லறம் இருபான் - இல்லறவியல் இருபததிகாரமும், துறவறம் பன்மூன்று - துற வறவியல் பதின்மூன்றதிகாரமும், ஊழ் ஒன்று - ஊழ் ஓரதிகாரமும், ஆக ஆய - ஆகக்கூடிய, நால்வகை ஆ - (பாயிரமுதலிய) நால்வகையுடையதாக,

அறத்துப்பால்—அறத்துப்பாலே, உரைத்தார் - கூறினர், எ - று.

மூப்பாற் பொருள்களினும் மூத்திக்குக் காரணமாதற் சிறப்புடைமை யின் தாயதுறவறம் என்றார். துப்பு - நன்மை; அஃது எல்லா வருணச்சிர மங்களுக்கும் பொதுவாயிருக்கை. அறத்துப்பாலிய லதிகாரத் தொகை சொல்லியபடி.

போக்கியார்.

26. அரசிய லலையைந் தமைச்சிய லீரைந்
துருவல் லரணிரண்டொன் றெண்கூ—ழிருவிய
றிண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மினை.

(இ - ள்.) அரசு இயல்—,ஐயைந்து - இருபத்தைந்து, அமைச்சு இயல்—,ஈரைந்து - பத்து, அரண் இரண்டு—,கூழ் ஒன்று—,படை இரு இயல்—,நட்புப்பதினேழ்—,குடிபதின்மூன்று—,எண்பொருள் - எண்ணப் பட்ட பொருட்பாலுக்கு, இவை ஏழாம் - இவ்வியல்களேழாம், எ - று.

இத்தொகைகளோடு அதிகாரமுடையதென்பது கூட்டுக. அரணுக்கு

உருத்திட்பம் சிறத்தலின் உருவல்லாண் என்றும், பொருளுடையார்க்கே ஒளி அமைவதாகலின் ஒண்கூழ் என்றும், படைக்குக் கடும்போரிற் பின்கொடாததிண்மை யுரியதாகலின் திண்படை என்றும் கூறினர். பிற் காலத்தார் அமைச்சுமுதலிய வைந்தனையும் அங்கவியலென ஓரியலாக்கியும் வழங்குப பொருட்பாலிய லதிகாரத்தொகை சொல்லியபடி.கூழ்-பொருள்.

மோசிகீரனார்.

27. ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறுக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றுகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.

178

16 திருவள்ளுவமாலை.

(இ - ள்) ஆண்பால் எழ—, பெண்பால் ஆறிரண்டு—, அடுத்த அன்பு பூண்பால் - (ஒருவரை யொருவர்) அடுத்து அன்பைப் பூணுதற் பகுதி யுடைய, இருபால் - அவ்விருபால், ஓர் ஆறு ஆக—, மாண்பாய காமத்தின் பக்கம் - மாட்சியான காமத்துப்பாலி னியல்கள், ஒரு மூன்று ஆக—, நாமத்தின்-பெயர் பெற்ற, திருவள்ளுவனார்—, கட்டுரைத்தார் நன்கு - நன்கு கூறினர், எ - று.

இவையே பொருளிலக்கணத்துக்கமையக்
களவியல் கற்பியலென வீரண்டாக்கப்பட்டன.
இத்தொகைகளுக்கும் முன்கூறப்பட்டது கொள்க.
காமத்துப்பா லியலதிகாரத்தொகை சொல்லியபடி.

காவிரிப்பூம்பட்டினத்துக்
கார்க்கண்ணனார்.

28. ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனுகி
யந்தா மரைமே லயன்.

(இ - ள்.) அதிகாரம்—, நூறும் ஐயாறு மூன்றுமா—நூற்று முப்பத்து மூன்றுக, மெய்யாய வேதப்பொருள்—, பெய்யாது விளங்க—பொய்யுறுது விளங்கும்படி, அம் தாமரைமேல் அயன் - அழகிய தாமரை மலர்மேல் வீற்றிருக்கின்ற நான்முகக்கடவுள், தான் வள்ளுவன் ஆகி—, உலகிற்குத் தந்தான் - உலகத்தார்க்குத் தமிழிற் செய்துதந்தான், எ - று.

உலகு - இங்கே மக்களை யுணர்த்திநின்றது.

மெய்யாய வேதப்

பொருள் பொய்யாது விளங்கவெனவே இதற்குமுன் மெய்யாய பொருள் பொய்யாய் மறைந்தும், பொய்யாயபொருள் மெய்யாய் விளங்கியும், கிடந்

தமை சொல்லப்பட்டதாயிற்று. அதிகாரத் தொகையோடு நூற்பொருளியல்பு சொல்லியபடி.

மதுரைத் தமிழ் நாயகனார்.

29. எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா
வில்லாத வெப்பொருளு மில்லையாற்—சொல்லாற்
பாந்தபா வாலென் பயன்வள் ளுவனுர்
சுரந்தபா வையத் துணை.

(இ - ள்.) எல்லாப்பொருளும் - (பலவகை நூல்களாலுஞ் சொல்லப்பட்ட) எல்லாப்பொருளும், இதன்பால் உள - இந்நூலகத்தடங்கி யிருக்கின்றன, இதன்பால் இல்லாத எப்பொருளும் - இதனிடத்தில்லாத யாதொருபொருளும், இல்லை - (எந்நூலகத்தும்) இல்லை, (ஆதலால்), சொல்லால் பாந்த பாவால்-சொல்லளவினுலே விரிந்தநூல்களால், பயன் என் - பயன்யாது, வள்ளுவனுர் சுரந்தபா - திருவள்ளுவராலே தரப்பட்ட இந்நூலொன்றே, வையத்துணை - மண்ணுலகத்தாருக்குத் துணையாதலையும், எ - று.



எல்லாப்பொருள்களுமாவன - முதல் வழி சார்பென மூவகைப்பட்ட அறநூல் பொருணூல் இன்பநூல் வீட்டுநூல் என்பவற்றிற் செம்பொருள்

ஆக்கப்பொருள் குறிப்புப்பொருளென இம்மூவகையாற் கொள்ளக்கிடந்த

காட்சிப்பொருள்களும் கருத்துப்பொருள்களுமாம்.

தொழிலும் பண்பும்

ஒரோவழிப் பொருளெனற் கேற்புடைமையின், அனையும் இவற்றுள் அடங்குமாறறிக. பின்னும் அதனை வலியுறுத்தற்கு இதன்பாலில்லாத வெப்பொருளுமில்லை என்றார். சொல்லாற்பாந்த எனவே அனைபொருளாற் பாப்பின்மை பெறப்பட்டது. பாத்தல் - பதினுயிரம் நூறுயிரமுதலிய கிரந்தவளவையால் விரிதல். சொல்லாற் பரந்தநூல்களை ஆய்வோர் மலையகழ்ந்து எலிபிடித்தல்போல மிகவருந்திச் சிறுபயன் கொள்ளுதலால் என்பயன் என்றார். ஆல் - அசை. பா, வையம் ஆகுபெயர்கள். சின்னுட் பல்பிணிச் சிற்றறிவுடையோர்க்கு விதிவிலக்குகள் முற்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்டுதெளியுமாறு உணர்த்தித் தமோற்றந்தீர்த்தலின், வையத்துளை என்றார். முற்றெருருங்குணாவிழைவார்க்கு இஃதின்றியமையாச் சிறப்பிற்றென்றபடி.

## பாரதம்பாடிய பெருந்தேவனார்.

30. எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு—மூப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப்
பண்டைமறை நேர்வனமற் றில்லை நிகர்.

(இ - ள்.) பாரதம்சீ ராம கதைமனுப் பண்டைமறை நேர்வன - பாரதம் பழைய சீராமகதையையும் மனுஸ்மிருதி பழைய வேதத்தையும் ஒப்பனவாகும், எப்பொருளும்-எவ்வகைப்பட்ட பொருள்களையும், யாரும்-எவ்வகையோரும், இயல்பின் - (அவற்றின்) தன்மையோடு, அறிவுற - அறிய, செப்பிய - (அவர்க்குச்) சொல்லும்படிக்கு, வள்ளுவர் செப்பவரு - திருவள்ளுவர் சொல்லுதலால் வந்த, மூப்பாற்கு - திருக்குறளுக்கு, நிகர் - உவமானமாகத்தக்கது, இல்லை - ஒன்றில்லை, எ - று.

மற்று - அசை. அறிதற்கரிய வேதாந்தப்பொருளு மென்றற்கு எப்

பொருளும் என்றும், உயர்குலத்தாரே யன்றி எனையோருமென்றற்கு யாரும் என்றும், ஐயந்திரிபின்றி யறியவென்றற்கு இயல்பினறிவுற என்றும், இதுவே சுருதி குரு விரண்டுமாமென்றற்குச்செப்பிய என்றும் கூறினர். பண்டையென்பது சோம கதைக்குங் கூட்டுக. கதாரூபமாயிருந்து பாரத ராமாயண மெனவும், விதிரூபமாயிருந்து சுருதி ஸ்மிருதி யெனவும் கூட்டிச்சொல்லப்படுதலால், உவமான உவமேயங்களாதலறிக. எப்பொரு

---

† பாரதமும் சோம கதையும் மனுதரும சாஸ்திரமும் பழையவேதமும் மூப்பாலுக்கு ஒப்பாவனவாம்; வேறு நூல்கள் ஒப்பாதலில்லை என்று பொருள் கூறுவாரு முண்டு.



ளும் யாருமியல்பினறிவுறச் செப்புதல் வேதத்திற் கின்மையால், மூன் மூப்பாலின் மிக்கமொழி என்ற அதனைப் பெறப்பட்ட வேதத்தினெப்பு மையை மறுத்தபடி.

உருத்திரசன்மகண்ணனார்

31 மணற்கிளைக்க நீரூறு மைந்தர்கள்
வாய்வைத்
துணச்சுரக்குந் தாய்முலை
யொண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் மூப்பான்
மதிப்புலவோர்க்

காய்தொறு மூறு மறிவு.

(இ - ள்.) மணல் கிளைக்க - மணலைத்தோண்டுந்தோறும், நீர் ஊறும்-நீர்பெருகும், மைந்தர்கள் வாய் வைத்து உண - புதல்வர்கள் வாய்வைத்து உண்ணுந்தோறும், தாய் முலை-தாயினது முலைக்கண், ஒள் பால் சுரக்கும் - நல்லபால் பெருகும், (அவைபோல), பிணக்கு இலா வாய்மொழி - பிணங்குதற்கு ஏதுவில்லாத வாய்மைச்சொல்லையுடைய, வள்ளுவர் மூப்பால் - திருவள்ளுவரது திருக்குறளை, ஆய்தொறும் - ஆராயுந்தோறும், மதிப் புலவோர்க்கு-அறிவுடைய புலவர்க்கு, அறிவு ஊறும்-அறிவு வளரும்,எ-று.

கற்பிதமாகிய சாதிசமயங்களின் மானம்பற்றி உள்ளதை இல்ல தாகவும், இல்லதை உள்ளதாகவும், சிறிதைப் பெரிதாகவும் பெரிதைச் சிறிதாகவும், தீயதை நல்லதாகவும் நல்லதைத் தீயதாகவும் புனைந்து பிறர் பிணங்கும்படி சொல்லப்பட்ட தல்லாமையால், பிணக்கிலாவாய்மொழி என்றார். மதிப்புலவோர்க்கறிவூறும் எனவே அவர் அவ்வறிவைக்கொண்டு பிறர்க்கெல்லாம் விதிவிலக்குகளைக் கற்பித்தல் வேண்டுமென்றதாயிற்று. இதனைச் சிலகாற் பயிறலினமையாது பலகாலும் பயிற்சி செயல்வேண்டு மென்றபடி.

பெருஞ்சீந்தலார்.

32 எதமில் வள்ளுவ ரின்குறள் வெண் பாவிலு
லோத்ய வொண்பொரு ளெல்லா—முரைத்ததனாற்

றுதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த

வேதமே மேதக் கன.

(இ-ள்.) தாது அவிழ் தார் மாற - பொடியொடு விரிந்த பூமாலையையுடைய பாண்டியராசனே, ஏதம் இல் வள்ளுவர் - குற்றமில்லாத திருவள்ளுவர், இன்குறள்வெண்பாவினால் - இனிய குறள்வெண்பாக்களாலே, ஓதிய - (நான்குவேதங்களாலுஞ்) சொல்லப்பட்ட, ஒள்பொருள் எல்லாம் - ஒள்ளிய பொருள்களையெல்லாம், உரைத்ததனால் - சொல்லினமையால், மேதக்கன - மேம்பாட்டுக்குத்தக்கனவு, தாமே - அக்குறள் வெண்பாக்களோ, தமைப்பயந்த வேதமே - (மூதனூலாய் நின்று) அவற்றைப்பயந்த வேதங்களோ, (நீ சொல்லாயாக), எ - று.

## திருவள்ளுவமாலை.

19

தாம் தம்மை எனப்பட்டவை அவை அவற்றை என்னும் பொருளைத் தந்து நின்றன. ஏகாரம் இரண்டும் விஞ். பிறநூலாசிரியர்க்கெல்லாம் அவ ரெதிரிகளாலே மறுக்கப்பட்டு வருங் குற்றம்போல்வது இவர்க்கு இல்லை யென்றற்கு ஏதமில் வள்ளுவர் என்றும், தாங்குறியவாய் நின்று கற்போர்க்கு வருத்தம் விளையாமைபற்றி இன்குறள் என்றும், உணர்வுடையோராலே விரும்பப்பட்ட கற்குண முடைமைபற்றி ஒண்பொருள் என்றும்

கூறினர். நூலாசிரியர்க்கும், நூலுக்கும், நூனுதலிய பொருளுக்கும், தகுதிதோன்றச் சொல்லப்பட்ட விசேடணகுணங்களாலே இவ்வேதம் அவ்வேதத்தினுஞ் சிறப்புடைமை குறிப்பித்தபடி.

33 இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநூன்-மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

(இ - ள்.) இன்பம்

பொருள் அறம் வீடு என்னும் இந்நான்கும்-இன்ப முதலிய இந்நாற்பொருளியல்புகளையும், மன்பதைகட்கு - மக்கட்பரப்புக்கு, முன் - அக்காலத்தில், அறியச்சொன்ன - அறியும் வண்ணஞ் சொல்

லிய, முதுமொழிநூல் - பழமொழி வேதமானது, உள்ள அரிதென்று-ஓதி யுணரப்படுதற் கரிதென்று, வள்ளுவர்—, அவை - அவற்றை, உலகம் கொள்ள - உலகத்தார் எளிதினுணரும்படி, குறள் - திருக்குறளை, மொழிந்தார் - சொல்லினர், எ - று.

முன்பறிய எனவே உற்சர்ப்பிணியாகலின் அக்காலத்தோர்க்கு உணர்தற்கேற்ற ஆயுணீட்சியும் உணர்வுவலியும் இருந்தனவென்பதூஉம், அவசர்ப்பிணியாகலின் இக்காலத்தோர்க்கு அவையிலவென்பதூஉம், பெறப்பட்டன. இவ்விரண்டையும் அவாவறுத்தன் மூன்றும்பாட்டுரையிற்காண்க. தேயவழக்கிற்படாததும் வருந்திக்கற்போர்க்கு மாத்திரம் புலப்படுவதுமாய் எல்லாமொழிகட்கு முற்பட்டுக் கடவுண்மொழியாய் நிற்றலின், முதுமொழி என்றார். அற முதலிய நான்கும் பிரிவுபட்டுத் தோன்றுமையையுடையதாகலின் உள்ளவரிதாயிற்று. பழையவேதமுளதாகவும் வேறிது சொல்லுதற்குக் காரணமுணர்த்தியபடி.

34 புலவர் திருவள் ளுவான்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்ப—னிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை
மற்றுங்
கறங்கிருண்மா லைக்கும் பெயர்.

(இ - ள்.) பூமேல் - பூவுலகின்கண்ணே, புலவர் திருவள்ளுவான்றி - புலம்மொனத் திருவள்ளுவனையன்றி, சிலவர் புலவரெனச் செப்பல்- வேறு

20 திருவள்ளுவமாலை.

சிலரையும் புலவரென்று சொல்லுதல், மாலை - மாலையென்பது, நிலவு பிறங்கொளிமாலைக்கும் பெயர் - நிலவால் விளங்குகின்ற அந்திக்கும் பெயராக, மற்றும்—,கறக்கு இருள்மாலைக்கும் பெயர்-சூழ்கின்ற விருளையுடைய அந்திக்கும் பெயராக, செப்பல் - சொல்லுதல்போலும், எ - று.

செப்பல் என்றது பின்னுங் கூட்டப்பட்டது.

புலமையாவது பல

வேறுவகைப்பட்ட நூலுணர்ச்சிகளே யெல்லாம் ஒருங்கேகொண்ட போறி வுடைமையாம். உயர் வொப்பற்ற இவரது புலமையைக்குறித்து நோக் குங்கால் ஏனையோர் புலமை புலமையன்றுய் முடிதலின், இவ்வாறு கூறி னர். புலவரென்பது நாயனுர்க்கே காரணப்பெயரா மென்றபடி.

மதுரைபறுவைவாணிகர் இளவேட்டனர்.

35 இன்பமும் துன்பமு மென்னு மிவையிரண்டு
மன்பதைக் கெல்லா மனமகிழ—வன்பொழியா
வுள்ளி யுணர வுரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து.

(இ-ள்.) இன்பமும் துன்பமும் என்னும் இவை - (பின்வரக்கடவன வாய) சுகமுந் துக்கமுமென்னப்பட்ட விவற்றினுடைய, இரண்டும் - இரு வகைக் காரணங்களையும், உள்ளி உணர - ஆராய்ந்தறியவும், அன்பு ஒழி யாது - (தம்மேல்) அன்பு நீங்காமல், மனம் மகிழ - உள்ளங்களிகூரவும், மன்பதைக்கு எல்லாம் - மக்கட் பரப்புக்கெல்லாம், ஓது சீர் வள்ளுவர் - புகழப்படுஞ் சீரையுடைய திருவள்ளுவர், வாயுறைவாழ்த்து - வாயுறை வாழ்த்தாக, உரைத்தார் - (திருக்குறளைச்) சொல்லினர், எ -

று.

இன்பத்தின் காரணம் விதிக்குறளாலும், துன்பத்தின் காரணம்
விலக்குக் குறளாலும் சொல்லப்பட்டன. முன்பறிதற்குப்பயன் அவற்றைச் செய்தலும் தவிர்தலுமாம். வேண்டுவனவெல்லாந் தொகுத்துணர்த்தலின் மனமகிழ்தல் சொல்லப்பட்டது. அவ்வேதம்போலாது பலர்க்கும் உபயோகியாகச் சொல்லலின் மன்பதைக்கெல்லாம் என்றார். வாயுறைவாழ்த்தி னியல்பு "வாயுறை வாழ்த்தே வயங்க நாடின், வேம்புங் கடுவும் போல வெஞ்சொற், றாங்குத லின்றி வழிநனி பயக்குமென், றோம் படைக் கிளவியின் வாயுறுத் தற்றே" என்னுஞ் தொல்காப்பியச் சூத்திரத்
தாலறிக. எதிர்கால விளைவுணர்ச்சி பயத்தல் சொல்லியபடி.

கவிசாகரப்பெருந்தேவனார்.

36

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனத
மாவிற் கருமுனியா யானைக் கமரரும்ப
றேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

(இ-ள்.) பூவிற்குத் தாமரை - மலர்களுக்குள்ளே தாமரை மலரும், பொன்னுக்குச் சாம்புனதம்-பொன்களுக்குள்ளே சாம்புனதப் பொன்னும்,

ஆவிற்கு அருமுனி ஆ - பசுக்களுக்குள்ளே காமதேனுவும், யானைக்கு அமர் உம்பல் - யானைகளுக்குள்ளே ஐராவதமும், தேவில் திருமால் என - தேவர்களுக்குள்ளே திருமாலும் போல,

பாவிற்கு வள்ளுவர் வெண்பா - நூல்களுக்குள்ளே திருவள்ளுவாது குறள் வெண்பா, சிறந்தது—,என்ப - என்று (அறிவுடையோர்) சொல்லுவர்,எ-று.

எ-அசை பா-ஆகுபெயர். பொன்—ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம்,

சாம்புனதம் என நால்வகைப்படும். காமதேனு வசிட்டமுனியிடத் துள்ள

தாகலின் அருமுனியா என்றார். உவமான முகத்தால் இது பல நூல்களி னும் சிறந்து நிற்கின்ற மாட்சிமை சொல்லியபடி.

மதுரைப்பெருமருதனார்.

37. அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப
தின்பத்
திறமிருபத் தைந்தாற்
றெளிய—முறைமையால்
வேத விழுப்பொருளே வெண்குறளால் வள்ளுவனு
ரோதவுழுக் கற்ற துலகு.

(இ-ள்.) அறத்திறம் - அறத்தின் கூறுபாடு, முப்பத்தெட்டால் - முப்பத்தெட் டதிகாரங்களாலும், பொருள் திறம்-பொருட்கூறுபாடு, எழுபதால்-எழுபது அதிகாரங்களாலும், இன்பத்திறம்-காமத்தின் கூறுபாடு, இருபத்தைந்தால் - இருபத்தைந் ததிகாரங்களாலும், தெளிய-தெளியும் பொருட்டு, முறைமையால் - (காரணகாரிய) ஒழுங்கால், வேத விழுப் பொருளே-வேதத்தினுயர்வாகிய பொருளே, வெண் குறளால்-குறள் வெண் பாக்களால், வள்ளுவனுர்—, ஓத்-ஓதலால், உலகு-உலகமானது, வழுக்கு அற் றது-வழுவுதலினின்றும் நீங்கிற்று, எ-று.

திறமும் ஆலும் முன்னுங் கூட்டப்பட்டன. உயர்வாகிய பொருள்—கருமகாண்டம் பிரமகாண்ட மிரண்டினுள்ளுஞ் சிறந்த பொருள். வழுக்கு தல்—விதியை விலக்கென்றும் விலக்கை விதியென்றும் கோடல். உலகு—

மக்களே யுணர்த்தி நின்றது. துணிவுபற்றி அற்றது என இறந்தகாலத்தாற் கூறினுர். முன்னதின் வேறுபட்ட முப்பால்களி னதிகாரத்தொகைக ளோடு உலகிற்கு வினையும் நன்மை சொல்லியபடி.

கோவூர்கிழார்.

38. அறமுத லுன்கு மகலிடத்தோ ரெல்லாந்

திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பால்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.

(இ-ள்.) அறமுதல் நான்கும்—அறமுதலிய நான்கு பொருளையும், அகல் இடத்தோர் எல்லாம் - பாந்த மண்ணுலகத்தி லுள்ளோரெல்லாம், திறமுறத்தேர்ந்து - வகைப்பட ஆராய்ந்து, தெளிய-கலக்கந்தீர, குறள்



வெண்பாப் பன்னிய - குறள்வெண்பாக்களாலே சொல்லிய, வள்ளுவனார்- நாயனாரது, பால்முறை - மூப்பால்களையுடைய புத்தகத்தின் கண்ணே, முன்னை முதுவோர்மொழி - முற்காலத்துள்ள பெரியோரது நூல், நேர் ஒவ்வாது - நேர்தல் பொருந்தாது, எ - று.

மொழி—ஆகுபெயர். பெரியோராவார்—வடமொழியிலும் தென் மொழியிலும் பிறமொழிகளிலும் நூல்செய்த முனிவரும், புலவரும், பிற ரும். அந்நூலாவது மனு முதலியோராலே செய்யப்பட்ட அறநான்முதலி யனவாம். இதன் புத்தகத்தில் முன்னூல்களி லொன்றும் சேர்க்கப்படு தற்குத் தகுவதன்றென்று சொல்லியபடி.

உறையூர் முதுகூற்றனார்.

## 39. தேவிற் சிறந்த திருவள்

ருவர்குறள்வெண்

பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார்—நாவிற்
குயலில்லை சொற்சுவை போர்வில்லை

மற்றுந்

செயலில்லை யென்னுந் திரு.

(இ-ள்) தேவில் சிறந்த திருவள்ளுவர் - தெய்வத்தன்மையாற் சிறந்த திருவள்ளுவரது, குறள் வெண்பாவில் சிறந்திடு - குறள் வெண்பாக்க ளோடு கூடிச் சிறந்து தோன்றுநின்ற, முப்பால்-முப்பால்களையும், பகரார்-

ஓதாரது, நாவிற்கு-வாக்கிற்கு, உயல் இல்லை-(இன்சொற்சொல்லி) வாழ்த லுண்டாகாது, சொல் சுவை ஓர்வில்லை-(மனத்திற்குச்) சொற்களின் சுவை யை அறிதலுண்டாகாது, மற்றும்-இவையன்றியும், செயல் இல்லை-(காயத் துக்கு) நல்லசெய லுண்டாகாது, என்னுந்திரு-என்று நினைத்துத் திருமகள் அவரிடத்துச் சோாள், எ-று.

சுவையோர்தற்கும் செயலுக்கும் உரிய மனமும் காயமும் வருவிக்கப் பட்டன. திருமகள் சோாமையாகிய காரியத்தைக் காரணமாக உபசரித் தார். ஓதார்க்குளவாகாமை கூறவே ஓதுவோர்க்கு அவை யுளவாகலின் வாக்கிற்குக் கடுஞ்சொல் பொய் கோள் புறங்கூறல்களும், மனத்திற்குப் பிறனில்விழைதல் பிறன்பொருள்விழைதல் பிறன் பொருட்குக்கேடெண் ணல் பிறவுயிர்க்கிறுதி யெண்ணல்களும், காயத்திற்குப் பிறன்மனைபுணர் தல் உயிர்க்கொலைசெய்தல் பழியுணுணல் பிறர்பொருள் வௌவல்களும் ஆகிய குற்றங்களெல்லாம் நீங்குமென்பதும் பெறப்பட்டது. அறவின்பங் கட்குக் காரணமாதற் சிறப்பையுடைய பொருட்பேறு இஃதோதலின் உளதா மென்றபடி.

40. இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற—மும்மையின்
வீடவற்றி னுன்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடினர் நின்குறள்வெண் பா.



(இ-ள்.) இம்மை மறுமை இரண்டும் - இகபரங்கட்காவன விரண்டை
யும், எழுமைக்கும் - (விணைப்பயன் தொடர்தற்குரிய) எழ்பிறப்பிற்குமாக, செம்மை நெறியின்-செவ்வையான வழியால், தெளிவுபெற - (யாவரும்) தெளிவு பெறவும், மும்மையின் - (அறம்பொருளின்பமென்னு) மூப்பால்
களுள், அவற்றின்-அம்மூப்பாற்களோடு, வீடு-வீடுமாகிய, நான்கின்விதி -

நாற்பொருள்களது விதிகளும்,
வழங்க-வழங்கவும்,வள்ளுவனார்-,இன்குறள்
வெண்பா-இனியகுறள் வெண்பாவை, பாடினார்-,எ-று.

செவ்வையானவழி—விதியும், பத்தியும், ஞானமும், நோயாளிக்கு
மருந்தும் அனுபானமும் பத்தியமும்போல
ஒன்றற்கொன்று முறணுறாது
கூடிநிற்கும்வழி. வீட்டுவிதியைத் துறவறத்திற்காண்க.
இம்மை,மறுமை,
வீடு மூன்றும் பயக்குமாறு சொல்லியபடி.

செயிர்க்காவிரியார்மகனார் சாத்தனார்.

41. ஆவனவு மாகா தனவு மறிவுடையார்
யாவரும் வல்லா
ரொத்தியம்பத்—தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே
செய்வார்
பொருவி லொழுக்கம்பூண் டார்.

(இ - ள்.) (மக்களுக்கு) ஆவனவும் - ஆவனவற்றையும், ஆகாதனவும்- ஆகாதவற்றையும், அறிவுடையார் யாவரும்—,எடுத்து இயம்ப-(இனி இதிலிருந்து) எடுத்துச் சொல்லுதற்கு, வல்லார் - வல்லவராவார், (ஆதலால்), தேவர் திருவள்ளுவர் - தேவராகிய திருவள்ளுவராலே, செப்பியவே- சொல்லப்பட்டவற்றையே, பொருவில் ஒழுக்கம் பூண்டார் - ஒப்பில்லாத ஒழுக்கத்தை மேற்கொண்டவர், செய்வார்—,எ - று.

இங்ஙனங் கூறவே,அவ்வேதத்திலிருந் துள்ளவா றெடுத்துச் சொல்லுதல் அறிவுடையார்க்கு முடியாமையால் ஒழுக்கம் பூண்டார்க்கு அதன்கண்ணே சொல்லப்பட்டபடி வழுவாமற் செய்தல் கூடாமை காட்டப்பட்டது. தாம், உம்—அசைகள். ஆவன - இன்பத்தைத் தருவன; ஆகாதன- துன்பத்தைத் தருவன. ஒப்பில்லாத வொழுக்கம்-கொல்லாமை முதலியன. போதகாசிரியர்க்கும், கேட்டொழுகுவோர்க்கும் வரும்கன்மை சொல்லியபடி.

செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்.

42. வேதப் பொருளை விரகால் விரித்துலகோ
ரோதத் தமிழா லுரைசெய்தா—ராதலா
லுள்ளுந ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

(இ-ள்.) வேதப்பொருளை—,உலகோர்ஓத - உலகத்தார் ஓதியுணரும் பொருட்டு, விரகால் - உபாயத்தால், விரித்து—,தமிழால் உரைசெய்தார்— தமிழ்மொழியினாலே சொல்லி யருளினர், ஆதலால்—,உள்ளுநர் உள்ளும் பொருள் எல்லாம்-நினைப்பவர் நினைக்கும்பொருள்களெல்லாம், வள்ளுவர்



## திருவள்ளுவமாலை.

வாய்மொழி மாட்டு-திருவள்ளுவர் திருவாயிற் பிறந்த திருக்குறளின்கண் ணே, உண்டு என்ப - உண்டென்று

(அறிவுடையோர்) சொல்லுவர், எ-று.

உபாயத்தால் விரித்தல் - சொற்சுருக்கத்தால் ஒதற்கெளிதென மன வெழுச்சி யுண்டாக்கிக் கற்போரது அறிவளவிற் கேற்கப் பொருளளவு விரியவைத்தல். நினைக்கப்படும் பொருள்களெல்லாம் இதன்கண்ணே இக் காரணத்தால் தோன்றுநின்றனவென்று கூறியபடி.

**வண்ணக்கஞ்சாத்தனார்.**

13. ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந்
திதனினிது
சீரிய தென்றுன்றைச்
செப்பரிதா—லாரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு
வள்ளுவனு
சோது குறட்பா வுடைத்து.

(இ-ள்.) ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து—வடமொழியையுந் தென் மொழியையு மாராய்ந்து, இதனின் இது சீரியது என்று-இதைக்காட்டிலும் இது சிறப்புடையதென்று, ஒன்றைச் செப்ப அரிது-ஒன்றைத் தெரிந்து

சொல்லுதல் கூடாது, ஆரியம்-வடமொழி, வேதமுடைத்து—, தமிழ்—, திருவள்ளுவனார் ஓது குறட்பா உடைத்து—, (ஆதலால்), எ - று.

ஆல்-அசை. வடமொழியும் தென்மொழியும் பிறமொழிகள் போலாது பாணினியாரும் அகத்தியனாரு முதலாகிய முனிவர்களாலே செய்யப்பட்ட இலக்கண நூல்களாலே சீர்திருந்தி நிற்றல் முதலிய குணங்களுடைமையாலும், அது பிராகிருத முதலியவற்றுக்குப் போல இஃது ஆந்திர முதலியவற்றுக்கு முதலாய் நிற்றலாலும், ஒன்றற்கொன்று குறைபாடுடையதன்றேனும், வேதமுடைமைபற்றி வடமொழிக்குச் சொல்லப்பட்ட உயர்வு தென் மொழிக்கண்ணே திருக்குறள் உண்டாதலின் இனி யில்லையென்றற்கு இதனினிது சீரியதென் றொன்றைச் செப்பரிது என்றார். இத்திருக்

குறளாலே வடமொழியோடு தென்மொழிக்கு படி.

ஒப்புமைநிறைவு சொல்லிய

களத்தூர்க் கிழார்.

44. ஒருவ ரிருகுறளே முப்பாலி னெதுந்
தரும முதலென்குஞ் சாலு—மருமறைக
ளோந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்.

(இ - ள்.) அருமறைகள்

ஓந்தும் - (இருக்குமுதற் பாரத மீறுகிய)

அரிய வேதங்களைந்தும், சமயநூல் ஆறும் - (அவ்வேதத்தின் வழிப்பட்ட) சமயநூல்களாறும், நம் வள்ளுவனர்-நம்முடைய திருவள்ளுவரால், புந்தி மொழிந்தபொருள்-(உலகத்தார்க்குப்) புத்தியாகச் சொல்லப்பட்ட நூலி



லடங்கும்,(ஆதலால்),ஒருவர்—,இருகுறளே.(ஒருவிகற்பமும்இருவிகற்பமுமாகிய)இருவகைக் குறள்களையுமே, முப்பாலின் - முப்பால்களில், ஓதும் - அத்தியயனஞ்செய்து அறியப்படுகின்ற, தருமம் முதல் நான்கும்-அறமுதலிய நாற்பொருள்களும், சாலும் - (அவருக்குப்)போதும், எ - று.

ஒருவனுக்கே ஐந்தும் ஓதியுணர முடிவுபோகாது வேறுவேறுன அதி காரிகளுடைமைபற்றி அருமறைக ளைந்தும் என்றார். சமயநூலாறினையும்

ஒன்றே பொருள் என்னும் பாட்டுரையிற்காண்க. நமக்கெல்லாம் அறிவொழுக்கங் கொளுத்தி நல்வழிப்படுத்தவந்த பரமாசாரியர் இவரேயென்னு மரிமை தோன்றற்கு நம் வள்ளுவனர் என்றார். மறைகளைந்துஞ் சமயநூலாறும் வள்ளுவனர் புந்திமொழிந்த பொருள் எனலால், அவை பலவற்றினும் வேறு வேறுவகைப்பட்டுச் சிறந்துநின்ற கருத்துக்களெல்லாம் இவ் வொரு நூற்கண்ணே அடங்கி நிற்கின்றமை சொல்லப்பட்டதாயிற்று. பொருள் - ஆகுபெயர். ஒருவரெனப் பொதுப்படக்கூறலால் இ த னை யோதுதற்குப் பெண்பாலாருக்கும் அதிகாரமுண்டென்பது கொள்ளப்பட்

டது. இவ்வொரு நூலோதி யுணர்ந்தோர் அருமறைக
ளைந்துஞ் சமய
நூலாறும் ஓதியுணர்ந்தோராவ ரென்றபடி.

நச்சுமனார்.

45. எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ண—மிழுக்கின்றி
யென்றெவர் செய்தன வெல்லா மியம்பின
வின்றிவ ரின்குறள்வெண் பா.

(இ - ள்.) எழுத்து அசை சீர் அடி சொல் பொருள் யாப்பு வழுக்கில் வனப்பு அணி வண்ணம் - எழுத்து முதல் வண்ணமீறுகச் சொல்லப்பட்ட இவற்றுள், இழுக்கு இன்றி - வழுவுதலில்லாமல், என்று எவர் செய்தன - எக்காலத்தில் எவரால் எவை செய்யப்பட்டன, எல்லாம் - (அவை) எல்லாம், இன்று இவர் இன் குறள்வெண்பா - இக்காலத்து இத்திருவள்ளுவ ராலே செய்யப்பட்ட இவ்வினிய குறள்வெண்பாக்களில், இயம்பின-சொல்லப்பட்டன, எ - று.

வனப்பு—அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு. அணி—சொல்லணி, பொருளணி, ஒலியணி. வண்ணம்-குறிலகவற்றூங்கிசை வண்ணமுதலியன. ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு பாவலர் ஒவ்வொரு குணத்திலுலே சிறந்து விளங்க நூல் செய்தனர். இவரோவெனின் எல்லாக்குணங்களாலும் நிறைந்து சிறந்து விளங்கச்செய்தமையின், இவ்வாறு கூறினர். இதன் பாக்களின் சிறப்புச்சொல்லியபடி.

46. கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணி
னிலைநிரம்பு நீர்மைத் தெனினும்—தொலைவிலா

26 திருவள்ளுவமாலை.

வானூர் மதியந் தனக்குண்டோ
வள்ளுவர்முப்

பானூ னயத்தின் பயன்.

(இ-ள்.) (மதியமும் முப்பானூலும்), கலை - பதினாறுகலைகளாலும் அறுபத்துநான்கு கலைகளாலும், நிரம்பி - நிறைந்து, காண்டற்கு - நோக்குதற்கு [ஆராய்ச்சி செய்தற்கு], இனிதாகி—, கண்ணின் நிலை - முகக் கண்ணினிலையில் (அகக்கண்ணி னிலையில்), நிரம்பு - நிரம்புகின்ற, நீர்மைத்து எனினும் - தன்மையுடையதாயினும் [குணமுடையதாயினும்], வள்ளுவர் முப்பால் நூல் - திருவள்ளுவரது முப்பானூலினது, நயத்து - நயத்தால் விளைவதாகிய, இன் பயன் - இனிய பயனைனது, தொலைவு

இலா வான் ஊர் மதியம் தனக்கு - ஒழிவின்றி ஆகாயத்தின்கண்ணே திரிகின்ற மதியினிடத்து, உண்டோ--,எ - று.

மதியந்தனக்கென்பது வேற்றுமை மயக்கம். ஓகாரம்—எதிர்மறை. ஆதாரமாகக் கொள்ளுதற்கு எற்புடையதல்லாத வானை ஆதாரமாகக் கோடலினிழிவுதோன்றத் தொலைவிலா வானூர் மதியம் என்றார். நயம்—மறுப்படாமை, மழுங்காமை, குறைவுறுமை முதலியன. பயன்—இம்மை மறுமை வீட்டின்பங்கள். ஒப்புமை சொல்லுதற்கு நூல்களில் ஒன்றும் இன்மையால் ஏனைப்பொருள் பலவற்றினுஞ் சிறந்த மதியையாயினுஞ் சொல்லுது மெனப்புகின், அதுவும் இதனால் தகுவதன்றென்றபடி.

நப்பாலத்தனார்.

47. அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு--குறும்பாவா

வள்ளுவனு ரேற்றினார் வையத்து வாழ்வார்க
ளுள்ளிரு ளீக்கும் விளக்கு.

(இ - ள்.) அறம்--,தகளி - அகலும், பொருள்--,திரி - திரியும், இன்பு--,நெய் - நெய்யும், செஞ்சொல்--,தீ - நெருப்பும், குறும்பா-குறட்பா, தண்டு - தண்டும், ஆ - ஆக, வள்ளுவனார்--,வையத்து வாழ்வார்கள் - பூமியின்கண்ணே வாழ்வோரது, உள் இருள் - அகத்திருளை, நீக்கும்-ஒழிப்பதாகிய, விளக்கு--விளக்கினை, ஏற்றினார்--, எ - று.

ஆன்றல் - மேம்படுதல். அகத்திருள் - அஞ்ஞானம். தீச்சுடர் தகளி முதலியவற்றோடு கூடிப் புறத்திருளைக்கெடுத்த லெப்படியோ அப்படி நாயனாது திருவாயிற் பிறந்த செஞ்சொல் அற முதலியவற்றோடுகூடி அகத்திருளைக் கெடுத்தலின் இங்ஙனம் உருவகஞ் செயலாயிற்று. மனையகத்தேற்றப்படுகிற விளக்கு அம்மனையகத் துள்ளார்க்கு மாத்திரமே உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருளைக் கெடுக்கவல்ல தன்மையாலும், இஃது

உலகத்து வாழ்வோர் பலர்க்கும் உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருள் கெடுத்தலாலும், அதனின் இது பலகோடி மடங்கு மிக்குச்சிறந்து நிற்கின்றமை யுணர்த்தியபடி.

## திருவள்ளுவமாலை.



### தலபதி நாயனர்.

48. உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிரு டள்ளுதலால்—வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரு
மொக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு.

(இ - ள்.) உள்ளக்கமலம் மலர்த்தி-நெஞ்சமாகிய தாமரைமலரை மலர்த்தி, உள்ளத்து உள்ள-(மக்களது) அகத்திலுள்ள, தள்ளற்கு அரிய இருள்-(பிறிதொன்றலுலே) நீக்கப்படாத அஞ்ஞானவிருளை, தள்ளுதலால்-நீக்குதலால், வள்ளுவனார் வெள்ளைக் குறட்பாவும்-திருவள்ளுவரது குறள் வெண்பாவும், வெங் கதிரும்-(புறத்துத் தாமரைமலரை மலர்த்திப் புறத்திருளை நீக்குகின்ற) சூரியனும், குணத்தைக்கொண்டு- அச்செய்கையைக்கொண்டு, ஒக்குமெனக் கொள்ளத்தகும் —, எ - று.

செயலும் தொழிற் பண்பெனப்படுதலின் குணமெனப்பட்டது. அது

மலர்த்தலும், தள்ளுதலும் ஆம். குணத்தைக் கொண்டெனவே செயப்படு பொருளைக்கொண்டு ஒக்குமெனக் கொள்ளத் தகாதென்ற தாயிற்று. உலகுக்கெல்லாம் பேரொளியாகிய சூரியனும் இதற்கு ஒருபுடை யொப்பா மென்றபடி.

தேனீக்குடிகீரனர்.

49. பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலிற்
றெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

(இ - ள்.) தெய்வத் திருவள்ளுவர்—, முப்பாலின் - மூன்று பால்களுடையதாக, செப்பிய குறளால் - சொல்லிய குறள்நூலைக் கேட்டறிதலால், வையத்து வாழ்வார் மனத்து—, பொய்ப்பால-பொய்யின் பகுதியிற் பட்டவை யெல்லாம், பொய்யே ஆய்ப்போயின—, பொய் அல்லாத—, மெய்ப்பால-மெய்யின் பகுதியிற்பட்டவை யெல்லாம், மெய்யே ஆய் விளங்கின.

குறளால் பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின மெய்ப்பால மெய்யேயாய் விளங்கின எனவே, இதற்கு முன்னெல்லாம் உண்மை துணியப்படாமையின், பொய்ப்பால மெய்ப்பாலபோல் மேற்கொள்ளப்பட்டும், மெய்ப்பால பொய்ப்பாலபோற் கைவிடப்பட்டும் மயங்கிக்கிடந்தன வென்றதாயிற்று. பொய்யேயாய்ப்போதல் - வாய்மை யெனப்படுவ தென்றற் றொடக்கத்துத் திருக்குறள்களாலும், மெய்யாய் விளங்கல் பொய்ம்மையும் வாய்மையிடத்த வென்றற் றொடக்கத்துத் திருக்குறள்களாலும் அறிக. இதன் மெய்யுணர்வு பயத்தற் சிறப்புச் சொல்லியபடி.

50. அறனறிந்தே மான்ற பொருளறிந்தே
மின்பின்
றிறனறிந்தேதம் வீடு
தெளிந்தே—மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனுர்
தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு.

(இ-ள்.) மறன் எறிந்த வானார் நெடுமாற-பகைவரையெறிந்த வாட் படை தங்கிய வீரரங்கும் பாண்டியனே, வள்ளுவனுர் தம் வாயால்-, கேளா தனவெல்லாம்-(இதற்குமுன்) கேட்கப்பட்டிலாதவை யெல்லாம், கேட்டு-(இப்போது) கேட்டு, அறன் திறனறிந்தேம்-, பொருள் திறன்அறிந்தேம்-, இன்பின் திறன் அறிந்தேம்—, வீட்டுத் திறன் தெளிந்தேம்—, எ-று.

திறன்-கூறுபாடு; அஃது அற முதலியவற்றோடுங் கூட்டப்பட்டது. மறன்-ஆகுபெயர். கேளாதன-பிற நூலாசிரியர்க்கெல்லாம் அறிந்து சொல்லுதற் கெட்டாதிருந்த அறமுதலியவற்றி னுட்பங்கள். இம்மை மறுமை வீடுகளைக் குறித்துணர்தற்குரிய உறுதிப்பொருணன்கு முணர்தலின், இனியாதொன்றுமுங் குறைவில்லை யென்றபடி.

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய
நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய வின்குறள்வெண் பா.

(இ-ள்.) முந்திய நல்நெறி நாம் அறிய - முற்பட்டதாகிய நல்வழியை நாமறிய, நாப்புலமை வள்ளுவனார்-நாவால் விளங்குகின்ற புலமையையுடைய திருவள்ளுவநாயனாரால், பன்னிய-சொல்லப்பட்ட, இன் குறள் வெண்பா-இனிய குறள் வெண்பாக்கள், சிந்தைக்கு இனிய - (நினைத்தால்) மனத்திற் கின்பஞ்செய்வன, செவிக்கு இனிய-(கேட்டால்) காதுக்கின்பஞ் செய்வன, வாய்க்கு இனிய-(ஓதினால்) வாய்க்கின்பஞ்செய்வன, வந்த இருவினைக்கு - தொடர்ந்து வருகின்ற இருவினைகளாகிய நோய்களுக்கு, மாம ருந்து-பெரிய மருந்துகளாவன, எ-று.

குறட்பாவை மருந்தென்றமைக்கு ஏற்க வினையை நோயென்னுமையால் இஃது ஏகதேசரூபகம். நல்வினையும் பிறவிக்கு ஏதுவாகலால் இரு

வினை என்றார். முற்பட்ட நல்வழி-நன்மக்களுக்கு அநாதியா யமைந்துள் ளது; அதுசமயத்தாரது பலவகைப்பட்ட கற்பனையிலுலே மறைபட்டி ன்றமையின், நாமறிய என்றார். இந்நூலின் பாக்களைச் சிந்தித்தல் முதலி பன செய்யுங்காலும் சொற்பொருள் நயங்களாலே அவை இன்பம் விளைத் லுத் தெய்வத்தன்மையால் வினைத்துயரும் ஒழிக்குமென்றபடி.

## திருவள்ளுவமாலை.

29

மதுரைப்பாலாசிரியனார்.

52. வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்மதிங்கள்
பொள்ளென நீக்கும் புறவிருளைத் - தெள்ளிய
வள்ளுவ ரின்குறள் வெண்பா வகிலத்தோ
ருள்ளிரு ணீக்கு மொளி.

(இ - ள்.) வெள்ளி வியாழம் விளங்கு இரவி வெள் திங்கள்-சுக்கிரன் குரு சூரியன் சந்திரன் எனப்படுகின்ற இவ்வொளிகள், புற இருளை—, பொள்ளென நீக்கும் - விரைவிலே நீக்கும், (ஆதலினிவை புறவிரு ணீக்குதற்கு உண்டாகிய ஒளிகளாம்), தெள்ளிய - முற்றுணர்ந்த, வள்ளுவர் இன் குறள் வெண்பா—திருவள்ளுவ நாயனாது இனிய குறள் வெண்பா, அகி லத்தோர் - உலகத்தோரது, உள் இருள் நீக்கும் - உள்ளிருளை நீக்குதற் குண்டாகிய, ஒளி - ஒளியாம், எ - று.

இன்னனங்கூறவே, புறத்திருளுக்கு அவை பலவுள; அகத்திருளுக்கு இஃதொன்றே யுளதென்றுயிற்று. அவற்றுள் ஒன்றாலும் நீக்கப்படாத அகத்திருளை நீக்கவல்லதாகலின் இதற்கு எவ்வாற்றானும் ஒப்பதொன்றின் றென்றபடி.

ஆலங்குடிவங்கனார்.

53. வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் றீஞ்சுவையு மொவ்வாதாற்—றெள்ளமுத
முண்டறிவார் தேவ ருலகுடைய வுண்ணுமால்
வண்டமிழின் முப்பான் மகிழ்ந்து.

(இ - ள்.) வள்ளுவர் பாட்டின் வளம் - திருவள்ளுவரது பாட்டினது தீஞ்சுவையை, உரைக்கின் - சொல்லுமிடத்து, வாய் மடுக்கும் தெள் அமுதின் - உண்ணப்படுகின்ற தெள்ளிய அமுதினது, தீஞ்சுவையும்—தித்திப்பாகிய சுவையும், ஒவ்வாது—ஒப்பாகாது, தெள் அமுதம் உண்டு-அத்தெள்ளிய வமுதை யுண்டு, அறிவார் - (அதன் சுவையை) அறிபவர், தேவர்—, வள் தமிழின் - வளம்பொருந்திய தமிழ்க் கண்ணதாகிய, முப்பால்-முப்பாலாகிய அதன் மும்படி சிறந்தபாலை, மகிழ்ந்து—, உலகுடைய - எல்லா வுலகத்தாரும், உண்ணும் - உண்டு தீஞ்சுவையறிவார், எ-று.

வளம்—ஆகுபெயர். ஆல் - அசை. அவ்வமிர்தம் வாயுட்பெய்தவழி காவிற்பட்ட சிறிது பொழுதளவே தீஞ்சுவையபயப்பது; இப்பாட்டு நெஞ்சின்க ணிலைபெற்று ஒழிவின்றித் தீஞ்சுவையபயத்தலின் ஒவ்வாது என்றார். முப்பால்-சிலிஷ்டரூபகம். இனி எவ்வுலகத்தாருக்கும் கரும பூமியாகிய இவ்வுலகத்துட்டோன்றி மெய்ப்பொருளுணர்ந்தன்றி வீட்டின்பம் பெறுதல் கூடாமையின், உலகுடைய வுண்ணும் என்றார்; அன்றி அவ்வுலகத்

தத் தேவர்களும் தமது மேற்பட்ட வறிவினுலே இதனது உயர் வொப் பற்ற குணத்தை அறிந்து முக்கியப் பிரமாணமாகக்கொண்டு மகிழ்கூர்வ ரென்பதுபற்றி அங்ஙனங் கூறினுனெனினுமமையும்: இஃதிவ்வுலகத்தார் க்கேயன்றி அவ்வுலகத்தார்க்கும் பயன்படுமாறு சொல்லியபடி.

திருத்தணிகைச் சரவணப் பெருமாளையரியற்றிய

## திருவள்ளுவமாலையுரை

முற்றிற்று.

### இடைநீகாடர்பாடல்.

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

(இ - ள்.) குறள் - (நாயனாது நூலி னுயிரத்து முந்நூற்று முப்பது) குறள் வெண்பாக்களும், கடுகை—, துளைத்து-(அதனடியே) துளைசெய்து, எழ்கடலை - எழு கடனீரையும், புகட்டி - (அத்துளையுட்) பெய்து, குறுக - (தன்னளவிற்) குறுகும்வண்ணம், தறித்த - தறித்துவைத்தால் அதுபோல் வனவாகும், எ - று.

மிக்க சிற்றளவிற்கு எடுத்துச் சொல்லப்படுவதொரு தண்பொருளாக வின் கடுகு சொல்லப்பட்டது. இரண்டனுருபு தறித்தவென்னும் வினை கொண்டது. துளைத்தல்-உள்ளீடுபோக்குதல். புகவிடென்பது புகட்டென விகாரப்பட்டு முதனிலையாய் நிற்றலின், புகட்டியென்றுரைத்தது. துளையினிடை வெளிக்கும் அதன்புற மூடிக்கும் கொள்ளப்பட்ட பங்கு சிறிதாக, ஒழிந்த பங்கு பெரிதாகலின், குறுக என்றார். தரித்தாலன்ன வெனற்பாலது தறித்த என இடைக்குறைந்து நின்றது. இல்லாத பொருளை உவமானமாகக் கூறலின், இஃது இல்பொருளுவமை. குறட்பாக்களுள் ஒவ்வொன்றும் அதுபோறலின் தறித்த எனப் பன்மையாற் கூறலாயிற்று. குறள் பால்பகா வஃறிணைப் பெயராதலின், இங்கே பன்மைக்காயது. இங்ஙனம் கூறவே, குறட்பாவின் சொற்சுருக்கமும் அதனுள் அடக்கப்பட்ட பொருள் விரிவும் நோக்கும்வழி அக்கடுகும் எழ்கடனீரும் போலுமென்றதாயிற்று. பொருள் விரிவி னளவுபடாமை சொல்லியபடி.

இப்பாட்டிலே "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்" என முதற்சொல்லைமாற்றி ஔவையா

ரால் திருக்குறளுக்குப் புகழ்ச்சி செய்யப்பட்டது.

# பரிமேலழகர் சரித்திரம்.

திருக்குறளுக்கு உரை யியற்றினவர் பதின்மர். அவர் * தருமர், மணக்குடவர், தாமத்தர், † நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் என்பவராவர். அப்பதின்மருள் பரிமேலழகரியற்றியவுரையே சிறந்த வுரையென்று போற்றப்பட்டு வருதல்,

" திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தங்
கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே லழகனெனு
மன்னுமுயர் நாமன் வகுத்து."

"பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரினுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி."

என்னும் பரிமேலழக ருரைச்சிறப்புப் பாயிரத்தால் வெள்ளிடை மலைபோல் விளங்குவதாம்.

பரிமேலழகர் திருக்குறளிற்கே யன்றிப் பத்துப் பாட்டினுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப் படைக்கும் எட்டுத் தொகையினுள் ஒன்றாகிய பரிபாடலுக்கும் உரை யியற்றினரென்றும் சொல்லப்படுகின்றது. பரிமேலழகர் திருக்குறளிற்கே யன்றிப் பிறிதொன்றற்கும் உரையியற்றவில்லையென்றும், அவர் அவ்விரண்டற்கு முரை யியற்றினரென்று கூறுதல் ஆசாரக்கோவைக்கும் திருக்கோவையார்க்கும் நச்சினார்க்கினியர் உரையியற்றினரென்று கூறுவதுபோன்ற பொய்ம்மொழியாமென்றும் கூறுவாருமுண்டு. திருவள்ளுவநாயனாரே பரிமேலழகராக அவதரித்துத் தாமருளிச்செய்த திருக்

---

* "தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர், பரிதி பரிமே லழகர் - திருமலையர், மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற், கெல்லையுரை செய்தா ரிவர்" என்னும் வெண்பாவினால் திருக்குறளி னுரையாசிரியர் பதின்மரென்பது வெளியாகின்றது.

† நச்சர் என்பார் நச்சினார்க்கினியரல்லர். நச்சினார்க்கினியர் திருக்குறளுக் குரையியற்றினரில்லை. அவர் உரையிட்ட நூல்கள் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி, குறுந்தொகையுள் இருபது செய்யுள் என்பனவேயாம். இது "பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட்டுங்கலியு, மாகக் குறுந்தொகையு னேர்ந்தான்குஞ் - சாரத், திருத்தகு மாமுனி செய் சிந்தா மணியும், விருத்திநச்சி னார்க்கினிய மே" என்னும் வெண்பாவினால் நன்கு வெளியாவதாம்.

குறளிற்கு உண்மைப்பொருள் விளங்க வுரையியற்றி யருளினரென்றும், தருமர்முதலாயினோ ரியற்றிய உரைகளில் திருக்குறளின் உண்மைப்பொருள்வெளியாக வில்லையென்றும், அதனுற்றான் அவ்வுரைகள் பயன்படாதொழிந்தன வென்றும் கூறுவாருமுண்டு. இவரைச் சைவர் "கோளிற் பொறியிற் குணமிலவே" என்னுங் குறளின் விசேடவுரையில் இவர் "எண்குணங்களாவன:-தன்வயத்தனுதல், தூய வுடம்பினனுதல், இயற்கை யுணர்வினனுதல், மூற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை எனவிவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது" என்றுரைத்தல் பற்றியும், உமாபதி சிவாசாரியர் "வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகத்தொல் காப்பியமே, தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒள்ளியசீர்த், தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறுந், தண்டமிழின் மேலாந் தரம்" என்னும் வெண்பாவினுள் 'தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை' என விதந்தோதி யிருத்தல் பற்றியும், வேறு சில பற்றியும் சைவர் என்றும், வைணவர் இறைமாட்சியதிகாரத்தின் அவதாரிகையில் "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்' என்று பெரியாரும் பணித்தார்" என்று நம்மாழ்வாரைப் பெரியார் என்று கூறுதல்பற்றியும், "தாம்வீழ்வார் மென்றோட் டியிலி னினிதுகொல்" என்னும் குறளினுரையில் செங்கண்மாலுலகத்தைச் சிறப்பித்துக் கூறியிருத்தல் பற்றியும், வேறு சில பற்றியும் வைணவரென்றும், அத்வைதிகள் "இருள்சேரிருவினையும்" என்னுங் குறளின் விசேடவுரையில் "இன்னதன்மைத்தென ஒருவாலுங் கூறப்படாமையின் அவிச்சையை இருள் என்றும்" என்றும், "பொருளல்லவற்றை" என்னும் குறளின் விசேடவுரையில் "மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை யென்பன ஒருபொருட்கிளவி" என்றும் கூறியிருத்தல் பற்றியும், வேறுசில பற்றியும் அத்வைதியென்றும் கூறுவர்.

பரிமேலழகர் யாவராயினுமாகுக; இவர் சைவர் வைணவர் அத்வைதிகள் என்னும் மூவராலும் அங்கீகரிக்கப்பட்ட பெருந்தகையார் என்பதற்கு யாது மாட்சேபமின்றும்.

பரிமேலழகர் காஞ்சிபுரத்து உலகளந்த பெருமாள் கோயில் அருச்

சகர் மாபிற்பிறந்தவர்; இவர் இளமையிலேயே நல்லாசிரியரை யடுத்து வட மொழியையும் தென்மொழியையும் குறைவறக்கற்றுப் பண்டித சிரோமணி யாகிப் பொதுநோக்குற்று, வைதிகர்யாவரும் பொன்னேபோற் போற்றிக் கொள்ளுமா றுரையியற்றவேண்டுமென்றெண்ணி, அதற்குத் தக்கநூல் யாதென்றாய்வுழித் திருக்குறளே தக்கநூலென்று துணிந்து, அதற்குத்

---

* இவர் உலகளந்த பெருமான் கோயில் அருச்சகர் மாபிற் பிறந்தவ ரென்பதற்கு "நீணிலங் கடந்தோன் றுடொழு மாபிற், பரிமே லழக னுரி மையி னுணர்ந்தே" என்னும் ஓரகவற்பாவி னீற்றடியிரண்டையு மூதா ரணமாகக் கூறுகின்றனர் சிலர்.

## பரிமேலழகர் சரித்திரம். 3

தருமதலாயிலேரியற்றிய வுரைகளில் ஆவனவற்றைக்கொண்டு ஆகா தனவற்றை மறுத்துச் சுருதிஸ்மிருதிபுராணேதிகாசங்களின் அருங்கருத்து கள் நன்குவிளங்க இலக்கணச்செறிவும் தருக்கப்பொலிவும் குன்றின்மே லிட்ட தீபம்போற்றுலங்கச் சிறந்ததோ ருரையிட் டருளினர்; இவர்தா மியற்றிய உரையைப் பாண்டியனவைக்களத்து அரங்கேற்றச் சென்ற போது அங்குள்ளார் இவரைநோக்கி "தேவரியற்றிய திருக்குறளினுரைக்கும் மற்றவ ரியற்றிய வுரைக்குமுள்ள வேற்றுமை யென்னை? அவ்வுரைகளி னும் நம்முரை சிறந்த தென்பதனை அற்புதங்காட்டி விளக்கல் வேண்டும்; இங்குள்ள வெண்கலப் பரிமீதிவர்ந்து அரங்கேற்றுக; இப்பரி இடம் பெயர்ந் தியங்குமாயின், நும்முரை உண்மையுரையென் றுரைப்பப்படும்" என்றுகூற, இவர் * அப்பரிமீதிவர்ந்து தாமியற்றிய உரையை யரங் கேற்றினர்; அரங்கேற்றியபோது அஃதிடம் பெயர்ந்தியங்கிற்று. அது கண்டு அங்குள்ள புலவர் இவர்க்குப் பரிமேலழகர் என்று சிறப்புப்பெயர் தந்து புகழ்ந்தனர்; இவரது இயற்பெயர் வேறு; இச்சிறப்புப் பெயரே இவர்க்கு இயற்பெயராக வழங்கப்படுவதாயிற்று என்றோர் கதை கர்ணபரம்

பரையாக வழங்கப்பட்டு வருகின்றது.

பரிமேலழகர் தொல்காப்பியமன்றி வேறு இலக்கணநூலை யெடுத்துக் கூறுமையின், இவர்கொண்ட இலக்கணநூல் தொல்காப்பியமா மென்பது விளங்குவதாம்.

பரிமேலழகர் காமத்துப்பால் களவியலின் அவதாரிகையில் "வட நூலுட் போசராசனும் சுவைபலவென்று கூறுவார் கூறுக; யாங் கூறுவ தின்பச்சுவை யொன்றனையுமே என இதனையே மிகுத்துக் கூறினான்" என்று கூறியிருத்தலால், இவரது காலம் போசராசனது காலத்திற்குப் பிற்பட்ட காலமாமென்பது வெளியாகின்றது.

இவர் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, காலடி, பழமொழி, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, புறப்பொருள் வெண்பா மாலை முதலிய நூல்களை யுதாரணமாகக் காட்டுவதுடன் உரை நடையுடன் சேர்த் தெழுதுவதினாலும், இவ்வாறு கந்தபுராணம்-கம்பராமாயணம் முத

---

* இவர் அழகர் மலையில் தீயிற் காய்ச்சிய வெண்கலப் பரிமீதிவர்ந்து புலவர்கள் விளைய விளக்கங்களுக் கெல்லாம் தக்கவாறு விடையிறுத்துத் தாமியற்றிய திருக்குறளுரையை அரங்கேற்றினரென்றுகூறுவாருமுண்டு.

திரிசிரபுரத்தில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியுள்ள தாயு மானவர் என்னும் சிவபெருமானது பெயர் அவரது அடியா ரொருவர்க்கு இயற்பெயராக வைத்து வழங்கப்பட்டு வந்தமைபோல, மதுரைமாநகரில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியுள்ள சொக்கலிங்கப்பெருமானது திருப்பெயர்களி லொன்றான பரிமேலழகரென்னும் பெயர் இவ்வுரை யாசிரியர்க்கு இயற்பெயராகவைத்து வழங்கப்பட்டது. இப்பெயராலேயே இவர் சைவரென்பதைத் துணியலாமென்று கூறுவாருமுண்டு.

லிய நூல்களே ஓரிடத்தும் எடுத்துக் காட்டாமையாலும், இவரது காலம் கந்தபுராண முதலியவற்றிற்கு முற்பட்ட காலமாமென்பது துணிவாம். எஃது எங்ஙனமாயினும், இவரது காலம் இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்து நூற்றுமுப்பது வருஷத்திற்கு முன்பெனக் கொள்ளலாம்.

இவர்க்குச் சாங்கியம், வேதாந்தம், தருக்கமுதலிய நூல்களில் அளவு கடந்த ஞானமுண்டென்பது "நீத்தார் பெருமை" "அருளுடைமை" முதலிய அதிகாரங்களினுரையால் நன்கு விளங்குவதாம். இவர் ஜீவன்முத்த புருஷரென்பது "மெய்யுணர்தல்" "அவாவறுத்தல்" என்னும் அதிகாரங்களி னுரையால் செவ்வனே புலனுவதாம்.

நச்சினர்க்கினியர் பரிமேலழகர் "குடம்பை தனித்தொழிய" என் னுங் குறளினுரையில் குடம்பையென்பதற்கு மற்றையோர் கூடென்று பொருள் கூறியதுபோற் கூருது முட்டையென்று பொருள்கூறி நய முரைத்தற் ககமகிழ்ந்து அவ்வாக் கட்டிக் கொண்டார் என்று கூறுவாரு முண்டு.

வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல் முதலாயின அமையப் பேரறிவாளர்யாவரும் பொன்னேபோற் போற்றியேற்கத் திருக்குறளுக் குரையியற்றிய பரிமேலழகரது வரலாறு தெரிந்தவளவு ஒருவாறுக வெழுதப்பட்டது.

# பரிமேலழகர் சரித்திரம்

முற்றிற்று.

---

# திருக்குறளின் மாட்சி.

இலக்கணக் கொத்தின் "வடமொழி யிலக்கணஞ் சிலவகுத் தறிந்து" என்னுஞ் சூத்திரத்தில் "பல்காற் பழகினுந் தெரியா வுளவேற், றொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்; மூன்றினு முழங்கு மாண்டினு மிலே யேல், வடமொழி வெளிபெற வழங்கு மென்க" என்றிருப்பதும், அத னுரையில் "இலக்கணமாவது தொல்காப்பிய மொன்றுமே; செய்யுளாவது திருவள்ளுவ ரொன்றுமே" என்றிருப்பதும், மணிமேகலை—சிறைசெய் காதையில் "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய் யெனப் பெய்யும் பெருமழை யென்றவப், பொய்யில் புலவன் பொருளுரை தேறுய்" என்றிருப்பதும்,

கல்லாடத்தின் "நண்ணிய பாதி" என்னுஞ்செய்யுளில் "சமயக் கணக் கர் மதிமுழி கூரு, தலகியல் கூறிப் பொருளித வென்ற, வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன், முதற்கவி பாடிய மூக்கட் பெருமான்" என்றிருப்பதும், இவைபோல்வன பிறவு மிங்குணர்தற்பாலனவாம்.

இந்நூலாசிரியர் சரித்திரத்தையும் இதனுரை யாசிரியர் சரித்திரத் தையும் பற்றிய வேறு சில குறிப்புக்கள்.

திருவள்ளுவர் மதுரையிற் பிறந்தவர்-மயிலையில்

வளர்ந்தவனென்றும்,

மோட்சம் துறவறத்தார்க்கன்றி யில்லறத்தார்க்குச் சித்தியா தென்று கூறிய இவர் இல்லறத்தார்க்குஞ் சித்தியாமென்பதனைத் தம் வாழ்நாள் முற்றும் இல்லறத்திருந் தொழுகினமையால் விளக்கினரென்றும், இவரது தந்தையின் பெயர் பகவனன்று, யாளிதத்தனென்றும், இவரது மனைவியின்பெயர் வாசுகியன்று, மாதாநுபங்கி என்றும், திருவள்ளுவர் "அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு" என் றகாமுதலாக வரப்பாடத் தொடங்கி, "ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங், கூடி முயங்கப் பெறின்" என்று னகாவொற்றீறுகவாப் பாடி முடித்தமை "எழுத் தெனப் படுவ அகர முதல, னகர விறுவாய் முப்பஃ தென்ப" என்று தொல்காப்பியனர் கூறுவதை வற்புறுத்துவதாமென்றும், பிறவுஞ்சொல் லப்பட்டு வருகின்றன.

திருவள்ளுவர் வைகாசிமாதம் அநுஷநட்சத்திரத்தில் திருமயிலையில் பாகதியடைந்தாரென்று கூறப்படுகின்றது. சிலர் அவர் திருவள்ளூரில் (திருவெவ்வுளூரில்) பாகதியடைந்தார்; அவர் சமாதியுள்ள விடம் திருவள்ளூர்த் திருக்குளமாமென்று கூறுகின்றனர்.

பரிமேலழகர் திருக்குறளுக் குரையெழுதுங் காலத்துச் சொட்டுமூத் திரநோ யுடையவராக விருந்தார்; அதனால், கடவே யடிமட்டம் வரையில் துவே செய்துள்ள ஒருவட்டக் கல்லின்மீது சொட்டுமூத்திரந் தடையிலாது போமாறிருந்து தாமெழுதத்தொடங்கிய வுரையையெழுதி முடித்தாரென்றும், பரிமேலழகர் - பரிமேலழகரையரென விருவரிருந்தனர்; இவருள் திருக்குறளுக் குரையெழுதினவர் பரிமேலழகராவர், பரிபாடலுக்கும் திருமுருகாற்றுப் படைக்கும் உரையெழுதினவர் பரிமேலழகரையராவரென்றும், பிறவுங் கூறப்பட்டு வருகின்றன.

தொண்டைமண்டலசதகம் " திருக்காஞ்சி வாழ்பரி மேலழகன், வள்ளுவ னுக்கு வழிகாட்டினன் " என்று கூறுவதால், இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவரென்று தெரிகின்றது. சிலர் இவர் ஒக்கையென்னுமூரிற் பிறந்தவரென்றுங் கூறுகின்றனர்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 7 | 3 | முறமை | முறைமை |
| 38 | 17 | நிற்கும் | நிற்கும். |
| 43 | 8 | பரி:—(இ-ன்). | பரி:— |
| 45 | 12 | thier | there |
| 46 | 8 | மனது | மனத்து |
| 54 | 2 | Virtvè | Virtue |
| 60 | 27 | வானப்பிரஸ்தநிலை. இது | வானப்பிரஸ்தநிலை. |
| 61 | 30 | ழெழிக்கி | ழெழுக்கி |
| 67 | 30 | வெலனவும் | வெனவும் |
| 69 | 33 | தம்மே | தாமே |
| 70 | 33 | ஒழுக்கும் | ஒழுக்கம் |
| 71 | 14 | flourish | flourish |
| 85 | 20 | in man | man |
| 88 | 4 | virtueouly | virtue only |
| 92 | 27 | சவாமருந் | சாவாமருந் |
| 107 | 31 | வெமக்கீத் | வெமக்கீந் |
| 103 | 3 | காஞ்சிரங்காய் | காஞ்சிரங்காய் |
| 119 | 14 | பட்டாணும் | பாட்டாணும் |
| 121 | 36 | தகைகந்தே | தகைத்தே |
| 123 | 11 | estate | state |
| 125 | 10 | வகையறுத்து | வரையறுத்து |
| ஷை | 36 | நாடிப் | நாடிக் |
| 126 | 34 | மிகுதியுமாக | மிகுதியாக |
| 129 | 3 | himself; | himself |
| 132 | 8 | தன்மடைவர் | தன்பமடைவர் |
| 140 | 34 | பழியை-பழியையும் | பழியையும் |
| 145 | 16 | (எ - து). | (எ - று). |
| ஷை | 26 | மளவிய | மனவிய |
| 153 | 38 | அப்பொறையினும்-அஃ தப் பொறையினும் | அஃதப்பொறையினும் |
| 159 | 2 | (க - ள்). | (க - த). |
| 163 | 24 | ரியாடத்துத் | யாரிடத்துத் |
| 169 | 35 | பெருகத்தி | பெருக்கத்தி |

| | | | |
|---|---|---|---|
| 173 | 11 | புன்மைபில் | புன்மையில் |
| ஷெ | 24 | யார்மட்டும் | யார் மாட்டும் |
| 177 | 7 | விருப்பாத | விரும்பாத |
| 180 | 12 | பொய்யாகச் | பொய்யாகப் |
| ஷெ | 13 | வாழ்தலின் | வாழ்தலின் |
| 186 | 6 | முண்டொ | முண்டோ |



| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 195 | 29 | மறுளது | மருளறு |
| 200 | 24 | நொய்ப்பால | நோய்ப்பால |
| 204 | 28 | யைதலே | ணைதலே |
| 210 | 35 | கூறி | கூறு |
| 224 | 21 | பட்டாலும் | பாட்டாலும் |
| 228 | 21 | பட்டாலும் | பாட்டாலும் |
| 231 | 26 | வீலங் | விலங் |
| 236 | 17 | பொதுவாகை | பொதுவகை |
| 238 | 31 | twe | true |
| 242 | 10 | பிரட்தியக் | பிரத்தியக |
| ஷெ | 16 | பிராணங்களை | பிரமாணங்களை |
| 245 | 32 | யாண்டு | யாண்டு |
| 246 | 3 | பிராமாணங் | பிரமாணங் |
| ஷெ | 24 | யுகை | புகை |
| 247 | 37 | அந்த | அர்த்த |
| 250 | 7 | வீட்டிலில்தாத | வீட்டிலில்லாத |
| ஷெ | 25 | விடு | வீடு |
| 251 | 34 | அவ்வளகைளை | அவ்வளவைகளை |
| 254 | 25 | தவீர | தவிர |
| 256 | 5 | னில்லா | ளில்லா |
| 257 | 30 | பெருளை | பொருளை |
| 259 | 22 | ஊண் | ளுண் |
| 260 | 10 | ஆளாளென்ப | ஆளாணென்ப |
| 262 | 8 | அவ்வுணையே | அவ்வுனையே |
| ஷெ | 30 | மற்றொன்மே | மற்றொன்றன்மே |
| 263 | 14 | கொல்லுதளாகிய | கொல்லுதலாகிய |
| 264 | 5 | ணண்மை | ண்ணுமை |
| 269 | 38 | உயிர் | உயர் |
| 270 | 22 | ஒருயிரை | ஒருயிரை |
| 273 | 28 | சேய்தலை | செய்தலை |
| 277 | 18 | whaever | whatever |
| ஷெ | 33 | தன்பத்ததாய் | தன்பத்தாய் |
| 278 | 19 | பவ | பல |
| 285 | 18 | கெய்தலே | செய்தலே |
| 286 | 6 | இவ்பொருளுவமை | இல்பொருளுவமை |
| 291 | 6 | காரி | கரி |

| | | | |
|---|---|---|---|
| 310 | 25 | தல | தல் |
| 311 | 16 | வந்தஸமயின் | வந்தமையின் |
| ஷை | 20 | தொழு | தொழுகு |

279 - வது பக்கத்திற்குப்பின்னர் 290-291-292-293-294-295-296-297-298 என்றிருக்கும் பக்க வெண்களை 280-281-282-283-284-285-286-287-288 என்று திருத்திக் கொள்க.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 312 | 26 | தவமுத் | தவத் |
| ஷை | 27 | மஸம் | மனம் |
| 314 | 16 | செய்யமை | செய்யாமை |
| 315 | 28 | ஒவ்வென் | ஒவ்வொன் |
| ஷை | 34 | தெண்பது | தென்பது |
| 320 | 3 | தளக்கே | தனக்கே |
| 327 | 1 | பெருளாமை | வெகுளாமை |
| ஷை | 35 | உன்னிய | உள்ளிய |
| 331 | 15 | சிறப்யுடைய | சிறப்புடைய |
| ஷை | 36 | வன்னுக் | வுள்ளுக் |
| 332 | 30 | கெய்யா | செய்யா |
| 333 | 22 | மறகாத | மறக்காத |
| ஷை | 23 | ஞாபத்திற்கு | ஞாபகத்திற்கு |
| 335 | 9 | கம்முயிர்க்கு | தம்முயிர்க்கு |
| ஷை | 34 | யிரத்தியட்சப் | பிரத்தியட்சப் |
| 336 | 15 | யார்க்கீகு | யார்க்கு |
| 345 | 2 | யாறெனின் | யாதெனின் |
| 347 | 3 | heen | been |
| ஷை | 29 | ஒள்ளுக | ஒன்னுக |
| 352 | 10 | கொல்லலகாது | கொல்லலாகாது |
| 356 | 25 | கல்வினள் | கல்வினை |
| 357 | 16 | வுடம்பினை | வுடம்பினை |

| | | | |
|---|---|---|---|
| 359 | 14 | பிறந்திருக்கு | பிறந்திறக்கு |
| 360 | 5 | யுடம்படாதலால் | யுடம்பாடாதலால் |
| 373 | 35 | லதனிலா | லதனிலு |
| 374 | 27 | வெண்டி | வேண்டி |
| 377 | 29 | எனரூர் | என்ரூர் |
| 381 | 34 | தெனப | தென்ப |
| 383 | 29 | கூறியபவா | கூறியவா |
| 392 | 40 | மூவணைறி | மூவணைரி |
| 394 | 13 | கேடடு | கேட்டு |
| 401 | 31 | சாதனங்களின | சாதனங்களின் |
| 404 | 39 | சாட்டுங் | காட்டுங் |
| 405 | 27 | வெண்டுங் | வேண்டுங் |
| 410 | 25 | மெளக | மென்க |
| 416 | 13 | தாயுமானாவர் | தாயுமானவர் |
| 424 | 16 | படடாலும் | பாட்டாலும் |
| 436 | 3 | டிருப்பன் | டிருப்பவன் |
| 438 | 33 | தன்செலால், | தன்சாலால் |
| 440 | 15 | subjecs | subjects |
| கூடி | 22 | லெற்றி | லேற்றி |
| 447 | 37 | மடமஃப் | மடமஃகப் |



| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 450 | 4 | உயர்வ | உயர்வு |
| 464 | 36 | ருடன்மை | ருட்டன்மை |
| 473 | 18 | ever | never |
| 480 | 34 | நாடடம் | காட்டம் |
| 486 | 4 | அஞ்சவது | அஞ்சுவது |
| 491 | 14 | கெடாமையும் | கொடாமையும் |
| 495 | 29 | சிவசிகந்தா | சிவகசிந்தா |
| 520 | 35 | சிறப்பு | சிறப்பு |
| 523 | 34 | நிகம் | நிகழ் |
| 538 | 31 | சினேயோடு | சினேயொடு |
| 545 | 14 | அசான் | அரசன் |
| 562 | 31 | ஒடும் | ஓடும் |
| 622 | 27 | அசனது | அரசனது |
| 624 | 15 | sujects | subjects |
| 630 | 31 | நிரு | நிரு |
| 645 | 16 | கண்ணேட்ட | கண்ணேட்ட |
| 648 | 23 | கண்ணேட்டத்தி | கண்ணேட்டத்தி |
| 656 | 36 | ஒற்று | ஒற்று |
| 658 | 18 | ஒற்றினனே | ஒற்றினனே |
| 690 | 13 | proverty | poverty |
| 705 | 24 | அங்கங்கங்கள் | அங்கங்கள் |
| 710 | 13 | வல்லது | வல்லது |
| 713 | 16 | தொடர்ந்து | தொடர்ந்து |
| 726 | 32 | கூறியிருத்தலும் | கூறியிருத்தலும் |
| 728 | 9 | தவர் | தவர் |
| 736 | 11 | என்பது | என்பது |
| 738 | 35 | ஓரால் | ஓரால் |
| 764 | 2 | தூதரை | தூதரை |
| 793 | 29 | சபையின்கண் | சபையின்கண் |
| 802 | 19 | agreably | agreeably |
| 802 | 32 | பிறரு | பிறரு |
| 807 | 18 | illeterate | illiterate |
| 826 | 20 | உடையதாப் | உடையதாய் |
| ஷை | 31 | மரம் | மறம் |

| | | | |
|---|---|---|---|
| 832 | 15 | அதனை | அதனை |
| 835 | 15 | knigs | kings |
| 839 | 27 | thigs | things |
| 839 | 33 | போசாகை | போகாமை |
| 868 | 26 | directnig | directing |
| 879 | 16 | கீழுந்திடா | கீழ்ந்திடா |
| 888 | [illegible] | யுனடயார் | யுடையார் |
| 894 | 22 | படுத்தடுத்த | பத்தடுத்த |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 919 | 29 | வென்மை | வெண்மை |
| 934 | 33 | உன்மை | உண்மை |
| 946 | 1 | 496 | 946 |
| 971 | 19 | எந்திய | ஏந்திய |
| 1004 | 8 | ஒவாது | ஓவாது |
| 1008 | 17 | கொனீஇ | கொளீஇ |
| ஷை | 21 | கெடுற்தல் | கெடுத்தல் |
| 1012 | 5 | does | do |
| 1012 | 31 | சீக்கு | சிக்கு |
| 1039 | 23 | தன்னோ | தன்னை |
| 1041 | 16 | திறந்தால் | திருந்தால் |
| 1047 | 24 | டொழுவா | டொழுகுவா |
| 1051 | 37 | சத்தான் | சாத்தன் |
| 1060 | 22 | சாண்ருண்மை | சான்ருண்மை |
| 1070 | 23 | Kindnes | Kindness |
| 1082 | 25 | கருமங்கனில் | கருமங்களில் |
| 1090 | 30 | இறையனைப்பொருள் | இறையனாகப்பொருள் |
| 1091 | 16 | Faimly | Family |
| 1092 | 17 | Faimly | Family |
| 1093 | 18 | Cantrivances | Contrivances |
| 1094 | 22 | மூடிவெய்தும் | மூடிவெய்தும் |
| 1095 | 15 | fructifiy | fructify |
| 1096 | 3 | Blamless | Blameless |
| 1100 | 31 | வீழுன்றி | வீழுன்றி |
| 1101 | 23 | வேளார்க்கும் | வேளாளர்க்கும் |
| 1114 | 13 | அஃறு | அஃது |
| 1135 | 17 | desgraceful | disgraceful |
| 1136 | 13 | of who | of those who |
| 1148 | 10 | கண்பானுயின் | காண்பானுயின் |
| 1149 | 24 | themselve | themselves |
| 1154 | 11 | குமுமை | குழுமை |
| 1155 | 31 | பலதாம் | பாவதாம் |
| 1160 | 31 | உவை | இவை |

| | | | |
|---|---|---|---|
| 1164 | 17 | தலைமகன் தலைமகன் | தலைமகள் தலைமகள் |
| 1171 | 19 | கோகிய | நோக்கிய |
| 1174 | 3 | உடையவனல்ல | உடையனவல்ல |
| 1175 | 17 | முற்றுமை | முற்றும்மை |
| 1177 | 34 | இனையுடைய | இனையடைய |
| 1179 | 7 | உலத்திலின்று | உலகத்திலின்று |
| ” | 37 | கூறிறுன் | கூறினுன் |
| 1181 | 37 | கூறினவையின் | கூறினமையின் |
| 1195 | 21 | கலங்க | கலந்த |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1201 | 9 | னுள்ளாராக் | னுள்ளாராக |
| 1222 | 32 | உருவஞ் | உருவகஞ் |
| 1229 | 4 | அறிதரோ | அரிதரோ |
| ,, | 14 | ஒரேவழி | ஒரோவழி |
| 1230 | 18 | ஒம்பி | ஓம்பி |
| 1232 | 18 | கறிவீயாவோ | கறிவியாவோ |
| 1236 | 34 | continne | continue |
| 1237 | 19 | கொத்தனென் | கொத்தனன் |
| ,, | 27 | படாரன் | படரான் |
| 1244 | 27 | துயற்றலான் | துயிற்றலான் |
| 1249 | 2 | கண்பிதுப் | கண்விதுப் |
| 1268 | 3 | சசி | ச்சி |
| 1272 | 13 | லொழி | லொழி |
| 1300 | 28 | of the | the |
| 1329 | 31 | femine | feminine |
| 1335 | 12 | brght | bright |
| 1338 | 35 | தொண்கண் | கொண்கன் |
| 1376 | 25 | ஒந | ஒரு |
| 1379 | 29 | Feigned dislike | Dislike arising from trifles |
| 1383 | 14 | garland flower | flower garland |
| 1395 | 5 | ராயினும் | ராயினும் |

## திருவள்ளுவமாலை.

| | | | |
|---|---|---|---|
| 11 | 30 | ஞதபான் | ஞற்பால் |
| 12 | 9 | வெள்ளி | வெள்ளி |
| 13 | 20 | கிறமன் | திறமன் |

| | | | |
|---|---|---|---|
| 16 | 17 | பெய்யாது | பொய்யா து |
| 28 | 8 | வீழுங்கும் | வீழுங்கும் |
| | 24 | நாயனூரால் | நாயனூரால் |
| 29 | 29 | மும்படி | மும்மடி |
| 30 | 30 | தூளத் | தூளத் |

ஸ்ரீமத் - மகா வித்வான்

# காஞ்சீபுரம் - இராமஸ்வாமி நாயுடவர்களின்

# அபிப்பிராயம்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

தேவர்திருக் குறளினுக்குத் தெளிவொருளா தியவுரைகள் செய்த
வித்திப், பூவுலகிற் பூதவுடம் பொடுபொன்றுப் புகழுடம்பு பொருந்தி
நின்றுன், கோவணவும் பொழில்சூழ்கோ மளபுரம்வா ழிப்பர்குலக் கொழு
ந்தன் னுன்சீர், நாவலர்தம் பெருமானன் னயசுகுண னெழில்வடிவே
லுமன் றுனே.

திருமருவு தேவாரு டமிழ்மறைக்குத் தருமர்முன்னோர் தேர்ந்து செய்த, உருமருவு முரைகளின்மிக் குயர்ந்தபரி மேலழக ருரையிப் பா ரோர், அருமையினு மருமையா புணரநின்ற தாகலினன் கதனேயாய்ந்து, குருமருவு தெளிபொருட்டீ பமுங்கருத்துங் குறிப்புரையுங் குலவக் கோத்தே.

எழுதாத வெழுத்திலியை வித்தளித்திட் டிவ்வுலக நிறும்பூ தெய்தப், பழுதாத வென்றுமிலாப் புகழுடம்பு படைத்து நின்ரூன் பளகில் சைதை, முழுமாத வன்னெனுஞ்சீ ரிரத்தினத்தே சென்றனது மூளித் தாளில், விழுமாவாய்த் துலண்டவன்ற னல்லருள்பெற் றுய்ந்திட்டோ னுலகர் யார்க்கும்.

கன்னயமே புகன்றிடுவோன் றமிழ்க்கடலின் வேலைகண்ட நாவ லோன்சீர், துன்னியநல் வேதாந்தத் துறையினெடு தருக்கநூற் றுணிபு ணர்ந்தோன், மன்னியபூம் பொழில்சூழ்கோ மளபுரஞ்செய் மாதவத்தின் வந்த நல்லோன், பொன்னியலும் வடிவேற்பேர் புனைந்திலகு வோன்று கழற் புலமிக் கோனே.



| குறள். | பக்கம். |
|---|---|
| அ | |
| அகடாரா | 1006 |
| அகப்பட்டி | 1143 |
| அகரமுதல | 7 |
| அகலா | 768 |
| அகழ்வாரைத் | 153 |
| அகனமர்ந்தீதலி | 101 |
| அகனமர்ந்து | 93 |
| அஃகாமை | 176 |
| அஃகியகன்ற | 173 |
| அங்கணத்து | 797 |
| அசையியற் | 1171 |
| அச்சமுடை | 602 |
| அச்சமே1 | 1144 |
| அஞ்சாமையல்லாற் | 563 |
| அஞ்சாமையீகை | 432 |
| அஞ்சுமறியா | 938 |
| அஞ்சுவதஞ் | 485 |
| அஞ்சுவதோரு | 411 |
| அடக்க | 127 |
| அடல்வேண்டு | 375 |
| அடற்றகையு | 847 |
| அடுக்கிய | 1028 |
| அடுக்கிவரினு | 698 |
| அடுத்தது | 782 |
| அணங்குகொ | 1154 |
| அணியன்றே | 1086 |
| அந்தணரென்போ | 42 |
| அந்தணர்நூற்கு | 612 |
| அமரகத்தாற் | 891 |
| அமரகத்து | 1096 |
| அமிழ்தினு | 76 |
| அமைந்தாங் | 537 |
| அரண்கின்றி | 457 |
| அரிதாற்றி | 1225 |
| அரியகற் | 571 |
| அரியவற்று | 503 |
| அரியவென் | 605 |
| அருங்கேட | 203 |
| அருஞ்செல்வி | 636 |
| அருட்செல் | 238 |
| அருமறை | 921 |
| அருமையுடைத் | 684 |
| அரும்பய | 192 |
| அருவினை | 548 |
| அருளல்ல | 262 |
| அருளில்லார்க் | 255 |
| அருளென்னு | 836 |
| அருளொடு | 834 |
| அருள்கருதி | 300 |
| அருள்சேர்ந்த | 252 |
| அருள்வெஃகி | 174 |
| அலந்தாரை | 1373 |
| அலரெழ | 1216 |
| அலர்காண | 1223 |
| அல்லலரு | 253 |
| அல்லலை | 104 |
| அல்லற்பட் | 626 |
| அவர்தந்தா | 1258 |
| அவர்நெஞ் | 1361 |
| அவாவில்லார்க் | 413 |
| அவாவினை | 412 |
| அவாவென்ப | 404 |
| அவிசொரிந் | 268 |
| அவையறிந் | 788 |
| அவையறியார் | 791 |
| அவ்வித் | 165 |
| அவ்விய | 167 |
| அழக்கொண்ட | 735 |
| அழிவதூஉ | 522 |
| அழிவந்த | 884 |
| அழிவினவை | 865 |
| அழிவின்றறை | 843 |
| அழுக்கற் | 168 |
| அழுக்காறவா | 47 |
| அழுக்காறுடையார் | 168 |
| அழுக்காறுடையா | 138 |
| அழுக்காறெனவ | 166 |
| அழுக்காற்றி | 163 |
| அளவல்ல | 305 |
| அளவளா | 591 |
| அளவறிந்தார் | 304 |
| அளவறிந்து | 544 |
| அளவின்க | 301 |
| அளித்தஞ்ச | 1229 |
| அறங்கூறு | 178 |
| அறஞ்சாரா | 1117 |
| அறஞ்சொல்லு | 181 |
| அறத்தாறிது | 49 |
| அறத்தாற்றி | 60 |
| அறத்தான் | 51 |
| அறத்திற்கே | 87 |
| அறத்தினூஉங் | 44 |
| அறம்பொரு | 568 |
| அறவாழி | 16 |
| அறவினையா | 344 |
| அறவினையு | 981 |
| அறனழீஇ | 179 |
| அறனறிந்தான் | 710 |
| அறனறிந்தமூத்த | 500 |
| அறனறிந்துவெ | 176 |
| அறனுக்கம் | 162 |
| அறனியலா | 149 |
| அறனிழுக்க | 434 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரம்போருத | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| அரம்போலுங் | 1068 | அழச்சொல்லி | 873 | அறனீனு | 833 |
| அரிதரோ | 1229 | அழல்போலு | 1300 | அறனெனப் | 62 |

| குறள். | பக்கம். |
|---|---|
| அறனேக்கி | 185 |
| அறன்கடை | 145 |
| அறன்வலியா | 152 |
| அறிகிலா | 1214 |
| அறிகொன் | 714 |
| அறிதோ | 1184 |
| அறிந்தாற்றிச் | 533 |
| அறிவற்றங் | 479 |
| அறிவிலார் | 918 |
| அறிவிலானெஞ் | 917 |
| அறிவிலு | 334 |
| அறிவினு | 196 |
| அறிவின்மை | 916 |
| அறிவுடையாரா | 485 |
| அறிவுடையாரொ | 487 |
| அறிவுரு | 760 |
| அறுவாய் | 1191 |
| அறைபறை | 1145 |
| அன்ன | 362 |
| அற்றதறிந்து | 1016 |
| அற்றமறைக்கும் | 1052 |
| அற்றமறைத்தலோ | 921 |
| அற்றவ | 410 |
| அற்றாழிபசி | 220 |
| அற்றாரைத் | 575 |
| அற்றார்க்கொன் | 1079 |
| அற்றாலளவறிந் | 1015 |
| அற்றேமென் | 699 |
| அனிச்சப்பூக் | 1189 |
| அனிச்சமு | 1194 |
| அன்பகத் | 89 |
| அன்பறிவா | 758 |
| அன்பறிவு | 582 |
| அன்பில | 937 |
| அன்பிலா | 83 |
| அன்போ | 84 |
| அன்றறிவா | 48 |

ஆ

| | |
|---|---|
| ஆகாளவிட்டி | 543 |
| ஆகுழாற் | 419 |
| ஆக்கங்கருதி | 525 |
| ஆக்கமதர்வி | 663 |
| ஆக்கமிழக் | 667 |
| ஆக்கழுங் | 713 |
| ஆங்கமை | 819 |
| ஆபயன் | 631 |
| ஆயு | 990 |
| ஆய்ந்தாய்ந்து | 870 |
| ஆரா | 415 |
| ஆவிற்கு | 1134 |
| ஆள்வினையு | 1092 |
| ஆற்றாரு | 559 |
| ஆற்றினளவறிந்தி | 541 |
| ஆற்றின்வருந்தா | 530 |
| ஆற்றினிலை | 794 |
| ஆற்றினொழுக்கி | 61 |
| ஆற்றுபவர்க்கு | 820 |
| ஆற்றுவா-லிக | 963 |
| ஆற்றுவா-ல்பசி | 219 |
| ஆற்றுவா-ல்பணி | 1057 |
| ஆற்றினளவறிந்து | 802 |

இ

| | |
|---|---|
| இகலாலு | 934 |
| இகலிற் | 932 |
| இகலின் | 930 |
| இகலெதிர் | 930 |
| இகலென்ப | 926 |
| இகலென்னு | 928 |
| இகல்காணு | 933 |
| இம்பைக்கி | 696 |
| இம்பைக்கே | 1098 |
| இடைதெரிந்து | 790 |
| இணருழ்த்து | 727 |
| இணரொரி | 327 |
| இதனையிதனு | 585 |
| இமைப்பிற் | 1202 |
| இமையாரின் | 978 |
| இம்மைப் | 1384 |
| இயல்பாகு | 377 |
| இயல்பிலு | 61 |
| இயல்புளிக் | 616 |
| இயற்றலு | 436 |
| இரக்க | 1121 |
| இரத்தலி | 223 |
| இரத்தலு | 1124 |
| இரந்து | 1131 |
| இரப்பனிரப் | 1135 |
| இரப்பாரை | 1127 |
| இரப்பான் | 1129 |
| இரவா | 1106 |
| இரவுள்ள | 1137 |
| இரவென்னு | 1136 |
| இருணீங்கி | 387 |
| இருதோக் | 1164 |
| இருந்துள்ளி | 1314 |
| இருந்தோம்பி | 91 |
| இருபுனலும் | 815 |
| இருமனப் | 992 |
| இருமை | 31 |
| இருவே | 422 |
| இருள்சே | 13 |
| இலக்க | 700 |
| இலக்கிழா | 1333 |
| இலமென்றசை | 1110 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அன்பிறகு | 82 | இகழ்சியற | 807 | இலமன்று | 172 |
| அன்பின்வழிய | 90 | இகழ்த்தெள்ளா | 1126 | இலர்பல | 281 |
| அன்பின்விழை | 984 | இடமெல்லாங் | 1133 | இலனென்று | 198 |
| அன்பீனு | 85 | இடனில் | 212 | இலனென்னு | 217 |
| அன்புடை-வில் | 1064 | இடிக்குந் | 506 | இல்வாழ்வா | 54 |
| அன்புடை-ல்வே | 757 | இடிபுரிந் | 680 | இல்லதெ | 66 |
| அன்புரா | 1055 | இடிப்பாரை | 507 | இல்லாரை | 831 |
| அன்புமறனு | 59 | இடுக்கட்படினு | 781 | இல்லாளே | 977 |
| அன்புற்றமர்ந்த | 86 | இடுக்கண்கால் | 1100 | இல்லாள்கட் | 976 |
| அன்பொரீஇத் | 1080 | இடுக்கண்வ | 695 | இல்லே | 1390 |


# திருக்குறளகராதி.

| குறள். | பக்கம். |
|---|---|
| இவறலு | 491 |
| இழத்தொறூஉம் | 1010 |
| இழிவறிந் | 1019 |
| இழுக்கலுடை | 471 |
| இழுக்காமை | 604 |
| இழைத்த | 858 |
| இளித்தக்க | 1358 |
| இளிவரின் | 1042 |
| இளைதாக | 953 |
| இனைய | 775 |
| இறந்தமைந்த | 972 |
| இறந்தவெ | 600 |
| இறந்தா | 328 |
| இறப்பே | 1049 |
| இறலீனு | 177 |
| இறுதி | 767 |
| இறைகடிய | 635 |
| இறைகாக்கும் | 617 |
| இற்பிற-கண்ணா | 1025 |
| இற்பிற-கண்ணே | 1114 |
| இனத்தாற்றி | 689 |
| இனம்போன் | 899 |
| இனியவுளவாக | 106 |
| இனியன்ன | 1364 |
| இனைத்துனைத் | 96 |
| இனைய | 868 |
| இன்க | 1227 |
| இன்சொலாலீத் | 488 |
| இன்சொலாலீர | 100 |
| இன்சொலினி | 106 |
| இன்பங்கடன் | 1242 |
| இன்பத்து-பய | 929 |
| இன்பத்து-விழை | 701 |
| இன்பமிடை | 414 |
| இன்பமொ | 1122 |
| இன்னாசெ-ரை | 333 |
| இன்னாசெ-ர்க்கு | 1059 |
| இன்னாதிரக்கப் | 218 |
| இன்னாதின | 1233 |
| இன்னாமை | 702 |
| இன்னாவெனைத்தா | 335 |
| ஈ | |
| ஈட்ட | 1074 |
| ஈத | 225 |
| ஈத்துவக்கு | 222 |
| ஈர்ங்கை | 1146 |
| ஈவார்க | 1128 |
| ஈன்ற | 80 |
| ஈன்முண்முகத் | 995 |
| ஈன்முள்பசி | 733 |
| உ | |
| உடம்பா | 962 |
| உடம்பொ | 1196 |
| உடுக்கை | 867 |
| உடுப்பதூஉ | 1147 |
| உடைசெல்வ | 1009 |
| உடைத்தம் | 536 |
| உடைமையு | 98 |
| உடைய | 666 |
| உடையார்மு | 450 |
| உட்கப் | 993 |
| உட்பகை | 956 |
| உணர்வ | 796 |
| உணலினு | 1395 |
| உண்டார்க | 1163 |
| உண்ணற்க | 994 |
| உண்ணாது | 159 |
| உண்ணுமையுள்ள | 264 |
| உண்ணுமைவே | 266 |
| உருளாய | 1003 |
| உரைப்பா | 226 |
| உலகத்தா | 925 |
| உலகத்தோ | 142 |
| உலகந்தழீஇய | 482 |
| உலைவிடத் | 841 |
| உவக்காணெங் | 1261 |
| உவந்தறைவ | 1203 |
| உவப்பத் | 449 |
| உழந்துழந் | 1252 |
| உழவினர் | 1107 |
| உழுதுண்டு | 1104 |
| உழுவா | 1102 |
| உழைப்பிரிந்து | 598 |
| உளபோன் | 648 |
| உளரெனினு | 807 |
| உளரென்னு | 461 |
| உளவரை | 544 |
| உள்ளக் | 1352 |
| உள்ளத்தார் | 1320 |
| உள்ளத்தாலு | 298 |
| உள்ளத்தாற் | 311 |
| உள்ளமிலா | 671 |
| உள்ளமுடைமை | 667 |
| உள்ளம்போன் | 1245 |
| உள்ளற்க | 876 |
| உள்ளியதெய்த | 608 |
| உள்ளியவெல்லா | 327 |
| உள்ளினுங் | 1275 |
| உள்ளினே | 1385 |
| உள்ளுவதெல் | 669 |
| உள்ளுவன்-னு | 1260 |
| உள்ளுவன்-ன்ம | 1199 |
| உள்ளொற்றி | 998 |
| உறங்குவது | 371 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இன்பம்விழை-னி | 701 | உதவி | 112 | உறன்முறையா | 958 |
| இன்பம்விழை-ன் | 689 | உப்பமைக் | 1372 | உறுஅதவர்க் | 1362 |
| இன்மையிடு | 1132 | உயர்வகலந் | 822 | உறுஅதவர்போற் | 1169 |
| இன்மையினி-த | 1111 | உயிருடம்பி | 356 | உறுஅதோ | 1218 |
| இன்மையினி-து | 629 | உயிர்ப்ப | 954 | உறுஅர்க் | 1274 |
| இன்மையு | 154 | உய்த்த | 1357 | உறினட் | 889 |
| இன்மையென | 1112 | உரமொருவற் | 673 | உறினுயி | 857 |
| இன்மையொ | 1059 | உரனசைஇ | 1335 | உறுதோ | 1180 |
| இன்றி | 1035 | உரனென்னுங் | 32 | உறுபசியு | 812 |
| இன்றும் | 1118 | உருவுகண் | 743 | உறுபொருளு | 835 |

குறள். பக்கம்.

உறுப்பமைச் 840
உறுப்பொத்தன் 1065
உறுவது 890
உறைசிறியா 755
உற்றநோய்க்கி 501
உற்றநோய்நோ 271
உற்றவன் 1023
உற்ரு 1022

உள

உளக்கமுடையா 551
உளடலிற்ரேற் 1396
உளடலிற்ரேன் 1391
உளடலினுண் 1876
உளடலுணங்க 1379
உளடலுணர்தல் 1183
உளடற்கட் 1355
உளடிப் 1397
உளடியவரை 1374
உளடியினும் 1381
உளடுக 1398
உளடுதல் 1399
உளனுடை 1084
உளதிய 875
உளரவர் 1222
உளருணி 209
உளழிபெயரினுங் 1060
உளழிற் 427
உளழையு 693
உளெரூா 738
உளனைக் 1085

எ

எச்சமென் 1075
எட்பக 961
எண்சேர்ந்த 982

குறள். பக்கம்.

எப்பொருளு 772
எப்பொருளெ 391
எப்பொருள் 480
எய்தற் 554
எரியாற் 968
எல்லாப் 826
எல்லார்க்குநன் 129
எல்லார்க்குமெல் 657
எல்லாவிளக்கும் 316
எல்லைக்க 884
எவ்வ 484
எழுதுங்காற் 1356
எழுபிறப்புந் 74
எழுமை 113
எளிதென 148
எள்ளாத 532
எள்ளாமை 295
எள்ளி 1368
எற்றிற் 1148
எற்றென் 731
எனைத்தானுநல் 472
எனைத்தானுமெ 336
எனைத்திட்ப 746
எனைத்துங் 897
எனைத்துணைய 147
எனைத்துநி 1280
எனைத்தொன் 1276
எனைப்பகை 201
எனைமாட்சித் 829
எனைவகையாற் 582
என்பிலதனை 88
என்று 729
என்னைமுன் 850

ஏ

குறள். பக்கம்.

ஐ

ஐந்தவித்தா 33
ஐயத்தி 389
ஐயப் 779
ஐயுணர் 390

ஒ

ஒட்டார்பின் 1039
ஒண்ணுதற் 1161
ஒண்பொருள் 839
ஒத்த 208
ஒப்புரவி 213
ஒருதலையா 1271
ஒருநா 1341
ஒருபொழுதும் 367
ஒருமைக்கட் 453
ஒருமைச் 911
ஒருமைமகளிரே 1047
ஒருமையு 130
ஒலித்தக்கா 842
ஒல்லுங்கரும 895
ஒல்லும்வகையா 45
ஒல்லும்வா 749
ஒல்வ 535
ஒழுக்கத்தினெ 140
ஒழுக்கத்தினெ 139
ஒழுக்கத்து 29
ஒழுக்கமுடைமை 136
ஒழுக்கமுடைய 141
ஒழுக்கமும் 1026
ஒழுக்கம்விழுப் 135
ஒழுக்காருக் 161
ஒளியார்மு 791
ஒளியொருவற் 1043
ஒறுத்தாரை 156
ஒறுத்தார்க் 157

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எண்ணித்து | 528 | எதம் | 1077 | ஒறுத்தாற்றும் | 653 |
| எண்ணியா | 560 | எதிலாராத் | 913 | ஒற்றிஞ | 658 |
| எண்ணிய | 743 | எதிலார்குற் | 186 | ஒற்றுமுறை | 656 |
| எண்ணெண்ப | 445 | எதிலார்போலப் | 1172 | ஒற்றொற்றித் | 663 |
| எண்பதத்தாலெ | 1063 | எந்திய | 971 | ஒற்றொற்று | 664 |
| எண்பதத்தாலே | 619 | எழுமற் | 948 | ஒன்றுக | 347 |
| எண்பொருள | 481 | எறிறுநன்று | 1109 | ஒன்றுமை | 959 |
| எதிரதாக் | 486 | எனினுழாஅ | 23 | ஒன்றுவுலகத் | 228 |
| எந்தன்றி | 116 | எவவுஞ் | 922 | ஒன்றுஞுக் | 132 |

| குறள். | பக்கம். |
|---|---|
| ஒன்றெய்தி | 1003 |
| ஒன்னூர்த் | 275 |
| ஓ | |
| ஓதல் | 730 |
| ஓவினிதே | 1251 |
| ஓதி | 910 |
| ஓம்பி | 1230 |
| ஓர்த்துள்ள | 395 |
| ஓர்ந்துகண் | 610 |
| க | |
| கடலன்ன | 1211 |
| கடலோடா | 562 |
| கடனறிந்து | 763 |
| கடனென்ப | 1054 |
| கடாஅக்களிற் | 1160 |
| கடாஅவுரு | 660 |
| கடிதோச்சி | 633 |
| கடிந்த | 734 |
| கடுஞ்சொல்லன் | 687 |
| கடுமொழியுங் | 688 |
| கடைக்கொட்கச் | 740 |
| கணைகொடிது | 292 |
| கண்களவு | 1166 |
| கண்டது | 1220 |
| கண்டாங் | 1247 |
| கண்டாருயி | 1157 |
| கண்டுகேட் | 1174 |
| கண்ணிறைந்த | 1344 |
| கண்ணிற்கணி | 649 |
| கண்ணிற்றுனி | 1260 |
| கண்ணின்ப | 1311 |
| கண்ணின்று | 180 |
| கண்ணுங் | 1315 |
| கரப்பவர்க் | 1138 |
| காப்பிடும்பை | 1125 |
| காப்பிலாகெ | 1123 |
| காப்பிலார் | 1124 |
| காப்பினுங் | 1143 |
| காவா | 1130 |
| கருமஞ்சிதை | 652 |
| கருமஞ்செய | 1091 |
| கருமணியிற் | 1197 |
| கருமத்தா | 1083 |
| கருவியுங் | 706 |
| கலங்காது | 744 |
| கலந்துணர்த்துங் | 1317 |
| கல்லாதமேற் | 920 |
| கல்லாதவரிற் | 806 |
| கல்லாதவரு | 459 |
| கல்லாதாரெ | 460 |
| கல்லாதான் | 458 |
| கல்லார்ப் | 641 |
| கல்லாவொரு | 460 |
| கல்லான் | 944 |
| கவறுங் | 1005 |
| கவ்வையாற் | 1219 |
| கழாஅக்கால் | 915 |
| களவிரு | 299 |
| களவின்கட் | 800 |
| களவென்னுங் | 303 |
| களித்தறியே | 999 |
| களித்தானைக் | 1000 |
| களித்தொறுங் | 1220 |
| கள்வார்க்குத் | 306 |
| கள்ளுண்ணுப் | 1001 |
| கறுத்தின்னு | 332 |
| கற்க | 443 |
| காணுதாற் | 924 |
| காணிற் | 1188 |
| காணுங்காற் | 1356 |
| காண்கமற் | 1337 |
| காதலகாத | 498 |
| காதலரில் | 1296 |
| காதலர்தூ | 1284 |
| காதன்மை | 575 |
| காமக்கடன் | 1240 |
| காமக்கடு-லு | 1208 |
| காமக்கடு-னீ | 1243 |
| காமக்கணிச்சி | 1322 |
| காமமூணா ணு | 1239 |
| காமமுழந்து | 1205 |
| காமமென | 1322 |
| காமம்விடு | 1318 |
| காமம்வெகுளி | 401 |
| காலங்கருதி | 549 |
| காலத்தி | 110 |
| காலாழ்களரி | 566 |
| காலைக்குச் | 1297 |
| காலையரும்பிப் | 1299 |
| கான | 852 |
| காத | 1313 |
| காக்க | 128 |
| காக்கை | 595 |
| காட்சிக் | 437 |
| கு | |
| குடம்பை | 369 |
| குடிசெய்வ | 1093 |
| குடிசெய்வார்க் | 1097 |
| குடிதழீஇக் | 615 |
| குடிபுறங் | 620 |
| குடிப்பிறந்தார் | 1030 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கண்ணுடைய | 448 | கறைதனை | 10 | குடிப்பிறந்தகு | 570 |
| கண்ணுள்ளார் | 1201 | கற்றறிந்தார் | 795 | குடிப்பிறந்தார் | 872 |
| கண்ணுள்ளிற் | 1200 | கற்றூருட் | 800 | குடிமடிந்து | 677 |
| கண்ணெனு | 1178 | கற்றூர்முற் | 801 | குடியாண்மை | 681 |
| கண்ணேணட்டத் | 644 | கற்றில | 470 | குடியென்னுங் | 674 |
| கண்ணேணட்டமி | 652 | கற்றீண்டு | 394 | குணமெனு | 1054 |
| கண்ணேணட்டமெ | 643 | கற்றுக்கண் | 762 | குணனுடிக் | 573 |
| கதங்காத்துக் | 134 | கனவிலு | 1287 | குணமென்னுங் | 41 |
| கதுமெனத் | 1249 | கனவினு | 896 | குணனிலனெய்க் | 942 |
| கயலுண்கண் | 1285 | கா | | குணனுங் | 871 |
| காத்தலு | 1238 | காணச் | 940 | குலஞ்சுடங் | 1089 |

| குறள். | பக்கம். |
|---|---|
| குழலினிதி | 78 |
| குறிக்கொண்டு | 1168 |
| குறித்தது | 781 |
| குறிப்பறிந்து | 773 |
| குறிப்பிற்-ரா | 781 |
| குறிப்பிற்-ர் | 780 |
| குற்றமிலனெய்க் | 1095 |
| குற்றமே | 493 |
| குன்றன்னார் | 970 |
| குன்றி | 1038 |
| குன்றேறி | 837 |
| கூ | |
| கூடிய | 1336 |
| கூத்தாட் | 361 |
| கூழுங் | 626 |
| கூழுமை | 778 |
| கூற்றங்குதி | 281 |
| கூற்றத்தை- | 966 |
| கூற்றம்மா | 1158 |
| கூற்றுடன்று | 844 |
| கெ | |
| கெடல்வேண்டிற் | 965 |
| கெடாஅ | 886 |
| கெடுங்காலைக் | 877 |
| கெடுப்பதூஉங் | 23 |
| கெடுவல்யா | 122 |
| கெடுவாக | 122 |
| கெட்டார்க்கு | 1363 |
| கே | |
| கேடறியாக் | 814 |
| கேடில் | 455 |
| கேடும் | 121 |
| கேட்டார்ப் | 719 |
| கேட்டினு | 874 |
| கொடியார்-யு | 1306 |
| கொடித்தலு | 593 |
| கொடுத்தலுங் | 941 |
| கொடுப்பதழுக் | 164 |
| கொடுப்பதூஉங் | 1076 |
| கொடும்புருவங் | 1159 |
| கொடையளி | 441 |
| கொலமேற்கொண் | 623 |
| கொலையிற் | 691 |
| கொலைவினைய | 855 |
| கொல்லாங | 1056 |
| கொல்லாமை | 350 |
| கொல்லான் | 269 |
| கொளப்பட்டே | 776 |
| கொளற்கரிதாய்க் | 825 |
| கொன்றன்ன | 115 |
| கோ | |
| கோட்டுப்பூச் | 1382 |
| கோளில் | 17 |
| ச | |
| சமன்செய்து | 123 |
| சலத்தாற் | 736 |
| சலம்பற்றிச் | 1029 |
| சா | |
| சாதலி | 224 |
| சாயலு | 1259 |
| சார்புணர்ந்து | 398 |
| சால்பிற்குக் | 1058 |
| சான்றவர் | 1061 |
| சி | |
| சிதைவிடத் | 670 |
| சிறப்பறிய | 665 |
| சிறப்பீ-மீனு | 43 |
| சிறப்பீ-பெறினு | 330 |
| சிற்றின | 511 |
| சிற்றின்பம் | 171 |
| சினத்தைப் | 325 |
| சினமென்னுஞ் | 323 |
| சீ | |
| சீரிடத் | 893 |
| சீரினுஞ் | 1036 |
| சீருடைச் | 1081 |
| சீர்மை | 190 |
| சு | |
| சுடச்சுடரும் | 279 |
| சுவையொளி | 86 |
| சுழலு | 856 |
| சுழன்றுமேர்ப் | 1102 |
| சுற்றத்தாற் | 592 |
| சூ | |
| சூழாமற் | 1094 |
| சூழ்ச்சி | 747 |
| சூழ்வார் | 504 |
| செ | |
| செப்ப | 118 |
| செப்பின் | 959 |
| செயற்கரியசெ | 34 |
| செயற்கரியயா | 860 |
| செயற்கை | 713 |
| செயற்பாலசெ | 495 |
| செயற்பாலதோ | 52 |
| செயிரிற் | 267 |
| செய்க | 838 |
| செய்தக்க | 527 |
| செய்தேமஞ் | 892 |
| செய்யாமற்செய்த | 109 |
| செய்யாமற்செற் | 332 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கேட்பினுங் | 474 | சிறப்பொடு | 26 | செய்வானை | 584 |
| கேளிழுக்கங் | 885 | சிறியா | 1043 | செய்வினை | 753 |
| | | சிறுகாப்பிற் | 824 | செருக்குஞ் | 490 |
| கை | | சிறுபடையான் | 561 | செருவந்த | 641 |
| கைம்மாறு | 206 | சிறுமை | 1302 | செல்லாமை | 1227 |
| கையறி | 996 | சிறுமைபல | 1005 | செல்லாவிடத் | 319 |
| கைவேல் | 854 | சிறுமையுள் | 843 | செல்லான் | 1109 |
| | | சிறுமையுணீ | 105 | செல்லிடத்துக் | 318 |
| கொ | | சிறைகாக்குங் | 69 | செல்வத்துட் | 467 |
| கொக்கொக்க | 555 | சிறைநலனுஞ் | 565 | செல்விருந் | 95 |
| கொடியார்-யி | 1245 | | | | |

| குறள். | பக்கம். |
|---|---|
| செவிகைப்பச் | 440 |
| செவிக்குண | 463 |
| செவிச்சொல்லுஞ் | 771 |
| செவியிற் | 476 |
| செவியுணவிற் | 469 |
| செறுஅச் | 1170 |
| செறிதொடி | 1346 |
| செறிவறிந்து | 128 |
| செறுநரைக் | 553 |
| செறுவார்க்குச் | 943 |
| செற்றவர் | 1326 |
| செற்றுரெனக் | 1316 |
| செற்றுர்பின் | 1325 |
| சென்ற | 479 |
| சொ | |
| சொலல்வல்லன் | 724 |
| சொல்லுக-லி | 194 |
| சொல்லுக-லை | 722 |
| சொல்லுதல் | 741 |
| சொல்லப் | 1147 |
| சொல்வணக்க | 903 |
| சொற்கோட்ட | 124 |
| ஞா | |
| ஞாலங் | 549 |
| த | |
| தகுதி | 117 |
| தக்காங்கு | 633 |
| தக்காரினத் | 505 |
| தக்கார் | 119 |
| தஞ்சம் | 1370 |
| தண்ணந்தமை | 1304 |
| தண்ணென் | 1348 |
| தவஞ்செய்வார் | 277 |
| தவமறைந் | 287 |
| தவமுந்தவ | 273 |
| தவறில | 1394 |
| தள்ளா | 803 |
| தற்காத்துத் | 69 |
| தனக்குவமை | 15 |
| தனியே | 1366 |
| தன்குற்ற | 494 |
| தன்றுணை | 949 |
| தன்றுயிர்க்கின் | 337 |
| தன்றுயிர்த்தா | 280 |
| தன்றுயிர்நீ | 351 |
| தன்றூன் | 259 |
| தன்னெஞ் | 309 |
| தன்னைத்தான்காக் | 322 |
| தன்னைத்தான்காத | 203 |
| தன்னையுணர்த் | 1338 |
| தா | |
| தாமின் | 454 |
| தாம்வீழ்-த | 1267 |
| தாம்வீழ்-மெ | 1177 |
| தாம்வேண்டி | 1224 |
| தார்தாங்கிச | 846 |
| தாளாண்மையி | 687 |
| தாளாண்மையெ | 686 |
| தாளாற்றித் | 207 |
| தானந் | 26 |
| தி | |
| திறனல்ல | 157 |
| திறனறிந்து | 721 |
| தினற்பொரு | 265 |
| தினைத்துணைந | 111 |
| தினைத்துணையாங் | 492 |
| துஞ்சுங்காற் | 1290 |
| துணைநல | 728 |
| துப்பார்க்குத் | 21 |
| துப்பி | 1241 |
| துப்புர | 1119 |
| தும்முச் | 1387 |
| துனியின்மை | 628 |
| துறந்தா-த் | 273 |
| துறந்தா-ந் | 56 |
| துறந்தார்படி | 661 |
| துறந்தார்பெருமை | 80 |
| துறந்தாரிற் | 159 |
| துறப்பார்மற் | 425 |
| துறைவன் | 1282 |
| துனியும் | 1375 |
| துன்பத்திற் | 1369 |
| துன்பமுற | 745 |
| துன்புறூஉந் | 102 |
| துன்னுத் | 1320 |
| துன்னியார் | 184 |
| தூ | |
| தூக்காமை | 433 |
| தூங்குக | 748 |
| தூய்மைதுணைமை | 765 |
| தூவுய்மையெ | 408 |
| தெ | |
| தெண்ணீ | 1134 |
| தெய்வத்தா | 692 |
| தெய்வந் | 68 |
| தெரிதலுந் | 709 |
| தெரிந்த | 523 |

தந்தை 78
தங்கலம் 983
தங்கெஞ்சத் 1278
தமராகித் 596
தம்பொரு 75
தம்மிலிருந்து 1181
தம்மிற்பெரியார் 503
தம்மிற்றம் 79
தலைப்பட்டார் 382
தலையி 1037
தினைத்துணையு 1353

தீ

தீப்பால 200
தீயவைசெய் 201
தீயவைதீய 196
தீயள 1020
தீயிலுற் 133
தீவினையா 195

து

துஞ்சினுஞ் 997
தெரிந்துணரா 1248
தெருளாதான் 257
தெளிவி 525
தென்புலத்தார் 56

தே

தேரான்பிறனைத் 576
தேரான்தெளிவுந் 578
தேவ 1142

| குறள். | பக்கம். |
|---|---|
| தேறற்க | 577 |
| தேறினும் | 950 |
| தொ | |
| தொகச்சொல்லித் | 761 |
| தொடங்கற்க | 557 |
| தொடலைக் | 1209 |
| தொடிநோக்கி | 1350 |
| தொடிப்புழுதி | 1108 |
| தொடியொடு | 1308 |
| தொடிற்சுடி | 1234 |
| தொட்டனைத் | 451 |
| தொல்வாவுந் | 1113 |
| தொழுதகை | 904 |
| தோ | |
| தோன்றிற் | 231 |
| ந | |
| நகல்வல்ல | 1070 |
| நகுதற் | 863 |
| நகையீகை | 1027 |
| நகையுமுவகையும் | 321 |
| நகையுள்ளு | 1066 |
| நகைவகைய | 894 |
| நசையிலார் | 1273 |
| நச்சப் | 1079 |
| நடுவின்றி | 169 |
| நட்டார்குறை | 980 |
| நட்டார்க்கு | 754 |
| நட்டார்போ | 902 |
| நட்பிற்குவீ | 868 |
| நட்பிற்குறுப் | 880 |
| நண்பாற்ற | 1069 |
| நத்தம்போற் | 220 |
| நலத்தகை | 1374 |
| நலத்தின்க | 1031 |
| நலம்வேண்டி | 1033 |
| நல்குர | 1115 |
| நல்லவை | 423 |
| நல்லாண்மை | 1096 |
| நல்லார்கட் | 463 |
| நல்லாறெனா | 348 |
| நல்லாறெனி | 215 |
| நல்லாற்ரு | 239 |
| நல்வினத்தி | 521 |
| நவிலுற்று | 852 |
| நற்பொரு | 1116 |
| நனவினுற்கண் | 1288 |
| நனவினை-த | 1286 |
| நனவினை-க்கொ | 1289 |
| நனவினைந் | 1292 |
| நனவினை-ரை | 1291 |
| நனவென | 1289 |
| நன்மையுந் | 579 |
| நன்றறி | 1141 |
| நன்முகு | 353 |
| நன்முங்கா | 426 |
| நன்முற்ற | 531 |
| நன்றிக்கு | 140 |
| நன்றிமறப்பது | 115 |
| நன்றென் | 793 |
| நன்றே | 119 |
| நன்னீரை | 1185 |
| நா | |
| நாங்காதல் | 1270 |
| நாச்செற்று | 365 |
| நாடாது | 869 |
| நாடென்ப | 817 |
| நாடொறுநாடி | 625 |
| நாணகல | 717 |
| நாணென | 363 |
| நி | |
| நினைந்தீயி | 1330 |
| நிலத்தியல்பா | 512 |
| நிலத்திற் | 1032 |
| நிலவரை | 229 |
| நிலமக்கள் | 849 |
| நிலையஞ்சி | 349 |
| நிலையிற் | 129 |
| நில்லா | 360 |
| நிழனீரு | 955 |
| நிறைநீர | 861 |
| நிறைநெஞ்சு | 989 |
| நிறைமொழி | 40 |
| நிறையரியர் | 1212 |
| நிறையுடைமை | 155 |
| நிறையுடையே | 1324 |
| நினைத்திருந்து | 1389 |
| நினைத்தொன்று | 1313 |
| நினைப்பவர் | 1277 |
| நீ | |
| நீங்கான் | 938 |
| நீங்கிற் | 1178 |
| நீரின் | 27 |
| நீரு | 1378 |
| நு | |
| நுணங்கிய | 475 |
| நுண்ணியநூ | 421 |
| நுண்ணியமெ | 786 |
| நுண்மா | 462 |
| நுனிக்கொம்ப | 540 |
| நூ | |
| நூலறி | 760 |

நயந்தவர்க்கு 1257
நயந்தவர்நல் 1304
நயனிலசொல் 192
நயனிலனெ 189
நயனீன்று 104
நயனுடையா 213
நயனெறு 1066
நயன்சாரா 189
நலக்குரியார் 151
நாடோறுநாடுக 537
நாணகத் 1090
நாணமை 909
நாணுயி 1038
நாணு 1367
நாணென 1327
நாணென்னு 996
நாணெடு 1208
நாண்வேலி 1087
நூலாரு 759
நெ
நெஞ்சத்தார் 1202
நெஞ்சிற் 289
நெடுங்கடலுந் 25
நெடுநீர் 677
நெடும்புனலுள் 561
நெய்யா 1228
நெருப்பினுட் 1119

| குறள். | பக்கம். |
|---|---|
| நெருநலுள | 366 |
| நெருநற்றுச் | 1349 |
| நோ | |
| நோக்கிலு-லி | 1167 |
| நோக்கிலு-லெ | 1155 |
| நோத | 1377 |
| நோயெல்லா | 341 |
| நோய்நாடி | 1021 |
| நோவற்க | 951 |
| நோலை | 1206 |
| ப | |
| பகச்சொல்லிக் | 183 |
| பகல்கருதிப் | 927 |
| பகல்வெல் | 546 |
| பகுத்துண்டு | 345 |
| பகைநட்பாக் | 949 |
| பகைநட்டார் | 906 |
| பகைபாவ | 149 |
| பகைமையுங் | 785 |
| பகையகத்துச் | 801 |
| பகையகத்துப் | 805 |
| பகையென்னும் | 945 |
| பசக்கமற் | 1264 |
| பசந்தா | 1263 |
| பசப்பெனப் | 1265 |
| படலாற்று | 1250 |
| படியுடை | 679 |
| படுபயன் | 170 |
| படைகுடி | 430 |
| படைகொண் | 261 |
| பரிந்தோம்பிக் | 136 |
| பரிந்தோம்பிப் | 97 |
| பரியது | 672 |
| பரியினு | 424 |
| பருகுவார் | 888 |
| பருவத்தோ | 547 |
| பருவரலும் | 1272 |
| பலகுடை | 1104 |
| பலசொல்லக் | 726 |
| பலநல்ல | 900 |
| பல்குழுவும் | 812 |
| பல்லவை | 806 |
| பல்லார்பகை | 509 |
| பல்லார்முனி | 187 |
| பழகியசெல் | 1007 |
| பழகியநட் | 881 |
| பழமை | 879 |
| பழிமலைந் | 734 |
| பழியஞ்சிப் | 58 |
| பழுதெண்ணு | 715 |
| பழைய | 777 |
| பற்றற்றகண்ணே | 883 |
| பற்றற்றகண்ணும் | 588 |
| பற்றற்றே | 288 |
| பற்றிவிடாஅ | 381 |
| பற்றுக | 384 |
| பற்றுள்ள | 496 |
| பனியருப்பிப் | 1295 |
| பன்மாயக் | 1328 |
| பா | |
| பிறர்பழியுங் | 1087 |
| பிறவிப் | 19 |
| பிறன்பழி | 182 |
| பிறன்பொரு | 144 |
| பிறன்மனை | 150 |
| பீ | |
| பீலிபெய் | 538 |
| பு | |
| புகழின்மூத் | 1038 |
| புகழ்ந்தவை | 606 |
| புகழ்படப் | 232 |
| புகழ்புரிந் | 71 |
| புக்கி | 371 |
| புணர்ச்சி | 864 |
| புத்தே | 207 |
| புரந்தார்கண் | 859 |
| புலத்தலிற் | 1892 |
| புலப்ப | 1330 |
| புலப்பேன்கொல | 1339 |
| புல்லவையுட் | 796 |
| புல்லா | 1371 |
| புல்லிக்கிடந் | 1262 |
| புல்லிவிடாஅப் | 1393 |
| புறங்குன்றி | 290 |
| புறங்கூறிப் | 180 |
| புறத்துறப் | 89 |
| புறந்தூய்மை | 315 |
| புன்கண்ணீர் | 1294 |
| பெ | |

பணியுமா 1050
பணிவுடைய 103
பணைதீங்கிப் 1305
பண்டறியேன் 1156
பண்ணன்னும் 645
பண்பிலான் 1070
பண்புடையார் 1067
பதிமருண்டு 1301
பயனிலபல் 188
பயனில்சொற் 190
பயன்மா 210
பயன்றூக்கார் 110
பயன்றூக்கிச் 984
பரிந்தவர் 1319
பாடு 1308
பாத்தூண் 221
பாவொடு 1195
பி
பிணிக்கு 1176
பிணியின்மை 816
பிணையர் 1162
பிரித்தலும் 708
பிரிவுரைக்கும் 1231
பிழைத்துணர் 473
பிறப்பென்னும் 396
பிறப்பொக்கு 1045
பிறர்க்கின்னா 339
பிறர்நாணத் 1089
பெண்ணியலா 1380
பெண்ணிற் 67
பெண்ணிறந் 1351
பெண்ணேவல் 979
பெயக்கண்டு 654
பெயலாற்று 1249
பெரிதாற்றிப் 1347
பெரிதினிது 914
பெரியாரைப் 964
பெருக்கத்து 1036
பெருங்கொடை 594
பெருமைக்கு 574
பெருமைபெ 1051
பெருமையு 1048

| குறள். | பக்கம். |
|---|---|
| பெரும்பொரு | 809 |
| பெரியமை | 1365 |
| பெரினென்னும் | 1342 |
| பெறுமவற்றுள் | 73 |
| பெற்றூற் | 70 |
| **பே** | |
| பேணுதுபெண் | 975 |
| பேணுதுபெட்டா | 1252 |
| பேணுதுபெட்ப | 1354 |
| பேதைபெருங் | 893 |
| பேதைப்படுக்கு | 420 |
| பேதைமையு | 909 |
| பேதைமையே | 908 |
| பேதைமையொ | 883 |
| பேராண்மை | 852 |
| **பொ** | |
| பொச்சாப்பார்க் | 602 |
| பொச்சாப்புக் | 601 |
| பொதுநலத்தார் | 987 |
| பொதுநோக் | 595 |
| பொய்படு | 912 |
| பொய்ம்மையும் | 308 |
| பொய்யாமைபொ | 313 |
| பொய்யாமைய | 312 |
| பொருடூர்ந்த | 193 |
| பொருட்பெண்டிர் | 985 |
| பொருட்பொருளார் | 986 |
| பொருணீங்கிப் | 254 |
| பொருண்மாலை | 1301 |
| **போ** | |
| போற்றி | 770 |
| **ம** | |
| மகன்றந்தைக் | 80 |
| மக்கண்மெய் | 77 |
| மக்களே | 1140 |
| மங்கலமென்ப | 72 |
| மடவுரர்தல் | 1211 |
| மடிமடிக் | 676 |
| மடிமை | 681 |
| மடியிலா | 662 |
| மடியுளாண் | 690 |
| மடியை | 675 |
| மடித்தவா | 697 |
| மணிநீரு | 821 |
| மணியிற் | 1345 |
| மண்ணோ | 650 |
| மதிநுட்ப | 711 |
| மதியு | 1190 |
| மயிர்நீப்பின் | 1043 |
| மருந்தாகித் | 211 |
| மருந்தென | 1014 |
| மருந்தோமற் | 1040 |
| மருவுக | 878 |
| மலரன்ன-ண் | 1193 |
| மலரன்ன-ள | 1217 |
| மலரினு | 1359 |
| மலர்மிசை | 11 |
| மலர்காணின் | 1186 |
| மழித்தலு | 293 |
| மறச்சலவெ | 320 |
| மனத்தி | 901 |
| மனத்துக்கண் | 46 |
| மனத்துளது | 514 |
| மனத்தொடு | 311 |
| மனநலத்தி | 519 |
| மனநலநன் | 519 |
| மனநலமன் | 517 |
| மனந்தூயார்க் | 516 |
| மனந்தூய்மை | 515 |
| மனமாணு | 957 |
| மனைத்தக்க | 65 |
| மனைமாட்சி | 65 |
| மனையாளொ | 976 |
| மனைவிழைவார் | 974 |
| மன்னர்க்கு | 627 |
| மன்னர்விழைய | 709 |
| மன்னுயிரெல் | 1244 |
| மன்னுயிரோம்பி | 252 |
| **மா** | |
| மாதர் | 1192 |
| மாலேநோய் | 1298 |
| மாலையோ | 1293 |
| மாறுபா | 1117 |
| **மி** | |
| மிகச்செய்த | 905 |
| மிகன்மேவன் | 931 |
| மிகினுங் | 1012 |
| மிகுதியான் | 158 |
| **மு** | |
| முகத்தா | 101 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொருள்கருவி | 751 | மற்றும் | 197 | முகத்தினினிய | 901 |
| பொருள்கெடுத் | 1008 | மறப்பினு | 138 | முகத்தின்முதல் | 783 |
| பொருளல்லவற் | 386 | மறப்பினெவ | 1280 | முகந்க | 865 |
| பொருளல்லவரை | 831 | மறமான | 845 | முகநோக்கி | 784 |
| பொருளற்றூர் | 256 | மறவற்க | 113 | முகைமொக்கு | 1346 |
| பொருளாட்சி | 260 | மறைந்தவை | 662 | முடிவு | 752 |
| பொருளாலு | 1074 | மறைபெற | 1255 | முதலிலார்க் | 508 |
| பொருளென்னும் | 832 | மறைப்பேன்மற் | 1323 | முயங்கிடைத் | 1311 |
| பொள்ளென | 55 | மறைப்பேன்மன் | 1237 | முயங்கிய | 1310 |
| பொறியின்மை | 691 | மற்றியா | 1279 | முயற்சி | 689 |
| பொறிவாயி | 14 | மற்றுந் | 378 | மூண்சேர்ந்த | 558 |
| பொறுத்த | 153 | மனத்தது | 291 | மூறிமேனி | 1187 |
| பொறையொ | 811 | மனத்தானு | 513 | மூறைகோடி | 630 |

| குறள். | பக்கம். |
|---|---|
| முறைசெய்து | 439 |
| முறைப்படச் | 716 |
| முற்றாற்றி | 827 |
| முற்றியு | 827 |
| முனைமுகத்து | 828 |
| முன்னுறக் | 603 |
| **மே** | |
| மேலிருந்து | 1046 |
| மேற்பிறந்தா | 464 |
| **மை** | |
| மைய | 913 |
| **மோ** | |
| மோப்பக் | 98 |
| **யா** | |
| யாகாவா | 131 |
| யாங்கண்ணிற் | 1214 |
| யாண்டுச்சென் | 967 |
| யாதனின் | 373 |
| யாதானு | 452 |
| யாமு | 1277 |
| யாமெய்யாக் | 317 |
| யாரினுங் | 1383 |
| யானென | 381 |
| யானோக்குங் | 1167 |
| **வ** | |
| வகுத்தான் | 424 |
| வகைமாண்ட | 969 |
| வகையறச் | 526 |
| வகையறிந்துத | 952 |
| [illegible] | 709 |

| குறள். | பக்கம். |
|---|---|
| வலியார்முற் | 258 |
| வலியினிலை | 285 |
| வழங்குவ | 1028 |
| வழிநோக்கான் | 939 |
| வழுத்திநா | 1386 |
| வறியார்க் | 215 |
| வன்கண் | 707 |
| **வா** | |
| வாணிகஞ் | 125 |
| வாய்மை | 307 |
| வாராக்காற் | 1254 |
| வாரிபெருக்கி | 580 |
| வாழ்த | 1198 |
| வாழ்வார்க்கு | 1268 |
| வாளற்றுப் | 1332 |
| வாளொடென் | 804 |
| வாள்போற் | 955 |
| வானின் | 20 |
| வானுயர் | 284 |
| வானோக்கி | 611 |
| **வி** | |
| விசும்பிற் | 24 |
| விடாஅது | 1282 |
| விடுமாற்றம் | 766 |
| விண்ணின்று | 22 |
| வித்து | 94 |
| வியவற்க | 497 |
| விருந்து | 92 |
| விருப்பறாச் | 589 |
| [illegible] | 725 |

| குறள். | பக்கம். |
|---|---|
| விளியுமென் | 1281 |
| வினைகலந்து [கெ | 1340 |
| வினைக்கண்வினை | 685 |
| வினைக்கண்வினையு | 586 |
| வினைக்குரிமை | 586 |
| வினைசெய்வார் | 659 |
| வினைத்திட்ப | 738 |
| வினைபகை | 750 |
| வினையான் | 753 |
| வினைவலியுந் | 534 |
| **வீ** | |
| வீழப் | 1269 |
| வீழுநர் | 1269 |
| வீழுமிருவர்க் | 1182 |
| வீழ்நாள் | 50 |
| வீழ்வாரி | 1273 |
| வீறெய்தி | 742 |
| **வெ** | |
| வெண்மை | 919 |
| வெருவந்த | 634 |
| வெள்ளத்தனையம | 669 |
| வெள்ளத்தனையவி | 695 |
| **வே** | |
| வேட்ட | 1179 |
| வேட்பத்தாஞ் | 723 |
| வேட்பன் | 774 |
| வேண்டற்கவெஃ | 175 |
| வேண்டற்கவென் | 1002 |
| வேண்டாமை | 407 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வகையறிந்துவி | [illegible] | [illegible] | | | |
| வசையிலா | 234 | விலங்கொடு | 465 | வேண்டிய | 276 |
| வசையென்ப | 233 | வில்லே | 946 | வேண்டினுண் | 374 |
| வசையொழிய | 235 | விழித்தகண் | 854 | வேண்டுங்கால் | 405 |
| வஞ்சமனத்தான் | 283 | விழுப்புண் | 855 | வேண்டுதல் | 12 |
| வருகமற்கொ | 1338 | விழுப்பேற்றி | 162 | வேலன்று | 616 |
| வருமுன்னர்க் | 493 | விழைதகையான் | 882 | வேலொடு | 624 |
| வருவிருந்து | 93 | விழையார் | 887 | **வை** | |
| வரைவிலா | 991 | விளக்கற்றம் | 1262 | வைத்தான்வாய் | 1072 |
| வலியார்க்கு | 936 | விளிந்தாரின் | 146 | வையத்துள் | 64 |


திருக்குறளகராதி முற்றிற்று.

# புத்தக விளம்பரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சர்வதரிசன சங்கிரகம் | ரூ. 2 | 8 | சித்தாந்த பிந்து | 0 | 8 |
| கதாசரித்சாகரம் | 1 | 4 | வியாசதாத்பர்ய நிர்ணயம் | 0 | 8 |
| தருக்க பரிபாஷை | 1 | 0 | சைவ்தர்மிய சித்தி | 0 | 8 |
| சிவபூஜைதத்திரட்டு | 1 | 0 | சுவராஜ்ய சித்தி | 0 | 8 |
| வேதாந்த சாஸ்திர ரத்னவலி | 1 | 0 | பாட்டியற் கொத்து | 0 | 6 |
| விவேகானந்தர் ராஜயோகம் | 0 | 12 | பாகவதத்திரட்டு | 0 | 6 |
| சச்சிதானந்த சிவம் | 0 | 14 | வியாசபோதினி 1 - பாகம் | 0 | 5 |
| மெய்ஞ்ஞானபோதம் | 0 | 12 | ,, 2 - பாகம் | 0 | 4 |
| திருவாசகம் பாக்கெட் சைஸ் | 0 | 10 | அறிவானந்த சித்தி | 0 | 4 |
| வேதாந்தசாரம்-வசனம் | 0 | 10 | மகாராஜாதுறவு-வசனம் | 0 | 3 |
| தேசிகுராஜன்-வசனம் | 0 | 8 | பிரம்மானந்த லகிரி | 0 | 1 |
| வேதாந்தபரிபாஷை | 0 | 10 | புனிதவதி 0 2 \| மகா மாலை | 0 | 2 |
| ஆத்திசூடிபுராணம் உரை | 2 | 8 | விவேகானந்தர் கடிதங்கள் | 0 | 4 |
| விவேகானந்த விஜயம் | 1 | 4 | ஆத்ம புராணம் வசனம் | 8 | 0 |
| விவேகானந்தர் பக்தியோகம் | 0 | 8 | விநோதரசமஞ்சரி | 1 | 2 |
| அரிச்சந்திர புராணம் வசனம் | 1 | 8 | விசாரசாகரம் 3-ம் பதிப்பு | 3 | 4 |
| அருணைசல புராணம் | 1 | 0 | பிரபுலிங்கலீலை உரை | 2 | 8 |
| பிரபுலிங்கலீலை வசனம் | 0 | 12 | ஞான தரிசனி | 0 | 10 |
| பிரபோத சந்திரோதயவசனம் | 1 | 0 | தத்துவதரிசனி | 0 | 10 |
| இந்து ஜைபில் | 1 | 12 | வேதப்பொருள் விளக்கம் | 0 | 12 |
| மத விருக்ஷம் | 1 | 12 | திவ்ய தேசயாத்திரை | 2 | 0 |
| விருத்திப்பிரபாகம் | 4 | 0 | பகவத்கீதை வசனம் | 1 | 4 |
| நியாயப்பிரகாசம் | 4 | 0 | குமாரதேவ சரித்திரம் | 0 | 10 |
| வேதாந்த மனன சிந்தாமணி | 4 | 0 | வள்ளலார் சரித்திரம் | 1 | 4 |
| சிவஞானபோதம் வேதாந்த உரை | 0 | 8 | தத்துவாதீசந்தானம் | 2 | 8 |
| பக்தமாலா வசனம் 192 பக்தர்களின் சரித்திரம் | | | ரூ. | 3 | 8 |
| பெருந்திரட்டு குறுந்திரட்டுடன் | 3 | 0 | கைவல்ய மூலம் (பாக்கெட்) | 0 | 3 |
| பஞ்சதசி செய்யுள் பாக்கெட் | 0 | 10 | வேதாந்த சூளாமணி ,, | 0 | 2½ |

| | | |
|---|---|---|
| தருக்காமிர்தமும்-பிரஸ்தானபேதமும் 0 6 பகவத் கீதை ,, | 0 | 5 |
| வேதாந்தசாராமிர்தமும் அத்துவிதரசமஞ்சரி மூலமும் உரையும் | 0 | 6 |
| சங்கரத்துவேஷியாரின் வாய்ப்பூட்டு 0 6 ஆனந்த ராமாயணம் | 5 | 0 |
| யூகிமுனி வாதாங்க தீக்ஷை விதி 300, வாதவைத்திய விளக்கம் 200, மதிவெண்பா 100 | 1 | 0 |
| தேரையர் கரிசலை - யூகிமுனி கரிசலை - கல்நண்டு சூத்திரம் | 0 | 12 |

இந்தப் புத்தகசாலையில் எல்லாச் சாஸ்திரங்களும் கிடைக்கும்.

லோகோபகாரி ஆபீசு,
கோமளேசுவரன்பேட்டை, சென்னை.